JL
3m211N08V8
N08
162049

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென் ... 600 008
நூலகம்

விவேக போதினி

ஓர் சிறந்த மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிகை

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்.

தொகுதி 2.

1909-ம் ௵ ஜூலை மீ—1910-ம் ௵ ஜூன் மீ

1909—10

சென்னை
ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாரவர்களால்
"கார்டியன் அச்சுக்கூடத்தில்" பதிப்பிக்கப்பட்டது.

All Rights Reserved] [விலை ரூபாய் 4

162049
.. 008.

அட்டவணை

பக்கம்.

மதவிஷயக் குறிப்புகள்.

நம்பிக்கை ... 33
ஆத்ம நஷ்டம் ... 65
ஆத்மாதித்யம் ... 97
கடவுள் வழிபாடு ... 129
ஆராதனை : பொதுவான பிரிவுகள் ... 161
ஆராதனை : சிறப்பான பிரிவுகள் ... 193
ஆராதனை : பொதுக் குறிப்புகள் ... 233
பரிசுத்தம் ... 265
வைராக்கியம் ... 297
உபாதி ... 329
ஞானம் ... 365

மதவிஷயங்கள்.

வேதஸ்வரங்கள் ... 1
வேதாத்யயனம் ... 34
வேதாங்கங்கள் ... 66
குருசிஷ்ய லக்ஷணம் ... 98
வேதபாகங்கள் ... 130
வேதங்கள் : கர்மகாண்டம் ... 162
கர்மகாண்டம் : யாகம் ... 194
யாகம் : பொதுக்குறிப்புகள் ... 234
கர்மகாண்டம் : ஆக்ஷேப ஸமாதானங்கள் 266
கர்மகாண்டம் : அதன் நோக்கம் ... 298
ஞானகாண்டம் ... 330
முக்கிய உபநிஷத்துகள்—ஈசகேன உபநிஷத்துகள் ... 366

பெரியோர் சரிதை.

"ஸர்தாமஸ் மன்ரோ" ... 5
"ரிப்பன்" தர்மபரர் அல்லது இந்தியர்க் குறவோன் ... 37
ஸ்ரீ ரமேச சந்திர தத்தர் 209, 241
விச்வநாத நாராயண மாண்டலிகர் ... 302
ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசாரியாள் ... 305

இயற்கை அற்புதங்கள்.

வானவில் ... 18
நிழலும் கிரஹணங்களும் ... 44
வாயுவிலுள்ள தண்ணீரும் அதன் ரூபாந்திரங்களும் ... 141
வாயு ... 176
காற்றுகள் ... 220

பக்கம்.

காற்றினங்கள் ... 250
தண்ணீர் : அதன் குணங்கள் ... 287
தண்ணீர் : தாங்குகுணம் ... 342

நமது நோன்புகள்.

கோகுலாஷ்டமி அல்லது கிருஷ்ணஜயந்தி 68
நவராத்திரி ... 101
மகரஸங்கராந்தி ... 198
மஹா சிவராத்திரி ... 282

ஜீவவர்க்க விசாரம்.

இயற்கை ஆயுதங்கள் ... 211
வௌவால் ... 306

சில உயர்ந்த கற்கள்.

மாணிக்கக்கல் அல்லது கெம்பு ... 243

ஸுகாதாரம்.

சுகாதார விளக்கம்: வஸ்திரம் ... 24
நித்திரை 25, 51
சுகம்பேணுமுறை ... 52
தொத்துநோய்கள் ... 113
தொத்துநோய் பிரசனமும் துர்க்கந்தத்தைப் போக்குதலும் ... 172
மகம்மாரியும் எலிகளும் ... 138

வியவசாயம்.

திவான் பஹதூர் ரகுநாதராவ் அவர்களுடைய சில அபிப்பிராயங்கள் ... 9
உழவு நூல்.—
நிலமும் நிலவகையும் ... 22
பூமிவகையும் பொருள்வகையும் ... 48
நெற்பயிர் விதை விதைத்தல் ... 166
கோயமுத்தூர் வியவசாய காலேஜும் சோதனைப்பண்ணையும் ... 180
இத்தேசத்தின் பாசன முறைகள் ... 217
திருநெல்வேலி ஜில்லாவில் பருத்தியை சால் சாலாய் விதைக்கும் முறையின் அபிவிருத்தி ... 373

JL
3m 2.11, n08 vB

பக்கம்.

பொது.

பர்மா ... 80
ஹாலிஞ்சியின் சுடுநீர் ஊற்றுகள் ... 122
இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள் 134
பௌத்த சங்கங்கள் ... 145
இரும்புக் கனிகள் ... 168
பர்மா தேக்குமரம் ... 252
முந்திரிமரம் ... 271
திருமயிலை அறுபத்துமூவர் உற்சவம் ... 310
ஸ்ரீ காலடிக்ஷேத்திரமும் ஸ்ரீ ஆதிசங்கராசாரியமூர்த்திப் பிரதிஷ்டையும் 272
சென்னைக் கண்ணாடித் தொழிற் கூட்டம் 376

வியாஸங்கள்.

சட்டம் ஏற்படுத்துவோர் சட்டப்படி நடத்தல்வேண்டும் ... 13
சிவத்தலப்பெயர்க் காரண விளக்கம் ... 14
முடிந்த தமிழ் நெடுங்கணக்கிற்காக ஓர் வேண்டுகோள் ... 17
ஸ்திரீகளின் அபிவிர்த்தியில் மேல்நாட்டாரும் கீழ்நாட்டாரும் ... 40
மனிதன் : அவன் தாழ்வும் ஏற்றமும் ... 73
நமது பெண்களுக்கு எத்தகைய கல்வி கற்பிக்கவேண்டும் ... 111
நாகரீகம் : சாவித்திரிசரித்திர ஆராய்ச்சி 121
துக்கம் ... 136
அன்பின் சொரூபங்களும், பக்தியும் ... 164
தமிழ்வசன நூற் சரிதம் ... 203
கைத்தொழிலல்லது மெய்த்தொழிலில்லை 214
அவசரம் ... 239
தூங்காதிருங்கள் ... 246
தன் பொறுப்பு ... 247
நமது பாடசாலைகளில் மதக்கல்வி பயிற்றுவிக்க ஓர் வேண்டுகோள் ... 254
நாம் முன்னுக்கு வருவதெப்படி ... 277
நட்பு ... 308
நூல்பயிற்சி ... 335
ஸம்பாஷணைக் குறிப்புகள் ... 339
சிலப்பதிகாரக் கால ஆராய்ச்சி ... 369
அழுக்காறு ... 371

மொழி பெயர்ப்புகள்.

குமார சம்பவம் (வடமொழி காவியம்) 26, 53, 119, 319, 347, 384.
நீலி வசிகரம் (ஓர் ஆங்கில நாடகம்) 55, 85, 115, 186, 256.
இந்துலேகை (ஒரு மலையாள நாவல்) 87, 148, 260, 292, 352.
யூலிஸ்ஸிஸ் (ஆசிரியப்பா) ... 155
சாகுந்தலநாடகம் (ஓர் வடமொழிநாடகம்) 258

பக்கம்.

சிறுகதைகள்.

கோபாலன் விரதம் நிறைவேற்றியது ... 105
ரத்தினவியாபாரி ... 169
மங்களத்தின் ரகசியம் ... 182
திருமலை சேதுபதி—(ஓர் நாடகத்தின் ஓர் காட்சி) ... 222
ஆசாபாசம் ... 279
பைத்தியக்காரத் தையற்காரன் ... 316
தூர்க்கவதிராணியர் வீரத்தன்மை ... 340
அடங்காப்பிடாரி ... 380

சிறுவர்களுக்கான பக்கங்கள்.

மனத்தின் ஸாதாரண நிலை—மோனம் என்பது ஞானவரம்பு ... 28
அகங்காரம்—துக்கஹேது ... 29
உண்மையின் உயர்வு அல்லது நெல்லிப் பழம் பொருந்திய கதை ... 57
குரங்குகளின் கூரிய புத்தி ... 58
கெடுவான் கேடு நினைப்பான்;—சேம்பேறியும் தர்மகர்த்தனும் ... 59
விட்டகுறை அல்லது ஜன்மாந்திர ஸுகிருதம் ... 91
அஞ்ஞானம் மூடிக்கொள்ளும் விதம் ... 93
உபகாரம் செய்தல் ... 124
வித்தர்கள் ... 154
மானஸ பூஜையின் பெருமை—கெடுவான் கேடு நினைப்பான் அல்லது அகச்சண்டை புறசசண்டை ... 188
புத்தியால் அறியொணுப் புராணன் பக்தியாம் வலையில் பிடிபடுவான் ... 189
நல்லோர் இணக்கத்தால் வரும் நன்மை அல்லது காஜியின் தந்திரம் ... 223
நன்மை விளைத்தால் நன்மை விளையும் ... 224
பெருந்தன்மை ... 225
உண்மையான மனிதன் ... 264
இக்கரைக்கக்கரைபச்சை ... 264 a
கரும்புதின்னக் கூலிவேண்டுமோ ? ... 295
வாயிலா நாயினர் திவ்ய கதை ... 296
ஆருமில்லா ஊரில் அசுவமேத யாகம் செய்கிறது ... 324
யாகங்கள் செய்யும் வழி ... 325
உலக வாழ்க்கையின் உண்மைநிலை ; இலவு காத்த கிளிபோலாதல் ... 358
பிள்ளையார்பிடிக்கக் குரங்காய் முடிந்தது 389
பரோபகாரமில்லாத தபஸ் ... 390

பக்கம்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்.

ஸீதை அல்லது தர்மத்தின் ஸ்வபாவம்
1. காடுசேர்ந்த காதை ... 30
2. பிரிவுற்ற காதை ... 61
3. உலகிற்குழைத்த காதை 93, 126
4. உலகிற் புகுந்த காதை ... 127

கண்ணகி அல்லது பத்தினிக்கடவுள் ... 156
1. மதுரைப்புகுந்த காதை ... 157
2. விழாவெடுத்த காதை ... 190
3. தெய்வந்தொழுத காதை ... 226

கௌரி அல்லது வேற்றுமை அழிவு ... 264 b

சகுந்தலை அல்லது பிரிவினிலை ... 296 a
1. கடிதம் வரைந்த காதை ... 296 a
2. உள்ளம் கலந்த காதை ... 326
3. புறமுறப் புகுந்த காதை ... 360
4. வழக்குரைத்த காதை ... 391
5. பெருமை பெற்ற காதை ... 395

விசேஷ வர்த்தமானங்கள்.

பருத்திக்கொட்டை எண்ணெய்:—ஓர் புதியநூல்;—குண்டூசி செய்தல் ... 32

ஐக்கிய மாகாணங்களில் சர்க்கரை உற்பத்தி சாலை—அனகப்பள்ளிப் பென்ஸில் சாலை;—நிலம் உழுதல்—ஓர் புதுமாதிரி ... 32 a

இந்திய அரசாட்சியும் வித்யாப்பியாசமும்; சுதேசி மோடார்வண்டி;—சென்ட்ரல் ஹிந்து கலாசாலை, காசி; ஓர் நெசவுதறி;—ஒரு தராசு;—பம்பாய்க்கு ஓர் சமர்த்தன்;—தார்பூசப்பட்ட கடிதமும் ஜப்பானும் ... 63

கைத்தொழில் பாகமும் சென்னை கவர்ன்மெண்டும்;—பருத்தியும் இங்கிலாந்தும்;—பருத்தியும் சென்னை கவர்ன்மெண்டாரும்;—கோதுமை;—சென்னை கவர்ன்மெண்டாரும் குடியானவர்களும் ... 64

இந்தியாவின் பருத்தி யந்திரசாலை;—1908ஆு உற்பத்தியான பருத்தி;—கொப்பரை;—இவ்வுலகத்தி லுள்ள பருத்தி உற்பத்தி;—தென்னைமரம் 96

ஆரியசகோதரிகள் சங்கம் ... 96 a

செவ்வாய்கிரஹம்;—மிளகு, வெண்மிளகு;—மலை யேற்றம்;—பம்பாயிக்கும் புனவுக்கும் டெலிபோன் ஏற்பாடு;—நாகதாளி;—உலகத்துப்பெரிய கடிகாரம் ... 128 a

மத்திய மாகாணங்களில் புல்வளர்ப்பு;—ஐக்கிய மாகாணங்களில் நெசவுத்தொழில் பள்ளிக் கூடங்கள்;—மணிலாக்கொட்டைப்பயிர் ... 158

ஒருபெருத்த நன்கொடை;—சர்க்கரையின் சக்தி;—விஷ ஜுரம்;—பூகம்பம் அறிவிக்கும் கருவி ... 159

ஹாலிவால் நக்ஷத்திரம்;—விவசாய வறுமையும் பட்டுப்பூச்சி வளர்த்தலும்;—சப்பாத்துக்கள்ளி ஒருகால் நடைத்தீவனம்;—மண்ணெண்ணெய் ... 192

தண்ணீரைப் பரீட்சிக்க;—கொசுகுகளைப் பிடிக்க ... 192 a

மரங்களை வைத்துண்டாக்குதல்;—இந்தியாவிலிருந்து எருவகைகளின் ஏற்றுமதி. ... 230

அவுரி;—பால்பொடி;—மஹாபாரதம்;—எலித்தோல் கைத்தொழில். ... 231

ஜப்பான் நாட்டின் விரிவு;—மணிலாக்கொட்டை;—காகிதம் செய்வதற்குத் தகுந்த ஏற்பாடு;—பிரிட்டிஷ் வர்த்தகக் கணக்குகள்;—ஜெர்மனியின் பருத்தி வியாபாரம் ... 264 c

அமெரிக்காவில் இந்து தேவாலயம்;—சாதுரியமான ரணவைத்தியம்;—ஒரு நூதனயந்திரம்;—தலைஜோடிப்புக்காகப் பறவைகளைக் கொல்லுதல். 264d

மிளகு ... 296c

ஓர் தமாஷுக்கு மூன்றுமாச தண்டனை;—மருதாணை ... 296d

பிரிந்த இருவர் இருந்த இடத்திலிருந்து கண்டுக்கொண்டே பேசல்;—ஒளியில்லா இடத்தில் ஒளி;—மூன்று சிசுக்களைப்பிரசவித்தல்;—இத்தாலியா தேசத்திலும் புத்தமதம்;—கல்மழை;—அறுகால்பசு;—மையின்றி அச்சுப்பதித்தல் ... 328

ஹாலிவால் நக்ஷத்திரம்;—பவழம்;—கஸ்தூரி வஜ்ரபசை ... 362

சணற்றழை எருவு;—அவுரித்தழை எருவு 363

ஆட்டுப்பால் ஆகாரம்;—ஆமணக் கெண்ணை;—அசுத்தமான பால்;—உப்புச்சல ஸ்நானம் ... 396

SEP 1909

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி 2 } 1909-ஆு ஜுலைமீ { பகுதி 1

வேதஸ்வரங்கள்

THE SWARAS

வேதங்களின் ஸ்வரூபத்தை விவரித்த இடத்தில் அவைகள் அனந்தமாயிருப்பினும், புஸ்தகங்களில் எழுதப்படாமலே தொன்று தொட்டுக் குருமுகமாகக்கேட்டு அத்தியயனம் செய்யப்பட்டு இந்நாள்வரையிலும் மாறாது வந்து இருக்கின்றனவென்று சொல்லியிருக்கிறோம். வித்துவான்களது மனம்போன போக்கெல்லாம் வேதங்களை மாற்ற இடங்கொடாமல் அவைகளை முன்னவர்கள் வியாகரணத்தில் ஏற்பட்ட ஸ்வரப்படி அத்தியயனம் செய்துவந்தார்கள். என்றும் சொல்லியிருக்கிறோம். இது ஒன்று தான் வேத ஸ்வரங்களின் உபயோகம் என்று எண்ணிவிடல்கூடாது. ஸ்வரங்களுக்குவேறுபிரயோஜனங்களும் உண்டு. ஸ்வரங்கள் எழுத்துக்களுக்கும் அவைகளாலாகிய பதங்களுக்கும்ஒருவிதமான ஒற்றுமையை உண்டாக்குகின்றன. இந்தக் குணம் ஸ்வரங்களுக்குஇருப்பதால்தான் ஸங்கீதத்தில் கொஞ்சமேனும் ஞானம் இல்லாதவர்களும்கூட வேதகோஷத்தில் ஒருவிதமான ஸுகம் இருக்கிறதென்று எண்ணுகிறார்கள். வேதங்களில் அடிபடும் பதங்கள் ஒவ்வொன்றின் ஸ்வரத்தை உள்ளபடி அறிவதற்குச் ஸஹாயமாகப் பாணினி தமது வியாகரணத்தில் பலசூத்திரங்களை விதித்திருக்கிறார். இவ்விதிகளைநன்றாக அறிந்துகொண்ட பின்பு வேதங்களை ஸ்வரத்தோடு அத்தியயனம் செய்யவேண்டியது, ஒழுங்காயிருப்பினும், அவ்வாறுசெய்யாமல் நன்றாக வேதங்களை அத்தியயனம்செய்து தேர்ந்த ஆசாரியரிடம் சிஷ்யர்கள் சென்று அவரது ஸஹாயத்தால் வேத வாக்கியங்களை அடிக்கடிஉருவேற்றி வேதங்களைக் கோஷிக்கத் தெரிந்துகொள்வது வழக்கமாய் வந்துவிட்டது

செவிக்கு ஒருவிதமான ஸுகத்தை உண்டாக்குவதைத்தவிர ஸ்வரங்களுக்கு வேறுபிரயோஜனம் உண்டா இல்லையாவென்றால், உண்மையில் ஸ்வரங்களுக்கு வேறு பிரயோஜனங்கள் உண்டு. இதைத்தவிர வேறு பிரயோஜனம் இல்லை என்றால், 'நமக்கு இவ்விஷயத்தில் கஷ்டத்திற்குத்தகுந்த பலன் இல்லை. மேலும் கேவலம் அநித்தியமான இந்திரிய ஸுகத்திற்காகவா நாம் இவ்வளவு பாடுபடுகிறது' என்ற எண்ணம் நமக்கு உண்டாகும். சிறந்த ஸங்கீத

ரூபமாகிய வேதகோஷத்திற்குக் கேவலம் இந்திரிய திருப்திமாத்திரம்நோக்கமாகமாட்டாது இம்மாதிரியான ஸங்கீதவிசேஷங்களைக் கேட்குங்கால் நமதுமனம் இவ்வாறு உலகப்பற்றற்று ஆனந்தக்கடலில் மூழ்கி லயித்திருக்கிறது என்பதைசெவிக்குண்டாகும் ஸுகம் ஒருவாறு குறிப்பாகக் காட்டுகிறது.

ஒற்றுமை அல்லதுபொருத்தம்என்பதால்தான். விசித்திரப்பிரபஞ்சம் ஒழுங்காய் நடைபெற்றுவருகின்றது. ஒரு கணமாவது பொருத்தமின்மை யிருக்குமாயின் பிரபஞ்சத்திற்கு நாசம் வந்துவிடும். அண்டபிண்டசராசரங்கள் அனைத்தும் தம்முள் ஒற்றுமையாயிருந்து தொழிற்படுவதே பிரபஞ்சத்தில் காணப்படும் ஸங்கீதம். இம்மாதிரியாகக் கடவுளாலே ஸ்ருஷ்டிக்கப்பட்ட பிரபஞ்ச ஸங்கீதத்தைக் கண்டுதான் மஹான்களும் மந்திரதிரஷ்டாக்களும் அடியற்ற மரம்போல்விழுந்து தண்டனிட்டு நாத்தழுதழுக்க ரோமம் சிலிர்ப்ப இவைகளை ஸ்ருஷ்டித்தக் கடவுளைப் புகழ்ந்து பாடுகின்றனர். இவர்கள் புகழ்ந்துபாடும் இந்த ஸங்கீதமானது வீண் மனோபாவனையல்ல கட்டுக்கதையுமல்ல. இந்தப் பிரபஞ்ச ஒழுங்கால் ஏற்படும் சிறந்த ஸங்கீதத்தைப்பற்றி மனிதன் தியானம் செய்யச்செய்ய அவனது ஆத்மா பரிசுத்தமாகி விருத்தியடைந்து 'எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் அங்கங்கே' நிற்கும் பராபரவஸ்துவாகிய பரமாத்மாவைப்போல ஆகும். கேவலம் மனுஷ்ய ஸங்கீதங்கள் யாவும் இச்சிறந்த ஸங்கீதத்தை அறிந்து ஆனந்திக்கும் திறமையை மனிதனுக்கு உண்டாக்குகின்றன. ஆகையால் தான் தேவதைகளும் மஹான்களும் கவிகளும் நல்ல ஸங்கீதத்தை மிகவிரும்புகிறார்கள். நம்முள் மிக்க ஸூக்ஷ்மமென்று வழங்கிவரும்ஸங்கீதவிசேஷங்களைப் பிரபஞ்சத்தில் காணப்படும் ஸங்கீதத்தோடு ஒப்பிடுங்கால் குழந்தைகளது மழலைச்சொல்லிற்குநிகர் என்றுதான் சொல்லவேண்டும்,

எந்த விடத்திலும் எண்ணங்களிலாவது, பதங்களிலாவது, காரியங்களிலாவது ஒற்றுமை காணப்படுமாயின் அங்கு ஸங்கீதம் குடிகொண்டிருக்கும். பல பெயர்கள் சேர்ந்து ஒரு தொழிலை ஒற்றுமையாய் நடத்தி வருவாராயின் அங்கு பிரபஞ்ச ஸங்கீதத்தின் லேசம் இருக்கிறது என்று சொல்லலாம். ஒரு குடும்பத்திலிருப்பவரிடம் அந்நியோந்யம், பக்ஷம் ஒற்றுமையாய் வேலைசெய்தல் முதலிய குணங்கள் அமைந்திருக்குமாயின் அங்கும் இந்த ஸங்கீதத்தின் லேசம் இருக்கிறது என்று சொல்லலாம். ஸங்கீதலேசம் அற்ற இடத்துச் சிறந்தவர் தங்கார். இதனால்தான் தேவதைகள் சண்டை வாக்குவாதம் முதலியவைகள் நடக்கும் இடத்தைவிட்டு ஓடிப்போய் விடுகிறார்கள் என்று புராணங்கள் கூறுகின்றன.

தொன்றுதொட்டு ஸகல ஜாதியாரும் ஸங்கீதத்தின் மஹிமைகளைப் பலவாறு எடுத்துக்காட்டி யிருக்கிறார்கள். யவன தேசத்தில் ஆர்பியஸ் என்பவர் கொடியமிருகங்கள் நாகவாவிகள் முதலியவர்களைக் கூடத்தமது ஸங்கீத இனிமையாலும் சிறப்பாலும் சித்திரம்போல் அசைவற்றிருக்கும்படி செய்துவிட்டாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. பக்தர்களுள் சிறந்தவராகிய நாரதர் ஸதா மஹதியென்னும் வீணையைக் கையில் ஏந்திக்கொண்டு தெய்வத்தன்மை நிறைந்த ஹரிநாமஸங்கீர்த்தனத்தை விடாமல் செய்துகொண்டு பரவசராய் இருப்பதாகப் புராணங்கள் கூறும். ஸகல துர்க்குணங்களும் நிறைந்த இராவணன் கூடப் பரமசிவனைத் தனது ஸாமகான விசேஷத்தால் திருப்திப் படுத்தினனென்று தெரிகிறது.

மேனாட்டுப் பிரகிருதி சாஸ்திரவித்துவான்கள் ஸ்ங்கீதத்தின் மஹிமையை நமது ஊனக்கண்ணுக்குப் புலப்படும்படி காட்ட ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நம்மைச் சுற்றிலுமுள்ள காற்று ஒழுங்காய் அலைபோலத்தொடர்ந்து வருமாயின் ஸங்கீதமுண்டாகின்றது

என்பதும் ஒழுங்கின்றித் தாறுமாறாய் வருமாயின் ஸாதாரண சப்தமுண்டாகும் என்பதும் இப்பிரகிருதி சாஸ்திரம் வாசிக்கும் மாணாக்கர் அறிந்தவிஷயமே. இவ்வாறு ஸங்கீதத்தை உண்டாக்கத்தக்க ஒழுங்கான காற்றின் அலைகள் அருகேயிருக்கும் தாம்பாளத்தில் பரப்பியிருக்கும் மணலிலாவது பாத்திரத்தில் நிறைந்திருக்கும் தண்ணீரிலாவது படுமாயின் அவைகளில் பார்வைக்கு அழகாயிருக்கும் உருவங்கள் உண்டாகும். இவ்வாறு ஸ்தூலமாயிருக்கும் பொருள்களிலும் ஸங்கீதமானது அழகிய உருவை உண்டாக்குமேயானால், அப்படியே பஞ்சபூதங்களாகி அதிஸூக்ஷ்மமாயிருக்கும் மனது முதலிய கண்ணுக்குப் புலப்படாது தொழிற்படும் அங்கங்களில் ஸங்கீதம் ஏன் அழகிய உருவை உண்டாக்கி மனோலயத்தை உண்டாகாது? ஸங்கீதம் சென்றுதாக்கும் அங்கம் ஸூக்ஷ்மமாய் இருக்கஇருக்க அதில் பலன் அதிசீக்கிரத்தில் கிடைக்குமென்றே சொல்லலாம். ஆதிவியாதி முதலியவைகள் யாவும் தேகங்களின் பரமாணுக்களுள் ஒற்றுமைநிலை குலையுங்காலத்தே உண்டாகின்றன. அப்பொழுது ஏற்பட்ட ஸ்வரங்களோடு வேத மந்திரங்கள் சிலவற்றைச்சொன்னால் அவை தேகத்தின் பரமாணுக்களை அப்பொழுது இருந்த குலைந்த நிலையினின்றும் மாறச்செய்து அப்பரமாணுக்களுள் ஒற்றுமையை உண்டாக்கிக் கஷ்டப்படும் நோயாளிக்குச் சீக்கிரத்தில் தேகஸௌக்கியத்தைத் தந்து நோயைத்தீர்க்கலாம். சூரியவெளிச்சமும்,வர்ண வெளிச்சங்களும் எவ்வாறு சிற்சில நோய்களைத் தீர்க்கின்றனவோ அவ்வாறே நல்ல ஸ்வரங்களும் சிற்சில நோய்களைத் தீர்க்கும் திறனுடையன. எப்படிப்பட்ட மனிதனும், சிறந்ததாயும் சுத்தமாயுமுள்ள பொருளடங்கிய வேதமந்திரங்களை அவைகளுக்கு ஏற்பட்ட ஸ்வரங்கள் தவறாது நாள்தோறும் சொல்லிக்கொண்டு வருவானேயானால், அவன் கூடிய சீக்கிரத்தில் மனோவிலாசம் சுத்தம் மனோதிடம் முதலியநற்குணங்கள் வாய்ந்தவனாவான் என்பதற்கு ஸந்தேகமில்லை.

ஸங்கீதமானது ஸ்தூல விஷயங்களை ஒழுங்குபடுத்துவதோடு ஸூக்ஷ்ம விஷயங்களையும் சீர்திருத்தி ஒழுங்குபடுத்துகின்றது என்பதை யுக்திபூர்வமாக ஸ்தாபிக்கலாம். ஒவ்வொரு பதத்திற்கும் அர்த்தம் என்பது ஒன்றுஉண்டு. பொருளும் ஒலியும் சேர்ந்தே பதமாகின்றன. சில வாதிகள் ஒலி முன்பு உண்டானதென்றும் பொருள் பின்பு ஏற்பட்டதென்றும் சொல்லுகிறார்கள். இவர்களே வையாகரணிகள். வேறுதிறத்தாராகிய வேதாந்திகள் இதை ஆக்ஷேபித்து முதலில் பொருள் உண்டானது என்றும் அதன் பின்பு தான் அது ஒலிரூபமாய்ப் பரிணமித்ததென்றும் ஸித்தாந்தம் செய்கிறார்கள். இந்த ஆக்ஷேப ஸமாதானங்களை இங்கே விவரிக்கப் புகுந்தால் அவை வாசிப்போருக்கு எளிதில் விளங்கா. நாம் எந்தக்கொள்கையைப் பின்பற்றியபோதிலும், ஒலியும் பொருளும் தம்முள் நெருங்கி ஸம்பந்தித்து ஒன்றை ஒன்று ஒழுங்குபடுத்துகின்றது என்பதை ஆக்ஷேபித்தல் முடியாது. புதிய பிரகிருதி சாஸ்திரமானது ஒலி என்பது வஸ்துக்களின் அணுக்கள் அங்குமிங்கும் வேகமாய் அசைதலால் நமக்குப் புலப்படும் ஒரு காரியம் என்று நிரூபிக்கின்றது. பொருளோ சித்துருவம், முன்சொல்லியவாறு தொழிற்படும் வஸ்துக்களுக்கு உயிர்தரும் திறமை யுடையது. பதங்களிலாவது பிராணிகளிலாவது காணப்படும் யாவும் பிரபஞ்சத்தில் எங்கும் காணப்படும் சித்தாகிய கடவுளின் ஓர்பாகம். ஒலியென்ற தேகத்தில் கடவுள் உருவாகிய பொருள் என்ற உயிர் குடிகொண்டிருப்பதே பதமாகும். ஆகையால் பதம் என்பது ஓர் பிராணியைப்போன்றது. நாம் வெளியிடும் வாக்கியங்கள் நமது சிற்றறிவுக்கெட்டியபடியே சில விசேஷங்களையுடையனவாயிருக்கும். வேதங்களோ கடவுளது மூச்சுக் காற்றுக்களாகையால் கடவுள் பேரறிவிற்கேற்றபடி எல்லாவிசேஷங்களையும் அடக்கியுள்ளனவாயிருக்கும்.நமதுதேகஸுகத்தை விருத்திசெய்ய நமக்கு எண்ணமுண்டாகுங்

கால் வைத்தியர்களால் சிறந்ததெனக் கொடுக்கப்பட்டமருந்துகளை எவ்வாறு உட்கொள்ளுகிறோமோ, அவ்வாறே நமதுமனதை ஸுகப்படுத்தி நாம் சாந்தியை அடையவேண்டும் என்ற எண்ணம் வந்தகாலத்தில் பரமவைத்தியராகிய பரம்பொருள் வேதமந்திரங்கள் ரூபமாகக் கொடுத்துள்ள மருந்துகளை ஸ்வரம் தவறாது நாள்தோறும் அத்தியயனம் செய்தல் ரூபமாக நாம் உட்கொள்ளவேண்டியது அவசியம்.

ஸ்வரங்களின் பிரயோஜனங்களைப்பற்றி வேறுவிதமாகவும் ஆராய்ச்சி செய்யலாம். சித்துருவாகக்காணப்படும் பிரபஞ்ச பாகத்தை உற்று நோக்கினால்வெவ்வேறாகக் காணப்படும் சித்துக்கள்தோன்றும். அவைகள் எல்லாவற்றையும் ஒருங்கேசேர்த்து நோக்கில் ஸர்வ வல்லமையுள்ள பரம்பொருளாகவே முடியும். வெவ்வேறாய்க்காணப்படும் ஒவ்வொரு சித்தும் தேவதையென்று சொல்லப்படும். எவ்வாறு பிரபஞ்ச வஸ்துக்கள் ஒவ்வொன்றிற்கும் விசித்திரமான குணங்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ அவ்வாறு ஒவ்வொரு தேவதைக்கும் குண வைசித்திரியங்கள் உண்டு. சித்துருவாயிருக்கும் ஒவ்வொரு தேவதையும் தனக்குத்தகுந்த பாஷையின் மூலமாகிய ஒலி ரூபமான எழுத்தில் குடிகொண்டிருக்கின்றது. இக்காரணம்பற்றியே ஒருமந்திரத்திலுள்ள ஒருஎழுத்தை பீஜாக்ஷரம் என்றும் அது ஒரு தேவதைக்கு இருப்பிடம் என்றும் நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்தத்தேவதைகளுக்குத் தத்தமக்குத்தகுந்த ராகத்துவேஷங்கள் உண்டு என்பது முன்னமே சொல்லப்பட்டது. இதனால் வேதமந்திரங்களில் உள்ள அக்ஷர அமைப்பின் நோக்கம் எளிதில் விளங்கும். ஒற்றுமைப்படாத எழுத்துக்களைச் சேர்த்து உச்சரித்தல் அவைகளின் ஒலிகள் தம்முள்ளும், தேவதைகள் தம்முள்ளும் விரோதத்தையுடையனவாய் அவை உச்சரிப்பவனது தேகத்தையும், ஆத்மாவையும் நிலைகுலையும்படி செய்து, அவனுக்குத் தீராக்கஷ்டங்களை உண்டாக்கிவிடலாம். வேதங்கள் முழுவதும் இம்மாதிரியான ஒலிப்பொருத்தமும் தேவதைப்பொருத்தமும் வாய்ந்த வாக்கியங்கள் நிறைந்தவைகளே. இவைகளுக்கு முரணின்றி வேதங்களை ஒருவன் அத்தியயனம் செய்வானேயானால் அவனுக்கு மாறாமேன்மையுண்டாகும். இப்பொருத்தங்களைக்கவனியாமல் ஒருவன் வேதங்களை அத்தியயனம் செய்வானேயானால் அவனுக்கு எதிர்பாராதகெடுதிகள் ஸம்பவிக்க இடமுண்டு.

இந்தக் கொள்கையை விளக்குவதற்கு சிக்ஷையில் ஒரு கதை இருக்கிறது. முன்னொரு காலத்தில் இந்திரனைக் கொல்லவேண்டுமென்ற எண்ணத்துடன் ஒரு அஸுரன் யாகம்செய்து வந்தான். அவன் மாந்திரம் சொல்லுங்கால் 'நான் இந்திர சத்ருவாக விளங்கட்டும்' என்று சொல்லவேண்டிவந்தது. இதை இப்பொருள்படும்படி சொல்லவேண்டுமானால் அஸுரன் இந்திரசத்ரு என்ற பதத்தில் இறுதியிலுள்ள பாகத்தை அழுத்தி உச்சரிக்கவேண்டியது. இவ்வாறு செய்யாது ஏதோ அஜாக்ரதையினால் இப்பதத்தின் முதல்பாகத்தை அழுத்திச் சொல்லிவிட்டான். இவ்வாறு சொன்னதும் அவன் சொல்லிய வாக்கியம் அவன் எண்ணத்திற்கு நேர்விரோதமாய்ப் பொருள்பட்டது, அதாவது 'நான் இந்திரனால் கொல்லப்பட்டவனாக விளங்கட்டும்' என்பது. இவ்வாறு அந்த வாக்கியத்திற்குப் பொருள் உண்டாக, உடனே இந்திரனது வஜ்ராயுதத்தால் அந்த அஸுரன் அடிபட்டு விழுந்தான். இதனால் சிக்ஷையானது 'தகுந்த ஸ்வரத்தோடு உச்சரிக்கப்படாத வேதவாக்கியம் பயனற்றதாய்ப்போகும். அதன் உண்மைப்பொருள் வெளிவராது, ஸ்வரம் தப்பிய வாக்கியமானது இந்திர சத்ருவென்ற பதம் ஸ்வரம் தப்பி உச்சரித்த அஸுரனை எவ்வாறு கொன்றதோ அவ்வாறே உச்சரிக்கும் யஜமானனைக் கொல்லுவதற்கு ஓர் வஜ்ராயுதமாகுமே ஒழிய வேறில்லை' என்று கூறும்.

"ஸர் தாமஸ் மன்ரோ"

"குடிகளின் நேசன்"

SIR THOMAS MUNRO

ஆதியில் இந்தியாவிற்கு வந்தநிரம்ப புத்திசாலிகளான ஆங்கிலேய துரைத்தனத்தார்களில் ஒருவரும், இந்திய குடிகளுக்கு முக்கியமான ஆப்தருமான தாமஸ் மன்ரோ கி. பி. 1761-௵ மேமீ 27௳, ஸ்காட்லாந்துதேசத்தில் கிளாஸ்கோ நகரத்தில்பிறந்தார். ஒரு ஸமயத்தில் மிகுந்த தனிகராயிருந்து வியாபார நஷ்டத்தினால் அதிக தரித்திரராய்ப்போன ஒரு வியாபாரியின் மகன். தாமஸ் தேகதிடமும், நல்லமாதிரியும், வசீகரமுமுள்ள ஒருபையன். அதிபாலியத்திலேயே அவருக்கு விடாமுயற்சியும், இதரபாஷைகளைக் கற்கும் ஸாமர்த்தியமும் உண்டென்பது தெரிந்தது. கிழக்கு இந்தியா கம்பெனியார் உத்தியோகத்தில் ஒரு ராணுவ உத்தியோகஸ்தரின் உதவியாக 1780௵ ஜனவரிமீ 19௳ சென்னைவந்துசேர்ந்தார்.

உத்தியோக முதல்பாகம் 1780-1792.—மிஸ்டர் மன்ரோ இந்தியாவிற்குவந்த ஸமயத்தில் ஆங்கிலேயர் நிரம்ப சிரமப்பட்டுக்கொண்டிருந்தார்கள். மைஸூர்தேசத்தை யாண்டுவந்த கெட்டிக்காரனும் பலசாலியுமான "ஹைடர் ஆலிகான்" கர்னாடக தேசத்திலிருந்து ஆங்கிலேயரைத் துரத்த அதைப் படையெடுப்பதாக பயமுறுத்தினான். மதிராஸ் ராஜாங்கத்தார் அதை அலக்ஷியம்செய்து தங்களைக் காக்க ஒரு ஏற்பாடும் செய்யவில்லை. மேலும் ராஜாங்க அங்கத்தினர்கள் தங்களுக்குள் மனம்பொருத்தமில்லாமல் சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள். மன்ரோ வந்து கொஞ்சநாளைக்குப் பிறகு ஹைடர்ஆலி நிஜமாகவே படையெடுத்தான். அவன் வரும் வழியில் கொளுத்திய கிராமங்களில் எழுந்ததீயானது பரங்கிமலையிலிருந்து தெரிந்தது. ஜனங்கள் பயந்து சென்னையில்வந்து அபயம் புகுந்தார்கள். இராஜாங்கத்தார் விழித்துக்கொண்டு அவஸரத்தில் செய்த பிரயத்தனங்கள் போதுமானதாயில்லை. சேனாதிபதி காஞ்சீபுரத்தில் கூடியிருந்த ஒரு பெரும்படையை நடத்த ஆரம்பித்தான். மிஸ்டர் மன்ரோவும் அங்குபோய்ச் சேர்ந்தார். கிருஷ்ணா நதிக்கரையிலிருந்த கர்னல் பெயிலியின் சேனையும் திரும்பிவரும்படி உத்தரவுபோயிற்று. ஹைடர் ஆலி மத்தியில் நின்று இரண்டு சேனைகளும் ஒன்றுசேரவொட்டாமல் தடுத்து பெயிலியின் சேனையைத்தோற்கடித்தான். இதைக்கேட்டு வங்காளசேனாதிபதி ஸர் ஐர்கூட் சென்னைக்கு வந்து சேனையை நடத்த ஆரம்பித்தார். ஆங்கிலேயர் யுத்தஸன்னத்தராகுமுன் ஹைடர் ஆலி அவர்கள் ஸேனையைச் சின்னாபின்னமாகக்கலைத்துக்கர்னாடக தேசமெங்கும் தான் ஜெயம் கொண்டான். இருந்தபோதிலும் "கூட்"யுத்தத்திற்கு ஆரம்பித்ததும், மன்ரோ ஒரு சிபாய் சேனையுடன் அவரைச் சேர்ந்து, பரங்கிப்பேட்டையில் ஹைடர் ஆலியைத் தோற்கடித்துவிட்டார்கள். இதுமுதல் ஐந்து வருஷங்களுக்கு மன்ரோ வெகு இடங்களில் கோட்டைகளைக் காப்பாற்றும் வேலையிலிருந்து, பிறகு இரண்டு வருஷங்களுக்கு ரீட் துரையின் கீழ் வேலை கற்றுக்கொ

ண்டார். மைஸூர் ராஜ்யத்தில் தன் தகப்பனுக்குப் பின்பட்டத்திற்குவந்த திப்பு ஸுல்தானோடு நடந்தயுத்தத்தில் மன்றோ அமர்ந்திருந்தார். 1792௵ யுத்தமுடிவில் அந்த ராஜா தோற்றுப்போய் கம்பெனியாருக்கு "பிராமஹால்" "திண்டுக்கல்" இரண்டையும் கொடுத்து அதற்கு நடந்த உடன்படிக்கைப்படி திப்பு தன் குமாரர் இருவரையும் பிணையாக ஒப்புவித்தான். அவர்களை யழைத்துக்கொண்டு ஒருசேனையுடன் மன்றோ சென்னைவந்து சேர்ந்தார்.

இரண்டாம் பாகம்.—1792-99-திப்பு கொடுத்த பிராமஹால் இப்போதிருக்கிற 'சேலம்' 'சித்தூர்' இந்த ஜில்லாக்களின் ஓர்பாகம். அது வெகு ரமணீயமாயும், இன்பமாயுமுள்ள ஒரு இடம். இங்குமங்கும் குன்றுகள் நிறைந்து பார்ப்பதற்கு ஆனந்தமாயிருக்கும். தென் இந்தியாவில் இதுவரையில் "ஸிவில்" உத்தியோகஸ்தர்கள் நடத்தின இந்த ராஜ்யபாரம் ஸரியாயில்லாததனால், டிப்புவுடன் தானே யுத்தத்தை நடத்தின 'கவர்னர் ஜெனரல்' ஆகிய "காரன்வாலிஸ் பிரபு", இராணுவ உத்தியோகஸ்தரைக்கொண்டு ராஜ்யத்தை நடத்த உத்தேசித்து காப்டின் ரீட் என்பவரை பராமஹால் ரிவினியு அதிகாரியாக நியமித்து, மன்றோவை அவருடைய உதவிகளில் ஒருவராய் ஏற்படுத்தினார். மன்றோவும் தன் புது உத்தியோகத்தை வெகு ஆவலுடன் செய்ய ஆரம்பித்து, அந்த ஜில்லாவினிடத்தில் அவருக்கு வெகு அபிமானம்உண்டாகி, தர்மபுரியைத் தனக்கு "அஸூர்" ஆக ஏற்படுத்திக்கொண்டு, பொழுது போக்குவதற்காக ஒரு உத்தியானவனமும் அமைத்துக் கொண்டார். இருந்தாலும் எப்போதும் அங்குதங்காமல் ஜில்லா முழுவதும் ஓயாமல் சுற்றிக்கொண்டேயிருந்தார். வெயில் அதிக தீக்ஷண்யமாயிருக்கிற மேமாதத்தில்கூட அவர் ஸர்கூட்டில் இருந்ததாகத் தெரிகிறது. அந்த ஜில்லாவின் அழகை அவர் வெகு நன்றாய் அனுபவித்தார் என்று தோன்றுகிறது. ஜனங்களிடத்தில் வெகு சாதாரணமாய்ப் பேசி அவர்களோடு தானும் ஒருவராகயிருந்தார். தான் வெளியே நடந்து போகும்போது ஜனங்கள் அவரை நெருங்கி, தங்கள் பயிர்கள் முதலிய இதர ஸமாசாரங்களைப்பற்றிப் பெருங்கதைகள் சொல்வார்கள். அவரும் அவைகளை குமாஸ்தா, சேகவன், இவர்கள் உதவியின்றியே பொறுமையாய்க் கேட்பார். அவர் சாப்பாடு, "நொய்யரிசிக்கஞ்சி" "வாழைக்காய்க்கறி" இவை போன்ற வெகு ஸாதாரணமானவைகள். கிராமம்கிராமமாய்ப்போய் குடிகள் கொடுக்கவேண்டிய வரியைத் தீர்மானிப்பதிலேயே அவருக்கு வேலை ஸரியாய் இருந்தது. ஜனங்கள் தங்கள் குடும்பங்களில் வெகு ஸஹஜமாகிய தகப்பன் பட்டகடன், சகோதரவஞ்சனை, பாடுபடும் மனுஷியாள் இறந்து போதல் முதலிய பலஸமாசாரங்களையும் சொல்லித் தங்களுக்கு வேண்டிய ஸௌகரியங்களைப் பெற்றுக் கொண்டார்கள். ஹைடர், திப்பு இவர்கள் நாளில் பிராமஹாலில் வரிவாங்கின அட்டூழியத்தைக் கேட்ககர்ண கடூரமாயிருக்கிறது. ராஜாவுக்கும் ஜனங்களுக்கும்நேரானஸம்பந்தமேகிடையாது. ஸர்காருக்கு இவ்வளவு வரிகட்டுகிறதாக சிலர் ஒப்புக்கொண்டு, அதைவிட எத்தனையோ பங்கு அதிகமாய் ஜனங்களிடத்திலிருந்து கசக்கிப்பிழிந்து ஸத்தை உருஞ்சுவது போல வஸூல்செய்து, ராஜாவுக்குக் கொஞ்சம் கொடுத்து மிகுந்ததைத் தாங்கள் உண்டு பிழைத்தார்கள்.

இந்த கஷ்டத்தைநிவர்த்திப்பதேமன்றோவினுடைய முக்கியகருத்தாயிருந்தது. குடிகளிடத்திலிருந்து வரிவாங்குவதற்கு "ரயட்வாரி ஸிஸ்டம்" என்பதை ஏற்படுத்தி குடிகளுக்கு நிரம்ப சௌக்கியத்தை யுண்டுபண்ணினார். வருஷம் ஒருமுறை ஜமாபந்தி நடத்தி, குடிகளுக்கு பட்டாக்கொடுத்து, பட்டாவில் கண்ட நிலங்களுக்கு அவர்கள் கிஸ்தி ஸர்காருக்கு நேரில் கட்டிவரும்படி ஏற்பாடு நடந்தது. ஒவ்வொரு பட்டாதார்களுக்கும் தங்கள் நிலங்களை உள்குத்தகைக்கு விடவும், தானம், கிரயம், போக்கியம் இவைகள் மூலமாய் வேறுபேரில் மாற்றவும் யதேச்சையாய் பாத்தியம் உண்டாயிற்று. வரி ஸரியாய் கொடுக்கிறவரையில் நிலத்தில்அவர்கள் பாத்தியம் குறைவதேயில்லை. அவர்கள்வருஷாவருஷம் தம்நிலத்தை விருத்திசெய்துகொள்ளவும், வேண்டாமென்றால் குறைத்துக்கொள்ளவும் ஸ்வதந்திரம் இருந்தது. இந்த மாதிரியான ஏற்பாட்டை பிராமஹாலில் உண்டுபண்ணினார். மன்றோ அங்கிருந்தகாலத்தில் அந்த ஜில்லாமுழுவதும் அளந்து கட்டி மொத்தரி வெனியுவும் தீர்மானிக்கப்பட்டது. அவர் அங்கிருந்த கடைசி வருஷத்தில் அந்த வருஷகிஸ்திமுழுவதும் வெகுசுலபமாயும் கொஞ்சங்கூட பாக்கியில்லாமலும் வஸூல் செய்யப்பட்டதென்றால் அவருடைய ராஜ்யபாரத்தைபற்றி நிரம்ப சிலாகித்தே சொல்லவேண்டும்.

மூன்றும்பாகம்.—1799-1801-திப்பு ஸுல்தானோடு நடந்த கடைசியுத்தத்தில் அவன் இறந்துபோக, ஆங்கிலேயர், மஹாராஷ்டிரர், நைஜாம் இவர்களுக்குள் நடந்த உடன்படிக்கைப்படி மேல்ஸமுத்திரக் கரையிலுள்ள கன்னட தேசம் ஆங்கிலேயர்க்குக் கிடைத்தது. அந்த தேசத்தில் ஒழுங்கான ராஜாங்கம் ஏற்படுத்த மன்றோவை அனுப்பினார்கள். தான் முந்தியிருந்த இடத்திலேயே இருக்கவேண்டுமென்ற ஆவல் அதிகமாயிருந்தபோதிலும் ஸர்கார் உத்திரவிற்குள்பட உடனே கன்னடம் போய்ச் சேர்ந்தார். அவ்விடத்தில் சற்றுநிதானிப்பதற்குக்கூட பொழுது இல்லாமல் வேலை அவ்வளவு கஷ்டமாயிருந்தது. இவர் வேலையில் அதிக திறமையுள்ளவராயிருந்தும் அத்தேசம் அவருக்கு முற்றும் ஒத்துக்கொள்ளாததனாலும், அதிகமழையினாலும், அவர் இஷ்டப்படி ஸர்கூட் போகவும், வேலை நடத்தவும் ஸரிப்படவில்லை. நிரம்ப தொந்திரவுக்காரர்களாயிருந்த அவ்விடத்து ஜனங்கள் இவருடைய வசீகர சக்திக்கிணங்கி வெகு ஸமாதானமாய் விட்டார்கள். மன்றோவும் தனக்குப் பிரியமான ரைட்வாரி மாதிரியை வரி வசூலிற்கு நாளடைவில் ஏற்படுத்தினார். இவ்விதமாக கன்னட ஜில்லாவை சீர்திருத்தி ஒழுங்கு செய்து வந்தார்.

நான்காம் பாகம்.—1801-1808 —இப்படியிருக்கையில், ஆங்கிலேயராஜாங்கத்தாரோடு ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை நிபந்தனைகளை, நைஜாம்நிறைவேற்ற முடியாததனால் "பல்லாரி," "அநந்தப்பூர்," "கடப்பை," "கர்னூல்," "பால்காட்" ஆகிய இந்த ஜில்லாக்களை ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டான். மேஜர் மன்றோவை இவைகளுக்கு முக்கிய கலெக்டராக நியமித்தார்கள். அவர் அங்கு போகும்போது அந்த பிரதேசத்தின் நிலைமை வெகு பரிதபிக்கத்தக்கதாயிருந்தது. நைஜாம் அதிகாரத்தை நிராகரித்த சில்லரைபாளையகாரர் சிலர் இந்த தேசத்தைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள். நீண்டகாலம் நடந்த ஒரு யுத்தத்தினாலாவதுபோல வெகுகஷ்டம் வந்துவிட்டது. ஸைன்னியத்திற்குசம்பளம்கொடுக்க முடியாமல் கிராமங்களில் குடிகளைத் தொந்திரவுசெய்து கொள்ளையடித்தார்கள். இதுவும் போராமல் ஒருவறள்பாழ் ஏற்பட்டது. இந்த தேசத்தில் மேஜர் மன்றோவின் முதல்காரியம் ஒழுங்கும் சட்டமும் உண்டுபண்ணி பாளையக்காரர்களையடக்கி ஜனங்களிடத்தில் சாதாரணமாய் பழகி தன்னிடத்தில் அவர்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டாக்கினார். வரியும் இலகுவாய் வசூல்செய்யப்பட்டது. ஜனங்களும் வெகு பிரீதியாய் "கர்னல்தொரைகாரு" என்று சொல்லிவந்தார்கள். மேஜர் மன்றோ இரஜா வாங்கிக்கொண்டு ஸ்காத்லாந்திற்கு போய் 6-வருஷம் இருந்தார். தான் பாலியத்தில் ஓடியாடின விடங்களைபார்த்து சந்தோஷித்தபோதிலும், தன் தாயார் இறந்துபோய் தகப்பனாரும் அதிக விருத்தாப்பியராய் விட்டதனால் அவருக்கு சந்தோஷம் குறைவாகவேயிருந்தது. அப்பொழுது பார்லிமெண்டு மஹாசபையார் இந்தியதுரைத்தனத்தாரைப்பற்றி செய்துகொண்டிருந்த விசாரணையில் இவர்சாட்சி நிர

ம்ப உபயோகமுள்ளதா யிருந்தது. இவர் கொடுத்த அபிப்பிராயங்களுக்கு அதிககௌரவம் ஏற்பட்டு சென்னை இராஜதானியில் நியாயம் நடந்தேறி வருவதை விசாரிக்க இவரை ஒரு தலைமை உத்தியோகஸ்தராக நியமித்தார்கள்.

ஐந்தாம்பாகம்.—1814-1819. கர்னல் மன்ரோ அதிக குணசாலியான "மிஸ்ஜேம்ஸ் காம்பெய்" என்பவளை விவாஹம் செய்துகொண்டு உடனே இந்தியாவிற்குத் திரும்பினார். அப்போதிருந்த குறைகள், வரி வசூல்செய்கிற கலெக்டர்கள் நியாயவிசாரணை தெரியாமலும், நியாயவிசாரணைசெய்கிற ஜெட்ஜுகள் ரெவினியுஅனுபோகமில்லாமலும், யோக்கியதையுள்ள ஹிந்துக்களுக்கும் மஹம்மதியர்களுக்கும் ராஜாங்கத்தில் நல்லகௌரவமும் நம்பிக்கையுள்ள உத்தியோகம் குடுக்கப்படாமலும் இருந்தன. இந்தக்குறைகளை வெகு சிரமப்பட்டு நிவர்த்திக்கையில் மஹாராஷ்டிர யுத்தம் (1817-18) நேர்ந்து கர்னல் மன்ரோ அங்குபோய் வேலைசெய்யும்படி நேர்ந்தது. இந்த இராஜதானிக்கு அருகாமையிலுள்ள "தார்வார்" முதலானஜில்லாக்களை அடக்கியாளப் போய் அஸாத்தியசூராய் நின்று, இராஜதானிமேல் பிறர்படையெடுக்கவொட்டாமல் தடுத்து, ஜனங்களிடத்தில் சொல்லி வரியை தங்களிடத்தில் கொடுக்கும்படி ஏற்பாடுசெய்தார். இந்த யுத்தசிரமத்தினால் கர்னல் மன்ரோ உடம்பு மெலிந்து, பலஹீனமடைந்து ஸம்சாரஸஹிதமாய் திரும்பி ஸ்காத்லாந்திற்குபோய்விட்டார்.

ஆறுவது அல்லது கடைசிபாகம்.—(1820-1827)ஊருக்குப்போய் கொஞ்சகாலத்திற்கெல்லாம் அவரை சென்னை ராஜதானிக்கு கவர்னராகநியமித்தார்கள். 1820௵ ஜூன்௴ 8௳ திரும்பிவந்து 1827௵ ஜூலை௴ 4௳ வரையில் இந்த உன்னதபதவியை வெகுகாம்பீர்யமாய் வஹித்தார். அவருக்கு "ஸர்" என்னும் பட்டம்கொடுத்து அவர்பெயர் "ஸர் தாமஸ் மன்ரோ" என்று ஆகிவிட்டது. இவர் தான் கவர்னராக இருக்கும்போது வேலைசெய்து அவ்வளவு சிரமப்பட்டு தனக்கு ஏற்பட்ட உத்தமபதவியை நல்லமனச்சாட்சியுடன் வகித்தார். அவர் இந்துக்களையும் மஹம்மதியர்களையும் கட்டுமானவரையில் நல்ல உத்தியோகத்தில் அமர்த்தவும், ராஜாங்கத்தில் அவர்களை நன்றாய் பழக்கவும், உத்யோகத்தில் அமர்ந்தவர்களுக்கு போதுமான சம்பளம் கொடுக்கவும், வியாதியினாலாவது, கிழத்தனத்தினாலாவது வேலைசெய்ய முடியாவிட்டால் தாராளமாய் பென்ஷன் கொடுக்கவும் வேண்டிய ஏற்பாடுகளை செய்யமுயன்றார்.

புதிதாய் வருகிற ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் ரிவினியு இலாகாவில்தான் முதல் முதல்வேலைக்கு ஆரம்பிக்கவேண்டுமென்பதும், அப்பொழுதுதான் அவர்கள் ஜனங்களுடன் நன்றாய் பழகி நடை உடை பாவனைகளைத் தெரிந்து அவர்களிடத்தில் விசுவாசமாய் இருப்பார்களென்பதும் அவர் அபிப்பிராயம். அதற்காகவே மேற்படி உத்தியோகஸ்தர்கள் திராவிட பாஷைகளில் நல்ல பயிற்சியடைய வேண்டுமென்று வற்புறுத்தினார்.

இவருக்கு இரண்டுபிள்ளைகள் பிறந்தார்கள் ஆனால் குழந்தைகளிடத்தில் கொஞ்சிக்குலாவி ஆநந்திக்காமல் அவர்களைவிட்டு பிரிந்திருக்க நேர்ந்தது. பிறகு தன் மனைவி உடம்பு அசௌக்கியமாயிருந்ததனால் அவளை ஊருக்கு அனுப்பி தான் மட்டும் தனியேயிருந்தார். வேலையை இரண்டுதரம் ராஜிநாமா கொடுத்தார். முதல் தடவையில் அது ஒப்புக்கொள்ளப்படவில்லை. இரண்டாம் தடவையில் இவருக்கு பதிலாக இன்னொருவர் வருவதற்கு தவக்கப்பட்டது. இந்த ராஜதானியினுடைய ஒவ்வொரு இடத்தையும் தான் நன்றாய் தெரிந்துகொள்ளும் பொருட்டு நெடுநாளைக்கு உட்புறங்களுக்கு ஸர்கூட்போனார். தான் முந்தி கலெக்டராகவிருந்த பிராமஹால், பெல்லாரி, இந்த இடங்களின் சுகத்தை நன்றாய் அனுபவித்தார். ஆனால், அவருக்கு விசேஷ அபிமானமுள்ள ஜனங்களுக்கு தாய் தகப்பன் போன்ற இவர், ஜனங்களுக்கு நன்மை செய்துகொண்டிருக்கையிலேயே, அந்த ஜனங்களுக்கு மத்தியில், 1827-௵ ஜூலை௴ 4௳ நிடுக்கென்று "காலரா"வினால் மரணமடைந்தார். மறுநாட்காலையில் "குத்தி" (Gooty) யில் அவர் அடக்கம் செய்யப்பெற்றார். "ஸர் தாமஸ்மன்ரோ" வைப்போல் குடிகளிடத்தில் விசுவாசமுள்ளவரும் அவர்களுக்காக பாடுபட்டவரும் அவர்களுக்கு நன்மை செய்யவேண்டியதுதான்தன் கடமையென்று தெரிந்து நடந்தவரும் வேறுயாருமில்லை. அவருடைய முக்கியமான எண்ணம் இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்களுக்கும், ஹிந்துக்களுக்கும் யாதொருவித்தியாசமில்லாமல் இரண்டு பேர்களுடைய நன்மையையே யெப்போதும் சரியாய் கவனித்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்பதே. அவர் மிகுந்த தெய்வபக்தியுள்ளவரென்றும், கடவுளைதினமும் தியானிக்க வேண்டுமென்று உறுதியாய் நடத்தி வந்தாரென்றும் தெரிகிறது. "குடிகளின் நேசர்" என்று சொல்லும்படியான கௌரவமான பட்டத்தை வகிக்கக்கூடியவர் "ஸர் தாமஸ் மன்ரோ" வைவிட வேறுயாருமில்லையென்று சொல்லும்படியாக தென்னிந்தியாவிலுள்ள குடிகளுக்கு அவ்வளவு உபகாரம் அவர் செய்திருக்கிறார். இவரைப்போல நமக்கு நன்மை புரிந்தவர் அக்காலத்தில் கிடையாது. இவருடைய குணத்தையும் நலத்தையும் அவர் ஜனங்களிடம் கொண்ட விசுவாசமும் சென்னை மலைச்சாலை (Mount Road) யில் அவர் க்ஞாபகார்த்தமாக ஜனங்களாலியற்றப்பட்டிருக்கிற சிற்ப உருவமே ஸாட்சியாக இருக்கிறது. அதைக் கண்டபொழுதெல்லாம் நமது நேசன் என்ற க்ஞாபகம் நமது மனதைக்கவர்ந்து ஆனந்தமளிக்கிறது.

S. V. ஸ்ரீனிவாஸய்யர், B. A.

திவான் பஹதூர் ஆர். இரகுநாதராவ் ஸி. எஸ். ஐ. அவர்களுடைய சில அபிப்பிராயங்கள்

A FEW THOUGHTS BY DEWAN BAHADUR R. RAGHUNATHA RAO C. S. I.

—

விவசாயமும், கைத்தொழில்களும் ஒன்றிலிருந்து மற்றொன்றை பிரிக்கக்கூடாத ஸம்பந்தத்தையுடையதாயிருக்கின்றன. ஒன்றை விருத்தி செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட எவ்வித முயற்சியிலும் மற்றொன்றைப்பற்றிக் கவனிக்க வேண்டியதாயிருக்கிறது.

இந்தியா ஒருபெரிய தஞ்சமுள்ள தேசமாயிருக்கிறது. இந்தியாவில் உண்டாக்கக்கூடாததாயும் உபயோகமுள்ளதாயுமுள்ள ஸாமான்களின் ஸங்கியை வெகு குறைந்தது. இந்தியாவின் விசாலமான பரப்பில் எல்லாவித சீதோஷ்ண ஸ்திதியும், பூமியும் அடங்கியிருக்கிறது.

இந்தியாவில் முதல்தரமான ஸாமான்கள் உண்டுபண்ணக் கூடுமென்பதற்கு ஏராளமான திருஷ்டாந்தங்களிருக்கின்றன. 'முதல்' வேண்டியதவசியம் இது ஒரு மனிதனிடத்திலேயே கிடைக்கக்கூடியதன்று. இதற்கு ஒற்றுமை வேண்டும். இந்த ஒற்றுமை ஒருவருக்கு இன்னொருவரிடத்திலிருக்கப்பட்ட நம்பிக்கையைச்சார்ந்தது. ஆனால் இதுதான் இந்தியாவில் கிடையாது. இக்குறையை நீக்கவேண்டயதவசியம். ஆனால் இக்குறையை நீக்க வெகுநாள் செல்லும். வித்தியாப்பியாஸத்தினால் இக்குறையைநீக்கவேண்டிய முயற்சி ஆரம்பிக்கப்படவேண்டும். இவ்விதமான நம்பிக்கை உண்டாக்கும் பொருட்டு அவசியமான மதவித்தியாப்பியாஸமோ அல்லது நீதி போதிக்கத்தக்க வித்தியாப்பியாஸமோ ரொம்பகுறைவாயிருக்கிறது. இது உண்டாக்கவேண்டுமானால் முதலில் வித்தியாசாலைகளில் எங்கெந்தச்சாலைகளில் மதவித்

தியாப்பியாஸமோ, அல்லது நீதிபோதனையோ அல்லது எவ்விடத்தில் விவசாயம், ரஸாயன சாஸ்திரம், கைத்தொழில்கள் இவைகளின் மூலாதாரஸாரங்கள் கற்பிக்கப்படவில்லையோ அவைகளுக்கு பொதுவான நிதி முதலானதுகளிலிருந்து எவ்வித உதவியும் கொடுக்கப்படக்கூடாது.

2. கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு சாஸ்திரங்களின் ஞானம் வேண்டியதவசியம். வியாபாரவிருத்திக்கு விவசாயத்திலிருந்து ஏராளமான சாமான்கள் உண்டுபண்ணப்படவேண்டும். விவசாயதொழிலாளிகளுக்கு சாஸ்திரஞானம் இருந்தே தீரவேண்டும். ஒவ்வொரு வித்தியாசாலைகளிலும் விவசாயம், முதலானதுகளைப்பற்றி நேரில்காட்டப்பட்ட திருஷ்டாந்தத்துடன் கற்பிக்கப்படவேண்டும்.

3. மனிதனுக்கு உணவுவேண்டும். பிறகு உடுப்பு; அதற்குப் பிறகு பெரும்போக்கான நிலைமைக்குறிய வஸ்துக்கள். வியவசாயம் உணவையும், உடைக்குறிய பருத்தியையும் கொடுக்கிறது. மல்பெரி, (Mulbury) விருக்ஷம் பழங்களையும் பட்டுக்குவேண்டிய வஸ்துக்களையும் தரக்கூடியதா யிருக்கிறது. பழவிருக்ஷங்கள் பழங்களைத் தருவதோடுங்கூட அடுப்புக்கு வேண்டிய விறகுகளையும், வீடு முதலானது கட்டுவதற்கு வேண்டிய மரத்தையும் தருகின்றன. விதைகள் எண்ணையைத்தருகின்றன. ஆகையால் ஒவ்வொன்றும் விவசாயம், தோட்டவேலை, செடி கொடி பயிர்ச்சி முதலானதுகளிலிருந்து உண்டாகிறது. நமக்குவேண்டிய ஸாமான்களுக்கு அதிகம் நம்மிடமிருக்கிறது. இவைகளிலிருந்து, கொஞ்சம் சாஸ்திரஞானத்துடன் நமக்கு வேண்டியதெல்லாவற்றையும் உண்டாக்கிக்கொள்ளலாம். இதோடுங்கூடமைந்த தேசங்களுடன் பணத்துக்கு பரிவர்த்தனையும் செய்துகொள்ளக்கூடிய ஸாமான்களையும் உண்டாக்கிக்கொள்ளலாம்.

4. சில பொது நிதிகளிலிருந்து கல்விக்காக பணத்தை சாஸ்திரோக்தமான ஞானத்தை உண்டுபண்ணும்பொருட்டு சிலவழிக்கலாம். இது கிராமத்து பிரைமெரிப் பள்ளிக்கூடம்முதல் ஸர்வகலாசாலைவரைக்கும் கொடுக்கப்படவேண்டும் நமக்குவேண்டியது தண்ணீர்; இது சுலபமாய் கிடைக்கக்கூடியவழி, வியாபாரத்துக்கு வேண்டியஸாமான் செய்வதற்குபயோகமுள்ள கருவிகள், இவைதான் தற்காலத்தில்கூலிஅதிகமாய் ஏறிக்கொண்டுவரும்போது, கிராக்கியாய்க்கொண்டுவரும் நம்முடையஸாதாரண ஏத்தமானது இன்னமும் வேறு எந்த கருவியினாலாவது வழங்கக் கூடாததாய் செய்யப்படவில்லை. பிருமாண்டமான எண்ணெய் யந்திரங்கள் ஏழைக்குடியானவனுக்கு பெரிய வெள்ளை யானையைப்போலிருக்கின்றன. லகுவான விலைக்குக்கிடைக்கக்கூடியயந்திரங்கள் இன்னும் உண்டாக்கப்படவில்லை. இது விஷயத்தில்கவர்ன்மெண்டார் எவ்வளவு முயற்சியெடுத்தாலும் தகும். வித்திலிருந்து எண்ணை எடுக்க லகுவிலைகளுள்ள யந்திரங்கள் உபயோகப்படுத்திக்கொண்டு வரப்படவில்லை. நெசவை அபிவிர்த்திக்கு கொண்டுவர தற்காலம் அநேக உபாயங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஸாதாரணமாய்கொஞ்சபணமுள்ளவர்கள் இத்தொழிலை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் உதவியுடன் இத்தொழில் விருத்திக்கு வந்துகொண்டிருக்கிறது. இதற்கு முன்னாலேயே கவர்ன்மெண்டார் இந்தியாவிலிருக்கிற கைத்தொழிலை விருத்திக்குக்கொண்டுவரும் விஷயத்தில் ஆவலோடிருக்கிறார்கள். ஆனால் கவர்ன்மெண்டார் கீழ் இருப்பவர்கள் சிரத்தையுடன் கவர்ன்மெண்டாருக்கு உதவிபுரிவதில்லை.

5. கவர்ன்மெண்டு நிலவரி நீர்வரி இவைகள் கைத்தொழில்களுக்கு ஒரு தடையாயிருக்கிறதென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்; இது வாஸ்தவந்தான்.

6. அநேக தேசங்கள் பழக்கைத்தொழில்களால் செல்வமுடையதாயிருக்கின்றன. இவ்விடத்தில் இக்கைத்தொழில் விருத்திக்குவர முடியவில்லை. ஒரு நிலத்தில் பழ விருக்ஷங்களி

ருக்குமேயாகில் நிலத்தைத் தீர்வைக்குள்ளாக்காமல் ஒவ்வொரு மரத்திற்கு இவ்வளவு தீர்வையென்று குறிக்கப்படுகிறது. ரெயில்வே பரவிக்கொண்டு வருவதினால் வாழைமரக் கைத்தொழில் விருத்தியாய்க்கொண்டு வருகிறதென்று தெரிந்துகொண்டு வாழைப்பயிர் தொழிலுக்கு ஒரு தீர்வை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வகையான கைத்தொழில்களுக்குத் தடையாயிருக்கும் செயல்கள் நிறுத்தப்படவேண்டும். கவர்ன்மெண்டாருக்கு இது தெரியவரும். பக்ஷத்தில் இது நிறுத்தப்படுமென்பதற்கு ஸந்தேகமில்லை.

7. மேற்கு பக்கமுள்ள தேசங்களிலும் இலங்கையிலும் உபயோகமுள்ளதென்று கூறப்படும் பள்ளிக்கூடத்தோட்டங்கள் இவ்விடங்களிலும் வழக்கத்துக்குக் கொண்டுவரப்படவேண்டும். பழத்தோட்டங்கள் உண்டுபண்ணுவதற்கும், ஸரியான நிலைமையில் வைத்துக்கொள்வதற்கும் உதவிவேண்டியதவசியம்.

8. விவசாயத்தையும் கைத்தொழில்களையும் அபிவிருத்திக்குக் கொண்டுவரவேணுமானால் கிராமங்களில் வேண்டியவர்களாவன:—

1. தச்சன்
2. கொல்லன் (கருமான்)
3. குயவன்
4. சக்கிலியன்
5. வண்ணான்
6. ஜோசியன் அல்லது உபாத்தியாயர்
7. அளவுக்காரன்
8. வாணியன்
9. கடைக்காரன் (வியாபாரி)
10. தட்டான்
11. நெசவுகாரன் (சேணியன்)
12. கணக்குப்பிள்ளை
13. கிராமத் தலைவன்
14. ஒட்டர் (உப்பாவன்)
15. கொரவர்
16. வைத்தியன்
17. தண்ணீர் பாகித்துக் கொடுப்பவன்

9. கிராமத்தில், கிராமச்சங்கத்தினால் போஷிக்கப்பட்டும், அதன் மேல் பார்வையிலுமிருக்கப்பட்ட கிராமப்பள்ளிக்கூடம் வேண்டும் உபாத்தியாயரும் இச்சங்கத்தினால் நியமிக்கப்படவேண்டும். அவர் பிள்ளைகளுக்கு ஸ்வபாஷை, ஸம்ஸ்கிருதம், வாசிப்பு, எழுத்து, கணக்கு இவைகளை கற்றுக் கொடுக்கவேண்டும். இப்பள்ளிக்கூடம் வருஷத்துக் கொருமுறை கவர்ன்மெண்டு இனிஸ்பெக்டரால் பரீக்ஷித்து பார்க்கப் படலாம். உபாத்தியாயர் செவ்வையாய் கற்பித்ததாக தெரியும் பக்ஷத்தில் அவருக்கு உடை, பணம் முதலான பரிசுகள்கொடுக்கப்படலாம். இவ்விதமுள்ள பள்ளிக்கூடங்கள் கவர்ன்மெண்டாருக்குச் சிலவன்னியில் பள்ளிக்கூடங்கள் யேற்படுவதுடன், உபாத்தியாயருடைய திறமைக்குத் தகுந்தபடி, விவசாயம் கைத்தொழில் இவைகளின் அபிவிருத்திக்கு உதவியும் புரியலாம்.

10. கிராமசங்கங்கள், இவைகளுக்கு திரவிய உதவிபுரிய முடியாமலிருக்கும் விஷயங்களில் கவர்ன்மெண்டாருடைய உதவியை எதிர்பார்க்கலாம். கவர்ன்மெண்டார் யுக்தப்பிரகாரம் உதவியும் புரியலாம்.

11. ஆனால் இவ்விதமான உபாத்தியாயர்கள் தற்காலம் கிடைப்பதறிதென்பது தெரிந்தவிஷயம். ஆனால், தற்காலம் நல்ல நிலைமைக்குக்கொண்டுவரப்பட்டிருக்கும் சங்கத்தினுடைய கையில் விட்டுவிட்டால் இவ்வித உபாத்தியாயர்கள் கிடைப்பார்களென்பது நிச்சயம். கவர்ன்மெண்டார் எவ்வளவு முயற்சியெடுத்துக்கொண்டபோதிலும் தற்கால நிலைமைக்குத் தகுந்தபடி பிரைமெரிவித்யாப்யாஸம் உபயோகமுள்ளதாயிருக்குமென்பது ஸந்தேகம். ஏனென்றால் பொது நிதியிலிருந்து பணம் ஏராளமாய் சிலவழிக்கவேண்டியிருக்கும், அது லகுவில் முடியுமென்பதும் ஸந்தேகந்தான். இதற்காக புதிதான வரிபோடுவது நல்லதன்று. கிராம ஆளுகையை கிராமத்தாருக்கே கொடுத்துவிட்டால் சிலவன்னியில் பிரைமெரிவித்யாப்யாசம் கவர்ன்மெண்டாருக்கு அதிகமோ அல்லது கொஞ்சங்கூட சிலவன்னியிலேயோ ஏற்படுத்தப்பட

லாம்: மேலும் மேற்கூறிய கூலியாள்களுக்கும் சிறிய வேலைக்காரர்களுக்கும் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்துவிட்டால், விவசாயத்திற்கு ஒரு க்ஷேமமும் தற்காலம் நல்ல வழியோடு இல்லாமலிருந்த போதிலும் நடவடிக்கையி லிருக்கும் கைத்தொழில்களுக்கு ஒரு உதவியுமாய் இருக்கும்.

12. கிராமத்தில் பயிரிடுவோர்களாலும், கைத்தொழில்காரர்களாலும் உண்டு பண்ணப்பட்ட ஸாமான்களை கலெக்டர் வரும்பொழுது கிராமத்திலேயோ அல்லது அதனருகிலோ கொஞ்சம் செலவுடன் வைக்கப்பட்ட காட்சிவைத்து, முதல் தரமான ஸாமான்களுக்கு, சகாயமாய் கிடைக்கும் வஸ்திரம் நகைகள் முதலான பரிசுகள் அளித்தால், கைத்தொழில்கள் புதிதாயும் க்ஷீண திசையையடைந்த கைத்தொழில்கள் அபிவிருத்திக்கும் வரும்.

13. தற்காலம் செய்யப்படுவதில் குற்றம் இரண்டுண்டு. இயற்கையில்லாம லிருப்பதும் அதிக திரவ்யநஷ்டமும்தான். சிறு தேசங்களுக்கு இவ்வழிகூடாது. பிரதான நகரில் வருஷத்துக்கொருமுறை காட்சிகள் வைக்கப்படலாம். சிறு கிராமங்களின் சமீபத்தில் ஒரு காசுகூட செலவன்னியில் சந்தைகள் வைக்கப் படலாம். இவைகள் ஸாதாரண ஜனங்களுக்கு தெரிந்த விஷயம். அவர்களுக்கு வேண்டிய தென்னவென்றால் மேல்பார்வை, கெடுதியற்ற ஒழுங்கு, களங்கமற்ற அநுதாபம் இவைதான். மேல்பார்வையும், எந்தக்கிராமத்தில் இச்சந்தை கூட்டப்படுகிறதோ அக்கிராமத்தலைவர்களினால்தான் செய்யப்படவேண்டும்.

14. பின்வரும் ஆதாரங்களைக்கொண்டு ஒருதந்திரம் செய்யலாம்:—(1) சிற்பிகளுக்கு தேவையான உணவு, அவர்களுக்கு கடன்முதலானது வாங்காமல் கிடைக்கக்கூடியதாய் செய்யப்படவேண்டும். (2) அவரவர்களுக்கு அவரவர் தொழில்களில் கவர்ன்மெண்டு வேலைக்காரர்களின் தொந்திரவன்னியில் சிறிது திரவியம் செலவிட்டு, வித்தியாப்பியாஸம் கொடுக்கவேண்டும். (3) ஜில்லாத்தலைவர் மூலமாய் திறமையுள்ள சிற்பிகளுக்கு, யோக்கியதாபத்திரம், பணம் முதலான பரிசுகள் ஒவ்வொரு காலங்களில் கொடுக்கப்படவேண்டும். (4) அவர்கள் தேற்றத்தை அதிகாரமன்னியில் தெரிந்துகொண்டு அவர்களின் வாஸ்தவநிலைமையை கவர்ன்மெண்டாருடைய அறிக்கைக்காக தெரிவிக்கவேண்டும். (5) கிராமஸ்தர்களுக்கு அவர்களுக்கு கிடைக்கக்கூடாத வஸ்துக்களை அதாவது நல்ல வித்து, நல்லபருத்தி, பட்டு, மரம், யந்திரங்கள் இவைகளை கொடுத்து உதவவேண்டும். இவைகளின் கிரயத்தை வாங்குகிறவர்களிடமிருந்து வசூல் செய்துகொள்ளலாம். (6) கிராமஸ்தர்களை ஒருபொழுதும் பெரிய உத்தியோகஸ்தர்களின்முன்பு அவர்கள் வேறுஊரிலிருக்கும்பொழுது போகவேண்டுமென்று சட்டப்படிக்காவது, அல்லது அவர்களினிஷ்டத்திலாவது கட்டாயப்படுத்தக்கூடாது. (7) கிராமஸ்தர்களை அடிக்கடி வாங்கப்பட்ட சிறு வரிகளால் சிரமப்படுத்தக்கூடாது. ஏனென்றால் இதனால் அவர்களின் நேரமெல்லாம் வரி கட்டுவதிலேயே செலவழிந்து தொழில்களைச் செய்ய ஸாவகாசமில்லாமல் போய்விடும். (8) பொது நிதியிலிருந்து பணத்தை அகாரணமாயாவது அல்லது கிராமத்தார்களுக்குத் தெரியாத விஷயத்திலாவது அல்லது அவருக்கு உபயோகப்படாதவஸ்துக்களிலாவது செலவழிக்கக்கூடாது. (9) கிராமத்தார்களுக்கு அவர்களுக்கு தற்காலம் கிடைக்கக்கூடாதவைகளை அவர்களுக்கு கிடைக்கும்படி செய்யவேண்டும். அதாவது, உபாத்தியாயர்கள், யந்திரங்கள், யந்திரத்தை ஓட்டும் வேலைக்காரர்கள் இவர்களை அவர்களுக்கு கிடைக்கும்படி செய்யவேண்டும். (10) ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும், யந்திரம் ஜலதத்துவசாஸ்திரம், ரஸாயனம் முதலானதுகளைப்பற்றி சிறிதுகற்றுக் கொடுக்கப்படவேண்டும். (11) இலங்கை முதலிய தேசங்களிலிருப்பதுபோல ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் தோட்டங்கள் இருக்கவேண்டும். சாஸ்திரோக்தமான சங்கங்கள் ஒவ்வொரு ஜில்லாவின் பிரதானநகர்களில் ஏற்படுத்தப்படவேண்டும்.

15. இதைவிட ஜாஸ்தியாய் பொதுநிதிகளைப்பற்றி பேசுவது பிரயோஜனமில்லை அதுவும் இந்தியாவில் கேட்கவேண்டியதில்லை. கவர்ன்மெண்டார் திறமையைக் கைவிடாமல், இந்தியாவிலேயே உண்டுபண்ணப்பட்ட வஸ்துக்கள் விஷயத்தில் சிறிது பக்ஷபாதமாயிருக்கலாம்.

16. பொதுப்பணத்தின்உதவியால்ஒவ்வொரு ராஜதானியிலும் ஒரு விவசாய கலாசாலையும் ஒவ்வொரு கைத்தொழிலின் சாஸ்திரார்த்தமுள்ள வித்தையை கற்பிக்கக்கூடிய கலாசாலையும்ஏற்படுத்தப் படவேண்டும். இப்பள்ளிக்கூடங்களிலிருந்து தேறிவரும் மாணாக்கர்களுக்கு வேலை கொடுக்கப்படவேண்டும். தேறாதவர்களுக்கு தேறினவர்களிருக்கும்பொழுது வேலை கொடுக்கப்படக்கூடாது.

17. இந்தியா ஜனநெருக்கமுள்ளது. ஆனால் இவர்களில் அநேகர்கள் ஏழைகள்தான். அவர்கள்புத்திகூர்மை யுடையவர்கள்தான் முடியுமானால், யுக்திகளைத்தங்களே எடுத்துக்கொண்டு வேலைசெய்வார்கள் ஐரோப்பியர்களின் பழக்கம், உபயோக முள்ளதாயிருந்தபோதிலும் இந்தியாவிலிருக்கும் இந்தியர்களுக்குஅவ்வளவு லாபத்தைக்கொடுக்கத்தக்கதல்ல. எல்லாமுயற்சியும், உபயோகமுள்ள வேலைகளும் கிரமங்களில் ஆரம்பிக்கப் படவேண்டும். கிரமச்சங்கத்தாரால், நடத்தப்படவேண்டும். உத்தியோகஸ்தரால் அதிகத்தொந்தரை இருக்கக்கூடாது.

18. கிராமச்சங்கத்தை மறுபடியும் பிழைப்பித்து நல்ல ஸ்திதிக்கு கொண்டுவந்தால் கவர்ன்மெண்டாரின் வேலைலகுவாயும், நல்ல உபயோகமுள்ளதாயுமிருக்கும்.

சட்டம் ஏற்படுத்துவோர் சட்டபடி நடத்தல்வேண்டும்

LAW GIVERS SHOULD NOT BREAK THE LAWS THEY MAKE

சங்கரென்றும் லிகிதரென்றும் இரண்டு ரிஷிகளிருந்தார்கள். அவர்கள் இரண்டுபேரும் ஸ்மிருதிகளை எழுதினார்கள். அவர்களுடைய ஆசிரமத்தில், அதாவது வாஸஞ்செய்யுமிடத்தில், ஒரு தோட்டமுண்டு. அது அவ்விருவருக்கும் பொதுவாய் பாத்தியப்பட்டது. ஓர் ஸமயம் சங்கரரில்லாத காலம் பார்த்து, அவருடைய கனிஷ்ட ஸகோதரரான லிகிதர் அத்தோட்டத்தின்கண்ணே யிருந்த ஓர் மரத்திலிருந்து ஓர் பழத்தைப் பறித்துத் தின்றுவிட்டார். இந்த ஸமாசாரம் சங்கரருக்குத் தெரிந்தவுடனே, அவர் பழத்தைத் தொடுமுன், கூட்டுப்பங்காளியான தம்முடைய ஸம்மதத்தைப் பெற்றிருக்கவேண்டும். அப்படிச் செய்ததால், மேற்கண்டசெய்கை சட்டவிரோதமென்று லிகிதருக்குச் சொன்னார். லிகிதரே ஸ்மிருதியெழுதியவராகையால் சட்டவிரோதமாய் நடத்தப் பிரியப்படவில்லை. ஆனதால் தான் வஸிக்கும் இராஜ்யத்தின் அரசனிடம் சென்று, ஸாதாரணமாய்த் தான் செய்த குற்றத்தைத் தெரியப்படுத்தி, அதற்கு தண்டனை கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். ஆரியர்களுக்குத் தர்ம சாஸ்திரம் ஏற்படுத்தின மனுவின் ஸ்மிருதியை அவ்வரசன் பார்வையிட்டு பிறருடைய ஸொத்தை அபகரிக்கிறவர்களுக்கு அதில் கண்டிருக்கிற கொடூர சிக்ஷையை, அதாவது இரண்டு புஜங்களையும் சேதித்துவிடுதல் என்ற சிக்ஷையை விதித்தான். எல்லோரும் லிகிதருடைய மனசாட்சியையும் புகழ்ந்தார்கள். தெய்வகிருபையினாலே அவருக்கு இரண்டு புஜங்களும் மறுபடியும் கிடைத்தன.

பிறருடைய பொருளை அக்கிரமமாக எடுத்து உபயோகிப்பது யுக்தமல்ல. ஓர் தப்பிதத்தைச் செய்துவிட்டால், அதை மறைக்கிறதைக்காட்டிலும் ஒத்துக்கொள்வது நலம். ஏனெனில் ஒத்துக்கொள்வது பாதிபரிகாரமாயும், மறைப்பது இரட்டிப்புக் குற்றமாயும் ஆகிறது.

சிவத்தலப்பெயர்க் காரணவிளக்கம்

SIVA STALAS THE REASEONS FOR THEIR NAMES

மெய்ஞ்ஞானியர்களாகிய பெரியோர் மூவர் யாவர்க்கும் மேலாகிய பரம்பொருளாகும் பரசிவத்தின் பெருமையைச் செவ்விய செய்யுள் ரூபமாகும் தோத்திரவகையாற் பாராட்டியுள்ளார். அத்தோத்திரப் பாமாலையே தேவாரம் என்பது. தேவனாகிய பரசிவத்துக்கு ஆரம் போல்விளங்குவதாதலின் தேவாரம் என்னும் பெயர் அத்தோத்திரப் பாமாலைக்கு எய்தியது. தேவாரம் பாடிய பெரியோர் மூவர் என்று சொன்னோம். அவர் அப்பர், சம்பந்தர், ஸுந்தரர் என்னுந்திருநாமம் வாய்ந்தவர். அவர்கள் சிவஸ்தலங்கள் தோறும் சென்று அங்கங்கு வீற்றிருக்கும் சிவபெருமான் மீது திருப்பதிகங்கள் பாடும் நியமம் பூண்டவர்கள். பலவித அற்புதச் செயல்களும்செய்துகாட்டியுள்ளவர்கள். அவர்கள் சரித்திரம் 'பெரியபுராணம்' என்னும் நூலகத்துக் காணப்படும். தேவாரப் பதிகங்கள் எழுதப்பட்டிருந்த ஓலைப்புத்தகங்கள் செல்லேறிச் சிதைவுபட்டமையால் அருமையான பல பதிகங்கள் இறந்துபட்டன. எனவே, பலதலங்கள் தேவாரப் பதிகம் உற்ற தலங்கள் 274. தேவாரப்பதிகங்களின் தொகை 797. இத்தலங்களின் பெயர்க்காரணத்தை ஆராயுமிடத்து உயர்திணைப்பகுதியைச் சார்ந்த தேவர் முதலியோரே அன்றி, அஃறிணைச் சிற்றுயிர்களாம் ஈ, எறும்பு முதலியனவும் பரசிவத்தைப்பூசித்து முத்தியடைந்தன என்னும் விஷயம் தெளிவுற விளங்குகின்றது.

	பூசித்துப் பேறு பெற்றவரும் பெற்றவையும்.	ஸ்தலப்பெயர்.	ஸ்தல விசேஷம்.
1.	கணபதி	கணபதீச்சுரம் (திருச் செங்காட்டாங்குடி.)	கஜமுகாசுரனைக் கொன்ற பழி நீங்கும் பொருட்டு, கணபதி பரமசிவனைப் பூசித்த ஸ்தலம்.
2.	முருகபிரான்	கீழ்வேளூர், புள்ளிருக்குவேளூர், சேய்கிழயார், திருமுருகன் வேண்டி.	புள்ளிருக்கு வேளூர் என்பது வைத்தீசுரன் கோயில். சூரசம்ஹாரம் செய்ய வழிநடக்கும் சேய், பாசறைக்கு நல்ல இடமெனத் தங்கித் தந்தையைப் பூசித்த ஊர் சேய் நல் ஊர்.
3.	பார்வதி	கச்சி, கேதாரம், சத்திமுத்தம், மயிலாடுதுறை, மயிலாப்பூர்.	சத்தி சிவத்துக்கு முத்தந்தந்த ஸ்தலம் சத்திமுத்தம். மயில் வடிவமேற்றுப் பார்ப்பதி பூசித்த தலங்கள் மயிலாடுதுறை (மாயூரம்), மயிலாப்பூர்.
4.	வைரவர்	வடுகூர்.	வடுகனாகிய வைரவர் பூசித்த ஸ்தலம்.
5.	திருமால்	திருமாற்பேறு, சக்கரப்பள்ளி, தலைச்சங்காடு, வலம்புரம், மாணிகுழி.	(i) திருமால் பூசித்துச் சக்கரம்பெற்ற ஸ்தலங்கள்:— திருமாற்பேறு, சக்கரப்பள்ளி. (ii) சங்கம்பெற்ற ஸ்தலங்கள்.— தலைச்சங்காடு, வலம்புரம். (iii) மாணிவடிவாக (வாமன அவதாரம்) இருந்தபோது பூசித்த ஸ்தலம்—மாணிகுழி.
6.	இலக்குமி	திருவாரூர் (கமலை), திருநின்றியூர்	அழியாத திருமங்கலியம்பெற இலக்குமி பூசித்த ஸ்தலம் திருவாரூர்.
7.	பிரமன்	பிரமபுரம், கஞ்சனூர், காஞ்சி.	பிரமபுரம் என்பது சீகாழி.

	பூசித்துப் பேறு பெற்றவரும், பெற்றவையும்.	ஸ்தலப்பெயர்.	ஸ்தல விசேஷம்.
8.	இந்திரன்	இந்திரநீல பருப்பதம், கண்ணார்கோயில்.	"இந்திரன் தொழுநீலப்பர்ப்பதம்" என்பது தேவாரம். தேவேந்திரன் சாபம் நீங்கப்பெற்று ஆயிரங்கண் பெற்ற ஸ்தலம் 'கண்ணார்கோயில்.'
9.	சூரியன்	பரிதிநியமம்.	பரிதி (சூரியன்), நியமம் (கோயில்). சூரியன் பூசித்த ஆலயம்.
10.	அக்கினி	கொள்ளிக்காடு, வன்னியூர்.	வன்னி-அக்கினி.
11.	யமன்	தருமபுரம்.	தருமன்-யமன்.
12.	காளி	காழி, அம்பர்மாகாளம்.	"நங், காளியேத்து மழகனூர்" என்பது அம்பர் மாகாளத்துத் தேவாரம்.
13.	மாகாளர்	இரும்பை மாகாளம்.	
14.	தெய்வகன்னியர்	பட்டீச்சுரம், பெண்ணாகடம்.	காமதேனுவின் புத்திரிகள் நால்வரில் பட்டி என்பவள் பூசித்தபடியாற் பட்டீச்சுரம் என்னும் பெயர்வந்தது. பெண் + ஆ + கடம்: பெண்-தேவகன்னியர்.
15.	வேதம்	புள்ளிருக்குவேளூர், மறைக்காடு, வேதிகுடி.	இருக்கு = வேதம். மறை-வேதம்.
16.	அகத்தியர்	அகத்தியான்பள்ளி.	
17.	மகாகாளருஷி	அம்பர் மாகாளம்.	
18.	வால்மீகர்	திருவான்மியூர்.	
19.	வியாக்ரபாதருஷி புலி உருவமுள்ளவர்	பெரும்பற்றப்புலியூர், திருப்பாதிரிப்புலியூர், ஓமாம்புலியூர், எருக்கத்தம்புலியூர், பெரும்புலியூர்.	பெறும்பற்றப்புலியூர் என்பது சிதம்பரம்.
20.	பதஞ்சலி ஆதிசேஷன் பாம்புருவமுள்ளவர்	திருநாகேச்சுரம். நாகபட்டினம், கும்பகோணம் * நாகேசுரஸ்வாமி கோயில், திருப்பாம்புபுரம்.	* திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் என்பது இதுவே.
21.	பிருகுமுனிவர்	திரு ஆடானை.	சாபத்தால் ஆட்டுத்தலையும் ஆனையின் உடலும் அடைந்த பிருகு முனிவர் பூசைசெய்து சாபம் நீங்கப்பெற்றார்.
22.	அசுரர்.	* இடும்பாவனம். ஓணகாந்தன்தளி திரிசிராப்பள்ளி, † திருவக்கரை. †† வெஞ்சமாக்கூடல்	* இடும்பன் பூசித்த ஸ்தலம். ஓணன் காந்தன் என்னும் 2 அசுரர்கள் பூசித்த ஸ்தலம். திரிசிரன் என்னும் அசுரன் பூசித்தஸ்தலம். † வக்கராசுரன் பூசித்த ஸ்தலம் [லம். †† வெஞ்சன் என்னும் அசுரன் பூசித்தஸ்த

	பூசித்துப் பேறு பெற்றவரும் பெற்றவையும்.	ஸ்தலப்பெயர்.	ஸ்தல விசேஷம்.
23.	இராமர்	இராமனதீச்சுரம், * இராமேசுரம்.	* ராவண ஸம்ஹார தோஷம் நீங்கப் பூசித்த ஸ்தலம்.
24.	விஜயன்	விஜயமங்கை.	'பாண்டுவின் மகன் பார்த்தன் பணிசெய்து வேண்டு நல் வரங்கொள் விஜயமங்கை' என்பது அப்பர் தேவாரம்.
25.	நளன்	திருநள்ளாறு.	நளசக்ரவர்த்தி பூசித்துக் கலிதோஷம் நீங்கப் பெற்ற ஸ்தலம். " நளன் கெழுவிநாளும் வழிபாடுசெய் நள்ளாறே" (தேவாரம்)
26.	ஆனை	திருஆனைக்கா, சீகாளத்தி, கோட்டாறு, பெண்ணாகடம், வெண்காடு.	
27.	பசு	ஆமாத்தூர், ஆவூர், பெண்ணாகடம், கருவூர் ஆநிலை.	
28.	குரங்கு	குரக்குக்கா, *குரங்கணின் முட்டம், தென் °°குரங்காடுதுறை, வட°குரங்காடு துறை.	* ஹநுமார் பூசித்த ஸ்தலம். ° குரங்கு=வாலி °° குரங்கு=சுக்ரீவன் * குரங்கு=வாலி
29.	கழுகு	* கழுக்குன்றம், * * புள்ளிருக்கு வேளூர்.	* "கழுகுதொழு வேதகிரி" திருப்புகழ். * * சம்பாதி, சடாயு. "புள்ளினார் பணி புள்ளிருக்கு வேளூர்' தேவாரம்.
30.	நாரை	நாரையூர்.	
31.	காகம்	குரங்கணின்முட்டம்.	முட்டம்-காக்கை.
32.	பாம்பு	காளத்தி, பாதாளீச்சுரம்.	காளம்-பாம்பு. * பாம்புருவுள்ள தனஞ்சயரிஷி பூசித்தஸ்தலம்.
33.	அணில்	குரங்கணின்முட்டம்.	
34.	சிலந்தி	சீகாளத்தி.	சீ-சிலந்தி.
35.	ஈ	ஈங்கோய்மலை.	அகத்திய முநிவர் ஈ ரூபமாகச்சென்று சுவாமியைத் தரிசித்த ஸ்தலம்.
36.	எறும்பு	எறும்பியூர். திருவெறும்பூர்.	தேவர்கள் எறும்பு ரூபம் எடுத்துவந்து பூசித்த ஸ்தலம்.

முற்றும்.

வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.

முடிந்த தமிழ்நெடுங்கணக்கிற்காக ஓர் வேண்டுகோள்

A PLEA FOR PERFECT ALPHABET IN TAMIL

ஓர் பாஷையானது நிலையாக இருந்து உலக அபிவிருத்திக்கு கருவியாக விருக்கவேண்டுமென்றும்; அப்படி யிருக்கவேண்டுமென்றால் காலாகாலங்களின் நடத்தைகளையும், ஸ்வபாவங்களையும், நோக்கங்களையும், எண்ணங்களையும், ஆசாரங்களையும் தன்னிடத்தில் அடைந்திருக்க வேண்டுமென்றும்; சரித்திர, சாஸ்திர, புத்தி, யுக்தி பரிசோதனைக்கு அந்தபாஷை ஸாதனமாக இருக்கவேண்டுமென்றும்; அப்படி செய்வதற்கு பாஷையிடங் கொடுக்கவேண்டுமென்றும்; அப்படி இடங்கொடுக்கவேண்டுமென்றால் அந்தபாஷை பக்குவமான பாஷையாக இருக்கவேண்டு மென்றும்; பக்குவபாஷையாக இருக்கவேண்டுமென்றால் ஒவ்வொரு சப்தத்திற்கும் தனியாக ஒவ்வொரு எழுத்து குறியீடாக வேண்டுமென்றும் நாம் முன் சொன்னோம்.

இந்த வழியாக பார்த்தபொழுது தமிழ் பக்குவமான பாஷையாகக்கொள்வதற்கு ஒவ்வொரு சப்தத்திற்கும் தனியெழுத்தில்லாமல் இருக்கின்றதை நாம் காலானுக்கிரமத்திற்கேற்க அதனுடைய எழுத்துக்களை அதிகப்படுத்த வேண்டுமென்றும் முன் கூறினோம். அவ்வாறு செய்வதற்கு நம் ஸகோதர்களெல்லாம் முயற்சி செய்து தமிழைப் புராதனத்தில் எவ்வாறு பெருமையடைந்து இருந்ததோ அதேமாதிரியாக இப்பொழுது மிருக்கும்படிச்செய்யவேண்டும். அப்படிச்செய்ய நமது மனத்தில் தோன்றாவிட்டால் ஒன்று நாமாவது உயிரில்லாதவர்களாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால் தமிழாவது உயிரில்லாததாக இருக்கவேண்டும். நாம் உயிரற்றவரென்று சொல்லுவோமாயின் நமக்கு மனுஷத்தன்மையும் காலத்திற்கேற்ற மனோதைரியமும் இல்லாதவர்களாகிறோம். அல்லது, பூர்வம் பெரும்பாஷையாக இருந்த தமிழ் ஆனது இப்பொழுது உயிரற்றதென்று சொல்லும்பக்ஷத்தில் பின்பு வந்த தமிழர்களெல்லாம் மூளையில்லாதவர்களென்றும் தமது தேசபாஷைவிருத்தியில் அபிமானமில்லாதவரென்றும் நிஸ்சயமாகிவிடுகின்றது. எப்படிஇருப்பினு நமது ஆண்மைக்கே குறைவு உண்டாகிறது. இந்தக்குறையைத்தீர்ப்பதே மனுஷனாகப் பிறந்தவனுடைய கௌரவமாகிறது. இதற்கு பாடுபடுபவன்தான் தாய்நாட்டிற்குத்தகுந்த மகனாகின்றான்.

பாஷைக்கிருக்கவேண்டிய எழுத்துக்களைப் பற்றி நாம் மிகவும்கவலைப்படவேண்டியதில்லை. மற்றைய திராவிடபாஷைகளாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம் இவைகளெல்லாம் தம்முடைய எழுத்துக்களை முன்பே சீர்திருத்திக் கொண்டுவிட்டன. தமிழ்மாத்திரம் தனியாக பிடிவாதம் பிடித்துக்கொண்டு நிற்கின்றது. பிடிவாதத்தினால் எப்பொழுதும் கெடுதியேதவிர நன்மையுண்டாகாது. அந்த பாஷைகளெவ்வாறு பாஷையெழுத்துக்களை சரிப்படுத்திக் கொண்டனவோ அதே மாதிரி நாமும் நமது தமிழ்பாஷையை சரிபடுத்திக் கொள்ளலாம் இதில் ஒரு கஷ்டமுமில்லை.

முன்னோர்களெல்லாம் வடமொழிப் பதங்களை பின்னப்படுத்தி தமிழில் சேர்த்துக்கொண்டார்கள். தமிழில் போதுமான எழுத்தில்லாமையால் தான் அவர்களிவ்வாறு செய்தார்கள். அதுவும்அல்லாமல் குருட்டு அபிமானமுங்கூட கலந்தது. ஸாதாரணமாகவே நம்முன்னோர்களுக்கு தாம்பிடித்தமுயலுக்கு மூன்றேகாலென்று சாதிக்கும் குணம்தான். அப்பேர்ப்பட்டவர்களுக்குக்கிந்த குருட்டு அபிமானம் சேர்ந்தால் அவர்கள் எவ்வாறு நடப்பார்கள் என்பது சொல்லவே வேண்டாம்.

சங்கத்தார் காலத்திருந்த வஸ்து நிர்த்தேசமும், குண நிர்த்தேசமும் போய் பாஷையின் உயிர்போய் உடல்மாத்திரம் நம்முன்னோர் கை

யிலகப்பட்டது. அதை இவர்கள் தங்கள் மனத்திற்குப்பட்டமாதிரியெல்லாம்மாட்டிக்கொண்டு இந்த காலத்தில் இருக்கும் அன்னியாய கதிக்கு கொண்டுவந்து விட்டார்கள். விட்டார்களே ஒழிய, அதை உயிர்ப்பிக்கத்தக்க வைத்தியமும் செய்யத் தெரியாதவராய் இருக்கின்றார்கள். செய்ய வருபவர்களையும் அசட்டை செய்துவிடுகிறார்கள். இந்த விதமான அலக்ஷிய ஸ்வபாவம் நம் பண்டிதர்களுடைய மனதை விட்டொழிய செய்யவேண்டியது நமது முதல் வேலை. அவர்களுக்குமேல் நாட்டாருடைய விஷய ஸூசனை யுக்தியைக் கற்பித்து நித்தியா நித்தியங்களைக் காணும்படிச் செய்யவேண்டும். அவ்வாறு செய்து அவர்களை நம்முடைய கையிற் போட்டுக் கொண்டு நாம் செய்யவேண்டிய காரியங்களை செய்யவேண்டிய தவசியம். அவரிடத்து நம்முடைய பாஷையின் பொக்கிஷங்களிருக்கின்றன. அவர்களை நாம் அலக்ஷியம் செய்தால் முன்னோரது பாவங்களின்னவென்று நமக்குத் தெரியாது. அவை தெரிந்தாலொழிய நமது காரியமீடேறுது. அவர் வழியே போய்த்தான் அவர்களை நம் வழிக்கு கொண்டுவரவேண்டியது. மாத்திரைக்கு வெல்லமிட்டு கொடுப்பதுபோல் நாமும் நமது பாவங்களை அவர் மனத்திலேற்றவேண்டியது; இது நமது தமிழ் பழைய பெருமையடைய செய்வதற்கு முதற்படி.

நாம் பண்டிதர்களை நம் வழிக்குள் கொண்டு வரவேண்டுமென்று சொன்னது ஸாதாரணமாக ஒருவரிடத்தும் பகைக்கொள்ளக்கூடாதென்ற எண்ணத்தினுடன்று. அவர்களை நம்வழிக்கு கொண்டு வரவேண்டிய தத்யாவஸ்யகம். பழைய நூல்களை யாதரித்து, அவற்றின் குணதோஷங்களை விவரித்து, இது நல்லது, இதுகெட்டது, என்று காட்டவல்லாரை நாம் அவசியம் நம்மிடத்துடையவராக இருக்கவேண்டியது. நாம் மிகவும் வேகமாக நமது உத்ஸாகத்தில் தலைகீழாய் ஓடிவிடலாம். அவ்வாறு நாம் உத்ஸாகத்தில் எல்லையைத்தாண்டி போகாமலிருக்க அப்பண்டிதர்கள் நம்மை பின்பற்றி யிழுப்பார்கள். இது நன்மையுண்டாவதற்கு அவசியமாக விருப்பதினால்தான் நாமும் வேண்டுமென்றது.

வா. சேஷகிரி.

இயற்கை அற்புதங்கள்

WONDERS IN NATURE

IX வானவில்

THE RAIN BOW



வானவில் என்ற அற்புதத்தோற்றமானது ஸூர்யன் கிரணங்களால் உண்டாக்கப்படும் அற்புதத்தோற்றங்களுள் ஒன்று. இது எப்பொழுதும் ஸூர்யனுக்கு எதிரே காணப்படும். காலை அல்லது மாலைவேளைகளில் முறையே மேற்கு அல்லது கிழக்குப்புறம் மழைபெய்து கொண்டிருக்குமாயின் அப்பொழுது இந்த அற்புதத் தோற்றம் உண்டாகும். வானவில்லானது அர்த்தசக்கிரரூபமாக சிவப்பு, மஞ்சள், பச்சை, ஊதா ஆகிய இந்த வர்ணங்களோடு கூடிய ஓர் பட்டையான வில்லாக ஆகாயத்தில் காணப்படும். இது பார்வைக்கு மிகுந்த மனோரம்யமாக இருக்கும். சந்திரவெளிச்சத்திலும் இம்மாதிரியான வானவில் உண்டாகலாம். ஆனால் இந்த வில்லிலிருக்கும் வர்ணங்கள் எல்லாம் மங்கலாக இருக்கும். இந்தத்தோற்றம் அபூர்வம். இதுவரையில்நான் இரண்டொருதரம் தான் இதைக்கண்டிருக்கிறேன். ஸாதாரணமாக பௌர்ணமிக்கு முன்னும் பின்னும் உள்ள இரண்டு மூன்று நாள்களுக்குள் மேற்கே மழை ஏற்பாடுமாயின் சந்திரவெளிச்சத்தால் உண்டாக்கப்படும் வானவிற்களைக்காணலாம். ஸூர்யனால் உண்டாக்கப்படும் வானவிற்

களை நாம் அடிக்கடி காண இடம் உண்டாவது தினம் இருமுறை அது உண்டாவ்தற்கு இடம் இருப்பதால் தான்.

சந்திரன் விஷயத்தில் வானவில்லை வேறுவிதமாக அடிக்கடிக்காணலாம். சந்திரனைச் சுற்றிச் சிற்சில ஸமயங்களில் மேகங்கள் சக்கிரமாக ஒதுங்கி நிற்க அதன் மத்தியில் சந்திரன்நிற்கும். இந்த மேக சக்கிரத்திற்கு பரிவேஷம் என்று பெயர். இப்படி ஸூர்யன் விஷயத்திலும் உண்டாவது உண்டு இந்தப் பரிவேஷம் உண்டாகுங்கால் சந்திரனுக்கு அருகாமையில் பட்டையான் சிறு சக்கிரங்கள் காணப்படும் இவைகளில் வானவில் வர்ணங்கள் மங்கலாகத்தோன்றும். இம்மாதிரியான சக்கிர வானவில்லை சந்திரன் விஷயத்தில் காணலாம் ஸூர்யன் விஷயத்தில் மத்தியன்னத்தில் மழை மேகங்கள் சூழ்ந்திருக்கும் ஸமயத்தில் சக்கிரமான வானவிற்களைக் காணலாம். இது மிகுந்த அபூர்வமான தோற்றம்.

வானவிற்கள் வேறு சில ஸந்தர்ப்பங்களிலும் உண்டாகும். பெரியமலையருவிகளின் தண்ணீர் சிறு திவலைகளாகி ஆகாயத்தில் சிதறிவெகு தூரம்கொண்டு போகப்படும். இம்மாதிரி அருவிகளின் அருகாமையில் போவதற்கு முன்னமேயே நாம் தெப்பமாக நனைந்து போகவேண்டியதுதான். இந்தத்திவலைக் கூட்டங்களில் வானவிற்கள் ஸூர்யன் ஒளியால் உண்டாக்கப்பட்டு வெளியாகும். இங்கு அது வட்டதின் ஓர் சிறுபாகமாக மாத்திரம்தான் காணப்படும். இவைகளால் அருவிக்கு அழகு அதிகரிக்கும். இவ்வருவிகளில் ஸூர்யன் ஒளிபடும் பாகங்களில் நாம் தலைகொடுத்து விட்டு நமது தலையில் விழும் ஜலம் சிறுதிவலைகளாகச் சிதறிப்போய் நம்மை சுற்றி துணிபோர்த்தாற்போலப் பரந்து விழும்படிசெய்தால் இங்கும் இவ்வில் உண்டாகும். இது மற்றவிற்கள்போல குறைந்தவட்டமாக இராது பூர்ணசக்கிரமாக நம்மைச் சுற்றித் தோன்றும். தலையை அருவியிலிருந்தும் எடுத்து விட்டால் இத்தோற்றம் உடனே மறைந்துவிடும், மறுபடியும் கொடுத்தால் இத்தோற்றம் மறுபடியும் உண்டாகும். இதுபோலவே தண்ணீர் சிறுதிவலைகளாகி எங்கு காணப்பட்டாலும் ஸரி அங்கு ஸூர்யன் ஒளிபடுமாயின் தகுந்தஸமயங்களின் [illegible] கின்றன. ஸமுத்திரக்கரையில் தண்ணீர் திவலைகளாகி ஏராளமாக சிதறி ஓடுவதால் அங்கும் இம்மாதிரி வில் தக்க ஸமயங்களில் உண்டாகும். இதற்கு ஸமுத்திரவில் என்றுபெயர்.

முற்கூறிய ஒழுங்கை மனதில் வைத்துக்கொண்டு நாமே வானவிற்களை உண்டாக்கிவிடலாம். வாய்நிறையத்தண்ணீரைவிட்டுக்கொண்டு வாய்க் கொப்பளிப்பதுபோல தண்ணீரை வெளியில் விடும்பொழுது அது சிறுதிவலையாக சிதறும்படி அதை வெளியாக்கவேண்டும். இம்மாதிரி சிறுகுழந்தைகள் கையலம்புங்கால் சிற்சில ஸமயங்களில் செய்வதுஉண்டு. இவ்வாறு செய்யுங்கால் ஸூர்யனை நமக்கு ஓர் புறத்திலும், தண்ணீர் சிதறி ஓடுவதுமற்றோர் புறத்திலும், இருக்கும்படி செய்தால் அங்கு உடனே வானவில் உண்டாகிவிடும். இவ்வாறு எல்லோரும் செய்து பார்த்து ஆனந்திக்கலாம். வேறோர்வழியிலும் இந்த அற்புதத்தோற்றத்தை நாம் உண்டாக்கலாம். நமது விரலை தண்ணீரில் தோய்த்து அதன் நுனியில் ஓர் துளிநீர் நிற்கும்படிசெய்யவேண்டும். அதைநமக்கும் ஸூர்யனுக்கும் இடையில் சற்றுவடக்கு அல்லது தெற்குப்பக்கமாவது ஒதுங்கியிருக்கும்படிப் பிடித்தால் வானவில்லின் வர்ணங்களெல்லாம் அதனுள் நன்றாகக்காணப்படும். அந்தச்சிறுதுளியானது முற்கூறியுள்ள வர்ணங்களோடு வெகு அழகாக ஒளிவீசிப்பிரகாசிக்கும். இதுபோலவே அநேகம்துளிகள் மழைபெய்யுங்கால் விழுவதால் அவைகளில் தகுந்த உயரத்தில் இருப்பவைகள் எல்லாம் இத்துளிபோல ஒளிவீசிப்பிரகாசிக்க ஆகாயத்தில் வர்ணங்களால் ஆக்கப்பட்டவில் போன்றதோற்றம் உண்டாகின்றது.

இப்பொழுது கூறிய தோற்றத்தைப் போன்றது தான் வயிரநகைகளில் வயிரம்டால் வீசுவதும் புற்கள் புஷ்பங்கள் முதலியவைகள் நுனியில் இருக்கும் பனித்துளிகள் டால்வீசிப் பிரகாசிப்பதும், முத்துச்சிப்பி, சிலந்திவலை, கண்ணிமை ரோமம் ஆகிய இவைகள் வர்ணங்களோடு பிரகாசிப்பதும். ஆனால் நகைகளில் பதிக்காத வயிரம் டால்வீசுவதும், சரவிளக்குக் கண்ணாடிகள் டால்வீசுவதும் வானவில்லைப்போன்றவைகள் அல்ல. இவைகள் எல்லாம் ஒரேமாதிரித் தோற்றம் உடையவைகளாய் இருப்பினும் இவைகளை உண்டாக்கும் காரணங்களை உற்றுநோக்கின் மாறுபாடு உடையனவாக இருக்கும். இந்த வித்யாஸத்தைப் பின்னர் இவ்வற்புதத்தோற்றம் உண்டாக [illegible] விவரிக்குங்கால் நன்றாக எடுத்து விவரிப்போம்.

ஆகாயத்தில் உண்டாகும் வானவிற்களில் காணப்படும் விசேஷங்களைச் சற்றுவிவரிப்போம். ஸாதாரணமாக ஓர் வானவில்தான் மழைபெய்யுங்கால் ஆகாயத்தில் காணப்படும். இதற்கு முதல் வில் என்று பெயர். இது பிரகாசமாக இருக்கும். இதில் பார்வைக்கு நான்கு அல்லது ஐந்துவர்ணங்கள்தான் தெரியும். அவையாவன சிவப்பு, மஞ்சள், பச்சை, நீலம், ஊதா ஆகிய இவைகளே. இதுபோன்ற வர்ணங்களை உண்டாக்கும் சரலாந்தல் கண்ணாடி ஒன்றை இருட்டறையில்வைத்து ஸூர்யவெளிச்சத்தின் சிறுபாகத்தை எரிக்கும் கண்ணாடி மூலமாக பலப்படுத்தி அந்தச்சரலாந்தல் கண்ணாடியின் ஓர்பட்டையின்மேல் படும்படி விட்டால் சுவற்றில் இவ்வர்ண வெளிச்சங்கள்காணப்படும். சரலாந்தல் கண்ணாடியை மெதுவாகத் திருப்பிவந்தால் இந்த வெளிச்சத்தின் பிரகாசம் அதிகரிக்கும். அதிகப்பிரகாசம் வருங்கால் வர்ணவெளிச்சங்களை ஓர் எரிக்கு கண்ணாடியால் பலப்படுத்தி, ஓர்வித பலகையின்மேல் படும்படிவிட்டால் இதனுள் ஏழுவர்ணங்கள் நன்றாகப் பிரிந்து காணப்படும். அவையாவன ஊதா, அதிநீலம், நீலம், பச்சை, மஞ்சள், சிவப்புமஞ்சள், சிவப்பு ஆகிய இவைகளே. வானவில்லில் உட்புறத்தில் உதாவும், வெளிப்புறத்தில் சிவப்புமாகி ஒழுங்காக முற்கூறிய ஏழுவர்ணங்களும் காணப்படும். சிற்சில ஸமயங்களில் இதைவிட மங்கலாயும் பெரிதாயும் முன்னதன் வெளிப்புறத்தில் ஓர் வில் காணப்படும் இதற்குஇரண்டாவது வில் என்று பெயர். இதில் உட்புறத்தில் சிவப்பும் வெளிப்புறத்தில் ஊதாவும் ஒழுங்காகவும் முன்னதற்குமாறாகவும் காணப்படும். இம்மாதிரியான இரண்டாவது வில் இவ்வருஷம் ஜூன்மாதம் பெய்த ஓர் மழையில் ஸமுத்திரக் கரையில் காணப்பட்டது. மலையின் வீழ்அருவிகளிலும் அங்குபெய்யும்மழைகளிலும் மூன்று வில்கள் காணப்படும். மூன்றாவது வில் முதல் இரண்டாவதைவிட மிக மங்கலாக இருக்கும். இதில் காணப்படும் வர்ண ஒழுங்கு முதல் வில்லிலிருப்பது போல இருக்கும். இதுவரையில் நான்குவிற்கள்தான் மனிதருக்குத் தென்பட்டிருக்கிறது. இவ்விற்கள் உண்டாகும் காரணத்தை நோக்குங்கால் அநேக விற்கள் இருக்க இடம்உண்டாயினும், போகப்போக விற்கள் மங்கலாகப் போவதால் நான்கிற்குமேல் நமது கண்களுக்குப் புலப்படுவது அஸாத்யம். இவ்வாறு உண்டாகும் [illegible] முறைப்படைவிற்களில் வர்ண ஒழுங்கு முதல் வில்லைப்போலவும், இரட்டை படைவிற்களில் வர்ண ஒழுங்கு இரண்டாவது வில்லைப்போலவும், காணப்படும். சிற்சில ஸமயங்களில் சிவப்பு, பச்சை ஆகிய இவ்விருவர்ணங்களுடன் ஓர் வில் முதல் வில்லின் உட்புறத்திலாவது இரண்டாவது வில்லின் வெளிப்புறத்திலாவது காணப்படும் இதற்கு கணக்குள் அடங்காத வில் என்று பெயர்.

வானவில்லாகிய அற்புதத் தோற்றத்திற்குக் காரணம் யாது என்ற விஷயத்தை எடுத்துக்கொள்ளுவோம். பனித்துளி, பதித்தவயிரம், விரல் நுனியில் இருக்கு தண்ணீர்த்துளி, மலை அருவி, வாய்க்கொப்பளிக்கும் நீர் முதலிய விடங்களில் உண்டாகும் வானவில் தோற்றத்திற்கும் அதுவே காரணமாகும். தண்ணீர்த்துளி ஸப்தவர்ணத்துடன் ஸூர்யன் ஒளியில் பிரகாசிப்பதன் காரணத்தைநன்குதெரிந்துகொண்டால்வானவில் உண்டாவதற்கு காரணம் இன்னது என்று தெரிந்துகொண்டதாகும். இதற்குக்காரணம் அநேகமழைத் துளிகளில் இடைவிடாது இம்மாதிரித்தோற்றம் உண்டாவதால் தான் வானவில் உண்டாகின்றது என்பதே. ஒருதுளி ஜலமானது சிறுகோளாகாரமாகஇருக்கின்றது. அதன்மேல் படும் ஸூர்யன் ஒளி பெரும்பாலும் உள்ளே ஊடுருவிச் சென்றுவிடுகின்றது. உட்சென்ற ஒளிதண்ணீர்த்துளியில் பட்டமாதிரத்தில் பெரும்பாலும் ஊடுருவிச் செல்லாதுபிரதி பலனமாகின்றது. இவ்வாறான ஒளி தண்ணீர்த்துளியின் உள்ளே வேறோர்பக்கத்தில்சென்று தாக்க அதில் ஓர்பாகம் ஊடுருவிச் செல்கின்றது, மற்றையபாகம் பிரதிபலமானகின்றனது. இது நமது கண்ணில் வந்து தாக்குங்கால் டால்வீசுகின்ற தோற்றத்தை உண்டாக்குகின்றது.

இப்படியாயின் ஸூர்யன் ஒளி ஏழு வர்ணமாகப் பிரிந்து காணப்படுவானேன் என்ற கேள்வி பிறக்கும். ஸூர்யன் ஒளி ஏழுவர்ணங்களாலாகிய ஒளி என்பது சரலாந்தல் கண்ணாடி மூலமாக எளிதில் காணலாம். அது ஸூர்யனது வெள்ளை ஒளியை ஏழு வர்ண ஒளிகளாகப் பிரித்து விடுகின்றது. இதற்குக் காரணம் பின் வருவது. வர்ணவெளிச்சங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமாக வளைந்த கண்ணாடி, தண்ணீர் முதலியவைகள் உள்ளே ஊடுருவிசெல்லும் குணமுடையன. சிவப்புவர்ண வெளிச்சம் அதிகமாக வளையாது, ஊதாவர்ண வெளிச்சம் அதிகமாகவளையும் குணமுடையது. சிவப்புக்கும் ஊதாவுக்குஇடையில்

உள்ள மற்றைய வெளிச்சங்கள் ஒழுங்காக மத்தியமாயும் முன்னதைவிடப் பின்னது அதிகமாயும் வளைந்து ஊடுருவிச் செல்லும் குணம் உடையன. இதனால்தான் இவ்வேழு வர்ணங்களாலாகிய ஸூர்யவெளிச்சம் தண்ணீர் சரலாந்தல் கண்ணாடி முதலியவைகளில் பட்டு ஊடுருவிப்போகும்கால் அதன் ஏழுவர்ணங்களும் அவைகளுக்குத் தக்கபடி வளைக்கப்பட ஏழுவர்ண வெளிச்சங்களாக பிரிக்கப்படுகின்றன. இந்த தொழிலுக்கு பிரிந்தல் என்றுபெயர். இதனால் ஸூர்ய வெளிச்சம் அதன் ஏழுபாகங்களாகப் பிரிக்கப்பட நமக்கு வர்ணவெளிச்சத்தோற்றங்கள் உண்டாகின்றன. இம்மாதிரித்தோற்றம் ஸூர்யன் நிற்கும் உயரத்தையும் மழைத்துளிகள் இருக்கும் உயரத்தையும் பொருத்தது. ஸூர்யன் உச்சிக்கு அருகேவரும் பொழுதும் அஸ்தமனமாகும் பொழுதும் இத்தோற்றம் உண்டாகாது. மத்திய ஸமயங்களில் ஸூர்யனுக்கு எதிரேதோற்றம் உண்டாகும் ஆதலால் தகுந்த உயரத்திலிருக்கும் மழைத்துளிகளில் தகுந்தபடி வந்துதாக்கும் ஸூர்யன் ஒளி அவைகளுள் ஊடுருவிச்சென்று ஒருதரம் உள்ளே பிரதிபலனம் செய்யப்பட்டு மறுபடி ஊடுருவிவெளியேவந்து நமது கண்ணில் படுவதால் உண்டாகும் தோற்றம் வானவில்என்பது தெரியவரும் இதே காரணத்தால்தான் முற்கூறிய இது போன்ற தோற்றங்களும் உண்டாவது.

இப்பொழுது கூறப்பட்ட காரணத்திலிருந்துமுதல்வில் உண்டாவதற்குக் காரணம் தெரியவந்தது. மற்றய அநேகம் விற்கள் உண்டாகக் காரணம்யாது என்பதை விவரிப்போம். தண்ணீர் துளியுள் ஒருதரம் பிரதிபலனம் ஆனபின்புமறுபடி உள்ளேயேவேறோரிடத்தில் தாக்கும் வெளிச்சத்தில் ஓர்பாகம் மாத்திரம்தான் ஊடுருவி வெளிவருவதாக முன்னர் கூறப்பட்டுள்ளது. மற்றையப் பாகம் இரண்டாம் தரம் பிரதி பலனமாகி துளியுள் வேறோர் பாகத்தைச் சென்று தாக்க அதன் ஓர்பாகம் அங்கு ஊடுருவிச் செல்ல மற்றையப்பாகம் மூன்றும் தரம் பிரதிபலிக்கும். இம்மாதிரியே தண்ணீர்த் துளியுள் அநேகம் தரம் பிரதிபலனமும் ஊடுஉருவி வெளிவருதலும் நடக்கும். இதில் முதல் பிரதிபலனத்தின் பின்பு வெளிவந்து நமது கண்ணில் படும் ஒளியால் முதல் வில்லும், இரண்டு பிரதிபலனத்தின் பின்வரும் ஒளியால் இரண்டாவது வில்லும் உண்டாகின்றன. இப்படி உண்டாவதை இங்கு அமைத்துள்ள சித்திர தில் காட்டப்பட்டிருக்கிறது இதுபோலவே மூன்று நான்கு முதலிய பிரதிபலனத்திற்திற்குப்பின் முறையே வெளிவந்து நமது கண்ணில் படும் ஸூர்யனது பிரிந்த ஒளிகளால் மூன்றாவது நான்காவது முதலிய அநேகவிற்கள்உண்டாகலாம். கணக்குள் அடங்காத வில் உண்டாகக் காரணம் இன்னது என்பதை இன்னும் ஒருவரும் விளக்கவில்லை.

வானவில்முதலிய இனமான தோற்றங்களுக்கும் சரலாந்தல் கண்ணாடியில் உண்டாகும் தோற்றத்திற்கும்யாது வித்யாஸம்என்ற கேள்வியை எடுத்துக்கொள்வோம். சரலாந்தல் கண்ணாடியின் ஓர்பட்டையில்படும் ஸூர்யன் ஒளி ஊடுருவிச் செல்லுங்கால்வளைக்கப்பட அதன் வர்ணங்கள் அங்கேயே பிரிக்கப்படுகின்றன. பிரிந்து நிற்கும் ஏழுவர்ணஒளிகளும் வேறோர்பட்டையின் உட்புரம் வந்துதாக்க அங்கும் ஊடுருவிவெளிருங்கால் மறுபடியும் வளைக்கப்பட அவைகள்நமது கண்ணில் படுகின்றன. இதனால் இக்கண்ணாடிகளில் காணப்படும்தோற்றம் இரண்டு ஊடுருவிச் செல்லல் மாத்திரமாக உண்டாவது. அனால்வானவில்முதலிய இனத்தோற்றங்கள் இரண்டுஊடுருவிச் செல்லாலும், அதன் மத்தியில் ஏற்படும் பிரதி பலனங்களாலும் உண்டாகின்றன.

இந்த வியாஸத்தை முடிக்கும் முன்னர் ஸூர்யன் ஒளி ஏழுவர்ண ஒளிகளால் உண்டாவது என்பதை வேறுவிதமாகக் காட்டுவோம். ஓர் வட்டமான அட்டையை எடுத்து அதன் மத்தியிலிருந்து ஏழுகோடுகள் இழுத்து அந்த அட்டையை ஏழுபாகமாகப் பிரிப்போம். ஒவ்வொரு பாகத்திலும் ஒழுங்காக வானவில்லில் காணப்படும் ஏழுவர்ணங்களையும் அமைப்போம். இந்த அட்டையின் மத்யபாகத்தை ஓர்சுற்றும் சக்கிரத்தில் மாட்டி. இதைவேகமாகச் சுற்றுவோம். அப்பொழுது அட்டை வெளுப்பாகத்தான் காணப்படும். அட்டைசுற்றும் வேகத்தால் ஏழுவர்ணங்களின் ஒளிகளும்சேர்ந்து நமதுகண்ணில்பட நமக்குவெள்ளை ஒளியின்தோற்றம் உண்டாகின்றது. சரலாந்தல் கண்ணாடிமூலமாக ஸூர்யன் ஒளியாகிய வெள்ளைஒளியைப் பிரித்துஅது ஏழுவர்ண ஒளிகளாலாகியது என்றுகாட்டியதை இங்கு ஏழுவர்ண ஒளிகளைச் சேர்த்தால் வெள்ளை ஒளியாகின்றது என்று காட்டி வற்புறுத்தியிருக்கிறது.

ஸூர்யன் ஒளிசெய்யும் அற்பத்தொழிலைப் பாருங்கள் ! முன்னமேகானல் நீர்விஷயத்தில் ஸூர்யன் உஷ்ணத்தின் அற்புதக்காரியத்தை காட்டினேம். இனிவரும் ஸஞ்சிகைகளில் ஸூர்யன் ஒளியாலாகும் அற்புதக்காரியங்களை எடுத்து விவரிப்போம்.

உழவுநூல்

AGRICULTURE

நிலம் உண்டாகும்விதம்.—முக்கிய ஏதுக்கள் மரஞ்செடி உயிர்ப்பிராணிகளின் ஏதுவாலும், வெயில் மழைமுதலியனவை தாக்குதலாலும், மழைஜலம், ஆற்றுஜலம் இவற்றின் செயலுக்குத் தக்கபடியும் நிலம் பலமாதிரியாக உண்டாகின்றது.

நிலம்.—நாளா விருத்தியில் பாறை கரைந்துண்டான மண்ணேடு இந்திரியப்பொருளும் கலந்து புழுப்பூச்சிகளின் செயலால் மாற்றப்பட்டும் ஆகாயம் அடிக்கடி மோதுதலால் திருத்தப்பட்டும் பூமி மட்டத்திற்குப் பரவியிருக்கும் தளமே நிலமாகும். பூமியின்மேல் பரப்பு குளிர்ந்திறுகும்போது மலையில் பிளப்பும், பள்ளத்தாக்குகளில் நில உயர்வும் உண்டாகின்றன. பிற்பாடு மழை, வெயில், காற்றுமுதலியவற்றால் நாளாவிருத்தியில் ஸமமாகிறது. மரஞ்செடி உயிர்ப்பிராணிகளும் தம்சக்தியால் நிலத்தின் தன்மையை மாற்றக்கூடியவை.

தேய்வுபாடு(Weathering).—முக்கியமாய்த் தேய்வுபாடு கீழ்க்குறிக்கும் வகையால் நேர்கின்றன. (1) உஷ்ண அதிகரிப்புமாறுதல்கள் (2) நீர்க்கோர்ப்பும், காய்வும்(3)உறைபனி (4) மழை, கரியமலவாயு, ஓடும் நீர் (5) மரஞ்செடி உயிர்ப்பிராணிகளின் செயல் (*a*) பூமியில் தோண்டும் பிராணிகளின் செயல் (எலி முயல்போன்ற ஜெந்துக்கள்) (*b*) மட்புழுவின் செயல் (*c*) மனிதன், வெட்டிக்கொத்திச் செய்கிற மாறுதல்கள் (*d*) மரஞ்செடி வளர்ச்சியின் சக்தியினால் உண்டாகும் மாறுதல்கள்.

(செயல்கள்) (1) செடிகள் வளர்வதற்கு இடத்தைக் கொடுக்கிறது. (2) அவை வேர் ஊன்றுகின்றன. (3) புழுப்பூச்சிகள் செய்யும் மாறுதல்களுக்கும் மற்ற மாறுதல்களுக்கும் இடமாயிருக்கிறது.

நிலவகையின் பாகுபாடு.—(1) வண்டல்நிலம் (Alluvial soil) வடசர்க்காரிலுள்ள "லங்காநிலம்" காவேரிப்பாசனத்திலுள்ள செழிப்புநிலம், தோட்டமண் இவையெல்லாம் வண்டல் நிலமென்று சொல்லப்படும்.

2. கருநிறமுள்ளதும் பருத்தி விளையக்கூடியதுமானநிலம்.—(Black cotton soil) இம்மாதிரியான நிலம் விடுபட்ட ஜில்லாக்களான கடப்பை, கர்னூல், பல்லாரி, அநந்தபுரம் முதலான ஜில்லாக்களிலும், கோயம்பத்தூர், திருநெல்வேலி, மற்றும்பெரிய ஜில்லாக்களிலும் உண்டு. இவ்வகை நிலம் அதிக ஆழமான கெட்டிநிலங்கள் அல்லது இரும்புச்சத்துள்ள நிலம்.

3. செம்மண்நிலம் (Red soil) இம்மாதிரியான பூமி செழிப்பற்றவை ஏனென்றால் இவ்வகை நிலத்திலுள்ள சிறுமண் தூளியிராததாலும் அதுபற்றி வறண்டிருப்பதாலுமே.

4. சுண்ணம் கலந்துள்ளநிலம்.—(Calcareous soil) சுண்ணக்கல் சேர்ந்து உண்டானது. இம்மாதிரியான பூமி எப்போதும் சாம்பல் நிறமாயிருப்பதில்லை. சற்று கறுப்பாகவும் மாறிவிடும்.

5. மணற்பாங்கானநிலம்.—(Arenaceous soil) இம்மாதிரியான நிலத்தின் மண் கடல்மணலைபோலிருக்கும். மேற்குறித்த 5-வகையான பூமியை தம்மிடத்துள்ள களிமண்ணுக்குத்தக்கபடி வேறுமூன்று வகையாகவும் பிரிக்கலாம்.

1. களிமண்பூமி.—$\frac{2}{3}$பாகத்துக்கு அதிகமாகக்களிமண்ணிருப்பது.

2. பசளைமண்பூமி.—(Soamy Soil). $\frac{1}{3}$முதல் $\frac{2}{3}$பாகம் களிமண்ணிருப்பது.

3. மணற்பூமி,—$\frac{1}{3}$-க்கு குறைச்சலாகவே களிமண்ணிருக்கும். மேலே வகுக்கப்பட்ட மூன்றுவிதநிலங்களும் தம்மிடத்துள்ள இந்திரியப்பொருள், மற்றும் செழிப்புப்பொருளின் அளவுக்குத்தக்கபடி பின்னும் இரண்டு வகையாகப் பிரிக்கப்படும் இப்படிப் பாகுபாடு செய்வதால் மொத்தம் 5 வகைநிலமாகப் பிரிக்கலாம். மேலும் இவற்றில் ஒவ்வொன்றையும் இரண்டு வகையாகப்பிரிக்கலாம்.

மிகவும் கற்பாங்கான நிலம்.—கடைசி வகுப்பின் கீழ்வரும்.

'இரசல் நிலம்' என்பது தன்னிடத்துள்ள மண் மிகவும் தூளாகவும் இலகுவாய் உழக்கூடியதுமாகவிருக்கும் இவ்வகை நிலத்துக்கு முற்றிலும் மாறுபாடானது 'கடின நிலம்' இவை தவிரவும், இறுகினது தளர்ந்தது; நீரை சீக்கிரம் உறிஞ்சுவது அல்லது அது இறங்க இடங்கொடுப்பது; ஆழமுள்ளது, ஆழமில்லாதது; செழிப்புள்ளது செழிப்பற்றது; என்று பலவகை நிலங்களுண்டு.

பூமி ஈரத்தை கவர்ந்துகொள்ளும் சக்தி.—இச்சக்தியானது ஆகாயத்தின் உஷ்ணநிலை, நீராவியின் அளவு; வறட்சி, அல்லது ஈரமிகுதி, நிலத்தின் தன்மை, அதன் நிலைமை—ஆகிய இவற்றுக்குத் தக்கபடி வித்தியாசப்படும். நிலத்தை எவ்வளவுக்கெவ்வளவு நன்றாய் உழுது தூளாக்கிறோமோ, அவ்வளவுக்கு வித்தைக் கவர்ந்து கொள்ளக்கூடியது.

வாயுக்களைக் கவர்ந்துகொள்ளும் சக்தி.—நிலத்திற்கு, வாயுக்களைக்கவர்ந்து தன்னிடத்திலுள்ள இடைவெளிகளில் அடக்கிவைத்துக்கொள்ளும் சக்தியுண்டு. இவ்வாறு நிலத்துவாரங்களில் அடைபட்டகாற்று முழுதும் வெளி ஆகாயத்தைப் போன்றதன்று.

அதனிடத்தில் ஆகாயத்தைவிட, ஜலவாயு, கரியமலவாயுக்கள் மிகவும் அதிகமாயிருக்கின்றன. பிராணவாயு ஏறக்குறைய இல்லை என்றே சொல்லிவிடலாம். இந்திரியப்பொருள் மிகுதியாயுள்ள நிலங்களில் கரியமலவாயு, ஜலவாயுக்கள் ஏராளமாகவிருக்கின்றன. செழிப்பான நிலத்தின் மேற்பரப்பானது ஆகாயத்தினின்று நவச்சாரத்தைக் கவர்ந்து கொள்ளக்கூடியது. இவ்வாறு இழுத்துக்கொள்ளப்பட்ட நவச்சார சத்தானது நவச்சார உப்பாக மாறிக்கொண்டு வருமானல் மேன்மேலும் நவச்சார சத்தானது நிலத்தில் படியும். இவ்வாறு நவச்சாரச் சத்தை நவச்சார உப்பாக மாற்றிக்கொள்ளக்கூடியதும், நீர் அல்லது வாயுக்கள் சீக்கிரம் இறங்கக்கூடியதுமான நிலமானது மேற்கூறியவன்மையால் ஏராளமான நவச்சாரச்சத்தைக் கிரகித்துக் கொள்ளக்கூடியதாகும்.

நீரில் கரையக்கூடிய பொருள் கரைந்திருந்தால் பொருளைமாத்திரம் பிரித்துக்கொள்ளும் சக்தி (Power of Fixing Solids from Solution) பாஸ்கராமிலத்திராவகம், மரச்சாம்பல்களில்லை நவச்சாரக் கட்டிகள் கரைந்துள்ள நீரை செழிப்பானநிலத்தில் ஊற்றினால் நீர்மாத்திரம் பூமியில் இறங்கிச் செல்லுமேயொழிய அதிற்கரைந்தமற்றப் பொருள்கள் மேலாகத் தங்கிவிடும் இச்சக்தி மிகவும் முக்கியமானதொன்றேயாம். ஏனென்றால் மழைபெய்து நிலத்தின் செழிப்புப் பொருள்களை தன்னுடன் அரித்துக்கொண்டு உள்ளே இறங்காதபடி தவிர்க்கின்றது. இவ்வாறு தடுக்கும் நிலப்பொருள்களாவன.—(Hydrates of ferric oxide and alumina. The hydrosilicates of aluminium aud humus nitrates) தர்க்கியச உப்புக்களும், சுண்ணமும் இவ்வாறு நிலத்தால் இலகுவாய் தடைபடக்கூடியனவையல்ல.

நீரானது நிலத்தில் இறங்கும்சக்தி.—(Permeability of Water)இச்சக்தியினால் நீரானது நிலத்தில் இறங்குகிறது. நிலத்திலுள்ள துவாரம் அகன்றிருந்தால் சீக்கிரம் செல்லக் கூடும். உருண்டையான மணலுள்ள நிலத்தில் மிகவும் இலகுவாய் இறங்கும். நிலத்திலுள்ள கண்கள் எவ்வளவு நுட்பமாயிருக்கின்றனவோ அளவுக்குத் தக்கபடி நீரைத் தங்கும்படி செய்யும் சக்தியுண்டு. இக்கவிற்சியைத்தான் நீர் ஏற்கும்சக்தி என்பது, (Capillarity) நிலக்கணக்களின் மூலமாக நீர்மிகவும் அதிக ஆழத்துக்கு இறங்கும் படிவிடக்கூடிய நிலத்தில் (In a very porous soil)நீரானது உரத்தையும் கரைத்துக்கொண்டு மிகவும் கீழே இறங்கிவிடுமானல் செடிகள் உணவைக்கிரகிக்க இயலா. அத்தன்மையதான நிலத்தைத்தான் ஆங்கிலத்தில் "பசித்தநிலம்" (Hungry soil) என்று சொல்லுகிறார்கள். இதைச்சிலவிடங்களில் கரையான்கட்டுமண் எனவழங்குகிறார்கள். மிகவும் தூளாயிருக்கும் நிலமானது நீரை நிலத்தில் வேண்டிய மட்டிலும் கூட இறங்க வொட்டாமல் தவக்கும்படி செய்து கொள்ளுமானல் அப்படிக் கட்டிப்போகக் கூடிய ஜலத்தை வடித்துக் கொள்ள வேண்டும். நீரானது மிகத்தீவிரமாய் இறங்காமலும் அல்லது மிகவும் மெள்ளச் செல்லாமலுமிருக்கும் நிலமே சிறந்த நிலமாகும். இவ்விஷயத்தில் நிலத்தின் குணத்தை விளக்குத்திரியின் குணத்துக்கு ஒப்பிடலாம். ஏனெனில் விளக்கில் எண்ணெய் வார்த்து கொடி அல்லது திரிச்சேர்த்து, விளக்கை ஏற்றினல் ஏற்றினதுமுதல் திரியின் மூலமாய் எண்ணெய் ஒரே அளவாக மெதுவாக ஏறி விளக்கை எரியப்பண்ணும். அதுபோலத்தான் இந்நிலத்தின் தன்மையும்.

நிலமானது விரிந்து சுருங்குதல்.—எல்லாவகை நிலங்களும் நீரினல் நனைந்தால் விரியும்; ஆனல் உஷ்ணத்தால் வரண்டால் சுருங்கும். பொதுவாக நீரினதுதன்மை விரியச்செய்வதே. ஆனல் சில நிலங்கள் நீரினல் சுருங்கும். உதாரணமாக உவர் நிலங்கள் (Sodium carbonate) சோடியம் கார்பநேட் என்னும் உப்புள்ள களர் நிலம். இந்திரியப் பொருள் மிகுதியாயுள்ள நிலங்கள் நனைந்தால் மிகவும் அதிகமாகவிரியும் பரிசோதனை செய்ததில் நூறிற்கு இருபது அதிகமானதைக் குறித்திருக்கிறது. களிமண்ணிலமானது நூற்றிற்கு 18. 3-வீதம் விரிகிறது. மணற்பாங்கான நிலம்மிகவும் சொற்பந்தான் விரியும். களிமண் உலரும்போது 100-க்கு 18-முதல் 20-வீதம் சுருங்குகிறது.

சோடியம் கார்பநேட். கடினமானநிலத்தில் 100-க்கு 0 8-வீதம் (Sodium carbonate) இருந்தாலும் நிலத்தை உழுவது அசாத்தியமாகிவிடுகிறது மேலும் செடிகளின்வேர் மூலங்களும் அழிகின்றன. ஈரப்பசையும் குன்றிவிடும்.

BY A SPECIALIST.

சுகாதாரவிளக்கம்

HYGIENE

வஸ்திரம்

பண்டித நடேசசாஸ்திரியார் எழுதியது

---

115. ஸ்நானம் செய்து முடிந்தபிறகு ஒவ்வொருவரும் வஸ்திரம் தரித்துக்கொள்ளவேண்டும் என்பது அவசியமல்லவா? அவ்வஸ்திரம் எப்படியிருக்கவேண்டும்?

116. வஸ்திரம் அவசியம்.—சில மிருகங்கள் அவ்வவைகள் வசிக்கவேண்டிய விடத்துக்குத் தக்கபடி மேல் மூட்டமாகிய உரோமம் தடிப்பான தோல்கள் இவைகளுடன் கடவுளால் சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றன. உஷ்ண தேசத்திலிருக்கும் பூனையின் அமைப்பிற்கும் சீததேசத்துப் பூனையின் அமைப்பிற்கும் எவ்வளவோ வித்தியாச மிருக்கின்றது. சீத தேசத்துப் பூனைக்கு அதிகரோமம் அடர்த்தியாய் தேகமெங்கும் வளர்ந்து அதற்கு சுகத்தைக் கொடுக்கும். ஒரு தேசத்து மிருகம் மற்றொரு தேசம் போனால் சுகமாய் ஜீவிக்காது. கொஞ்சகாலத்தில் மாண்டுபோம். மனிதன் ஒருவன்தான் தனது புத்தியால் தகுந்த வஸ்திரம், உடுப்பு முதலியவைகளை ஏற்படுத்திக்கொண்டு எத்தேசத்திலும் சுகமாய் வாழலாம்.

117. குளிர்தேசத்தில் வஸ்திரம் அவசியம்.—அதிக உஷ்ணமாகிய நமது நாட்டில் வஸ்திரத்தின் அவசியம் நமக்கு அவ்வளவுஅதிகமாகத் தெரியாது. ஹிமாசலம், நீலகிரி முதலிய சீத தேசத்தில் வஸ்திரமில்லாமல் மனிதன் பிழைத்திருக்க முடியாது. அவனைஉயிருடன் காப்பாற்றி வைப்பதில் வஸ்திரம்முக்கிய காரணமாயிருக்கின்றது. சீதத்துக்குத் தகுந்தபடி நாம் வஸ்திரமணியும் உபாயத்தால் நமது தேகச்சூடும் நமது ரத்தச்சூடும் குன்றாமலிருக்க நாம் வழி தேடிக்கொள்ளுகின்றோம். நமது உடுப்பு இவ்வளவு அழுத்தமாய் இருக்கவேண்டும் என்பது ஒவ்வொருவனுடைய தேக அமைப்பையும் ஒட்டினதாகவிருக்கின்றது. நாற்பது வயதுக்கு மேற்பட்ட பெரியவர்களும் அதிக பலமற்ற சிறியவர்களும் தங்கள் தேகத்தை ஒட்டினாற்போல் எப்பொழுதும் கம்பளித்துணியால் (flannel)தைக்கப்பட்ட ஒரு சட்டை போட்டுக்கொண்டிருப்பது தேகத்துக்கு சௌக்கியம் என்று சொல்லப்படுகின்றது. சிலர் வெகு நயமான தோலுள்ளவர்களா யிருக்கலாம். அவர்களுக்கு கம்பளி உறுத்தலாம். ஆகையால் அவர்கள் அக்கம்பளியின் உட்பக்கத்தில் பட்டுத்துணி சேர்த்து உடுப்பு தைத்து தரிப்பது ஆரோக்கியம். பருத்தி நூலாலும் சணலாலும் ஆகிய உடுப்புகளுக்கும் வஸ்திரங்களுக்கும் மேலானவையாக கம்பளி வஸ்திரங்களை சுகஸந்தர்சன வாதிகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

118. நிறம்.—வெளுப்புநிறம் நாம் உடுக்கும் வஸ்திரத்திலும் தரித்துக்கொள்ளும் உடுப்பிலும் அதிக சௌக்கியம்என்றும், சிவப்பு, மஞ்சள், நீலம், கறுப்பு இவைகள் உதவாத நிறங்கள் என்றும் சொல்லப்படுகின்றது. தேசத்துக்குத்தக்கபடி நாம் உடுப்பு தரிக்கவேண்டும். காலத்துக்குத் தக்கபடியும் அவ்வுடுப்பு இருக்கவேண்டும்,

119. காலத்துக்குத் தக்கஉடுப்பு.-குளிர்காலத்தில் காலைநன்றாகப் போர்த்துக்கொண்டு உட்கார்ந்தாலும் படுத்தாலும் நமது தேகத்திலுண்டாகும் வியாதி சீத உபத்திரவம் நீங்கும். குழந்தைகள் தேகத்தை குளிர்காலத்தில் நன்றாக கம்பளியால் மூடிவைப்பதில் நாம் வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். இவ்வண்ணமே வயது சென்றவர்களும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

120. வஸ்திரத்தின் பிரயோஜனம்.—சீதத்தினின்றும் வெப்பத்தினின்றும் நமது தேகத்தைப் பாதுகாப்பதுடன் வஸ்திரமானது நமது தேகத்திலிருந்து உண்டாகும் வியர்வையை எப்பொழுதும் இழுத்துக்கொண்டே யிருக்கிறபடியால் நாம் நமது தேகத்துக்கு அருகாமையில் தரிக்கும் வஸ்திரத்தையும் உடுப்பையும் அடிக்கடி பரிசுத்தம் செய்து வைத்துக்கொள்ளவேண்டும்: நமது தேகத்தின் அழுக்கு நமது வஸ்திரத்தில் சம்பந்தபடுகின்றபடியால் ஒருவன் உடுத்தவஸ்திரத்தை மற்றொருவன் உடுத்துக் கொள்வது தேக சௌக்கியத் திற்குக்குறைவு. முதல் உடுத்திக் கொண்டவனுக்கு ஏதாவது சொரி சிறங்குகடி முதலிய கருமநோய்களிருந்தால் அவன் வஸ்திரத்தை மற்றொருவன் கட்டிக்கொள்ளும் காரணத்தால் இவனுக்கு அந்நோய் தொத்திக்கொள்ளும்.

121. நோயில் தரித்தஉடுப்பு.—நாமே நாம் தொத்து நோயாகிய சொரி, சிறங்கு கடி அம்மை முதலிய சமயங்களில் தரித்த உடுப்பையும் வஸ்திரத்தையும் அந்நோய்கள் நம்மைவிட்டு அகன்றபின்பு தரிப்பது சுகக்குறைவேயன்றி சுகமல்ல. ஆனால் நமது வஸ்திரங்களை அவ்வித காரணத்தால் நாம் அகற்றுகின்றதில்லை. அகற்றாமலே நமது வஸ்திரங்கள் நமக்கு சுகக்குறைவை உண்டாக்காமலிருக்கும்பொருட்டு நாம் வெந்நீர் காயவிட்டு அவ்வெந்நீர்தளதளவென்று கொதிக்கும்பொழுது அதில் நமது வஸ்திரத்தையும் உடுப்பையும் நன்றாக அமுக்கி அரைமணிநேரம்வைத்து அதன்பிறகு எடுத்து சுத்தம்பண்ணி உபயோகிக்கவேண்டும். இப்படிச் செய்வதால் தொத்துநோய் ஸம்பந்தமான சில கிருமிகள் நமது உடுப்புகளிலும், வஸ்திரங்களிலுமிருக்குமாயின் அவைகள் கொதிக்கும் வெந்நீரில் மாண்டுவிடும்.

122. சீதகாலஉடுப்பு.—சீதத்திலிருந்து நமது தேகத்தைக் காப்பாற்றிக்கொள்ள உரோமத்தாலாகிய துணிகளை உபயோகிக்கவேண்டும்.

123. உஷ்ணகால உடுப்பு.—உஷ்ணத்திலிருந்து நம்மை ரக்ஷிக்க வெண்மையானஉடுப்பே சிலாக்யம். துணியாலாகிய உடுப்புகளைக் காட்டிலும் எக்காலத்திலும் மெல்லிய கம்பளியால் சித்தம் செய்யப்பட்ட உடுப்புசிலாக்யம். வியர்வையை நமது தேகத்திலிருந்து ஆகர்ஷித்துக்கொள்ளவும், சிலவித நாற்றத்தை அவ்வாறே வாங்கிக்கொள்ளவும், ரோமத்தாலாகிய வஸ்திரங்களும் உடுப்புகளும் அதிகசக்தியுள்ளவைகள். பஞ்சு நூலாலாகிய வஸ்திரங்களைவிட இரட்டிப்புசக்தி ரோமத்தாலாகிய வஸ்திரங்களுக்குண்டு.

124. கம்பளி உடுப்பின் விசேஷம்.—விஷஜுரம் அதிகமாக விருக்கும் இடங்களில் பிளானல் உடுப்பு நமது தேகத்தை ஒட்டி போட்டுக்கொள்ளுவதால் அவ்விஷ ஜ்வரத்தை ஒருவாறு நாம் விலக்குகின்றோம். நமது நாட்டில் நாம் கெட்டியான பஞ்சுத் துணியாலாகிய உடுப்புகளை தரிப்பது நலமென்றும் அத்துணிகள் கொஞ்சம் வலைபோல் சிறு இடைவெளியுடன் நெய்யப்பட்டிருந்தால் அவ்வமைப்பு எல்லாவிதத்திலும் சௌக்கியமென்றும் சொல்லப்படுகின்றது.

X அத்தியாயம்

நித்திரை

125. நித்திரை.—நித்திரை என்பது ஒவ்வொரு பிராணியினுடைய உயிருக்கும் உறுதியை யளிக்கும் ஓர் பெரும் ஊட்டம், கால் கை முதலிய உறுப்புகளிலிருக்கும் கீல்களுக்கு பலம் கொடுத்து அவைகள் தத்தம் தொழிலைச் செய்ய வலிமைகொடுப்பது தூக்கம்தான். பகல் முழுவதும் ஒருமனிதன் இவ்வுலகத்தில் உழைத்து எப்பொழுது இரவு வரும் தூங்கி சிரமம் தீர்த்துக்கொள்ளலாம் என்று இரவை எதிர்பார்க்கிறான். நித்திரைமட்டு மில்லாவிடில்மனிதன் மட்டுமல்ல எல்லாப்பிராணிகளும் தவிக்கும். சுவாசம், ஆகாரம், இவைகளைப்போல் நித்திரையும் ஒவ்வொருவனுக்கும் வெகு அவசியம், ஏழையும் பணக்காரனும் ஏகரூபமாக நித்திரையை விரும்புகிறார்கள். நித்திரைக்குக்காலம் இரவு என்றும் வேலைக்குக்காலம் பகல் என்றும் கடவுளால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒவ்வொருவனும் தூங்கவேண்டிய அளவு அவனவன் படும் தேகசிரமத்தைச் சார்ந்திருக்கின்றது. குழந்தைகள் இரவும் பகலும் தூங்கும், இப்படி இரண்டு வருஷம் தூங்கினபிறகு குழந்தைகளுக்குப் பகல் நித்திரை போய்விடும். சாதாரணமாய் ஒவ்வொருவனும் ஒருநாளைக்கு எத்தனை நாழிகை தூங்கவேண்டும் என்பதை விசாரிப்போம்.

126. எத்தனை மணி தூங்கவேண்டும்? - ஒருவன் ஒருநாளைக்குக் குறைந்த பக்ஷம் 5-மணியாவது தூங்கவேண்டும். சிலர் எழுமணி நேரத்துக்குக்குறையாமல் தூங்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அவ்வளவு அவசியமல்ல. கிழவர்களும், ஏதாவது ஓர் விதநோயால் வருந்துகிறவர்களும் நோய்தீர்ந்து உடம்பு தேறுகிறவர்களும் அதிகத் தூக்கம் தூங்கவேண்டும். ஒவ்வொருவனுடைய தொழிலுக்கும் வழக்கத்துக்கும் தக்கபடி அவன் தூங்கும் பிரமாணம் ஏற்பட்டிருக்கின்றது. பருத்த தேகமுள்ளவர்கள் அதிக மாமிசம் புசிக்கிறவர்களாயிருந்தால் 9-அல்லது 10-மணி நித்திரை செய்வார்கள். சுக்குப்போல் ஒடின தேகமுள்ளவர்கள் அதிக [illegible] தூங்கார்கள்.

127. தூக்கம் தப்புவதால் விளையும்நோய்கள்.— தலைநோய், மார்பு படபடவென்று அடித்துக்கொள்ளுதல் இவைபோன்ற இரண்டுநோய்கள் தூக்கக்குறைவால் முதல் நம்மைப்பீடிக்கும். இவ்விகாரங்களை நாம் முதல் முதல் கவனித்து நாம்

அகற்றாமல் போனால் மண்டைக்காய்ச்சல், பைத்தியம், சித்தப்பிரமை இவைபோன்ற நோய்கள் விளையும்.

128. நல்லதூக்கம்.—அதிக தேகசிரமமும் அதிக புத்தி சிரமமுமுள்ளவர்கள் அயர்ந்த தூக்கம் தூங்குவார்கள். ஆகையால் நாம் நமக்குவரும் தூக்கத்தைக்கொண்டு நமது தேகவியாயாமத்தின் ஏற்றத்தாழ்வை ஒருவாறு நிச்சயித்துக்கொள்ளவேண்டும். நல்ல தூக்கத்திற்கு நமது போஜனமும் ஒரு காரணம். நாம் இரவில் தூங்கப்போகும் முன்பாக வயிறுநிரம்ப புசிக்கக்கூடாது. கனத்த வயிற்றுடன் நாம் தூங்கும்பொழுது பயங்கரமானஸ்வப்னங்கள் உண்டாகின்றன. தூங்கச் செல்லும்பொழுது ஒருவித கவலையும்வைத்துக்கொள்ளாமல் சுகமாய்ப்படுத்துக்கொண்டால்நமக்குத்தூக்கம்பிடிக்கும். நாம் தூங்கும் அறையில் காற்றோட்டம் நன்றாக விருக்கவேண்டும். சுகமாகத் தூங்க தலையைக் கொஞ்சம் உயரமானவிடத்தில்வைத்துக்கொள்ள வேண்டும். தலையணையை வைத்துக் கொள்ளுவதால் நாம் இவ்விதசுகத்தை ஒருவாறு அடைகின்றோம். சிலர் அதிகத் தலையணைகளை வைத்துக்கொண்டு தலையை அதிக உயரமாக அமைத்து நித்திரை செய்வார்கள். சிலர் கல்போன்றதலையணைகளை வைத்துக் கொள்ளுவார்கள். இவைகள் தேக சௌக்கியத்திற்கு வெகு குறைவு. கழுத்திலிருக்கும் நரம்புகள் வலிக்கும். சில சமயத்தில் கழுத்தேசுளுக்கிக் கொள்ளும். நமது இடது பக்கத்தில் இருதயமிருக்கின்றதாகையால் இடது விலாபக்கமாகப்படுத்து வெகு நேரம் நாம் தூங்கக்கூடாது. அவ்வாறு நாம் தூங்குவோமேயானால் நமது தேகபாரம் முழுமையும் ஹிருதயத்தின் மேல் தாக்க நமது இரத்த ஓட்டம் கொஞ்சம் அவஸ்தைப்பட்டு நமக்குத் தூக்கத்தில் கனவை உண்டாக்கும். முதுகு எலும்புகளில் அதிக அழுத்தம் விழாதவண்ணம் மிருதுவான பஞ்சுமெத்தைகள் அல்லது கம்பிகளாலாகிய தொய்யும் படுக்கைகள் இவைகளில்தூங்குவது ஆரோக்யம். தூங்கும்பொழுது வடதிசையில் தலைவைத்துக் கொள்ளக்கூடாது. அத்திசையில் காந்த [illegible]தால் சில தேகங்களுக்கு ஒத்துக்கொள்ளாது என்றபடி நாம் தூங்கும் அறையில் விளக்கின் வெளிச்சமிருந்தால் தூக்கம் பிடிக்கமாட்டாதாகையால் வெளிச்சத்தை முற்றிலும் மறைத்தாவது அல்லது வெளிச்சமேயில்லாமலாவது நாம்தூங்கவேண்டும்.

குமார ஸம்பவம்

BIRTH OF KUMARA

பண்டித நடேசசாஸ்திரியார் எழுதியது.

IX அத்தியாயம்

தாமரை மலர்போல் வாசனைவீசும் சுவாசமமைந்த தனது முகத்தில் குளிருக்கு நடுங்கும் உதடு அத்தாமரையின் இதழை ஒத்திருந்த காரணத்தால் தாமரை ஓடையில் நின்று தவம்புரிந்த பார்வதி அவ்வோடை தாமரைமலரின் சோபையை பனிக்காலத்தாலிழந்திருந்த போதிலும் தாமரை மலரோடுகூடிய அழகுடன் விளங்குவதாகவே செய்தாள்.

28. மரத்தினின்று தானாகவே உதிரும் (பர்ணத்தை) சருகைப் புசித்துக்கொண்டு தவம்புரிவது வெகுமேன்மையான தவம் என்று ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றது. அச்சருகை (பர்ணத்தை)க்கூட பார்வதி தனக்கு வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டபடியால் அச்சங்கதியை யறிந்தபெரியவர்கள் * அக்காரணத்தால் பார்வதிக்கு அபர்ணை என்று பெயரிடலானார்கள்.

29. தாமரைத்தண்டைவிட வெகு மெல்லியதான தனது மேனியை இவ்வண்ணமான தவங்களினால் இரவும் பகலும் பார்வதி இளைக்கப்பண்ணிக்கொண்டு மாமுனிவர்கள் தங்களுடைய கடினமான தேகத்துடன் செய்யும் தவத்தையும் தனது தவத்துக்கு வெகு கீழ்ப்பட்டதாகப் பண்ணிவிட்டாள்.

30. இவ்விதமாய் பார்வதி தவம்புரிந்தபொழுது ஒருநாள் ஓர் பிரமசாரி மான்தோல் மேற் போர்த்து பலாசக் கொம்பு கைப்பற்றி கம்பீரமாகப் பேசிக்கொண்டு அந்தணர் காந்தி முகத்தில் விளங்க தலையில் சடைமின்ன பிரமசாரி ஆசிரமமே உருவெடுத்துவந்ததோஎன்று பார்ப்பவர்கள் திகைக்க அப்பார்வதியின் ஆச்சிரமத்துக்கு வந்தான்.

31. அதிதிகளுக்கு பூசைசெய்யக்கடமைப்பட்டிருந்த பார்வதி அவனுக்கு விதிப்படி வெகு மரியாதையாக பூஜைசெய்தாள். ஏனெனில் தங்கள் மனத்தை திடப்படுத்திக்கொண்ட பெரியவர்கள் தங்களைக்காண வருபவர்கள் தங்களைப்போன்றவர்கள்தான் என்றபோதிலும் தங்களை நாடிவருபவர்கள் தங்களைவிட பெரியவர்களென்றெநினைத்து விசேஷ மரியாதைகள் செய்வதேவழக்கம்.

* சருகைக்கூட புசிக்காமல் தவம்புரிந்தவள் என்றபடி

32. சாஸ்திரப்பிரகாரம் தனக்கு நடந்த மரியாதைகளை அப்பிரமசாரி ஏற்றுக்கொண்டு கொஞ்ச நேரம் இளைப்பாறுவதாகக்காட்டி உமையை வெகு மரியாதையுடன் பார்த்து வரம்பைவிட்டு வழுக்காதவனாகிய அவன் பின்வருமாறு பேசலானான்.

33. அம்மணி! உமது தவத்தைச் சரிவர நடத்த உமக்கு தருப்பை பலாசக்குச்சி இவைகளிவ் விடத்தில் எளிதாகக் கிட்டுகின்றனவா? இவ்விடத்து ஜலம் நீங்கள் விதிப்பிரகாரம் ஸ்நானம்செய்ய உமக்கு ஒத்திருக்கின்றதா? உமது சக்திக்குத்தக்கபடி அதிகமாயில்லாமல் வேண்டியமட்டும் நீங்கள் தவத்தை நடத்திவருகின்றீர்களா? அறத்தைச் சரிவரத்தேடிக்கொள்ள சரீரமன்றோ முதல் முதல் சௌக்கியமாகவிருக்கவேண்டும்?

34. நீங்கள் உமது கைகளால் ஜலத்தை எடுத்து அர்க்யமாகக் கொடுக்கும் நீரால் முளைத்த கொடிகள் நன்றாகத் தளிர்விட்டு விளங்குகின்றனவா? அத்தளிர்கள் தாம் வெகுநாளாக செங்குழம்புச்சாயம் காணாமலே தமது இயல்பான சிவப்பு நிறத்துடன் விளங்கும் உங்களுடைய உதட்டுக் காந்திக்கு ஒப்பானவைகளாக வேண்டுமல்லவா?

35. நீங்கள் கொடுக்கும் செல்வத்தால் உமது கையிலிருக்கும் தர்ப்பையைப் பிடித்திழுக்கும் மான்களிடம் உங்களுடைய அன்பு குறைவில்லாமலிருக்கின்றதா? தாமரை இதழ்போன்ற கண்களைப் பெற்றவளே! அம்மான்களன்றோ தங்களுடைய சஞ்சலமான கண்களால் உங்களுடைய கண்களைக்கொள்ளை கொண்டவைகள்போல் காணப்படுகின்றன.

36. பார்வதி! நல்ல உருவம் பாவமான காரியத்தில் ஒருபொழுதும் இறங்காது என்ற உலகச்சொல் அவ்வளவும் உண்மையே. விசாலமான கண்களைப் பெற்றவளே! உமது நல்லொழுக்கம் மாமுனிவர்களுக்கும் உபதேசம் செய்யும் உதாரணமாக விளங்குகின்றதல்லவா.

37. மாசற்ற உங்களுடைய ஒழுக்கத்தால் இமவான் எவ்வளவு பரிசுத்தியை தமது குடும்பத்துடன் அடைந்தாரோ அவ்வளவு பரிசுத்தத்தை ஸப்தரிஷிகள் பலியாக வாரியிறைக்கும் மலர்களால் சிரித்துக்கொண்டு ஆகாய மார்க்கமாய் ஓடிவந்துதம்மேல் விழும் கங்கையின் ஜலத்தாலும் அடையவில்லை.

38. பெருங்கருத்தமைந்தபாவாய்! உம்மைப் பார்த்தபிறகு அறம் பொருள் இன்பம் என்ற இம்மூன்றுக்குள் அறந்தான்உயர்ந்தது என்று எனக்குத்தோன்றிவிட்டது; ஏனெனில் நீங்கள்பொருள்,இன்பம் இவைகளை உம்மிடத்திலிருந்து அகற்றி அறத்தைமட்டும் தழுவிவருகிறீர்களல்லவா?

39. நீங்கள்செய்த மேன்மையான மரியாதையை ஒப்புக்கொண்ட என்னை நீங்கள் ஏதோ அயலான் என்று கருதவேண்டாம். ஏனெனில் வணங்கிய மேனியுடன் விளங்கும் உத்தமியே, நட்பு * என்பது ஏழு பேச்சுகள் மட்டில் பேசும் மாத்திரத்தாலேயே உண்டாகின்றதென்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

40. இவ்வளவு தூரம் பொறுத்துக் கொண்டு என் பேச்சைச் கேட்டு வரும் உத்தமியே, நான் இப்பொழுது நண்பனாய் விட்டபடியாலும் அந்தணன் என்ற காரணத்தால் எனக்கு இதைக் கேட்டறிந்து கொள்ளவேண்டும் என்ற அவா உதித்திருக்கிறபடியாலும், நான் ஏதோ சில சங்கதி தங்களைக் கேட்கவேண்டுமென்றிருக்கின்றேன். அவைகளுக்கு மறுமொழி ரகசியம் என்றிருக்காதபக்ஷத்தில் எனக்குத் தாங்கள் சொல்ல வேண்டுகிறேன்.

41. முதல் பிரமாவாகிய (ஹிரண்ய கருப்பருடைய)வம்சத்தில் நீங்கள் பிறந்திருக்கின்றீர்கள். உங்களுடைய அழகோ இம்மூவுலகங்களுடைய அழகுகளையும் சேர்த்து உண்டுபண்ணப்பட்டது போலிருக்கின்றது. ஐசுவரியம் என்பது இனி நீங்கள் போய் தேடிக்கொள்ளாத வண்ணம் உங்களிடத்திலேயே அமைந்திருக்கிறது. உங்களுடைய பிராயமோ இளம்பிராயம். எல்லா மிவ்வண்ணமிருக்க இவைகளுக்குமேல் எவ்விதப்பயனை நாடி நீங்கள் தவம் புரின்றீர்கள். அதை எனக்குச் சொல்லவேண்டும்.

42. வெகு தைரியமுள்ள மடந்தைகள் தங்களால் தாளமுடியாத அபசாரம் தங்களுக்கு ஸம்பவித்தகாரணத்தால் இவ்வாறாக தவம்புரியப் புகுவார்கள். ஆனால் மெல்லிய இடையாய், ஏற்கனவே விசாரித்திருக்கும்விஷயங்களால் அவ்வண்ணம் உங்கள்விஷயத்தில் ஏதாவது அபசாரம் சம்பவித்திருப்பதாகத் தெரியவேயில்லை.

43. நற்கண்ணாய்! உமது உருவோ ஒருநாளும் சோகத்துக்கு ஏலாதது. தந்தை வீட்டில் உமக்கு என்ன அவமானம் நடந்திருக்கக்கூடும்! வேற்றாள் உமக்கு அவமானத்தை விளைவித்திருப்பான் என்பது ஒருநாளுமில்லை. எவன் பாம்பின் கூரான இரத்தின ஊசிபோன்றபல்லில் தனதுகையை அழுத்துவான்!

44. இவ்விளம்பிராயத்தில் நீங்கள் நகைகளணிவதைவிட்டு கிழத்தனத்துக்கு ஏற்றதாயிருக்கும் மரவுரி உடுத்தீர்கள். சாயங்காலத்தில் ஒளியுடன் பிரகாசிக்கும் சந்திரன் நட்சத்திரங்களிவைகளுடன் சோபிக்கும் இரவு விடியற்காலமாய் மாறுமோ?

45. தவத்தால் நீங்கள் தேவலோகத்தை அடைய விரும்புவதாகவிருந்தால் உங்களுடைய சிரமம் வீண் ஏனெனில் உங்களுடைய தந்தையின் இருப்பிடங்கள் அவ்வளவும் தேவபூமிகள். கணவனவேண்டி

* ஆகையால் நான் உமது நண்பன் என்று அந்த பிரமசாரி எடுத்துக்காட்டியபடி

யிருந்தால் அதற்கு தவம் என்னத்திற்கு? இரத்தினம் தன்னை ஒருவன் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று தானாகப் போய்த் தேடமாட்டாதே. அது தேடப்படுமன்றோ!

(இவ்வாறு பிரமசாரி சொல்லும்பொழுது பார்வதி பெருமூச்சுவிட)

46. தெரிந்தது நீங்கள்விடும் பெருமூச்சால் எனக்கு! ஆனால் என் மனத்திற்கு மட்டும் இன்னும் ஸந்தேகமே யிருக்கின்றது. நீங்கள்போய் பிரார்த்தித்துக் கொள்ளும்படியாக ஒருவனும் இருக்கவேமாட்டான். நீங்கள்பிரார்த்தித்துக்கொண்டும் உங்கள் பிரார்த்தனையை ஒப்புக் கொள்ளாதவன் எப்படியிருக்க முடியும்?

47. அடடா! நீங்கள் கருதும் அவ்விளைஞன் வெகு கடின சித்தமுள்ளவனா யிருக்கவேண்டும். ஏனெனில் வெகுகாலமாய் காதணியாகிய தாமரை வைக்கப்படாமல் சூனியமாக விளங்கும் உங்களுடையகாதுகளின் மேல் முதிர்ந்த நெற்கதிர்கள் போல் விலவிலப்பாகத் தொங்கும் உங்களுடைய சடைகளைப்பார்த்துக்கொண்டும் அவன் மனமிரங்காமலிருக்கின்றானன்றோ.

48. முனிவர்கள் செய்யும் விரதங்களைச் செய்வதால் மிகவும் வாடி நகைகள் பூட்டப்படவேண்டிய விடங்கள் எல்லாம் சூரிய கிரணங்களால் கறுத்து, பகற்காலத்தில் தோன்றிய சந்திர ரேகைபோல் உருமாறியிருக்கும் உங்களைப்பார்த்து எவன் மனது இரங்கவில்லையோ அவனுக்கு கருணையென்பது கொஞ்சமேனுமுண்டா!

49. நீங்கள் கருதியிருக்கும் காதலன்தான் அதிக அழகுள்ளவன் என்ற செருக்கால் மோசம் போயிருக்கவேண்டும் என்று நான் நினைக்கின்றேன். ஆகையாற்றான் அவன் வளைந்த புருவங்கள் பெற்று அழகாய் விளங்கும் உங்கள் கண்களுக்கு முன்பாக வெகு நாளாகத் தனது முகத்தைக் காட்டாமல் மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறான்.

50. பார்வதி, இன்னும் எத்தனைநாள்தான் தவம் புரிந்து உங்களுடையதேகத்தை சிரமப்படுத்திக்கொள்ளுவதாக நீங்கள்கருதியிருக்கின்றீர்கள்? நான்என் முற்பிறப்பில் தேடிக்கொண்டதவம் என்னிடமிருக்கின்றது. அதில்பாதி நான்உங்களுக்குக் கொடுக்கிறேன். அதையும் கைப்பற்றி உங்களுடைய மனோரதத்தை சீக்கிரதில் நீங்கள் நிறைவேற்றிக்கொள்ளுங்கள். நீங்கள் ஆசைகொண்டிருக்கும அந்நாயகன் பெயரைமட்டும் சொல்லுங்கள்.”

51. இவ்வண்ணம் அவ்வந்தணன் பார்வதியின் மனத்திலிருந்தகருத்துக்குட் புகுந்து சொல்லவே பார்வதி தனதுகருத்தைத் தானாகச் சொல்லமுடியாதவளாக விருந்தாள். ஆனால் அவள் தனக்குச் சமீபத்திலிருந்த தோழியை மையைவிட்டு ஒழிந்த தனது கண்களைத்திருப்பிப் பார்த்தாள்.

சிறுவர்க்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

மனதின் ஸாதாரண நிலை.—மனது அடக்குவது மிகக் கஷ்டம். அதை மனக்குரங்கு என்று நன்றாகப் பெயரிட்டு அழைத்தனர். ஓர் குரங்கொன்றிருந்ததாம். அது ஸ்வபாவமாகவே மிகுந்த சஞ்சலத்தோடும் கூடியிருந்தது. இது போதாதென்று அது கள்ளுண்டுவிட்டதாம், பின்பு அதை ஓர் தேளும் கொட்டிவிட்டதாம். இதனால் குரங்கு குதித்துக்கொண்டு ஓடத்தொடங்க அது மிகுந்த கஷ்டத்தை அடைந்தது. இவைகளைப் பூர்த்திசெய்ய அதை ஓர் பிசாசம் பிடித்துக்கொண்டதாம். இக்குரங்கின் சஞ்சலம் இவ்வாறுதான் இருக்கும் என்று நம்மால் வர்ணிக்க முடியாது. இத்தகைய் குரங்கிற்கு ஸமானம் ஸாதாரண மனிதரது மனது என்று ஞானிகள் கூறுவர். குரங்கைப்போலவே நமது மனதும் மிகுந்த சஞ்சலஸ்வபாவமுடையது. அது ஆசை எனும் கள்ளைக்குடித்து அலங்கோல திசையை யடைகின்றது. மற்றவர்களது ஆசை பூர்த்தியாவதைக்கண்டு உண்டாகும் பொறாமை என்ற தேள்கொட்ட மனது அதிகசஞ்சலத்தை அடைகின்றது. இப்படி இருக்கையில் மனம் எண்ணியவாறு காரியங்கள் பூர்த்தியானால் கர்வம் என்ற பேய்பிடிக்க அது முன்னிலும் பதின்மடங்கு அதிக சஞ்சலத்தை அடைகின்றது. இப்பபடிப்பட்ட மனதை அடக்குவது எவ்வாறு என்று கேட்ட அர்ச்சுனனுக்கு பகவான் 'வைராக்யம் (ஒருவனுக்குத் தெரிந்த அல்லது தெரியாத வெளிவஸ்துக்களின் விஷயத்தில் உண்டாகும் துச்ச புத்தி), அப்பியாஸம் (த்யானம் சென்றடையும் பரம்பொருளை, மனம் விட்டுப்போக அடிக்கடி அதை ஊக்கத்தோடு மனத்தின் முன் கொண்டு வந்து நிறுத்தல்) ஆகிய இவ்விருவிதத்தால் அலையும் மனதை நிலையில் நிறுத்தி ஸுகம் பெறலாம்' என்றார்.

* * *

மோனம் என்பது ஞானவரம்பு.—மூன்று ரிஷிகள் ஸ்வர்க்கம் நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். போகும் வழியில் ஓர் பருந்து பாம்பு ஒன்றை தூக்கிப்போவதைக் கண்டார்கள் அப்பொழுது ஒரு ரிஷி 'இதென்ன துக்கம்! இந்தப் பஞ்சையான பாம்பு அநியாயமாக இக்கொடிய பருந்தின் வாயிலகப்பட்டு வருத்துகின்றதே?' என்று சொல்லிப்பரிதவித்தார். உடனே அவர் பூமியைநோக்கி விழுந்துவிட்டார்.

இதைக்கண்ட மற்றொருரிஷி, 'இக்கொடிய பாம்பிற்கு இம் முடிவே தகுந்தது' என்று சொல்ல அவரும்கீழேவிழுந்துவிட்டார். மூன்றாம்ரிஷி, 'பிரபஞ்ச விசித்திரத்தின் நியாயந்யாயங்களை எடுத்துக் கூற நமக்கு என்ன வல்லமை இருக்கிறது? பகவானால் ஸ்ருஷ்டிக்கப்பட்டு அவராலேயே பரவப் பெற்றதாகிய இவ்வுலகில்நடக்கும் விஷயங்களை அநியாயம் என்று கூற நமக்கு அதிகாரமில்லை, நியாயம் என்றுகூறவும் அதிகாரம் இல்லை. "அவனன்றி ஓர் அணுவும் அசையாது," ஆகையால் நடப்பவைகளைக்கண்டு மனங்கோணாது பொறுமையுடன் இருத்தலே நமது கடமை' என்று மௌனமாக இருக்க யாதொரு கஷ்டமும் இன்றி ஸ்வர்க்கம் சென்றடைந்தார்.

* * *

அகங்காரம்.-முன்னொருகாலத்தில் வியாஸ பகவான் குருக்ஷேத்திரம் வழியாகப் போய்க்கொண்டிருந்தார். அவர் காலடிச் சத்தத்தைக்கேட்டு அவர் வரும்வழியில் இருந்த ஓர் புழு பயந்து வெகு வேகமாக நகர்ந்து ஒதுங்கிச் சென்றது. இதைக்கண்ட உடன் அவர் 'நாம் இந்த ஜந்துவை ஒரு பொருட்டாக எண்ணுகிறதில்லை. இது எவ்வளவு சிறிதாக நமக்குத் தோன்றியபோதிலும், இதற்கும் இதன் உயிர்வெல்லமாகவேதான் இருக்கின்றது! என்ன ஆச்சரியம்! பகவத்ஸ்ருஷ்டியின் மஹிமையே மஹிமை!' என்று வியந்துகொண்டு, தமது ஞான திருஷ்டியால் அந்த ஜந்துயார் என்று உற்றுநோக்கினார். அத்தியாச்சரியம்! மஹானாகிய நாரதரே அந்த ஜன்மம் அடைந்திருப்பதைக் கண்டார்! அப்பொழுது அந்தப்புழுவைநோக்கி, 'ஓ நாரதபகவானே! உமக்கு ஏன் இந்தத் தாழ்ந்த ஜன்மம் வந்தது? இந்த நிலையை அடைந்தபின்பு உமக்கு ஏன் இந்த ஜன்மத்தைக் காப்பாற்றவேண்டும் என்ற துர்ஆசை உண்டாகிறது?' என்றுகேட்டார். அதற்கு அந்தப்புழு, 'ஓ வ்யாஸபகவானே! ஓர்பாபம் செய்து நான் இந்த நிலைக்கு வந்து விட்டேன். பகவான் மாயையின்சக்தியைஎன்னென்றுசொல்லுவேன்! இந்த ஜன்மத்திலிருந்தபோதிலும் என்னைப்பற்றி எனக்கு சிறந்த அபிப்பிராயம்தான். என் ஸுகதுக்கங்களே எனக்குப் பெரிதாகிவிட்டன. உம்முடைய திருஷ்டிக்கு நான் மிகத்தாழ்ந்தவஸ்துவாகத் தோற்றியபோதிலும், எனக்கு என்னைப்பற்றி அம்மாதிரியான எண்ணமேகிடையாது. இதனால்தான் என் உயிர் எனக்கு வெல்லமாகஇருக்கின்றது,' என்றது. இம்மாதிரி ஓர்புழு தன்னைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கையில் மனிதராகிய நம்மிடம் அகங்காரம் குடிகொண்டிருப்பது ஆச்சரியமா? அணுமுதல் அண்டங்கள் பரியந்தம் பிரபஞ்சத்தில் உள்ள எல்லா வஸ்துக்களிலும் இந்த அகங்காரம் இருந்துகொண்டுதான் தொழிற்படுகின்றது. இந்த அகங்காரம் தான் பிரபஞ்ச வியாபாரம் எல்லாவற்றிற்கும் காரணம். இந்த அகங்காரம் எவ்வித தந்திரத்திலாகிலும் இந்தப் பிரபஞ்சத்தைவிட்டு நீக்கப்பட்டால், இதன் உண்மை உருவாம்பரம்பொருள் மாத்திரம் தான் தனித்து நிற்கும். இம் மூடமான அகங்காரத்தை அடக்கி அப்பாற்பட்டு நிற்றல் நம்மவருள் அநேகருக்குமுடியாது. ஆதலால்தான் பத்ராகிரியாரும்,

'ஆங்காரமுள் அடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமற் தூங்கிச் சுகம் பெறுவ தெக்காலம்'
என்று புலம்பினார்.

* * *

துக்கஹேது.—ஸம்ஸப்தக யுத்தத்திலிருந்து அர்ச்சுனனும் பகவானும் திரும்பி பதின் மூன்றாம்நாள் ஸாயங்காலம் வருகையில், அர்ச்சுனன் அபிமன்யு இறந்ததைக்கேள்விப்பட்டஉடன் தானும் இறப்பான் என்ற எண்ணம் பகவானுக்குவந்தது. உடனே வரும் வழியில் பகவான் தமது மாயாசக்தியால் அக்னியை வலம் வந்து தீயில் விழும் தருணமாக இருந்த ஒரு பிராமணன் அர்ச்சுனன் முன்தோன்றும்படி செய்தார். அப்பொழுது அர்ச்சுனன் பிராம்மணனிடம் இருந்து அவன் துக்கத்தின் காரணத்தை அறிந்துகொண்டு, 'உன் பிள்ளை இறந்தான் என்பதினால் நீ இவ்வாறு தற்கொலைசெய்து பாபத்தை ஸம்பாதித்துக்கொள்ளலாமா? மனிதனாக இருப்பவன் இவ்வளவு துக்கப்படுவது அழகன்று' என்றுஸமாதானப்படுத்தினான். அதற்கு பிராம்மணன் 'உன் பிள்ளை இறந்தால் உனக்கு வருத்தம் தெரியும். இப்பொழுது என் வருத்தம் எவ்வாறுஉனக்குத் தெரியும்? ஆகையால்என்னை வீணாகத்தடுக்காதே! நான் இறக்கிறேன்' என்றுதீயின் அருகில் சென்றான் அப்பொழுது அர்ச்சுனன் 'என் பிள்ளை இறந்தால் நான் உன்னைப்போல துக்கத்தில் ஆழ்ந்து இறக்கமாட்டேன். நான்புருஷன் உன்னைப்போன்ற பெண்பிள்ளையல்ல' என்று சொல்லவும், பிராம்மணன் திரும்பி 'நீ இப்பொழுது சொல்லுவது உறுதிதானா? அப்படியாகில் சத்யம் செய். அப்படிச் செய்வாயாகில் நான் தீயில் மூழ்குவதில்லை' என்றான். அர்ச்சுனன் உடனே முன் பின் யோஜிக்காது 'என் பிள்ளை இறந்தாலும் நான் கடவுள் ஸாக்ஷியாக உன்னைப்போல துக்கத்திற்கு ஆளாகமாட்டேன்' என்று வாக்குக் கொடுத்தான். உடனே பிராம்மணன் அக்கினிமுதலியன மறைந்தன, அர்ச்சுனன் ஸத்யம்மாத்திரம் தான் நின்றது. பகவான் அர்ச்சுனனை மிகுந்த ஆச்சரியத்தோடு ஏற இறங்கப் பார்த்தார். அர்ச்சுனன் ஒன்றும் அறியாதவனாகத் தன் படைவீடு வந்தான். உடனே அபிமன்யு இறந்ததைக்கேட்டு அக்கினியை வளர்த்து துக்கத்தால் அதில்விழ யத்தனம் செய்கையில், பகவான் அவன் எதிர்வந்து 'பிராம்மணனுக்கு ஒரு நியாயம் உனக்கு ஒரு நியாயமோ! இதென்னபேத புத்தியப்பா இது!' என்று அர்ச்சுனன் வழியில் செய்த சபதத்தை ஞாபகப்படுத்தினார். அவனுக்கு சோகம் அதிகமாக இருந்தபோதிலும் நமது வாக்குக்கு விரோதமாகநடக்க முயன்றோமே என்ற வெட்கத்தால் அவன் தனது துக்கத்தை மனதில் அடக்கி தீயில் மூழ்காதிருக்கவேண்டிவந்தது. இதனால் மமகாரமே துக்கத்திற்குக் காரணம் என்பது விளங்கும்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ஸீதை அல்லது தர்மத்தின் ஸ்வபாவம்

"சின்னன் சிறிடர்தீராதாய்
இன்னுயிர் தவி னெல்லோரும்
என்னுள் காணுதநன் றன்றே
உன்னுல் நல்லற முண்டானுல்."

கம்பராமாயணம்.

உலகிற்கு ஒவ்வொருவரும் ஒரு அவஸர நிமித்த மாகத்தான் வந்திருக்கின்றனர். வீண்காலம் போக்க யாரும் பிறக்கவில்லை. உலக ஸ்வபாவத்தை உயர்த்தவேண்டும் என்றது தான் இந்த அவஸரத்தின் ஸ்வபாவம். இந்த ஸ்வபாவத்திற்காக எல்லாரும் பாடுபடவேண்டியது ஆவச்யகம். நான் எளியன் என்று சொல்பவன் உயிருடையவன் அல்ல என்னிடத்து வலிமை உள்ளது. அவ்வலிமையை எல்லார்மனதிலும் பிரவேசிக்கச் செய்யவும் என்னிடத்து வலிமையுள்ளது. இவ்வலிமை, மனோதிடம் இவற்றைக் கொண்டு அன்பாகிய கடலின் ஆனந்தத்தைக்கடைந்து ஜனஸமூகத்தை உயர்த்தும் அமிருதத்தை அளிக்கும் வலிமை என்னிடமுள்ளது. அது பிறர்க்கு காண முடியாவிடினும் என் மனத்தில் லயித்துள்ளது. தர்மத்திற்காக என் ஆத்மாவை நிவேதனஞ் செய்வதுதான் எனது ஸ்வபாவமாகும். பலருடைய நன்மைக்காக நான் கஷ்டமடைவதுதான் நான் தர்மத்தை நிலைநாட்டப்பார்ப்பது. நான் ஆணுயிலென்ன? அன்றி பெண்ணுயிலென்ன? அதுவன்றி அலியா யிருப்பினுந்தான் என்ன? தர்மாவேசம் தலைஏறிவிட்டால் அதன் வழிபடாமலிருக்க முடியுமோ? வழிபட்டு ஆனந்தமடையாமல்தான் இருக்கமுடியுமோ?

1. காடுசேர்ந்த கதை

ஜநகமஹாராஜன் யாகஞ் செய்வதற்காக அளவிட உழுதான்? அதிலென்ன ஆஸ்சரியம்! பூமியினாவுண்டஇடத்தில் ஓர் பெண்குழந்தை துவா துவா வென்று அழுதது. அது தான் ஸீதை. பூமியைக்காப்பாற்ற வந்தவளிவள். பூமியினிடத்திலேயே உண்டானவள். அதனிடத்திலே அடையவந்தவள். அழகுங் குணமுங்கலந்து விளங்கி அவளது நடையையும் மொழியையும் சிறப்பிக்கச் செய்தன. வயதும் நிறைந்து பசுந்தளிர்ப் பார்ப்பவர் கண்ணைப் பறிப்பதுபோல, கண்டவரிவளிடத் தயரும்படிச் செய்தது. பலநாள் காலங்கடந்தும் மணமாகவில்லை, ஓர் பாரவில்லை வளைத்தொடித்தவனல்லவா இவளை வரிக்கலாம். அவ்வில்லும் சிவபிரானுடைய தனுஸு. அதையும் அயோத்தி நகர்க்கு அரசன் தசரதன் மகனொடித்து முறித்தான்.

மணஞ்செய்துக்கொள்வது சிற்றின்பத்திற்காகவல்ல. உலகத்தையுயர்த்த தான்கொண்டநிலைமையின் முதல் வழியது. தன்னலமானது தன்னைப்பற்றி மாத்திரமன்றி தன் கணவனைப்பற்றியுங் கவலைகொள்ள ஊட்டும் ஸாதனமது, பின் ஸந்ததிகளால் தன்னுசையானது கொஞ்சங் கொஞ்சமாக குறைந்து குழைந்தைகளிடத்தும் கணவனிடத்தும், இவர்களின் மூலமாக தன்குலத்திற்காக பங்கிடப்பட்டு, கடைசியாக ஜனஸமுகத்தில் கலந்து விடுகிறது. விடவே, அந்த ஜனஸமூகத்தை உயர்த்தப் பிரவேசித்த உடன் தன்னுசை ஒழிந்து, அவ்வாசை அன்பாகி எல்லாரிடத்தும் பிரவஹிக்கும். இது தான் மணத்தின் கௌரவமான பெரியசெயல். இச்செயலை எண்ணித்தான் "ராமா! உனக்கென் குழந்தை ஸீதையை அளிக்கிறேன். உன் ஸுகதுக்கங்களுக்கும், உலகஸுகதுக்கங்களுக்கும், பங்காளியாக இருக்க இவளைக்கொள்" என்று சொல்லி ஸீதையை ராமருக்கு பாணிக்ரஹணம் செய்யஅளித்தனர் ஜனகர். இராமரும் "அப்படியே அவன் அருள் புரிவானுக!" என்றார். மணமாகி அயோத்தி நகரடைந்தனர் ஸீதை இராமர் தசரதர் முதலாகியோரெல்லாரும்.

ஸுகம்போல் கஷ்டம் வருவது ஸகஜம்தான். அவ்விதகஷ்டங்களை ஸுகமாகவே பாவித்து நாம் நடப்பது நமதுமனோநிலைமையை உயர்த்தும். மனம் மாறிவிட்டால்பின் நமக்கு ஸுகம்துக்கம் இரண்டும் இருப்பதாக படவேமாட்டாது. நமக்கு கஷ்டத்தை உண்டாக்குபவரிடத்தில் அன்புகொண்டு அவரே நமது நிலைமையை உயர்த்தவந்தவர்களாக எண்ணி அவன் ஒருவன்மேல் முழுமனத்தையும் செலுத்தி வாழ்வது தான் நமது வாழ்க்கை. அவ்வாழ்க்கையில் வாழ விரும்புவர், கஷ்டமுண்டாகும்,

ஸுகம் கிடைக்காது, என்றெண்ணவே கூடாது. கஷ்டமில்லாமல் ஸுகமெப்படி கிடைக்கும்? உலகத்தை உயர்த்தவேண்டுமென்ற பேராவலைக்கொண்டு, கஷ்டப்பட முடியாதென்று சொல்வதில் என்ன ப்ரயோஜனம்? அதனுல்தான் தெரிந்த பெரியோர் எல்லாம் தன்னையே தர்மயாகத்திற்கு ஆஹுதியாக அளிக்கவேண்டும் என்றார்கள். இதை மனத்திற்கொண்டுதான் பெரியோரெல்லாம் நடக்கவேண்டியது.

தசரதர் தன் மகன் ஸ்ரீராமனுக்கு முடிசூட்டப் பிரயத்தினஞ் செய்தார். மந்திரிகளோடு ஆராய்ச்சி செய்தனர். தசரதற்கு நான்கு குமாரர்கள். முதல் மனைவியிடத்து இராமனும் இரண்டாம்மனைவியிடத்தில் லக்ஷ்மணனும் சத்ருக்நனும் மூன்றுமனைவியிடத்து பரதன் என்னு மகனுந்தான் அவர்கள். பரதன் தாய் கேகயநாட்டரசன் மகள். அவளுக்கு கைகேயீ என்று பெயர். இவள் ராமபட்டாபிஷேகமாகப் போகிறதென்று கேள்விப்பட்டாள். ஜனங்களெல்லாம் ஆவலோடு விரும்புகிறார்கள் என்றும் அவளுக்குத் தெரிந்தது. மந்திரிகளும் அவலம்பித்த விஷயமென்று மவளறிந்தாள். தனக்கும் ப்ரியமான விஷயமென்றும் பேராவல் கொண்டாள். மகிழ்ச்சியிலாழ்ந்திருந்தனள்.

நன்மையில் ஆனந்தப்படுவது ஸகஜம் அது நன்மையின் ஸ்வபாவமுமாகிறது. இதைத் தடுத்தானந்தமடைவது கீழ்மையின்ஸ்பாவம் அதை கீழ்மையுண்டாகும்படிசெய்து விடினும் அவர்க்கே நன்மையுண்டாகச் செய்வது அன்பின் வழி. அதற்கு பகை என்பதுங்கிடையாது: பகைவனுக்கு அன்பையளித்து அவனிடற்றன்பு செழிக்கும்படிச் செய்வதே அன்பின் ஸ்வபாவம் ஆகிறது.

கைகேயிடத்தில் ஒருவேலைக்காரியுண்டு. மந்தரை, அவள் ஒரு கூனி. அவளுடல்போலவே மனமும் அழகற்றது. அவள் இராமருக்கு பட்டாபிஷேகம் நடக்கப் போகிறதென்பதைக் கேள்வியுற்றாள். அம்மா! உன்குழந்தை இருக்க இராமனுக்கு பட்டாபிஷேகம் நடப்பதை நீர் பார்ப்பது தகுதியா? உன்மகனுக்கு அரசுவேண்டாமோ? நீ என்ன சொல்லியபோதிலும் நான் கேட்கமாட்டேன். முன்பே உமக்கு உமது கணவர் இரண்டு வரங்கள் கொடுக்கிறதாக வாக்களித்திருக்கின்றனர். ஒன்று பரதனுக்கு பட்டாபிஷேகம் வேண்டும்; மற்றொன்று இராமன் காட்டிற்கு போகவேண்டும்; என்று கேள். இராமனிங்கிருக்கக்கூடாது" என்று மாயாவிமந்தரைசொல்ல மயங்கி "ஓம்" என்றுவிட்டாள் கைகேயி.

சில ஸமயங்களில் நாம் எங்கு நமக்கு ஸுகம் உண்டாகும் என்று மனத்தில் உறுதியோடு இருப்போமோ அவ்விடத்தில் அநேக ஸங்கடங்களுண்டாக இடமுண்டாகும். நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைத்தல் ஸகஜமே. ஆயினுமானந்த மடையவேண்டுமென்று சென்று துன்பம் அடைவது மனத்திற்கு மிக்க துன்பமளிக்கும். பெரியோர் இவைகளை பொறுக்கமாட்டார். அவர் உயிர்கூட இழந்துவிடுவர். அதேவிதமே கைகேயீ தசரதர்க்கு தன் விருப்பத்தைக் கூறினாள். வாக்குத்தவறாதவர் என்ன செய்வார். மூர்ச்சையாய் விழுந்தார். விழுந்தவர் விழுந்தரே! இராமனும் தன் தகப்பனைத் தேடவந்தான். "அடா இராமா! நீ காட்டிற்கு சென்று பதினன்கு வருஷமிருந்து வா, என் பரதன் தான் நாட்டிற்கரசன். இது உமது தகப்பனார் மொழி. அப்படியே செய்வாயாகவென்றாள்." "ஆகட்டும்" என்று உடனே புறப்பட்டுவிட்டார்.

மனைவி ஸஹதர்மிணி. கணவன் செய்யும்வேலையில் உதவிசெய்வதுதான் அவள் தர்மம். அந்த தர்மத்தில் ஸரியாக ஒழுகுவதினால்தான் அவள் உலகத்திற்கு பயோகமாவது. ஆத்மநிவேதனம் புரிய அதுதான் முதல்வழி. நாட்டிலிருக்கும் ஸுகத்தையும் காட்டிலிருக்குந் துக்கத்தையும் கணிசியாது கணவனோடே இருந்து அவனுக்குதவியாக வேண்டுவது தான் அவள் ஒழுக்கத்தின்வழி. இவ்வழி உலக அபிவிருத்திக்கு முதல்படியாகிறது. அவள் ஸந்ததியில் அக்குணமே நிறைந்தோங்கு மாகையால்.

காட்டிற்கு புறப்பட்டுவிட்டார் இராமர். ஸீதையைக்கண்டார் "நீ இங்கையே இரு. நான் சிலநாள்களில் வந்துவிடுவேன். பதினன்குவருஷம் சீக்கிரம் கழிந்துவிடும். ஸரியாக இரு" என்றவளிடம் சொல்ல "உம்மை விட்டிருக்க எனக்கு நியாயம்கிடையாது. காட்டிற்கு நானும் வருவேன்" என்றாள் ஸீதை. காட்டையடைந்து கங்கையைக் கடந்து சித்ரகூட பர்வதத்திலிருவரும்இளவலாகிய இலக்ஷ்மணனுமிருக்கின்றனர். பரதனங்குவந்து இராமர்காலில் விழுந்து தன் தாய்செய்த வஞ்சனையைப் பொறுக்கும்படி வேண்டிக்கொண்டான். தன்தமையன் பாதுகையைத் தலைமேல்தாங்கிக்கொண்டுபோய் மகுடாபிஷேகஞ் செய்வித்து அயோத்தியில் வாழ்ந்தான்.

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

பருத்திக்கோட்டை எண்ணெய்

கல்கத்தாவிலிருக்கும் அமெரிகன் கான்ஸல் ஜெனரலாகிய மைகேலவர்கள் (W. H. Michael) சிறிது நாள் முன்பு எழுதிய பிரசுரத்தில் இந்தியாவில் பருத்திக்கொட்டையிலிருந்து சாப்பிடக்கூடிய கொழுப்பு உற்பத்தியைப்பற்றிச் சிறிது விவரித்தெழுதியிருக்கிறார். சென்ற இரண்டு வருஷங்களுக்குள்ளாக நெய்யின் விலை இரண்டேகால் பங்குக்கதிகமாய் ஏறி இருக்கிறது. இதனால் இதற்குமுன் வாங்கிக்கொண்டிருந்த ஏழை ஜனங்கள் இப்பொழுது வாங்கக்கூடாமல் போய்விட்டது. சென்றவருஷம் 600-லக்ஷம் ரூபாய் விலையுள்ள நெய் உற்பத்தியாக்கப்பட்டது. ஆகையால் இந்தியர்களுக்கு வேண்டிய பசுவின் பாலிலிருந்து எடுக்கப்பட்ட நெய்யோ அல்லது அதைப்போலிருக்கப்பட்ட நெய்யோ இது உண்டு பண்ண என்ன செய்கிறது? மிருகங்களின் கொழுப்பிலிருந்து உற்பத்தியாக்கப்பட்ட நெய்யைப் பற்றி யோஜிப்பதில் பிரயோஜனமில்லை. ஆகையால் பருத்திக்கொட்டையிலிருந்து உண்டாக்கப்பட்ட நெய் நல்ல உபயோகமாயிருக்கும். இந்தியாவிலேயே நெய் வெகு அதிகமாய் உண்டாக்கப்படுகிறது. விலையதிகமான 2-வருஷத்திற்குமுன் வெண்ணெயின் விலையைவிட கால் பங்கு அதிகத்திற்கு நெய் விற்கப்பட்டு வந்தது. இந்தியாவில் சிலவிடங்களில் வெண்ணெய் உபயோகப்படுத்தப்படுகிறது. ஆனால் ஹிந்துக்களுக்கு அதுவும் தென்னிந்தியாவில் வெண்ணையைவிட நெய்தான் பிரதானம். நெய் உண்டாக்க வெண்ணையை நன்றாய் பொங்கவைத்து அதிலிருந்து நீர்பண்டங்கள் ஆவியாய் போகும்படியாய் காய்ச்சப்படுகிறது. காய்ச்சப்பட்ட வெண்ணையை நீராயிருக்கும்பொழுது வெகு சுத்தமாயிருக்கும் அப்பொழுது அதை ஒரு பாத்திரத்தில் ஊற்றிவைத்து குளிரவைக்கப்படுகிறது. குளிர்ந்தவுடன் அது உறைந்து மணல்மணலாயிருக்கும். நன்றாய் காய்ச்சப்பட்டால் அது ஒருவித கெட்டவாசனையுமில்லாமல் வெகுகாலமிருக்கும். நெய் நூற்றாண்டுகளுக்கு கெட்டுப்போகாமல் காக்கப்படுகிறது. 1876-7-வருஷத்திற்கு முன் 500-டன் நெய் ஆசியா கண்டத்தில் கீழ்பாகத்திற்கும் தென்பாகத்திற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. 1879-80-வருஷத்தில் 1,236, 433-ராத்தல் ஏற்றுமதி செய்யப்பட்டது. 1907-08-வருஷம் இந்தியாவில் மாத்திரம் 406, 555-ராத்தல் நெய் இறக்குமதி செய்யப்பட்டது. 4,222,507-ராத்தல் இதர ஸ்தலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. விலை யதிகமாயிருக்கிறதைப் பார்த்தால் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவுக்குறைவாய்த்தான் அகப்படுகிறதென்று தெரியவருகிறது. பருத்திக்கொட்டையிலிருந்து நெய் உற்பத்தியாக்க பம்பாயிலுள்ள இந்திய முதலாளிகள் முயற்சியெடுக்கிறதாக தெரியவருகிறது. அவர்கள் இவ்விதம் உற்பத்தியாக்க எவ்வித யந்திரம் உயர்ந்து எவ்விதமாய் உற்பத்தியாக்கலாம் என்று யோஜித்துக்கொண்டிருக்கிறார்கள். இதில் கை தேர்ந்த ஒரு நிபுணனை இச்சாலைத்தலைவராய் நியமிக்கப்போகிறார்கள். இதனால் ஐக்கிய நாடுகளில், பருத்திகொட்டையிலிருந்து உண்டாக்கப்படும் வெண்ணை இந்தியாவில் நல்ல வியாபாரமாகுமென்று தெரியவருகிறது.

ஓர் புதிய நூல்

ஆஸ்ட்ரேலியா தேசத்தில் ஸமுத்திரக்கரை யோரத்தில் ஓர்வித புல் ஏராளமாய் உற்பத்தியாகிறதாம். இப்புல்லிலிருந்து உண்டாகும் நூல், பருத்தி நூலைவிட நேர்த்தியானதாயும், அதற்கு பதிலாய் கம்பளி நூலில் கலந்து நெய்வதற்கு ரொம்ப உபயோகமானதென்றும் சொல்லுகிறார்கள். சிறிதுநாள் முன்கம்பளியில் பருத்தி நூலைக்கலந்து நெய்பவர்களில் சிலர் ஒருசாலையில் வந்து பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது அச்சாலைத்தலைவர் இப்புல்லிலிருந்து எடுக்கப்பட்ட நூலுடன் கம்பளிநூலைக்கலந்து நெய்யப்பட்ட கம்பிளித் துணியைக் காட்டும்பொழுது அது வெகு நேர்த்தியாயிருந்ததாம் இப்பொழுது 2,140,000டன் நூல் கொடுக்கக்கூடிய புல் ஓர் இடத்தில் இருக்கிறதாம். இது கடையில் சுமார் ரூ 35-க்கு விற்கப்படும். இந்நூல் ராத்தல்ஒன்றுக்கு 3-அணாவாகவும் டன் ஒன்றுக்கு ரூ 420-இருக்குமாம். ஆனால் ராத்தல் 1-அணாவுக்கு விற்றாலும் ஏராளமான லாபம்கிடைக்கக்கூடியதாம்

குண்டூசி செய்தல்

முதலாளிகள் கவனித்து தங்கள் பணத்தை செலவழிக்கும் வழிகளில் குண்டூசி செய்தல் முக்கியமானது. கம்பிகள் தனியாய் வாங்கினால் இதற்கு பெரியதாயும், கடினமாயுமுள்ள யந்திரங்கள் வேண்டியதில்லை.

பெருங் கம்பிகள் கடைகளில், மாதிரிக்கும் எண்ணிக்கைகளுக்கும் தகுந்தபடி டன் ரூ 320முதல் ரூ 540 வரையில் வாங்கலாம். பருமனுக்குத் தகுந்தபடி ஒருகிலோ ($2\frac{1}{5}$-ராத்தல்) விலிருந்து 8000 முதல் 10,000 ஊசிகள் செய்யலாம், கொஞ்சங்கூட சேதமிராது. இவ்வேலைக்கு கோர்க்கும் யந்திரம் 2 இவ்விதத்தில் வேலைசெய்பவர்கள் 6, நல்லகம்பிகள் வேண்டும். 1 மனிதன் 150 முதல் 160 ஊசிகள்வரைக்கும் செய்யலாம். ஆறு மனிதர்களும் 2 யந்திரங்களும் ஒரு நாளுக்கு 5,40,000 ஊசிகள் செய்யலாம். யந்திரங்கள் கடிதங்களில் வரிசை வரிசையாக வரிசைக்கு 20, 30, 40 ஊசிகள் கோர்த்துவைக்கும். 6 குதிரை பலமுள்ள இஞ்சின் (Engine) வேண்டிய ராட்டணங்கள், பலகைகள் முதலானதுகள்தான் இக்கைத்தொழிலுக்கு வேண்டியவை. குண்டூசி செய்வதற்கு சிலவாகும் பணம் சற்றேறக்குறைய ரூ. 10,000 தான்.

ஐக்கியமாகாணங்களில் சர்க்கரை உற்பத்தி

கான்பகதூர் S.M. ஹாடி அவர்கள் அல்லகாபாத்தில் 1907ம் வருஷத்தில் நடந்த இண்டஸ்ட்ரியல் கான்பரன்ஸில் சர்க்கரை உற்பத்தியைப் பிழைப்பிப்பதைப் பற்றி வாசித்த உபன்னியாஸத்திற்குப் பிறகு சர்க்கரை உற்பத்தி செய்யும்பொருட்டு சில யந்திரங்களும் ரஸாயனபதார்த்தங்களும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இது உத்தமமானவழி. சர்க்கரையை சுத்திசெய்பவர்களுக்கு இது ஒரு தூண்டுதலாயிருக்கிறது. ஆனால் அதிக சிலவில்லாமல் சர்க்கரையுண்டுபண்ண வேணுமானால் கரும்பிலிருந்துதான் எடுக்கவேணும். கருப்பஞ்சாலையில் எப்பொழுதும் வேலையிருக்கவேணுமானால் கரும்புதோட்டங்கள் ஏராளமாயிருக்கவேண்டும். இவ்விதமான சாலையொன்று இத்தேசத்தில் ஏற்படுத்த சிலதனவான்கள் முயற்சியெடுத்திருக்கிறார்கள். வெகு நேர்த்தியான சர்க்கரை இச்சாலையில் (12மணி நேரம் வேலைசெய்யும்) நாள் ஒன்றுக்கு 3முதல் 4டன் வரைக்கும் உற்பத்தியாக்கப்படுமாம். மிருகங்களிலிருந்து எடுக்கப்படும் கரிகளும் மற்றக் கெடுதலானசாமான்களும் உபயோகப் படுத்தப்போகிறதில்லை. ஆகையால் இச்சர்க்கரை வெகு நேர்த்தியாயிருக்கும்.

அனகபள்ளி பென்ஸில் சாலை

சென்றமாதம் அனகபள்ளி பென்ஸில் சாலைமுதல் முதல் பரீக்ஷைக்காக வேலை ஆரம்பிக்கப்பட்டது. அநேகம்பேர் கூடியிருந்தார்கள். யந்திரத்திலிருந்து வேகமாய் ஓடிவருகிற எழுதும் ஈயதுண்டுகளைப்பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். ஜெபானிலிருக்கும் நாகடானி பென்ஸில் சாலையிலிருந்த ஷீ அவர்கள் இச்சாலைத் தலைவராய் நியமிக்கப்பட்டு அவர் அவ்விடம் வந்திருந்தார்.

நிலம் உழுதல்—ஓர் புதுமாதிரி

இந்தியாவில் பயிர் வளரவேண்டுமானால் அதற்குத் தகுந்தபடி மழைவேண்டும். மழை இல்லாமல் போனால் வேறு எவ்விதத்திலாவது தண்ணீர் பாய்ச்சவேணும். கால்வாய்களோ அல்லது கிணறுகளோ இல்லாமல்போனால் பயிர் நஷ்டந்தான். இதனால் கருப்புண்டாகும் அநேக ஜனங்கள் மிருகங்கள் இறந்துவிடுவார்கள். கொஞ்சம் மழையைக்கொண்டு எப்படி பயிர் விருத்திசெய்கிறதென்பது இந்தியாவிலுள்ள பயிரிடுவோர்கள் கவனிக்கவேண்டியதுதான். இதற்கு ஐக்கிய நாடுகளைப் பார்த்தால் தெரியும். இவ்வித உழவுக்கு 3-வழிகளுண்டு. பிரத்தியேகமான பயிர்; தண்ணீர் பாய்ச்சுதல் அல்லது கிணறுகளிலிருந்து இறைத்தல்; புதுமாதிரியாய் உழுதல். மூன்றாவது சொன்னது இந்தியாவுக்கு நூதனமானது. வெகுஆழமாய் உழுது மேல்பூமியை பயிரிடும் நாட்களிலும் அதற்குமுன்னும் செவ்வையாய் உழவேண்டும். ஏனென்றால் கொஞ்சம் மழை பெய்தாலும் பனிபெய்தாலும் அதன் ஈரமானது பூமி பாதையில்லாமலிருந்தால் நிலத்திற்குள் சென்று இந்த ஈரம் உலராதபடி நல்ல புழுதியுண்டாகும். உழும்பொழுதுண்டாகும் சிறு கால்வாய்கள் காற்றோட்டத்துக்கு குறுக்காயிருக்கவேண்டும் ஆனால் இந்தியாவிலும் இந்தியாவிலுள்ள பேதமையான பயிரிடுவோர்களாலும் இது செய்யவேண்டுமானால் பிரத்தியேகமான யந்திரமும், நீராவிக் கலப்பைகளும் விதைகளை ஓரிடத்தில் விதைக்கும் யந்திரமும்வேண்டும் வருஷத்தில் 15-அங்குலத்துக்குக் குறைந்தமழையுடன் 12-அங்குல ஆழத்துக்கு உழுது 35-புஷல் கோதுமையும் 50-புஷல் நெல்லும் நல்லலாபம்கிடைக்கத்தக்க பழங்களும் எடுத்ததாக அமெரிக்காவிலுள்ள பயிரிடுவோர்களில் ஒருவன் சொல்லுகிறான். ஆகையால்தான் நிலத்துக்கு விலையதிகமாய்விட்டது. 3-வருஷத்துக்கு முன் 2-டாலருக்கு வாங்குவோரில்லாமலிருந்த நிலம் தற்காலத்தில் 25 டாலருக்கு கிடைப்பதறிதாயிருக்கிறது இவ்வகை உழுதல் ஏழை பயிரிடுவோர்களால் முடியுமென்பது ஸந்தேகம் மிக தனிகர்களான ஜமீன்தார் முதலானவர்கள் இதை பரீக்ஷித்துப்பார்த்து தங்கள் நிலங்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரலாம்

அறிவிப்பு

இச்சஞ்சிகையின் முகப்படம் (Title page) தயார் செய்யுங்காலத்தில் மப்பும் மந்தாரமுமாய் சூரிய வெளிச்சம் மட்டாயிருந்ததால் படம் எடுக்கமுடியாமல் தவக்கப்பட்டது. அதனால் சஞ்சிகை வெளிவரத் தாமதமாயிற்று. தயவுசெய்து மன்னிக்கும்படி சந்தாதார்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

NOTICE

We regret the delay in the publication of this issue and we beg to state that such delays will not occur in future.

Publishers.

இதரத்தமிழ் புத்தகங்கள்

அனந்தமடம்: தேசபக்தி புகட்டும் ஓர் அருமையான நாவல்—இந்த நாவலும் ஸ்ரீ பங்கிம் சந்திரசட்டர்ஜி பங்காளி பாஷையில் எழுதியதை ஸ்ரீ மஹேசகுமாரசர்மா அவர்கள் மொழிபெயர்த்தது. ... 0 8 0

போஜசரித்திரம்—2-ம் பதிப்பு. மனதை கவறக்கூடிய 16-ஆப்டோன் படங்கள் சேர்த்திருக்கிறது. ம-ா-ா-ஸ்ரீ ஹைகோர்ட்டு வக்கீல் T. S. நாராயண சாஸ்திரியார் இயற்றியது—ரொம்பவும் நன்றாய் அச்சிடப்பட்டிருக்கிறது. 1 8 0

மதிகெட்ட மனைவி ...	1	0	0
தீனதயாளு ...	0	12	0
ஸ்ரீ மாமிகொலுவிருக்கை ...	0	8	0
தலையணை மந்திரோபதேசம் 3-ம் பதிப்பு	0	8	0
வேணீ ஸம்ஹாரம் ...	0	3	0
மிருச்சகடி ...	0	4	0
முத்திரா ராக்ஷஸம் ...	0	4	0

ம-ா-ா-ஸ்ரீ, ஹைகோர்ட் வக்கீல் பி. சம்பந்த முதலியார் இயற்றியவை.

லீலாவதி ஸுலோசனை	0	12	0
இரண்டு நண்பர்கள்	0	12	0
மனோஹரன்	0	12	0
கள்வர் தலைவன்	0	8	0
சாரங்கதரன்	0	8	0
சத்ருஜித்	0	12	0
யயாதி	0	8	0
வேதாள உலோகம்	0	8	0
அமலாதித்யன்	1	0	0
காதலர் கண்கள்	0	12	0

வாஸந்திகா ஒரு தமிழ்நாடகம் ...	0	8	0
வெனிஸ்வர்த்தகன்	1	0	0
கற்புகரசி	0	8	0
குணமாலிகை அல்லது கற்பின் வன்மை	0	6	0
கனகவல்லி	1	0	0
கமலினிகலஹம்ஸம்	0	8	0
எலேன்	0	6	0
வசீகரி	1	0	0
ஞானரஞ்சனி	0	8	0
ஸுஜாதா	0	8	0
லலிதாங்கி	0	8	0
வனஸுதா	0	8	0
லலிதா	0	10	0
தமயந்தி	0	9	0
ஞானம்பாள்	0	6	0
மங்களாம்பாள்	0	8	0
கோமளம் காஞ்சியாத்திரை	0	8	0
சுகுணங்கதன்	0	12	0
பாவலர் விருந்து (முதல் நாள்) ...	0	8	0
வில்லிபுத்தூரார்; பிள்ளை பெருமாள் சரித்திரச் சுருக்கம்	0	8	0
மதிவாணன்	0	8	0
வால்மீகருமாயணம் கிளைக்கதைகள் ...	0	8	0
ஸ்ரீமான். ஜி. சுப்பிரமணிய அயயர் அவர்கள் ஜீவிய சரிதம்	0	8	0
ஸ்ரீபாலகங்காதரர் ஜீவிய சரிதம் ...	0	3	0
அந்தப்புர ரகஸியம்	1	0	0
கவிரத்தினசிந்தாமணி என்னும் காளிதாசன்சரித்திரம்	1	0	0
மோகனங்கி	1	4	0
குடும்ப ஸம்ரக்ஷணி	2	0	0
மன்மதகாந்தன் கதை	0	8	0
இந்து யாகசாஸ்திரம்	2	0	0
மகாமகம் அதின் மகிமை	0	4	0
ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியின் ஜீவிய சரிதம்	2	0	0
கந்தபுராணச் சுருக்கம் வசனம் ...	0	12	0

ரம்யனும் ஜோலிதையும் ஆங்கிலேய கவி ஷேக்ஸ்பியர் இயற்றிய ரோமியோ அண்டு ஜூலியட் நாடகத்தின் தமிழ் அமைப்பு (ஓர் புதிய நாடகம்) 0 8 0

“மானிட மர்ம சாஸ்திரம்” அரிய பெரிய காரியங்க ளொவ்வொன்றையும் விளக்கிக்காட்டும் சித்திரப்படங்கள் 200 அடங்கியது. விலை ரூ. 5. தபாற்சிலவு பிரத்தியேகம் சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு 8 ஷி.

1908-வருத்து 1-வது ஆக்ட்

பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னபட்டணம் 1908-வருத்து ஆக்ட் (தமிழ்)

டெம்மி, 8-பேஜ்சைவில் திடமானகிளேஸ் காகிதத்தில், தமிழிலும் இங்கிலீஷிலும் அச்சிடப்பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் காப்பி 1-க்கு விலை அணா 0 8 0.
தமிழ்க் காப்பி 1-க்கு விலை அணா 6.
தபால்சார்ஜு பிரத்தியேகம்.

இந்தப் புஸ்தகம் பூஸ்திதிகளையுடைய ஒவ்வொருவரிடத்திலும் அவசிய மிருக்கவேண்டியது.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி
மைலாபூர், மதருஸ்.

மஹாபாரதம்
சாந்திபர்வம்

கும்பகோணம்
பிரம்மஸ்ரீ பாரத சாமாசாரியாரவர்களால்
எளிய தமிழ்நடையில் மொழி பெயர்க்கப்பட்டு, பிழையறப் பரிசோதித்து நல்ல காகிதத்தில் பெரிய எழுத்தில் அச்சிட்டு காலிகோவில் நன்றாய் பயிண்டு செய்திருக்கிறது. இப்பொழுது தயாராயிருக்கும்

1-ம் பாகம் ... ... ரூ. 2 0 0
அச்சிலிருக்கிற 2-ம் பாகம் ... 2 0 0
இப்பொழுதே இரண்டாம் பாகத்துக்தும் சேர்த்து முன்பணம் அனுப்புகிறவர்களுக்கு 3 0 0

ஸ்ரீமத் வால்மீகிராமாயண வசனம்

பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,
தகுந்த தமிழ் வித்வான்களால் பார்வையிடப்பட்டு, பிழையறப் பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட்டது.

ஸ்திரீகளும் சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்து கொள்ளும்படியாகத் தெளிவான எளியநடையில் வசனரூபமாய் இவ்வால்மீகிராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது, இப்பதிப்பு இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் பிழையறப் பரிசோதித்து, செவ்வையாய் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

தயாராயிருக்கும் காண்டங்கள்

பாலகாண்டம்	ரூபாய்.	1	12	0
அயோத்தியாகாண்டம் ...	,,	3	0	0
ஆரணியகாண்டம்	,,	1	12	0
கிஷ்கிந்தாகாண்டம்... ...	,,	1	12	0

மற்றய காண்டங்கள் இப்பொழுது விரைவாய் அச்சிடப்பட்டு வருகின்றன. சீக்கிரம் வெளிவரும்.

இதரத் தமிழ்ப்புத்தகங்கள்

நன்றய்ப் பார்வையிட்டு நல்ல காகிதத்தில் தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு.

மூவர் தேவாரம்-பண்முறை—1044 பக்கம் 3 0 0

இப்பதிப்பில் (1) சம்மந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவாரவரலாறும், (3) தேவாரப்பண் அட்டவணையும், (4) தேவாரப்பாடல்பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவார ஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக் குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப்பொதுப் பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச்செய்த மூத்த திருப்பதிகமும் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

நாலாயிர தீவ்யப்ரபந்தம்.—640 பக்கம் 3 0 0

இப்பதிப்பில் (1) ஆழ்வார்களின் காலவைபவக் குறிப்பும், (2) ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களின் அட்டவணையும், (4) அந்த தேசங்களின் வைபவக்குறிப்பும், (5) பாசுரங்களின் முதலடி அகராதியும், (6) பாடபேதக் குறிப்புகளும் சேர்த்து பலபிரதிகளுடன் ஒத்திட்டுப்பார்த்து, நன்றாய் அச்சிடப் பெற்றுளது.

மனுதர்மசாஸ்திரம் 2647 கிரந்த சுலோகங்களும் அவைகளின் தமிழ் மொழி பெயர்ப்பும்—560 பக்கம்	2	4	0
ஸ்திரீ புருஷசாமுத்ரிகாலட்சணம் ...	1	0	0

வேதாந்த விஷயமான புஸ்தகங்கள்

வாசுதேவ மனனம்	1	0	0
சிவபோகசாரம் & சிவஞான விளக்கம்	0	2	0
சுகர் கைவல்லியம்	0	2	0
வைராக்கிய சதகம்	0	2	0
ஜன்மாந்திரம் (அல்லது இராமதாசர் உபவள்ளலார் சாஸ்திரம்)	1	8	0
மகாராஜா துறவு	0	6	0
தாயுமானவர் பாடல்	0	12	0
வேதாந்தபோதினி	0	8	0

யசோதரகாவ்யம்.—இது தமிழில் சிறந்த ஐந்து காவியங்களில் முதலாவது. ஜயினமுனிவர் பாடியது. ம-ா-ா-ஸ்ரீ, பண்டித வெங்கிடாமய்யங்கார் அவர்கள் இயற்றியது. ... விலை அணா 8.

பீமலா.—அல்லது திவான்மகள். (ஆக்பர் சக்கரவர்த்தி காலத்தில் நடந்த ஓர் சரிதை. ம-ா-ா-ஸ்ரீ R.P. குலந்தசாமி, B.A.,L.T., அவர்களால் இயற்றப்பட்டது. ... ... விலை அணா 6.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி
மைலாபூர், மதராஸ்.



"விவேக போதினி"

ஓர் அருமையான மாதாந்திரத் தமிழ்ப்பத்திரிகை

இப்பத்திரிகையில் பிரசுரமாகும் விஷயங்களாவன

1. ஜாதிமதாசார ஸம்பந்தமானவை.
2. உலக ஒழுக்கங்கள்.
3. கல்வியபிவிருத்திக்குரிய பாஷா விஷயங்கள்.
4. வ்யவஸாயம், கைத்தொழில், வியாபாரம்.
5. தக்கவர்களைக்கொண்டு எழுதப்பட்டுவரும் நாவல்களும் நாடகங்களும்.
6. சிறுவர்க்கான நன்னெறிக் கதைகள்.
7. ஸ்திரீகளுக்கேற்ற நற்போதங்கள்.
8. சாஸ்திரீகமான விசேஷ வர்த்தமானங்கள்.

நமது பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோர், மிகவும் பிரஸித்திபெற்றவர்களும், உலக அனுபவமுள்ளவர்களும் மிகவும் இனிய செந்தமிழ்நடையில், சிறுவர்கள் சிறுமிகள்கூட படிக்கக்கூடியவண்ணம் எழுதப்படுகிறது.

"விவேகபோதினி" பிரதிமாதம் 25௨ ஒழுங்காகப் பிரசுரமாகும்.

சந்தாவின் விபரம்

தபால்கூலியுள்பட வருஷசந்தா

இந்தியா, பர்மா, ஸிலோன் ...	3	0	0
பினாங்கு, சிங்கப்பூர், நேட்டால் வகையரா இடங்களுக்கு ...	4	8	0
தனிப்பிரதி	0	5	0

மற்றை விவரம் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
"விவேக போதினி,"
மைலாப்பூர், சென்னை.

விவசாயபோதினி

அவசியம் குடித்தனக்காரர் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய ஓர் அருமையான புத்தகம். அநேக சித்திரப்படங்களுடன் கூடியது.—

இப்புத்தகத்தில் நிலங்கள் சம்பந்தமான விஷயங்களும், கருவிகள் எருக்கள் சம்பந்தமான சாஸ்திர நுட்பங்களும், சகலவித நன்செய், புன்செய் தோட்டக்கால் பயிர்களின் சாகுபடிகளும் விவசாய சீர்திருத்தத்திற்கு வேண்டிய முக்கிய சாதனங்களும் காட்டப்பட்டிருக்கின்றன.

கனம் மாஜிஹைகோர்ட் ஜட்ஜ் சுப்பிரமணிய அய்யர், திவான் பஹதூர் ரெகுநாதராவ், கனம் P. S. சிவஸ்வாமி அய்யர், விவசாய காலேஜ் உதவி தலைமை உபாத்தியாயர், சைதாபேட்டை கவர்ன்மெண்டு பண்ணை மானேஜர், சுதேசமித்திரன் பத்திராதிபர் கனம் ஜி. சுப்பிரமணிய அய்யர் முதலிய பெரியோர்களும், விவசாய சாஸ்திர வல்லோர்களும் நற்சாக்ஷிப்பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆங்கிலேய, சுதேசப்பத்திரிகைகளாலும் நன்கு மதிக்கப்பட்டிருக்கிறது.

போர்ட்பயிண்டு செய்தது ரூ.	1	4	0
காலிகோ ,,	2	0	0
பருத்திப்பயிர் சாகுபடி	0	4	0

"ROYAL BRAND" RED MARKING INK

உடுப்புகளுக்குக் குறிபோடும் சிகப்பு மை

இந்த மையைக்கொண்டு உடுப்புகளுக்கும், வஸ்திரங்களுக்கும் ஒருதடவை குறிபோட்டுவிட்டால், எப்போதும் மாறவேமாறாது. இதன் பிரயோஜனத்தைக் குறித்து நாம் ஜாஸ்தியாய் எழுதவேண்டுவது அனாவசியம்.

டஜன் 1-க்கு...	1	4	0

வியாபாரிகளுக்கும், ஒரே தடவையில் ஜாஸ்தியாய் வாங்குவோர்க்கும் விலை பிரத்தியேகம்.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி,
மைலாப்பூர்,
... ... மதராஸ்.

MADR

விவேக போதினி

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்" —

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி 2 } ஸௌம்ய௵ ஆவணி௴ 1909-௵ ஆகஸ்டு௴ { பகுதி 2

நம்பிக்கை
FAITH

இவ்வுலகில் எவ்விஷயத்திலும் நம்பிக்கையில்லாத மனிதனே கிடையாது. இவ்வுலக வாழ்க்கையால் ஏதோ ஒரு பிரயோஜனம் தனக்கு உண்டாகும் என்றே ஒவ்வொருவனும் எண்ணுகிறான் ஆதலால் தான் எவ்வளவு கஷ்டங்கள் இவ்வாழ்க்கையில் ஒருவனுக்கு வந்தபோதிலும் அவன் அவைகளைப் பொறுத்துக்கொண்டு உயிர்தரிக்க எண்ணுகிறான். ஒரு மனிதனது ஏற்றத்தாழ்வை அவனது நம்பிக்கையினால் எளிதில் அறியலாம். 'கொண்டதே கோலம் கண்டதே காட்சி' 'விஷயபோகமே மோக்ஷம்' என்ற நம்பிக்கையை உடையவனாக ஒருவன் இருப்பின் அவன் இவ்வுலகத்திய இன்பதுன்பங்களால் மொத்துண்டு மேல் போகும்வழியறியாது தத்தளிக்கும் பாபியாவான். 'விஷயம் விஷமேயாம்' 'சிற்றின்பங்களைவிட கோடிமடங்கு மேலானதான பேரின்பம் ஒன்றிருக்கின்றது' என்ற நம்பிக்கையுடையவன் ஒருவன் உலகில் சிக்கிக்கொள்ளாது. வரும் கஷ்டங்களைத் தாங்கும் திறனுடையவனாக உலகில் ஸஞ்சரித்துவரும் புண்யாத்மாவாவான். 'உன் தோழர் இன்னாரெனக்கூறு, நீயார் என்று கூறுவன்' என்று சொல்லுவதுபோல 'உன் நம்பிக்கை இன்னது எனக்கூறு நீ இத்தகையன் எனக் கூறுவன்' என்று நாம் தைரியமாகக் கூறலாம்.

இந்நம்பிக்கை அநேகவிதமாக உலகில் காணப்படுகின்றது. நெபோலியன் என்ற அஸஹாய சூரனான பிரான்ஸ் சக்கிரவர்த்தி 'அஸாத்யம்' என்ற பதமே பாஷையில் அனாவசியம், ஏனெனில் தீரனுக்கு அஸாத்யமான காரியமே கிடையாது' என்றானும். ஜூலியஸ் ஸீஸர் என்ற ரோம சக்கிரவர்த்தி போய்க்கொண்டிருந்த ஓர் கப்பல் பெரும்புயலில் அகப்பட்டுக்கொள்ள அதில் இருந்தோர் எல்லோரும் மிகவும் பயந்து நடுங்கிவிட்டனராம். அப்பொழுது அவர் கப்பற்காரரை நோக்கி 'பயப்படாதேயுங்கள். கப்பலில் யார் இருக்கிறது என்று எண்ணினீர்கள்! நான் இருக்கும்பொழுது உங்களுக்கு என்ன ஆபத்துவரும்' என்று தேற்றினாராம். இந்த நம்பிக்கைகள் கேவலம் ராஜஸகுண ஸம்பந்தமானவை. இவைகளுக்கு கர்வம் அல்லது அகங்காரம் என்று பெயர். இது முற்றினால் இதை உடையவனுக்குக் கேடேவிளையும். இதுபோன்ற அபாயமான ஸமயத்தில் பகவத்பக்தர்கள் 'இவை ஈசுவரன் செயல்' என்று சொல்லி தாம் ஏதோசெய்த பகவத் அபராதத்திற்காக அக்கஷ்டம் வந்ததுஎன்று எண்ணி வருந்துவார்கள். இதில் ஸத்வகுணம் முன்னதைவிட அதிகமாக இருப்பினும், இதைவிட சிறந்ததான நம்பிக்கை ஒன்றுண்டு. முன்காலத்தில் க்ரீஸ் தேசாதிபதியான அலக்ஸாண்டர் நம் பரதகண்டம் வந்து ஓர் மஹானைக்கண்டு அவருடன் வார்த்தையாடி அவரது புத்திநுட்பத்தைக்கண்டு மகிழ்ந்து தனது ஊருக்கு வரும்படி அவரை அழைத்தான். அவர் மாட்டேன் என்று சொல்லிவிட எவ்வளவோ அவன் நயந்து பார்த்தான். ஒன்றும் முடியாமல்போக 'நீர் வாராவிடில் உம்மைக்கொல்வேன்!' என்று சொன்னான். மனங்கோணாது மஹான் நகைத்து 'உன்னைப்போல என்னுடன் பொய் சொன்னவர்களே கிடையாது. என்னை எவராலும் எதனாலும் கொல்லவேமுடியாது. பிரபஞ்சத்தில் என்னைத்தவிர உண்மைவஸ்து வேறு கிடையாது' என்று கூறி மௌனமானார். இம்மாதிரி ஸதா ஸர்வகாலமும் 'யானே எங்குமாம் பிரம்மம் என்பால் கவருடைப் புவனமெல்லாம் கற்பிதம் என்று அறிந்து' தைரியமாக இருப்பதே ஸாத்விக நம்பிக்கையின் முக்கிய லக்ஷணம்.

விவேக போதினி

தொகுதி 2] ஸௌம்ய௵ ஆவணி௴ [பகுதி 2

வேதாத்யயனம்

VEDIC RECITATION

ஒவ்வொரு த்விஜனும் தன்தன் குடும்பத்திற்குச் சிறப்பென ஏற்பட்ட வேதத்தையாவது அவசியம் அத்தியயனம் செய்யவேண்டும். இதுவே த்விஜத்துவம் நிலைப்பதற்குக் குறைந்தபக்ஷம் ஒவ்வொருவனிடத்திலும் அவசியம் இருக்கவேண்டும். இன்னும் மேலான பதவியை ஒரு த்விஜன் அடைய விரும்பினால் வேதங்களில் சிலவற்றையாவது எல்லாவற்றையுமாவது அத்தியயனம் செய்யவேண்டும். த்விஜர்கள் அல்லாதவர்களுக்கு வேதாத்யயனம் செய்ய அதிகாரம் கிடையாது. கர்மகாண்ட பாகங்களில் சிற்சில மந்திரங்களைப் பெண்கள் கண்டறிந்தவர்களா யிருந்தபோதிலும் ஸ்திரீகளுக்கு வேதங்களை நேரே அத்தியயனம் செய்யலாமென்ற அதிகாரம் இல்லை. உபநிஷத்துகளிலும் பெண்கள் பிரம்மவிசாரம் செய்தார்களென்பது ஆங்காங்கு காணப்படுகின்றது. புராணாதிகளிலும் அருந்ததியைப்போன்ற பிரம்மசாரிணிகள் வேதார்த்தங்களை நன்றாக அறிந்திருந்தனர் என்று கூறப்படுகிறது. வேதங்களை அத்தியயனம் செய்வதற்கு அத்விஜர்களுக்கு அதிகாரம் இல்லாவிட்டாலும் நமது மதநூல்களில் ஆங்காங்கு ஸூதபுராணிகரைப்போன்ற அத்விஜர்கள், த்விஜர்களுக்கும் ஆசாரியராய் இருந்தாரென்று நாம் தெரிந்துகொள்ளுகிறோம். ஆனால் இவ்வாறு காணப்படும் அத்விஜர்களாவது ஸ்திரீகளாவது வேதங்களைத் தாங்கள் நேரே அத்தியயனம் செய்ததாகச் சொல்லிக்கொள்ளவில்லை. வேதரகஸியங்களை வேறுவழியால் ஐயந்திரிபறத் தெரிந்துகொண்டு த்விஜர்கள் அடைந்திருந்த மேலான நிலையை இவர்களும் அடைந்திருந்தார்கள் என்று தெரியவருகிறது. வர்ணாச்சிரம விதிகளின்படி இவர்களுக்கு இவ்வதிகாரம் இல்லாமல் செய்துவிட்டார்களென்று எவ்வளவுதான் நம்முன்னோர்களை மேனாட்டவர்கள் குற்றங்கூறியபோதிலும், முன்காலத்திலிருந்த ஸ்திரீகளும், அத்விஜர்களும் இவ்விஷயத்தில் மனோவியாகூலப்பட்டுக்கொண்டிருந்தார்களென்று தெரியவில்லை. இவ்வாறு சிற்சில ஜனங்களே வேதாத்யயனஞ் செய்வதற்குத் தகுந்தவர்கள் மற்றையவர்களுக்குச் செய்ய அதிகாரமில்லை என்ற ஏற்பாட்டின் நோக்கம், வேதவாக்கியங்களின் அக்ஷர அமைப்புக்களும் ஸ்வரங்களும் மாறுபடாதிருந்து அத்தியயனம் செய்கிறவனுக்கும் அத்தியயனம் செய்துவைக்கிறவனுக்கும் நன்மைவிளைக்கவேண்டுமென்பதே, என்ற உண்மையை, நமது ஸ்திரீகளும் அத்விஜர்களும் நன்கு உணர்ந்திருந்தனர். அக்ஷர அமைப்பின் பிரயோஜனம் முன்னமே விஸ்தரிக்கப்பட்டது. இதனால்தான் ஒருதிறத்தாரிடம் வேதாத்தியயன அதிகாரம் இருந்தது. இவ்வாறு அத்தியயனம் செய்யும் த்விஜனுக்கு வியவஹாரங்களில் கடுமையான விதிநிஷேதங்கள் பல ஏற்பட்டிருந்தன ஆகையால் வேதாத்தியயனம் செய்வது எளிதல்ல. முன் குறிப்பிக்கப்பட்ட விதிநிஷேதங்களுக்கு ஒரு த்விஜன் விரோதமாய் நடப்பானேயானால் அவனுக்குக் கொடிய தண்டனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. வேதவாக்கியங்களை நேரே அத்தியயனம் செய்தலைத்தவிர வேறு எந்தவிஷயத்திலும் த்விஜனுக்கும் அத்விஜனுக்கும் மதவிஷயங்களில் பேதமேகிடையாது. வேதாத்தியயனத்தால் விளைகிற நன்மை தீமைகளை நன்கு விசாரித்து உணர்ந்து, இக்காலத்தவர்கள் குதர்க்கம் செய்வதுபோலச், செய்யாது அத்விஜர்கள் இவ்வொழுங்கின்படியே நடந்துவந்தனர். த்விஜர்கள் கஷ்டப்பட்டு அடையும் முடிவை அத்விஜர்களும் எளிதில் அடையும்படி நமது முன்னோர்கள் அநேகமார்க்க விசித்திரங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இவ்விஷயங்களை

வர்ணாச்சிரம தர்மங்களைப்பற்றிச் சொல்லும் இடத்தில் நன்கு விவரிப்போம்.

உபநயனம் ஆனவுடன் ஒவ்வொரு த்விஜனும் வேதாத்தியயனம் செய்யத் தொடங்கவேண்டும். எந்த த்விஜன் தனது குடும்பத்திற்குச் சிறப்பாய் ஏற்பட்ட வேதத்தைக்கூட அத்தியாயனம் செய்யாதிருக்கிறானோ அவன் பிரஷ்டனாகிறான். வேதங்கள் நமது பிராணசிநேகிதர்கள் என்று சாஸ்திரங்கள் கூறும். இதனால் வேதங்களுக்கு ஆப்தவாக்கியம் என்ற ஒரு பேரும் உண்டு. வேதங்களை அத்தியயனம் செய்யாது விட்டவன் ஒருவன் ‘தனக்கு ஆப்தான ஸ்நேகிதர்களை நிராகரித்தவனுக்கு ஒப்பாவான்.’ அப்படிப்பட்டவனுக்குத் தர்ம ரகஸ்யங்கள் எளிதில் விளங்கா. அவன் காதில்படும் சிறந்த விஷயங்களின் உண்மைப்பொருள் அவனுக்கு விளங்கவே மாட்டாது. ஸர்வஸாக்ஷியாய் விளங்கும் பரிசுத்தான கடவுளைப்பற்றிச் சொல்லுகின்ற வேதங்களை அத்தியயனம் செய்யாது எவனது நாவானது ஊர் வம்பையும் அதனால் விளையும் ‘பொய்குறளை வன்சொல் பயனிலாச்சொல்’ ஆகிய இந்நான்கையும் உடைத்தாயிருக்கிறதோ அதனை நா என்று சொல்ல இடமேயில்லை. என்றும், ‘அதிக வீண்வார்த்தையை மனிதன் பேசவேண்டாம், ஏனெனில் அதனால் வீண்சிரமம்தான் விளையும்’ என்றும் சுருதிகள் கூறும். ‘வேதங்களை ஓதாது எவன் ஒருவன் மற்றை விஷயங்களில் தனது சக்தியை உபயோகப்படுத்துகிறானோ அவன் உயிரோடிருக்கும்பொழுதே தனது ஜாதியிலிருந்து பிரஷ்டனாகிறான்’ என்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. மேலே சொன்னபடி வேதங்களை அத்தியயனம் செய்வதால் வெகு பிரயோஜனங்கள் உண்டு. முதலில் சிராத்தாதிகர்மங்களை நடத்துவதற்கு வேதவாக்கியங்களை எளிதில் எடுத்துக்கூறும் திறமை ஒருவனுக்கு உண்டாகும். வேதபாகங்களை ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டு வேதரகஸியங்களையும் அறிந்துகொள்ளலாம். வேதங்களை முதல் நூலாகக்கொண்டு வெளிவந்திருக்கும் சாஸ்திரங்களைப்படித்து உள்ளபடி அவைகளின் பொருளைக் கண்டுபிடிப்பதற்கும் மிக்க உதவியாகும். அன்றியும் வேதங்களுக்கு அர்த்தம் தெரியாவிட்டாலும் ஸரியான ஸ்வரத்தோடு மாத்திரம் சொன்னால், அது அத்தியயனம் செய்பவன் மனதைச் சுத்தப்படுத்தி, அவனை மேன்மேலும் மோக்ஷமார்க்கத்தில் எளிதிற் செல்லும்படி செய்யும். இதுவுமல்லாமல் வேதங்களை ஒருவன் அர்த்தம் தெரியாது அத்தியயனம் செய்துவருவானேயானால் பாஷா கம்பீரத்தை நோக்க, அதில் சிறந்த அர்த்தம் அடங்கியிருக்கவேண்டும், என்ற எண்ணம் அவன் மனதில் உண்டாகும். அதனால் அவனுக்குக் கூடியசீக்கிரத்தில் மூடத்தனமாய்த்தான்சொல்லிவரும் வாக்கியங்களது உண்மைப்பொருளை உணரவேண்டும் என்ற எண்ணம் வரும். இந்த இச்சை உண்டானகாலத்து அதுவும் ஸித்திக்கும். வேதங்களை அத்தியயனம்செய்த ஒருவன் கூடியசீக்கிரத்தில் ஒரு நல்ல ஆசாரியரை அடுத்து முதலில் வேதாங்கங்களைக்கற்று, அதன் பின்பு வேதபாஷ்யங்கள் மூலமாகத்தான் மூடத்தனமாகச் சொல்லிவரும் வேதவாக்கியங்களின் பொருள்களை அறிய முயலவேண்டும். இவ்வாறுசெய்யாது வேதத்தைக் கிளிப்பிள்ளைப்போலத் தவறாது சொல்லும் திறமைமாத்திரமுடைய ஒருவன் கர்ப்பூரமூட்டைசுமக்கும் கழுதைக்கு ஒப்பாவான். அவனுக்கு வீண்கஷ்டம் மாத்திரமே ஒழிய அதனால் ஸுகம் ஒன்றும் உண்டாகாது. முன்காலத்திலும், இப்பொழுதிருப்பவர்களைப் போல், சில பிராம்மணர்கள் வேத வாக்கியங்களின் உண்மைப் பொருளை அறியமுடியாது கேவலம் வேதவாக்கியங்களை மாத்திரம் உருவேற்றிவந்தனர். அவ்வாறு வேதாத்தியயனம் செய்வது மனதிற்கு வீண்பாரம்தான் என்றும், அவ்வாறு வேதாத்தியயனம் செய்வதைவிடச் செய்யாமலே இருக்கலாம் என்றும் சாஸ்திரங்கள் அபிப்பிராயப்படுகின்றன.

இவ்விஷயத்தைப் பற்றிச்சாஸ்திரங்கள் பின்வருமாறு கூறுகின்றன. “வேதவாக்கியங்க

ளைப் பொருள் உணராது உருவேற்றும் அறிவிலி பாரம் தாங்கும் தூணே ஒழிய வேறில்லை. வேதங்களின் பொருளை உணர்ந்தவன் ஸகல நன்மைகளையும் அடைவான். அந்த ஞானத்தால் அவன் தனது பாபங்கள் தீரப்பெற்று மேலான பதவியை அடைகிறான். பொருளுணராது வேதங்களை அத்தியயனம் மாத்திரம்செய்தல் சாம்பல்மேற்செய்த ஆகுதிக்கு ஒப்பாகும். இந்தச்செயல் ஒருநாளும் பிரகாசிக்கமாட்டாது.” வேதங்களைத் தக்கபடி அத்தியயனம்செய்த ஒரு பிராமணனை, சாஸ்திரங்கள் பின் வருமாறுபுகழ்கின்றன. “வேதரஹஸ்யத்தை உணர்ந்த பிராமணனிடம் ஸகல தேவர்களும் குடிகொண்டிருப்பார்கள். ஆகையால் அப்படிப்பட்ட பிராம்மணர்களைக் கடுமையான வார்த்தைகளால் வருத்தாது எல்லோரும் மரியாதை செய்யவேண்டும். இதனால் ஸகல தேவதைகளையும் நாம் திருப்திப்படுத்தலாம்.” இந்த வாக்கியத்தைப் பின் வருமாறு ஸாயணாசாரியர் விவரிக்கின்றார். “நெருப்பில்லாவிடத்தில் எவ்வளவு விறகை அடுக்கியபோதிலும் அவற்றால் சிறிதும் பிரகாசம்உண்டாகமாட்டா. அவ்வாறே குருவினிடமிருந்து பொருளுணராது ஒருவன் கிரஹிக்கும் வேதவாக்கியமும் சோபிக்கமாட்டாது. ஆகையால் அவ்வாறு கிரஹிக்கப்பட்ட வாக்கியத்தை உண்மையில் வேதவாக்கியம் என்றே சொல்லுவது தகுதியல்ல. மனிதனுக்கு எதை அடைந்தால் தனது ஆசைகள் யாவும்தீர்ந்து ஸுகம்வருமோ அதை அடைவதற்கு வேண்டிய மார்க்கங்களை அறிவித்தலால் இவைகளுக்கு வேதங்கள் என்று பெயர் வந்தது. பிரத்தியக்ஷம் அநுமானம் முதலியவைகளால் அறியமுடியாத ரஹஸ்யங்களை அறிவித்தலால் வேதம் என்றபெயர் இவைகளுக்கு உண்டாயிற்று. ஆகையால் வேதவாக்கியங்களுக்கு இப்பெயர் ஸித்திக்கவேண்டுமானால் அவைகளின் பொருளை அறிய வேண்டியது அவசியம்.”

வேதங்களிலே இந்தப்பொருளே அடங்கிய வாக்கியம் ஒன்றுண்டு; இதை வேதஞானத்திற் சிறந்த யஸ்கர் என்ற வித்துவான் தமது நூலில் எடுத்தாண்டிருக்கிறார். வேதஸம்பந்தயானபதினான்குசாஸ்திரங்களையும்கற்றுணர்ந்த ஒருவனை வேதங்கள் பின்வருமாறு புகழ்ந்து கூறுகின்றன. “அவன் வேதம் என்னும் அமிர்தத்தைப்பானம்செய்தவன். வாக்குவல்லமை நிறைந்தவர்களது ஸபையில் அவன் சிறந்தவன் எனமதிக்கப்படுவான். வேதவாக்யத்தை மாத்திரம்பொருளுணராது உருவேற்றும் மனிதன் புஷ்பம், பழம் இவைகள் அற்றவேதத்தைச் சுமப்பவனாவான்.” ஸாயணாசாரியர் இதைப் பின்வருமாறு விவரிக்கிறார். “வேதத்தின் புஷ்பமாவது முன் விவரித்துச்சொல்லப்படும் கர்மகாண்டபாகங்களே. அவைகளின்பழமாவது பின்பாகங்களாகிய ஞானகாண்டத்தில் விளக்கப்படும் பிர்ம்மஞானமே. பிரபஞ்சத்தில் எவ்வாறு செடிகளில் முதலில் புஷ்பம் உண்டாகிப் பின்பு அதிலிருந்து பழம் உண்டாகிறதோ அதுபோல் வேதமோதல் முதலிய கர்மானுஷ்டானங்களைச் சிரத்தையாகச் செய்வதால் சித்தசுத்தி உண்டாக அதன் மூலமாகப் பிரம்மஞானமாகிய பழத்தையும் அடையவேண்டும் என்ற ஆவல் ஒருவனுக்கு உண்டாகும். வேதத்தைக் கிளிப்பிள்ளைபோலக் குருட்டுத்தனமாகக் கதறுபவன், பசுவில்லாதவிடத்தில் ஒருபசு இருக்கிறது என்றெண்ணித் தடுமாறுபவன் போல் ஆகிறான். கன்றுபோட்டுப் பால்கறக்கும் பசுவிற்கே தேனு என்ற பெயர்தகும் (தேனு—ஸுகத்தைக் கொடுப்பது). பொருள் உணராது உருவேற்றும் ஒருவனுக்கு வேதங்கள் பாலாகிய கர்மவிவேகம், பிர்ம்மஞானம் ஆகிய இவைகளை முறையே கொடுக்கமாட்டா. பசுவென்று தடுமாறும் ஒருவன் கண்கட்டு வித்தையிற் காணும் தோற்றத்தைப்போன்ற ஒன்றைக் காணுகிறானே ஒழிய வேறில்லை. இம்மாதிரியான மயக்கத்தோடு உருவேற்றும் பிராம்மணர்களுக்கு மனிதன் அடையவேண்டியதாகிய பரமபதம் ஒருபொழுதும் ஸித்திக்கமாட்டாது.

“ரிப்பன்” தர்மபரர் அல்லது இந்தியர்க்குறவோன்

RIPON “THE RIGHTEOUS”

முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப்படும் ——திருக்குறள்

ஜனங்களுடைய ஸுகதுக்கங்களை தீரவிசாரித்து அவர்களுடைய கஷ்டத்தைப் போக்க வேண்டுமென்ற மனவுறுதியும்; கீழ்மையான வழியிற்செல்லாத பாவப்போக்கும்; பக்ஷபாதங்களால் அசைக்கப்படாத நீதிமுறையும்; நன்னெறியின் வழியைப்பற்றிச் செல்லும் குணவிசேஷமும்; கொடியாரை தண்டித்து அவரை நல்வழிக்குக் கொண்டுவரச்செய்யும் முயற்சியும்; ஜனங்களை கீழ்த்திசையிலிருந்து மேன்மைபெறச்செய்யும் பேரவாவும்; குடிகளது வீட்டு ஸுகங்களைக் குறைக்கக்கூடாதென்ற திடச்சித்தமும்; ஜனங்களது ஸ்வதந்திரத்தை க்ரமமாக அதிகப்படுத்தவேண்டுமென்ற கௌரவச்செயலும்; பொதுவில் ஜனங்களின் அபிமானத்தை ஆசிரயித்து செங்கோல் நடத்துவதும்; மனஸ்ஸாட்சியாக ஒவ்வோர்காரியத்திலும் ஊக்கங்கொண் [illegible] டுழைக்கும் ஆர்வ[illegible] பக்ஷமுவாரது மொழிகளை மனதிற்கொள்ளாது நடக்கும் ஒழுக்கமும்; ஸத்தியத்திற்குக் கட்டுப்படும் மனோபவமும்;—இவையெல்லா மெவர்க்கிருக்குமோ அவர் காக்குமம்சத்தினர் என்றே சொல்லவேண்டியது. இக்குணங்களுடையவர் அரசாட்சி தலைமையிலிருப்பின் அவ்வரசாட்சி தலைமையதென்று சொல்லாமலே தெரியும்.

இத்தகைய குணங்களையுடையவர் அரசாட்சித்தலைமையைப் பெற்றால் அவர் தமது செயல்களால் ஜனங்களுடைய ஹ்ருதயமுழுதையுமிழுத்துவிடுகின்றனர். அத்தகைய மஹானுபாவரது சரிதை நமது மனத்திற்கின்பம்பயத்தலுமல்லாது, குணத்தையும் நலத்தையுமுயர்த்துமாகையால் அவர்களது சரிதையை நாமறியவேண்டிய தவச்யகம்.

இத்தகையவர்களுடைய கோஷ்டியிற் சேர்ந்தவர் ரிப்பன் மஹாபிரபு. இவர் கி. பி. 1824-வருஷம் அக்டோபர் மாதம் இருபத்திநான்காவது தினத்தில் ரிப்பன் பிரபுவின் குமாரராகப் பிறந்தனர். இவர் வம்சத்தினர் ‘ஆங்கில ராஜாங்க ஜனசங்க’த்தில் தம்முடைய வாழ்நாட்களை உழைத்திருந்தனர். இவரும் சிறுவயது முதலிலிருந்து வம்சகுணத்தையே கொண்டு அவ்விடத்திலேயே தான் பெருமை விளக்குவார் என்று எண்ணி இருந்தார்கள். குருகுலவாசம்போல் சிறுவயதெல்லாம் படிப்பிலுழைத்து தமது இருபத்தைந்தாம் வயதில் ஆன்தியடோகியா வென்னும் பெயர்கொண்ட, க்ரே பிரபுவின் தௌஹித்ரியும், வயர் என்பவரது புத்ரியுமாகிய, பெண்ணணங்கைக் கலியாணம் செய்துகொண்டனர்.

1852-ம் வருஷத்தில் ராஜாங்கஜனசங்கத்தில் தமது பிரதிநிதியாக ஹல் என்னும் ஜில்லாவிலிருப்பவர்களால் நியமிக்கப்பட்டார். அப்பொழுது அவர் கோல்ட்ரிச்பிரபுவென பட்ட

மடைந்தார். ஒன்று மறந்துவிட்டோம், நாம் ரிப்பன் என்று சொல்வது ஓர் பட்டப்பெயரே அன்றி சொந்தப்பெயரன்று. இப்பட்டப்பெயர் அந்த ஆதீனத்திற்கு [illegible] வரும். இப்பொழுது நாம் யாருடைய வாழ்க்கைச் சுருக்கத்தை எழுதுகின்றனமோ அவர் சொந்தப்பெயர் சாமியுல் ராபின்ஸன் என்பதுதான். இவருக்குகோல்ட்ரிச் பிரபு வெனபட்டம் வந்த வருஷத்திற்கடுத்தவருஷம் மே மாதம் பதிமூன்றும் தேதியன்று இவர் முதல்தரம் உபந்நியாஸித்தார். அப்பொழுதே, இவர் பெரும்பெயரோடு விளங்குவார் என்று, எல்லார்க்கும் தெரிந்தது.

1853-ம் வருஷம் முதல் 1857-வருஷம் வரை அவர் ஹட்டர்ஸ்-பீல்ட் என்னும் ஜில்லாவின்பிரதிநிதியாகவிருந்து ஓர்பெருமியக்கஞ்செய்து ஜனங்களை உயர்த்த முயன்றார். அப்பொழுதிவர்க்காகாதவர் "கோல்ட்ரிச்சான் சடங்கு" என பரிகசிப்பது வழக்கம். பின் 1857-9-ம் வருஷங்களில் கோல்ட்ரிச்பிரபு யார்க் என்னும் ஜில்லாவின்பிரதிநிதியாகமாற்றிக்கொண்டனர். 1859-ல் இவர் தகப்பனிறந்தமையாலிவர்க்கு ரிப்பன் பிரபுவென்று பட்டம் வந்தது. இதே வருஷத்தில் "க்ரே" பிரபுவென்றும், "க்ரந்தம் பாரன்" என்றும் பட்டங்கள் கிடைத்தன. 1859-1861, இவ்வருஷங்களில் 'தளநிலைமையைக் கவனிக்கும் காரியதரிசி'யாக இருந்தனர். அதன்பின் இந்தியதேசத்தின் மந்திரியாக இருந்தனர். 1863-1866 வருஷங்களில் இவர்'சைன்யவியவஹாரங்களை கவனிக்கும் ராஜாங்கப்பிரிவின் தலைவ'ராக இருந்தனர். இந்த நிலைமையில் மூன்றுவருஷங்களிருந்தார்.

இவ்வாறிருக்கும் ஸமயத்தில் இவர் மனோபவம் வரவர உயர்ந்துக்கொண்டே வந்தது. அது இரண்டு பக்கங்களிலும் விரிந்தது. இவர் ஹ்ருதயம் இந்தியநாட்டின் மேலாவஹனங்கொண்டுவிட்டது. இவர்மனமும் மாறுதலை யடைய வாரம்பித்தது. சைன்ய வியவகாரக் காரியதரிசியாகவிருந்தபொழுதே இந்தியதேசத்தை ஆளவேண்டு முறைமையைப்பற்றி அப்பொழுது ராஜப்பிரதிநிதியாக விருந்த லாரன்ஸ் பிரபுவிற்கு கடிதம் எழுதினார். அதில்இந்தியதேசத்தைச்சீர்திருத்தவேண்டுமென்றுவற்புறுத்தி எழுதிஇருந்தார். அக்காலத்தில் மந்திரிகளில் சிரோன்மணியாகிய கிளாட்ஸ்டன் என்னும் பிராதானியின் சூழ்ச்சிக்கூட்டத்து, ரிப்பனும் அங்கத்தினராக நின்றார். இது 1868-வது வருஷம். அப்பொழுது ரிப்பன் சூழ்ச்சிக்கூட்டத்தின் அக்ராஸனாதிபதியாக நியமிக்கப்பட்டார். 1870-வது வருஷத்து கல்விச்சட்டத்தில் மிகப் பிரயாசையோடு உழைத்தார். "ஆலபாமா" விஷயங்களிலும் முயற்சி மிகக்கொண்டு உதவிபுரிந்தனர்.

1873-வருஷம் கிளாட்ஸ்டன் தனது ஐரிஷாரது கல்விச்சங்கச்சட்டம், கூட்டத்தாரால் கொள்ளப்படாதுபோகவே தமது வேலையை ராஜீநாமா கொடுத்துவிட்டார். ரிப்பனு மப்படியே செய்தார். டிஸ்ரேலி என்னு மந்திரியார் தனது கட்சிக்குறைவொடு ராஜ்யமாள முடியாதெனவிலக, கிளாட்ஸ்டனே மறுபடி ராஜ்ய மந்திரியாக வந்தனர். ஆனால் ரிப்பன் மறுபடியும் தன் வேலைக்கு வரவில்லை. இது இங்கிலீஷ் ஜனங்களுக்கு ஆஸ்சரியத்தை உண்டாக்கியிருக்கலாம். ஆயினும் நாம் முன்பே அவர் மனமுமாறுவதாகச் சொல்லி இருக்கிறோம். அவர் இப்பொழுது ரோமன் கியாதலிக் மதத்தைக் கொண்டாடி அதனிடத்தில் கலந்துவிட்டார். இதற்குள் ரிப்பன்பிரபு, ப்ரிமேசனார்க் கூட்டத்துப் 'பெருந்தலைவனாக' நியமிக்கப்பட்டார். இக்கூட்டத்தில் சேரக்கூடாதென ரோமானியமதத் தலைவர் உத்தரவளித்திருந்தபோதிலும் அவரே ரிப்பனை 1874-வருஷம் தம்மதத்தில் சேரவிட்டனர்.

1880-வருஷத்தில் ரிப்பன் இந்தியதேசத்திற்கு ராஜப்பிரதிநிதியா[illegible] னுப்பிக்கப்பட்டனர். வரும்பொழுதே இந்தியருக்கு [illegible]மை செய்யவேண்டுமென்ற ஆவல் அவர்க்குண்டாய்விட்டது. வந்ததும் உப்புவரியை எங்கும் சமப்படுத்தி ஜனங்களுக்கு ஸ[illegible]கமளித்தனர். லைசன்ஸ் வரியையும் அழிக்க முயன்றனர்; அது அவரால் முடியவில்லை. 1873-வது வருஷம் அக்காலத்து இராஜப் பிரதிநிதியாராகிய லிட்டன் பிரபுவால் செய்யப்பட்ட இந்தியதேசபாஷை பத்திரிகைச் சட்டம் என்னும் சட்டத்தைப் பிடுங்கி, தேசபாஷை பத்திரிகைகளை பந்தத்திலிருந்து நீக்கினர். இந்தசட்டம் இந்திய சட்ட புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டதைப் பற்றித் தாம் பேரானந்தங்கொண்டதாக அவர் அன்போடு சொல்லினார். இவைகளைக்காட்டிலும் சிறந்த சட்டமவரியற்றியது, உள்நாட்டு பிரஜாபரிபாலன முறைமைதான். இது இந்திய நாட்டார்க்குபதவியளிக்கவந்த முதற்படி. இதனால் ஜனங்களுக்கு பொதுவிஷய ஆவேசமும், தம் ஊர் வியவகாரங்களை தாமே யாளுந்திறமையும், இராஜாங்க விஷயங்களில் அப்பியாசமுண்டாகவும் வேரூன்றியது. இவைகளை எல்லாம் இங்கிலீஷ் நாட்டிலிருப்பவர்களெல்லாம் மிக அருவருப்புடன் நோக்கிக்கொண்டு இருந்தார். அவர் மனம் புகைவதை ஒருவாறடக்க இறக்குமதி வரியை அழித்துவிட்டார். இவர் 1884 வருஷம் தமது பிரதிநிதித்வத்தை டப்பரின் பிரபுவிற்கு ஒப்பிவித்து தன்னூடு சென்றார். அவர் செல்லும் வழிமுழுதும் ஒரே வைபவமாக இருந்தது. அவர் கடைசியாக இந்தியாவில் பேசியபொழுது,

"இங்கிலண்ட், கடவுளால் தனக்கிடப்பட்ட பெருஞ்செயலைச் செய்யவேண்டுமென்றால், இந்தியாவின்பெரும்பாரத்தையும், அந்நாட்டின் அத்புதசரித்ரத்தையும் அறிந்து, அதைஜனஸமூககோஷ்டியில் உயர்த்தவேண்டுமென்ற ஆவலோடு, தமது தன்மனத்தையும், அடங்காத்தொழிலையும்விட்டு, அந்நாட்டார்க்கு வரவர தானனுபவிக்கிறச் சிறந்த ஸ[illegible]கங்களை நிரம்பியஅளவோடளித்து, தங்களது லாபத்திற்கதையாளாது, [illegible]நாட்டாரது சிறந்த நன்மைக்காக உழைக்கவேண்டுமென்ற உத[illegible]தொடுகூடிய மனஸ்ஸாட்சியோடு நடக்கவேண்டும். இந்[illegible]ற்காக இங்கிலண்ட் பாடுபடவேண்டிய தவச்யகம் இந்தியர்களுடைய நிலைமை, செல்வமோங்கும்படியாகத்தான் அவரும் உழைக்கவேண்டும் அவர்களுக்கெவ்விதப்படிப்பும் முறைமையோடளித்து மேன்மைபெறச் செய்யவேண்டும். இதுதான் இங்கிலண்ட் தேசத்திற்கு கடவுள் அவேசித்தகட்டளை. இந்தவழியில்தான் அந்நாட்டார் நடக்கவேண்டும். இதைத்தான் நான் கொண்டு நடந்தேன்."

என்ற மொழிகள் இந்தியருடைய ஹ்ருதயத்தை இங்கலண்டைத் தமது ரக்ஷகராகக் கொள்ளச்செய்கிறது.

1905 வருஷத்தில் காம்பல்-பானர்மன் என்பவர் இங்கிலாண்டு பிரதானமந்திரியாய் இருந்தனர். இவர்'ராஜாங்கமுத்ரையின் அதிகாரி'யாக ரிப்பனை நியமித்தார். அவர்க்கிப்பொழுது வயது 79. அவருடைய இராஜாங்க தந்திர வல்லமைக்காகவே இவ்வேலை அவர்க்களிக்கப்பட்டது.

தேகநிலைமை இவரை 1908-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் வேலைக்கு ராஜீநாமாகொடுக்கும்படிச் செய்துவிட்டது. இவருடைய உன்னத ஸ்திதியிலிருந்து நடத்தவேண்டிய முறைமைகளுக்கு அவருடலில் வலிமையில்லாமையால் பொதுவிஷயங்களில் இவர் அதிகமாக கவலை எடுத்துகொள்ளவில்லை. இது அவருக்கே தெரிந்தது. காம்பல்-பானர்மன் இறந்ததும் அஸ்க்வித் என்பவர் பிரதானியா இருந்தனர். அவர்காலத்தும் ராஜாங்கமுத்திரை அதிகாரியாக ரிப்பனே இருந்தார். இருந்தாரே ஒழிய தன் கட்சித்தலைமையைக் கேட்க க்ரூ பிரபுவிற்களித்துவிட்டார்.

இவர் வாழ்க்கைமுழுதும் இந்தியாவின் நிலைமையைப்பற்றியே கவலை. சாவிற்கு சிலநாள் முன்னும் இவர் இந்தியாவைப்பற்றி ஓர் உபந்நியாஸம் செய்தார். 1909-வருஷம் ஜூலை மாதம் பதினைந்தாம்நாள் வானவர் கோஷ்டியைச் சேர்ந்தார். அன்று இந்திய தேசமுழுதும் ஓர் வியஸனதினமே.

இவர்பெயர் இந்திய தேசமுழுதும் சிறுவர் சிறுமியர் வாய்களிலும் ஓர் பழமொழிபோல நடக்கிறது. அவர் மஹாநிபுணர். ஆழ்ந்தசிந்தையர். மனோதைரியங் கைவிடாதவர். ஸத்திய நிலைமையே அவரதுநெறி. "தாமின்புறுவதுலகுன் புறக்கண்டு,காமுறுவர்கற்றறிந்தார்" என்னுங் குறளடிகளுக்கிவர் வாழ்க்கையையே உதாரணமாகக் கொள்ளலாம். ஜனங்களபிமானத்தையே சிறந்த பூஷணமாக எண்ணி நடந்தவர். அவரது வாழ்க்கையை உயர்த்த வேண்டுமென்று கங்கணங்கொண்டு நியாயவழியிலுழைத்தவர். இந்திய ஹ்ருதயத்திலிருந்து என்று மழியாதவண்ணம் தன்னுருவத்தை பிம்பமாகப்பதிப்பித்து விட்டார். காடும் நிலமும் அவர் நன்மையைக்கண்டு நலத்தை விளைத்திருந்தன. அவர் போனதைக்கண்டு வருந்துவதுபோல்,வானமழிந்து,வளஞ்சுறக்காது தவிக்கின்றனவென்றுகூட சொல்லும்படியாக விருக்கிறது. ஆனால் அவரது குணங்களைக்கண்டு வியந்து ஆனந்தபாஷ்பத்தோடு வானம் மழைபெய்ய, அவரிடத்து பக்தியொடு மயிர்க்கூச்செரிந்ததுபோல் நிலம் விளையும் என்பதற்கு ஸந்தேகம் கிடையாது. அவர் பாலனந்தத்தோடெங்கும் மந்தமாருதம் வீசி கடவுளின் மஹிமையைவிளக்கி இந்தியாவின்பாலன்பின் முதிற்சியி னுருவத்திற் கொருவடிவம் வருமென்று வீசாநிற்கும்.

"ஸ்திரீகளின் அபிவிர்த்தியில் மேல்நாட்டாரும் கீழ்நாட்டாரும்"

THE IMPROVEMENT OF WOMEN IN EAST AND WEST

கடவுள் மானிட வர்க்கத்தைச் சிருட்டிக்கும்பொழுது அம்மானிட வர்க்கமானது விர்த்தியாகும்பொருட்டு ஸ்திரீ புருஷபேதத்தை யுண்டாக்கியிருக்கிறார். தங்கள் வர்க்கத்தை விர்த்தி செய்வதுந்தவிற மனிதருக்கு இயற்கையாகவே இன்னுஞ்சில கடமைகளும் ஏற்பட்டிருக்கின்றன. உலகபந்தத்தினின்றும் நீங்கி மோக்ஷத்தை நாடுவதே மானிடரின் முக்கியமான கடமையெனினும்,நாமிப்பொழுதுமுற்றிலும் உலக விவகாரங்களைப்பற்றிப் பேசப்போவதால் அவ்விஷயத்தை தற்காலம் நிறுத்திவைப்போம். மனிதவர்க்கத்தை விர்த்திசெய்வது முதலான கடமைகளை நிறைவேற்றுவதற்கு சம்சாரவாழ்க்கையானது அவசியமாயிருக்கின்றது. மனிதரால் நடத்தப்படும் ஒவ்வொரு தொழிலும் சம்சார வாழ்க்கையின் நோக்கங்களாகிய (மோக்ஷவிஷயத்தைத் தவிர்த்து) உண்பது, உறங்குவது, சுகிப்பது, மனிதவர்க்கத்தை விர்த்திசெய்வது என்ற நான்கு விஷயங்களைக் குறித்தே நடத்தப்படுகின்றன. சம்சார வாழ்க்கைக்கு ஏற்பட்ட தொழில்களில் சில இயற்கையிலேயே ஸ்திரீகளுக்கும், சில புருடர்களுக்கும், ஏற்றவையா யிருக்கின்றன. வீட்டுக்கு வெளிவேலைகளாகிய விவசாயம், வியாபாரம், உத்தியோகம் முதலியவை புருடனுடைய திறமைக்கும், வலிமைக்கும் ஏற்றவையாயும், வீட்டுக்குள் வேலைகளாகிய சமையல்செய்தல், குழந்தைகளை வளர்த்தல் முதலியவை ஸ்திரீயினுடைய திறமைக்குத் தகுந்தவையாயும் அமைந்திருக்கின்றன. சம்சார வாழ்க்கையின் நோக்கங்களை நிறைவேற்ற வீட்டுக்கு வெளிவேலைகள் எவ்வளவு முக்கியமானவையோ, அவ்வளவு முக்கியமாய் வீட்டுக்குள் வேலைகளும் இருக்கின்றன. வெளிவேலைகளைச் செய்வதில் புருஷர்களுக்கு எவ்வளவு கௌரவம்

கொடுக்கவேண்டுமோ, அவ்வளவு கௌரவம் உள் வேலைகளைப் பார்ப்பதில் ஸ்திரீகளுக்கும் கொடுக்கவேண்டும். வெளிவேலைகளைப் பார்ப்பதற்கு புருஷர்கள் எங்கனம் கல்வி கற்கவேண்டியது அவசியமோ, அங்கனமே வீட்டுவேலைகளைச்செய்வதற்கு ஸ்திரீகளும் கல்விகற்கவேண்டியது அவசியமா யிருக்கின்றது.

இயற்கைச் சட்டமானது இப்படியிருக்க, நாம் சற்று மேல்நாட்டு ஸ்திரீகளின் அபிவிர்த்தியைப்பற்றி கவனிப்போம்.

மேல்நாடென்று நாம் ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் சொல்லுகின்றோம். ஐரோப்பாவிலும்அமெரிக்காவிலும் இந்தியாவைவிட ஸ்திரீகள் அதிகமாகக் கல்விகற்றும், அதிக சுதந்திரமடைந்து மிருக்கின்றார்கள். அப்படியிருந்தும் அவர்களிருக்கும்ஸ்திதி என்ன? நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு கைத்தொழில்சாலைகளிலும் ஸ்திரீகள் புருஷர்களுக்குச் சமமாக வேலைசெய்கின்றனர். புருஷர்கள் இறங்கியிருக்கும் ஒவ்வொரு துறைகளிலும் ஸ்திரீகளும் இறங்கி, கூலிகளை சரசப்படுத்தி அதிக கஷ்டப்பட்டு வேலைசெய்யும் ஆண்மக்களுக்கு மிகுந்த நஷ்டத்தை விளைவிக்கின்றார்கள். ஸ்திரீகளின் இயற்கைக் குணங்களாகிய கற்பு, நாணம், அச்சம், மடமை முதலியவைகள் மாறி, ஆண்தன்மை அதிகரித்து பார்லிமெண்டு சபைக்கு ஸ்திரீகளையும் மெம்பர்களாக எடுக்கவேண்டுமென்று கலகஞ்செய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள். ஸ்திரீகள் பொது விஷயங்களில் சிரத்தையெடுத்துக்கொள்வதால் அவர்களுடைய இயற்கை குணங்கள் மாறுவதற்கு யாதொரு காரணமுமில்லையென்று பலர் ஆக்ஷேபிக்கின்றனர். இதை நாம் சிறிதேனும் ஒப்புக்கொள்ளவில்லை. இதுவரையில் தன் இயற்கைத்தன்மையானது கெடாமலிருக்கும்வண்ணம் அதிக சிரத்தை செலுத்திவந்த ஒருஸ்திரீயானவள் தன் தன்மைக்குக் கொஞ்சமேனும் பொருந்தாத ராஜாங்கம், வியாபாரம், யுத்தம் முதலிய வியவகாரங்களில் சிரத்தை யெடுத்துக்கொள்ளும்பக்ஷத்தில், தன் தன்மையைக்காப்பாற்ற அவள் செலுத்தவேண்டிய கவனமானது குறைகின்றதல்லவா? அவளுக்குத் தன் பெண்தன்மையைவிட ராஜாங்கவிவகாரங்களில் தன்கக்ஷியே அதிக முக்கியமுள்ளதாகத் தோன்றுகின்றது. அவள் பொதுவிவகாரங்களில் தன் கக்ஷியானது சோர்வடையாம லிருக்கும்பொருட்டு தன் இயற்கைக் குணங்களையும் இழப்பதற்குத் தயாராயிருப்பது ஒரு ஆச்சரியமன்று. மிகவும் நாகரீகமடைந்திருக்கிற மேல்நாடுகளிலும் என் இக்கெடுதிகள் சம்பவித்தன என்பதற்கு ஒரே விடைதான் உண்டு; அவர்கள் இயற்கைச் சட்டத்தை முற்றிலும் மறந்துவிட்டார்கள்.

ஸ்திரீகளின் தன்மை மாறுபடுவதால் நாட்டின் க்ஷேமத்துக்கு ஹானி வருமென்பதற்குச் சந்தேகமில்லை. ஸ்திரீகளும், குழந்தைகளும், பாடுபடுவோருமே, ஒரு ஜாதியாரின் க்ஷேமத்துக்கு ஆதாரமாயிருப்பவர்கள். இவர்களுடைய ஸ்திதியானது மாறுபடும்பொழுது நாட்டின் ஸ்திதியும் மாறுபடும். நாட்டிலுள்ள லக்ஷாதிபதிகளையும், புத்திமான்களையும், ஒருமரத்தின் புஷ்பங்களுக்கும், பழங்களுக்கும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும், பாடுபடுவோரையும், அம்மரத்தின் வேர்களுக்கும் ஒப்பிடலாம். ஸ்திரீகளின் தன்மை மாறுபடுவதால் குழந்தைகளின் தன்மையும் மாறுபடுகின்றது. நாட்டின் இனி க்ஷேமமானது இப்பொழுதிருக்கும் குழந்தைகளைப் பொறுத்தது என்பதை நாம் சற்றும் மறந்துவிடக்கூடாது. குழந்தைகளுக்குச் சிறுவயதில் தாயைவிட வேறு நல்ல உபாத்தியாயர்கள் கிடையாது. தாயானவள் தன் குழந்தையைக்குறித்து சிரத்தை யெடுத்துக்கொள்ளாமல் உத்தியோகத்தின்மேல் போய்விட்டால் பிறகு குழந்தைக்குத் தாயின்மேல் எப்படி அன்புண்டாகும்? புருஷனானவன் தன் உத்தியோகத்தைப் பார்த்துவிட்டு களைப்போடு வீட்

டுக்கு வந்தவுடன், இனியவசனங்களாலும், பார்வைகளாலும், அக்களைப்பைநீக்கி, இன்பந்தர, ஸ்திரீயானவள் வீட்டிலில்லாமல் ரயில்வே ஸ்டேஷனில் டிக்கட்டுக் கொடுக்கும் உத்தியோகம் பார்க்கச் சென்றுவிட்டால் ஸ்திரீயின்மேல் புருஷனுக்கு எங்கிருந்து உள்ளன்புண்டாகும்? ஒரு குடும்பத்திலுள்ள தாய், தகப்பன், குழந்தை இவர்களில் ஒருவர்க்கொருவர் உள்ளன்பில்லாம லிருக்கும்பொழுது, தேசத்து ஜனங்களில் ஒருவர்க்கொருவர் எங்ஙனம் உள்ளன்புண்டாகும்? ஆகையால் ஸ்திரீகளின் அபிவிர்த்தியில் இயற்கைக்கு விரோதமாகப் போவதால் நாட்டில் ஒருவர்க்கொருவர் அன்பு குறைந்து, குழந்தைகள் சரிவர பழக்கப்படாமல், தேசத்தின் க்ஷேமங்குன்றி, கடைசியாக நாடானது அநாகரீகமென்ற கடலில் முழுகிப் போகின்றது. நாம் இதுவரையில் ஸ்திரீகளின் அபிவிர்த்திவிஷயமாக இயற்கையின் சட்டத்தையும், மேல்நாட்டுவழக்கங்களையும்பற்றி விவரித்தோம். இனிக் கீழ்நாட்டுஸ்திரீகளின் அபிவிர்த்தியைப் பற்றிச் சற்று கவனிப்போம்.

கீழ்நாடென்று நாம் ஆசியாகண்டத்தைக் குறிப்பிடுகின்றோம். ஆசியாகண்டத்தில் முன்னுக்குவராத தேசங்களைத் தவிர்த்து தற்காலத்து நாகரீகத்தில் விர்த்தியடைந்து வருகின்ற ஜப்பான், சீனா, இந்தியா இம்மூன்று தேசங்களைமட்டும் நம் விவகாரத்துக் கெடுத்துக்கொள்வோம். முதலாவது ஜப்பானில் ஸ்திரீகளின் நிலைமையைப்பற்றிக் கவனிப்போம். நாடெங்கும் ஸ்திரீகளுக்கான கலாசாலைகள் ஏற்பட்டு, ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் கல்விகற்று வருகின்றனர். ஆனால் மேல்நாடுகளைப்போல புருஷனுக்கும் ஸ்திரீக்கும் எந்தத் தொழிலிலும் போட்டியென்பது கிடையாது. ஸ்திரீகளுக்கான கலாசாலைகளில் உபாத்தியாய உத்தியோகம் தவிர மற்றப்பிரவிர்த்திகளில் ஸ்திரீகள் இறங்குவதேயில்லை. இதனால் சிலஸ்திரீகளைத்தவிர மற்றெல்லோரும் வீட்டிலேயே யிருக்கின்றனர் என்பது தெளிவாய் விளங்குகின்றது. ஆனால் நம்நாட்டு ஸ்திரீகளைப் போல் வீட்டில் சோம்பலாய்க் காலத்தைக் கழிக்கின்றார்களோவெனின், ஜப்பானில் கைத்தொழிற் சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைவிட வீடுகளில் ஸ்திரீகளால் உற்பத்திசெய்யப்படும் பொருள்கள் அதிகமாயிருக்கின்றது என்பதை நாம் நன்கு அறியவேண்டும். ஜப்பானிய வீடுகளில்ஸ்திரீகள்ஒரு நிமிஷநேரமாவது வேலையில்லாம லிருக்கமாட்டார்கள். உலகத்தில் நாகரீகமுள்ள மற்ற எந்த தேசத்தைக்காட்டிலும் ஜப்பானில் வீட்டுவேலைகள் பார்ப்பதற்கு மிகவும்சுளுவானது. தவிர, அங்கு வேலைக்காரிகள் மிகவும் சரசமானபடியால் அநேகமாக எல்லா மத்திய வகுப்புக் குடும்பங்களிலுங்கூட வீட்டுவேலைகளைப்பார்ப்பதற்கு வேலைக்காரிகள் அமைத்திருக்கின்றனர். ஆகையால் ஜப்பானில் உயர்வகுப்பு, மத்தியவகுப்பு ஸ்திரீகளுக்கு வீட்டு வேலைகளைத்தவிர, மற்றக் கைத்தொழில்கள் செய்வதற்குப் போதுமான அவகாசம் கிடைக்கின்றது. கால்களில் அணியும் மேஜோடு நெய்தல், பிரம்புப்பெட்டிகள் பின்னுதல், வர்ணக்காகிதங்களினால் விசிறி முதலான சித்திரவேலைகள் செய்தல், பெட்டிகளுக்கு நம் நாட்டில் "ஜப்பான்" என்று வழங்கும் வர்ணம் பூசுதல் முதலிய பலவகைத்தொழில்கள் வீட்டிலேயே ஜப்பானிய ஸ்திரீகளால் செய்யப்படுகின்றன. வியாபாரிகள் வீடு வீடாகச்சென்று இச்சாமான்களை வாங்கிச்சேர்த்து அந்நியநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். ஜப்பான் தேசமானது அதிக நாகரீக மடைந்திருக்கின்றதென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் தேசமானது நாகரீக மடையும்பொழுது ஸ்திரீகளும் தங்கள் பெண் தன்மையைவிட்டு ஆண்தன்மையடையவேண்டுமென்பது அவசியமில்லை.

ஜப்பானிய ஸ்திரீகள் கல்விகற்றும், நாகரீகமடைந்து மிருந்தபோதிலும், புருஷனை மீறுவது என்பது அவர்களிடமே கிடையாது.

ஸ்திரீயானவள் எப்பொழுதும் கட்டுப்பட்டவளாகவே யிருக்கின்றாள். விவாகமாகும் பரியந்தம் தகப்பனுக்கும், விவாகமானபிறகு புருஷனுக்கும், அவன் பெற்றோர்களுக்கும், புருஷனிறந்தபிறகு புத்திரனுக்கும் கீழ்ப்படியக் கடமைப்பட்டிருக்கின்றாள். அவர்களுடைய தேசாசாரப் பிரகாரம் ஸ்திரீயானவள் விவாகமானதுமுதல் ஒருபுத்திரன் பிறந்து அவனுக்கு விவாகமாகி தன் வீட்டுக்கு ஒரு மருமகள் வரும் பரியந்தம் வீட்டிலேயே யிருக்கவேண்டியவளாகின்றாள். தன் வேலையை ஏற்றுக்கொள்ள ஒரு மருமகள் வந்தபிறகு தன் இஷ்டப்பிரகாரம் புருஷனுடன் வெளியே பல வேடிக்கைகள் பார்க்கச் செல்வாள். ஜப்பானிய ஸ்திரீகள் அநேகமாகத் தங்கள் நாட்டுடையையே அணிகின்றனர். ஆனால் சில அதிக மேல்நாட்டு நாகரீகமடைந்த வீடுகளில்மட்டும் ஸ்திரீகள் மேல்நாட்டுடைதரித்தும் ஐரோப்பிய ஸ்திரீகளைப்போல ஓரறைக்குள்ளாவது வண்டிக்குள்ளாவது புகும்பொழுது புருஷனுக்கு முன்புகுவதும் ஐரோப்பியஸ்திரீகள் மாதிரியே நடத்தப்படுகின்றனர். ஆனால் ஒரு தேசமானது அந்நிய தேசங்களோடு பழக்கத்துக்கு வரும்பொழுது அத்தேசத்து ஜனங்களில் சிலர் அந்நியதேசத்துப் பழக்கவழக்கங்களை அனுசரிப்பது ஆச்சரியமன்று என்றும், அநேக செல்வாக்குமிகுந்த குடும்பங்களிலும், மத்தியவகுப்பு கீழ்வகுப்பு ஜனங்களிடத்திலும், தங்கள் தேசவழக்கமே நிற்கின்றபடியால், சிலஸ்திரீகள் மட்டுமே பின்பற்றிவரும்அந்நியப்பழக்கங்களை ஜப்பானியரின் பழக்கமல்லவென்று சொல்ல சற்றுந்தயங்கமாட்டோம். ஜப்பானிய ஸ்திரீகள் வீட்டிலேயே இருக்கவேண்டியிருப்பதால் சிறுவர்களின் அபிவிர்த்தியைப்பற்றி அதிக கவனஞ்செலுத்த ஏதுவாகின்றது.

ஜப்பான் தேசத்தை முன்னிலைக்குக் கொண்டுவந்த தற்காலத்து ஜப்பானியரின் குணாதிசயங்களுக்கு அவர்களுடைய தாய்களே முக்கியகாரணமென்பது சொல்லாமலே விளங்குகின்றது.

சீனாதேசமானது ஸ்திரீகளின் அபிவிர்த்தியில் இன்னும் ஒருவிதமான முடிவுக்கு வாராமையாலும், சீனர் அநேகமாக எல்லா விஷயங்களிலும் ஜப்பானியரின் பழக்க வழக்கங்களையே பின்பற்றுகின்றபடியாலும் நாம் அதைப்பற்றி அதிகமாக விவரிக்கவேண்டிய அவசியமில்லை.

பிறகு இந்தியாவின் விவகாரத்தை யெடுத்துக்கொள்வோம். இந்தியாவிலும் ஸ்திரீகளின் அபிவிர்த்தி விஷயமாக பல தேசாபிமானிகள் உழைத்து வருகின்றார்கள். கவர்மெண்டாராலும் அநேகமாக எல்லாப்பட்டணங்களிலும் பெண்பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டு ஆயிரக்கணக்கான பெண்கள் கல்வி கற்றுவருகின்றனர். அநேக ஸ்திரீகள் தங்கள் கல்வியைப் பூர்த்திசெய்து பெண்பாடசாலைகளில் உபாத்தியாய உத்தியோகத்தி லிருக்கின்றனர். இன்னுமநேகர் தங்கள் கல்வியைப் பூர்த்திசெய்தானபிறகு வீட்டுவேலைகளிலேயே அத்திறமையைச் செலுத்துகின்றனர். இன்னும் நம் நாட்டுஸ்திரீகள் மேல்நாட்டாரைப் போல பல தொழில்களிலு மிறங்க வாரம்பிக்கவில்லை. நம் நாட்டில் ஸ்திரீகள் அபிவிர்த்தியை நன்மார்க்கத்தில் திருப்புவது தேசாபிமானிகளின் கடமையாயிருக்கின்றது. அவர்கள் நம் ஸ்திரீகளின் அபிவிர்த்தியை மேல்நாட்டு நடையிலேயே திருப்ப அபிப்பிராயங்கொண்டிருக்கிறார்களென்று நாம் கிஞ்சித்தும் நம்பவில்லை. எந்தநாட்டுப் பழக்கங்களையும்

நாம் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றமாட்டோம். நமக்கு நன்மைதரக்கூடியவைகளை மட்டும் எடுத்துக்கொண்டு மற்றவைகளை நீக்கிவிடுவோம். நம் தேசமானது உலகத்தில் மற்றெந்த தேசத்தையும்விட நாகரீகத்தில் முதன்மையாயிருந்தகாலத்தில் ஸ்திரீகள் கல்வி கற்றிருக்கவில்லையா? தற்காலத்தைவிட அதிக சுதந்திரமடைந்திருக்கவில்லையா? அப்பொழுது அவர்கள் தற்காலத்து மேல்நாட்டு ஸ்திரீகளைப்போல புருஷர்களுக்குப் போட்டியாகஎந்தத் துறையிலாவதுஇறங்கினர்களா? சீதை; துரோபதை, சகுந்தலா இவர்கள் கல்வியடைந்தவர்களில்லையா? ஆயினும், இவர்கள் ஸ்திரீகளின் தன்மைக்கு உலகத்தோருக்கு ஒருதாரணமாக நிற்கவில்லையா? தற்காலத்தில் கல்வியின் பிரயோசனமானது உத்தியோகமேயென்றநேகரால் எண்ணப்படுகின்றமையால் ஸ்திரீகளும் தங்கள் கல்வித்திறமையை உத்தியோக மார்க்கத்திலேயே செலுத்தவேண்டுமென் றேற்படுகின்றது. நம் ஜனங்களின் மனதில் கல்வியானது உத்தியோகத்துக்கு மட்டுமல்ல விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலிய எல்லாத் தொழில்களுக்கும் அவசியமானதென் றேற்படும்பொழுது, ஸ்திரீகளுக்கும் அவர்களுடைய இயற்கைத்தொழிலாகிய வீட்டுவேலைகளைப்பார்ப்பதற்கும் கல்வி அவசியமென்றுதானே ஏற்படும். ஸ்திரீகள் கல்வி கற்கவேண்டிய தவசியமென்று நாம் பலமுறையும் சொல்லியாய்விட்டது. ஆனல், அவர்கள் தங்களுடைய இயற்கைத்தொழிலைத் தவிர்த்து வேறு தொழில்களில் பிரவேசிக்காமலிருப்பதே தேசத்துக்கு க்ஷேமத்தை விளைவிக்கக்கூடியதென்று நம் ஜனங்களுக்கும் தேசாபிமானிகளுக்கும் பன்முறையும் வற்புறுத்த விரும்புகின்றோம்.

இயற்கை அற்புதங்கள்

WONDERS IN NATURE

நிழலும் கிரகணங்களும்

SHADOWS AND ECLIPSES

வெயிலில் நடந்து செல்லுங்கால் நாம் நமது நிழலைக் கண்டிருக்கலாம். நமது வீட்டில் விளக்கின் அருகாமையில் சென்றால் நமது நிழல் சுவற்றில் விழுவதையும் நாம் கண்டிருக்கலாம். இந்த நிழலானது இவ்வளவு ஸாதாரணமாக இருப்பதால் இது எப்படி உண்டாகின்றது, இதன்கூடவே உள்ள மற்றைய விஷயங்கள் யாவை, இதனல் விளையும் இயற்கையான அற்புதத்தோற்றங்கள் யாவை, இதனல் நாம் நிழல் உண்டாக்கும் வஸ்துவின் விஷயமாக என்ன விஷயங்களை அறியக்கூடும் என்ற இதுபோன்ற விஷயங்களை விசாரிக்காமலே இருக்கிறோம். இவ்விஷயங்களை இங்கு எடுத்து விசாரித்துநிழல்கள் இயற்கையில் இவ்வளவுஅற்புத தோற்றங்களை விளைவிக்கின்றன, அவைகளின் ஸஹாயத்தால் நாம் தெரிந்துகொள்ளக்கூடும் விஷயங்கள் இன்னவை, என்பவைகளை நன்கு எடுத்துக்காட்டுவோம்.

முதலில் நிழல்கள் உண்டாகும் விதத்தையும், அவைகளின் ஸ்வரூபத்தையும் விசாரிப்போம். ஸூர்யன், சந்திரன்,விளக்கு முதலிய பிரகாசிக்கும் வஸ்துக்களின் எதிரே ஏதாவது ஒரு வெளிச்சத்தை மறைக்கும் வஸ்து வருமாயின் அதனல் வெளிச்சம் தடைபடுகின்றது. வெளிச்சம் அது உண்டாகும் இடத்திலிருந்து நேர்கோட்டின் மூலமாகவே எல்லாப்பக்கங்களிலும் பரவிச்செல்வதால் இம்மாதிரி மறைக்கும் வஸ்துக்களால் தடுக்கப்பட்டு நிழல் உண்டாக இடங்கொடுக்கின்றது. வெளிச்சம் தடைபட்ட மாத்திரத்திலேயே நிழல் உண்டானபோதிலும் அது நமது கண்ணுக்குப்புலப்பட்டுவிடாது. உண்டாகும் நிழலையும் அதன் சுற்றிலும் உள்ள அப்பாற்செல்லும் ஒளிகளையும் தாங்கும்படியாக ஒருதிரை அல்லது சுவர்போன்றது இருக்கவேண்டும். மேலும் மறைக்கும் வஸ்து வெளிச்சத்திற்கும்திரைக்கும் நேராக இடையில் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் நிழல் திரையில்விழ வெளிச்சம்படும் பாகம் பிரகாசமாயும் நிழல்பாகம் கறுப்பாயும் நமது கண்ணுக்குப் புலப்படும் இம்மாதிரியான திரையில்லாததால் தான் திறந்தவெளியில் விளக்கைவைத்துவிட்டு நாம் அதன் அருகேநின்றால் ஆகாயத்தில் நமது நிழல் தெரியாததற்குக்காரணம் ஓர்வஸ்து நமது கண்ணுக்குப் புலப்படவேண்டுமாகில் அதிலிருந்து ஒளிவந்து நமது கண்ணில்பட்டால்தான் முடியும் என்பது உண்மையாக இருக்க நிழலிலிருந்து ஓர் ஒளியும் வாராதிருக்கும்பொழுதே அது புலப்படுவானேன் என்றசங்கை பிறக்கலாம். நிழலைச் சுற்றிஉள்ளபாகம் பிரகாசிப்பதாலும், அது படும்பாகம் மாத்திரம் பிரகாசிக்காததாலும் நிழலானது சுற்றுமுள்ள பாகத்தைவிட வேற்றுமைப்பட்டிருக்கின்றது. இந்த வேற்றுமையால்தான் அது நமது கண்ணுக்குப் புலப்படுகின்றது.

நிழல் உண்டாகும் விதத்திலிருந்து அதன் கூடவே உண்டாகும் மற்றையதோற்றங்களை விசாரிப்போம். ஒளிபுறப்படும் இடம்சிறுப்பொட்டாக இருக்குமாயின் அதிலிருந்து உண்டாகும் நிழல்போகப்போகவிரிந்துகொண்டேபோகும். இதேமாதிரிதான் ஒளி உண்டாகும் இடத்தைவிட மறைக்கும் வஸ்து பெரிதாக இருக்கும் இடத்திலும். மறைக்கும் வஸ்துவைவிட ஒளி உண்டாக்கும்வஸ்து பெரிதாக இருப்பின் ஓர்வித அற்புதம் உண்டாகின்றது. வஸ்துவின் நிழல் போகப்போகக் குறுகலாகி முடிவில் ஓர் புள்ளியாகிவிடுகின்றது. இந்தவிடத்தில் வஸ்துவின் அருகாமையில் விளக்கிற்கு மறுபுறமாக ஓர் அட்டை அல்லது பலகையைப் பிடிப்போமாகில் அதின் மத்தியில் கறுப்பான சாயை பாகம் ஒன்றும் அதைச்சுற்றி மங்கலான சாயைபாகம் ஒன்றும் காணப்படும். இந்த மங்கலான பாகத்திற்கே குறைநிழல் என்று பெயர். இந்த அட்டையை வஸ்துவைவிட்டு தூர எடுத்துச் செல்வோமாகில் குறைநிழல் பாகம் வரவர அகன்றுகொண்டும் நிழல்பாகம் வர வரக் குறைந்துகொண்டும்வரும். முடிவில் ஓர் இடத்தில் நிழல்பாகம் ஓர் பொட்டாக குறைநிழல பாகமே முழுவதும் பரவிவிடும். அதற்கப்பாலும் அட்டையைக்கொண்டு செல்வோமாகில் குறைநிழல் மாத்திரமே காணப்படும் இந்தத்தோற்றம் உண்டாவதன் காரணத்தை நாம் எளிதில் காணலாம். அட்டையில் குறைநிழலும், நிழலும் ஸம அகலத்தோடு இருக்கும் தருணத்தில், குறைநிழல் மேல்பாகத்தில் கண்ணை வைத்து விளக்கைநோக்கினல் விளக்கின் கீழ்பாகமும், அதன் கீழ்பாகத்திலிருந்து நோக்கினல் விளக்கின் மேல்பாகமும், நிழலில் கண்ணைவைத்துநோக்கினல் விளக்குமுழுவதும் மறைந்தும் காணப்படும். இதனல் குறைநிழல் விளக்கின் வெளிப்பாகத்து ஒளி அது புறப்படும் இடத்திற்கு நெருங்கியுள்ள நிழலுட்புகுந்து அதை ஒருவாறு பிரகாசப்படுத்துவதால் உண்டாகின்றது என்பது விளங்கும். அட்டைமுழுவதும் குறைநிழலாக இருக்கும் இடத்தில்நடுவிலிருந்து விளக்கைநோக்கினல் அது சுற்றிலும் பிரகாசம் உடையதாகவும் மத்தியில் மறைக்கும் வஸ்துவால் மறைக்கப்பட்டதாகவும் காணப்படும். இதற்குக் கங்கணத்தோற்றம் என்றுபெயர். ஆகவே மறைக்கும் வஸ்துவைவிடப் பெரிதாகிய ஒளிவிடும் வஸ்துவால், குறைநிழல், நிழல், கங்கணத்தோற்றம் ஆகிய மூன்று தோற்றங்கள் உண்டாக்கப்படுகின்றன. இம்மூன்றையும் இங்குள்ளசித்திரத்தில் காட்டப்பட்டிருக்கின்றது.

ஸாதாரணமாக விளக்கு வெளிச்சத்திலிருந்து உண்டாகும் நிழல் மூலமாக அநேக அற்புதத் தோற்றங்களை உண்டாக்கலாம். நமது இரண்டு கைகள் அதன் விரல்கள் ஆகிய இவைகள் மூலமாக மிக அற்புதமான நிழல்கள் சுவற்றில் விழும்படி செய்யலாம். இப்படி விழும் நிழல்கள் வௌவால்போலவும், முயல்போலவும், கிளிபோலவும், ஒட்டகைபோலவும் தோற்றும்படி செய்யலாம். நிழலின் அற்புதத்தைக்கொண்டு தான் நிழல், பொம்மலாட்டம் முதலிய அற்புதத்தோற்றங்கள் உண்டாக்கப்படுகின்றன.

ஸூர்யன் நிழலால் உண்டாகக்கூடிய அற்புதத்தை விளக்குவோம். ஜர்மனிதேசத்தில் ஹார்ஸ் என்ற ஓர் மலை இருக்கின்றது. அதில் பிரோகன் என்றஓர் உயர்ந்தகொடுமுடி உண்டு. அதன்மேல்மே

ற்குப்புறம் மேகம் இருக்கும் தருணத்தில் ஏறிவிட்டால் ஸூர்யோதயகாலத்தில் நமது நிழல் பெரிதாகப்பட்டு மேகத்தில் காணப்படுமோம். இது பார்வைக்கு பயங்கரமாக இருக்கும். இந்த அற்புதத் தோற்றத்திற்கு இதைப் பார்த்தவர்கள் பிம்ராகன் பிசாசமெனப் பெயரிட்டு அழைத்தனராம். இதையும் சித்திரப்படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

ஸூர்ய சந்திராதிகளால் பூமியில் உண்டாக்கப்படும் நிழலைக்கொண்டு நம்மால் ஏறி அளக்கமுடியாத கோபுராதிகளின் உயரத்தை ஒறவாறு கண்டுபிடிக்கலாம். தகுந்த ஸமயத்தில் மயிலைக்கோபுரத்தின் நிழல் அளவைக் கண்டுபிடிப்போம். அது 300 அடி என்று வைத்துக்கொள்ளுவோம். அதே ஸமயத்தில் நமது நிழலையும் அளப்போம். இது $8\frac{1}{4}$-அடி என்போம். நமது உயரம் $5\frac{1}{2}$-அடியாகில் பின்வரும் வழியாக மயிலைக்கோபுரத்தின் உயரத்தைக் கண்டுபிடிக்கலாம். $8\frac{1}{4}$-அடி நிழலை உண்டாக்க $5\frac{1}{2}$-அடி உயரமுள்ள வஸ்துவேண்டும். 300 அடி நிழலை உண்டாக்க $11/2 \times 4/33 \times 300$ அல்லது 200 அடி உயரம் உள்ள வஸ்து வேண்டும். அதாவது மயிலைக்கோபுரம் 200-அடி உயரம் என்று கண்டுபிடிக்கலாம் இம்மாதிரி ஸாதாரணமான விஷயங்களுக்கும் ஸூர்ய சந்திரர்களால் உண்டாக்கப்படும் நிழல் உபயோகப்படுகின்றது.

ஸூர்யனால் உண்டாகும் நிழலினாலேயே தான் பூமியில் இரவும்,சந்திரனுக்கு வளர்பிறை தேய்பிறையும் காணப்படுகின்றன. ஸூர்யன் ஒளி அஸ்தமனத்தின் பின்பு பூமியால் தடுக்கப்பட அப்பொழுது உண்டாகும் நிழலிலே நாம் இருப்பதுதான் நமக்கு இரவாகக் காணப்படுகின்றது. சந்திரன்மேல் ஸூர்யன் ஒளிபட அதனுள் அது ஊடுருவிச்செல்லாது தடைபடுகின்றது. ஆதலால் சந்திரனது பிரகாச பாகத்தில் ஓர் பங்கும், நிழலில் மூழ்கிக்கிடக்கும் பாகத்தின் பங்கும் சேர்ந்து தெரிவதே சந்திரன் பிறைக்குக் காரணம். இங்கு உள்ள நிழல் வேறு வஸ்துவில் திரையில் படுவதுபோலப் பட்டு இந்தத் தோற்றத்தை உண்டாக்கவில்லை. இந்த நிழலுள் மூழ்கிக்கிடக்கும் வஸ்துக்களாலேயே இத்தோற்றம் உண்டாகின்றது.

இந்த நிழல்கள் உண்டாகும் விதத்தினாலேயே தான் ஸூர்ய சந்திரர்களது கிரஹணங்களும் உண்டாகின்றன. ஸூர்யன் பிரகாசிக்கும் வஸ்து அதன் ஒளியை அதைவிடச் சிறிதாகிய பூமிதடுத்து நிழலை உண்டாக்குகின்றது. இந்த நிழல் எப்பொழுதும் பூமியிலிருந்து ஸூர்யன் இருக்கும் பக்கத்திற்கு நேர் எதிரான மறுபுறத்தில் நீண்டுநிற்கும். சந்திரன் பூமியைச் சுற்றிவரும்பொழுது இந்தநிழலுள் பிரவேசித்துவிடுமாகில் சந்திரக்கிரஹணம் உண்டாகும். இது உண்டாகும்கால் பூமி சந்திரனுக்கும் ஸூர்யனுக்கும் சற்றேறக்குறைய நேராக இடையில் வரவேண்டும். அப்பொழுது சந்திரனும் ஸூர்யனும் எவ்வளவு பிரிந்திருக்கலாமோ அவ்வளவும் பிரிந்திருக்கவேண்டும். ஆனால் இவ்வாறு இந்த கோளங்கள் அகன்று நிற்பது பௌர்ணமியில்தான் முடியும். ஆகையால் சந்திரகிரஹணம் பௌர்ணமியில்தான் உண்டாக இடமுண்டு. மேலும் சந்திரன் பிரவேசிக்கக்கூடிய பாகத்தில் நிழலின் குறுக்களவு சந்திரனது குறுக்களவைவிட அரைப்பங்கு அதிகமாக இருக்கின்றது. ஆகையால் சந்திரக்கிரஹணம் குறைக்கிரஹணமாகவும், முழுக்கிரஹணமாகவும் நிழலில் முழுவதும் புகுந்து ஊடுருவிப்புறப்பட்டால் $1\frac{1}{4}$-அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கிரஹணமாகவும் இருக்கலாம். பூமி ஸூர்யனைவிட சிறிதாக இருப்பதால் இதற்குக் குறைநிழல் உண்டு. இதனுள் சந்திரன்பிரவேசிக்குமாயின் இதற்கு தூர நிழல் கிரஹணம் என்று பெயர். இதில் சந்திரன் ஒளி இழக்காது சற்று மங்கலாகும், அவ்வளவுதான். இதை நம்மவர் கிரஹணமாகவே மதிப்பதில்லை. பூமியைவிட சந்திரன்மிகச்சிறியதாக இருப்பதால், சந்திரக்கிரஹணம் பூமியில் ஓர் பாதிக்கு நன்றாகத் தெரியும்.

இனி ஸூர்ய கிரஹணத்தின் ஸ்வரூபத்தைப்பற்றிவிவரிப்போம். ஸூர்யன் பிரகாசத்தை சந்திரனும் மறைக்க அதுவும் நிழல் உண்டாக்குகின்றது. இதுவும் ஸூர்யன் இருக்கும் புறத்திற்கு எதிர்ப்புறத்தில் நீண்டு காணப்படும். இந்தநிழல் பூமியின்மேல் விழுமாயின் நிழல் விழுந்த இடத்திற்கு ஸூர்யன் மறைந்துகாணப்படும். இதுதான் ஸூர்யகிரஹணம் என்னப்படும். சந்திரன் நிழல் பூமியின்மேல் விழ அது பூமிக்கும் ஸூர்யனுக்கும் சற்றேறக்குறைய நேராக இடையில் வரவேண்டும். ஆதலால் ஸூர்யனைவிட்டு எவ்வளவு விலகாமலிருக்கக்கூடுமோ அவ்வளவு நேராக சந்திரன் இருத்தல் வேண்டும். இவ்வாறிருப்பது அமாவாஸையன்றுதான் ஏற்படும்; ஆதலால் ஸூர்யகிரஹணம் அமாவாஸையன்று தான் உண்டாக இடமுண்டு.

சந்திரன் பூமியைவிட அதிகச்சிறிய வஸ்து. ஆகையால் ஸூர்யனால் இதன் விஷயமாக உண்டாகும் நிழலில் குறைநிழல், நிழல்,கங்கணத்தோற்றமுடைய

பாகம் ஆகிய இவைகள் காணப்படும். ஸாதாரணமாக சந்திரன் நிழலுள் குறைநிழல் நிழல் ஆகிய இப்பாகங்கள் பூமியில்விழும். இந்த ஸமயங்களில் நிழல்விழும் பாகத்தில் பூர்ண ஸூர்யகிரஹணமும் குறைநிழல் விழும் இடத்தில் குறைக்கிரஹணமும் இவைகளுக்கு அப்பாற்பட்ட விடங்களில் ஸூர்ய கிரஹணம் இல்லாமலும் இருக்கும். அபூர்வமாகச் சில ஸமயங்களில் குறை நிழல் மாத்திரமே விழலாம். அப்பொழுது இதன் மத்யபாகத்தில் கங்கணத்தோற்றம் உண்டாக அதற்கு கங்கணக்கிரஹணம் என்றுபெயர். மற்றையகுறைநிழல் பாகங்களில் குறைக்கிரஹணமும், இதற்கு அப்பாற்பட்டபாகங்களில் கிரஹணமே இல்லாமலும் இருக்கும். ஆகவே ஸூர்யகிரஹணம் மூன்றுவிதம், முழுகிரஹணம், குறைகிரஹணம், கங்கணக்கிரஹணம் ஆகிய இவைகளே.





ச,

இப்பொழுது சந்திரக்கிரஹணத்திற்கும் ஸூர்ய கிரஹணத்திற்கு உள்ள வேற்றுமை யாது என்பதைச் சற்று விவரிப்போம். ஸூர்யகிரஹணம் அமாவாஸையில் உண்டாகும்,சந்திரக்கிரஹணமோபௌர்ணமாவாஸையில்தான் உண்டாகும். ஸூர்யக்கிரஹணம் ஸூர்யன் சந்திரனால் மறைக்கப்படுவதால் உண்டாகும்,சந்திரக்கிரஹணத்திலோ,அது பூமிநிழலில் மூழ்குவதால் ஒளி இழந்து கிரஹணத்தோற்றத்தை உண்டாக்குகின்றது. முன்னது பூமியின் ஓர் பாதியிலேயே ஓரிடத்திற்கு ஒருமாதிரியாகவும் மற்றவிடங்களுக்கு வேறு மாதிரியாகவும் தோற்றும். பின்னதோ பூமியின் ஓர்பாதிக்கு ஒரேமாதிரியாகத்தோற்றும். இதுபற்றியே ஸூர்யகிரஹணங்கள் வருஷத்தில் சந்திரகிரஹணத்தைவிட அடிக்கடி நிகழ இடமிருப்பினும் நமக்கு சந்திரகிரஹணங்கள் அதிகமாக உண்டாவதாகத் தோற்றுகின்றது. ஸூர்யகிரஹணத்தில் கங்கணக்கிரஹணம் உண்டு. சந்திரகிரஹணத்திலோ கங்கணக்கிரஹணமே ஒருபொழுதும் வாராது. அதற்குப்பதிலாக அதில் $1\frac{1}{4}$-அல்லது $1\frac{1}{2}$-கிரஹணங்கள் உண்டு. சந்திரக்கிரஹணகாலத்தில் ஒருவன் சந்திரனில் இருப்பதாக வைத்துக்கொள்வோமாகில் அவனுக்கு அப்பொழுது ஸூர்யக்கிரஹணம் உண்டாயிருப்பதாகத் தோற்றும். ஸூர்யக்கிரஹணகாலத்தில் அவனுக்கு பூமிக்கிரஹணம்உண்டாயிருப்பதாகத் தோற்றும்.

இப்படி பூமி,சந்திரன்ஆகிய இவைகள் நிழல்களால் உண்டாகும் கிரஹணங்கள் ஒவ்வொரு பர்வகாலங்களிலும் உண்டாகாதிருப்பானேன் என்றசங்கை பிறக்கும். இதற்குக் காரணம் ஸூர்யகதியும் சந்திரகதியும் ஒரேசமத்தில் இல்லாதிருப்பதே. இப்பொழுது ஓர் கடிகாரத்தை எடுத்துக்கொள்ளுவோம். அதற்கு இரண்டு முள் உண்டு ஒன்று வேகமாகவும் மற்றொன்று மெதுவாகவும் சுற்றுகின்றது. ஆதலால் இவை இரண்டும் சுற்றிவருகையில் கடிகாரத்தில் எந்தபாகத்தில் சேர்ந்து நின்றாலும் நிற்கும், அகன்று நின்றாலும் நிற்கும். கடிகார மத்தியத்தில் பூமி இருப்பதாகவும் சிறியமுள் நுனிக்கு நேராக வெளியில் ஸூர்யனும், பெரிய முள் நுனியில் சந்திரனும் இருப்பதாகக் கொள்வோம். சிறியமுள் வேகத்திற்கு ஸமம் சந்திரன்; 27-நாள்களில் பூமியைச் சுற்றிவருவது, பெரிய முள்ளின் மெதுவுக்கு ஸமானம் ஸூர்யன். 1-வருஷத்தில் பூமியைச் சுற்றிவருவது; ஆகவே இதிலிருந்து ஸூர்ய சந்திரர்கள் கதியில் எந்தப் பாகத்திலும் அவர்கள் சேர்ந்தாவது அகன்றாவது நிற்கலாம் என்பது விளங்கும். ஆகவே அவர்கள் கதியில் எந்தவிடத்திலும் அமாவாஸையும் பௌர்ணமாவாஸையும் உண்டாகலாம். ஆனால் இருவர் கதியும் ஒரேசமத்தில் இல்லாததால் பூமிநிழலும் சந்திரன்நிழலும் வெவ்வேறு புறத்தைநோக்கி நிற்கும். ஆனால் இவர்கள் கதிகள் சேரும் இரண்டு இடமாகி ராகு கேது ஸ்தானங்களின் அருகாமையில் பர்வகாலங்கள் உண்டானால் பூமிநிழல் சந்திரன்மேலாவது சந்திரன் நிழல் பூமிமேலாவது பட கிரஹணங்கள் உண்டாகும் ஆகவே ஸூர்ய சந்திர கதிகள் வெவ்வேறு ஸமத்திலிருப்பதால் எல்லாவிடங்களிலும் உண்டாகும் பர்வகாலங்களில் கிரஹணங்கள் உண்டாகா. அவர்கள் இருவரது கதியும் சேரும் இடங்களாகிய ராகு கேது ஸ்தானங்களில் உண்டாகும் பர்வகாலங்களிலேயே இந்த அற்புதத் தோற்றங்கள் உண்டாகும்.

முற்கூறிய விஷயங்களிலிருந்து சந்திரனது வளர்பிறை தேய்பிறைகளை கிரஹணங்கள்எனக் கொள்ளக்கூடாது என்பது வெளியாகும். இவை

சந்திரனது ஓர்பாகம் தனது நிழலிலேயே மூழ்கி மற்றையபாகம் ஸூர்யப் பிரகாசத்தினால் பிரகாசிக்க இவ்விரண்டும் சேர்ந்து நமக்குத்தோன்றும் தோற்றங்கள். இவை கிரஹணத்தைப்போல பூமி நிழலில் சந்திரன் ஒளி இழப்பதால் உண்டாவனவல்ல. மேலும் சந்திரக்கிரஹணம் சிற்சில பௌர்ணமியில்சந்திரன்நன்றாகப் பிரகாசிக்கும்கால் திடீரென்று, அதற்குவரும் ஓர்தோற்ற மாறுபாடு. வளர்பிறை தேய்பிறைகளோ அவ்வாறின்றி 15-அல்லது 16-நாளுக்கு ஒவ்வொருதரம் மாறிமாறி வந்துகொண்டிருப்பன.

ஆதலால் 'ஸூர்யனால் ஏற்படும் நிழலாலேயே கிரஹணங்கள் என்ற அற்புதத்தோற்றங்கள் உண்டாகின்றன. இவைகளை நம்மவர்கள் ஓர் சிறந்த ஸமயமாகக்கொண்டாடி லௌகிக விஷயங்களுக்குப் பாபம் என்றும், வைதிகமான ஜபம் முதலியவைகளுக்குத் தக்க ஸமயம் என்றும் கொண்டு இவைகளுக்குத் தக்கபடி ஸ்நானாதிவிதிகளை ஏற்படுத்தி இருக்கின்றனர். இந்தத் தோற்றங்கள் நமக்கு நல்ல ஸமயங்களில் ஸம்பவிக்கும் உற்பாதங்களை உணர்த்துகின்றன. ஆகவே லௌகிகமாக இதை பாபஸம்பந்த ஸமயம் என்று கொண்டு தானம் முதலியன செய்து அதைப் போக்கடித்துக்கொள்ள விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஸம்பவத்தின் விஷயம் மோக்ஷமார்க்கத்தில் முக்கிய ஸஹாயம்; ஆதலின் இது வைதிக ஸம்பந்தமானஜபாதிகளுக்கு நல்ல ஸமயம் என்று எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. உலகத்திலுள்ள ஸுகதுக்கங்களின் ஸ்வரூபம் இக்கிரஹணங்களால் நன்கு ஞாபகம் மூட்டப்பட இந்த ஸமயத்தில் ஸ்நானம்செய்து ஒருவன் ஸத்காலக்ஷேபம் செய்வனாகில் அவன் மனம் தெளியும் என்பதற்கு என்னஸந்தேகம்? இந்த ரகஸியத்தை அறியாமல் நம்மவரில் அநேகர் இப்பொழுது இக்கிரஹண காலங்களை ஒழுங்காகக்கொண்டாடுவதில்லை. இதனால் அவர்கள் முன்னுக்குவர சாஸ்திரம் ஏற்படுத்திய ஓர் மார்க்கத்தை அவர்கள் இழந்தார்களே ஒழிய விதித்த சாஸ்திரத்திற்கு யாதொரு குறைவும் இல்லை. இந்த ரகஸியத்தை அறிந்து நாமும் கிரஹண காலங்களை தவறவிடாது அவைகளில் தக்க ஸத்கால க்ஷேமாதிகள் செய்து நற்கதி அடைவோமாக.

உழவுநூல்

AGRICULTURE

(முன்தொடர்ச்சி)

உழுதற்கு கஷ்டமான நிலத்தைக் 'கடினநிலம்' என்றும் இலகுவானதை 'இலேசான நிலம்' என்றும் சொல்லுகிறது. மணற்பாங்கான நிலம், சுண்ணமுள்ள நிலம், இந்திரியப்பொருள் கலந்த நிலம் இவையெல்லாம் 'இலேசான நிலம்' என்று சொல்லப்படும். ஈரமான களிமண்ணானது மெதுவாயும் சவ்வாயுமிருக்கும். உலர்ந்துபோனால் கடினமாகும். ஆகையால் இவ்வகை நிலத்தை உழவேண்டுமானால் அதிக ஈரமாயும் உலர்ந்ததாயும் இல்லாத நிலைமையில் உழவேண்டும்.

களிமண்ணிலத்தோடு மண், சுண்ணம், இந்திரியப்பொருள்களைக் கலந்துகொண்டால் நிலம் விருத்தியாகும்.

பூமியின் உஷ்ணத்தின் சம்பந்தா சம்பந்தம்.—உஷ்ணத்தின்மிகுதி, குறைவு மாறுதல்களை நிலத்தில் நன்றாயறிய முடியாது. பூமிக்குக்கீழே போகப்போக,மாறுதல்கள் நன்கு புலப்படா. நிலத்தின் உஷ்ண நிலைமை காலங்களுக்குத் தக்கபடி மாறும். மேலும் இராப்பகலுக்குத் தக்கபடியும் மாறுகிறது. நிலப்பரப்புக்கு 3-அடிக்குக் கீழே (இரண்டாவதான) உஷ்ணவுணர்ச்சி கிடையாது. நிலத்தின் தன்மைக்குத் தக்கபடி உஷ்ண உணர்ச்சி அதிகரிக்கும் அல்லது குறையும். கரிவடிமண் (Black Soil) உஷ்ணத்தை நன்றாய்க் கிரகித்துக் கொள்ளுமாகையால் அவ்வகை நிலத்தில் வெகு சீக்கிரமாக சூடேறும் சாம்பல் நிறமுள்ள நிலம் சூட்டை இழுத்துக்கொள்ளாததாகையால் மேற்கூறிய நிலத்தைவிட மிகவும் தாழ்ந்த சூடாகவேயிருக்கும். நிலத்தின் மண் பருமனாகவிருந்தால் உஷ்ணத்தை அதிகமாக எருவு அடக்கிக்கொள்ளும்.

நீரின் செயல்.—நிலம் நீரினால் சொதசொத என்று நனைந்து போகாதபடிக்கு நீரை வடித்துக்கொள்ள வேண்டும். நிலத்தில் நீரை வடிக்கும் விஷயமாய்ப் பேர்போனவராகிய 'பார்க்ஸ்' (Parkes) என்பவர் இவ்விஷயமாய் சில பரிசோதனைகள் செய்து பார்த்திருக்கிறார்.

பூமியிலுள்ள உஷ்ணத்திற்குக் காரணம்.

1. நிலத்தின் இயற்கை உஷ்ணம்.
2. பதார்த்தச் சிதைவால் உண்டாகும் உஷ்ணம்.
3. சூரிய வெப்பம்.

நிலத்தின் பொருள்கள்.—எல்லாவித நிலங்களிலும், மணல், களிமண், சுண்ணம், தாபரப் பொருள் (Humus or vegetable matter) உலோகப் பொருள்கள் இவை எல்லாம் சேர்ந்திருக்கின்றன.

1. மணல்.—வெகு சீக்கிரத்தில் உலர்ந்துவிடும். ஈரத்தை உறிஞ்சிக்கொள்ளும்சக்தி கிடையாது; வாயுக்களை அடக்கும் சக்தியும் இல்லை. இது, தான்ஏற்ற உஷ்ணத்தை வெளியேற்றவிடாது.

நீரிலும் திராவகத்திலும் கரையமாட்டாது. செடியிலுள்ள பொருள்களில் கலந்திருந்தாலும் இது மரஉணவுப்பொருளாகமாட்டாது. இது நிலக்கண்களைத் திறந்துவைப்பதோடு, நீரானது நிலத்திலிறங்கும்படி இடங்கொடுக்கும். இவ்வகை நிலத்தை உழுவது இலகு. மரஞ்செடிகளின் வேர் மூலங்கள் தாராளமாய் ஓடி நிலத்திலுள்ள மரஉணவைப் பெறுவதற்கு நன்றாய் இடங்கொடுக்கும். இது நிலத்தில் மிகுதியாயிருக்குமானால் அந்தநிலம் செழிப்பற்றதாயும் வறட்சியாயுமிருக்கும். ஆனால் சொற்பமாகச் சேர்ந்திருந்தால் அவ்வகைநிலம் மிகவும் சிறந்ததாகும்.

களிமண்.—இதில் அநேகவிதங்களுண்டு. சுத்தமானதல்ல களிமண்ணை நனைத்தால் சவண்டு கொடுக்கும், ஒருவிதமான நாற்றமுமுண்டு. வெய்யலில் உலர்ந்தால் கடினமாயிருக்கும். உடைந்தால் தூளாகச் சிதறும். கலப்பில்லாத களிமண் இயற்கையில் கிடையாது. அவ்விதமண் வியவசாயத்துக்கு உபயோகப்படாது. இது பொதுவாய் (potash) மரச்சாம்பற் பொருளோடும், சோடா உப்போடும் (soda) சுண்ணத்தோடும், (phosphoric acid) பாஸ்காமிலத் திராவகத்தோடும் (magnesia) மாக்னிசியாக் களிம்போடும், கரியமல வாயுவோடும் சேர்ந்திருக்கும். களிமண் மேற்கூறிய பொருள்களோடு கலந்திருப்பதற்கேற்றபடி மிகவும் சிறந்ததாகும். இது ஈரத்தைச் சீக்கிரம் வெளியேறவிடாது. இதனிடையில் செடிக்கு உணவுப்பொருளிருக்கிறது. போதுமான அளவில் மணல் அல்லது சுண்ணத்தோடு கலந்திருந்தால் அவ்விதநிலம் செழிப்புள்ளதா யிருக்கும். மணற்பாங்கான நிலத்தை இலகுவாய் உழுதுவிடலாம். ஆனால் களிநிலத்தை உழுவது வெகு கஷ்டமாயிருக்கும்.

சுண்ணாம்பு பூமி.—இயற்கையில் பளிங்கு, சீமைச்சுண்ணாம்பு, சுண்ணக்கல், பூச்சி, ஓடு இவைகளில் இது கலந்திருக்கிறது இது வெண்மையாயிருக்கும்; இதுவும் நீரை ஏற்று ஒருவாறு காத்துக்கொள்ளக்கூடியதுதான்.

நிலத்தின் செழிப்புக்கு முக்கியமாய், இது இருக்க வேண்டுவது. இது நல்லசெடி உணவுப்பொருளும், சிறந்த உரமுமாகும்.

சுண்ணாச்சத்து (Colcium Oxide).—இது தாவரப்பொருளைத்தாக்கி அதைச் சீக்கிரம் மட்கும்படிசெய்து, கரியமலவாயு, நவச்சாரகச்சத்து, நீராகப்பிரித்துவிடும். இது செடிகளுக்குக் கெடுதியான தாவரத் திராவகங்களோடு சேர்ந்து அவற்றின் தன்மையை யழிக்கும். இது உலோகப்பொருள்களையும் தாக்கக்கூடியது. நீற்றப்படாத சுண்ணம் அவ்வளவு சக்தியுடையதல்ல. சுண்ணம் களிமண்ணிலத்தோடு சேர்ந்தால் நல்லது ; இதுதானே செடிக்கு உணவை ஊட்டுவதல்லாமலும் நிலத்திலுள்ள மற்றச்செடி உணவுப்பொருள்களையும் வெளியேற்றிப் பயிரை ஊட்டச்செய்யும். நீற்றாத சுண்ணத்தைத்தான் இரசல்மண் (Light soil) நிலங்களுக்கு இடவேண்டும். இல்லையானால் நிலத்திலுள்ள இந்திரியப்பொருளைத் தின்றுவிடும். இதை மற்ற உரங்களோடு சேர்த்து இட்டால்தான் நிலத்தைச் செழிக்கச்செய்யுமேயொழிய தனியேபோட்டால் நிலத்தைக் கெடுத்துவிடும். களிமண்ணைப்போல இதுவும் பலபொருள்களோடு கலந்திருக்கிறது.

தாவரப்பொருள்.—இரண்டுவகை—பீட், (Peat) ஹியுமஸ் (Humus). நிலத்தில் அழுகும் தாவரப்பொருளைத்தான் ஹியுமஸ் (Humus) என்று சொல்லுகிறது.

பீட்.—Peat. உழுது பயிரிடும் நிலங்களில் தாவரப்பொருள்கள் எவ்வாறு திரள்கிறது. இது சற்று கறுப்பாயிருக்கும். இது விசேஷமாகவுள்ள நிலமும் அந்த நிறத்தைப்பெறும் ; இது எப்போதும் மட்கிக்கொண்டே யிருக்கும். ஆகையால் நிலத்தில் கரியமலவாயு அதிகரிக்கும். மேலும் நிலத்தில் பெய்யும் மழை ஜலத்தில் கரியமலவாயுவை மிகுதியாய்க் கலக்கச்செய்யு மாகையால் பயிர்களுக்கு

உணவைக் கொடுக்கிறது. இது தன்னிடத்திலுள்ள தார்க்கியஸ்தை நாளடைவில் வெளியேற்றுகிறது. இது நிலத்தின் தன்மையை மிகுதியும் செழிப்புறச் செய்கிறது. ஜலத்தை யடக்கிவைத்துக்கொண்டு நிலத்துக்கு வேண்டும்போது உதவுகிறது.

பழைய இரசாயனசாஸ்திரிகள் நிலத்தின் செழிப்புக்குக் காரணம் அதிலுள்ள "இந்திரியப் பொருளாற்றான்" என்ற கோட்பாட்டைக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அவ்விதமுடிவுக்கு வந்ததற்குக் காரணம் தோட்டநிலங்களிலும், மற்ற செழிப்பான பசளைமண் (Loamy) நிலங்களிலும் இந்திரியப்பொருள் மிகுந்திருப்பதனாற்றான். பாரன் லீபிக் (Baron Leibig) என்பவர் இந்தக் கோட்பாட்டை நிராகரித்தார். அவர் ஹியுமஸ் (Humus) நிலத்தின் செழிப்புக்குக் காரணமில்லையென்றும் நிலத்தின் செழிப்பின் பலனாகவே ஹியுமஸ் (Humus) என்னும் பொருள் உண்டாகிறதென்றும் கூறினார். பயிர்கள் ஆகாயத்தினின்று கரிச்சத்தை (carbon) வாங்கிக்கொள்வதால் நிலத்தில் அப்பொருள் மிகுதியாகிறது. ஹியுமஸ்என்பது கரிச்சத்தும், ஜலவாயுவும், பிராணவாயுவும் தார்க்கியசமும் கூடியது. இவைகளெல்லாம் ஆகாயத்தினின்றும் கிடைக்கிறது என்றாலும் ஹியுமஸ் மிகவும் உபயோகமானது; ஏனென்றால் அது சோராவிடில் நிலமானது தளாயும் பொரு பொருப்பாயு மிருக்கும்.

உலோகப் பொருள்கள். (Mineral fragments).—உழுது பயிரிடுவதற்கு ஒருவாறு தடையாயிருந்தாலும், இவை நிலத்துக்குமிகவும் உபயோககரமான பொருள்களாகும். ஏனெனில் நிலத்தின் தன்மையைத் திருத்தி பயிரிடுவதற்கு இலகுவாக்கிவிடும். இவைகள் பாறைகளினின்று நாளாவிருத்தியில் பெயர்ந்து கரைபவை. நன்றாய்க் கரைந்து நிலத்தோடு ஒன்றின்பின் ஒன்றாய் பயிருக்குவேண்டிய உணவைத் தரவல்லது.

செழிப்பும், செழிப்பின்மையும். (Fertility and Carrenness).—வேலைச்சிரமம். பணச்செலவு—இவைகளின் மிகுதியில்லாமலே ஏராளமான சிறந்த விளைச்சலைக் கொடுப்பதே 'செழிப்பு நிலமாகும்.' மிகுந்த சிரமம்; கவலை, பணச்செலவு முதலியவை செலவழித்தும் தக்க பலனைக் கொடுக்கக்கூடாத நிலத்தை 'தரிசு' அல்லது 'பாழ்' நிலம் என்பார்கள். மிகுந்த செழிப்புள்ள நிலமானது நீரை இலகுவாய் ஏற்றுக்கொள்ளவும் மிஞ்சியநீரை வடித்துக்கொள்ளவும் வெயில் மிகுதியால் சீக்கிரம் வறண்டுபோகாமலும் இருக்கவேண்டும்.

செடியின் வேர்கள் ஆழவும் அகன்றும் சென்று போஷிப்பைக் கிரகித்துக்கொள்ளத் தாராளமாய் இடங்கொடுக்கவேண்டும். தகுந்த சீதோஷ்ண நிலைமையிலுமிருக்கவேண்டும். கீழ்நிலமும் ஏற்றவாறு அமைந்திருக்கவேண்டும். பயிரைக் கெடுத்துவிடக்கூடிய பொருள்க (Ferrois iron, Salt, Alkali, Stagnant water) ளிருக்கக்கூடாது. நிலத்திலுள்ள பயிருணவுப் பொருள்களையும் அவற்றினளவையும் இரசாயன சாஸ்திரத்தாலும், மற்றக் குணங்களை சடசாஸ்திர உதவியினாலும் அறிந்துகொள்ளலாம்.

பொருள் பாகுபாட்டால். (Physical Analysis)—கல், மணல், களிமண், இந்திரியப்பொருள், சுண்ணம் முதலியவற்றின் அளவு ஒற்றுமைகளைத்தெரியக்கூடும். நிலத்தின் தன்மையையும் (Texture) அறியலாம். (Chemical analysis) இரசாயன பாகுபாட்டால் நிலத்தில் சேர்ந்திருக்கும் முக்கியமான பயிருணவுப் பொருள்களையும் அவற்றின் அளவையும் காண்கிறோம். செடிகள் தங்களுக்குவேண்டிய 'உலோகஉணவை' (Mineral constituents) நிலத்தினின்றே பெறுகிறது. அவற்றில் சில முக்கியமானவை. சில முக்கியமில்லாதவை. உலோகப்பொருள்கள் கரைந்த நிலைமையிலிருந்தால்தான் பயிர்கள் கிரகிக்கக்கூடும். தற்கால இரசாயன சாஸ்திரத்தின் உதவிபற்றிய டையர்ஸ் என்பவரின் 'Dyer's method' முறையினால் நிலத்தினின்றும் கிடைக்கக்கூடிய பயிர் உணவையும் அதன் அளவையும் ஒருவாறு அறிகிறோம்.

நிலத்தின் செழிப்புகுன்றுதல். (Exhaustion.)—பயிர் விளைந்தபின் அறுத்துவிடுவதனால் நிலத்தின் 'பயிர் போஷணைப்பொருள்கள்' குன்றிவிடும். ஆகையால் நிலம் பின்பு செழிப்பைத் தராது. அதைத்தான் 'பாழ்நிலம்' என்பது. இரண்டொரு வருஷம் தரிசாய்ப் போட்டுவிட்டால் பழையபடி செழிப்பைப்பெறும். அப்படிக் கிடப்பதனால் வெயில், மழை, காற்று முதலியவை தரிசாய்க்கிடக்கும் நிலத்தில் தாக்குகின்றன. நிலத்தில் யதேச்சையாய் வளரும் புற்பூண்டுகளின் வேர்களும் கிழிக்கின்றன. அப்படிச் செய்வதால் க்வார்டஸ், பாஸ்போரைட், ஜிப்சம், சுண்ணக்கல் (quarte, phosphorite gypsum, Limestone) மற்றும் பயிருக்குவேண்டிய உணவுப்பொருளைக் கொடுக்கக்கூடிய உலோகப் பொருள்கள் கரைந்து பயிரை ஊட்டும். ஆகையால் 'பயிர் போஷணைப்பொருள்' திரண்டுநிலத்தைத் திரும்பவும் செழிப்பாக்கிவிடும். இம்முறையைத்தான் தரிசுபோட்டு பழைய செழிப்புக்குக் கொண்டுவருவதென்பது. (Follow)

பூமிகளைப்பு (Exhaustion).—இருவகைப்படும் அதாவது(1)பொதுக்களைப்பு. (2) விசேஷக்களைப்பு.

1. ஒருவாறு முற்றிலுமே செழிப்புக் குன்றிவிடுதல் பொதுக்களைப்பு.

2. யாதானும் ஒன்று அல்லது சில செழிப்பொருளின்மையால் செழிப்புக்குன்றல் விசேஷக்களைப்பு. நிலத்தின் முதற்குறைவுக்கு பல உணவுப்பொருளையும் நிலத்துக்குத் தரக்கூடிய பொதுவாயுரத்தையும் 2-வது குறைவுக்கு அவ்வப்போது வேண்டிய தனிஉரத்தையும் போடவேண்டும்.

உரம் அல்லது எரு.—உரமானது இருவகைப்படும். (1) இந்திரிய உரம்(2) அநிந்திரிய உரம். இந்திரியவுரத்தில் விசேஷமாய் தார்க்கியசமுள்ளது. அநிந்திரிய உரத்தில் பாஸ்கராமிலம், சுண்ணம், மரச்சாம்பல் (Phosphorus, Lime, potash) சேர்ந்திருக்கும்.

நிலத்தின் செழிப்பின்மைக்கு காரணம்.—பயிருணவுப் பொருளில்லாமையாலுமிருக்கலாம். அல்லது நிலத்துக்குக் கெடுதிசெய்கிற வஸ்துக்கள் கலந்திருந்து செழிப்பைத்தின்றும் விடலாம்,—இன்னொரு காரணமுமிருக்கிறது. அது நிலத்தில் மிதமிஞ்சித் தங்கியிருக்கும் நீரை வடிக்காததால் உண்டாவது. இந்திரியப்பொருள் மிகுதியாயுள்ள கருநிலத்தில் (Peaty Soils) மக்குமண்ணிலும் மற்ற நிலங்களும் (Organic acid or humic acid) இந்திரியத்திராவகப்பொருள் மிதமிஞ்சியிருப்பதால் செழிப்பற்றதாய்ப் போய்விடுகின்றன. சுண்ணத்தை யிட்டாவது, நீரை வடித்தாவது தாக்கும்படி மண்ணை வெட்டிப்போட்டாவது இவை நீக்கவேண்டும். முக்கியமாய் நிலத்துக்கு கெடுதிவிளைவிக்கின்ற உப்புகளாவன:—சோடியம் சால்டஸ், சோடியம் கார்பொனேட் (Sodium salt's) (Sodium carbonate) மிகவும் கெடுதி விளைவிக்கின்றன.

BY A SPECIALIST.

சுகாதாரவிளக்கம்

HYGIENE

பண்டித நடேசசாஸ்திரியார் எழுதியது

நித்திரை

129. நித்திரையால் நமக்குண்டாகும் சுகம்.—ஒவ்வொரு அவயவமும் தூக்கத்தில் அதிக பலத்தை அடைகின்றது. தூக்கத்தில் ஜீரணம் அதிக வேகமாக நடக்கின்றது. தூக்கத்தில் தேகத்திலிருந்து மேல்தோல் வழியாக வரும் வியர்வை ஒன்று நீங்கலாக மற்றவித நீர்வடிவுகள் குறைச்சலாய் நடக்கும். வியர்வைமட்டும் தூங்கும்பொழுது அதிகம். இதுதான்தேகத்துக்குச் சுகாவகம். தூக்கத்தால் கண்களுக்குண்டாகும் சுகத்தைச் சொல்லிமுடியாது.

130. தூங்கச் செல்லுங்காலம்.—இக்காலமானது நடுஇரவுக்கு 4-5-நாழிகைக்கு (ஒன்று அல்லது இரண்டுமணி) முந்தியதாகவே யிருக்கவேண்டும். நடுராத்திரிக்கு முந்தி-ஒருநாழிகை தூங்கும் தூக்கம் நடுராத்திரிக்குப்பிந்தி இரண்டு நாழிகைத் தூக்கத்திற்குச் சமானமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இரவில் நன்றாகத் தூங்கிவிட்டு விடியற்காலத்தில் எழுந்திருப்பது தேகத்துக்கு சௌக்கியத்தைக்கொடுக்கும், புத்தியைச் சீர்த்திருத்தும், நீடித்த வாழ்நாளையும்கொடுக்கும்.

131. தூக்கம் அவசியம்.—எல்லாப் பிராணிகளும் 60-நாழிகைக்கு ஒருதடவை அவசியம் தூங்கியேதீரவேண்டும். பகலும் இரவும் 60-நாழிகை ஒருவன் மனத்துணிவோடு விழித்திருக்கலாம். அதன் பிறகு அவனால் கண் விழிக்கமுடியாது. அவன் அவசியம் தூங்கியே தீரவேண்டும். வண்டி ஓட்டுகிறவன் வண்டியின் பாரில் உட்கார்ந்துகொண்டே தூங்கிவிடுகின்றான். போர்க்களத்தில் 60-நாழிகை சேர்ந்தாற்போல் சண்டைபோடுகிறவர்கள் குதிரையின்மேல் சேணத்தில் உட்கார்ந்தபடியே தூங்கிவிடுகின்றார்கள். அலக்ஸாண்டர்-தி-கிரேட் (Alexander the Great) என்பவரும் நெபோலியன் என்பவரும்போர்க்களங்களில்போர்நடந்துகொண்டிருக்கும்பொழுதே நடுயுத்தத்தில் தங்களைச்சுற்றி நானாவித ஆயுதங்கள் வந்து விழுந்துகொண்டு தங்கள் பிராணனை பிரதிநிமிஷம் அபாயத்திற் குள்ளாக்கும் பொழுதே அயர்ந்து தூங்கிவிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

XI அதிகாரம்

ஒவ்வொருவனும் தனது சுகத்தைப் பேணிக்கொள்ளும் முறை.

132. சுகத்தில் அதிகக்கவலை.—இம்முறைகள் பலவாகையால் நம்மால் கூடியமட்டும் சில பொது முறைகளைமட்டும் இவ்விடம் எடுத்துச்சொல்லுவோம். நாம் சுகப்படும் முறைகளை எப்பொழுதும் நன்றாக அறிந்திருக்கவேண்டும் என்றாலும் எப்பொழுதும் அவைகளிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பது நமது சுகத்தை ஒருவாறு கெடுக்கும் தங்களுக்கே கொஞ்சம் வைத்தியம் தெரிந்திருந்தால் சிலர் காலையில் எழுந்தவுடன் நிமிஷத்துக்கு ஒருதடவை தங்கள் கையைப்பிடித்து தாதுபார்த்துக்கொண்டு பித்தம் அதிகமாயிற்று வாதமதிகமாயிற்று என்று கவலைப்பட்டுக்கொண்டே யிருப்பார்கள். சிலர் கண்ணாடியில் தங்கள்முகத்தைப் பார்த்துக்கொண்டும் கண்ணில் இரத்தமில்லை என்பார்கள். இவ்வண்ணம் ஒவ்வொருவனும் விசாரப்பட்டுக்கொண்டிருப்பானேயானால் அது அவன் சுகத்தைக் குறைக்கும்.

133. தனக்குத்தானே வைத்தியன்.—தன் தேகத்துக்கு ஏற்றுக்கொள்ளும் உணவு அவனவனுக்குத்தான் நன்றாகத்தெரியும். இது ஒவ்வொருவருடைய பழக்கத்தைப்பொறுத்தது. அவ்வாறு தனக்கேற்ற உணவைப் புசிப்பதாலும் அதை ஒருவாறு செரித்துக்கொள்ளத் தகுந்த வியாயாமம் குறைவின்றிச் செய்வதாலும், மிதத்துக்கு மீறிப்புசிக்காமலிருப்பதாலும், ஒவ்வொருவனும் தனது ஆகாரவிஷயமாய்த் தான் அடையவேண்டிய சுகத்தை அடைவான். பருத்ததேகமுடையவர்கள் கஞ்சி அதிகமாக நிற்கும் ஆகாரங்களை அகற்றி, கிழங்கு, சர்க்கரை, நெய் முதலிய கொழுப்புள்ள பதார்த்தங்களைவெகுவாய்ப்புசிக்காமலிருக்கவேண்டும். போஜனம்செய்யும்பொழுது அவஸரமாய்க் கவளத்தின்மேல் கவளம் புசிக்கக்கூடாது. பருத்ததேகமுள்ளவர்கள் அதிக உப்பும் காரமுமாகச் சாப்பிடுவதை நிறுத்தவேண்டும். இவைகள் அதிகமானால் நீரருந்துவது அதிகமாகும்.

134. வியாயாமம்.—நாம் ஒவ்வொருவரும் செய்யவேண்டிய வியாயாமம் நமது சொந்த சௌக்கியத்தைச் சார்ந்தது. வியாயாமம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவசியம். நமது நாட்டுப்பெண்கள் நமது வீட்டுவேலைகளைச் செய்வதால் போதுமான வியாயாமலாபத்தை அடைகின்றார்கள்.

135. உடுப்பு.—நம் சருமத்தை உடுப்பு அழகாய் மூடுவதுடன் நம்தேகத்திலுண்டாகும் உஷ்ணத்தைப்பாதுகாத்து நம் ஆகாரத்தைஜீர்ணமும்செய்து கொடுக்கின்றபடியால் உடுப்பு விஷயத்தில் நாம் காலத்துக்கும் இடத்துக்கும் வயதுக்கும் தகுந்தபடி ஒவ்வொருவரும் வெகு ஜாக்கிரதையாக விருத்தல்வேண்டும்.

136. ஸ்நானம்.—ஸ்நானவிஷயத்தில் அவனவன் தேகத்துக்கும் பலத்துக்கும் தகுந்தபடி வெந்நீரிலோ அல்லது தண்ணீரிலோ, அதிகாலையிலோ அல்லது எப்பொழுதோ ஒவ்வொருவனும் நீராடி தன் சருமத்தை வெகு பரிசுத்தமாக வைத்துக்கொள்ளவேணும்.

137. மலக்கட்டு.—இவ்வுபத்திரவமில்லாதவண்ணம் நாம் எப்போதும் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். இந்நோயால் வருந்துகின்றவர்கள் அடிக்கடி வாரத்துக்கு ஒருமுறை அல்லது மாதத்திற்கு இருமுறை பேதிக்கு வாங்கிகொள்ளுவார்கள். அவ்வழக்கம் மலக்கட்டைமுற்றிலும் நீக்காமற் போவதுடன் தேகத்துக்கு துர்ப்பலத்தைஉண்டாக்கும். ஆகாரத்துடன் அதிக நீர் உட்கொள்ளுவதாலும் கீரை முதலிய இனங்கள் ஆகாரத்தில் சேர்த்துப் புசிப்பதாலும், கனிவர்க்கங்களை அதிகமாகக் கூட்டுவதாலும் நாம் நமது மலபந்த அவஸ்தையை ஒருவாறு நீக்கிக்கொள்ளலாம்.

138. ஆதிவியாதி.—தேகத்திலுண்டாகும் நோய்களுக்கு வியாதியென்று பெயர். மனத்திலுண்டாகும் சங்கடங்களுக்கும் துக்கங்களுக்கும் கவலைகளுக்கும் ஆதி என்று பெயர். ஆதிக்கும் வியாதிக்கும் ஒரு அரை எழுத்துதான் வித்தியாசம். நாம் நமது மனத்தை விசாரமன்றியில் வைத்துக்கொள்ளுவது நமது தேகசௌக்கியத்திற்கு முக்கிய காரணம். சிலர் எப்பொழுதும் ஏக்கப்பட்டுக்கொண்டும் கவலைப்பட்டுக்கொண்டுமிருந்து தங்கள் தேக சௌக்கியத்தைக் குறைத்துக்கொள்ளுகிறார்கள். நாம் சந்தோஷமாயிருந்தால்நமது ஜீரணசக்திக்கு ஒருவிதக்குறைவும் வராது.

139. தேசவளம் நீர்வளம் முதலியன.—இவைகளைப்பற்றி நாம் கொஞ்சம் எப்பொழுதும் தெரிந்துகொண்டிருப்பது அவசியம். ஏன்? நாம் ஓரிடத்தில் வசிக்கும்பொழுது அவ்விடத்திலிருக்கும் சீதோஷ்ணங்கள், வாயுவின் சலனம், தீர்த்தம், நீர்வளம் இவைகளெல்லாம் நமது தேகசௌக்கியத்துடன் சம்பந்தப்பட்டிருக்கின்றன. மனிததேகமோ எத்தேசத்திலும் சென்று அவ்விடத்திய சீதோஷ்ணம் நீர்வளம் முதலியவைகளுக்கு தக்கபடி வசிக்க இயற்கையுள்ளது.

140. தேசப்பிரகிருதி.—பூமியின் உயரம், உத்ஸர்பிணி அல்லது அவஸர்பிணியாயிருக்கும் தன்மை, நாமிருக்கும் நாட்டின் காற்றோட்டம், மேகம்தங்கும் நிலைமை, மழைபொழியுமியற்கை, சுற்றியிருக்கும் சமுத்திரம் அல்லது மலை முதலிய பாங்கு, கோடைகாலம் முதலிய வருஷத்தின் பாகம், இவைகளவ்வளவும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும். நாம் குடியிருக்கும் தேசப்படி நமது தேகசௌக்கியத்தை அத்தேச பிரகிருதிக்குத்தக்கபடி நாம் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

141. வெளிச்சம்.—வெளிச்சம் ஒவ்வொருவனுக்கும் வெகு முக்கியம். நாம் வாசஞ்செய்யும் எல்லாவிடங்களிலும் வெளிச்சம் ஏராளமாகவேண்டும். மனிதர்களாகிய நமது தேகவளர்ச்சிக்கு வெளிச்சம் அவசியம் என்பது ஸித்தாந்தம்.

142. ஜலதோஷம்.—நாம் கொஞ்சம் அசாக்கிரதையாயிருப்பதால் பெரும்நோய்களை சில சமயத்தில் வரவழைத்துக்கொள்ளுவோம். நாம் தூங்கும்பொழுது நமதுதேகம் நன்றாக வியர்க்கும். அப்பொழுது தெரியாத்தனத்தால் நாம் காற்று நமமேலடிக்க இடங்கொடுத்தால் அதனால் ஜலதோஷமுண்டாகும். வெளியில் குளிர்ந்தகாற்று வீசும்போது உலாவும்படிவந்தால் வாயால் சுவாசிப்பதால் நாம் ஜலதோஷத்தை வரவழைத்துக்கொள்ளுவோம். நாம் வெகு வேகமாக வெளியில் நடந்துவிட்டு வியர்க்க வியர்க்க நமது வீட்டுக்குள் புகும்போதும் அல்லது நன்றாக வியாயாமம் செய்துவிட்டு தேகம் உஷ்ணமாய் வியர்த்துக்கொண்டிருக்கும்பொழுதும் நமது தேகத்தின்மேல் போட்டிருக்கும் துணிகளை அகற்றும்பொழுதும் காற்று மேலே படும்படிசெய்வதால் ஜலதோஷம் பிடிக்கும்படி செய்துகொள்ளுகிறோம். வெந்நீரில் ஸ்நானம் செய்தவுடன் குளிர்காற்றில் நிற்பதால் ஜலதோஷம் வரவழைத்துக் கொள்ளுகிறோம். இவ்வித அஜாக்கிரதை நம்மிட மிருக்கக்கூடாது. ஒருவாறு நம்மையறியாமல் நாம் இவ்விதமாய் நோயில் வருந்தும்படிவந்தால் அதை உடனே நாம் நீக்கிக்கொள்ளவேண்டும்.

குமார ஸம்பவம்

BIRTH OF KUMARA

பண்டித நடேசசாஸ்திரியார் மொழிபெயர்ப்பு.

IX அத்தியாயம்

52. அவள் தோழியும் அப் பிரமசாரிக்கு மறுமொழி சொல்லலானாள். ஐயா ஸாதுவே, இவ்வம்மணி எக்காரணத்தால் ஒரு தாமரைமலரை வெயிலுக்குக்குடையாகப் பிடிப்பதுபோல் தமது மேன்மையான தேகத்தை தவத்துக்கு ஸாதனமாக்கிக்கொண்டாள் என்பதைப்பற்றி உமக்குக் தெரிந்துகொள்ள அவாவிருந்தால் சொல்லுகிறேன்; கேளுங்கள்:—

53. வெகு செறுக்குள்ள இவ்வுத்தமி இந்திரன் முதலான எட்டுதிக்குப் பாலகர்களையும் வேண்டாம் என்று அவமதித்துவிட்டு மன்மதனையே எரித்த காரணத்தால் ஒருபொழுதும் அழகுக்கு அடங்காத பினாகபாணியையே தனக்குக் கணவனாக அடைய விரும்புகின்றாள்.

54. மன்மதன் உயிருடனிருந்த காலத்திலேயும் புரம் மூன்றெரித்தோன் போட்ட ஹுங்காரத்தால் அவன்மேல் படாமல் திரும்பிவந்த மன்மதபாணமானது அம்மன்மதனிப்பொழுது இறந்து அழிந்தேபோனபோதிலும் இப்பார்வதியின் உள்ளத்தில்மட்டும் நன்றாகத் தைத்திருக்கின்றது.

55. அதுமுதல் பார்வதி தனது தந்தைவீட்டில் தமது கூந்தல் நெற்றிச் சாந்தால் அழுக்கடைய மன்மதாவஸ்தைகொண்டு பனியே கல்லாய் உறைந்திருக்கும் பாறையில் உட்கார்ந்தும் சுகமடையாதவளாயிருந்தாள். *

56. சிவபெருமானுடைய சரித்திரம் ஓதப்படும்பொழுதெல்லாம், பார்வதி தனது கண்களில் நீர் ததும்ப வாய்குளர வனங்களில் தன்னுடன் கூடிப்பாடும் கின்னரமடந்தைகளையும் பலதடவைகளில் அழுதுகொண்டே பாடி நிற்கச்செய்தாள்.

57. அன்றியும் அவள் ஒவ்வொரு இரவும் மூன்று ஜாமம் முற்றிலும் விழித்திருந்து கடைசியாய்க் கொஞ்சம் மெய்யயர்ந்து கண்மூடி உடனே விழித்துக்கொண்டு, ஏ நீலகண்ட, நீங்கள் எங்கு போகின்றீர்

* இவ்வாறு குளிர்ந்தவிடங்களில் உட்கார்ந்தால் இவ்வித அவஸ்தை நீங்கும் என்பது கொள்கை. பார்வதிக்குமட்டும் நீங்கவேயில்லை என்பது கவியின் கருத்து.

என்று கூவி ஒருருவும் அருகிலில்லாமலிருக்கையிலேயே ஏதோ ஒருவர் கழுத்தில்தான் கையைப்போட்டு அணைத்துக்கொள்ளுவதாகக் கட்டிக்கொள்வாள்.

58. எல்லாப் பெரியோர்களும் எங்[illegible]மையறந்தவர்என்று உம்மைச் [illegible]லுகின்றார்களே. அப்படியிருக்க [illegible]ளத்தை முற்றிலும் நான் உம்மிடத்தில் செலுத்தியிருக்கின்றதுமட்டும் உமக்கு ஏன் தெரியவில்லை என்று இம்மடந்தை தனது உள்ளங்கையில் சிவபெருமான் உருவத்தை எழுதி அவரை மனதுக்குள்ளேயே நிந்திப்பாள்.

59. இப்பார்வதி இவ்வாறு தான் என்னதான் முயன்றும் சிவனை அடையமுடியாமல் தவத்தையன்றி வேறுவழி காணாதவளாய், தந்தையின் அனுமதிபெற்று எங்களுடன் தவம்புரிய இவ்வாச்சிரமம் வந்தாள்.

60. இங்கு இவள் செய்த தவத்துக்கு சாட்சிகளாய் விளங்கும் இவள்வைத்த மரங்கள் பழங்களோடு நிரம்பியவைகளாய்க் காணப்பட்டுங்கூட பிறைசூடியின் விஷயமாய் இவள் கொண்டிருக்கும் மனோரதம்மட்டும் இன்னும் மூளைவிட்டதாகக்கூடக் காணப்படவில்லை.

61. எத்தனைதான் பிரார்த்தித்தும் இதுவரையிற் கிட்டாத அச்சிவபெருமான், தவத்தால் மெய்மெலிந்தவளும் தோழிகளாகிய எங்களால் எப்பொழுதும் கண்ணுங்கண்ணீருமாய்ப் பார்க்கப்பெறுபவளுமான பார்வதியிடம் எப்பொழுது மனமிரங்கி நன்றாக உழப்பட்டு மழையின்மையில் பரிதாபமான நிலைமையில் இருக்கும் நிலத்தின் மேல் இந்திரன் மனமிரங்குவதுபோல், அவள் மனத்தைக் குளிரப்பண்ணுவானோ அதுதான் எங்களுக்குத் தெரியவில்லை.

62. பார்வதியின் கருத்தை நன்றாக அறிந்த அத்தோழி ஒன்றையும் ஒளிக்காமல் உள்ளதை உள்ளபடி அச்சிறுவனிடம் சொல்லவே, அவன் அதைக் கேட்டு தான் சந்தோஷப்பட்டதாக ஏதுங் காட்டிக்கொள்ளாமல் பார்வதியைப்பார்த்து "அம்மணி, இது உண்மைதானா, அல்லது பரிகாஸமா" என்று கேட்கலானான்,

63. அப்பொழுது பார்வதி தாமரை முகிழ் போல் விரல்கள் மூடியிருந்த தனது வலக்கைநுனியில் தனது ஜபமாலையைப் பற்றியவளாய் தான் வெகு நேரமாக இன்னதான் பேசவேண்டும் என்று நிர்ணயித்துக்கொண்டிருந்த சொற்களை வெகு கிரமத்துடன் சுருங்கிய சொற்களால் பின்வருமாறு சொல்லலானாள்.

64. வேதங்களை அறிந்தவர்களில் உத்தமரே, இதுவரை எனது தோழி சொன்னதைக் கேட்டபடி நான் ஏதோ பெரும்பதவியை அடையவிரும்பினவளாகவே இருக்கின்றேன். அப் பெரும்பதவியை அடைய இந்தத்தவம் எப்படிபோதும்? ஆனால் அப்படி எண்ணிவிட்டுவிடவும் மனம்வரவில்லை. ஆசைக்கு அளவில்லையன்றோ!

65. அதைக் கேட்டதும் அப்பிரமசாரி மறுபடி பேசலானான். எனக்கு மகேசுரனை நன்றாகத்தெரியும்! நீங்களோ அவனிடம் கருத்துக் கொண்டவராயிருக்கின்றீர்கள்! அசுபமான காரியங்களைச்செய்வதிலேயே அவனுக்கு எப்பொழுதும் அதிக ஆசையாகையால் நீங்கள் அவன்மேல்கொண்டிருக்கும் ஆசைக்கு இடங்கொடுக்க எனக்கு மனமில்லை.

66. அற்பவஸ்துவில் வீண் அபிமானம் வைத்தவரே! முதல் முதல் கலியாணச்சரடு கட்டிய உமதுகையால் நாகப்பாம்பை வளையலாக அணிந்திருக்கும் சிவன்கையைநீங்கள் எவ்வாறு பற்றுவீர்கள்?

67. நீங்களே உங்களுக்குத் தெரிந்தமட்டில் யோசித்துப்பாருங்கள், அழகான அன்னபட்சிகளின் உருவிழைக்கப்பெற்ற உங்களுடைய கலியாணப்பட்டும் இரத்தத்துளிகள் சொட்டும் ஆனைத்தோலும் ஒன்றுடன் மற்றொன்று முடிபோடச்சரிப்படுமோ?

68. திட்டாணிகளில் மலர்கள் பரப்பி உலாவிக்கொண்டு செங்குழம்புச்சாயம் பூசிய உங்கள் பாதங்கள் எங்கும் தலைமயிர் சிதறிக்கிடக்கும் சுடுகாட்டில் அலையும்படி நேரிடுவதை உமது மாற்றான் கூட சகிக்கமாட்டானே.

69. முக்கண்ணன் மார்பில் நீங்கள் அணையும்படி நேரிட்டால் அதைவிட ஒவ்வாமை வேறுமுண்டோ! அரிசந்தன நற்சாந்தணிந்த உங்கள் மார்பில் சுடுகாட்டுச் சாம்பலன்றோ படியும்?

70. இன்னும் ஒரு முதன்மையான அவமானத்தைச் சொல்லுகின்றேன் கேளுங்கள். உங்கள் கலியாணமானவுடன் யானையின் மேலேறி ராஜகுமாரிக்குத் தக்கபடி நீங்கள் நகர்வலம் வரவேண்டியதாகவிருக்க நீங்கள் கிழ எருதின்மேல் ஏறியல்லவோ உட்காரவேண்டியதாயிருக்கும். அப்பொழுது நகரத்து ஜனங்கள் எல்லாரும் சிரித்த முகத்துடன் பரிகாசம் பண்ணியல்லவோ உங்களைப் பார்ப்பார்கள்?

71. ஈசனுடன் சேரவேண்டும் என்ற ஆசையுடனிருக்கும் இருவர்களைப்பற்றித்தான் நானிப்பொழுது விசாரப்பட வேண்டியிருக்கின்றது. அவர்கள் யாரெனில் ஏற்கெனவே ஈசனுடன் சேர்ந்துவிட்ட வெகு காந்தி படைத்த சந்திரனுடைய கலை ஒன்று. மற்றது இவ்வுலகத்தின் கண்களுக்கு சந்திரகாந்திபோல் விளங்கும் நீங்கள்.

72. சுடலையாடியின் முகத்தின் அழகோ முக்கண்கள்கொண்ட அழகு! அவன் பிறப்போ தெரியாதபிறப்பு. அவனுடைய ஐசுவரியமோ திகம்பரன் (ஆடை அற்றோன்) என்ற அவன்பெயராலேயே வெளிப்படுகின்றது. இளம் மானின் கண்களுடையாய்! உலகத்தார் தங்கள்மாப்பிள்ளைகளிடம் நாடிப்பார்க்கும் இலட்சணங்களில் ஏதாவது சிறிது முக்கண்ணனிடம் இருக்கின்றதா நீங்களே யோசித்துப் பாருங்கள்.

73. ஆகையால் இவ்விரும்பத்தகாத தன்மைபெற்ற இக்காரியத்திலிருந்து உங்கள் மனத்தை அகற்றுங்கள். அவ்வாறிருக்கும் அவனெங்கே, எல்லாவித உயர்ந்த பாக்கியங்கள் பெற்று இவ்வாறிருக்கும் நீங்கள் எங்கே. மயானத்தில் நட்டிருக்கும் கழுமரத்துக்குப்போய் வேதியர்கள் யாகஸ்தம்பத்திற்குச்செய்யும் பூஜைகளெல்லாம் செய்வதைப் பெரியோர்கள் ஒப்புவார்களா?

74. இவ்வாறு அவ்வந்தணன் தனக்கு விரோதமாகப் பேசவே பார்வதி துடிக்கும் தனது உதட்டில் தனது கோபத்தை வெளிக்காட்டுகின்றவளாய் ஓரங்களில் சிவந்து புருவங்கள் நெருக்கப்பெற்ற தனது கண்களைச் சுழற்றிஅவனை ஒரு பார்வை பார்த்தாள்.

75. அன்றியும் பின்வருமாறு அவனைப்பார்த்துச் சொல்லலானாள்:—சிவபெருமானை நீ உண்மையாக அறிந்துகொள்ளாதபடியால் நீ இவ்வாறு பேசினாய். எளிதில் உலகத்தாரால் ஆராய்ந்தறிய முடியாதவரும் மனத்தால் எட்டமுடியாதவருமான பெரியோர்களைமூடர்கள் எப்பொழுதும் நிந்திப்பது வழக்கம்.

76. தனக்குவரும் ஆபத்துகளை விலக்கவேண்டியவனும் அல்லது ஐசுவரியங்களை அடையவேண்டியவனுமே சுபமானகாரியத்தையே செய்துகொண்டிருப்பான். இவ்வுலகங்களுக்கெல்லாம் அடைக்கலமாயிருந்துகொண்டு ஓர்வித ஆசையும் பற்றுமில்லாத ஈசனுக்கு ஆசையை மனத்தில் விளைவிக்கும் இவ்விதச் சுபங்கள் எதுக்கு?

நீலி வசீகரம்

TAMING OF THE SHREW

(வநிதேசுவரியும் விஜயராகவ உடையாரும் முன் வருதல்.)

சுப் — அம்மணி! நீங்கள் இருவரும் நன்றாக வாழுங்கள்; நானும் பிரதாபருத்திரதேவரும் உன்னை நிராகரித்துவிட்டோம்.

வநி.—நிஜமாகவா? என்னுடன் பரிகாசம் செய்யாதேயும்.

சுப்.—நிஜந்தான்; துணியைப்போட்டு வேண்டுமானாலும் தாண்டட்டுமா?

விஜ.—அப்படியானால் கோவிந்தவாத்தி ஒழிந்தாள்.

சுப்.—அவர், அத்தைமகளைக் கட்டிக்கொள்வதாகப் போய்விட்டார்.

வநி.—எப்படியாவது சுகமாக வாழட்டும். ஆனால் அவள் என் அக்காளைப்போன்ற குணமுள்ளவளாயிற்றே!

சுப்.—கல்யாணம் பண்ணிக்கொண்டு ஸ்திரீகளை வசீகரம் செய்யும் பள்ளிக்கூடத்துக்குப் போகப் போகிறாராம்.

வநி—பள்ளிக்கூடமா? அப்படி யொன்றிருக்கிறதா? எங்கே இருக்கிறது.

சுப்.—ஆமாம், இருக்கிறது; அதில் உபாத்தியாயராக நாராயணத்தேவர் இருக்கிறார்; அவரிடம் படித்தால், நீலியையும் வாயாடியையும் வசப்படுத்துவதற்குக் கற்றுக்கொள்ளலாம்.

(கேசவன் வருதல்)

கே.—இந்நேரம் பார்த்துப்பார்த்து என் கண்ணெல்லாம் பூத்துப்போய்விட்டது; கடைசியாக ஒருவன் வந்தான்; அவன் நம்முடைய காரியத்துக்குப் பொருத்தமுள்ளவனாக விருப்பான்.

சுப்.—அவன் யாவனென்று தெரியுமா?

கே.—ஐயா! பரதேசியோ, என்னவோ தெரியவில்லை. நடை முதலியவற்றைப் பார்த்தால் பெரிய எஜமானரைப்போலவே இருக்கிறான்.

விஜ.—சுப்பராயா! அவன் எதற்காக?

சுப்.—அவன் யோக்கியனாக விருந்தால் அவனை நல்ல நாயக உடையாராக்கி, ரகுநாத தேவரிடம்

கொண்டுபோய்விட்டு, காரியத்தை முடித்துவிடுகிறேன். நீங்கள் உள்ளே போங்கள்; நான் காரியத்தைப் பார்த்துக்கொள்ளுகிறேன்.

(விஜயராகவ உடையாரும் வசிதேசுவரியும் போதல்)

(தீர்த்தயாத்திரை வருதல்)

தீர்.—யாரப்பா, அங்கே? நீர் இந்தவூர்தானா?

சுப்.—ஆமாம், ஐயா தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கே போவதிப்போது?

தீர்.—நான் ராமேசுவரத்திலிருந்து வருகிறேன்; வடக்கே காசி, பிரயாகை, கயை முதலிய க்ஷேத்திரங்களுக்குப் போகவேண்டுமென்று உத்தேசிக்கிறேன். ஈசுவரன்செயல் எப்படியோ யாருக்குத் தெரியும்?

சுப்.—தாங்கள் ஜன்மபூமி எதுவோ?

தீர்.—நான் நிரந்தரமாக இருப்பது ராஜமன்னார் கோயில். ஏறக்குறைய முப்பதுவருஷமாக இப்படி தேசசஞ்சாரம்தான் செய்கிறேன். கங்கா ஸ்நாநம் மூன்றுதடவை செய்திருக்கிறேன்; இப்போது பஞ்சகாலமாக விருப்பதால் அங்கே போகவேண்டாமென்று எல்லோரும் சொல்லுகிறார்கள். ஆனால் இங்கே இருந்தால் குக்ஷிபாதை தீருவது எப்படி?

சுப்.—உங்களைப் பார்த்தால் சாக்ஷாத் ஈசுவரனைப் போல விருக்கிறது, உங்களைப்போன்ற புண்ணியவான்களைத் தரிசித்தால் பண்ணிய பாவங்களெல்லாம் நசித்துவிடும்; எல்லாவித ஒத்தாசையும் நான் செய்கிறேன்; நீங்கள் விசாரப்படவேண்டாம்.

தீர்.—உனக்கு க்ஷேமமுண்டாகும்; உன்னை எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருப்பேன்.

சுப்.—தாங்கள் எப்போதாவது தஞ்சைக்குப்போனதுண்டோ?

தீர்.—என்ன அப்படிக் கேட்கிறாய்? தஞ்சைக்கு அடிக்கடி போயிருக்கிறேன். பிரகதீசுவரனைத் தரிசிக்கிறதற்கு குறைந்தது ஐம்பதுதரமாயினும் போயிருப்பேன்.

சுப்.—அவ்விடத்தில் நல்லநாயக உடையாரைத் தெரியுமோ?

தீர்.—பரிச்சயமில்லை; ஆனால் அவரது குணாதிசயங்களைப்பற்றி விசேஷமாய்ச்சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் பெருத்த தனிகராமல்லவா?

சுப்.—அவர் என்னுடைய தகப்பனார்; அவரைப் பார்த்தால் உங்களைப்பார்க்கவேண்டாம்; இரண்டு பேரும் ஒரே அச்சாக விருக்கிறீர்கள்.

தீர்.—அப்படியா? அடடா! வெகு பாக்கியம்! நீர் இங்கு என்ன செய்கிறீர்? ஏதாவது அரண்மனையில் * எட்டிப்பட்டம் பெற்றிருக்கிறீரோ?

சுப்.—நான் இங்கே ஒரு காரியமாக வந்திருக்கிறேன்; அதில் நீர் கொஞ்சம் உதவிசெய்தால், உமக்கு ஏராளமான பணம் கொடுக்கிறேன். நீரும் எனது தந்தையான தஞ்சை நல்லநாயக உடையாரும் ஒரே சாயலினரென்று சொன்னேனல்லவா? நீர் இப்போது அவர்தானென்று சொல்லிக்கொண்டு நடக்கவேண்டும்; என் வீட்டில் இருந்து சவுக்கியமாய்க் காலங்கழிக்கலாம். தெரிந்ததா? இதற்குச் சம்மதமா, உமக்கு?

தீர்.—(தனக்குள்) இன்றைக்கு நரிமுகத்தில்தான் விழித்தேன்போலும்! எனது தரித்திரம் அதமாய்ப்போய்விட்டது, இன்றோடே.—(வெளிப்படையாய்) உம்மைப் பார்த்தால் வெகு நல்லவர் என்று தோன்றுகிறது. என்னால் கூடுமானவரையில் உதவிசெய்கிறேன்.

சுப்.—அப்படியானால் என்னுடன் வாரும்; என்னுடைய தகப்பனார் இன்றைக்காவது நாளைக்காவது வருவார்; எனக்கும் இவ்வூர் ரகுநாததேவரின் பெண்ணுக்கும் நடக்கப்போகிற கல்யாண விஷயத்தைப்பற்றிப் பேசுவதற்காகவே அவர் வருகிறார்; அவ்விஷயங்களிலெல்லாம் நீர் நடந்துகொள்ளவேண்டியதற்கு நான் அடிக்கடி சொல்லிக்கொடுக்கிறேன். இப்போது எனது ஜாகைக்கு வாரும். முதலில் நீர் நல்ல உடை உடுத்துக்கொள்ளவேண்டும்.

(போதல்)

களம் 3 உரையூர் நாராயணத்தேவர் வீடு.

(கௌதமிதேவியும் பொன்னனும் வருதல்.)

பொ.—நான் மாட்டவே மாட்டேன்; என் பிழைப்புப்போய்விடும், அம்மணி, தெரிந்தால் எஜமானர் என்னைக் கொன்றுவிடுவார்.

* எட்டிப்பட்டம் என்பது முற்காலத்தில் தமிழ்நாட்டில் வணிகர்க்கு அரசரால் கொடுக்கப்படும் பட்டம் ஒன்று. அதன் அடையாளம் ஓர் பொற்பூ.

கௌ.—வரவர அவர்கோபம் அதிகரிக்கிறதே யொழியக் குறைந்தபாடில்லை. என்னைப் பட்டினிபோட்டுக்கொல்வதற்காகவா கல்யாணம் செய்துகொண்டார்? என் தகப்பனார் வீட்டுவாசலில் வரும் பிச்சைக்காரனுக்குக்கூ[illegible] நிறைய சோறுபோட்டுப் போகச்சொல்லுவார்கள்! [illegible]க்குப் பசி காதடைக்கின்றது; இரண்டு இராத்திரியாகத் தூங்கவேயில்லை; உடம்பு தளர்ந்துபோகின்றது; இப்படிக் கொல்லுகையில், எல்லாம் என்மேல் பிரியத்தினால்தான் செய்வதாகச் சொல்லுகிறார். செத்தாலும் நன்றுதான்போலும்.—உன்னைக் கெஞ்சிக்கேட்கிறேன். உள்ளேபோய்க்கொஞ்சம் சோறுகொண்டுவா; ஏதுவாக இருந்தாலும் பாதகமில்லை.

பொ.—கொஞ்சம் பொங்கல் கொண்டுவரட்டுமா?

கௌ.—கொண்டுவா; அதில் எனக்கு அதிகப்பிரீதி.

பொ.—பொங்கல் அஜீர்ணத்தைக் கொண்டுவந்துவிடும்; அது வேண்டாம்; கொஞ்சம் புளியஞ்சாதம் கொண்டுவருகிறேனே?

கௌ.—நீ நல்லவன்; கொண்டுவா, கொண்டுவா; அதைத்தான் நான் பிரியமாய்ச் சாப்பிடுவது வழக்கம்.

பொ.—அது மந்தத்தைக் கொடுக்குமே; அது வேண்டாம்; தயிர்ச்சாதம் கொண்டுவருகிறேன்.

கௌ.—அதுவும் எனக்குப் பிரியந்தான். அதையேனும் கொண்டுவா.

பொ.—அதில் காரமிருக்காதே? காரமுள்ளதல்லவா உங்களுக்கு வேண்டும்?

கௌ.—ஏதாவது கொண்டுவா; என்னை கேட்கவேண்டாம்; சீக்கிரம் கொண்டுவா.

பொ.—வெறும்சாதம் கொண்டுவரட்டுமா?

கௌ.—அட, நீ நாசமாய்ப்போக! சோறு சோறு என்று வாயால் சொல்லிக்கொண்டே ஏமாற்றுகிறாயா? நீ தொலைந்துபோ. (அவனை யடித்தல்.) நான் இப்படிப் பட்டினிகிடந்து சாகிறது உங்கள் எல்லோருக்கும் சந்தோஷமா? நீ இங்கே இருக்காதே தொலைந்துபோ.

(நாராயணத்தேவர் ஒருதட்டில் ஆகாரத்துடன் வருதல், பிரதாபருத்திரதேவரும் வருதல்.)

நா.—கௌதமி! என்னபண்ணுகிறாய்?

பிர.—என்ன, கௌதமி! சௌக்கியமா?

கௌ.—சௌக்கியத்துக்கு என்னகுறைவு? உயிர் மாத்திரம்தான் போகவில்லை.

4

சிறுவர்க்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

உண்மையின் உயர்வு அல்லது நெல்லிப்பழம் ஏறிய கதை.—தூர்வாஸமுனிவனை திருப்தி செய்துவிட்[illegible] நாள் ஸாயங்காலம் அர்ச்[illegible]வாரகை போனபின்பு ஒரு லாஸமாய் விளையாடிக்கொண்டு ஒரு [illegible]யும் உல் செய்துகொண்டிருந்த நெல்லிமரத்தடியில வந்தார்கள். அங்குவந்ததும் மரத்தின்மேல் இருந்த அழகிய நெல்லிக்கனியை திரௌபதி கண்டு அதைத் தனக்குப் பறித்துத்தரவேண்டுமென்று கேட்க அர்ச்சுனன் அவ்வாறே செய்தான். அதைக்கண்ட அருகிலிருந்த முனிகள் அர்ச்சுனனைநோக்கி இம்மரத்தடியில் தவம்செய்யும் முனிவர் ஆகாரத்திற்காக இந்த நெல்லிமரம் சிவஸங்கல்பத்தால் உண்டாயிருக்கிறது. அதில் பன்னிரண்டுவருஷத்திற்கு ஒருதரம்தான் பழம் பழுத்து இந்தமுனிவர்கையில் விழும். அவர் அதை அருகிலிருப்பவர்களுக்குக் கொடுத்துத்தாமும் புசித்து தவம்செய்யத் தொடங்குவார். பழம் நாளைக்கு விழவேண்டியது. நீ இன்று இவ்வாறு செய்துவிட்டபடியால் உனக்கு ருஷிசாபம்வருமென்று மறிவித்தனர். இதை அர்ச்சுனன் தருமபுத்ரரிடம் சொல்ல பாண்டவர்கள் எல்லோருக்கும் மிகுந்த துக்கம் வந்தது. அவர்கள் கிருஷ்ணபகவானைத் தியானித்தனர். உடனே அவர்வந்து அவர்களை நெல்லிமரத்தடிக்கு அழைத்துப்போய், 'உண்மையால் ஆகாதகாரியம் ஒன்றும் இல்லை. உங்கள் மனத்திற்குள் அந்தரங்கமாக இருக்கும் ரகஸிய எண்ணத்தை வெளியிடுவீராயின் இந்தப்பழம் மரத்தை நோக்கி மெதுவாக ஏறிமுன்போல ஒட்டிக்கொள்ளும்' என்றார். அப்பொழுது தருமபுத்திரர், 'தர்மமும், பொறுமையும், கிருஷ்ணபகவானுமே, என் மனத்துள் ஸதா ஊடரிக்கொண்டிருப்பன. பாபம் முதலியவைகள் என் மனத்துள் நுழைய நான் இடங்கொடுப்பதில்லை.' என பழம் இரண்டுமுழம் ஏறியது. பீமன் 'பிறன் பெண்சாதியை ஸஹோதரி என்று பாவிக்கவேண்டும், பரநிந்தைகூடா, பிறர் துக்கத்தைத் தன் துக்கமாக பாவிக்கவேண்டும் பிறன் பொருளை வெறுக்கவேண்டும், என்பதுமே நான் எண்ணும் எண்ணங்கள், என பழம் பின்னும், இரண்டுமுழம் ஏறியது. அர்ச்சுனன் 'உயிரைவிட மானம், மேல் ஆதலால் மானத்தைக் காப்பாற்றவேண்டும், மானமே உயர்ந்தகுலத்

திற்கு ஸமானம்' என்று தன் கருத்தைவெளியிட்டான். உடனே பழம் இரண்டுமுழம் உயர்ந்தது. அப்பொழுது நகுலன் முன்வந்து 'ஞானமும் கல்வியும் இல்லாதவர்கள் பதருக்கு ஸமானம்' என்றுசொல்ல கனி இரண்டுமுழம் உயர்ந்தது, அப்பொழுது ஸஹாதேவன் 'ஸத்யமே என்தாய். ஞானமே தந்[illegible], சாந்தமே மமே துணைவன், கருணையே ஸ்[illegible] [illegible]ள்ளை' என்ற பெண்சாதி[illegible]ரண்டுமுழம் எறியது. பின்பு திரௌபதிவந்து மிகுந்த வெட்கத்துடன் 'எனக்கு ஐந்து கணவர் இருந்தாலும் என்மனம் என்னை ஓர் ஸமயங்களில் மோசமசெய்து வேறுபுருஷனை நாடிப்போகும். ஆகையால் இதை உற்றுநோக்கில் ஒருபுருஷர் யாராவது இருக்கிறவரையில் பதிவ்ருதாஸ்திரீகளே உலகில் இல்லை' என்று எனக்குத் தோற்றுகிறது என்று சொல்லவும் பழம் மரத்தில் முன்னிருந்த இடத்தில் ஒட்டிக்கொண்டது. எல்லோரும் வியப்படைந்து தத்தம் இருப்பிடம் சென்றனர்.

***

குரங்குகளின் கூரியபுத்தி.—பம்பாய் ராஜதானி ஷோலாப்பூர் ஜில்லாவைச்சேர்ந்த யோகராஜக் கிராமத்தில் ஓர்குரங்காட்டி இருந்தான். அவன் ஒருஆட்டையும், மூன்று குரங்குகளையும் வைத்துக்கொண்டு அவைகளை ஆட்டிப் பிழைத்துவந்தான். சென்றமாதம் அவ்வூராரில் சிலர் குரங்காட்டியைநோக்கி 'உன் ஆடு நன்றாக கொழுத்திருக்கிறது. எங்களுக்குக் கொன்றுதின்னக் கொடு' என்று கேட்டனர். அதற்கு அவன் தான் அந்தஆட்டை மிகுந்தஅன்புடன் வளர்த்துவந்ததாகவும், அதுவே தன் பிழைப்பிற்குக் காரணமாக இருக்கின்றது என்பதாகவும், ஆதலால் அதைத் தன்னால் கொடுக்கமுடியாது என்பதாகவும் சொன்னான். அவர்களுள் ஒருவன்எப்படியாவதுஆட்டைப் பிடுங்கிக்கொள்வதே ஸரிஎன முயற்சிப்பதைக் கண்ட குரங்காட்டி தன் கையிலிருந்த ஸம்பாத்தியமாகிய நான்குரூபாய்களை அவன்கையில்கொடுத்து, வேறு எங்கேயாவது போய் வேறொருஆட்டை வாங்கிக்கொள் என்பதைக் குறிப்பிக்க,அந்தமூடன்குரங்காட்டிக்கும் ஆட்டிற்கும் இருந்த அன்பின் வலிமையைக் கவனியாதவனாக அந்தஆட்டை அவனிடமிருந்து பலாத்காரமாய்ப் பிடுங்கிக்கொண்டான். அப்பொழுது குரங்காட்டி பிரிவாற்றாமையால் மிகவருந்தி அந்த ஆட்டைக் கைப்பற்றிக்கொள்ள யத்தனிக்க, எங்கே தனது குற்றம் வெளியாய் விடுமோ என்று பயந்த அவ்வூரான் ஆட்டைக் கொன்றுவிட ஏற்பாடுகள் செய்துவிட்டு குரங்காட்டியை திடீரென்று கொன்று அவனை அருகாமையிலிருக்கும் ஓர் காட்டில் இருந்த மரத்தடியில் புதைத்துவிட்டான். ஆட்டை மிகுந்தஅன்புடன்வளர்த்[illegible] குரங்குகளையும் அவ்[illegible]த்திருப்பான் என்பதற்கு என்ன [illegible]தகம். தமது அன்பான எஜமானனை அவ்வூரான் படுத்தும்பாடுகளை எல்லாம் கவனத்துடன் பார்த்துவந்த குரங்குகளில் ஒன்று அவனை புதைத்த இடத்திலேயே காவலாக நின்றுவிட்டது. மற்றொரு குரங்குகொலைசெய்தவன் வீட்டிலேயே காத்திருந்து கொல்லப்பட்ட தனது நண்பனான ஆட்டின்தோலை மிகுந்தபரிவுடன் எடுத்துக்கொண்டு தன் எஜமானன் உடல் புதைக்கப்பட்டிருந்த இடத்திற்கு அருகாமையில் உள்ள ஓர் மரத்தின்மேல் வந்து ஏறிக்கொண்டுவிட்டது. மூன்றும் குரங்கு ஊரெங்கும் அன்று உலாவிக்கொண்டிருந்தது. அப்பொழுது போலீஸ் ஸேவகனைக்காண அது அவனது மேல்துணியைப் பிடித்துக் காட்டுமுகமாய் இழுக்க,அவன் அதை இரண்டொருதடவை ஒட்டிப்பார்த்தான். அந்தக்குரங்கு அடிக்கடி அவனைக்கடிக்காது ஒரேபக்கத்தை நோக்கி இழுக்கஅவன் அதன்பின்னேபோகத்தொடங்கினான். அது அவனை மேல் இழுக்காமல் முன்னேவழிகாட்டிக்கொண்டுசென்று அந்த ஸேவகனைத் தன் எஜமானன் புதைக்கப்பட்டிருந்த இடம் கொண்டுவர, அங்கிருந்த குரங்கும் வந்த குரங்கும் சேர்ந்து மண்ணைப்பறித்துத்தமது எஜமானன் தலைமயிர்தெரியும் அளவும் போய்நின்றுவிட்டன. உடனே ஸேவகன், மேல்பறித்து, குரங்காட்டியினது பிணத்தை வெளியில் எடுத்தான். மரத்தின்மேல்ஆட்டுத்தோலோடு இருந்த குரங்குகீழே இறங்கிவந்து ஸேவகனை இழுக்க அவன் இந்தப் பிணத்திற்குவேண்டிய ஏற்பாடுகள்செய்துவிட்டுமூன்றும் குரங்குடன்போக, அது அவனை தன் நண்பனான ஆட்டையும் தனது அன்புள்ள எஜமானனையும் கொன்றபாபியின் வீடு கொண்டுசேர்த்தது. அங்கு அந்தபாபியைக்கண்டதும் இக்குரங்கு அவன் மேலே விழுந்து பிடுங்கத்தொடங்க ஸேவகனுக்கு நடந்த விஷயங்கள் ஒருவாறு மனதிற்குப்பட்டன. அந்த பாபியை பிடித்து சிறையில் இட்டுவிட்டு அந்த ஸேவகன்மூன்று குரங்குகளையும், ஆட்டுத்தோல், பிணம் முதலியவைகளையும் போலீஸ் கச்சேரிக்குக் கொண்டுபோய் வைத்திருக்கிறானாம். தன் எஜமானன்விஷயத்தில் இவ்வளவு அன்புடன் பாடுபட்டஸாக்ஷியாகக் காத்திருக்கும் குரங்குகளை சுற்றுமுள்ள ஊர்களிலிருந்துஅநேகர் கூட்டங்கூட்டமாக வந்து பார்த்

துப்போகின்றனராம். விசாரணை ஆவணி மாதம் 9-ம் தேதியில் நடக்கப்போகின்றது குமரகுருபரஸ்வாமிகள் தமது நீதிநெறிவிளக்கத்தில்

"மறைவழிப் பட்ட பழமொழி தெய்வம்
பறையறைந்தாங் கோடிப் பறக்கும்—கழி முடை
புன்பலா னாற்றம் புறம்பொதிந்து மூடினூஉம்
சென்றுதைக்குஞ் சேயார் முகத்து"

என்று கூறியுள்ளபாட்டின் கருத்து இக்கதையில் எவ்வாறு வெளிவந்திருக்கின்றது பாருங்கள் !

***

கெடுவான் கேடு நினைப்பான்.—பங்காளதேசத்தில் ஓர் தெருப்பள்ளிக்கூடம் உபாத்தியாயர் இருந்தாராம். அவரிடம் கொஞ்சபிள்ளைகள் படித்துவந்தார்கள். அவர்களுள் ஓர் பணக்காரன் பிள்ளையும் இருந்தானாம். அவன் ஒருநாள் விலையுயர்ந்த ஆபரணங்கள் பலவற்றை அணிந்துகொண்டு பள்ளிக்கு வந்தான் இவைகளை எவ்விதத்திலாவது தாம் கைப்பற்றிக்கொள்ளவேண்டும் என்ற துர்எண்ணம் அந்த உபாத்தியாயருக்குவர அவர் அன்றுமாலை மற்றையப் பிள்ளைகளைஎல்லாம் போகச் சொல்லிவிட்டு பணக்காரவீட்டுப் பிள்ளையைமாத்திரம் நிறுத்திக்கொண்டார். தனக்கு ஏதோ புதியவிஷயம் ஒன்று கற்பிக்கப் போகிறார் என்று மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு அந்தப்பையன் நிற்கும்தருணத்தில் உபாத்தியாயர்வந்து அவனை பயமுறுத்தி நகைகளைகழற்றிக்கொண்டுவிட்டார். வெளியில் போகவிட்டால் எங்கே பையன் தனது ரகஸியத்தை வெளிவிட்டுவிடுவானோ என்ற பயத்தால் உபாத்தியாயர் அருகாமையில் இருந்த ஓர் கல்லை எடுத்து அவனை அதனால் மெதுவாகக் குத்திக் கொல்லத்தொடங்கினார். அப்பொழுது பையன் வலிபொறுக்கமுடியாது தன்னைக் கஷ்டப்படுத்தாது ஓர் பெரியகல்லை எடுத்து தன் தலையில் இட்டுக் கொன்றுவிடுவது நலமாக இருக்கும்என்று கேட்டுக்கொள்ள உபாத்தியாயர் பெருங்கல்லைத் தேடிச்சென்று அத்தகைய கல்லொன்றைக் கண்டார். உடனே அதன் அருகில்சென்று அதைப் புரட்டத்தொடங்க அதன் அடியில் இருந்த பாம்பு ஒன்று அவர்கையைச் சுற்றிக்கொண்டது. அவர் தம்மை அறியாது கூக்குரல் இடத்தொடங்கினார். உடனே அங்கு ஊரார்கூடிவிட உபாத்தியாயர் கொடுந்தொழில் வெளியாயிற்று. கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த குழந்தைக்கு வேண்டிய சிகிச்சைகள் செய்யப்பட்டன. காலக்கிரமத்தில் உபாத்தியாயருக்குத் தகுந்த சிக்ஷையும் விதிக்கப்பட்டது.

சேம்பேரியும், தர்ம கர்த்தனும்.—ஒரு கோயிலில் ஓர் மஹான் வாஸம்செய்துகொண்டிருந்தார். [illegible]வர் அங்கு ஓர்மூலையில் கண்ணை மூடிக்கொண்டு காலைமுதல் நடு ராத்திரிவரையில் அசையாது உட்கார்ந்திருப்பது வழக்கம். நடுவில் தேகபாதை நிவர்த்திக்காக வெளியே ஒருவேளை போனால் போவார். மற்றையப்படிக் கோவிலில் எவ்வளவு கோலாஹலமான உத்ஸவம் நடந்தாலும் ஸரி, எவ்வளவு கூட்டம் நடமாடிக்கொண்டிருந்தாலும் ஸரி, அவர் தமது மூலையைவிட்டு அசைவதே இல்லை. அந்தக் கோவில் தர்மகர்த்தர் இவரை ஓர்பெரிய மஹான் என்று எண்ணித்தினம் கோவில் மடைப்பள்ளியிலிருந்து ஒரு பட்டைச்சோறு இவருக்குக் கொடுத்துவிடும்படி ஏற்பாடுசெய்துவிட்டு, ஒவ்வொருநாளும் தாம் வீட்டிற்குப் போவதற்குமுன் மிகுந்த பயபக்தியுடன் இம்மஹானுக்குத் தவறாது வந்தனை வழிபாடுகள்செய்துவிட்டுப்போவது வழக்கம். கொஞ்ச வருஷத்திற்கெல்லாம் இந்தபக்திமானான தர்மகர்த்தர் இறக்க அவரதுபிள்ளை கோவிலுக்கு தர்ம கர்த்தாவாக வந்தார்.

இந்தப் புது தர்மகர்த்தனும் மற்றைச் சிறுவர்கள் போல தமது பெரியோர்களை புத்திஹீனர்கள் என்றுகொண்டு கோயில் விஷயங்களை தன் மனம போன போக்கே சீர்திருத்தத் தொடங்கினான் அந்த சீர்திருத்தங்களுள் மூலையிலிருந்த சேம்பேரிக்கு—மஹானுக்கு அவன் கொடுத்தபெயர்—அதுவரையிலும் கொடுத்து வந்த பட்டைச்சோற்றை நிறுத்திவிட்டது ஒன்றாக இருந்தது. அந்தச் 'சேம்பேரியோ' தன் மூலையைவிட்டு அசையவே இல்லை. நடந்த சீர்திருத்தத்தால் அவன் தாக்கப்பட்டவன் போலக் காணப்படவில்லை. ஆனால் பட்டைச்சோறு நின்றுபோய்விட்டபடியால் தமக்குப் பசிவந்தவேளை மாத்திரம் மத்தியானஸமயத்தில் கோயிலைவிட்டு வெளியேறி சிலவீடுகள்சென்று அவ்வீட்டோர் அன்புடன்இட்ட பிச்சை உண்டு தம்மிடம் வந்து உட்கார்ந்து கொண்டிருந்தார் இம்மஹான். இப்படி தனது சீர்திருத்தத்தால் பயனடையாது முன்போலவே 'சேம்பேரி' மூலையில் அசையாது இருப்பது

தர்மகர்த்தனுக்கு திருப்தியை உண்டாக்கவில்லை; ஆதலால் 'சேம்பேரி'க்கு சீர்திருத்தம் நடந்தது தெரியுமோ இல்லையோ என்ற ஸந்தேகம் மஹான் நடந்துகொண்டமாதிரியால் அவனுக்கு வந்துவிட்டது. பார்ப்போரிடமெல்லாம் மரியாதையை அடைந்து கர்வம் மண்டைகொண்டிருக்கும் தர்மகர்த்தனுக்கு 'சேம்பேரி' மாத்திரம் தனது சீர்திருத்தத்தைக் கவனியாது அலக்ஷ்யம்செய்வது மிகுந்த கௌரவக் குறைவாகப்பட அவனுக்கு புத்தி சொல்லி அவனை நல்லவழிக்கு திருப்பவேண்டும் என்ற எண்ணங்கொண்டான்.

இந்த நோக்கத்தோடு மஹானிடம்வந்து வாய்கூசாது மரியாதையுமின்றி 'நீ ஏன் இவ்வாறுவீண் காலம் கழிக்கிறாய்? உன் சிறந்த வாழ்நாளுள் ஏன் இவ்வளவு சேம்பேரியாகத் திரிகிறாய்?' என்று காட்டாளன்போல் திடீரென்று கேட்டான். இந்தஸமயத்திலும் மனங்கோணாது மஹான் புன்னகையுடன் அவனுக்கு நல்வரவுகூறி அருகாமையில் உட்காரச் சொன்னார். தர்மகர்த்தன் அவ்வாறே செய்ய மஹானும் முன்போல மௌனமானார். ஐந்து நிமிஷமாயிற்று தர்மகர்த்தன் கேள்விக்கு பதிலே வரவில்லை. அவருக்கு பதில் வாராதென்றே தோற்றியது ஓர் ஸம்பாஷணையும் இன்றி ஆந்தைகள்போல உட்கார்ந்திருப்பது அவனுக்கு பிடிக்காததால் இந்த ஸங்கம் அவனுக்கு மிகுந்த கஷ்டத்தை உண்டாக்கியது. மனதடங்கி அவனால் உட்கார முடியவில்லை. அநேக விஷயங்கள் அவன் மனதை சின்னாபின்னமாகச் சிதற அடித்தன. அவனுக்குப் பரபரப்பு அதிகமாக அவன் எழுந்துபோகத் தலைப்பட்டான். அந்தத் தருணத்தில் மஹான் கண் விழித்து நோக்கி மிகுந்த விநயத்துடன் தர்மகர்த்தனை உட்காரும்படி வேண்டினார். அவனுக்கும்அவரைத் தட்டிக்கொண்டு எழுந்துபோக முடியவில்லை. ஆனால் அவனால் எவ்வளவு நாழிகைதான் சும்மா உட்கார்ந்திருக்க முடியும். வரம்பு கடந்துவிட்டபடியால் அவன் மனம் அலை பாய்ந்து ஓடியது. இப்படி இவன் உட்காரவுமாட்டாது எழுந்துபோகவுமாட்டாது கிடந்து தத்தளிக்கையில் நிச்சிந்தையாய் சாந்தமாய் பிரஸந்ந வதனத்துடன் மௌனமாக மஹான் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான்! இரண்டாம் தரம் எழுந்துபோக யத்தனித்தான். அப்பொழுதுகூடக் கொஞ்ச நாழிகை இருந்துபோகும்படி மஹான் வேண்டினார். அதற்கு சிறுபிள்ளையான தர்மகர்த்தன் 'அஸாத்யம்! மிகக்கடினம்! இனிமேல் என்னால் அரைநிமிஷம்கூட இங்கு தரிக்கமுடியாது. கண்டேன்! கண்டேன்! சிந்தையை அடக்கியே சும்மாவிருத்தல் அரிதென்று கண்டேன்! உம்மைப்போல தெளிவாக உட்கார்ந்திருப்பது என்னால் முடியாது' என்றுசொல்லிக்கொண்டே எடுத்தான் ஓட்டம். மஹான் ஸந்நிதியிலிருந்து ஓடிப்போனதும் அவன் முதலில் செய்தது யாதெனில் 'ஓடியாடித் திரிபவர்க்கு ஒரு பட்டைச்சோறு, இருந்தவிடத்தே இருப்பவர்க்கு இருபட்டைச் சோறு' என்று சொல்லிக்கொண்டு மஹானுக்கு தினம் இரண்டுபட்டைச்சோறு கொடுக்கும்படி மடைப்பள்ளிக்காரனுக்கு உத்தரவுசெய்தான்

இச்சிறு வேடிக்கைக்கதை இடைவிடாத சாந்த நிஷ்டையின் அருமையைக்காட்டுகின்றது. இதன் கஷ்டத்தை முற்றும் உணர்ந்தவராகத்தான் தாயுமானவர் பின்வருமாறு கதறுகிறார் :—

கந்துகமதக்கரியை வசமாய் நடத்தலாங்
 காடிவெம்புலி வாயையுங் கட்டலா
மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
 கட்செவியெடுத்தாட்டலாம்
வெந்தழலினிரதம் வைத்தைந்து லோகத்தையும்
 வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமலுலகத்துலாவலாம்
 விண்ணவரை யேவல் கொளலாஞ்
சந்ததமு மிளமையோ டிருக்கலா
 மற்றொரு சரீரத்தினுட் புகுதலாஞ்
சலமேனடக்கலாங் கனன் மேலிருக்கலாம்
 தன்னிகரில் சித்திபெறலாஞ்
சிந்தையை யடக்கியே சும்மாவிருக்கின்ற
 திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்டவறிவான தெய்வமே
 தேசோம யானந்தமே.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ஸீதை அல்லது தர்மத்தின் ஸ்வபாவம்

---

2. பிரிவுற்றகாதை

“நாயகனுடைய பாவத்தை ஒற்றுநடத்தல் வேண்டும்; அவரது மனம்கோண இடம்வரச் செய்யக்கூடாது அவரிருக்குமிடம் தான் எனக்கிடம்; அவர்துன்பத்திலிருப்பின் நானும் துன்பத்தையே வரிப்பேன்; அவர் பெருமையடைந்தால் அப்பெருமையில் யான் பெருமை அடைவேன்; அவருடைய மனம் ஸங்கடமடைந்தால் நானந்த ஸங்கடத்தைத் தீர்த்துத்தான் மறுவேலை பார்ப்பேன்; அவர்மனம் முறியும்படியாகச் செய்யமாட்டேன்; அவர் கீழ்தசையிலிருப்பது எனக்கொருவிதக் கீழ்மையையு முண்டாக்காது; அவர் கீழ்மையிலிருப்பின், நான் மேன்மையைவிரும்பினால் யான் நாயக த்ரோகி ஆகிறேன்; அவர் வீடு காடாயிருப்பினும் சரி, அல்லது, நாடாயிருப்பினும் சரி, எனக்கது எதுவாயினும் பேதமென்பது கிடையாது; அதுவே என்மனதிற்கு உத்ஸாகமூட்டுமிடமாக இருக்கிறது; ஆனதினால் அவர் காடுசென்றால் யானும் காடுசெல்வேன்; அவர் நாட்டிலிருந்தால் யானும் அவரோடு இருப்பேன்; அவருடைய நிழல்போல் அவரோடே உலாவுவேன்; மூலபுருஷன் அவன்தான் என்று முழுதும் நம்பிக்கையுள்ளது” என்று இவ்வகை ஆகிய எண்ணங்கள் ஸீதை மனத்தில் பட்டு தான் இராமனோடு காட்டையடைய புறப்பட்டனள்.

சித்ரகூட பர்வதத்திலிருந்து, காட்டினழகும் மரங்களின் வளர்ச்சியும், நிலத்தின் செழிப்பும், ஆற்றினது போக்கும், ஓடைகளுடைய வீட்சியும், குன்றுகளின் கம்பீர நிலைமையையும் அந்தஃகரணத்தின்மேலவைசெய்யும், பதிப்பு மிவற்றையெல்லாமானந்தத்துடன் கண்டு கண்குளிர ஆனந்தம் கொண்டனள். கணவனது பெருஞ்செயல்களைக்கொண்டு அவன்மேல் அன்புபொங்கி “அவர்க்கு நாம் செய்யவேண்டிய செயல்கள் இன்ன முயரவேண்டிய” தென்று எண்ணிக்கொண்டனள்.

இவர்களிவ்வாறு காட்டில் நடந்துக்கொண்டு இருக்கும் காலத்தில் பெரியாரது தர்சனவிசேஷத்தால் வரும் ஸுகத்தை அனுபவித்தனர். அத்ரி ரிஷியின் ஆச்ரமத்தை அடைந்தவரது உபதேசமொழிகளை எல்லாம் பெற்று தண்டகாரண்யத்தை அடைந்தனர். இவ்விடம் அகஸ்தியரைக்கண்டு அவருடைய உத்தரவின்பேரில் பஞ்சவடீதீரம் அடைந்தார். இவ்விடம் லக்ஷ்மணன் ஆச்ரமம் ஒன்று கட்டினான். இதில் ஸீதையும் இராமனும் வசிக்க, லக்ஷ்மணர் இவர்களைக் காப்பது வழக்கம்.

மரங்களடர்ந்து, பூப்பிஞ்சுங்காயும் கொஞ்சும்படிக்கு செழித்து, ஓடைகளிடைத் தம் பலத்தையீன்று வந்தாரது பசிப்பிணியை போக்கும் காட்டிடைப்பட்டவர்க்கு கவலையுண்டோ? ஸீதைக்கிது ஓர் உத்யான வனமாகப்பட்டது. மான் கூட்டங்களோடு விளையாடுவதும் மலர்களைப் பறித்து பாடுவதுமே அவள் செயல்களாயின. கவலை என்பது அவள் மனதிற் கிடையாது. தனது கணவனுக்கு செய்யவேண்டியதை செய்துவிட்டு அவனோடே காட்டிலுள்ளவற்றை எல்லாம் கண்டானந்திப்பது வழக்கமாக ஆயிற்று.

அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் விஷமாகும், என்றொரு பழமொழியுண்டு. ஸுகங்கள் தனக்கும் தெரியாமல் அதிகமாகிவிட்டால், அச்சுகங்களே நமக்குக் கெடுதியை உண்டாக்குகின்றன. இவை எல்லாம் நன்னிலைமையில் இருப்பவர்க்குப்படாது. 'இதனால் ஒருகஷ்டம் வருவதாவது'!, என்றே அவர்கள் சொல்லுவார்கள். பித்தம் தலைக்கேறினால் புத்தி உண்டோ! விளையாட்டிலேயே எப்பொழுதும் பொழுதைப்போக்கினால் அதுவும் ஓர்விதப் பித்தந்தான். இப்பித்தகுணத்தினால் அவர்க்குவருங் கேடு இன்னதென்று தெரிகிறதில்லை நமக்கு வரும் துக்கங்களும் சிறந்த நன்மைசெய்ய வந்தாற்போல வருகிறது. இதைத்தடுப்பது யாராலுமுடியாது. முடியாதென்றும் நம்மாற் சொல்லமுடியாது. இந்தமாதிரியாகவே ஸீதைக்கும் ஓர்விபத்து வந்தது. அவளெதிரில் அழகிய பொன்னிறமாகிய மான் ஒன்று துள்ளித்துள்ளிக் குதித்தது. அதைப் பிடிக்கமுயன்றாள். அது அவள் கைக்குள்ளகப்படவில்லை. அதை எவ்வாறேனுமடையவேண்டுமென்பதே அவள்கவலை. தன்னால் முடியாதுபோனதும் தன்கணவனை அதைப் பிடித்துத் தரவேண்டுமென்று கெஞ்சினாள் அவர் பிடிக்க வாரம்பித்தவுடன் அம்மான் நெடுந்தூரம் புதர்க்குள்சென்று மறைந்தது. இராமனுமதைப்பின் பற்றி நெடுந்தூரம் சென்றுவிட்டான்.

சென்ற கணவன் வரவில்லை என்று மிகவும் ஏக்கம்கொண்டாள் ஸீதை. பெண்களுக்கெப்பொழுதும் பின்புத்தி என்ற பழமொழியுமுள்ளது. ஏன் தெரியாமலவரை அனுப்பினேனும் எனக் கவலைப்பட்டாள் ஸீதை. நாயகி லக்ஷணமென்பதிதுதான். தன் கணவன்வாராமையால் அவர்க்கென்னவாயிற்றோ என்று மனத்தினென்னென்னவோ எண்ணினாள். எண்ணியும் என்ன? இராமன் வரவில்லை. அவளுடைய மனமுழுதும்அவர்பாலே வருந்துகிறது. நடுவில் "ஹா! லக்ஷ்மணா!" என்ற ஒரு ஓசைகேட்டது. திக்பிரமையாக ஸீதை மூர்ச்சையோடு கீழ் வீழ்ந்துவிட்டாள்.

தானே தன் கணவனுக்கு கெடுதியுண்டாக்கியதாக அவளுக்குப்பட்டது. சற்று தணிந்து லக்ஷ்மணனைக் கூவி "உன்மனங் கல்லோ, உன்னைக் கூப்பிட்டும் உனக்கு மனம் வரவில்லையோ? ஹா! மாயாவி!" என்றலறினாள். தன்கணவனுக்கிவன் உதவி செய்யவேண்டியவனாயிருக்க இவன் செய்ய மனங்கொள்ளவில்லை என்று ஆத்ரத்துடன் இன்னம் சிலமொழிகள் சொல்ல ஆரம்பித்தாள். இதற்குள் "அம்மா! கோபியாதேயுங்கள்! உங்களைக் காக்க யான் இங்கு இருக்கிறேன். என் தலைவன் என்னை இங்கேயே இருக்கும்படியாக உத்தரவளித்திருக்கிறார். ஆகையால்தான் நான் போகவில்லை.—" எனச் சொல்லி லக்ஷ்மணன் முடிப்பதற்குள் "ஹே! சண்டாளா! உனக்கிந்த துர்புத்தியிருக்கும் என்று நான் நினைக்கவேயில்லை. அவரிருக்கும் வரை இச்சகம் பாடி நடித்துவிட்டு, வெகு நல்ல நடத்தையுடையவனாகக் காட்டிக்கொண்டு, இவ்வாறென்ன ஆரம்பித்துவிட்டனை?—" என்று ஸீதை சொல்லிக்கொண்டிருக்க "அம்மா! தவறான வார்த்தை என்மேற் சொல்லுவது தகுதியல்ல. என் தமையனார் வார்த்தையைக் குறுக்கிட்டு நான் நடவேன். இப்பொழுது கூவிய குரலும் என் தலைவனதல்ல" என்று லக்ஷ்மணன் சொல்ல, ஸீதை "நன்றாயிருக்கின்றது! இவ்வளவுதூரமும் வந்துவிட்டதா! என்னைப் பெண்டாளுமெண்ணங்கூட உனக்குள்ளதல்லவா? அதற்குத்தான் நீ இவ்வாறு அவன் சாகட்டும் என்று இருக்கின்றனை அல்லவா—" என சொல்லி முடிப்பதற்குள் 'ஆ! ஆ!' என்று அலறிக்கொண்டே "உன்னுடைய வார்த்தைக்குப் பயப்பட்டு, என் தமையன் வார்த்தையைமீறிப் போகிறேன். அதனால்வரும் தீங்கிற்கு நான் ஆளாக மாட்டேன்" என்று சொல்லிவிட்டு,லக்ஷ்மணன் ராமனைத் தேடச்சென்றான்.

இவ்வாறு ஸீதை சொல்லியதெல்லாம் தனது கணவன்மேற்கொண்ட ஆசையினாத்ரத்தினாற்சொல்லியதுதான். இதற்காக அனுபவிக்க கஷ்டம் வருமென்பதற்கு சந்தேஹமுண்டோ? கஷ்டங்கள் வருவதும் இனிமையான உருவத்துடன்தான் வரும். அவ்வாறே ஓர் சந்நியாசி ஸீதைமுன் வந்துநின்றான். மிகு வணக்கத்தோடு அவர்க்கு செய்யவேண்டிய நியமங்களை எல்லாம்செய்தாள். அஹங்கார உருவங்கொண்ட அப்பொய் முனிவன் யானிராவணன் உன்பால் மோகங்கொண்டேன் யானே இவ்வாறு பொய்ம்மானை ஏவி உன் உறவினரைத் துரத்திவிட்டு உன்னிடம் வந்தேன். என்னோடு வா. உனக்குவேண்டியதெல்லாம் தருவேன். யான் குபேரன் தம்பி. எனக்கு ஸமானமானவர் உலகில் கிடையாது என்று சொல்லிக்கொண்டிருப்பதை அவள் ஒன்றுங் கவனிக்கவில்லை. ஆனால் "ராமா, ராமா" என்னும் மந்திரம் மாத்திரம் அவள்வாயி லிடைவிடாமல் வந்துகொண்டேயிருந்தது. பார்த்தான் இராவணன். யுக்தியினால்தான் நாமிவளைக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு தன் வேடங்களைந்துவிட்டு, அவளை ஆசிரமத்துடனே பெயர்த்துத் தேர்மேல்வைத்து லங்கைப்பார்சுவமாகத் தேரை ஓட்டினான். வெகுதூரம்வரை "ராமா, ராமா" என்னும் சப்தமே காற்றைக்கலந்து ஒலித்துக்கொண்டிருந்தது. அது இராமர் காதில் விழுந்ததோ விழவில்லையோ நமக்குத்தெரியாது. ஆனால் அந்தசப்தம் முடிவில் நன்மையுண்டாக்குவதற்கு மூலமந்திரமாக நின்றது என்று நாம் சொல்லவேண்டியதில்லை.

"கணவன் தனக்கு வேலைசெய்யவேண்டும். கணவன் தன் எண்ணப்படி இருக்கவேண்டும். கணவன் தன் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். கணவன் வீட்டார் தன் வழிக்கடங்கி வரவேண்டும். அவரை தான் அடக்கி நடக்கவேண்டும். பானை பிடித்தவள் பாக்கியவதி; யானே வீட்டிற்கு பெரியவள்" என்பவள் கீழ்குலத்தினுதித்தவளல்லாவிட்டாலும், கடையிலுங் கடையவளே ஆகிறாள். ஸீதை இலக்ஷ்மணன் மொழியைக் கேளாது இராமனை மானைப்பிடித்துக் கொடுக்கும்படிக் கேட்டு, கஷ்டமடைந்தாற்போல் கஷ்டமடைவாளென்பதற்கு ஸந்தேஹங் கிடையாது.

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

இந்திய அரசாட்சியும் வித்யாப்யாஸமும்.—கவர்ன்மெண்டார் வித்யாப்யாஸத்தை லகுவாய் அடையப்படும்படி செய்வதனால் பெரிய தப்பு செய்துவிட்டதாக லார்ட் லாமிங்டன் அபிப்பிராயப்படுகிறார். கவர்ன்மெண்டார் இந்தியாவில் ஒரு ஆளுக்கு வாஸ்தவமாய் எவ்வளவு செலவிடுகிறார்கள் என்பதை இக்கனவான் அறியவில்லைபோலும். ஆனரபில் கோக்லேதான் இவருக்கு பதில் சொல்லவேணும். கோக்லேயவர்கள் 1908௵ மே௴ கல்கத்தாவில் அரிசிறைக்கணக்கு (Budget) தர்க்கத்தில் செய்த உபன்யாஸத்திலிருந்து பின்வருமளவை எடுத்திருக்கிறோம்.

"ஆனரபில் E. பேகர் அவர்கள் இந்தியாவையும் ஐரோப்பிய தேசங்களையும் ஒத்துப்பார்க்க ஆசையுள்ளவராயிருக்கிறபடியால் அவருக்கு நேர்த்தியாயும், அறிவிக்கக் கூடியதாயுமிருக்கிற பின்வரும் அட்டவணையை எடுத்துரைக்கலானேன். இவ்வட்டவணையில் ஆனரபில் பேகரவர்கள் ஒத்துப்பார்க்க எடுத்துக்கொண்ட தேசங்களையே எடுத்துக்கொண்டு அவைகளிலும் இந்தியாவிலும் வித்யாப்யாஸத்துக்காக எவ்வளவு செலவழிக்கப்படுகிறதென்று பார்ப்போம்

தேசம்.	ஒருவனுக்கு எவ்வளவு செலவு. ஷி. பெ.
பிரான்ஸ்	5—4
ஜெர்மனி	4—0
இத்தலி	1—8
ஆஸ்டிரியா	2—4
நெதர்லெண்ட்ஸ்	4—3
இந்தியா	0—1½

* * *

சுதேசி மோடார்வண்டி.—ஜெஸ்ஸூரில் நடந்த வியவஸாயகைத்தொழில் காக்ஷியில்,ஒரு இரும்புக்கூண்டைப்பத்தியும் நளதங்கர் மகாராஜாவின்மேல் பார்வையில் செய்யப்பட்ட ஒரு சுதேச மோடார் வண்டியைப்பத்தியும் வெகுவாய் சிலாகித்துச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். மகாராஜாவானவர் ஒருபெரியதிறமையுள்ள சிற்பக்காரர். நீராவிக்கப்பல்களுக்கு வேண்டிய யந்திரங்களை தானே செய்கிறார். அவர் ஒரு மோடார் வண்டியைச் செய்து முடித்ததைக் கேட்க ரொம்ப ஸந்தோஷத்தைக் கொடுக்கிறது.

* * *

ஸென்ட்ரல் ஹிந்து கலாசாலை, காசி.—சென்ற மூன்றுமாஸத்திக்குள்ளாக இக்கலாசாலைக்கு மூன்று பண்டிதர்கள் சம்பளமில்லாமல் வேலைசெய்ய வந்திருக்கிறார்கள். மிஸ்டர் தலால் பம்பாய் யுனிவர்ஸிடியில் M. A. பரீட்சையில் தேர்ந்து பேர்போன்ற ரஸாயனசாஸ்திரியான ப்ரொபஸர் கஜ்ஜாரிடத்தில் வேலைசெய்வதை துறந்துவிட்டு இக்கலாசாலை ரஸாயன சாஸ்திரம் கற்றுக்கொடுக்க வந்துவிட்டார். காலஞ்சென்ற நியாயாதிபதி திலாங்கின் குமாரனான பி. கே. திலாங் அர்த்த சாஸ்திரத்தில் M. A. பரீட்சை மேலாகக் கொடுத்துவிட்டு இக்கலாசாலையில் சேர்ந்துவிட்டார். மூன்றாவது இக்கலாசாலை மடாதிபதி (Rector) யாகிய மகாமகோபாத்யாய பண்டித ஆதித்யராம் பட்டாசார்யாவின் ஒரேகுமாரன்.

* * *

ஓர் நெசவு தரி.—லூடியானாவிலுள்ள அக்பர் ஆலியென்பவர் கம்பளத்தினால் உறுதியான ஸாமான்கள் சீனச்சட்டியினாலும் செய்யப்பட்ட கைநெசவு தரி உண்டாக்கியிருக்கிறார். இத்தரி வெகு நேர்த்தியாயும் லகுவாயுமிருப்பதால் 14-வயதுள்ள சிறுமிகள் கொஞ்சங்கூட சிரமமில்லாமல் ஒருநாள்முழுவதும் அதில் வேலைசெய்யலாமாம்.

* * *

ஒரு தராசு.—மற்றொரு பஞ்சாபி கற்பிக்கிறவராகிய அமிர்ட் ஸார் ஸிம்பநாதர், சமீபத்தில் ஒரு தராசு உண்டுபண்ணியிருக்கிறார். அத்தராசானது, உண்மையான தங்கத்துக்கும் சூது தங்கத்துக்குமுள்ள வித்தியாஸத்தை எடுத்துக்காட்டுகிறதாம். இத்தராசு வெகு புகழ்பெற்றபடியால் குவாலியர் மகாராஜா இதன் பத்திரத்தை (Patent) ரூ. 9000-க்கு வாங்கிவிட்டாராம்.

* * *

பம்பாய்க்கு ஓர் சமர்த்தன்.—பம்பாய் கவர்ன்மெண்டார் உணவு பொருள்களை, ஐரோப்பா கண்டத்தில் பெட்டிகளில் அடைக்கிறதுபோல், இந்தியாவிலும் பெட்டிகளில் அடைப்பதை ஒரு கைத்தொழிலாய் ஏற்படுத்தலாமாவென்று விசாரித்து அறியும்படி ஒரு ஸமர்த்தனை நியமிப்பதாய் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறதாய்த் தெரியவருகிறது.

* * *

தார்பூசப்பட்ட கடிதமும்ஜப்பானும்.—ஜப்பானில் பரதேசியான ஸாமான் கூறைபோடுவதற்கு அதிகமாய் உபயோகப்படுத்தப்படுவதில்லை. ஆகையால் பரதேசிய தொழிலாளிகள் ஸாமான்கள் உண்டுபண்ணி அவைகளை ஜப்பானுக்குக் கொண்டுபோவதில்லை. ஜப்பானில் விலையில்லாத தார்பூசப்பட்ட கடிதங்களை கூரைபோடும்போது உபயோகப்படுத்துகிறார்கள். இக்கடிதங்களை ஓட்டிற்கு அடியில்போட்டு மேலே ஓடு மாற்றிவிடுகிறார்கள். வெயில்காலங்களில் கனத்தமழை பெய்யும் சமயத்தில் இக்கடிதங்கள் ஈரத்தை உட்செல்லவிடாமல் காக்கிறதுடன் மழைக்காலங்களில் உஷ்ணத்தை வெளிவிடாமல் காக்கின்றனவாம்.

கைத்தொழில் பாகமும் சென்னை கவர்ன்மெண்டும்.—சென்னை கவர்ன்மெண்டார், சென்னை ராஜதானியில் மற்ற பாகங்களைப்போல கைத்தொழிலுக்கு ஓர்பாகம் ஏற்படுத்துவது நலமென்று இந்தியா கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இப்பாகம் ஏற்படுத்தப்பட்டால் தற்காலம் வித்தியாப்பியாஸ பாகத்தினடியிலிருக்கப்பட்ட கைத்தொழில்களை சம்மந்தப்பட்ட ஸங்கம் (Institutions) முதலானதுகள் இதனடியில் சேர்க்கப்படுவதுடன் கைத்தொழில்களைப்பற்றியுள்ள வர்த்தமானங்களும் தெரியவரும்

*
* *

பருத்தியும் இங்கிலாந்தும்.—1909௵ மார்ச்சு மாஸம் 11 தேதியுடன் முடிவுபெற்றவாரத்தில் இங்கிலாந்தில் 95, 076 மூட்டை பருத்தி இறக்குமதி செய்யப்பட்டதாம். அதேதேதியில் முடிவுபெற்ற 10 வாரங்களில் 1, 544, 322 மூட்டைகளாம். அதேதேதியில் முடிவுபெற்ற வாரத்தில் இங்கிலாந்திலிருந்து 8, 525 மூட்டைகளும் அதேதேதியில் முடிவுபெற்ற 10 வாரங்களில் 69,833 மூட்டைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டனவாம்.

*
* *

பருத்தியும் சென்னை கவர்ன்மெண்டாரும்.—சென்னை ராஜதானியில் சிலவிடங்களில் சிறந்த பருத்தி உற்பத்திசெய்ய பரீக்ஷித்துக்கொண்டிருக்கும் குடியானவர்களுக்கு தூண்டுதல் செய்யும்பொருட்டு ரூ. 5000 கொடுக்கும்படி கவர்ன்மெண்டார் வைத்திருக்கிறார்களென்று தெரியவருகிறது.

*
* *

கோதுமை.—மிஸ்டர் ஹோவார்ட் (Mr. Howard) என்பவர் ஓர் புதுமாதிரியான கோதுமைதானியம் கண்டுபிடித்திருக்கிறதாக தெரியவருகிறது. இத்தானியமானது இதுவரையில் இந்தியாவில் விளைவிக்கப்பட்ட கோதுமையைக்காட்டிலும் சிறந்ததாகவும், விளைவிப்பவர்கள்கூட அதை சிலாகிக்கும்படியாகவுமிருக்கிறதாகத் தெரியவருகிறது.

*
* *

சென்னை கவர்ன்மெண்டாரும் குடியானவர்களும்.—இதுவரையில் கைத்தொழில்களைப்பற்றி கிடைக்கக்கூடிய ஸமாசாரங்களும், யோசனைகளும், உதவியும் பணம்வாங்காமல் கொடுத்துவந்த கவர்ன்மெண்டார், இனிமேல் இவ்வகை உதவிபுரியவேணுமானால் பணம்கொடுக்க வேண்டுமென்றும், உதவி கேட்பவர்கள் பணம்கொடுக்க சக்தியுள்ளவர்களென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் உதவிகேட்பவர்கள் ஏழை குடியானவர்களென்று நிச்சயமாய்த் தெரியும்பக்ஷத்தில் கைத்தொழில் தலைவர் (Director of Industries) அவர்கள் கட்டின கட்டணம் முழுமையுமோ அல்லது ஓர் பாகத்தையோ அவர் யுக்தப்படி திரும்ப கொடுத்துவிடலாமென்றும் நிச்சயித்திருக்கிறார்கள்.

புத்தகக் குறிப்பு
REVIEW OF BOOKS

எலேன்*—ம-ா-ா-ஸ்ரீ துலந்தசாமிபிள்ளை B.,A., L.T., அவர்களால் இயற்றப்பட்டது

இது ஆங்கில கவியாகிய டென்னிஸன் பிரபு எழுதிய ஒரு காவ்யம். அவர் எழுதிய "அரசனின் ஆயர் பாட்டு" என்னும் காவியத்தின் ஏழாம் பிரிவிது. ஸரியாக தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. நடையும் ஒழுங்கும் சிறந்தன. ஆங்கிலப் பெரியோரது பாவத்தை தமிழ்ப்பித்து, தமிழ்வசன ரசனையை விருத்திசெய்ய விரும்புவர்கள் இதை கவனமாகக் கொள்வரென்பது எமது நம்பிக்கை. புத்தகமும் எளிய விலையுடன் எல்லாரும் கொள்ளும்படியாகவிருக்கிறது.

வனஸுதா*.—பண்டிதை விசாலாக்ஷி அம்மாளால் இயற்றப்பட்டது

இதனை இயற்றியவர் கூறியாங்கு பெண்விருத்திக்காக இக்கதை எழுதியதாக தெரிவதரிதன்று. பெண்பாலாரெழுதிய காதையுள் குற்றங்குறையிருப்பினுங் கூறற்பாலதன்று. அற்றேல் குற்றமின்றிய நல்லெண்ணமொடு சாவி எழுதியக்காதையை இற்றெனக்கூறற்றகுதியோ? இக்கதையை யாவரும் படித்து பெண்கல்வி விருத்தியை ஆவற்கொண்டு ஸரியான வழியிற் பெருகச்செய்வாரென்பது எமது கோரிக்கை. கதையினடையு மொழுங்கும் சிறந்ததென விளங்கும். ஹிந்தகாரணியி னபிலாஷாஸ்பத மவலம்பித் தாங்கிதை வாங்குவரென்பது திண்ணம்.

கோமளம் காஞ்சியாத்திரை*.-"தாமரைப்பெண்" எழுதியது

இதை ஒருகதை யெனக் கூறப்படாது. திருநாள் விளக்குஞ் சிறுபுத்தகமென்றுதான் சொல்லவேண்டும். தஞ்சையிலிருந்து கோமளம் தேவாதிராஜன் ஸேவையை காண்பான் காஞ்சிசென்று மற்றும் தன்னூர் மீண்டதைக் கூறுகின்றது. இதனுள் கிளைக்காதைகளும், பக்தியை விளக்கும் சிலபாகங்களுமுள்ளன ராமபாரதியாரதுபன்னியாசமொன்றே இதனை கவனிக்கச்செய்யும். இந்திய விருத்தியைப்பற்றிக் கூறுஞ் சிலபாகங்களுமுள்ளன. பெண்பால ரிவ்வள வெழுதுவதரிது. பெண்களே பெண்கள் நடக்கவேண்டும் ஸரியான மார்க்கத்தைக்கூறுவது மிகவும் சிறந்தது. வைஷ்ணவரது நடைநொடிபாவனைகளை நன்றாகக்காட்டி ஸ்திரீகளது ஹ்ருதய ஸ்வபாவத்தைப் பிரகாசம் செய்கிறது. வைஷ்ணவரதுஉள்ளெண்ணத்தையுங் காட்டுகிறது. இப்புத்தகம் உரமான வைதிக வைஷ்ணவ வாழ்க்கையைக் குறிப்பிக்கிறது. இதை எல்லாரும் வாங்கி பெண்கல்வியை விருத்திசெய்ய தூண்டுகோலாக இருப்பரென்று நம்புகிறோம்.

*இப்புத்தகங்கள் "விவேக போதினி" ஆபீஸில் கிடைக்கும்

Luxurious Writing.

Fountain Pens.

Fountain Pen Clips assorted Sizes As. 2 only.

British and American Manufacture.

The "IMPROVED FORTUNE." Made specially to our order by one of the best Makers of Fountain Pens, is fitted with a high class 14-Carat Gold Nib, and fitted with Silver Regulator. A very Reliable Writing Instrument, with box, filler, directions, &c., complete. Appreciated by one and all ... ... Rs. 3-8

Do. do. No. 3 cone Cap holder, with large nib ... ... " 4-8

"JEWEL" Fountain pen, has a chased barrell is fitted with a large 14-Carat Gold Nib ... ...Rs. 3-12

The "CALTONIAN."—Same as above but with no spiral.—Has a chased barrel. Is fitted with 14-Carat Gold Pen and double feed,—with box, direction &c., complete ... ...Rs. 2-12

"Supplies" Fountain Pen Same as above with plain reservoir and fitted wtih 14 Carat GoldN ib ...Rs. 2-8

"FISCAL."—Fountain Pen—has a plain barrel and fitted with a 14-Carat Gold Nib and double feed—a Reliable Writing Instrument and is very popular ... ... Rs. 2-0

"RED GIANT STYLO."—Same as illustration—Fitted with a Spring Needle—works beautifully well—Tan color, Rs. 2-12

"WEE-MITE."—A Vest Pocket Fountain Pen, suitable for presentation, gives perfect satisfaction, is of Tan color, Rs. 2-4

The "COUNTY" PEN—Fitted with screw section and duplex feed but has a Metal Nib ... ... As. 12 only.

Spare Nibs for this Pen, per dozen ... ... As. 6

We have also in stock, Waterman's Ideal Fountain Pens, Swan Pens, Moore's Non-Leakable Fountain Pens, Efficient, Warren, &c. All these are fitted with high class Gold Nibs—we have also very attractive and durable Stylographic Pens. Spare Gold Nibs and parts of all different sizes

We have 'Swan' Inks in Blue-Black, Blue, Green, Violet, Red—Each Bottle of ink has a thick Glass filler.

Leather pockets to hold single and double fountain pens As. 6 and 9 only.

Fountain Pen Inks—As. 8

FIREFLY PENS

Have

TEN GOOD POINTS

DURABILITY
FLEXIBILITY
Write in any position
Glide over any paper
Give character to writing
Prevent writers' cramp
Are incorrodible
Are better boxed
Better advertised
And better liked than any other pens in the world



FIREFLY PENS

ARE
OBLIQUE POINTED
AND ARE
SPECIALLY ADAPTED
FOR

RAPID WRITING

Per Box containing 12 doz., Rs. 2-8
Per dozen ... ... As. 4

POSTAGE EXTRA

The General Supplies Co.

Stationers, Etc., MYLAPORE, MADRAS

இதரத்தமிழ் புத்தகங்கள்

ஆனந்தமடம்: தேசபக்தி புகட்டும் ஓர் அருமையான நாவல்—இந்த நாவலும் ஸ்ரீ பங்கிம் சந்திரசட்டர்ஜி பங்காளி பாஷையில் எழுதியதை ஸ்ரீ மஹேசகுமாரசர்மா அவர்கள் மொழிபெயர்த்தது. ... 0 8 0

போஜசரிந்திரம்—2-ம் பதிப்பு. மனதை கவறக்கூடிய 16-ஆப்டோன் படங்கள் சேர்த்திருக்கிறது. ம-ா-ா-ஸ்ரீ ஹைகோர்ட்டு வக்கீல் T. S. நாராயண சாஸ்திரியார் இயற்றியது—ரொம்பவும் நன்றாய் அச்சிடப்பட்டிருக்கிறது. 1 8 0

மதிகெட்ட மனைவி		1	0	0
தீனதயாளு		0	12	0
ஸ்ரீ மாமிகொலுவிருக்கை		0	8	0
தலையணை மந்திரோபதேசம் 3-ம் பதிப்பு		0	8	0
வேணீ ஸம்ஹாரம்		0	3	0
மிருச்சகடி		0	4	0
முத்திராராக்ஷஸம்		0	4	0
லீலாவதி ஸுலோசனு	ம-ா-ா-ஸ்ரீ, ஹைகோர்ட் வக்கீல் பி. சம்பந்த முதலியார் இயற்றியவை.	0	12	0
இரண்டு நண்பர்கள்		0	12	0
மனோஹரன்		0	12	0
கள்வர் தலைவன்		0	8	0
சாரங்கதரன்		0	8	0
சத்ருஜித்		0	12	0
யயாதி		0	8	0
வேதாள உலோகம்		0	8	0
அமலாதித்யன்		1	0	0
காதலர் கண்கள்		0	12	0
வாஸந்திகா ஒரு தமிழ்நாடகம்		0	8	0
வெனிஸ்வர்த்தகன்		1	0	0
கற்புகரசி		0	8	0
குணமாலிகை அல்லது கற்பின் வன்மை		0	6	0
கனகவல்லி.		1	0	0
கமலினிகலஹம்ஸம்		0	8	0
எலென்		0	6	0
வசீகரி		1	0	0
ஞானரஞ்சனி		0	8	0
ஸுஜாதா		0	8	0
லலிதாங்கி		0	8	0
வனஸுதா		0	8	0
லலிதா		0	10	0
தமயந்தி		0	9	0
ஞானம்பாள்		0	6	0
மங்களாம்பாள்		0	8	0
கோமளம் காஞ்சியாத்திரை		0	8	0
சுகுணங்கதன்		0	12	0
பாவலர் விருந்து (முதல் நாள்)		0	8	0
வில்லிபுத்தூரார்; பிள்ளை பெருமாள் சரித்திரச் சுருக்கம்		0	8	0
மதிவாணன்		0	8	0
வால்மீகருமாயணம் கிளைக்கதைகள்		0	8	0
ஸ்ரீமான். ஜி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஜீவிய சரிதம்		0	8	0
ஸ்ரீபாலகங்காதரர் ஜீவிய சரிதம்		0	3	0
அந்தப்புர ரகசியம்		1	0	0
கவிரத்தினசிந்தாமணி என்னும் காளிதாசன்சரித்திரம்		1	0	0
மோகனாங்கி		1	4	0
குடும்ப ஸம்ரக்ஷணி		2	0	0
மன்மதகாந்தன் கதை		0	8	0
இந்து பாகசாஸ்திரம்		2	0	0
மகாமகம் அதின் மகிமை		0	4	0
ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியின் ஜீவிய சரிதம்		2	0	0
கந்தபுராணச் சுருக்கம் வசனம்		0	12	0

ரம்யனும் ஜொலிதையும் ஆங்கிலேய கவி ஷேக்ஸ்பியர் இயற்றிய ரோமியோ அண்டு ஜுலியட் நாடகத்தின் தமிழ் அமைப்பு (ஓர் புதிய நாடகம்) 0 8 0

“மானிட மர்ம சாஸ்திரம்” அரிய பெரிய காரியங்க ளொவ்வொன்றையும் விளக்கிக்காட்டும் சித்திரப்படங்கள் 200 அடங்கியது. விலை ரூ. 5. தபாற்சிலவு பிரத்தியேகம் சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு 8 ஷி.

1908 வருஷத்து 1-வது ஆக்ட்

பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய

சென்னபட்டணம் 1908-வருஷத்து ஆக்ட் (தமிழ்)

டெம்மி, 8-பேஜ்சைஸில் திடமானகிளேஸ் காகிதத்தில், தமிழிலும் இங்கிலீஷிலும் அச்சிடப்பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் காப்பி 1-க்கு விலை அணா 0 8 0.
தமிழ்க் காப்பி 1-க்கு விலை அணா 6.
தபால்சார்ஜு பிரத்தியேகம்.

இந்தப் புஸ்தகம் பூஸ்திதிகளையுடைய ஒவ்வொருவரிடத்திலும் அவசிய மிருக்கவேண்டியது.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பேனி
மைலாபூர், மதருஸ்.

மஹாபாரதம்
சாந்திபர்வம்
கும்பகோணம்

பிரம்மஸ்ரீ பாரத சாமாசாரியாரவர்களால் எளிய தமிழ்நடையில் மொழி பெயர்க்கப்பட்டு, பிழையறப் பரிசோதித்து நல்ல காகிதத்தில் பெரிய எழுத்தில் அச்சிட்டு காலிகோவில் நன்றாய் பயிண்டு செய்திருக்கிறது. இப்பொழுது தயாராயிருக்கும்

1-ம் பாகம்	ரூ.	2	0	0
அச்சிலிருக்கிற 2-ம் பாகம்		2	0	0
இப்பொழுதே இரண்டாம் பாகத்துக்கும் சேர்த்து முன்பணம் அனுப்புகிறவர்களுக்கு		3	0	0

ஸ்ரீமத் வால்மீகிராமாயண வசனம்

பண்டித நடேச சாஸ்திரியாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, தகுந்த தமிழ் வித்வான்களால் பார்வையிடப்பட்டு, பிழையறப் பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட்டது.

ஸ்திரீகளும் சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்து கொள்ளும்படியாகத் தெளிவான எளியநடையில் வசனரூபமாய் இவ்வால்மீகிராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது, இப்பதிப்பு 'இதன் ஆதிகிரந்தத்தின் கௌரவத்திற்கும் மகிமைக்கும் தக்கவாறு கனமான உயர்ந்த காகிதத்தில் பெரிய எழுத்தில் பிழையறப் பரிசோதித்து, செவ்வையாய் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய்ப் பயிண்டு செய்திருக்கிறது.

தயாராயிருக்கும் காண்டங்கள்

பாலகாண்டம்	ரூபாய்.	1	12	0
அயோத்தியாகாண்டம்	,,	3	0	0
ஆரணியகாண்டம்	,,	1	12	0
கிஷ்கிந்தாகாண்டம்	,,	1	12	0

மற்றய காண்டங்கள் இப்பொழுது விரைவாய் அச்சிடப்பட்டு வருகின்றன. சீக்கிரம் வெளிவரும்.

இதரத் தமிழ்ப்புத்தகங்கள்

நன்றய்ப் பார்வையிட்டு நல்ல காகிதத்தில் தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு.

மூவர் தேவாரம்-பண்முறை—1044 பக்கம் 3 0 0

இப்பதிப்பில் (1) சம்மந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவாரவரலாறும், (3) தேவாரப்பண் அட்டவணையும், (4) தேவாரப்பாடல்பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவார ஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக் குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப்பொதுப் பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச்செய்த மூத்த திருப்பதிகமும் நூதனமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

நாலாயிர திவ்யப்ரபந்தம்.—640 பக்கம் 3 0 0

இப்பதிப்பில் (1) ஆழ்வார்களின் கால்வைபவக் குறிப்பும், (2) ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்விய தேசங்களின் அட்டவணையும், (4) அந்த தேசங்களின் வைபவக்குறிப்பும், (5) பாசுரங்களின் முதலடி அகராதியும், (6) பாடபேதக் குறிப்புகளும் சேர்த்து பலபிரதிகளுடன் ஒத்திட்டுப்பார்த்து, நன்றாய் அச்சிடப்பெற்றுளது.

மனுதர்மசாஸ்திரம் 2647 கிரந்த சுலோகங்களும் அவைகளின் தமிழ் மொழி பெயர்ப்பும்—560 பக்கம்	2	4	0
ஸ்திரீ புருஷசாமுத்ரிகாலட்சணம்	1	0	0

வேதாந்த விஷயமான புஸ்தகங்கள்

வாசுதேவ மனனம்	1	0	0
சிவயோகசாரம் & சிவஞான விளக்கம்	0	2	0
சுகர் கைவல்லியம்	0	2	0
வைராக்கிய சதகம்	0	2	0
ஜன்மாந்திரம் (அல்லது இராமதாசர் உபவள்ளலார் சாஸ்திரம்)	1	8	0
மகாராஜா துறவு	0	6	0
தாயுமானவர் பாடல்	0	12	0
வேதாந்தபோதினி	0	8	0

யசோதரகாவ்யம்.—இது தமிழில் சிறந்த ஐந்து காவியங்களில் முதலாவது. ஜயினமுனிவர் பாடியது. ம-ா-ா-ஸ்ரீ, பண்டித வெங்கிடராமய்யங்கார் அவர்கள் இயற்றியது. ... விலை அணா 8.

பீமலா.—அல்லது திவான்மகள். (ஆக்பர் சக்கரவர்த்தி காலத்தில் நடந்த ஓர் சரிதை. ம-ா-ா-ஸ்ரீ R.P. குலந்தசாமி, B.A.,L.T., அவர்களால் இயற்றப்பட்டது. ... ... விலை அணா 6.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பேனி
மைலாபூர், மதராஸ்.



"விவேக போதினி"

ஓர் அருமையான மாதாந்திரத் தமிழ்ப்பத்திரிகை

இப்பத்திரிகையில் பிரசுரமாகும் விஷயங்களாவன

1. ஜாதிமதாசார ஸம்பந்தமானவை.
2. உலக ஒழுக்கங்கள்.
3. கல்வியபிவிருத்திக்குரிய பாஷா விஷயங்கள்.
4. வியவஸாயம், கைத்தொழில், வியாபாரம்.
5. தக்கவர்களைக்கொண்டு எழுதப்பட்டுவரும் நாவல்களும் நாடகங்களும்.
6. சிறுவர்க்கான நன்னெறிக் கதைகள்.
7. ஸ்திரீகளுக்கேற்ற நற்போதங்கள்.
8. சாஸ்திரீகமான விசேஷ வர்த்தமானங்கள்.

நமது பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோர், மிகவும் பிரவித்திபெற்றவர்களும், உலக அனுபவமுள்ளவர்களும் மிகவும் இனிய செந்தமிழ்நடையில், சிறுவர்கள் சிறுமிகள்கூட படிக்கக்கூடியவண்ணம் எழுதப்படுகிறது.

"விவேகபோதினி" பிரதிமாதம் 25௳ ஒழுங்காகப் பிரசுரமாகும்.

சந்தாவின் விபரம்

தபால்கூலியுள்பட வருஷசந்தா

இந்தியா, பர்மா, ஸிலோன் ...	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், நேட்டால் வகையரா இடங்களுக்கு ...	4	8	0
தனிப்பிரதி	0	5	0

மற்றை விவரம் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
"விவேக போதினி,"
மைலாப்பூர், சென்னை.

விவசாயபோதினி

அவசியம் குடித்தனக்காரர் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய ஓர் அருமையான புத்தகம். அநேக சித்திரப்படங்களுடன் கூடியது.—

இப்புத்தகத்தில் நிலங்கள் சம்பந்தமான விஷயங்களும், கருவிகள் எருக்கள் சம்பந்தமான சாஸ்திர நுட்பங்களும், சகலவித நன்செய், புன்செய் தோட்டக்கால் பயிர்களின் சாகுபடிகளும் விவசாய சீர்திருத்தத்திற்கு வேண்டிய முக்கிய சாதனங்களும் காட்டப்பட்டிருக்கின்றன.

கனம் மாஜிஹைகோர்ட் ஜட்ஜ் சுப்பிரமணிய அய்யர், திவான் பஹதூர் ரெகுநாதராவ், கனம் P. S. சிவஸ்வாமி அய்யர், விவசாய காலேஜ் உதவி தலைமை உபாத்தியாயர், சைதாபேட்டை கவர்ன்மெண்டு பண்ணை மானேஜர், சுதேசமித்திரன் பத்திராதிபர் கனம் ஜி. சுப்பிரமணிய அய்யர் முதலிய பெரியோர்களும், விவசாய சாஸ்திர வல்லோர்களும் நற்சாக்ஷிப்பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆங்கிலேய, சுதேசப்பத்திரிகைகளாலும் நன்கு மதிக்கப்பட்டிருக்கிறது.

போர்ட்பயிண்டு செய்தது ரூ.	1	4	0
காலிகோ ,,	2	0	0
பருத்திப்பயிர் சாகுபடி	0	4	0

"ROYAL BRAND"
RED MARKING INK

உடுப்புகளுக்குக் குறிபோடும் சிகப்பு மை

இந்த மையைக்கொண்டு உடுப்புகளுக்கும், வஸ்திரங்களுக்கும் ஒருதடவை குறிபோட்டுவிட்டால், எப்போதும் மாறவேமாறாது. இதன் பிரயோஜனத்தைக் குறித்து நாம் ஜாஸ்தியாய் எழுதவேண்டுவது அனாவசியம்.

டஜன் 1-க்கு... ... ... 1 4 0

வியாபாரிகளுக்கும், ஒரேதடவையில் ஜாஸ்தியாய் வாங்குவோர்க்கும் விலை பிரத்தியேகம்.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி,
மைலாப்பூர்,
மதராஸ்.

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி 2 } ஸௌம்யஷு புரட்டாசிமீ 1909-ஷு செப்டம்பர்மீ { பகுதி 3

ஆத்ம நஷ்டம்
THE LOSS OF THE SOUL

'கலிகாலக்கொடுமை' எனப் பலர் கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். இதை அநேகர் அநேகவிதமாகப் பொருள் கொள்வர். சிலர் கலிகாலத்தில் ஸகல ஜாதி தர்மங்களும் நிலைகுலைய குழப்பம் உண்டாவதே இதன்பொருள் என்பர். வேறு சிலர் கலிகாலத்தில் ஜனங்களுக்கு பணத்தாசை அதிகரிக்க அதனால் பொருளீட்டலில் ஸன்மார்க்க ஒழுங்குகளைக் கவனியாமலே அவர்கள் நடக்க கஷ்டம் அதிகரிப்பதே இது என்பர். மற்றும் சிலர் இக்கலியில் வாசாஞானம் அதிகரிக்க மனிதர்களை மேல் நிலைக்குக் கொண்டுவருவதற்கு முதலில் பேருதவியாகவிருக்கும் கர்மம் பக்தி முதலியவற்றில் பழகுதல் குறைய விபரீதஞானம் அதிகரித்து பொதுவாக எல்லோருக்கும் கஷ்டமே உண்டாவது இது என்று எண்ணுவர். இவ்வாறு அநேகர் அநேகவிதமாக இந்த வாக்கியத்தைப் பொருள்படுத்தியபோதிலும் எல்லோரும் ஓர் பெரியகஷ்டம் கலியில் உண்டாகும் என்பதை ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் அதன் காரணத்தைக் கூறப்புகும்பொழுது மாத்திரம் இவர்களுள் பேதம் காணப்படுகின்றது. இவர் கூறும் காரணங்கள் பேதமாகக் காணப்பட்டபோதிலும், இவைகளுக்கு எல்லாம் மூலமாக இருக்கும் காரணத்தை எடுத்துக்கொண்டு நோக்கின் இவர்களுள் அதிக பேதமில்லை என்பது தெரியவரும்.

கலிகாலக்கொடுமையின் மூலகாரணம் யாது? முற்கூறியவைகள் எல்லாம் கலிகாலத்தில் இருந்தபோதிலும் அவைகள் எல்லாவற்றிற்கும் ஆத்மநஷ்டமே காரணம் எனத் தோற்றுகிறது. ஆத்மநஷ்டம் என்பதற்கு ஆத்மா என்ற ஓர் வஸ்துவின் சிறப்பால் தான் நமக்கு புத்தி முதலியன தொழிற்படுகின்றன என்ற உண்மையைக் கவனியாது ஆத்மா ஒன்று இருக்கின்றது என்பதை மறந்துநிற்றல். ஓர் கூட்டத்தில் நம்மோடுவந்த தோழன் ஒருவனை எவ்வாறு தவறவிட்டு விடுகிறோமோ அவ்வாறே நாமும் இக்காலத்து நாகரீகத்தால் ஏற்படும் குழப்பத்தை நமது ஆத்மாவை மறந்துவிட்டோம். இதனால்தான் இக்காலத்தில் அதர்மங்கள் பொருளாசை, வாசாஞான முதலியன வெகு பிரமாதமாக வெளிக்காணுவது. ஆத்மா ஒன்றிருக்கிறது என்ற நம்பிக்கை ஒருவனுக்கு எவ்விதத்திலாவது திடமாக ஏற்பட்டிருக்குமாயின் அவனிடம் முற்கூறிய குற்றங்கள் இரா. இந்த நம்பிக்கை வந்தபின்பு ஆத்மரூபத்தை விசாரித்து அறியும் ஆவல் ஒருவனுக்கு உண்டாகும். இதனால் இவனுக்கு முடிவில் பேரின்பஸுகம் கிடைக்கும்.

ஆத்மா நஷ்டமாகித் தத்தளிக்கும் நமக்கு வெளியேற வழிஎன்ன? முற்காலத்தில்இந்தகஷ்டம் வராது தடுப்பதற்கு ஓர் ஏற்பாடு நமது மஹான்கள் செய்துள்ளார். விரதம், ஜபம், அனுஷ்டானம் முதலிய அதிக வ்யவஹார ஸம்பந்தமற்றவைகளை ஏற்படுத்தி, அவைகளில் நம்மை நமதுதொழில் முதலியவைகளிலிருந்து பிரித்து, தனிமையாக கொஞ்சகாலம் இருக்கும்படி செய்து, நமது மனது முதலியவைகளின் ஸ்வரூபம் நமக்கு தெரியவரும்படி செய்திருக்கின்றனர். இந்தப் பழக்கங்களால் மனது சுத்தமாக நஷ்டமான ஆத்மா காலக்கிரமத்தில் நமக்கு ஞாபகம்வந்துபின்னர் முத்திமார்க்கம் வெளியாகும். ஆகையால் அனுஷ்டானாதிகளில் செலவிடவேண்டியகாலத்தை வீண்காலமெனக் கருதாது, அந்தக் காலங்களில் சிரத்தையோடு நமது வ்யவஹாரங்களிலிருந்து நீங்கி நமது மனதைப் பரிசுத்தப்படுத்திகொள்ள முயலுவோமாகில், நாளடைவில் ஆத்மதர்சனமாகி கலிகாலக்கொடுமையிலிருந்து நாம் விடுபடுவோம். இம்மாதிரி விடுபட்டு பேரின்பம் அனுபவிக்கும் மஹான்கள் கலிமுற்றிய இக்காலத்திலும் இல்லாமல் போகவில்லை. இதனால் நாம் தைரியம் அடைந்து நஷ்டமான ஆத்மாவைக்காண முயலவேண்டும்.

விவேக போதினி

தொகுதி 2] ஸௌம்ய வரு புரட்டாசிமீ [பகுதி 3

வேதாங்கங்கள்

THE VEDANGAS

வேதங்களை அத்தியயனம் செய்யும் சிஷ்யனுக்கு அவற்றில் அடங்கியிருக்கும் பொருள் தெரிந்திருக்கவேண்டியது அவசியமாதலால், வேதங்களின் பொருளை விளக்குவதற்காக ஏற்பட்ட வேதாங்கங்களையும் அவன் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டும். இதன் பின்புதான் அவனுக்கு வேதங்களின் உட்பொருள் தெளிவாக விளங்கும். ஒவ்வொரு வேதத்திற்கும், ஸம்ஸ்கிருத பாஷையில் ஒருவாறு தேர்ச்சியடைந்தவருக்கு எளிதில் விளங்கும்படியான சிறந்த வியாக்யானம் எழுதப்பட்டிருக்கிறது. இப்படி இருந்தபோதிலும் இந்தப்பாஷ்யங்களை நன்றாக அறிந்து தெளிவதற்கு வேதாங்கங்களின் ஸஹாயம் அவசியமானது. வேதப்பொருள்களை விளக்கவந்த சாஸ்திரங்கள் ஆறு. அவையாவன:—சீக்ஷை அல்லது சப்தசாஸ்திரம், வியாகரணம் அல்லது இலக்கணம், சந்தஸ் அல்லது யாப்பியல், நிருக்தம் அல்லது சொல்லியல், ஜ்யோதிஷம் அல்லது வானசாஸ்திரம்; கல்பம் அல்லது மந்திரங்களை உபயோகிக்கும் வழியைச் சொல்லும் சாஸ்திரம் என்பவைகளே.

சீக்ஷை அல்லது சப்தசாஸ்திரம் என்பது எழுத்துக்களைப் பற்றியது. இது எழுத்துக்களின் மாத்திரை, உச்சரிப்பு, அளவு, ஸ்வரப் பொருத்தம் முதலியவைகளைப்பற்றி விவரிக்கின்றது. இதைக் கற்றுணர்ந்தால்தான் வேதவாக்கியங்களின் ஸ்வரம் ஒருவனுக்கு நன்றாகத் தெரியவரும். மோக்ஷமார்க்கத்தில் செல்லுவோர்க்கு வேதஸ்வரங்கள் இன்னவாறு ஸஹாயமாகின்றன என்பதை முன்னரே எடுத்துச் சொல்லியாய்விட்டது.

இரண்டாம் அங்கத்திற்கு வியாகரணம் என்றுபெயர். வேதங்களின் பொருளை உள்ளபடி அறிவதற்கு இந்த அங்கத்தை ஒருவன் தெரிந்துகொள்ளவேண்டும். சொற்களின் பொருளை அறிந்துகொள்ளுவதற்கு வியாகரணம் சிறந்த கருவி என்பது சிறுவர்களுக்குக்கூடத் தெரிந்தவிஷயந்தான். முற்காலத்தில் அநேக வியாகரணங்கள் இருந்தன. அவ்விலக்கணங்களின் ஸாரம் யாவும் இப்பொழுது வழங்கிவரும், பாணினியாற் செய்யப்பட்ட வியாகரணத்தில் அடங்கியுள்ளன. இந்தஇலக்கணத்தைவிட மனிதரால் ஒழுங்கான வேறு இலக்கணம் செய்யமுடியாது. இவ்விலக்கணம் அவ்வளவு சிறப்பு உடையது.

மூன்றாவது அங்கமாகிய சந்தஸ் என்பது வ்ருத்தங்களைப் பற்றிய சாஸ்திரம். கடவுளைத் தியானஞ்செய்பவருக்குத் தாம் ஒவ்வொரு காலங்களில் சொல்லவேண்டிய மந்திரங்கள் இன்ன வ்ருத்தத்தில் அமைந்துள்ளன என்றும், அவைகள் இன்ன தேவதைகளை நோக்கி ஏற்பட்டுள்ளன என்றும் தெரியவேண்டியது அவசியம். இஃது அவற்றைத் தெரிந்துகொள்ளுதற்கு முக்கியமானது. வ்ருத்தபேத முதலியவைகளைக் கவனியாது ஒருவன் வேதமந்திரங்களை உச்சரித்தால் அவனுக்குக் கொடிய பிராயச்சித்தங்களைச் சாஸ்திரங்கள் விதிக்கின்றன.

நிருக்தம் என்பது நான்காம் அங்கம். யஸ்கர் என்ற பெரியவையாகரணியொருவர் பதங்களின் அருமையைப்பற்றிய ஒரு சிறந்தநூல் செய்திருக்கிறார். வேதங்களின் ஸம்ஸ்கிருத நடைக்கும், இப்பொழுது வழங்கிவரும் ஸம்ஸ்கிருதநடைக்கும், பழைய தமிழ்நூல் நடைக்கும் இப்பொழுது வழங்கிவரும் தமிழ் நடைக்கும் எவ்வளவு வித்தியாஸம் உண்டோ அவ்வளவு வித்தியாஸம் உண்டு. வேதங்களில் அடிக்கடி வழங்கிவரும் சொற்களும், வாக்கி-

யங்களும், தேவதைகளின் பெயர்களும், இப்பொழுது வழங்கிவரும் ஸம்ஸ்கிருத நடையிற் காணப்படவில்லை. யஸ்கர் என்பவர் ஒருவிதமான நிகண்டுவைச்செய்து அதில் வேதங்களிலுள்ள அரும்பதங்களுக்கு ஸம்ஸ்கிருதபாஷையில் தெளிவானபொருளையும், அபூர்வமாயும், முன் கேட்டிராததாயும் உள்ள சிற்சில வாக்கியங்கள் சொற்கள் இவைகளது இலக்கணத்தையும், ஸ்வரூபத்தையும், தேவதைகளின் பெயர்களது பொருளையும்,ஸ்வரூபத்தையும் நன்குவிளக்கியிருக்கிறார். இவைகளுக்கு ஏற்பவே நிருக்தம், (1) நைகந்துகம், (2) நைகமம்,(3) தைவதம் என்ற பெயர்களையுடைய மூன்று அத்தியாயங்களாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. முதலத்தியாயமாகிய நைகந்துகம் என்பது, அமரஸிம்மன், ஹலாயுதர் முதலியவர்களாற் செய்யப்பட்ட சுலோகரூபமானநிகண்டுகளைப்போன்றது. இது மூன்று உட்பிரிவுகளை உடையது. இரண்டாவது அத்தியாயமாகிய நைகமத்திற்கு உட்பிரிவுகள் இல்லை. இதில் வேதத்தில் வழங்கிவரும் சாந்தஸபதங்களது இலக்கணமும்,ஸ்வரூபமும் காணப்படும். இறுதி அத்தியாயமாகிய தைவதத்திலும் உட்பிரிவுகள் இல்லை. இந்தப் பாகத்தில் வேதங்களிற் கூறப்படும் தேவதைகளின் பெயர்களது பொருள் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. தாம்செய்த இந்தச் சிறந்தநிகண்டுவுக்கு யஸ்கர் தாமே 12-அத்தியாயங்களை உடைய ஒரு வியாக்யானத்தையும் செய்திருக்கிறார். இதற்கும் நிருக்தம் என்ற பெயரே வழங்கிவருகிறது.

ஐந்தாவது அங்கம் ஜ்யோதிஷம் அல்லது வானசாஸ்திரம் என்பதே. வேதங்களில் விதிக்கப்பட்டிருக்கும் கர்மம்முதலியவைகளை நடத்துவதற்குத்தகுந்த நாள்களைத் தீர்மானம் செய்வதற்கு இந்த அங்கம் ஒருவனுக்குஅவசியம் தெரிந்திருக்கவேண்டியது. ஆரியர்களுக்கு வெகுநாளாக நக்ஷத்திரங்கள், கிரஹங்கள் ஆகிய இவைகளின் போக்குவரவுகளாற் சிற்சில கர்மங்கள் சீக்கிரம் பலிக்கும் என்ற நம்பிக்கை உண்டு. இதனால் மேனாட்டவர்போல் தேதிக்கணக்கின்படி கர்மங்களைச்செய்துவராமல் நக்ஷத்திர கிரஹநிலைகளின்படியே செய்யவேண்டிய கர்மங்களை நடத்திவந்தார்கள். இவ்வழக்கமே மேனாட்டவரது வழக்கத்தைவிடச் சிறந்தது என்பதற்குச் சந்தேகமில்லை.

கல்பம் என்பது இறுதி அங்கம். இதில் கர்மங்கள் நடத்தவேண்டிய கிரமம் இன்னதென்பதும், இன்ன இன்ன கர்மங்களில் இன்ன இன்ன மந்திரங்கள் உபயோகிக்கவேண்டுமென்பதும், அவைகளை உச்சரிக்குங்கால் நாம் செய்யவேண்டிய காரியங்கள் இவை யென்பதும் கூறப்பட்டிருக்கின்றன. கல்ப ஸூத்திரங்கள் ஆசுவலாயனர், ஸாங்கயனர், போதாயனர், த்ராஹ்யாயனர் முதலான அநேக ரிஷிகளால் செய்யப்பட்டுள்ளன.

முன் எடுத்துக்கூறிய ஆறு வேதாங்கங்களன்றியும் வேத ரஹஸ்யத்தை வெளியிடவந்த கிரந்தங்கள் வேறு நான்கு உண்டு. அவையாவன, புராணங்கள், நியாயம், மீமாம்ஸம், தர்மசாஸ்திரம் என்பவைகளே. நான்கு வேதங்கள், ஆறு வேதாங்கங்கள், புராணாதி நான்கு ஸஹாய சாஸ்திரங்கள் ஆகிய பதினான்கும் சதுர்தச வித்தைகள் எனப்படும். இவற்றை ஒவ்வொரு த்விஜனும் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டும். இவைகளிலேதான் ஸகல தர்மங்களும், ஞானங்களும் அடங்கியிருக்கின்றன. ஆகையால் இவற்றைக் கற்றவனுக்கு உண்மைப் பொருளை உணரும்சக்தி உண்டாகிறது.

இந்தப் பதினான்கு சாஸ்திரங்களையும் த்விஜன் படித்து உணரவேண்டும் என்பதை நமது சாஸ்திரங்கள் ஒரு விதியாகச் சொல்லுகின்றன. இப்படி ஒருவன் நடக்காதிருந்தால் அவனுக்கு மோக்ஷமார்க்கத்தில் மிகுந்த ஆபத்துக்கள் உண்டாகும். சாஸ்திரங்கள், வேதங்களைப் படித்தே தீரவேண்டும் என்று வற்புறுத்துவதற்குக் காரணம் சற்று யோசித்துப்பார்ப்போரு-

க்கு ஒருவாறு விளங்கும். நமது வாழ்நாளோ அளவிற்குறைந்தது. நாம் இதற்குள் தொடர்ச்சியாக அனுபவிக்க எண்ணும் சிற்றின்பங்களோ அநித்யம். உள்ளத்துறவோடும், மனோநிரோதத்தோடும் நாம் காலங்கழித்துவரின் அதனால் பிற்காலம் நாம் அடையும் பேரின்பமோ மிகச்சிறந்தது. ஆகையால் நாம் இந்தஉலகத்தில் உயிரோடு வாழும்வரையில் பின்னர் வரும் மேலானபதவிக்கே பாடுபடவேண்டுமென்பது அவசியந்தானே. நமது உலக இன்பங்களையும் பொருளாக மதியாமல் நாம் இந்த மேலான நிலைக்கு அனுகூலமாக நமது மனத்தைத் திருப்பிக் கொள்ளவேண்டும். இம்மாதிரி நாம் உலக இன்பங்களை ஒருவாறு ஒழுங்குபடுத்தி ஜாக்கிரதையோடு அனுபவித்தால் அவைகள் நமது மோக்ஷமார்க்கத்தில் தடையாகமாட்டா. அவைகள் ஆரம்பகாலத்தில் ஒருவேளை நமக்கு ஸஹாயமாயிருந்தாலும் இருக்கும். அதனால் "இவைகள் இவ்வாறு ஸஹாயமாகின்றனவே இவைகள் மோக்ஷத்தை அடைவதற்கு அதிக அவசியமானவை" என்று மாத்திரம் எண்ணிவிடல் கூடாது. அவ்வாறு எண்ணினால்நாம் சிற்றின்பங்களில் நம்மைஅறியாது சிக்கிக்கொண்டு நற்கதி அடைய வழியில்லாது தத்தளிப்போம். ஆகையால் உலகஇன்பங்களைநாம்ஆரம்பகாலத்தில்மட்டும் அவை நமக்கு மோக்ஷமார்க்கத்துக்குச்சிறிது ஸஹாயம்செய்வனவாகக் கருதலாம். இவ்வாறு கருதி ஜாக்கிரதையோடு உலகில் வாழும் த்விஜர்களது சொல்லும், வேதசாஸ்திர ஞானங்களும், மோக்ஷமார்க்கத்துக்கு எக்காலத்திலும் பேருதவியாகவிருக்கும். இதுபற்றியே எல்லா த்விஜர்களும் 14-சாஸ்திரங்களையும் படித்து உண்மை உணரவேண்டியது அவசியமென்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன.

நமது நோன்புகள்

OUR OBSERVANCES

II. கோகுலாஷ்டமி அல்லது கிருஷ்ணஜயந்தி

THE BIRTH OF KRISHNA

இந்த நோன்பு ஒவ்வொரு வருஷத்திலும் ஆவணி மாதம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமி திதியன்று வருவது. இந்த நோன்பின் காலத்தைக் குறிப்பதற்கு 'அவிட்டம் கழித்த எட்டாம்நாள்' என்ற வசனமும் வழங்கிவருகின்றது. அதாவது ஆவணி அவிட்டம் என்ற பிராம்மணர்களுள் சிறப்பாகக் கொண்டாடப்படும் வேதாரம்ப ஹேதுவான நோன்பு ஆவணிமாதம் பௌர்ணமியில் ஸாதாரணமாக வருவது வழக்கம். அது வரும் நாளுக்கு எட்டுநாள் பின்னர் இந்த நோன்புவரும் என்பது முற்கூறியுள்ள வசனத்திற்குப் பொருள். இது வைஷ்ணவருள் ஓர் நாளிலும் மற்றையப் பிராம்மணர்களால் இதற்குமுந்தின நாளிலும் ஸாதாரணமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. வைஷ்ணவர்களுக்கு ரோஹிணீ நக்ஷத்திரம் பிரதானமாதலாலும், மற்றையவர்களுக்கு அஷ்டமீ திதி பிரதானமாகையாலும் இந்த நோன்பு இவ்வாறு இரண்டுபட்டு வருகின்றது.

இந்த நோன்பு ஸாதாரணமாக நம்முள் இவ்வாறு கொண்டாடப்பட்டு வருகின்றது என்பதை விவரிப்போம். இந்த நோன்பன்று அதிகாலையில் வீட்டிலிருப்போர் எல்லோரும் ஸ்நானம் முதலியவைகள் செய்துவிட்டு தமது நித்யகர்மங்களைமுடித்துக்கொண்டு அவரவர்கள் அன்று ஸாயங்காலம் நடந்தேறவேண்டிய கிருஷ்ணன் பூஜைக்கு வேண்டிய ஸஹாயவிஷயங்களை தம்மால் கூடியவரையில் தயார்செய்வார்கள். வீட்டிலிருக்கும் சிறுவர்கள் ஊரிலுள்ள தோட்டங்களில் எல்லாம் அலைந்து பகவத்பூஜைக்கு வேண்டிய பத்திர புஷ்பாதிகளை சேகரித்துவரும் கைங்கரியத்தில் இறங்கிவிடுவார்கள். வீட்டில் உள்ள பெண்டுகள் எல்லோரும் அவர்கள் நிலைக்குத் தகுந்தபடி பகவான் நிவேதனத்திற்கு வேண்டிய பக்ஷணம் முதலியவைகள் செய்வதில் தமது காலத்தைக் கழிப்பார்கள். வயதில் முதிர்ந்தவர்கள் பாகவதம்முதலியதிவ்யகதைகளைவாசித்தல்கிருஷ்ண பரமாத்மா முதலிய பெரியோர்களால் செய்யப்பட்டுள்ள அரியநூல்கள் முதலியவற்றை வாசித்தல் ஆகிய ஸத்காலக்ஷேபங்களை செய்துவருவார்கள். அன்று ஸாயங்காலம் பூஜைநடக்கும் வரையில் பட்டினி இருக்க சக்தியுடையவர்கள் சுத்தபட்டினியாயும், குழந்தை முதலானவர்கள் தவிர மற்றையோர் சிற்றுண்டி உட்கொண்டும் இருப்பார்கள். ஸாயங்கால ஸமயம் வந்ததும் வீட்டில் பெரியவராக இருப்பவர் ஸ்நானம் முதலியனசெய்து தயாராக இருக்கும் பூஜாத்ரவ்யங்கள் முதலியவைகளைக்கொண்டு கிருஷ்ணன் பூஜைசெய்யத் தொடங்கி நிவேதனம் முதலியவைகள் செய்துமுடிப்பார். பகவத் பிரஸாதத்தை வீட்டில் உள்ளோர் எல்லோரும் உட்கொண்டபின்னர் பாகவதத்தில் கிருஷ்ணஜனனம் வாசித்தல் இதுபோன்ற வேறு சில ஸத்காலக்ஷேபாதிகளைச் செய்துகொண்டே அன்றிரவு சந்திரோதயம் ஆகும்வரை விழித்திருப்பார்கள். சந்திரோதயம் ஆனதும் கிருஷ்ண பரமாத்மாவுக்கு கற்பூர ஹாரத்தி முதலியன செய்துவிட்டு எல்லோரும் தூங்கத் தொடங்குவர். மாத்வபிராம்மணர்களுள்மாத்திரம் அன்றிரவு ஏகாதசியைப்போல பட்டினியாகவே இருந்துவிட்டு மறுநாள் காலையில். துவாதசியன்று செய்வதுபோலப் பாரணைசெய்வது வழக்கமாக இருக்கிறது.

விஷ்ணு ஆலயங்களில் கிருஷ்ணஜயந்தி யன்றையதினம் பகவானுக்கு விசேஷமாக அபிஷேகம் பூஜை முதலியன முடிந்தபின்னர், அன்று ஸாயங்காலம் ஸ்வாமி வீதி சுற்றிவரப் புறப்படும். கிருஷ்ண பரமாத்மா காளிங்க ஸர்ப்பத்தின்மீது நர்த்தனம் செய்வது போன்ற அலங்காரம் அன்று ஸ்வாமிக்குச் செய்திருக்கும். கிருஷ்ண பரமாத்மாவின் லீலைக்குள் இதுவே மிகுந்த அற்புதமானதாயும், சிறந்த உட்கருத்துகள் அமைந்ததாயும் உள்ள லீலை ஆதலால் எங்கும் இந்த அலங்காரமே பொதுவாகக் காணப்படும். உட்பொருள் முதலியவற்றை இந்த வியாஸத்தின் முடிவில் விவரிப்போம். பகவான் புறப்பட்டு வெளி வந்ததும் ஸந்நிதியில் சறுக்குமரம் ஒன்று நாட்டியிருக்கும். அதன் நுனியில் ஓர்முடிப்பில் கொஞ்சம் காசு வைத்து முடிந்திருக்கும். பகவானுடன் கோகுலத்தில் விளையாடியவர்கள் யாதவர்களாதலால் அந்த குலத்திற்கு ஈடாக இக்காலத்திலிருக்கும் இடையர் குலத்தோர் இச்சறுக்குமரத்தில் ஏறி, மேல் இருக்கும் காசை எடுக்கமுயலுவர். அப்பொழுது அவர்கள் அருகில் உயர்ந்த ஸ்தானத்தில் மஞ்சள் நீர் முதலியவைகளோடு தயாராக இருப்பவர் சிலர் ஜலத்தை ஓயாது அவர்கள்மேல் அடித்துக்கொண்டே யிருப்பார்கள். இவைகளை எல்லாம் கவனியாது, சாண்ஏறினால் முழம் சறுக்கும். சறுக்குமரத்தின் கஷ்டத்தையும் கவனியாது,'பகவான்கோகுலத்தில் தமது குலத்தவருடன் செய்தலீலைகளுள் ஒன்றைத்தாமும்பகவான்மேல்கருத்துவைத்து எந்தக் கஷ்டத்தையும் கவனியாது நடத்தவேண்டு'மென்ற ஆவலுடன் இடையன் ஒருவன் மிகுந்த கஷ்டத்தின்மேல் கம்பத்தின் உச்சிபோய் அங்கிருக்கும் முடிப்பை எடுத்துவருவன். முடிவில் அவன் கம்பத்தின் அடியில்வந்து எதிரிலிருக்கும் பரமாத்மாவை நோக்கி மனதார செய்யும் வழிபாட்டை நோக்குங்கால் 'மோக்ஷமார்க்கத்தில் சாண் ஏற முழம் இழுக்கும்படியான உலகவாழ்விலிருந்துகொண்டு உறுதியுடன் மோக்ஷமார்க்கத்தில் நிலைபெற்று ஆத்மலாபத்தை அடைவது மிகக்கஷ்டம்! அதை அடைவதே நமது வாழ்க்கைப்பலன்" என்ற எண்ணம் உற்றுநோக்குவோர் எவர் மனதில் தான் உதியாது? இதுபோலவே வீதியில் உரிகள் கட்டப்பட்டிருக்கும். அவைகளைக் கப்பிகள் மூலமாக மேலும் கீழுமாக இழுக்கும்படி வைத்திருக்கும். இடையர்களுள் ஒருவன் இந்த உரியை தன் கையிலிருக்கும் தடியால் அடிக்க முயலுவான். அந்த ஸமயத்தில் உரி அவன் தடிக்கு எட்டாதபடிவேறொருவன் இழுத்துவிடுவான். அருகாமையிலிருந்துகொண்டு சிலர் உரியடிப்பவன் மீது தண்ணீரை அவன் முகத்தில் படும்படி அடித்துக் கொண்டிருப்பார்கள். இந்தத் தடைகளைக் கவனியாது அவன் உரியை அடித்ததும் ஸ்வாமி வீதிவழியாக

வந்து எல்லோருக்கும் காட்சிகொடுத்துக்கொண்டே வரும். ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும்உரிகளின் அருகாமையில், உரி அடிபடும் வரையில் நின்று பின்னர் ஸ்வாமி அப்பால் போகும். இம்மாதிரி சிறந்த உட்கருத்துக்கள் உள்ளடங்கிய உத்ஸவம் ஒன்று கிருஷ்ணஜயந்தி யன்று நடந்துவருகின்றது.

இந்தநோன்பிற்குக் காரணமாக இருக்கும் புராணகதையை எடுத்து விவரிப்போம். உலகத்தில் கம்ஸ ஜராஸந்த ரூபமாக அஸுரர்கள் எல்லோரும் ஜன்மமெடுத்து அநீதியிலேயே ஸதா முயற்சியுடையவர்களாகி பூமிக்குப் பெரும்பாரமாக இருந்தகாலத்தில், பூமிதேவி காமதேனு உருக்கொண்டு பிரம்மதேவரிடம் சென்று தனது கஷ்டத்தைக் கூறி முறையிட்டுக்கொண்டாள். அப்பொழுது பிரம்மதேவர் ஸகல தேவதைகளாலும் சூழப்பட்டு பூமிதேவியோடு பரம்பொருள் யோக நித்திரைசெய்யும் திருப்பாற்கடலடைந்து துதிக்க, அவர் ஸகல தேவதைகளையும் பூமியில் ஜன்மங்கள் எடுக்கும்படி உத்தரவுசெய்து தாமும் கூடியசீக்கிரத்தில் வஸுதேவருக்குப் பிள்ளையாகப்பிறந்து தேவதைகளுக்கு ஹிதம் செய்வதாக ஒப்புக்கொண்டார்.

இப்படி இருக்கையில் ஸூரராஜா வம்சத்தில் பிறந்த வஸுதேவர் மதுரைதேசத்து அரசனாகிய உக்கிரஸேனராஜன் பெண்ணாகிய தேவகி தேவியை கல்யாணம் செய்துகொண்டு, மறுநாள் அவளைத் தமது தகப்பன் வீட்டிற்கு அழைத்துப்போக யத்தனித்தார் அப்பொழுது தேவகி தேவி தகப்பன் தனது வாஞ்சையால் தன் பெண்ணுக்கு அநேகவித ஸ்திரீதனங்கள் கொடுத்தான். அப்பொழுது ஊருக்குப்போக வஸுதேவரும்தேவகியும் தேர்மேல் வந்து ஏறினார்கள். தேவகீதேவியை திருப்திசெய்வதற்காக அவள் தம்பி கம்ஸன் தேர் ஓட்டவந்து ஏறிக்கொண்டான். இவன் உத்ஸாஹமாகத் தேர் ஓட்டிச் செல்லும்பொழுது ஆகாயத்தில் அவன்முன்பாக 'அடே மடையா! இந்த ஸ்திரீயின் எட்டாவது குழந்தை உனக்கு யமன்' என்று ஓர் அசரீரிவாக்கு உண்டாயிற்று, இயற்கையாகவே கொடியவனான கம்ஸனுக்கு கோபம் உண்டாக தனது பட்டாக்கத்தியை உருவிக்கொண்டு தேவகீதேவியை ஒரேவீச்சாய் வீசிவிடவேண்டும் என்று எண்ணிக்கொண்டு அவள் தலைமயிரை பிடித்துவிட்டான். வஸுதேவர் தர்மவழியில் அவனை ஸமாதானம்செய்யப் பார்த்தார். முடியாமல்போக வஸுதேவர் தனக்குப்பிறக்கும் பிள்ளைகள் எல்லாவற்றையும் கம்ஸன் வசம் ஒப்புவிப்பதாக ஒப்புக்கொண்டார் கம்ஸன் கொலைத்தொழிலை நிறுத்திவிட்டான்.

தனக்குப் பிறக்கும்பிள்ளைகளை முறையே வஸுதேவர் கம்ஸனுக்குத் தவறாது கொடுத்துவந்தார். வஸுதேவரது நடத்தைக்குமெச்சி கம்ஸன் குழந்தைகளை வஸுதேவரிடமே கொடுத்துவிட்டான். இம்மாதிரி நல்லபுத்தி அவனுக்கு வந்தது மிகவும் அபூர்வம். இவன்சீக்கிரம் இறந்தால்அல்லவா உலகத்திற்குக்ஷேமம்? இவன் இவ்வாறு சற்று நல்லவனாகிவிட்டால் இவனுக்குக் கடவுள் தண்டனை எப்படிவரும்? இதை ஸரிப்படுத்தி கம்ஸனை மிகக் கொடியவனாக்குவதற்கும், வஸுதேவருக்குப் பிள்ளைகளாகப் பிறந்திருக்கும் தேவதைகளை சீக்கிரத்தில் விடுவிப்பதற்கும் நாரதர் அங்கு வந்துவிட்டார். உலகத்தில் கொடியவர்களை வேரறுக்க தேவதைகளும் மஹாவிஷ்ணுவும் செய்திருக்கும் ஏற்பாட்டை அவனுக்குக்கூற கம்ஸனுக்கு பயம் அதிகரித்துவிட்டது. வஸுதேவரையும் தேவகியையும் ஆறுவதுகுழந்தை பிறந்ததும் அவன் சிறையில் இட்டான். ஆறு குழந்தைகளையும் வாங்கி அவன் இரக்கமின்றிக் கொலையும் செய்துவிட்டான்.

தேவகி ஏழாவது கர்ப்பமானாள். அப்பொழுது மஹாவிஷ்ணு தமது யோகமாயையை அழைத்து 'வஸுதேவரது'பத்னிகள் கம்ஸனுக்கு பயந்து நந்தகோபரது ராஜ்யத்தில் ஒளிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுள் ரோஹிணீதேவி வயிற்றில் இந்த ஏழாம்குழந்தையை வைத்துவிடு. நான் பின்னர் தேவகிவயிற்றில் பிறக்கிறேன். நீ நந்தகோபரது மனைவியாகிய யசோதைவயிற்றில் பெண்ணாகப் பிறந்துவிடு' என்று ஆஞ்ஞாபித்தார். எல்லாம் இவ்வாறேயாக, தேவகீகர்ப்பம் நஷ்டமாய்விட்டது. இதன்பின்பு வஸுதேவரிடம் பகவான் புகுந்துகொண்டு காலக்கிரமத்தில் தேவகீயினிடம் பிரவேசித்தார். தேவகீ எட்டாம் தரம் கர்ப்பம் தரித்தாள். ஏழாம் கர்ப்பம் மாயமாக மறைந்துபோய்விட்டதையும் தேவகீ எட்டாம்தரம் கர்ப்பந்தரித்து விளங்குவதையும் கேட்ட கம்ஸனுக்கு ஏதோ இவைகளில் சூது இருக்கிறது என்று தோன்ற பயம் அதிகரித்துவிட்டது. அநேகரைக் காவலாக ஏற்படுத்தினான். எங்கே ஏழாவது கர்ப்பம்போல இதுவும் மாயமாக மறைந்து கொஞ்சநாளில் தனக்கு யமனாக வந்துவிடுமோ என்ற பயத்தால் குழந்தை பிறந்ததும் தனக்குத் தெரிவிக்கும்படி கடுமையான கட்டளையிட்டிருந்தான். பகவானைத்

தன்னிடம் தாங்கி நிற்கும் தேவகீ தேவியைக் கண்டதும் அவனுக்கு அவளைக்கொல்ல மனம்வரவில்லை. பகவானது ஜனனத்தை மிகுந்த பரபரப்புடன் கம்ஸன் எதிர்பார்த்திருந்தான். தேவதைகள் எல்லோரும் பகவானைத் துதித்து அவர் அவதாரத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

அஷ்டமீ இரவு சந்திரோதயகாலம்: நிசி 12-மணி ஸுமார் இருக்கும். கம்ஸன் மிகுந்த பயத்துடன் தன்னைச்சுற்றி பகவான் காணப்படுவதாக எண்ணி எண்ணி வெருண்டு அடிக்கடி விழித்துப் பார்த்துக்கொண்டு சற்றுக் கண் அயர்ந்தான். கண்கொட்டாது காவலாக இருந்த சிறைச்சாலை வாயிற்காப்போர் எல்லோரும் களைப்பால் சற்றுக் கண் அயர்ந்தனர்.

இப்படி இருக்கையில் சந்திரன் உதயமானான். அத்துடன் சிறைச்சாலையில் பகவானும் வெளிவந்தார். ஸாதாரணக் குழந்தைகள்போலா? சதுர் புஜத்தோடு தமக்கு ஸாதாரணமாக உள்ள திவ்ய மங்களரூபத்துடன் வஸுதேவர் தேவகீ இருவருக்கும் தோன்றினார். இருவரும் வாயாரப் பகவானைத் துதித்து ஆலிங்கனம் செய்துகொண்டனர். உடனே அவர்கள் காலில் இட்டிருந்த விலங்குகள் யாவும் சிதறிப்போயின. காலதாமதம் செய்யாது பகவான் அவர்களை நோக்கி 'நான் சீக்கிரத்தில் குழந்தையாகிவிடுவேன். என்னை எடுத்துச்சென்று யமுனையாறு கடந்து அக்கரையிலிருக்கும் நந்தகோப கிரஹத்தில் சென்று பிரஸவித்திருக்கும் யசோதையருகில் விட்டுவிட்டு அங்கிருக்கும் பெண்சிசுவை இங்கு எடுத்துவந்துவிடுங்கள். நீங்கள் செய்யும் காரியம் ஒருவருக்கும் தெரியாதிருக்கும். கதவு, ஆறு முதலியனதாமே உமக்கு அனுகூலமாக இருக்கும்' எனச் சொல்லிக் குழந்தையானார்.

வஸுதேவர் தேவகீயைத் தேற்றிவிட்டு காலதாமதம் செய்யாது கதவைத் தொட்டார். கதவு திறந்தது. வெளியே வந்தார், காவலாளர்கள் முதலியோர் உறங்குவதைக் கண்டார். பகவானது திருவிளையாடலைக் கண்டு வியந்தார். அப்பொழுது மழைத்தூற்றல் விழுந்துகொண்டிருந்தன. யமுனை வந்து அங்கு ஏற்பட்ட வழி மூலமாக நந்தகோபர் வீடுசென்று எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்ததால் ஒருவருக்கும் தெரியாது தமது குழந்தையை விட்டுவிட்டு யோகமாயையை எடுத்துக்கொண்டு தமது சிறைச்சாலை வந்தார். கதவுகள் சாத்தியவுடன் முன்போல பூட்டிக்கொண்டன. விலங்குகள் காலில் வைக்கப்பட்ட உடன் முன்போல சேர்ந்துகொண்டன. அந்த ஸமயத்தில் நிச்சப்தமான இரவில் ஓர்கழுதை கத்தியதாம். பெண்சிசுவும் கத்தியதாம். திடுக்கிட்டு எல்லோரும், எழுந்து தேவகீ தேவிக்குப் பெண்பிறந்த விஷயத்தைக் கம்ஸனுக்குத் தெரிவித்தனர். பின்பு கம்ஸன்செய்த விஷயங்களை நாம் இங்கு விவரிக்கவேண்டியது அனாவசியம்.

இவ்வாறு தோன்றிய பரமாத்மா தமது வாழ்நாள் முழுவதையும் வாழ்க்கையின் நோக்கம், ஸம்ஸாரத்திலிருந்து மனிதன் விடுபடும்விதம், உலகவிஷயங்களின் ஸ்வரூபம் ஆகிய இவைகளையே அநேகவிதமாக ஓயாது நம்போலியருக்கு நேராகவும் தமது நடத்தைகள் மூலமாகவும் போதித்துக்கொண்டேயிருந்தார். இவரை உள்ளபடி உணர்வது மிகக்கஷ்டம். இவர் செய்துள்ள லீலைமுதலியவைகள் அநேகவிதமாகவும் அநேக விரோத அம்சங்களை உடையனபோலவும் மேலெழுந்தவாரியாகப் பார்ப்போருக்குத் தோன்றும். உற்று நோக்குவோருக்கு மாத்திரமே இவர் முற்கூறிய அரிய விஷயங்களைத் தமது வாழ்க்கையில் காட்டுவது நன்குவிளங்கும். ஓர்மஹான் கிருஷ்ணபரமாத்மாவின் வைபவங்களைப் பின்வருமாறு எடுத்துக்கூறியுள்ளார். 'பிரபஞ்சமாகிய நாடகத்தில் இருக்கும், வெளிப் படையானவிரோதாம்சங்கள், தோஷங்கள் முதலியவற்றையும் விடாது நடித்துயாரும்மறவாதவண்ணம்காட்டி, அவைகளின் பின் தாமே கபடநாடக ஸூத்ரதாரியாக விருப்பதை வெளிப்படுத்தியவராயும், தாமே தஸ்கராணாம் பதியாக (கள்வர் தலைவனாக) இருப்பவராயும், பிரேமை கருணை முதலியவைகளுக்கு நிலயமாக விருந்தபோதிலும் தாமே ஸகல விரோதம் சண்டை முதலியவைகளுக்கு இவ்வாறு காரணமாக இருப்பது என்பதை வெளியிடுபவராயும், ஸகலவேதாந்தங்களையும் வெளிப்படுத்தும் திறனுடையவராயும் ஸகலஸ்திரீகளும் மிகுந்த ஆனந்தத்துடன் கூறத்தக்கதாயும் உள்ள பால்யலீலைகளை உடைய அற்புதக் குழந்தையாயும், உபநிஷத்துகள் வெளியிடும் அற்புதவிஷயங்களைவிட அத்யற்புத விஷயங்களைத் தெரிவிக்கும் சேஷ்டைகளை கோபிகள், ராதை முதலியவர்களோடு செய்த அற்புத புருஷனாயும், உலகத்தையே நிலைநிறுத்தும்படியான சட்டங்களைவெளிப்படுத்திய அமைச்சராயும், ஸந்நிதான மாத்திரத்தில் எல்லா விஷயங்களை நியாயப்படி நடக்கும்படி செய்யும் அற்புத வீரராயும், உலகத்தில் உள்ள ஸகல

வேதங்களது ஸாரத்தையும் சுருக்கமாக கொஞ்ச நாழிகையில் எடுத்துரைத்த பரம குருவாகியும், 60,000 ஸ்திரீகளோடு கூடியிருக்கும் நித்ய பிரம்மசாரியாயும், நாரதரை ஒரு நொடிப்பொழுதில் மாயையில் கட்டுப்பட்டுத் தவிக்கும்படி செய்த தந்திரமான ஸ்நேஹிதராயும், ஸதா வேணுகானம், நடனம், விளையாட்டு ஆகிய இவைகளையே நிச்சிந்தையாக செய்துகொண்டிருக்கும் கோபாலனாயும், கற்பனாரஸம், ஸம்பவவிசித்திரங்கள், ஆழ்ந்த உட்கருத்துக்கள் ஆகிய இவைகள் விஷயத்தில் தனக்குத்தானே நிகர் என்று சொல்லும்படியான திவ்ய சரித்திரத்தை உடையவராயும், பூர்ணாவதாரமாயும் உள்ள கிருஷ்ண பரமாத்மாவை கடவுளெனக் கருதித் துதிக்காது இருப்பவரும் உண்டோ!' என்று வியந்து கூறியுள்ளார்.

இவ்வளவு சிறப்புடைய பகவத்கதையைக் கேட்டால் நமது மனதிற்கு என்ன தோற்றும். 'பெரியோர்களது சரிதங்கள் நாமும் பெரியோராகி நமது பின்வருவோருக்கு ஓர் ஆதாரமாக விருநது அவர்களை சிறந்தவராகத் தூண்டும் திறனுடையவர்கள் ஆகலாம் என்ற எண்ணத்தை நமக்கு உண்டாக்கும்' என்றார் ஓர் ஆங்கிலகவி. இது மனிதரது சரித்திரத்தைப்பற்றிச் சொன்னது. இதை கிருஷ்ண பரமாத்மாவின் சரித்திரத்தோடு சேர்த்தால் பொருந்தாது. கிருஷ்ண பரமாத்மாவைப்போல நடக்க முயன்றோமாகில், நம்மால் ஒன்றும் செய்யமுடியாது என்பதோடுங்கூட நாம் வீணாகக் கெட்டுப்போய் ஒரு விஷயத்திற்கும் பயன்படாமல் போய்விடுவோம். ஆகவே இவரது சரித்திரத்தை நோக்கில் முன்னர் கூறியுள்ள மஹான் சொல்லுவது போல், உலக விஷயங்களில் விருப்பு வெறுப்புமுதலியவைகள் இன்றி பகவானது லீலா விபூதிகளில் ஈடுபட்டு பிரபஞ்சத்தையே மறந்து கொஞ்சகாலம் நிற்கும்படியான சக்தியை இவரது சரித்திரம் கொடுக்கின்றது என்பது தெரியவரும். இதுவே கிருஷ்ண பரமாத்மாவைப் போன்ற அவதார சரித்திரங்களால் நமக்கு ஏற்படும் நன்மை. இவைகள் ஸாதாரண பெரியோர்களது சரித்திரத்தைப்போல முற்றிலும் நாம் பின்பற்றக்கூடும் சரித்திரங்கள் அல்ல என்பதை அறிந்து இச்சரித்திரங்களைக் கண்டு வியந்து கடவுளது அவதாரதினங்களைக் கொண்டாடுவோமாகில் நாம் மேன்மை அடைவோம் என்பதற்கு ஐயமில்லை.

இனிமேல் கிருஷ்ணஜயந்தி விஷயமாக உள்ளபுராணகதையில் அடங்கி இருக்கும் உட்கருத்துகளை எடுத்துக்காட்டுவோம். எப்பொழுதும் நிஷ்டை பழகிக்கொண்டு ஸதா பரம்பொருளோடு வாஸம்செய்யும் மனம்உடைய ஞானிக்கு இதுவரையிலும் கூறியவை திருப்திகரமாக இருக்கமாட்டா. அவனுக்கு எல்லா விஷயத்தையும் ஆத்மபரமாக ஸமன்வயப் படுத்திக்கொள்ளவேண்டிய ஆவலே இருக்கும். ஆகவே அவன் உக்ரஸேனனை கோபாதிவிருத்திகளுக்கு அதிபதி என்றும், கம்ஸனை ஜீவ அகங்காரமென்றும், அவன் தங்கை தேவகியை புத்தி என்றும், அவள் ஏழுபிள்ளைகளை சுத்தபுத்தி விருத்திகள் என்றும் கம்ஸன் அப்பிள்ளைகளைக் கொல்லுவதை அகங்காரம் சுத்த புத்தி விருத்திகளை அடக்கிவிடுவது என்றும், கிருஷ்ணபரமாத்மாவை ஞானம் என்றும், பரமாத்மா உண்டானதும் விலங்கு தரித்துப்போனது, சிறைச்சாலைக் கதவுகள் திறந்தது ஆகிய இவைகளை ஞானானுபவத்தால் பாசம் கழன்றுபோவது என்றும், கொண்டு கிருஷ்ணஜயந்தியன்று அவனும் ஆனந்திப்பான் இப்பொருள்கொண்டு ஆனந்திக்கும் ஞானிக்கு கண்டவிடமெல்லாம் ஸதா பகவான் இருப்பதாகவும் அஞ்ஞானிகளாகிய நம்மிடம் சிற்சில ஸமயங்களில் கிருஷ்ணன் தோன்றுவதாகவும் காணப்படும். உதாரணமாக ஏதாவது ஓர் வீட்டில் துக்கம் இருப்பதையும் அங்கு யாராவது ஒருவர் வந்து நல்ல விஷயங்களைக் கூறி தேற்ற வீட்டோர் தேறி இருப்பதையும் கண்டவுடன் அங்கு பாலகிருஷ்ணன் பிறந்ததாக எண்ணி அவன் மகிழுவான்.

இந்த நோன்பன்றையதினம் கிருஷ்ணன் பிறந்த நாழிகை வரையில் விழித்திருப்பதின் கருத்து என்னவெனில், கம்ஸன் அவன் காவலாளர்கள் முதலியோர் ஸமயத்தில் தூங்கியதால் பகவத்தர்சனம்இழந்தார்கள், அதுபோல நாமும் தூங்கி ஏமாறாதுவிழித்து இருக்கவேண்டும் என்பதே. ஞானியோ இதை துரிய ஜாக்கிரதை (அதாவது நிஷ்டையில் ஞாபகத்துடன் பகவானை மறவாதிருத்தல்) எனக்கொண்டு, பகவானை மறந்தால் ஏமாந்து விஷயத்தில் சிக்கிக்கொள்ள வேண்டியதுதான் என்று கொண்டு இந்நோன்பில் விழித்திருக்கவேண்டும் என்று நன்றாக நமது பெரியோர்கள் ஏற்படுத்தினார்கள் என்று மஹான்களை மெச்சிக்கொள்வான்.

மேலும் கிருஷ்ணன் லீலைகள் ஒவ்வொன்றிலும் இம்மாதிரி உட்கருத்துக்கள் அமைந்திருப்பதை ஊகித்து அறிவோர் காணலாம். உதாரணமாக கிருஷ்ணஜயந்தியன்று விஷ்ணுகோயில் அலங்காரமாகிய காளிங்க மர்த்தனத்தை எடுத்துக்கொள்ளுவோம். [காளிங்கனை ஐந்துதலை நாகமாகக் காட்டியிருக்கும். இதை பஞ்சேந்திரியமாகவும், இது இருக்கும் மடுவை விஷயமாகவும், கிருஷ்ண பரமாத்மாவை ஞானமாகவும், முதலில் பரமாத்மா மடுவில் விழுந்து கலக்குவது ஞானம் முதலிய விஷயத்தில் சிக்கிக்கொள்வதாகவும், பின்னர் பாம்பால் சுற்றப்படுவது விஷயத்தில் அலையும் இந்திரியங்களால் ஞானம் பிடிபடுவதாகவும், பின்னர் பகவான் பாம்பின் மேல் ஏறி நர்த்தனம் செய்வது, ஞானம் ஓங்கி இந்திரியங்களை அடக்குவதாகவும், பாம்பு விஷம் கக்குவது விஷயானுபவம் செய்யும் சக்தியை இந்திரியங்கள் இழக்கும்படி செய்வதாகவும், காளிங்கனைக் கொல்லாது மடுவைவிட்டு ஓட்டிவிடுவது விஷயங்களிலிருந்து இந்திரியங்களைப் பிரிப்பதாகவும், பின்பு காளிங்கனை விஷய விருத்தியற்று ஸத்விருத்தியோடு கூடி இருக்கும் இந்திரியங்களாகவும் கொண்டு மெய்மறந்து நிற்கலாம், கிருஷ்ணஜயந்தியன்று வரும் பகவானைக்கண்டு. இந்தமாதிரி ஒரு மஹான் காளிங்கமர்த்தனத்தின் உட்கருத்தைக் கூறுங்கால் 'விஷம் விஷமல்ல, விஷயமே விஷம். ஸம்ஸாரம் விஷவிருக்ஷம். ஏனெனில் விஷம் ஒரு தேகத்தைக் கொல்லும், விஷயமோ அநேக ஜன்மங்களை வ்யர்த்தமாக்கும். மேலும், விஷம் முற்றிய கொடிய பாம்பினிடம் தான் மாணிக்கம்இருக்கும், அதுபோல விஷயம் முற்றினால்தான் அதன்பேரில் அருவருப்பு உண்டாக விஷயத்யாக இச்சை உண்டாகும்' என்று மனனம்' செய்திருக்கிறார்.

இதுகாறும் கூறிவந்த ஞான நிலைதான் ஸகல நோன்புகளின் முடிவும். இப்படி இருப்பினும் இதை வெளிப்படையாகச் சொன்னாலும் நம்போன்றபாமரர்களுக்கு எளிதில் விளங்காது. ஒருவேளை அவை பாபமான எண்ணங்கள் என்றுதோற்றினாலும்தோற்றும், ஆதலால்நம்பெரியோர்இந்தநோன்பைபாகவதக்கதையை ஒட்டி ஏற்படுத்தி நமக்கு முதலில்சுத்த மனதும் பக்தியும்உண்டாகும்படி தகுந்த ஏற்பாடுகள் செய்திக்கின்றனர். இந்த நோக்கத்தை நன்கு உணர்ந்து இவ்விருதாதிகளை வீண்காலம் போக்கல் எனக்கருதாது இந்தக்காலங்களில் கூடியவரையில் ஸாதாரண வ்யவஹாரங்களிலிருந்து ஒதுங்கி ஸத்காலக்ஷேபாதிகளில் காலத்தை நாம் போக்கிவருவோமாயின் முன் எடுத்துக் காட்டியுள்ள ஞானியின் ஆனந்தநிலை நமக்கும் முடிவில் கைகூடும் என்பதற்கு என்னஸந்தேகம்!

ஓம் தத்ஸத்.

மனிதன்—அவன் தாழ்வும் ஏற்றமும்

MAN HIS LITTLENESS & GREATNESS

[இந்த வியாஸம் தான் முதல் முதல் ஆங்கிலத்தில் ராஜம் அய்யர் எழுதிய வியாஸம். இதன் மூலமாகத் தான் அவருக்கு ஸத்குருலாபம் கிடைத்தது. இதை முன்னரே, 1908-ம் வருஷ டிசம்பர் மீ வெளியான விவேகபோதினி 6-ம் ஸஞ்சிகையில் எழுதியுள்ள இராஜம் அய்யர் சரிதை மனம்மாறிய சருக்கம் 169-ம் பக்கத்தில், சுருக்கி எழுதியிருக்கிறோம். நமது சந்தாதார்கள் நன்மைக்காக இந்தவியாஸத்தை மொழிபெயர்த்து இங்கு எழுதலானோம்.]

'பழகப்பழகப் பாலும் புளிக்கும்' என்பது பழமொழி. இந்த அதிகப் பழக்கமே நமக்கு மிகுந்த விரோதியாக குறுக்கே நிற்கின்றது. இப்பிரபஞ்சத்தில் அதிக அற்புதமான வஸ்துக்களை நாம் அடிக்கடி பார்த்துக்கொண்டிருப்பதால்தான் அவைகளை நாம் கவனியாமலும், அவைகளின் ஸ்வரூபம் இவ்வாறு நுட்பமாயும் அற்புதமாயும் உள்ளது என்பதை உணராமலும் நமது காலத்தை வீணாகக் கழிக்கிறோம். நம்முள் எத்தனைபேர் ஆகாயத்தை உற்றுநோக்கி அங்குள்ள அற்புதங்களைக்கண்டு ஆனந்திக்கக் கொடுத்துவைத்திருக்கிறார்கள்?' என்றுமிகுந்த இரக்கத்துடன் ரஸ்கின் என்ற ஓர் ஆங்கல ஆசிரியர் மனிதர்களை வினவுகிறார். இவ்வாகாயத்தை நாம் பிறந்தது முதல் எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருப்பதால் இது என்றைக்கும் இப்படித்தான் இருக்கும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டாக அதை நாம் உற்றுநோக்கி ஆனந்திக்காது நின்றுவிடுகிறோம். குழந்தைகள் ஆச்சரியத்துடன் புதிதாய் வந்தவர்களைப் பார்க்கின்றனவே ஒழியத் தமது தாய்மார்களை அவ்வாறு நோக்குவதில்லை. இதுபோலவேதான் நாமும் ஓர் புதிய நெசவு யந்திரத்தை எவ்வளவு ஆவலோடு பார்க்கிறோமோ அவ்வளவு ஆவலோடு அநேகாயிரம் அற்புத அண்டங்கள் நிராதாரமாகத் தொங்கிகொண்டு தமக்கு ஏற்பட்ட யார்க்கங்களில் நிலைமாறாது தொன்றுதொட்டு அலைந்துகொண்டிருக்கும் ஆகாயத்தை சற்றேனும் கண்ணெடுத்து நோக்குவதில்லை. இத்தகைய ஆகாயமானது நாம் பிறந்தகாலத்து இல்லாது திடீரென்று பின்னர் நமது கண்முன் தோன்றி இருக்குமாயின், நமது ஆச்சரியம், ஆவல் முதலியன கவிகளின் ஹிருதயங்களில் குடிகொண்டிருக்கும் சுத்த கல்பனாசக்தியைப்போல கிளம்ப, நம்முள் சிறியாரிற் சிறியராக இருப்பவர்கூட பயபக்தியுடன்தமது கையைச்சிரமேல்வைத்து சுத்த மனத்

தோடும் அச்சத்தோடும் வேதமந்திரங்களைப்போன்ற ஸ்தோத்திரங்களை வாயாரத் தாமே கற்பிப்பர். இப்பொழுது நமக்கிருக்கும் மந்தநிலையைப் பாருங்கள்! ஆகாயமோ ஒருநிமிஷம் இருந்ததுபோல மறுநிமிஷம் இருப்பதில்லை. அது ஸதா மாறிக்கொண்டும் மிகுந்த அற்புதத்தோற்றங்களை நிமிஷத்திற்கு நிமிஷம் காட்டிக்கொண்டும் இருக்கிறது. அதில் மேகங்கள் அற்புதமாய் மாறும் உருவங்களோடு ஸதா அங்கும் இங்கும் ஸஞ்சரிக்கின்றன; ஸூர்யோதய அஸ்தமனங்களோ வால்மீகி முதலிய வரகவிகளாலும் வர்ணிக்கமுடியாத ஆடம்பரத்துடன் காணப்படுகின்றன; சந்திரனோ மிகுந்த ஜிலு ஜிலுப்போடு கூடிய வேணுநாதம்போன்ற இனிமையுடன் பிரகாசிக்கின்றனன்; அதில் ஓய்வு ஒழிவு இல்லாமல் காட்சிகள் ஸதா மாறிக்கொண்டேயிருக்கின்றன; இம்மாதிரியான விஷயங்களைப்பற்றி நமக்கு யாதொன்றும் தெரியாதிருந்தும், நம்முள் அநேகரது மந்தமான மனதில் ஆகாயத்தின் சிறப்பு பதியாமலே இருக்கின்றது.

நாம் என் இப்பொழுது ஆகாயத்தைப்பற்றிப் பேசவேண்டும்? நமக்கும் அதற்குமுள்ள ஸம்பந்தத்தை பஞ்சாங்கம், காற்றின் நிலைமையைக் கூறும் விளம்பரம் முதலியன நன்றாகக்காட்டிவிடுகின்றன. இது நமக்குப்போதும். நம்மோடு அதிக நெருக்கமாக இருக்கும் விஷயங்களைப்பற்றி விசாரிக்கப் புகுவோம். அதாவது மனிதனை எடுத்துக்கொள்ளுவோம். நமக்கு மனிதர்கள் ஸம்பந்தத்தைவிட்டு நீங்குதல் மிகக்கஷ்டம். நாம் தொழிலில் இருந்தாலும் ஸரி. அல்லது அது இல்லாமல் இருந்தாலும் ஸரி எப்பொழுதும் மனிதர் மத்தியிலேயே பழகிவரவேண்டியிருக்கிறது. கூடிவாழ்தல், ஸ்நேகம், அன்பு ஆகிய இவைகளையே நாம் எக்காலத்தும் விரும்புவது. இப்படி நாம் ஸதா விரும்பும் மனிதனுடைய உண்மையான ஸ்வரூபத்தைப்பற்றி நமக்கு என்ன தெரியும்? ஒன்றும் தெரியாது! மனிதன் பிறக்கிறான், பின்பு அவன் இறக்கிறான், அவன் எங்கிருந்து வருகிறான் எங்கே பின்னர் போகிறான் என்பதே நமக்குத் தெரியாது. ஒருவன் கவியாகவும், மற்றொருவன் போர்வீரனாகவும் இருக்கிறான். இப்படி இவர்கள் இருக்கக் காரணம் இன்னதென்பதே நமக்குத் தெரியாது. மனிதன் உயிரோடிருக்குங்கால் மூச்சுவிடுகிறான், அவன் இறந்தபின்பு மூச்சு நின்றுவிடுகின்றது. மூச்சு விட்டுக்கொண்டிருந்தது யாது, மூச்சில்லாதுகிடப்பது யாது, நாம் பிறக்கக் காரணம் என்ன, நாம் எங்கேபோகிறோம், மரணத்தோடு நமது வாழ்க்கை முடிந்ததா, நாம் ஆத்மாவா, அனாத்மாவா, மனமா, இந்திரியங்களா, அல்லது ஒன்றுமே இல்லையா என்ற இந்த சங்கைகளுக்கு எந்த தேகதத்வசாஸ்திரத்தாலும் தக்க விடை கொடுக்க முடியாது. இம்மாதிரியான பெரிதாயும், ஆழ்ந்ததாயும் உள்ள ரகஸ்யங்களால் நாம் சூழப்பட்டிருக்கிறோம். இதை அறிய நாம் எவ்வளவு முயன்றாலும் நம்மால் ஆவதில்லை. இம்மாதிரியான இருளில் நாம் தத்தளிக்கிறோம் என்பதை உணர்ந்துதான் கீதே என்ற ஜர்மன் கவி 'நாம் எப்பொழுதும் விடாது அதிநுட்பமான விஷயங்களோடேயே ஸம்பந்தப்பட்டிருக்கிறோம், மனிதன் ஓர் பதருக்கு ஸமானம், அவனுக்கு உலகத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது தன்னைப்பற்றியோ அவனுக்கிருக்கும் அஞ்ஞானத்திற்கு அளவேஇல்லை' என்றார். இதுபோல 'இவ்வுலகமாம் பெரிய யந்திரத்தை அளந்தறிவது அஸாத்யம். அதில் இருக்கும் காரியகாரண ஸம்பந்தத்தை முழுவதும் அறியமுடியாது. நாம் இன்னார் என்பதும், நமது ஸ்வரூபம் இன்னது என்பதும், நம்மால் அறியமுடியாது' என்றார் ரூஸோ என்ற பிரஞ்சு நூலாசிரியர். இவைகள் அற்புதவாக்கியங்கள்; நாம் முன்னர் எடுத்து விவரித்த அதிபழக்கத்தால் உண்டாகும் மந்தகுணத்தை சிதற அடித்த மனிதரது வாக்கியங்கள். ஸமுத்திரத்தில் மீனுக்காக அலைகளை எளிதில் தாண்டிச்செல்லும் செம்படவனுக்கு ஸமுத்திர ஒலியின் காம்பீரியமும், அதில் உண்டாகும் புயல்களின் காம்பீரியமும், எவ்வாறு தோன்றாவோ, அவ்வாறு ஓயாது ஸமுத்திர அலைபோல மோதிக்கொண்டிருக்கும் விஷயங்களைக் கவனியாது, அவைகட்கு அப்பால்பட்டு நிற்கும் வழிதோன்றாது அதிகப் பழக்கத்திற்கு ஆளாகி கெட்டுப்போகும் மானிடர்கள் நிறைந்த இவ்வுலகில், பிரபஞ்ச வைசித்திரியம், அதன் ரகஸியத்தின் பெருமை, அதைப் பூர்ணமாக அறியமுடியாது என்பவைகளையும் நமது அறிவின் சிறுமையையும் உள்ளபடி உணரும் சக்திவருவதே ஓர்சிறந்த குணம். இது கிடைப்பது அநேக ஜன்மங்களிற் செய்த புண்யபலன் என்றே சொல்லவேண்டும்.

இவ்வாறிருப்பினும் நாம் பெரியவர்கள் வம்சத்திற் பிறந்தவர்கள். அவர்கள் கண்டு அறிந்து அனுபவித்த ஞானம் எல்லாம் நமக்கு ஸஹாயமாகவே இருக்கின்றன. அவைகளின் ஸஹாயத்தின்பேரில்

நமது சிற்றறிவிற் கெட்டியவரையில் அஹங்காரம் நிறைந்த விசித்திர ஜந்துவாகிய மனிதனது ஸ்வரூபத்தைப்பற்றி விசாரிப்போம். கிருஷ்ண பரமாத்மா பகவத்கீதையில் (3-ம் அத்தியாயம் 42-ம் சுலோகத்தில்)

"இந்தியங்கள்மேலனவாம் என்றுரைப்பஇந்தியத்தி
சிந்தைமிக மேலதனிற் சிறுடைத்து—புந்திதான் [ல்
மன்னியவப் புந்தியினும் மாண்புடையான் அன்னோ
கன்னவிலும் தோளாய் நீ காண்." [னோ

என்று உபதேசித்திருக்கிறார்.

மனிதன் ஸகல ஜந்துக்களிலும் மேலான ஜந்து என்றும் 'அரிது அரிது மானிடராதல் அரிது' என்றும், பெரியோர்கள் சொல்லுகிறார்கள். மனித தேகத்தின் ஸ்வரூபத்தை நோக்கில் இதை நாம் ஒப்புக்கொள்ளவே முடியாது. மனித தேகம் எவ்வளவு விசித்திரமாக இருந்தபோதிலும் மனிதனைவிட அதிகபலம், அழகு, காம்பீர்யம் முதலிய சிறப்புவாய்ந்த சரீரங்களை உடைய ஜந்துக்கள் அநேகம் உலகில் காணப்படுகின்றன. ஹக்ஸ்லி என்ற பிரகிருதி சாஸ்திரி ஜந்துக்களுள் குதிரையே நல்ல தேகக்கட்டு உடையது என்று அபிப்பிராயப்படுகிறார். நல்ல கொம்பன் யானைக்கு இருக்கிற காம்பீர்யம் நல்ல மல்லகஜெட்டிக்குக்கூட இல்லை. சிங்கத்திற்கு உள்ளபார்வை நல்லவம்சத்திற் பிறந்த அரசனுக்குக்கூட இல்லை. சிறந்த காளைமாட்டின் நடையானது போர்வீரனது நடையைப் பழிக்கும் திறனுடையது. கானமயிலாடுவது கண்குளிரும் காட்சி. ரம்பைக்குக்கூட பஞ்சவர்ணக்கிளியின் அழகு இருந்திராது. பறக்க சக்தியில்லாத மனிதனைவிட வானம்பாடி மிகுந்த ஸ்வதந்திரம் உடையது. நல்ல ஸங்கீத ஸ்வரத்தைக்கேட்டு படமெடுத்தாடும் கிருஷ்ணஸர்ப்பம் தெய்வத்தன்மை வாய்ந்தது. ஆகாயத்தில் அசையாது உருவிச்செல்லும் கருடப்பட்சியும் அவ்வாறு என்பதற்கு என்ன ஸந்தேகம்! ஆகையினால் தேஹவிஷயமாகப் பார்க்குங்கால் மனிதன் மற்றைய ஜந்துக்களைவிட சிறப்புவாய்ந்தவன் அல்லன். யோசிக்குங்கால் மற்றை ஜந்துக்களைவிட மனிதன் ஆபாஸமான ஜந்து என்றே சொல்லவேண்டும். ஷோபன்ஹார் என்ற ஜர்மன் தத்துவசாஸ்திரி அநேகஜனங்களது முகங்கள் மந்தமாகக் காணப்படுகின்றது என்கிறார். பட்டணத்துப் பிள்ளையார் தேகத்தினால் விளையும் கஷ்டத்தைப் பின்வருமாறு கூறுகிறார்.—

"மானார் விழியைக்
கடந்தேறிவந்தனன் வாழ்குருவும்
கோனாகி யென்னைக்
குடியேற்றிக்கொண்டனன் குற்றமில்லை
போனாலும் பேறிருந்தாலு
நற்பேறிது பொய்யன்றுகா
னாலுமிந்த வுடம்போ
டிருப்பது அருவருப்பே."

ஆகையால் மனிதனுக்கு சிறப்பு அவன் தேஹத்தால் உண்டாவதில்லை என்பது விளங்கும். அவன் மேன்மையும், நிமிர்ந்த முகத்தால் அவனுக்கு உண்டாகும் காம்பீர்யமும் முக்கியமாக அவனுள் ஆடி ஒளிரும் பரஞ்சோதியின் சிறப்பால் உண்டானவே ஒழிய வேறில்லை.

மனிதனது சிறப்பு தேஹத்தைவிடச் சிறந்தனவாகிய இந்திரியங்கள், மனஸ் ஆகிய இவைகளால் உண்டாகின்றதோ என்பதை விசாரிக்கப் புகுவோம். இந்திரிய வ்யாபாரங்களை மாத்திரம் நாம் தனியாகப் பார்த்தால் மனிதன் மற்ற ஜந்துக்களைவிட மிகத் தாழ்ந்தவனாகப் போகிறான். இதனாலேயே ஷோபன்ஹார் என்பவர் மனிதன் எல்லா ஜந்துக்களையும்விட மிகத் தாழ்ந்தவன் என்றே ஸாதிக்கிறார். உற்றுநோக்குங்கால் புலி கரடி முதலியவைகள் கூட நல்லவைகள் என்ற மதிப்பை நமக்கு உண்டாக்கும் குணம் வாய்ந்தவர்கள் மனிதர்களுள் அநேகர் காணப்படுகிறார்கள். புலிக்கும் கரடிக்கும் இயற்கையாக ஏற்பட்டுள்ள இரைகள் உண்டு. புலி ஒருநாளும் காக்கையைப்பிடிக்காது, கரடி பூனையைக் கொல்லாது, மனிதனுக்கோ அவன் சண்டை விஷயங்களில் இம்மாதிரியான எல்லையே கிடையாது. ஆடுகள், மாடுகள், இன்னும் பூமியில் உலாவும் மிருகங்கள் ஆகாயத்தில் பறக்கும் பக்ஷிகள் ஸமுத்திரத்திலுள்ளமீன்கள் இன்னும் ஸமுத்திரத்தின் வழியாக ஓடும் ஜீவஜந்துக்கள் ஆகிய எல்லாம் மனிதனுக்கு விரோதிகளாக ஏற்படலாம். எறும்புமுதல் மனிதர்பரியந்தம் உள்ள ஜீவராசிகளில் எதைத்தான் மனிதன் தந்நயம்கருதி வருத்தாது விடுகிறான்? இந்திரிய வியாபாரக்குழப்பத்தில் மேலான உறவுகள் எல்லாம் சிதறிப்போகின்றன. தாயாதி என்ற நெருங்கின உறவைக்காட்டும் ஓர்பதம் விரோதி என்ற பொருளைக் கொடுக்கும் நிலைக்குவந்துவிட்டது. இந்திரிய வியாபார நிலையிலிருந்து ஷோபன்ஹார் பின்வருமாறுகூறுகிறார். 'நன்னடக்கை ஒழுங்கின்படி மனிதன்நிலை பொதுவாக இவ்வாறிருக்கின்றது

என்பதை அறியவேண்டுமோ? இதற்கு மனிதன் அதிர்ஷ்டத்தை விசாரித்தால்போதும். அது யாதெனில், அடங்கா ஆவல், இழிவு, கஷ்டம், துக்கம், மரணம் ஆகிய இவைகளே. மனிதர்கள் பொதுவாக உபயோகமற்றவர்களாக இல்லாவிடில் அவர்கள் இம்மாதிரியான கெட்ட அதிர்ஷ்டத்திற்கு ஆளாகி இருக்கமாட்டார்கள்.' மேலும் மனிதன் தான் செய்யும் செய்கைகளுக்கு உத்தரவாதி, அவனுக்கு இயற்கையான விரோதங்கள் இல்லை, அவன் புத்தியை அவன் இஷ்டப்படி உபயோகிக்கும் திறமுடையவன், என்ற இவ்வுண்மைகளைப் பற்றி ஆலோசிக்குங்கால் அவனை ஜீவஜந்துக்களுள் எங்குவைப்பது என்று பலமான சங்கை உண்டாய்விடுகின்றது. சிலந்தியும், எறும்பும் அநேகருக்கு நற்போதனைகளை செய்திருக்கின்றன. தேனீக்களின் ஸங்கமானது இங்கிலாந்திலுள்ள ஆளும்ஸங்கத்தைப் பழிக்கும் திறனுடையது. பசுவின் ஸாத்மீகம் பழமொழியாகப் போய்விட்டது. பாம்புகள் தமக்குள்ள ஸங்கீத அனுபவசக்தி, புஷ்பங்கள் வாஸனை முதலியவற்றை அனுபவிக்கும் சக்தி ஆகிய இவைகளால் கவிராயர்களைப் பழிக்குந் திறனுடையவையாகின்றன. மனிதனது அளவிடமுடியாத ஸ்வயநயம் கருதல், வீண்பெருமைபேசல், கொடுமை, தற்புகழ்ச்சி, விளையாட்டுத்தனம் ஆகிய இவைகளைப்போன்ற பிசாசகுணங்களைநோக்கி, ஆழ்ந்து யோசிக்கும் திறனுடைய ஹாம்லத்தைப் போன்றவர் "காலகதியால் உண்டாகும் கஷ்ட நிஷ்டூரங்களையும், அடக்கியாள்பவரது அக்கிரமத்தையும், மதம் பிடித்தவர்களால் உண்டாகும் மானபங்கத்தையும், வெறுக்கப்பட்ட காதலின் வெந்துயர்களையும், நியாயஸ்தலங்களில் நேரிடும் காலக்கழிவையும், அதிகாரிகளின் கர்வத்தையும், அயோக்கியர்களிடமிருந்து யோக்கியர்கள் பொறுமையுடன் அனுபவிக்கும் அவமானங்களையும் யாரால் பொறுக்கமுடியும்?" என்று நன்றாகத்தான் கேட்பார்கள். பிரான்ஸு தேசத்திய நூலாசிரியர் ஒருவர், 'தனது ஸமூக வாழ்க்கையில் சிற்சில ஸமயங்களில் தற்கொலை செய்துகொண்டால் நலமாக இருக்கும் என்ற எண்ணம் வந்திராத மனிதன் உயிரோடு வாழ்ந்தென்ன பயன்?' என்று சொல்லுகிறார். 'வாடைக்காற்றே தாடைகிட்ட வீசுவாய், நன்றிகொல்வோர் கொடுமையினும் நின்கொடுமை அஞ்சத்தக்கதல்ல' என்ற வாக்கியத்தில் அடங்கியிருக்கும் உண்மை அனுபவித்தால்தான் விளங்கும். மனிதன் சும்மாவிருக்கக் கற்றுக்கொண்டானாகில் உலகில் உள்ள அரைவாசி துக்கங்களும் பறந்தோடிப்போம் என்றார் பாஸ்கல் என்ற பிரகிருதி சாஸ்திரி. மனிதனுக்கோ அவ்வாறிருக்க முடியாது. கீதைப் பிரகாரம் அவன் ஸதா கர்மங்களைச் செய்துகொண்டு பிறப்பு இறப்பு ஆகிய இவைகள் வளர்வதற்கு வேண்டிய வித்தை விதைத்துக்கொண்டே இருக்கின்றான். சிங்கத்தினது கோபமும், யானையினது மாறுப்பகையும், புலியினது கொடுமையும், பாம்பின் விஷமும், நரியின் தந்திரமும், பன்றியின் ஆபாஸகுணங்களும், எலியின்கெட்டகுணமும் மனிதனிடம் குடிகொண்டிருக்கின்றன. சிற்சில ஸமயங்களில் மனிதன் முற்கூறிய ஜந்துக்களைவிட அதிகமாகவும் போய் நடந்துகொள்ளுகிறபடியால் அவன் ஸ்திரமாயும் வர வர பலமாகும் குணமுள்ளதாயும் ராகத்துவேஷங்களாலாகியதாயும் உள்ள வலையை சிலந்தி தன் வலையை உண்டாக்குவதைப்போல ஸ்வபாவமாகவே உண்டாக்கிக்கொண்டு வருகிறான்.

* மனிதனது அறிவின் ஸ்வரூபத்தை நோக்குங்கால் அவன் அநேக ஜீவராசிகளைவிடச் சிறப்பு வாய்ந்தவனாகக் காணப்படுகிறான். இதில்தான் அவனுக்கு ஏற்றம் சற்று காணப்படுகின்றது. தனது கணித விஷயங்களில் மனத்தை இழந்து இருந்த நியூடன் என்பவர் பிரபஞ்ச விஷயங்களைவிட்டு அப்பாற்சென்றவர். ஆற்றிலிருந்து எழுந்து தான் நிர்வாணமாக இருப்பதைக்கூட அறியாது, மனதில் ஓர் அற்புத விஷயத்தைக் கண்டு அறிந்து வெளியே ஓடிவந்த ஆர்கிமீடீஸ் என்ற பிரகிருதி சாஸ்திரி மனிதரூபமான கந்தர்வன் என்பதற்கு என்ன ஸந்தேகம்! பீஸோல் மலைச்சிகரத்திலிருந்து சந்திரமண்டலத்தை தமது தூரதிருஷ்டிக்கண்ணாடி மூலமாகப் பார்த்து ஆனந்தித்த காலிலீயோ என்ற வான சாஸ்திரி ஓர் வனதேவதை என்பதற்கு என்ன ஸந்தேகம்! ஆனால் இவ்வாறு அறிவில் ஈடுபட்டு பிரபஞ்சத்தை மறக்கும் மஹான்கள் அந்தோ! நம்முள் எவ்வளவு அபூர்வமாகக் காணப்படுகிறார்கள். மிஞ்சி நிற்கும் ஏராளமான ஜனங்கள் என்னும் பாலைவனத்தோடு ஒப்பிட்டால் இவர்கள் எவ்வளவு அபூர்வம்! ஒவ்வொருவனுக்கும் அறிவு உண்டு. அது இந்திரியவியாபாரங்களோடு பேதாபேதமின்றிக் கலந்திருப்பதால் அது அவனை வெகுகாலம் காப்பாற்றுவதில்லை. அது பிரபஞ்ச விஷயங்களாகிய கொடிய ஸமுத்திரத்தில் இடைவிடாது அவனைத் தத்தளிக்கச் செய்யும் புயலாக ஏற்படுகின்றது. மனிதன் அடைந்திருப்பவைகளுள் அறிவு மிகச் சிறந்ததே. ஆனால் வக்கீல், வியாபாரி இவர்கள் போன்ற அநேகரிடத்தில் அது சீர்குலைந்து காணப்பட்டு பொதுவாகவும், சிறப்பாகவும் ஜனங்களுக்கு கெடுதலாக முடிகின்றது. இவ்வறிவால் நமக்கு 'ஆகாயத்தில் வாணிபம் நடாத்தவும், மலைகளைப் பிளக்கவும், ஸமுத்திரத்தை அடக்கவும், மின்னலை உண்டாக்கவும், ஸூர்யனை நிறுக்கவும்' சக்திகள் உண்டாகலாம். ரேனான் என்ற ஆசிரியர் கூறுவதுபோல பிரபஞ்சமே கடவுளாகிய தனது முடிவைநோக்கி இயற்கையாகவே ஸ்திரமாகவும் உண்மையாகவும் போகின்றது என்பது உண்மைதான். ஆதலால் பிரபஞ்சமானது ஸதா முன்நோக்கி மாறுதல் அடைந்துகொண்டே நடக்கட்டும்; நாம் இதனோடு போகுங்கால் மறவாது அறிவிற்கு தேவதையாகிய ஸரஸ்வதியை ஸ்தோத்திரம் செய்வோம்.

* [மனிதனது புத்தியில் அறியும் சக்தியையுடைய அறிவு அதை விருத்திபண்ணும் சக்தியை உடைய கற்பனாசக்தி ஆகிய இரண்டு பாகங்கள் உண்டு.]

நமது பிரபஞ்ச அறிவு விருத்தியாகி நாம் மேலான நிலையை அடையுங்கால் நமது நிலை எவ்வாறாகின்றது என்பதை நோக்குவோம். முதலில் தண்ணீர் என்ற ஓர் வஸ்துவை இப்பொழுது பிராணவாயுவும் ஜலவாயுவும் சேர்ந்தசேர்க்கை என்கிறோம். ஆனால் இவ்விரண்டு வாயுவும் எத்தன்மையது என்பதை யாரால், அறியமுடியும். ஜந்து தத்வசாஸ்திரம், பூததத்வசாஸ்திரம், தேகதத்வசாஸ்திரம், வானசாஸ்திரம், சக்திதத்வசாஸ்திரம், வஸ்து தத்வசாஸ்திரம் ஆகிய ஸகலபிரகிருதிசாஸ்திரங்களிலும் நமது அறிவுக்கு எல்லை உண்டு, அதைத்தாண்டி அறிய நமது அறிவிற்கு சக்தியே இல்லை. இந்த சாஸ்திரங்களில் நாம் பிரவர்த்திசெய்துகொண்டுபோகப்போக நமது அறியாமை அதிகமாகப் புலப்படத் தொடங்கும். ஸ்ருஷ்டிரகஸியத்தின் பெருமை அதிகமாக விளங்கும். இதனாலேதான் உலகத்தை முற்றும் உணரவேண்டும் என்ற பேராவலோடு அறியப்புகுந்து வெகுகாலம் விடாது முயற்சித்தபின்பு சிறந்த தத்வசாஸ்திரியாகிய காண்ட் என்பவர் பிரபஞ்ச விஷயங்களை முற்றும் உணரமுடியாது என்றார். இது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டதல்ல. முன்னரே ஐரோப்பாவில் ஸாக்ரடீஸ் என்ற மஹானாலும் நமது பாரத கண்டத்தில் சங்கராசாரியர் என்ற மஹாபுருஷராலும் மிகுந்த வணக்கத்துடன் இவ்வுண்மை வெளியிடப்பட்டது. நியூடன் 'நான் அளவிட்டு அறியமுடியாத ஸாகரத்தின்கரையில் சிப்பி முதலியவைகளை பொறுக்கி ஆனந்தித்துக்கொண்டிருக்கும் குழந்தைக்கு நிகரே ஒழிய வேறில்லை' என்று சொல்லிய வார்த்தை வாசாவான அவை அடக்கமல்ல. நான் ஒருதுளி ஜலத்தை எடுத்துக்கொண்டு அதை ஜலம் என்று சொல்லிவிட்டு சும்மா இருக்கிறேன். டர்னர் என்ற பிரகிருதிசாஸ்திரி அதை சிறுகாகிதத் துண்டில் இழுத்து அதில் உண்டாகும் மாறுதலைக் கண்ணுற்று ஆச்சரியம் அடைகிறார். டின்டேல் என்ற பிரகிருதிசாஸ்திரி அதை நிறுத்துப் பார்த்துவிட்டு ஓர் பூதக்கண்ணாடியால் அதை பரிசோதிக்கிறார்; என்ன ஆச்சரியம்! அதனுள் அநேக ஜந்துக்கள் பூர்ணஜீவனோடும், உணர்ச்சியோடும், சுறுசுறுப்போடும் மனிதன் தனது தொழிலை எவ்வளவு ஆவலுடனும் ஸ்வதந்திரத்துடனும் நடத்துகிறானோ அவ்வாறே தமது தொழிலையும் நடத்திக்கொண்டிருக்கின்றன. பாவம்! டின்டேலது மனம் ஆச்சரியத்தாலும் பயத்தாலும் ஸ்தம்பிக்கிறது. உடனே அந்தத் தண்ணீர்துளியை நழுவ விட்டுவிட்டு ஆழ்ந்தயோசனையில் மூழ்கிவிடுகிறார். அந்தத் தண்ணீர்துளியை அறியும் விஷயத்தில் நானாவது டர்னராவது, டின்டேலாவது கொஞ்சம்கூட முயற்சிக்கவில்லை; ஏனெனில் அதை நம்மால் அறியவேமுடியாது. இது ஸத்யம். இது நமக்கு திருப்திகரமான முடிவாக இல்லாவிடினும் உண்மை என்பதற்கு ஸந்தேகமேயில்லை.

ஆதலால் அறிவுவிஷயத்தில் நாம் மற்றைய ஜந்துக்களைவிட ஏற்றமுடையவர்களாக இருந்தபோதிலும், ஒவ்வொரு இடத்திலும் 'எம்மால் பூர்த்தியாக ஒன்றையும் அறியமுடியாது' என்று நமக்கு இடைவிடாது தோன்றுவதால் நாம் சிறந்த ஜந்து என்று பெருமை பாராட்ட நமக்கு இடமே இல்லாமல்போகிறது. அப்படிப் பாராட்டினால் அதை வீண்பெருமையென்றே சொல்லவேண்டும். நம்மைச்சுற்றி இருக்கும் வஸ்துக்களின் ஸ்வரூபம் இத்தன்மையது என்றும், அவைகளுக்கு இவ்வளவு சக்தியுண்டென்றும், ஆகாயத்தில் தொங்கும் அண்டகோளங்களின் ஸ்வரூபம் இப்படிப்பட்டது என்றும் நம்மால் அறியமுடியவில்லை. நாம் மூச்சுவிடும் காற்று, நாம் நடமாடிவரும் பூமி, ஆகாயத்தில் தொங்கிக்கொண்டு தமது பிரகாசம் முதலியவைகளால் மனிதனுக்கு அவனது சிறுமை தாழ்வு முதலியவைகளை இடையறாது எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கும் நக்ஷத்திரங்கள் ஆகிய இவைகளைப்பற்றி நமக்கு ஒன்றுமே

தெரியாது. ஆனால் பிரபஞ்சம் அளவிட முடியாதது என்றும், நமது பூகோளத்தைப்போல கணக்கிடமுடியாத அநேக கோளங்கள் அதனுள் அடங்கி இருக்கின்றன என்றும், ஸ்ருஷ்டிமுழுவதும் வாக்கிற்கு எட்டா காம்பீர்யத்தை உடையதென்றும், நமது அற்பமான தேகத்தோடும் இழிவான இந்திரியங்களோடும், மிகக்குறைந்த சக்திவாய்ந்த அறிவோடும், கெட்டகுணம், வீண்பெருமை பேசல், அறியாமை ஆகிய இவைகளோடும் கூடிய நாம் மிகத் தாழ்ந்தவர்கள் என்றும் நமக்கு நன்றாகத் தெரியவரும். அளவிடமுடியாததாயும், சக்திவாய்ந்ததாயும் உள்ள இப்பிரபஞ்சத்தில் நாம் அணுக்கள்—பரமாணுக்களே ஒழிய வேறில்லை. முற்காலத்தில் மூடத்தனமாக மனிதனே எல்லாவற்றிற்கும் மத்தியஸ்தானமென்று எல்லோரும் எண்ணியிருந்தனர், ஆனால் இந்த விசாரணையின்பேரில் அவன் ஸாரமற்றவனாகி இருந்தவிடமே தெரியாதவனாகப் போய்விடுவான்.

புத்தியின் மற்றையப் பாகமாகிய கற்பனாசக்தி என்ற ஓர் சக்தி மனிதனிடம் இருக்கின்றது. அதுதான் மனிதனது சிறுமை எல்லாவற்றையும் அகற்றும் திறனுடையது. சிறுமைநிறைந்த மனிதனிடம் இச்சக்தி இருப்பது விஷம் நிறைந்த கிருஷ்ண ஸர்ப்பத்தினிடம் நாகரத்னம் இருப்பது போலாகும். மதிப்புக்கடங்காத இச்சக்தியால் பிரபஞ்சத்தை ஒருவாறு அளவிடலாம். ‘கடவுளது வாக்குமுதலிய எல்லாவற்றிலும் நீ (கற்பனாசக்தி) தங்கு தடையின்றி எளிதில்செல்லும் திறனுடையாய். இது மாத்திரம் அல்ல கடவுளது ஸ்ருஷ்டிக்கப்புறமும் நின் நாட்டம் உண்டு.’ என்றார் ஓர்கவி. ஷெல்லி வேர்ட்ஸ்வர்த்து முதலிய சுத்த கற்பனா விஷயம் நிறைந்தவர்களது கவிபாடும் திறமையானது இந்த கற்பனாசக்தியாகிய செடியில் உண்டாகும் அற்புதமான புஷ்பம். பிரபஞ்சத்தை முற்றுமுணர நம்மால் முடியாது என்பது உண்மையாயினும், அதை நாம் உள்ளபடி அனுபவித்து ஆனந்திக்கும் சக்தி நமக்கு உண்டு. ‘பிறரால் அறியக்கூடிய விஷயங்களானாலும் ஸரி, அறியக்கூடாத விஷயங்களானாலும் ஸரி, அவைகளை அனுபவித்து ஆனந்திப்பதிலேயே உண்மையான கவிராயர்கள் திருப்தி அடைவார்கள்’ என்றார் வேர்ட்ஸ்வர்த். (இதுபோலவே நமது கவிகளும் ‘புத்தியாலறியொணாப் புராணனை பத்தியாம் வலையிற்படுத்து’ என்றார்கள்.) ஷெல்லி என்பவர் அவரது சுத்த கற்பனை நிறைந்த சிற்சில பாடல்களில் ஆகாயத்தை அளவிட முயலுகிறார். இது போதாதென்று தமது கற்பனாசக்தியை பூர்ணமாக உபயோகித்து ‘ஆகாயம் என்றால் என்ன? அது பனித்துளிபோன்றதுதானே!’ என்றார்.

இதுதான் சிறந்த கற்பனா சக்திவாய்ந்த கவிதையின் ஸ்வரூபம். உலகக் கவலைகளை மறந்து, வானம்பாடியானது அளவிடமுடியாத ஆகாயத்தில் பறந்தோடிப்போவதுபோல, வெளியேறிப்போய் அந்த பரவெளியேதானாகி சற்றுநிற்குந்திறனுடைய மனத்தை உடையவர்கள் மனிதர்கள் என்பதை இந்த கற்பனாசக்தி பேசாமல் ஆனந்தகரமான அனுபவமூலமாகக் குறிப்பிக்கின்றது. இதில் ஈடுபட்டிருக்குங்கால் மனிதனுக்கு யாதொரு தடையும் ஏற்படுவதில்லை. இம்மாதிரி பரம்பொருளை நோக்கிப் புறப்படும் மனதை எல்லை கட்டித் தடுக்கவல்லது ஒன்றும் இல்லை. ஆதலால் ஓ மனதே! உனது இழிவானபந்தம் சிதறிப்போமளவும் உறுகி உறுகி விடாதுபாடிக் கொண்டிரு. ஏனெனில் இங்கு நீ மோக்ஷமார்க்கத்திற்கு வந்துவிட்டாய், பரம்பொருளது திவ்யஸ்தானத்தருகில் வந்துவிட்டாய். அவர் உனது முயற்சியைக்கண்டு ஸந்தோஷித்து உனது வரவை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். இந்த விஷயத்தில் மனிதனைவிடச் சிறந்த ஜந்து எங்குதான் இருக்கின்றது? அவன் இங்குதான் அளவிட முடியாத சிறப்பிற்கு ஆளாகிறான்.

இங்குகூட மனிதனது ஏற்றம்முழுவதும் வெளியாகிறதில்லை; ஏனெனில் கற்பனாசக்தி ஸுகத்தையும் துக்கத்தையும் கொடுக்கின்றது. இதுபிரபஞ்சத்தினது ஏற்றத்தையும் மனிதனது தாழ்வையும் உள்ளபடி காட்டிவிடுகின்றது. மேலும் உலகில் ஸாதாரணமாக ஈசுவர ஸ்ருஷ்டியில் அடிக்கடி ஏற்படும் கோடைநாள், பாலைவனம், அசுத்தமான குளம் முதலிய வஸ்துக்களிடம் இந்தசக்தி நமக்கு அன்பு உண்டாகும்படி செய்யும் திறனுடையதல்ல. ஆதலால் யோசிக்குங்கால் கோயிலுக்குப்போகும் வழியில் தங்கிநிற்க ஏற்பட்டிருக்கும் மண்டபம்போல இது மோக்ஷமார்க்கத்தில் ஏற்பட்டுள்ள ஓர் களைப்பு நீங்கும் ஸ்தானமே ஒழிய முழுவதும் ஏற்றமான முடிவல்ல.

கற்பனா சக்தியினால் விளையும் ஆனந்தத்தைவிட மிகவும் ஏற்றமான ஆனந்தத்தை அனுபவிக்க பிறவியிலேயே மனிதர்களுக்கு பாத்யதை உண்டு.

எந்நாளும் மாறாத ஆநந்தத்தை அனுபவித்துக்கொண்டிருப்பதும், நிலவு பட்டுப்போற்காயும் இரவைக்கண்டு ஆனந்திப்பதுபோல் மிகுந்த தாபமான பகலைக்கண்டு ஆனந்தித்துக் கொண்டிருப்பதும், மனிதரது ஸத் கிருத்தியங்களையும் துஷ் கிருத்தியங்களையும் கண்டு மனம்கலையாதிருப்பதும், நல்ல அழகிய ஸூர்யாஸ்தமனத்தைக் கண்டு ஆனந்தபாஷ்பம் பெருகவிடுவதும், பாடிக்கொண்டு உயர உயரச் செல்லும் வானம்பாடியுடன் மனதைப் பறக்கவிடுவதும் மாத்திரமன்றி தாம் அனுபவிப்பதை வாயாரச் சொல்ல முடியாமலும், ஒளிக்க முடியாமலும் இருக்கும் அனுபவம் வரும்படி பிரபஞ்சத்தோடுகலந்து, தானே ‘ஸூர்யன் அதன் அஸ்தமனம், அதன் சிறப்பு, வானம்பாடி, அதன் பாட்டு, ஆகாயம் முதலிய ஸகலப் பிரபஞ்சமுமாகி நின்று ஆனந்திப்பதுமே மனிதனுக்கு உண்மையாக ஏற்பட்டுள்ள உரிமைப் பெருஞ் செல்வம். ஆகாயம், நக்ஷத்திரம், மலைகள், ஆறுகள், தேகம், மனஸ், இந்திரியங்கள் முதலிய பிரபஞ்சம் எல்லாவர்றையும் தாண்டி அப்பாற்பட்டு இந்த ஜன்மத்திலேயே நிற்கும் அதிர்ஷ்டத்தை உடையவன் மனிதன். இதனால் அளவிட முடியா ஆகாயத்தில் கரைந்துவிடும் சக்தி அவனுக்குவர, அவன் இடையறாது கோஷிக்கும் ஸமுத்திரம், உயர்ந்தமலை, பிரகாசிக்கும்நக்ஷத்திரங்கள், ஸதா சப்திக்கும் அருவிகள் முதலிய எல்லாவற்றையும் இந்த ஜன்மத்திலேயே வியாபித்து ஆனந்திக்கும் சக்தி அவனுக்கு வருகின்றது. இந்தசக்தி மனிதனுக்கு இருப்பதினால்தான் (அதாவது மனிதனது சின்மயஸ்வரூபத்தினாலும் அவனது ஞானானந்த வல்லமையாலும் தான்) மனிதன் ஸகல ஸ்ருஷ்டிகளிலும் சிறந்தவன்; இதனால்தான் ‘அரிது அரிது மானிடராதல் அரிது? ஆகவே மனிதன் உண்மையில் உலகில் எங்கும்பரவியிருக்கும் ஆனந்தமயமான பரப்பிரம்மம் இந்தநிலையில்தான் அவன் கோபம், இழிவு கெட்டகுணம், முதலியவைகளுக்கு முற்றிலும் அப்பாற்படுகிறான் புத்தி அலைபாய்ந்தோடுவதும், இந்திரியங்கள் புயல்போல நிலைகுலையும்படி செய்வதும் இங்கு இல்லவே இல்லை. இது எல்லாம் ஓய்ந்தவிடம் இம்மாதிரி விடுபட்ட முக்தர் மனதில் நிலவினும் இனியதாகி ஸதா பிரகாசித்துக்கொண்டிருக்கும் ஜ்யோதியின் சிறப்பு காணப்படும், கட்டுக்கடங்காது. வாக்கிற்கு எட்டாத ஆனந்தம் குடிகொண்டிருக்கும். மைத்ரேய உபநிஷத்திலுள்ள ஞானியைப்போல இம்மனிதனும் ‘நான்தான் நான், மற்றவர்களும்நான்தான், பிரம்மமும் நான் ஸ்ருஷ்டிகர்த்தா நான், ஜகத்குரு நான், பிரபஞ்சமே நான், அவனும் நான்,’ என்று ஆடிப்பாடி மெய்ம்மறந்து ஆனந்திக்கலாம். ஏனெனில் அவனே கத்தியால் வெட்டமுடியாததாயும், நெருப்பால் எரிக்கமுடியாததாயும், ஜலத்தால் நனைக்கமுடியாததாயும், காற்றால் உலர்த்த முடியாததாயும், பிறப்பற்றதாயும், மாறுதலற்றதாயும் இறப்பற்றதாயும் இருக்கும் ஆத்மா ஆகிவிடுவதனால். இதுதான் மனிதனிடம் காணப்படும் சிறப்பு ஒவ்வொரு நிமிஷத்திலும் ‘பாகக்காய்க்காகப் பங்கை விற்றகதையாய்’ அஞ்ஞானத்தால் மூடப்பட்டு விலையற்ற ஆத்மலாபத்தை இடையறாது புத்திகெட்ட மனிதன் அற்பமான உலக இன்பங்களின்பொருட்டு விலைப்படுத்துகிறான்.

நம்மவருள் பெரும்பாலாருக்கு நமது ஸ்வரூபமே தெரியாது. நமக்கு எவ்வளவு ஆதாரம் இருக்கின்றது என்பதும் தெரியாது. எண்சாண் உடம்பினுள் மறைந்துகிடைக்கும் எண்ணிறந்த செல்வம் இன்னது என்பதும் தெரியாது. வேதாந்த சாஸ்திரமானது, ஆளவந்தார் சரிதத்தில் வரும் மணக்கல் நம்பியைப்போல, விலையற்ற நமது உரிமைப்பொருளை உறுதியாக கைப்பிடித்து மாறாத ஆனந்தம் அனுபவியுங்கள் என்று நம்மை ஸதா அழைக்கின்றது. இதுதான் உபநிஷத்துக்களில் அடங்கியிருக்கும் வாக்குத்தத்தம். இதில்கொஞ்சமேனும் பூர்த்தியாகாது நின்றுவிடுவதில்லை என அநேக மஹான்கள் அனுபவித் தறிந்திருக்கின்றனர். மனிதனது உண்மை உயர்வு இத்தன்மையது என்பதை இவ்வாறு அறிந்தபின்னர் பின்வரும் கடவுள் தியானம்,

‘ஓ பரம்பொருளே! இவ்வுலகில் உமதுநாமம் எவ்வளவு சிறப்பு உடையதாக இருக்கின்றது! உமது சிறப்பெல்லாம் ஆகாயத்தில்வெளியாகின்றது என்பதுபோல இராது,

‘ஓ ஆத்மாவே! உன்நாமம் உலகில் எவ்வளவு சிறந்ததாக இருக்கின்றது! உனது சிறப்பு ஆகாயத்திற்கும் அப்பாற்பட்டது. நீயேதான் ஆகாயம், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், இவைகளை எல்லாம் உண்டாக்கிய கடவுளும் நீயே ஆகிறாய். ஓம் தத்ஸத்’ என்று மாறிவிடவேண்டியது.

ஓம் தத்ஸத்.

பர்மா

BURMA



பர்மா நமது இந்தியாவுக்குக் கிழக்கேயுள்ள ஒரு விஸ்தாரமான பூமி. இந்தியாவிலிருந்து பர்மாவுக்கு நீர் மார்க்கம், நிலமார்க்கம் இரண்டு வழியாகவும் செல்லலாம். பர்மாவுக்கு முக்கியபட்டணம் ரங்கூன். சென்னபட்டணத்திலிருந்து ரங்கூனுக்கு கடல் மார்க்கமாய் 1020-மைல் தூரம். மதராஸுக்கும் ரங்கூனுக்கு மிடையேதான் அந்தமான் தீவுகள் இருக்கின்றன. கப்பலில் வரும்போதே தூரத்தில் அத்தீவுகளைப் பார்க்கலாம். தரைமார்க்கமாய் பர்மா போகவேண்டுமானால் ரயிலில் நேரே கல்கத்தாபோக வேண்டும். அங்கிருந்து சிட்டகாங் என்னும் பட்டணம்வரையில் ரயிலில்போகலாம். அதற்குமேல் ரயில் பாதை கிடையாது. சிட்டகாங்குக்கும் புரோமுக்கும் ஒரு ரயில்பாதை போடுவதாக ஒரு பிரஸ்தாபம் இருந்தது. லார்ட் கர்ஸன் ராஜ்ய தந்திரத்தை யனுசரித்து அந்தப்பாதை போடக்கூடாதென்று தடுத்துவிட்டார். புரோமுக்கும் ரங்கூனுக்கும் இப்பொழுது ரயில் ஓடிக்கொண்டிருக்கிறது. சிட்டகாங்குக்கும் புரோமுக்கும் ரயில்பாதை மாத்திரம் போட்டுவிட்டால் மதிராசிலிருந்து ரங்கூனுக்கு நேரில் ரயில் மார்க்கத்திலேயே வந்துவிடலாம். திரும்பவும் இப்பொழுது சிட்டகாங்கை புரோமுடன் ரயில் பாதையினால் சேர்க்கவேண்டுமென்று யோசித்து சர்வே செய்துக்கொண்டிருக்கிறார்கள். சிட்டகாங்கிலிருந்து கால்நடையாக பர்மாவுக்கு வரலாம். ஆனால் அது சிரமமாதலால் ஜனங்கள் கப்பலேறி ரங்கூன் போய்விடுகிறார்கள். கல்கத்தாவுக்கும் ரங்கூனுக்கும் நீர்மார்க்கமாக 787-மைல். மதராசுக்கும் கல்கத்தாவுக்கும் ரயில்மார்க்கமாய் 1032-மைல். நீர் மார்க்கமாய் கல்கத்தாவுக்கும், சிட்டகாங்குக்கும், 376-மைல் தூரம். புரோமுக்கும் சிட்டகாங்குக்கும் தரை மார்க்கம் சுமார் 600-மைலுக்குள்ளிருக்கும். ரங்கூனுக்கும் புரோமுக்கும் ரயில் மார்க்கம் 161-மைல். ஆதலால் தரைவழியாக மதராசிலிருந்து ரங்கூனுக்கு வரவேண்டுமானால் இரண்டாயிரத்துச் சில்லரை மைல்தூரம் பிரயாணஞ்செய்யவேண்டும். இன்னும் சில வருஷங்களுக்குள் ரயில்மார்க்கம் மதராசிலிருந்து ரங்கூனுக்கு பூர்த்தியாகிவிடும்.

சரித்திரம்:—இந்துசீன தீபகற்பத்தில் சீயராஜ்யத்துக்குக் கீழ்ப்பட்டு பர்மா ஒருகாலம் ஒரு சிற்றரசாக இருந்தது. ஒரு சமயம், தலயிங்கர் பர்மாவில் பெரும்பாகத்தை அரசாண்டு வந்தார்கள். ஷான் சாதியாரும் பர்மாவில் அரசாண்டு இருக்கிறார்கள். பர்மர்களுடைய அதிகாரம் 1852-வது வருஷம் வரையில் பர்மா தேசம் முழுதும் பரவியிருந்தது. அந்த வருஷத்துக்கடைசியில் பர்மாவின் தென்பாகம் ஆங்கிலேயரால் ஆட்சிகொள்ளப்பட்டது. அரக்கான் ராச்சியம் ஆதிகாலத்தில் வெகுநாள்வரைக்கும் இந்தியாவில் மகதராச்சியத்தின் பெரும்பாகமாகவே இருந்தது. பெகு ராச்சியம் சோழராச்சியத்தின் பாகமாக சுமார் 500 வருஷகாலமிருந்தது. தெலுங்காண ராஜ்யத்திலிருந்து சில ஜனங்கள் குடியேறி ராமண்ண தேசமென்னும் தலயிங்க ராச்சியத்தைக் கண்டுபிடித்திருந்தார்கள்.

ஐரோப்பியரில், முதல் முதல் போர்த்துகேசியர் பெகு அரசனோடு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டு 1519-ம் வருஷத்தில் மார்ட்டபானிலும், சிறியத்திலும் வியாபாரச்சாலை கட்டிக்கொண்டார்கள். பதினாறாவது நூற்றாண்டினிறுதியில் டச்சுக்காரர் நீக்கிரேஸ் தீவைக் கைக்கொண்டார்கள். 1612ஆல் ஆங்கிலேய கீழ் இந்தியா கம்பெனியார், சிறியம், புரோம், ஆவா, பாமோ முதலியஇடங்களில் வியாபாரஸ்தலங்களையும் ஏஜண்டுகளையும் அமர்த்தினார்கள். பெகுவிலிருந்த பர்மா ராஜப் பிரதிநிதிக்கும் டச்சுக்காரருக்கும் நேர்ந்த ஒரு மனஸ்தாபத்தால் ஐரோப்பிய ஜாதியார் எல்லோரும் பர்மாவிலிருந்து விலக்கப்பட்டார்கள். டச்சுக்காரர் திரும்பவும் பர்மாவுக்கு வரவேயில்லை. 1688-ஆல் சிறியத்திலிருந்து பர்மா கவர்னர் மதராசிலிருந்த ஆங்கிலேய கவர்னருக்கு இங்கிலீஷ் வியாபாரிகளை பெகுவில் வந்து வர்த்தகம் செய்ய அனுப்பும்படி எழுதினார். 1698-ஆல் ஒரு வர்த்தகத் தலைவன் சிறியத்திற்கு அனுப்பப்பட்டான். சிறியம், நீக்கிரேஸ், பாஸீன் இவ்விடங்களில்

பண்டகசாலைகள் ஆங்கிலேயரால் கட்டப்பட்டன. பிராஞ்சுக்காரரும் ஒரு வாஸஸ்தலம் பெற்றிருந்தார்கள். 1755-ஆல் அலோம்போரா என்னும் பர்மா வீரன் தலயிங்கரை ஜயித்ததற் கறிகுறியாக ரங்கூன் நகரத்தையுண்டாக்கி தன் கைக்கு அகப்படாமல் வெகுநாள் வரைக்கும் ஈடுகொடுத்துவந்த சிறியத்தை அழித்துவிட்டான்.

சிறியத்திலிருந்த ஆங்கிலவர்த்தகர்கள் பர்மர்களுக்கு அனுகூலமாயும், பிராஞ்சி வர்த்தகர்கள் தலயிங்கருக்கு அனுகூலமாகவும் இருந்துவந்தார்கள். ஆனால் வெற்றிபெறும் கக்ஷியோடு ஐரோப்பிய ஜாதியாரிருவரும் சிநேகமாகவே இருந்தார்கள். அலொம்பொரா, பிராஞ்சுக்காரர்கள் தலயிங்கருக்கு யுத்த ஆயுதங்கள் கொடுத்து உதவிபுரிந்து வந்தார்கள் என்றுஅறிந்து, பிராஞ்சுக்காரர்களை எல்லாம் கொன்றுவிட்டான். ஆங்கிலேயரும் அடிக்கடி தலயிங்கருக்கு ஒத்தாசை செய்திருந்தார்கள். இருந்தும் அவர்கள் நீக்கிரேஸ் தீவையும் பாஸீனில் சில வியாபார ஸ்தலங்களையும் கொடுக்கப்பெற்றார்கள். ஆனால் 1759-ஆத்தில் கலகக்காரருக்கு ஆயுதங்கள் சப்ளைசெய்து வந்ததாகஆங்கிலேயர்மேல் சந்தேகமுண்டாகி பத்து இங்கிலீஷ்காரர்களும் நூறு இந்தியர்களும் கொலை செய்யப்பட்டார்கள். அடுத்தவருஷத்தில் அலொம்பொரா இறந்துபோனபடியால் அவனுக்குப்பின்வந்தவனிடமிருந்து பாசீன் பண்டகசாலையைத் திருப்பிக் கட்டிக்கொள்ள ஆங்கிலேயர் உத்தரவு பெற்றார்கள். ஆனால் கொலைசெய்யப்பட்டவர்களுக்கு ஈடு கிடைக்கவில்லை.

1784ஆத்தில் போதாபாயன் என்பவன் அரக்கான்மேல் படையெடுத்து அதைக் கைப்பற்றினான். அப்பொழுது அங்கிருந்த ஜனங்களிலநேகர் அடுத்த ஆங்கிலேய ராஜ்யமாயிருந்த சிட்டகாங்கில்போய் அடைக்கலம் புகுந்து அங்கிருந்து அடிக்கடி பர்மா ராஜ்யத்திற்புகுந்து, கொள்ளை அடித்துக்கொண்டிருந்தார்கள். இந்த கலகக்காரரைத் தங்கள் கையில் ஒப்புவித்து விடும்படியாக ஆங்கிலேயரைக்கேட்டுக்கொண்டே பர்மர் ஆங்கில ராஜ்யத்துக்குட்புகுந்தார்கள். இதனால் ஆங்கிலேயருக்கும் பர்மருக்கும் விரோதமுண்டாயிற்று. இதைத் தீர்க்கும்பொருட்டு 1785-ஆத்தில் கவர்னர் ஜனரல் பர்மாவுக்கு ஒரு தூது அனுப்பினார். 1796-ஆத்தில் ரங்கூனில் ஒரு ஆங்கில ஸ்தானாதிபதி நியமிக்கப்பட்டான். 1824ஆத்தில் பர்மர்கள் ஆஸாம், மனிப்பூர் மேல் படையெடுத்து வந்தார்கள். மகாபந்தூலா என்னும் பர்ம வீரன் ஒரு சேனையைக் கூட்டிக்கொண்டு அரக்கான் வந்து அங்கிருந்து வங்காளத்தின்மேல் படை எடுத்து வருவதாகப் புறப்பட்டான். 1824-ஆ மார்ச்சுமீ 5உ ஆங்கிலேயர் பர்மருடன் யுத்தம் தொடங்கினார்கள். பர்மர்கள், ஆஸாம் கச்சார் மணிப்பூரிலிருந்து துரத்தப்பட்டார்கள். ஒரு ஆங்கில சேனைவந்து ரங்கூனைப் பிடித்துக்கொண்டு விட்டது. மழையாரம்பத்தில் நோய் அதிகப்பட்டு ஆங்கில சேனை அதிக கஷ்டப்பட்டது. ஆகஸ்டுக்கும் நவம்பருக்குமிடையில், மர்குவி, தாவாய், மார்டபான், பெகு இவைகள் பிடிபட்டன. நோயினால் ரங்கூனிலிருந்த சேனை மெலிவுபட்டது. டிசம்பர் மாதத்தில் மகாபந்தூலா என்னும் யுத்தத் தலைவன் ஆங்கிலேயரை ரங்கூனைவிட்டுத் துரத்த, அவன் 60,000 பேருடன் கூட ஆங்கிலேயரைச் சுற்றி வளைந்து எதிர்த்தான். ஆனால் பர்மரில் வெகு பேர்கள் கொல்லப்பட்டுப் பாக்கிப்பேர்கள் முறியடிக்கப்பட்டார்கள். மகா பந்தூலா சேனையுடன் டனப்யூ என்னுமிடம் சென்று அங்கே யுத்தத்திற்குவேண்டிய ஆயதங்கள் எல்லாம் செய்துகொண்டிருந்தான். 1825 ஆ ஏப்ரல்மீ 2உ டனப்யு பிடிபட்டும் மகாபந்துலாவும் யுத்தத்தில் கொல்லப்பட்டான். அதேநாளில் புரோமும் பிடிபட்டது.

1826-ஆ பிப்ரவரிமீ ஆங்கிலேயர் பட்டணங்களை ஒவ்வொன்றாகப் பிடித்துக்கொண்டே, யாண்டபூ வரையில் சென்றார்கள். இங்கே பர்மருக்கும் ஆங்கிலேயருக்கும் ஒரு உடன்படிக்கை நடந்தது. பர்மர்கள் ஆஸாமையும், தெனாசரீம் கடற்கரையோரத்தையும் ஆங்கிலேயருக் களிப்பதாயும் யுத்தச் செலவுக்காக ஆங்கிலேயருக்கு 10 லக்ஷம் பவுன் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டார்கள். அந்த வருஷம் முடியவும் ரங்கூன் ஆங்கிலேயர் கையில் இருந்தது. அரக்கான் மாகாணம் பங்காள ராஜ்யத்தின் ஒரு பாகமாகவிருந்தது. மோல்மீன் தெனாசரீம் மாகாணத்திற்கு தலை நகரமாக்கப்பட்டது. 1830-ஆல், ஆவாவில் ஒரு ஆங்கில ஸ்தானாதிபதி நியமிக்கப்பட்டான். 1852ஆ, ரங்கூனை ஆண்ட பர்மா கவர்னர், ஆங்கிலேய குடிகளை அக்கிரமமாக நடத்தினான். அதை முறையிட்டுப் பார்த்தும் கேள்வியில்லாமையால், 1852ஆல், திரும்பவும் பர்மரோடு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. அதே வருஷத்தில், லார்ட் டல்ஹௌஸி பெகு

மாகாணம் முழுவதும் ஆங்கிலேயருடையது என்று அறிக்கைப்பத்திரம்அனுப்பிவிட்டார். இதற்குக்கொஞ்சகால் பிறகுதான் மிண்டான்மின் என்னும் மன்னன் பாக்கியிருந்த தேசத்திற்கு அரசனாகி ஒழுங்காக ஆண்டுவந்தது. 1862-ம் ௵த்தில் அரக்கான், பேகு, மார்ட்டபான், தெனசரீம் மாகாணங்களை பிரிட்டிஷ் பர்மா என்னும், ஒரு ராஜதானியாக்கி அதை ஆண்டுவர ஒரு சீப் கமிஷனரும் நியமிக்கப்பட்டார்.

1867-ம் ௵த்தில் வியாபாரவிஷயமாகவும், குற்றவாளிகளைத் திருப்பி அனுப்பும் விஷயத்தைப் பற்றியும், ராஜ்யவிவகாரங்களைப் பற்றியும், ஆங்கிலேயருக்கும் மிண்டான்மின் அரசனுக்கும் ஒரு உடன்படிக்கை நடந்தது. 1878-ம் ௵த்தில் மிண்டன் மன்னன் இறந்து அவன் மகன் தீபா பட்டத்திற்கு வந்தான். 1879-ம் ௵த்தில் ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்கள் அநேகம்பேர்களை தீபா கொலை பண்ணிய விஷயம் காதில் விழுந்தது. நாளுக்குநாள் தீபா, அக்கிரமத்தில் விருத்தியாகி வந்ததுமன்றி ஆங்கில ஸ்தானாதிபதியை, அவனும் அவனுடைய உத்தியோகஸ்தரும் அவமதித்து வந்தார்கள். 1879-ம்௵ அக்டோபர்௴த்தில் ஸ்தானாதிபதிக்குதீபாவின் நடத்தை திருப்திகரமாயிராமையால் அவன் மாண்டலேயை விட்டு வரவேண்டியதாயிற்று. தீபாவின் கொடுமையால் தூரவிருந்த பர்மா கவர்னர் எல்லோரும் அவனுக்கடங்காமலே தங்களிஷ்டப்படி செய்துவந்தார்கள். பர்மா ராஜ்யத்திலிருந்து அநேக குடிகள் பிரிட்டிஷ் பர்மாவுக்குள் ஓடிவந்து விட்டார்கள். இராச்சியத்தின் எல்லைகளிலும் ஒரே குழப்பமாகவிருந்தது. வியாபார விஷயமாய் செய்துகொண்ட உடன்படிக்கையை தீபா உதாசீனப்படுத்தினான். 1882-ம்௵த்தில் உடன் படிக்கையைப்பற்றி ஒரு முடிவுக்கு வரும்பொருட்டு ஸிம்லாவுக்கு ஒரு ஸ்தானாதிபதி யனுப்பப்பட்டான். காரியம் முடிவு பெறுவதற்குள் தீபா அவனைத் திரும்பிவரும்படி ஆஞ்ஞாபித்தான். இட்டாலி, பிரான்ஸ் தேசத்து பிரதிநிதிகளை தீபா யேற்றுக்கொண்டு ஐரோப்பாவிலுள்ள இதரதேசத்தாரோடு உடன்படிக்கை செய்துகொண்டு வரும்படி இரண்டு தூதர்கள் தனித்தனி அனுப்பப்பட்டார்கள். 1885-ல் பர்மா ராஜாங்கத்தார் பாம்பே பர்மா வியாபாரக் கூட்டத்தின் மேல் 23-லக்ஷம் ரூபாய் அபராதம் விதித்தார்கள். இருகக்ஷிக்கும் பொதுவான மத்தியஸ்தரால் வியாஜ்யம் விசாரிக்கப்படட்டும் என்று ஆங்கிலேயர் சொல்லியும் தீபா அதை லக்ஷியம் செய்யவில்லை. வியாபாரக் கூட்டத்தின்மேலிருக்கும் கேசை நிறுத்தும்படியும் ஆங்கில ராஜப் பிரதிநிதியிடமிருந்து ஒரு தூதை இந்தியாராஜ்யத்துக்கு செலுத்தவேண்டிய மரியாதையுடன் ஏற்கும்படிக்கும், இந்தியா கவர்ன்மெண்டார் ஆலோசனைப்படி இதர நாடுகளோடு வர்த்தமானங்கள் நடத்தும்படிக்கும் ஒரு முடிவு எச்சரிக்கை ஆங்கில ராஜப்பிரதிநிதி 1885-ம் வருஷம் அக்டோபர்௴ 22௳ தீபாவுக்கு அனுப்பினார். இதற்கு நவம்பர்௴ 9௳ தீபா ரங்கூனுக்கு பதில் அனுப்பினான். மேற்சொன்ன விஷயங்களில் ஒன்றையாவது அவன் ஒப்புக்கொள்ளவில்லை. நவம்பர்௴ 7௳ தீபா ஆங்கிலேயரை எல்லாம் பர்மாவை விட்டுத் துரத்திவிடும்படியாக தன் குடிகளுக்கு கட்டளையொன்று அனுப்பி இருந்தான். நவம்பர்௴ 15௳ ஆங்கிலேயர் தங்கள் எல்லையைத் தாண்டி மாண்டலேயின்மேல் படையெடுத்துச் சென்றார்கள். 26௳ ஆவா போய்ச் சேர்ந்தார்கள். அங்கு தீபாவிடமிருந்து ஒரு தூதன்வந்து தன் அரசன் ஆங்கிலேயருக்கு வணங்கச் சம்மதிப்பதாகச் சொன்னான். 28௳ ஆங்கிலேயர் மாண்டலேயைப்போய்ப்பிடித்தார்கள். மறுநாள் தீபா அரசனைப்பிடித்து ஐராவதீ ஆற்றின் வழியாக ரங்கூனுக்கு அனுப்பி அங்கிருந்து இந்தியாவுக்கு அனுப்பிவிட்டார்கள். 1886௵ ஜனவரி௴ 1௳ முதல் மேல்பர்மாவும் ஆங்கில ராஜ்யமாயிற்று. 1889-ம்௵ வரையில் சில கொள்ளைக்காரக் கூட்டத்தார் கவர்ன்மெண்டாருக்கு இம்சை கொடுத்துவந்தார்கள். அவர்களை எல்லாம் நாசப்படுத்தியபின் அதாவது 1890-ம்வருஷமுதல் மேல்பர்மா விருத்தியாகிக்கொண்டே வருகிறது.

ஆட்சி:—மேல் பர்மாவும் கீழ்பர்மாவும் இப்பொழுது ஒரு லெப்டினண்டு கவர்னரால் ஆளப்பட்டு வருகிறது. இரண்டு மாகாணமும் எட்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரிவின் தலைவருக்கும் கமிஷனர் என்று பெயர். இந்த எட்டு பிரிவுகளிலும், 37 ஜில்லாக்களிருக்கின்றன. அவை ஒவ்வொன்றையும் ஒரு டிபியுடி கமிஷனர் (இவர்கள் நம்முடைய கலெக்டர்களுக்கு சமானம்) ஆளுகிறார். இவற்றைத்தவிர ஷான்நாடுகளும் சின்மலைநாடுகளும் சிறு கூட்டத்தலைவரால் ஆளப்

பட்டுவருகின்றன. இவர்களுக்கு ஸாப்வா அதாவது சிற்றரசர்கள் என்று பெயர். ஆனால் உண்மையில் அவைகள் அங்கிருக்கும் ஆங்கிலேய சூப்பரின்டெண்டுகளால் ஆளப்பட்டுவருகின்றன.

கீழ்பர்மாவுக்கு முக்கிய பட்டணம் ரங்கூன். மேல் பர்மாவுக்கு முக்கிய பட்டணம் மாண்டலே. பட்டணத்திலிருந்து பர்மாவில் எந்த ஊருக்கு வரவேண்டுமானாலும் ரங்கூனில்தான் வந்து இறங்கிச் செல்லவேணும். ஏனெனில் அகியாப், பாசீன், மோல்மீன், தாவாய், மர்க்குவி முதலிய அநேக துறைமுகங்களிருந்தபோதிலும் கப்பல் ரங்கூனில்தான் வந்துநிற்கும். மற்ற இடங்களுக்குச் செல்லாது.

போக்குவரவு சாதனங்கள்:—பர்மாவில்போக்குவரவு சாதனங்கள் மண்பாதை, ரயில்வே, ஐராவதியாறு ஆகிய மூன்றுவகை. ரஸ்தாரோட்டு மார்க்கம் சில பெரிய பட்டணங்களில் தவிர, மற்ற இடங்களில் மண்பாதை மிக்க கெடுதலாயிருக்கும். மழைநாட்களில் அப்பாதைகளில் நடப்பது அசாத்தியம். ரங்கூனிலிருந்து ஒரு ரயில்பாதை புரோமுக்கு ஓடுகிறது. மற்றொன்று ரங்கூனிலிருந்து மாண்டலே போய் அங்கிருந்து சகாயிங்குக்கு திரும்பி வடக்கே மியிச்சினா வரையில் செல்லுகிறது. பாசீனுக்கும் மோல்மீனுக்கும் ரயில்பாதைகள் போடப்பட்டிருக்கின்றன. ஐராவதி நதியினால் பர்மாவுக்கு ஏற்பட்டிருக்கும் பிரயோஜனம் மிகவும் ஜாஸ்தியானது. அது முக்கியபோக்குவரவு சாதனமாயிருப்பதுமன்றி வியாபாரத்திற்கு இன்றியமையாத மார்க்கமாகவும் இருக்கிறது. ஐராவதீ ப்ளோட்டில்லா கம்பனிதங்கள் சிறுபுகைக் கப்பல்களை பாமோ வரையில் ஓட்டுகிறார்கள். இதுவன்றி அநேக படகுகளும் பர்மர்களுடைய சிறு பிணைகளும் அவ்வாற்றில் மிதந்துகொண்டே இருப்பதைக் காணலாம். சிட்டாங் நதியில் கப்பல்கள் போவதில்லை

ஆனால் மேல்தேசங்களிலுள்ளகாடுகளிலிருந்துதேக்குமரங்களைவெட்டி இந்நதியில் மிதக்கவிடுவார்கள். எந்த ஊருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதோ அந்தவூர்க்காரன் மரங்களை இழுத்துப்போவான். அன்றியும் பெகு சிட்டாங் ஆறுகளை ஒரு கால்வாய் பிணைக்கிறது. ஆதலால் தேக்குமரங்களை சிட்டாங்கிலிருந்து ரங்கூனுக்கு ஜலமார்க்கமாகவே கொண்டுவரலாம். இராப்பகலாய் இவ்வாறுகளில் ஏற்றுமதிகள் இறக்குமதிகள் நடந்துகொண்டேயிருக்கும். மேல் பர்மாவில் விளையும் நெல் எல்லாம் இவ்வாறுகளின் வழியாகத்தான் படகுகளில் ரங்கூனுக்குக் கொண்டுவரப்படுகின்றது. ரங்கூனிலும், மோல்மேனிலும், பாசீனிலும் யந்திரசாலைகள் அநேகமிருக்கின்றன. இவற்றில் நெல்லை அரிசியாக்கியும், தேக்குமரங்களைப் பிளந்தும் இதர தேசங்களுக்கு ஏற்றுமதிசெய்வார்கள். ரங்கூனைவிட இரண்டுபங்கு அதிகமழைஇப்பிரதேசங்களில் பெய்கிறது. பர்மாவில் நவம்பர் மாதமுதல் மார்ச்சுமாதம் வரையில் குளிர்காலம். மார்ச்சு மாதமுதல் ஜூன்மாதம் வரையில் கோடைகாலம். ஜூன் முதல் நவம்பர் வரையில் மழைகாலம். மழை அதிககாலம் பெய்வதாலும் அது ஏராளமாகக் கொட்டுவதாலும் பர்மாதேசமெங்கும் காடுகளைப் பார்க்கலாம். மற்ற தேசங்களைவிட பர்மாவில் தேக்கு அதிகமாய் விளையும். மூங்கில்தான் பர்மர்கள் வீடுகட்டுவதற்கு முக்கியமாய் உபயோகப்படுத்துவார்கள். பூமி மிக்க செழிப்புள்ளதாதலால் மரங்கள் மிக்க விசாலமாகவும் உயரமாகவும் இருக்கும். இன்னும் கட்டப்பர்ச்சா என்னும் ரப்பர் கொடுக்கும் மரங்களும் பியின்காடோ, தீட்யா முதலிய விருக்ஷங்களும் உண்டு. பலா, கொய்யா, டூரியன், மங்குஸ்தீன், அநாஸ் முதலிய பழங்கள் ரங்கூன் கடையில் அபரிமிதமாக காடுகளினின்றும் கொண்டுவரப்பட்டு கிடப்பதைக் காணலாம். பர்மாவில் அதிகமாக விளையும் தானியம் நெல்லேயாம். இதர தானியங்களையும் பயிரிடுவதுமுண்டு.

மண்ணெண்ணெய் பர்மாவிலிருந்து ஏராளமாக அனுப்பப்படுகிறது. இது முக்கியமாய் ஈனாஞ்சியாங் என்னும்ஊரின்சுற்றுப்புறங்களிலுள்ள கிணறுகளில் அகப்படுவதால் மண்ணெண்ணெய்க்கு பர்மாவில் ஈனாஞ்சி எண்ணெய்யென்றேபெயர். இந்த எண்ணெய் ருஷியா எண்ணெய், அமெரிக்கா எண்ணெய்யைப்போல அவ்வளவு சுத்தமும் தெளிவுமுள்ளதன்று. இதைத்தான் சுதேசி எண்ணெய் என்று பட்டணத்தில் விற்கிறார்கள். மெழுகுவர்த்தி பர்மாவில் ஏராள



மாய் செய்யப்படுகின்றன. கோவில்களிலெல்லாம் மெழுகுவர்த்திகளைத்தான் நிரம்ப உபயோகப்படுத்துவார்கள். நமது கோவில்களுக்கு நெய்யோ நல்லெண்ணெயோ கொண்டுபோய் நாம் விளக்கேற்றுவதைப்போல் பர்மா கோவில்களுக்கு மெழுகுவர்த்தி வாங்கிப்போய் ஏற்றிவிட்டு வரவேண்டும். கார்த்திகைக்கு நாம் அகல்வாங்கி ஏற்றுவதுபோல் பர்மர்கள் பண்டிகைக்கு மெழுகுவர்த்தி வாங்கி வீடெங்கும் ஏற்றிவைப்பார்கள். சிவப்பு ரத்தினங்களும், பச்சை ரத்தினங்களும், ரூபிமைன்ஸ் என்னும் ஜில்லாவில் வெட்டி எடுக்கப்படுகின்றன. ஆறுகளில் அடித்துக்கொண்டு வருவதுமுண்டு. இன்னும் வெள்ளி, ஈயம், பொன், தகரம், இவைகளும் அநேக இடங்களில் அகப்படுகின்றன. மர்குவித்தீவுகளில் முத்துக்குளிக்கிறார்கள்.

கைத்தொழில்:-முக்கியமாய் மரவேலை, தந்தவேலை, சலவைக்கல் வேலை, இவற்றில் பர்மர்கள் சிறந்தவர்கள். நமது பழுக்காத்தட்டுகளும், டப்பிகளும், பர்மாவில் ஏராளமாகச் செய்யப்படுகின்றன.

வியாபாரம்:-ஐரோப்பிய தேசங்களோடும், அமெரிக்காவின்ஐக்கியமாகாணத்தோடும்இந்தியா, சீனா, ஜப்பான், சிங்கப்பூர், நாடுகளோடும் வியாபாரம்நடந்துவருகிறது. முக்கியமாய் ஏற்றுமதியாகும் பொருள்கள் தேக்குமரம், அரிசி, தோல் இவைகளேயாம். கடற்கரை யதிகநீளமாயிருப்பதால்வெளிநாட்டுவியாபாரமேஜாஸ்தி. சீனாவோடு உள்நாட்டுவியாபாரமும் செய்யப்படுகிறது. காடுகளில், யானை, புலி, சிவிங்கி காடுகளிருப்பதால் உள்நாட்டு வியாபாரிகள் அதிக ஜாக்கிரதையாகச் செல்லவேண்டும். பூர்வகாலத்தில் பர்ம அரசர்கள் வெள்ளையானைகளைவைத்து அவற்றை மிக்க செல்வமாய் சம்ரக்ஷித்து வந்தார்கள்.

ஜனங்கள் நடவடிக்கைகள்:—பர்மாவின் ஜனத்தொகை சுமார் 90-லக்ஷம். பலவித நாகரீகமும் நடையுடை பாவனைகளுமுடைய ஜனங்கள் பர்மாவில் இருக்கிறார்கள். ரங்கூனில் உலகிலுள்ள பலதேச ஜனங்களையும் காணலாம். ஆனால் பர்மா பாஷைதான் வெகு பேர்களுக்குத் தெரிந்த பாஷை. பௌத்தமதம் தான் முக்கியமாய் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அநேக பெரிய கோவில்களையும், மடங்களையும் பர்மாவில்காணலாம். "கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது பர்மாவில் பிரத்தியக்ஷம். ஒரு சிறு கிராமத்திலும் ஒரு சிறு கோவிலைக்கட்டி அதில் ஒரு புத்தவிக்கிரத்தை வைத்திருப்பார்கள். பொஞ்சிகளுக்காக மடமும் பிரத்தியேகமாக கட்டப் பட்டிருக்கும். இந்த பொஞ்சிகள் நமது தேசத்து சந்நியாசிகளைப்போல் முண்டனம் போட்டுக் காஷாயம் தரித்திருப்பார். இவர்கள் இரந்துதா னுண்ணவேண்டும். இவர்களிடத்தில் பர்மாக்காரர்களுக்கு அதிக மதிப்பும் விசுவாசமும் உண்டு. இவர்களை பர்மாவில் எங்குபோனாலும் ஏராளமாய்க் காணலாம். நமது தேசத்தைப்போல ஸ்திரீகள் வீட்டிற்குள்ளேயே பர்மாவில் அடைபட்டிருப்பதில்லை. அவர்களுக்கு சுதந்தரம் நிரம்பஉண்டு. அவர்கள் ஐரோப்பிய மாதர்கள்போல எந்த புருஷனிடத்திலும் பேசலாம்.

பர்மர்கள் அயலாரிடத்தில் விசுவாசமும் மரியாதையுமுடையவர்கள். அவர்களுக்கு சிக்கன சீவனமென்பதே தெரியாது. கையில் அகப்பட்டதை நாளைக்கு வேண்டுமென்னும் யோசனையின்றி, கரைத்து விடுவார்கள். இவர்கள், சீனர் இந்தியர்களைப்போல் உழைப்பாளிகளுமல்ல. சுகமாய்ப் பொழுதைக்கழிக்க விரும்புவார்கள்.

நீலி வசீகரம்

TAMING OF THE SHREW

(முன் தொடர்ச்சி)

நா.—சந்தோஷமாகவிரு ; இதோ பார், கௌதமி ! உனக்காக மிகுந்த சிரமப்பட்டு நானே சமையல் செய்துகொண்டு வந்திருக்கிறேன். (பாத்திரத்தைக் கீழேவைத்தல்) என்ன கோது ? எவ்வளவு சிரமப்பட்டேன் தெரியுமா ?—என் இவ்வளவு சிரமமென்று ஒரு அநுதாப வார்த்தைகூடச் சொல்லமாட்டாயா ? அப்படியானால் என்மீது உனக்கு அன்பு இல்லைபோலும் ! இவ்வளவு சிரமப்பட்டதும் வீணா ? யாரடா அங்கே ? இந்தச் சோற்றை யெடுத்துப்போங்கள்.

கௌ.—ஐயே ! வேண்டாம், வேண்டாம் ; இங்கேயே இருக்கட்டும் உங்கள் சிரமத்துக்காகக் காலில் வேண்டுமானாலும் விழுகிறேன் ; பசி உயிர் போகின்றது.

பிர.—தேவரே ! கொஞ்சம் பொறுங்கள் ; அவள் சாப்பிட்டுப் பசியாறட்டும்.

நா.—ஆனால் சாப்பிடு சீக்கிரம் ;—கண்மணி கௌதமி ! சாப்பிட்டவுடன் உன் பிறந்தகத்துக்குப் புறப்படவேண்டும். சாப்பிட்டாய்விட்டதா ? ஜவுளிக்கடைக்காரன்காத்துக்கொண்டிருக்கிறானே, நல்லபுடைவை கொண்டுவந்திருக்கிறான்.

(புடைவைக்காரன் வருதல்)

பு.—ஐயா ! நமஸ்காரம்.

நா.—நீதான் புடைவைக்காரனோ ? அன்றையதினம் நான் சொல்லியபடியே புதுப்புடைவை நெய்து கொண்டுவந்திருக்கிறாயா ?

பு.—இதோ இருக்கிறது ; பிரித்துப் பார்க்கிறீர்களா ? (பிரித்துக்காட்டல்.)

நா.—ஐயையோ ! என்னடா, இப்படி நெய்துவிட்டாய் ? ஒரு பக்கம் அரக்குக்கரையும் இன்னொரு பக்கம் மஞ்சள் கரையுமாகவா நெய்கிறது ? நன்றாகவேயில்லை ; இது வேண்டாம்.

கௌ.—அதுதான் நன்றாகவிருக்கும். எனக்கு இதுதான் வேண்டும்.

நா.—இதில் ஜரிகை அதிகமாக விருக்கிறது. சீக்கிரத்தில் சுருங்கிப் போய்விடும் ; மேலும் சாயங்கூட நிற்காது. உனக்கு வேறு வாங்கித்தருகிறேன். இது வேண்டாம்.

கௌ.—எனக்கு இதுதான் வேண்டும். ஸ்திரீகளின் உடை நோட்டம் புருஷர்களுக்கு எப்படித் தெரியும் ; எனக்கு இதைத்தான் வாங்கிக் கொடுக்கவேண்டும். இல்லாதபோனால் எனக்குக் கோபம் வரும்.

(தையற்காரன் வருதல்)

தை.—ஐயா ! நீங்கள் சொல்லியபடியே அம்மாளுக்கு 'ரவிக்கை' தைத்துக்கொண்டு வந்திருக்கிறேன்.

நா.—எதோ, இப்படிக்கொடு (வாங்கிக்கொண்டு) இதென்னடா, கேவலம் ? உள்ளுக்கு ஒரு துணிவன் கொடுத்தாய் ? மேல் ஜரிகை வைத்திருப்பது நன்றாக விருக்கவில்லை. "வெல்வெட்" துணிகூட நல்ல தினிசு இல்லைபோல விருக்கிறது.

தை.—இல்லை, எஜமானரே ! தாங்கள் சொன்னதில் எள்ளளவேனும் பிசகாமல் செய்திருக்கிறேன். துணியும் தங்கள் சேவகர்தான் வாங்கித் தந்தார்.

நா.—நன்றாகவேயில்லை.

கௌ.—இதைக்காட்டிலும் நன்றாக யார் தைத்துக் கொண்டுவருகிறார் ? இதுவே மேலானது ; இது தான்எனக்கு வேண்டும்.

பிர.—(தனக்குள்) — சரி ; இவளுக்குப் புடவையும் கிடைக்காது, ரவிக்கையும் கிடைக்காது.

நா.—நீ என்ன குழந்தையா ? நல்லது இன்னதென்றும், கெட்டது இன்னதென்றும் அறிந்துகொள்ள முடியாதா, உன்னால் ?

தை.—ஐயனே ! இது நல்லதாயிற்றே !

நா.—சீ ! காமாட்டிப் பையலே ! ஓடிப்போ ; என் வீட்டில் வந்து நின்றுகொண்டு எனக்குப் பாடம் படிக்கிறாயோ ? உன் ரவிக்கையும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம் ; நீ உடனே போய்விடு.

தை.—ஐயா ! தாங்கள் சொன்னபடிதானே செய்திருக்கிறேன். இதில் குற்றமொன்றுமில்லையே.

நா.—நீ என்னவேண்டுமானாலும் சொல்லிக்கொண்டிரு ; இந்த ரவிக்கை எனக்கு வேண்டாம்.

போ.—ஐயா ! அது தங்களுக்கன்று ; எஜமானியம்மாளுக்காக வந்திருக்கிறது.

நா.—சீ ! போக்கிரிப்பையலே ! பேசாமலிரு. (பிரதாபருத்திர தேவருடன் தனிமையில்) நீர் பணங் கொடுக்கிறதாகச் சொல்லும், புடவைக்கும் ரவிக்கைக்கும் (தையற்காரனைநோக்கி) உன் ரவிக்கை எனக்கு வேண்டியதில்லை. ஏ, புடவைக்காரா !

உன் புடவையும் எனக்கு வேண்டியதில்லை; நீங்கள் போகலாம்; நிற்பதில்பிரயோஜனமில்லை.

பிர.—புடவைக்காரரே! உமது புடவை நன்றாகவிருக்கிறது.; அதை நான் எடுத்துக்கொள்ளுகிறேன்; பணத்துக்கு நாளைவாரும். ஓய்! தையற்காரரே! உமக்கும் அப்படித்தான்; ரவிக்கையை நான் வாங்கிக்கொள்ளுகிறேன். தேவர் சொன்னதைப்பற்றி நீங்கள் மனவருத்தப்படவேண்டாம்.

(தையற்காரனும் புடவைக்காரனும் போதல்.)

நா.—இங்கேவா, கோது; உன் பிறந்தகத்துக்கு இந்தத் தாழ்ந்த உடையோடு போனால் என்ன? அதனால் யாராவது, நாம் ஏழைகள் என்று நினைப்பார்களென்று சந்தேகப்படுகிறாயோ? பட்டால் படட்டும்; அதனால் நமக்கு என்ன குறை? நம் செல்வம் குறைந்துவிடாது; புலியும் நல்ல பாம்பும் வெளிக்கு வெகு பகட்டாய் அழகுடன் தோன்றுகின்றன; அவைகளை யாவரேனும் கொண்டாடுகிறார்களா? உனக்கு வெட்கமாகவிருந்தால் என்னைக் காட்டிக்கொடுத்துவிடு; பதில் நான் சொல்லிக்கொள்கிறேன். நாம் உடனே புறப்படவேண்டும்; சேவகர்களைக் கூப்பிடு. இப்போது மணி ஏழு ஆகிறது. மத்தியானச் சாப்பாட்டுக்கு நாம் போய்விடலாம், வேகமாய்ப் போனால்.

கோ.—இப்போது மணி இரண்டாய்விட்டதே இப்போது புறப்பட்டால் நாம் போய்ச் சேருவதற்குள் இருட்டிவிடும்.

நா.—அதென்ன? நான் என்ன சொன்னாலும் தடுக்கிறாய்! நான் மணி ஏழு என்கிறேன்; நீ இரண்டு என்கிறாய்; இந்த மாதிரி குறுக்கே தடுத்துச்சொல்லாதே என்று எத்தனை தரம் சொல்லியும் நீ கேட்கவில்லையே. ஒன்றும் வேண்டாம் போ; நான் இன்றைக்குப் புறப்படவில்லை. நான் எந்நேரமாயிற்று என்பேனோ, அந்நேரமானால்தான் நான் புறப்படுவேன்.

பிர.—சரி! சரி! இவர் நிச்சயம் இவளை வழிக்குக் கொண்டுவந்துவிடுவார்; சந்தேகமில்லை.

(அனைவரும் போதல்).

களம் 4.—மதுரை ரகுநாத தேவரின் வீட்டு முன் பக்கம்.

(சுப்பராயனும், நல்ல நாயக உடையார் வேஷம் பூண்ட தீர்த்தயாத்திரியும் வருதல்)

சுப்.—இந்த வீடுதான்; நான் உள்ளேபோய்க் கூப்பிட்டுக்கொண்டு வரட்டுமா?

தீர்.—சரி; கூப்பிட்டுக்கொண்டுவா; ரகுநாததேவரும் நானும் இருபது வருஷங்களுக்கு முன்னால் திருவனந்தபுரத்தில் ஊட்டுப்புரையில் சாப்பிட்டோம்; அந்த ஞாபகம் எனக்கு நன்றாகவிருக்கிறது.

சுப்.—எப்படியாவது தைரியத்தைவிடாமல் காரியத்தை முடித்துவிடும்.

தீர்.—எனக்கு ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. ஆனால் இதோ உன் சேவகன் வருகிறான், அவனுக்கு இவ்விசேஷத்தைச் சொல்லிவிட்டால் நல்லது.

(கேசவன் வருதல்)

சுப்.—அதைப்பற்றி பயப்படவேண்டாம்.—ஏலே! கேசவா! இதோ இருப்பவர், நிஜமான நல்லநாயக உடையாரென்று நினைத்து நடக்கவேண்டும்; தெரியுமா?

கே.—அப்படியே நடக்கிறேன்; சந்தேகம் வேண்டாம்.

சுப்.—ஆமாம்; ரகுநாத தேவரிடம் அந்த சங்கதியைச் சொல்லிவிட்டு வந்தாயா?

கே.—அவரிடம் உன் தகப்பனார் இன்றையதினம் இவ்வூருக்கு வருவாரென்று சொல்லிவிட்டேன்.

சுப்.—நீ எப்போதும் முன் யோஜனைக்காரன்; நீ ஏதாவது வாங்கிச்சாப்பிடு, இதைக்கொண்டு இதோ ரகுநாததேவர் வந்துவிட்டார்.—ஐயா! ஜாக்கிரதை.

(ரகுநாததேவரும் விஜயராகவ உடையாரும் வருதல்.)

ஐயா தேவர்வாள்! உங்களைத்தான் தேடிக்கொண்டு வந்தோம். (தீர்த்தயாத்திரியை நோக்கி) ஐயா! இவரைத்தான் நான் குறிப்பிட்டது. அவருடைய பெண் வனிதேசுவரியை நான் கல்யாணம் பண்ணிக்கொள்வதற்கு நீங்கள் சம்மதித்துவிட்டால் போதும்.

தீர்.—ஐயா! போதும்.—ஐயா! நான் இன்றுகாலையில்தான் இங்கு வந்தேன். சில கடன் வசூல் செய்யவேண்டியதற்காக வந்தவிடத்தில் என் மகன் பெரிய விஷயமொன்றை என்னிடம் சொன்னான்; அதாவது தங்களுடைய குமாரத்தியைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளவேண்டுமென்கிறான்; எனக்கு மிகுந்த சந்தோஷம்; நல்ல இடத்து சம்பந்தம் கிடைப்பது அருமையல்லவா? நீங்கள் என்ன செய்யவேண்டுமென்று சொல்லியபோதிலும், நான் அதற்கு உடன்படுகிறேன்.

ரகு.—நீங்கள் சொல்வது எனக்கு மிகுதியும் திருப்தியைக் கொடுத்துவிட்டது; என் மகளுக்கும் உங்கள் மகனுக்கும் அத்தியந்த அந்நியோந்நியம் இருக்கிறதென்று தெரிகின்றது. தாங்கள், பெண்ணுக்கு எவ்வளவு ரூபாய் கொடுப்பீர்கள்? இதை முடித்துவிட்டால் கல்யாணத்துக்கு முகூர்த்தம் வைத்துவிடலாம்.

தீர்.—அதையெல்லாம் நன்றாய் யோஜித்துச் சொல்லவேண்டும்; அதற்கு ஓரிடத்தில் உட்கார்ந்து பேசவேண்டும். இங்கேயே உள்ளேபோவோமா?

ரகு.—இங்கே சரிப்படாது; பொன்னம்பலத்தேவர் வந்து குறுக்காகப் பேசுவார். வேறு இடம் பார்க்கவேண்டும்.

சுப்.—ஆனால் என் விடுதிக்கு வந்துவிடுங்களேன். அய்யாவும் அங்கேதான் இறங்கியிருக்கிறார்; ராத்திரி அங்கேயிருந்து பேசி முடித்துவிடுவோம். யாரேனும் ஒரு சேவகனையனுப்பி வனிதேசுவரியை அழைத்துவரச் செய்யுங்கள்; திருப்திகரமாகப்பேசித் தீர்மானம் செய்துவிடுவோம்.

ரகு.—அதுதான் சரியென்று தோன்றுகிறது—சாமிநாத வாத்தியாரே! நீர் போய் குழந்தை வனிதையிடம் சமாசாரங்களையெல்லாம் சொல்லி அழைத்து வரவேண்டும்.

விஜ.—ஆயிரந்தரம் வேண்டுமானாலும் போய் வருகிறேன்.

சுப்.—ஒருதரம் போனால் போதும்; சீக்கிரம் போம்; ஐயா! வாருங்கள். நாம் போகலாம்.

(சுப்பராயன், தீர்த்தயாத்திரி, ரகுநாத தேவர் மூவரும் போதல்)

பராபரக்கண்ணி

ஓடு மிருநிதியு மொன்றாகக் கண்டவர்க
ளாடும் பொருளான நட்பே பராபரமே.

ஓயாதோ வென்கவலை யுள்ளே யானந்தவெள்ளம்
பாயாதோ வையா பகராய் பராபரமே.

கன்றினுக்குச் சேதாக னிந்திரங்கல் போலவெனக்
கென்றிரங்கு வாய்கருணை யெந்தாய் பராபரமே.

எண்ணாத எண்ணமெல்லா மெண்ணியெண்ணி
யேழைநெஞ்சம், புண்ணாகச் செய்ததினிப்
போதும் பராபரமே.

ஆழித் துரும்பெனவே யங்குமிங்கு முன்னடிமை
பாழிற் றிரிவதென்ன பாவம் பராபரமே.

கற்றவறி வாலுனைநான் கண்டவன்போற் கூத்தாடிற்
குற்றமென் றென்னெஞ்சே கொதிக்கும் பராபரமே.

இந்துலேகை

ஒரு மலயாள நாவல்

இரண்டாம் அத்தியாயம்

(219-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஸம்பாஷணை நடந்தபிறகு சிலநாள் வரையில் மாதவன் காலங்கழித்துவந்த விதத்தைப்பற்றிச் சொல்ல எனக்கே சங்கடமாயிருக்கிறது. இந்துலேகை தன்மனம்போனபடி எவ்வளவுதான் பேசினாலும் சிரித்தாலும் விளையாடினாலும் மாதவன் மாத்திரம் வாய்திறவாமல் மௌன முத்திரை தரித்தவன் போல் தோற்றினான். சிலசமயம் இந்துலேகை, "உனக்கென்ன சித்தப்பிரமை பிடித்திருக்கிறது?" என்று கேட்பாள். ஆனால் அதற்கவன் மறுமொழி சொல்லுமுன் இன்னும் எத்தனையோ கேள்விகேட்டு அவன் பிராணனை வாங்கிவிடுவாள். ஒரு நாள் சாயங்காலம் இந்துலேகை ஆடையாபரணங்களணிந்துகொண்டிருக்கையில் மாதவன் அவளிருந்த அறைக்குட் சென்று அங்கிருந்த ஒரு காகிதத் துண்டை எடுத்து அதில் தன் மனத்துயரங்களை யெல்லாம் எழுதி நிறைத்து அந்தக் காகிதத்தை இந்துலேகையின் மேஜையின்மேல் வைத்துப் போய்விட்டான். அடுத்த நாள் சாயங்காலம் அவன் இந்துலேகையின் அறைக்குத் திரும்பிவந்து "நான் நேற்று ஒரு கடிதம் எழுதிவைத்துவிட்டுப் போனேனே, அதைப் படித்தையோ?" என்று கேட்க, அவள் அதைக் காதிற் போட்டுக்கொள்ளாமல் உடனே வேறே விஷயங்களைப் பற்றிப்பேசத்தொடங்கி, அவனுக்குண்டாயிருக்கக்கூடிய துயரத்தைத் தான் கண்டுகொண்டதாகக் காட்டிக்கொள்ளாதவளாய் அவளிடத்தில் தனக்கிருந்த காதலைத் தனக்குள்ளாகவே மறைத்துவைத்தாள்.

இப்படியிருக்கையில் ஒரு நாளிரவு பூர்ணசந்திரிகை பிரகாசித்துக்கொண்டிருக்க மாதவன் பூவரங்கு மாளிகையின் தெற்கு முற்றத்தில் நின்றுகொண்டிருந்தான். இந்துலேகை தன் மாளிகையின் பலகணி வழியாய்ப் பார்த்து மாதவன் நின்றுகொண்டிருப்பதைக்கண்டு "மாதவா, மாதவா" என்று கூப்பிட்டாள்.

"எதற்காக?" என்றுகேட்டான் மாதவன்.

"எதற்காகவா?" என்று மாதவன் கேட்டதையே இந்துலேகையும் திருப்பிச்சொல்லி "காம விகாரங் கொண்டவன்போல் சந்திரனைப் பழிக்கின்று

யோ? சந்திரகிரணங்கள் இந்த அறையிலும் எவ்வளவு மனோஹரமாய் நிறைந்திருக்கிறது வந்து பார். இங்கேவர ஏதாவது ஆட்சேபமுண்டோ?" என்றாள்.

"நான்மேலே வரக்கூடாது" என்றான் மாதவன். "ஒரு ஸோபாவில் நாமிருவரும் ஒன்றாய் உட்காருவது அநுசிதமான காரியமாயிருக்கும் பட்சத்தில் நான் இரவுவேளையில் நீ இருக்கும் அறைக்கு வந்து அங்கே உன்னுடன் உட்காருவது இன்னும் அநுசிதமல்லவா?"

"நீ சொல்வது சரியே" என்று விடை பகர்ந்தாள் இந்துலேகை. "அது மிகவும் அநுசிதமாய்த்தானிருக்கும். நான் பேசினபோது அதை மறந்துவிட்டேன். நானே முற்றத்துக்கு இறங்கிவருகிறேன்."

"எனக்காக வேண்டி அவ்வளவு சிரமமெடுத்துக்கொள்ளவேண்டாம்" என்றான் மாதவன்.

"அப்படியில்லை. என் பொருட்டாகவே வருகிறேன்" என்றாள் இந்துலேகை.

"அப்படியானால் சரி" என்று மாதவன் உரைக்கவும், இந்துலேகை கீழே இறங்கிவந்து முற்றத்தில் வெகு மனோஹரமாய்ப் பிரகாசிக்கும் சந்திரிகையில் மாதவன் பக்கத்தில் நின்றாள். அவள் அன்று சாயங்காலம் கட்டித்தொடுத்த ஒரு முல்லைமாலை அவளது கையில்இலங்கிற்று. பால்போல் வெண்மைகொண்ட அந்தச் சந்திரிகை வெள்ளத்திலே மாதவன் அவளது திவ்யமான முகசௌந்தரியத்தையும் கூந்தலழகையும் ரூபலாவண்யத்தையும் கண்டு அடக்க முடியாத மோகபரவசமுற்று மயங்கி நின்றவனாய் "ஈசா! உன் படைப்பில்சிறந்த இந்த சுந்தரிக்கு என்னிடம் காதல் உண்டாயிருக்கும்பட்சத்தில்,என்னைப் போலுள்ள பாக்கியவான் யார்? அப்படியில்லாவிட்டால் இந்த உயிரை வைத்திருப்பதில் என்ன பிரயோஜனம்? இக்கணமே அவள் காலண்டையில் உயிரை விடுவதும் உத்தமமாகுமே" என்று சிந்திக்கலாயினான்.

இந்துலேகைக்கும் ஆழ்ந்த காதலுணர்ச்சியுண்டாயிற்றென்றாலும், அவள் தன் நடத்தையில் யாதொரு பேதத்தாலாயினும் தன் எண்ணங்கள் வெளியில் தெரிந்துவிடும்படியாய்காட்டிக்கொள்ள இடங்கொடுக்கவில்லை. இதன் சூட்சுமம் என்னவெனில், அவள் தன் மனதை முழுவதும் அடக்கித் தன்வசப்படுத்தி வைத்திருந்தபடியால், தன் மனோவிகாரங்களைப் பொங்கி யெழவொட்டாமல் இழுத்துப்பிடித்துத் தன் இங்கிதங்களில் அவைகளை லேசாய்வைத்துக்கொண்டுபோகக்கூடிய தந்திரத்தில்தேர்ந்திருந்தாள். ஆனால் உள்ளம்பூரித்து உல்லாசம் மேலிடுங்காலத்தில், நகைப்பே நம்.மனோபாவங்களை வெளிப்படுத்துவதற்குரிய சகஜமான வழியாயிருப்பதும், துக்கம் மேலிட்ட தருணங்களில் சங்கடத்தை வாய்விட்டு வெளிப்படுத்துவதனாலேயேஅதன் தீவிரமான வேதனைகள் தணிவடைவதும் பிரத்தியக்ஷமாயிருக்கின்றன. துக்காக்கிராந்தனாயுள்ள ஒருவன் தன் சுகதுக்கங்களைத் தன்னுடன் அனுதபிக்கும் அன்பனுடைய செவிகளில் ஆறாய்ப்பெருகும்படித் திறந்தமடையாய் வாயாரச்சொன்னால்தான் சிறிது ஆறுதலுண்டாகிறது. அப்படிக்கின்றித் தன் நெஞ்சத்துக்குள்ளேயே வேதனையை அடக்கிக்கொண்டு உள்ளுக்குள்ளேயே உருகி வெதும்பி வெளிக்கு யாதொரு துக்கமும் இல்லாதவன்போல் இந்தப் பிரபஞ்சநாடகத்தில் நடிப்பானாயின், தடைப்படுத்தப்பட்ட வெள்ளம்போல் அவனுடைய மனோபாவங்கள் திடீரென்று உடைப்புண்டுப் பொங்கியெழுந்து அவனையும் தம் பிரவாகவேகத்தில் அடித்துக்கொண்டு போய்விடுகின்றன.

முற்றத்தில் வீசும் சந்திரிகையில் மாதவனுடைய மெல்லிய முகத்தில் ஸ்பஷ்டமாய்க் காணப்பட்ட வேதனையைக்கண்டு இந்துலேகையின் மனமும் தத்தளித்தது.சாதாரணமாகவேசந்திரிகையென்றால் மனதில் அடங்கியிருக்கும் மோக உணர்ச்சிகளெல்லாம் உத்தீபனம்கொள்ளும். அதிலும், அப்போது அவ்விடத்தில் பிரவகித்த சந்திரிகை வெள்ளத்திலே, மாதவனைப்போன்ற மன்மதரூபன்தான் அவனிடத்தில் எவ்வளவு அன்புவைத்திருந்தாளோ அவ்வளவு உண்மையும் லலிதமும் உறுதியுமான காதலைத் தன்னிடம் கொண்டவனாய்த் தான் சமீபத்தில் நிற்கும்போது அவளுக்குண்டான காமவிகாரத்தின் கூர்மையைச சொல்லவும் வேண்டுமா? அப்படியிருந்தும் அவள் தன் புத்தி சாமர்த்தியத்தைக்கொண்டும் பொறுமையாலும் தைரியத்தாலும் தன் மனோவேதனையைச் சிறிதேனும் காட்டிக்கொள்ளாதவளாயிருக்க அவ்விருவரும் சற்றுநேரம் மௌனமாய்ச் சந்திரனை உற்றுப்பார்த்துக்கொண்டு நின்றனர். கடைசியில் இந்துலேகை பின்வரும் சுலோகத்தைப் பாடினாள்

ஸ்வைரம் கைரவ கோரகாந்
 விதளயந் யூநாம் மந: கேதயந்
அம்போஜாநி நிமீலயந்
 ம்ருகத்ருசாம் மாநம் ஸமுந்மூலயந்
ஜ்யோதஸ்நாம் கந்தளயந் திசோ
 தவளயந் அம்போதிமுத்வேலயந்
கோகா நாகுலயந்தம: பளயந்
 இந்து: ஸமுஜ்ஜ்ரும்பதே.

[அதாவது, அல்லிமலர்களை இரக்கமின்றி வாடச் செய்துகொண்டும், யௌவனபருவத்திலுள்ள ஆடவர்களின்மனத்தை ஆகுலயப்படுத்திக்கொண்டும்,கமலமலர்களைக் குவியச்செய்துகொண்டும், மான்விழியாரின் மானத்தை அடியோடழித்துக்கொண்டும், வையகத்தின்மேல் தன் வெண்ணிலவை மனோகரமாய்ப் பரப்பிக்கொண்டும், சகலதிசைகளையும் தன் வெண்சோதியால் ஒளிரச்செய்துகொண்டும், சக்ரவாகப்பட்சிகளை விரக வேதனையால் வருத்திக்கொண்டும் இருட் கூட்டத்தை விழுங்கிக்கொண்டும் சந்திரன் வெகு கம்பீரமாய் உதித்தெழுகின்றான்.]

இப்படி அவள் பாடிமுடித்தவுடன் மாதவன் சொல்லுவான்:—
இந்தக்கவி பாடினவன் சந்திரனுடைய குணங்களையெல்லாம் சரியாய் அறிந்தவன் என்று எனக்குத் தோற்றவில்லை."

"அதெப்படி?" என்றாள் இந்துலேகை.

"எப்படியென்றால்" என்றாரம்பித்துச் சொல்லத்தொடங்கினான் மாதவன். "'மான்விழியாரின் மானத்தை அடியோடழிக்கின்றவன்' என்று சொல்லப்பட்ட குணம் உண்மையிலேயே சந்திரனுக்கிருந்த பட்சத்தில், அதை அவன் இப்போது இங்கே வெளிப்படுத்தமாட்டானா?"

இந்துலேகை சிரித்துக்கொண்டு சொல்வாள்"அப்படியானால் இன்னொரு சுலோகம் சொல்லுகிறேன் கேள்:—
"யாமிநீ காமிநீ கர்ணகுண்டலம் சந்திரமண்டலம்
மார நாராச நிர்மாண சாணசக்ர மிவோதிதம்"

(அதாவது, இரவென்னும்அணங்கு காதிலணியும் கம்மலாகிய சந்திரமண்டலமானது மன்மதனுடைய பாணத்தைத் தீட்டுவதற்கான சாணைக்கல்லென உதயமாயிற்று.)

அதைக்கேட்டு மாதவன், "மன்மதனுடைய பாணங்கள் மாதர்களின் நெஞ்சங்களைப் பிளப்பது சில நாளாய் நின்றிருக்கிறது போல் தோற்றுகிறது" என்றான்.

அதற்கு இந்துலேகை," ஆமாம், மாதர்கள் மிருதுவான நெஞ்சமுடையவர்களோ அல்லவோ? அவர்கள் அச்சங்கொண்டுஅடங்கிப்போகிறவர்கள்தானே. ஒருவேளை காமதேவனே எங்கள்மேல் இரக்கங்கொண்டு வருத்தாமல் விட்டுவிட்டிருந்தாலும் இருக்கலாம்" என்றாள்.

மாதவன், "ஓ! அப்படியா அது? அப்படியிருக்கும்பட்சத்தில் அந்தக் காமதேவன் ஒரு துஷ்டன் மாத்திரமல்ல, கபோதித்தனமுள்ள மடையனென்றும் சொல்வேன். மாதர்களிடத்தில் அநுக்ரஹத்தால் அவர்களை அவன் வருத்தாமல் விட்டுவிட்டானென்றால், புருஷர்களைமாத்திரம் வதைப்பதில் அவனுக் கென்ன லாபம்?புருஷர்களைமாத்திரம் பிரயோஜனமில்லாமல் எதற்காக உபத்திரவம் பண்ணவேணும்?"

இந்துலேகை: "அதில் ஏதோ ஒரு சூட்சமம் இருக்கிறது. அதாவது, புருஷர்களை உபத்திரவம் செய்தால், அவர்கள் ஸ்திரீகளைவிட அதிக பலவான்களாதலால், மன்மதனுக்கு எவ்வித சிரமமும் கொடுக்காமல் தாங்களே ஸ்திரீகளை உபத்திரவித்து ஜெயித்துவிடுவார்களென்று யோசித்தே காமதேவன் இப்படி செய்திருக்கக்கூடும். அதிருக்கட்டும், இதோ பார்! நான் ஒரு முல்லைமாலை கொண்டுவந்திருக்கிறேன். இதை இன்று நானே கட்டினேன். இதில் நாயகமணியாகக் கட்டியிருக்கின்ற இந்தத் தாமரைப்பூவை நானே இன்று விடியற்காலத்தில் பூவள்ளியிலுள்ள மேலண்டைக்குளத்திலிருந்து பறித்துக்கொண்டுவந்தேன். இந்த மாலையை மாதவன் குடுமியில் முடித்தால் அழகாயிருக்கும்; இதை வாங்கிக்கொள்."

மாதவன் அந்த மாலையைத் தன் கையால் வாங்கிக்கொண்டான். அப்படி வாங்கும்போது, அவன் கை துடித்ததைக்கண்டு அதற்குக் காரணம் என்னவென்று இந்துலேகை கேட்டாள்.

மாதவன் (அந்த மாலையிலுள்ள தாமரைப்பூவைக் காட்டி) "காமபாணம் தான் காரணம்" என்று சொல்லிவிட்டுப் பிறகு "வெறும் பயத்தினால்தான் என் கைதுடித்தது" என்றான்.

இந்துலேகை சிரித்தாள். மாதவனோ அந்த மாலையைக் கையிலெடுத்து அதைப் பார்த்துக்கொண்டே பின்வருமாறு பாடலானான்.

"சோபா ஸர்வதமஸ்வமேஷாம் ப்ரதமபஹ்ருதம்
 யம்தயொ லோசநாப்பரம்;
மாத்வீமாதுர்யஸாரஸ்தவ கலவசஸா
 மார்தவம் தவலப்ரதீகை:

ஸ்தானப்ரம்சோ மஹீயார், அபீத
விரசிதஸ் தத்ரமுகஸ்பர்திநாம் வை
பத்மாநாம் பந்தநாத் தவம் விரம வர்தநோ
பிஷ்டபேஷேணகிம்ஸ்யாத்"

(அதாவது, இந்தத் தாமரைப்பூவின் எழிலையெல்லாம் உன் கண்களால் அபஹரித்துவிட்டாய்; அதன் இதழ்களிலுள்ள மதுவை உன் மதுர வசனத்தால் கொள்ளைகொண்டுவிட்டாய்; அதன் மேன்மையை உன் மிருதுவான அங்கங்களால்கவர்ந்துகொண்டாய்; சுருங்கக்கூறில், அந்தத் தாமரையையே அதன் ஸ்தானத்திலிருந்து பறித்துவிட்டாய். ஆகவே, மெல்லியலே, இனியும் அதைக் கசக்கிவிடாமல் கருணைபுரிவாய்).

இந்துலேகை: "ஆகா, ஒன்றாந்தரமான சுலோகம். எனக்கு அதை நீ சொல்லிக்கொடுக்கவேணும்."

மாதவன்: "இந்த மாலையில் ஒரு சிறிய பாகத்தை எடுத்து என் குடுமியில் வைத்துக்கொள்ளுகிறேன். மற்றது முழுவதும் இந்துலேகையின் கூந்தலில் சூட்டுவதற்கே யோக்கியமானது.

இந்துலேகை: "யோக்கியதை இருக்கட்டும் இல்லாமல்போகட்டும்,நீ உன் இஷ்டப்படி செய்யலாம்."

"அப்படியானால் என் இஷ்டப்படி செய்ய எனக்கு உத்தரவு கொடுப்பாயா?" என்றான் மாதவன்.

"ஆகா,இந்த மாலை சம்பந்தப்பட்டவரையில் உன் இஷ்டப்படி செய்ய யாதோர் ஆட்சேபமுமில்லை" என்றாள் இந்துலேகை.

அதன்மேல் மாதவன் அந்த மாலையில் ஒரு துண்டு எடுத்துத் தன் முடியில் வைத்துக்கொண்டு, பிறகு, மற்றதைக் கையில் பிடித்துக்கொண்டு, இந்துலேகையின் முகத்தை முழுவதும் உற்றுநோக்கி "இந்துலேகா, இந்தப் புஷ்பசரத்தை நானே உன் கூந்தலில் சூட்டட்டுமா?" என்று கேட்டான்.

"என் கூந்தலிலா?" என்றாள் இந்துலேகை.

"ஆமாம்" என்றான் மாதவன்.

"அதுவும் மாதவன் கையினாலா?" என்றாள் இந்துலேகை.

"ஆமாம்" என்றான் மாதவன்.

இந்துலேகை ஒன்றும் பேசாமல் மந்தஹாஸம் புரிந்து நிற்க, மாதவன் புஷ்பஸரத்தை அவள் கூந்தலில் சூட்டினான்.

இந்துலேகை சற்றுநேரங்கழித்து, "மாதவா, நாம் சுத்த அசடுகள்; நாம் என்னதான் அத்தான் அம்மங்கார் பாத்தியமுள்ளவர்களாயிருந்து பாலியம் முதல் ஒன்றாய் விளையாடிக்கொண்டு வளர்ந்துவந்தாலும், எப்போதுமே நாம் குழந்தைகளென்று எண்ணிக்கொள்ளக்கூடாது" என்றாள்.

"உன் கூந்தலில் நான் புஷ்பத்தைச் சூட்டிய போது உன்னைக் குழந்தையென்று நான் ஒருபோதும் நினைக்கவேயில்லை. நல்ல யௌவன புருஷனென்றே எண்ணிக்கொண்டிருந்தேன்" என்றான் மாதவன்.

"நீ அப்படி நினைத்திருக்கும்பட்சத்தில், என்னை எப்படித் தொடக்கூடும்?" என்று கேட்டாள் இந்துலேகை.

"உனக்குத் தெரிந்துதானே உன்னைத் தொட்டேன்?"

"அதுதானே நான் அக்கிரமமென்பது" என்றாள் இந்துலேகை.

மாதவன் (கண்ணில் நீர்பெருக), "என்னை ஏன் இப்படி அலைக்கழிக்கிறாய்? நீ இல்லாமல் அரைநிமிஷமும் இந்த பூமியிலிருக்க எனக்கு மனமில்லை" என்றான்.

இந்துலேகை (நெஞ்சத்தில் எழுந்த வியசனத்தை ஸ்திரமாய் அடக்கிக்கொண்டு) "நான் இல்லாமல் நீ இருக்கவேண்டுமென்று யார் சொன்னார்கள்?" என்றாள்.

"'இல்லாமல்' என்ற வார்த்தையைச் சொல்லும் போது நான் உத்தேசித்த அர்த்தத்தைக்கொண்டு தானோ நீயும் சொல்லுகிறாய்?" என்றான் மாதவன்.

"நீ உத்தேசித்த அர்த்தமென்ன?"

"'நீ இல்லாமல்' என்று நான் சொன்னதன் அர்த்தம், இரவும் பகலும் சதாகாலமும் உன்னுடன் கூடவே இருப்பதாலுண்டாகும் சந்தோஷமும் பாக்கியமுமில்லாமல் என்பதே" என்றான் மாதவன்.

"வெகு நேரமாய்விட்டது" என்றாள் இந்துலேகை; பனியும் அதிகமாய்ப்பெய்கிறது. மாதவா நீ போய்ப் படுத்துக்கொள். நாளை காலையில் எழுந்ததும் என்னோடு கூட சாப்பிடுவதற்கு வா."

"எனக்குத் தூக்கங்கொள்ளவில்லை" என்றான் மாதவன், "உடம்பும் உள்ளமும் உடைந்தவன் போலிருக்கிறேன்."

"அப்படியானால் கொஞ்சம் மருந்து சாப்பிடுகிறதுதானே. நோயைத் தணிக்கும்படியான நல்ல மருந்தாய்ச் சாப்பிடவேண்டும்" என்றாள் இந்துலேகை.

"எனக்கு அப்படிப்பட்ட ஒரு மருந்து தெரியும்" என்றான் மாதவன், "வைத்திய நூற்பிரமாணப்படி அதை உட்கொள்ளும் முறை மாத்திரம் தெரிந்துகொண்டிருக்கிறேன். முறையைச் சொன்னால் மருந்து கொடுப்பையா?

"ஏதோ அந்த முறையைச்சொல், கேட்கலாம் என்றாள் இந்துலேகை.

(இன்னும் வரும்)

சிறுவர்க்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

விட்டகுறை அல்லது ஜன்மாந்திர ஸம்ஸ்கிருதம்.—ஒரு குருவும் அவர் சிஷ்யன் ஒருவனும் அநேக ஸ்தலங்களுக்குச் சென்று யாத்திரை செய்துகொண்டு வருகையில் வழியில் குருவுக்கு ஒரு பெரிய வியாதி கண்டது. இதனுடன் அவர் கஷ்டப்பட்டுக்கொண்டு சிஷ்யனால் ஸஹாயம் செய்யப்பட்டு வந்துகொண்டிருக்கையில் ஓர் பறச்சேரியண்டை இருவரும் வரும்படிநேர்ந்தது. அப்பொழுது குருவுக்கு தாகம் அதிகரிக்கத் தமது சிஷ்யனை அவர் தண்ணீர்கொண்டுவரும்படி ஏவினார். அவன் எங்குஞ் சுற்றிப்பார்த்தும் தண்ணீர்கொடுக்கத் தகுந்தவர் ஒருவரும் இல்லாதது கண்டு குருவிடம்வந்து ஸங்கதியைச் சொல்ல, அதற்கு அவர் 'நாம் இப்பொழுது எங்கேவந்து சேர்ந்திருக்கிறோம்? என்று கேட்டார். அதற்கு சிஷ்யன் இது ஒரு பறச்சேரி. அதனால்தான் நமக்குத் தண்ணீர் கொடுக்கத் தகுந்தவர் இங்கு ஒருவரும் இல்லை' என்று சொல்ல, குரு 'அப்பா! நானோ வியாதியால் வருந்துகிறேன். எனக்கோ மரணதாகம்போல கொடியதாகம் வந்திருக்கிறது. பறையரிடமிருந்தாவது தண்ணீர் வாங்கிவா' என்று மிகுந்த தாழ்ந்தகுரலில் கேட்டார். உடனே சிஷ்யன் ஓடோடியும் போய்த் தண்ணீர் வாங்கிவருவதற்குள் குரு தேகத்தை நழுவவிட்டார். சிஷ்யனுக்கு அடங்கா துக்கம் வந்துவிட்டது. 'நாம் எவ்வளவு ஞானம்படித்து என்னபயன்? ஆபத்காலத்தில் முதலிலேயே பறையரிடமிருந்து தண்ணீர் வாங்கிவாராமல் போனோமே? இந்த புத்திஹீனத்திற்காக நமது அருமையான குருவை இழக்கும்படி நேர்ந்ததே!' என்று சிஷ்யன் மனம் உருகி உருகி, முடிவில் மனம் உடைந்து இறந்தான். குரு பறையரிடமிருந்தாவது நமக்குத் தண்ணீர்வாராதா? என்று பறச்சேரி ஞாபகத்தோடும், சிஷ்யன் சிறந்த குருபக்தி உருக்கத்தோடும் இறந்ததனால்,

எப்பொருளைச் சிந்திப்பான்
இவ்வுடல் விட்டேகும்போ
தப்பொருளே யேயொருவன்
ஆர்ந்திடுவான்—பொற்பினவன்
எப்பொழுதும் சிந்தித்
திருந்திடலால் அந்நினைப்பைச்
செப்பியவிவ் வுண்மையினைத் தேர்.

என்ற கீதாவாக்கியத்தின்படி குருவுக்கு பறையன் ஜன்மமும், சிஷ்யனுக்கு அந்த ராஜ்யத்து அரசன் ஜன்மமும் கிடைத்தன.

குரு பறையனாக பிறந்தபோதிலும் விட்டகுறையால் முன்ஜன்மமுடிவில் ஏற்பட்ட எண்ணவிசேஷத்தால் தாழ்ந்த ஜன்மம் வந்தது என்ற ஞாபகம் அவருக்கு நன்றாக இருந்தது. ஆதலால் பிறந்தது முதல் குழந்தைவாயைத்திறந்து சப்தம் போடாமலே இருந்துவிட்டது. வயதாயும் அந்தச்சிறுவன் மற்றையச் சிறுவர்களோடு விளையாடுவதும் இல்லை. தனது வாயைத் திறப்பதுமில்லை. ஆதலால் அவனை எல்லோரும் ஊமை என்றும் மக்கு என்றும் எண்ணிவிட்டனர். அச்சிறுவனோ பூர்வஜன்ம ஞாபகத்தால், அதிகமாகப் பழகி பறையரோடு கலந்து கடவுளை மறந்து தத்தளித்து மறுபடியும் ஜன்மத்திற்கு ஆளாகாதிருக்கவேண்டுமே என்று பயந்து அவ்வாறிருந்துகொண்டு பகவத்யானம் செய்துகொண்டிருந்தான். இந்த ரகஸ்யத்தை மற்றையவர்களால் எவ்வாறு அறியமுடியும்? அரசன் குழந்தையாகப் பிறந்த சிறுவனும் பூர்வஜன்ம ஞாபகத்தால், 'நாம் செய்த குருபக்தி விசேஷத்தால் அல்லவோ நமக்கு இந்தச் சிறந்த பதவி கிடைத்தது. இதைக்கொண்டே நாம் ஏமாறாது பகவத்கிருபையைப் பூர்ணமாகப் பெற முயலவேண்டும். நமது குரு எங்கு வந்து பிறந்திருக்கிறாரோ? எப்படியாவது நம்மை அவர் வந்து காப்பாற்றுவார்' என்ற எண்ணங்களோடு மிகுந்த சிஷ்டனாகவும், ஸதாசாரத்தோடு கூடினவனாகவும் சுத்த மனதுடையவனாகவும், அவன் தன் காலத்தை புத்தி தெரிந்ததுமுதல் கழித்து வருவானாயினன்.

இப்படி இருக்கையில் காலக்கிரமத்தில் இந்தப் பிள்ளைக்குப் பட்டம் வர அவனே அந்த ஊர் அரசன் ஆனான். அப்பொழுது தன் ஊர் பறச்சேரியில் ஒரு பறையன் பிறந்தது முதல் மக்காகவும், ஊமையாகவும் இருக்கிறான் என்று அவன் கேள்விப்பட்டான். உடனே அவன் மனம் சற்று இளகியது. ஏன் இந்த ஸங்கதி கேட்டதும் தன் மனம் உருகியது என்று மாத்திரம் அவனுக்கு விளங்கவில்லை. அந்த மக்கின் தகப்பன் தினம் நடு இரவில் பறையறைந்துகொண்டு ஊராரை ஜாக்ரதைப்படுத்துபவன் என்றும் தெரியவந்தது. அதுமுதல் அரசன் தன் மனைவியோடு மேல் உப்பரிகையில் இரவில் பறையன் வந்து போமளவும் இருந்துவிட்டு படுத்துக்கொள்ளப் போவது என்று தீர்மானித்துவிட்டான்.

ஒருவேளை அந்த மக்கு ஓர் இரவு வந்தாலும் வருவான். அப்பொழுது அவன் வாயிலிருந்து வரும் சொல் என்னமாக இருக்கும் என்று பார்க்கவேண்டும்' என்ற ஆவலினாலே இவ்வாறு அரசன் செய்தான். அரசன் மேல் உப்பரிகையில் தன்மனைவியோடிருந்தபோதிலும்,

"எத்தொழிலைச்செய்தாலும் ஏதவத்தைப்பட்டாலும்
முத்தர்மன மிருக்கும் மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளையாடியிரு கைவீசிவந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்."

என்ற பட்டினத்து அடிகள் வாக்கின்படி அரசன் மனம் விட்டகுறையின் விசேஷத்தால் நிஷ்டையையே மேவிநின்றது.

இவ்வாறு கொஞ்சநாள் நடந்துவருகையில் ஒருநாள் லோகந்துசுற்றும் பறையனுக்கு தாபஜ்வரம் கண்டது. அன்று ஸாயங்காலம் தன் தொழிலைத் தன்னால் செய்ய அன்று முடியாமற் போய்விட்டதே என்றதுக்கம் அவனுக்கு வந்தது. அப்பொழுது தன் எதிரே ஊமையாகிய மக்கைக் கண்டதும் 'நமக்குப் பிள்ளை இருந்து என்ன பிரயோசனம்? இந்த ஸமயத்தில் அவனால் என்னவேலையைச் செய்யமுடியும்? இந்தப்பிள்ளை இருப்பதும் ஒன்றுதான், இவன் போனாலும் ஒன்றுதான்' என்று வாய்விட்டுக் கூவித் துக்கிக்கலானான். ஒருநாளும் அசையாது ஊமையாகவிருந்த அந்த மக்கு, தினம் தகப்பன் செய்வதைப் பார்த்திருந்தபடியால் அங்கு ஆணியில் இருந்த பறையை கழுத்தில் எடுத்துமாட்டிக்கொண்டு ஒன்றும்பேசாது, அடிக்கும் கோல்களை எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிவிட்டான். இதைக்கண்டதும் ஜ்வரத்தில் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த தகப்பனுக்கு மிகுந்த திருப்தி உண்டாகி விட்டது.

மக்கு, மஹாஞானியாதலால் முதலில்கோயில் ஸந்நிதிசென்று, பகவானைத் தெரிசித்துவிட்டு கீழ வீதியில் பறையடித்துக்கொண்டு நடுநிசியில் புறப்பட்டான். சற்றுநேரம் அடித்துவிட்டு,

சனித்தலுந் துக்கம் சரையுறலுந் துக்கம்
மனைக்கிழத்தியுந்துக்க மாறு—தனர்த்தமிகு
* சஞ்சார சாகரமுந் துக்கமா மாதலினால்
துஞ்சாதீர் துஞ்சாதீர் சோர்ந்து

என்று உறக்கக்கூவி ஜனங்களை எச்சரிக்கை செய்தான்.

இந்த விஷயத்தைக் கேட்க வேண்டும் என்றே உப்பரிகையில் கொஞ்சநாளாக வாஸம்செய்து வந்த அரசன் காதில் இதுபட்டதும் அவன் மனம் உருகியது. உடனே அவன் ஓர் ஆளை, கீழ்வீதியில் அவன் திரும்பி வருகையில், அவனை அரண்மனைவாயிலில் அழைத்துவரும்படி கட்டளையிட்டு அனுப்பிவிட்டான்.

தெற்குவீதிசென்ற மக்கு கொஞ்சநாழிகை பறையை அறைந்துவிட்டு

பேராசை யாற் * பார் பிணிக்கப்படுகிறது
ஏரார் தொழிலாலு மெண்ணாலுஞ்—சோர்வாகி
ஓங்காயு ளின்குறைவை ஓர்வதில்லை யாதலினால்
தூங்காதீர் தூங்காதீர் சோர்ந்து

என்று எச்சரிக்கை செய்தான். அப்பால் மேற்குவீதிசென்று

காமன் குரோதன கடுலோப னென்கின்ற
நாமத் திருடர்பலர் ஞானமணி—தாமுங்
கொழித்துக் கவர வுடலுற்றார் இன்னே
விழிக்க விழிக்க விரைந்து

என்று கூவிவிட்டு தெற்குவீதி வந்தான். அங்கு மிகுந்த ஆவேசத்துடன்

தாயில்லை தந்தையில்லை சார்சோ தாரில்லை
ஏய கிளைஞர்கள் யாருமில்லை—நேயங்
கெழுமு பொருளில்லை கிருகமில்லை யென்றோர்ந்து
ஒழிமின் ஒழிமின் உறக்கு

என்று எச்சரிக்கை செய்துவிட்டு கீழ்வீதி வருகையில் பரவசமாகித் தாண்டவமாடிக்கொண்டும்

தந்தை கடவுளே தாயவன் வல்லமையே
அந்தமிலாச் சுற்றம் அவனடியார்—சொந்த
இடமாகு மூவுலகு மென்றுமகிழ்வுற்று
மடமாவதற்று நெஞ்சே வாழ்

என்று பாடிக்கொண்டும் மெய்ம்மறந்துவந்தான். அங்கு தயாராக இருந்த ஆள் அரசன் உத்திரவைக் கூறி அவனை அரண்மனைவாயில் கொண்டுவந்துவிட்டான.

அரசன் மிகுந்த பரபரப்புடன் ஓடோடியும்வந்து பார்த்தான். அவர்கள் கண்கள் கலந்துவிட்டன. 'பிரிந்தவர் கூடினால் பேசலும்வேண்டுமோ? மெய்ம்மறந்து அடியற்ற தண்டம்போல மக்கின்பாதத்தில் அரசன் வீழ்ந்தான்.

இருவருமாக போனவிடம் இன்னது என்று தெரியாமலே போய்விட்டனர். இருவரும் சேர்ந்து, பகவானிடம் நிஷ்டையிலிருந்து விட்டகுறை, வந்து தொட்டுக்கொள்ள அந்தஜன்மத்திலேயே முத்திப்பேற்றை அடைந்தனர் என்று நாம் சொல்லவும் வேண்டுமா?

ஓம் தத்ஸத்

* சஞ்சாரம்—ஸம்ஸாரம்.

* பார்—உலகம்.

அஞ்ஞானம் மூடிக்கொள்ளும் விதம்.—ஓர் ஊரில் கிழவி ஒருவள் தோசைவார்த்து விற்றுப் பிழைத்துக் கொண்டுவந்தாள். அவள் தினம் ஒழுங்காக ஸூர்ய உதயத்திற்கு இரண்டு நாழிகைக்கு முன் எழுந்து தனது தொழிலைத் தொடங்குவது வழக்கம். அவளிடம் ஓர் கோழி ஒன்றிருந்தது. அது தினம் தவறாமல் உதயத்திற்கு இரண்டு நாழிகைக்கு முன் கூவி அவளை எழுப்புவது வழக்கம். கோழி திரம் கூவப் பின் பொழுது விடிந்து வருவதைக் கண்ணுற்று வந்த அவளுக்கு காலக்கிரமத்தில் தன்கோழி கூவாவிட்டால் பொழுதுவிடியாது என்றநம்பிக்கைவந்து விட்டது. இப்படியிருக்கையில் அந்த ஊரில் சில சிறுவர்கள் இந்தக்கிழவியை பரிஹாஸம்பண்ணிகோபம் மூட்டிவிட்டனர். கிழவிக்குதேகம்தெரியாதுகோபம் வந்ததும், 'பார் இந்தப் பயல்களுக்குசொல்லுகிறேன் வழி! என் சக்தி இவ்வளவு என்று இவர்களுக்குக்காட்டிவிடுகிறேன்! நான் என்கோழியைக்கொண்டு அடுத்த கிராமம் போய்விடுகிறேன்! இங்கு எப்படிப் பொழுது விடியும் பார்ப்போம்? இந்தப் பயல்கள் விடியா இரவில் அழுந்திவருந்தட்டும்!' என்று முறுமுறுத்துக்கொண்டு, அன்றிரவே அடுத்த கிராமம் போய்விட்டாள். மறுநாள் சிலர் முதல் கிராமத்திலிருந்து இரண்டாம் கிராமத்திற்கு வர, தோசை விற்கும் கிழவி அவர்களை நோக்கி, 'என்னை நீங்கள் கோபம் மூட்டாது வைத்துக்கொண்டிருந்தீர்களாகில், இந்தக் கஷ்டம் உங்களுக்கு வந்திராதே! ஐயோ, பாவம்! உங்களைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது! நீங்கள் விடியா இரவில் அகப்பட்டுக்கொண்டீர்களே!' என்றாள். அவர்களுக்குவிஷயம் ஒன்றும் விளங்காது போக விழித்தார்கள். அப்பொழுது இவள் தன் கதையை ஆதியோடந்தமாகச் சொல்லி, 'நான் என்னுடைய கோழியைக்கொண்டு இங்கு வந்துவிட்டேன். ஆகையால் அங்கு எப்படிப் பொழுதுவிடிந்திருக்கும்?' என்று மிகுந்த கம்பீரமாகக் கேட்டாள். இந்தக் கிழவியினது மூடத்தனத்தையும், கர்வத்தையும், அகங்காரத்தையும் கண்டு வந்தவர்கள் சிரித்த சிரிப்புக்கு அளவே இல்லை. இதேமாதிரி தான் நாமும் அகங்காரம் கர்வம் முதலியவற்றிற்கு ஆளாவது. நாம் உபகாரம் செய்யும் குணமுள்ளவர்களாயின், நாம் இல்லாவிடில் ஏழைகள் பிழைக்கமாட்டார்கள் என்ற கர்வம் நம்மை அறியாது நம்மை மூடிக்கொள்ளும். நாம் ஏமாந்து இருந்துவிட்டோமாகில், நம்மை நன்றாக அது கீழ்ப்படுத்திவிட தோசைக்காரியின் மூட நிலைக்குக் கொண்டுவந்து விட்டுவிடும். இந்த ஸமயங்களில் 'கிருஷ்ண பரமாத்மா முதலிய பகவத் அவதாரங்கள்கூட உலகைவிட்டுப்போன பின்பும் உலகம் முன்போலவே நடந்துவரவில்லையா? இப்படி இருக்க நாம் எந்தமூலை'? என்றிப்படிமனனம் அடிக்கடிசெய்தால் தோசைக்கிழவி யாகிவிடாமல் நாம் புத்தியோடு கடைத்தேறலாம்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ஸீதை அல்லது தர்மத்தின் ஸ்வபாவம்

3. உலகிற்குழைத்தகாதை.

பிறர் துக்கப்படும்பொழுது அவர்க்கு நம்மால்உதவிசெய்யமுடியாதென்பது உயர்ந்தகுண மன்று. தம்மால் அவர்க்குதவிசெய்ய வலிமை இல்லைஎன்பது, தமக்கொருவர்க்கு உதவிசெய்ய மனமில்லை என்பதைக் காட்டுகிறது. அன்பானது தன்னுடலிலும் மனதிலும் ஊறுமாயின் தனக்கும் தெரியாது வலிமை பெருகி பிறர்க்குதவிசெய்யத் தூண்டும். இது அன்பின் ஸ்வபாவம். இவ்வகையான எண்ணத்தோடு தான் சடாயுவென்னும் கழுகாசன் இராவணனை எதிர்க்கவந்தான். ராமா, ராமா வென்றொலித்த காற்றனது இவரதுகாதில் விழுந்ததும் துயருற்றாள் ஸீதை என்று அவர்க்குத் தெரிந்தது. இதற்குள் வாடியமுகத்தோடு ஸீதையும், அகந்தைமலர்ந்த முகத்தொடு இராவணனும் அவர் எதிரில் வந்துவிட்டார்கள். படபடத்தமனத்தொடு தன் எளிய இறகுடைய உடலொடு இராவணனை எதிர்த்து மாரியாக அம்புகளை எவினார். இராவணனது கொடுங்கணையால்குறையுயிரும் குற்றுயிருமாக விழுந்திருந்தார் சடாயுவென்னும் அன்பிற் குயிரீன வந்தோன்.

தனது கணவனது மொழிகளை கேளாது கொடியோன் மொழியைக் காதாரக்கேட்பது, கொடியாரதுகையுளிருத்தல்,இன்னனசெய்யவேண்டுமென்று அறியாப்பேதமையோடு விளங்கல், ஆகிய இவ்வகையான துயருள்பட்டு வாடியவட்கு புண்ணியமூர்த்திபோல் வந்த சடாயுவும் குறையுயிரும் குற்றுயிருமாக விழுந்தது எவ்வாறு இருக்கும்? கொடியார் கைக்குள் சிக்கும்பிராணி, அச்சிக்கலை வாங்கத்தெரியாதெவ்விதமலையும்? இதனுடன் தன் கணவனை அறியாது தனக்குவந்த கதி ஸீதையை துன்பப்படுத்தாதா? தன்னை எவ்வாறு இராமன் எண்ணுவான் என்று அவளுக்குப்படும்? வேண்டாமென்ற சொல்லிய லக்ஷ்மணன் மொழியைக்கேட்காததாலிவ்வாறு முடிந்ததோ? லக்ஷ்மணன் என்னென்னவென்று இராமனிடம் சொல்லினானோ? அவனும் நமக்கு பகைவனாகி விடுவானோ? என்ற இவ்வெண்ணங்களும் ஸீதைமனதைக் குடைந்திருக்குமல்லவா? தன் நடத்தையைப்பற்றி என்ன இராமன் எண்ணிக்கொள்வானோ என்ற ஸந்தேஹமும் அவளுக்குண்டாகிவிட்டது அதுவுமல்லமாமல் ஸ்திரீகளது ஸ்வபாவமும் ஒருவரைச்சார்ந்து இருத்தலாகையால், அச்சேர்க்கை எங்கு நெகிழ்ந்துவிடுமோ என்ற எண்ணமு மிவை எல்லாம் கலந்து அவள் மனதைக் கலக்கிவிட்டன.

"யான் ஓர் அணுவேனும் என் கணவனுக்கு தவறுதிருந்ததுமல்லாமல், இப்பொழுதும் என் கணவனே என்னுயிராக இருக்குமாயின்இக்கழுகு என்நாதனைக்காணுமட்டு உயிர் நீங்காது என்துயரமும் யானிருக்குமிடமும் கூறும்படி உயிரிருக்குமாக" என்று சொல்லிக்கொண்டு ஒன்றும்தெரியாது மயங்கினாள். இதற்குள் அவள் மனம் பதைபதைத்தது. "யான் ஸத்யவாதியாயின் என்ன? அன்றி நன்னடத்தையளாயினுமென்ன? நம்முடைய கஷ்டகால ஸம்பவத்தில்,எல்லாம் கெடுதியாக முடியினும் முடியும்.எதுவேனு எப்படியாயினு முடியட்டும். "சிறைகாக்கும் காப்பெவன் செய்யு மகளிர், நிறைகாக்கும் காப்பே தலை" என்றவிதம் என் மனத்தைக் காக்கவேண்டும். அதுவுமன்றி என் தலைவனை அடையும் விதத்தையும் செய்யவேண்டும். ஸ்திரீகளது கற்பை யழிக்கவேண்டுமென்ற இந்த துராத்மாபோல்வார் யாவரையுமழிக்க யானே காரணமாகவேண்டும். எதுவும் என் தலைவன் ஆஞ்ஞை இன்றி செய்யமுடியாது. அதை அவரே செய்யட்டும். நமக்குக் கஷ்டம்தான். நாம் படவேண்டியதுதான். நன்மைக்குழைத்தால் கேடுவராது" என்னும் எண்ணங்கள் அவள் மனத்தில் உதித்திருக்கலாம் என்று தோன்றுகிறது. தன் கணவன் தன்னை நாடிவரவேண்டுமென்பது தான் அவள் முதல் வேலை. "சடாயுவை அவர் கண்டாலும் காணலாம்,காணாது இருந்தாலும் இருக்கலாம். ஆனதால் இராமரை என்னிடம் வரும்படிச் செய்ய வேறு ஏதேனுங் கூட உபாயம் செய்யவேண்டும். யானிவ்வரக்கனோடு போகும்போது, இந்நகைகள் எனக்கேன்? அதைக்கண்டானந்த மடையும் கண்கள் காணாது இருக்க மற்றக்கண்கள் இவைகளை பார்ப்பது ஏன்? இவைகளை எடுப்பேன். ஓர் கிழியிலடக்கம் செய்து கீழ் எறிந்து விடுவேன். என் நாதன் அவற்றை ஒருவேளைக் கண்டால் நாமிருக்கும் நிலைமை அவர்க்குப்படும். அன்றியும் அவர் நம்மைக்காணாவிடில் இவை தாம் நமக்கேன்" என்று எண்ணிக்கொண்டு தன் சீலையில் ஒரு பாகங் கிழித்து அக்கிழியில் தன் நகைகளை எல்லாம் முடிந்து எறிந்து விட்டாள்.

இலங்கையும் நெருங்கிவிட்டது ஸீதையைத் தன் அரண்மனையில் வைத்து தன் செல்வப்பெருக்காலடக்கி விடலாமென்பது இராவணனது கவலை. அவன் செல்வமெல்லாம் அவளுக்குத் த்ரணமாகப்பட்டது. அவளை பயமுறுத்தி வழிக்குக்கொண்டுவரவேண்டுமென்று எண்ணங்கொண்டு ஸீதையை அசோகவனமென்னும் தோட்டத்திலிருத்தி ராக்ஷஸிகளை, அவளைக் காத்து தன் வழிக்குக் கொண்டு வரும்படியாய் செய்யவேண்டுமென்று ஆஞ்ஞாபித்தான். அவனுடைய வழிகளெல்லாம் ஸீதைகொண்ட மனநிலைமையைத் தடுக்கவில்லை. ராமநாமஸ்மரணை என்கிற மந்திரத்தைக்கொண்டு பலநாளும் வருந்தி கடவுளது அனுக்கிரஹம், என்று வருமோ என்று கவலைகொண்டு, தூக்கமில்லா இரவுகளைக் கழித்து வந்தாள் கடைசியில் அவளுக்கும் தெரியாமல் ஓர் மயக்கமுண்டானது போல் ஆகியது. எதிரில் ஓர் ஸுந்திர புருஷன் தோன்றினாற்போல அவளுக்குப் பட்டது. "யான் இந்திரன் நீர் பயப்படவேண்டாம், தேவானுக்கிரஹமுமக்கிருக்கின்றது. நீர் பயப்படவேண்டாம். இப்பாயஸம் அருந்தும் உம்முடைய கஷ்டத்தால் ஜனங்களுக்கு ஸுகமுண்டாகும். இப்பாயஸம் பசி பிணி நித்திரை முதலியவின்றி என்றும் ஸுகமுண்டாக்கி வலிமையூட்டும், உமது விரதத்தைக்காக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டு, ஸீதைஅப்பாயஸ மருந்தியதும் மறைந்தது ஓர் உருவம்.

ஸீதைக்கு ஒரு நம்பிக்கை உண்டாகிவிட்டது. தான் எண்ணிய எண்ணமே நிஸ்சயமாகப் பட்டதாகப்பட்டுவிட்டது. தான் உலகிற்கு கஷ்டப்படவேண்டும் என்றும் அவளுக்குப்பட்டது. தன்னினத்தாரது கஷ்டத்தைப்போக்க, தான் கஷ்டப்பட நிஸ்சயம் செய்துகொண்டாள். ஆனால் நிஸ்சயம் செய்துக்கொண்டவரை கடவுள் பரிக்ஷைசெய்வது வழக்கம்தான். அதுபோலவே இராவணனும் ஸீதை அருகுவந்து தன்னைச்சேரவேண்டுமென்று வாயொடுங்காது கேட்டதும், அவள் விழித்த விழியொன்றே அவனை அகலச்செய்தது. இராக்ஷஸிகள் ஸீதையை வருத்தியது கொஞ்சமல்ல. அவ்வளவையும் பொறுத்தாள். அவர்செய்யும் இராமதூஷணமொன்றே ஸீதையின் மனத்தைக் குடைந்து விட்டது.

"ஸதா அவர்செய்யும் க்ரூரஹிம்ஸையையும் பொறுத்தேன். கொடியன் சொல்லுமொழியையும் பொறுத்தேன். என் தலைவன் என்னை நாடி வராமலிரார் என்று உயிரையும் வைத்துநிற்கிறேன். அவர் எண்ணமென்னமாகியதோ தெரியவில்லை. எனக்கு நம்பிக்கைமாத்திரம் எனக்கும் தெரியாமலிருக்கிறது. எம்பெருமானது வில்லுடைய மஹிமையைக் குறைக்கக்கூடாதென்னு மெண்ணங் குடிகொண்டு பொறுமையுடனிற்கிறேன். ஓர் வாய்மொழி ஒன்றேபோதும், இராவணன் மண்ணாய் விடுவான். அவர் பெருமை குறையக்கூடாதென்று பார்க்கின்றேன். அவர்க்கு நம்மிடத் தன்பில்லைபோலும். நான் இருக்கும் இடம் அன்னிய தேசம்—நம் நாதனது பகைவன் வீடு—பழிக்கும் இடம். இங்குவந்தும்,அவரைக் காணலாமென்னுமாசையால் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கிறேன். ஆனால் அவர்க்கு யான் சௌக்கியமாக பிறரது வீட்டிலேயே இருக்கிறேன் என்று பட்டுவிட்டாற்போல் இருக்கிறது. பிறர் வீடுசென்ற பெண்ணைத் தான் கொள்ளக்கூடாதென்ற எண்ணமிருப்பினு மிருக்கலாம். இனி நாமிருந்தென்ன? இறந்தென்ன? அவரதுபெயர் கெடும்படியாக யான் இங்கு வாழ்வது தகுதியல்ல, இனி என் உயிரை தரிக்கமாட்டேன்" என்று எண்ணிக்கொண்டு, "ஏதோ இன்று அரக்கியரும் தூங்குகிறார்கள்" என்று சொல்லிக்கொண்டு தன்னுயிர்க்கொலை செய்துக்கொள்ள ஓர் மாதவிப் பொதும்பருள் சென்றாள். அங்கு சென்றதும் "அண்டர்நாயகனருள்தூதன் யான்" என்று ஓர் வாக்யம் ஸீதை காதில் வீழ்ந்தது. "யார் அண்டர் நாயகன்" என்னும் ஸந்தேஹம் ஸீதைக்குண்டாகி தலைநிமிர்ந்தாள். "அடைந்தனன் அடியனேன் இராமன் ஆணையால்" என்றுஹனுமார் கூவிக்கொண்டு, ஸீதை பாதாரவிந்தங்களில் நமஸ்கரித்து நின்றார். ஸீதைப் பார்த்ததும் பயந்தாள். அவரை நம்பவில்லை. அவருடைய நடத்தையைக் கண்டு அவரோடு பேசலாமென்றெண்ணினாள். அவரை, இராமர் தூதன் என்று நம்புவதெவ்விதம் என்று கேட்டாள். அவர் இராமவர்ணனை செய்து, அவர் கூறிய சில அடையாள மொழிகளும், அவர் கொடுத்த கணையாழியையும் கொடுத்தார். தன் பேருருவத்தையும் காட்டி அவளுக்கு தைரியமூட்டினார். ஸீதை இராமர்மேல் மஹா நிஷ்டூரம் செய்துவிட்டு என்மேல் இராமருக்கு அன்பென்பதே கிடையாது. வரும் வழியில் கங்கையாற்றங் கரையில் என்னைக் குறித்து அர்ந்தியக்கடனையும் செய்து ஸுகமாக அயோத்தி சென்று வாழச்சொல்லும் என்று சொன்னாள்.

ஹநுமார்க்கு கோபமூண்டுவிட்டது. "நல்ல காரியங்கள் உன்னால் ஆகவேண்டியிருந்தால் நீ கஷ்டப்படுவது அதர்மமோ? உன் கணவனை வைவதால் ஸுகமோ? ஜனஸமூஹத்திற்கு உன்னால் நன்னாள் வருவதாயிருந்தால் நீ கஷ்டப்பட்டுத்தான் தீரவேண்டும்" என்று கண்ணில் தீப்பொறி பறக்கச்சொன்னார்.

ஸீதைக்கு கோபமடங்கிவிட்டது. தான்செய்த அபராதத்தை மன்னிக்கும்படிக் கேட்டுக்கொண்டாள். "இன்னமொருமாதத்திற்குள் என் தலைவனை யான் பார்க்கவேண்டும். அந்த ஆத்திரமே என்னை இவ்வாறு செய்யச்செய்தது.யான் கோபாவேசத்தில் கூறிய மொழிகளை இராமர்பால் சொல்லக்கூடா" தென்றுக் கேட்டுக்கொண்டாள்.

(தொடரும்).

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

இந்தியாவின் பருத்தி யந்திரசாலைகள்.—1882-ம்வருஷத்துச்குப்பிறகு பருத்தி யந்திரசாலைகள் நூற்றுக்கு 366 மடங்கும், மூலதனங்கள் அதிலும் மும்மடங்கும், யந்திர சாலையில் வேலைசெய்பவர்கள் அதிலும் நான்கு மடங்கும் அதிகரித்ததாக கணக்குகளில் தெரிகிறது. நூற்றுக்கு தறிகள் 440 மடங்கும், கதிர்கள் 348 மடங்கும் முன்னிலும் அதிகரித்திருப்பதிலிருந்து நம் தேசத்தில் இத்தொழில் முயற்சி போகும் வழி இத்தகைத்தன்று தெரிய வருவதால் இவ்விஷயம் கவனிக்கத்தக்கது. 1903-ம் வருஷத்தோடன் முடியும் 20 வருஷங்களுக்குள், தறிகள் முன்னிலும் 2,8600 அதிகரித்திருக்க, அதற்கடுத்த ஐந்து வருஷங்களுள், அதாவது 1908-ல் 1903-ம் வருஷத்தைக் காட்டிலும் 23,000 அதிகமாக இருக்கிறது. ஐந்து வருஷங்களுக்குமுன் 113-அறைக்கும் (Spinning) யந்திரசாலைகளும், 4-நெசவு சாலைகளும் இரண்டும் செய்யும் சாலைகள் 84-ம் ஆக இருக்க, 1908-ம் வருஷத்தில் அவைமுறையே, 98-ம், 13-ம், 116-ம் ஆகிவிட்டன.

* * *

1908-ல் உற்பத்தியான பருத்தி.—அமெரிக்காவிலுள்ள ஐக்கிய நாடுகளில் மூட்டைஒன்றுக்கு 500 ராத்தல் பருத்தி அடங்கிய 18,537,306-மூட்டைகள் 1908-௵ உற்பத்தி செய்யப்பட்டதாம். இச்சங்கியை 1907-ம் ௵ உற்பத்தி செய்யப்பட்ட பருத்தியைவிட 2,211,845-மூட்டைகள் அதிகமாம். அதாவது 100-க்கு 19. 4-அதிகம். இவ்வளவு அதிகமாய் உற்பத்தியான வருஷங்களில் இவ்வருஷம் மூன்றாவது. 1904, 1906 வருஷங்களில் இதைவிட அதிகமாயிருந்ததாம். சென்ற ஐந்து வருஷங்களுடைய சராசரி உற்பத்தியைக்காட்டிலும் 10-லக்ஷம் மூட்டைகள் அதிகமாயிருக்கிறது. இவ்வருஷம் எடுக்கப்பட்ட பருத்திக்கொட்டை 5,903,838 டன் இதில் 3,669,747 டன் இயந்திரங்களினால் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் கிரையம் 86,092,583 டாலர். இயந்திரங்களினால் இப்பருத்திக்கொட்டையிலிருந்து செய்யப்பட்ட பொருட்களாவன எண்ணெய் 146,789,880 காலன்கள், புண்ணாக்கு முதலியவை 1,491,752 டன், ஓடு 1,330,283 டன்,

* * *

கொப்பரை.—[illegible] தேங்காயை இரண்டாய் உடைத்து வெயிலிலாவது, அல்லது வேறு சூட்டினாலாவது காயவைத்துக் கொப்பரைசெய்யப்படுகிறது. இவ்விதமாய்த் தேங்காயிலிருக்கும் நீரை எடுத்தவுடன் கொப்பரையை ஓட்டிலிருந்து லகுவாய் எடுத்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால் இவ்விதம் காயவைக்கும்பொழுது சில பூச்சிகள் அந்த மிருதுவாயிருக்கும் தேங்காயிற்குள் புகுந்துவிடுகிறது. இதனால் கொப்பரைகள் பெட்டிகளில் அடைக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுவதனால் வெளிதேசங்களில் இறக்கும்பொழுது ஓர் கெட்ட நாற்றம் கொடுப்பதுடன், ஒருவிதமாக பூச்சு கொப்பரைமேல் பூசப்பட்டுமிருக்கிறது. இவ்விதமான கொப்பரை ஆட்டி எண்ணெய் எடுத்தவுடன் இவ்வெண்ணெயை நன்றாய் சுத்தம் பண்ண வேண்டியிருக்கிறது. பாரிஸ் நகரத்திலிருக்கும் மிஸ்டர் டையோஸ்கி என்பவர் இக்கொப்பரை இவ்விதம் கெட்டுவிடாமல் கார்க்க யுக்தி கண்டு பிடிக்க வெகுகாலம் பரீட்சை செய்து கடைசியில் ஓர் வழி கண்டுபிடித்திருக்கின்றாராம். அதாவதெனில் கொப்பரையை காயவைக்கும்பொழுது சில இயந்திரங்களினால் கந்தகத் திராவகத்திலிருந்து ஓர் ஆவி உண்டுபண்ணப்பட்டு இந்த ஆவியை குழாய்கள் வழியாய் காயவைத்திருக்கும் கொப்பரைமேல் பரவும்படிச் செய்யப்படுகிறது. இவ்விதம் காயவைக்கப்பட்ட கொப்பரை நிரம்ப நாள்வரையில் கெடாமலும் பின்பு இவைகளிலிருந்துஎடுக்கப்படும்எண்ணெய்யை சுத்தஞ்செய்யவேண்டிய அவசியமில்லாமலுமிருக்கிறதாம். இவ்விதம் கார்க்கப்படாத கொப்பரைகள் கொஞ்ச நாட்களுள் கெட்டுவிடுவதுமன்றி எண்ணெய் வெகு அசுத்தமாய் விடுகிறதாம். கொப்பரைவியாபாரத்துக்கு இது ஓர் நன்மையாயிருப்பதால் இதை கொப்பரை வியாபாரிகள் உபயோகப்படுத்துவார்களென்பதற்கு ஸந்தேகமில்லை.

* * *

இவ்வுலகத்திலுள்ள பருத்தியுற்பத்தி.—இவ்வுலகத்திலுள்ள பருத்தியுற்பத்தி 1906 வருஷமாகிற ஒருவருஷத்தில் மொத்தக்கணக்கில் 19,900,000 மூட்டைகளாகின்றது. இதில் ஐக்கியமாகாணம் 13,000,000-ம், பிரிடிஷ் இந்தியா 3,700,000-ம், ஈஜிப்ட் 1,400,000-ம், மற்ற எல்லா தேசங்களுமாய் 1,800,000-ம் கொடுக்கின்றன. 1907 வருஷம் ஜெர்மெனி தேசத்திலிறக்குமதி செய்யப்பட்டதில் 100-க்கு 68-1 ஐக்கியமாகாணத்திலிருந்து வந்ததாம்.

* * *

தென்னைமரம்.—ஒவ்வொரு பாகமும் எவ்விதமாயாவது உபயோகமாகிறது. அடி மரமானது, கால்களுக்கும், வேலிகளுக்கும், வீடுகட்டுவதற்கும்; இலைகள் (ஓலைகள்)வீட்டுக்குக் கூரைபோடுவதற்கும், சிலவிடங்களில் சாப்பாடுவைத்துக்கொண்டு சாப்பிடுவதற்கும், குதிரை ஆடு மாடுகளுக்கு படுக்கை விரிப்பதற்கும்; மட்டையான நார்கள் வாயிலில் கால் தேய்த்துக்கொள்ள இடும்பாய்களுக்கும், உரப்பான துணிகளுக்கும், உபயோகப்படுகின்றன. இளநீர் ஒரு சுகந்தருகிற பானமாயுபயோகப்படுகிறது. காயப்போடப்பட்ட கொப்பரை வியாபாரத்துக்குபயோகமாகிறது. இக்கொப்பரையிலிருந்து எடுக்கப்படு மெண்ணெய் உணவு பாகத்துக்கும், சவர்க்காரத்துக்கு முபயோகமானது. தென்னமரத்திலிருந்து எடுக்கப்படும் கள்ளை நுரைக்கவைத்து தெளியவைத்தால் 'அரக்கு' என்று சொல்லப்படும் சாராயமாயுபயோகப்படுகிறது.

ஆரியசகோதரிகள் சங்கம்.-இச்சங்கம்என்று பெங்களூரில் 1908௵ மே௴ 28உ ஸ்தாபிக்கப்பட்டது.

ஆதியும் பகவனுமிருவருக்குப் பிறந்த மூவிரண்டொரு மக்களுள் உப்பை என்னும் அம்மை தனது குழவிப் பருவத்தில் ஈச்வரன் திருவருளால்,

"அத்திமுத லெறும்பீ றானவுயிர்த் தனைக்கும்
சித்தமகிழ்ந் தளிக்குந் தேசிகன் —முற்றவே
கற்பித்தான் போனானோ காக்கக் கடனிலையோ
அற்பனோ வன்னா யரன்"

என்றுசொல்லிய திருப்பாட்டின்படிக்குஸர்வ சங்கல்பங்களையும் பகவானுக்குச் சமர்ப்பித்து, இவ்வூரிலுள்ள பல மங்கைகளுள், தயாசிந்திதர்களாயுள்ள சிலர் அன்பார்ந்த ஒற்றுமை யூக்கத்துடன், தங்கள் தங்கள் அறிவு என்னும் விதைகளைப் பயிர்செய்ய சங்கமெனுமோரிடங்குறித்து அதில் சென்ற ஒரு வருடமாகப் பிரசங்கமெனும் மழையினுதவியினால் உழவு செய்துவந்த விவரங்களனைத்து மியாவருக்குந் தெருவிக்குமாறு சென்ற புதன்கிழமை(1-9-09) இராயபஹதூர் ஆற்காடு நாராயணசாமி முதலியார் ஹைஸ்கூல்ஹாலில் முதல் வருடோற்சவங் கொண்டாடிய காலத்து மைசூர் ஸமஸ்தானம் சீப் இஞ்சினீயர் பிரம்ம ஸ்ரீ - Y. ஸ்ரீனிவாசராவ் அவர்கள் தருமபத்னியாகிய மாது ஸ்ரீ கமலாபாய் அம்மாள் அவர்கள் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்து காரியங்களை நடத்தியபடி பகர்வாம்.—

சிறுமிகளைப் பார்த்துத் தோத்திரம் சொல்லும்படி அக்கிராசனாதிபதி விரும்ப,—

"பனைக்கை மும்மத வேழ முரித்தவ
னினைப் பவர்மனங் கோயிலாக் கொண்டவ
னனைத்து வேடமா மம்பலக் கூத்தனைத்
தினைத் தனைப்பொழுதும் மறந் துய்வனோ."

என்ற அதியற்புத தேவாரம், சுந்தரலிங்க செட்டியார் செல்வக்குமரி ஷண்பகவல்லி அம்மாள் உருக்கமாயும் இனிமையாயும் சபை முழுமையும் தம்பிக்குமாறு பாடி யமர்ந்தபின்பு, இராய்பஹதூர்- கேசரி-ஐ- யிண்டு- ஆ. மெய்கண்ட தேவ முதலியார் அவர்களின் அருமைப்புதல்வி பத்மாட்சி அம்மாளும், அவள் தோழி, தி. பெ. கோதண்டராம முதலியார் மனமகிழ் குழவி, தங்காபாயம்மாளும் ஒருமித்து, அலங்கிருதமா யிருந்த நந்தவன மேடையின் மீது தோன்றி, காலத்தை வீணே கழிப்பது ஈசன் அங்கீகரிக்காத விஷயமென்று சிறுமிகளுக்குகந்த சம்பாஷணை மூலமாய் தர்க்கித்துக்கொண்டிருந்த சமயம் ஷை ஷண்பகவல்லி அம்மாளும் சேர்ந்து அச்சித்தாந்தத்தை மூவரும் பேசி பலநூல் மேற்கோள் பாமாலைகளால் சபை ரமிக்கப்பாடியும் பாஷித்தும் தங்கள் மற்றொரு தோழி வி. சே. ஆறுமுக முதலியாரின் புறு மகள் பொன்னம்பிகை அம்மாள் காரைக்கால் அம்மையார் புராணப் பொழிப்புரை யன்புடன் ஒப்பித்தும், இத்யாதி குணங்களுற்பவிக்குஞ் சங்கத்தாபித மத்யாவசியகமெனத் தீர்மானித்துத் திருஅங்கமாலையோதி யேகியதும், மந்திரத்திற் சிறந்தது பஞ்சாட்சரம் ஆதலால் அதனை ஜெபிக்கும் முறையும், ஜெபித்தபின்பு உண்டாகும் அன்பும், அவ்வன்பின் தெளிவால் ததும்பிய பக்தியை விதைத்து சந்தோஷமாகிய நீரைப் பாய்ச்சுகின்ற சிவனடியார்களுக்கு ஆனந்த வடிவான கடவுளருள்வது உண்மையென்னுங் கருத்தடங்கிய பெரிய புராணம் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய "பெருமிழலைக் குறும்ப நாயனார்" திவ்ய சரிதையை மேற்சொன்ன அம்சங்கள் ஒவ்வொன்றிற்கும் பொருந்துமாறு வெகு சாமர்த்தியமாயும், சமயோசித உவமான உவமேய காவியங்கள் அத்தாட்சி ரூபகமாயும், கமிசேரியாட் எஜண்டு ஏகாம்பர முதலியார் தருமபத்னியாகிய ஏ. ஆண்டாளம்மாள் அவர்கள் பிரசங்கஞ்செய்ததினால் சபையில் கூடியிருந்த யாவற்று சகோதரிகளும் சிரவணனந் தஞ் செய்து பெருமகிழ்ச்சியினால் தமது மதி முகங்கள் மலர்தல் கண்டு, மேற்சொன்ன பாலிகைகள் நால்வருடன் ரெட்டித்து ஆக எண்மர் கூடி ஸ்ரீ நாம ராமாயண பாராயணஞ்செய்து கொண்டு கோலாட்டமாடி திக்கு விஜயஞ் செய்தாற்போல கயிற்றைப் பின்னிய பிறகு "அருளாரமுதே சரணஞ்சரணம்" என்ற கந்தர் சரணப்பத்தும்பாடி, பின்னலைப்பிரித்த குழவிகளின் விளையாட்டயர்ந்ததும் ரவியுஞ் சாய்வான் போலிருந்தமையால் உடனே, இச்சங்கத்து காரியதரிசி ஸ்ரீ மதி-மு. விஜயம்மாள் முதல் வருடத்திய விடயங்கள் அடங்கிய ரிபோர்ட்டு வாசித்து, கூடியிருந்த சுமார் 700 சகோதரிகட்கும் ஒவ்வோர் ரிபோர்ட்டு காபி கொடுத்தார்கள். தாபித்தது முதல் பிரதி சனிக்கிழமைகளில் இந்து பாலிகாபாடசாலையில் சுமார் 50 சகோதரிகள் சேர்ந்து இந்துமதநூலாராய்ச்சியின் பயன் பெறும் ஊக்கத்துடனிருப்பதாக ரிபோர்ட்டினால்தெரியவருவது உண்மையினும் உண்மையென சொல்லத்தகும். ஒவ்வொரு சகோதரிகளும் குறைந்தது நான்கு அணா கொடுத்து வருகிறார்கள். இவாள் பரிபாலித்துவரும் கணக்குச்செம்மையே. இந்தரிபோர்ட்டை சபையார் அங்கீகரித்தவுடன், பிறகுபெங்களூர்பேட்டை ஸ்ரீனிவாசமுந்திரத்து சகோதரிகள் சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமதி-சிங்கம்மாள் அவர்கள் மேற்படி விஷயங்களைதிருப்தியுடன் அநேக திருஷ்டாந்தங்கள் உரைத்து ஆமோதித்தார்கள். அக்கிராசனாதிபதி ஸ்ரீமதி-கமலாபாய் அம்மாள் அவர்களும் அதேவிதம் பல உவமானங்கள் சொல்லி சங்கம் நீடூழி பெருகவேண்டுமென்று கடவுளைத் தியானித்து வருடோற்சவ சம்பவங்களை சரிவர நடத்தினார்கள். சங்கத்து பாலிகைகள் ஒருங்கு கூடி மங்களம் பாட, பலவாத்தியங்கள் முழங்க மஹாதீபாராதனை முதலிய சோடசோபசாரங்கள் சந்நிதானத்தில் நிறைவேறிய பின்பு சபையிலுள்ள சகோதரிகளுக்குரியவாறு விபூதி குங்குமம் புஷ்பம் தாம்பூலம் முதலிய பிரசாதங்கள் கொடுக்கப்பட்டு குதூகலத்துடன் வருடோற்சவ வைபவம் நிறைபெற்றது.

மிகவும் அருமையான தமிழ் நாவல்கள்.

ஆனந்தமடம்: தேசபக்தி புகட்டும் ஓர் அருமையான நாவல்—இந்த நாவலும் ஸ்ரீ பங்கிம் சந்திரசட்டர்ஜி பங்காளி பாஷையில் எழுதியதை ஸ்ரீ மஹேசகுமாரசர்மா அவர்கள் மொழிபெயர்த்தது.		0	8	0
போஜசரித்திரம்—2-ம் பதிப்பு. மனதை கவறக்கூடிய 16-ஆப்டோன் படங்கள் சேர்த்திருக்கிறது. ம-ா-ா-ஸ்ரீ ஹைகோர்ட்டு வக்கீல் T. S. நாராயண சாஸ்திரியார் இயற்றியது—ரொம்பவும் நன்றாய் அச்சிடப்பட்டிருக்கிறது.		1	8	0
மதிகெட்ட மனைவி		1	0	0
தீனதயாளு		0	12	0
ஸ்ரீ மாமிகொலுவிருக்கை		0	8	0
தலையணை மந்திரோபதேசம் 3-ம் பதிப்பு		0	8	0
வேணீ ஸம்ஹாரம்		0	3	0
மிருச்சகடி		0	4	0
முத்திராராக்ஷஸம்		0	4	0
லீலாவதி ஸுலோசனை	ம-ா-ா-ஸ்ரீ, ஹைகோர்ட் வக்கீல் பி. சம்பந்த முதலியார் இயற்றியவை.	0	12	0
இரண்டு நண்பர்கள்		0	12	0
மனோஹரன்		0	12	0
கள்வர் தலைவன்		0	8	0
சாரங்கதரன்		0	8	0
சத்ருஜித்		0	12	0
யயாதி		0	8	0
வேதாள உலோகம்		0	8	0
அமலாதித்யன்		1	0	0
காதலர் கண்கள்		0	12	0
வாஸந்திகா ஒரு தமிழ்நாடகம்		0	8	0
வெனிஸ்வர்த்தகன்		1	0	0
கற்புகரசி		0	8	0
குணமாலிகை அல்லது கற்பின் வன்மை		0	6	0
கனகவல்லி		1	0	0
கமலினிகலஹம்ஸம்		0	8	0
எலென்		0	6	0
வசீகரி		1	0	0
ஞானரஞ்சனி		0	8	0
ஸுஜாதா		0	8	0
லலிதாங்கி		0	8	0
வனஸுதா		0	8	0
லலிதா		0	10	0
தமயந்தி		0	9	0
ஞானம்பாள்		0	6	0
மங்களாம்பாள்		0	8	0
கோமளம் காஞ்சியாத்திரை		0	8	0
சுகுணங்கதன்		0	12	0
பாவலர் விருந்து		0	8	0
வில்லிபுத்தூரார்; பிள்ளை பெருமாள் சரித்திரச் சுருக்கம்		0	8	0
மதிவாணன்		0	8	0
வால்மீகருமாயணம் கிளைக்கதைகள்		0	8	0
ஸ்ரீமான். ஜி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஜீவிய சரிதம்		0	8	0
ஸ்ரீபாலகங்காதரர் ஜீவிய சரிதம்		0	3	0
அந்தப்புர ரகசியம்		1	0	0
கவிரத்தினசிந்தாமணி என்னும் காளிதாசன்சரித்திரம்		1	0	0
மோகனாங்கி		1	4	0
குடும்ப ஸம்ரக்ஷணி		2	0	0
மன்மதகாந்தன் கதை		0	8	0
இந்து பாகசாஸ்திரம்		2	0	0
மகாமகம் அதின் மகிமை		0	4	0
ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியின் ஜீவிய சரிதம்		0	2	0
கந்தபுராணச் சுருக்கம் வசனம்		0	12	0
ரம்யனும் ஜோலிதையும் ஆங்கிலேய கவி ஷேக்ஸ்பியர் இயற்றிய ரோமியோ அண்டு ஜூலியட் நாடகத்தின் தமிழ் அமைப்பு (ஓர் புதிய நாடகம்)		0	8	0

"மானிட மர்ம சாஸ்திரம்" அரிய பெரிய காரியங்களொவ்வொன்றையும் விளக்கிக்காட்டும் சித்திரப்படங்கள் 200 அடங்கியது. விலை ரூ. 5. தபாற் சிலவு பிரத்தியேகம் சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு 8 ஷி.

முத்தி முடிவு மூலமும் உரையும்

இவ்வரிய நூல் வேதாந்த சித்தாந்த சமரச ஞானத்தை யாவரும் இனிதறியுமாறு எளிதாக விளக்குதலானும் அதிதீவிர பரிபக்குவ முடையார்க்கு இன்றியமையாது வேண்டப்படும் சுத்த அனுபவமாகிய முடிந்த நிலையை நன்குணர்த்தலாலும், இது தமிழ் நாட்டில் தத்துவ சாஸ்திர விசாரஞ்செய்வார் எல்லார்க்கும் சாலவும் பயன் படுமெனக் கருதி இதனை அச்சிட்டு வெளியிட்டது. விலை அணா 8.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி .

மைலாப்பூர், மதராஸ்.

சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் மஹா மஹோபாத்யாய பிரஹ்ம ஸ்ரீ வே. சாமினாதய்யரவர்கள் இயற்றியவை:—

சீவகசிந்தாமணி, நச்சினார்க்கினியருரை, 2-ம் பதிப்பு, பலவகை ஆராய்ச்சிக் குறிப்புகளுடன்	6	0	0
ஷை நாமகளிலம்பகம் குறிப்புரையுடன்	1	8	0
சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லாருரையும் பழைய அரும்பத உரை முதலியனவும்	5	8	0
மணிமேகலையும் அரும்பதவுரை முதலியனவும்	5	0	0
புறநானூறு மூலமும் உரை முதலியனவும்	4	0	0
மணிமேகலைக் கதைச் சுருக்கம் அரும்பத உரையுடன்	0	8	0
திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் அல்லது வேம்பத்தூரார் திருவிளையாடல், அரும்பதவுரை முதலியவற்றுடன்.	2	0	0

பிரதாப முதலியார் சரித்திரம்	1	0	0
மதிமோசவிளக்கம்	0	12	0
அராபிநைட் கதை படங்களுடன்	2	8	0
மஹாராஜா துறவு	0	6	0
விபின் சந்திரபாலர் உபன்யாஸம்	0	8	0
குணசீலன்	0	10	0
கமலாம்பாள் சரித்திரம்	1	4	0
தேவலோக கிரிமினல் கேஸ்	1	8	0
களாபூர்ணோதயம்	0	10	0
விக்டோரியா சரித்திரம்	1	4	0
பிரபு லிங்கலீலை (வசனம்)	0	12	0
விநோதரஸமஞ்சரி	1	2	0
தானவன் எனும்போலீஸ் நிபுணன் கண்டுபிடித்த அற்புதக்குற்றங்கள்	1	0	0
கைவல்லிய நவநீதம், மூலமும் உரையும்	1	0	0
சிவமஹாபுராணம் 48 படங்களுடன்	5	0	0
நாலடியார் மூலமும் உரையும்	1	2	0
ஸ்ரீபக்த லீலாம்ருத வசனம்	3	0	0
ஸ்ரீ விவேகாநந்த விஜயம்	1	4	0
நைடதம் மூலமும், உரையும் (படங்களுடன்)	2	0	0
மாணிக்க வாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம்	1	0	0
பிரபோத சந்திரோதய வசனம்	1	0	0
பக்த விஜயம் முதல்பாகம்	2	0	0
ஷை 2-ம் பாகம்	2	0	0
ஷை 3-ம் 4-ம் பாகங்கள்	2	0	0
நீதிவிவாதமஞ்சரி (இந்தியன் பினல்கோட் சட்டம் சாக்ஷி சட்டம், அடிதண்டனைச் சட்டம், இவை வியாக்கியானத்துடன்	2	8	0
தேகதத்வசாஸ்திரம் படங்களுடன்	2	8	0
கலாவதி	1	8	0
ரூபாவதி	1	0	0
மதிவாணன்	0	6	0
சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா 6-திருமுறையும்	3	0	0
கருட புராணம் வசனம் படத்துடன்	0	8	0
தேவி பாகவதம்	3	12	0

இப்பொழுதுதான் தயாராயிற்று

துரைத்தன விளக்கம்

ELEMENTS IN CIVICS

ஆங்கிலேயர்களுடைய அரசியின் முறைகளையும், அவர்களால் இந்தியர்களுக்குக் கிடைத்திருக்கும் நன்மைகளையும், தங்களுடைய கடமைகளையும் யாத்தியதைகளையும் ஸாமான்ய ஜனங்களும் மாணாக்கர்களும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று.

"துரைத்தனவிளக்கம்" என்ற நூல் இயற்றப்பட்டிருக்கிறது. துரைத்தனத்தாருடைய நன்மைகளையும், குடிகள் அவர்களுக்குச் செய்யும் உதவிகளையும், ஷை நன்மைகள் அளிக்கப்படும் விதங்களையும்; இந்தியாவின் சுருக்கமான சரித்திரத்தையும் முறையே தெரிவிப்பனவாகிய நான்கு பாகங்கள் இப்புஸ்தகத்தில் அமைந்துள்ளன. புஸ்தகத்திலுள்ள விஷயங்கள் படிப்பவர் மனத்தில் நன்றாகப் பதியும் பொருட்டு, சுமார் 50-பொருத்தமான சித்திரப்படங்களும், தேசப்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உபாத்தியாயர்கள், மாணாக்கர்கள். குடித்தனக்காரர்கள், பெண்பாலார்கள் யாவருக்கும் இப்புத்தகம் அவசியமென்றே நினைக்கிறார்கள். ஏழைகள் கூட வாங்கிப் படிக்கவேண்டுமென்றே குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றது. பதிப்பித்திருக்கிற புத்தகங்கள் குறைவாய் இருப்பதால் சீக்கிரம் பெற்றுக்கொள்ள வேண்டும். விலை ரூபாய் ஒன்று

திருவண்ணாமலை மான்மிய வசன விளம்பரம்

பூலோக திலகம்போல வழங்கும், அருணாசலம், அருணகிரி, சோணாசலம், முதலிய பெயர்பெற்ற திருவண்ணாமலையைக்குறித்து, அருணாசல புராணம், அருணகிரிப்புராணம், முதலியவாக வடமொழியில் பலவகையில் புராணங்களுண்டு. அருணாசலப்புராணம், அருணகிரிப்புராணம், ஆகியவை தமிழ் மற்றவடமொழி இவைகளில் நேர்ந்தவைகளை தழுவி வசன நடையில் இலேசிற் கற்றுணர எழுதி சொற்பவிலைக்கு அச்சிட்டிருக்கிறது. வாசிக்க இனிமையுள்ளது. இதை எல்லோரும் அவசியம் வாங்கிப்படித்தறியும் தரத்தது. இதன் விலை அணா 0—2—0

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி,

மைலாப்பூர், மதராஸ்.



"விவேக போதினி"

ஓர் அருமையான மாதாந்திரத் தமிழ்ப்பத்திரிகை

இப்பத்திரிகையில் பிரசுரமாகும் விஷயங்களாவன

1. ஜாதிமதாசார ஸம்பந்தமானவை.
2. உலக ஒழுக்கங்கள்.
3. கல்வியபிவிருத்திக்குரிய பாஷா விஷயங்கள்.
4. வியவஸாயம், கைத்தொழில், வியாபாரம்.
5. தக்கவர்களைக்கொண்டு எழுதப்பட்டுவரும் நாவல்களும் நாடகங்களும்.
6. சிறுவர்க்கான நன்னெறிக் கதைகள்.
7. ஸ்திரீகளுக்கேற்ற நற்போதங்கள்.
8. சாஸ்திரீகமான விசேஷ வர்த்தமானங்கள்.

நமது பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோர், மிகவும் பிரவிஸித்திபெற்றவர்களும், உலக அனுபவமுள்ளவர்களும் மிகவும் இனிய செந்தமிழ்நடையில், சிறுவர்கள் சிறுமிகள்கூட படிக்கக்கூடியவண்ணம் எழுதப்படுகிறது.

"விவேகபோதினி" பிரதிமாதம் 25ௗ ஒழுங்காகப் பிரசுரமாகும்.

சந்தாவின் விபரம்

தபால்கூலியுள்பட வருஷசந்தா

இந்தியா, பர்மா, ஸிலோன் ...	3	0	0
பினாங்கு, சிங்கப்பூர், நேட்டால் வகையரா இடங்களுக்கு ...	4	8	0
தனிப்பிரதி	0	5	0

மற்றை விவரம் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
"விவேக போதினி,"
மைலாப்பூர், சென்னை.

"ROYAL BRAND"
RED MARKING INK

உடுப்புகளுக்குக் குறிபோடும் சிகப்பு மை

இந்த மையைக்கொண்டு உடுப்புகளுக்கும், வஸ்திரங்களுக்கும் ஒருதடவை குறிபோட்டுவிட்டால், எப்போதும் மாறவேமாறாது. இதன் பிரயோஜனத்தைக் குறித்து நாம் ஜாஸ்தியாய் எழுதவேண்டுவது அனாவசியம்.

டஜன் 1-க்கு... ... ... 1 4 0

வியாபாரிகளுக்கும், ஒரேதடவையில் ஜாஸ்தியாய் வாங்குவோர்க்கும் விலை பிரத்தியேகம்.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி,
மைலாப்பூர்,
மதராஸ்.

புதிதாக வெளிவந்த புத்தகம்

உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டது

நாமாவளி கதம்பம், பாகம்-க:-இதில் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமாவளி, ஸ்ரீ ந்ருஸிம்ஹ அஷ்டோத்தர ஸததநாமாவளி, ஸ்ரீலக்ஷ்மி ந்ருஸிம்ஹஅஷ்டோத்தர ஸததநாமாவளி, ஸ்ரீ ராமாஷ்டோத்தர ஸததநாமாவளி, ஸ்ரீ க்ருஷ்ணாஷ்டோத்தர ஸததநாமாவளி, ஸ்ரீ லக்ஷ்மி நாராயணாஷ்டோத்தர ஸததநாமாவளி, ஸ்ரீ ஸூர்யநாராயணாஷ்டோத்தர ஸததநாமாவளி, ஸ்ரீ லக்ஷ்மி அஷ்டோத்தர ஸததநாமாவளி, ஸ்ரீ ஸரஸ்வதி அஷ்டோத்தர ஸததநாமாவளி, ஸ்ரீ ஆஞ்ஜநேயாஷ்டோத்தர ஸததநாமாவளி, ஸ்ரீஹரிஹராஷ்டோத்தர ஸதநாமாவளி இவைகள் ராயல் 32-பேஜ் பாக்கெட் அளவில் உயர்ந்த காகிதத்தில் பல பிரதிகளைக் கொண்டாராய்ந்து ஸமஸ்க்ருத தமிழ்ப் பண்டிதர்களால் பார்வையிடப்பட்டு சுத்தப்பிரதியாக அச்சிடப்பட்டிருக்கின்றன. ஷை நாமாவளிகள் முற்றிலும் தமிழெழுத்தி லெழுதப்பட்டு வடமொழியின்படி உச்சரிப்புப்பேதம் வருமிடங்களில் கிரந்தாக்ஷரங்கள் தமிழெழுத்துக்கப்புறம் இருதலைப்பிறைக்குள் போடப்பட்டிருக்கின்றன. விலை அணா-4. பூஜைக்குபயோகமாக உயர்ந்த கித்தானில் பைண்டு செய்யப்பட்டது விலை அணா-5. போஸ்டேஜ் அணா-1: வி. பி. சார்ஜ் அணா-1.

விலாசம் :— அ. மஹாதேவசெட்டி,
நெ. 288, லிங்கசெட்டி வீதி,
முத்தியாலுப்பேட்டை, சென்னை.

விவேக போதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி 2 } ஸௌம்யஹு அற்பிசிமீ 1909-ஹு அக்டோபர்மீ { பகுதி 4

ஆத்மா நித்யம்

THE SOUL IS IMMORTAL

மஹாபாரதம் ஆரண்யபர்வம் முடிவில், தர்மதேவதை, கொக்கு உருக்கொண்ட யக்ஷனாகி, தர்மபுத்திரரை, விஷக்குளக்கரையில் அநேக கேள்விகள் கேட்க அவைகளுக்கு அவர் முறையே தவறாது மறுமொழி கூறிவந்தார். இப்படிக் கேட்டுக்கொண்டு வருகையில், "எது ஆச்சரியமானது?" என்ற கேள்வி பிறக்க; தருமபுத்திரர், "உலகில் ஒவ்வொருநாளும் ஜனங்கள் இறந்துபோய்க்கொண்டே இருக்கின்றனர். உயிரோடிருக்கிற மற்றையவர்கள் இதை இடையறாது பார்த்துக்கொண்டிருந்தும், தாம் மாத்திரம் இறவாதிருக்கவேண்டும் என்ற மாறா ஆவலை உடைத்தாயிருக்கின்றனர். இதுதான் மிகவும் ஆச்சரியமானது," என்று மிகச் சிறந்த அர்த்தங்கள்நிறைந்த மறுமொழியைக் கூறினார்.

இதற்கு வெளிப்படையாக உள்ள அர்த்தத்தையே எல்லோரும் ஸாதாரணமாக எடுத்துரைப்பது. அது பின்வருமாறு, "எல்லோரும் உலகில் இறந்து போய்க்கொண்டே இருக்கிறார்கள். இதை நாம் பார்த்துக்கொண்டே இருக்கிறோம். இப்படி இருந்தும், நமது மனம் உலகப்பற்றால், இவ்வுலகில் நாம் நீடித்திருக்கவேண்டும் என்ற ஆவலை உண்டாக்குகின்றது. இம்மாதிரியான மாறாமூடத்தனத்திற்கு, புத்தி அகங்காரம் ஆகிய ஸூக்ஷ்மக்கருவிகளையுடைய மனிதர், ஆளாகித் தத்தளிப்பதே ஆச்சரியம்" என்று தர்மபுத்திரர் உலகத்தவரது அஞ்ஞானத்தைக்கண்டு வியந்ததாகக்கொண்டு, "இந்தஆவலும், இதற்குக் காரணமாகிய உலகப்பற்றும் நீங்க 'ஆறிலும்சாவு, நூறிலும்சாவு' என்று ஸதாஞாபகத்துடன் இருந்து உயிர் உள்ளமட்டும் நமது கடன்களை பற்றறுதலின்றிச் செய்து முடித்து, மனம் குழம்பாதிருப்பதே மனிதன் பின்பற்றி நடக்கக் கூடிய மேலானவழி, இம்மாதிரி ஸதா மரணம், தேக நிலையாமை ஆகிய இவைகளைப்பற்றிய மாறாஞாபகத்துடன் இருந்தால், தாயுமானவர் பட்டணத்து அடிகள் முதலிய மஹான்கள் அடைந்த மேலான நிலையை நாமும் எளிதில் அடையலாம்" என்று தருமபுத்திரரது வாக்கியத்திற்கு விசேஷ அர்த்தம் சொல்லலாம். இது சிறந்த பொருள்தான், இப்பொருளைப் பின்பற்றுவதால் மனிதனுக்கு மேன்மை உண்டாகும் என்பதற்கு ஐயமில்லை.

இதைவிடச் சிறந்ததாகிய பொருள் வேறொன்று தருமபுத்திரர் மறுமொழியில் அமைந்துகிடக்கின்றது. அது பின்வருமாறு. "அழியாது நீடித்திருக்கவெண்டும் என்ற ஆவல் மனிதனிடம் காணப்படுகின்றது. அநேகர் இறந்து போவதைப்பார்த்துக்கொண்டிருந்த போதிலும், (அப்பொழுதுகூட) இந்த ஆவல் (பொத்துக்கொண்டு, எவ்வளவு அடக்கியும்) அடங்காது கிளம்புகின்றது. இது எக்காலத்தும் மனிதனிடம் மாறாதிருப்பதே மிகுந்த ஆச்சரியம்" என்று தருமபுத்திரர் கூறியதாகக்கொண்டு, 'இது ஸாதாரண ஜனங்கள் அஞ்ஞானத்தால் உலக இன்பங்களை விடாது அனுபவிக்கவேண்டும் என்ற ஆசையால் உண்டாக இடமில்லை. ஏனெனில் அவர்கள் இது அஸாத்யகாரியம் என்பதை ஒவ்வொருவர் இறக்கும்பொழுதும் அறிகிறார்கள். ஆதலால் எப்பொழுதும் (விபரீத ஸமயங்களில் கூட) மாறாத இந்த நித்யத்வ ஆசை, மனிதனிடம் இருக்கும் நித்யவஸ்துவின் சிறப்பால்தான் உண்டாவது. பகவான் ஸ்ருஷ்டியில்ஆத்மா நித்யம் என்பதை எவ்வளவு விசித்திரமாக வெளிவரும்படி செய்திருக்கிறார் !' என்று ஆச்சரிய பரவசமானார் தருமபுத்திரர் எனவிவரிக்கலாம். இது வேதஸம்மதமான விஷயம் என்று நாம் இங்கு எடுத்து விவரிக்க வேண்டியதில்லை.

ஆகவே தருமபுத்திரர் தமது மறுமொழியில் மனிதனிடம் காணப்படும் நித்யத்வ ஆசைக்கு உண்மையான காரணத்தைச் சொல்லாமல் சொல்லி அதைப்பற்றிய ஸாதாரண எண்ணத்தை கண்டித்திருக்கிறார்.

விவேக போதினி

தொகுதி 2] ஸௌம்ய௵ அற்பிசி௴ [பகுதி 4

குருசிஷ்ய லக்ஷணம்

THE VEDIC GURU AND HIS DISCIPLE

எவனொருவன் அநித்யமான உலகவாழ்க்கையில் அழுந்தாமலும் தனது ஆத்மாவின் விருத்தியை மறவாமலும் இருக்கிறானோ அவனே சிறந்த ஞானியாவான். தனது ஆத்மவிருத்தியை நினைத்துக்கொண்டிருப்பது மாத்திரம் போதுமானதன்று. அதற்கு வேண்டிய பிரயத்தனங்களை இடைவிடாது செய்துகொண்டேயிருக்கவேண்டும். இந்த விஷயத்தில் ஒரு த்விஜனுக்கு வேதங்களும் வேதாங்கங்களுமே முக்கிய ஸஹாயங்களாகும். இவைகளிற் கூறிய வழியில் நடந்து மோக்ஷம் அடையவேண்டுமென்பது த்விஜனுக்குக் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட விதியாகும். அத்விஜர்களுக்கு வேதாத்யயனஞ் செய்ய அதிகாரமில்லாவிடினும் வேதாங்கங்களை நேரே படித்துத் தெரிந்துகொள்ள அதிகாரமுண்டு. ஆனால் வேதாங்கங்களுக்குப் பதிலாக, அவற்றின் அர்த்தங்களைக்கொண்டு மனிதராற் செய்யப்பட்ட நூல்களைக் கற்று வேதரஹஸ்யங்களை அறிந்துகொண்டு மேன்மை அடையலாம். த்விஜனாகட்டும், அத்விஜனாகட்டும், எந்தச் சாஸ்திரத்தைப் படித்து உணரவேண்டுமானாலும் ஸரி, குருவின் ஸஹாயமின்றித் தெரிந்துகொள்ளுதலே முடியாது. 'தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப்போட்டாலும் வராது' என்றொரு பழமொழி உண்டு. நமது பரதகண்டத்தில் புத்தகங்களில் எடுத்துக்காட்ட முடியாத அநேக அரியவிஷயங்கள் குருபரம்பரைகளில் உபதேசக்கிரமமூலமாகச் சிற்சில மஹான்களிடம் குடிகொண்டிருக்கும். இவர்களையே சாஸ்திரங்கள் குரு அல்லது ஆசாரியன் என்று பெயரிட்டழைக்கும். குருவின் உபதேசமூலமாய்வரும் அநுபவ ஞானமின்றி ஒருவன் எவ்வளவு புத்தகங்களைப் படித்தபோதிலும் அவனுக்கு உண்மை ஞானம் உண்டாகமாட்டாது. ஆகையால் வேதங்களின் உட்பொருளை உள்ளபடி ஒருவன் அறிந்துகொள்ளவேண்டுமானால் அநுபவஞானமுடைய ஆசாரியர்களது ஸஹாயத்தைப்பெற்றே அறியவேண்டும். தகுந்த குருவினது ஸஹாயமின்றி வேதங்களைப் படித்துத் தாறுமாறாகப் பொருள்களைக் கிரஹித்து நரகப்படுகுழிக்கு ஆளாவதைவிட அவைகளைப் படியாதிருப்பதே மேலானது. ஆகையால் வேதங்களின் உண்மைப்பொருளை அறிய வேண்டும் என்ற விருப்பம் ஒருவனுக்கு இருந்தால் அவன் சென்று தகுந்த ஆசாரியனை முதலில் அடைதல்வேண்டும்.

சாஸ்திரங்களில் குருசிஷ்ய லக்ஷணங்கள் நன்றாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அந்த லக்ஷணங்களில் ஏதாவது ஒன்று ஒரு குருவினிடத்தாவது சிஷ்யனிடத்தாவது இல்லாதிருக்குமாயின், குருவிற்கு வித்தையைக் கொடுக்கவும், சிஷ்யனுக்கு அதைப்பெற்றுக் கொள்ளவும் அதிகாரம் இல்லை என்று நமது சாஸ்திரங்கள் வற்புறுத்துகின்றன. வேதத்தை உபதேசிக்கத் தகுந்த ஆசாரியன். யாவரும் பின்பற்றி நற்கதி அடையத்தக்க ஒழுக்கமும், யாவரிடத்தும் அன்பும், தயையும், உடையவராயும், புண்யம், தர்மம், பக்தி முதலியவைகளுக்கு வாஸஸ்தானமானவராயும் சிறந்த கிருஹஸ்தராயும் இருக்கவேண்டும். அவரிடம் ஸகல வித்தைகளும் குடிகொண்டிருக்க வேண்டும். எவ்விதக் கஷ்டமான ஆக்ஷேபங்கள்வந்தபோதிலும் அவைகளுக்கு வெகு எளிதில் தகுந்த ஸமாதானம் சொல்லுவதற்கு வேண்டிய கூர்மையான புத்தியும் அவரிடம் இருக்கவேண்டும் தமது சிஷ்யர்கள் எவ்வளவு மந்தபுத்தியுடையவர்களாயிருந்தபோதிலும், அவர்களுக்கும் மனதில் பதியும்படி கோபமில்லாமல் ஒருதரத்திற்கு அநேகம் தரம் எடுத்துக்காட்டிப்போதிப்பதற்கு வேண்டிய அபாரமான பொறுமையும் ஆசிரியரிடம் இருக்கவேண்டிய முக்கிய குணங்களுள் ஒன்றாகும். சிறந்த குருவானவர் தமது சிஷ்யனைத் தமது பிள்ளையைப்போலப் பாவித்து நடத்திவரவேண்டும். அவர் சிஷ்யர்களுக்குக் கல்வி கற்பிப்பது என்பதைத் தாம் அவசியம் செய்யவேண்டிய ஒரு கடமையாக எண்ணி, அதற்குக் கடவுளது அருள் நோக்கத்தைத் தவிர வேறு கைம்மாறு கருதாமலே இருக்கவேண்டும். எவனொருவன் கல்வியை வியாபாரப்பொருளாகக்கொண்டு பணம் முதலியவைகளுக்காகவே அதனைக் கற்பித்து வருகிறானோ அவனுக்கு நெடுங்காலம் நரகவாஸம் நேரிடும் என்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. குரு ஒருநாளும் தமது சிஷ்யனை அடிக்கக்கூடாது. அவனுக்கு வேறு உபத்திரவங்களைச் செய்வதும்கூடாது. அவ்வாறு செய்யும்படி ஏதாவது காலங்கள் வருமாயின், சிஷ்யனது முரட்டுத்தனத்தையும், அறியாமையையும் குருவானவர் அன்போடு தமது தந்திரத்தால் மாற்றி அவனை நல்லவழிக்குக் கொண்டுவரவேண்டும். குரு நடந்துகொள்ள வேண்டிய மாதிரியைப்பற்றி, சீக்ஷையில் பின்வருமாறு உருவகப்படுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது.

"ஞானம் என்பவள் ஒரு பிராம்மணனிடம் வந்து, (1) ஓ பிராம்மணா, என்னைக் காப்பாற்று, நான் உனக்கு ஒரு சிறந்த ஐசுவரியமாயிருப்பேன். என்னைக் கர்வம், அஸத்யம், சிற்றின்பங்களில் உழலும்தன்மை ஆகிய இவைகளில் ஏதாவது ஒன்றை யுடையவருக்கு எடுத்துக்கொடுத்துவிடாதே. அப்படியானால் நான் வலிமை குறையாது உன்னிடம், இருப்பேன். (2) எவன் ஒருவன் சிஷ்யர்களது காதில் ஹிம்ஸைக்குக் காரணமாகாமல் உண்மையை உபதேசிக்குங்கால் அத்துடன் அமிருதத்தையும் சேர்த்துக்கொள்ளுகிறானோ, அவனே சிஷ்யனுக்குத் தாயார் தகப்பனார் ஸ்தானத்திலிருப்பவன். அவனுக்கு ஒரு விதத்திலும் மனங்கோணாதபடி சிஷ்யன் நடந்துகொள்ளவேண்டும். (3) எந்த சிஷ்யன் ஒரு குருவினிடமிருந்து கல்வி கற்றுவிட்டு அந்தக் குருவை மனம் வாகரு காயம் என்னும் திரிகரணங்களாலும் கௌரவப்படுத்தாது இருக்கிறானோ, அவன் குருவினது கிருபைக்குப் பாத்திரனாகான். ஆதலால் அந்தக் குருவினிடத்திலிருந்துவந்த ஞானமும் அவனை ரக்ஷிக்கமாட்டாது. (4) ஆனால் உனக்கு ஒருவன் சுத்தன் என்றும், கேட்கவேண்டும் என்ற ஆவலுடையவன் என்றும், கூரிய புத்தி யுடையவனென்றும், பிர்ம்மசாரி என்றும், உனக்கு ஒருநாளும் கெடுதலை விரும்பாதவன் என்றும், தெரிந்தால் பிராம்மணா, அவனிடம் என்னை ஒப்பிவித்துவிடு, உனது ஐசுவரியமாகிய என்னை அவன் நன்றாக ரக்ஷித்துவருவான்' என்று சொன்னாள்."

முன் எடுத்து காட்டப்பட்டுள்ள நான்கு சுலோகங்களில் சீக்ஷையானது குரு சிஷ்யர்களது லக்ஷணத்தை உருவகப் படுத்திச் சொல்லிற்று. இதற்கு ஸாயனர் பின்வருமாறு வியாக்யானம் எழுதுகின்றார். ஞானத்திற்கு அதிஷ்டானமான தேவியானவள் பிராம்மணனாகிய ஆசாரியனிடம் சென்று வேதரஹஸ்யங்களை அதிகாரிகளிடம் கொடுக்காமல் தன்னைக்காப்பாற்றவேண்டும் என்று சொல்லுவதாக முதற் சுலோகத்தில் வருணிக்கப்பட்டிருக்கிறது. தன்னை அடைந்திருக்கும் எல்லோருக்கும் ஸகலரும் விரும்பத்தக்க மேலான பதவியைக்கொடுக்கும் சக்தி தன்னிடம்இருப்பதால், அவள் தன்னை பிராம்மணராகிய குருவினது ஐசுவரியம் என்று சொல்லிக்கொண்டாள். அவளே வேறோரிடத்தில் 'என்னையாவது என்னை எடுத்தாண்டு உபதேசிக்கத் தகுந்த உன்னையாவது எவனொருவன் அவமதிக்கிறானோ, கற்றதின்படி எவனொருவன் ஒழுங்காக நடக்கவில்லையோ, எவன் தனது தேகத்தை படிப்பதற்கு முன் ஸ்நானம், வாய் கொப்பளித்தல் முதலிய

ஆசார விசேஷங்களால் சுத்தி செய்து கொள்ளும் திறனற்றவனா யிருக்கிறானோ அவனைப் போன்ற போலி சிஷ்யர்களுக்கு என்னைக் கொடுத்துவிடக் கூடாது. அப்படியானாயின் நான் உம்மிடம நிலைத்திருந்து பலனைக்கொடுப்பேன்' என்று சொல்லுகிறாள்.

முதல் சுலோகத்தில் சிக்ஷையானது ஒரு நிஷேத வாக்யத்தைச் சொல்லிவிட்டு இரண்டாவது சுலோகத்தில் ஆசாரியன் சிஷ்யனது காதுகளை உண்மையால் (வேதத்தால்) நிறைக்கவேண்டும் என்று சொல்லுகிறது. இவ்வாறு செய்யுங்கால் சிஷ்யனுக்கு ஒருவிதக் கஷ்டமும் தோன்றாதிருக்கவேண்டும். ஒரு சிஷ்யன் ஒருநாளில் முழுச்சுலோகமாவது அல்லது அரைச்சுலோகமாவது கற்றுக்கொள்ளத் திறனற்றவனா யிருப்பானேயானால், அவனுக்குக் கஷ்டம் தோன்றாதிருப்பதற்காக, குரு அவனை, கால் அல்லது அரைக்காற் சுலோகமாகத் தினம் படிக்கும்படி செய்யவேண்டும். குரு, வேதவாக்யங்களைச் சிஷ்யனுக்குப் போதித்து வருங்கால் அவைகளுடன் அமிர்தத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும், அதாவது சிஷ்யனுக்குக் குரு வேதார்த்தத்தையும் கூடவே போதித்து வரவேண்டும். இவ்வாறு செய்வதால் குரு தமது சிஷ்யனை ஒரு தேவதைக்கு ஸமானமாக்குகிறார். அதாவது அவனை மோக்ஷத்தை அடையத்தக்கவனாகச் செய்கிறார். இவ்வாறு நன்மை பயக்கும் குருவை, சிஷ்யன் தாயாகவும் தகப்பனாகவும் எண்ணி அவசியம் மரியாதை செய்யவேண்டும். இவனது தாய் தகப்பன்மார்கள் இவனுக்குத் தேகத்தைக்கொடுத்து உதவியபோதிலும் குருவானவர் ஞானத்தை ஊட்டி மோக்ஷமடைவதற்கு வேண்டிய பேருதவி புரிதலால் அவரே சிஷ்யனுக்கு உண்மையில் தாயார் தகப்பனாரிலும் சிறந்தவராவார். இந்த நிலையில் இருக்குங் குருவுக்கு, சிஷ்யன் கனவிலும் கேடுநினைத்தல் கூடாது.

மந்தபுத்தியை உடையவனை அனதிகாரி என்று நமது சாஸ்திரங்கள் கூறவில்லை, ஆனால் அவைகள் சீலக்குறைவு உடையவனை அனதிகாரி என்று வற்புறுத்துகின்றன. குருசிஷ்ய லக்ஷணங்களை விஸ்தரிக்கும் சாஸ்திரங்களிலும், முன்எடுத்துக் காட்டப்பட்ட சிக்ஷையிலும் இந்தவிஷயம் உறுதியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மூன்றாவது சுலோகம் கற்கவேண்டியவைகளை எல்லாம் கற்றபின்பு எந்தப் பிராம்மணன் ஒருவன் தனது குருவை நல்லவார்த்தைகள் மூலமாகக் கௌரவப்படுத்தாமலும், குருவினது நன்மையை மனத்தால் எண்ணாமலும், அவரிட்ட ஆஞ்ஞைப்படி நடக்காமலும் இருக்கிறானோ, அவன் தோற்ற மாத்திரத்தில் சிஷ்யனே ஒழிய வேறல்ல. அவன் குருமூலமாக வேதரகஸியங்களை அடைந்து உய்யத் தகுந்தவன் அல்லன். அவன் குருகிருபைக்குத் தகுந்த பாத்திரனல்லன். இவ்வாறு தகுந்தபாத்திரமல்லாதவனா யிருப்பதால், குரு அவன் விஷயத்தில் கருணை உடையவராயிருக்கமாட்டார். குருவே இவ்வாறு இவன் விஷயத்தில் அதிருப்தியோடிருந்தால் அவரால் அந்தச் சிஷ்யன் அடைந்த வித்தை மாத்திரம் எவ்வாறு பயனுள்ளதாகும்? இதனால்தான் வித்தையின் அதிஷ்டான தேவியானவள், 'நான் ஞானஸ்வரூபமானவள், வேதங்களே எனது இருப்பிடம். எனது மேன்மையை தேவர்களாலும் அளவிட்டு அறியமுடியாது. என்னைப் பெறுதற்குத்தகுந்த அதிகாரமில்லாதவரிடம் யோசிக்காது என்னை எறிந்துவிடாதே, ஏனெனில் விலையுயர்ந்த என்னை அவரால் வைத்துக் காப்பற்றமுடியாது. உனக்கு சுத்தனென்றும், கேட்டறியவேண்டும் என்ற ஆவலுடையவன் என்றும், கூரியபுத்தியுள்ளவனென்றும், பிரம்மசரியம் உடையவன் என்றும், உனக்கு ஒரு பொழுதும் கேட்டை எண்ணாதவன் என்றும் எவன் தோன்றுகிறானோ அந்தச் சிஷ்யனுக்கே என்னைக்கொடு. இம்மாதிரியான சிஷ்யனே என்னை ஸரிவரப் பாது காப்பான்' என விண்ணப்பம் செய்வதாக, சிக்ஷையிற் சொல்லப்பட்டிருக்கிறது.

162049

நமது நோன்புகள்

OUR OBSERVANCES

III. நவராத்திரி

NAVARATRI

நவராத்ரி என்ற பதம் ஒன்பது இரவு எனப் பொருள்படும். இது புரட்டாசிமீ அமாவாஸைக்கு பின்னர் உள்ள நவமியை இறுதியாக உடைய ஒன்பது நாட்கள் இரவிலும் கொண்டாடப்படும் ஓர் திவ்ய உத்ஸவம். இது சில வருஷங்களில் அற்பிசி மாஸத்துள்ளும் போகும். இந்நாட்களின் ஆரம்பத்தில் எல்லோர் வீட்டிலும் தத்தம் நிலைக்கேற்ப பதுமைகள் படங்கள் முதலியவைகளை ஒழுங்காக வைத்து மத்தியில் பரம்பொருள் உருவமாகிய ராமன், கிருஷ்ணன், பரமசிவன், முதலிய கடவுள்களது ரூபமான பதுமைகளை வைத்து, ஒவ்வொரு ஸாயங்காலமும் ஒன்பது நாள்வரையில் பாட்டு முதலியவைகள் பாடி ஆலத்தி முதலியவைகளைச் சுற்றி மங்களகரமாக இந்த உத்ஸவத்தை பெண்டுகள் கொண்டாடுவது வழக்கம். இந்த ஒன்பது நாளும் பெண்டுகள் தம்முள் ஒவ்வொருவர் வீட்டிற்குச்சென்று வெற்றிலை பாக்கு முதலிய மங்களத்திரவ்யங்களை அடைந்து தமது வீடு வருவது வழக்கம்.

இதைப் பெண்டுகள் மாத்திரம் சிறப்பாக இவ்வாறு கொண்டாடுகிறார்கள் என்றுஎண்ணிவிடக்கூடாது. புருஷர்களும் இதில் சேருவதுண்டு. அவர்கள் முற்கூறிய கொலுமுதலியவைகளை கவனியாமல் விட்டபோதிலும் அவர்களுக்கு ஏற்றபடி நவராத்திரியைக் கொண்டாடுகிறார்கள். வேதபாராயணம், ஸூர்ய நமஸ்காரம் முதலியவைகளை நடத்த பிராம்மணர்களை ஏற்படுத்தி இந்த ஒன்பது நாளில் தமதுவீடு வேதகோஷத்தால்நிறைந்து மங்களகரமாகும்படி செய்கிறார்கள். அதிகபக்தியுடைய சில புருஷர்கள் நவராத்திரி காலத்தில் ஸுந்தரகாண்ட பாராயணம் செய்து முடிப்பது வழக்கம். மேலும் நவராத்திரியில் கடைசி நாளாகிய மஹாநவமி தினத்தில் புருஷர்கள் தமது வீட்டிலிருக்கும் சாஸ்திரபுஸ்தகங்கள் எல்லாவற்றையும் கொலுவண்டை ஒழுங்காக அடுக்கிவைத்து மிகுந்தசிரத்தையோடு காலைமுதல் உபவாஸம் இருந்து ஸரஸ்வதியைப் பூஜை செய்வது வழக்கம். வீட்டில் உள்ள குழந்தைகள் உள்பட எல்லோரும் இப்பூஜை முடிந்ததும் புஸ்தக ரூபமாகிய ஸரஸ்வதி மேல் மலர்களைத் தூவி நமஸ்கரித்துவிட்டுப் பின்பு தான் போஜனம் செய்வார்கள். இந்த மஹாநவமி அன்றையதினமாவது அல்லது அடுத்த தினத்திலாவது தொழிலாளிகள் தமக்கு ஸரஸ்வதிக்கு ஸமமாக இருக்கும் ஆயுதங்களை வைத்துப் பூஜை செய்வார்கள். ஆதலால் இந்தப்பூஜைக்கு ஆயுதபூஜை யென்றொரு பெயரும் உண்டு. இந்தப் பூஜை பரதகண்டத்தில் வஸிக்கும் ஸகல ஜாதியாருக்கும்

உட

பொதுவானது. பெண்டுகள், புருஷர்கள் எல்லோருக்கும் முக்கியமானது. இதுமாத்திரமல்ல. இந்த நவராத்திரியை ஸ்மார்த்த வைஷ்ணவ மாத்வாள் எல்லோரும் ஒரே உத்ஸாஹத்தோடு கொண்டாடுகின்றார்கள். சிவ விஷ்ணு ஆலயங்களிலும் இதுஒரு உத்ஸவமாகக் கொண்டாடப் படுகின்றது. அங்கு அம்பிகையை கொலுமத்தியில் அலங்கரித்துவைத்து பார்ப்போர் எல்லோரது கண்களும்குளிர தீப ஆராதனை முதலியவைகள் இந்த ஒன்பது இரவும்ஒழுங்காக நடந்துவரும். இவ்வாறு பெண்டுகள் புருஷர்கள் எந்த ஜாதியாரானாலும் ஸரி, எந்த பிராயத்தவராயினும் ஸரி, எந்தமதத்தைச் சேர்ந்தவராயினும் ஸரி எல்லோருக்கும் மனோரம்யமாக விளங்குவது இந்த நவராத்திரி உத்ஸவம்.

இதை முற்குறித்தவாறு கொண்டாடக் காரணம் என்ன? இது த்ரிமதஸ்தர்களுக்கு பொதுவாக இருப்பானேன்? இந்த உத்ஸவத்திற்குத்தக்க புராணகதைகள் த்ரிமதஸ்தர்களுக்கும் இருப்பதால் இது இவ்வாறு பொது உத்ஸவமாக இருக்கின்றது. அவற்றுள் சிவஸம்பந்தமான கதை பின்வருமாறு. முன்னொருகாலத்தில் மஹிஷாஸுரன் என்ற எருதுரூபமுடைய ஒரு அஸுரனும் அவனது பரிவாரங்களும் விருத்தியாகி வரபலத்தால் சிறந்த பதவியைஅடைந்து உலகை இராவணாதிகொடியவர்கள் போல்வருத்தத் தொடங்கினர். இந்தக்கஷ்டம் பொறுக்கமுடியாமல் தேவதைவள் பார்வதியிடம் விண்ணப்பம் செய்துகொள்ள, அவள் அவர்களுக்கு அபயப் பிரதானம்செய்து அனுப்பிவிட்டாள். பின்புதான்வாக்குக் கொடுத்தவாறு செய்துமுடிக்க அவள் ஒன்பதுநாள் சிவபிரானைக்குறித்துத் தவமிருந்து அவரிடமிருந்து தகுந்த சக்திபெற்று ஒன்பதாம் நாள் மஹிஷாஸுரனைக்கொன்று அவன் பரிவாரங்களை வேரறுத்து சாந்தமானாளாம். இந்த மஹிஷாஸுரனைக்கொல்லும் அவஸரத்தில் பார்வதீ தேவிக்கு மஹிஷாஸுரமர்தனி என்றுபெயர். இக்கதையை முன்னிட்டுக்கொண்டு ஸ்மார்த்தர்கள் அம்மன் தவமிருந்த காலத்தைச் சிறந்ததாக வருஷாவருஷம் கொண்டாடிவருகிறார்கள். பெண்டுகளுக்கு தவமிருக்கும் அம்மன் ஒன்பதாம்நாள் விழிக்கும் தருணத்தை கொலு, பாடல்கள் முதலிய மங்கள விஷயங்களை வைத்துக்கொண்டு எதிர்பார்க்கிறோம் என்பதே எண்ணம். அம்மன் விழித்து ஒன்பதாம்நாள் தமக்குவேண்டிய மனோபீஷ்டங்களைக் கொடுப்பாள் என்பதே அவர்கள் துணிபு. இம்மாதிரி செய்வதில் குழந்தைகளும் கூடி ஆனந்திக்க தருணம் வாய்க்கின்றது. புருஷர்களுக்கோ உட்கருத்து முக்கியம். ஸாதாரண ஜனங்களுக்கு வேதபாராயணம் ஸுந்தரகாண்ட பாராயணம் முதலியவைகளால் இஹலோகஸுகம் ஸித்திக்கவேண்டும் என்ற எண்ணம் இருக்கலாம். அதைச் சிறப்பாக இங்கு நாம் கூறவரவில்லை. ஆனால் மஹிஷாஸுரன் அவன் பரிவாரங்கள் முதலியவைகளை அஞ்ஞானமும் அதன் காரியங்களுமாகக் கொண்டு பார்வதியை சித்சக்தியாகக்கொண்டு அது பரம்பொருளாகிய ஆத்மஸாக்ஷாத்கார விசேஷத்தால் அஞ்ஞானத்தை வேரறுப்பதாகக் கொள்ளலாம். அந்த திவ்ய ஸமயத்தில் வேதாதிகள் மனதைச் சீர்திருத்த ஓதுவது நியாயமே,ஏனெனில் வேதங்களின் உட்கருத்து இதுவாதலால். இந்த ரகஸியத்தினால் தான் இதை முக்கியமாகப் பெரியோரும் கொண்டாடுவது. ஒன்பதாம் நாள் மஹிஷாஸுரமர்த்தனி தர்சனம் அதி விசேஷம் என்பது இப்பொழுது எடுத்துக்கூறிய ரஹஸ்யத்தால் நன்கு விளங்கும்.

வைஷ்ணவ மாத்வர்களுக்கு இந்நவராத்திரி முக்கியமாயிரு காரணமாக இருக்கும் புராணகதை பின் வருமாறு. முன்னொருகாலத்தில் லக்ஷ்மிதேவி உலகில் அலமேலு மங்கையாக வந்து பரமபதவாஸியாகிய விஷ்ணுவாம் திருப்பதி ஸ்ரீநிவாஸப் பெருமாளை அடைந்து ஆனந்திக்க இந்த ஒன்பதுநாள் தவமிருந்தாள். இதன் முடிவில் அவள் எண்ணம் முற்றுப்பெற விவாஹம் வெகு கோலாஹலமாக நடந்தது. இந்த விசேஷத்தை முன்னிட்டு வைஷ்ணவமாத்வர்கள் இந்நாட்களை சிறப்பாகக்கொண்டாடுவது. இந்நாட்களில் திருப்பதியில் பிரம்மோத்ஸவம் நடக்கிறது. அம்மன் தவமிருக்குங்கால், முன்பு ஸ்மார்த்தர்கள் விஷயத்தில் சொன்ன காரணத்திற்காகவே, வைஷ்ணவமாத்வப் பெண்டுகளும் கொலு முதலியவைகள் வைப்பது வழக்கம்.

முற்கூறிய காரணங்களால் இந்நவராத்திரி த்ரிமதஸ்தர்களுக்கு பொது என்பது விளங்கலாம். ஸகல ஜாதியார்களுக்கும் இது பொதுவாக விளங்குவானேன்? இதற்குக் காரணம் பிரம்மாவின் பத்னியாயும் ஸகல வித்தைகளுக்கு தேவியாயும் இருக்கும் ஸரஸ்வதி தேவியும் இந்நவராத்திரியில் தன் கணவனை அடைந்து நிலைபெறத் தவம்செய்தனளாம். இது காரணம்பற்றி இந்நாட்களில் கடைசி மூன்றுநாட்கள் ஸரஸ்வதிக்கு முக்கியமானவை. ஆகவே படிப்பிற்கு நிலயமாகிய புத்தகங்களும், தொழிலாளிகளுக்கு படிப்புக்கு ஸமமான தொழிலை நடத்த ஸஹாயம்செய்யும் கருவிகளும் ஸரஸ்வதியின் ரூபாந்தரமாகக்கொண்டு மஹாநவமியன்று பூஜை நடந்துவருகின்றது. இந்நவராத்ரிக்கு ஸரஸ்வதிஸம்பந்தம் ஏற்பட்டதால் இது எல்லா ஜாதியாருக்கும் பொதுவாயிற்று. எல்லோரும் மஹா நவமியைக் கொண்டாடும்படி வந்தது. பத்தாம்நாள்விஜயதசமியன்று ஸரஸ்வதி தவம் முடிந்து ஸந்துஷ்டியாய் இருப்பதால் அன்று வாசிப்போருக்கு கல்வி நன்றாகவரும், தொழில் செய்பவருக்கு காரியங்கள் கைகூடி வருமாம். ஆகையால் விஜய தசமியன்று குழந்தைகளை நாள் நட்சத்திரம் நோக்காது படிக்க வைப்பது (படிக்க ஆரம்பிக்கும்படி செய்வது) நம்முள் வழக்கமாகிவிட்டது. முற்கூறிய ரகஸ்யார்த்தத்தை ஒட்டி நோக்கில் அஞ்ஞானம் நீங்க ஞானம் விருத்தியாவதை ஸரஸ்வதி பூஜை விஜயதசமி இரண்டும் குறிப்பிக்கலாம் என்று தோன்றும்.

மேலும் விஜயதசமியன்று உட்கருத்துக் களஞ்சியமாகிய சிவன் கோயிலில் பரிவேட்டை உத்ஸவம் ஒன்று நடக்கும். அன்று பகவான் எழுந்தருளி சமீ அதாவது வன்னிமரத்தில் அம்புபோடுவது வழக்கமாக இருக்கின்றது. வன்னிமரத்தில் நெருப்பிருக்கிறது என்பது எல்லோரும் கேள்விப்பட்ட விஷயமே. அதாவது அது லேசாக உரைப்பட்டபோதிலும் அதில்நெருப்புண்டாகும் என்பதே. அதில் அம்பு பாய்ச்சினால் அந்த வேகத்தால் நெருப்பு உண்டாகி அந்தமரத்தை எரித்துவிடும்என்பதே. ஆதலால்அந்தவன்னிமரம் வேட்டையாடுவோருக்கு எளிதில் ஜயத்தைக்கொடுப்பது. ஆதலால் இந்த வேட்டைதினத்திற்கு விஜயதசமி அதாவது ஜயத்தைக் கொடுக்கும் வன்னிமரத்தை எரிக்கும் நாள் என்றுபெயர். விஜயதசமி என்ற பதம் இப்பொருள் கொடுத்தலையும் காண்க. இந்தப் பரிவேட்டை உத்ஸவத்தின் உட்கருத்தே மிக முக்கியமானது. நெருப்படக்கிய வன்னிமரத்தையே ஆத்மாவோடு கூடிய தேகமாகவும், பகவானை ஸத்குருவாகவும், அம்பை ஞானமாகவும், வேட்டையில் அம்பு விடுவதை ஞானோபதேசமாகவும், மரம் எரிந்து விழுவதை கர்மஸம்பந்தமானவைகளை 'ஞானத்தழல் சுட்டுவெண்ணீறு'க்குவதாகவும் கொள்ளலாம். இந்தக் கருத்தால் தான் விஜயதசமியே நாள் முதலியவை நோக்காது அஞ்ஞானத்தை எரித்து மேன்மையை விளைவிக்கும் வித்யாப்பியாசம் தொடங்குவதற்கு நல்ல தினம் என்று நம்

மவரால் மதிக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

இவைகளால் ஸரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி ஆகிய இவர்கள் தபஸ்ஸு செய்து தமது கார்யஸித்தி அடைந்த நாள்கள் இவை என்பது நன்றாகத் தெரியவரும். முக்கியமாக வைஷ்ணவர்கள் மாத்திரம் அவர்கள் தமது துவேஷபுத்தியால் துர்கை ஸரஸ்வதி ஆகிய இவர்களைக் கவனியாது விட்டு விடலாம். 'தெய்வமிகமேல்' என்ற கொள்கையைப் பின்பற்றி நடக்கும் மூர்த்தித் துவேஷமற்ற அத்வைத ஸித்தாந்தம் மேன்மை எனக்கொண்ட ஸ்மார்த்தர்கள் எல்லோரும் நவராத்திரியின் சிறப்பு நன்கு விளங்க ஸரஸ்வதி பூஜையன்று துர்கா லக்ஷ்மீ ஸரஸ்வதீப்யோநம: என்றுகூறிப் பூஜைதொடங்குவது வழக்கம். இதில் ஒவ்வொரு பாகத்தின் சிறப்பையும் முன்னர் எடுத்து விஸ்தரித்தாய்விட்டது.

ஸ்காந்தத்தில் இந்நவராத்திரி பூஜையின் ஆரம்பமும் சிறப்பும் ஒரு கதை மூலமாகக் கூறப்பட்டிருக்கிறது. கிருதயுகத்தில் ஸுகேது என்றொரு அரசன் இருந்தான். அவனுக்கு ஸுவேதி என்றொரு மனைவி இருந்தாள். அவ்வரசன் குடிகளின் ஸுகத்தையே கருதி மனுநெறி வழுவாது அரசாட்சிசெய்து வரும்நாளில், அவன் தாயாதிகளது கஷ்டத்தால் அவர்கள்மேல் படை எடுத்துச் சென்று தோல்வி அடைந்து ராஜ்யம் இழந்து அவன் தன் மனைவியோடு காடுகளில் திரியும்படி நேரிட்டது. அன்ன ஆகாரமின்றிக் காட்டில் அலைந்துவருகையில் களைப்பு மிகுதியாலும் போரில்பட்ட காயங்களாலும் அவனுக்கு நோய் கண்டது. அப்பொழுது ஒருவாறு நல்ல ஸ்திதியிலிருந்த ஸுவேதி தன் கணவனைத் தோளில் சாத்தித் தூக்கிக்கொண்டு காட்டைவிட்டு வெளிவர யத்தனித்தாள், அங்கு பஞ்சவடி ஸ்நாநத்திற்காக வந்த அங்கிரஸ் என்ற ரிஷி அவள்முன் தோன்ற அவர் வேண்டுகோளின்படி தனது சரித்திரத்தை ஒளிக்காது அவரிடம் சொல்லி துக்கித்தாள். ரிஷிக்கு மனமிரங்க அவர் அவர்களை பஞ்சவடிக்குத் தீர்த்த யாத்திரையாகக் கூட்டிக்கொண்டுபோய் அங்கு கோயில்கொண்டெழுந்தருளி இருக்கும் துர்கா லக்ஷ்மி ஸரஸ்வதிகளை அவர்கள் தவம் செய்து ஸித்திபெற்ற நவராத்ரிகாலத்தில் ஆராதிக்கக் கட்டளையிட்டு, வேண்டிய ஸஹாயங்களையும் செய்தார். ரிஷி கூறியபடி மிகுந்த பக்தியோடு ஸுவேதி துர்கை முதலியோரை ஆராதிக்க ஸுகேதுவுக்கு நோய் நீங்கிற்று. பின்பு அவளுக்கு அங்கு ஒரு புத்திரன் உண்டானான். அவனுக்கு அங்கிரஸ் ஸூர்ய பிரதாபன் எனப் பெயரிட்டார். காலக்கிரமத்தில் அந்தப்பிள்ளை பலவானகி தன் விரோதிகளை முறியடித்துத் தன் தகப்பனுக்கு ராஜ்யத்தை மீட்டுக்கொடுத்தான். அன்றுமுதல் எல்லோரும் நவராத்திரிகாலத்தில் அம்பிகையைப் பூஜைசெய்தால் தமக்கும் ஸுவேதிக்கு உண்டானதுபோல மேன்மை உண்டாகும் என்ற நம்பிக்கையோடு இந்த உத்ஸவத்தைக் கொண்டாடி வருகிறார்கள்.

இந்த நவராத்திரி ஒன்பது தினங்களுள் முதல் மூன்றுநாள் துர்க்கையையும், இரண்டாம் மூன்றுநாள் லக்ஷ்மியையும், கடைசி மூன்றுநாள் ஸரஸ்வதியையும் ஆராதிப்பதே சிறந்தமுறை. இவ்வாறுசெய்யச் சக்தியற்றவர்கள் மஹாநவமி யன்றையதினமாவது துர்க்கைக்கு உரிய ஆயுதங்கள், லக்ஷ்மிக்குரிய இரத்னங்கள், ஸரஸ்வதிக்குரிய புஸ்தகங்கள், இவைகளையாவது பூஜித்தல்வேண்டும். மேலும் இந்நவராத்திரிகாலத்தில் இராமாயண பாரத பாகவதம் முதலிய திவ்ய கதைகளைப் படிக்கத்தெரிந்தவர் ஒவ்வொருவரும் பாராயணம் செய்து ஸத்காலக்ஷேபம் செய்வது மிகவும் அவசியம். இம்மாதிரி பெரியோர்களால் நமது நன்மைக்கு ஏற்படுத்தப்பட்ட விருதங்களை சிரத்தையுடன் அனுஷ்டித்தால் நமக்கு சித்தசுத்தி உண்டாக நாம் முடிவில் பரமபதம் அடைய யோக்கியர்களாவோம் என்பதற்கு என்ன ஸந்தேகம்?

கோபாலன் விரதம் நிறைவேற்றினது

GOPALAN FULFILS HIS VOW

சிதம்பரத்து ராஜு சாஸ்திரியார் குமாரன் கோபாலன் பட்டணத்தில் இங்கிலீசு படித்துக்கொண்டிருந்தான். அவன் தன் எண்ணத்திற்கு மாறாக இங்கிலீசு படித்தான். இங்கிலீசு படிப்பதால் நன்மையுண்டென்று அவன் எண்ணவில்லை. இந்தியாதேசத்திற்கு வந்துள்ள கேடுகளெல்லாம் இங்கிலீசுப்படிப்பினலென்பது அவன் கொள்கை. "ஆரியர்களுடைய ஒழுக்கவழக்கங்கள் நாளுக்குநாள் குன்றிவிட்டன; கெட்டவழக்கங்கள் வளர்ச்சியடைகின்றன; கழிந்துபோன இனிய பழைய நாட்களை மீட்பதற்கு வழியில்லை" என்பதுதான்கோபாலன்இடைவிடாது செய்யும் முறையீடு. அவனுடைய பெற்றோரும் சுற்றத்தாரும் இங்கிலீசு படிக்கும்படி அவனை நெருக்கினார்கள்; இல்லையாயின் அவன் திருவையாற்றிலுள்ள சமஸ்கிருத பாடசாலையிலாதல் மற்றொன்றிலாதல் சேர்ந்து வேதமோதியிருப்பான். இங்கிலீசு படிக்கும்படி நேரிட்டிருந்த போதினும், அவனது சொற்செயல்கள் அவன் கொள்கைக்கு மாறாக இருக்கவில்லை.

கோபாலன் சென்னபட்டணத்தில் ஒரு விடுதி வீட்டிலிருந்து படித்துக்கொண்டிருந்தான். கிறிஸ்து பிறந்தநாளின் விடுதலை வந்தது. அவன் புதுத்துணி முதலிய சிலபொருள்கள் வாங்கி மூட்டைகட்டிக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டான்.

அவன் போனபோது சிதம்பரத்திலே திருவாதிரை உற்சவம். அவனுடைய தாயார் கைம்பெண்டாட்டி; திருவாதிரையிலன்று அவள் விடியற்காலையிலெழுந்து நடராசர் தரிசனத்திற்காகத் தீர்த்தமாடச்சென்றாள். பக்கத்துக் கிராமங்களிலிருந்து பெண்கள் பலர் வந்து சிவகங்கைப்படி நாற்புறத்திலும் சூழ்ந்திருந்தார்கள். கோபாலனுடைய தாயார் ஸ்நானஞ்செய்து படியேறும்போது நடேச சாஸ்திரியாரின் மனைவியைக்கண்டாள். அவள் இவளுக்குக் குழந்தைப் பருவந்தொடுத்துச் சிநேகம்.

ஒருவரை ஒருவர் பார்த்துச் சந்தோஷமடைந்து இருவரும் முறைப்படி க்ஷேமம் விசாரித்தபின், நடேச சாஸ்திரியாரின் மனைவி "கோபாலன் வீட்டிலிருக்கிறானா"? என்றுகேட்டாள்.

"வந்திருக்கிறான்; விடுதலை நாள் ஒழிந்து விட்டது; பட்டணம் போகப் போகிறான்" என்றாள் கோபாலனுடைய தாய்.

நடேசசாஸ்திரியாருக்கு ஓரழகிய சிறு பெண்ணிருந்தாள்; அவளுக்கு அப்போது வயது பன்னிரண்டாகிவிட்டது; கல்யாணமாகவில்லை. அவள் பெயர் கமலாம்பாள்.

"எனது கமலத்தை உன்மகன் கோபாலனுக்குக் கல்யாணம் செய்துவைத்தால் நன்றாயிராதா?" என்றாள் நடேசசாஸ்திரியாரின் பாரி.

"அதுதான் எனக்கும் நெடுநாளாக எண்ணம்; என்மகனுக்குக் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டமில்லை. நான் என்ன செய்வேன்! நான் எத்தனை முறை அவனுக்குக் கல்யாணம் பேசினேன்! ஒருமுறையும் அது கைகூடிவரவில்லை" என்று கூறினாள் கைம்பெண்டாட்டி.

"ஆனாலென்ன, இன்னுமொருமுறைகேட்டுப் பார். உன்பிள்ளைக்கு வயதாகிவிட்டது; அவன் கல்யாணம் செய்துகொள்வானானல் உன்மனத்திற்குச் சந்தோஷமாயிருக்கும். ஏன் அவன் கல்யாணம் செய்து கொள்வதில்லை என்கிறான்?"

"நான்கேட்டுப்பார்க்கிறேன்; அவன் உடன்பட்டால் இந்தத் தைமாசத்திலேயே முகூர்த்தம் வைத்துக்கொள்ளலாம்."

தரிசனம்முடிந்து கோபாலனுடைய தாய் வீட்டிற்குப் போனபோது அவன் இடைகழியிலிருந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தான். அவள் மகனைப்பார்த்து "உள்ளேவாடா; நான் உன்னோடு வார்த்தைசொல்லவேண்டும்" என்றாள்.

பத்திரிகையை வைத்துவிட்டுக் கோபாலன்மெதுவாகத்தாய்க்குப்பின்சென்றான். அவள் அவனைத்தனது அறைக்கு அழைத்துக்கொண்டு போய் "அப்பா, நான் உனக்குக் கல்யாணம் பண்ணிவைக்கவிரும்பியிருக்கிறேன். நீ எனதுமூத்தபிள்ளை. எனக்கொரு மணாட்டிப்பெண் எப்போது வருவாளென்று நான் நெடுநாளாகக் காத்திருக்கிறேன். எனது விருப்பத்தை நீ நிறைவேற்றிவைக்கவேண்டும்" என்றாள்.

கோபாலன் கொள்கையை முன்னரே குறிப்பித்திருக்கிறோம். அவனுக்குக் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டமில்லை. அது படிப்புமுடியுமுன் விவாகஞ்செய்து கொள்ளலாகாதென்றாவது பணமில்லை

என்றுவது அன்று. அவனுக்கிருந்த தடைவேறு. அது சாஸ்திரத்தைப் பற்றினது. இந்தக்காலத்துக் கன்னியர்கள் பழைய நாளிலிருந்த பெண்கள்போல அடக்க வொழுக்கமுடையவர்கள் அல்லரென்றும், நிறையில்லாத மனமுடையவர்களென்றும், நல்லுடைகளாலே தங்களை அலங்கரித்துக்கொள்ள விரும்பினவர்களென்றும், சாஸ்திரத்தில் விதித்தபடிகணவனைக்கைதொழுது வாழ்பவரல்லரென்றும், கணவனோடு ஒத்த நிலைமையிலிருக்க விரும்பினவர்களென்றும் அவன் கேள்விப்பட்டிருந்ததன்றிப் பத்திரிகைகளிலும் படித்திருந்தான். ஆயினும் அவன் கணவனையிழந்த தனது தாயாரின் வேண்டுகோளை மறுப்பதெப்படி? தாயார் தனக்குப் பலமுறை சொன்ன சொல்லைத்தட்டி நடந்து பாபஞ் சம்பாதித்துக்கொள்ள அவனுக்கு விருப்பமில்லை. ஆகவே, தாயார் மற்றொருமுறை கேட்பாளாயின் அவள் கேள்விக்குத் தான் உடன்படவேண்டுமென்றும், அப்படி உடன்பட்டாலும் தனதுகொள்கைக்கு மாறாகாதவொருகன்னியைத்தான்தெரிந்து மணஞ்செய்து கொள்ளவேண்டுமென்றும் அவன் முன்னமே நிச்சயித்திருந்தான்.

விவாகவிஷயத்தில் கோபாலனுடைய எண்ணம் முற்றும் வேறென்பது அவனிருந்த விடுதியில் வசித்த அவனது சகபாடிகள்யாவருக்கும் நன்றாகத்தெரியும். இரவிற் சாப்பிட்டுவிட்டு விடுதிவீட்டின் மேற்றளத்தில் வந்து கூடும் பொழுதெல்லாம் அந்த இளைஞர்கள் பேசிக்கொள்வனவற்றுள் இந்த விவாக விஷயம ஒன்று. அப்படிப் பேசும்போதெல்லாம் கோபாலன் "நான் கல்யாணம்செய்துகொள்ள நேரிடின், ஒரு கறுத்த அழகில்லாத பெண்ணையே செய்துகொள்வேன். அழகுள்ள பெண்களுக்கெல்லாம் கர்வம் அதிகம். கணவனுடைய தாய்தந்தையரிடத்தில் அவர்களுக்கு மரியாதைகிடையாது ; கணவனிடத்திலுமப்படியே. பணியுடைய மனைவியர்களாயிருத்தலைவிட்டு அவர்கள் புல்லொழுக்கம்பூண்டுகொள்ளுகிறார்கள். அலங்காரப்பிரியர்கள்; அளவுக்கு மிஞ்சின இறுமாப்புள்ளவர்கள். அவர்கள் தங்களை அழகுள்ளவர்களாக மதித்துக்கொண்டு எந்நேரமும் தங்கள் அழகை எவ்வாறு சிறப்பிக்கலாமென்ற எண்ணமொன்றே உடையவர்களாயிருக்கிறார்கள். அவர்களுக்கு ஐரோப்பியர் உபயோகிக்கும் சோப்புகளும் பவுடரும் வேண்டும்; பட்டுச் சேலைகளும், வெல்வெட் ரவிக்கைகளும் வேண்டும். புருஷனாகவருபவன் இவைகளுக் கெல்லாம் பணம்கொடுக்க வேண்டும். அதுவுமன்றிப் படித்தபெண்ணை நான் விவாகஞ்செய்ய மாட்டேன். அவர்களுக்கு வேலை கதைகள் படிப்பதும், கடுதாசி ஆடுவதும், கடிதம் எழுதுவதுந்தான் ; வீட்டுவேலைதெரியாது ; பூசைபண்ண நேரங்கிடையாது ; பிள்ளைகளைப்பார்க்க முடியாது" என்பான். இவ்விதமான பேச்சுக்களைக் கேட்டுவிட்டு அவன் நண்பர்களுட் சிலர் "நல்லது! கோபாலா, நல்லது ! காலம் வரும்போது நீ என்ன செய்வாயென்பதை நாங்கள் பார்க்கப்போகிறோம். இந்த மாதிரிப் பேசினவர்கள் எத்தனைபேர்! சொல்லுவது எளிது ; சொன்னபடி செய்வது அரிது" என்பார்கள்.

இவ்வாறு தனது நண்பர்கள் தனது திண்மையை ஐயுற்றுக் கூறுவதைக் கேட்டவுடன் கோபாலன் சிறிது கோபமடைந்து, "ஆம், ஆம்; நீங்கள் பார்க்கப் போகிறீர்கள்;அப்பா, நீங்கள் பார்க்கப்போகிறீர்கள். சொல்வதொன்று செய்வதொன்று நான் அன்று" என்பான்.

தாயார் அவனை அடிக்கடிநெருக்கினதின் நிமித்தம் கோபாலன் சம்மதித்து "நல்லதம்மா, எனக்குவரப் போகிற மனைவியை முன்னே நான் பார்த்து எனக்குச் சம்மதிப்படுமாயின் நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளுகிறேன்" என்று சொன்னான்.

தாயார் மனங்களித்து "நீ கல்யாணம் பண்ணிக் கொள்ளு முன்னம் பெண்ணைப் பார்க்கவேண்டுமென்று சொல்லுகிறாய். நல்லது, நான் பார்த்திருக்கும் பெண் நல்ல அழகுள்ளவள் ; கண்டவர் மனத்தைக் கவருபவள். அவளுக்கு வயது பதின்மூன்றாகப்போகிறது" என்றாள்.

கோபாலன் திடுக்கிட்டு "அவள் அவ்வளவு அழகுள்ளவளா?" என்றான். "நிரம்பவழகி! அவளுடைய முகம் இலக்ஷ்மியின் முகமே; மூக்குமது, கண்ணுமது, நெற்றியுமது; நிறம் செந்தாமரைப் புஷ்பம்" என்றாள் அவனுடைய தாய்.

கோபாலன், ஆலோசனையிலாழ்ந்து, மெல்லவாக "அம்மா, அப்படிப்பட்ட பெண்ணை நான் கல்யாணம் பண்ணிக்கொள்ளமாட்டேன்" என்றான்.

அவனுடைய தாய் ஆச்சரியமடைந்து "ஏன்? என்ன காரணம்?" என்றாள்.

"நான் அழகுள்ள பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்ள மாட்டேன்."

"பின்னர் எப்படிப்பட்ட பெண்ணை நீ கல்யாணம் பண்ணிக்கொள்ளுவாய்?"

"நான் ஒரு கறுத்த அழகில்லாத பெண்ணைப் பண்ணிக்கொள்ளுவேன்" என்றான் கோபாலன். அப்போது அவன் குரல் இடியிடித்தாற்போலிருந்தது. அவனுடைய தாய் முன்னிலு மதிகம் ஆச்சரியமடைந்து "அடே மடையா,ஒவ்வொருவரும் அழகுள்ள பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள ஆசைப்படுவார்கள். அழகுள்ள பெண் கிடைப்பது எளிதல்லவே" என்றாள்.

இஷ்டமுள்ளவர்கள் அழகுள்ள பெண்களைக் கல்யாணம் செய்துகொள்ளட்டும். எனக்கழகில்லாத பெண்ணுதான் வேண்டும்" என்றான் கோபாலன். அப்படி அவன்சொன்னபோது அவன் மனத்திற்றோன்றிய பெருமிதங் காரணமாக அவன் முகம் பிரகாசித்தது. அவன் ஆயிரத்திலே ஒருவன் அன்றோ ! அவனும் மற்றெல்லாரையும்போல் ஆசைக்காகக் கல்யாணம் பண்ணிக்கொள்ளுகிறதா?

தாயார் சிறிது மனவருத்த மடைந்ததைக் கண்டு கோபாலன் தனது எண்ணங்களை அவளுக்கு வெளியாகச் சொன்னான். அழகுள்ள பெண் இல்லறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கையுடையவளாயிருத்தல் சிறிதும் முடியாதென்று அவன் எடுத்துக்காட்டினான். பின்பு கடைசியாகத் தனதுகொள்கை மாறாதென்றும், அசையாதென்றும், ஒருகாலும் அழியாதென்றுஞ் சொன்னான்.

அவன் சொன்னவற்றைக் கேட்டபின் அவனுடைய தாய் அன்றுயாதொன்றும் அதனைப்பற்றி அவனோடு பேசவில்லை. அவனுடைய விடுதலைநாளும் முடிந்தது; அவனும் பட்டணம் போய்விட்டான்.

சிலநாள்சென்றபின் நடேச சாஸ்திரியார் மனைவி ஒரு வண்டியிலேறிக்கொண்டு கோபாலனுடைய தாய் வீட்டுக்கு வந்தாள். க்ஷேம சமாசாரங்கள் விசாரித்தபின் நடேச சாஸ்திரியார் மனைவி "மதனி, கோபாலனுக்குச் சம்மதந்தானா?" என்றாள்.

"அவனுக்குக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் பிரியந்தான்; ஆனால் அவனுக்கோரெண்ணமுண்டாயிருக்கிறது."

"என்ன எண்ணம்?"

"முதலில் அவன் ஒம் சொல்வதற்கு முன்னம் தான் பெண்ணைப் பார்க்கவேண்டுமென்று சொன்னான். நான் அதற்கு நல்லதென்று சொன்னேன். அவன் மனத்திற்கியைந்தபடி எல்லாவிதத்தாலும் அழகுள்ள ஒருபெண்ணைக் காண்பிக்கலாமன்றோ? பின்னர் அவன் சொன்னான்: தான் அழகுள்ள பெண்ணைக் கல்யாணம்பண்ணமாட்டானாம். அவனுக்கு ஒரு கறுத்த அழகில்லாத பெண் வேண்டுமாம்.

நடேச சாஸ்திரியாரின் மனைவிக்கு ஆச்சரியமாயிற்று. "இவ்விதமாக இயற்கைக்கு மாறான எண்ணமுடையவர்களைப்பற்றி நான் கேட்டதேயில்லை. ஏன் அவனுக்கு இந்த எண்ணமுண்டாயிற்று?" என்றாள்.

அப்போது கோபாலனுடைய தாய் அவன் தனக்குச் சொன்ன நியாயங்களை எல்லாம் எடுத்து அவளுக்குச் சொன்னாள். அவள் சற்றுநேரம் யோசனை செய்துவிட்டு "நான் ஒரு காரியம் சொல்லுகிறேன்; நீ அந்தப்படி செய், கோபாலனை இந்தச் சனிக்கிழமை இங்கே வரும்படி எழுது. அவன் மனம்போல ஒரு பெண்ணை நீ பார்த்து வைத்திருப்பதாயும் அவனைவந்து பார்க்கும்படியாயும் எழுது. அவன் இங்கே வந்தபின் ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் அவனை எங்கள் வீட்டுக்கு அனுப்பிவை; பின்பு நான் எல்லாம் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்றாள்.

கோபாலனுடைய தாய் அதற்குடன்பட்டாள். அவள் எண்ணினாள்: "நடேசசாஸ்திரியார் பாரியாளுடையகருத்து கோபாலன் தன்மகள் கமலாம்பாளைக்கண்டால் அவளைக் கல்யாணம்பண்ணிக்கொள்ளாதிரானென்பது. அது ஆச்சரியமன்று ; அந்தப் பெண் அவ்வளவு அழகுள்ளவள்தான்" என்று.

கோபாலன் சனிக்கிழமை வீடுவந்து சேர்ந்தான். மறுநாள் சாயங்காலம் அவன் விரித்த தலையோடு ஒரு மாட்டுவண்டியிலேறிப் புலியூர்ப் பக்கத்திலிருந்த நடேசசாஸ்திரியார் வீட்டைநோக்கிப் புறப்பட்டான்.

அங்கே போய்ச் சேர்ந்தவுடன் நடேச சாஸ்திரியார் ஏதோ ஒரு வேலையாக வெளியே போய்விட்டதாக அவன் அறிந்தான். ஓர் இளைஞன் அவனை மரியாதையாக எதிர்கொண்டு உள்ளே அழைத்துச் சென்றான். அந்த இளைஞன் நடேசசாஸ்திரியாருடைய தமையன் பிள்ளை. சிறிது நேரமானவுடன் ஒரு வேலைகாரப்பெண் வந்து அவர்களை உள்ளே அழைப்பதாகச் சொன்னாள். அவள் கோபாலனைப் பார்த்து விஷமமாக முறுவலித்தாள்.

இளைஞர்கள் இருவரும் உள்ளே சென்றார்கள். கோபாலன்வேலைக்காரரெல்லாம்தன்னைப்பார்த்து இரகசி

யமாகச் சிரிப்பதாக எண்ணிக்கொண்டான். மிக அழகாக அலங்காரஞ்செய்யப்பட்டிருந்த ஓரறைக்கு அவனை அழைத்துக்கொண்டு போனார்கள். அந்த அறையின் நடுவில் ஓராசன மிட்டிருந்தது. அதற்கு எதிரில் வெள்ளித்தட்டங்களில் பழங்களுஞ் சிற்றுண்டிகளும் வைத்திருந்தன. அதற்குச் சற்றுத் தள்ளி வேறொரு மனைபோட்டிருந்தது. நடேச சாஸ்திரியார் தமையன்பிள்ளை கேள்விப்படி கோபாலன் சிற்றுண்டி சாப்பிட ஆசனத்தின்மேல் இருந்தான். அப்போது காற்சிலம்பொலி வெளியில் கேட்டது. வேலைகாரியொருத்தியொருபெண்ணை அழைத்து வந்தாள். அந்தப் பெண்வந்து மனைமேலிருந்து மருண்டு நான்கு புறமும் பார்த்தாள்.

கோபாலன் வெட்கமுற்றுத் தலையைக்குனிந்துகொண்டான். அவன் பழத்தை மெல்ல மெல்லத் தின்றுகொண்டு, அந்தப் பெண்ணைக் கடைக்கண்ணால் பார்த்தான். அவள் கறுப்பு வர்ணமுள்ள உண்ணாட்டுப்புடைவை ஒன்று உடுத்திருந்தாள். அவளது தலை பின்னிச்சடைபோடாமல் கோதி முடித்திருந்தது. குழிந்து ஆழ்ந்து சிறுகிய அவளுடைய கண்கள் ஓயாமல் நான்கு புறத்துமோடிக் கொண்டிருந்தன. அவளுக்கு நெற்றி உயர்ந்திருந்தது; மோவாய் சிறிதுமில்லை; முன்பல் வெளிப்பட்டிருந்தது. அவள் தன் எண்ணம்போலத் தக்க மனைவியாவாளென்று கோபாலன் எண்ணினான். அவன் செருமித் தொண்டையைச் சுத்திசெய்துகொண்டு, மனத்தை ஒருப்படுத்தி, அந்தப் பெண்ணைநோக்கி "உனது பெயரென்ன?" என்று கேட்டான்.

அந்தப்பெண் சட்டென்று கோபாலனைப்பார்த்து நாக்கை நீட்டி "என்ன?" என்று கேட்டாள்.

"உனது பெயரென்ன?" என்றான் கோபாலன்.

"என்பேர் காவேரி" என்றாள் அந்தப்பெண்

அவள் அவ்வாறு சொன்னதைக் கேட்டதும் நடேச சாஸ்திரியாரின் தமையன்பிள்ளையும் அந்தப்பெண்ணை அழைத்துவந்த வேலைகாரியும் அவளைக்கோபித்துப்பார்த்தார்கள். அவள் உடனே "எனது பெயர் கமலாம்பாள்" என்றாள்.

நடேசசாஸ்திரியாருடைய தமையன்பிள்ளை "முன்னே அவளுக்குப் பேர் காவேரி; இப்போது நாங்கள் அவளைக் கமலாம்பாள் என்றுதான் சொல்லுகிறது" என்றான்.

கோபாலன் எண்ணினான்: "மாற்றிவைத்த பெயர் நன்றாயில்லை. கமலாம்பாள்!! காவேரி என்பது மிகவும் நன்றாயிருக்கிறது. நமது நாட்டிற்குயிர் போன்றுள்ள நதியின்பெயர்; மரஞ்செடிகளின்பெயரன்று. நான் இவளைக் கல்யாணம்செய்துகொண்டால் இந்தப் பெயரைத்தான் மறுபடி வைத்துக்கொள்வேன்" என்று. அவன் பின்பு அந்தப்பெண்ணை நோக்கி "நீ படிக்கிறாயா?" என்று கேட்டான்.

அந்தப் பெண் முன்போலவே நாக்கை நீட்டி "என்ன?" என்று கேட்டாள்.

"நீ படிக்கிறாயா?" என்றான் கோபாலன்.

"நான் படிக்கிறதில்லை. என் தம்பி—" என்று தொடங்கினாள் அந்தப்பெண்.

வேலைகாரியும் நடேச சாஸ்திரியாருடைய தமையன்பிள்ளையும் அவளைக் கோபித்துப் பார்க்கவே அவள் பேசாது இருந்துவிட்டாள். கோபாலனுக்கு மிகவுஞ் சந்தோஷமாயிற்று. அதுதான் அவன் விரும்பினது. இனி அவளைப் புராதன கொள்கைப்படி மனையறம் நடத்தத் தகுந்தவளாக்குவது தனக்கு எளிதென்று அவன் எண்ணினான். முதலில் அவன் அவளைக்கண்ணாற் பார்த்துவிட்டான் ஒரு காரியம் முடிந்தது. இனி அவன் எடுத்துக்கொண்ட விரதமிருக்கிறது. கல்யாணம் நிச்சயமானபின் முகூர்த்தத்திற்குத் தன் நண்பர்களை வரவழைக்க வேண்டுமென்று அவன் எண்ணினான் பின்னர் அவன் அந்தப் பெண்ணை நோக்கி "நல்லது, இனி நீ போகலாம்" என்று சொன்னான்.

அவள் முன்போலவே நாக்கை நீட்டி "என்ன" என்றாள். "நீ போகலாம்" என்றான் கோபாலன்.

வேலைகாரி அவளை அழைத்துக்கொண்டு போயினாள். கோபாலனும் சிற்றுண்டி சாப்பிட்டு முடித்தான். அப்போது பதின்மூன்று வயதுள்ள ஒரு பெண் வெள்ளித் தட்டத்தில் தாம்பூலம் கொண்டு வந்தாள். அவள் மிகவும் அழகுள்ளவள்; குறநாட்டுப் பட்டுச் சிற்றாடை கட்டியிருந்தாள்; காலில் ஒரு வெள்ளிக்காப்பும் சதங்கையும் கையில் பொற்காப்புங் கொலுசும் அணிந்திருந்தாள். தாம்பூலத்தட்டைக் கோபாலன்முன் வைத்துவிட்டு அவள் போனாள். போகும்போது அவள் கோபாலனைக் கடைக்கண்ணாற் பார்த்துப் புன்முறுவல் செய்தாள். "இவள் ஓரழகிதான். இவளைக் கல்யாணம் செய்துகொண்டால் நான் என்னபாடு படமாட்டேன்? எனது நெடுநாளை விரதம் பாழாய்ப் போய்விடுமன்றோ" என்று எண்ணினான் கோபாலன். தான்

கொண்ட விரதம் நிறைவேறினதைப்பற்றி அவன் தன்னைத்தானே புகழ்ந்து மிக்க மனக்கிளர்ச்சி அடைந்தான்.

நடேச சாஸ்திரியாருடைய தமையன் பிள்ளை கோபாலனை முதற்கட்டுக் கழைத்துக்கொண்டுபோனான். வேலைகாரி கொஞ்சம் புன்சிரிப்போடு "கல்யாணப்பெண்ணைப் பார்த்ததில் உங்களுக்குச் சம்மதந்தானோ வென்று எங்கள் அம்மாள் கேட்கிறார்கள்" என்றாள். கோபாலன் பெருமிதத்தோடு "ஆம்" என்றான்.

திரும்பி வீட்டுக்குப் போகும்போது அன்றுசாயந்தரம் நடந்தவைகளை எல்லாம் கோபாலன்மனத்தில் எண்ணிக்கொண்டு போனான். அவன் போகும் வழியிலே அந்த ஊர்ப்பெண்கள் அநேகர் கோயிலிருந்து ஜலமெடுத்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருடைய முகத்தையும் கோபாலன் பார்த்தான். சிலருடைய முகங்கள் சிவப்பாயிருந்தன; பலருடைய முகங்கள் கறுப்பாயிருந்தன. அவர்கள் ஒருவருடைய முகமாவது காவேரியின் முகம்போல அவலக்ஷண முள்ளதாயிருக்கவில்லை. கோபாலன் ஏறிவந்தவண்டி ஊரைக்கடந்து சென்றது. அப்போது அவன் தான் தனது மனத்தை அது நினைத்தபடி செல்லவிடாது அடக்கித் தன் கொள்கையை முடித்து விட்டதற்காகப் பெருமித மடைந்தான். ஆயினும் தான் கலியாணம் செய்துகொள்ள நிச்சயித்த பெண் அவ்வளவு அவலக்ஷண முள்ளவளாயிருப்பது அவசியமில்லை என்று அவனுக்குத் தோன்றிற்று. "நிச்சயஞ் செய்தாய்விட்டது. இனி ஆலோசித்துப் பயனென்?" என்று அவன் எண்ணினான். அவ்வாறெண்ணிக் கொண்டு வீடுசேர்ந்தான். அவனைக் கண்டவுடன் அவனுடைய தாயார் "என்ன, பெண்ணைப் பார்த்தாயா" என்று ஆவலோடு கேட்டாள்.

"ஆம் பார்த்தேன்" என்றான் கோபாலன்.

"அப்படியானால், நான் அந்தப்பெண்ணைநிச்சயம் செய்யட்டுமா" என்றாள் அவன்றாயார்.

"ஆம்" என்றான் கோபாலன்.

"வருகிற தைமாதத்திலே ஆகலாமா" என்று கேட்டாள் தாய்.

"அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி நழுவிவிட்டான் கோபாலன். தாய் மகனுக்கு மனஞ் சந்தோஷமாயில்லை என்பதைக் கண்டுகொண்டாள். அவள் எண்ணினாள்: "அவனுக்கு அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் பி[illegible]தான்; இருந்தாலும் அழகுள்ளபெண்ணைக் கல்யாணம் செய்துகொள்வதில்லை என்று பலமுறையும் சபதஞ்செய்துவிட்டு இப்போது ஒரு நல்ல அழகுள்ளபெண்ணைக் கல்யாணஞ்செய்துகொள்ள நிச்சயித்ததற்கு வெட்கப்படுகிறான்" என்று. கோபாலன் அன்றிரவு சாப்பிடவில்லை. தான் போயிருந்த வீட்டில் அதிகமாகச் சாப்பிட்டு விட்டதாகவும் தனக்குப் பசியில்லை என்றும் அவன் சொல்லிவிட்டான். தான் தன் மனத்தை அடக்கித் தனது கொள்கையை முடித்து விட்டேனென்று அவன்கொண்ட பெருமிதம் சிறிது சிறிதாகக் குறையத் தலைப்பட்டது. காவேரியின் முகத்தை நினைக்கும் போதெல்லாம் அவன் மனம் அழுங்கினது. அவள் அவலக்ஷணமுள்ளவளாயிருந்தாலும் கொஞ்சமாவது அறிவுள்ளவளாயிருந்தால் குற்றமில்லையே என்று அவன் எண்ணினான். திங்கட்கிழமை காலை கோபாலன் பட்டணத்திற்கு ரயிலேறிப் போயினான். அவன் போகும்போது தாயார் "முகூர்த்தத்திற்குப் பத்துநாள் தானிருக்கிறது; அதற்கு இரண்டு நாளுக்குமுன்னரேயே வந்துவிடு" என்று சொன்னாள்.

விடுதி வீட்டிலே கோபாலனுடைய தோழர்கள் அவன் முகம் வாடியிருப்பதை நோக்கினார்கள். தனது அறைக்குள்ளே போய் அவன் தனியே யிருந்தான். அவன் சிதம்பரத்திற்குப்போகுமுன்னரே தனது தோழர்களுக்குத் தான்போகுங்காரியம் இன்னதென்று சொல்லியிருந்தான்; அதனால் அவர்கள் ஒருவர்பின் ஒருவராக அவன் அறைக்குள்வந்து "என்ன சமாசாரம்?" என்றுகேட்டார்கள்.

கோபாலன் சங்கடப்பட்டுச் சிரித்து "எல்லாம் நல்ல சமாசாரந்தான்" என்றான். அவர்கள் அவனைப்பெண் எப்படியிருப்பாளென்றும் படித்தவளோ என்றும் வயதென்னவென்றும் கேட்டார்கள். ஒருவன் திடீரென்று பெண்ணின் பெயரென்னவென்று கேட்டான். கோபாலன் பெயரைச் சொன்னான். அதைக் கேட்டவுடனே ஒவ்வொருவர் முகத்திலும் ஒரு நகைக்குறிப்புத் தோன்றிற்று. ஒருவன் மாத்திரம் தன்னை அடக்கிக்கொள்ளமுடியாமல் "காவேரி! ஆகா! காவேரி! நல்லொரு பெயர், இல்லையா?" என்று சிரித்தான். "ஏனடா ராமா! சிரிக்கிறாய்?" என்றான் கிட்டு. "நான் சிரிக்கவில்லை. இ! இ! இ! நான் ஏன் சிரிக்கவேண்டும்?

இ! இ!! என்று மீட்டும் சிரித்தான் ராமு.

"அந்தப் பெயருக்கென்ன! அது புராதனமான பெயர்! இந்தக் காலத்தில் உங்களுக்குச் சரசி, ராஜி, ராஜேஸ்வரி என்று புதுப்புதுப் பெயர்கள் வேண்டும்" என்றான் ராதாகிருஷ்ணன். அதைக் கேட்டுக் கோபாலன் ஆலோசனைகொண்டு தலைஅசைத்தான். இவைகளில் அவனுக்கிருந்த பழைய ஊக்கம் இப்போது அதிகம் குறைந்துவிட்டது. முகூர்த்தத்திற்கு இன்னும் ஒன்பது நாள் தான் இருந்தது. அந்த ஒன்பது நாளும் கோபாலனுக்கு எவ்வாறு கழிந்ததென்பது அவனுக்குத் தெரியும். அவனுடைய தோழருக்கும் ஒரு சிறிது தெரியும். காவேரியை நினைக்க நினைக்க அவனுக்கு மனக்கலக்கமதிகமாயிற்று. அவன் கல்லூரிக்குப் போனபோதிலும் அங்கே சொன்ன பாடமொன்றும் அவன் காதில் நுழையவில்லை. விடுதிவீட்டில் அவனுக்கு நன்றாகச் சாப்பிடுபவனென்று பெயர். இப்போது அவன் இலையில் வைத்த சாதத்தில் பாதியிருந்தது. தோழர்களோடு பேசுவதை அவன் விட்டுவிட்டான். ஒன்றிலும் அவனுக்கு மனஞ் செல்லவில்லை. "கோபாலா, என்னடா! மன்மதபாணம் பலமாய்ப் பாய்ந்துவிட்டதுபோலிருக்கிறது!" என்று அவனுடையதோழர்கள் நகையாடத் தொடங்கினார்கள். இராத்திரியில் படுக்கையில் படுத்தாலும் அவனுக்கு நித்திரை வருவதில்லை; அந்தப்புறமும்இந்தப்புறமும் உருண்டுருண்டு கிடப்பான். கடைசியாய் நித்திரை வந்தபோது பயங்கரமான கனவுகள் காண்பான்.

ஒரு கனவிலே காவேரியின் முகம் அவனுக்குக் காளியின் முகம்போலக் காணப்பட்டது. அவன் கண்ணுக்குப் புலப்பட்ட அவளுடைய நாக்கின் சிறு பாகம் அக்கினிக் கொழுந்து போலத் தோன்றிற்று. அவளுக்கு நாலு கைகள் இருந்தன. ஒரு கையில் இரத்தந்தோய்ந்த வாளிருந்தது; மற்றொரு கையில் வெட்டுண்ட தலை யொன்றிருந்தது. அந்தத் தலை கோபாலனுடைய தலைபோலக் காணப்பட்டது. மற்றொருகனவிலே அவன் ஒருமுள்ளடர்ந்தகாட்டிற்குள் போய் அகப்பட்டுக்கொண்டான். அந்தக் காட்டிலிருந்து வெளிப்படுவதற்கு அவன் கஷ்டப்பட்டு வழி தேடிக்கொண்டிருக்கும்போதுஎருமைஒன்றுஅவனை முட்ட வந்தது. அந்த எருமை ஒரு கறுப்புப் புடைவை போர்த்திருந்தது. அதன் முகம் காவேரியின் முகமே. ஆயினும் அதற்கு இரண்டு கொம்பிருந்தன. முகூர்த்தத்திற்கு மூன்று நாள் இருந்தபோதுகோபாலன் தனதுதாயாருக்குக்கடிதமெழுதிக் கல்யாணத்தை நிறுத்திவிட வேண்டுமென்று எண்ணினான். அவன் அன்று கல்லூரிக்குப் போகவில்லை. தனது அறைக்குள்ளே தன்னந்தனியே இருந்து கடிதமெழுதி யெழுதி அவன் கிழித்துக்கொண்டிருந்தான். "கல்யாணம் குழம்பிவிட்டதென்று கேட்டால் தனது தோழர்கள் என்ன சொல்வார்கள்? அவர்களுடைய சிரிப்பையும் பழிப்பையும் தன்னால் எவ்வாறு தாங்கமுடியும்?" என்று அவன் எண்ணினான். அவன் அன்றிரவு படுக்கையில் கிடந்துகொண்டு ஒருவரோடும் பேசாது தேசாந்தரம் போய் விடுவதாக நிச்சயித்தான். உடனே அவன் படுக்கையைவிட்டெழுந்து விளக்கைக் கொளுத்தி ரயில்வேக் கயிட்டுக்களைத் திருப்பித்திருப்பிப் பார்த்தான். பின்பு பொழுது விடிந்தவுடனே அவன் மனம் மாறிவிட்டது.' என்ன! இத்தனை நாளும் இவ்வளவு பெருமிதம் பேசிவிட்டுக் கடைசியில் ஏழைநெஞ்சன் என்று பெயரெடுப்பதா? அது ஒருபோதும் ஆகாது. என்னவந்தாலும் வரட்டும்; நான் கொண்ட விரதத்தை முடித்தேதீர்க்கவேண்டும்" என்று அவன் எண்ணினான்.

குறித்த தினத்தில் அவன் வீட்டிற்குச் சென்று முகூர்த்தத்தன்று கல்யாணப்பந்தலிலும் போய்ச் சேர்ந்தான். அங்கிருந்த ஜனக்கூட்டத்தையும் வெளிச்சத்தையும் ஆரவாரத்தையும் பார்ககவே பத்து நாளாய் அவன் பட்ட மனவருத்தம் போய் அவனுக்கு ஓர் உற்சாகம் உண்டாயிற்று. போர்முகத்திலே ஏழைகள் கூடப் பயம் நீங்கி விடுவார்கள்.

முகூர்த்தம் ஆரம்பித்தது. அவன் மனமும் வைராக்கியமடைந்தது. அச்சமாவது அழுகையாவது ஆசையாவது அவலமாவது அவனுக்கு உண்டாகவில்லை. கடைசியாய்க் கல்யாணப்பெண்ணைப் பந்தலுக்கு அழைத்து வந்தார்கள். பெண்ணின் முகத்தைப் பார்த்தவுடன் கோபாலன் அளவில்லாத ஆச்சரியமடைந்தான். அவனை இந்தப் பத்துநாளும் பயப்படுத்தின பேய் இதுதானா? அவனுடைய கனவில் வந்து தோன்றின அவலக்ஷணமுள்ள காவேரி இவளல்லவே! அவனுக்கு அன்று வெள்ளித் தட்டத்தில் தாம்பூலங்கொண்டுவந்த அழகியன்றோ இவள்!

நாலாநாளிரவு கோபாலன் தனது நாயகியோடு பேசமுயன்றான். சிறிது நேரம்வரை அவளைப்பேசப்பண்ண அவனால் முடியவில்லை. கடைசியாய் அவன் ஓர் உபாயம்செய்தான். அவளுடைய மனுஷர்கள் மேல் ஏதாவது குற்றம் சொன்னால் அவள் அதனை மறுக்கப்புகுவாள் என்று எண்ணி "உனது தாயார் அன்றைக்கு இந்தவேலை ஏன் எனக்குச் செய்தாள்" என்று அவன் கேட்டான்.

"நான் அழகாயிருக்கிறபடியால் என்னை நீர் கல்யாணம் பண்ணிக்கொள்ள மாட்டேனென்று சொல்லவில்லையோ? அவர்கள் செய்தது உமக்குத்தகும்" என்றாள் அவன் நாயகி.

அதுவரைக்கும் கோபாலனுக்கு அன்று அவர்கள் செயதது என்னவென்று விளங்கவில்லை. அவன் அப்போது தெளிந்து "அன்று நான் பார்த்த பெண் யார்" என்று கேட்டான்.

"அவள் இந்த ஊர்வாணியன் மகள். அவர்கள் செய்தது உமக்குத்தகும்" என்றாள் அவன் மணவாட்டி.

* * *

கடைசியாகக் கோபாலன் தபாற்காரன் வருவதற்கு நாலு நாழிகைக்கு முன்னரே பட்டணத்து விடுதிவீட்டின் வாசலிலே தபாலுக்காகத் தெருவிற் காத்து நிற்கத்தலைப்பட்டான்.

[இக்கதை வங்காளிப் பாஷையிலிருந்தெடுத்து அமைக்கப்பட்டது]

தி. த. கனகசுந்தரம் பிள்ளை, பி. ஏ.

சொல்லும் பொருளுமற்றுச் சும்மாவிருப்பதற்கே
யல்லும் பகலுமெனக் காசை பராபரமே

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க, வெல்
லார்க்குஞ் சொல்லுவதென்னிச்சை பராபரமே

எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
றெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே

இரவுபகலற்றலிடத் தேகாந்த யோகம்
வரவுந்திருக்கருணை வையாய் பராபரமே

வித்தன்றி யாதும் விளைவதுண்டோ நின்னருளாஞ்
சித்தன்றி யாங்களுண்டோ செப்பாய் பராபரமே

எத்தன்மைக்குற்ற மியற்றிடினுந்தாய் பொறுக்கு
மத்தன்மை நின்னருளு மன்றோ பராபரமே

—தாயுமானவர்.

நமது பெண்களுக்கு எத்தகைய கல்வி கற்பிக்கவேண்டும்

FEMALE EDUCATION—ITS NATURE

பெண்களுக்குக் கல்வி அவசியமா இல்லையா என்றவிஷயமே நம்மவர் மனதைச் சிறிது காலமாகக் கவர்ந்திருந்தது. பூர்வத்தில் நம்நாட்டுப் பெண்களுக்கும் புருஷரைப்போலவே கல்வி கற்பிக்கப் பட்டிருந்ததென்றும், பற்பல காரணச் செறிவால் அவ்வழக்கம் காலக்கிரமத்தில் கைநழுவவிடப்பட்டதென்றும், இந்து சாஸ்திராபிமானிகளெல்லாம் வாதித்தனர். பெண்களுக்குக் கல்வி அவசியமில்லையென்றும், புருஷரைப்போலவே பெண்களும் கல்விப்பயிர்ச்சி யடையுங்கால் நமது சமுதாயமே தலைகீழாய் மறிந்து விடுமென்றும் நம்மவரிற் பலர் எதிர் வழக்குரைத்தனர். இவ்வகையினரில் கலாசாலைப் பட்டதாரிகளும் இல்லாதில்லை. இந்து தேசத்தில் பெண் கல்வி குதிரைக் கொம்பாயிருந்ததென்றும் ஆங்கிலேயர் நம்நாட்டில் காலூன்றி மேற்றிசை நாகரீகம் பரப்பிய பின்னரே அதனைப்பற்றிய எண்ணம் நம்மவர் மனதிற் கிளம்பிற்றென்றும் இன்னொரு வகுப்பினர் தருக்கித்தனர். எவர் கூற்று எங்ஙனமாயினும், பெண்களுக்குக் கல்வி அவசியமே என்னும் எண்ணம் நம்மவர் மனதிற் பதிந்ததும், அதற்கேற்ப பற்பல பாடசாலைகள் ஆங்காங்கே தோன்றியதும், வருஷாவருஷம் பற்பல சிறுமிகள் கலாசாலைப் பட்டம் பெற்று வெளிவருவதும், மிகமகிழத் தக்கனவே. இந்நன்னிலைமைக்கு ஆங்கிலேயர் ஆளுகையே பெரிதும் உதவிபுரிந்ததென்ற உண்மையும் மறக்கற்பாலதன்று.

ஆனால் இப்பொழுது நமது பெண்களுக்குப் புகட்டப்படும் கல்வி நம் நாட்டின் நிலைமைக்கும் நம்மவர் தகுதிக்கும் பொருத்தமானதாவென்றும், அன்றாயின் நமது பெண்களுக்கு எத்தகைய கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்றும் கவனிக்கவேண்டுவது அநாவசியமாகாது.

அவ்விஷயத்தை ஆராயத் தொடங்குமுன் பெண்களைப்பற்றி நம் நாட்டு வித்வான்களும் புறநாட்டுப் பண்டிதர்களும் எத்தகைய அபிப்பிராயம் கொண்டிருக்கின்றனரென்று நோக்குவதும் பொருத்தமாகவேயிருக்கும். அதனை ஈண்டு நோக்கப் புகுவம்.

"எந்தக் காலம்வரை பெண்கள் முகமலர்ச்சியில்லாதிருக்கின்றனரோ அந்தக்காலம் வரை உலகம் சூன்யபிரதேசமாகவேஇருக்கும்;மனிதரோ—முயற்சியற்றவர்களாயிருப்பார்கள்." —காம்பெல்.

"பெண்மணியே! ஆடவரை நற்குணமுடையவராக்க கடவுள் உன்னைப் படைத்தார். நீ இல்லாவிட்டால் நாங்கள் முழுமூடராகவே இருப்போம்." —தாமஸ் வுட்வே.

"ஆடவர் மனது எத்தகைய துன்பங்களால் வருத்தப்பட்டிருந்தாலும் மாதர்களின் கடைக்கண்பார்வை ஒன்றுக்கு அவரை அத்துன்பங்களிலிருந்து கரையேற்ற சக்தியுண்டு." —கே.

"பூமியில் மிகரம்மியமான பொருள் பெண்ணேயாம்." —லவல்.

"குணவதியான பெண்ணுக்கு, உலகத்திலுள்ள இரத்தினங்கள் யாவற்றினும் மிகுதியான விலையுண்டு." —பைபில்.

"நாணமில்லா மனைவி அவள் புருஷனுடைய பாவ பலமேயாவள்." —யங்க்.

"நாணமுடைய பெண்கள் பெரும்பாலும் வினயமுடையவர்களாகவும் குணவதிகளாகவு மிருப்பார்கள். நன்னெறி பயில குணவதிகளின் சம்சர்க்கத்தைக் காட்டிலும் மேலான பாடசாலைஎது?" —ஹியூம்.

"பூவுலகிலுள்ள நரகமும் சுவர்க்கமும் பெண்களில் அடங்கியிருக்கின்றன." —டெனிசன்.

"நீ உன் இஷ்டப்பிரகாரம் எல்லாப் பந்தங்களையும் நீக்கி நில்;—என்றாலும்—பெண் உன்னை ஆளுகிறாள்." —மூர்.

"புருஷர் அவர் இஷ்டப்படி சொல்லட்டும்; செய்யட்டும்; அவரை ஆளுவது பெண்களேயாம்." —பிக்கர்ஸ்டர்.

"ஒரு பெண்ணை ஆள ஒருநாட்டை ஆளப் போதுமான சக்தியிலும் மிகுதியான சக்திவேண்டும்." —பியூட்டு.

"பெண்ணும் திராக்ஷாரசமும் வாலிபனையும் வயோதிகனையும் ஒருப்போல வசீகரப்படுத்துகின்றன." —மில்டன்.

"நான்படித்த நூலெல்லாம் பெண்களின் கண்ணோட்டமே. என் பிழைகளெல்லாம் அவற்றினின்றும் கிடைத்தனவே." —டி. மூர்.

"எப்போதும் முணுமுணுக்கிற ஒருபெண்ணோடு மாளிகையில் வசிப்பதைப் பார்க்கிலும் குணவதி ஒருவளோடு சிறுகுடிசையில் வசிப்பது மேலானது." —பைபில்.

"பெண்கள் தேவாலயத்தில் ஞானிகளாகவும், வீட்டின் வெளியே தேவிகளாகவும், வீட்டினுள்ளே நீலிகளாகவும் இருக்கிறார்கள்." —ஜி. வில்க்கின்ஸ்.

"கட்டழகமைந்த ஒரு பெண் நகைக்கும்பொழுது அவளுடைய பணப்பெட்டி அழுகிறதெனக் கருதவேண்டும். பெண்களுக்கு அவர் விருப்பப்படி நகைக்கவும் அழவும் சக்தியுண்டு." —அடிசன்.

"பொன்னை நெருப்பைக்கொண்டும், பெண்ணைப் பொன்னைக்கொண்டும், மனிதனைப் பெண்ணைக்கொண்டும் சோதனை செய்யலாம்." —பெஞ்சமின் பிராங்கிலின்.

"பெண்கள் நேசமாயிருக்கும்பொழுதும் பகையாயிருக்கும்பொழுதும் எதுவுஞ்செய்யப் பின்னடையார்கள்" —கூலிக்கிபர்.

"பெண்கள் மனதும் மாரிகாலக்காற்றும் எப்பொழுதும் மாறுதலடைந்து கொண்டேயிருக்கும்." —போப்.

"பெண்களின் அன்பும் நம்பிக்கையும் மணல்மேலெழுத்தையொக்கும்." —ஸ்காட்டு.

"புருஷனுக்கு உலகம் அவன்மனமும்,பெண்களுக்கு அவள் மனம்உலகமுமாக இருக்கின்றது." —லேடி பிலங்டன்.

"தாரமாறுதது வாழ்க்கையன்று," —பழமொழிக்காஞ்சி.

"நீறில்லா நெற்றிபாழ், நெய்யில்லா வுண்டிபாழ்
ஆறில்லா ஊருக் கழகுபாழ்—மாறில்
உடற்பிறப் பில்லா உடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை" —"ஔவையார்"

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை" —திருக்குறள்.

"வினைகாத்து வந்த விருந்தோம்பி நின்றான்
மனைவாழ்க்கை நன்று தவத்திற்—புனைகோதை
மெல்லிய னல்லாளு நல்லள் விருந்தோம்பிச்
சொல்லெதிர் சொல்லா ளெனில்"
—"அறநெறிச்சாரம்"

"தூமகேது புவிக்கெனத் தோன்றிய
வாமமேகலை மங்கையரால் வருங்
காமமில்லை யெனிற்கடுங் கேடெனு
நாமமில்லை நரகமு மில்லையே" —கம்பர்.

"ஓதி யுணரினும், மாதருள்ள
மலையெறி கடலினுஞ் சலன மென்ப,
திரைபொரில் கரையினும் வெளியினு மன்றி,
கயத்தினு மகத்தினுங் கலக்க மவர்க்கிலை,
தியக்கமு மயக்கமுஞ் செறிவ தரிவையர்,
உள்ளப் பரப்பி லொருபுறத் தன்றி,
பள்ளத் தாழ்ச்சியிற் பரிவும், கொள்கை,
விள்ளா முரணும், மெய்ம்மையிற் றெளிவும்
உள்ளார், அவர்தம் முறுதிநீ யுணராய்."
—"மனோன் மணீயம்"

"பறைநன்று பண்ணமையா யாழி னிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரின்—பண்ணழின்
தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரிற்
தீர்தலிற் றீப்புகுத னன்று" —நான்மணிக்கடிகை.

சுகாதாரவிளக்கம்

HYGIENE

பண்டித நடேசசாஸ்திரியார் எழுதியது

XII அதிகாரம்

தொத்துநோய்கள்

143. தொத்துநோய்.—நமது ஆரோக்கியத்துக்கு முக்கிய சத்துருவாக தொத்துநோயைச் சொல்லலாம் இவ்வியாதி ஓரிடத்தில் ஆரம்பித்தால் பல காரணங்களால் எல்லாவிடங்களிலும் பரவி தீராத்துயரத்தை விளைவிக்கும்; பலவித அம்மைகள், கக்குவாய் இருமல், பொன்னுக்குவீங்கி, கறப்பான், விஷபேதி, பிளேக் என்று சொல்லப்படும் மகாமாரி, இவைகளைப்போன்றவைகள் முக்கியமான தொத்து நோய்கள். இவைகள் நம்மைப் பற்றிக்கொள்ளாமலிருக்க வழிகளை நாம் கற்றறிந்துகொள்வது எவ்வளவோ நலம். இவ்வறிவால் நமக்கும் நம்மைச் சேர்ந்தவர்களுக்கும் பெரும் உபகாரம் உண்டு.

144. தொத்துவியாதி எவ்வாறு நம்மைப்பற்றுகின்றது.—இந்தப் பரிசீலனை வெகுகாலந் தொடங்கி நடந்துகொண்டே வந்திருக்கின்றது. முடிவாக ஒருவியாதியின் மூலமாகிய கரு நம்மேல் படிவதினால் அவ்வியாதி நம்மிடம் தொத்துகின்ற வியாதியாக வளருகின்றதென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு மனிதனுக்கு தொத்துநோய் என்று சொல்லப்படும் நோய்களில் ஒன்று ஏதோ உண்டாயிருப்பதாக எண்ணிக்கொள்ளுவோம். அந்தநோய் பெரியம்மை யானால் அது எப்படி உண்டாயிற்று? இந்நோய் ஒருவன்மேல் உண்டாவதற்கு முந்தி அவனுடைய தோல் இரத்தம் இவைகளி லெல்லாம் நமது கண்ணுக்குத் தெரியாத அணுக்கள்போன்ற சிறு கருக்கள் வியாதியின் அண்டங்களாக பரிணமித்துக்கொண் டிருந்தனவென்றும் இச்சிறு அண்டங்கள் யாவும் சிதறி வியாதிகள் விளையும் பொழுதுதான் அந்நோயாளியிடம பெரியம்மை தோன்றுகின்றதென்றும் இந்நோய் ஓங்கிவளரும் பொழுது அந்நோயாளியிடம் அம்மையால் உண்டாயிருக்கும் வலி முதலிய உபத்திரவங்கள் வெகு உக்ரமாக விருக்கின்றதென்றும் இந்நோய் வாடி உலர்ந்துவிட்டதும் அம்மையிறங்கி அந்நோயாளி சௌக்கிய மடைகின்றான் என்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

இவ்வண்ணம் தொத்துவியாதியின் கருவை அது அண்டமாயிருந்த காலம்தொடங்கி அது நசிக்கும் காலம்வரையில் நாம் வருணித்தோம். ஒருவன் ஒரு தொத்துநோயில் வருந்தும்பொழுது அவன் இக்கருவைப் பலவிதமாக தனது தேகத்தினின்று மற்றவிடங்களுக்குப் பரவச்செய்கிறான். காற்றின் வழியாகவும் துணிகள் வழியாகவும் தேகத்திலிருந்து உதிரும் பொருக்குகள் முதலிய கழிவுகள் இவைகள் மூலமாகவும் இத்தொத்துநோய்மற்றவிடங்களுக்குப் பரவும்.

ஒருவன்மேல் ஒரு தொத்துநோய் நிற்கின்றவரையில் அவன் தேகமானது அவ்வியாதியின் விதைகள் பயிராயிருக்கும் நாற்றங்கால் என்று நாம் சொல்லலாம். அவன் மூச்சுக்காற்று, வியர்வை, மலம், மூத்திரம், வஸ்திரம் முதலான அவனைச்சம்பந்தித்த எல்லா விஷயங்களிலிருந்தும் தொத்துவியாதியின் வித்துக்கள் எத்திசைகளிலும் பரந்துசென்றுகொண்டே இருக்கின்றன. இவ்வித்துக்களை ஒன்றிற்கப்பால் ஒன்றாய் 20,000 வித்துக்கள் வரிசையாய் வைத்தால் ஒரு அங்குல நீளங்கூட ஆகமாட்டாதென்றால் எவ்வளவு நுட்பமானவைகள் இவைகள் என்பதை நாமே ஒருவாறு யோசித்துக்கொள்ளலாம். இவ்வித்துக்கள் ஒவ்வொன்றும் மற்றொருவன் சரீரத்தைப் பற்றிக்கொண்டுவிட்டால் அச்சரீரத்திலும் பலவித்துக்களை உண்டாக்கி இந்நோய் அதிகமாகப் பரவ இன்னும் ஒரு பெரிய காரணத்தை உண்டாக்கிவைக்கின்றது.

145. அம்மைகுத்துதல்.—அம்மையின் உபத்திரவத்தை ஒருவாறு தடுக்க அம்மை குத்துதல் என்ற ஓர்வழியை சுகசந்தர்சன சாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கின்றார்கள். இவ்வம்மை குத்துவதால் அம்மைநோய் வாராமலே போய்விடுகின்றது. ஒருகால் நோயின் கடூரத்தால் வந்தாலும் அதிகமாக உபத்திரவம் செய்யாமல் போய்விடுகின்றது. ஒருக் குழந்தை பிறந்த 6-வது வாரம்முதல் அதற்கு அம்மை குத்தலாம். அம்மை குத்துவதற்கு சாதகமான அம்மைப்பால் எங்கும்இக்காலத்தில்சுலபமாகக்கிட்டுகின்றது. ஒவ்வொரு நகரத்திலும் மற்ற விடங்களிலும் முனிஸிபாலிடியாரும் மற்ற அதிகாரிகளும் அம்மைகுத்தவேண்டிய ஏற்பாடுகளை முற்றிலும் செய்துவைத் திருக்கின்றார்கள்.

146. அம்மை குத்துவதெப்படி.—நமது தோள்பட்டைக்குக் கீழாக நமது இருபுஜங்களிலும் ஒன்றின்கீழ் மற்றொன்றாக ஒவ்வொருபுஜத்திலும் மூன்று

தழும்புகள் நாம் பார்த்திருக்கின்றோம். அம்மை குத்துகிறவன் அப்புஜங்களின்மேல் தோலை ஒரு சிறுஊசி அல்லது கத்தி முனையால் சிறிது காயப்படுத்தி அக்காயங்களில் அம்மைப்பாலைச் செலுத்துவான். இப்பால் காயங்களில் நன்றாக உலர்ந்துபோகவேண்டும். மூன்று நான்கு நாள் அம்மை வைத்தவிடத்தில் அச்சிறுகாயம் உலர்ந்திருப்பதைத் தவிர வேறொன்றும் காணப்படமாட்டாது. அம்மை வைத்த மூன்றாம் அல்லது நான்காம் நாளில் அக்காயங்கள் கொஞ்சம் தடித்துசிவக்கும். ஐந்தாம்நாளில் சிறு கொப்புளமுண்டாகும். ஐந்தாம்நாள் முதல் பத்தாம்நாள் வரையில் இக்கொப்புளம் பெரியதாய் அதிக சிவந்தும் தடித்தும் வந்து 10 அல்லது 11-வது நாளில் வாட ஆரம்பித்து 12-வது நாளில் அநேகமாய் உலர்ந்துவிடும். அம்மைவைத்த நான்காவது நாள்முதல் 12-வது நாள்வரையில் காய்ச்சல் உண்டு. அதன் பிறகு காலக்கிரமத்தில் அவ்வாறு உலர்ந்த அம்மை உதிர்ந்து தழும்பு தோன்றும். இதுதான் அம்மைவைப்பதென்பது. இவ்வாறு நாம் அம்மை வைத்துக் கொள்ளும்பொழுது அம்மை நோயே நேர்ந்தால் எவ்வாறு நமதுதேகம் மாறுபாடடையுமோ அவ்வாறான மாறுபாட்டை அடைகின்றோமாகையால் அம்மை குத்திக்கொண்டவர்களுக்கு பெரியம்மை புகட்டுகின்றதில்லை என்பது சித்தாந்தம். ஒருதடவை அம்மை புகட்டினவனுக்கும் மற்றொருதடவை புகட்டாது. அம்மையானது நம்மைப்பற்ற ஒருவித ஸாரம் நமதுதேகத்தில் வேண்டும் என்பது ஓர் பிரஸித்த ஸித்தாந்தம். தொத்துவியாதி நம்மை பற்றும்பொழுது அது அச்சாரத்தைமுற்றிலும் வாங்கிக்கொண்டு போய்விடுகின்றதென்றும் அக்காரணத்தால் தொத்துவியாதி நம்மை மறுபடியும் பற்றுகின்றதில்லை என்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அம்மைவைத்துக்கொள்வதால் அத்தொத்துவியாதியை நாமே வரவழைத்துக்கொண்டு அதினின்றும் நம்மை விலக்கிக்கொள்ளுகிறோம்.

சிற்சில சமயத்தில் அம்மை குத்துவது நம்மை பற்றாமலும் நன்றாகப் பலிக்காமலும் போய்விடும். வெகு மும்முரமாய் அம்மை தோன்றும்பொழுது அம்மை குத்தினவர்களுக்கும் அம்மை புகட்டினவர்களுக்கும் சிலவேளையில் அம்மை புகட்டும். ஆனால் அதிக உபத்திரவமுண்டாக்காது. இவைகளை எல்லாம் உத்தேசித்து ஒவ்வொருவனும் 7-வருஷகாலத்துக்கு ஒருதடவை மறுபடியும் மறுபடியும் அம்மை குத்திக்கொள்வது ஆரோக்கியம்.

147. விஷபேதி.—கண்வலி, கக்குவாய் இருமல், சிலவிஷஜ்வரம்(Influenza) (Dengue) காலரா என்று சொல்லப்படும் விஷபேதி இவைகளும் தொத்துவியாதிகள். விஷபேதியால் உண்டாகும் தீமை அதிகம். இது ஒருவித கட்டுக்குள்ளும் அடங்காத தொத்துநோய். இது ஆகாரத்தினாலும், காற்றினாலும், தண்ணீராலும் பரவுகின்றது. இது திடீரென்று சிலவிடங்களில் தோன்றும். சுகாதாரமுறைப்படி என்னதான் சாந்த முறைகள் செய்தாலும் நிற்கமாட்டாது. தோன்றியவிடத்திலிருந்து பதின்காத வழி பரவும். இதன்விஷயமாய் பரீக்ஷிக்க, பரீக்ஷிக்க பிடிபடாத விஷயங்களே அதிகமாகின்றன. இவ்வியாதி சில மணிநேரத்தில் ஒருவனைக் கொல்லும். சிலவேளை 20, 25-நாள் ஒருவன் வருந்தி ஔஷதங்களால் பிழைப்பான். அதிகாரிகளும் வைத்தியர்களும் இதைப்பற்றி ஏற்படுத்தியிருக்கும் சிகிச்சை முறைகளைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் விவரமாகச் சொல்லுவோம்.

148.—பிளேக் என்னும் மகாமாரி.—இது வெகு கொடிய நோய். ஒரு அரைஅணுத் தலையின்மேல் 500,000,000-பிளேக் வித்துக்கள் வரிசையாய் அடுக்கலாம் என்றால் எவ்வளவு கொடியநோய் என்பதை நாமே ஊகித்துக்கொள்ளலாம். ஈரம் இந்நோய்க்கு வெகு அனுகூலம். சூரியகிரணம் பெரும் சத்துரு. இம்மகாமாரியின் உபத்திரவம் வஸ்திரங்கள், கோணிப்பைகள், தின்பண்டங்கள், தானியங்கள் இவைகளில் இந்நோயின் வித்துக்கள் சம்பந்திக்க இப்பண்டங்கள் போகுமிடங்களிலெல்லாம் இந்நோய் பரவும்.

பிரஸித்தவைத்தியர்கள் இந்நோய் எலி, பெருக்கான், குரங்கு, பூனை, அணில், பாம்பு, மான்முதலிய மிருகங்களையும் பற்றுகின்றதென்றும் இவைகள் ஒரு இடத்தில் அதிகமாக மரிக்க நாம் காண்போமேயானால் அவ்விடத்தில் மகாமாரி உண்டாயிற்றென்பதற்கு அடையாளம் என்றும் சொல்லுகின்றார்கள்.

மகாமாரிபற்றியவன் இரண்டொரு ஜாமத்தில் மாண்டுபோவான். சிலவேளைகளில் 10—15-நாள்வரையில் அவஸ்தைப்பட்டு மாண்டுபோவான். பெரும்பாலும் இந்நோவுகண்ட 5-6 நாள் இந்நோவின் உபத்திரவம் அதிகமாகும். இந்நோவின் வித்து ஒருவனைப்பற்றியதும் ஏராளமாகப் பரவிக்கொண்டேயிருக்குமாகையால் பிழைப்பது துர்லபம்.

இம்மகாமாரியின்வித்து நாம் புசிக்குமாகாரத்தாலும் சுவாசிக்கும் காற்றாலும், அருந்தும் நீராலும், இன்னும் நமது தேகத்தின்மேல் ஏதாவது காயம் முதலியவைகளிருந்தால் அவைகளாலும் நமது தேகத்துக்குட் புகுகின்றது.

இந்நோயின் லக்ஷணம் இந்நோய்கண்ட மூன்றாவது மணிக்கெல்லாம் தேகத்தில் ஓர்வித சோர்வு காணுகின்றது. நமது சருமத்தின் நிறம் கொஞ்சம் மஞ்சள்நிறமாய் மாறும். நோய்கண்டவன் சகிக்கக்கூடாத தலைவலியால் வருந்திக்கொண்டு ஒன்றும் தெரியாமல் படுக்கையில் புரண்டுகொண்டிருப்பான். சிற்சில சமயத்தில் இடுப்பு, முதுகு, விலாப்பக்கம் இவைகள் வலிக்கும், தேகமெல்லாம் நடுங்கிக்கொண்டு பெருங்காய்ச்சல் வரும். இரண்டு மூன்றுநாள் விடாக்காய்ச்சலடித்தபிறகு துடைச்சந்து, அக்குள் அல்லது கழுத்து, சிலவேளைகளில் இம்மூன்று ஸ்தலங்கள் இவைகளில் கொப்புளம்தோன்றும். இக்கொப்புளம் உண்டானபின் காய்ச்சலின் வேகம் குறையும். அதன்பிறகு அக்கட்டி தனக்குத்தானே அமுங்கிப் போவதாலும் அல்லது சீழ்கொண்டு பழுத்து உடைவதாலும் இந்நோயின் வேகம் குன்றும். வேகம் குறையாமல் நோய் அதிகரிக்கும்பக்ஷத்தில் நோயாளிவாயாலும் மூக்காலும் இரத்தத்தைக்கக்குவான். மலத்திலும் மூத்திரத்திலும்கூட இரத்தம் கலந்துபோகும், கொப்புளம் அழுகி தேகத்தில் வலியும் மயக்கமும் உண்டாகி நோயாளி பிராணனை விடுவான்.

149. மகா மாரிக்கு அம்மை குத்துதல்.—அம்மைக்கு ஏற்படுத்தியிருப்பதுபோல இம்மகாமாரிக்கும் இந்நோயின் பாலை அம்மையாக நமது மேனியில் குத்துவதைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். அம்மை குத்தினால் எப்படி அம்மை உண்டாவதில்லையோ அதுபோல இம்மகாமாரி அம்மை குத்துவதால் அவ்வளவு. பிரயோஜனமல்லவென்றாலும் பிளேக் அம்மை குத்தப்பட்டவர்களுக்கு பிளேக் உண்டானபொழுது பெரும்பாலும் பிழைத்திருக்கின்றார்களாகையால் இப்பிளேக் அம்மை குத்துதலும் குணமுள்ளதே. இப்பிளேக் அம்மைப்பாலின் வலிமை 6 மாதகாலந்தானாகையால் ஆறுமாதகாலங்களுக்கு ஒருதடவை நாம் அம்மை குத்திக்கொள்ளவேண்டும்.

நீலி வசீகரம்

TAMING OF THE SHREW

கே.—ஓய்! சாமிநாத வாத்தியாரே!

விஜ.—என்னடா, கேசவா?

கே.—சுப்பராயன் நம்மைப்பார்த்துக் கண்ணைச் சிமிட்டியதை நீங்கள் கவனிக்கவில்லையா?

விஜ.—அதனால் என்ன?

கே.—என், அதைச் சொல்லத்தான் என்னை யிங்கே இருக்கச்சொன்னான்.

விஜ.—என்ன, சொல்லு, பார்ப்போம்.

கே.—இதுதான்: ரகுநாததேவர் பொய்யான நல்ல நாயக உடையாரோடு பேசிக்கொண்டிருப்பார்; அவருடைய பெண்ணை ராத்திரி நீர் அழைத்துக் கொண்டு வரவேண்டுமாம். நேராக இங்கேவராமல், அவளுடன் மீனாக்ஷியம்மன் கோவில் வீதியில் பாஸ்கரத்தேவர் வீட்டுக்குப்போம்; அங்கே எல்லாம் தயாராகவிருக்கிறது. ராத்திரியிலேயே தாலி கட்டிவிடவேண்டும். இவ்வளவுதான் நான் சொல்வேன் இதற்கு உம்மால் கையால் ஆகாதபோனால் வசிதேசுவரியின் எண்ணத்தையே விட்டுவிடலாம். (போகிறான்).

விஜ.—அடே! கேசவா!

கே.—நான் நிற்கமாட்டேன்; எனது எஜமானர் ஒரு புரோகிதரை அழைத்துக்கொண்டு பாஸ்கரத்தேவர் வீட்டுக்கு வரச்சொல்லி யிருக்கிறார்; நான் போகவேண்டும்; அங்கே வாரும் பேசிக்கொள்வோம். (போதல்)

விஜ.—இந்தத் திருட்டுக் கல்யாணத்துக்கு இவள் சம்மதிப்பாளோ, என்னவோ? இருந்தாலும் கூடிய வரையில் பார்ப்போம். (போதல்)

களம் 5. ஒரு பாட்டை

(கௌதமி, பிரதாபருத்திரர், நாராயணதேவர், வருதல்)

நா.—வா, போவோம்; இன்னும் இப்படிச் செய்தாயானால், கட்டாயம் திரும்பிப்போய்விடுவேன்; அடடா! எவ்வளவு அழகாய்ச் சந்திரன் பிரகாசிக்கிறது, பார்!

கௌ.—சந்திரனா? சூரியனல்லவா அது? நெருப்பாகத் தகிக்கிறதே. சந்திரனென்கிறீர்களே!

நா.—இவ்வளவு சோபையுடன் பிரகாசிப்பது சந்திரன் என்றுதான் சொல்லுகிறேன்.

கௌ.—ஐயோ! அது சந்திரன் அல்ல. சூரியன் தான் அப்படிப் பிரகாசிக்கிறது.

நா.—அதென்ன? நான் சந்திரனென்கிறேன்: நீ சூரியனென்கிறாயா? சந்திரனோ, நக்ஷத்திரமோ, நான் எப்படிச் சொல்லுகிறேனோ, அப்படியே இருக்கவேண்டும்; இல்லாவிட்டால் உன் பிறந்தகத்துக்குப் போகமாட்டோம; அடே! யாரடா அவன்? வண்டியைத் திருப்பி ஓட்டு; எப்போது பார்த்தாலும் இந்தத் தொல்லைதானா? எடுத்ததற்கெல்லாம் குறுக்கே நின்று தடுக்கிறதுதானா வேலை?

பிர.—அவர் சொல்லுகிறபடியே சொல்வேன்; இல்லாவிட்டால் ஊருக்குப் போவது முடியாது.

கௌ.—வண்டியைத் திருப்பவேண்டாம்; அப்படியே போகட்டும்; இவ்வளவு தூரம் வந்துவிட்டோமே. சூரியனாகத்தானிருக்கட்டும், சந்திரனாகத்தான் இருக்கட்டும் நக்ஷத்திரமாகக்கூட இருக்கட்டும்; வேண்டுமானால் விளக்காகவும் இருக்கட்டும்; உங்களுக்கு எப்படித்தோன்றுகிறதோ அப்படியே யிருக்கிறதாக நான் பாவிக்கிறேன். சத்தியம், இது சத்தியம். வேண்டுமானால் ஆணையிட்டும் கொடுக்கிறேன்.

நா.—அதோ தெரிகிறதே அது சந்திரன்.

கௌ.—ஆமாம்; அது சந்திரன் தான்.

நா.—நீ பொய் சொல்லுகிறாய்; அது சூரியனல்லவா?

கௌ.—ஆமாம்; அது சூரியன் தான்.—உங்களுக்கு சூரியனல்லவானால் எனக்கும் அல்ல; உங்கள் மனம் போனபடியே என் மனமும் திரும்பும். அதை நீங்கள் என்ன பேரிட்டழைக்கிறீர்களோ, அந்தப் பேராலேயே நானும் அழைக்கிறேன்.

பிர.—தேவரே! நீர் ஜெயித்துவிட்டீர். நீர் சாமர்த்தியசாலிதான். சந்தேகமில்லை.

நா.—சரி! இனிமேல் தைரியமாய்ப் போகலாம்; இதோ வருகிறது யார்?

(நல்ல நாயக உடையார் வருதல்)

அம்மணி! வாரும் (நல்லநாயக உடையாரை நோக்கி) எங்கிருந்து வருகிறீர், அம்மா?—கௌதமி! இந்தப் பாட்டியைப்போன்ற அழகுடைய வேறொரு ஸ்திரியை நீ பார்த்திருக்கிறாயா? அவள் பிறைபோன்ற நுதலையும், வாள்போன்ற கண்களையும் பார். கோது! அவளைக் கட்டிக்கொள்.

கௌ.—பெண்ணே! வா; இவ்வளவு அழகாகவிருக்கும் சின்னஞ் சிறு பெண்ணான நீ தனியாக எங்கே போகிறாய்? நீ இருக்கிறது எவ்விடம்? தாயார் தகப்பனார் இருக்கின்றனரா? உன்னைப் பாரியையாக அடைந்த மகா புருஷன் யாவன்?

நா.—என்ன, கோது? உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? இவன் ஒரு தொண்டு கிழவன் அல்லவா? தலையெல்லாம் நரைத்துவிட்டது; உடம்பெல்லாம் திரை மிகுந்திருக்கிறது. அவனைப் பார்த்துப் பெண் என்கிறாயே?

கௌ.—ஐயா! மன்னிக்கவேண்டும்; சூரிய வெளிச்சத்தால் என் கண் மங்கிப் போய்விட்டது; பார்ப்பதெல்லாம் பச்சைப் பசேலென்றிருக்கிறது; இப்போது தெரிந்தது, நீங்கள் ஒரு விருத்தரென்று; மன்னிக்கவேண்டும்.

நா.—பெரியவரே! எங்கே போகிறீர்? எங்களோடு கூட வருவீரானால் எங்கள் வண்டியிலேறிக்கொள்ளும், போகலாம்.

நல்.—தள்ளாத கிழவனிடத்து அநுதாபம் காட்டுகிற உங்களுக்கு க்ஷேமமுண்டாகும்; நான்இருப்பது தஞ்சை நகரம்; என் பெயர் நல்ல நாயக உடையார் என்பது; மதுரைக்குப்போகிறேன். என் மகன் அங்கே யிருக்கிறான்; அவனைப்பார்த்து வெகு நாளாய்விட்டது; ஆதலால் அவனைப் பார்க்கப்போகிறேன்.

நா.—அவர் பேரென்ன?

நல்.—அவனுக்கு விஜயராகவஉடையாரென்றுபேர்.

நா.—அப்படியா! எனக்கு அவரை நன்றாகத் தெரியுமே. நீங்களும் எனக்கு இப்போது உறவாகிவிட்டீர்கள். இவள் தங்கையைத் தான் உமது மகன் கல்யாணம் பண்ணிக்கொள்ளவிருந்தார்; இந்நேரம் கல்யாணம் முடிந்திருக்குமென்று எண்ணுகிறேன். நீர் ஏதோ ஆச்சரியப்படுகிற மாதிரி தோன்றுகிறதே. நல்லகுலம்; நல்ல சம்பந்தம்; உமக்குச் சொல்லியனுப்பாமல் கல்யாணம் நடந்திருக்குமோ என்று யோசனையோ? அதனால் ஒன்றும் பாதகமிருக்காது; அவசரத்தினால், அவ்வாறு செய்திருக்கலாம்; எல்லாம் நாம் ஊருக்குப்போனதும் விளங்கிவிடும்.

நல்.—நீர் சொல்வது உண்மைதானா? இல்லாத போனால் வேடிக்கை பண்ணுகிறீரா?

பிர.—ஐயா! அது முற்றிலும் உண்மை.

நா.—வாருங்கள்; இதன் உண்மையை நீரே நேர அறிந்து கொள்ளலாம். முதலில் நாங்கள் வேடிக்கை பண்ணியதினால், எல்லாவற்றையும் வேடிக்கையென்று நினைக்கிறீர்களாக்கும்!

(நாராயணத்தேவர், கௌதமி, நல்லநாயக உடையார் மூவரும் போதல்.)

பிர.—பேஷ்! நாராயணத்தேவரே! உம்மிடம் வேண்டியவளவு கற்றுக்கொண்டுவிட்டேன்; என் அத்தைமகள் இவ்வாறு இருந்தால், அவளை வழிப்படுத்தும்வழி தெரிந்துவிட்டது. (போதல்)

அங்கம் V

களம் 1.—மதுரை விஜயராகவ உடையாரின் வீட்டு முன்புறம்

(ஒரு புறத்தில் கேசவன், விஜயராகவ உடையார், வசிதேசுவரி பிரவேசித்தல். மற்றொரு புறத்தில் பொன்னம்பலத்தேவர் வருதல்).

கே.—மெதுவாய் ஓசைப்படாமல் போகவேண்டும்; புரோகிதர் தயாராகவிருக்கிறார்.

விஜ.—நான் ஜாக்கிரதையுடன் போகிறேன்; உன்னை ஒருசமயம் வீட்டில் தேடுவார்கள், ஆதலால் நீ போய்விடு.

கே.—குற்றமில்லை; முதலில் உங்களைக் கொண்டு போய் விட்டுவிட்டு, பிற்பாடு ஓடிப்போகிறேன்.

(விஜயராகவஉடையார், வசிதேசுவரி, கேசவன் இவர்கள் போதல்).

பொ.—நாழிகை அதிகமாக ஆய்விட்டது. இன்னும் கோவிந்தவாத்தியார் வந்தபாடில்லையே!

(நாராயணத்தேவர், கௌதமி, நல்லநாயக உடையார், பொன்னன், பரிவாரங்கள், வருதல்).

நா.—இதுதான் விஜயராகவ உடையாரின் ஜாகை. என் மாமனார் வீடு கடைத்தெருவுக்குச் சமீபத்தில் இருக்கிறது. ஆதலால் நான் உங்களைவிட்டுப் போகவேண்டும்.

நல்ல.—ஏன் அவ்வள்வு அவசரம்? இருந்து ஏதாவது கொஞ்சம் ஆகாரம் பண்ணிக்கொண்டுபோகலாமே. (கதவைத் தட்டுகிறான்.)

பொ.—உள்ளே ஏதோ காரியமாக விருக்கிறார்போலும்; கொஞ்சம் பலமாய்த் தட்டுங்கள்.

(மேல்மாடி ஜன்னல் வழியே தீர்த்தயாத்திரி எட்டிப் பார்த்தல்.)

தீர்.—யாரடா, அவன்? கதவை உடைத்து விடுவான் போலத் தட்டுகிறது?

நல்ல.—உள்ளே விஜயராகவ உடையார் இருக்கிறாரா. ஐயா?

தீர்.—இருக்கிறார்; ஆனால் இப்போது வெளியில் வந்து பேசமாட்டார்.

நல்ல.—ஒரு மனிதன் இரண்டாயிரம் மூவாயிரம் ரூபா கொண்டுவந்திருக்கிறார் என்று அவரிடம் சொல்லும்.

தீர்.—போங்காண்; போம்; உம்முடைய பணத்தை நீரே வைத்துக்கொள்ளும்; நான் இருக்கிறவரையில் அவனுக்குப் பணத்துக்குக் குறைவில்லை.

நா.—பார்த்தீரா, ஐயா! உமது மகன் வெகு கண்ணியமாக விருப்பதை?—ஐயா, நீர் உள்ளே சென்று, விஜயராகவ உடையாரிடம் அவர் தகப்பனார் தஞ்சையிலிருந்து வந்து வாசலில் காத்துக் கொண்டிருக்கிறார் என்று சொல்லும்.

தீர்.—என்னடா, முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறாய்? அவருடைய தகப்பனார் நான்தான்; இதோ இருக்கிறேனே!

நல்.—நீயா அவன் தகப்பன்?

தீர்.—சந்தேகமில்லாமல் நான்தான்; சாக்ஷி வேண்டுமோ? அவன் தாயார்தான் அப்படிச் சொல்லுகிறாளே.

நா.—(நல்ல நாயக உடையாரை நோக்கி) என், ஐயா? பெருத்த மோசமாக இருக்கிறதே. உம்முடைய பெயரை வேறொருவன் ஏற்றுக்கொண்டிருக்கிறான்போலும்.

(கேசவன் திரும்பிவருதல்)

கே.—கொண்டுபோய்விட்டு வந்துவிட்டேன்; இந்நேரம் தாலிகட்டி யாகிவிடும்;—அடே! இது யார்? பெரிய எஜமானர் நல்ல நாயக உடையார்போலத் தோன்றுகிறதே! சரி, மோசம் வந்துவிட்டது! இந்நேரம் செய்ததெல்லாம் வீணாக முடிந்துவிடுமோ?

நல்.—எலே! கழுதை! இங்கே வாடா.

(கேசவனைப்பார்த்துக் கூப்பிடல்.)

கே.—என்ன, ஐயா, உமதுவீட்டுப் பண்ணைக்காரப் பையல்போலக் கழுதையென்றும், "டா" பட்டம் போட்டும் பேசுகிறீர்?

நல்.—சீ! போக்கிரி! என்னை மறந்துவிட்டாயோ?

கே.—நன்றாக விருக்கிறது! உங்களை நான் முன்பேனும் பின்பேனும் அறிந்திருந்தால் அல்லவா ஒருவேளை மறக்கலாம்; நான் இதற்குமுன் உங்களைப் பார்த்ததே யில்லையே.

நல்.—நீ என் வேலைக்காரன் கேசவன் இல்லையா; உன்னை என் மகனுடன் கூட அனுப்பினேனே? மறந்துபோய் விட்டாயோ? இல்லாதபோனால் போக்கிரித்தனம் செய்கிறாயோ!

கே.—நான் உம்முடைய வேலைக்காரனு? ஏதாவது கனவு காண்கிறீரோ? எனது எஜமானர் அதோ மேன்மாடியில் நிற்கிறார், பாருங்கள்.

நல்.—நிஜந்தானு? (கேசவனை அடித்தல்.)

கே.—ஐயோ! ஐயோ! கொலை! கொலை! யாரோ என்னைக் கொல்லுகிறார்கள். (போகிறான்)

தீர்.—பையா! சீக்கிரம் போ; ரகுநாததேவரே! நீரும் போய்ப்பாரும்; யாரோஒருவன் நமது சேவகனைக் கொல்லுகிறானும்.

(மேன்மாடியினின்றும் போதல்.)

நா.—கோது! இங்கே தனியாக நின்று இந்தவேடிக்கையை முழுவதும் பாாப்போம்.

(அவர்கள் தனியே நிற்கின்றனர்.)

(தீர்த்தயாத்திரி கீழே வருதல் ரகுநாததேவர், சுப்பராயன், சேவர்களும் உடன் வருதல்.)

சுப்.—நீர் யார், ஐயா? என் என் சேவகனை யடித்தீர்?

நல்.—நான் யாரா? நீ யார் என்று நான்தான் கேட்கிறேனே.—அடே என்சாமி! ஜரிகை தலைப்பாகை, பட்டு வேஷ்டி, வெல்வெட்டு சட்டை! குடிகெட்டுப் போய்விட்டது! நான் வீட்டில் மிகவும் செட்டாகக் குடித்தனம் பண்ணுகிறேன்; இங்கே படிக்கிறதற்கு வந்த என் மகனும் அவன் வேலைக்காரனும் டாம்பீகமாய் அடாத செலவுகள் செய்கிறார்களே! வெகு நன்றாகவிருக்கிறது!

சுப்.—என்ன, ஐயா? என்ன சங்கதி?

ரகு.—ஏதாவது பைத்தியம் பிடித்திருக்கிறதா. இவருக்கு?

சுப்.—ஐயா! உம்மைப் பார்த்தால் நல்லவர்போலத் தோன்றுகிறது; ஆனால் உமது செய்கைகள்மாத்திரம் பைத்தியம் பிடித்தவன் செய்பவைபோலவிருக்கின்றன. நான் நல்ல ஆடையாபரணங்கள் தரித்துக்கொண்டிருந்தால், உமக்கென்ன? என் தகப்பனார் கொடுக்கிறார்; நான் செலவழிக்கிறேன்.

நல்.—உன் தகப்பனு? அவன் எற்றக்குடியில் மண்வெட்டி பிடித்தல்லவா கொத்துகிறான்.

ரகு.—ஐயா! நீர் யாரையோ! எண்ணிச் சொல்லுகிறீர். இவர் பெயர் என்ன தெரியுமா, உங்களுக்கு?

நல்.—இவன் பெயரா? எனக்குத் தெரியாதாக்கும்! மூன்று வயதுக் குழந்தைமுதல் நான் வளர்த்து வருகிறேனே. அவன் பெயர் சுப்பராயன் என்பது.

தீர்.—போடா, போ, பைத்தியக்காரா; அவன் பெயர் விஜயராகவ உடையார்; அவன் நல்லநாயக உடையாராகிய என் மகன் அல்லவா?

நல்.—விஜயராகவனு! ஐயையோ! என் மகனை இவன் கொன்றுவிட்டான்! அவனைப் பிடித்துக் கொள்ளுங்கள்.—ஐயோ! மகனே! மகனே! நாசமாய்ப் போகிறவனே! என் மகன் விஜயராகவன் எங்கே சொல்லு.

சுப்.—போய்க் கொத்தவாலை அழைத்து வா.

(ஒருவன் கொத்தவாலுடன் திரும்பிவருதல்).

இவனை சிறைச்சாலைக்குக் கொண்டுபோங்கள்.

நல்.—என்னையா சிறைச்சாலைக்குக் கொண்டுபோகவேண்டும்!

பொ.—ஓய் கொத்தவால்! கொஞ்சம் பொறும்: அவசரப்படாதேயும்.

ரகு.—தேவரே! நீர் சும்மா இரும்; அந்தக்கிழவன் சிறைக்குப்போகட்டும்.

பொ.—ரகுநாததேவரே! ஜாக்கிரதையாக இரும்; ஏமாந்து போய்விடுவீர்; இவர் தாம் நிஜமான நல்ல நாயகஉடையார்.

தீர்.—ஆணையிட்டுச் சொல்லுவீரா?

பொ.—இதற்கெல்லாம் ஆணையிடவேண்டுமோ?

சுப்.—அப்படியானால் என் பெயர் விஜயராகவ உடையார் என்பது இல்லையென்பீரோ?

பொ.—நீர் விஜயராகவ உடையார்தாம்; எனக்கு நன்றாய்த் தெரியும்.

ரகு.—அவனுக்கு ஒன்றும் தெரியாது; யாரோ மடையன்; உடனே சிறைச்சாலைக்கு அழைத்துப் போங்கள்!

நல்.—இப்படியா அந்நியன் ஒருவனை வதைக்கிறது:—அடே படுபாவி! மோசம் செய்துவிட்டாயே!

(விஜயராகவ உடையார், வசிதேசுவரி இவர்களையழைத்துக்கொண்டு கேசவன் திரும்பி வருதல்).

கே.—மோசம் போனோம்! இதோ இருக்கிறார், அவர்: மறுத்துவிடும்; இல்லையானால் வீண் வந்துவிடும்.

விஜ.—அப்பா, மன்னிக்கவேண்டும். (நமஸ்காரம் செய்தல்.)

நல்ல.—குழந்தாய்! உயிரோடு உன்னைக் கண்டேனே! (கட்டித்தழுவல்.)

(கேசவன், சுப்பராயன் தீர்த்தயாத்திரி ஓடிப் போதல்.)

குமார ஸம்பவம்

BIRTH OF KUMARA

பண்டித நடேசசாஸ்திரியார் மொழிபெயர்ப்பு.

77. ஒன்றுமில்லாதவரா யிருந்தும் அவர் எல்லாவித ஸம்பத்துகளுக்கு மிருப்பிடமாய் விளங்குகின்றார். அவர் மயானத்தில் வஸித்துக்கொண்டே மூவ்வுலகங்களுக்கும் நாதனாய் விளங்குகின்றார். அவர் பயங்கரமான உருவங்கொண்டவர் என்றாலும் அவர்பெயர் அழகானவர் (சிவன்) அன்றோ? இது வரையில் சிவபெருமானை உண்மையாக ஆராய்ந்தறிந்தவர்கள் ஒருவருமில்லையன்றோ!

78. ஒரு சமயத்தில் அவர் தனது மேனியை நகைகளால் சிங்காரித்துக்கொண்டிருப்பார். மற்றொருசமயத்தில் பாம்புகளையே அணிந்து விளங்குவார். ஒரு சமயத்தில் அவர் யானைத்தோல் உரித்து உடுத்திருப்பார். மற்றொரு சமயத்தில் வெண்பட்டு உடுத்திருப்பார். தன் தலைமேல் ஒருபொழுது மண்டைஓட்டைக் கவிழ்த்துக்கொண்டிருப்பார். மற்றொருபொழுது சந்திரனையே அணிந்திருப்பார். எட்டு உருவங்கொண்டு விளங்கும் ஜகதீசனுடைய உடலை அறிந்தவர்களுமுண்டோ!

79. சுடலைச்சாம்பல் அவர் மேனியில் பட்ட மாத்திரத்தில் மற்றவர்களைப் பரிசுத்தம்பண்ணும் மேற்பதவியை அடைகின்றதன்றோ? அதே சாம்பற்பூசி அம்பலத்தாடி தாண்டவம் செய்யும்பொழுது அவர் மார்பினின்று உதிரும் சுடலைச்சாம்பலை தலையில் ஏந்திக்கொள்ள தேவர்கள் காத்து நிற்கின்றார்களன்றோ!

80. ஒன்றுமில்லாத அச்சிவபெருமான் எருதின் மீதேறிச் செல்லும்பொழுதுதான், மதம் பெருகும் திக்குயானை ஏறிவரும் இந்திரன், அவர் பாதங்களை தனது தலையால் வணங்கி தான் தலையிலணிந்த நன்றாக மலர்ந்திருக்கு மந்தாரைமலர்களின் பூந்தாதுகளால் அவருடைய கால்விரலை அலங்காரம் பண்ணுகின்றான்.

81. கெட்டுப்போன நீ, சிவபெருமானிடம் தோஷங்கள் இவை என்று எடுத்துச் சொல்லும்பொழுது ஒன்றைமட்டும் உண்மையாகச் சொன்னாய். தானாய்த் தோன்றிய பிரமதேவருக்கும் காரணமாய் சிவபெருமானை மாமுனிவர்கள் குறிக்கும்பொழுது அவருடைய காரணத்தைக்கண்டறிய எவரால் முடியும்.

82. உன்னுடன் விவாதம் செய்வதில் என்னபிரயோஜனம்? உனக்கு முற்றிலும் நீ கேள்விப்பட்டபடியே சிவபெருமானிருக்கட்டும். நானோசிவபெருமானிடம் என்னாசையை முற்றிலும் வைத்துவிட்டேன். தனது மனத்தின்போக்குப்படி நடக்கின்றவர்களை உலகநிந்தை ஒன்றும் பண்ணமுடியாதன்றோ.

83. அடி தோழி இவனை இங்கு விட்டு அப்புறப்படுத்து. இவன் உதடு அசைகின்றதைப் பார்த்தால் இவன் மறுபடியும் ஏதோ பேச எத்தனிக்கின்றவன் போல் காண்கின்றான். பெரியவர்களை நிந்தித்துப் பேசுகின்றவன்மட்டுமே பாவியல்ல, அவன் செய்யும் நிந்தையைக் கேட்கின்றவர்களும் பாவிகளாகின்றார்கள்.

84. அல்லது நாமே இவ்விடம்விட்டு வேறிடம் போவோம் என்று சொல்லிக்கொண்டு அச்சிறுமி வேகத்தால்தான் தனது குசங்களின்மேல் மூடியிருந்த மூன்றானை பறக்க அவ்விடம்விட்டுநடக்கலானாள். இடபக்கொடியோனும் தனது நிஜ உருவங்கொண்டு புன்சிரிப்புடன் அவளைப்பற்றிப் பிடித்துக்கொண்டான்.

85. சிவபெருமானைக் கண்டதும் மெய்பதற தேகமெல்லாம் வியர்வை ஓட வெட்கந்தோன்ற அப்பார்வதி தான் பிரயாணத்துக்காக முன்னெடுத்த காலை அப்படியே நிறுத்தினவளாய் வெகுவேகமாக ஓடிவரும்வெள்ளம் குறுக்கே ஒரு பெரும் மலை ஓங்கி நிற்கக்கண்டதும் முன்னும்போகமுடியாமல் பின்னும் போகமுடியாமல் குழம்பி நிற்பதுபோல் மனம்பதறி நின்றாள்.

86. "பார்வதி, இன்றுமுதல் நான் உனது அடிமையாய்விட்டேன். உனது தவத்தால் நீ என்னை விலைக்குவாங்கிவிட்டாய்" என்று சந்திரசேகரன் சொல்லவே பார்வதி ஒரு பெருமூச்செறிந்து அன்னை வரையில் தான் தவத்தால் பட்டிருந்த சிரமத்தை அத்துடன் தன்னைவிட்டு அகற்றினாள். நாம் பட்ட சிரமத்துக்குத் தக்கபயன் நமக்குக் கிடைத்துவிட்டால் அந்த சிரமம் சிரமமாக அதன் பிறகுதோன்றவே தோன்றாதல்லவா?

உமையை வரித்தல் என்ற 6-வது சருக்கம்

அவ்வாறு தேவதேவன் தம்மிடம் அருள்புரிந்த பின்பு பார்வதியும் இரகசியமாய் தனதுதோழியிடம் சிவபெருமானுக்கு ஒரு சமாசாரம் சொல்லியனுப்பினாள். அது யாது எனில் தம்மைத் தமது தந்தையா

கிய இமவான் சிவபெருமானுக்கு கன்னிகாதானம் செய்துகொடுக்கும்படி உத்தரவாகவேண்டும் என்பதேயாம்.

2. அவ்வண்ணம் தமதுதோழி மூலமாய் சிவபெருமானுக்குச் சமாசாரம் சொல்லியனுப்பின பின்னர் அப்பார்வதி அவரிடம் மாறாத அன்புடன் துடிக்கின்றவளானள். வசந்தகாலத்தில் எப்பொழுதும் குதூகலத்துடன் விளங்கும் கட்டுமாங்கிளை குயில் தன்னிடம்வந் துட்காரக் காண்பதை எதிர்பார்த்துக் கொண்டுதவித்து நிற்குமன்றே!

3. மன்மதனையே தீயிட்டு எரித்த அச்சிவபெருமானும் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு தீராதபக்ஷமாக உமையிடம் விடைபெற்று அவ்விடம்விட்டு நீங்கி சோதி உருவாய் விளங்கும் ஆங்கிரஸர் முதலான எழு ரிஷிகளையும் தம் மனத்தால் கருதலானர்.

4. தவத்தையே தங்கள் பொருளாகக்கொண்ட அம்மாமுனிவர்கள் தங்கள் தேக ஒளியின் சமூகத்தால் ஆகாயத்தையே விளங்கச் செய்துகொண்டு அருந்ததியுடன்கூட உடனே ஈசனர் முன்பாகவந்து தோன்றினர்கள்.

5. கரையில் ஓங்கிநிற்கும் மந்தார மரத்தின் மலர் உதிரப்பெற்று அலைகள் அம்மலர்களையே வாரி வீச, திசைக்கரிகளின் மதமணம் பரிமளிக்க விளங்கா நிற்கும் ஆகாயகங்கையின் ஜலத்தில் ஸ்நாநம்செய்தவர்களாய்

6. நல் முத்தாலாகிய பூணூல் அணிந்து பொன் மரவுரிபூண்டு ரத்தினக்கற்களால் கோர்க்கப்பட்ட ஜபமாலை கைப்பற்றி துறவறம் சேர்ந்த கற்ப தருக்கள்போல் விளங்குகின்றவர்களாய்

7. தாம் ஸூரியமண்டலத்துக்குமேலே ஸஞ்சரிக்கின்றவர்களாகையால் தங்களிருப்பிடத்துக்குக்கீழாகதனது குதிரைகளை ஓட்டிச்செல்லும் சூரிய பகவானால் தன் ரதத்தின் கொடியைத் தாழச்செய்து நமஸ்காரத்துடன் கண்களை மேலெடுத்துப்பார்க்கப் பெற்றவர்களாய்

8. மகா விஷ்ணுவின் மகாவராஹ அவதாரத்தின் கோரப்பல்லை தமது கையால் பற்றச்செய்து ஆதரவுடன் தூக்கி எடுக்கப்பெற்ற பூமாதுடன் பிரளயகாலத்திலும் அழிவின்றி சுகமாய் இளைப்பாறுகின்றவர்களாய்

9. பிரமதேவருக்கு அடுத்த பதவியில் அவர் படைத்து நிறுத்தியதின்மேல் இன்னும் மிகுந்திருந்த படைப்புகளை படைத்த காரணத்தால் பெரியோர்களால் பழைய பிரமதேவர்கள் என்று புகழப்படுகின்றவர்களாய்

10. முற்பவத்தில் நிர்மலமான தவத்தின் அருளடைந்து அத்தவத்தின் பயனை முனிவர்களாயிருந்தபோதிலும் இச்சென்மத்திலும் அனுபவிக்கின்றவர்களாய் (விளங்கிய அம்மா முனிவர்கள் எழு பெயர்களும் அங்குவந்து தோன்றினர்கள்.)

11. அவர்கள் நடுவில் தனது கணவன் பாதங்களிலேயே கண்வைத்தவளாய் மகாபதிவிரதையாய் தவத்தின்பயனே உருவெடுத்து வந்தாற்போல சோபிக்கின்றவளாய் அருந்ததி தேவி வெகுஅழகாக விளங்கலானள்.

12. ஈசனர் அம்மாது சிரோன்மணியையும் அம்மாமுனிவர்களையும் ஏற்றத்தாழ்வின்றி ஒரேவிதமாய் உபசரிக்கலானர். பெரியோர்கள் ஸ்திரீ புருஷன் என்ற வித்தியாஸத்தை ஒருபொழுதும் கவனியார்கள். நல்லொழுக்கம் ஒன்றேயன்றோ அவர்கள் எப்பொழுதும் கொண்டாடிப்புகழும் குணம்.

13 அருந்ததியைக் கண்டபிறகு ஈசனருக்கு தாமும் மனையாட்டியை.வெகுசீக்கிரம் அடையவேண்டும் என்ற ஆவல் தோன்றிற்று. யாகம் முதலிய இல்லறச் சடங்குகளுக்கு மனைவியன்றோ முதற்காரணம்?

14. இல்லறத்தின்பொருட்டு ஈசனர் பார்வதியைத் தமதுமனத்தில் நினைத்ததும் முதற்குற்றத்தை நினைத்து நடுங்கி நின்ற மன்மதனுடைய பிராணனும் மறுபடியும் மூச்சுக்காற்றுள்ளது போலாயிற்று.

15. அம் மாமுனிவர்கள் எல்லோரும் ஈசனரை வணங்கியபின்னர் ஜகத்குருவாகிய அக்கடவுளைப் பார்த்து வேதமொழுகும் தங்கள் வாய்களால் அன்பு நிரம்பிய தங்கள்மேனி மயிர்க்கூச்செறிய பின்வருமாறு சொல்லலானர்கள்.

16. நாங்கள் நியமபூர்வகமாய் இதுவரையில் ஓதியவேதமும் நாங்கள் இன்றுவரைமுறைப்படி வளர்த்துவந்த ஓமமும் நாங்கள் செய்துவந்த தவமும் இவைகள்எல்லாவற்றினுடைய பயனும் இன்றுதான் எங்களுக்கு நிறைவேறியது.

17. உங்கள் மனமோ ஒருவருடைய வாக்குக்கும் மனதுக்கும் எட்டாதமனம். அவ்விதமாகிய உங்கள் மனத்தாலேயே எல்லா உலகங்களுக்கும் ஈசனாகிய நீங்கள் எங்களை நினைக்கும்படியானபாக்கியம் பெற்றோமென்றால் எங்கள் பெருமைக்குச் சொல்லவும் வேண்டுமோ?

நாகரீகம்

CIVILIZATION

(சாவித்திரி சரித்திர ஆராய்ச்சி)

தற்காலத்தினராகிய நாம் நாகரீகத்தில் முற்போக்கு அடைய விரும்புகின்றது உண்மையாயின், நம் முன்னோர் போக்கினைப் பின்பற்றி ஒழுகல் இன்றி அமையாததாகும். "நவீன வளர்ச்சி" எனச் செம்பொருள் பயக்கும் "முற்போக்கு" என்னும் பதத்திற்கு, "முன்னோர் நடை" என மற்றொரு நுண்பொருளும் அமைந்து நிற்றலைக் காண்க.

அம்முன்னோர் எத்தகைய செந்நெறி, உண்மை, உறுதி உடையவர்களாய் இருந்தனர் என்பதை நமது பன்னூற்றொகுதிகளும் சாட்சி பகர்கின்றன. அவ்வுண்மை, உறுதி, செந்நெறியாதிய உயர் குணங்கள் அக்காலத்துப் பெரியோர், சிறியோர், ஆடவர், மகளிர் ஆகிய அனைவரிடத்தும் அசைக்கவொண்ணாத இயல்புக் குணங்களாய் அமைந்து கிடந்தமையே அரிதினும் அரியதாகும்.

உதாரணமாக, அசுவபதி மகாராஜாவின் அருந்தவப் புத்திரியாகிய சாவித்திரியின் சரிதத்திற் சிலவற்றை ஆராய்வாம்.

இதில் கதா நாயகியாகிய சாவித்திரி தனக்கேற்ற கணவனைத் தானே தெரிந்து நிச்சயிக்குமாறு, தந்தையாலும் மந்திரி பிரதானியர்களாலும் ஒரு மனதாய் அனுமதிக்கப்பட்டுத் தேச சஞ்சாரம் செய்திருக்கிறாள்.

இரண்டாவது, அப்படிச் செய்த சஞ்சார இறுதியில், ஊழ்வலிகூட்டத் தன் எதிர்பட்ட நாடு இழந்து காட்டில் கஷ்ட ஜீவனம் செய்து காலம் கழித்த மாளவதேசாதிபதியின் மைந்தனை—ஸத்தியவான் என்னும் வாலிபனிடத்துத் தன் மனம் செல்ல அவனே மணக்கத் தக்கவன் எனமதித்து உறுதிகொண்டு திரும்பிவந்து தந்தையிடம் அறிவிக்க, உடனிருந்து கேட்ட முக்காலும் உணர்ந்த முனிவர் பெருமானாகிய நாரத பகவானால் "அப்படி வரித்தவரன் ஆண்டொன்றில் ஆயுள் உலக்கக்கூடிய அற்ப ஆயுள் உடையவனாதலால்" அக்கருத்தை மாற்றி வேறு வரனைத் தெரிந்துகொள்ளுமாறு பலவாறு வற்புறுத்தினமை கேட்டும் சித்தம் சலியாது, ஓர்கால் மனதால் மணந்த ஒருவனை மாற்றி இன்னொருவனை ஒருபோழ்தும் கருதமுடியாதென மறுத்ததும், அதனால் எதுவரினும் வருக என்று உறுதியுடன் அவனையே மணக்க விரும்பியதும் ஈண்டு ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திக்கற் பாலதன்றோ?

என்னே முற்கால மகளிரிடத்து அமைந்திருந்த உறுதி! என்னே மனச்சான்று! என்னே கற்பு! என்னே அறத்தாறு! ஆயின், இத்தகைய உயர் குணங்கள் அச்சாவித்திரியைப் பயந்த பெற்றோரிடத்தும் உள என்பதற்கு, அன்னோர், தமது அருமைப் புதல்வியின் மனவுறுதியைக் கண்டு மாற்றுதல் அரிது என்று உணர்ந்து மனம் உவகந்து ஒத்த மனப்பாங்கினராய் அவ்வரனுக்கே மணஞ்செய்து அளித்தமையே சான்று பகர்கின்றது.

இத்தகைய ஒப்புயர்வற்ற கற்புறுதியும், ஸத்திய புத்தியும், கலங்காத்திட்பமும் கண்டன்றோ அறக்கடவுளும் அக்காந்தையின் கணவன் உயிரைக் கவர்ந்து ஏக அஞ்சி விடுத்து ஏகினன் போலும்! இதனினும் அரிய பெரியனவும் உளவோ?

அப்பெண்மணி அக்கடவுள் பாற்கேட்ட இதர வரங்களில் தன்னைப்பெற்ற தந்தைக்கு மக்கட்பேறு இல்லாக் குறையை நீக்க முதலிற் கோராது தனது மாதுலனாகிய மாளவ தேசாதிபதியின் இழந்த கண்களையும் ராஜ்யத்தினையும் முதலிற் கோரியது இக்காலத்திய ஒவ்வொரு மகளிர்க்கும் அறிவுறுத்துவதாமன்றோ?

தருமசாஸ்திர ஆராய்ச்சியினும், ஆய்ந்தவழி ஒழுகுதலினும் நமது பூர்வீக ஆரிய நாரீமணிகட்கு மேற்போன நாகரிகர்கள் எத்தேசத்திலும் இருந்திருக்க மாட்டார்களென்பதே நமக்கு இன்றும், இனியும், பெருஞ்சிறப்பைத் தந்து பெருமைப் படுத்துவதாகும்.

தவிரவும், மெல்லிய தேகமும் சுகவாழ்வும் பெற்ற நமது பூர்வீக க்ஷத்திரிய மாதர்கள் ஸத்தியம், கற்பு, நீதி இவைகட்குக் கட்டுண்டு சமயம் வாய்த்த போதெல்லாம் எண்ணமுடியாத கஷ்டங்களையும் வறுமைகளையும் உற்சாகத்துடன் பணிவாய் ஏற்று அநுபவித்து வந்திருப்பதை எண்ணுங்கால் மனம் கூசுகின்றது. இப்பெரிய நடையினைச் சாவித்திரி சரிதத்தில் மிகுதியாகக் காணலாம்.

இக்குண விசேஷம் அக்காலங்களில் செல்வச் செழுமுகைகள் அன்ன சந்திரமதி, தமயந்தி, நளாங்கினி முதலிய கணக்கற்ற ராஜபுத்திரிகளிடத்தும் அமைந்து நின்றது உண்மை. அரசவர்க்கத்திற் பிறந்து அரண்மனை போகத்தில் ஆழ்ந்து யிருந்தயுவதிகளின் பயிற்சியே அத்தகையது என்னின் ஏனையகுலமாதர்களின் தன்மை எவ்வாறு இருத்தல்கூடும் என்பதை உய்த்துணரால் எளிதாகும்.

சீரியல் பழுத்த ஆரிய மணிகாள்? இதுவரையில் நாம் மேலே ஆராய்ந்து கண்டவைகளைப்போல் ஒவ்வொரு சரிதங்களிலும் ஆராய்ந்து காணக் கடவன அளப்பிலவாகும்.

அவ்வகை ஆராய்ந்து அதற்கேற்ப நாம் வேண்டிய திருத்தங்களைச் செய்து கொள்வதே "நாகரீகம்" என்னும் மொழிக்குப் பொருளும் பயனும் ஆகும். விரிக்கில் இதுபோல் கவனிக்கற் பாலன பலவுள எனினும், விரிவஞ்சி இம்மட்டோடு முடிக்கலாயிற்று.

அசலாம்பிகை அம்மாள்.

ஹாலிஞ்சியிலுள்ள சுடுநீர் ஊற்றுகள்

HOT SPRINGS AT HALINGZI

மேல் பர்மாவில் ஷ்வீபோ அல்லது ரத்தினசிங்கா(Shwebo) விலிருந்து வண்டிப்பாதை வழியாக தென்கிழக்காய் 11-மைல்தூரத்தில் ஹாலின் என்னும் ஒரு கிராமமிருக்கிறது. அது மாக்ஸோஜியோன் (Moksogyon) ரயில்வே ஸ்டேஷனிலிருந்து $4\frac{3}{4}$-மைல் தூரத்திலுள்ளது. ஸ்டேஷனிலிருந்து கட்டைவண்டியிலேறித் தான் ஹாலினுக்குப்போக வேண்டும். அதில் சுமார் 500-குடிசைகள் இருக்கும். 1901-வருஷத்து ஸென்ஸஸ் பிரகாரம் அவ்வூரின் ஜனத்தொகை 2076. ரயில் பாதை போடுவதற்கு முந்தி மாண்டலேயிக்குப் போகும் ரஸ்தாவில் இது ஒரு முக்கிய தங்கு ஊராகவிருந்தது.

ஹாலினில் ஒரு டிஸ்டிரிக்டு பங்களாவிருக்கிறது. அதில் போய் தங்கியிருக்க சார்ஜு ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லை. அன்றியும் அங்கே பிரயாணிகள் தங்கியிருப்பதற்காக அநேக சாவடிகளும் கட்டப்பட்டிருக்கின்றன. சாப்பாட்டிற்கு வேண்டிய கோழி, முட்டை, பால், கறிகாய், இவைகள் சரசமாகக் கஷ்டமின்றி அவ்வூரில் கிடைக்கும்.

இவ்வூருக்கு 2-மைலுக்குத் தெற்கே ஹாலின் ஏரி என்று ஒரு ஏரி இருக்கிறது. அது அதிக ஆழமில்லை. ஏழு மைல் நீளம் தெற்குவடக்காய் ஓடுகிறது. அதன் அகலம் சராசரி இரண்டுமைலிருக்கும்.

இவ்வூரில் வருஷத்துக்கு சுமார் 31-அங்குலம் மழை பெய்கிறது. இதுவும் இதன் சுற்றுப்புறங்களெல்லாம் உலர்ந்ததாயிருக்கும். நவம்பர்மீ ஆரம்பமுதல் மார்ச்சுமீ மத்திவரையில் குளிர்காலமாய் இருக்கும். மார்ச்சு மாதத்தின் மறுபாதியும், ஏப்ரல் மே மாதங்களும் கொடுவேனிற்காலம். தர்மாமிட்டரில் இங்கே சுமார் 108 டிக்ரி இருக்கும். 1906-வது வருஷத்தில் ஒருநாள் தர்மாமிட்டர் நிழலிலிருந்தபோதும் டிக்ரி 114-ஆகவிருந்தது. ஜூன்மீ த்தில் சாதாரணமாய் மழைபெய்யும். ஜூலையிலும் ஆகஸ்டிலும் மழை பொழியாது. ஆனால் தென்றற்காற்றும் மேகங்களும் சூரியவெப்பத்தைத் தணித்து வேனிற்காலத்தை இன்பமாகமாற்றும். ஸெப்டம்பர், அக்டோபர் மாதங்கள் மழை காலம். சாகுபடிக்கு அவ்வூர் ஜனங்கள் இம்மழையைத்தான் எதிர் பார்ப்பார்கள். ஆனால் இப்பொழுது கவர்ன்மெண்டார் கால்வாய் ஒன்று வெட்டி ஜனங்களின் சாகுபடிக்கு உதவி செய்து இருக்கிறார்கள்.

பூமி மண் களியாகவும், சதுப்பாகவும் இருக்கும். மேற்றரையெல்லாம் உப்புமண்ணாயிருக்கும், ஆதலால் ஹாலினில் உப்பு உண்டாக்குகிறார்கள்.

குடிசைகளுக்கிடையே அநேக ஊற்றுகளிருக்கின்றன. அவற்றினின்றும் வரும் நீர் உப்புக்கரிக்கும் சுடுநீராயிருக்கும். கவர்ன்மெண்டு ஆர்க்கியாலஜிஸ்டி (Goverment Archælogist)ன் அபிப்பிராயப்படி முன்னொருகாலம் மூ (Mu)என்னும் ஆறும் ஹாலின் கிராமத்தின் வழியாகச் சென்றிருந்ததாம். இப்பொழுது இருக்கும் ஏரிகள் பூர்வத்தில் மூ ஆறு ஓடிய இடமே என்கிறார். இவ்வேரிகளில் சிலவற்றின் நீர் குளிர்ந்திருக்கும், சிலவற்றின் நீர் கொதித்துக் கொண்டிருக்கும், சிலவற்றின் நீர் உப்புக்கரிக்கும். சிலவற்றின் நீர் இனிப்பாயிருக்கும். ஏரிகளில் அநேகம் ஒன்றுக்கொன்று அருகாமையிலேயேயிருக்கும். ஹாலின் பூர்வத்தில் ஒரு பெரிய நகரமாயிருந்தபோது அதில் 9-அற்புதங்கள் இருந்தனவாம். அவற்றில் இவ்வேரிகள் ஒரு அற்புதமாம்.

இவ்வளவு ஏரிகளிலும் நான்கு ஏரிகள்தான் முக்கியமாய் உபயோகப்படுத்தப்படுகின்றன. இவற்றின் உஷ்ண ஸ்திதி ஒன்று 106-டிக்ரியும், ஒன்று 112-டிக்ரியும், ஒன்று 114-டிக்ரியும் நாலாவது 126-டிக்ரியும் இருந்தது. இந்த நாலாவது ஏரி ஜலத்தில் ஒரு முட்டையைப் போட்டால் அது வெந்துவிடுமென்று பர்மர்கள் சொல்லுகிறார்கள். இரண்டாவது ஊற்றிலும் மூன்றாவது ஊற்றிலும் ஜலம் உப்பு நிறைந்ததாயிருக்கிறது.

இப்பொழுது குடிசைகளடங்கிய ஹாலின் கிராமம் பூர்வத்தில் ஹம்ஸநகரம் என்று சொல்லப்பட்ட ராஜ்யத்தின் பிரதானநகரமாயிருந்ததாம். இவ்வூருக்கும் அடுத்த ஷாபியோ என்னும் ஊருக்கும் இடையில் பிரம்மாண்டமான புளியமரங்களிருக்கின்றன. ஒன்றின் சுற்றளவு $24\frac{1}{2}$-அடியும், மற்றொன்றின் சுற்றளவு 18-அடியுமென்று கவர்ன்மெண்டு ஆர்க்கியாலஜிஸ்டு அவருடைய 1904-05-வது வருஷ ரிப்போர்ட்டில் எழுதியிருக்கிறார். பௌத்த நகரங்களெல்லாம் சூரியன் உதிக்கும் திசையை நோக்கக் கட்டப்பட்டிருக்கும். இந்து நகரங்களும் சீன நகரங்களுந்தான் தெற்கு திசையை நோக்கிக் கட்டப்பட்டிருக்கும். ஹாலின் தெற்குப்பாகம் நோக்கிக் கட்டப்பட்டிருக்கிறது. அன்றியும் இந்திய நாணயங்களும், பிம்பங்களும், வீட்டுச்சாமான்களும், அடிக்கடி அப்பழைய நகரத்திலிருந்தும் கண்டு பிடிக்கப் பட்டிருக்கின்றன. ஆதலால் இவ்வூர் கங்காதீரத்திலிருந்தும் வந்து குடியேறிய இந்தியர்களின் நகரமாயிருந்திருக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டு ஆர்க்கியால ஜிஸ்டு அபிப்பிராயப்படுகிறார். பழைய ஹம்ஸநகர மிருந்ததற்கு அடையாளமாக ஒரு இடிந்த செங்கற்சுவர் ஒன்று தென்படுகிறது.

தமாயிங்கு (Thamaing)என்னும் பர்ம சரித்திரத்தில் ஹாலினைப்பற்றி பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. "பனாரிஸ் அல்லது காசியிலிருந்து வந்த காரபா (Karabaw) என்னும் இந்திய அரசன் இந்நகரத்தைக் கண்டுபிடித்தான். அவன் மகாகமத மன்னனின் இரண்டாவது மகன். ஹம்ஸநகரத்தை உண்டாக்கின காலம் இன்னதென்று ஏற்படவில்லை. ஆனால் பியூமின் (Pyumin) என்பவன் தன்சகோதரன் பியோன் மின் (Pyonmin) என்பவனை இளவரசனை வைத்துக்கொண்டு அந்நகரில் கி. பி. 168 முதல் 234 வரையில் ஆண்டதாகச் சரித்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. பியூமினுக்கு முன்னால் ஹம்ஸநகரத்தில் 799 அரசர்கள் ஆண்டதாக மாயிங்கில் சொல்லியிருக்கிறது." பியூமின் காலத்தில் ஹம்ஸ நகரத்திலிருந்த ஒன்பது அற்புதங்களாவன :—

1. நான்கு திசைகளையும் நோக்கி நான்குகிளைகளையுள்ள ஒருநார்மரம், கிழக்குகிளையில் பூக்கும் புஷ்பங்கள் வெள்ளை நிறமாகவும், தெற்குகிளையில் பூக்கும் புஷ்பங்கள் பழுப்பு நிறமாயும், மேற்குப் புஷ்பங்கள் இரத்த சிவப்பு நிறமாயும், வடக்குப் புஷ்பங்கள் சுவர்ண நிறமாயுமிருக்கும்.

2. உப்பு நீர் இனிப்பாக ருசிக்கும்.

3. லோகா மரத்தினின்றும் இடைவிடாது நீர் பெருகிக்கொண்டு ஒரு அருவியாக ஓடுவது.

4. இரண்டு கூபங்கள் பூமிக்குக் கீழே ஒரு இடை வழியால் இணைக்கப்பட்டிருந்தன. சுவர்ண மயமாயும், வெள்ளி மயமாயுமிருந்த இரண்டு விலாங்கள் (ஒருவித ஆமை) கூபத்திலிருந்து மற்றொரு கூபத்துக்கு நீந்திக்கொண்டேயிருக்கும்.

5. கொதிநீரும், குளிர்நீரும் நிறைந்த இரு அருவிகள் ஓடி ஒன்றாய் ஓடியபோதும் கொதிநீரும் குளிர்நீரும் ஒன்றோடொன்று கலவாமல் தனித் தனியே ஓடின. இவ்வாற்றில் ஒரு பக்கத்திலிருந்து கொதிக்கும் ஆவிமேலெழும்பிக் கொண்டிருக்கும். மற்ற பக்கத்தில் ஒன்றுமிராது.

6. மழைகாலத்தில் வறண்டும், வேனிற்காலத்தில் சேறாகியுமிருந்த ஒரு சதுப்பு நிலம்.

7. ஒரு பேர் பெற்ற மாமரத்துக்கு 9-கிளைகளிருந்தன. ஒவ்வொரு கிளைக்கும் ஒன்பது கொம்புகளுண்டு. ஒவ்வொரு கொம்பிலும் ஒன்பது குலையும், ஒவ்வொரு குலையிலும் ஒன்பது பழங்களும், ஒவ்வொரு பழத்திலும் ஒன்பது சுவையுமிருந்தன.

8, ஒரே பனைமரத்தில் சில கிளைகளிலிருந்து நீரும், சில கிளைகளிருந்து பனஞ்சாறும் ஒழுகின.

9. நகரத்தைச் சுற்றிலும், அறியத்தரமற்ற விதமாய்க் கானங்கேட்டுக் கொண்டேயிருந்தது.

அதே சரித்திரத்தில் இளவரசன் புன்சிரிப்புக் கொண்டபோதெல்லாம் அவன் உதடுகளிலிருந்து சுவர்ண ஆபரணங்களும் வெள்ளி ஆபரணங்களும் உதிர்ந்து கொண்டேயிருந்தன. ஒருநாள் பட்டமகிஷி இளவரசன் சிரிப்பதைப்பார்க்க விரும்பி தன் கணவனிடம் அவருடைய சகோதரனைச்சிரிக்கும்படி கட்டளையிடும்படி வேண்டிக்கொண்டாள். அப்படியே அரசன் கட்டளையிட்டான். ஆனால் இளவரசன் தான்சிரித்தால் தன் மகிமையைக்கண்டு இராணி தன்மேல்மோகித்துவிடுவாளென்றெண்ணி அரசன் கட்டளைக் குடபடாதிருந்தான். இதன் மேல் அரசனுக்குக் கோபமுண்டாகி தன் தம்பியை கொலைசெய்து விடும்படியாக உத்திரவிட்டான். இவ்வாக்ஞையை நடத்தியதும் ஆகாயம் கருத்து பயங்கரமாக மாறிற்று. பெரும்புயற்காற்று வீசி ஆகாயத்திலிருந்து கத்தி, ஈட்டி, வாள் முதலிய ஆயுதங்கள் விழுந்து குடிகளையெல்லாம் அழித்து நகரத்தையும் சாம்பலாய் மூடிவிட்டது. இதில் பியூமினும் இறந்தான். அந்நகரம் நாசமானதற்கு இதுதான் காரணம்.

மேல் பர்மாவிலுள்ள பர்மர்களுக் கெல்லாம் ஹாலின் ஊற்றுகளின் சிலாக்கியம் நன்றாய்தெரிந்திருக்கிறது. பாரிசவாய்வு, சொஸ்தமாகாத வீக்கங்கள், கட்டிகள், பருக்கள், சிரங்கு, மூலவியாதி, பெண்களின் மாதவிடாயை யனுசரித்த வியாதிகள்; இவற்றிற்கெல்லாம் இவ்வூற்றுகளில் ஸ்நானம் செய்தால் நிவாரணம் என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது வருஷத்துக்கு சுமார் 100-பேர்கள் வியாதியை சொஸ்தம் பண்ணிக்கொள்ளும் பொருட்டு அவ்வூருக்கு மாண்டலே, காதா, ஜில்லாக்களிலிருந்து வருகிறார்கள். அவர்கள் குளிர்காலத்தில் வந்து ஒருவாரமிருந்து ஊற்றுகளில் ஸ்நானஞ் செய்துவிட்டுப் போவார்கள்.

அவ்வூர் ஜனங்களும், சுற்றுக் கிராமங்களிலுள்ளவர்களும், அவ்வூற்றுகளில் தினம் வெந்நீர் ஸ்நானம் செய்கிறார்கள்.

1893-வருஷத்தில் மேஜர் மாக்நாமாரா என்னும் ராணுவ வைத்தியர் ஒருவர் பாரிசவாயுவினால் மிக்க தொந்தரைப்பட்டுகொண்டிருந்தார். கைகால் பூட்டுகளில் இருந்த பெரு வலியால் அவர் தன் வேலையைச் செய்யமுடியாமலேயிருந்தார், அவர் ஹாலின் போய் ஒருவாரமோ பத்துநாளோதான் அவ்வூற்றுகளில் ஸ்நானஞ்செய்தார். அதற்குள் அவருக்கு வலியெல்லாம் தீர்ந்து திரும்பவும் ஒரு சங்கடமின்றி தன் வேலையைப்பார்த்துவர சக்தியுடையவரானார்.

கர்னல் லாயிட் என்பவர் தான் அவ்வூற்றுகளில் ஸ்நானஞ்செய்ததால் அதிக நன்மை யடைந்ததாகச் சொல்லிக்கொள்வதுண்டு.

1901-வது வருஷத்தில் மேஜர் காந்தப் பிரசாத் என்னும் டாக்டர் சீனாவிலிருந்து ரங்கூனுக்குத் திரும்பிவந்தபோது அவருடைய மனைவி பாரிசவாயுவினால் படுக்கை விட்டு எழுந்திருக்கக்கூடாமல்கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். மேஜர் பிரசாதுக்கு ஷ்வீபோவுக்கு மாற்றலானதும் தன்மனைவியை அவ்வூற்றுகளுக்கு இட்டுக்கொண்டுபோய் ஸ்நாநம் செய்வித்தார். ஒரு மாதத்துக்குள் அம்மாது எழுந்து நடக்கத் திறமுள்ளவராயினார். இப்பொழுது 9-வருஷமாக அந்த அம்மாளுக்கு அவ்வியாதி திரும்பவும் வராது சௌக்கியமாகவிருக்கிறார்.

ஷ்வீபோ ஸ்டேஷன் மாஸ்டராயிருந்த ரூவின் என்பவர் பல வருஷங்களாக பாரிசவாயுவினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். 1905-வது வருஷத்தில் அவர் அதிக தொந்தரவு பட்டதினால் ஷ்வீபோ ஜில்லாவில் சிவில் ஸர்ஜனாயிருந்த மேஜர் பிரசாதினுடைய புத்திமதிப்படி அவர் ஹாலின் ஊற்றுகளில் போய் ஸ்நாநம் பண்ணினார். கொஞ்ச நாள்களில் அவரும் முழுதும் சொஸ்தமாகிவிட்டார்.

இன்னும் அநேக பர்மர்கள் அவ்வூற்றுகளில்போய் ரோகவியாதி தெளிந்திருக்கிறார்கள்.

இவ்வூற்றுகள் வெட்ட வெளியிலிருப்பதால் ஆடுமாடுகள் போய் அவற்றை அசுத்தப்படுத்தி விடுகின்றன. அவற்றிற்கு வேலியாவது அடைப்பாவது சீக்கிரம் போட்டால் ஸ்நாநத்திற்கு யோக்கியமாயிருக்கும்.

இவைபோன்ற சுடு நீரூற்றுகள் ஆம்ஹர்ஸ்டு ஜில்லாவிலும் அநேகமிருக்கின்றனவாம்.

சிறுவர்க்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

உபகாரம் செய்தல்.—ஒருவன் தனக்கு இருந்த பேராசையால் தன்னிடம் ஓர் துர்தேவதை அல்லது பிசாசு வசப்பட்டிருந்தால் தன் மனதிற்கு தோன்றிய காரியங்களை சீக்கிரத்தில் முடித்து ஆனந்தத்தை அடையலாம் என்று எண்ணினான். இந்த எண்ணத்துடன் அவன் ஓர் யோகியை அடுத்து தனக்கு ஓர் துர்தேவதை வசப்படும்படி செய்யவேண்டும் என்று மிகுந்த வணக்கத்துடன் கேட்டுக்கொண்டான். யோகி தனது வேண்டுகோளைக் கொஞ்சநாள் கவனியாமல் இருப்பதைக் கண்டு, இவன் அடிக்கடி அவரைச் சென்று விடாது கேட்கத் தொடங்கினான். ஒருநாள் யோகி இவனுக்கு ஓர் மந்திரத்தை உபதேசம்செய்து 'இதைவிடாது கொஞ்ச நாள் ஜபித்தால் ஓர் துர்தேவதை பிரத்யக்ஷம் ஆகும் அது உன் வசப்படும். ஆனால் அதற்கு வேலை இட்டுக்கொண்டே இருக்கவேண்டும். வேலை இடாது விட்டால் அது உன்னைக் கொன்றுவிடும்! ஜாக்கிரதை!' என்று எச்சரிக்கை செய்து அனுப்பினார். யோகி சொன்னபடி துர்தேவதை பிரத்யக்ஷமாக அந்த பேராசைக்காரன் 'என் தரித்திரம் நீங்கும்படியான ஏராளமான பணம் வேண்டும்' என்று கேட்டான். பணம் உடனே வந்து குவியும்படி அந்த தேவதை செய்துவிட்டது. 'எனக்குத் தகுந்த ராஜ்யம், அரண்மனை, ஸ்திரீகள், சிப்பந்திகள் முதலியன வேண்டும்' என்று அவன் வெளியிடும் முன், அவன் எண்ணப்படி எல்லாம் தயாராகிவிட்டன. இம்மாதிரி அவன் ஆசைகள் யாவும் சீக்கிரம் பூர்த்தியாகிவிட, துர்தேவதைக்குக் கொடுக்க வேலை இல்லாது அவன்மனம் தத்தளித்தது. எதுசொன்னாலும் அது உடனேசெய்துவிட்டு, "மேல் என்ன வேலை? இல்லாவிட்டால் உன்னை விழுங்கிவிடுவேன்" என்று சொல்லி அவன் முன் வந்து நிற்கின்றது. அவனுக்கு பூர்வ ஜன்மாந்திர ஸுகிருதம் இருந்ததால், எப்படி இந்த துர்தேவதையிடமிருந்து பிழைப்பது என்ற ஏக்கமுண்டாக, அவன் மௌனமானான். இதைக்கண்ட துர்தேவதை அவனை விழுங்கவர, அவன் வெருண்டு ஓடத்தொடங்கினான். அவன் ஓட தேவதை துரத்த பேராசைக்காரன் தனக்கு மந்திரம் உபதேசித்து அருளிய யோகி பாதத்தில் வந்து சரணம் புகுந்து தனது கஷ்டத்தைத் தெரிவித்தான். இதற்குள் துர்தேவதை, 'உன்னை விழுங்கிவிட்டுத்தான் மறுகாரியம்' என்று கூக்குரலிட்டுக்கொண்டுவந்து யோகியின் உத்தரவுப்படி ஒதுங்கி நின்றுவிட்டது. 'பேராசை பெருநஷ்டம்,' என்று அவனுக்கு புத்தி கூறிவிட்டு யோகியானவர் சுருண்டிருக்கும் தமது சடை ரோமத்தில் ஒன்றை (சுருண்டிருக்கும் நாய்வால் ஒன்றை) துர்தேவதை கையில் கொடுத்து அதை நீட்டும்படி ஏவினார். அது மெதுவாக நீட்டிவிட்டு கையை எடுத்தது. உடனே அது சுருண்டுகொண்டது. இப்படி அநேகம்தரம் செய்தும் அதனால் அதை சுருண்டு கொள்ளாமல் நீண்டுநிற்கும்படி செய்யமுடியவில்லை 'இது ஏதப்பா! இது என்னால் முடியாது' என்று வெட்கி அந்த தேவதை ஓடிப்போய் விட்டது. பேராசைக்காரனும் பயம்தெளிந்து ஸுகமடைந்து தனது பேராசையை விட்டுவிட்டான்.

இந்த ஸாதாரண கதையின் உட்கருத்தே முக்கியமானது. இதில் உள்ள துர்தேவதையே மனது. பேராசைக்காரனே ஸாதாரண மனிதன். யோகிதான் ஆசாரியன். ஆசாரியன் சிஷ்யனது ஆசைக்கு ஏற்ப மனதின் சக்தியை வெளிப்படுத்த அதனால் அவனுக்கு ஆசைகள் பூர்த்தியாகியும் 'துக்கம் ஒழிந்தாலும் சுகமில்லையப்பா' என்று ஓர் மஹானது வாக்கியத்தின்படி அவனுக்கு ஸுகமுண்டாகாமல் வரவர சஞ்சலமும் பயமுமே உண்டாகின்றது. இதை அவன் ஆசாரியனுக்குத் தெரிவிக்க அவர் மனதிற்கு சுருட்டை மயிராகிய உலகத்திற்கு நன்மை செய்தல் என்ற வேலையைக் கொடுக்க அதுமுதல் மனிதன் கஷ்டங்கள் அதிகமாகாது மனதுமுடிவில் வெட்கித்திரும்பி அந்தர் முகப்படும்படியான நிலை வருகின்றது.

இக்கதையிலிருந்து, உலகு ஒருவராலும்ஸுகமடையாது, அது ஸதா இருந்தபடி மாறாதிருக்கும் என்பது உண்மையாயினும், இதை அறிந்து உபகாரம் புரிவதே மனிதனுக்கு வியவஹாரத்தில் சஞ்சலம் தீர்க்கும் வழி என்பதை தெரிந்துகொண்டு நாம் 'எமக்கென்னென்று இட்டுண்டிருக்க வேண்டும்'. இதைவிட்டு உலக ஹிதமாக எவ்வளவு தான் தந்தி, தபால், இருப்புப்பாதை முதலியன ஏற்படுத்திய போதிலும் உலகத்திலுள்ள ஸுகதுக்கம் முன்போலாவது அல்லது முன்னிலும் அதிகப்பட்டாவது இருக்கும் என்பதை இக்காலத்திய நூதன நாகரீகத்தால் விளையும் கஷ்டங்களே நன்கு விளக்குகின்றன.

தன்னைவிட்டு எண்ணுதல் அல்லது தசபுமான் கதை.—அவிவேக பூரணர் என்ற குருவுக்கு பத்துப் பேர் சிஷ்யர்கள் இருந்தார்கள். ஒருநாள் இவர்கள் ஓர் ஆற்றைக்கிடந்து போகவேண்டி நேரிட்டது. அக்கரை சென்றதும், எல்லோரும் கரையேறிவிட்டார்களா என்று பார்ப்பதற்காக ஒருவன் எண்ணத் தொடங்கி தன்னைவிட்டு எல்லோரையும் எண்ணி ஒன்பது பேர் இருப்பதைக்கண்டு திடுக்கிட்டு ஒருவனைக்காணோமே ஆற்றில் மூழ்கி இறந்தானோ என்று கூறித் துக்கிக்கலானான். இதுபோல மற்றவர் எல்லோரும் எண்ணி ஒன்பது பேரைக்கண்டு பத்தாவது மனிதனைக் காணாது மிகுந்த துக்கத்தை அடைந்து பரிதவித்தனர். இப்படியிருக்கையில் கொஞ்சதூரத்தில் ஒரு ஸாது ஒருவர் ஸமாதியிலிருப்பதைக்கண்டு அவரிடம் சென்று தமது குறையை இவர்கள் தெரிவித்தனர். இதைக்கேட்டதும் அவர்கள் மூடத்தனத்தையும் அதனால் விளைந்த துக்கத்தையும் கண்டு அவர் அன்புடன் நகைத்து 'நீங்கள் பத்துப்பேர் இருக்க ஏன் வீணாகத் துக்கப்படுகிறீர்கள்' என்று தேற்றினார். உங்கள் குற்றம் என்னவெனில் 'ஒவ்வொருவனும் மற்றையவர்களை எண்ணிவிட்டுத் தன்னைமாத்திரம் எண்ணாதுவிட்டு விட்டான். இதனால் நீங்கள் பத்துப்பேரிருந்தபோதிலும் உங்களுக்கு ஒன்பது பேரிருப்பதாகத் தோன்றியது' என்று சொல்லியும் விஷயம் விளங்காது அவர்கள் தத்தளிப்பதைக் கண்டு ஸாதுவானவர் ஒருவனை முன் அழைத்து மற்றையவர்களை எண்ணச்சொல்லி பின்பு அவன் பேரில் கையை வைத்துக்கொண்டு 'இத்தனை பேர்களையும் எண்ணிய நீ தான் பத்தாவது மனிதன்' என்று மற்றவரிடம் இருந்து அவனை பிரித்துக் காட்டினார். ஒன்பதுமுடியும் வரையில் மிகுந்த ஆவலோடிருந்த சிஷ்யர்கள் ஸாது எண்ணியவன்மேல் கையை வைத்துப் பத்து என்றதும், ஸந்தோஷம் அடைந்து ஸாதுவை வாழ்த்தினட்டு தாண்டவமாடிக்கொண்டு சென்றனர்.

இக்கதை மனிதன் நிலையை நன்கு உணர்த்துகின்றது. அவ்விவேகபூர்ணகுரு என்பது அஞ்ஞாவிம். சிஷ்யர்கள் கிடந்து ஆறு மோஹம். இதைத் தாண்டினால் அல்லது எவனுக்கும் தன்னைத் தான் நோக்கி எல்லாம் ஸரியாக இருக்கிறதா என்று விசாரிக்கும் சக்தி உண்டாகாது. அப்படி விசாரிக்குங்கால் தன்னிடம் ஒன்பது விஷயங்களிருப்பதை மனிதன் காண்கிறான். அவையாவன:—திருக்கு (பார்ப்பவன்) திருச்யம் (பார்க்கபடும் பொருள்) திருஷ்டி

(பார்வை); கர்த்தா (செய்பவன்) காரியம் (செய்பொருள்) கர்மம் (செய்கை); போக்தா (அனுபவிப்பவன்), போக்கியம் (அனுபவிக்கப்படும் பொருள்), போகம் (அனுபவம்). இவை தவிர பத்தாவது ஒன்று உண்டென்பது மாத்திரம் அவன் ஞாபகத்திலிருக்கிறது. அது இன்னதென உணர முடியாததால் அது இருக்கிறதோ இல்லையோ என்ற ஸந்தேகம் உண்டாய் விடுகின்றது. இதனால் மனிதனுக்கு துக்கம் உண்டாக அவன் குருவைச் சென்றடைகிறான். கதையில் அவரை ஸாதுவாக உருவகப்படுத்தி இருக்கின்றது. குரு ஒன்றையும் புதிதாக ஸ்ருஷ்டிக்காது, அவன் உணராமல் மறந்த அவனது ஸ்வரூபத்தைக் காட்ட முற்கூறிய ஒன்பது வித ஸம்ஸாரங்கள் பெயரைச்சொல்லி, இது நீயல்ல இது நீயல்ல என்று நீக்க சேஷித்திருக்கும் தனது ஸ்வரூபத்தை அவனே யறிகின்றான். இம்மாதிரியாக தனது ஸ்வரூபத்தைத் தான் அறிந்ததும் முன் இருந்த துக்க நீங்க அவன் ஆனந்தத் தாண்டவ மாடிக்கொண்டுகுருவை வாழ்த்துகிறான்.

இக்கதையையும் இதன் கருத்தையும் பின்வருமாறு கைவல்ய நவநீதத்தில் சுருக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது.

* * * *

'பத்துப்புருடரோ ஆற்றை நீந்தி
உதகதீரத்திலேறி யொருவன்
ஒன்பது பேரெண்ணி
அதனொடு தசமன் தான்
என்று அறியாமல் மயங்கி நின்றான்.

அறியாதமயல் அஞ்ஞானம்
அவனில்லை காணோமென்றல்
பிறியா ஆவரணமாகும்
பீழைகொண்ட ழல்விபக்ஷேம்
நெறியாளன் தசமனுண்டு
நிற்கின்றான் என்றசொல்லை
குறியாக எண்ணிநெஞ்சில்
கொள்வது பரோக்ஷஞானம்.

புண்ணிய பதிதன் பின்னும்
புருடர் ஒன்பதின்மர் தம்மை
எண்ணும் நீ தசமனவை
என்னவே தன்னைக்காணல்
கண்ணில் கண்ட ஞானம்
கரைதல் போவது நோய்போதல்
திண்ணிய மனத்தில் ஐயம்
தெளிதலா நந்தமாமே.

இதில் முற்கூறிய கதையின் மூலமாக ஜீவனுக்கு ஏழவஸ்தை உண்டாகும் விதத்தை நன்கு விளக்கப்பட்டிருக்கிறது.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

ஸீதை அல்லது தர்மத்தின் ஸ்வபாவம்

3. உலகிற்குழைத்த காதை

(தொடர்ச்சி)

உழைக்கவேண்டுமென்று ஆவல் உண்டாகிவிட்டால் அதை விட்டொழிய மனம்வராது. அவ்வாறாயினும் தாம் செய்வதில் ஜயம் உண்டாகுமோ உண்டாகாதோ என்ற ஸந்தேஹம ஒருவேளை வந்தாலும் வரலாம். இதனால்தான் நம்பிக்கை அவசியமாகிறது. ஓர் பாவம் சிறந்ததென்று பட்டால், அதன் வழிநடக்கவேண்டிய விடத்தில்வரும் கஷ்டங்களைக் கடக்க மனோதைரியம் அதிகமாக வேண்டும். இதில் உத்ஸாகம்முண்டு. ஹிருதயத்தைமலரச் செய்தாலன்றி மனதுகவலையடையாதிராது. அக்கவலையை நீக்க,சில ஸம்பவங்கள் நடந்து தர்மசிந்தனத்தை பிரகாசிக்கச் செய்யவும், நம்பிக்கையை திடப்படுத்தவும், கடவுள், பாவத்தின் சிறப்பைக்காட்டும் செயல்களை, நடக்கச் செய்கிறார். இதேமாதிரிதான் ஹநுமார் சொல்லியதும் ஸீதைக்குத்தான் உழைக்கவேண்டிய தவச்யகமென்று பட்டாலும் அது முழுதும் நடத்தினால், நம்மைக் காப்பாற்ற கடவுள் அநுக்ரஹம் உள்ளதோ என்ற ஸந்தேஹம் உண்டாகிவிட்டது. ஆனால் திரிசடையினது மொழிகளும் விபீஷணன் மனைவியின் மொழிகளும் அவளது மனதைத் திடப்படுத்தி நின்ற நிலையில் நிலைக்கச்செய்தன. அவைகளெல்லாம் கொஞ்சகாலம்தான். மனதிற்கு உத்ஸாகமூட்டிய தொன்றுதான். இராவணனால் ஏவப்பட்டு அரக்கர்கள் ஹநுமாரது வாலில் நெய்த்துணிகள் கட்டி நெருப்பிட்டதும், அவர் இலங்கை முழுதும் எரித்தபொழுது அசோகவனத்தில் ஸீதையிருந்த விடத்திலிருந்த மரம் அழியாது ஸீதையைக் காத்ததவளுக்கு ஓர் சிறந்த நம்பிக்கையை யுண்டாக்கிவிட்டது. கடவுளது பூரண அநுக்ரஹம் அவள்மேல் பிரகாசித்ததென்றவளுக்குப் பட்டது.

நம்பிக்கை உண்டாக்கி அவரை நம்பிக்கையில் திடசித்த முடையார்களாவென்று பரிக்ஷிப்பது கடவுளினது ஸ்வபாவம். நம்பிக்கையில் ஜீவிப்பவர் எக்கஷ்டம் வரினும் தாங்கள்தைரியங் கொண்டவராக இருக்கவேண்டும். வருங்கஷ்டங்களைக் கண்டு

பயப்படக் கூடாது. தமக்குயிரைக் கொல்லுவதுபோலவும் துயரம்—:அதையும் கணிசியாது நன்னெறியில் நடந்தால் அது ஒன்றும் செய்யமாட்டாது. இதே விதமாக இராவணன், ஹநுமாரது மொழியைக்கொண்டு, இராமன் தன்னை எதிர்க்கவேண்டி வந்திருக்கிறான் என்று தெரிந்ததும், கலகத்திற்கு காரணமாகிய ஸீதையை அவர்கேட்டவண்ணம் அனுப்புவதில்லையென்று வீரங்கொண்டு மாயையால் இராமன் தலைபோலொன்றுண்டாக்கி அதை ஸீதை முன் எறிந்தான். "உன் இராமனிறந்தான்,இனி என்னைக்கூடு" என்றான். ஸீதைக்கு ஆத்ரம்வந்தது. ஆயினும் வாய்த்திறப்பதற்குள் சோர்ந்து கீழே வீழ்ந்துவிட்டாள். ஆனால் மாயையினாலுண்டாவதால் ஞானத்தை யடக்கமுடியாது. தன்னிலை தனக்கு வரும்வரை ஸீதைமயங்கினாள். ஆனால் தனது நாயகன் நினைவு வந்ததும், அவருடைய வீரமும் குணமும் மாயையாற் கொல்லமுடியாதென்றவளுக்குப் பட்டதும் எதிரிலிருந்த இராமன் தலையைக் காணமுடியவில்லை. இராமன் கொல்லப்படவில்லை என்றும் நிஸ்சயமாகிவிட்டது. விபீஷணனன் மனைவி உரைத்த மொழிகளும் அவள் மனத்தைத் தேற்றியது. இராமன் தன்னைக் காக்க வந்துவிட்டான் என்றும் அவளுக்கு தெரிந்துவிட்டது.

"இனி இராமன் வந்தான். ஆனந்த மெனக்குண்டாகிவிட்டது. அவர்க்கு ஜய முண்டாகட்டும்," என்று இரவும் பகலும் கடவுளை தியானித்த வண்ணமாக நின்றாள் ஸீதை. தான் கொண்டபாவத்தின் நிலை நன்றாய் அவளுக்கு பட்டுவிட்டது. தான் இராக்ஷஸக் கூட்டங்களின் அழிவிற்குக்காரணமென்றும் தெரிந்தது. தான் வீணில் கஷ்டப்படவில்லை என்றும் அவளுணர்ந்தாள். பெண்களின் நிலைமையை உயர்த்த தானே நிற்கவேண்டுமென்றும்பட்டது கீழ்மையின் அழிவைக் காணக் கவலை கொண்டு நின்றாள். கீழ்மையின் ப்ரபாவமும் அதன் பாவும் தன்மையுங் வரவரத்தான் குறைக்கமுடியும் என்று அவள் எண்ணியபொழுது, திரிஜடை, இராவணன் ஏவலால், ஸீதையை புஷ்பகத்திலெற்றி, இந்திரஜித்தின் மாயையால் மூர்ச்சையாகிக்கிடந்த இரமலக்ஷ்மணனைக் அவளுக்குக் காட்டினாள் "இவ்வாறாகுமென்று நினைககவில்லையே" என்று மாத்திரம் ஸீதை வெளியில் சொன்னாள். அவள் மனம் உள்புகைந்து நின்றது. ஆனால், சுற்றிலிருப்பவர்கள் மயங்காதிருப்பதைக்கண்டு,இதுவும்துஷ்கிருத்யத்தின்வைபவம்—மாயை—என்று ஸீதை எண்ணியதும்,திரிஜடையும் "இது மாயை,நீர் பயப்படவேண்டாம்" என்று சொன்னாள். இவைபோன்ற மொழிகள் கடவுள் நன்னெறியில் நடப்பவர்கள், தமக்கு வரும் கஷ்டத்தைக் கண்டுபயப்படாது தமது நிலையைக்காப்பாற்ற ஊட்டும் உத்ஸாக ஸாதனங்கள் என்பதற்கு ஒரு ஸந்தேகமும் கிடையாது.

4. உலகிற் புகுந்தகாதை

ஆனால் கொடுமையால் நன்மையைக் கொலைசெய்ய முடியாது. முடியாவிடில் அந்நன்மைக்கு இனமாகிய எதையேனும் நாசம் செய்யவேண்டும் என்று ஆவல் வருவது ஸர்வ ஸாதாரணம். இதேமாதிரி இராவணனும் தன்னால் இராமனை ஜயிக்கமுடியாமையால் இனி அவ்விராமனது உயிர்போல நிற்கும் ஸீதையை நாசம் செய்வேன் என்று ஆரம்பித்தான். ஆனால், அது, நன்மையின் பொருட்டு கடவுளின் அன்பொழுகும் திறமையால், ஸுபார்சுவசன் என்பவனால் தடுக்கப்பட்டு, யுத்தஸந்நதமாய் சென்ற இராவணன் இராமன் அம்பிற்கிறையாகியதும், ஸீதை இராமனேவலால் யுத்தகளத்திற்கு ஸரியான கோலத்தில் கொண்டுவரப்பட்டாள்.

தனக்கு நடக்கை ஸரியாக இருக்குமென்றெண்ணுவது மாத்திரம் தகுதியன்று. உலகிற்கு பொருந்தும்படி நடப்பதுதான் ஒழுக்கத்தின் உயர்வைக் காட்டுகிறது. அதேமாதிரிதான் இராமனும் ஸீதையைநோக்கி, "யான் செய்யவேண்டியதாயிற்று. இனி நீ யாவர்பாலேனும் செல்லலாம். என்னிடம் வரவேண்டுமென்றால் நீ நன்னடக்கை உடையவள் என்று காட்டினால் ஸரி—கொள்வேன்" என்று சொல்லிவிட்டு மௌனமாய் நின்றுவிட்டான். ஸீதைக்குத் தான் இவ்வளவு கஷ்டப்பட்டதும் ஓர் கஷ்டமாகப்படவில்லை. இப்பொழுதெவ்வாறு தன் நடத்தையைக் காட்டுவதென்று பட்டது. ஒன்றும் தோன்றாது திகைத்து இலக்ஷ்மணனைக்கூவி "நீங்கள் எனக்கொரு அக்னிகுண்டம் வளர்த்துத் தாரும். கணவரால் விடப்பட்ட பெண்டிருக்கு ஓர் போக்கிடமும் கிடையாது. அக்னியுட் பிரவேசித்து உயிர்விடுவதுதான் ஸரி" என்றுஸீதை சொன்னாள். இலக்ஷ்மணனும் தமையன் உத்தரவு பெற்று அவ்வாறே செய்தான். ஸீதை இராமனையும் குண்டத்தையும் வலம் வந்து "ஹே! அனல! நான் நன்னடக்கை உடையவள் என்பதற்கு நீயே சாக்ஷி. உன்னை சாக்ஷியாகக்கொண்டு கணவனை வரித்தேன். அவரால் விடப்பட்டபொழுது நீயே என்னைக் காப்பாற்றுவாயாக" வென்று அதனுள்ளே பிரவேசித்தாள்.

நன்னெறி என்னும் நெருப்பு எதனான் அவிக்கப்படும்? அக்னி பகவான் "ஸீதை நன்னடக்கைக்கு நானே ஸாக்ஷி. இராமா அவளை நீ கொள்வாயாக" வென்றான். அப்பொழுது பரமசிவன் தசரதனுடன் மேலுலகத்திலிருந்துவந்து ஸீதையை வாழ்த்தி இராமரை பரதன் நந்திகிராமத்தில்படுங் கஷ்டத்தைப்போக்க அங்கு செல்லும்படிச் சொன்னார். தசரதர் ஸீதையை நோக்கி "அம்மா இராமன் இவ்வாறு செய்தானென்று கோபம்வேண்டாம். இப்படித்தான் நீ கொண்ட, பெண்களின் பெரியவளென்று பேர் வாங்கக் கொண்ட விரதம், பூரணமாகியது" என்று சொல்லிவிட்டு தேவலோகஞ் சென்றார்.

ஆனந்தமயமாகி இராமர் பூர்ண விச்வாஸத்தோடு ஸீதையைக் கைக்கொண்டு, பரதனைக்காத்து, அயோத்தி நகரத்துட் புகுந்து, தாய்மார்களுக்கு வந்தனம் செய்து, அயோத்தியா நகரத்தில் அரசுவீற்றிருந்தார். ஆனால் ஸீதை ஓர் தினம் காடுகளில் ரிஷிபத்னிகள் வசிக்குமிடம் காணவேண்டும் என்று எண்ணம் அவளுக்கு இருப்பதாகக் கூறியமொழிகள் அவர் ஞாபகத்திலேயே வைத்துக்கொண்டிருந்தனர்.

ஓர்நாள் தமது நகரத்துள் நடக்கும் விஷயங்களை விசாரித்துவருகையில் "இராமன் அயல் வீட்டிலிருந்த பெண்ணைத் தன் வீட்டில் வைத்துக்கொண்டதினால், தாங்கள் பெண்டிரைவைத்தினி ஆள்வது அசாத்திய"மென்று ஓர் வதந்தி இருப்பதாக அவர்க்குத்தெரிந்தது. உடனே இலக்ஷ்மணனைக் கூவி "ஸீதையைக் காட்டிற்கனுப்பிவிட்டு வா. பிரஜைக்குத் தலைமைப்பூண்ட நம்மிடத்து சொல்லிற் கிடமிருக்கலாகாது" என்று சொன்னார். இலக்ஷ்மணனும் ஸீதையைக் காட்டில் இராமர் சொல்லியவண்ணம் அவளுக்கு காட்டைக்காட்ட வந்ததுபோல்சொல்லி, விட்டு, அங்கு நிஸ்சயத்தையுங்கூறி, வீடு திரும்பினார்.

தான் உத்தமபெண்டிரின் நிலைமையைக்காக்க வந்தவளென்று அவளுக்குப் பட்டதென்று நாம் முன்னரே சொல்லி இருக்கின்றோம். இப்பொழுதும் அவ்வாறே எண்ணினாள். தான் கஷ்டப்படுவதெல்லாம் உலகத்தின் தர்மநிலையை நாட்டவென்று தான் அவளுக்குப்பட்டது. அவ்வழியில் நிற்கத் தான் இப்பொழுது அவள் கஷ்டப்படுவதாக அவளுக்குப்பட்டது. ஆனதினால்தான் தன்கணவனும் தன்னை இவ்வாறு தர்மத்தின் நிலைமை தவரக்கூடாதென்று காட்டிற்கு அனுப்பியதாக எண்ணினாள். அவருடைய ஆணையை எதிர்க்க தான் ஆள் அல்லவென்று அவளுக்குப்பட்டது. ஆனதினால்தான் கஷ்டத்தை அனுபவிக்க ஸர்வவித்தமாக இருப்பதாக நிஸ்சயம் செய்துகொண்டாள்.

இராமரது நோக்கமும் ஸீதையின் நிலைமையும் ஞானக்கண்ணால் கண்டவால்மீக முனிவர் ஸீதையைத் தன் ஆச்ரமத்திற்கு அழைத்து போய் அங்கு அவளை வைக்கவேண்டும் நிலைமையில் வைத்தார். ரிஷிபத்னிகளும் ஸீதையின் மனோநிலைமையைக் கண்டவளை போற்றிவந்தனர். காட்டிற்கு வந்தபொழுது ஸீதை கர்ப்பமாயிருந்தாள். வால்மீகர் ஆச்ரமத்தில்இலவன் குசலவன் என்றஇரண்டு பிள்ளைகளைப்பெற்றாள்.

இதற்குள் அயோத்தியில் இராமர் அச்வமேதயாகம் செய்ய நிஸ்சயித்தார். பத்தினியில்லாமையால் தங்கத்தால் ஸீதைபோல் ஓர் உருவம்செய்து அதை பத்தினியாக வைத்துக்கொண்டு நடத்தினார். ஆனால் நாம் ஒன்று சொல்ல மறந்துவிட்டோம். வால்மீகர் இலவ குசலவர்களுக்கு ராமசரிதை முழுதும் கானமாகக் கற்றுக் கொடுத்திருந்தனர். இதைச் சத்துருக்நன் கேட்டு பரவசமடைந்துள்ளான். ஆனால் அவனுக்கு இவர்கள் யாரென்று தெரியாது. வால்மீக முனிவரது சிஷ்யர்களென்று மாத்திரம் தெரியும். அசுவமேத மண்டபத்திலவர்களை கானம் செய்யத் தருவித்தனர். இவர்களது முகக்குறியும் குணமும் கண்டு ஸீதையிடம் தனக்குப் பிறந்தவர்கள்தான் என்று இராமருக்கு தெரிந்துவிட்டது. உடனே இராமர் ஜனஸமூஹத்தின் முன்பு தனதுபாதிவிரத்யத்தை காட்டும் பட்சத்தில் தான் ஸீதையைச் சேர்த்துக் கொள்ளவதாக வால்மீகரிடம் சொல்லும்படி தனக்கு நம்பிக்கையுள்ள தூதன் ஒருவன் மூலமாகச்சொல்லி அனுப்பினார். மறுநாள் ஸீதையும் வால்மீகரைப் பின்தொடர்ந்து அச்வமேத மஹா மண்டபத்திற்கு வந்தாள். அங்கு குவித்த கையொடும், திரண்ட மனத்தொடும் ஜனங்களைப் பார்த்து, "யான்—என்றும்—என்—கணவனொருவனன்றி—மற்றவரைக் கண்ணெடுத்து பாராமலு—மல்லாமல் மனத்தினாலு மெண்ணாமலிருக்கும்:—பட்சத்தில்,—இப்பூமிதேவியே, எனக்காதாரமாகி எனக்கோரிடம் தரட்டும்" என்று வாய்திறந்து கூறிக்கொண்டிருக்கும்பொழுதே பூமி வெடித்தோர் விமானம் வந்தது. அவ்விமானத்திலேறி பூமியுள் பிரவேசித்தாள். மறுபடி பூமி மூடிக்கொண்டுவிட்டது. ஸீதையின் பழியும் தொலைந்தது. தர்மத்தில் நிலைமையும் நின்றது. அவள் பட்ட கஷ்டத்தில் ஸுகமும் உண்டாகியதென்பதற்கும் ஸந்தேகமுண்டோ. இவ்வகையான தெய்வத் தன்மையால் தான் ஸீதைக் கொண்டாடப்படுவது. தேவியாக எண்ணப்படுவது. தான் வந்த விடத்திலேயே லயிக்கும்படியாகவும் நேர்ந்தது. தான் உலக ஸ்வபாவத்தில் கலந்து இந்திய தேசத்தின் மாஞ்செடி, மலை ஆறு, மதில் வீடு, குளம் வழி, கோயில் முதலிய எல்லாவிடத்தும் கலந்து இந்தியநாட்டு ஸ்திரீயின் நிலைமையையே தெய்வீகத்தன்மையில் மணக்கச் செய்ய பூமியில் மயங்கி விளங்கினாள்—என்பது இராமாயணக்கதை.

வா, சேஷகிரி.

விசேஷவர்த்தமானம்

GENERAL NEWS

செவ்வாய்க் கிரகம்.—செவ்வாய்க் கிரகம் ஏறக்குறைய இருபத்தாறு மாதங்களுக்கொருமுறை சூரியனுக்கு நேராக எதிர்நிலையாவது வழக்கம். சென்ற மாதம் 18-ம் தேதி அவ்வகையான ஸமயம் ஒன்று உண்டாகியது. செவ்வாய் பூமியிலும்பார்க்கச் சற்றே மத்தியம் தவறி நிற்பதால், அதற்கும் சூரியனுக்குமுள்ள இடைத்தூரம் சிலகாலங்களில் 15 கோடியே 50 இலக்ஷமைலும் வேறு சிலகாலங்களில் 12 கோடியே 80 இலட்சமைலுமாய் விகற்பமடைகிறது. இவ்வண்ணமாகவே ஸூரியனுக்கு அதிஸமீபத்தில் செவ்வாய் வரும்போது நாம் அதைமிகவும் ஸுலபமாய்க்கவனிக்கலாம். இந்த உத்தமதருணம் பதினைந்து வருடங்களுக்கு ஒருமுறைமாத்திரம் ஸம்பவிக்கும். சென்ற 1892, 1907 என்ற ஆண்டுகள் இச்சம்பவத்திற்கு உதாரணங்களாகும்.

* * *

மிளகு; வெண்மிளகு.—ஒருவிதமான கொடியில் உண்டாகின்றது இதன் கொடியும் இலையும் பார்வைக்கு வெற்றிலைக்கொடியும் இலையும் போலிருக்கும். இக்கொடி, மரங்களில் படர்ந்து கதிர்கதிராகக் காய்க்கும். காய் பார்வைக்கு மணிமணியாக மணித்தக்காளிக்காய்போலப் பசுமையாயிருக்கும்; ஒருகதிரில் நாற்பது நாற்பத்தைந்து காய்கள் பிடித்துச் சரட்டில் மணிகள் நெருக்கிக் கோத்ததுபோல நெருக்கமாயிருக்கும். காய் முதிர்ந்து பழுத்தபின் பசுமைநீங்கிச் சிவப்பாகமாறும். பழங்களைக் கொடியில் தானே உலர விட்டால் சிவப்பு நீங்கிக்கறுப்பாகமாறும்.

காய்களைச் செடியில் பழுக்கவிடுவதில்லை. முக்கால்வாசி முற்றியபோதே பறித்து மூன்று நான்கு நாள் வெய்யிலில் உலர்த்திவைக்க மேற்றோல் சுருக்கங்கொண்டுப் பசுமைநீங்கிக் கருமைவாய்த்து கடைகளில் விற்கப்படும் மிளகுபோலாகும். காய்களைப் பறித்து உடனே உலர்த்தாமல் சுத்தசலத்தில் தோலறையும்வரையில் ஊறவைத்துப் பின்பு அத்தோலைக் கையால்பிசைந்து நீக்கி உலர்த்தினால் அது சுருக்கம் கொள்ளாமல் வெண்ணிறமாயிருக்கும். இதுதான் வெள்ளைமிளகு. இதற்குக் கறுப்புமிளகுபோல அவ்வளவு காரமில்லை.

* * *

மலையேற்றம்.—சிலநாட்களுக்கு முன்னே ஓர் ஐரோப்பியன் ஹிமயமலையிலே இதுவரைக்கும் ஒருவரும் ஏறிச்சேராத உயரத்துக்கு ஏறிக்ஷேமமாயிறங்கினான். இமயமலையில் மாத்திரமன்றி மற்றெந்த மலையிலாவது உலகம் முழுவதிலும் இவ்வளவு உயரத்துக்கேறினவர் ஒருவருமிலராம்.

பம்பாயிக்கும் புனாவுக்கும் டெலிபோன் ஏற்பாடு. சற்றேறக்குறைய நூற்றிருபதுமைலில் தூரம் பம்பாயிக்கும் புனாவிற்கும் இடை இருந்தபோதிலும் பம்பாய் கவர்ண்மெண்ட் கட்டிடத்திற்கும் பூனாகவர்ண்மெண்ட் கட்டிடத்திற்கும் ஸமாசாரங்களை அறிந்துக்கொள்வதற்கு டெலிபோன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தற்காலத்தில் கவர்ண்மெண்டுமட்டுமே இதை உபயோகப் படுத்திவருமாம்.

* * *

நாகதாளி.—நம்முடைய தேசத்திலே ஒன்றுக்கு முதவாதென அரோசித்துத் தள்ளப்படுவதாகிய நாகதாளிச் செடிக்கும் ஓர் ஐரோப்பிய துரைமகன் நன்மதிப்பு உண்டாக்கியிருக்கிறாரென்பதைப் பலரறிவாரென எண்ணுகின்றோம். விசேஷ பரீக்ஷைகளால் அவை மிகுந்த பிரயோசனம் பயக்குமென அவர் கண்டுபிடித்திருக்கின்றார். ஆஸ்திரேலியாவிலுள்ள கே. எம். கிப்சன் என்பவரே அவர். அவர் ஓர் இரசாயன சாஸ்திரியார். இவர் சிலகாலமாய் அத்தேசத்தியே பலவகைப் பரீட்சைகள் நடத்தி, நோக்கிய அளவு அனுகூலங்கண்டுகொண்டார். அவைகளை எவர்க்கும் பிரயோசனமுண்டாகப் பிரசித்தஞ்செய்வது அவர்கருத்து.

நாகதாளியிலிருந்து ஓர்வகை வெள்ளைச் சாராயம் வடிக்கலாமென இவர் கண்டுபிடித்திருக்கிறார். இதற்கு அதிகசெலவு பிடியாதாம். இந்தச்சாராயம் அதிக விலைகொண்டதெனத் தெரிகின்றது. இவர் வடித்த இந்தச்சாராயம் ஆஸ்திரேலியாவிலுள்ள பிரிஸ்பேன் பட்டினத்திலே காலன் 25 ரூபாய்வீதம் விலைப்படுகின்றது. இந்த விலைக்கு இவரிடத்தில் வாங்கும் வர்த்தகர்கள் தமக்கு இலாபத்தையும் மறுசெலவைப்பற்றிய பொறுப்புகளையுஞ் சேர்த்து விலையையுயர்த்தி விற்கிறார்களாம். அவருக்குக் காலனொன்றுக்குச் செய்கைச்செலவு இரண்டரை ரூபாய் பிடிக்கின்றது. ஆகவே இலாபவீதம் 100-க்கு 90 வீதமாகின்றது.

* * *

உலகத்துப் பெரியகடிகாரம்.—நியூ ஆர்க் என்னுமிடத்திலுள்ள ஒரு பெருங் கட்டிடத்தில் உலகத்தில் இருக்கும் கெடிகாரங்களில் பெரியவற்றை ஸ்தாபிக்கப்போகிறதாக அறிகிறோம். இந்தக் கெடிகாரத்தின் கைகள், ஒருதரம் சுற்றிவருகையில் அந்தக் கட்டிடத்தின் மூன்று மெத்தைகளை சுற்றிவருகின்றனவென்றும், அவைகளில் ஒன்று ஜன்னலுக்கு நேரே வரும்பொழுது வெளிச்சத்தை முற்றிலும் மறைக்கிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நிமிஷம் காட்டும் கைபடிக்கல்லு 20-அடி நீளமாம். மணிக்கை 11-அடி நீளமாம். இந்தக் கெடிகாரம் பூமியிலிருந்து 400-அடி உயரம் காந்தவெளிச்சத்தினால் பிரகாசம் செய்விக்கப்பட்டபொழுது கெடியாரத்தின் கைகள் முப்பத்தைந்து மைல் ஓர் களங்கமற்ற இராத்திரியில் தெரியுமாம்.

The Lakshmi Silver Shirt Buttons

SEND A TRIAL ORDER AND YOU WILL BE CONVINCED OF THE TRUTH



LOOK SHARP — DON'T LOSE THIS OPPORTUNITY

A PAIR OF SOLID SILVER SLEEVE LINKS AND WATCH CHARMS SWADESHI MANUFACTURE with the impressions

OF THE LIKENESSES OF

Queen Victoria, King Edward VII, Queen Alexandra, Maharaja Sivaji, Vigneswar, Hanuman, Krishna, Naradh, Thukaram, Sri Guroo Dathathria, Lala Lajpat Rai, Bal Gangadhar Tilak, Dadabhoy Naoroji, Shanker, Mother India, Lakshmi, Saraswati, and other Hindu Goddesses, Aum, Rama, and Vande Matharam Links in Sanskrit letters and various other sorts available.

One complete set ...	Rs. 3-0	Postage extra.
One pair sleeve links ...	„ 1-8	
3 sets at a time ...	„ 8-8	

PURE SILVER ALBERT CHAINS

HALL MARKED

1 2 3



4 5 6



All patterns at Rs. 4, 4-4, 4-8 & 5 each according to weight. Assorted patterns always in stock.

Please quote the number and price when ordering to avoid confusion

Apply to:

T. ABDUL GHAFUR,

Jeweller,

1/16, Appu Maistry Street, Mahfuzkhan's Garden, G. T., MADRAS.

மிகவும் அருமையான தமிழ் நாவல்கள்.

ஆனந்தமடம்: தேசபக்தி புகட்டும் ஓர் அருமையான நாவல்—இந்த நாவலும் ஸ்ரீ பங்கிம் சந்திரசட்டர்ஜி பங்காளி பாஷை யில் எழுதியதை ஸ்ரீ மஹேசகுமாரசர்மா அவர்கள் மொழிபெயர்த்தது. ... 0 8 0

போஜசரித்திரம்—2-ம் பதிப்பு. மனதை கவறக்கூடிய 16-ஆப்டோன் படங்கள் சேர்த்திருக்கிறது. ம-ா-ா-ஸ்ரீ ஹைகோர்ட்டு வக்கீல் T. S. நாராயண சாஸ்திரியார் இயற்றியது—ரொம்பவும் நன்ருய் அச்சிடப்பட்டிருக்கிறது. 1 8 0

மதிகெட்ட மனைவி ... 1 0 0

தீனதயாளு ... 0 12 0

ஸ்ரீ மாமிகொலுவிருக்கை ... 0 8 0

தலையணை மந்திரோபதேசம் 3-ம் பதிப்பு 0 8 0

வேணீ ஸம்ஹாரம் ... 0 3 0

மிருச்சகடி ... 0 4 0

முத்திராராக்ஷஸம் ... 0 4 0

லீலாவதி ஸுலோசனை 0 12 0

இரண்டு நண்பர்கள் 0 12 0

மனோஹரன் 0 12 0

கள்வர் தலைவன் 0 8 0

சாரங்கதரன் 0 8 0

சத்ருஜித் 0 12 0

யயாதி 0 8 0

வேதாள உலோகம் 0 8 0

அமலாதித்யன் 1 0 0

காதலர் கண்கள் 0 12 0

(ம-ா-ா-ஸ்ரீ, ஹைகோர்ட் வக்கீல் பி. சம்பந்த முதலியார் இயற்றியவை.)

வாஸந்திகா ஒரு தமிழ்நாடகம் ... 0 8 0

வெளிஸ்வர்க்கன் 1 0 0

கற்புகரசி 0 8 0

குணமாலிகை அல்லது கற்பின் வன்மை 0 6 0

கனகவல்லி 1 0 0

கமலினிகலஹம்ஸம் 0 8 0

எலன் 0 6 0

வசீகரி 1 0 0

ஞானரஞ்சனி 0 8 0

ஸுஜாதா 0 8 0

லலிதாங்கி 0 8 0

வனஸுதா 0 8 0

லலிதா 0 10 0

தமயந்தி 0 9 0

ஞானாம்பாள் 0 6 0

மங்களாம்பாள் 0 8 0

பேயல்ல பெண்மணியே 0 8 0

சுகுணாங்கதன் 0 12 0

பாவலர் விருந்து 0 8 0

வில்லிபுத்தூரார்; பிள்ளை பெருமாள் சரித்திரச் சுருக்கம் 0 8 0

மதிவாணன் 0 8 0

வால்மீகருமாயணம் கிளைக்கதைகள் ... 0 8 0

ஸ்ரீமான். ஜி. சுப்பிரமணிய அயயர் அவர்கள் ஜீவிய சரிதம் 0 8 0

ஸ்ரீபாலகங்காதரர் ஜீவிய சரிதம் ... 0 3 0

அந்தப்புர ரகசியம் 1 0 0

கவிரத்தினசிந்தாமணி என்னும் காளி தாசன்சரித்திரம் 1 0 0

மோகனாங்கி 1 4 0

குடும்ப ஸம்ரக்ஷணி 2 0 0

மன்மதகாந்தன் கதை 0 8 0

இந்து பாகசாஸ்திரம் 2 0 0

மகாமகம் அதின் மகிமை 0 4 0

ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியின் ஜீவிய சரிதம் 0 2 0

கந்தபுராணச் சுருக்கம் வசனம் ... 0 12 0

ரம்யனும் ஜோலிதையும் ஆங்கிலேய கவி ஷேக்ஸ்பியர் இயற்றிய ரோமியோ அண்டு ஜுலியட் நாடகத்தின் தமிழ் அமைப்பு (ஓர் புதிய நாடகம்) 0 8 0

"மானிட மர்ம சாஸ்திரம்" அரிய பெரிய காரியங்களொவ்வொன்றையும் விளக்கிக்காட்டும் சித்திரப்படங்கள் 200 அடங்கியது. விலை ரூ. 5. தபாற் செலவு பிரத்தியேகம் சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு 8 அ.

முத்தி முடிவு மூலமும் உரையும்

இவ்வரிய நூல் வேதாந்த சித்தாந்த சமரச ஞானத்தை யாவரும் இனிதறியுமாறு எளிதாக விளக்குதலானும் அதிதீவிர பரிபக்குவ முடையார்க்கு இன்றியமையாது வேண்டப்படும் சுத்த அனுபவமாகிய முடிந்த நிலையை நன்குணர்த்தலாலும், இது தமிழ் நாட்டில் தத்துவ சாஸ்திர விசாரஞ்செய்வார் எல்லார்க்கும் சாலவும் பயன் படுமெனக் கருதி இதனை அச்சிட்டு வெளியிட்டது. விலை அணு 8.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி

மைலாப்பூர், மதராஸ்



"விவேக போதினி"

ஓர் அருமையான மாதாந்திரத் தமிழ்ப்பத்திரிகை

இப்பத்திரிகையில் பிரசுரமாகும் விஷயங்களாவன

1. ஜாதிமதாசார ஸம்பந்தமானவை.
2. உலக ஒழுக்கங்கள்.
3. கல்வியபிவிருத்திக்குரிய பாஷா விஷயங்கள்.
4. வியவஸாயம், கைத்தொழில், வியாபாரம்.
5. தக்கவர்களைக்கொண்டு எழுதப்பட்டுவரும் நாவல்களும் நாடகங்களும்.
6. சிறுவர்க்கான நன்னெறிக் கதைகள்.
7. ஸ்திரீகளுக்கேற்ற நற்போதங்கள்.
8. சாஸ்திரீகமான விசேஷ வர்த்தமானங்கள்.

நமது பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோர், மிகவும் பிரவித்திபெற்றவர்களும், உலக அனுபவமுள்ளவர்களும் மிகவும் இனிய செந்தமிழ்நடையில், சிறுவர்கள் சிறுமிகள்கூட படிக்கக்கூடியவண்ணம் எழுதப்படுகிறது.

"விவேகபோதினி" பிரதிமாதம் 25உ ஒழுங்காகப் பிரசுரமாகும்.

சந்தாவின் விபரம்

தபால்கூலியுள்பட வருஷசந்தா

இந்தியா, பர்மா, ஸிலோன் ...	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், நேட்டால் வகையரா இடங்களுக்கு ...	4 8 0
தனிப்பிரதி	0 5 0

மற்றை விவரம் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்,
"விவேக போதினி,"
மைலாப்பூர், சென்னை,

"ROYAL BRAND"
RED MARKING INK
உடுப்புகளுக்குக் குறிபோடும் சிகப்பு மை

இந்த மையைக்கொண்டு உடுப்புகளுக்கும், வஸ்திரங்களுக்கும் ஒருதடவை குறிபோட்டுவிட்டால், எப்போதும் மாறவேமாறாது. இதன் பிரயோஜனத்தைக் குறித்து நாம் ஜாஸ்தியாய் எழுதவேண்டுவது அனாவசியம்.

டஜன் 1-க்கு... ... ... 1 4 0

வியாபாரிகளுக்கும், ஒரேதடவையில் ஜாஸ்தியாய் வாங்குவோர்க்கும் விலை பிரத்தியேகம்.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி,
மைலாப்பூர்,
மதராஸ்.

அருமையான தமிழ்ப்புத்தகங்கள்

மார்க்கண்டேயபுராண வசனம் முதல்பாகம் 24-அத்தியாயம் வரையில் நூதனமாகஎழுதிச் சேர்க்கப்பட்ட 80-பக்கங்கொண்ட மார்க்கண்டேயர் வரலாறு, நூலாசிரியர் வரலாறு, மேற்கோள் விளக்கம், அரும்பதவிளக்கம் இவற்றுடன்) புதியபதிப்பு	1 8 0
சங்காவிஜயம் (ஆதிசங்கராசாரிய சுவாமிகள் சரித்திரம், சங்கரர் சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாள் படங்களுடன்)	1 0 0
தனிச்செய்யுட் சிந்தாமணி முதல் பாகம் (182-வித்வான்கள் பாடிய 3815-பாடல்களையுடையது. அந்தந்தப்புலவர் சரித்திரமும் விளக்கப்பட்டுள்ளது)	3 0 0
திருவருட்பிரகாசவள்ளலாரி சிதம்பரம் இராமலிங்க சுவாமிகளியற்றிய திருவருட்பாவிலடங்கிய இன்பரசமான பாகமாகிய இங்கித மாலை மூலமும் உரையும்	0 8 0
ஷை இராமலிங்கசுவாமிகள் திருவருட்பாத்திரட்டு.	0 8 0
ஸ்ரீமத் மாணிக்கவாசகப் பெருமான் திவ்வியசரித்திரம் (வசனம்)	0 1 0
திருக்கழுக்குன்றம் பக்ஷி தரிசனபடம் வர்ணமையில் அச்சிட்டது.	0 0 3
ஷை 100-க்கு	1 4 0

விலாசம் :— அ. மஹாதேவசெட்டி,
நெ. 288, லிங்கசெட்டி வீதி,
முத்தியாலுப்பேட்டை, சென்னை.

REGISTRAR OF BOOKS
REGISTERED
29 ... 1909
MADRAS.

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி 2 } ஸௌம்யஹூ கார்த்திகைமீ 1909-ஹூ நவம்பர்மீ { பகுதி 5

கடவுள் வழிபாடு

THE WORSHIP OF THE LORD

ஆத்மாவின் நித்யத்வத்தை மஹான்கள்போல ஸதா மாறாத ஞாபகத்தில் வைத்து, உயிருள்ள பொழுதே பிறவி பிணியின் நீங்கி ஆனந்திப்பதற்கு கடவுள் வழிபாடே முக்கிய ஸாதனம். அதைப்பற்றிச் சற்று விசாரிக்கப் புகுவோம்.

'அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு'

என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவர். ஆகவே, உலகத்துக்கு முதற்கர்த்தா ஒருவர் உண்டென்பது நன்றாய்ப் புலப்படுகின்றது. அந்தக் கர்த்தாவினாலே உலகத்திலுள்ள சர்வ ஆன்மாக்களும் அவ்வவற்றிற்குரிய தனு கரண புவனபோகங்களைப்பெற்று வாழ்கின்றன என்பதும் விளங்குகின்றது. அத்தகைய முழுமுதற் கடவுளை ஒவ்வொருவரும் வழிபடவேண்டியது அத்தியாவசியம். ஏனெனில்,

'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழா ரெனின்'

என்ற குறளின் பிரகாரம் கல்வியைக் கற்பதின் பிரயோசனம் உலகுக் கிறைவன் ஒருவன் உண்டென்றுணர்வதும் அவ்வுணர்வுக் கேற்றபடி அவ்விறைவனை வழிபட்டு வாழ்தலுமேயாம். இவ்வாறு எல்லாம்வல்ல இறைவனை ஏன் வழிபடவேண்டும்? நன்றாய் உண்டு, உடுத்து, உலாவி காலம் கழிப்பதிலும் கடவுளை வழிபடுவதினால் அடையும் இன்பம் சிறந்ததோ என்றால் நாம் இவ்வுலகத்தில் அனுபவிக்கும் எல்லா இன்பங்களையும்விட ஈசுவர விஷயமாய் அடையும் இன்பமே சிறந்தது என்பது

'கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்தாளு மரசினும்
இனியன் றன்னடைந் தார்க்கிடை மருதனே'

என்னும் அப்பர் சுவாமிகளுடைய தேவாரத்தால் நன்றாய் விளங்கும். இப்படிப்பட்ட பெறுதற்கரிய பேரின்ப சுகம் இருக்க, சிலர் அதனை முற்றிலும் மறந்து ஈசுவரசிந்தனையே யில்லாமல் நாட்களைக் கழிக்கின்றார்களே என்றால் அவர்களுக்கு உலக இன்பத்தைப் பார்க்கிலும் சிறந்த இன்பம் உண்டு என்பதும் அந்த இன்பத்தை அடைய வேண்டிய விதம் இப்படிப்பட்டது என்பதும் விளங்காத காரணமேயன்றி வேறில்லை. உலகத்திலுள்ள அளவற்ற பிறவிகளில் மானிடப்பிறவியே மேலானது. மானிடப்பிறவியிலும் கூன், குருடு, செவிடு முதலிய குற்றங்களை நீக்கிப்பிறத்தல் அருமை. அப்படி பிறந்தாலும் நல்ல குலத்தில் வந்துதிப்பது அருமை. நல்லகுலத்தில் வந்து பிறந்தாலும் கடவுளை வழிபடுதல் அருமை. மானிடப் பிறப்பில் தெய்வசிந்தனையைத்தடுக்கும் பலவிதமான துன்பங்களை, திருவாசகம், போற்றித்திரு அகவல் என்னும் பாகத்தில் 11-ம் வரிமுதல் 42-வது வரி வரையில் மாணிக்கவாசக சுவாமிகள் தமது அற்புதத் திருவாக்கினால் விளக்கிக்காட்டியருளினர்.

ஆகையால் உலகத்தில் இத்தனை ஆபத்துக்களுக்கும் பிழைத்து தெய்வத்தினிடத்தில் நம்பிக்கையுண்டாகி வழிபடவேண்டும். அப்படி இறைவனை வழிபட்டால் அடையும் பயன் யாதெனின்,

'பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்'

என்னும் குறளின்படி பிறவித்துன்பத்தை யொழித்து என்றும் அழியாத பேரின்ப நலத்தைப் பெற்று வாழ்தலாம்.

தி. பாலசுப்பிரமணிய முதலியார், B. A.

விவேக போதினி

தொகுதி 2] ஸௌம்யஹூ கார்த்திகை [பகுதி 5

வேதபாகங்கள்

THE VEDAS—THEIR DIVISIONS

வேதங்கள் ரிக் யஜுஸ் ஸாம அதர்வணம் என நான்கு என்றும், ஒவ்வொரு வேதத்திலும் ஸம்ஹிதை அல்லது மந்திரங்கள், பிராம்மணங்கள், உபநிஷத்துக்கள் என மூன்று உட்பிரிவுகள் உண்டென்றும் எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்த விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாக இங்கு விசாரிக்கப்புகுவோம்.

வேதங்களின் உட்பிரிவாகிய ஸம்ஹிதையானது அநேகவித வைதிக கர்மங்களில் உபயோகப்படும்படியான மந்திரங்களை அடக்கியுள்ளது. இவைகளின் பொருள் விளங்கும்படி மனனம்செய்து மோக்ஷ விஷயஞானத்தை ஒருவன் அடையவேண்டுமாதலின் இவைகளுக்கு மந்திரங்கள் என்ற பெயர் உண்டாயிற்று. யாகர்திக்ருதுக்களிலும் இம்மந்திரங்கள் ஸமயத்திற்குத் தகுந்தபடி எடுத்து ஆளப்படவேண்டியவைகளாயும் இருக்கின்றன. யாகத்தில் ஸோமரஸத்தைப் பிழியும் காலத்து சில மந்திரங்களும், இதை ஆகுதி செய்யுங்கால் சிலவும், நெய் ஆகுதி செய்யுங்கால் சிலவும், இவ்வாறு ஸமயங்களுக்குத் தக்கபடி இம்மந்திரங்கள் உபயோகப்பட்டும் வரவேண்டியவையாக விருக்கின்றன. இந்த மந்திர பாகங்கள் தான் வேதங்கள். மற்றைப் பாகங்கள் இவைகளுக்கு ஏற்பட்டிருக்கும் வியாக்யான நிலையில் இருப்பவைகளே.

முதல் வேதம் முக்கியமாக ஸ்தோத்திரங்களாலேயே நிறைந்திருப்பதால் அதற்கு ரிக் வேதம் என்று பெயர்வந்தது, (ரிக் = ஸ்தோத்திர சுலோகம்). யாகஸம்பந்தமான மந்திரங்களை உடைய வேதமாகிய இரண்டாம் வேதத்திற்கு யஜுர்வேதம் என்று பெயர். இப்பதம் ஆராதனை என்று பொருள்படும் யுஜ் என்ற தாதுவிலிருந்துவந்தது. இதிலிருந்தேதான் யாகம் என்ற பதமும் வந்தது. யஜுர் வேதத்தில் இரண்டு பெரிய பாகங்கள் உண்டு. அவைகளுக்கு முறையே கிருஷ்ணயஜுர்வேதம் என்றும், சுக்கில யஜுர்வேதம் என்றும் பெயர். இவைகளை முறையே தைத்ரீயர்யாளும் வாஜஸனேயாளும் பின்பற்றுகின்றனர். ரிக்வேதமந்திரங்களுடன் இந்த வேதத்தில் அநேக ஸூத்ரங்களும் அடங்கியிருக்கின்றன. ஸோமயாகத்தில் கானத்திற்கு அவசியமான சுலோகங்கள் ஸாமவேதத்தில் காணப்படுகின்றன. இவைகளில் 75 ரிக் வேதத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. இவைகளை யாககாலத்தில் கானம் பண்ணவேண்டியது. இம்மூன்று வேதங்களையே அடிக்கடி வேதங்கள் என்று கூறுவது. நான்காவதாகிய அதர்வணவேதத்தில் இம்மூன்றிலும் உள்ள மந்திரங்களும், யோகஸித்திக்கு வேண்டிய மந்திரங்களும் அடங்கியிருப்பதால் இது தனி வேதமாக மதிக்கப்படவில்லை. இந்த வேதத்திற்கு பிரஹ்மவேதம் என்று பெயர். யாகத்தில் ஹோதா, அத்வர்யு, அல்லது உத்காதபண்ணும் குற்றங்களைத் திருத்த ஏற்பட்டிருக்கும் பிரம்மா கூறவேண்டிய மந்திரங்கள் இதில் இருப்பதாலும், பரப்பிரம்மத்தின் ஸ்வரூபத்தைத் தெளிவாக எடுத்துரைக்கும் உபநிஷதங்களில் முக்கியமானவை இவ்வேதத்தில் சேர்ந்தவைகளாகையாலும் இந்த அதர்வண வேதத்திற்கு பிரம்மவேதம் என்றபெயர் வந்தது.

முற்கூறியதில் நான்கு புதிய பெயர்கள் காணப்படுகின்றன. அவையாவன, ஹோதா, அத்வர்யூ, உத்காதா, பிரம்மா என்பவைகளே. வேதங்களில் ஸம்ஹிதாபாகங்கள் யாக விஷயமாகவே இருக்கின்றன. யாகத்தைப் பண்ணுபவனுக்கு யஜமானன் என்று பெயர். இவன் முக்கியமாக நான்கு பிராம்மணர்களை வைத்துக்

கொண்டு தனது யாகத்தை நடத்துகிறான். அவர்களே முற்கூறிய நான்கு பெயரை வஹித்து யாகத்தை நடத்திவைப்பவர்கள். அக்னியில் ஆஹுதி கொடுப்பவனுக்கு ஹோதா என்றும், யாகத்திரவ்யம் முதலியவைகளை மேல் பார்வை பார்த்து யாகத்தை நடத்துபவருக்கு அத்வர்யூவென்றும், ஓர் ஆஹுதியை வாங்கவந்திருக்கும் தேவதையை கானமூலமாகத் துதிப்பவருக்குஉத்காதா,என்றும்,முற்கூறிய மூன்று பெயரது வேலைகளை மேல்பார்வை பார்ப்பவருக்கு பிரம்மா என்றும் பெயர்.முற்கூறிய நான்கு பெயருள் அத்வர்யூவே யஜமானனுக்கு முக்கிய ஸஹாயம் செய்பவன். இவன் யஜுர் வேத அத்தியயனம் செய்தவனாக இருக்கவேண்டும். இந்த வேதம் யாக விஷயங்கள் எல்லாவற்றையும் ஸரிவர அறிந்து நன்றாக நடத்தும் சக்தியை இவனுக்கு உண்டாக்குகிறது. உதாரணமாக, யாகவேதி உண்டாக்கும்விதம், யாக பசு லக்ஷணம், யாகத் திரவ்யங்களின் விவரம், இவைகளின் அதிஷ்டான தேவதைகளைத் துதிக்கும் மந்திரங்கள், ஆகிய இவைகளை யஜுர்வேதம் இவனுக்கு கற்பிக்கின்றது, ஆகையால் இந்த வேதத்திற்கு அத்வர்யூ வேதம் என்று பெயர். இதன் மந்திரபாகம் 40 அத்தியாயங்களையுடையது. இவைகளுள் 1886 சுலோகங்கள் இருக்கின்றன. இந்தச் சுலோகங்களுள், சற்றேறக்குறைய பாதி ரிக்வேதத்தில் உள்ளன.

ரிக்வேதத்திலுள்ள ஸம்ஹிதா பாகம் 1017 ஸூக்தங்களை அடங்கியுள்ள பத்து மண்டலங்களாகப் பிறிக்கப்பட்டிருக்கின்றது. யாகத்தில் ஆஹுதி கொடுக்கும்பொழுது ஹோதா அது போய்ச் சேரவேண்டிய தேவதைக்குரிய ருக்வேதமந்திரத்தைச் சொல்லி அந்த யாகசாலைக்கு வந்து ஆஹுதியை தயவுசெய்து பெற்றுக்கொள்ளும்படி அவனை அழைக்கிறான். இந்த வேதத்தில் தேவதைகளுக்கு உரிய மந்திரங்களோடுகூட ஆங்காங்கே பரம்பொருளைத் துதிக்கும் மந்திரங்களும் ஏராளமாகக் காணப்படுகின்றன. இதனால் கர்மங்களைப் பற்றிக் கூறும் பாகங்களிலும் ஞானிக்குரிய விஷயங்களும் காணப்படுகின்றன என்பது நன்கு விளங்கும்.

ஸாமவேதம் என்ற பதத்திற்கு கானவேதம் என்று பொருள். இதை யாகத்தில் உத்காதா சொல்லவேண்டியது. இந்த வேதம் 15-காண்டங்களை உடையது. இவைகளுள் 460 மந்திரங்களோடு கூடிய 32 அத்தியாயங்களுள்ளன. இந்த வேதத்தை பிரகிருதி, ஊஹம், ரஹஸ்யம், அருணம் என்ற நான்குபாகங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை ஸ்வர ஒழுங்குப்படி கானம் செய்யலாம். இந்த ஸ்வரங்கள் அச்சுப்புஸ்தகங்களில் தக்க குறிகளால் காட்டப்பட்டும் இருக்கின்றன.

அதர்வவேதம் 731 மந்திரங்களடங்கிய 20 காண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

இனிமேல் பிராம்மணங்கள் என்ற வேதபாகங்களைப்பற்றி விசாரிக்கப்புகுவோம். இவைகள் யாகங்கள் நடத்தவேண்டிய விதத்தையும், வேதங்களில் காணப்படும் அரும்பதங்கள், ஸூத்திரங்கள், மந்திரங்கள் ஆகிய இவைகளின் விசேஷப்பொருள்களையும், இன்ன கர்மத்தில் இன்ன மந்திரங்கள் சொல்லவேண்டும் என்பதையும், யஜமானனுக்கு ஓர்வித கர்மத்தால் வரும் சிறப்பையும், வேறோர்வித கர்மத்தால் வரும் இழிவையும், இவைகளை விளக்குவதற்கு தகுந்த முன்னோர்கள் கதைகளையும் அடங்கியுள்ளன. ஆகவே இவைகள் ஸம்ஹிதா பாகத்திற்குத் தெளிவான வியாக்யானங்கள்போல்வன. வேதங்களுக்கு பிரம்மம் என்று ஒரு பெயர் உண்டு. இதனால் இவ்வியாக்யான ரூபமான பாகங்களுக்கு பிராம்மணங்கள் என்று பெயர். பிராம்மணங்களை உற்று நோக்கில் இரண்டுவிதமாகக் காணப்படும். இவைகள் விதிகள், அர்த்தவாதங்கள் என்பவைகளே. யாக ஸம்பந்தமான கோட்பாடுகளே விதிகள். இந்த விதிப்படி நடப்பதால்

உண்டாகும் நன்மையையும், இப்படி நடவாமலிருந்தால் உண்டாகும் தீமையையும் விஸ்தரித்துக் கூறுவது அர்த்தவாதம். இஹலோக ஸுகம் வேண்டும் என்பவன் வாயு பகவானுக்கு வெள்ளை ஆட்டைக்கொன்று ஆஹுதி கொடுக்கவேண்டும் என்பது விதி. வாயுவுக்கு வேகமாக செல்லும் சக்தி இருப்பதால் அதை எண்ணிப் பூஜிப்பவனுக்கு சீக்கிரத்தில் நல்ல பலன் கிடைக்கும் என்பது அர்த்தவாதம். காதிர மரத்தால் யூபஸ்தம்பம் செய்யவேண்டும் என்பது விதி. இம்மாதிரியான யூபஸ்தம்பத்தைக்கொண்டு யாகம் நடத்தி தேவதைகள் ஸ்வர்க்கம் அடைந்தனர் என்பது உபாக்யானம். யூபஸ்தய்பத்திற்காக இம்மரத்தை உபயோகிக்கும் யஜமானனுக்கு இம்மாதிரி ஸ்வர்க்க வாஸம் கிடைக்கும் என்பது அர்த்தவாதம்.

பிராம்மணங்களுடைய இறுதியில் வேதங்களது முக்கியமான பாகங்களாகிய ஆரண்யகங்கள் காணப்படுகின்றன. இவைகளுள் தான் சிறந்த உபநிஷத்துக்கள் அடங்கியிருக்கின்றன. ஆரண்யகம் என்ற பதத்திற்கு காட்டில் இயற்றப்பட்ட நூல்கள் என்று பொருள். யாகாதி கர்மங்களை விட்டு துறவறம்பூண்டு வனம் சென்று தமது நாளைத் தபஸில் கழிக்கும் குணமுடையோர்க்கே இவைகள் தகுந்த நூல்கள். இவைகளுள் அடங்கியிருக்கும் விஷயம் மிக சிறந்தவை ஆதலால் இவைகளை குரு சிஷ்யனுக்கு ஏகாந்தமாக வனத்தில் உபதேசம் பண்ணவேண்டுமே ஒழிய லௌகிகம் நிறைந்த கிராமாதிகளில் செய்யக்கூடாது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உபநிஷத்துக்கள் அடங்கிய ஆரண்யகங்கள் பிராம்மணங்களின் பிற்பாகங்களாகையால், வேதங்கள் மந்திரங்கள், பிராம்மணங்கள் என இருவகைப்படும் எனக் கூறலாம். ஆதலால் இங்கு பிராம்மணங்களைப்பற்றிக் கூறுங்கால் சுருக்கமாக ஆங்காங்கே அவைகளுள் இருக்கும் உபநிஷத்தின் ஸ்வரூபத்தையும் சுருக்கிக்கூறுவோம்.

ரிக்வேதத்தில் இரண்டு பிராம்மணங்கள் இருக்கின்றன. அவையாவன அயிதிரேயப் பிராம்மணம், கௌஷீதிகி பிராம்மணம் என்பவைகளே. முன்னது 40 அத்தியாயங்களை உடையது, இவைகள் எட்டு பஞ்சகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிராம்மணத்தின் முக்கியபாகம் ஸோமயாகத்தைப்பற்றிக் கூறுவது. இதன் முதல்பாகம் அக்னிஷ்டோமம் என்ற ஒரு நாளில் முடியும் யாகத்தையும், கவாமயனம் என்ற ஒரு வருஷத்தில் முடியும் யாகத்தையும், துவாதசாஹம் என்ற 12 நாள் யாகத்தையும் பற்றிக்கூறுகின்றது. அடுத்தபாகம் அக்னிஹோத்ரம் முதலிய விஷயங்களைப்பற்றியது. இறுதிப்பாகமானது ராஜ்ய பட்டாபிஷேகம்,ராஜனது புரோஹிதர் நிலைமுதலியவற்றைப்பற்றிக் கூறுவது, இந்தப் பிராம்மண முடிவிலிருக்கும் ஆரண்யகத்தில் அயிதிரேய உபநிஷத்து காணப்படுகின்றது. பின்னதாகிய கௌஷீதிகி பிராம்மணத்திற்கு ஸாங்கயனப் பிராம்மணம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இதிலும் ஸோமயாகத்தையே முக்கியமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆதியில் இது அக்னி ஆதானம், அக்னிஹோத்ரம், பௌர்ணமி, அமாவாஸ்யைகளில் செய்யவேண்டிய கர்மங்கள், ஒவ்வொரு மாஸத்திலும் செய்யவேண்டிய நான்கு யஞ்ஞங்கள் ஆகிய இவைகளைப்பற்றி விஸ்தரிக்கின்றது. இதன் இறுதியில் உள்ள ஆரண்யகத்தில் தான் கௌஷீதிகி உபநிஷத்தும் மற்றும் சில சிறு உபநிஷத்துக்களும் அடங்கி உள்ளன.

கிருஷ்ண யஜுர்வேதத்தில் இரண்டு சாகைகள் உண்டு, அவையாவன மைத்ரயணீய சாகை தைத்திரீய சாகை ஆகிய இவைகளே. முன்னதற்கு தனியாகப் பிராம்மணங்கள் இல்லாவிடினும் அதன் ஸம்ஹிதா பாகங்களில் ஆங்

காங்கே உள்ள வசனபாகங்களே அதற்கு பிராம்மணமாகி விடுகின்றன. பின்னதற்கு மூன்று அத்தியாயங்களோடு கூடிய தைத்திரீய பிராம்மணம் என்ற பிராம்மணம் ஒன்று உண்டு. இதன் இறுதியில் உள்ள ஆரண்யகத்தில் தைத்திரீயம், மஹா நாராயணம் என்ற உபநிஷத்துக்கள் காணப்படுகின்றன. மஹா நாராயண உபநிஷத்திற்கு யாஞ்ஞீகி உபநிஷத்து என்ற பெயரும் உண்டு. சுக்கில யஜுர் வேதத்திற்குத் தனியாக மிகச் சிறந்ததான சதபதப் பிராம்மணம் என்ற பிராம்மணம் ஒன்று உண்டு. இது 100 அத்தியாயங்களை உடையது. இது இரண்டு சாகைகளாகக் காணப்படுகிறது. முன்னது 140 காண்டங்களை உடைய மத்யந்தினசாகை, பின்னது 17 காண்டங்களையுடைய காண்வ சாகை. இறுதி கண்டத்தில் ஓர் ஆரண்யகம் இருக்கிறது. இதன் இறுதி ஆறு அத்தியாயங்களுக்கே பிரஹதாரண்யக உபநிஷத்து என்று பெயர். சதபதப் பிராம்மணத்தில் மிகத்தெளிவாயும் ஒழுங்காயும் யாக விஷயங்களைப் பற்றிச் சொல்லப் பட்டிருக்கின்றது. இதன் உபநிஷத்தோ எல்லா உபநிஷத்துக்களையும் விட மிகச்சிறந்தது. இதில் ஈசோபநிஷத்தும் இறுதியில் காணப்படுகிறது. இதனோடு 17-சிறிய உபநிஷத்துக்கள் காணப்படுகின்றன.

ஸாமவேதத்தில் உள்ள தண்டிசாகை, தளவகாரசாகை ஆகிய இவைகளுக்கு முறையே முக்கியமாக ஒவ்வொரு பிராம்மணம் உண்டு. முன் சாகையின் பிரர்ம்மணத்திற்கு பஞ்ச விம்சதி பிராம்மணம் என்று பெயர். இதில் 25-அத்தியாயங்கள் இருப்பதால் இதற்கு இப்பெயர் வந்தது. இது ஸோமயாகத்தைப்பற்றிக் கூறுவது. இந்துசாகைக்கு வேறொரு பிராம்மணமும் உண்டு. இதற்குசாந்தோக்ய பிராம்மணம் என்றுபெயர். இதில் முதல் இரண்டு அத்யாயங்கள் ஜனனம், விவாஹம், தேவதைகள் முதலியவைகள் ஸம்பந்தமான மந்திரங்களை அடக்கியுள்ளன. பின்னுள்ள பத்து அத்தியாயங்களுக்கும் சாந்தோக்ய உபநிஷத்து என்று பெயர். பின்னதாகிய தளவகார சாகையின் பிராம்மணத்தில் கேனோபனிஷத்து அடங்கியிருக்கின்றது. ஸாமவேதத்துள் அநேக சிறிய உபநிஷத்துகள் அடங்கியிருக்கின்றன.

அதர்வணவேதத்தில் சற்றேறக்குறைய 27-உபநிஷத்துகள் உண்டு. இந்த வேதத்தில் கோதப் பிராம்மணம் இருக்கின்றது. இது இரண்டு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டு முறையே 5, 6 அத்தியாயங்களை உடையது. இதில் உள்ள உபநிஷத்துக்களுள் முண்டக, பிரசன, மாண்டூக்கியங்களே முக்கியமானவை.

முற்கூறிய மாதிரியல்லாமல் வேறு விதமாகவும் வேதங்களைப் பிரிக்கலாம். இப்பாகங்களுக்கு கர்மகாண்டம், ஞானகாண்டம் என்று பெயர். முன்னதுள் மந்திரங்களும் பிராம்மணங்களும் அடங்கும். பின்னதுள் உபநிஷத்துக்கள் அடங்கும். யாகாதி கர்மங்களின் மூலமாக ஸ்வர்க்கஸுகங்கள் அடைவிக்கவேண்டும் என்பதே கர்மகாண்டத்தின் முடிவு. ஞான காண்டமோ, பிரம்மஞானத்தைப் புகட்டி அதன் மூலமாக ஸகல கர்மங்களிலிருந்து விடுவித்து பரமபதம் அடைவிக்கவேண்டும் என்பதை முடிவாக உடையது. இந்தக் காரணத்தால்தான் ஞானகாண்டம் கர்மகாண்டத்தைவிட மேலானதென்றும், ஞானகாண்டமே வேதாந்தம் என்றும் மதிக்கப்பட்டு வருகின்றது.

இயற்கைப் பொருள் செயற்கைப் பொருள்

NATURAL AND ARTIFICIAL PRODUCTS

நாம் இப்பூலோகத்து காண்கிற பொருள்கள் இயற்கைப் பொருள் செயற்கைப்பொருளென இருவகைப்படும். இயற்கை செயற்கைப் பொருள்கள் யாவையெனவும் அவைகட்குள்ள பேதங்களும் சம்பந்தங்களும் என்னவென்றும் ஆராய்ச்சி செய்வோம்.

நம்மைச்சுற்றி நாம் காண்கிற மலை, சமுத்திரம், ஆகாயம், சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் இவைகள் இயற்கைப் பொருள்களாகும். நாம் கட்டும் வீடுகள், கப்பல்கள், ஆவிவண்டிகள், மின்சாரத் தந்திகள், நாம் உடுக்கும் உடைகள், பீங்கான் கண்ணாடிச் சாமான்கள், சாஸ்திரப் பயிற்சியிற்றேர்ந்து ஆவியினாலும் மின்சாரத்தினாலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற அநேக யந்திரங்கள், நமது தட்டுமுட்டுச் சாமான்கள், இன்னும் அநேகவைகள் செயற்கைப்பொருள்களே.

இயற்கைப் பொருளாகிற மலை, ஆகாயம், சமுத்திரம் முதலியன இல்லாவிடில் உயிர்ப்பிராணிகள் உலகில் ஜீவித்திருப்பது அசாத்தியம். உதாரணம்—சமுத்திரத்தின் ஜலம் சூரிய வெப்பத்தினால் ஆவியாக்கப்பட்டு, ஆவி மேகரூபமாக மாறி, அம்மேகம் மலைகள்போலொத்த உயர்ந்த ஸ்தலங்களில்குளிர்ச்சியைப்பெற்று மழைத்துளிகளாய் விழுகின்றது. அம்மழை ஜலம் மலைகளினின்றும் நதிகளாக உற்பத்தியாகி, அந்நதிகள் நாட்டில் பரவியோடி, அநேக கோடிப் புற்பூண்டுகளுக்கும் ஜீவராசிகளுக்கும் ஆகாரமாகி ஆகார உபகருவியுமாகி கடைசியாக சமுத்திரத்திற்கே போய்ச் சேருகின்றது

ஜீவிதத்திற்கு இன்றியமையாத பொருள்கள் வாயு, தண்ணீர், உணவு என இம்மூன்றே. இம்மூன்றும் இயற்கையிலே நமக்குக் கிடைக்கின்றன. முதலில் வாயுவின்றி எப்பிராணியும் ஜீவித்திருக்க முடியாது. இரண்டாவது தண்ணீர்.—தண்ணீரின்றி நாம் பானம் செய்வதற்கென்செய்வோம்? நமக்கு உணவுக்கு அவசியமுள்ள தானியம் முதலியனயாவும், புற்பூண்டுகளும், தண்ணீரின்றி உலகின்கண் தழைத்தோங்கா. அநேக புற்பூண்டுகள் நமது உணவுக்கு உபகாரப்படுவதோடு பொதுவாகப் புற்பூண்டுகள், மரங்கள், இவைகள் நமக்கு இன்றியமையாதவை. நாம் வெளியே உமிழ்கின்ற கரியமலவாயுவை, மரங்களும் புற்பூண்டுகளும், சூரிய வெளிச்சத்தில் உட்கொண்டு, பிராணவாயுவை வெளியே உமிழ்கின்றன. ஆகவே பிராணவாயு ஜீவராசிகட்கு எவ்வளவு அவசியமோ, அவ்வளவு மரங்கட்கும் புற்பூண்டுகளுக்கும் கரியமலவாயு அவசியம்.

முதல் முதல் நமது கிருஷியை எடுத்துக்கொள்வோம். ஆதியில் கிருஷி எவ்விதமுண்டாயிற்றென்றும், தானியங்களை விதைத்து அதினின்றும் அநேக மடங்கு தானியத்தை நாம் பெறுவதை எவ்வாறு கற்றுக் கொண்டோமென்றும் ஆலோசிப்போம். மனிதன் உண்டாயின உடன்தானே அவனுக்கு அவசியப்படும் ஒவ்வொரு வஸ்துவும் உலகில் சிருஷ்டிக்கப்பட்டிருந்ததென சிலர் கூறத்தொடங்குவர். ஆனால் சாஸ்திரீக ஆராய்ச்சியின்படி ஆலோசிக்குமிடத்து இக்கிருஷி மனிதன் ஆராய்ச்சியினாலும் அநேகம் சோதனைகளினாலும் அபிவிருத்தியினாலும் இம்மட்டு விருத்திக்குக் கொண்டுவரப்பட்டதென அறியக்கூடும். வித்தை விதைப்பதனாலேயே அது பயிராய் தானியத்தைக் கொடுக்கிறதென்றும், அவ்வித்தைச் சரியானபடி உழுது உரப்படுத்திய பூமியில் விதைத்தால் மேனி அதிகமாக விளையும் என்றும், இன்னசீதோஷ்ண சமயத்தில் எவ்வித வித்தை விதைத்தால் அதிகலாபத்தைப் பெறலாமென்றும், மனிதன் அறிந்தது வெகு சீக்கிரத்தில் சொற்ப அறிவினால் அல்ல. அநேக நூற்றூண்டுகளாக பரிசோதனையின்மேல் பரிசோதனையாக நெடுங்காலம் உழைத்து நமதுமுன்னோர் கிருஷியை இம்மட்டு விருத்திக்குக் கொண்டுவந்திருக்கின்றனர். இதினின்றும் கிருஷிப்பயிர்கள் இயல்பாய் உண்டாகிறபோதிலும் மனிதனுடைய ஊக்கத்தாலும் விடாமுயற்சியினாலும் அபிவிருத்தியினாலும் அன்றி அது நமக்குத் தக்க பலனைக் கொடாதென அறிகிறோம்.

ஓர் நல்ல பூமாலையை எடுத்துப்பார்த்தால் அது இயற்கை வாசனை பொருந்திய பூக்களால் ஆக்கப்பட்டிருக்கிறதென அறிகிறோம். அப் புஷ்பங்கள் இயற்கைப் பொருளாயினும், ஒவ்வொரு நிறப்புஷ்பத்தையும் தக்க இடங்களில் அமைத்து அவைகளை மாலைகளாகவும் செண்டுகளாகவும் தாவடங்களாகவும் சரங்களாகவும் செய்வது மனிதனே. புஷ்பங்களில் அநேகவைகளை மருந்துகட்கும், சில

வாசனைச் சாமான்களுக்கும், தாம் வணங்கும் தெய்வங்களுக்கும் உபயோகித்து வருவதும் மனிதனே.

மின்சாரத் தந்தியினால் எவ்வளவு பிரயோஜனத்தை அடைகிறோம். தந்தியில்லா மின்தபால் (Marconis Wireless Telegraphy) இப்போது கண்டுபிடிக்கப்பட்டு நாம் நாளடைவில் எவ்வளவு பிரயோஜனத்தை அடையப்போகிறோம். பேசும் யந்திரமாகிய போனோகிராப் (Phonograph), ரூபத்தையும் அசைவையும் ஒரேசமயத்தில் காண்பிப்பதான சின்னமெட்டோகிராப் (Cinematograph) யந்திரமும் கண்டுபிடித்தவர் தாமஸ் ஆல்வா எடிஸன் என்னும் மனிதரே. முதலில் தோணி, பின் பாமரக்கப்பல், இப்போது புகைக்கப்பல் இவை யாவும் மனிதனாலேயே கண்டுபிடிக்கப் பட்டவை. நாளுக்குநாள் இவை விருத்தியடைந்து வருவதும் மனிதனுடைய புத்தி யுக்தியினாலேதான். நமது வாசஸ்தலமாகிய வீடுகளும் பெரிய உப்பரிகைகளும் அவைகட்கு வேண்டும் தட்டுமுட்டுச் சாமான்களும் மனிதனுடைய கைவேலையே.

இனி இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள் என்பவைகளின் வித்தியாசமென்ன, வித்தியாசந்தான் ஏதாவதுண்டோவென்று பார்ப்போம். இதற்கும் ஓர் சிறு உதாரணமெடுத்துக்கொள்வோம். ஓர் வீடு கட்டுவதற்கு வேண்டிய சாமான்கள் மண், கல்,மரம்,இரும்பு,யாவும் இயற்கைப் பொருள்களே. இம் மண்ணைச் செங்கலாக்குவதும், கல்லைக் கொத்திப் பணிப்படுத்துவதும், மரத்தைச் சீவி இழைத்துப் பணி செய்வதும், இரும்பால் செய்வனவற்றைச் செய்வதும் மனிதனே. ஓர் வீட்டைக் கட்டி முடிக்கவேண்டியவர்கள், கொத்தன், தச்சன், கல்தச்சன், கொல்லன், வேறு கூலியாள்கள் இவர்களே. இப்போது வீட்டைக் கட்டுவதற்கு இயற்கைப் பொருளும் செயற்கைப் பொருளும் அவசியம் என அறிகிறோம். ஆனால் இச்செயற்கைக் குறித்தான மனிதன் யார்? அம்மனிதனும் இயற்கைப்பொருள் அன்றோ? ஆகவே உலகத்து நாம் காண்கிறது, பேசுகிறது, உபயோகப்படுத்துவது யாவும் இயற்கைப் பொருளோ? ஐயமின்றி அப்படியே! எவையாயினும் இயற்கைப் பொருளையன்றி செயற்கைப் பொருளாகாவென்பது நமது கொள்கை. இன்னும் ஒரு உதாரணம் எடுத்துக் கொள்வோம்.

நாம் வாசிக்கும் புஸ்தகத்தைத் தான் பார்ப்போம். காகிதம் கந்தைத் துணிகளைக் கூழாக்கி அக்கூழினை யந்திரத்தில் வார்த்து வேண்டிய கனத்திற்கும் நீளத்திற்கும் தகுந்தபடி செய்யப் படுகின்றது. அச்சடிக்கவேண்டிய விஷயம் அச்சடி யந்திரத்தின்மேல் ஆணியின்மேல் உந்தியிருக்கும் அச்செழுத்துக்களைக்கொண்டு பரப்புகிறோம். அதன்பின் அச்செழுத்தின்மேல் மனிதர்களாலேயோ யந்திரத்தினாலேயோ இங்கிடப்பட்டு காகிதத்தை அதின்மேல் இட்டு முறுக்கியவுடனே, காகிதத்தில் அச்செழுத்துக்கள் பதிகின்றன. கடைசியாக காகிதத்தை ஒழுங்காக மடித்து தைத்து புஸ்தகமாகக் கட்டுவிக்கப்படுகிறது. இவைகளில், கந்தைத்துணி முதலியன, இயற்கைப்பொருளாகிற பருத்திச்செடி சணல் முதலியவைகளினின்று ஆக்கப்பட்டவை. அக்கந்தைகளைக் கூழாய்ச்செய்து காகிதமாகச் செய்வது யந்திரமேயாயினும் அவ்வியந்திரச் சாமான் முழுமையும் இயற்கைப் பொருளாகிற இரும்பு முதலிய லோகங்களால் செய்யப்பட்டவை. அந்த யந்திரத்தை உண்டுபண்ணிய மனிதனும் இயற்கைப் பொருளே. அச்செழுத்துக்களைச்செய்யும் யந்திரமும் அச்சடியந்திரமும் மனிதனாலேயே ஆக்கப்பட்டவை. அச்சடித்த காகிதத்தை மடித்து பைண்டு செய்வதும் மனிதன் அல்லது மனிதனால் ஆக்கப்படும் யந்திரமே. விசேஷமாக புத்தக ரூபமாக எழுதப்பட்ட விஷயமும் கிரந்த கர்த்தனாகிய மனிதனாலேயே. ஆகவே புத்தகம் ஒன்று வெளிவரவேண்டுமானால் அநேகம் இயற்கைப் பொருள்கள் அன்னியோன்னியமாய் வேலை செய்யவேண்டிய தவசியப்படுகிறது; அதாவது இயற்கைப் பொருளின்றி செயற்கைப்பொருள் என ஒன்று உற்பத்தியாகவே முடியாது.

இதினின்றும் நாம் அறியும் கருத்து யாது? எல்லாம் இயற்கைப்பொருளேயென்றும் இயற்கைப் பொருளின்றி செயற்கைப்பொருளென நாம் கூறுபவை, இவ்வுலகில் உண்டாகாவெனவும் நாம் செயற்கைப்பொருளாகக் கூறுவனவெல்லாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து இயற்கைப்பொருளாகவே காணப்படுமெனவும் அறிகிறோம். மனிதனே இயற்கைப்பொருளாயிற்றே. கடைசியாக சாஸ்திரீக அபிவிருத்திக் கொள்கையின்படி (The Evolution Theory) எப்பொருளும் மனிதனின் அறிவும் அவனால் ஆக்கப்படும் சாஸ்திரீகப்பயிற்சியும் வரவர விருத்தியடைந்துகொண்டே வருகின்றன. அவ்விருத்தியினைப்பற்றி இன்னொருமுறை எடுத்து விவரிப்போம்.

துக்கம்

SORROW

ஆனந்தம் அடைய வேண்டியே நமது மனம் பெரும்பாலும் சஞ்சலப்படுகிறது. மன சமாதானத்துக்கு எதிர் நிற்கும் தடைகளை நீக்கும் பொருட்டே நாமனைவரும் சதா காலமும் முயற்சிசெய்து வருகிறோம். இவ்விடையூறுகள் பூராய் ஒழியும் காலம் ஒன்றுண்டென்று நாம் திடமாய் நம்பியே வருகிறோம். பொருளாசை பிடித்த ஒவ்வொரு லோபியும் தன் மனம் திருப்தியடையும்படியான தொகை யுண்டென்று நினைத்து நடக்கிறான். அதிகாரவாசை கொண்ட அனைவரும் தம் முயற்சி முடியுந்தருணம் ஒன்று உண்டென்றும், அதன் பின்னர், மிகுந்த தமது வாழ்நாட்களையெல்லாம் சுகானுபவங்களிலும், சன்மார்க்கத்திலும் கடவுள் தியானத்திலும் கழிக்கலாமென்றெண்ணி மனோராஜ்ஜியம் பண்ணி வருகிறார்கள்.

இவ்வாறன்றி, பொய்முடிவுகூட புலப்படாது நம்மை வருத்தும் மனநோய் துக்கம் ஒன்றே எனத் தோன்றுகின்றது. மனதை நடுநிலையில் நிறுத்தும் கடினமான கலையைக் கற்கப் புகுவோர் இதை முக்கியமாய் கவனிக்கவேண்டியது. நமது மனதை வருத்தும் பல வாசைகளாகிய நோய்களுக்கு மருந்துண்டு. பொய்யுற்சாகத்தையாவது அடைந்து அவைகளை மறக்க வழியுண்டு. ஆனால் இயற்கையாய் துக்க நிவர்த்திக்கென்றேற்படுத்தப்பட்ட ஔஷதமொன்றுமில்லை. பெரும்பாலும், துக்கம், மாற்ற வொண்ணாத தற்செயல்களால் விளைகிறது. சராசரப் பொருள்கள் தமது நிலைமையை யிழந்த தன் பொருட்டோ, அல்லது மாற்றிய காரணத்தினாலோ, துக்கம் உண்டாகிறது. நாம் பெறமுடியாதென்றறிந்த பொருளை துக்கம் இச்சிக்கிறது; அண்டங்களை அடக்கியாளும் இயற்கையாயமைந்த விதிகளை துக்கம் மாற்ற விரும்புகிறது.

அலக்ஷியத்தினாலும் அறியாமையினாலும் விளையும் கேடுகளை நினைந்து வருந்துவதும், இயற்றிய பாவங்களை எண்ணி மனமழிதலும் துக்கமாகா. முன்னது, முன்னுக்கு அனுபவமும் அறிவும் தரும்; பின்னது, நாம்செய்த கொடிய கிருத்தியங்களை மாற்றாதெனினும், அவைகளின் பாவத்தை விலக்குமோர் பரிகாரமாகவும் சாந்தியாகவும் கடவுள் அதைக் கருதுவார் என்று நம்புகிறோம். மேலும் நமது நடத்தை சீரடையுந்தோறும் அம்மனவருத்தம் குறைந்தொழியும். இவ்வாறு உண்டாகும் விசனம் நற்பயனையளிக்கும். துக்கத்தின் நிலைமையோ வெனின், நோக்கமனைத்தும் சென்ற காலத்தின் மேலூன்றி நிகழுங்காலத்தில் பற்றின்றி, ஏதோ ஒரு விஷயம் இருந்தவாறன்றி மற்றொருவாறு இருந்திருக்க வேண்டுமென்று சதாகாலமும் எண்ணி, இழந்த பொருளோ, சுகானுபவமோ இப்பொழுது இல்லாததால் மனம் நொந்து ஏங்குவதேயாம். இக்குறையைத் தீர்க்க எவ்வாறு பாடுபடினும் பயனிலது. சிலர், தாம் பல நாளாய் தேடிவைத்த செல்வம் திடீரென்று அழிவதனாலும், இன்னும் சிலர் தாம் சிரமப்பட்டு சம்பாதித்த நற்பெயர் விதிவசத்தால் கெடுவதினாலும், மற்றும் சிலர், தங்கள் பந்துமித்திரர் இறப்பதனாலும் ஆராத் துயரத்திலாழ்ந்து விடுகின்றனர். துர்அதிர்ஷ்டத்தால் இவர்கள் தம் இன்ப உணர்ச்சியையே யிழந்து விடுகின்றனர். தாம் எப்பொருளைக்குறித்து விசனப் படுகிறார்களோ அதற்கு பதிலாய் மற்றெதையும் மாற்றலாகுமென்ற நம்பிக்கையையே அவர்கள் முற்றும் துறந்து விடுகிறார்கள்; தம் வாழ் நாட்களையெல்லாம் மனோவருத்தத்துக்கும் துயரத்துக்கும் இரையாக்கி வீண் வியாகுலத்தினால் உடல் மெலிந்து இறக்கின்றனர்.

இவ்வகையான துக்கம், அன்பினாலும் அன்னியோன்னியத்தினாலும் இயற்கையாய் உண்டாவது. எவ்வளவு வருத்தந் தரினும், எத்தனை நஷ்டந் தருவதாயிருப்பினும், இத்துயரடையாமலிருப்பது பழிக்கிடமாவது நியாயமே. இவ்வனுசரணையை எல்லா ஜாதியாரிடத்தும், எக்காலத்திலும் காணலாம். சில தேசவிதிகளும் வழக்கங்களும், நெருங்கிய உறவினர் இறந்தால், துக்கத்துக்கு அடையாளமாக சில காலம் வரையில் சில வெளிப்படையான குறிகளை அணியவேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கின்றன.

துக்கம் நேசத்தினின்றுண்டானால் சிறிது அளவு மெச்சத்தக்கதென்றும், அறியாமையினின்று விளைந்தால் பரிதபிக்கத் தக்கதென்றும், ஆனால் அதற்கிடங்கொடுத்து அதிகரித்தல் தவறென்றும், சீக்கிரத்தில் வாழ்க்கைக்குரிய தொழில்களுக்கும் பொது ஜனகாரியங்களுக்கும் அத்துயரை அடக்கி நடந்துவரவேண்டுமென்றும் ஜனங்கள் சாதாரணமாய் கூறுவதைக் கேட்கிறோம். ஆரம்பத்தில் துயரை நாம் விலக்க இயலாது. ஆதலால் நாம் இடம் கொடுப்பினும்

கொடாவிடினும், துக்கம் நம்மைப் பற்றுகிறது. ஓர் அளவு வரையில் இத்துயரத்தை, நன்றியறிதல் என்னும் நற்குணத்துக்கும் மதிப்புக்கும் அறிகுறியாகக் கருதலாம். இயற்கை, நம்மை சற்று துயரமனுபவிக்கும்படி கட்டாயப்படுத்துகிறது; மற்றும் சிறிது துக்கம், உலக அபவாதத்தின் பயம் நம்மை வெளியிடச்செய்கிறது. ஆனால் துயரத்தாலுண்டாகும் முதலழுகையையும் விசன குறிகளையும் தவிர்த்து, மிகுந்த துக்கம் பயனற்றது மாத்திரமன்று, குற்றமென்று கூறத்தகும். ஏனெனின், நமது பதவியின் கருமங்களுக்கென்று கடவுள் நமக்கு அளித்திருக்கும் காலத்தை, அன்பின்பொருட்டு பயனற்ற இச்சைகளில் செலவிட்டழிக்க நமக்கு யாதொரு பாத்தியமுமில்லை.

ஆயினும், துக்கம் நியாய வழியிலேயே பற்றி, பிறகு அதைநீக்க முடியாதபடி மனதைப் பந்தப்படுத்துவதை நாம் அடிக்கடி கவனிக்கிறோம். துக்கத்தால் வருமெண்ணங்கள் முதலில் அதிக வலிவுடன் மனதில் பதிந்து, பிறகு நம் இஷ்டத்துடனேயே சேர்க்கப்பட்டு, நம் கவனத்தை முற்றும் கௌவி, பிறகு நம் ஒவ்வொரு எண்ணத்திலும் பாவி நின்று, நம் களிப்பைக் கெடுத்து, புத்தியை மயக்குகின்றன. உலகத்தின் மேல் ஓர்வித வெறுப்பு உயிரையேபற்றி விடுகிறது. இந்திரியங்களெல்லாம் ஒரு பொருளின் மேலேயே செல்லுகின்றன. அப்பொருளோ, ஏக்கந்தரும் வருத்தத்துடனன்றி எதைப்பற்றியும் நினைக்க இடந்தராததாய் விடுகிறது.

இத்தகைய துக்க நிலையிலிருந்து உற்சாகமும், ஊக்கமும் அடைவது துர்லபம். இதன் பொருட்டே, மன ஆரோக்கியத்துக்கு விதிகளை நியமிக்கும் தத்துவபோதகர், நோய்க்கு மருந்தளிப்பதைவிட வியாதியையே விலக்குவது நலம் என்றெண்ணி, நமக்கு நெருங்கிய விஷயங்களில் மனதை பூர்வமாகச்செலுத்தி அளவற்று ஆனந்தம் அருந்தாமலிருக்கவும், நமக்கருகிலிருக்கும் பொருள்களின் மேல் மனம் ஊன்றாதபடி அவைகளை அடிக்கடிமாற்றி வரும்படியாகவும், எப்பொழுதும் நமது மனதை அலக்ஷியம் என்ற நடு நிலையில்வைக்கும் படிக்கும் வற்புறுத்துகின்றனர்.

இவ்விதிக்கிணங்கி நடப்பின், ஒரு வேளை மனச்சமாதானமுண்டாகலாம். ஆனால் ஆனந்தம் ஒருக்காலும் உண்டாகாது. ஒரு மனிதனை நாம் இழந்து விடுவோமோ என்றஞ்சும்படியான அளவு பிரியம் நாம் அவனிடம் வைக்காவிடின், பரோசிந்தை, நம்பிக்கையாகிய இனிய தருமகுணங்களாலுண்டாகும் ஆனந்தத்தை நாம் அடையவே மாட்டோம்; இருதயத்தைக் கரைக்கும் ஆசையையும், உதாரகுணத்தின் உருக்கத்தையும், இன்னும் இயற்கையாய் உற்சாகப்படுத்தும் நற்களிப்பையும் நாம் அனுபவியோம். ஒருவன் தான் பிறரிடம் காட்டும் பிரியத்தைவிட அதிகம் அவர் தன்னிடம் காட்டவேண்டுமென்று விரும்புதல் நியாயமன்றாதலால், நட்பின் மூலமாய் உதிக்கும் கவனத்தையும், பிரியத்தையும் அவன் இழக்க வேண்டியதுதான். நட்பினாலேயே வாழ்க்கையை எளிதாக்கும் இனிய வசனங்களையும் அவன் செவிகள் கேளா. அவனைக்காட்டிலும் அதிக இளக்கமான மனதையுடையவர்கள் அவனை அபிமானிக்காது அலக்ஷியம் செய்வார்கள். ஏனெனில் நாம் எவ்வளவு பிரயாசத்துடன் ஒருவன் நட்பைத் தேடி அவனை நமக்கு கடமைப்பட்டவனாய்ச் செய்யினும், அதற்கு பிரதி அவன் சரியான நடவடிக்கையினின்று நீங்கி, நமக்குச் செய்யும் உபகாரமெல்லாம் அவன் விரோதியாயில்லாதிருத்தலே யென்றால், அவனுடன் யார்தான் நட்பை வளர்த்துவார்கள்?

வாழ்க்கையை நடுநிலையிலும், அலக்ஷியமான நோக்கத்திலும் கழிக்க யத்தனிப்பது பயனற்றது; அது மடமையே யாகும். சந்தோஷத்தை நீக்குவதால் விசனத்தை விலக்கமுடியாது. இவ்வுண்மை குறிப்புடன் கவனிக்கத்தக்கது. சந்தோஷத்தை முற்றும் அகற்றினும், துக்கம் பல மார்க்கங்களில் வந்து நம்மை வருத்துகின்றன வாதலாலும், மனதைப் பற்றும் இன்பங்களினின்றும் நம் கவனத்தைக்காக்கினும், நம்மைத் தாக்கும் துன்பங்கள் கவனத்தைக் கவர்ந்து கொள்ளுகின்றன வாதலாலும், மனதை அலக்ஷியமான நடுநிலைமையினின்று உயர்த்த முயல்வது அவசியம்.

ஆனால் இடையில் இழந்து விடுவோமோ என்ற பயத்தால் ஆனந்தம் அடையாமலிருக்க முயல்வது மடமையெனினும், நாம் ஒரு பொருளின் உரிமையில் எவ்வளவு சந்தோஷிக்கிறோமோ அதற்கு ஏற்ற அளவு துக்கம் அப்பொருளை யிழப்பின் நாம் அடைகிறோம் என்பதற்கு ஐயமில்லை. ஆதலால் இத்தகைய துக்கத்தை துரிதத்துடன்குறைக்கும் வழியைத்தேடுவதே தத்துவ விசாரணையின் முக்கிய நோக்கமாகும். உள்ளத்தை துக்கமாகிய பந்தத்தினின்று நீக்கும்

வழி, விளையாட்டு விநோதங்களில் மனதைச்செலுத்துவதே என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். மற்றும் சிலர், அவ்வாறு திடீரென்று மனதை மாற்றுவது கெடுதலென்றெண்ணி, நமக்கு நேர்ந்ததைவிட இன்னும் அதிக கொடியதும் பயங்கரமானதுமான வியாகுலங்களின்மேல் மனதைச் செலுத்தி தேறுதலடைந்து. மெதுவாய் சமாதானப்படுவதே நலமென்றும், நம் துர்அதிர்ஷ்டத்தின்மேல் தீவிரத்துடன் செல்லும் நமது கவனத்தை மற்றோருக்கு நேர்ந்த பேரிடர்களைப் பற்றி சிந்திக்கச் செய்ய வேண்டுமென்றும் நினைக்கிறார்கள்.

இவ்விரண்டு ஔஷதங்களுள் ஒன்றாவது போதுமானதா என்று சந்தேகிக்க இடமுண்டு. உல்லாசம் என்னும் ஔஷதம் எப்பொழுதும் உட்கொள்ளத் தக்கதன்று. துக்கந்தரும் விஷயங்களின் சிந்தனையோ நம் வியாதியைத் தீர்க்கத் தவிர்ந்தால், உயிரையே மாய்த்துவிடும்.

துக்கம் என்னும் வியாதிக்கு சாதாரணமானதும் நிர்ப்பயமானதுமான பரிகாரம் தொழிலே. போர் வீரர் சண்டையில் நண்பர் இறந்ததன் நிமித்தமாய் ஆற்றாத துயரத்தில் ஆழ்வதில்லையென்று கேட்டிருக்கிறோம். பயமற்ற சந்தர்ப்பங்களிலும், வேலையின்றி வீண்காலம் கழிக்கும்போதும் நாம் அனுபவிக்கும் விசனத்தைக் காட்ட அவர்களுக்கு நேரம் வாய்ப்பதில்லை போலும். அவர்கள் தம்மைக் காத்துக்கொள்வதிலேயேசர்வகாலமும்ஜாக்கிரதையாயிருக்கவேண்டியிருக்கிறது. தமது நண்பர் இறந்தாலும் அவர்கள் அதிகமாய்த் துக்கப்பட அவகாசமில்லை. அவ்வாறே ஒருவன் தன் மனதைத் தன் கருமத்தின்மேலேயே கவலையுடன் செலுத்திவரின், யாதொரு வீண் துயரத்துக்கும் காலத்தைப் பறிகொடுத்து மனமழியான். துக்கம் வாழ்க்கையென்னும் தடாகத்தின் மேல் படர்ந்துள்ள பாசத்துக்கு சமானம். அப்பாசம் தண்ணீரைக்கலக்கி யுபயோகித்தாலன்றி நீங்காததுபோல, வாழ்க்கையிலும், காலத்தைக் கருமத்திலேயே செலுத்தி யுபயோகித்து வந்தாலன்றி துக்கம் நிவர்த்தியாகாது.

மகம்மாரியும்—எலிகளும்
PLAGUE AND RATS

மகம்மாரியைப்பற்றிய விஷயத்தைக் குறித்து இந்தப் பத்திரிகையில் எழுதுவது தகுமோவென்று சிலர் சந்தேகிக்கலாம். இந்தப் பத்திரிகை விசேஷமாய் ஆங்கிலேய பாஷை கல்லாதவர்களுக்கும், ஸ்திரீ ஜாதிகளுக்கும் பயன்படுமாறே நடந்துவருவதால் அன்னவர்களுக்கும் மகம்மாரியைக் குறித்த விவேகத்தைப் போதிப்பதாகும் இந்த விஷயம்.

பம்பாய் தேசத்தில் 1896ஆ மகம்மாரி ஆரம்பமான காலத்தில் அதை ஒரு தொத்து வியாதியென்றும் மகம்மாரியால் பீடிக்கப்பட்டவர்களைத் தொட்ட மாத்திரத்திலாவது அவர்களுடைய காற்றுவாடை வீசின மாத்திரத்திலாவது மற்றவர்களும் பீடிக்கப்படுகிறார்களென்றும் ஜனங்களுள் பெரும்பாலோர்க்கு அபிப்பிராயம் இருந்தது. வரவர இந்த நம்பிக்கை குன்றிவருகின்றது. ஏனெனில் ஒரே வீட்டில் வாசம் செய்யும் ஜனங்களில் சிலர் மகம்மாரியால் மரணமடையவும் மற்றவர்கள் ஒருவித அபாயமுமின்றி ஜீவிக்கவும் பிரத்தியக்ஷமாய் காண்கிறோம். இதன் காரணம் என்னவெனில் மகம்மாரி விஷமானது (Plague Bacilli) ஒரு பிராணியின் உட்சென்று இரத்த சம்பந்தமடைந்தாலொழிய அந்த வியாதி தொடராது. எவரொருவர் அந்த விஷ சம்பந்தத்தை அடையவில்லையோ அவர்களை மகம்மாரி பீடிப்பதில்லை. மற்றவர்களை விஷம் எவ்விதம் தாக்குகிறதென்பதை அடியில் விவரிப்போம்.

நம்மவருள் சிறுவர்முதல் எலிகளைக் காணாதவர்களில்லை. அதாவது, எலி சர்வ சாதாரணமென்றபடி அவற்றைக் கொஞ்சம் ஊகித்துப் பார்க்கில் அநேகவிதம் காணப்படும். அவையாவன :—மூஞ்சூரு, சுண்டெலி, பெருச்சாளி, கருப்பெலி அல்லது வீட்டெலி, ஜலதாரைகளில் வசிக்கும்படியான (Brown) எலி, காட்டில் வசிக்கும்படியான காட்டெலி அல்லது வெள்ளெலி முதலியவைகளே. இவற்றில் நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தின் சம்பந்தமான கருப்பெலி அல்லது வீட்டெலியைப் பற்றி விசாரிப்போம். இவ்வெலிகள் விசேஷமாக நமது வாஸஸ்தானமாகிய வீட்டுகளின் கூரைகளிலும், சுவற்றின் பொந்துகளிலும், குப்பைமேடுகளிலும், இருட்டறைகளினும், கெட்டி தளவரிசையில்லாத வீட்டுகளின் ஈரத்தரையில் துவாரம் செய்துகொண்டும் வசிக்கும். இவைகள் குடும்பம் குடும்பமாக ஒவ்வொரு ஸ்தலத்தில் வசிப்பது வழக்கம். அவைகளுக்குள் ஏதேனும் அசாதாரணமான மரணங்கள் உண்டானாலும் அல்லது வேறுவிதமாக வீட்டாரால் தொந்திரவுநேர்ந்தாலும் மரணமடைந்தவைபோக மற்றவை தங்கள் சுயஸ்தானத்தைவிட்டு வேறோரிடத்திற்குக் குடிப்புகும். இதை நாம் வழக்கத்தில் காணலாம். எப்படியெனில் எலிகளைப்பிடிக்கும் பொருட்டுவைத்த பொறிகளில் முதல்ஒன்று அல்லது இரண்டு தினமே எலிகள் விழுகின்றன. பின்னால் எவ்விதமான அவைகளுக்குப் பிரியமான வஸ்துவை பொறிகளுக்குள் வைத்தபோதிலும் அவற்றையணுகா. எலிகளின் தொந்திரவும் விசேஷமாய்க் காணப்படுவதில்லை. இது எல்லோருக்கும் நன்றாய் தெரிந்த விஷயம். பிடிபட்டுப்போன எலிகளைக் கண்ட மற்ற எலிகள் பயந்து வேறு இடத்திற்கு ஓடிப்போகின்றன. சில காலம் சென்றபின் மறுபடியும் தங்கள் சுயஸ்தானத்திற்குத் திரும்பிவந்துவிடும். இப்பேர்ப்பட்ட எலிகளின் பேரில், மற்ற நாய் பூனை முதலியவற்றின் பேரில் இருப்பதுபோலவே, ஒரு விதமானசிறு உண்ணிகள் (Fleas)உண்டு. அவைகள் தான் மகம்மாரி வியாதிக்கு முக்கியமான காரணம். இதைக் கேட்க ஒருவேளை ஆச்சரியமும் நம்பிக்கைக் குறைவும் உண்டாகலாம். அடியில் வரும் விஷயங்களால் உண்மை விளங்கும். இந்த எலி உண்ணிகள் எலிகளின் பேரிலேயே வசிக்குமல்லாமல் மற்ற ஜெந்துக்களின்மேல் அவசியம் நேர்ந்தாலொழிய இருக்கமாட்டா. மேலும் இரத்த ஆகாரமில்லாமல் அநேக நாளும் தங்கமாட்டா. காற்றோட்டம், வெளிச்சம் சூரியவெப்பம் உள்ள இடங்கள் அவற்றிற்கு சத்துரு. ஒரு வீட்டில் மகம்மாரி காண்பதற்குமுன் அதே வீட்டிலாவது சுற்றுப்பக்கங்களிலாவது எலிகள் ஏராளமாய் இறந்து விழுவதைக் காண்கிறோம். எலிகள் விழும் பக்ஷத்தில் மகம்மாரியின் சூசனை என்று உடனே அவ்வீட்டை விட்டுவிடுவது உத்தமம். ஒரு இடத்தில் மகம்மாரியால் பீடிக்கப்பட்ட எலிகள் மற்ற எலிகளுடன் கலக்குமாகில் அவற்றின்மேலுள்ள உண்ணிகள் மற்றவைகளின்பேரிலும் தாவுகின்றன. மகம்மாரி விஷ இரத்தத்தால் போஷிக்கப்பட்ட உண்ணிகள் சௌக்கியமான எலிகளைக் கடித்தவுடன் அவற்றிலும் விஷம் ஏறி வியாதியை உண்டாக்குகின்றன. இவ்விதமாகவே ஒன்று பத்து நூறாக வியாதி பரவி, முதலில் எலிகளாகவே மரணமடைகின்றன. இதைக் கண்டவுடன் வீட்டார்கள் ஜாக்ரதையாகவோ தாமதமாகவோ வீட்டை அடைத்துவிட்டு வேறுஇடம் செல்லுகிறார்கள். இதன் மத்தியில் இறந்த எலிகள் அவ்வீட்டிலேயே கிடந்துபோகின்றன. இதன் மேலுள்ள உண்ணிகள் இரத்த ஆகாரமில்லாமல் தரையிலூர்ந்து தவிக்கும் காலத்தில் கொஞ்ச காலமாய்விட்டதால் ஜனங்கள் வீட்டைத் திறந்து உட்செல்லுகிறார்கள். உடனே பஞ்சத்திலாழ்ந்து பரிதவிக்கும் உண்ணிகள் தங்களுக்கேற்பட்ட எலிகளல்லாவிடினும் இரத்த அவாவினால் மனிதர்களின் கால்களில் விழுந்து கடிக்கின்றன. அப்படிக் கடிபட்ட ஜனங்கள் மகம்மாரியை அடைகிறார்கள்.

அல்லாமல் வேறு விதங்களில் வியாதியடைதலுமுண்டு. மகம்மாரி வியாதியால் வருந்தும் ஒருவனுடைய வஸ்திரங்களில் இந்த உண்ணிகள் ஒட்டியிருந்து சௌக்கியமாயுள்ளவர்கள் மேல் பாய்வதும் உண்டு. அல்லது மகம்மாரி கண்ட எலிகள் நெல் மூட்டை முதலான சாமான்களின்பேரில் சஞ்சரிக்கும்போது உண்ணிகள் உதிர்ந்து வீடுகளில் பரவியோ அல்லது அந்தச்சாமான்களைக் கையாடும்பொழுதோ மனுஷ்யர்களின் பேரில் பாய்ந்து அவர்களுக்கு வியாதியையுண்டாக்குவதும் உண்டு. எவ்விதத்திலும் மகம்மாரி வியாதி இந்த உண்ணிகள் மூலமாகவே ஜனங்களை யடைகிறது. இது விஷயம் விசேஷமாய் ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அவற்றையெல்லாம் இவ்விடம் எடுத்துக் கூறின் வளரும்.

மேற்கண்ட விஷயங்களால் என்ன ஏற்படுகிறதென்றால் பூலோகத்தில் எலிகளே இல்லாவிடில் மகம்மாரி வியாதி ஜனங்களை அடுக்காது என்பதேயாம். இது சாத்தியமோ வெனின் அசாத்தியமே. ஆனாலும், கூடுமானவரை பிரயத்தனப்பட்டு எலிகளை நமது வாசஸ்தானங்களினின்றும் ஓட்டிவிடலாம். இதற்காக நாம் செய்யவேண்டுவதென்னவெனில் எலிகள் சாதாரணமாய் இருட்டறைகளிலும், ஓதமுள்ள வீட்டுத் தளங்களிலும், குப்பைமேடு முதலான இடங்களிலும் வசிக்கும் என்று முன்னமே சொல்லியிருக்கிறோம். அதன்மேல் வளரும் உண்ணிகளும் அப்பேர்ப்பட்ட இடங்களிலும் காற்றோட்டமில்லாத இடங்களிலும் ஏராளமாய் ஜீவிக்கும் என்றும் சொல்லியிருக்கிறோம். ஆகவே நம்மவர்

ஒவ்வொருவரும் பிரயத்தினம் செய்யவேண்டுவது என்னவெனின், நாம் வசிக்கும் வீடுகளை சுத்தமாயும் யதேஷ்டமான காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ளதாயும், குப்பை முதலிய அசுத்த வஸ்துக்களை வீட்டுகளின் அருகாமையில் சேர்க்காமலும், வீடுகளின் தளங்களை செங்கல்லோ கருங்கல்லோபரப்பினாமில்லாமலும், வீட்டைச்சுற்றிலுமுள்ள ஜலதாரைகளை சுத்தமாய் வைத்துக்கொள்ளவும்வேண்டும். இப்படிச் செய்வதனால் எலிகளுக்குத் தங்க இடமற்றுப் போய்விடுகிறது. மேற்கூறியவற்றை ஒருவீட்டில்மாத்திரம் அனுசரித்து அண்டை வீடுகளில் அனுசரிக்காமல் இருப்பின் அதனால் உண்டாகும் பிரயோஜனம் ஒன்றுமேயில்லையென்று சொல்லலாம். ஒவ்வொரு கிராமத்திலோ பட்டணத்திலோ உள்ள ஒவ்வொரு வீட்டாரும் இதையனுசரித்து வருவாராயின் எலிகளை ஊரிலேயே தங்கவிடாமல் செய்துவிடலாம். மகம்மாரியும் அணுகாது. இதுவே முக்கியமான விஷயம். வீடுகளில் பூனைகளை வளர்ப்பதும் பயன்தரும். நமது இராசாங்கத்தார் எலிகளை நாசம் செய்யும் பொருட்டு ஏராளமான திரவியம் செலவு செய்துவந்தார்கள். இன்னும் செலவு செய்கிறார்கள். மகம்மாரி வியாதிமட்டும் இந்தியாவைவிட்டு விலகவில்லை. காரணம்? இராசாங்கத்தாருடன் ஜனங்களும் ஒத்து இது காரியத்தில் முயற்சி செய்யாமையேயாம். 1906—1907 வருஷங்களில் இக்கடிதக்காரர் பர்மாதேசத்தின் பிரதான நகரங்களுள் ஒன்றாகிய மாண்டலே நகரத்தில் இருந்தபொழுது சாகடித்த எலி ஒவ்வொன்றிற்கும் இராசாங்கத்தார் அணா இரண்டு விழுக்காடு கொடுத்துவந்தார்கள். இதை யறிந்த ஒரு ஏழை பர்மன் (Burman) தன்னுடைய குடும்பத்தோர் எல்லோரையும் எலி சேகரிப்பதில் நிர்ணயம் செய்து ஆங்காங்கு குப்பை வண்டிக்காரர்களும் மற்றவர்களும் கொண்டுவரும் எலிகளை ஒவ்வொன்றிற்கு அரையணாகொடுத்து வாங்கி அவற்றை முனிஸிபாலிட்டியில்சேர்த்து பணம் சம்பாதித்துவந்தான். இது நல்ல இலாபம் கொடுக்ககூடிய வியாபாரமாகத் தோன்றியதால் எலிகளைச் சேகரிக்கச் சில வேலைக்காரர்களையும் நியமித்தான். நாளாவர்த்தியில் நாளொன்றுக்கு 400 முதல் 500 எலிகள் வரை இவனிடமிருந்துமாத்திரம் முனிசிபல் கணக்குக்கு வரும். பணமும் சென்றுவந்தது. முனிசிபல் தொகையும் குறைந்தது. பர்மன் செல்வவானானன், மகம்மாரி வியாதி மாத்திரம் அடங்கவில்லை. ஆழ்ந்து விசாரிக்குமளவில் சுற்றுப்பக்கங்களிலுள்ள கிராமங்களில் இருந்து மேற்சொன்ன பர்மன் எலிகளை கொண்டுவருவதாகவும் நகரத்திற்குள் உள்ள எலிகள் சொற்பமே நாசம் செய்யப்படுவதாகவும் தெரியவந்தது. இந்தப் பர்மன் திரவியம் சேகரிப்பதில் எடுத்துக்கொண்ட முயற்சியில் ஆயிரத்திலொரு மடங்கு ஒவ்வொரு வீட்டாரும் எலிகளை நாசம் செய்வதில் எடுத்துக்கொண்டிருப்பாராயின் பயன் வேறாய் முடிந்திருக்கும். ஆதலால் எலிகளை கொன்று கருவறுக்கலாம் என்பது அசாத்தியமான காரியம். எலிகளிலிருந்து உதிரும் உண்ணிகள் விசேஷமாய்த் தரையிலேயே சஞ்சரிப்பதால், தரையில் அடிக்கடி வசம்புஜலத்தை தெளிப்பதால் உண்ணிகளை அணுகவொட்டாமல் செய்யலாம் என்பது சிலருடைய அபிப்பிராயம். இரண்டொரு வருஷத்திற்குமுன் மகம்மாரிகண்ட வீடுகளைச் சுத்தம்செய்ய உபயோகித்துவந்த மருந்துகள் யாவும் பயனற்றவையென்று தெரிந்து தற்காலத்தில் கிரோசின் ஆயில் (Kerosine Oil) என்று சொல்லக்கூடிய மண்ணெண்ணெயை சவுக்காரத்துடன் சேர்த்து ஜலம் கலந்து வீடுகளை சுத்தம் செய்கிறார்கள். இந்த இமல்ஷன் (Emulsion) எலி உண்ணிகளை அணுகவிடாது நாசம் செய்கிறதாம். இது தற்கால பண்டிதர்களின் ஆராய்ச்சி நிர்ணயம்.

பி. கே. வெங்கடேசராவ்.

தரித்திரத்தின் கொடுமை:—எப்பொழுது ஒரு மனிதனுக்குத் தரித்திரம் வருகிறதோ அப்பொழுது அதனுடன் வெட்கமும் வந்து விடுகிறது. எப்பொழுது வெட்கம் வந்ததோ அப்பொழுது முகத்தின் களை அவனுக்குக் குன்றும். களை எப்பொழுது குறைந்ததோ அப்பொழுது போகிறயிடத்தில் அவனுக்கு அவமானம் நேரிடுமென்பதில் என்ன சந்தேகம்; அவமானம் எப்பொழுது வந்ததோ அப்பொழுது துக்கமும் உடனேவரும்; மனதுக்கு எப்பொழுதுதுக்கம் வந்ததோ அப்பொழுது புத்தி குறையும்; புத்திகுறைந்தால் நாசம் உடனேவரும்; ஆகையால் தரித்திரம் ஒரு மனிதனை என்ன கஷ்டதிசையிற்தான் கொண்டுவந்துவிடாது; நாளைப்பொழுது நமக்கு யார்கொடுப்பார்கள் ஈசுவரா என்று ஒரு மனிதனை தரித்திரமானது எப்பொழுதும் சிந்தைப் பட்டுக்கொண்டிருக்கச் செயயும்; நம்மை மதித்துப் பேசினவர்கள் தரித்திரம் வருங்காலத்தில் எட்டியே பார்க்கமாட்டார்கள். ஒருவனை நாமாகவே பார்க்கப்போனால் ஏன் இவன் அடிக்கடி வந்து தொந்தரைபண்ணுகிறானென்று அவன் மனதில் அருவருப்புக்கொள்வான். நமதுசொந்த ஜனங்கள்—பெண்சாதி பிள்ளைகளும் நம்மைக் கடுகடுப்பார்கள். எல்லாவற்றையும் விட்டு விட்டு காட்டுக்குப்போய சுகமமாயிருக்கலாமா என்ற புத்தியுந்தோன்றும். முதலில் அவனுக்கு சிநேகிதர்களா யிருந்தவர்கள் எல்லாரும் அவனுக்குள் தரித்திரம் வருங்காலத்தில் சத்துருக்களாய விடுவார்கள். பிறர் செய்த குற்றம் தரித்திரன் தலையில் வந்து விடியும்.

இயற்கை அற்புதங்கள்

WONDERS IN NATURE

XI. வாயுவிலுள்ள தண்ணீரும் அதன் ரூபாந்திரங்களும்

THE MOISTURE IN THE AIR

வாய் அகன்ற பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீரை வைத்தால் அது நாழிகையாக ஆகக் குறைந்து முடிவில் காணாமல்போகின்றது. இதுபோலவே ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீரை எடுத்து கொதிக்கவைத்தால், கொதிக்கக்கொதிக்க தண்ணீர் குறைந்து கொண்டுவந்து முடிவில் தண்ணீர் கொஞ்சம்கூட இல்லாது வற்றிப்போகின்றது. இந்தத் தண்ணீர் நீர் ஆவிப்புகையாகி உயரக்கிளம்பி வாயுவில் மறைவதைப் பின்குறிப்பித்த தண்ணீர் கொதிக்க வைக்கும் சோதனையில் கண்ணாரக்காணலாம்; முன் குறிப்பித்த சோதனையில்காண்பது அரிது. நல்ல குளிர்காலங்களில் காலையில் பாத்திரங்களில் இருக்கும் தண்ணீரிலிருந்து நீராவிப்புகை கிளம்பி வாயுவில் மறைவதைக் காணலாமேயொழிய மற்றைய காலங்களில் இவ்வாறு காணமுடியாது. இம்மாதிரி மறையும் உலகிலிருக்கும் தண்ணீர் எல்லாம் அப்படியே போய்விடுகின்றனவா? அல்லது வாயுவில் காணப்படுகின்றனவா? என்ற கேள்விகள் பிறக்கும். இந்த தண்ணீர் வாயுவில் தங்கிநிற்கும் ரூபாந்திரங்களை நல்ல சோதனைகள் மூலமாக நன்கு விளக்குவோம்.

ஆகாயம்நோக்கி கிளம்பும் நீராவி பூமியைவிட்டுப்போய்விடுவதில்லை. வாயுவிலேயே அநேக உருவங்கள்தாங்கி அது இருக்கின்றது. முதலில் நீராவியாகி வாயுவுள் மறையும் தண்ணீர் நம்மைச்சுற்றிக் கண்ணுக்குப் புலப்படாது ஆவியாகவே இருக்கின்றது. இது நமக்கு நன்றாக விளங்கப் பின்வரும் சோதனையைச் செய்வோம். ஒரு வெண்கலப் பாத்திரத்தை நன்றாகக் கழுவித் துடைத்துவிட்டு அதனுள் கொஞ்சம் பனிக்கட்டிகளை உடைத்துப் போடுவோம். உடனே அதன் வெளிப்பாகம் மங்கலாகும். நாழிகையாக ஆக அதன் வெளிப்புறத்தில் சிறு தண்ணீர்த்துளிகள் உண்டாக வரவர அவைகள் பெரிதாகிக்கொண்டே வந்து முடிவில் வெளிப்புரம் தண்ணீர் வழிந்தோடும். இங்கு உள்ளிருக்கும் தண்ணீர் வெண்கலப்பாத்திரத்தின் வழியாக வெளிவந்துவிட்டது என்று சொல்ல இடமில்லை, ஏனெனில் வெண்கலப் பாத்திரத்தில் ஓட்டைகளே இல்லை. வெண்கலத்திலிருந்து தண்ணீர் வர இடமும் இல்லை. ஆதலால் தண்ணீர் சுற்றுமுள்ள வாயுவிலிருந்துதான் வந்து குளிர்ந்த வெண்கலப் பாத்திரத்தில் ஒட்டிக்கொண்டிருக்கவேண்டும்; எப்படி அதிக உஷ்ணத்தால் தண்ணீர் நீராவியாகி மறைகின்றதோ அப்படி நல்ல குளிர்ச்சியால் அந்த நீராவி தண்ணீர்த் துளியாகிவிடுகின்றது. இதற்கு உதாரணம் நாம் வெளியே மூச்சு விடுங்கால் நமது வாயிலிருந்து நீராவி வருகின்றது. அது கண்ணுக்குப் புலப்படாதிருக்கின்றது. பனிநாள்களில் காலை அது சுற்றுமுள்ள குளிர்ச்சியால் சிறு தண்ணீர்த்துளிகளாக்கப்பட அது புகையாக நமது வாயிலிருந்து வருவதைப் பார்க்கலாம். ஸாதாரண நாள்களில் அது வருவதைப் பார்க்கவேண்டுமானால் கண்ணாடி அல்லது கற்பலகை ஆகிய இவைகளின் மேல் மூச்சைவிட்டால் நமது வாயிலிருந்து நீராவி அவைகளில் மேல் நீர்த்துளிகளாகி அவைகளை மங்கும்படி செய்து நனைக்கின்றது. இதுபோல வெண்கலப் பாத்திரத்துள் போடப்பட்ட பனிக்கட்டியால் பாத்திரத்தின் வெளிப்பக்கம் மிகுந்த குளிர்ச்சியை அடைய அந்தப் பாகத்தைச் சுற்றி இருக்கும் வாயுவிலுள்ள கண்ணுக்குப் புலப்படாத நீராவி சிறு தண்ணீர்த்துளிகளாக்கப்பட்டு வெண்கலப் பாத்திரத்தின் வெளிப்புரத்தில் வந்து அமருகின்றது. இதனால்தான் முற் கூறிய தண்ணீர் வழிந்தோடும் தோற்றம் உண்டாகின்றது. இந்தச் சோதனையிலிருந்து நம்மைச் சுற்றியுள்ள வாயுவுள் தண்ணீர் நீராவி ரூபமாகி மறைந்து கிடைக்கின்றது என்பது வெளியாகின்றது.

இம்மாதிரி மறைந்து கிடக்கும் நீராவி பூமியில் இருக்கும் சீதோஷ்ணஸ்திதி, வாயுவிலிருக்கும் சீதோஷ்ண ஸ்திதி ஆகிய இவைகளால் வெவ்வேறு ரூபங்களாக காணப்படுகின்றது. அவையாவன, புகைப்பனி, மூடுபனி, பனி, மேகம், மழை, ஆலங்கட்டி, என்றும், மிகுந்த குளிர்ச்சியாயுள்ள வடக்குப் பாகங்களில் பனிமழை, பனி ஏடு என்றும் எட்டு ரூபங்களாகக் காணப்படுகின்றது. இவைகளை முறையே எடுத்து விவரிப்போம்.

பகல் முழுவதும் ஸூர்யன் நன்றாகக் காய்ந்து கொண்டிருந்தால் அதன் வெப்பத்தால் பூமியின் மேல் பாகத்திலுள்ள நீர் நிலைகளிலிருக்கும் தண்ணீரிலிருந்து நீராவி கிளம்பி வாயுவில் மறைந்து கிடக்கும். ஸூர்யஸ்தமனமாகி இரவு நிர்மலமாக இருந்தால் இரவு பன்னிரண்டு மணிக்குள் பூமி நன்றாகக் குளிர்ந்துவிட முன்கூறிய வெண்கலப் பாத்திரப் பனிக்கட்டிச் சோதனையில் முதலில் கண்டபடி இங்கும் புகைப்பனி உண்டாகின்றது. பூமி அதிகமாகக் குளிர்ந்துவிட்டால் அந்த சீதளம் வாயுவில் கொஞ்சம் உயரம்வரை தாக்க புகை ரூபம் அதிகமாகி ஆகாயத்தில் கொஞ்ச உயரம்வரை பரவி அடர்த்தியாகக் காணப்படும். இதற்கே மூடுபனி என்று பெயர். பூமியின் குளிர்ச்சி இன்னும் அதிகமாகிவிட்டால் வாயுவில் மறைந்துகிடக்கும் நீராவி (வெண்கலப் பாத்திர பனிக்கட்டிச்சோதனையில் இறுதியில் மாறியதுபோல) பெரிய துளிகளாக மாற பூமி மட்டத்தில் இருக்கும் மிகக்குளிர்ந்த பாகமாயுள்ள செடி, மரம், புல் ஆகிய இவைகளின் இலைகள்போன்றவைகளின்மேல் வந்து அமருகின்றது. இது பூமி மட்டத்தைச் சுற்றியிருக்கும் வாயுவிலேயே உண்டாகும் மாறுதலாகையால் மழையைப்போல விழாது, அதாவது பெய்யாது குளிர்ந்தபாகத்தில் தண்ணீர்த்துளிகள் ரூபமாக அமருகின்றது. இதற்கே பனித்துளி என்று பெயர். மிகுந்தகுளிர்ச்சியான பூமியின் வடபாகங்களில்பூமி, தண்ணீர் பனிக்கட்டியாக மாறும் அளவுக்கு மேற்பட்ட குளிர்ச்சியை அடைந்துவிட, பனித்துளி உண்டாகி இலைகளில் அமருவதுபோல, பனியேடுகள் பூமிமட்டத்தில் உண்டாகி செடி கொடிகளை மறைக்கின்றன. இந்த ஏடுகளால் மறைக்கப்பட்டு அடியிலுள்ள செடிகொடிகள் வெளியிலிருக்கும் அதிகக் குளிர்ச்சியால் பாதிக்கப்படாது காப்பாற்றப்படுகின்றன. இம்மாதிரி நான்கு ரூபமாக வாயுவிலுள்ள நீராவி பூமியில் அருகாமையில் காணப்படுகின்றது.

இனிமேல் வாயுவின் மேல்பாகமாகிய ஆகாயத்தில் காணப்படும் நீராவியின் தோற்ற பேதங்களை எடுத்து விவரிப்போம். பூமியிலுள்ள ஸமுத்திரம், ஏரி குளங்கள் முதலிய நீர்நிலைகளிலிருந்து ஸூர்ய வெப்பத்தால் தண்ணீர் ஆவியாகின்றது. உடனே, இது லேசாகப்போக ஆகாசத்தில் கிளம்பிவிடுகின்றது. மேலே போகப்போக குளிர்ச்சியான பிரதேசங்களாக இருப்பதால் * நீராவி மெதுவாக சிறுதுளியாக புகைரூபமாகின்றது. இதுவே மேகம் எனப்படும். இம்மாதிரிமேகம் ஸூர்யன் பிரகாசிக்குங்கால்தான் ஏராளமாகக் காணப்படும் ஸூர்யஸ்தமனமாகிவிட்டால், பூமிமட்டத்திலிருந்து மேலேசென்று இவைகளை கீழே இறங்கவொட்டாமல் தடுத்துக் கொண்டிருந்த நீராவி ஓட்டம் நின்றுவிடும். உடனே இம்மேகங்கள் கீழே இறங்கி வாயுவின் உஷ்ண பாகங்களுக்கு வர நீராவி ஆகி மறைந்துவிடும். இது பூமிமட்டத்தில் உண்டாகும் புகைப் பனிபோல ஆகாயத்தில் உண்டாவது.

இம்மாதிரியான மேகங்கள் காற்றால் தள்ளப்பட்டு மலைச்சாறல் மேலேறியோ அல்லது மேலே மிகுந்த புதிய குளிர்காற்றால் தாக்கப்பட்டோ அதிகமாகக் குளிர்ந்துவிட்டால் பெரிய தண்ணீர்த்துளிகளாகி கருத்த வர்ணத்தை அடைந்து நீருண்ட மேகங்கள் ஆகின்றன. இவைகள் பூமி மட்டத்தில் உண்டாகும் மூடுபனிக்கு ஸமானமானவை. இவை ஸூர்யாஸ்தமனத்தின் பின்மறையா. இவைகளே ஆகாயத்தில் உயர்த்தப்பட்டாவது அல்லது குளிர் காற்றில் அகப்பட்டாவது மிகுந்த குளிர்ச்சியடைந்தால் தண்ணீர் துளிகளாகின்றன. இத்துளிகள் பூமி மட்டத்தில் உண்டாகும் பனித்துளிகள் போன்றன. இவை ஆகாயத்தில் உண்டாவதால் ஆதாரமற்றவையாய்ப் போக மழையாகப் பூமியில் பொழிகின்றன. முன்னர் பனித்துளிகள் உண்டாகும் விதத்தை ஓர் சோதனை மூலமாக விளக்கியதுபோல மழையுண்டாகும் விதத்தையும் ஓர் சோதனை மூலமாக விளக்குவோம்.

இங்குகாட்டப்பட்டிருக்கும் சித்திரத்தைப் பாருங்கள். இதில் ஓர்புறத்தில் ஓர்முக்காலியிட்டு அதன்மேல் ஓர் இரும்பு வலை வைத்து அதன்மேல் ஓர் கண்ணாடி உருண்டைக்குவளை வைத்திருக்கிறது. அந்தக் குவளையின் வாய் இரண்டு துளைகளை உடைய சடை ஒன்றால் மூடப்பட்டிருக்கிறது. வலதுபுறம் உள்ள ஓட்-

* பூமியைவிட்டு மேலேபோகப் போக குளிர்ச்சியாய் இருப்பதற்குக் காரணம் என்ன என்ற சங்கை பிறக்கலாம். இரண்டிடத்திலும் ஸூர்ய வெப்பம் ஒரேமாதிரியாக வந்து தாக்குகின்றது. ஆனால்காற்று அமுக்கிச் சிறிதாக்கக்கூடிய வஸ்துவாகையால் பூமியின் அடிபாகத்தில் காற்று அடர்த்தி அதிகம், மேலே குறைவும். மேலும் காற்றின் வழியாக எளிதில் உஷ்ணம் வெளியோது. ஆதலால் பூமி மட்டத்தில்வந்து தாக்கும் உஷ்ணம் மேல்பாகத்தில் வந்துதாக்கும் உஷ்ணத்தைப்போல எளிதில் வெளி ஏறுவதில்லை. ஆதலால் பூமியின்மட்டம் உஷ்ணமாயும், மேல் போகப்போக குளிர்ச்சி அதிகமாயும் காணப்படுகின்றது.



டையின் வழியாக ஓர் வளைக்கப்பட்ட கண்ணாடிக் குழாய் வெளிவருகின்றது. அதன் உள் நுனி உருண்டைக் குவளையில் உள்ள உப்புத்தண்ணீருள் மூழ்கி இருக்கின்றது. இடதுபுறம் உள்ள துளையின் வழியாகவும் ஓர் வளைந்த கண்ணாடிக்குழாய் போகின்றது. இதன் வெளி நுனி வலதுகுழாயின் வெளி நுனிபோலவே இருக்கின்றது. இதன் உள் நுனியோ சடையின் உட்பாகத்தின் அருகாமையில் குவளை மேல்பாகத்திலேயே நின்றுவிடுகின்றது. இதன் வெளி நுனி இரும்புவளையத்தில் நிற்கும் ஓர் வெங்கலப்பாத்திரத்தின் பக்கத்தில் நிற்கின்றது. இந்த வெங்கலப்பாத்திரத்தின் நேரே கீழே ஓர் வளையத்தில் ஓர் பீங்கான் இருக்கின்றது. இவ்வெங்கலப் பாத்திரத்தின்மேல் இடது புறத்தில் ஓர் வளையத்தில் ஓர் பெய்குழல் இருக்கின்றது. அதிலிருந்த வெங்கலப் பாத்திரத்துள் ஓர் (ரப்பர்) குழாய் வந்து சேருகிறது. வெங்கலப் பாத்திரத்திலிருந்து ஓர் கண்ணாடிக்குழாய் அடியில் இருக்கும் தண்ணீர் நிறைந்த தொட்டியுள் போகின்றது.

இப்பொழுது சாராய விளக்கால் உப்புநீர் இருக்கும் குவளையைச் சுடவைப்போம். தண்ணீர் கொதிக்கத் தொடங்கியதும் இடதுவளைந்த குழாய் மூலமாக நீராவி வெளியேறி வெங்கலப் பாத்திரத்தில் வந்து தாக்கும். இதற்குள் வெங்கலப் பாத்திரத்தை தண்ணீரால நிறைத்து அதிலிருந்து வெளிவரும் குழாய வழி பாத்திரத்தின் வாயில் நீராவியால் உஷ்ணப்படுத்தப்படும் தண்ணீரை வெளி ஏறும்படி செய்வோம். மேலிருக்கும் பெய்குழலுள் ஜாக்கிரதையாக தொட்டியிலிருந்து தண்ணீர் ஓர் கண்ணாடிப் பாத்திரத்தில் மொண்டு விடுவோம். வெங்கலப் பாத்திரம் நிறைந்து தண்ணீர் அடியிலுள்ள பீங்கானில் வழிந்துவிடக்கூடாது. இவ்வாறு ஜாக்கிரதையாகச் செய்து வருவோமாகில் வெங்கலப் பாத்திரத்தின் அடியில் உஷ்ணப்படுத்தப்படும் தண்ணீர் வெளியே கொண்டுபோகப்படும். குளிர்ந்த நீர் பெய்குழலிலிருந்து பாத்திரத்தில் விழுந்து வெங்கலப் பாத்திரத்தின் அடிப்பாகத்தை ஸதா குளிர்ச்சியாக வைத்துக்கொண்டிருக்கும். அப்பொழுது அந்தப் பாத்திரத்தின் வெளி பாகத்திலிருந்து தண்ணீர் துளிகள் பீங்கானில் விழுவதைக் காணலாம். இவ்வாறு கொஞ்சநாழிகை செய்துவந்தால் பீங்கானில் கொஞ்சம் தண்ணீர் துளிதுளியாக விழுந்து சேர்ந்துவிடும். இப்பொழுது விளக்கை நிறுத்திவிட்டு பீங்கான் ஜலத்தை ருசி பார்த்தால் அதில் உப்பேஇராது. மேலும் அதை கண்ணாடி சோதனைக் குழாயுள் விட்டுப் பார்த்தால், மழை ஜலம் எவ்வாறு ஸ்படிகம் போல ஸ்வச்சமாக இருக்குமோ அவ்வாறு அதுவுமிருக்கும்.

இந்தச்சோதனை மழை ஆகாயத்தில் உண்டாவதை நன்கு விளக்குகின்றது. கண்ணாடி விளக்குதான் ஸூர்யன். உருண்டைக்குவளையில் இருக்கும் உப்பு நீர்தான் ஸமுத்திரம். ஸதா குளிர்ச்சியாக வைத்திருக்கப்படும் வெங்கலப்பாத்திரம் தான் குளிர்ச்சியான வாயுவின் மேல்பாகம் அல்லது மலைச்சாரல். பாத்திரத்தின் வெளிப்புறம் உண்டாகும் நீர்த்துளிகள்தான் நீர் கொண்டமேகம். பீங்கான் தான் பூமி. அதில் நீர் துளிகள் விழுவதுதான் மழை பெய்தல். இதில் வரும் தண்ணீர் எவ்வாறு ஸ்வச்சமாயும் உப்பே இல்லாததாயும் இருக்கின்றதோ அவ்வாறேதான் மழையிலும் இருக்கின்றது. ஸமுத்திர நீர், நீராவியாவதால் அதனோடு உப்பு செல்வதில்லை. மறுபடியும் குளிர்ச்சியால் இந்த ஆவியிலிருந்து உண்டாகும் தண்ணீரே மழையாகப் பொழிவதால் அந்தமழை நீரில் ஸமுத்திர உப்புக்காணப்படுவதில்லை. தண்ணீர் ஸ்வச்சமாகவும் இருக்கின்றது. இந்த ஞானத்தால்தான் கப்பல் யாத்திரை செய்பு

[illegible] குறைந்த கஷ்டகாலத்தில் குடிக்க ஸமுத்திர நீரைத் தகுந்த கருவிகளை மூலமாகக் காய ச்சி ஆவியாக்கிப் பின்னர் [illegible] தண்ணீ ராக்குகின்றனர். *

பூமியிலிருந்து மேமேலகிளம்பும் நீராவிகாற்றால் இம யமலைச் சிகரம்(கௌரீ சங்கரம்என்றகொடுமுடியின் உச்சி) போன்ற அதிக உயரம் கொண்டு போகப் பட்டால் நீராவி அங்குள்ள குளிர்ச்சியால் தண்ணீ ராகி முடிவில் பனிக்கட்டியும் ஆகின்றது. தக்ஷி ணம் முதலிய பாகங்களைப் போன்ற விடங்களில் மேமேல கிளம்பும் நீராவி சுமார் ஐந்து மையிலு க்குமேல் போனால்தான் பனிக்கட்டியாகும். நல்ல நிர்மலமான ஆகாயத்தில் இரவிலாகட்டும் பகலிலா கட்டும் தனிமையாக இரண்டொரு மேகப்பொட் டுக்களை நாம் அநேகம் தரம் கண்டிருக்கலாம். அவைகளே மிகுந்த உயரத்தில் உண்டாகும் பனிக் கட்டிளாக இருக்கலாம். ஐரோப்பாவிலுள்ள ஆல்பஸ் மலை, பூமியின் வடபாகங்கள் ஆகிய இந்தக் குளிர்ந்த இடங்களில் பூமிமட்டத்திலே அதிகக் குளிர்ச்சி இரு க்கும் இவ்விடங்களில் சில ஸமயங்களில் மழை போல பனிகட்டிமழை பெய்வது வழக்கம். இவை களில் பிரயாணி புதைந்துபோக அந்தப் பாகங்களில் பரோபகாரார்த்தமாகவிருக்கும் ஸந்யாஸிகள் தமது கூறிய புத்தியுள்ள நாய்கள் மூலமாக அவர்களைக் கண்டெடுத்துக் காப்பாற்றுவது வழக்கம். இப்பனி [illegible]களில் சிற்சில ஸமயங்களில் பனி எடு எடாக தகடுரூபமாக விழும். அவைகளை எடுத்து நோக்கில் விசித்திர புஷ்பரூபமாகவிருக்கும். இப்பனி மழை முற்கூறியதாகிய பூமி மட்டத்தில் உண்டாகும் பனியேடுகள்போல ஆகாயத்தில் உண்டாவது. பனி மழையே ஸாதாரண மழைபோன்றது.

இம்மாதிரி பனிக்கட்டி மழை பூமியின் உஷ் ணபாகங்களில் அபூர்வமாக உண்டாகும். இவை களுக்கு ஆலங்கட்டி மழை என்று பெயர். இம் மழை எப்பொழுதும் இடி மின்னலோடே தான் அடிக்கடி நமது பிரதேசங்களில் உண்டாகும், நமது தேசத்தில் ஐந்து மைலுக்கு மேல் உண் டாகும் பனிக்கட்டி தாமாக கீழே கட்டியாக இற ங்கமுடியாது. வரவர உஷ்ணம் அதிகமாவதால், கீழே இறங்க இறங்க அவை தண்ணீராக மா றிப் பின்னர் ஆவியாகி மேலேயே மறைந்து போம். இவைகளை மின்னல் தனது சக்தியால் பிடித்து மேலிருந்து தள்ள, உருகிக்கொண்டே இக்கட்டிகள் பூமியில் விழுகின்றன. இக்கட்டி களை நாம் அஜாக்ரதையாக எடுத்து வாயில் போட்டுக்கொள்ளுவோமாகில் அதற்குள் இவை தண்ணீராகிவிடும். இம்மழைக்குக் கல்மழை என்ற பெயரும் உண்டு. இவை கட்டியாக விழுவதாலும், கூரையில் கல் எறிந்தால் உண்டாகும் சப்தத்தை இம்மழை உண்டாக்குவதாலும் இவைகளுக்கு இப் பெயர் வந்திருக்கலாம்.

இனி வாயுவில் காணப்படும் தண்ணீரின் ரூப பேதங்களைச் சுருக்கிச் சொல்லுவோம்.

தண்ணீர் முதலில் நீராவியாகி ஆகாயத்தில் கிளம்புகிறது. அது கண்ணுக்குப் புலப்படாது. அதன்ரூபபேதங்களை பின்வரும்கட்டத்தில் காண்க.

* இந்தச் சோதனைக்கும் இயற்கைக்கும் ஓர் வித்யாஸம் உண்டு. அதை அவசியம் கவனிக்கவேண்டும். ஸூர்யன் ஸமுத்திர ஜலத்தை மேலே இருந்து ஆவியாக்குகிறது. சோதனையில் சாராய விளக்கு கீழே இருந்து உப்பு நீரை ஆவியாக்குகிறது. கடவுள் ஸூர்யனை மேலே வைத்திரா மல்போனால் ஸமுத்திர ஜலம் எல்லாம் வெகு சீக்கிரம் ஆவியாகிவற்றி விடும். உலகம் தவிக்கவேண்டிவரும். ஏனெனின் தண்ணீரை மேலி ருந்து உஷ்ணப்படுத்துவது மிகக்கடினம்; கீழே இருந்து உஷ்ணப்படுத் துவது மிக எளிது. மேலே இருந்து ஸூர்யன் செய்யும் வேலையால் உண்டாகும் மழையை ஒவ்வொரு ஸமயங்களில் தாங்கவே முடியாமலிரு க்க ஸூர்யன் ஸமுத்திரத்தை அடியிலிருந்து உஷ்ணப்படுத்துமாயின் உல கம் அதிக மழையாலும் வருந்தவேண்டி வரும் என்பதற்கு என்ன ஸந் தேகம். கடவுளது செயலின் உபயோகத்தைப் பாருங்கள்!

தண்ணீரின் ரூபபேதங்கள்

ெந.	தங்கும் பாகம்.	ஸாதாரணக் குளிர்ச்சி.	தண்ணீராவது.	கட்டியாவது.
1.	பூமி மட்டம் அல்லது வாயுவின் கீழ்ப்பாகம்.	புகைப்பனி. மூடுபனி.	பனித் துளிகள்.	பனி எடு.
2.	வாயுவின் மேல்பாகம்,	மேகம். நீருண்டமேகம்.	மழை.	பனி மழை.

உஷ்ணப் பிரதேசங்களில்கூட பனிக்கட்டி ஆலங்கட்டி மழை மூல மாக கீழேவிழும்.

ஏ. எஸ். கஸ்தூரிரங்கன் பி. ஏ. எல். டி.

பௌத்த சங்கங்கள்

BUDDHIST ASSEMBLIES



கௌதமர் நிர்வாணமடைந்த நாலு மாதத்துக் கெல்லாம் ராஜகிருகத்துக்கு அரசனான அஜாத சத்துரு என்பவரால் முதற்சங்கம் கூட்டப்பட்டது. சிஷ்யர்கள் கௌதமருடைய உபதேசங்களை மறக் காதிருப்பதற்கு முந்தியே அவ்வுபதேசங்களைத் தெளிவு செய்து தர்மத்தின் விதிகளை வரையறுக்க வேண்டி இச்சங்கத்தை அஜாதசத்துரு கூட்டினார். பரிசுத்தமான உபதேசங்களை எழுதுவது தகாதெ ன்று அக்காலத்திலெண்ணப்பட்டு வந்தது. ஆத லால் அக்காலத்தில் சாஸ்திரங்களெல்லாம் மனனம் பண்ணப்பட்டு வந்தன. சங்கத்துக்கு வந்துள்ள ஒவ்வொரு தேர்கம் (Theras) * கௌதமரிடமிரு ந்து கற்ற உபதேசங்களை வாக்கியம் வாக்கியமாக எடுத்துச் சொல்லுவார். அச்சபையில் கூடியிருக் கும் ஏனையோரெல்லாம் இப்படிச் சொல்லப்பட்ட வாக்கியங்களைத் திரும்பக்கூறி மறக்காதவண்ணம் நெட்டுருவேற்றுவார்கள். இப்படிக் கூடிய முதல் சங்கத்தில் தலைமை வகித்தவர் மகாகாசியபா (Maha Kasiapa). அப்பொழுது விநய(Vinaya) பிட கத்தை உமாலியும், (Umali) சுத்த பிடகத்தை ஆநந் தரும், (Ananda) அபிதம் பிடகத்தை அநுருத்த

* பௌத்த சாஸ்திரங்களில் பாண்டித்தியம் பெற்றவர்கள்.

நும், (Anuruddha) சந்தை சொன்னார்கள். இச்சீடர்கள் மூவருமே இம்மூன்று பீடங்களிலும் அதிவித்பன்னர்களென்று கௌதமரே சொல்லியிருந்தார். அநேக லட்சம் பௌத்த சந்நியாசிகளால் நியமிக்கப்பட்டு 500-தேரர்கள் இச்சங்கத்தில் வந்து கூடியிருந்தார்கள். இவர்களெல்லாரும் மகா பரிசுத்தமானவர்கள், நிரம்பக்கற்றவர்கள். இச்சபை ராஜகிருகத்துக்கு அருகாமையிலிருந்த சதாபான (Sathapana) குகையில்கூடிற்று. மேற்சொன்ன உபதேசங்கள் ஏழுமாதம் சந்தை சொல்லப்பட்டன. அதற்குப் பிறகு விதிகளெல்லாம் வரையறையப்பட்டு அவற்றிற்கு தேர்வாதம் (தலைமைத் துறவிளின் வார்த்தை) என்னும் பெயருமிடப்பட்டது. இவைதான் இப்பொழுது பர்மா, சிங்களம், சீயம் தேசங்களில் அனுசரிக்கப்பட்டு வருகின்றன.

கௌதமர் நிர்வாணமடைந்த இரண்டாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் பௌத்த சமயத்தில் முதல் தடவை பிரிவு உண்டாயிற்று. அப்பொழுது இந்தியாவிலிருந்த அநேக யதிகள் "தசசம்ஸ்காரங்களில்" கூறியிருக்கும் பிக்ஷுக்களின் ஆசிரமவிதிகளை மாற்றவேண்டுமென்று சொல்லி தேர்வாத வியாக்கியானத்தை உபேட்சை செய்யத் தலைப்பட்டார்கள். பௌத்தர் நிர்வாணமடைவதற்குக் கொஞ்சநாளைக்கு முன் தன்னுடைய சிற்றுபதேசங்களையெல்லாம் சங்கம் இஷ்டப்படி விலக்கிவிட்லாமென்று உத்தரவு கொடுத்திருந்தார். ஆனால் முதற் சங்கத்தில் கூடினவர்கள் இவ்வனுமதியைப் பிரயோஜனப்படுத்தவில்லை. ஏனெனில் ஜகத்குரு போய்விட்டதால் அவருடைய சிஷ்யர்களெல்லாம் பயமில்லாமல் அவருடைய உபதேசங்களைக் கண்டாகண்டபடி மாற்றிவிடுகிறார்களென்று ஜனங்களுக்கு பௌத்தசமயத்தில் நம்பிக்கை குன்றிவிடும் என்று எண்ணினார்கள். ஆனால் இப்பொழுது பிரிவுபட்ட யதிகள் அவர்களுடைய ஆசிரமவிதிகளின் கடுமையைத் தணிக்கவேண்டி கௌதமர் கொடுத்திருந்த அனுமதியைப் பிரயோஜனப்படுத்தத் தீர்மானித்தார்கள். இவர்கள், யதிகள் பொன் வெள்ளியைத் தானம் வாங்கலாமென்று வாதித்தார்கள். ஆனால் தேர்வாத வியாக்கியானர்கள் பௌத்தர் முதலிலேற்படுத்தியிருந்த விதிகளைக் கண்டிப்பாய் அனுஷ்டிக்கவேண்டு மென்று சச்சரவு செய்தார்கள். இப்படிமாறுபாடடைந்த அபிப்பிராயங்கள் ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்காக வேசாலி (Vesali) என்னுமிடத்தில் இரண்டாவது புத்தசங்கமொன்று கூட்டப்பட்டது. காலசோகன் (Kalasoka) என்னும் மன்னன் யதிகளெல்லாம் வேசாலிக்கு வந்துகூடும்படி ஒரு மசோதா அனுப்பினான். 12-லட்சம் யதிகள் தங்களபிப்பிராயத்தை வெளியிட்டு வாதிக்கும்படியாக 700-வித்தியா சம்பன்னரான தேரர்களைத் தேர்ந்தெடுத்து சங்கத்துக்கு அனுப்பினார்கள். இச்சங்கத்தில் மகாயாசர் (Mahayasa) என்பவர் தலைமை வகித்தார். எட்டுமாதம் சந்தையும் வாதமும் நடந்தது. கடைசியில் முதல் சங்கத்தின் தீர்மானங்களே இதிலும் ஆமோதிக்கப்பட்டன.

ஞாபகசின்னங்களில் பிரியதாசி (Priyadasi) என்று கூறப்பட்டிருக்கும் ஸ்ரீதர்மாசோகரால் (Asoka) மூன்றாவது சங்கம் பாடலீபுரத்தில் கூட்டப்பட்டது. அசோக ராஜனுடைய வெகு விஸ்தாரமான ராஜ்யத்துக்கு பாடலீபுத்திரம் தலைநகர். சமயத்தின் தூய்மையைப் பலசச்சரவுகள் சேர்ந்து கலைப்பதாயிருந்தபடியால், என்றும் சன்மார்க்கத்தையே யிசசித்தவனான அசோகமகாராஜன் தன்தேசத்திலிருந்த சிரேஷ்டமான யதிகளை அழைப்பித்து விநயபீடகத்தைப் பழையபடி பரிசுத்தமாக ஸ்தாபிக்கும்படி வேண்டிக் கொண்டான். திரும்பவும் ஒரு பெரிய சபைகூடிற்று. இதில் வந்திருந்த வித்பன்னரின்தொகை ஆயிரம். இதில் தலைமை வகித்தவர் மகா தோரான்திஸ்ஸ மொக்கலபுத்திரர் (Tissa Moggaliputta). இவர் ராஜகிருகத்தில் கூடிய சங்கத்தில் விநய பீடகத்தை சந்தை சொன்ன கௌதமரின் சிஷ்யரான உபாலியின் ஆசாரிய பரம்பரையில் நான்காமவர். இவர் விநயபீடகத்தைக் கரைகண்டவர்; பௌத்த சமயத்தின் சாஸ்திரங்களையெல்லாம் நன்றாகக் கற்றவர். இவர் 20-வது வயதில் யதியானவர். அவருக்கு இந்தச் சமயத்தில் வயது 96. சாஸ்திரங்களில் தர்மம், ஆசிரமம், இவற்றில் சந்தேகத்துக் கிடமான கடின பாகங்களை யெல்லாமெடுத்து வினாவிடை ரூபமாக கதாவஸ்து (Kathavasthu) என்னும் ஒரு கிரந்தம் இயற்றியவர். பிரிவுகாரர்களால் செய்யப்பட்ட ஆட்சேபனைகளுக்கெல்லாம் இக்கிரந்தத்தில் சமாதானம் சொல்லப்பட்டிருந்தபடியால் இது பாடலீபுத்திரத்தில் கூடிய தேரர்களுக்கு வெகு ஆவசியகமாயிருந்தது. அச்சபையிலேயே இக்கிரந்தத்தையும் ஒருசாஸ்திரமாக்கி திரிபீடகத்தோடு இதுவும் ஒன்று சேர்க்கப்பட்டு மனப்பாடம் செய்யப்பட்டது. இதுவரையில்மூன்று

சங்கங்களும் ஒரேவிதமான தீர்மானங்களைச் செய்தன. இதற்கு மேற்பட்டு சங்கங்கள் இருவகையாகப் பிரிந்தன. நாலாவது சங்கம் காஷ்மீரில் ஒன்றும் சிங்களத்தில் ஒன்றுமாக நடத்தப்பட்டது. காஷ்மீர் சங்கம் பிரிவு பட்டவர்களின் வாதத்தை ஆமோதித்தது. இதற்கு மகாயன பௌத்த சமயம் என்று பெயர். சிங்களத்தில் தீர்மானித்த கொள்கைக்கு ஹீனயன பௌத்த சமயம் என்று பெயர். மகாயன சங்கம் காஷ்மீர் நாட்டரசனான கனிஷ்கரால் கி. பி. முதல் நூற்றாண்டில் கூட்டப்பட்டது. திரிபீடகங்கள் சம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டன. அசோகன் ஹீனயன புத்த சங்கத்தை எவ்வளவு விருத்திசெய்தானோ அவ்வளவு கனிஷ்கன் மகாயன சங்கத்தை ஆதரித்தான்.

ஆதிகாலத்தில் கூடிய நான்காவது சங்கம் சிங்களத்தில் வர்த்தகாமணி (Varthagamani) என்னும் அரசனால் ஆலோக விகாரத்தில் (Aloka Vihara) கட்டப்பட்டது. இதில் தலைமை வகித்தவர் சங்கராஜா மாகிந்தா (Sanga Raja Mahinda). இதில் 500-தேரர்கள் வந்து கூடினார்கள். இந்தச் சங்கத்தில் பௌத்த சாஸ்திரங்களெல்லாம் வியாக்கியானங்களோடு பனையோலைச் சுவடிகளில் வரையப்பட்டன. பௌத்தர் நிர்வாணமடைந்து 455-வருஷங்களுக்குப் பிறகுதான் திரிபீடகங்கள் முதல் முதல் எழுதப்பட்டன. இவைகள்தான் பர்மாவுக்குவந்தன.

கி. பி. 19-வது நூற்றாண்டின் பின்பாதியில் மிண்டான்மின் (Mindon Min) என்னும் அரசன் மாண்டலேயில் 5-வது சங்கம் ஒன்று கூட்டினான். இதற்குப் பர்மாவில் வெகுதூரத்திலிருந்தும் தேரர்கள் வந்து சேர்ந்தார்கள். இப்படிச் சேர்ந்தவர்களின் தொகை 2400. இதில் தலைமை வகித்தவர் பௌத்த யதிகளுக்கெல்லாம் தலைவரான தாதனாபயிங் (Thathanabaing) என்னும் சங்கராஜர். இதற்குமுன் சங்கங்களில் நடந்ததுபோலவே இதிலும் திரிபீடகங்களும் சந்தை சொல்லப்பட்டன. இது முடிவதற்கு 5-மாதமாயின. இந்த ஐந்துமாதமும் மிண்டான்மின் தனது சொந்த பொருளைக்கொண்டே தேரர்களைப் போஷித்துவந்தான். இப்படிச் சந்தை சொல்லும்போது, அரசனும், ராஜகுலத்தாரநேகரும் அடிக்கடி வந்து கேட்டுக்கொண்டிருப்பார்கள். இவ்வரசன் மாண்டலேயில் லோகமாரஜித் (Lokamarajit) அதாவது உலகமாயையை வென்றவன் என்னும் ஒரு பெரும் ஆலயத்தைக் கட்டிமுடித்தான். அதில் பளிங்குபோன்ற சலவைக்கற்களை வரிசையாகநிறுத்தி அவற்றில் திரிபீடகங்களையும் கல்தச்சர்களைக்கொண்டு எழுதச் செய்திருக்கிறான்.

மகாயனம், ஹீனயனம்

புத்தமதம், மேல் வரைந்துள்ள இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்று முன்னமேயே சொல்லியிருக்கிறோம். மகாயன பௌத்த சமயம், சீனா, நேபாளம், திபேத்து, மங்கோலியா, கொரியா, ஜப்பான், கொச்சின்சைனா முதலிய வடக்கு தேசங்களில் அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஹீனயனம், பர்மா, சிங்களம், சீயம்முதலிய தென்தேசங்களில் அனுசரிக்கப்பட்டு வருகிறது. மகாயன சமயத்தார்க்கு ஸமஸ்கிருதமும் ஹீனயன சமயத்தார்க்கு பாலியும் தாயபாஷைகள். மகாயனத்தின்படி நிர்வாணத்துக்கு மேற்பட்டு ஒரு பரமபதவியிருக்கிறது. அப்பதவிக்கு செல்லுபவர், துன்பம் மரணம், ஆண் பெண் பிரிவு, இவைகளினின்றும் விடுபட்டு நித்தியானந்தமாய் வாழலாம். ஹீனயனத்தில் நிர்வாணத்துக்கு மேற்பட்ட பதவிகிடையாது. அறவினைகளையும் தீர்த்தவர் அப்பதவிக்குப் போகலாம். மகாயனம் பிராம்மணமதத்தைஅநேக விஷயங்களில் ஒட்டியிருக்கிறது. சிருஷ்டிகர்த்தாவான பரமாத்மா ஒருவரிருக்கிறாரென்றும் அவருக்கு ஆதிபுத்தரென்று பெயரென்றும்மகாயனர் கொள்ளுகிறார்கள். என்றும் அழியாத ஜீவாத்மா ஒன்று இருக்கிறதென்றும் அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் ஹீனயனரோ இவை யொன்றையும் நம்புவதில்லை. மனிதன் பிறபொருளின் ஒத்தாசையின்றி தன் முயற்சியினாலேயே முக்தியடையக்கூடுமென்றும் புத்தரே இப்படி முக்தி பெற்றவர்களில் மேலானவரென்றும், ஹீனயனர் நம்புகிறார்கள். "அவனன்றி ஓரணுவு மசையாது" என்பதை ஹீனயனர் நம்புவதில்லை.

ஹீனயனரின் கொள்கை தர்மார்த்தத்தை யனுசரித்தது. மகாயனர் பலதேவதைகளையும், அமானுஷ்யமான செய்கைகளிலும் நம்புவார்கள். ஹீனயனர் அமானுஷ்ய மென்பதே கிடையாதென்றும், நன்மைக்கும் தீமைக்கும் மனுஷ்யனுடைய நடக்கையே காரணம் என்றும் கொள்ளுகிறார்கள்.

இந்துலேகை

ஒரு மலையாள நாவல்

இரண்டாம் அத்தியாயம்

(முன்தொடர்ச்சி)

"இதோ சொல்லுகிறேன்" என்றாரம்பித்துச் சொல்லத்தொடங்கினான் மாதவன்,—

"இந்தீவராக்ஷி தவ தீக்ஷ்ண கடாக்ஷ பாண-
பாதவ்ரணே த்விதய மௌஷதமேவ மந்யே.
ஏகம் த்வதீய மதராம்ருதபானம் அந்யத்
த்வத்துங்க பீந-குச-குங்கும-பங்க-லேப:".

[அதாவது: கருநெய்தல் மலர்போன்ற கண்களையுடையவளே! உன் கண்களாகிய கூரிய பாணங்கள் ஆடவர்மீது விழுதலால் உண்டாகும் புண்ணை ஆற்றவல்ல மருந்து இரண்டே என நான் நினைக்கிறேன். ஒன்று, உன் இதழமுதைப் பருகுவதும், மற்றது, உன்னை இறுகத்தழுவி, பருத்தும் நிமிர்ந்துமுள்ள நின் குசங்களின் குங்குமச்சேற்றின் பூச்சைப் பெறுவதுமேயாம்].

"சரி, நல்ல ஔஷத முறைதான். ஆனால் இம்மருந்து எப்படி உனக்குக் கிடைக்கும்" என்றாள் இந்துலேகை.

"அது இந்துலேகையின் கைவசமாகவே இருக்கிறது" என்றான் மாதவன்.

"ஆனால் அதை இப்போது எடுக்கமுடியாது. பனி அதிகமாயிருக்கிறது. உள்ளேபோய்ப் படுத்துக்கொள். பைத்தியக்காரனைப்போல் நடந்துகொள்ளாதே" என்றாள் இந்துலேகை.

"அதிருக்கட்டும். எனக்கு அம்மருந்து எப்போதாகிலுங் கிட்டுமோ? "கிட்டும்" என்று இந்துலேகை வாயில் வந்தாற்போதும். எனக்குப் பரம சந்தோஷம். இம்மாதிரி என்னை வாட்டாதே. அந்த ஒரு வார்த்தைமட்டும் உன் வாயினின்று வந்தாற்போதும். அதுவே எனக்குப் பேரானந்தத்தைத் தரும். அவ்வளவு பாக்கியமாவது எனக்கு இருக்கக்கூடாதா?" என்றான் மாதவன்.

"மாதவா! என்னை அறியாமல் எனக்குத் தூக்கம் வருகின்றது. நான் போகவேணும். என்னைவிடு" என்று சொல்லிக்கொண்டே இந்துலேகை தானிருக்கும் அறைக்கு விரைந்து சென்றாள்.

இப்படி மாதவனுக்கும் இந்துலேகைக்கும் இடையில் பலதடவைகளில் பரஸ்பரம் நடந்த ஸல்லாபங்களைக்குறித்துச் சொல்வதானால் பூர்வ கதாப்பிரஸங்கமாய் ஆரம்பித்த இந்த அத்தியாயம் ஒரு மகாபாரதமாய்ப் பெருகிவிடும். ஆயினும் அவர்களுக்குள் நடந்த மற்றொரு ஸல்லாபத்தை என் வாசகர்களுக்குச் சொல்லாமல் மேலேபோக என் மனம் ஒப்பவில்லையாதலால் அதைச் சொல்லுகிறேன்.

இந்துலேகையின் ஞாபகமே அல்லும் பகலும் மாதவன் மனத்திற் குடியிருந்தபடியால் அவனுக்கு மண்டைக் காய்ச்சல் உண்டாய்விட்டது. ஓரிரவு மாதவன் படுத்துக்கொண்டு தூங்கவேண்டுமென்று எவ்வளவு பிரயத்தனப்பட்டும் அவனுக்குத் தூக்கம் வரவேயில்லை. அவ்வாறு தூக்கம் வராமல் அவன் படுக்கையில் புரண்டுகொண்டிருக்கையில் பின்வருமாறு தனக்குள் யோசிக்கலாயினான்.

எதற்காக நான் இப்படி இவ்வளவு தூரம் அவஸ்தைப்படவேண்டும்? இந்துலேகைக்கு வாஸ்தவத்தில் என்மீது காதலிருக்குமாகில், அவள் எத்தனை தினங்களுக்கு முன்னமே என் மனைவியாய் விட்டிருப்பாள். அவளுக்கு என்மேல் ஒருவிதமான அபிமானம் உண்டென்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்த அபிமானம் காதலோ, அல்லவோ என்னும் சந்தேகம் என் மனதைப் பெரிதும் வாட்டுகிறது. என்னைவிட அதிக பதவியும், பாக்கியமுமுள்ளவர்கள் பலர் அவள் கையை நாடியிருக்கிறார்கள் என்பது இந்துலேகைக்குத் தெரிந்த விஷயந்தான். உலகத்தில் மாதர்கள் அநேகமாய் இடம், பொருள், ஏவல் முதலியவைகளையுடையவனையே மணம் புரிகிறார்கள். இவற்றையெல்லாம் நினைக்கும்போது, அவளுக்கு என்மேல் எவ்வளவுதான் இஷ்டமிருந்தாலும், என்னையவள் மணம் புரிவாளென்று எனக்குத் தோன்றவில்லை. அவள் எவ்வளவுதான் படித்திருந்தாலும், கடைசியில் பெண்பிள்ளைதானே! ஆகவே நிச்சயமில்லாத இவ்விஷயத்தைப்பற்றி நான் ஏன் இப்படி மனோவேதனையால் ஏக்கங்கொள்ள வேண்டும்? நாளை விடியற்காலத்திலெழுந்து வேட்டையாடப் போகின்றேன். அநேகமாய் என் தகப்பனாரும் என்னுடன் வருவார். நாங்கள் வேட்டையாடி அனேக நாளாயிற்று. என்னைப் பெரிதும் வாட்டும் இக்காமஜ்வரமானது என் ஆண்மையை அபஹரித்துவிட்டது. சிறு பிள்ளைத்தனமான குற்றத்தையுங் காதலையும் வெல்ல முயலாமல், இவளுக்குக் கீழ்ப்படிந்து அடிமையாய்விட்ட யான் எவ்வளவு அவமானத்திற்கும்ஏளனத்திற்கும்ஆளாகிவிட்டேன். ஆ! என்ன என் புத்தி! என்ன என் ஆண்மை! இந்துலேகைக்கோ கலியாணஞ் செய்வதற்குபுக்தகாலம்

வந்துவிட்டது. இராஜாங்கத்தில் ஓர் உயர்ந்த பதவியாவது, வேறெவ்விதமான சிறந்த இடம், பொருள், ஏவல்களையாவது நான்பெறுமட்டும் இந்துலேகை மணம்புரியாதிருப்பாளென எனக்குத் தோன்றவில்லை. ஆகையால் என் காதலை இன்னும் யான் என் மனதிற் குடிகொள்ள விடும்பட்சத்தில்அது விழலுக்கிறைத்தநீராகும்.இவற்றையெல்லாந் தீர ஆலோசித்த நான் இனி அக்கைக்கெட்டாப் பழத்தினிடமுள்ள எனதாசையை என் கருத்தினின்றும் இந்தக்ஷணமே நீக்குவேன்."

இப்படிப்பட்ட தைரியமான தீர்மானத்தினால் மனதைப் பலப்படுத்திக்கொண்டு, மாதவன் கண்களைக் கெட்டியாய் மூடித் தூங்க முயன்றான்.

ஆனால் அவன் கண்ணை மூடினானோ இல்லையோ, அவனுடைய மனோ பாவம் மனோ தீரத்தை வென்றுவிட்டது. அழகிய இந்துலேகையின் உருவம் அவன் கண்களுக்கெதிரே தோன்றிற்று. அவ்வுருவத்தினது மலர்ந்த கண்களும், செந்தாமரை முகமும், நீண்டு பாரமாயுள்ள கூந்தலும், ரோஜா மலரின் இதழெனத்தகும் சிவந்த அதரமும், உண்மையான இந்துலேகையின் அங்கங்களை முழுதும் ஒத்திருந்தன. இந்துலேகையினிடம் இத்தன்மையான அடங்காக்காதலை வைத்த மாதவன் தன் கண்களைத் திறந்து பார்த்தான். அம்மாயா ரூபம் மாயமாய் மறைந்துவிட்டது. ஐயோ! பாவம் ஏமாந்தான். உடனே நமது கதாநாயகன் எழுந்து நின்று, அதிக திடசித்தமுள்ளவன்போல அபிநயித்துக்கொண்டு, "இனியான் இந்துலேகையைக் கனவிலும் நினையேன்." என்று சபதங்கூறி கதவை நோக்கினான். அதனருகே திடீரென ஓர் பெண்ணுருவம் நிற்பதைக் கண்டான். 'யார் அங்கே' என்று கேட்டான்.

"நான்தான்" என்று பதில் வந்தது. உடனே இந்துலேகையின் தோழியாகிய அம்மு என்பவள், "இது என் எஜமானியம்மாள் பூவரங்கிலிருந்து உமக்கனுப்பியது" என்று சொல்லிக்கொண்டு நறுமணம் வீசாநின்ற ஓர் மல்லிகை மாலையை அவன் கையிற் கொடுத்தாள். மாதவன் அதனைத் தன் கரங்களிலேற்றுக்கொண்டு பெருமூச்செறிந்தான். சிறிதுநேரங் கழித்து அப்பெண் "தாங்கள் அவளுடன் தேயிலைப் பானம் அருந்த நாளையதினங் காலையில் அவள் இருப்பிடத்திற்கு வருவீர்களாவென என்னைக் கேட்டுவரச்சொன்னாள்" என்றாள்.

"நான் நாளை விடியற்காலம் 4-மணிக்கு வேட்டையாடப்போகிறேன். என் தகப்பனாரும் என்னுடன் வருவார்போலிருக்கிறது. நான் இருட்டின பின்பே வீட்டுக்குத் திரும்புவேன் என்று சொல்" என்றான் மாதவன்.

"நான் அப்படியே சொல்லுகிறேன். ஆனால் தாங்கள் என் எஜமானியம்மாளை விடியற்காலத்தில் வந்து பார்த்தால் நல்லது. நாளைக்குச் சிவபூஜை. என் எஜமானி தினம்போல் தூங்கி எழுந்தவுடன் ஸ்நானத்திற்குப் போவாள்" என்றாள் அம்மு.

"இராக்காலங்களில் திருட்டுத்தனமாய் ஸ்திரீ ஜாதியைப்பார்க்க வருபவன் அல்ல நான். நான் அடுத்த நாட்காலையில் அவளைப் பார்க்க வருவதாகச் சொல்." என்றான் மாதவன். அப்பெண் புன்சிரிப்பு செய்து, "நான்நீர்சொன்ன சங்கதியைச் சிறிதும் மாற்றாமல் இந்துலேகையினிடஞ் சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டு மாதவனிடம் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டாள்.

மாதவனது சொற்களைக்கேட்ட இந்துலேகை திரும்பியும் அம்முவை சிலசங்கதிகளுடன் மாதவன் வீட்டிற்கு அனுப்பினாள்.

தன் கையிலிருந்த அழகிய மாலையை உற்றுப்பார்த்து எண்ணமிட்டுக்கொண்டிருந்த மாதவன், இரண்டாந்தரம் வந்த அம்முவைப் பார்த்து, "நீ, திரும்பியும் எதற்காக வந்தாய்?" என்று வினவினான்.

"தாங்கள் வேட்டையாடப் போம்போது தரித்துக்கொள்ள ஒரு குல்லா பின்னிக்கொண்டிருக்கின்றாள் என் எஜமானியம்மாள் இந்துலேகை. அவளுடைய அறைக்குக் காலையில் தாங்கள் வர முடியாதாயினும், தயவுசெய்து அவர்களறையின் சன்னலுக்கெதிராக விருக்கும் தோட்டத்திற்காவது வந்தால் அக்குல்லாவைத் தங்களிடம் தருவதாகச் சொன்னாள்" என்றாள் அப்பெண்.

"அதை அவள் உன் மூலமாய் அனுப்பாததேன்?" என்று கேட்டான் மாதவன்.

"இன்னும் அது முடியவில்லை போலிருக்கிறது" என்றாள் அத்தோழிப்பெண்.

"அதிருக்கட்டும், அவள் இரவில் ஏன் பின்னல் வேலை செய்கிறாள்?" என்று கேட்டான் மாதவன்.

"அவள் சதா இரவுமுழுவதும் படிப்பதும் வேலை செய்வதுமாகவே யிருக்கிறாள்." தூக்கமென்பது சுத்தமாய்க்கிடையாது" என்றாள் அம்மு.

"என்ன காரணம்?" என்று மாதவன் கேட்ட

தற்கு அப்பெண் பதில் வார்த்தை யொன்றுஞ் சொல்லாமல் மௌனம் சாதித்தாள். பிறகு பதில் ஒன்றுஞ் சொல்லத்தெரியாமல் புன்சிரிப்பு சிரித்தாள்.

மாதவன்: "சரி, நீ போகலாம். நான் காலையில் புறப்படும்போது ஜன்னல் திறக்கப்பட்டிருந்தால், உன் எஜமானியைப் பார்க்கிறேன். மூடப்பட்டிருந்தால், நான் நேரே போய்விடுவேன்." என்று சொல்லியனுப்பிவிட்டான் அம்முவை. தோழிப்பெண்போய் விட்டவுடன், மாதவன் மறுபடியும்யோசிக்கலானான்.

"இந்துலேகை இரவில் தூங்குவதில்லையாம். வாஸ்தவமாய்—அவள் என்மீது காதலுடையவளோ? என்றால் அதைச் சந்தேகிக்கமுடியாது. அப்படியிருந்தால், அவள் தன் காதலை ஏன் இதுவரையில் வெளிப்படுத்தினாளில்லை? அவளது நடவடிக்கைகளோ சிறு குழந்தைகளினது நடவடிக்கைகளை ஒத்திருக்கின்றன. இதெல்லாமென்ன?"

இவ்வளவு சந்தேகங்களையும் மனதில் வைத்துக் கொண்டு, மாதவன் தன்னிடத்தை விட்டெழுந்து, காலைத் தொழிலாகிய வேட்டைக்கு வேண்டியவற்றையெல்லாம் சித்தப்படுத்தினான். முதலில் ஒரு துப்பாக்கியை எடுத்துத் துடைத்து அதில் ரவைகளைப்போட்டு கெட்டிசெய்தான். மற்ற வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு படுக்கைக்குப் போகும்போது சமையற்காரனைக் கூப்பிட்டு காலை 4-மணிக்குத் தேயிலைக்கஷாயம் தயார் செய்யச்சொன்னான். 4-மணிக்குக் கண் விழித்து, வேட்டைக்குரிய சட்டைகளையுஞ் செருப்பையுந் தரித்துக்கொண்டு டீ சாப்பிட்டான். உடனே, ஒரு வேட்டைக்காரன் உடன்வர வேட்டையாடுமிடத்திற்குப்போகும் வழியிலுள்ள இந்துலேகையின் வீட்டிற்குப் போனான் மாதவன். வீட்டண்டைவந்து, திறக்கப்பட்டிருந்த சாளரத்தின் வழியாய்ச் சந்திரபிம்பத்தையொத்த அவளதழகிய முகத்தைப் பார்த்தான். சாளரத்தின்மீது சார்ந்துகொண்டிருந்த இந்துலேகையின் ரூபலாவண்யத்தைக்கண்ட மாதவன் அவளதழகிலேயே மதிமயங்கிவிட்டான்.

"நீ ஏன் இவ்வளவு சீக்கிரமாய் புறப்பட்டுவிட்டாய்? ஜீவவதைசெய்ய இஷ்டப்பட்டுபோகும் உனக்கு மிருக ஜாதிகளும், பட்சிகளும் கண்ணுக்குத் தெரியவேண்டாமா? இந்த மையிருட்டில் உமக்கு எப்படி அவைகள் தென்படும்?" என்று கேட்டாள் இந்துலேகை.

"வேட்டையாடுமிடம் தூரத்திலிருக்கிறது" என்றான் மாதவன்,

"ஓ! நீ ஏதோ பலத்த வேட்டையாடப் போகின்றாய்போலும், இதுதானா உன் கருத்து?" என்றாள் இந்துலேகை.

"ஆ! நீ கூறுவதுபோல பலத்த வேட்டையென்றே சொல்லலாம். இப்படி வேட்டையாவதாடி என் மனக்கவலையை ஒழிக்கலாமென்று நினைத்துப்போகிறேன்." என்றான் மாதவன்.

"பலே பேஷ்! பட்டணத்திலிருந்து நீ இம்முறை ஏதாவது துப்பாக்கி கொண்டு வந்தாயா? என்று கேட்டாள் இந்துலேகை.

"ஒரே ஒரு துப்பாக்கிதான்."

"எனக்கு அதைப் பார்க்கவேண்டுமென்றிருக்கிறது. அதை இங்கே அனுப்பு" என்றாள் இந்துலேகை.

மாதவன் தன் காதலியின் விருப்பத்தின்படி வேலைக்காரனிடமனுப்புவித்தான் துப்பாக்கியை. இந்துலேகை அதை வாங்கித் தன்னறையில் வைத்துப் பூட்டிவிட்டாள். பிறகு வேலைக்காரியை ஒரு விளக்கு கொண்டுவரச்சொல்லி மாடியினின்றிறங்கி மாதவனிடம் வந்தாள்.

"நீ அனுப்பிய துப்பாக்கி வெகு அழகாயிருக்கிறது. ஆனால் தற்காலம் அது மாடியிலேயே இருக்கட்டும். உனக்காகப் பின்னிக்கொண்டிருக்கும் குல்லாவை இன்னும் நான் முழுவதும் முடித்தேனில்லை. அது நாளையாவது, அடுத்த நாளாவது முடிந்துவிடும். அப்போது வேட்டைக்குப் போகலாம். இப்போது படுக்கப்போ" என்றாள் இந்துலேகை.

"இது நிரம்ப நன்றாயிருக்கிறது! எனக்கு வேட்டையாடக்கூட அதிகார மில்லைபோலும்" என்று ஆச்சரியத்துடன் கூவினான் மாதவன்.

"அப்படிதான்! உன்னால் இன்றைக்குப் போக முடியாது" என்று இந்துலேகை சொன்னாள்.

"சரி, ஏன்? என்ன காரணம்? தயவுசெய்து சொல்."

"குல்லா தயாராகாத காரணமாய்த்தான்."

"அக்குல்லா வேண்டுமென்று நான் எப்போதாவது சொன்னேனா?"

"வேண்டாமென்று நீ எப்போதாவது சொன்னாயா? என் தோழி நேற்று உன்னுடன் வார்த்தையாடியபோது நீ அப்படி சொல்லவில்லையே."

"எனக்கு வேண்டாமென்று நான் இப்பொழுது சொல்லுகிறேன்."

"இது மகா குரூரம். நான் உன் வார்த்தையை செவிகொடுத்துக் கேளேன். உனக்கு வேண்டியதில்லை யென்று நீ நேற்றையே சங்கதி தெரியப்படுத்தி யிருந்தால் நான் இரவெல்லாம் கண்விழித்து இவ்வளவு கஷ்டப்பட்டிரேன். நான் இரவைப் பகல்போலெண்ணி இவ்வளவு கஷ்டப்பட்டபின் நீ வேண்டாமென்று சொல்லுகிறாய். மிகவும் நன்றாயிருக்கிறது உன் வார்த்தைகள்!"

"இம்மூடத்தனமான வார்த்தைகள் எனக்கு வேடிக்கை வார்த்தைகளாகப் புலப்படவில்லை. இப்படி மனிதர்களை வருத்துவதில் உனக்கென்ன திருப்தியும் சந்தோஷமும் உண்டாகிறதோ எனக்கு தெரியவில்லை" என்றான் மாதவன்.

"மாதவா! இப்போது நானுமொரு குழந்தை, நீயுமொரு குழந்தையென்று நான் எண்ணிக்கொள்கின்றேன். ஆகையால் நாமிருவரும் ஒருகாலத்தில் விளையாடிக் கொண்டிருந்ததுபோல் இப்போதும் விளையாடுவோம் வா" என்றாள் இந்துலேகை.

"என்ன! இந்துலேகை. நேற்றுதான் நீ நாமிருவரும் இனி யொருபோதும் குழந்தைகளைப்போல் விளையாடக்கூடாது என்று சொன்னாய்" என்று மாதவன் பதில் கூறினான். இந்துலேகை, "ஆம், நீ அப்போது குழந்தைபோல் நடந்துகொள்ளவில்லையாதலால் தான்" என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு, மாதவன் ஒன்றுந் தெரியாதவனாய்ச் சோர்ந்து தோட்டத்தில் இங்குமங்குமாய் உலாவிக்கொண் டிருக்கையில், அவனைத் தனியே விட்டுவிட்டு ஸ்நானஞ்செய்யப் போய்விட்டாள். இந்துலேகை ஸ்நானஞ் செய்துவிட்டுத் திரும்பியபோது நன்றாய் வெளிச்சமாய்விட்டது. மாதவனை டீ சாப்பிட அழைத்தாள்; மாதவன் அவளிருக்கும் அறைக்குப் போக இசைந்தானேயொழிய, அவளுடன் டீ சாப்பிட இசைந்தானில்லை. இந்துலேகை மிகவுங் கட்டாயப்படுத்தியதின்மேல் கொஞ்சம் அருந்த இசைந்தான். அறைக்குட்சென்று இருவரும் தனித்தனி நாற்காலிகளில் உட்கார்ந்து சற்றுநேரம் வரைக்கும் மௌனமாயிருந்தனர். இந்துலேகை முதன் முதலில் மௌன விரதத்தை ஒழித்து மாதவனைப் பார்த்து 'நீ இன்றைக்கு வேட்டையாடப்போகிறதில்லை' என்றனள்.

"இத்தகைய பாலிய சேஷ்டைகள் இனி என்னிடம் வேண்டாம். வேறு எவனிடமாவது இச்சேஷ்டைகளைச் செய். இனி ஒருக்கணமும் என்னால் சகிக்க முடியாது" என்றான் மாதவன்.

"எதை உன்னால் சகிக்கமுடியாதென்றாய்? வேட்டையாடுவதையா?" என்று கேட்டாள் இந்துலேகை.

"நான் என் உட்கருத்தை ஒளியாமல் உள்ளபடி சொல்லிவிடுகிறேன்" என்றான் மாதவன்.

"அவசரப்படாதே! கொஞ்சம் நிதானி. நீ உள்ளதைச் சொல்லவேண்டுமென்பதல்ல எனது விருப்பம்: ஆண்மையும் மனோதீரமும் பொருந்தியவனென்று உன்னை இதுவரைக்கும் நான் எண்ணியிருந்தேன். இப்போது உன் நடவடிக்கையைக் கவனித்துப்பார்த்தால், நான் உன்னைப்பற்றி அவ்வளவு உயர்ந்த அபிப்பிராயங் கொண்டது சரியல்லவெனத் தோற்றுகின்றது." என்றாள் இந்துலேகை.

"இவ்விஷயத்தில் மட்டும் என்னால் ஒன்றும் சாத்தியப்படவில்லை. நீ அடிக்கடி சந்திக்கும் மூடர்களிலொருவனென என்னையுங் கருதாதே. நான் இதுவரைக்கும் துஷ்ட சகவாசஞ் செய்தவனல்லன்; உன்னைக் காணுமுன் நான் ஒரு பெண்ணையுங் கண்ணெடுத்துப் பார்த்தவனுமல்லன்; அவர்களுடன் உரையாட விரும்பினவனுமல்லன். இவைகளால் தான்போலும் நான் முதலில் கொண்ட காதல் என்னை அவ்வளவு ஸ்திரமாய்ப் பிடித்துக்கொண்டது. இன்னும் என்னை இவ்வாறு துன்பப்படுத்த நீ இஷ்டப்பட்டால், நான் இப்போதே இந்த அறையைவிட்டுப் போய்விடுவேன்" என்றான் மாதவன்.

"இந்த ஊரைவிட்டு அயலூருக்குப் போய்விட்டால், இப்பொழுது உன்னை வருத்தும் எண்ணங்களும் கவலைகளும் உன்னைவிட்டு அகன்றுவிடும் போலத்தோற்றுகிறது. எனக்குத் தெரிந்தமட்டும், நான் உன் கண்முன்னிருக்கும் வரையில்தான், உனது காதலும் அதனாலுண்டாகும் உனது துன்பங்களும் இருக்கும்போலும்?" என்று கேட்டாள் இந்துலேகை.

"இல்லை. நான் அந்த எண்ணத்துடன் சொல்லவில்லை. என் ஆசைப்பொருளாகிய இந்துலேகையை யான்பெற்று அவளுடன் என் வாழ்நாளை சுகமே கழிக்காவிட்டால், என் வீடும் என் நாடும் எனக்கொருவித இன்பத்தையும் தாரா என்பதே எனது எண்ணம்" என்று கூறினான் மாதவன்.

"நீ என்மீது எவ்வளவு காதல்கொண்டிருந்தபோதிலும், நான் உன்மீது காதல்கொள்ளாது உன்னை அலக்ஷியஞ் செய்தால்கூட, அப்போதும் என் மீதி

ருக்கும் உன்னுடைய காதல் மாறுதலடையாதிருக்குமா?'' என்றுகேட்டாள் இந்துலேகை.

"இந்துலேகை! என்மீது உனக்கு ஏதோ கொஞ்சம் ஆசை இருக்கிறதென்றே நான் எண்ணுகிறேன்" என்றான் மாதவன்.

"இன்னும் என்ன உனது கவலை'' என்றாள் இந்துலேகை.

"அது உனக்குத் தெரியவேண்டுமோ?" என்று கேட்டான் மாதவன்.

"ஆமாம், சொல்."

"நான் சொல்லுகிறேன், கேள். எனது மனக்கவலைக்குக் காரணங்கள் இரண்டுண்டு. ஒன்று, உத்தியோகத்தினாலாவது, செல்வத்தினாலாவது, புகழினாலாவது நான் சிறந்தவனல்லன். இரண்டு, இந்நாட்டில் இராஜாங்கத்தில் உயர்ந்த பதவி வகித்திருப்பவர்களும், செல்வத்தினால் சிறப்புடையவர்களும், வேறு முகாந்தரங்களினால் சிறப்பும் மேன்மையும் உடைய அநேக பிரபுக்களும், இளவரசர்களும், அரசர்களும் உனது ரூபலாவண்ணியத்தைக் கண்டு மதிமயங்கிக் கிடக்கின்றனர்'' என்றான் மாதவன்.

"மாதவா, நான் உன்னை இவ்வளவு மதிகெட்டவனென்று இதுவரைக்கும் நினைக்கவேயில்லை. நான் இராஜ குமாரர்களையாவது அல்லது இந்நாட்டிலுள்ள வேறெந்த பிரபுக்களையாவது மணம் புரிய இஷ்டப்பட்டிருந்தால், எப்போதே அவர்களை என் கணவராக்கிக்கொண்டிருப்பேன். அந்த எண்ணத்தை என் மனதில் நான் வைத்திருந்தால் இதுவரைக்கும் நான் மணம் புரியாதிருப்பேனென்று எண்ணுகிறாயா? இவ்வளவு பைத்தியக்காரத்தனமான வார்த்தை உன் வாயினின்று வெளிப்பட்டதைப்பற்றி நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன். இதைப்போன்ற விஷயங்களில் எனக்குப் பணமும், உயர்பதவியும் துரும்புக்குச் சமானம். என் காதல் எவன்மீது செல்கிறதோ அவனைத்தவிர வேறு எவரையும் நான் கலியாணம் பண்ணிக்கொள்ளேன்'' என்று பதில் சொன்னாள் இந்துலேகை.

"நீ யாரையாவது உன் மனதில் வரித்திருக்கின்றாயோ?'' என்று கேட்டான் மாதவன்.

"சுத்த புத்தியீனனாகிய மாதவா? நான் யாரையாவது என் மனதில் வரித்திருந்தால் உனக்கேன் அதைப்பற்றிச் சொல்லவேண்டும்?'' என்றாள் இந்துலேகை.

"என்னை ஏன் இவ்வாறு தூஷிக்கிறாய்? இதுகூட அவசியமா?" என்று வாதடினான் மாதவன்.

"போதும், போதும், நிறுத்து. மாதவா! உனக்கு வரும் ரோஷம் மிகவும் ஆச்சரியமாயிருக்கின்றது! இந்துலேகை உன்மீது காதல் கொண்டிருக்கிறாளெனக் கருதிய நீ அந்த இந்துலேகை அவளழகில் மயங்கிய பிரபுக்களையாவது அரசர்களையாவது மணம் புரிந்து அவளது உண்மையான காதலுக்கும் பெருமைக்கும் துரோகஞ்செய்வாளெனப் பின்னும் கருதினையோ? ஓ, மாதவா! மாதவா! நீ என்ன கண்மூடி! நீ என்ன மூடாத்மா! இந்துலேகை இவ்வளவு துரோகியெனவும் இவ்வளவு இழிந்தவளெனவுங் கருதிய பிறகும் அவளிடத்திலிருந்த உனதாசை எப்படி அகலாதிருந்தது!'' என்றாள் இந்துலேகை.

இம்மொழிகளைக்கேட்ட மாதவனது கண்களில் கங்காபவானி தாண்டவமாடினாள். இக்கண்ணீர் குதூகலத்தினால் உண்டாயினதோ, அல்லது கர்வத்தினால் உண்டாயினதோ? அல்லது நாணத்தினால் உண்டாயினதோ? என்பதை இக்கதையைப் படிப்பவர்களே அறிந்து கொள்வார்கள்.

"மாதவா, ஏன் கண்ணீர் வடிக்கிறாய்? என் கேள்விக்கு மறுமொழி சொல்ல முடியாததன் காரணமாகவா?" என்று கேட்டாள் இந்துலேகை.

"உன் கேள்விக்கு மறுமொழி சொல்ல முடியாததனாலல்ல, நான் மௌனமாயிருக்கிறேன். உன்னுடன் வாதாடுவதில் எனக்கு ஒரு சந்தோஷமுமில்லையென அடிக்கடிச் சொல்லியிருக்கின்றேன். இந்துலேகை, நான் இங்கே மூடத்தனமாய் வந்தேன். நான் வந்தது முதற்கொண்டு என்னிடம் நீ இனிப்பும் மதுரமுமான ஒரு வார்த்தையுஞ் சொன்னாய் இல்லை. புருஷர்களுடன் இம்மாதிரியெல்லாம் விளையாடி அவர்களை வதைப்பதில் மலையாள நாட்டுப் பெண்களுக்குள்ள சுதந்தரங்களினாலும் காலவசதிகளினாலும் புருஷர்களாகிய நாங்கள் படும் அவஸ்தை, ஆயிரம் நாவைப்படைத்த ஆதிசேஷனாலு மெடுத்துரைப்பதரிதென்பது உண்மையே'' என்றான் மாதவன்.

"என் வார்த்தைகளை எப்படி யான் இனிப்பாக்குவது? முதலில் கொஞ்சம் தேனைப் பருகிவிட்டு அப்புறம் பேசட்டுமா? அல்லது, நான் பேசும்போது நீ தேனைப்பருகுகிறாயா? அப்போது என் வார்த்தைகள் மதுரமாயிருக்கும்போலும். நீ சுத்த மூடத்தனமாய்ப்பேசினாய். உன் வார்த்தைகளுக்குத் தக்க மறுமொழி நான் கூறியபோது, அது

உனக்கு இனிப்பாயிராமல் கசப்பாயிருக்கிறதென்கின்றாய்? இதிருக்கட்டும், நீ ஏன் மலையாளநாட்டுப் பெண்களைத் தூற்றுகிறாய்? அவர்கள் புருஷர்களை வாட்டுவதில் அதிக சுதந்தரங்களுடையவர்களென அவர்களைத் தூற்றினாயே, அப்படித் தூற்றினதில் உனது கருத்தென்ன?'' என்றுகேட்டாள் இந்துலேகை.

"இவ்வளவுதானா அவர்களைப்பற்றி. மற்ற நாட்டுப் பெண்களிடத்திருக்கும் நற்குணமாகிய கற்புஎன்பது மலையாள நாட்டுப்பெண்களிடம் இல்லவே இல்லை. மலையாளத்தில் மாதர்கள் ஒரு கணவனை கல்யாணஞ் செய்துகொண்டபின் அவன்மீது ஆசை குறைந்தால், அவனைத் தள்ளிவிட்டு வேறொருவனை மணம் புரிவதிலும், இதைப்போன்ற இன்னுஞ்சில விஷயங்களிலும், அவர்களிஷ்டப்படி நடக்க சர்வசுதந்திரம் உடையவர்களாயிருக்கிறார்கள். இதனால்தான் நம் மலையாளநாட்டு ஸ்திரீகள் கொஞ்சங் கர்வமுடையவர்களாயிருக்கிறார்கள். இதுதான் நான் சொன்னது'' என்றான் மாதவன்.

"பலே பேஷ்! நீ சொல்வது மிகவும் அழகாயிருக்கிறது. நீ கல்வி கேள்விகளிற் சிறந்தவனாயிருந்தும், இதுதானா மலையாள ஸ்திரீகளைப்பற்றி உனது அபிப்பிராயம்? அப்படியா! எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது.'' என்றாள் இந்துலேகை.

மாதவன், 'மலையாளத்தில் மாதர்களிடம் கற்பு என்னும் நற்குணம் இல்லை' என்று என்ன கருத்துடன் சொன்னான் என்பதை, நாம் நம் கதையைச் சிறிது நிறுத்திவிட்டு யோசிக்கலாம். மாதவன்கூறிய இம்மொழிகள் மிகவும் கடோரமானவையே. ஏனென்றால், அயல் நாடுகளில் போலவே, மலையாள நாட்டிலும் பதிவிரதாதர்மத்தை அனுசரிப்பவர்கள் அநேகம் பேர் இருக்கிறார்கள். தன் கொள்கைகளை வெளிப்படுத்தக்கூடிய எந்த ஸ்திரியாவது இவ்விஷயத்தைப்பற்றி வாதஞ்செய்வாளாயின், அவளது மொழிகள் அனேகமாய்ப் பின் வருமாறு அமையும்.

"ஒரு ஸ்திரீ விவாகபந்தத்தை அற்பமாய்க் கருதுகிறாளென்று சொல்வது அவளை வியபசாரியென்றே சொல்வதாகும். அப்படியானால் இம்மலையாள நாட்டிலுள்ள எல்லா ஸ்திரீகளுமாவது, அல்லது இவர்களில் அநேக பேர்களாவது வியபசாரிகள் என்னுங் கருத்துடன் சொன்னானா மாதவன்? அவன் அப்படிச் சொல்லியிருந்தால், என்மட்டும் நான் அவனை நம்பமாட்டேன். நாயர்மாராகிய நாங்கள், பிராமணர்களைப்போல அந்நிய புருஷர்களுடன் ஸ்திரீகளைப் பேசவொட்டாமல் தடுத்தும், அவர்களுக்குக் கல்வியறிவையே ஊட்டாமலும், கேவலம் மிருகஜாதியைப்போல் ஸ்திரீ ஜாதியை நடத்தாமலிருக்குங் காரணத்தினால், அவன் நாங்கள் வியபசாரத்துக்கு இடங் கொடுக்கிறோம் என்று அபிப்பிராயங் கொண்டிருந்தால், இதைவிடத் தவறான அபிப்பிராயம் வேறொன்றுமில்லை. புருஷர்களுக்கு எவ்வளவு சுதந்தரங்களும் படிப்பும் இருக்கிறதோ, அவ்வளவு சுதந்தரங்களையும் படிப்பையும் உடைய ஸ்திரீகளிருக்கும் ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களைப் பார்! இந்த ஸ்திரீகளெல்லாம் வியபிசாரிகளாயிருக்கிறார்களா? அந்நாடுகளில், கல்வி கேள்விகளிற் சிறந்த அழகிய ஸ்திரிகள் புருஷர்களிருக்குமிடத்தில் தாராளமாய்ப் போய்வந்துகொண்டும், அவர்களுடன் தாராளமாய்ச் சம்பாஷித்துக்கொண்டும் இருப்பதனால், அப்புருஷர்களுக்கும் இந்த ஸ்திரீகளுக்கும் சிநேகப் பான்மையைவிட அதிகமான சம்பந்தமிருக்கிறதெனக் கூறி விடலாமா? சங்கீதத்தில் தேர்ச்சியுடைய ஒரு ஸ்திரீயின் பாட்டைக் கேட்கப்போகும் மனிதர்களை வேறுவிதமான துர் எண்ணத்துடன் போகிறார்களென்று சொல்லிவிடலாமா?

(தொடரும்)

நியாயாதிபதியின் கடமைகள்.—ஒருவனை தூஷிப்பது மிகவும் எளிது. அவனுடைய ஸ்நேஹிதர்கள் அவன் குற்றத்தை மறைத்து வாதாடுகிறார்கள். அவன் சத்துருக்கள் அவன் குற்றத்தை அதிகரித்தே பேசுவார்கள். நியாயாதிபதி தனது காதில் நேரில் ஒரு விதமாக ஒரு சமாசாரத்தைக் கேட்டும் அதைச் சரியென்று நம்பிவிடக்கூடாது. ஆதலால் முற்கூறப்பட்ட தூஷணை உண்மைதானா என்று கண்டுபிடிப்பது மிகவும் அரிது. அப்படி தாம் செய்யப் பிசகினால் உலக நிந்தை தமது தலையின் வருவது நிச்சயம். நியாயஸ்தலத்தில் வந்து உட்காரும் நியாயாதிபதி, படித்தவனாகமட்டு மிருந்தாற் போதாது. அமரிக்கையுள்ளவனாகவும், கோபம் என்பதே இல்லாதவனாகவும், சமபுத்தியுள்ள தர்மிஷ்டனாகவும் இருக்கவேண்டும். தீர்ப்பைச் செம்மையாய் ஆலோசித்துச் சொல்லுகிறவனாக இருக்கவேண்டும். பலமற்றவர்களுக்கு ஒரு பிடிப்பாகவும், துஷ்டர்களுக்கு ஒரு சர்ப்பமாகவுமிருக்கவேண்டும். உண்மை, நியாயம், இவைகளைத்தவிர மற்றொரு விஷயத்திலும் தன் மனதைச் செலுத்தாதவனாக நியாயாதிபதி இருக்கவேண்டும்.

சிறுவர்க்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

ஸித்தர்கள்.—இக்கலிகாலத்திலும் ஸித்தர்கள் இல்லாமலே போகவில்லை. சென்ற பௌர்ணிமா (ஐப்பசி பௌர்ணிமா) அன்று தேவகிரி என்னும் ஊரில் ஸித்தர் ஒருவர் ஓர் அற்புதச்செயலைச் செய்தார். இந்தத் தேவகிரிக்கருகாமையில் ஸௌந்தரபந்து (அதாவது அழகிய தடாகம் என்று பொருள்) என்ற ஓர் இடம் இருக்கிறது. அது ஸாலமரங்கள் நிறைந்த காடாகவிருந்தது. இப்பொழுதுதான் அது திருத்தப்பெற்றுச் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதில் இங்கும் அங்கும் சிற்சில மரங்கள் இன்னும் நிற்கின்றன. இந்தவிடம் தேடி முற்கூறிய ஸித்தராகிய பவானந்த ஸ்வாமி என்பவர் பௌர்ணிமாவன்று வந்தார். அங்கு 8-அடி சதுரம், 6-அடி ஆழம் உள்ள ஓர் குழிபறிக்கும்படி செய்து அதனுள் அடிமறையும்படியாகப் பலகைகளைப் பரப்பி அதில் வியாக்ரசர்மம் போட்டு ஸ்வாமிகள் உட்கார்ந்தார். தமது தலை தாக்காதவண்ணம் பலகைகளால் முதலில் தம்மைமூடி மேல் மண்போட்டு விடும்படி ஏற்பாடு செய்தார். அவருக்கு ஸஹாயமாக இருந்தவர்கள் அவ்வாறே செய்து, அவர் புதைபட்டுக்கிடக்கும் இடம் தெரிவதற்காக 5-அல்லது 6-அங்குலம் உயரமான திண்ணை ஒன்று மேலே செய்து அதில் மஞ்சளால் பூசப்பெற்ற பூர்ணகும்பத்தை வைத்துவிட்டு ஸ்வாமியினிடம் இருந்த பக்தியால் மாறி மாறி அவர்கள் அங்கு ஸாம்பராணி தூபம் போட்டு வந்தனர். சுற்றிலும் கமகம என்று வாஸனை பரவியது. ஆனால் அது உட்செல்ல இடமே இல்லை.

முதலில் ஸ்வாமிகள் ஒருவருக்கும் சொல்லாது ரகஸியமாக இவ்வாறு செய்துவிட்டபோதிலும், இந்த ஸங்கதி பின்னர் எங்கும் பரவியது. மேலும் இவர் கிருஷ்ண துவாதசியன்று வெளி வந்துவிடப்போகிறார் என்றும் எல்லோருக்கும் தெரிய வந்தது. தெய்வபக்திபுடைய ஜனங்கள் அனேகர் ஸ்வாமிகள் புதைந்துகிடப்பதையும், அவர் வெளி வருவதை தரிசித்து கிருதார்த்தராக அங்கு கூட்டக்கூட்டமாக வரத் தலைப்பட்டனர். இந்த ஸங்கதியை பத்திரிகையில் போட்டு வெளிப்படுத்தியவரும் போயிருந்தார். அவர் பின்வருமாறு இந்த ஸித்தி வித்தையைப் பற்றி அபிப்பிராயப்படுகிறார்.

'நான் போய் நேரிட ஸ்வாமி புதைந்துகிடந்த இடத்தைப் பார்த்தேன். உள்ளே கொஞ்சம் கூடக் காற்று புகுவதற்கு இடம் இல்லை. வெளிச்சமும் போக இடமில்லை. நான் ஐந்து நிமிஷம் ஸ்வாமியுடன் அவர் இருந்த நிலைமையைப்பற்றி பேசினேன். அவர் பேச்சு என் காதில் நன்றாக விழுந்தது. தாம் அப்பொழுதிருந்த நிலை ஸமாதி நிலையைவிட மேலானதென்று அவர் சொன்னார் ஆதலால் ஸ்வாமிகள் குழியுள் இருக்கிறார் என்றும் அவர் ஸமாதியில் மூழ்கி மெய்ம்மறந்திருக்கவில்லை என்றும் நான் தெரிந்துகொண்டேன். ஆதலால் இவர் அந்தக் குழியுள் இருக்கவேண்டிய 12-நாளும் அன்ன ஆகாரம், வெளிச்சம், நல்லகாற்று, ஒன்றும் இல்லாமல்தான், இருக்கவேண்டும். இது பெரிய அற்புதச் செய்கை. நமது தேச சரித்திரத்தைப்பற்றித் தெரிந்தவர்களுக்கு இதேமாதிரி ஹரிதாஸர் என்ற ஓர் ஸித்தர் ரஞ்சிட்ஸிங் என்ற ஸிக் அரசன் லாஹூரில் அரசாண்ட காலத்தில் 40-நாள் பூமியுள் புதைந்து அன்னாகாரமின்றிக் கிடந்தார் என்பது தெரிந்திருக்கும். அது பவானந்தர் ஸித்திக்குத் தாழ்ந்ததென்றே சொல்லவேண்டும். ஏனெனில் (1) ஹரிதாஸர் ஸமாதியில் மூழ்கி வெளிப்பிரஞ்ஞையே இல்லாதிருந்தார். ஆனால் பவானந்த ஸ்வாமியோ அவ்வாறின்றி ஸகல பிரஞ்ஞையோடு தமது யோக வலிமையால் புதைந்து கிடந்தார். (2) ஹரிதாஸர் தாம் செய்த ஸித்தி மூலமாக ரஞ்சிட்ஸிங்கிடமிருந்து வந்த பண ரூபமான பரிசை அங்கீகரித்தார். இம்மாதிரி பணம் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு பவானந்தர் இவ்வாறு செய்ததாகக் காணப்படவில்லை

'மேலும் பவானந்த ஸ்வாமி 30 வயதுக்கு உட்பட்டவரே. அவர் தாய் இருக்கிறாள். அவர் முதல் பெண்சாதி ஓர் குழந்தையைவிட்டு இறந்துபோக அவர் இரண்டாவது பெண்சாதியும் கல்யாணம் செய்துகொண்டிருக்கிறார்'

முற்கூறியவைகளை உற்றுநோக்கின் பவானந்த ஸ்வாமிகளைப்பற்றி இரண்டொரு கேள்விகள் நம்முன் பிறக்கும். முதலாவது, ஸ்வாமிகள் பணத்தாசையின்றி இந்த ஸித்தியைக் காட்டியபோதிலும் கீர்த்திவேண்டும் என்ற ஆசை அவருக்கில்லை என்பதற்கு தகுந்த காரணங்கள் இல்லை. மேலும் ஸமாதியில் இல்லாது இவருக்கு எவ்வளவு நாள் இவ்வாறு

புதைந்து கிடக்கமுடியும். நமது சாஸ்திரங்களில் ஸித்திகளை அவாந்திரபலன் என்றும் ஆத்ம ஸாக்ஷாத்காரமாகிய மோக்ஷத்தையே மனிதன் ஆசைபட்டு அடைய முயலவேண்டும் என்றும், மோக்ஷமார்க்கத்தில் முற்கூறியவைபோன்ற ஸித்திகள் தடையாக இருக்கும் என்றும், ஆதலால் அவைகளை நாம் ஒருபொருட்டாக எண்ணக் கூடாதென்றும் கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் நமது யோகவிஷயங்களில் அவநம்பிக்கை மிகுந்த காலத்தில், முற்கூறிய ஸித்திவித்தைகள் எவ்வளவு யோகத்தின் பலத்தைக் காட்டியபோதிலும் நாம் அவைகளைக்கண்டு வியந்து அவைகளே மனித ஜன்மத்தின் முடிவு என்று எண்ணித் தயங்கி நின்றுவிடக்கூடாது. மேன்மை அடையவேண்டும் என்ற ஆவலுடைய புத்திமான்கள் அவைகளை நெல்விதைத்தால் அதிலிருந்து உண்டாகும் வைக்கோல், பதர் முதலியவைகளுக்கு ஸமானமே யொழிய அவை தானிய மணிகளைப் போன்றதாயுள்ள மோக்ஷத்திற்கு ஈடல்ல என்று தெரிந்து நடந்து கொளள்வேண்டும். இந்த ஸந்தர்ப்பத்தில் நாம் பின்வரும் பாடல்களை ஸதாஞாபகத்தில் வைத்திருத்தல் வேண்டும்.

'முனிவர் ஸித்திகள் விநோதம் மாத்திரந்தரு
முத்தியைத் தாரவே'

கைவல்யநவனீதம் ஸந்தேகம் தெளிதற்படலம் 46-ம் பாட்டு.

'சினமிறக்கக் கற்றாலும் ஸித்தி எல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே'

தாயுமானவர் பராபரக்கண்ணி 169-ம் கண்ணி.

* *
*

"யுலிஸ்ஸிஸ்":—(மொழிபெயர்ப்பு-ஆசிரியப்பா.)

புல்வள மற்றவிப் பாறைகள் சூழ்ந்தவிவ்
வில்வழி நற்றெழி லொன்றுமில் லரசனாய்
ஆயுண் மூத்த அரிவையோ டமைதிசேர்
ஆயுள் வாழ்ந்து அடைபொருள் ஈட்டலும்
துஞ்சலு முண்ணலும் தொலையாராகி
எஞ்சவி லென்மனம் என்று முணரா,
நாகரீகம் அடைந்திலா இந்நார்க்
கேக மற்ற விதிகளை யுன்னி
விதித்திருத்தல் வீண்டொழில் வீண்டொழில்

சஞ்சரித் தல்லது சும்மா விரேன்யான்
ஆயுளீயு மனுபவ மெல்லாம்
காயம் போம்வரைக் காணுவல் பற்பல
நாள்க ளெல்லாம், நேயர்க ணடுவிலும்,
தோள்க ளேதுணை யாகவும், வாருதி
அங்கரை மீதிலும் அணிமழை யாற்கடல்
பொங்கும் வேலையும், புளகமென், துக்கமென்,
கண்டுளேன் என்பெயர் காசினிப் போந்தது
மண்டுமோர் மனனுடன் மண்மிசைச்சென்று

கண்டது முணர்ந்ததுங் கணக்கிட லரிதே.
பல்வகை மன்பதை வாழுமா நகரமும்
பல்வகைத் தேயமுஞ் சங்கமு மரசும்
பார்வை யிட்டுளேன், பண்பு பெற்றுளேன்
ஆர்வமோடுள அன்பரோ டாயிடைக்
கால்வளர் ட்ராய்பெருங் கானிடை பூசலின்
மேல்வளர் களிமிக முகந்து பருகினேன்.
பழகிய பல்வகைப் பொருள்களின் ஒவ்வோர்
அழகிய பாகமே அடைந்துளேன் யானும்
ஆயினு மனுபவ மென்பதோர் குகைவழி
வாயிடைத் தோன்றும் வளமிகு முலகெலாம்

செல்லச் செல்லச் சென்றிடு மதனடி
மெல்ல இருத்தலே மேன்மையென் றுன்னி,
உயிர்முடி வடைவான் உட்கார்ந் திருத்தல்
பயனில தந்தோ! பளிச்செனத் திகழாத்
தூசி மூடத் தூங்குத லிழிவே.
ஆசி லாயுள் அநேகம் பெறினும்
அத்தனைப் பொழுதும் அங்கைய தளவே
நம்முடை யாயுளில் நிற்பது மற்பமே
ஆயினும் உழைப்பால் அச்சிறு வேளையைப்

போயெடுத் தடைந்து பயன்பெரு வேம்யாம்.
மனமதற் கெட்டா மாண்பொடு விளங்கி,
இன்னென வொளிரு மறிவினை யடைவான்
என்றும் விரும்பும் இதய மிருக்கத்
துன்றுஞ் சின்னாள் தூங்கல் இழிவே.
இங்குள னென்மகன் இனிய டெலாமகன்
செங்கோ லவற்கே கொடுப்பனித் தீவுடை
என்மனத் தன்பன் இத்தொழில் முற்றும்
தன்மனத் துணர்வோன் தகைமையில் குடிகளைச்
சிறிது சிறிதாய் உயர்த்தியம் முடிவினில்

பெருமை கொள்ளப் பெருக்குநற் குணவான்.
கடமைகள் பலவுங் கழிகிலாதியற்றி
நடலை யகற்றி நன்மனங் கொண்டு
யாகைன் றாலுமென் னில்வதி கடவுளர்க்
கான்வந்தனை யன்புட னளிப்பான்

அவன்தொழில் அவன்செய்வான் யானு மதுவே
உவந்துறை புள்ளது ஓங்கு நாவாய்
கவன்று தன்பாயைக் காற்றூடு விரிக்குமால்.
பரந்து கறுத்த பரவையும் அதோபார்!
சிறந்தவென் மானுமிச் செல்வர்காள்! என்னொடு

முயன்றுங் கவன்றும் முந்திய வீரர்காள்
அஞ்சுத லகற்றி அசனியும் வெயிலையும்,
எஞ்சலின் மனத்தொடு மிகழ்ந்து நகைத்துளீர்
நீரும் யானும் நேர்ந்தோம் மூப்பை.
வாரும் அஞ்சன் மின் வயோதிக மின்னும்
பெருமையும் பாடும் பெறுவது திண்ணம்.
மரணம் நம்மை மறைப்பது திண்ணமேல்
வருவதன் முன்னர் வண்மையாய் ஒரு தொழில்
வகையுடன் செய்வோம் வானவர் குழுவுடன்

இகல் செயலுற்றவர் இன்றே யாமும்.
பாறைகள் மீது பலவொளி பிறங்கும்.
நீண்டநாளும் சேர்ந்த தந்தியை
ஈண்டுச் சோமனும் ஏறுமென் கதியுடன்.
ஆழியும் பற்பல அரவமோ டெம்புர.
சூழுமின் நண்பர்காள் சொல்லுவன் கேண்மின்!
இன்னும் வேற்றுலகம் அடைந்திட இன்றைற,
நன்கு மூத்துளேம் என்று நினையன்மின்.
சென்மினேருடன் வங்கமிருந்து
தொனி மிகு திரைகளைத் துடுப்பாலோட்டுமின்
ஏனெனில் யானும் என்று மறைவதற்

கப்புறம் தாரகை ஆழ்ந்துள இடஞ்செல
உப்புமீது மிளாழி வரையுமே ஊர்வல்
வாருதி எம்மை வதைப்பினும் வதைக்கும்
சிறாளிர் தீவிடைச் சேரினுஞ் சேருவோம்
நண்பன் அக்கிலிஸ் நாடினும் நாடுவோம்
திண்வலி மிக்குத் தொலைந்ததேயாயினும்
எஞ்சிய தின்னும் எளிதிலை முன்னர்
விஞ்சையர் ஊரையும் விரிந்த மண்ணையும்
நிலை பெயர்த்துள்ள வலியிலே மாயினும்
நிலைத்துள தின்றும் நம்மிடத்துள்ளது.

கலங்கா நெஞ்சக் காவலர் யாமெலாம்
விலங்கலின் விதியினும் வளர்ந்த நாளினும்
வலி யிழந்துளேம் எனினும் நன்மனவலி
நண்ணி, ஊக்கி, நாடிய தடைந்து
விளங்கு வதன்றி, வீரமற் றுள்ளம்
துளங்கோம், வணங்கோம், துகளிலாத் தோழரே!

சு. நரசிம்மாசாரியன்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

கண்ணகி அல்லது பத்தினிக்கடவுள்

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணமாற்—றெய்வ
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி [மாய்
விண்ணக மாதர்க்கு விருந்து.

சிலப்பதிகாரம்.

தன் கணவனது மனங்கோணாது, அவனுக்கு வேண்டியவை எல்லாம், எக்காலத்திலும், எவ்விடத்திலும், எவ்வமயத்திலும் இடைவிடாது நடக்கும் பெண் ஒருவளே உலகு முழுவதும் இன்பமும் துன்பமு மூட்டுபவள். அவளிடத்து நீதியில்லா நடத்தைசெய்ய நினைப்பவர் துன்பமுறுவர். தாம் யோசியாதாவது, அல்லது தெரியாமையாலாவது செய்திடினும் தேவைஇல்லை. துன்பமுறுவ ரென்பதற்கு ஸந்தேகமொன்றுங் கிடையாது. அவரது நடத்தையைச் சிறப்பித்து அவர் குணங்களை மணக்கச் செய்பவர் நலமடையாமல் இருக்கமுடியாது. ஆகையினாலே நன்னடத்தையும் நற்குணமுங் கலந்த பெண்ணொருவளே உலகைக்காத்துத் தாங்கி விளங்கச் செய்யும் வல்லமையுடையாள் என்று கொள்ளவேண்டியதாகி வருகிறது. அவரது குணவிசேஷங்கள் கொடியவரை மடியச்செய்து, நல்லவர்களை நலமுறச் செய்யும் தகைமை உடையனவாகையால் அவர்களை தெய்வீகத்தன்மை உடையார்களாகக் கொள்ளும்படியாகச் செய்கிறது. அவரது நன்னடத்தையும், தன்னை மறுத்து எல்லாவற்றையும் கணவற்கு அளிக்கும் அன்பின் ஓட்டமும் அவரை யாவராலும் தடுக்க முடியாமலிருக்கச் செய்துவிடுகிறது. அவர்க்கு யாவரேனும் கொடியது சூழினும் சூழ்பவனை தெய்வமும் காத்திடல் முடியாது போகும். ஆகையால் கடவுளினது ஆஞ்ஞையும் அவரது நடத்தை என்னுமட்டத்துள் சிக்கிவிடுகின்றது. அத்தகைய வல்லமையுடையப் பெண்டிர் கடவுட்டன்மையுற்றவரென்று நாம் சொல்லாமல் வெளிப்படை என்பதற்கோர் ஐயமுமில்லை. அந்நிலைமையை யுற்று எப்பெண்டிர் தன் கணவன் தனக்குத் துன்பமுறும்படி செய்திடினும் அவர்க்கு அன்பெ

ன்னும் அமுதம் ஊட்டி தனது நன்னடக்கை ஆதரவு கண்ணோட்டம் இவைகளால் உபசரிக்கின்றனளோ அவளை பத்தினிக்கடவுள் என்னல் இழுக்கு ஆகாது. அத்தகையாள் கண்ணகி. அவள் சரிதை மேல் வருமாறு.

1. மதுரைப்புகுந்த காதை

சோழ நாட்டரசரில் பெரியவனும் பெயர் பெற்றவனுமாகிய சோழன்கரிகாலன் நன்னெறி தவறாது ஆண்டுவந்த நகரம், அது புகார் என்னும் பெயர் பூண்ட காவிரிப்பூம்பட்டிணம். அவ்வூரில், வணிகரது மரபில், சோழன் கரிகாலன் ஆண்டகாலத்து, பெருங்குடியாருள் தோன்றியவன் கோவலன், இவன் மாசாத்துவான் மகன். செல்வத்துள் சிறந்தவன். தன் தகப்பனாரால் தன் குலத்திலேயே யுதித்த மாநாயகன் என்பவனது மகளாகிய கண்ணகி என்பவளை மணம் புரிவிக்கப்பெற்றனன். அவளோடு சிலநாள் நன்றாக வாழ்ந்தான். நடுவில் கூடக்கூடாதவரோடு கலந்து மாதவி என்னும் பொது மகளிடத்து காமங்கொண்டு அவளை இடைவிடாது கூடிக் குலாவி நின்றான்.

மகளிருக்குத் தன் கணவன் தம்மைக் கண்ணெடுத்துப் பாராவிட்டாலும் அவன்மேலிருக்கும் ஆசை ஓயாது. அது வரவர காணமலே வளரும். அது அவருக்கும் தெரியாமல் ஓங்கி வளரும். இது நன்னடத்தையுடைய பெண்ணின் குணம். தன் கணவன் ஸுகமடைய வேண்டுமென்பதொன்றே அவர் கவலை. அவர் எவ்விடத்து ஸுகமடையினும் தமக்கொன்றும் குறைவு இல்லை என்றுதான் எண்ணுவர். அவர் ஸுகத்தை எவ்வாறு விருத்தி செய்யலாமென்பதே அவருக்குக் கருத்து. ஒருநாளானந்தம் மறுநாள் வெறுப்பென்பதவரிடத்தே நிலைபெறாது. என்றும் தம் கணவர் மேலென்பதே அழியாதொழுகும். கணவர் கொடிய வழியுள் சென்றிட்டாலும் தமது நன்னடக்கையாலே அவர் மனதை உருகச்செய்துக் கொள்வார். இத்தகையக் காலம் என்று கிட்டும் என்று காத்திருப்பார். அது அவர் காக்கும் நோம்பின் பலன்போலாகும்.

இத்தகைய ஸமயம் கண்ணகிக்கும் வாய்த்தது. நமதரசராகிய முன்னோர் காலம் இக்காலம்போலன்று. அன்றிருந்த விழாக்களும் வழக்கங்களும் இக்காலத்திலில்லை. அவரவரது ஆர்வமும் பெருமையும் தவிர மற்றொன்றும் இன்று நிலைநிலைது... தமிழரசர்கள் தென் இந்தியாவை ஆண்ட நாள் சென்று ஆயிரம் வருஷங்களோடி ஒளித்துவிட்டன. அவர் காலத்துதித்த கண்ணகி வாழ்ந்த நாள் இன்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு வருடங்களிருக்கலாம். அவளது காலத்தில் இந்திய நாட்டில் ஆரியரும் திராவிடரும் தவிர வேறெவரும் இந்திய தேசத்திலிருக்கவில்லை. அக்காலத்து கூத்துங்குரவையும் இக்காலத்தெண்ணிலும் காண்பதரிது. இந்திரன் திருவிழாவென ஓர் கொண்டாட்டம் நடத்துவது வழக்கம். இதில் ஆண்பாலரும் பெண்பாலரும்கலந்து கலந்து குதூஹலமாக ஆநந்திப்பது வழக்கம். நாம் இப்பொழுது கொண்டாடும் "போகி பண்டிகை" இதை ஒருவாறு ஒத்திருக்குமென்று சொல்லலாம். இப்பண்டகையில் கோவலனும் மாதவியும் கடலாடச்சென்றார்கள். கடலாடி விளையாடி ஓரிடத்திலிருவரும் அயர்ந்து சற்று நிதானித்தனர். தாம் கொண்டுவந்த வீணையை எடுத்து உல்லாசமாக வாசித்துக்கொண்டிருந்தார்கள். மாதவி வாசித்துக் கொண்டிருந்த வீணையைவாங்கிக்கொண்டு ஒலியிலாழ்ந்து மகிழ்ச்சிக்கொண்டிருந்த கோவலன் இடையே சில அகப்பொருட்பாற்பட்ட பாடல் சிலவற்றை பாடினான். இதனால் மாதவிக்கிவனிடத்து வெறுப்புண்டாகியது. கோவலன் பாலுள்ள வீணையை வாங்கிக்கொண்டு அகப்பொருளிலேயே தானும் பாடினாள். (காசும் பணமும் கணக்கில்லாது மாதவி என்னும் கணிகைக்கு செலவு செய்தவன் கோவலன் என்பது எல்லாருக்கும் தெரிந்தது தான்). அவனுக்குத் தான் இவ்வளவு செல்வத்தை எல்லாம் அழித்து இவள்பால் நாமிருக்க இவளுக்கு யார் மேலோ ஆசை எழும்பி உள்ளது என்று எண்ணி மாதவிபால் இருந்த ஆசையை ஒழித்து முறிந்த மனத்தொடு தன்னில்லம் புகுந்தனன்.

புகுந்ததும் தன் கணவன் ஏதோ கஷ்டமடைந்துள்ளார். அவரை ஆதரித்தல் வேண்டும். அவரது முகம் மலரும்படிச் செய்யவேண்டுமென்ற பேராவல்தூண்ட "என் வருந்துவது. உம்மிடத்து செல்வமில்லையாயின் என் கால்ற்பூண்ட இச்சிலம்பைக் கொண்டுவிற்று ஸுகமடையும்" என்று வணங்கிக் கூறிய மொழிகள் கோவலன் உடலுருவியோடியது. அன்றியும் கோவலன் வந்தபொழுது கண்ணகியிருந்த நிலைமையும் அவள் பிரிவும், அப்பிரிவிலும் தன்னிடத் தொருவெறுப்புங் கொள்ளாத பெண்மணியைத்தன்பெண்டிராகக்கொண்டும் தான்

மாதவி என்னு வஞ்சகிப்பால் வன் சென்றனமென்று தன்னெஞ்சே தன்னைச்சுடக் கோவலன் தனக்கும் தெரியாது கண்ணீர் வடித்தான். "பொருளொன்றே கருதும் பொதுமகளிடத்து பொய்வாழ்க்கைக்கொண்டு பொருள்முற்றும் அழித்தேன். வெறுங்கையனானேன். இனி என்னிலும் கடையன் ஒருவன் உளனோ. என் செய்வது ! வன்விதி ! நாரியர் திலகமாய் விளங்கு முன்னைவிட்டு வாழ்ந்த வாழ்க்கையின் பயன் இவ்வாறாகியதோ—" என்று சொல்லியமொழிகள் கண்ணகியின் மனம்முழுதும் பதைக்கச்செய்தது. "ஆ! உமக்கு மித்துயர் பொருந்துமோ" என்றழுத கண்ணீர் சிந்த, "ஐய! அடியனேன் சொல்லும் மொழி எளியதாயினும் என்னை எளனம் செய்யாது செவி கொடுத்து கேளும்" என்று "எனது காலிற்பூண்ட சிலம்பொன்றே நமது ஏழ்மையையும் தாழ்மையையும் போக்கும். உமக்கேன் இக்கவலை. நாம் மதுரை சென்று சிலம்பை விற்று செல்வங்கொண்டு ஸுகமாய் வாழ்வோம். துக்கமடைவதே" என்றாள் கண்ணகி.

கணவன்பால் கொண்ட அன்பின் பிரவாஹம் உடலிலூற ஆற ஸுகம் துக்கம் என்னுமிரண்டும் போய் ஆனந்தம் ஒன்றே லயிக்கிறது. அதுபோல் கண்ணகிக்கும் சிறுமையொன்று மறியாதமடந்தை இவளுக்கு தன் கணவன்பின் சென்று மதுரையுற்று தானும் தன் கணவனுக வாழவேண்டும். அவன் மனது ஸுகமடையவேண்டும் என்று பட்டுவிட்டது. கோவலனோடு காவிரியாற்றைக்கடந்து மேற்கே வரும்வழியில் இவர்க்குத் துணையாக ஆருக மதத்தினைச் சார்ந்த சன்னியாஸினி ஆகிய கவுந்தியும் இவரோடுகூட மதுரைக்கு வருவதாகச்சொன்னாள். போகும்வழியில் கடுமையில்லாமலிருக்கவில்லை. பலபேர் இவர்களைப்பார்த்து பலவிதம் பேசியதுண்டு. ஓர் பொதுமகள் இவரிருவரையும் பரிகசித்தனர். அவளோடுவந்த நடத்தை குன்றிய மனிதனொருவன் வாய்க்குத் தோன்றியதைச்சொன்னான். இவற்றை எல்லாங்கவனித்துவந்த கவுந்தி அவ்விலைமகளையும், அவ்விடனையும் சபித்து, தம்பதிகளின் வேண்டுகோளுக்கிணங்கி அவ்விருவர்க்கும் மறுசாபமிட்டு விட்டு மூவரும் உறையூர்வந்து சேர்ந்தனர். தங்கினவர் பார்ப்பான் ஒருவன் வழிகாட்ட மதுரை நகரடையப் புறப்பட்டனர். இடைக்கிடைத்த ஜனக்கூட்டங்களின் வழியாக வழிதெரிந்து வையையாற்றைக்கடந்து மதுரை எல்லையைக் கண்டனர்.

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

மத்திய மாகாணங்களில் புல் வளர்ப்பு.—மத்தியமாகாண விவசாய இலாகா அதிகாரிகள், மத்திய மாகாணங்களிலும், பேரார் நாட்டிலும் விளையும் புற்களில் முதல்தரமான புற்களை விற்பனை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு பயிர்செய்ய முயற்சி செய்து வருகிறார்கள். பேரார் நாட்டில் பசும்புல் அதிக விலை விற்கிறபடியால் கால் நடைகளுக்குத் தீனியாகக்கூடிய பசும்புல் லாபகரமாய் வளர்க்கப்படலாமென்று நம்பப்படுகிறது. தற்போது பேரார் நாட்டிலுள்ள அகோலா விவசாயப் பண்ணையில் பரீட்சார்த்தமாயப் பயிர்செய்து பார்க்கிறார்கள்.

* * *

ஐக்கிய மாகாணங்களில் நெசவுத்தொழில் பள்ளிக்கூடங்கள்.—ஐக்கிய மாகாணங்களில் இப்போது 5-அல்லது 6-நெசவுத் தொழில் பள்ளிக்கூடங்கள் விவசாய இலாகாவின் மேற்பார்வைக்கும் அதிகாரத்துக்கும் உட்பட்டு நடந்துவருகின்றன. அந்தப் பள்ளிக்கூடங்களில் நெசவுத் தொழில் கற்றுக்கொண்டு சுமார் 250 பிள்ளைகள் போல வெளிவந்திருக்கிறார்கள். அப்படி அப்பள்ளிக்கூடங்கள் நெசவுத்தொழில் தெரிந்த மாணாக்கர்களை வெளியாக்கிக் கொண்டிருந்தபடியால் அம்மாகாணங்களில் கைத்தறி நெசவுத் தொழிற்சாலைகள் பல இடங்களிலும் ஸ்தாபிப்பது சாத்தியமாயிற்றென்றும், இப்போது அம்மாகாணங்களில் 16- கைத்தறி நெசவுத் தொழிற்சாலைகள் வேலை செய்துவருகின்றனவென்றும் தெரிகிறது.

* * *

மணிலாக் கொட்டைப் பயிர்.—ஐக்கிய மாகாணங்களில் இந்த வருஷம் கவர்ன்மெண்டார் 20-மணங்கு மணிலாக்கொட்டை விதை விற்றார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்நாட்டில் மணிலாக் கொட்டைப் பயிர் செய்யப்படுவதில்லை. இனி மற்ற தானியங்களைப்போல மணிலாக்கொட்டையும் பயிர் செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த மாகாணத்தில் ஜாலான் ஜில்லாவில் நல்ல லாபத்தைத் தரத்தக்க வித்துக்கள் ஒன்றும் பயிர் செய்யப் படுவதில்லையாகையால் மணிலாக்கொட்டை ஏராளமாய்ப் பயிர் செய்யப்படலாமெனப்படுகிறது. இது நிற்க, பர்மாவில் மணிலாக்கொட்டை பயிராகும் நில விஸ்தீரணம் குறைந்துபோயிருப்பதாயும், போன வருஷம் 2,39,552 ஏகர் நிலம் பயிராயிருந்ததாயும், இந்த வருஷம் 1,71,276 ஏகர்கள் தான் பயிராயிருப்பதாயும் சொல்லப்படுகிறது.

ஒரு பெருந்த நன்கொடை.—யுனைடெட் ஸ்டேட்ஸ் தெற்குப் பிரதேசங்களில் "ஹூக்வர்ம்" என்ற வியாதியால் 20 லக்ஷம் ஜனங்கள்வரையில் பீடிக்கப்பட்டு வருந்திவருவதைக்கேட்டு, அமெரிக்காவிலுள்ள பெருத்த கோடீஸ்வரராகிய மிஸ்டர் ராகபெல்லர் இவ்வியாதியை வேர் கல்லும் வழியைத்தேடும் பிரயத்தின விஷயமாக 20 லக்ஷம் டாலர் நன் கொடையாகக் கொடுத்திருப்பதாகத் தெரியவருகிறது. இவ்வியாதியால் எண்ணிறந்த ஜனங்கள் மாண்டு வருகிறதாகவும், இவ்வியாதியால் வருந்தும் ஜனங்களின் தோற்றம் ஏறக்குறைய பெருந்தூக்க வியாதியால் (Sleeping Sickness) பீடிக்கப்பட்டவர்களின் தோற்றத்துக்கு ஒப்ப இருக்கிறதாகவும் தெரியவருகிறது. தற்போது வங்காளத்தில் தோன்றியிருக்கும் "பெரிப் பெரி" நோய் விஷயமாக மிஸ்டர் ராக்பெல்லரைப் போல் திரவிய சகாயம் செய்ய யார் முன் வருவார்களோ தெரியவில்லை. பரோபகாரார்த்தமாகச் செலவழிப்பதே பண மீட்டலின் முக்கிய கருத்தாக இருக்கவேண்டும்.

* * *

சர்க்கரையின் சக்தி.—பிரான்ஸ் தேசத்திலும் அமெரிக்காவில் சில விடங்களிலும் வியாதிஸ்தர் அறைக்குள் சர்க்கரையை எரிப்பதுண்டு. அநேக வைத்தியர்கள் இது மூட நம்பிக்கை யென்றெண்ணுகிறார்கள். பாரிஸ் நகரத்து பாஸ்டர் இன்ஸ்டிட்யூட்டிலிருக்கும் (Pasteur Institute) புரொபஸர் ட்ரில்பர்ட் (Prof. Trilbert) என்பவர் சர்க்கரை எரிவதால் பார்மிக் ஆஸிடும் (Formic Acid) அஸிடிலீன் ஹைட்ரோஜனும் (Acetylene Hydrogen) சேர்ந்த ஒரு கலப்புத்திரவ முண்டாகிறதென்றும் அது விஷக்கிருமிகளை வளரவொட்டாது செய்கிறதென்றும் சொல்லுகிறார். புரொபஸர் ட்ரில்பர்ட் 5-கிரெயின் சர்க்கரையை 10-லிடர் அளவுகொண்ட ஒரு கண்ணாடி மூடிக்குள் போட்டு எரிந்தார். அப்பொழுதுண்டான நீராவியும் வாயுவும் குளிர்ந்ததும் தொத்து வியாதிகளுக்குக் காரணபூதமான பலவித விஷக்கிருமிகளை பரிசோதனைக் குழாயிற்போட்டுத் திறந்தபடியே கண்ணாடி மூடிக்குள் 30-நிமிஷம் வைத்திருந்தார். பிறகு எடுத்துப் பார்த்தபோது ஒரு கிருமியாவது உயிருடனில்லை.

* * *

விஷஜுரம்.—மலேரியா என்னும் விஷஜுரம் அநாபலீஸ் என்னும் ஒருவகைக் கொசுக்கடியால் பரவுகிறதென்று மேஜர் ராஸ் என்பவர் முதல் முதல் கண்டுபிடித்தாரென்று தற்கால சாஸ்திர நிபுணர்களெல்லாம் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் கி. பி. ஆறாவது நூற்றாண்டிற் செய்யப்பட்ட சிங்காளி வைத்திய நூல்களில் 67-வகைக் கொசுக்களிருப்பதாயும் அவற்றால் 424-வித விஷஜுரங்கள் காணுவதாயும் எழுதப்பட்டிருக்கிறது.

பூகம்பம் அறிவிக்கும் கருவி.—இத்தாலியிலுள்ள ஸ்டியேட்டிஸா என்ற ஒரு நிபுணர், பூகம்பம் உண்டாவதற்கு 10 மணிக்கு முன்னமே பின்வரும் அதிர்ச்சியை அறிவிக்கும் தன்மைபொருந்திய ஒரு கருவியைக் கண்டுபிடித்திருப்பதாக அறிய யாவரும் சந்தோஷப்படுவார்கள் என்பதிற் சந்தேகமில்லை. பிளாரன்ஸ், வெனிஸ், ட்ரீஸ்ட்முதலிய இடங்களில் இக்கருவியைப் பரிசோதனை செய்து பார்த்ததில் இது சரியாகவே அறிவித்ததாம். இவ்வளவு காலமாக நமது பத்திரிகைகள் மூலமாய் நாம் கேள்விப்பட்டுவரும் பூகம்பத்தாலுண்டாகிய மரணங்கள் இந்த முன்னறிவிக்கும் பூகம்பமாணியால் துர்லபமாகும் என்று எண்ணுவதற்கிடமுண்டு.

புத்தக வரவு

BOOKS RECEIVED

1. துரைத்தனவிளக்கம்*.—ம-ா-ா-ஸ்ரீ T. S. சுப்பிரமணிய அய்யர் M. A. L. T. அவர்களால் இனிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. எலிமெண்டரி பாடசாலைகளுக்கு மிகவும் உபயோகமானது. அநேகம் சித்திரப் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. விலை ரூ 1 0 0

2. சந்திரகாந்தா. * —ஓர் துப்பறியும் நாவல். ராஜாம்பாள் நாவலை எழுதிய ம-ா-ா-ஸ்ரீ, J. R. ரங்கராஜு அவர்களால் எழுதப்பட்டது. விலை ரூ. 0 12 0.

நமது சந்தாதாரர்களுக்கு

இப்பவும் சென்ற 16-மாத காலமாய் ஒழுங்காக 25௳ பிரசுரமாகும் நமது "விவேக போதினி" பத்திரிகை, 1910௵ ஜனவரிமீ முதற்கொண்டு, பிரதிமாதமும் முதல் தேதியிலேயே பிரசுரமாகும். டிஸம்பர்மாதத்திய பத்திரிகை, அந்தமீ 15௳ நமது சந்தாதார்களுக்கு அனுப்பப்படும். ஜனவரிமாதப் பத்திரிகை அந்தமீ முதல்தேதி யனுப்பப்படும். எந்த சந்தாதாரர்க்கு பத்திரிகை ஒழுங்காய் கிடைக்கவில்லையோ, அவர்கள் தயவுசெய்து நமது ஆபிஸுக்குத் தெரிவித்துக்கொள்ளவும்.

நமது ஆபீசில் தமிழ்ப்புத்தகங்கள் விலைக்கு அகப்படும். பத்திரிகை சந்தாதாரர்களுக்கு மாத்திரமே நமது சொந்தப் பதிப்பு புத்தகங்கள் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"விவேக போதினி"
மைலாப்பூர், மதராஸ்.

* இப்புத்தகம் வேண்டுவோர் 'விவேக போதினி' மானேஜருக்கு எழுதிக்கொள்ளலாம்.

மிகவும் அருமையான தமிழ் நாவல்கள்.

ஆனந்தமடம்: தேசபக்தி புகட்டும் ஓர் அருமையான நாவல்—இந்த நாவலும் ஸ்ரீ பங்கிம் சந்திரசட்டர்ஜி பங்காளி பாஷையில் எழுதியதை ஸ்ரீ மஹேசகுமாரசர்மா அவர்கள் மொழிபெயர்த்தது. ...	0	8	0
போஜசரித்திரம்—2-ம் பதிப்பு. மனதை கவரக்கூடிய 16-ஆப்டோன் படங்கள் சேர்த்திருக்கிறது. ம-ா-ா-ஸ்ரீ ஹைகோர்ட்டு வக்கீல் T. S. நாராயண சாஸ்திரியார் இயற்றியது—ரொம்பவும் நன்ருய் அச்சிடப்பட்டிருக்கிறது.	1	8	0
மதிகெட்ட மனைவி ...	1	0	0
தீனதயாளு ...	0	12	0
ஸ்ரீ மாமிகொலுவிருக்கை ...	0	8	0
தலையணை மந்திரோபதேசம் 3-ம் பதிப்பு	0	8	0
வேணீ ஸம்ஹாரம் ...	0	3	0
மிருச்சகடி ...	0	4	0
முத்திராராக்ஷஸம் ...	0	4	0
லீலாவதி ஸுலோசனு	0	12	0
இரண்டு நண்பர்கள்	0	12	0
மனோஹரன்	0	12	0
கள்வர் தலைவன்	0	8	0
சாரங்கதரன்	0	8	0
சத்ருஜித்	0	12	0
யயாதி	0	8	0
வேதாள உலோகம்	0	8	0
அமலாதித்யன்	1	0	0
காதலர் கண்கள்	0	12	0

(லீலாவதி ஸுலோசனு முதல் காதலர் கண்கள் வரை: ம-ா-ா-ஸ்ரீ, ஹைகோர்ட் வக்கீல் பி. சம்பந்த முதலியார் இயற்றியவை.)

வாஸந்திகா ஒரு தமிழ்நாடகம் ...	0	8	0
வெனிஸ்வர்த்தகன்	1	0	0
கற்புக்கரசி	0	8	0
குணமாலிகை அல்லது கற்பின் வன்மை	0	6	0
கனகவல்லி	1	0	0
கமலினிகலஹம்ஸம்	0	8	0
எலேன்	0	6	0
வசீகரி	1	0	0
ஞானரஞ்சனி	0	8	0
ஸுஜாதா	0	8	0
லலிதாங்கி	0	8	0
வனஸுதா	0	8	0
ஸலிதா	0	10	0
தமயந்தி	0	9	0
ஞானம்பாள்	0	6	0
மங்களாம்பாள்	0	8	0
பேயல்ல பெண்மணியே	0	8	0
சுகுணங்கதன்	0	12	0
பாவலர் விருந்து	0	8	0
வில்லிபுத்தூரார்; பிள்ளை பெருமாள் சரித்திரச் சுருக்கம்	0	8	0
மதிவாணன்	0	8	0
வால்மீகருமாயணம் கிளைக்கதைகள் ...	0	8	0
ஸ்ரீமான். ஜி. சுப்பிரமணிய அயயர் அவர்கள் ஜீவிய சரிதம்	0	8	0
ஸ்ரீபாலகங்காதரர் ஜீவிய சரிதம் ...	0	3	0
அந்தப்புர ரகசியம்	1	0	0
கவிரத்தினசிந்தாமணி என்னும் காளிதாசன்சரித்திரம்	1	0	0
மோகனங்கி	1	4	0
குடும்ப ஸம்ரக்ஷணி	2	0	0
மன்மதகாந்தன் கதை	0	8	0
இந்து பாகசாஸ்திரம்	2	0	0
மகாமகம் அதின் மகிமை	0	4	0
ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியின் ஜீவிய சரிதம்	0	2	0
கந்தபுருணச் சுருக்கம் வசனம் ...	0	12	0

தயாராய்விட்டது!!!

ராஜம் அய்யர் சரிதை

இப்புத்தகம் கமலாம்பாள் சரித்திரம் என்னும் அற்புத கதையின் நூலாசிரியராயும், பிரபுத்த பாரதம் என்ற மாதாந்த பத்திரிகையை மிகுந்த சிறப்புடன் நடத்தி ஆங்கிலம் உணரும் திறனுடையவர்களுக்கு நமது வேதாந்த உண்மைகளை எளிய நடையில் ஸ்வலபமாகத் தெரிவித்தவரும் ஆகிய ஸ்ரீமான் பீ. ஆர். ராஜம் அய்யரவர்கள், பி. ஏ. என்பவரது சரித்திரத்தை யடக்கியுள்ளது. இதனுடன் இவர் செய்த நூல்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ள உபதேச மொழிகளையும், இவர் முதலில் ஆங்கிலத்தில் எழுதிய வேதாந்த வியாஸத்தையும் சேர்க்கப் பட்டுள்ளது. மிகவும் இனிய நடையில் எழுதப் பட்டிருக்கிறது. விலை அணு 0 8 0

"விவேக போதினி" சந்தாதாரர்களுக்கு மாத்திரம் விலை அணு 0 6 0

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி

மைலாப்பூர், மதராஸ்

விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி 2 } ஸௌம்யஹு மார்கழிமீ 1909-ஹு டிசம்பர்மீ { பகுதி 6

ஆராதனை: பொதுவான பிரிவுகள்

WORSHIP: GENERAL DIVISIONS

நாம் நித்யவஸ்துவில் (ஆத்மாவில்) நிலைபெற்று சாந்தம் அடைந்து ஆனந்திப்பதற்கு முக்கிய ஸாதனம் ஆராதனையே. இந்த ஆராதனை அனேக விதம், இவ்வாராதனைகள் எல்லாம் பொதுவாக வெளிப்படை ஆராதனை என்றும் அந்தரங்க ஆராதனை என்றும் இருவகைப்படும்.

வெளிப்படை ஆராதனை என்பது கோயில் குளங்கள் நல்ல ஸ்தலங்கள் முதலியவைகளுக்குப் போய் செய்வதே. இது புத்தி விசாலத்தையும் எல்லா விஷயங்களையும் நடுநிலையில் இருந்து பக்ஷபாதமின்றி தெளிவாக நோக்கும் திறனையும், மதத்துவேஷம் இன்மையையும் உண்டாக்கும். இதோடும்கூட அந்தரங்க ஆராதனையும் இருத்தல் வேண்டும். இது ஒருவன் தனது வீட்டுள் அல்லது தனிமையாகச்செய்யும் அனுஷ்டானம் பூஜைகள் முதலியவைகளே. இவை நம்மனதின்சஞ்சல ஸ்வபாவத்தை நமக்கே விளங்கும்படி காட்டி அதை நீக்கும் வழிகளை அறிந்து முயற்சிக்கும்படி செய்யும். இதனுல் பாழான நமது மனம் குவியும்படி செய்யத்தக்க தந்திரங்கள் மூலமாக நமக்கு சித்த ஏகாக்கிரம் வரும். இவ்விருவித ஆராதனைகளிலும் நாம் பழகவேண்டியதவசியம்.

வேறு விதமாக நோக்கில் ஆராதனைகளைக் காம்யம் என்றும் நிஷ்காம்யம் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். காம்ய ஆராதனையாவது இஹலோகஸுகம் ஸ்வர்க்காதி போகங்கள் முதலியபலன்கள் வேண்டும் என்ற ஆவலோடு ஆராதிப்பதே. யாகாதிக்ரதுக்கள் செய்வது, கீர்த்தி வரவேண்டும் என்று ஆடம்பர ஆராதனம் செய்தல், லோகாந்தரஸுகாதிகள் வேண்டும் என்று தானதர்மாதிகளைச் செய்தல் ஆகிய இவைகள் இத்தகைய ஆராதனைகள். இவ்வாறு ஆராதனை செய்பவர்கள் அடையும்பலன் நீடித்து நிலைக்கா, மறுபடியும் உலகில்வந்து அவர்கள் உழல வேண்டியதுதான். நிஷ்காம்ய ஆராதனம் முற்கூறியவைகளை விரும்பாது பாரமார்த்த விஷயங்களாகிய நிராசை, பக்தி, மோக்ஷம் முதலியவைகளை விரும்பிச் செய்வது. இவ்வித ஆராதனத்தின் நோக்கத்தைத்தான் பிரஹலாத ஸ்வாமி,

தன்பவாத்தரும் இன்பவாவின்மையே தொகுக்கும்
இன்பவேதுவின் னன்பினு லன்றியார்க் கெய்தும்
வன்பிலாவிலங் கென்பிலாப் புழுவின்யான் வரினும்
நின்ப தாம்புயத் தன்புமாறுமை தா நெடியோய்.

என்று நரஸிம்ம மூர்த்தியிடம் வாத்தைக் கேட்டுக்கொள்ளுகிருர். நமது மஹான்கள் செய்த ஆராதனங்கள் பெரும்பாலும் இத்தகைய ஆராதனங்களே. நம்மால் கூடியவரையில் நாம் காம்ய ஆராதனைகளைக் குறைத்து நிஷ்காம்ய ஆராதனைகளிலேயே அதிகமாக மனப்பூர்வமாகப் பழகவேண்டும். இல்லாவிடில் ஸுகதுக்கங்கள் பேதாபேதமின்றிக் கண்மூடித்தனமாய் ஸதாசக்கிராகாரமாகச் சுழன்றுவரும் இப்பிரபஞ்சத்தில் மனங்கோணுது நம்மால் அரைநாழிகை இருக்கமுடியாது. இப்படி இருப்பின் காம்ய ஆராதனையில் எவ்வாறு நிலைத்து நிற்கமுடியும். ஆதலால் நிஷ்காம்ய ஆராதனையையே நாம் கதியாகக்கொண்டொழுகவேண்டும். காம்ய ஆராதனையே இல்லாமலிருந்தால் மிகவும் நலம்.

ஆகவே ஆராதனைகள் பொதுவாக நான்குவிதம் என்றும், அவை காம்யவெளிப்படை, நிஷ்காம்ய வெளிப்படை, காம்ய அந்தரங்கம், நிஷ்காம்ய அந்தரங்கம் ஆகிய இவைகளே என்றும் தெரிய வருகிறது.

ஆராதனைகளின் சிறப்புப் பிரிவுகளை அடுத்த ஸஞ்சிகையில் எடுத்து விவரிப்போம்.

விவேக போதினி

தொகுதி 2] ஸௌம்யஹு மார்கழிமீ [பகுதி 6

வேதங்கள்-கர்மகாண்டம்

VEDAS—THE KARMA KANDAM

முன்னர் கூறியபடி, வேதங்கள் பொதுவாக கர்மகாண்டம், ஞானகாண்டம் என இருவகைப்படும். இவைகளுள் கர்மகாண்டம் சில கர்மங்களால் ஸ்வர்க்க ஸுகத்தை மனிதனுக்கு உண்டாக்கும் நோக்கத்தை உடையது. பிரபஞ்சத்தில் எவ்வித ஸுகமானாலும் ஸரி, எவ்வளவு காலம் இருந்தாலும் ஸரி, நிலையற்றதாயும், மாறும் தன்மையை உடையதாயும் இருத்தலால் கர்மகாண்டத்தின் முடிவு மிக சிறந்ததல்ல. ஆதலால் இதில் அடங்கியிருப்பவைகளுக்கு அபரவித்தை(ஞானகாண்டத்தைவிடத்தாழ்ந்த வித்தை) என்று பெயர். ஆனால் கர்மகாண்ட விஷயங்களில் ஒருவன் ஒழுங்கு தவருது பழகி வருவானாகில் அவனுக்கு சித்த சுத்தி உண்டாக, அவன் பரவித்தையாகிய ஞானகாண்டத்தை அறியத்தகுந்த அதிகாரியாவான். கர்மகாண்ட விஷயங்களை வெளி நாட்டார் அநேகவிதமாகக் குற்றங் கூறியுள்ளார். அவர்கள் முற்கூறிய கர்மகாண்ட ஞானகாண்ட ஸம்பந்தத்தை உணராமையால்தான் அவ்வாறு செய்தார்கள். முதலில் இங்கு கர்மகாண்டத்துள் அடங்கிய விஷயங்களைப் பொதுவாக எடுத்து விசாரிப்போம்.

கர்மம் என்ற பதத்திற்குத் செய்கை என்று பொருள். வைதிக கர்மம் என்றால் வேதத்தில் சித்தசுத்திக்காக ஏற்பட்டிருக்கும் யாகங்கள்போன்ற செய்கைகள். கர்மம் என்ற பதத்திற்குப் பொதுவாக விரிவான அர்த்தம் ஒன்று உண்டு. அதாவது மனிதன் எண்ணுவது, சொல்வது, செய்வது எல்லாம் கர்மம் என்பதே. இந்தப்பொருளில் தான் கர்மம் என்ற பதம் பகவத்கீதையில் பகவானால் உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. இவ்விரிவான பொருளை வைதிககர்மம் என்ற தொடருக்குக் கொள்ளாது முற்கூறிய சிறப்புப் பொருளே ஸாதாரணமாக எடுத்துக்கொள்ளப் படுகின்றது.

ஆரியர்கள் அவசியம் செய்யவேண்டிய கர்மங்கள் மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் வேதங்களில் கூறப்பட்டுள்ள ச்ரௌதகர்மம், ஸ்ம்ருதிகளில் கூறப்பட்டுள்ள ஸ்மார்த்தகர்மம், ஸ்ம்ருதிகளுக்கும் புராணங்களுக்கும் இடையே நிற்கும் ஆகமங்களில் விதிக்கப்பட்டுள்ள ஆகமகர்மம் ஆகிய இவைகளே. த்விஜர்கள் எல்லோரும் முதல் இருவித கர்மங்களையும் அவசியம் செய்யவேண்டியது. அத்விஜர்கள் முக்கியமாக ஆகமகர்மங்களையும் சிற்சில ஸ்மார்த்த கர்மங்களையும் அநுஷ்டிக்கவேண்டியது. ஆகமகர்மங்களிலும் சிற்சில பிராம்மணர்கள் மாத்திரமே அநுஷ்டிக்கவேண்டியவை, பெரும்பாலும் அத்விஜர்களே அநுஷ்டிக்கவேண்டியவை. இவ்வாகமங்களாலும், இவைகளைப் பின்பற்றி தமிழில் பிரவசனம் செய்த ஆழ்வார்கள், நாயனார்கள், ஆசாரியர்களாலும்தான் அத்விஜர்களுக்கு ரஹஸ்யங்கள் வெளியாக அவர்கள் மேன்மை அடைந்தார்கள். வேதங்கள் எவ்வாறு த்விஜர்களை மேம்பாடுடையவராக்கினவோ அவ்வாறே ஆகமங்கள் அத்விஜர்களுக்கு உதவின.

சுருதி ஸ்ம்ருதிகளில் விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்தால்தான் த்விஜனுக்கு த்விஜத்வம் தக்கும். இக்கர்மங்கள் இரண்டுவிதம். அவைகள் அவசியகர்மங்கள், இஷ்ட (காம்ய) கர்மங்கள் என்பவைகளே. அவசியகர்மம் இரண்டுவிதம். முதலாவதாகிய நித்யகர்மம் என்பது தினம் அவசியம் செய்யவேண்டிய கர்மங்கள்; ஸந்தியாவந்தனம், அநுஷ்டானங்கள் போல்வன. இரண்டாவதாகிய நைமித்திக கர்மம் என்பது ஏதாவது ஓர் ஸமயத்தில் ஓர் காரணம்பற்றி அவசியம் செய்து தீரவேண்டியவைகள்:—கிரஹணம், ஸங்க்ரமணம், பர்வம், ஆகிய இக்காலங்களில் செய்யவேண்டிய கர்மங்கள் போல்வன.

இந்த அவசிய கர்மங்கள் பெரும்பாலும் ஒழுங்காக தினமாவது, ஒருநாளில் அநேகந்தரமாவது, பக்ஷத்திற்கு ஒருதரமாவது, மாஸத்திற்கு ஒருதரமாவது, வருஷத்திற்கு ஒருதரமாவது செய்யவேண்டியவைகளாக இருக்கும். இம்மாதிரி அடிக்கடி வாராததான ஓர் அவசிய வைதிக கர்மம் ஒவ்வொரு த்விஜனும் செய்யவேண்டியதென்று வேதங்களில் காணப்படுகிறது. இதுதான் ஸோமயாகம் என்று சொல்லப்படுவது. (இதைப்பற்றி வேறோரிடத்தில் விஸ்தரிப்போம்). சுருதிகளில் காணப்படும் மற்றைய அவசியகர்மங்களாவன:—அக்னி ஆதானம், அக்னிஹோத்ரம், பர்வயஞ்ஞங்கள் ஆகிய இவைகளே. இவைகளைவிட்டால், த்விஜன் சிறப்பு குறைந்துவிடும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்மிருதிகளில் உள்ள அவசிய கர்மங்களாவன. ஸந்தியாவந்தனம், ஔபாஸனம், வைச்வதேவம் (ஸர்வ தெய்வ உபாஸனை) பிரம்மயஞ்ஞம் (வேதம் ரிஷிகள், தேவதைகள், பிதிர்க்கள் இவர்களை ஆராதித்தல்) ஆகிய இவைகளே.

இரண்டாவது விதமான அவசிய கர்மங்களாகிய இஷ்டகர்மங்கள் ஸ்வர்க்கபோகம் முதலிய பலனை உத்தேசித்தாவது அல்லது பகவத் அர்ப்பணம் செய்ய உத்தேசித்தாவது ஒருவன் இஷ்டப்பட்டு தானே செய்யப் படுபவைகள். முன் வித கர்மத்திற்கே காம்யகர்மம் என்ற சிறப்புப் பெயர்தகும். பின்னதற்கு நிஷ்காம்யகர்மம் என்று பெயர், (இதைத்தான் பகவான் கீதையில் விஸ்தரிக்கிறார்). இது வேதத்தில் குறிப்பாகத் தான் காட்டப்பட்டிருக்கிறது. இப்பாகத்தைச் சேர்ந்த வைதிக கர்மங்கள் பெரும்பாலும் சிறப்பான காம்யகர்மங்களே. அவைகளில் சில, வெகுகாலம் செய்யவேண்டியவைகளாகிய வாஜபேயம், அசுவமேதம், ஸத்ரங்கள் ஆகிய இவைகளே. முற்கூறிய ஸ்மிருதிகர்மங்கள் தவிர மற்றையவைகள் எல்லாம் ஸ்மார்த்த காம்ய கர்மங்களே.

சுருதி கர்மங்களுக்கும் ஸ்மிருதி கர்மங்களுக்கும் அதிக வித்யாஸம் இல்லை. முன்னவைகள் சுருதியிலும், பின்னவை ஸ்மிருதிகளிலும் விதிக்கப்பட்டவை. இவ்விரண்டிலும் ஒரே கர்ம விஷயத்தில் முரணான விதிகளை உடையவைகளாகக் காணப்படின் சுருதி விதியையே பின் பற்ற வேண்டும். இதைத் தவிர இருவித கர்மங்களிலும் வேதமந்திரங்கள் தாராளமாக உபயோகப் படுத்தப்படும். இம்மந்திரங்கள் ஸம்பந்தப்படாவிடில் எந்தக் கர்மத்திற்கும் பலன் கிடையாது. இவ்வாறு செய்யும் கர்மங்களுக்குத் தகுந்த பலன்களை உண்டாக்கும் மந்திரங்களையும் அவைகளைப்பற்றிய விஷயங்களையும் உடைத்தாயிருத்தலால்தான் இந்தவேத பாகத்திற்குக் கர்மகாண்டம் என்று பெயர்.

இதை முடிக்கும்முன் கர்மகாண்டத்தில் கூறப்படும் கர்ம மார்க்கத்திற்கும் கீதையில் கூறப்படும் கர்ம யோகத்திற்கும் உள்ள வித்யாஸத்தை எடுத்து விவரிப்போம். கர்ம காண்டத்தில் கூறப்படும் கர்ம மார்க்கம் பெரும்பாலும் காம்ய கர்மங்களால் நிறைந்தது. இவைகளின் நோக்கமாகிய ஸ்வர்க்காதி போகங்கள் நிலையற்றவை. இது பற்றியே பகவான் கீதையில் இம்மார்க்கத்தைத் தூமமார்க்கம் அதாவது இருள் நிறைந்தமார்க்கம், இதன் வழி போகிறவன் மறுபடி பிறப்பு இறப்பிற்கு ஆளாவான் என்று கூறியிருக்கிறார். இது மனிதனுக்கு கர்மத்தில் பொதுவாக ஓர்வித விரக்தியை நாளடைவில் உண்டாக்கி அதைவிட மேலானது ஏதாவது இருந்தால் அதை அறியவேண்டும் என்ற ஆவலை உண்டாக்கும்,

இம்மாதிரி மனதைச்சுத்தம் செய்வதே கர்ம மார்க்கத்தின் முடிவான பலன். கீதையில் கூறியுள்ள கர்மயோகம் இதைவிட எவ்வளவோ சிறந்தது. முன்னமேயே இஷ்டகர்மங்களுள் சிற்சில பகவத் அர்பிதம்செய்ய உத்தேசித்து செய்யக்கூடியவைகள் என்றும், அவைகளைக் கர்ம காண்டத்தில் வற்புறுத்தவில்லை என்றும் இவ்விதகர்மங்களுக்கு நிஷ்காம்ய கர்மங்களென்று பெயர் என்றும் கூறப்பட்டுள்ளது. இம்மாதிரி கர்மங்கள் ஞான காண்டமாகிய உபநிஷத்துக்களில் கொஞ்சம் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளன. இந்தக் குறிப்புகளை வைத்துக்கொண்டு தான் பகவான் கீதையில் கர்மயோகத்தை எடுத்து விவரிக்கிறார். இந்தக் கர்மயோகம் ஞானகாண்டத்தில் சேர்ந்தது. ஞானகாண்டத்தின் முடிவாகிய பரமபதத்தை அடைய கர்மயோகம் முதல்படி. இது கர்மமார்க்கத்தின் முடிவில் வரக்கூடியது. கர்மமார்க்கம் என்ற தொடரில் கர்மம் என்பது வைதிகயாகாதி க்ரதுக்கள் என்ற சிறப்புப்பொருள் உடையது. கர்மயோகம் என்ற தொடரிலோ கர்மம் என்பது எண்ணம், வாக்கு, தொழில் இவைகளில் நடப்பவைகள் என்ற விரிவான பொருளையுடையது. வைதிக கர்மமார்க்கம் கர்மங்களில் ஓர்விதவிரக்தியை முடிவில் உண்டுபண்ணும். கர்மயோகம் சித்தசுத்தியை உண்டாக்கி மனதைச் சாந்தப்படுத்தும். கர்மயோகத்திற்கும் கர்ம மார்க்கத்திற்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்யாஸம்.

அடுத்த ஸஞ்சிகையில் த்விஜன் அவசியம் செய்யவேண்டியதாகியும் கர்மமார்க்கத்தில் அவசியமானதாகியும் உள்ள ஸோமயாகத்தை வர்ணித்து யாகங்களின் உட்பொருளையும் எடுத்துரைப்போம்.

அன்பின் சொரூபங்களும் பக்தியும்

LOVE AND BHAKTI

அன்பென்பது எல்லா ஜீவராசிகளினிடத்தும் இன்றியமையாததாயிருந்து விளங்கும்படியான ஒரு பொருள். இவ்வன்பு எப்பொருளின்பாற் படுத்தப்படுகிறதோ அதன் தன்மைக்கேற்பப் பொருள்படும். தாய்தந்தையர்பாற் காட்டுமன்பைப் பட்சமென்றும், அவர்கள் தங்கள் மக்கள்பாற் காட்டும் பிரதியன்பை பாசமென்றும், குருவினிடத்திற் காட்டுமன்பை வணக்க மென்றும், தாழ்ந்தோரிடத்தும் ஈன அல்லது எளிய ஸ்திதியிலிருப்பவர்களிடத்தும் காட்டுமன்பைக் கருணையென்றும், சிநேகிதனிடம் பாராட்டுமன்பை நேசமென்றும், அன்னியோன்னியமென்றும், மனைவியின் பாற் காட்டுமன்பைக் காதலென்றும், பணியாளன் எஜமானிடத்திற் காட்டுமன்பை விசுவாசமென்றும், மிருகங்களிடத்துக் காட்டுமன்பைத் தயையென்றும், கடைசியாக யெல்லோரும் கடவுள்பாற் காட்டு மன்பைப் பக்தியென்றும் கொள்ளப்படும். நம்பிக்கை, எண்ணம் முதலியவைகளும், இன்னம் இதுபோன்ற மற்றைய மனஜ்ஜெனிப்புக ளெல்லாமும் இவ்வன்பின் சொரூபங்களே. இவ்வன்பு சாதாரணமாய் இருபிரிவினையுடையது. கைம்மாறு கருதிய அன்பு, கைம்மாறுகருதாதவன்பு. பிறரிடத்திலிருந்து ஒன்றை யடைவதனாலோ, அல்லது அடையவேண்டியோ காட்டுமன்பைக் கைம்மாறு கருதிய அன்பென்று சொல்லலாம். ஒன்றையும் எதிர்பாராது காட்டுமன்பே கைம்மாறு கருதாதவன்பு. பக்தியைத் தவிர்த்த மற்றைய யன்பெல்லாம் கைம்மாறு கருதிய யன்பென்று பொதுவாகச் சொல்லலாம். ஆனால் பக்தியிலும் கைம்மாறு கருதிய பக்தியிருக்கின்றது. அதுதான் மண், பொன், பெண்ணை

வேண்டிக் காட்டும் பக்தி. அவ்வாறு ஒன்றையும் கருதாமலே பக்தியைப் பெறுவதுதான் ஒழுங்கு. இனி இப்பக்தி யெப்படி வருமென்றாராய்வோம். இது வெகு சிலரிடத்து மாத்திரம் தோன்றுவதனால் பிறவிக்குணம் என்று சொன்னார்கள் பெரியோர்கள். ஆனால் இது எல்லோருக்கும் கைவல்லியமாகலாம். எப்படியாகலாமென்றால், அன்பென்பது ஒவ்வொருவரிடத்தும் இயற்கையா யமைந்துள்ளதென்று மேலே சொல்லியிருக்கிறது. அதைத் தகாத பொருளினிடத்தும், தகாத விதமாயும் உபயோகப்படுத்தாமல் கடவுள்பாற் படுத்தவேண்டும். இது நாளடைவில் படிப்படியாய் வரவேண்டியது. சிறு பிராயத்தில் தாய் தந்தையர்பாலிருக்கும் பட்சம் ஓர் வித்தியா குருவை யடைந்து அவரை வணங்கி மெய்ப்பொருளறிவதில் வணக்கமாக மாறும். பிறகு உற்ற வயதடைந்த போது காதல் ஏற்பட அக்காதல் மக்களை யடைந்து மேல் அவைகளின்பேரிற் பாசமாக மாறும். இப்பாசம் நீடித்திருக்கவிடாது, கடவுளின்பேரிற் பக்தியாக மாற்றவேண்டியது. மற்ற எல்லாம் இயற்கையாக மாறும். ஆனால் கடைசியாகச் சொல்லியதை மாத்திரம் மனிதர்கள் தங்கள் முயற்சியினால் மாற்றவேண்டியது. என் இப்படி பக்தியைப் பெறவேண்டியதென்றாலோ, மோக்ஷமென்னும் மெத்தையை யடைய யேற்பட்டிருக்கும் சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்கு படிக்கட்டினுள் பக்தி முதற்கண்ணுயமைந்துள்ள சரியையே. ஆதலின் அதைப் பெற்றால் தான் மோக்ஷமென்னும் மெத்தையை யடையலாம். இப்படிகளின் வழியா யடைந்தாலல்லது வேறு விதமான மார்க்கம் கிடையாதோ வென்றால் கிடையாது. இதை யனுசரித்தே தான் "விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும், அரும்பு, மலர், காய், கனிபோல் அன்றோ பராபரமே" என்றார் நம் தாயுமானசுவாமிகளும். எப்படி கனியானது முறையே அரும்பு, மலர், காய் இல்லாதபடிக்கு திடீரென்று தோன்றாதோ, அப்படியே (ஞானமும் அதன் முடிவாகிய) மோக்ஷமும், பக்தி (சரியை) கிரியை, யோகமில்லாமற்படிக்குச் சித்திக்காது. மோக்ஷமென்று சொன்னோமே அது யென்னவென்றாராய்வோம். நாம் கடவுளாதலாலே மோக்ஷம். நாம் எப்படி கடவுளாவோ மென்றால், மனுஷன் கடவுளின் அமிசம். ஆனால் கடவுளுக்கும் மனுஷனுக்கும் உள்ள ஒரே வித்தியாச மென்னவென்றால், கடவுள் பாசமற்றவர். மனுஷன் பாசத்தாற் கட்டுப்பட்டவன். பாசமென்பது மக்கள்பாற் காட்டுமன்பென்றோம். ஆனால் பாசமென்பது பக்தியைத் தவிர்த்த யெல்லா யன்பிற்குமே பொதுவாக வழங்கும் பெயர். ஆகையினால் பாசமெல்லாம் அன்பான போதிலும், பக்திதான் உண்மையான அன்பு. இது பிறப்படத்தான் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் திருக்குறளில்,

> " என்பி லதனை வெயிற்போலக் காயுமே
> அன்பி லதனை யறம் "

என்றார். அதாவது என்பில்லாத பிராணிகள், (புழு முதலியவைகள்) எப்படி வெயிலினால் கஷ்டப்படுத்தப் படுகின்றனவோ அப்படியே அன்பில்லாத வொருவனை அறக்கடவுள் (காலன்) துன்புறுத்துவான். அன்புதானெல்லோரிடத்திலும் ஏதாவது ஓர் ரூபத்தில் பிரகாசிக்கின்றதே; அப்படியிருக்க, அன்பில்லாத மனிதனும் உண்டாவென்றால் பக்தியே யன்பு. அப்பக்தியில்லாதவனே யன்பிலாதவனெனப்படுவானென்பது தான் விடை. ஆகையினால் நாமெல்லோரும் நம் வாழ்நாளில் பக்தியைப் பெறுவதையே பிறந்ததின் பயனாகக் கைக்கொண்டு அதைப் பெற முயற்சிக்கவேண்டியது.

சா. தா. மூர்த்திமுதலியார்

நெற்பயிர்

விதை விதைத்தல்

SOWING PADDY SEED

சாதாரணமாய் நெற்பயிர் விளைவித்தலில் நமது தேசத்திலுள்ள முக்கியமான பழக்கங்களும் மாதிரிகளும் யாவருக்குந் தெரிந்தவிஷயங்களாகும். நன்செய் நிலங்களைச் செவ்வையாய் உழுது, பிறகு எருக்கூட்டி தண்ணீர்பாய்ச்சி நல்ல சேறு உண்டாகப் பண்ணுவார்கள். பிறகு பச்சைத் தழை மிதிப்பதானால் மிதித்து, பரம்படித்து வித்துப் போடுவது வழக்கம். விதைகள் முளை கிளம்பும் தருணத்தில் முளையெருவென்று சொல்லும்படியான ஸங்மான புஷ்டியுள்ள எருவைத்தூவி வருவார்கள். இப்படிச் செய்வதில், அநேகர் நிலத்தைச் சீர்செய்து, விதையைக் கூடையில்கொட்டி யெடுத்துக் கொண்டு போய்க் கூடையைத் தோள்மேல் தூக்கிக்கொண்டு கைப்பிடி விதை யெடுத்தெடுத்து வீசித் தூவுவதை நாம் கண்டிருக்கிறோம். எவ்வளவோ சிரத்தை யெடுத்துக்கொண்டு விதைத்தும் பூச்சிமுதலிய காரணங்களாலும், அளவுக்கு மிஞ்சிய விதை விதைத்தாலும் முளை சரியாய்க் கிளம்பாமற் போவதுண்டு. அப்படிப்போனால், வேறுபுலங்களில் செவ்வையாய் வளர்ந்த நாற்றுகளை நாற்றுமுடி இவ்வளவுக்கு இவ்வளவு கிரயமெனப்பேசி வாங்கி நட்டுப் பயிர்செய்வார்கள். இப்படிப் பயிர்செய்வதில் தேக சிரமும் பணச் செலவும் இருமடங்கதிகமாய் விடுகின்றது.

இதைத்தவிர்த்துத் தாமே தமது நிலத்தின் ஒருபகுதியில் பயிர்செய்ய மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குமுந்தி கிணற்றின்பாய்ச்சலைக் கொண்டேனும் வேறு ஜலாதாரத்தைக் கொண்டேனும் நாற்று விளைவித்து நட்டுப் பயிர் செய்தால் அநேக சாதகங்கள் உண்டு. அவற்றை இங்கே விசாரிப்போம்.

முதலாவது, நிலம் என்ன செழிப்புள்ளதாயும் ஜலாதாரம் பெற்றதாயுமிருந்தபோதிலும், எரு தக்கதாயிருந்தாலும், விதைமட்டில் கெட்டியானதாயும் முதல்தரமானதாயுமில்லாவிடில், பயிர் பலிதமாவது கஷ்டமாகும். இது யாவரும் எளிதில் உணரக்கூடியது. இப்படி நல்ல விதையைச்சேகரம் செய்து வைத்துக்கொள்வது விவசாயிகளின் முக்கிய கடமையாகும். மலையாளம் ஜில்லா கள்ளிக்கோட்டையில் டிஸ்டிரிக்டு விவசாய ஆலோசனை சங்கத்துக்குத் தலைவராயிருந்த அந்த ஜில்லா கலெக்டராகிய ப்ரான்ஸிஸ் என்பவர், தாம் அந்த ஜில்லாவைவிட்டு வெளியே போகுங்காலத்தில் அச்சங்கத்தாருக்குத் தமக்குத் தோன்றிய அரிய விவசாய விஷயங்களைப் பற்றி ஒரு சுருக்கமான கடிதம் அனுப்பினார். அக்கடிதத்தில் முக்கியமாய் விவசாயிகள் விதை விஷயத்தில் அதிக சிரத்தை யெடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. முன் வருஷத்திலேயே பின் வருஷத்திற்கு வேண்டிய விதையைச் சேகரித்துவைக்கும் பக்குவம் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. நன்றாய்ச் செழித்து ஓங்கி வளர்ந்து முற்றிய கதிர்களை யாராய்ந்து பார்த்து, அவற்றைமட்டில் தனியே பிடுங்கி அக்கதிர்களை மட்டில் தனியே அடித்து தானியத்தை பிரத்தியேகமாய் அடுத்த வருஷ விதைக்காக உபயோகப்படுத்த வேண்டுமென்று அவர் சொல்லுகிறார். இந்தப் பழக்கம் எல்லாரும் அநுகூலத்தோடு கைக்கொள்ளக் கூடியதாயிருக்கிறது.

இப்படித் திரட்டிவைத்த விதையிலிருந்துமுளைத்த நாற்றை நட்டுப் பயிர் செய்தால் தகுந்த பிரயோஜனம் கிடைக்கும். மேலும் விதையைப் பூமியில் நேராக விதைத்து முளை கிளம்புகிறதைப் பார்த்துக் கொண்டு பிறகு பயிர் செய்வதில் அநேக இடையூறுகளும் அனாவசியமான செலவும் தொந்தரையும் இருக்கின்றன. நாற்று நடுவதில் மேற்கூறியதொந்தரைகள் கிடையாது. எல்லாவிதத் தொழிலிலும் பயிர்த்தொழில்மிகவும் சிரமத்தோடு கூடியதாயிருந்தாலும், காலாகாலங்களில் செய்யவேண்டிய தண்ணீர் பாய்ச்சல், களை பிடுங்கல், முதலிய காரியங்களிற் சிறிதும் வழுவாமல் நடத்தவேண்டியது அவசியமாயிருப்பதாலும், எவ்வளவு சிரமம் விவசாயி எடுத்துக்கொள்ளுகிறானோ அவன் சிரமத்தின் அளவே பூமி பலனைக் கொடுக்குமாதலாலும், பலவாற்றானும் மட்டாய்ப் பூமியைப் பதஞ்செய்தல் செய் நேர்த்தி முதலிய செலவுகளைச்செய்து வந்தால் கட்டிவரக்கூடும்.

இவ்வளவு ஜாக்கிரதையாயும் அதிக கவனத்தோடும் செய்யவேண்டிய பயிர்த்தொழிலில் நாற்று நடுவதில், நேரே விதைப்பதைவிட மட்டுச்செலவும் அதிக உபயோகமும் வரும்படியும் இருக்கிறதென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல உள்ள விஷயங்கள்

மனதிற்படும்படி பலர் சொல்லியிருக்கும்போதும் விவசாயிகள் பழைய வழக்கமாகிய விதை விதைத்தலையே பெரும்பாலும் கைக்கொண்டிருக்கின்றனர். நாற்று முளைக்கச்செய்து, பிறகு நாற்றைப் பிடுங்கி நிலங்களில் நட்டுப் பயிர் செய்வதில் உள்ள பலவகை உபயோகங்களை எத்தனைமுறை யெடுத்துக் கூறினாலுஞ் செல்லும்.

நாற்று நடுவதில் விதை அதிகம் வீண்செலவாகாது. தனித்தனி அழகாய் சமதூரத்தில் நடலாம். அப்படிச் செய்வதில் தானியத்தின் ஜாதிபேதத்திற்கும் விளைச்சல் வளர்ச்சி பேதத்திற்குந் தக்கபடி நாற்றைநட சௌகரியமாக விருக்கும். மிகவும் உயரமாய் வளரக்கூடிய பயிராயிருக்கும்பக்ஷத்தில் சற்று தூரமாகவே நட்டு பயிர் நாலாபக்கமும் பரவி நிர்ப்பந்தமில்லாமல் செழித்து வளர இடங்கொடுக்கும்படி நடலாகும். தவிர ஒரு நாற்றுக்கும் மற்றொரு நாற்றுக்கும் இடையில் ஒரே சமமான தூரமிருக்கும்படி நடக்கூடுமாதலால் காற்றும் நீரும் ஒவ்வொரு நாற்றுக்கும் ஒரே ரீதியாய் எட்டி பயிர் ஒரே நிலையாய் வளர்ந்துவரும். இப்படிக்கில்லாமல் நேரே விதையை விதைத்துப் பயிர் செய்வதனால் ஒவ்வோரிடத்தில் மற்ற விடங்களைக்காட்டிலும் விதை யதிகமாய் விழுந்து வியர்த்தமாகும். இடம் தாராளமில்லாமல் குறுகிய இடத்தில் அதிக விதை வளரவேண்டி வந்தால் முளை அதிக உயரம் வளரக்கூடாமல் நிற்கும். மேலும் ஒவ்வொரு விதை பழுதாயிருக்கலாம். அந்த விதையிலிருந்து உற்பத்தியாகும் பயிரும்பிற்பயிரோடு சேர்ந்து வளர்ந்து மொத்த மேனியைக் குறைவு பெறச் செய்யும். நாற்று நடுவதிலோ அதிக உயரம் வளராத இளைத்த நாற்றுகளைத்தள்ளிவிட்டு செழித்தோங்கின நாற்றுக்களை மட்டில் எடுத்து நடலாகும். நாற்று நடுவதில் களைபிடுங்கும் வேலையும் சுலபமாய் முடியும். பிடுங்கி யெறியப்பட்ட களை சேற்றில் மிதிபட்டு அழிந்துபோம். நாற்று நட்ட ஒருமாதத்திற்கெல்லாம் ஒருகளை பிடுங்கினால் போதுமானது விதை விதைப்பதிலோ அப்படியில்லை. எங்கும் பயிர் பரவியிராமல் சில மூலை முடுக்களிலும் ஓரங்களிலும் பயிரில்லாமல் வெற்றிடமாகவே நிற்கும். அவ்விடங்களில் சேரும் நீர், எரு, முதலியவை வீணேயாகும். மேலும் பயிர், சிற்சில விடங்களில் அடர்ந்தும் வேறுசில விடங்களில் மெலிந்தும் வளர்ந்திருப்பதால் பிடுங்கி யெறியப்பட்ட களைமடங்கியும் பயிரின்மீது விழுந்து களையெடுப்பதிலுள்ள பிரயோஜனத்தை யடையவிடாமற் கெடுக்கும்.

நாற்றைப் பிடுங்கி நடுவதால் பயிரின்வேர் நிலத்திற்செம்மையாய் ஊன்றும். வேர்பலமாயிருந்தாலன்றி செய் நேர்த்திக்குத்தக்க பலன் கிடைப்பது அருமையாதலால் நாற்று நடுவது உபயோகமானதாய்த் தோன்றும். ஆகவே மாசூலும் நிரம்பக்காட்டும். நாற்று வாங்கி நடுவதில் செலவும் அதிகம் இல்லை. விதையை விதைத்து, பயிர் அடர்ந்து வளர்ந்த இடங்களில் அதிகப் பயிரைப்பிடுங்கி வேறிடங்களில் நடவும், பிடுங்கின இடங்களில் மண்ணைப் போட்டு நிலத்தைச் சமப்படுத்தவும், பிறகு வெகு சிரமப்பட்டு கண்டுபிடித்து களைபிடுங்கவும் செலவழிக்கும் பணம், நாற்றை நேரே வாங்குகிற கிரயத்தைவிட அதிகமாகுமே தவிர குறையாது. அப்படி கஷ்டப்பட்டு களைபிடுங்கினாலும் அநேக விடங்களில் பயிர் அடர்த்தியாய் களையிருப்பது தெரியாமல் போவதும் உண்டு.

நிரம்ப ஜலாதாரமில்லாத விடங்களில் வேறிடங்களில் பயிரிடப்பட்ட நாற்றுமுடிகளை வாங்கி நடுவதே நல்ல யுக்தியாகும். அதிக நிலம் இருப்பவர்கள் நீர்வள மிகுந்த ஒருபாகத்தில் நாற்றைப் பயிர் செய்து பிற நிலங்களில் கொண்டுவந்து நடலாம். அப்படி நாற்றுப்பயிர் செய்யும் காலங்களில் இதரநிலங்களில் பச்சைச் செடிகளைப் பயிர்செய்து பிறகு உழுது நிலத்தோடு செடிசேர்ந்து மக்கி நல்ல உரமாகும்படி செய்யப் போதிய சாவகாசமுமிருக்கிறது.

இத்யாதி காரணங்களையும்நாற்றுநடுவதில் உள்ள பல அநுகூலங்களையும் உத்தேசித்து நாற்றை ஒற்றையொற்றை அலகாய் தனித்தனியே சமதூரத்தில் நட்டுப் பயிர் செய்து பரீக்ஷித்துப்பார்த்து அநுபோகத்தில் பலனைக் கண்டுகொண்டு தக்கமார்க்கத்தைக் கைநழுவ விடாமற் கைப்பற்றுவதே மெச்சத்தக்க பிழைக்கும் வழியாகும்.

C. P. வெங்கிடராமய்யர், பீ. ஏ.

இரும்புக்கனிகள்

IRON ORE

'நெல் காய்க்கிற மரம் எப்படி இருக்கும்' என்று கேட்கிறவன்யார்? ஏராளமான சொத்துக்களைத் தகப்பன் தேடிவைத்திருக்கிற குடும்பத்துப் பிள்ளையே! ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளையோ தன் ஜீவனத்திற்கு வேண்டிய பொருள்களின் நுட்பங்களையும் தொழில்களின் வேறுபாடுகளையும் சிறுவயது முதற்கொண்டே ஆராய்ந்து அறிய முயற்சிசெய்து, அதே கவலையாய் அலைந்து திரிந்து அறிவைப்பெற்றுப் பிழைக்கும் வழியைத் தெரிந்து கண்ணியமாய் ஜீவிக்கத் தொடங்குகிறான்.

இதற்குத் திருஷ்டாந்தம்.—இப்பொழுது நமது இராஜதானியில் பெரும்பாலும் உத்தியோகப் பதவிகளிலிருப்பவர்களில் பலர் பிறர் ஆதரவினால் படித்துப் பரீக்ஷைகளில் தேறியவர்களென்பதையாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். இப்படியேபெருந்தொழில், வியாபாரம் முதலியவைகளில் செல்வமும் கீர்த்தியும் பெற்று உன்னத பதவியிலிருப்பவர்களில் பலர், பால்யத்தில் தரித்திரத்தினால் பீடிக்கப்பட்டவர்களே என்பதில் தடையில்லை. ஒரு தனி மனிதனைப் பொருத்தே தேசத்திற்கும் பொருந்துமாவென்று பார்க்கும்பொழுது, இத்தேசத்தின் ஜனத்தொகையில் அதிகமானவர்களின் ஜீவனவுபாயம் விவசாயமென்றே கருதப்பட்டாலும் வர்த்தகம், கைத்தொழில் முதலிய அலுவல்களில் பிரவேசித்துப் பிழைக்கிறவர்களுமில்லாமற் போகவில்லை. எந்தத் தேசமானாலும் பூமிவேண்டியவளவிருந்து காலாகாலத்தில் அவசியமான மழையடித்து, சீத உஷ்ணத்திற்குத் தகுந்தபடி விளையக்கூடியப் பயிர்கள் ஏராளமாய் விளைந்துவிட்டால் ஜனங்கள் மற்ற தொழில்களில் பிரவேசித்து பாடுபடவேண்டியது அவசியமாக விராது.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் இத்தேசத்தில் காலாகாலத்தில் மழை பொழிந்து நமக்கு வேண்டிய உணவுப்பொருள்கள் மிகுதியாக விளைந்து, சுகசௌக்கியத்திற்கு வேண்டிய துணி முதலிய செயற்கைப் பொருள்கள் அவசியமான அளவு செய்யப்பட்டு வந்தபடியால் அந்நிய தேசத்திய பொருள்களைப் பற்றிய கவலையே நம் தேசவாசிகளுக்கில்லாதிருந்தது. இத்தேசத்தைப்போல் பூமியானது சரியாகப் பயிரிடப்பட்டு வேண்டிய அளவு உணவுப் பொருள்களும் துணி முதலியவைகளும் கிடைக்கப் பெறாத தேசத்தவர்களே அந்நிய தேசத்தின் விளைபொருள்களைப்பற்றி யறிய ஆவல் கொள்ளவும் தங்கள் ஜீவனவுபாயத்திற்கு வேண்டிய தொழில்களைச் செய்யவும் தூண்டப்படுகிறார்கள். இவ்விதமாக மேல் நாடுகளிலுள்ள ஜனங்கள் தங்கள் பூமியில் வேண்டிய அளவு பயிர் வகைகள் விளைவதில்லையாகையால் தங்கள் உணவுப்பொருள்களுக்கும் உடைகளுக்கும் அந்நிய தேசங்களை ஆராயத் தொடங்குகிறார்கள். பூமியைத் தோண்டிப் பார்க்கவே நிலக்கரியையும் மண்ணெண்ணெயையும் பெற்றார்கள். பொன் இரும்பு முதலிய உலோகங்களையும் அடைந்தார்கள். கஷ்ட உழைப்பைத் தாங்கத் தகுந்த போதையைக் கொடுக்கக்கூடிய திராவகங்களைச் செய்தார்கள். இந்த வழியாகவே காப்பிக்கொட்டை, தேயிலை, கோகோ முதலியவைகளையும் கண்டுபிடித்தார்கள். இப்படியே பலவுள. நம் நாட்டாருக்கு இத்தகைய அவசியம் நேராமலே வெகு காலமிருந்தது.

ஆனால் இப்பொழுதோ பல காரணங்களினால் இத்தேச விளைவு குன்றி உணவுப்பொருள்களுக்குத் தரித்திரமுண்டாகவே, ஜனங்களுக்குள் வேறு தொழில் மார்க்கங்களையறிய அவா பெருகி சிறிது காலமாய் உழைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். விளைவுப் பொருள்களை அதிகரிக்கச் செய்ய நூதன விவசாய முறைகளை யனுசரித்துப் பயிரிடத் தொடங்கியிருக்கிறார்கள். இன்னும் ஜனங்கள் தரித்திரமின்றி சுகமாய் வாழ அனுசரிக்கவேண்டிய முறைகள் பலவிருக்கின்றன. அவைகளை ஜனங்களுக்குச் சமயத்திற்குத் தக்கபடி போதிக்கத் தகுந்த ஒரு பத்திரிகை அவசியமெனவுணர்ந்து "பிழைக்கும் வழி" என்ற ஏற்ற நாமம் சூட்டி வெளிப்படுத்தப் பட்டிருப்பதைப்பார்க்க அதிக ஆநந்தமுண்டாகிறது.

நம் தேசத்தில் விவசாயி, தச்சன், கொல்லன், தட்டான் முதலிய ஒவ்வொரு கைத்தொழிலாளிகளுக்கும் இரும்பு ஆயுதங்கள் அவசியமாகவேண்டியிருக்கிறது. வீடுகட்டவும், வண்டிகள் செய்யவும், மேஜை நாற்காலி முதலியவைகள் செய்யவும், சமையல் பாத்திரங்கள் செய்யவும், மற்ற ஒவ்வொரு வேலைக்கும் இரும்பு அவசியம். இவைகளுக்கு இத்தேசத்தில் எவ்வளவு இரும்பு கிடைத்தபோதிலும் போதாததாகவே இருக்கும். மத்திய மாகாணங்களில் பலவிடங்களில் முதல்தரமான இரும்பு மிஸ்டர் J. N. டாட்டாவின் பெரும்முயற்சியால் எடுக்கப்படுகிறது. அவ்விரும்பைக் கொண்டு எவ்வளவோ இலக்ஷக்கணக்கான சாமான்கள் செய்து விற்கப்படுகின்றன. யாமறிந்தவரையில் இச்சென்னை இராஜதானியில் சேலம், கோயமுத்தூர், நீலகிரி முதலிய ஜில்லாக்களில், பலவிடங்களில் இரும்பு எடுக்கக்கூடிய விடங்களிருக்கின்றன. நீலகிரி ஜில்லாவில் எடப்பள்ளி என்ற கிராமத்திற்குச் சமீபத்தில் இரும்பு கலந்த கற்களையுடைய பூமிகள் அதிகமாயிருக்கின்றன. சேலம் ஜில்லா மார்க்கமாய் இருப்புப்பாதை வழியாக பிரயாணம் செய்கிறவர்கள்கூட, சில குன்றுகளுக்கு அடிவாரத்தில் கருநிறமும் பழ பழப்புமான பாறைகளைப் பார்த்திருக்கலாம். இவைகளெல்லாம் இரும்பு கலந்தவைகளே. கோயமுத்தூர் ஜில்லா பவானி தாலூகாவிலிருந்து சத்தியமங்கலம் செல்லுகிற பாதையின் நெடுக இரும்பு எடுக்கக்கூடிய விடங்கள் பலவிருக்கின்றன. இவைகளில் அத்தாணி என்கிற கிராமத்தையடுத்த பவானி நதியோரத்தில் சுமார் மூன்று பர்லாங்கு தூரத்திற்கு இரும்பு பாறைகளிருக்கின்றன. யாம் சென்ற மாதத்தில் இந்தக் கிராமத்திற்குப் போயிருந்தபொழுது மேற்சொல்லிய விடத்தை நேரில் பார்வையிட்டுச் சில கற்களை எடுத்து பரீக்ஷித்துப் பார்த்ததில் ஒரு பவுன் (40-ரூபாய்) நிறை யிருக்கக்கூடிய கல் மூன்று பவுன் நிறையுள்ளதாயிருந்தது. இந்தவிடம் நதியோரமாயிருக்கிறபடியால் வெட்டியெடுத்து உபயோகப்படக்கூடிய சாமான்களாக மாற்றத்தகுந்த விடமேயாகும். இந்தக் கிராமத்திற்குப் போகவேண்டுமானால் ஈரோடு ஸ்டேஷனில் இறங்கி ஒன்பதுமைல் தூரத்திலுள்ள பவானிக்குப் போகவேண்டும். அங்கிருந்து அத்தாணி என்ற கிராமம் 14-மைல் தூரமிருக்கிறது. நல்ல ஜட்காவண்டிகள் கிடைக்கின்றன. இப்பாதையில் சில பள்ளத்தாக்குகளிருக்கின்றபடியால் மழை காலம் பிரயாணத்திற்குத் தகுந்ததன்று.

தகுந்த தனவான்கள் இந்த இடத்தைப் பார்வையிட்டு ஒரு கூட்டுக் கம்பெனியாகச் சேர்ந்து, பெரும் முதல் சேர்த்து இரும்பெடுத்தால் நல்ல இலாபம் கிடைக்குமென்பதில் தடையில்லை. மத்திய மாகாணத்தில் இரும்பெடுக்க மிஸ்டர் J. N. டாட்டா என்ற புண்ணியவான் ஏற்பட்டதுபோல சென்னையில் ஒரு டாடா ஏற்படவேண்டும். ஏற்பட்டால் அநேக ஏழைகளுக்குப் பிழைக்கும் வழியுண்டாகும்.

T. C. V. ரமண அய்யர்.

ரத்தின வியாபாரி

A DIAMOND MERCHANT

1859-வது வருஷம் அக்டோபர்மீ 29உ நான் கொழும்பிலிருந்து கப்பலேறி தூத்துக்குடி வந்தேன். நான் ஒரு ரத்தின வியாபாரி. வியாபார விஷயமாய் கொழும்பு போயிருந்தேன். மிக்க விலையுயர்ந்த ரத்தினங்களையும் சிறந்த நகைகளையும் ஒரு கருப்புப் பையில்போட்டு எடுத்துக்கொண்டு வந்தேன். தூத்துக்குடி வந்ததும் பட்டணம் வருவதற்காக முதல் கிளாஸ் வண்டியிலேறினேன். வண்டி நகர்ந்து கொண்டிருக்கும் சமயத்தில் ஒருவர், நானிருந்த வண்டியுட் புகுந்து எனக்கெதிரே உட்கார்ந்தார். ஆதலால் அவர் உருவத்தை நான் சரியாகக் கவனிக்க முடிந்தது. அவருக்கு வயது 24-க்கு மேலிராது. தலையில் உயர்ந்த சரிகை அங்கவஸ்திரம் ஒன்றைச் சுற்றியிருந்தார். அவர் முகத்தில் தெளிவில்லாமல் மிக்க துயரப்படுகிறவர்போல் தோன்றினார். ரயில் தப்பிப்போகாமல் சமயத்தில் வந்து அதைப் பிடித்ததற்காகத் திருப்தியடைந்தவர்போல் காணப்பட்டார். அந்தச் சமயம் அவர் சம்பாஷணையில் விருப்பமுள்ளவராகத் தோன்றாததால்,நானும் மௌனமாகவே பிரயாணம் செய்தேன்.

என் பையை எனக்கு அருகாமையிலேயே வைத்துக்கொண்டு அதை நன்றாய் கவனித்து வந்தேன். கொஞ்சம் சிரமமாயிருந்தபடியால் அரைத் தூக்கமாகக் கண்மூடினேன். கொஞ்சநேரம் பொறுத்து விழித்துக்கொண்டதும் என் பையிருந்த விடத்தில் கண் செலுத்தினேன். அது அங்கேயே பத்திரமாகவிருந்தது. என்னுடன்கூடப் பிரயாணஞ் செய்தவர் மாத்திரம் இருந்த விடம் விட்டு மாறி வேறிடத்திலுட்கார்ந்திருந்தார் வண்டி திருச்சிராப்பள்ளி வந்ததும் அங்கு பத்து நிமிஷத்துக்குக் குறையாமல் நிற்குமென்று தெரியுமாதலால் என் பையைக் கையிலெடுத்துக்கொண்டு கீழிறங்கி ப்ளாட்பாரத்தில் உலாவிக்கொண்டிருந்தேன், நான் திரும்பவும் வண்டிக்குள் ஏறியதும் கூடவிருந்தவர் அயர்ந்து தூங்குவதைப் பார்த்தேன். அவரைத் தொந்தரை செய்யாமல் வேறிடம்போய் அவ்வண்டியிலேயே உட்கார்ந்து பிரயாணஞ்செய்தேன். கும்பகோணம் வந்ததும் அவர் கீழிறங்கினார். திரும்பவும் வண்டியில்வந்து ஏறவில்லை. இப்பொழுது எனக்குக் களைப்பாயிருந்ததால்

நகைப் பையைக்கையில் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு படுத்துத் தூங்கினேன், பட்டணம் வந்தபிறகு தான் எனக்கு விழிப்புக்கொடுத்தது. வண்டி நின்றதும் நான் இறங்கி எனக்காகக் காத்துக்கொண்டிருந்த என் சொந்த வண்டியிலேறி வீடுபோய்ச் சேர்ந்தேன். அங்கு நகைப் பையை மேஜைமேல் வைத்துவிட்டு, நகைகளைப் பத்திரப்படுத்துவதற்காக இரும்புப் பெட்டியைத்திறந்தேன். பிறகு நகைகளை எடுப்பதற்கு நகைப்பையைத்திறந்ததும் நகைகளுக்குப்பதிலாக சில இரும்புத் துண்டுகளும் மரத்துண்டுகளுமிருக்கக் கண்டேன். இதைப்பார்த்த எனக்கு என்னமாயிருக்குமென்று நீங்களே அறிந்துகொள்ளுங்கள். என் பையைத் தூக்கிக்கொண்டு அதற்குப் பதிலாக அதேமாதிரியான பையைவைத்துப் போயிருக்கவேண்டுமென்று நான் தீர்மானித்தேன். உடனே போய்ப் போலீஸ்காரரிடம் பைபோன கதையை ஆதியோடந்தமாகச் சொன்னேன்.

வருஷம் ஒன்றுக்கு மேலாயிற்று. நான் புதன் கிழமை தோறும் போலீஸ் ஸ்டேஷன்போய் பையைப்பற்றி ஏதாவது தடயம் அகப்பட்டதாவென்று கேட்டுவந்தேன். ஒவ்வொரு தடவையும் இன்னும் ஒன்றுமகப்படவில்லை என்ற பதிலைத் தவிர வேறொன்றும் கிடைக்கவில்லை. இருந்தும் பையகப்பட்டுவிடுமென்றும் நம்பிக்கைமாத்திரம் எனக்கு இருந்துகொண்டிருந்தது.

திரும்பவும் தூத்துக்குடி போகவேண்டிய காரியம் ஒன்று எனக்கு நேர்ந்தது. எப்பொழுதும்போல, தூரப்பிரயாணத்துக்கு முதல் கிளாஸ் வண்டியிலேயே ஏறிச்சென்றேன். அன்று நான் ஏறிய வண்டியிலே ஒரு ஸ்திரீயும் பிரயாணஞ்செய்தாள். அவள் கழுத்தில் மூன்று வடம் கடிகார சங்கிலி போட்டுக்கொண்டிருந்தாள். காற்றில் அவளுடைய மேல்துணி கொஞ்சம் கலைந்ததால் அச்சங்கிலியில் இணைக்கப்பட்டிருந்த தொங்கட்டம் ஒன்று என் கண்ணிற்பட்டது அதை நான் பாராததுபோல கவனித்து வந்தேன். அந்தத் தொங்கட்டத்தில் ஒருவருஷத்துக்கு முன்னால் என்னோடு பிரயாணஞ் செய்தவனுடைய சிறு வுருவொன்று அடைக்கப்பட்டிருந்தது. அந்த உருவைப் பார்த்ததும் அது என்னுடன் பிரயாணஞ் செய்தவனுடையதே யென்று எனக்கு நிச்சயமாகத் தெரிந்ததால், அவனிருக்குமிடத்தை யறிந்து பையைமீட்க வேண்டிய ஏற்பாடுகளைச்செய்துவிட்டுத்தான் மேற்பிரயாணஞ் செய்வதென்று தீர்மானித்தேன்.

வண்டி கும்பகோணம் வந்ததும் அந்த ஸ்திரீ கீழிறங்கினாள். இங்குதான் அம்மனிதனும் ஒரு வருஷத்துக்கு முன்னாலிறங்கியது. ஆதலால் நானும் வண்டியை விட்டுக் கீழிறங்கினேன். அந்த ஸ்திரீக்காக ஒரு வண்டி வந்து ரயிலடியில் காத்துக்கொண்டிருந்தது. அதில் அவள் ஏறிச் சென்றாள். நான் ஒரு வாடகை வண்டி பிடித்துக்கொண்டு அந்த ஸ்திரீயின் வண்டிக்குப் பின்னாலேயே விடும்படியாக உத்திரவிட்டேன். அந்த ஸ்திரீ ஒரு பெரிய மாளிகையில் போயிறங்கினாள். ஆதலால் அவள் ஒரு சீமாட்டியாக விருக்கவேண்டுமென்று எண்ணினேன்.

இருந்தும், என் பையை எடுத்துக்கொண்டு போயிருக்கவேண்டியவன் முகம் எனக்கு நன்றாக ஞாபகமிருந்தபடியாலும், அந்தப்பை போனதினால் எனக்கு அநேக லக்ஷ ரூபாய் நஷ்டமாகிவிட்டபடியாலும் போலீஸ் ஸ்டேஷன் போய் நான் கண்டதையும் அதனால் எனக்குண்டான சந்தேகத்தையும் தெரிவித்தேன். நான் சொன்னதையெல்லாம் போலீஸ் சூபரின்டெண்டெண்டு சாவதானமாய்க் கேட்டுவிட்டு உடனே "நீர் சொல்லும் ஸ்திரீ இந்த ஊருக்காக ஒரு பெரிய சீமாட்டி. அவளை யறியாதவர் ஒருவருமேயில்லை. அவள் ஒரு பெரிய உத்தியோகஸ்தரின் மனைவி. அவர் ஏராளமாகச் சொத்து சேர்த்து வைத்ததும் இறந்துவிட்டார். அவளுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். ஒருவன் தூத்துக்குடியில் கடற்றீர்வை ஆபிஸில் வேலையாயிருந்தான். அவன் ஒரு வருஷத்துக்கு முன்னால்தான் படகுமுழுகி இறந்துவிட்டான். மற்றவன், போன அக்டோபரில் வெளியே சென்றவன் இன்னும் வீடுவந்து சேரவில்லை. இன்றைக்கு வருவான், நாளைக்கு வருவான் என்று அவனுடைய தாய் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறாள். அப்படிப்பட்டவர்கள் மேல் நீர் சந்தேகப்படுவது சரியாயிராது. அவர்களைப் போய் நாங்கள் விசாரணையும் செய்யமுடியாது" என்று சொல்லிவிட்டார். இதைக்கேட்ட எனக்கு வேறு வழி ஒன்றும் தோன்றவில்லை. ஆதலால் பேசாமல் திரும்பி பட்டணம் வந்து சேர்ந்தேன். அங்கு வந்ததும் போலீஸ் ஸ்டேஷனுக்குச்சென்று என்னுடைய சமுசயத்தையும் நடந்த விஷயங்களையும் ஒன்றுவிடாமற் கூறினேன். அங்கும் ஒன்றும் சரியான பதில் கிடைக்காதபடியால் திரும்பி வீடுவந்தேன்.

இதற்கு நாலுநாளைக்குப்பிறகு நான் என்கடையில்

நின்றுகொண்டிருந்தேன். அப்பொழுது ஒருவன் என் குமாஸ்தாவிடம் வந்து ஏதோ பேசிவிட்டு என்னை நோக்கி வந்தார் அவரைப் பார்த்ததும் என்னுடன் தூத்துக்குடியிலிருந்து பிரயாணம் செய்தவரென்றறிந்துகொண்டேன். உடனே அவரை உள்ளறைக்கு அழைத்துப்போய் ஒரு நாற்காலியிலுட்காரச் சொன்னேன். அவர் மிக்க அவசரப்பட்டவர்போல் காணப்பட்டார். ஆதலால் நாற்காலியிலுட்காராமலே "நான் உம்முடன்கூட தூத்துக்குடியிலிருந்து பிரயாணம்செய்தேனே ஞாபகமிருக்கிறதா" என்று கேட்டார். அதற்கு நான் "நன்றாய் ஞாபகமிருக்கிறது. அதை எப்பவும் மறக்காதிருக்கக் காரணமுண்டு" என்றேன். அவர் "நானும் மறக்கவேமாட்டேன். அன்றைக்கு முதல் நாளிரவு சமுத்திரக்கரையெல்லாம் அலைந்து திரிந்தேன். தமையனொருவர் படகுமூழ்கி சமுத்திரத்திலிறந்துவிட்டார். அவருடைய தேகம் கரையிலொதுக்கப்பட்டிருக்குமென்று தேடியலைந்தேன். ஆனால் தேகம் கிடைக்கவில்லை. படகில் உடைந்ததுண்டுகள் கரையிலகப்பட்டதால் அவற்றையெடுத்து ஒரு கருப்புப் பையில் போட்டுக்கொண்டு வந்தேன்.

நான்.—"கருப்புப் பையிலா"? உம்மிடம் கருப்புப் பையொன்றிருந்ததா என்ன ?

அவர்.—"பொறுத்துக் கேளுங்கள்." உம்மிடம் ஒரு பையிருந்ததைப் பார்த்து அப்பொழுதே அது என் பை போலிருக்கிறது என்று சொல்லிக்கொண்டேன் திருச்சிராப்பள்ளியில் நீர் கீழே யிறங்கினதும் உம்முடைய பைக்குப் பதிலாக என் பையை எடுத்துக்கொண்டு போனீர். உம்முடைய சொக்காயையும் குடையையும் வண்டியிலேயே வைத்துவிட்டிறங்கினீராதலால் திரும்பி வந்துவிடுவீர் என்று சும்மாவிருந்தேன்.

நான்.—ஆமாம், ஆனபோதிலும் நீர்.

அவர்.—"ஒரு நிமிஷம் பொறும். நான் சொல்வதைச் சொல்லிவிடுகிறேன் நீர் என்ன சொல்ல வந்தீரென்பது எனக்குத்தெரியும். நான் என் திரும்பவும் உம்மிடம் உமது பையைக் கொண்டுவந்து கொடுக்கவில்லையென்று கேட்கப் போனீர். நான் சொன்னதைக் கேட்டால் விஷயமெல்லாம் புரிந்துபோய்விடும்.

அவரை நான் உட்காரச்சொல்லி நானும் உட்கார்ந்து கொண்டேன்.

அவர்.—கும்பகோணம் வந்ததும் நான் அவசரத்தில் என் பையேயென்று நம்பி என்னருகிலிருந்த பையை யெடுத்துக்கொண்டிறங்கிவிட்டேன். நான் வீடுபோனதும், என் அண்ணன் இறந்ததைக் கேட்டதும் என் அன்னை எவ்வளவு துயரத்திலிருந்தாளோ, அவ்வளவுசோகத்திலேயே அப்பொழுதுமிருந்ததைக் கண்டேன். அங்கிருந்த வைத்தியரிடம் என் தமையன் தேகத்தைக் கண்டுபிடிக்கக் கூடவில்லையென்றும் ஆனால் உடைந்த படகில் சில துணுக்குகளைக் கொண்டுவந்திருக்கிறேனென்றும் சொன்னேன்.

வைத்தியர் இதைப்பற்றி யொன்றுமே என் தாயாரிடம் சொல்லாதிருக்கும்படி உத்திரவிட்டார் ஆதலால் நான் கொண்டுவந்த பையை அப்படியே என்னறையில் பீரோவில் வைத்துப் பூட்டிவிட்டு கும்பகோணத்தைவிட்டு சிங்கப்பூருக்கு வியாபார விஷயமாக அவசியமாய் உடனே போகவேண்டியிருந்ததால் அன்றே நாகப்பட்டணத்தில் கப்பலேறிவிட்டேன். அன்று போகாவிட்டால் எனக்கு வீணாகப் பெரு நஷ்டம் வந்திருக்கும். என் தாய்க்கு ஒத்தாசைக்கு என் சகோதரியும் சகோதரி புருஷனுமிருந்ததால் நான் போவதற்கு அவள் தடையொன்றும் சொல்லவில்லை. நான் நாகப்பட்டணம் போய்ச் சேர்ந்த கொஞ்சநேரத்துக்கெல்லாம் கப்பல் புறப்பட்டுவிட்டது. கொஞ்சம் தவறியிருந்தால் அன்று எனக்குக் கப்பல் கிடைத்திராது. நேற்று காலமேதான் திரும்பி ஊருக்கு வந்தேன். வீடுவந்து என் தாயை வணங்கியதும் அவள் என்னைப் பார்த்து, தூத்துக்குடியிலிருந்து கொண்டுவந்த பை யெங்கேயென்று கேட்டாள். நான் என் அறையிலிருக்கிறது என்றேன். இங்கே எடுத்துக்கொண்டுவா என்றாள். மறுவார்த்தை பேசாமல் பீரோவைத் திறந்து பையை எடுத்து அவளிடம் கொண்டுவந்து அதைத் திறக்கப்போனபோது என் தாய் "அது உன் பைதானா, நிச்சயமாகச் சொல்லுவாயாடா குழந்தாய்" என்றாள். இதைக்கேட்ட எனக்கு வியப்புண்டாகிவிட்டது. இது என் பையாயிராவிட்டால் நான் என்னையே நம்பமாட்டேன் என்றேன். அதற்கு என் தாய் "அப்பையைக் கொண்டுவந்தபிறகு திறந்து பார்த்தாயா" என்றாள். நான் "இல்லையென்று நிச்சயமாய்ச் சொல்வேன். திறக்க எனக்கு அவகாசமில்லை. அன்றியும் அதைத் திறந்துபார்த்தால் இறந்த அண்ணனுடைய ஞாபகமுண்டாகி எனக்கு விசனத்தையுண்டு பண்ணும் ஆதலால் திறக்கவில்லை" என்றேன். அப்படியானால் ஒரு வேடிக்கை நடக்கப்போகிறது

அதற்குத் தயாராக விரு. நீ வேறு யாருடைய பையையோ எடுத்து வந்துவிட்டாய் என்று என் தாய் சொன்னாள்.

"நான் பதில்சொல்லாமல் பையைத்திறந்து கொண்டிருந்தேன். ஆனால் அந்தப் பூட்டுக்கு நான் வைத்துக்கொண்டிருந்த சாவி சரியாகவில்லை.

"உடனே என் தாய் ஒரு சத்தம் செய்ய இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த போலீஸ்இன்ஸ்பெக்டர் ஒருவர் உள்ளே வந்தார், என்று முடித்தார்.''

என்னுடன் இப்படிப் பேசிக்கொண்டிருந்தவர் வெளியே போய்த் தெருவில் வண்டியிலுட்கார்ந்த ஒருவருக்கு சமிக்ஞை செய்தார். உடனே அவர் வண்டியை விட்டிறங்கி உள்ளே வந்தார். அவர்தான் கும்பகோணம் போலீஸ் இன்ஸ்பெக்டர். அவரும் இதே கதையைச் சொல்லி எனது கருப்புப் பையை மேஜைமேல் வைத்து இதோ ஐயா உமது பை; நீர் ஸ்டேஷனில்வந்து சொன்னது சரிதான். இவர் தவறிப்போய் உம்முடைய பையை எடுத்துக்கொண்டு போய்விட்டார். அன்று இவருடைய தாய் எனக்குச்சொல்லியனுப்பியபோது இப்பை திறக்காமற்றான் இருந்தது. நான்பூட்டையுடைத்துத்திறந்து பார்த்ததும் பையினுள்ளே உம்முடையபெயர் எழுதியிருக்கக் கண்டேன். சாமான்கள் அப்படியே பத்திரமாக விருக்கின்றன. எடுத்துக்கொள்ளும் என்றார். நான்என்கையிலிருந்த பையைக்கொண்டு வந்து சொந்தக்காரரிடம் ஒப்புவித்தேன். இரண்டுபையும் ஒரேமாதிரி, ஒரேகனமாக விருந்தது. தன் பையைக் கண்டதும் கும்பகோணம் பிரபுவுக்கு மிகுந்த சந்தோஷ முண்டாயிற்று. அந்தப் பையிலிருந்தவைகளை மேஜையின் பேரில் கொட்டினார். அவர் கண்களிரண்டிலும் நீர் ததும்பியது நீர் திவலைகள் சுருண்டு அம்மரத்துண்டுகளின்பேரில் விழுந்தன. "என் அன்னைக்கும் எனக்கும் என் தமயனுடைய அடையாளங்கள் இவைகள்தான். நாங்கள் சகோதரிருவரும் ஒரே ஜாடை. என்தமயன் சிறுவரு ஒன்றை என் அன்னை தன் கழுத்திலிடைவிடாது அணிந்திருக்கிறாள். இத்துண்டுகளையும் பூஜிப்பாள்'' என்றார்.

நான் அவருடைய சகோதரவாஞ்சையையும், பெருந்தன்மையையும், தவறுதலாய்எடுத்து வந்ததை இன்ஸ்பெக்டருக்கு ரூபித்த அவர் அன்னையின் புத்திமதியையும் மெச்சி, நான் தவறுதலாய்த் தோஷம் சாற்றின குற்றத்தை மன்னிக்கவேண்டி, அவர்களிருவருக்கும் விடை யளித்து என் வியாபாரத்தில் கவனம் செலுத்திவந்தேன்.

சுகாதார விளக்கம்

HYGIENE

XII அதிகாரம்

பண்டித நடேசசாஸ்திரியார் எழுதினது

தொத்துநோய் பிரசமனமும், துர்க்கந்தத்தைப் போக்குதலும்

150. தொத்துநோயை அடக்கல்.—நமது தேசத்தில் வெகு கொடியவைகளாக நாம் கருதியிருக்கின்ற தொத்துநோய்கள், அம்மை, விஷபேதி, பிளேக் இவைகளாம். இவைகளின் தீமையை அரசாங்கத்தார் ஒருவாறு நன்றாக அறிந்துகொண்டு இவைகளுண்டாகும் காலங்களில், நாம் நடந்துகொள்ளவேண்டிய பலவித முறைகளைப் பற்றியும் ஜனங்கள் தாங்களே செய்யவேண்டிய நிபந்தனைகளைப் பற்றியும் பலவித உத்தரவுகள் பிறப்பித்திருக்கின்றார்கள். அவைகளிலும் இன்னும் ஸுகஸந்தர்சன முறைகளிலும் ஏற்பட்டிருக்கும் முக்கியமான விஷயங்களை நாம் எடுத்துக்காட்டுவோம். எல்லா ஏற்பாடுகளுடைய முக்கிய கருத்து இத்தொத்துநோயின் வித்தைப் பரவவிடாமல் உடனே கண்டிப்பதாம்.

151. தொத்துநோயைக் கண்டிக்கும் ஏற்பாடுகள்.—

1. ஏதாவது தொத்துநோய் என்று சொல்லும் வியாதி உண்டானதும் அதை ஒளிக்காமல் ஜனங்கள் அதிகாரிகளிடம் தெரிவிக்கவேண்டும்.

2. தொத்துநோய் உண்டாய்விட்டதென்பது திண்ணமானவுடன் எவ்விடத்தில் அந்நோய் உண்டாயிற்றோ அவ்விடத்தை இரண்டு மூன்று பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திற்கும் சில சிப்பந்திகள் ஏற்படுத்திச் சில மருந்துகளையும் கையோடு காவலாக வைத்திருக்க வேண்டும். விசேஷமாய் 5000-ஜனத்தொகை யடங்கிய ஒரு அம்சத்தை ஒரு பாகமாக அதிகாரிகள் பிரிப்பார்கள். ஒவ்வொரு பக்கத்துக்கும் ஏற்படவேண்டிய சிப்பந்திகளைப்பற்றியும் அங்கிருக்கவேண்டிய மருந்துகளைப்பற்றியும் சர்க்கார் உத்தரவுகள் ஏற்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பாகத்துக்கும் வேண்டிய சிப்பந்திகள் ஒரு ஸர்கில் இன்ஸ்பெக்டர், ஒரு சேவகன், ஒரு தோட்டி. இவர்கள் அடிக்கடி தங்கள் தங்கள் எல்லைகளுக்குள் சுற்றிக்கொண்டும் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் சிப்பந்திகள் மூலமாய்ச் சுகமான வாழ்க்கைக்கு விரோதமாயிருக்கும் குப்பைகூளம், சாக்கடைத்தேக்கம் முதலியவைகளை அகற்றிக்கொண்டும் அப்பாகத்தில் வசிக்கும் குடிகளைச் சாதாரணமாயுள்ள சுகமான வழிகளைச் சரிவர பாதுகாத்துக்கொண்டிருக்கும்படி செய்துமிருக்கவேண்டும். அந்நகரம் முனிசிபாலிட்டியாகவிருந்தால் அச்சங்கத்தின் உத்தியோகஸ்தர்களும் போலீஸ் உத்தியோகஸ்தர்களும் இத்தொத்து நோயை அடக்கமுயன்றுவரும் சிப்பந்திகளுக்குத் தங்களால் கூடிய உதவி செய்யவேண்டும்.

152. விஷபேதி உண்டானதும் செய்ய வேண்டிய ஏற்பாடுகள்.—ஒருவீட்டில் விஷநோய் உண்டாயிற்று என்ற சங்கதி எட்டினதும் அந்நோயை அடக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்கள் அவ்வீடுசென்று செய்யவேண்டிய ஏற்பாடுகள் பலவுள. விஷபேதியாகவிருந்தால் நோயாளி வாந்திசெய்த அழுக்குகள், வெளிக்குச் சென்ற மல மூத்திரங்கள் இவைகளை யெல்லாம் கார்பாலிக் ஆஸிட் என்ற மருந்துகலந்த ரம்பத்தூள் தூவப்பட்ட சட்டிகளில் பெருக்கித்தள்ளி அவ்வீட்டுக்கு அப்பால் எரிந்துவிட வேண்டும். சில வேளைகளில் ரம்பத்தூள் அகப்படாமற்போனால் உமி அல்லது சாம்பல் இவைகளைக்கலந்து எடுத்து அப்புறப்படுத்தவேண்டும். இம்மஷ்டுக்கள் நன்றாக தீப்பட்டு எரிய கிரோஸீன் என்று சொல்லப்படும் மண்ணெண்ணெய்யை ஊற்றி எரிக்கவேண்டும்.

துணிமணிகள், படுக்கைகள் இவைகளின்மேல் வாந்தியாவது மலமாவது பட்டிருந்தால் அவைகளையும் எரித்துவிட வேண்டும். துணிமணி படுக்கை இவைகளை எரித்துவிட முடியாமற்போனால் அவைகளைப் பரிசுத்தப் படுத்தும்பொருட்டு ஏற்பட்டிருக்கும் மருந்தை நீரில் கலக்கி கொதிக்கும்படி காய்ச்சி, காயும் அவ்வெந்நீரில் இவைகளை யமுக்கி வைத்து இவைகளின்மேல் நின்றவிஷத்தை ஒருவாறு போக்கி இவைகளை அந்நோயாளிகளுக்குத் திரும்பிக் கொடுக்கவேண்டும்.

விஷபேதி சிதறிய கட்டில் முதலிய சாமான்கள் மண்தரை, முதலியவைகளில் ரஸகற்பூரங்கலந்த ஓர்வித திராவகத்தை நன்றாகத் தெளித்து பரிசுத்தம் பண்ணவேண்டும். சாக்கடைகளை நன்றாகக் கழுவி அவைகளில் கொஞ்சம் ரஸகற்பூரம் கலந்த திராவகத்தை ஊற்றவேண்டும். நோயாளி நோய் நீங்கித் தேறினதும் அவன் படுத்திருந்த அறையை நாம் நன்றாக சாஸ்திரப்படி பரிசுத்தம் பண்ணிவைக்க வேண்டும். அவ்வறையின் தரையில் எங்கெங்கு வியாதியின் மலமொரு காலத்தில் விழுந்திருக்குமோ அவ்விடங்களை எல்லாம் மண்வெட்டி எடுத்து அம்மண்ணை அப்புறப்படுத்தவேண்டும். அது சாத்தியமில்லாத பட்சத்தில் அத்தரையில் வைக்கோல் முதலியவைகளைப் பரப்பி அவ்வைக்கோலால் அவ்வறையைத் தீயிட்டு கொளுத்தவேண்டும்.

153. தொத்துநோய் காலத்தில் கவனிக்கவேண்டிய விஷயங்கள்:—

1. நமது வீடுகளை நன்றாக சுண்ணாம்பு அடித்து நமது வீடுகளின் உட்பக்கங்களிலேயும் வெளிப்பக்கங்களிலேயும் குப்பை கூளங்கள் குவிக்கப்பட்டிருந்தால் அவைகளை வீட்டுக்குச் சமீபத்தில் ஒருபொழுதும் வைக்காமல் அப்புறப்படுத்தவேண்டும். மாட்டுக்கொட்டிலின் அழுக்குத் தண்ணீர், வீட்டின் சாக்கடை நீர் இவைகள் ஒன்றும் தேங்கி நிற்காமல் அப்போதைக்கப்போது அகற்றப்படுவதில் நாம் வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

2. இவ்வாறு குப்பை முதலியவைகளை அகற்றிய பிறகு அவைகளிருந்த விடங்கள் நாற்றமடித்துக் கொண்டிருந்தால் அவ்விடங்களைக் கொஞ்சம் ஆழமாகக் கொத்தி நாற்றம் நாறும் மண்ணை எடுத்து அப்புறப்படுத்தி பரிசுத்தமான மண்கொண்டுவந்து கொட்டி அவ்விடங்களை மூடவேண்டும். நாம் முதல் முதல் வெட்டி எடுக்கும் நாற்ற மண்ணை, நல்ல மண் காண்கின்ற வரையில் வெட்டி யெடுக்கவேண்டும்.

3. நாம் நமது வீட்டு உட்பக்கம் வெளிப்பக்கம் இருபக்கங்களிலேயும் சுண்ணாம்படிக்க முடியாத ஏழைகளாக விருந்தால் உட்பக்கத்திலாவது அவசியமடிக்கவேண்டும்.

4. நமது வீடுகளுள் சந்து பொந்துகளில் அடைக்கப்பட்டும் திணிக்கப்பட்டும் சில கந்தைகள், கந்தைத் துணிகளின் மூட்டைகள் இவைகளிலிருக்கலாம். இவைகளை நாம் தூங்குமறையில் குவியாதபடி பாதுகாக்கவேண்டும். ஒன்றுக்கும் உதவாத அதிக கந்தைகளை நாம் எரித்து விடலாம்.

5. வீட்டுக் கதவுகளையும் ஜன்னல்களையும் அடைத்து வைக்காமல் காற்றுப்போக்குக் குறைவில்லாதபடி எப்பொழுதும் திறந்து வைக்கவேண்டும்.

6. நகரங்களில் வசிப்பவர்களுக்குப் பெரும்பாலும் கக்கூசுகள் வீட்டிற்குள்ளேயே யிருக்கலாம்,

அவைகளில் அழுக்கு நிற்காமல் ஒரு நாளைக்கு இருமுறையாவது அவைகள் பரிசுத்தமாகும் வழியை நாம் தேடவேண்டும்.

7. அவ்வாறே நமது வீட்டைவிட்டு வெளியில் ஓடிக் கலக்கும் சிறு சாக்கடைகளையும் தினந்தோறும் இருமுறை சீராகக் கழுவவேண்டும். நமது வீட்டுக்குச் சமீபத்தில் சாக்கடைநீர் தேங்கிநிற்கும் குழிகளையும், கொட்டகையிலிருந்து மாடு முதலிய கால்நடைகளின் மூத்திரம் ஓடிவந்து தேங்கும் குழிகளையும் நாம் அடிக்கடி பரிசுத்தம் பண்ணிவைக்கவேண்டும்.

இவ்வேழு நிபந்தனைகளும் நம்மைச்சுற்றிய ஸ்தலங்களையும் நமது வாஸஸ்தலங்களையும் நாம் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளும் முறைகளைப் போதிக்கின்றன. இவைகளன்னியில் நாம் நமது சொந்த தேகம், உடுப்பு, உணவு, முதலிய விஷயங்களிலும் வெகு ஜாக்கிரதையாகவிருக்கவேண்டும்.

8. தொத்துநோய் வியாபித்திருக்கும் காலத்தில் நாம் நமது தேகத்தை வெகு பரிசுத்தமாக வைத்துக்கொண்டு எல்லா விதத்திலும் பரிசுத்தமான ஆடை உடுக்க வேண்டும். தேகத்துக்கு ஒத்துக்கொள்ளவில்லையென்று ஸ்நாநம் செய்யாமலிருக்கக்கூடாது. வெந்நீரிலாவது தினந்தோறும் நாம் குளித்து நமது சரீரத்தை நாம் வெகு பரிசுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

9. நாம் புசிக்கும் ஆகாரம் வெகு சுலபத்தில் ஜீரணித்துக் கொள்ளக்கூடிய ஆகாரமாக விருக்கவேண்டும். அது புஷ்டிகரமாகவும் பரிசுத்தமானதாகவுமிருக்கவேண்டும். வயிற்றுப்போக்கை யுண்டாக்கும் கீரை முதலிய பண்டங்களை நாம் தொத்துநோயுள்ள காலத்தில் புசிக்கலாகாது. இவைகளல்லாது நாம் புசிக்கும் மற்ற காய்கறி பதார்த்தங்களை நாம் நன்றாகக் குழயவிட்டுச் சமைத்துப் புசிக்கவேண்டும். பாதி வெந்ததும் வேகாததுமான சாகங்களை நாம் இக்காலத்தில் புசிக்கவேகூடாது. சமையற்செய்யும் முன்பாக, நாம் அரியும் சாகங்களை நன்றாகக் கழுவி அரியவேண்டும். எப்பொழுதும் நாம் உபயோகிப்பதைவிட தொத்துநோய் பரவியிருக்கும் காலத்தில் வீசம் பங்கு உப்பு அதிகமாக உபயோகிக்கவேண்டும். உப்பு நல்லதென்று அதிகமாக சேர்க்க ஆரம்பித்தால் வயிற்றுப்போக்கு உண்டாகும். நாம் புசிக்க சித்தப்படுத்தும் ஆகாரத்தின்மேல் ஈ, கொசு, முதலியவைகள் வந்து உட்காராத வண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

10. தீர்த்தம்.—விஷபேதி முதலிய தொத்துநோய் பரவியிருக்கும்பொழுதும் அல்லது அந்நோய் சீக்கிரம் சம்பவிக்கலாம் என்ற பயம் உண்டாயிருக்கும்பொழுதும் நாம் உபயோகிக்கும் தீர்த்தத்தில் நாம் வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். அசுத்தமான நீரை நாம் ஒன்றுக்கும் உபயோகிக்கக்கூடாது. எதற்கும் சுத்தநீரை உபயோகிக்கும் வழி தேடவேண்டும். நாம் குளிக்கும் நீர், அருந்தும் நீர், உணவுகளைச் சுத்தப்படுத்தும் நீர், தயிர், மோர் இவைகளில் கலக்கும் நீர் இவைகளெல்லாம் வெகு பரிசுத்தமான நீராகவிருக்கும் வழி பார்க்கவேண்டும்.

11. விஷபேதி உண்டாயிருக்கும் காலத்தில் நாம் நமது தேகத்தைப் பரிசுத்தம் செய்துகொள்ளுவதற்கென்று சாதாரண பேதிக்கு சாப்பிடக்கூடாது. ஏதாவது ஒரு காரணத்தால் நமக்கு மலப்பிரவிருத்தி அதிகமானால் அதை அடக்க நாம் முயலவேண்டும்.

12. இவ்வித ஜாக்கிரதைகளுக் கெல்லாம் மேலாக நாம் மனோதைரியமாக விருக்கவேண்டும். "ஐயோ" எங்கு அந்நோய் நம்மைப் பற்றிக்கொள்ளுமோ என்ற வியாகுலமே கூடாது. அதைப்பற்றி எப்பொழுதும் பேசிக்கொண்டிருக்கின்றவனும் சுகப்படமாட்டான். ஆகையால் அந்நோயைப்பற்றி நினைக்காமலும் அதைப்பற்றி பயப்படாமலும் வெகு அலட்சியமாக விருக்கவேண்டும்.

நாமிதுவரையில் சொல்லிவந்த ஏற்பாடுகள் ஒவ்வொருவித தொத்துநோய் உண்டாகின்ற காலத்திலெல்லாம் நாம் நடத்தவேண்டிய ஏற்பாடுகள்.

154. பிளேக்.—பிளேக் என்பது ஒரு பெரும் தொத்துநோய். ஆதலால் இந்நோய் உண்டாகும் காலத்தில் இவ்வித ஏற்பாடுகளை அனுசரிப்பதுடன் இன்னும் சில அதிகமான நிபந்தனைகளையும் நாம் அனுசரிக்கவேண்டும். அரசாங்கத்தாரும் பலவிதமாய் இந்நோய்க்கு பந்தோபஸ்து செய்திருக்கிறார்கள். பிளேக் என்ற மகாமாரி நேராகவோ அல்லது மறைந்தோ மற்றொரு பிளேக் நோயாளி மூலமாகத்தான் ஒரு புதுயிடத்துக்கு வருகின்றது என்று பிரசித்திபெற்ற வைத்தியர்கள் தீர்மானித்திருக்கின்றார்கள். அன்றியும் பிளேக் ஓரிடத்தில் தோன்றினால் அங்கிருந்து ஒரு வஸ்துவும் மற்றவிடங்களுக்குப் போகக்கூடாதென்று ஏற்படுத்திக்கொண் டிருக்கிறார்கள். இவ்வியாதி மற்ற விடங்களில் பரவாமல் தடுக்கப்பட பின்வரும் நிபந்தனைகளைக் கவனிக்கவேண்டும்.

155. பாஸ் போர்ட்.—Passport. மனிதர்கள், சாமான்கள், இவைகள் ஒவ்வொன்றும் பிளேகாயிருக்கும். அல்லது இருந்தவிடம் இவைகளிலிருந்து பிளேக் நின்ற 10, 15-நாள் வரையில் மற்ற இடங்களுக்குப் போகாமலிருந்தால் அந்நோய் மற்ற இடங்களில் பரவமாட்டாது. ஆனால் இவ்வாறிருப்பது கஷ்டம். முற்றிலும்தடுக்க ஒருபொழுதும் முடியாது. பிளேக் யில்லாதவனைப் பிளேக் பரவியிருக்கும் ஊரைவிட்டு மற்ற ஊருக்குப் போகக்கூடாதென்று எப்படித் தடுக்க முடியும். அவன் அவ்வாறு போகும் பொழுது அதிகாரிகள் அவனுக்கு ஒரு சீட்டு கொடுத்து பிளேக் நோய் பரவியிருக்கும் இடத்திலிருந்து வரப்பட்டவன், அவன் போகும் ஊர் அதிகாரிகள் அவன் மேல் கண்ணோக்கமாகவிருந்து அவன் மூலமாகப் பிளேக் அவ்வூரில் உண்டாகாத வண்ணம் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்று எச்சரிப்பார்கள். இவ்வாறு வந்தவனை 10-நாள் வரையில் பிரதிதினம் ஜாக்கிரதையாகப் பரிசோதித்து அவனுக்கு அந்தப் பத்து நாட்களுக்குள் ஜ்வரம் முதலிய நோய்கள் ஒன்றும் உண்டாகாத பக்ஷத்தில் அவனாலினி பிளேக் உண்டாகாமாட்டாது என்று நம்பி அவனை நிர்பந்தப்படுத்தாமல் விட்டுவிடுகின்றார்கள். இம்முறைதான் பாஸ்போர்ட் (Passport) முறை என்று சொல்லப்படும். பிரதான நகரங்களில் இவ்வித பரிசோதனைக் கிரமமாக நடக்கும். அதேபிரகாரம் கிராமங்களில் நடக்கமாட்டாதாகையால் அவ்விடங்களுக்காக அதிகாரிகள் செய்திருக்கும் ஏற்பாடுகளைப்பற்றிச் சொல்லுவோம்.

156. சோதனைக் கோட்டங்கள்.—Observation circles. பிளேக் நோய் உண்டாகும் காலத்தில் அந்நோய் அணுகலாம் என்ற பயமிருக்கும் ஒவ்வொரு ஜில்லாவிலும் சோதனைக்கோட்டங்கள் ஏற்படுத்துவார்கள். குறைந்தபட்சம் பத்துமயில் சுத்தளவுள்ள பிரதேசத்தை ஒரு கோட்டமாகப் பிரித்து அதற்குள் அச்சோதனை நடத்த ஸானிட்டரி இன்ஸ்பெக்டர் (Sanitary Inspector) என்று சொல்லப்படும் அதிகாரியை நியமிப்பார்கள். இவ்வாறு ஏற்படும் நான்கு கோட்டங்களுக்கு மேலதிகாரியாக பிளேக் ஸூபர்வைஸர் என்ற பெரிய உத்தியோகஸ்தனை நியமிப்பார்கள். இவன் இன்ஸ்பெக்டர்கள் செய்யும் வேலைகளை அப்போதைக்கப்போது பரிசோதித்து தனக்கு மேலதிகாரியான ஜில்லா வைத்தியர்மூலமாய்க் கலெக்டர் அல்லது மற்ற அதிகாரிகளுக்கு ரிப்போர்ட்டுகள் அனுப்பிக்கொண்டிருக்கவேண்டும்.

157. ஜாகரூக சபை.—Vigilance Committee பிளேக் காணும் முன், நாம் வெகு ஜாக்கிரதையாகவிருந்து அது நாமிருக்கும் நகரத்துக்குட்புகாமல் தடுக்கவேண்டுமல்லவா! இவ்வாறு பாதுகாத்துக்கொள்ள புத்திமான்கள் எப்பொழுதும் ஜாகரூப சபை என்று சொல்லப்படும் சபையை இந்நோய் பயமிருக்கும் காலத்தில் ஏற்படுத்திக் கொள்ளுவார்கள். ஒவ்வொருவனுக்கும் தனது தெருவும் அக்கம் பக்கமும் அதிகமாகத் தெரிந்திருக்கு மாகையால் 200-வீடுகளுக்குள் ஒருவனை அவ்விருநூறு வீடுகளுக்கும் ஜவாப்தாரியாக பொறுக்கி ஜாகரூப சபையில் அவனை ஒருவனாக நியமிப்பார்கள். இவன் வேலை யென்னவெனில் இவனுக்குச் சோதனைக்காகவென்று கொடுக்கப்பட்டிருக்கும் 200-வீடுகளுக்குள் ஓர்வித நோயுமில்லையா, பிளேக் பிரதேசங்களிலிருந்து ஒருவரும் வரவில்லையா என்று பரிசோதித்துக்கொண்டும், அப்போதைக்கப்போது ரிபோர்ட்டுகள் செய்துகொண்டு மிருப்பதேயாம். இவர்கள் செய்யும் வேலையானது லோகோபகாரமாக செய்யும் சம்பளமில்லா வேலையாகையால் இவ்வேலையில் நியமிக்கப்படுகின்றவர்கள் தங்கள் நற்குணங்களுக்கும் நல்ல நடத்தைக்கும் பெயர் பெற்றவர்களாகவிருக்கவேண்டும்.

158. கப்பலை விலக்குதல்.—நிலத்தின் வழியாக வரும் பிரயாணிகளைப் பரிசோதிப்பதுபோல கப்பலேறி வரும் பிரயாணிகளைப் பரிசோதிக்க பல முறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் சென்னை ராஜாங்கத்தார் இதற்காகவென்று அச்சிட்டிருக்கும் பிளேக் நிபந்தனை புஸ்தகத்தில் * அறிந்துகொள்ளலாம். நமது ராஜதானியின் ஸானிடெரி கம்மிஷனராயிருந்த டாக்டர் கிங் இயற்றியிருக்கும் பிளேக் இன்ஸ்பெக்டர் புஸ்தகத்திலும் * நாம் தெரிந்துகொள்ளலாம். மேற்கூறிய புஸ்தகங்களில் பிளேக் உண்டாகும் காலத்தில் ஏற்படவேண்டிய வைத்திய சாலைகள், அவைகளில் கையோடு வைத்திருக்கவேண்டிய ஔஷதங்கள், ஒவ்வொரு நோயாளிக்கும் நாம் நடத்தவேண்டிய சிகிச்சை இவைகள் எல்லாவற்றையும் சாங்கோபாங்கமாய்ச் சொல்லியிருக்கின்றார்கள்.

159. அதிகாரிகள் வீடுகளைப் பரிசுத்தஞ் செய்தல்.—பிளேக் உண்டாகும் காலத்திலும் உண்டாகி நம்மை வருத்தும் காலத்திலும் நமது வீடுவாயில் முதலியவைகளை அதிகாரிகள் பரிசுத்தஞ் செய்வார்கள். அதற்கு நாம் உட்படவேண்டும் இந்நோய் பிரபலமாயிருக்கும்பொழுது வீடுதோறும் அதிகாரிகள் வந்து பரிசோதிப்பார்கள். அதற்கும் நாம் ஆக்ஷேபிக்கக் கூடாது.

160. பிளேகில் மாண்டபிணம்.—இதை எரிப்பதேதான் மற்றவர்கள் சௌக்கியத்திற்கு ஒருவித குறைவையும் உண்டாக்காது. ஆனால் இதை எல்லா மதத்தார்களும் ஒப்புக்கொள்ள மாட்டார்களாகையால் எரிக்கமுடியாத பிணங்களைப் பூமியின் அடிகளுக்குக்கீழ் மருந்துகளுடன் புதைக்கவேண்டும்.

* இப்புத்தகங்களை கவர்ன்மெண்டு அச்சயந்திரசாலையிலும், அடிஸன் கம்பெனியிலும் வாங்கலாம்.

இயற்கை அற்புதங்கள்
WONDERS IN NATURE

XII. வாயு
AIR

ஓர் பாத்திரத்தில் இருக்கும் தண்ணீரைக்கொட்டிவிட்டால் அதில் ஒன்றும் இல்லையென்று நாம் சொல்லுகிறோம். ஒரு அறையிலிருக்கும் வஸ்துக்களை அப்புறப்படுத்திவிட்டால் அதில் ஒன்றும் இல்லையென்று சொல்லுகிறோம். இது ஸாதாரணமாக நாம் சொல்லுவது; நன்றாய் யோசித்துப்பார்த்தால் இங்கு ஒன்றும் இல்லையென்று கூறுவது அவ்வளவு ஸரியல்லவென்று தோன்றும். ஓர் விசிறி எடுத்து விசிறிக்கொண்டால் அந்த அறையில் இருக்கும் ஏதோ ஒரு வஸ்து நமதுமேல் பட்டுக்கொண்டு ஓடுவதை உணருகிறோம். அந்த வஸ்து முன்னர் அசையாது சலனமற்று இருந்தது. அது கண்ணுக்குப் புலப்படாத வஸ்துவாகையால் நம்மைச்சுற்றி ஒன்றும் இல்லை என்றிருந்தோம். அது அசையும் காலத்தில் நமது மேலே பட நமக்கு ஸ்பர்ச உணர்ச்சி உண்டாகின்றது. உடனே நம்மைச்சுற்றிக் கண்ணுக்குப் புலப்படாமல் ஓர் வஸ்து இருக்கின்றது என்பது வெளியாகின்றது. இதுதான் வாயுவென்பது. அசையும் வாயுவிற்கே காற்று என்று பெயர்.

நம்மைச்சுற்றி இருக்கும் வாயு அசையாமல் இருக்கும்பொழுது வேறு வஸ்துவின் ஸஹாயமின்றி நாம் நமது கைகளை வீசுவதாலேயே வாயுவில் அசைவை உண்டாக்கி அந்த வஸ்து இருக்கின்றது என்பதை ஸ்பர்ச உணர்ச்சியால் அறியலாம். மேலும் ஒன்றுமில்லாத வாய் குவிந்த பாத்திரம் ஒன்றில் தண்ணீர் மெதுவாக உள்ளே போகும்படி முகர்ந்தால் அதன் உள் இருக்கும் வாயு பிடித்திருக்கும் நமது கைவிரல்கள் மேல் பட்டுக்கொண்டு ஓடுவதையும் அதுகுளிர்ச்சியாக இருப்பதையும் உணரலாம். இம்மாதிரி கண்ணுக்குப்புலப்படாத வாயு என்ற ஒருவஸ்து நம்மைச்சுற்றியிருக்கிறது என்பதை நாம் அறியலாம். இதுவும் அல்லாமல் வெறும் பாத்திரத்தில் உள்ளவாயு ஓடுவதை ஓர் சோதனையின்மூலமாகக் கண்ணாரக் காணலாம். ஓர் வாய்குவிந்த பாத்திரம் ஒன்றை தலைகீழாக ஓர்வாய் அகன்ற பாத்திரத்திலிருக்கும் தண்ணீருள் அமிழ்த்திவிடுவோம். பின்னர் அந்த வாய் குவிந்த பாத்திரத்தை மெதுவாய் நிமிர்த்த முயலுவோம். அப்பொழுது மெதுவாகக் குமிழிகள் தண்ணீர் உள்ளிருந்து மேலே கிளம்புவதைக் காணலாம். ஓர் ஒட்டைச்சொப்பை இம்மாதிரி தண்ணீருள் அமிழ்த்தினால் ஓட்டைவழியாய் கோர்வையான சிறு குமிழிகள் மேலேகிளம்பும். இக்குமிழிகளே பாத்திரத்துள் இருக்கும் வாயு. இந்தச் சோதனை மூலமாக நாம் ஸாதாரணமாக வெறும் இடம் என்று சொல்லும் இடங்களில் எல்லாம் கண்ணுக்குப் புலப்படாத வாயுவொன்றிருக்கிறது என்பது வெளியாகும்.

இந்த வாயு ஓர் வஸ்து என்பதைப் பின்வரும் சோதனை மூலமாக எளிதில் அறியலாம். ஓர் போலான கண்ணாடி பந்து, அதன் உட்புறத்தோடு ஸம்பந்தப்பட்ட ஓர் குழாயும், அதை மூடவும் திறக்கவுங்கூடியதுமான ஓர் அடைக்கும்கருவியும், உடையதாக இருக்கட்டும். அதை வாயு எடுக்கும் யந்திரத்தோடு ஸம்பந்தப் படுத்தவேண்டிய திருக்கும், அதை தராசில் தொங்கவிடுவதற்கு வேண்டிய கொக்கியும் தயாராக இருக்கட்டும். முதலில் இந்தப்பந்தை வாயு எடுக்கும் யந்திரத்தில் முடுக்கி அடைப்புக் கருவியைத் திறந்துவிட்டு இதனுள் இருக்கும் வாயுவைக் கூடியவரையில் எடுத்துவிடுவோம். பின்னர் அடைப்புக் கருவியை மூடிவிட்டு பந்தைஎடுத்து கொக்கியை மாட்டி ஓர் தராசில் தொங்கவிட்டு தராசைத் தகுந்த கனம் இட்டு ஸமமாக்குவோம். பந்தின் கனம் இவ்வளவு என்பது தெரியும். இப்பொழுது பந்தை எடுத்து கொக்கி நீக்கி அடைக்கும் கருவியைத் திறப்போம். உடனே புஸ் என்ற சப்தம் கேட்கும். இதுதான் வாயுவில்லாத பந்துள் வாயு புகும்பொழுது உண்டாகும் சப்தம். இந்தச் சப்தம் அடங்கியதும், முன்போல கொக்கியைமாட்டி தராசிலிருந்து பந்தைத் தொங்கவிடுவோம். உடனே பந்துமாட்டிய பக்கம் தராசு கொஞ்சம் இறங்கும். இதனாலே பந்தின்கனம் அதிகமாகிவிட்டது என்பது வெளிவரும். இது வாயு உள்ளே புகுந்ததால் உண்டானமையால் வாயுவுக்கு மற்றைய வஸ்துக்களைப்போல கனம் உண்டென்பது தெரியவருகிறது. ஆகையால் வாயுவும் ஓர் வஸ்துதான். அது கண்ணுக்குப் புலப்படவில்லையே ஒழிய வஸ்துவுக்குரிய மற்றைய லக்ஷணங்கள் எல்லாம் அதற்கு இருக்கின்றன.

வாயுவுக்கு எல்லாப் பக்கங்களிலும் அமுக்கும் சக்தி இருக்கிறது. இதை நாம் எளிதில் உணரலாம். ஒரு சிறிய பாத்திரத்தை நமது வாயின் மேல் கவிழ்த்துக்கொண்டு அதன் உள்ளிருக்கும் வாயுவை உறிஞ்சி விடுவோம் இங்கு நமது வாயே வாயு எடுக்கும் யந்திரத்தின் தொழிலைச் செய்கின்றது. உடனே அந்தப் பாத்திரம் வாயில் ஒட்டிக்கொள்கிறது. இதனுடன் அண்ணாந்து பார்ப்போம். பாத்திரம் வாயைவிட்டு விடுபடாது. நேராக முன்புறம் முகத்தைத் திருப்புவோம், அப்பொழுதும் பாத்திரம் விடுபடவில்லை. கீழே நன்றாகக் குனிந்து விடுவோம். அப்பொழுதும் பாத்திரம் விழுவதில்லை. வேறு எந்தப் பக்கம் திரும்பினாலும் ஸரி, பாத்திரம் ஒட்டிக்கொண்டே இருக்கின்றது. இதனால் சுற்றி இருக்கும் வாயு எல்லாப் பக்கங்களிலும் அமுக்கும் திறனுடையதென்றும், அதனால்தான் எங்கு நோக்கியபோதிலும் வாயில் ஒட்டிக்கொண்டிருக்கும் பாத்திரம் விடுபடாது நிற்கின்றது என்றும் வெளியாகின்றது. இந்தச் சோதனையில் பாத்திரத்தை வாயிலிருந்து இழுத்துவிடுவது கஷ்டம். நன்றாக அதன் உள்ளிருக்கும் வாயுவை உறிஞ்சிவிட்டோமாகில் பாத்திரத்தை எடுக்கும்பொழுது வாயின் சதையைக்கூட அது இழுத்துக்கொண்டு வந்துவிட்டாலும் வரும். பாத்திரத்தை லகுவாக எடுக்கவேண்டுமானால் நாம் அதன் உள் வாயுவை விடவேவேண்டும். உடனே பாத்திரம் வாயில் நிற்காது கீழே விழுந்துவிடும்.

வாயு மேல் நோக்கி அமுக்குகிறது என்பதை ஓர் அற்புதச் சோதனையாலும் வெளிப்படுத்தலாம். ஓர் வாய் குறுகலான பாத்திரம் ஒன்றை எடுத்து அது நிறையும்படி தண்ணீரை விடவும். அதன் வாயை ஓர் காகிதத்தால் மூடிவிட்டு அந்தக் காகிதத்தை உள்ளங்கையால் அமுக்கிக்கொண்டு மெதுவாக அந்தப்பாத்திரத்தைக் கவிழ்க்கவும். பின்னர் மெதுவாக உள்ளங்கையை எடுத்துவிடலாம். பாத்திரத்திலிருக்கும் தண்ணீர் ஒரு பொட்டுகூடக் கீழே விழாது. வாயு தனது மேல் அமுக்கும் சக்தியால் தண்ணீரைக் கீழே விழவொட்டாமல் தடுக்கின்றது.

முன் செய்த சோதனையில் தண்ணீருடன் இருக்கும் பாத்திரத்தை ஓர் தண்ணீர் நிறைந்த தொட்டியில் கவிழ்த்து அதன் வாய் தண்ணீருள் போன உடன் அதன் வாயிலிருக்கும் காகிதத்தை எடுத்துவிடுவோம். பாத்திரத்திலிருக்கும் தண்ணீர் தொட்டியில் கொட்டிவிடுவதில்லை. தொட்டித் தண்ணீர் மட்டத்திற்குமேல் பாத்திரத்துள் தண்ணீர் நிற்கின்றது. தண்ணீர் ஸாதாரணமாக இவ்வாறு குவிந்து நிற்காது இங்கு தண்ணீரை நிறுத்திவைப்பது வாயுவின் அமுக்கும் சக்தியே. இப்பொழுது முன்னதைவிட அதிக உயரமான பாத்திரத்தைக் கொண்டு முற்கூறியபடி செய்வோம். இதிலும் முற்கூறியவாறே தண்ணீர் நிறைந்திருக்கும். இவ்வாறு 34-அடிக்குள் எவ்வளவு உயரமான பாத்திரத்தில் சோதனை பார்த்தபோதிலும் தண்ணீர் உள்ளேயே நின்றுகொண்டிருக்கும். ஆகவே இவ்வளவு உயரத்தைத்தாங்கும் சக்தி வாயுவுக்கு இருக்கிறது.



முற்கூறிய சோதனையைப் பாதரஸத்தைக் கொண்டு மூன்றடி நீளக் கண்ணாடிக் குழாய் பாத்திரத்துள் செய்து பார்த்தால் அதில் மூன்றடி உயரம் பாதரஸம் நிற்பதே இல்லை. அந்த ரஸம் 30-அல்லது 29½-அங்குலத்திற்கு இறங்கி விடுகின்றது. 30 அங்குலத்தைவிட குறைவான குழாயுள் முற்கூறிய சோதனையைச் செய்து பார்த்தால் பாதரஸம்குழாய் முழுவதும் நிறைந்திருக்கும். அதைவிட எவ்வளவு உயரமான குழாயுள் செய்துபார்த்தபோதிலும் பாதரஸம் 30-அங்குலத்திற்கு இறங்கிவிடுகின்றது. ஆதலால் 30-அங்குலம் உயரமுள்ள பாதரஸத்தைத் தாங்கும் சக்தியோடு வாயு அமுக்குகின்றது என்பது தெரியவருகிறது.

இன்னும் நுட்பமாகவும் இந்த அமுக்கும் சக்தியை அளவிடலாம். ரஸத்தை வெடியுப்பு திராவகத்தால் நன்றாக சுத்தம் செய்து 1-சதுர அங்குலம் குறுக்கு அளவுள்ள 3-அடிக்குழாயுள் நிரப்பி அதில் வாயுக்குமிழிகள் இல்லாது உஷ்ணத்தால் செய்து முற்கூறிய சோதனையை நடத்தினால் ரஸம் 29½-

அங்குலம்வரை இறங்கிவிடும். இந்தக் குழாயின் வாயை மூடிக்கொண்டு வெளியே எடுத்து உள்ளே இருக்கும் பாதரஸத்தை ஜாக்கிரதையாகத் தவறவிடாது எடுத்து தராசில்போட்டு நிறுத்தால் 15-பவுன் கனம் இருக்கும். ஆதலால் வாயு ஓர் சதுர அங்குலத்தின் மேல் 15-பவுன் கனத்தோடு அமுக்கின்றது. (எந்தக் குழாயை வைத்துக்கொண்டு இந்தச் சோதனையைச் செய்தாலும் கணித மூலமாக இதே முடிவைக் கண்டு பிடிக்கலாம்.) மாக்டிபர் (ஜர்மனீ தேசத்தில் ஓர் பட்டணம்) என்னுமிடத்தில் ஓர் பிரகிருதி தத்வ சாஸ்திரி இரண்டுபோலான 12-அடி குறுக்களவுள்ள அரைக்கோளங்கள் செய்து அவைகளை ஒன்றோடொன்று வாயு புகவொட்டாது பொருத்தி அதனுள் இருக்கும் வாயுவை, வாயு எடுக்கும் யந்திரங்களால் எடுத்துவிட்டார். அவைகளைப் பிரிக்க இருபக்கங்களிலும் ஸுமார் 20-குதிரைகளைக் கட்டி இழுக்க வேண்டி வந்தது. இந்தப் பாரத்தின் அடியில் நாம் பிறந்தது முதல் இருந்து கொண்டிருக்கிறபடியால் நமக்கு இதன் அளவு இவ்வளவு என்று தெரியாமல் இருக்கின்றது.

தண்ணீர் நிறைந்திருக்கும் ஓர் இடத்தில் வாயு சென்று தங்குமாயின் அதனுள் இருக்கும் தண்ணீரை வெளியே போகும்படி செய்யும். இந்த விஷயத்தினாலும் (தண்ணீர் நிறைந்த பாத்திரத்துள் போடுங் கற்கள் எவ்வாறு தண்ணீரைவெளியே வழிந்தோடும்படி செய்கின்றனவோ அவ்வாறு செய்வதனாலும்) வாயுவை ஓர் வஸ்துவென்று சொல்லலாம். இதைப் பின்வருமாறு நிரூபணம் செய்யலாம். ஓர் சொம்பை ஓர் தண்ணீரிருக்கும் தொட்டியில் மொண்டு தலைகீழாகத் தண்ணீருள் உயர்த்திப் பிடித்துக் கொள்ளுவோம். வேறொரு சொம்பைத் தலைகீழாகக்கொண்டுபோய் மெதுவாக அதைத் தண்ணீர் நிறைந்திருக்கும் சொம்பின் அடியில் நிமிர்ப்போம். குமிழிகளை எல்லாம் தண்ணீர் நிறைந்த சொம்புள் பிடிப்போம். அடிப்பாத்திரத்தை நன்றாக நிமிர்த்ததும், மேல் சொம்பை எடுத்துப் பார்த்தால் அதனுள் தண்ணீர் குறைந்தும் வாயு புதிதாக நுழைந்தும் இருக்கும். அடிச்சொம்பிலிருந்துவந்த வாயு மேற்சொம்பில் தங்கி அதிலிருந்த தண்ணீரை வெளியே தள்ளிவிட்டது. இந்தச் சோதனையைக் கண்ணாடிப் பாத்திரங்களோடு செய்தால் வாயு ஏறுவதையும் தண்ணீர் குறைவதையும் கண்ணாரக் காணலாம்.

வாயுவுக்கு அமுக்கினால் அமுங்கவும், விட்டுவிட்டால் பழைய ஸ்திதிக்கு வரவும் கூடிய சக்தி உண்டு. ஓர் கண்ணாடிப் பாத்திரத்தை வேறோர் கண்ணாடிப் பாத்திரத்துள் இருக்கும் தண்ணீரில் நேராய்க் கவிழ்த்து அமிழ்த்தினால், அதனுள் இருக்கும் வாயு தண்ணீரை உள்ளே வரவிடாது. ஆனால் அதை அதிக ஆழம் அமிழ்த்தினால் அதனுள் கொஞ்சம் தண்ணீர் ஏறும். மேலே உயர்த்த உயர்த்த உள்ளே ஏறும் தண்ணீர் குறையும், கீழே போகப்போக அது அதிகம் ஆகும். இதுவே முற்கூறிய வாயுவின் குணத்தைக் காட்டுகிறது.

வாயு கனம் உடைய வஸ்து. அது அமுக்கினால் அமுங்கவும், பின்னர் விட்டுவிட்டால் முன் நிலைக்கு வரவும் கூடிய சக்தியும் இருக்கின்றது, என்ற இவ்விரண்டையும் சேர்த்து நோக்கில் வாயு நம்மைச் சுற்றி இருக்கும்விதம் இவ்வாறு என்பதை உணரலாம். இது தெளிவாக இருப்பதற்கு ஒரு திருஷ்டாந்தம் எடுத்துக்கொள்ளுவோம். பஞ்சு கனமுள்ளது. அமுக்கினால் அமுங்கும் திறனுடையது. பஞ்சு அடைத்த தலையணைகள் அநேகம் எடுத்து ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைப்போம். அடியிலிருக்கும் தலையணையில் பஞ்சு மிக அடர்த்தியாயும் மேலே போகப்போக பஞ்சின் அடர்த்தி குறைந்தும் இருக்கும். இதுபோல பூமிமட்டத்தில் உள்ள வாயுவுக்கு அடர்த்தி அதிகம்; மேலே போகப்போக வாயுவின் அடர்த்தி குறைந்துகொண்டே போகின்றது. வெகு உயரம் போனால், வாயு அடர்த்தி அதிகம் இல்லாமல் போக வாயு பரந்துகிடக்கும். 500-மைல் உயரத்திற்கு மேல் வாயுவே இல்லாத வெறும் வெட்டவெளி என்று வேறு தோற்றங்களால் தெரியவருகின்றது.

இவ்வித குணங்களை உடைய வாயு எந்த வஸ்துக்களை அடக்கி உள்ளது என்பதைக் கவனிப்போம். இந்த விஷயத்திற்காகச் சில சோதனைகள் செய்து பார்ப்போம்.

வாய் அகன்ற கண்ணாடித் தொட்டியில் 6-அங்குலம் ஆழம் தண்ணீரை விடுவோம். அதன் மேல் ஒரு சிறிய பீங்கானை மிதக்கவிட்டு அதில்

கொஞ்சம் பெரிதான நிபாக்கினி என்னும்வஸ்துவை வைப்போம். (இவ்வஸ்துவை எப்பொழுதும் தண்ணீரிலேயே வைத்திருப்பது. இதைத் தண்ணீரை விட்டு எடுத்து வெளியில் வைத்தால் வெள்ளைப்புகை இதில் இருந்துவரும். இதன்மேல் இருக்கும் தண்ணீர்மறைந்ததும் தீப்பற்றிக்கொண்டு மஞ்சள் வெளிச்சத்தோடும் வெள்ளைப் புகையோடும் இது எரியும். ஆதலால் இதைத் தண்ணீர் அடியிலேயே வெட்ட வேண்டும். இது நமது கையில் படவேகூடாது). மெதுவாக இதை ஏற்றிய ஊதுவத்தியால் கொளுத்திவிட்டு இதன்மேல் உயர்ந்த கண்ணாடிப் பாத்திரம் (சுவர் விளக்கினது வாய் அகன்ற கண்ணாடியின் குறுகியவாய் நல்ல சடையால் மூடப்பட்டிருந்தாலும் போதும்) ஒன்றைச் சாக்கிரதையாக நிபாக்கினியின்மேல் கவிழ்த்துத் தண்ணீரின் அடிப்பாகத்திற்கு மெதுவாகக்கொண்டு போவோம், உள்ளிருந்து குமிழிகள் வெளியில் வாராதிருந்தால் நலம். பாத்திரத்தில் வெள்ளைப்புகை நிறைந்துவிடுகின்றது. கொஞ்ச நாழிகையில் உள்ளே இருக்கும் நிபாக்கினியும் அணைந்துவிடுகின்றது. உடனே தண்ணீர் கண்ணாடிப் பாத்திரத்துள் ஏறிவிடுகின்றது. ஸுமார் அரைமணி கழித்து இதை நோக்கினால் புகை எல்லாம் தண்ணீருள் கரைந்து மறைந்து போக பாத்திரம் முன்போல ஆகிவிடும். ஆனால் 5-பாகம் அதனுள் தண்ணீர் ஏறியிருக்கும். அதன்வாயை மூடிக்கொண்டு அதை வெளியில் எடுத்து நிமிர்த்தி, அதனுள் ஓர் மெழுகுவத்தி விளக்கை விட்டால் அது அணைந்துவிடும். ஆனால் ஸாதாரண பாத்திரத்தில் அது அணையாது எரிகின்றது. இதனால் வாயுவில் இரண்டு ஆவிகள் இருக்கின்றன. நிபாக்கினியால் நீக்கப்பட்டதாயும் வாயுவில் ஐந்தில் ஒருபங்காக இருப்பதாயும், எரியும் வஸ்துக்களை எரிய இடங்கொடுக்கும்படியானதாயும் உள்ள ஆவி ஒன்று. அதற்கு பிராணவாயு என்றுபெயர். மற்றொன்று மிகுதி இருப்பதாயும் வாயுவில் 5-இல் 4-பங்காகியும் உள்ள, வஸ்துக்களை எரியவொட்டாது அணைக்கும் ஆவி. அதற்கு உப்புவாயு என்றுபெயர். இவ்விரண்டு தான் வாயுவில் பெரும்பாலும் இருப்பது. இவ்விரண்டும் தவிர பனி உண்டாகும் சோதனையிலிருந்து வாயுவில் நீராவி கொஞ்சம் இருக்கின்றதென்றும், வெள்ளையடிக்கக் கரைத்து வைத்திருக்குஞ் சுண்ணாம்பின் மேலே உண்டாகும்தெளிவான சுண்ணாம்புத் தண்ணீரின்மேல் காணப்படும் வெண்மையான ஏட்டால் வாயுவில் கொஞ்சம் கரியமலவாயும் இருக்கின்றது என்பதும் வெளியாகின்றது.

ஆகவே வாயுவில் பெரும்பாலும் பிராணவாயுவும், உப்புவாயுவும், சிறுபான்மை நீராவியும் கரியமலவாயுவும் இருக்கின்றன.

மஹான்களும் ஸித்திகளும்.—

சுத்த ஹிருதயம் உடைய மஹான்களிடத்தில் இந்தப்பக்தியின் சக்தியை நன்றாகக் காணலாம். வருவன கூறல், அற்புத மருந்துகள், தம்மை அறியாமல் வெளிவரும் உண்மை வாக்கியங்கள், மெய்ம்மறந்து கூறல், இவைபோன்ற அற்புத சக்திகள் சுத்தாத்மாக்களுக்கு எதிர்ச்சையாய் உண்டாவது. இப்பெரியோர்கள் உலகத்தில் வாழ்வதே அற்புதம். மற்றைய ஜீவராசிகள் எவ்வாறு நாளைக்கு என்ற எண்ணமின்றி வாழ்கின்றனவோ அவ்வாறே இவர்களும் மறைவாக இருக்கும்படியான ஓர் சக்தியின் வைபவத்தால் காப்பாற்றப்பட்டு வாழ்கின்றனர் என்பது இவர்களது நடத்தையை உற்று நோக்குவோருக்கு விளங்கும். மனது அசுத்தப்பட்டதும் இந்தச் சிறப்பெல்லாம் இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடிப் போயவிடும். மஹானுக்குத் தாம் அற்புதச் செய்கைகள் செய்கிறோம் என்ற எண்ணம் வந்ததும் உடனே மனம் அசுத்தமாகிவிடும். சக்திகளும் அவரை விட்டகலும். அப்பொழுது அவர் முன்போல மஹானாக விளங்கவேண்டும் என்று எவ்வளவு பாடுபட்டபோதிலும் முன் இருந்த சக்தி அவரிடம் நில்லாது மோசம் செய்துவிடுகின்றது. சக்தி போனபின்புகூட அவன் முன் இருந்த கீர்த்தியை வஹிக்க முயலுகிறான். இதனால்தான் உலகில் அநேகம் வேஷ ஸந்யாஸிகள் உண்டாகின்றனர். புத்திமான்கள் இதை அறிந்து தமது சக்தியால் கீர்த்தி தமக்கு வரவேண்டும் என்ற எண்ணத்தை ஒருநாளும் தமது மனதில் புகுந்துகொள்ள இடங்கொடுப்பதே இல்லை. அவர்கள் தமது சக்தியால் வரும் கீர்த்தியைத் தாம் அங்கீகரிப்பதில்லை. மனதார அவை பகவானது லீலை என்று எண்ணி அதைப் பகவானது பாரமாக விட்டுவிடுவார்கள். அவர்களுக்குத் தமது வாக்கு உண்மையாகவேண்டுமே என்ற கவலை ஒருபோதும் கிடையாது. பிரம்மமாகி இருக்கும் மஹான்களது மனத்தை எப்படிப்பட்ட சக்தியாலும் கீழே இழுக்கவல்லது அல்ல.'

கோயமுத்தூர் வியவசாய காலேஜும் சோதனைப் பண்ணையும்

THE AGRICULTURAL COLLEGE AND FARM : COIMBATORE

சென்னைக்குச் சமீபத்தில் சைதாப்பேட்டையிலிருந்த இந்தக் காலேஜைக் கோயமுத்தூருக்கு மாற்ற வேண்டுமென்று கவர்ன்மெண்டார் தீர்மானித்து 1906-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 24-ம் தேதி அஸ்திவாரக்கல்நாட்டி வேலை துவக்கினார்கள். இந்தக் காலேஜ் கட்டிடத்திற்கு மட்டும் ரூபாய் 4,47,000 செலவாயிருக்கிறது. சோதனைப் பண்ணைக்காக இக்கட்டிடத்தை யடுத்து நஞ்சைப்பயிர்கள் விளையத்தக்கதும், தண்ணீர் இறைத்து தோட்டப்பயிர்கள் விளைவிக்கக்கூடியதும், மழையடித்துப் பயிராக்கக்கூடியதுமான பூமிகள் 457½ ஏகரா வாங்கப்பட்டிருக்கின்றன. காலேஜ் கட்டிடமும், சோதனைப் பண்ணை பூமிகளும், உபாத்தியாயர்களும் மற்ற சிப்பந்திகளும் வசிக்கக் கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களும், மாணாக்கர்கள் வசிக்கக் கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களும் சேர்ந்து செலவு எட்டு இலக்ஷத்திற்கு அதிகமாகிறதென்று தெரியவருகிறது. இன்னும் முழு வேலையும் முடிவதற்குள் செலவு பத்து இலக்ஷத்திற்கு எட்டிப்பார்க்கலாமென்று எண்ணப்படுகிறது.

இவ்வளவு பெருந்தொகை செலவழித்து வியவசாயத் தொழில் முறைகளை இந்து வியவசாயிகளுக்குக் கற்பிக்கவேண்டுமா? இந்துக்கள் இன்று நேற்று வியவசாயத்தொழிலிற் பிரவேசித்தவர்களல்லவே! பல தலைமுறைகளாய் இத்தொழிலைச் செய்து வருவதின் அனுபவப்பயனாய் ஒருவித வியவசாய முறைகளை அனுசரிப்பவர்களாயிற்றே! அவர்களை நூதன முறைகளை யனுசரிக்கும்படி தூண்டுவது சாத்தியமா வென்றும், ஆங்கிலேய வியவசாய நிபுணர்களுக்கும் இந்தியாபோன்ற உஷ்ணதேசங்களில் ஸ்தாவரப்பொருள்களின் வளர்ச்சியையும், அவைகளுக்கேற்ற உணவையும் பற்றிய விபரங்கள் சோதித்தே அறியவேண்டி யிருக்கின்றனவே! அப்படியிருக்கையில் இத்தேச வியவசாயிகள் தங்கள் அனுபவத்தினால் தர்ண பாரம்பரியமாய்ச் செய்துவந்த கைகண்ட முறைகளைத் திடீரென்று மாற்றுவதும் கூட நிதானமாய் யோஜித்துச் செய்யவேண்டியதாயிருக்கின்றதே யென்றும், சந்தேகிப்பதுடன், இதைவிட ஆங்கிலேயர்கள் விசேஷமாய்த் தேர்ந்த தொழிலாகிய வர்த்தகமுறைகளை இந்துக்கள் செவ்வையாகக் கற்றறியும்படி வர்த்தகக் காலேஜ் ஒன்றை ஏற்படுத்த ஏன் கவர்ன்மெண்டார் பின்வாங்குகிறார்கள் என்றும் பலர் பிரசினை செய்கிறார்கள்.

பாடத்தெரியாதவனும் நன்றாகப் பாடுகிற பாகவதரிடத்தில் குற்றம் கூறுகிறான். பிரசங்கம் செய்யவறியாதவனும், தாஷ்டியாகப் பிரசங்கம் செய்கிறவரிடத்தில் குறை சொல்லுகிறான். கட்டிடவேலையின் நுட்பங்களை யறியாதவனும் கட்டின வீட்டுக்குப் பணிக்கை ஏற்படுத்துகிறான். இது மனிதர் இயற்கை.

கவர்ன்மெண்டார் எந்தக் காரியத்தைச் செய்ய ஆரம்பித்தபோதிலும், தகுந்த நிபுணர்களிடத்தில் யோசனைசெய்தே ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறார்கள். பெருந்தொகை செலவிடாவிட்டால் பெரும் காரியங்கள் செய்யமுடியாது. காலேஜ் கட்டிடத்திற்குள் வேண்டிய விடங்களில் ஜலம் குழாய் மூலமாய்க் கிடைக்கவேண்டிய அவசியத்தைக்குறித்தே பலவிடங்களில் குழாய்கள் வைத்தும் மெத்தையின் மேல்சிகரங்களில் எட்டு இரும்புத் தொட்டிகள் வைத்து அவைகளில் எப்பொழுதும் இரண்டடி ஜலமிருக்கும்படி செய்ய நேரிட்டது. வேளாண்மைக்கு அவசியமான எருவை ரசாயன சாஸ்திர மூலமாய்ப் பரிசோதித்து அறிவதற்காகவே அவற்றிற்குத் தகுந்தமாதிரியான கட்டிட அறைகளும், ரசாயனங்கள் செல்லத்தக்க மாதிரியான குழாய்களும் வைக்கப்பட்டன. வியவசாய சம்பந்தமான புஸ்தகங்களைப் பத்திரப்படுத்தி வைப்பதற்கு ஏற்ற விதமான ஒரு அறை அவசியமாயிருந்தபடியால், மெத்தையின்பேரில் கடப்பைக்கற்களை நன்றாக நயப்படுத்தித் தரையில் பாவியும் சுவர்களுக்குத் தகுந்தவிதமாய் வெண்சாந்து பூசி மெருகிட்டும், விட்டம் சட்டம் முதலியவைகள் தோற்றப்படாமல் நூதனமுறையாய்ச் சாந்திட்டுப் பூசி மெருகிட்டும், நல்ல வெளிச்சம் அவசியமானதால் பெரிய கண்ணாடி ஜன்னல்கள் வேண்டியவளவு வைத்தும் ஒரு விசாலமான அறை கட்டப்பட்டது. தவிர இக்காலேஜில் ரசாயன சாஸ்திரத்தையன்றி ஸ்தாவர சாஸ்திரம், ஜீவதத்துவ சாஸ்திரம், வியவசாய

சம்பந்தமான மராமத்து விஷயங்கள், வியவசாய சாஸ்திர தத்துவங்கள், இவைகள் ஒவ்வொன்றையும் பரீக்ஷித்து அறியத் தனித்தனியான அறைகளும், மூன்று வகுப்புகளாக பிரிவுபடுகிற மாணாக்கர்கள் கற்பிக்கப்படுவதற்கு அறைகளும், ஒவ்வொரு விஷயமான உபகரணங்களை யமைக்க பிரத்தியேகமான அறைகளும் அவசியமானபடியால் அவ்வளவு விஷயங்களுக்கும் இடந்தரும்படியான கட்டிடம் வேண்டுமன்றோ! இப்பேர்க்கொத்த பெரிய கட்டடம் அவசியமாக விருக்கும்பொழுது உபாயச் செலவில் கட்டுவது எப்படி சாத்தியம்? அப்படிக் கட்டினால் அது அதிக காலம் நிலைத்து நிற்கமாட்டாதன்றோ! ஆகையினாலே, இந்தக் காலேஜிக்கு ஆறு மைல் தூரத்திலுள்ள மருதகிரி என்ற குன்றிலிருந்து வெண்ணிறமான பெருங்கற்கள் கொண்டுவரப்பட்டு, வெட்டி உடைத்துக் கொத்தி நயப்படுத்தித் தூண்களாகவும், படிக்கட்டுகளாகவும் உபயோகப்படுத்தப்பட்டன. வேண்டிய இடங்களுக்குக் கடப்பைக் கற்கள் போடப்பட்டன. ஒவ்வொரு வேலைக்கும் தேக்கு மரங்களே உபயோகப்படுத்தப்பட்டன. சுதேசத் தொழிலின் அருமையைக் காட்டும் பொருட்டாக மெத்தைப் படிக்கட்டுகளுக்கு இருபுறமும் கைப்பிடிச் சுவராக மரவேலைகளால் வேலை செய்யப்பட்டன. இவ்வளவும் செய்து சிகரமில்லாதிருப்பதழகல்லவென்று முன் புறத்தில் ஒரு கோபுரம் போன்ற கட்டடம் கட்டி, அதன்பேரில் 'வியவசாயத்தைக் காலமறிந்து செய்' 'காலத்தை வீணாக்காதே' என்ற எழுத்துகளைக் கவனமூட்டுவதுபோல் எப்பொழுதும் யாவரும் மணியை யறிந்துகொண்டு சுறுசுறுப்பாய் வேலைகளை நடத்தும்படி தூண்டத்தக்க, ஒரு பெரிய கடிகார யந்திரமுமமைக்கப்பட்டது. உபாத்தியாயர்கள் நிலைத்திருந்து அதே கவலையாய்த் தங்கள் வேலையை நிறைவேற்றும்படியாகவும், மாணாக்கர்களும் வேறு விசாரமின்றி தாங்கள் மேற்கொண்ட கல்வியைப் புஸ்தக மூலமாயும் பிரத்தியக்ஷமாகவும், நிதரிசனமாகவும் திருஷ்டாந்தங்களாலும் பரீக்ஷித்தறிந்துகொள்ளும்பொருட்டு அவர்கள் வசிக்கத் தகுந்த கட்டிடங்களும் கட்டப்பட்டன. இவைகளெல்லாம் துட்டுச் செலவின்றிச்செய்ய இராவணன் ஆண்டகாலமன்றே? அக்காலமாயிருந்தால் மயன் என்ற தேவதச்சனைக் கொண்டு உடனே செய்யென்று ஆக்கினை செய்து விடலாம். இக்காலத்தில் பணமின்றி ஒன்றுமாகாதன்றோ!

இந்துக்கள் பல தலைமுறையாய் வியவசாயத்தொழிலைச் செய்து வருவதின் அனுபவத்தின் பயனால் இலாபத்தை யடைகிறார்களென்றாலும், நாகரீகமடைந்த தேசங்களில் ஜனங்கள் வியவசாயத் தொழிலில் எவ்வளவு இலாபமடைகிறார்களோ அதில் பாதிகூட இத்தேசத்தார் அடைகிறதில்லையே! அதனால் இத்தேச வியவசாய முறைகள் திருத்தப்பட்டால் விசேஷ இலாபம் கிடைக்குமென்று எண்ணுவது பிசகாக மாட்டாதன்றோ!

ஆங்கிலேய வியவசாயத்தொழில் நிபுணர்களுக்கும் இந்தியாபோன்ற உஷ்ண தேசங்களில் ஸ்தாவரப் பொருள்களின் வளர்ச்சியையும், அவைகளுக்கேற்ற உணவையும் பற்றிய விவரங்கள் நன்றாய்ப் பரிசோதித்தறிந்து உறுதிப்படுத்தி, வியவசாயிகளுக்குக் கண்ணுக்கெதிராகக் காட்டும் பொருட்டாகவேயன்றோ அங்கங்கே வியவசாயப் பண்ணைகளை ஏற்படுத்தியிருக்கிறதன்றி இக்காலேஜையடுத்து ஒரு சோதனைப் பண்ணையையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படியிருக்க இந்த முயற்சியால் பயனுண்டாக மாட்டாதென்று எங்ஙனம் கூறுவது?

இத்தேச ஜனசங்கையில் அதிகமானவர்கள் வியவசாயத்தையே நம்பினவர்களாய் அத்தொழிலையே செய்துவருவதால் அத்தொழிலை முன்னாடி விருத்திசெய்ய கவர்ன்மெண்டார் தொடங்கினார்கள். அதற்கு வேண்டிய பல அம்சங்களையும் கவனித்துக் கொண்டு வருகிறார்கள். வர்த்தகத்திலும் இந்துக்கள் அவ்வளவு அக்கரையுள்ளவர்களென்று கண்டால், அத்தொழிலை விருத்திசெய்யக் காலேஜ் ஒன்றை ஏற்படுத்துவது அவர்களுக்குச் சந்தோஷமாகவே இருக்குமென்பதில் தடையில்லை. நமது இந்துக்களே பம்பாயில் வர்த்தகத்தொழிலைக் கற்பிக்கும்படி ஒரு காலேஜ் ஏற்படுத்தி நடத்திவருகிறார்கள். சென்னைத் தனவான்களும் அவ்விடத்தில் ஒருகாலேஜை ஏற்படுத்த முயற்சி செய்துக்கொண்டுதானிருக்கிறார்கள். சென்னை இராஜதானி ஜனங்களுக்குள் தைரியமும், ஒற்றுமையும், சமுத்திர யாத்திரையில் விருப்பமும் முதிருமானால் வர்த்தக காலேஜ் ஒன்றுதானா! ஏற்படக்கூடும். ஒவ்வொருதொழில் விருத்தியின் பொருட்டும் ஒவ்வொரு காலேஜ் ஏற்படுமன்றோ?

ஆகையால் கவர்ன்மெண்டார் வியவசாயத்தொழிலை விருத்திசெய்ய முன்வந்திருப்பதைக் குற்றங் கூறவாவது சந்தேகம்கொள்ளவாவது நியாயமில்லை.

அவர்கள் செய்துவரும் முயற்சியில் வேண்டிய உதவிகளைச் செய்து உற்சாகப்படுத்துவது இந்துக்களுடைய முக்கிய கடமை.

தவிர கோயமுத்தூர் வியவசாய காலேஜில் நியமிக்கப்பட்டிருக்கும் பல சாஸ்திர நிபுணர்களும் தகுந்த சாதனங்களோடு விடாமுயற்சியாய் உழைத்து ஒவ்வொரு பயிருக்கும் தகுந்த உணவையும், செய்பாங்கையும் கண்டுபிடித்தும், செய்து காட்டியும் வந்தார்களானால் நன்மை பயப்பதற்குச் சந்தேகமில்லை. இந்த நிபுணர்களின் முயற்சியின் பயனாய்க் கோதாவரி, தென்னாற்காடு ஜில்லாக்களில் வியாதிகளுக்குட்படாத மோரிஸ் கரும்புகளைப் பயிரிட்டு நல்ல பலனைக்கொடுத்திருக்கிறது. கோயம்புத்தூர் பண்ணையிலும், இக்கரும்பைப் பயிரிட்டு வெல்லமும் செய்யப்படுகிறது. இவ்விடத்திலும் மற்ற கரும்புகளைவிட அதிக பயனைக் கொடுத்து வந்ததாகவே கருதப்படுகிறது. இப்படியே பருத்தி, வேர்க்கடலை, மிளகு, சணல், சோளம் கால் நடைகளின் மேய்ச்சல்புல் முதலியவைகளைக் கவர்ன்மெண்டுப் பண்ணைகளில் பயிரிட்டுச் சோதனைகள்செய்ததில், சில திருத்தங்களும் சாதகங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் அநேக நூதன முறைகளும் சீர்திருத்தங்களும் கண்டுபிடிக்கப்பட்டு வியவசாயிகளுக்கு விசேஷபலனைக் கொடுக்குமென்றே கருதப்படுகிறது.

மூட நம்பிக்கைகள்.—படிப்பில்லா அஞ்ஞானிகளிடம் தான் காணப்படும் என்பதே ஓர் மூட நம்பிக்கையாகும். படித்தவர்களது மூட நம்பிக்கைகள் அதிஸூக்ஷ்மமாக இருப்பதால் அவைகளின் உண்மையான ஸ்வரூபம் அவர்களுக்கும் மற்றையவர்களுக்கும் வெளிப்படையாக விளங்கமாட்டாது. ஆதலால் அது மிகுந்த கேட்டை விளைவிக்கக்கூடியது. அதை அஞ்ஞானத்தடிப்பினாலே படித்தவர்களே மற்றவர்களுக்குப் புகட்டி அவர்களையும் அம்மூடநம்பிக்கைகளை நம்பும்படி செய்து கஷ்டத்திற்குள்ளாக்குவார்கள். இம்மாதிரியான படித்தவர்களிடம் காணப்படும் மூடநம்பிக்கைகளுக்கு ஓர் உதாரணம். "வேதாந்தம் எவனுக்கும் விளங்காத விஷயத்தைக் கூறுவது, மனிதனுக்கு நன்மை விளையக்கூடியவைகள் எல்லாவற்றையும் அவனிடம் இருந்து ஒழித்துவிடுகிறது. மனிதனைக் கல்லுக்கு ஸமானமாகச்செய்து, உலகம் அவனால் ஓர் பிரயோஜனமும் அடையாவண்ணம் செய்துவிடுகின்றது" என்பதே.

மங்களத்தின் ரகசியம்

A GRAVE RESPONSIBILEITY UNVEILED

இல்லானை இல்லாளும் வேண்டாளீன்றெடுத்த தாய்
செல்லாதவன் வாயிற் சொல். [வேண்டாள்

என்று ஒரு சுத்தமான குரல் இனிமையாகப் பாடிக்கொண்டிருந்தது.

"மங்களம்" நீ சொல்வது உண்மைதானா? என்று நியாயஸ்தலத்துக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்த வனமாலி வாசற்படியண்டை நின்று கேட்டார். அவர் மங்களத்தை மணந்து இன்னும் ஆறு மாதங்கூட ஆகவில்லை. அவள் இப்பாட்டைச் சொன்னது வனமாலிக்குத் துயரத்தை விளைவித்தது.

புருஷன் சாப்பிட்ட இலையை எடுத்தெறிந்துவிட்டு இடத்தைச் சுத்திசெய்யும்பொழுது மேற்படி பாடலைச் சொல்லிக்கொண்டிருந்த மங்களம் தன் கணவருடைய வாடிய முகத்தை நிமிர்ந்து பார்த்து குலுங்க நகைத்தாள். உடனே அவரருகில் ஓடிவந்து அவர் கன்னத்தில் ஆர்வத்துடன் ஒரு முத்தங்கொடுத்துவிட்டு "ஏமாந்துபோனீரா? நான் அதை உண்மையென்று நம்புவேனா? அந்தப்பாடல் உமக்கு வருத்தத்தைக் கொடுப்பதாயிருந்தால் நான் இனி அதைப்பாடுவதேயில்லை. அந்தப் பாட்டில் சொல்லியிருப்பதெல்லாம் பொய்தான். எப்படி யிருந்தபோதிலும் அப்பாட்டுக்கும் நமக்கும் சம்பந்தமேயில்லை" என்றாள்.

வனமாலி மங்களத்தைத் தன்னருகிலிழுத்து அணைத்து நெற்றியில் ஒருமுத்தங் கொடுத்துவிட்டு "மங்களம், அவசரப்பட்டுப் பரம ஏழையாகிய என்னை மணந்துகொண்டு விட்டதற்காக இப்பொழுது வருத்தப்படுகிறாய் என்று எண்ணினேன் நான் என்றார்."

மேல் சொல்வதற்குள் மங்களம் வனமாலியின் வாயைத் தன் கையினால் பொத்தி "என் தெள்ளமுதே! அப்படிச் சொல்லாதே. என்னைப்பற்றி அவ்வளவு இழிவாக நீர் நினைக்கலாமா? என் கண்மணி! இவ்வுலகத்திலுள்ள செல்வ மெல்லாவற்றைக் காட்டிலும் நீர் எனக்கு மேலானவரன்றோ? உமக்காக உம்மை நான் மணந்தேனேயன்றி உமது செல்வத்துக்காவது உமது பெருமைக்காவது நான் மணக்கவில்லையே! எனக்கிருப்பது ஒரு குறைதான். அதாவது நான் என் தாய்தகப்பனை விட்டுப் பிரிந்திருக்கிறேனே என்பது தான். நான் அவர்களுக்கு ஒரேபெண் என்

பது உமக்குத்தெரியுமே. அவர்கள் என்னை எவ்வளவோ செல்வமாக வளர்த்து வந்தார்கள். நீரும் நானும் உயிரோடிருக்கும் வரையில் நான் உம்மை விட்டுப் பிரிந்திருக்கமாட்டேன். உம்மையல்லாமல் எனக்கு என் தாய்தந்தையர் வேண்டியதில்லை" என்றாள்.

வனமாலியின் கண்ணில் நீர் பெருகிற்று. உயர்ந்த தனவானுக்கு ஏக புத்ரியாகப் பிறந்து காதலினால் தன்னை மணந்து கொஞ்சமேனும் வருத்தத்தைக் காட்டாமல் தனக்குக் குற்றேவல் செய்து வருவதுமன்றி இவ்வளவு அன்புடனும் அறிவுடனும் பேசுவதைக் கேட்க கண்ணினின்றும் நீர் வடியாமல் எப்படியிருக்கும்? அவர் குனிந்து மிக்க பட்சத்துடன் திரும்பத் திரும்ப மங்களத்தை முத்தமிட்டார்.

"என் விலையில்லா மாணிக்கமே! உன்னைக் கடவுள் கடாக்ஷிக்கட்டும். உனக்கு ஒரு குறைவுமில்லாமல் கடவுள் காப்பாற்றுவார்" என்று சொல்லிவிட்டு வனமாலி தெருவிலிறங்கி நியாயஸ்தலம் நோக்கிச் சென்றார்.

வனமாலி பி. எல். பாஸ் பண்ணினவர். கொஞ்சம் தனக்கிருந்த பிதிரார்ஜிதத்தையும் படிப்புக்காக செலவழித்துவிட்டார். வக்கீல்பரீக்ஷை பாஸ்பண்ணி இன்னும் ஒரு வருஷம் கூட ஆகவில்லை. ஆதலால் அவரிடம் கட்சிக்காரர்கள் அதிகமாக கேஸ் கொண்டு வருகிறதில்லை. செலவுக்குப் போதிய பணம் கையில் இல்லாததால் சிக்கன ஜீவனம் செய்யவேண்டி வந்தது. மங்களம் ஒரு லட்சாதிபதியின் ஏக குமாரியாயிருந்தபோதிலும் தன் புருஷனுடைய நிலைமையையறிந்து பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாக விருந்தாள். அவளுடைய பெற்றோர்களின் இஷ்டத்துக்கு விரோதமாக வனமாலியை மணந்துகொண்டதால் அவர்கள் வனமாலிக்காவது மங்களத்துக்காவது உதவி செய்வதில்லை.

வனமாலியின் உருவம் கண்ணுக்கு மறையும்வரையில் மங்களம் அவனைப் பார்த்துக்கொண்டே நின்றாள். பின் புன்னகை புரிந்துகொண்டு வீட்டுக்குள் திரும்பினாள். உள்ளே சென்று ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு "பாவம் நான் அவருக்கு உதவி செய்ய முயன்றுகொண்டிருப்பதை அவர் அறியவில்லை. நான் கற்றிருக்கும் கல்வியையும் சங்கீதத்தையும் ஊர் பிள்ளைகளுக்குக் கற்பித்து அதனால் சம்பாத்தியம் செய்கிறேன் என்று அவருக்குத் தெரியாமலிருக்கிறது. இப்பொழுது என்னிடம் ஆறு பிள்ளைகள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இந்த இரகசியத்தை அவர் அறிந்துகொண்டுவிடப் போகிறாரே என்று பயமாயிருக்கிறது. எதிர் பாராதவண்ணமாய் திடீர் என்று அவரிடம் இந்த ரகசியத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று எனக்கு ஆவலாயிருக்கிறது" என்று மெதுவாகச் சொல்லிக்கொண்டேயிருந்தாள். இவ்வாறு கொஞ்சநேரம் சிந்தனையிலாழ்ந்திருந்து விட்டுப் பின்பு எழுந்துப் பத்தபாத்திரங்களை எல்லாம் தேய்த்துக்கழுவி நேர்த்தியாக அடுக்கி வைத்துவிட்டுத் துடப்பம் எடுத்து வீட்டைச் சுத்தம் செய்தாள். பிறகு தன் நல்லுடையை யெடுத்து சீராயணிந்துகொண்டு தலைமயிரைக் கோதி முடித்துக்கொண்டு வெளிப் புறப்பட்டாள்

தன் புருஷனுக்குத் தெரியாமலும் அவனுக்குச் சந்தேகம் உதிக்காமலும் கொஞ்சம் பணம்சேர்க்க வேண்டுமென்பது மங்களத்துக்கு வெகுநாள் கோரிக்கை. தீபாவளி பண்டிகைக்கு முதல் நாள், தான் சேகரித்தபணத்தைத் தன் புருஷனிடம்கொண்டு கொடுத்து "நாதா! நமதுபண்டிகைச் செலவுக்காக நானும் கொஞ்சம் பணம்சேர்த்து வைத்திருக்கிறேன். நம்மிருவருக்கும் இப்பொழுது இப்பணத்தைக்கொண்டு புது சோமன் புடவைகள் வாங்கலாம். அன்றியும் மேற்செலவுக்கும் போதுமான பணம் இதிலிருக்கிறது" என்று சொல்லவேண்டுமென்று அவளுக்கு ஆவல் இருந்தது. இந்த எண்ணத்தினால் தான் ஊரிலுள்ள சிலசிறு பெண்களுக்குச் சங்கீதம் சொல்லிக்கொடுக்க மங்களம் ஒத்துக்கொண்டது; அக்காரியத்துக்குத்தான் இப்பொழுது அவள் வெளிப்புறப்பட்டதும். கணவனை எந்தவிதமாய்ச் சந்தோஷப்படுத்தலாம் என்று எண்ணிக்கொண்டே போகும்போது இவளுடைய மெலிந்து உயர்ந்த அத்தை எதிரில் வரக்கண்டாள். அவளைக் கண்டதும் மங்களத்துக்குத் தூக்கிப்போட்டது போலாயிற்று. "இது என்ன துர் அதிர்ஷ்டம். இவள் எனக்குமுன் இப்பொழுது வந்துதோன்றினாளே. எதற்காக இங்கே வருகிறாள்? இவள் என்னை விடப்போகிறதில்லையென்று எனக்கு நிச்சயமாகத்தெரியும். என்னைப் பிடித்துக்கொண்டு ஆயிரம் கேள்விகேட்கப்போகிறாள். நான்போகும் காரியத்தை அவளிடம் சொன்னால் உடனேபோய் அதை என்நாதனிடம் சொல்லிவிடுவாள். இத்தனைநாள் நான் இரகசியமாகக் காப்பாற்றிவைத்திருந்ததெல்லாம் வெளிப்பட்டுவிடும். அல்லாமலும் இவள்போய் என் அப்பாவிடம் நான்

ஊரார்ப் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லிவிடுவாள். அங்கே வீட்டில் எல்லோரும் பணம் சம்பாதிக்கும் பொருட்டு என் புருஷன் என்னை வேலை செய்யச் சொல்லி நிர்ப்பந்தம் செய்கிறாரென்று எண்ணிக்கொள்ளுவார்கள். இது என்ன அநர்த்தத்தில்வந்து மாட்டிக்கொண்டேனே. நான் என்ன செய்யட்டும்" என்று சொல்லிக்கொண்டாள்.

மங்களத்தின் அத்தை நெருங்கி வந்துவிட்டாள். அவளினின்றும் தப்பிப்போவதற்கு முடியாமல்போயிற்று. ஆதலால் "எது வந்தபோதிலும் அனுபவித்துத்தான் தீருகிறது" என்று கொஞ்சம் துணிவுடன் மங்களம் நின்றுகொண்டிருந்தாள். அத்தை மங்களத்தின் எதிரேவந்து நின்று "மங்களம் என்ன சங்கதி சௌக்கியமாயிருக்கிறாயா? எங்கேபோகிறாய் அம்மா" வென்றாள். அதற்கு மங்களம் கொஞ்சநேரம் தயங்கி நின்றுவிட்டு "சுகமாகத்தானிருக்கிறேன் அத்தை, நான் கற்பகத்தின் வீட்டுக்குக் கொஞ்சம் காரியமாகப்போகிறேன்" என்றாள்.

மங்களத்தின் போதாத காலம் கற்பகத்தின் மைத்துனர் ஒருவர் நல்ல வளர்த்தியும் ரூபமுள்ள வாலிபராயிருந்தார். அவர் ஒரு சமயம் மங்களத்தை மிகவும் காதலித்திருந்தார். இது அவளுடைய அத்தைக்குத் தெரிந்த விஷயம். கற்பகம் வீட்டுக்குப் போகிறேன் என்று மங்களம் சொன்னதும், அத்தை மறுவார்த்தை பேசாமல் பல்லைக் கடித்துக்கொண்டு போய்விட்டாள். அவள் போகும்போதே "வேடிக்கைதான்! மங்களம் எதற்காக கற்பகத்தின் வீட்டுக்குப் போகவேண்டும்? அங்கே கற்பகம் மைத்துனரிருக்கிறாரே. மங்களத்தின்மேல் எப்பொழுதும் எனக்கு நம்பிக்கையே கிடையாது அவள் மகா கர்வியாயிற்றே. பரம ஏழையான வனமாலியைப்போய் நாங்கள் சொல்வதை எல்லாம் தட்டிவிட்டு ஒரே பிடிவாதமாகக் கலியாணம் பண்ணிக்கொண்டாளே. கற்பகத்தின் மைத்துனனைக் கண்டு பேசுவதற்காகத்தான் அவள் வீட்டுக்குப்போகிறாள். இதை நான் வனமாலியிடம் போய்ச் சொல்லவேண்டுவது அவசியம். அவனுக்கு நல்லது செய்யவேண்டுமென்பது என் கருத்தல்ல. ஆனபோதிலும் கடமை கடமைதானே. என் கடமையை நான் செய்யத் தவறக்கூடாது" என்று முணுமுணுத்துக்கொண்டே நியாயஸ்தலம் சென்று வனமாலியைக் கண்டு அவரைத் தனியாக ஒரு அறைக்குள் அழைத்துக்கொண்டுபோய் "வனமாலி! ஒரு கடமையை நான் உனக்குச் செய்யவேண்டுமென்று தோன்றியதால்தான் உன்னிடம்வந்தேன்" என்றாள்.

வனமாலிக்கோ ஒன்றும் விளங்கவில்லை. பற்பல எண்ணங்கள் மனதில் உதித்தன. ஆதலால் அவர் அவளை "என்ன சங்கதி அத்தை" என்று மரியாதையாய் கேட்டார்.

அத்தையோ ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு "நான் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல், மங்களம் இன்று காலையிலெங்கு சென்றாளென்று உனக்குத் தெரியுமா" என்றாள்.

வனமாலி புன்னகைகொண்டே ஆம் தெரியும். மங்களம் வீட்டிலிருக்கிறாள். நான் வரும்போது அவள் வீடு சுத்தி செய்துகொண்டிருந்தாள் என்றார்.

அத்தை "அவள் சங்கதி உனக்கு ஒன்றுமே தெரியாதுபோலிருக்கிறது. இப்பொழுதுதான் அவள் கற்பகத்தின் மைத்துனனைக் கண்டு பேசுவதற்காக கற்பகத்தின் வீடு போனதை நான் பார்த்துவிட்டு வந்தேன். அந்தத் தடியனும் இவள் வரவை எதிர்நோக்கி வாயிற்படியில் காத்துக்கொண்டிருக்கிறான். இதை உன்னிடம் சொல்லவேண்டுவது என் கடமையென்று நான் இங்கே வந்தேன்" என்றாள்.

வனமாலி முகம் கடுத்து "உன் கடமையா! உன் வேலையை நீ பார்க்கவேண்டுவது தான் உன் கடமையென்று எனக்குத் தோன்றுகிறது. என் மனைவியின் மேல் எனக்குக் கொஞ்சமும் சந்தேகம் கிடையாது. என் உயிர்போனாலும் நீ அபிப்பிராயப்படுவது உண்மையாயிருக்குமென்று நான் நம்பவே மாட்டேன். இனிமேல் நீ என் காரியத்தில் பிரவேசிக்கவேண்டியதில்லை. உன் காரியமெதுவோ அதைப்பார்த்துக்கொண்டு போ" என்றான்.

அத்தைக்குக் கோபம் பிறந்து இடத்தை விட்டு எழுந்து நின்று "உன்னிஷ்டப்படியே செய்யப்பா. ஆமாம். இது என்வேலை யன்றுதான். இப்பொழுது உன் மனைவி கற்பகத்தின் வீட்டிலில்லாவிட்டால் நீ என்னை எது வேண்டுமானாலும் செய்துகொள்" என்றான்.

வனமாலி "போதும் நிறுத்து. என் மனைவி தனக்கு இஷ்டமான இடத்துக்குப் போய்வர ஆட்சேபனையென்ன, உனக்கு ஏதோ புத்தி கலங்கியிருக்கிறாப் போலிருக்கிறது" என்றார்.

அத்தை, இல்லையப்பா இல்லை. நீ மங்களத்தை மணப்பதற்கு முன் அவளும் கற்பகத்தின் மைத்துனனும் எவ்வளவு ஒற்றுமையாக விருந்தார்களென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயந்தான். நான் இன்று அவளைப் பார்த்தபொழுது அவள் நேரே கற்பகம் வீட்டுக்குத்தான் போனாள். கற்பகம் மைத்துனனும் வாசற்படியில் நின்று காத்துக்கொண்டிருந்தான். ஆகையினால்தான் நான் பார்த்ததை உன்னிடம் சொல்லலாமென்று வந்தேன். நீ எவ்வளவு அவமரியாதையாக என்னை நடத்தியபோதிலும் நான்செய்யவேண்டிய கடமையைச் செய்தாய்விட்டது. இனி எப்படி வேண்டுமென்றாலும் போ" என்றாள்.

வனமாலி, "உன் நடத்தையை இந்தச் சமயத்தில் அங்கீகரிப்பார் யாருமில்லை. எனக்கும் என் மனைவிக்கும் எங்கள் காரியம் நன்றாகத்தெரியும் ஆதலால் நீ போய் வரலாம் அத்தை" என்று கடுங்கோபத்துடன் சொன்னார்.

தன் வார்த்தை வனமாலியிடம் ஏறாதென்றெண்ணி அத்தையும் வெளிச் சென்றாள். வனமாலியும் "இவளுக்கு என்ன கிருத்திரமம்! என்ன தைரியம்" என்று சொல்லிக்கொண்டார்.

ஆனால் "அந்தரங்கத்தில் ஒருவேளை இருந்தாலுமிருக்கலாமோ" என்கிற சந்தேகமுதித்தது. உடனே அவர் ஒன்றும் தோன்றாமல் நியாயஸ்தலத்தினின்றும் இறங்கி கற்பகம் வீட்டை நோக்கி நடந்துவந்தார். தூரத்திலிருந்தே மங்களம் கற்பகம் வீட்டிலிருந்து இறங்கி வருவதையும் அவளுக்குப் பின் கற்பகத்தின் மைத்துனன் அவளைத் தொடர்ந்து வருவதையும் கண்டுவிட்டார். கொஞ்சநேரம் தானிருந்த இடத்திலிருந்தே அவர்களை வனமாலி உற்றுப்பார்த்தார். அவர் மனமெரிந்தது. உடனே நியாயஸ்தலத்திற்குத் திரும்பிவிட்டார்.

மறுபடியும் அன்று சாயந்திரம் வீட்டிற்குத் திரும்பிவந்ததும் வனமாலி தன் மனைவியை ஒரு கேள்வியும் கேட்கவில்லை. கலியாணம் செய்துகொண்டது முதல் இன்றுதான் அவர் வியாகூலத்துடன் மௌனமாயிருந்தார். இதை மங்களம் வியப்புடன் கவனித்து வந்தாள். ஆனால் புருஷனுடைய மாறுபாட்டைப்பற்றிக் கேட்க பயந்தாள்.

இப்படியே சிலநாள் கழிந்தது. வனமாலி தன்னை புருக்கிக்கொண்டிருந்த மனோவியாகூலத்தை மறைத்துக்கொண்டே வந்தார். மங்களமோ தன்னிரகசியத்தை வெளியிடக்கூடாதென்று பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்து பணம் சம்பாதிப்பதிலேயே கவனமாயிருந்தாள்.

கடைசியில் தீபாவளிக்கு முதல் நாள் வந்தது. மங்களம் நூறு ரூபாய் சேர்த்துத் தயாராக வைத்திருந்தாள். வனமாலி சாப்பிட்டதும் மங்களம் அவனருகில் தாம்பூலமெடுத்துச் சென்று இந்த ரூபாயையும் அவர் கையில் கொடுத்து "நாளை தீபாவளிச் செலவுக்காக என் பங்கு பணம் இந்தா என் நாதா" என்றாள். வனமாலி தன் மனைவியைப் பார்த்துத் திகைத்தார். பின்பு "என்ன மங்களம்! இது என்ன! இந்தப் பணம் உனக்கு எப்படி கிடைத்தது" என்றார். மங்களம் மிக்க மனப்பூரிப்புடன் வனமாலியினருகிலுட்கார்ந்து, தான் பிள்ளைகளுக்குப் படிப்பு சொல்லிக்கொடுத்ததற்காகச் சம்பளம் கேட்டனுப்பிய பில் (Bill) களை எடுத்துக்காட்டி "நீர் மாத்திரம் நம்மிருவருக்காக உடல் வருந்தி உழைக்க நான் பார்த்துக்கொண்டு சுகமாயிருக்க எனக்குப் பிரியமில்லை. ஆதலால் நானும் ஒரு தொழில் செய்துகொண்டு வந்தேன். கற்பகத்தின் பெண்களுக்கும் அடுத்தவீட்டிலிருக்கும் கற்பகத்தின் மைத்துனருடைய மைத்துனி குழந்தைகளுக்கும் வித்தை கற்பித்து இப்பணத்தைச் சம்பாதித்தேன். நீர் எதிர்பாராத வண்ணம் திடீர் என்று உமக்குத் தெரிவிக்கவேண்டுமென்று நான் இதை இரகசியமாக வைத்திருந்தேன், என்றாள்.

வனமாலியின் முகத்திலிருந்த விசனக்குறியெல்லாம் பறந்துபோயிற்று.

வனமாலி, "ஆனால் கற்பகத்தின் மைத்துனருக்குக் கலியாணம் ஆய்விட்டதா? எனக்கு அது தெரியாமற்போயிற்று மங்களம்" என்றார்.

மங்களம், "நம் விவாகத்துக்கு ஒருவருஷத்திற்கு முன்னாமேயே அவர் விவாகஞ் செய்துகொண்டுவிட்டாரே. ஆனால் இந்தவூரில் விவாகம் நடக்கவில்லை. வெளியூர்போய்ப் பெண்தேடி மணந்தார்' என்றாள்.

இதைக்கேட்ட வனமாலிக்கு வெட்கமும் அடக்கமுமுண்டாயிற்று. அவர் தன் மனைவியைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு மார்போடணைத்துத் தான் அத்தையிடமிருந்து கேட்டகதையை ஆதியோடந்தமாகச் சொன்னார். பிறகு தான் ஆத்திரப்பட்டு மங்களத்தின்மேல் கெட்ட அபிப்பிராயங் கொண்டிருந்ததற்காக மிகவும் மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

பதிவிரதா சிரோமணியான மங்களம், புருஷன் வருந்த இடங்கொடுப்பாளா? தான் புருஷனுக்குத் தெரியாமல் இரகசியமாகச் சம்பாதிக்கப்போனதே இடையில் நேர்ந்த மனஸ்தாபத்திற்குக் காரணமென்று குற்றத்தை யெல்லாம் தன்மேலேற்றிக் கொண்டு வனமாலியின கவலையை அகற்றினாள்.

அன்றுமுதல் மங்களமும் வனமாலியும் ஆதரவுபட்டு ஒரு இடுக்கணுமின்றி சம்சார வாழ்க்கையைச் சுகமாக இனிது கழித்துவந்தார்கள், என்று சொல்லவும் வேண்டுமோ?

இந்தக் கதையினால், தம்பதிகள் ஒருவரறியாமல் ஒருவர் இரகசியத்தை மறைத்து வைத்துக்கொள்ளக் கூடாதென்று ஏற்படுகின்றது.

நீலி வசீகரம்

TAMING OF THE SHREW

வநி.—அப்பா, மன்னிக்கவேண்டும் (நமஸ்கரித்தல்.)

ரகு.—நீ என்ன குற்றம் செய்தனை? விஜயராகவ உடையார் எங்கே?

விஜ.—இதோ இருக்கிறேன்; நான் தான் நல்லநாயக உடையாரின் உண்மை மகன்; உம்முடைய பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொண்டவன் நான்தான்; போலிப்பேர்வழிகள் உம்மை மயக்கிவிட்டனர்.

போ.—அடே! என்ன மோசம்!

நல்ல.—போக்கிரிப் பையல், சுப்பராயன் எங்கே? என்னை அதட்டிப் பேசினவனைக் கூப்பிடு.

ரகு.—வேடிக்கை பண்ணாதேயுங்கள்.—நீ கோவிந்த வாத்தியார் அல்லவா?

வநி.—கோவிந்த வாத்தியார் இப்போது ஸ்ரீராமபிரான் பெயர்களுள் ஒரு * பெயரையுடைய உடையாராய் மாறிவிட்டார்.

விஜ.—ஐயா! இதெல்லாம் காதல் செய்த கூத்து; கண்மணி வநிதையை அடையவேண்டிய உபாயத்துக்காக நானும் சுப்பராயனும் மாறுவேஷம் போட்டுக்கொண்டோம்; என் எண்ணம் முற்றுப் பெற்றுவிட்டது; சுப்பராயன் செய்ததெல்லாம் எனக்காகவேதான்; ஆதலால், ஐயா, அவனை மன்னித்துவிடுங்கள்.

நல்.—அவனைக்கொன்று குழியிலிறக்கிவிடுகிறேன்; என்னைச் சிறைச்சாலைக்கு அனுப்பவேண்டுமென்றானல்லவா?

ரகு.—இதைக்கேளும்; (விஜயராகவ உடையாரை நோக்கி) என் மகளை, எனது சம்மதமில்லாமல் நீர் கல்யாணம்செய்து கொண்டுவிட்டீரா?

நல்.—தேவரே! பாதகமில்லை; எல்லாம் எனக்குத் திருப்தியாகிவிட்டது; மேல் விஷயங்களைச் சாவகாசமாய் யோசிப்போம்; ஆனால் என்னை வஞ்சிக்க வெண்ணிய வேலைக்காரப் பயல்களை உதைக்க வேண்டும். (போதல்)

ரகு.—நானும் இந்தமோசத்தை நன்றாய்த் தீர விசாரித்துவருகிறேன். (போதல்)

போ.—என்கதி இலவுகாத்த கிளியின் கதி போலாய்விட்டது; இருந்தாலும் ஒருவேளை நல்ல சாப்பாடு கிடைக்கும் (போதல்)

(நாராயணத்தேவரும் கௌதமியும் முன் வருதல்)

கௌ.—நாதா! இந்தவேடிக்கை முழுவதையும் பார்ப்போம், வாருங்கள் போவோம்.

நா.—முதலில்என்னை ஒருதரம் முத்தமிட்டுக்கொள், பிறகு வருகிறேன்.

கௌ.—நன்றாகவிருக்கிறது! இந்தத் தெருவீதியிலா?

நா.—என்னைக்கண்டால் வெட்கமாயிருக்கிறதோ. உனக்கு?

கௌ.—ஐயோ! அப்படியொன்றுமில்லை; தெருவில் நாலுபேர் பார்க்கையில், முத்தமிட்டுக்கொள்ள வெட்கமாகவிருக்கிறது.

நா.—அப்படியானால், திரும்பி ஊருக்குப் போய் விடுவோம், வா;—ஏலே! வண்டியைக் கட்டு சீக்கிரம்

கௌ.—வேண்டாம், வேண்டாம்; முத்தமிட்டுக் கொள்ளுகிறேன்; ஒருதரமல்ல; பத்துதரம்வேண்டுமானாலும் செய்கிறேன்; கொஞ்சம் நில்லுங்கள்.

நா.—இது நன்றாக விருக்கவில்லையா?.— போவோம், வா, கோது; (போதல்)

களம் 2.— விஜயராகவ உடையாரின் விடுதியில் ஓர் கூடம்; (ரகுநாத தேவர், நல்லநாயக உடையார், பொன்னம்பலத்தேவர், தீர்த்தயாத்திரி, விஜயராகவ உடையார், வநிதேசுவரி, நாராயணதேவர், பிரதாபருத்திரதேவர், சுசீலை, வருதல். சுப்பராயன், கேசவன், பொன்னன் முதலியோர் பணி செய்ய நிற்கின்றனர்).

விஜ.—மலைகளை யெல்லாம் தாண்டியாய்விட்டது பெருஞ்சமுத்திரங்களையுங் கடந்து, துறைப்பட்டணமும் வந்து சேர்ந்தேன். என்னைப்போல அதிருஷ்டவான் யாவனிருப்பான்? அரும்பொற்செல்வமாகிய வநிதேசுவரி எனக்கு மனைவியாக வாய்த்தபின் எனக்கு என்ன குறையிருக்கும்?—நாராயணத்தேவரே, நீரும் உமது மனைவியாகிய கௌதமிதேவியும் இங்கு வந்து என்னைப் பெருமைப்படுத்தியதற்குப் பெரிதும் சந்தோஷப்படுகிறேன்; அம்மாதிரியே பிரதாபருத்திரதேவரும் தமது மனைவியை யழைத்து வந்தது எனக்கு அளவற்ற இன்பத்தைக் கொடுக்கின்றது. இன்றை விருந்துக்கு நீங்கள் இருக்க வேண்டும்.

நா.—எப்போதும் உண்பதுதானே வேலை!

ரகு.—மதுரையில் இந்தச் சுகத்துக்குக் குறைவில்லை,

---

* இந்திய ஸ்திரீகள் புருஷர்களின் பெயர்களை நேராகச் சொல்வதில்லை; அவசியமானால் குறிப்பால்தான் தெரிவிப்பார்கள்,

நா.—மதுரையில் எந்தச் சுகத்துக்குத்தான் குறை? எல்லாம் இன்பந்தான்.

பிர.—எல்லாம் இன்பமா?

நா.—பிரதாபருத்திரரே, அப்படியானால் உமக்கு இன்பமில்லையென்று தோன்றுகிறது. சுசீலைக்குப் பயப்படவேண்டியிருக்கிறதோ?

சுசீ.—நான் ஒன்றுக்கும் பயப்படுவதில்லை.

நா.—நீ ஒன்றுக்கும் பயப்படமாட்டாய் என்பது தெரியும்; நான் எண்ணிய பொருள் அதுவன்று! பிரதாபருத்திரருக்கு உன்னிடம் பயமிருக்கிறது.

சுசீ.—குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்றிருக்கும்; நீர் சொல்வது உண்மைதான்.

கௌ.—சுசீலை! குற்றமுள்ள நெஞ்சு என்றாயே! அதன் பொருள் என்ன? விளங்கச்சொல்லு.

சுசி.—நீ வருத்தப்படாமலிருந்தால் சொல்லுகிறேன்: உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு, உன்னிடம் பயப்படுகிற உன் புருஷனுக்கு, அவரைப்போலவேயே மற்றெல்லோருக்கும் அவரவர் மனைவியிடத்தில் பயமிருக்கும் என்று தோன்றுகிறதுபோல விருக்கிறது. இப்போது பொருள் தெரிந்ததா?

கௌ.—நீ சொல்வதில் ஒரு வார்த்தைகூட நிஜமில்லை.

நா.—பேஷ்! கௌதமி! நன்றாகப் பதில்சொல்லியடக்கினாய். இருக்கட்டும், நீபோ.

(கௌதமி, சுசீலை, வநிதேசுவரி மூவரும் போதல்).

போ.—என்னவிருந்தாலும், நாராயணத்தேவர்பாடு கொஞ்சம் கஷ்டம்தான்.

நா.—என்னகஷ்டம்?—அது கிடக்கட்டும்; சுப்பராயா! நீ பாடுபட்டதற்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லையே! காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்றுவந்தவன் கொண்டுபோனான் என்ற கதையாக வல்லவா முடிந்துவிட்டது.

சுப்.—நான் எனக்காக ஒன்றும் செய்யவில்லை; எல்லாம் என் எஜமானருக்காகத்தான் செய்தேன். யுத்தத்தில் எதிர்நின்று சண்டைசெய்வது போர் வீரர்களாயினும், ஜயம், தோல்வி இரண்டுக்கும் பாத்தியப்பட்டவர் தளகர்த்தர் அல்லவா? வேட்டையில் ஓடியாடித்திரியும் நாய்கள் வேட்டை மிருகங்களை எஜமானனுக்காகத்தானே பிடித்துக் கொடுக்கின்றன.

நா.—நல்ல உபமானம் சொன்னாய். அப்படியானால் நீ வேட்டைநாய்க்குச் சமானமா?

சுப்.—அப்படியே யிருக்கட்டும்; தாங்கள் நாயில்லாமல், சுதாவில் வேட்டையாடினீர்களே. வேட்டையில் பிடித்த மான் உம்மேல் பாயும்போலிருக்கிறதல்லவா?

ரகு.—நாராயணத்தேவரே! ஜாக்கிரதை; சுப்பராயன் உமது பேரிலேயே திரும்பிவிட்டான்.

விஜ.—பேஷ்! சுப்பராயா! நன்றாக மடக்கினாய்!

பிர.—என்ன, தேவரே! இசைவு கேடாகவாக்கைக் கொடுத்துவிட்டீரே!

நா.—இசைவு கேடென்ன? உங்கள் வார்த்தையில் கொஞ்சமேனும் உண்மை யிருந்தாலல்லவா எனக்கு வருத்தமுண்டாகும்?

ரகு.—மாப்பிளைத் தேவர்வாள்! என்னதான் மறைத்துச் சொன்னாலும், உமது மனைவி நீலிதான்; அதில் சந்தேகமில்லை.

நா.—இல்லவே இல்லை; என் மனைவி நீலியல்ல; பந்தயம் போடுவோம்: நாம் எல்லோரும் அவரவர் மனைவியைக் கூப்பிட்டனுப்புவோம்; யாருடைய மனைவி உடனே கேட்டு வருகிறாளோ, அவருக்குத்தான் ஜயம் என்று வைத்துக்கொள்ளுவோம்.

பிர.—சரி; பணயம் என்ன?

விஜ.—இருபது பவுன்.

நா.—சீ! இருபது பவுன்! நான் கோழிச்சண்டைக்குக்கூட அவ்வளவு குறைவாக பணயம் வைக்க மாட்டேனே!

விஜ.—ஆனால், நூறு பவுன்.

நா.—சரி; இருக்கட்டும்; அது போதும்.

பிர.—யார் முதலில் ஆரம்பிக்கிறது?

விஜ.—நான் ஆரம்பிக்கிறேன்.—கேசவா, நீ போய் உனது எஜமானியை நான் வரச்சொன்னதாகச் சொல்லிவிட்டு வா.

கே.—இதோ போகிறேன். (போதல்)

ரகு.—வநிதை நிச்சயம் வந்துவிடுவாள்; ஜயித்தால் பாதி எனக்கு.

விஜ.—பாதிக்கு இங்கே பங்கு கொடுக்கமாட்டேன் முழுவதும் எனக்குச் சொந்தம்.

(கேசவன் திரும்பி வருதல்.)

எங்கே யவள்? என்ன சொன்னாள்?

கே.—ஏதோ வேலையாக இருக்கிறாளாம்; இப்போது வரமுடியாதென்று சொல்லச்சொன்னாள்.

நா.—எப்படி, எப்படி! வேலையாகவிருக்கிறாளா? வர முடியாதென்பதற்கு இது ஒரு காரணமா?

போ.—இதுவாவது கொஞ்சம் பொறுக்கக்கூடியதாகவிருக்கிறது.—உம்முடைய மனைவி என்ன சொல்லி யனுப்புவாளோ? வெகு கேவலமாகவிருக்கும் பார்ப்போம்.

நா.—தானே தெரிகின்றது; வீண் பேச்சேதற்கு?

பிர.—கேசவா, நீ போய் எனது மனைவியை நான் உடனே வரச்சொல்லிக் கேட்டுக்கொள்கிறதாகச் சொல்லிவிட்டு வா.

(கேசவன் போதல்.)

சிறுவர்க்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

மானஸ பூஜையின் பெருமை.—பாண்டவருள், அர்ச்சுனன் மிகுந்த ஆடம்பரத்தோடு சிவபூஜை செய்வது வழக்கம். வெள்ளியாலாகிய பூஜாபாத்திரத்தோடும், அபிஷேகம், தீபாராதனை முதலிய பெரிய ஆடம்பரத்தோடும் வெகுநாழிகை, யாவரும் பார்க்கும்படி பூஜைகளைத் நடத்துவான். பீமஸேனனோ கோயில் முதலிய ஸ்தலங்களுக்குப் போகாது எப்பொழுதும் தன் மனதிலே பகவானைத் தியானம் செய்வது வழக்கம். ஆகையால் இவன் செய்யும் பூஜை ஒருவருக்கும் தெரியாமல் இருந்தது. இதுபற்றி அர்ச்சுனன் தனது தமயனைப் பக்தியற்றவன் என்றும் தன்னை விடத்தாழ்ந்தவன் என்றும் எண்ணத் தொடங்கினான். எல்லாங்கண்டறியுஞ் சக்திவாய்ந்த கிருஷ்ண பகவான் இதை உடனே தெரிந்துகொண்டு ஸகஜமாய்க் 'கைலாஸம்சென்று பரமசிவனைத் தரிசித்து வருவோம் வா' என்று அர்ச்சுனனைக் கூப்பிட அர்ச்சுனன் ஒன்றும் அறியாதவனாகையால் வருவதாக ஒப்புக்கொண்டான் இருவரும் கைலாஸம் நோக்கிப் புறப்பட்டார்கள். கைலாஸகிரியண்டை போகையில் ஒரு மனிதன் ஒரு பெரிய வண்டி நிரம்ப வாடிய புஷ்பங்களைக் கொண்டுவருவதைக் கண்டார்கள். அர்ச்சுனன் இதென்ன என்று வண்டி இழுத்து வருபவனைக்கேட்க அவன் வேலை அவஸரத்தில் இருந்ததால் அவன் இதற்குப் பதில் கூடச் சொல்லவில்லை. உடனே கிருஷ்ணார்ச்சுனர் அவன் என்ன செய்யப்போகிறான் என்பதைப் பார்க்க அவன் பின்னே செல்ல, அவன் இப்புஷ்பங்களை ஒரு மலைபோல் குவிந்திருக்கும் வாடல் புஷ்பக் குவியலிடம் கொண்டுபோய்க் கொட்டுவதைக் கண்டார்கள். அங்கு நின்றுகொண்டிருக்கையில் அனேக வண்டிகள் நூற்றுக் கணக்காக வாடல் புஷ்பங்களைக் கொண்டு கொட்ட அதைக் கண்டமாத்திரத்தில் அர்ச்சுனனுக்கு இதன் உண்மையை அறிய வேண்டும் என்ற அடங்கா ஆவல் உண்டாயிற்று. அவன் இவ்வேலை செய்பவரை எவ்வளவோ தரம் கேட்டுப்பார்த்தபோதிலும் அவர்கள் மறுமொழி கூடச் சொல்ல ஒழிவு இன்றி விரைவில் தமது வேலையைச் செய்து கொண்டிருந்தனர்.

வெகுநாழிகை அர்ச்சுனன் இவ்வாறு கேட்டதின் பேரில் ஒருவன் மாத்திரம் வெகு கோபத்தோடு பின் வருமாறு சொன்னான். 'எங்களுக்கு வேலையே அஸாத்தியம். நீர் எங்களை இவ்வாறு தடைசெய்யாதேயும். ஐந்நூறுவண்டி நிர்மால்லியங்கள்தான் நாங்கள்இங்கு கொண்டுவந்து கொட்டி இருக்கிறோம். இன்னும் ஐந்நூறுவண்டிப் புஷ்பங்கள் சிவபெருமானது பாதத்தில் குவிந்துகிடக்கின்றன. நேற்றுப் பாண்டவ வீரனாகிய பீமஸேனன் செய்த பூஜையில் விழுந்த புஷ்பங்கள் இவை. அவன் இன்று பூஜை தொடங்குவதற்கு இன்னும் கொஞ்ச நாழிகைதான் இருக்கிறது. அதற்குள் நாங்கள் இந்நிர்மால்யங்கள் எல்லாவற்றையும் எடுத்தெறிந்து விடவேண்டும். இனிமேல் எங்களை இவ்வாறு தடை செய்யாதேயும்' என்று சொன்னான். இதைக்கேட்டதும் அர்ச்சுனனுக்கு ஆச்சரியம் அதிகரிக்க 'அர்ச்சுனனோ, இவ்வாறு பூஜை செய்தது; அல்லது பீமனோ?என்று அர்ச்சுனன் அந்த வேலைக்காரனைக் கேட்டான். 'அர்ச்சுனனோ! பீமன் தான் இப்பூஜையைச் செய்தது. அர்ச்சுனனது பூஜையெல்லாம் வெறும் ஆடம்பரம்தான்' என்று அவன் மறுமொழி கூறுகையில், அங்கு ஒருமனிதன் ஒருசிறு கூடையில் கொஞ்சம் புஷ்பத்தைக் கொண்டு வருவதை அர்ச்சுனன் கண்டான். உடனே அவனை நோக்கிக் கிருஷ்ணபகவான் 'இது யார் பூஜைசெய்தது என அவன் 'இது அர்ச்சுனன்என்ற டம்பாசாரி செய்த பூஜை' என்று மறுமொழி சொன்னான். உடனே அர்ச்சுனனுக்குத் தான் வீண் கர்வப்பட்டு பீமனை அவமதித்ததாகப்பட, மனங்கரைந்து வெட்கத்தால் தலை குனிந்துவிட்டான். சற்றுநாழிகையானதும் 'யான்செய்யும் ஆடம்பரமான பூஜையைவிட எனது தமயன் சாப்பாட்டிற்கு முன்புசெய்யும் மானஸபூஜையே மேல் என்பதை இப்பொழுது தான் நான் நன்றாய் அறிந்தேன்' என்று வாய்விட்டுக் கிருஷ்ணபரமாத்மாவிடம் சொல்லித் தனது கர்வத்தைப் போக்கிக்கொண்டான். இதனால் மானஸ பூஜையின் மேன்மை நன்றாய் விளங்குகிறது.

* * *

கேடுவான் கேடுநினைப்பான் அல்லது அகச்சண்டை புறச்சண்டை.—பாண்டவர்கள் தாம் வனவாஸம்செய்துவந்த காலத்தில் துவைதவனத்தில் காற்று மழை வெய்யில் முதலியவைகளால் மிக வருந்தும்படி நேரிட்டது. இதனால் அவர்கள் தேகம் மெலிந்து மிகுந்த கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். பாண்டவர்களிடமிருந்து துரியோதன ஸபைக்குச் சென்ற சில பிராம்மணர்கள் அவர்களது நிலைமையைத் துரியோதனனிடம் தெரிவித்தார்கள். இது துரியோதனனுக்கு மிகுந்த ஸந்தோஷத்தை உண்டாக்கியது. பாண்டவர்களது துக்கத்தை அதிகப்படுத்தவேண்டும் என்ற கொடிய எண்ணம் அவனுக்குவர அவன், 'நாம் நமது தம்பிமார்கள் ஸ்நேஹிதர்கள் பரிவாரங்கள் முதலியவர்களோடு துவைதவனம்போய் ஸுகமாகக் கிரீடாதிகள்செய்து ஆனந்திக்கலாம். அதைக்கண்டு பாண்

டவர்கள் துக்கம் அதிகரிக்கும்' என்று யோசனை செய்து கொண்டு வெளிப்படையாக' நாங்கள் துவைத வனத்திலிருக்கும் எங்கள் பசுக்கூட்டங்களை மேல்பார்வை பார்க்கப் போகிறோம்.' என்று சொல்லிக்கொண்டான். இதைக்கேட்ட திருதிராஷ்டிரன் இவனது கெட்ட எண்ணத்தைத் தெரிந்து கொள்ளாது போய்வரும்படி அனுமதி கொடுக்க எல்லோரும் துவைதவனம் புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தனர். அங்கு வந்ததும் தமது பசுக்களைக் கவனியாது ஒருவாறு பார்த்துவிட்டு பாண்டவர்கள் கஷ்டப்படும் இடத்திற்கு அருகாமையிலிருந்த தோட்டத்தில் அவர்கள் புகுந்தார்கள்.

அந்தத் தோட்டத்தில் இருந்த ஓர்குளத்தில் இவர்கள் ஜலக்கிரீடை செய்யலாம் என்று உள்ளம் பூரித்தனர். இம்மாதிரி இவர்கள் புகுந்த இடமாகிய அந்தத் தோட்டம் குபேரனுடையதாக இருந்தது. இவர்கள் அங்கு வரும்முன் குபேரன் பட்டணத்திலிருந்து சித்திரஸேனன் என்ற ஒரு கந்தர்வ ராஜன் அங்கு வந்து ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்தான். இதனால் அப்பொழுது கந்தர்வ ராஜனுக்கும் துரியோதனாதியருக்கும் பெரிய போர் உண்டாயிற்று. அதில் முடிவில் கந்தர்வ ராஜன் ஜயம் அடைந்து துரியோதனாதியரையும் அவர்கள் பெண்டுகளையும் ஒழுங்கற்று விரோதமாக பர புருஷர்களோடு சேர்த்துக் கட்டி எல்லோரையும் சிறைபிடித்துக்கொண்டு ஆகாயத்தில் கிளம்பிவிட்டான். அப்பொழுதுதான் கேடுவான் கேடு நினைப்பான் என்பதைத் துரியோதனன் நன்றாக அறிந்தான். இதில் அகப்படாதிருந்த சிலர் ஓடோடியும் வந்து பாண்டவர்களிடம் துரியோதனாதியருக்கு வந்த ஆபத்துக்களைத் தெரிவித்தனர். இதைக் கேட்டதும் கருணா நிதியாகிய தருமபுத்திரர் துரியோதனாதியரைச் சிறைமீட்டு வரும்படி தமது தம்பிகளாகிய பீமார்ச்சுனரை ஏவினர். அவர்கள் முதலில் தமக்குத் தீங்குசெய்த துரியோதனாதியரைக் காப்பாற்றுவது அழகன்று என்று வாதாடினர். அப்பொழுது தருமபுத்திரர் முதலில் 'நமக்குப் பிறர் எவ்வளவு கெடுதிகள் செய்தபோதிலும் அவர்களுக்கு நாம் கெடுதியைச் செய்யலாகாது. அவ்வாறு செய்வதால் நாமும் அவர்களுக்கு ஸமானமாவோம்' என்று நியாயம் சொல்லியும் கேட்காத தம்பிகளை நோக்கி 'நம்முள் வரும் சண்டைகளில் நாம் ஐந்து பேரும் நூறுபேருமாகப் பிரியலாம். வெளியிலிருந்து ஒருவன் நம்மோடு சண்டைக்கு வருவானாயின் நாம் நூற்றைந்து பேராகத்தான் இருக்கவேண்டும்' என்று புத்திமதி கூறினர். இதைக்கேட்டதும் பீமார்ச்சுனர் மிகுந்த வேகத்துடன் சென்று கந்தர்வனுடன் போர்செய்து அவனை வென்று துரியோதனாதியரை விடுவித்து தருமபுத்திரர் முன்புகொண்டுவந்து நிறுத்தினார்கள். அப்பொழுதும்கூட தர்மபுத்திரர் துரியோதனனைப் பரிஹாஸம் செய்யவேயில்லை. அவனுக்கு வந்த ஆபத்தை நினைந்து கொஞ்சம் துக்கப்பட்டு அவனிடம் நயவார்த்தைகள் சொன்னார். துரியோதனாதியருக்கு 'நாம் பிறருக்குசெய்ய நினைத்த தீங்கு நம்மேலேயே திரும்பிவிட்டதே!' என்ற வெட்கம் பாதிக்கத்தொடங்க, ஒன்றும் பேசாது தலைகுனிந்து நின்றுகொண்டிருந்துவிட்டு மிகுந்த துக்கத்துடன் அவர்கள் தமது ஊர்போய்ச் சேர்ந்தனர்.

* * *

புத்தியால் அறியோனைப் புராணன் பக்தியாம் வலையில் பிடிபடுவான்.—பகவான் துரியோதனாதியரிடம் பாண்டவர்க்காகத் தூது செல்லப் புறப்படுகையில் ஸஹாதேவன் பகவானை நோக்கி 'நீ தூதுபோனால் என்ன, போகாதிருந்தால் என்ன; துரியோதனன் பாகங்கொடுத்தால் என்ன, கொடுக்காமலிருந்தால் என்ன; திரௌபதி கூந்தலை முடித்தால் என்ன, முடிக்காவிட்டால் என்ன; நீ நினைத்தபடி காரியங்கள் முடிக்கும்விதம் எனக்கு எப்படித் தெரியும்' என்றான். இவன் எல்லோரையும் போலத் தனது அபிப்பிராயத்தை வெளியிடாதுரகஸியம் தெரிந்தவன்போலப் பேசியதைக்கண்ட பகவான், அவனிடம் உள்ள ரகஸியத்தை அறியவேண்டுமென்று அவனைத் தனிமையாக ஒரு மண்டபத்திற்கு அழைத்துப்போய் 'நீங்கள் எல்லோரும் சொல்லியபடி பாரதயுத்தம் நடவாது நிறுத்த உபாயம் என்ன?' என்று கேட்டார். அதற்கு ஸஹாதேவன் 'நீ பாரதயுத்தத்தில் எல்லோரையும் சாம்பலாக்கி பூபாரம் நீக்கவந்திருக்கிறாய். நீ நினைத்தால் அல்லவா பாரதயுத்தம் நிற்கும். அப்படி இருப்பினும் என் அபிப்பிராயத்தில் கர்ணனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்து, அர்ச்சுனனைக் கொன்று, திரௌபதியின் கூந்தலையும் அறுத்து, உன்னையும்பிடித்துக் கட்டிவிட்டால் இந்த யுத்தம் உடனே நின்றுவிடும்' என்று சொன்னான். அப்பொழுது பகவான் 'முன்னே சொல்லியவைகள் எல்லாவற்றையும் நீ செய்தாலும் என்னை எவ்வாறு உன்னால் கட்டமுடியும்' என்று கேட்க, 'நீங்கள் உங்கள் ரூபத்தைக் காட்டுங்கள். நான் கட்டுகிறேன்' என்றான் ஸஹாதேவன். உடனே பகவான் அநேக ரூபங்களோடு அவன் முன் தோன்ற அவன், பகவானது உண்மை ரூபத்தைத் தன் ஞானத்தால் உணர்ந்து தனது கருத்தாகிய (பக்தியாகிய) கயிற்றினால் கட்டிவிட்டான். அக்காலத்தில் பகவான் தம்மை விட்டுவிடும்படி கேட்டுக்கொள்ள, அவன் 'எங்கள் ஐவரையும் வரும் யுத்தத்தில் காக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டான். பகவான் அப்படியே ஆகட்டும் என்று சொல்லி, அப்பொழுது நடந்த விஷயங்களை ஒருவருக்கும் சொல்லாதிருக்கும்படி கட்டளையிட்டு பாண்டவர்கள் இருந்த இடம்வந்து சேர்ந்தார்.

இங்கு கூறியிருக்கும் கிருஷ்ண ஸஹாதேவ ரஹஸ்ய ஸம்வாதத்தை வில்லிபுத்தூர் ஆழ்வார் கிருஷ்ணன் தூதுச் சருக்கத்தில் வெகு அழகாகக் கூறியுள்ளார்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

2. விழாவெடுத்தகாதை

நன்னெறி வழுவாதவர்க்குத் தெய்வந்துணை என்பதற்கு ஓர் ஐயமும் இல்லை. அவரை என்றும் நல்லறிவுடையாரிடத்தே வைப்பது கடவுளினது வைபவம். மனதிலுண்டாகும் துன்பம் வெளிக்கூறுதிருந்திட்டால் விரியும்; அதிகமாகும். அதைப் பொறுப்பது மிகவும் கஷ்டம். அதைப் பொறுக்கமுடியாது போயினும், உடன்கூறி துன்பமாற்றுவதற்கு தக்கவர் இடைப்பின்தான் கூறுவர். கோவலனும் கண்ணகியும் தாமுற்றவற்றைக் கூறத்தக்க தகைமையுடையவள் என்று கவுந்தியிடம் தமது வரலாற்றை எல்லாம் கூறினர். தமது கஷ்ட நிலைமையும், தாம் தனியாக வாழவேண்டுமென்று கொண்ட ஆவலும், இவற்றை எல்லாம் முழுதும் கவுந்திக்குச் சொற்றனர்.

இதற்குள் தனது வேலையை முற்றும் நடத்தவேண்டுமென்ற ஆவல் பூண்டொழுகும் கோவலனுக்கு கவுந்தியிடம் கண்ணகியை அடைக்கலமாகவைத்து மதுரைமாநகர் சென்று அதனிடையுள்ள நிலைமையை அறிந்து சிலம்பை விற்று தான் செல்வப்பெருக்கொடு வாழவேண்டுமென்று மனதிற்பட்டது. இதற்குள் மதுரை எல்லையைக் கடந்து மதிற்புறம் வந்து ஆயர்பாடி இருக்குமிடம் சேர்ந்தனர்.

கவுந்தியும், தன் நன்வழிக்கோட்பாடின் மனோபவத்தினால் தான் நற்குணமுடையாரை நல்விடத்தே வைக்கவேண்டுமென்ற ஆவலோடு அவரோடே ஆயர்பாடியுள் வந்தாள். கண்ணகியின் கற்பின் நிலைமையும், மனத்தின் உயர்ந்த பாவமும், அவள் மனதைக் கண்ணகிப்பால் கலக்கும்படிச்செய்துவிட்டது. கண்ணகியைவிட்டுச் செல்வதென்றால் கவுந்திக்குக் காலெழவில்லை. நற்குணமுடையார்க்கு கடவுள் தானே கருணை வடிவாக உதவிசெய்வது யார்தான் அறியாதவர்? அவர் கருணாவிலாஸத்தின் ஸாதனம் போல்தான் கவுந்தி கண்ணகிக்கும் கோவலனுக்கும் பட்டது.

ஆயர்பாடி வந்தடைந்தனர். அதை முற்றுங் கண்டானந்தங் கொண்டனர், நல்லிடமொன்று வேண்டி அலைந்தனர், இதற்குள் கண்ணகியைக் கவுந்திபால் அடைக்கலம் வைத்துவிட்டு "நான் மதுரைமாநகரஞ்சென்று, சிலம்பை விற்குமிடங்கண்டு, அதை விற்று, வெறுங் கையனாயிருப்பதை ஒழிந்து, செல்வமோங்கியவனாக வருவேனென்று" கூறினன் கோவலன். அப்பொழுது அங்கு மாடலன் என்னும் தோழன் ஒருவன் தோன்ற அவனோடு வேடிக்கையாக காலத்தைப் போக்கிக்கொண்டிருந்தனன்.

இதற்குள் கவுந்தி, "இனத்தோடே இனஞ்சேரவேண்டும்" என்ற எண்ணங்கொண்டு, அவ்விடத்து இடைச்சியர் கூட்டத்துள் பெரியாளாகிய மாதரி என்பவளைக் கண்டு அவளது நன்னடக்கை, குணவிசேஷம் முதலியவற்றைக் கண்டு ஆநந்தம் கொண்டனள். அவளிடத்து கண்ணகியை அடைக்கலம் வைக்கலாமென்று எண்ணினாள். "பசுவைக்காத்து அதன் பயனை எல்லாருமடையச் செய்யும் இம்மடந்தையர்க்கு கீழ்மை என்பதே கிடையாது. இம்மாதரி, நம்மிடை பேசும் வழியிற் பார்க்குமிடத்து நெஞ்சத்தில் அழுக்குடையயள் அல்லள். அதுமாத்திரமன்று, பெரியவள்; ஈகைகுணமுடையவள். இம்மாதரி குணத்திற் சிறந்தவள். ஒழுக்கத்தில் உயர்ந்தவள். இவள்பால் தான் கண்ணகியை அடைக்கலம் வைக்கத் தகுந்தவள்" என்று கவுந்தி எண்ணினாள்.

எண்ணியதும், "மாதரி! நான் சொல்வதைக் கேள். இம்மடந்தை உயர்குலத்திற் பிறந்தவள். அவள்கணவனும் மேல்வகுப்பைச்சார்ந்த வாணியன். இவர்களை? உம்மிடம் வைத்தனன். இவரைக் காணாத பொருளைக்கொண்டு போற்றுவதுபோல, போற்றி, விருந்தோம்பி வரவேண்டும். இவள் கண்ணகி. அழகிற் சிறந்தவள். புகழிற்பெருத்தவள். குணத்திலுயர்ந்தவள். இவள் கணவன் மதுரைசென்று வாணிபம்செய்து வரும்வரையும் இவளை உனக்கு அடைக்கலம் புகுவித்தேன். இவளை மங்கள நீரிலாட்டி தாயும் தந்தையும் இவளுக்கு நீயேயாகிக் காப்பாற்றுவாயாக! என்னோடு இப்பொழுது வந்த இக்கண்ணகியின் சீரடியின் உருவைப் பூமிதேவியும் இதுகாறும் கண்டதில்லை. இவள் அகம்விட்டு வெளிவந்தவளல்லள். வாசற்படி கடவாதவள். கற்பென்னும் கவசத்தினை அணிந்த பெருந்தெய்வமீது. இக்கற்பினுருவத்திற்கு அடைக்கலம் தருக! பின் போகும் வழிக்கு பேரின்பமளிக்கும் ஸாதன மிதுவே ஆகும்" என்றுமாதரியை நோக்கி கவுந்தி சொல்லி அவள்பால் கண்ணகியை அடைக்கலம் வைத்துவிட்டுத் தன்வழியே தான் சென்றாள்.

மாதரியால் ஏவப்பட்டு, ஆயமாதர்கள் சுவையுடைய பண்டங்களைக் கண்ணகிக்குக்கொடுத்து அடிசில் செய்யுமாறு கேட்டுக்கொண்டனர். அவர் ஏவியவாறு மங்கள நீரில் ஸ்நாநம்செய்து சுவையோடு கூடிய அடிசில்செய்து கோவலனுக்கிட்டு அவன் பசியார உண்டபிறகு, எஞ்சி நின்றதைத் தானுமுண்டு ஸுகமாக இருந்தனள். என்றும் சமையல்செய்யத் தெரியாதவள் கணவன்மேலன்பென்கிற வலிமையால் சுவைமிக்க அன்னம் சமைத்தது அதிசயமே! உண்டுகொண்ட தன் கணவனுக்கு வெற்றிலையும் பாக்கும் அளித்து, அருகில் நின்றனள் கண்ணகி.

கோவலன் இவற்றைக்கண்டனன். மாதவியின் வெளியன்பிற்கும் கண்ணகியின் உள்ளன்பிற்குமுள்ள பேதம் அவன் மனதைப்பிளந்தது. அவனுக்கும் பொறுக்காது, இவ்வாறு தானே கூறினான்:—"கண்ணகி! யான் உன் மனமறியாப் பேதையாயிருந்தனன். நல்லொழுக்கத்தைவிட்டுக்கொடுவழியில் வாழ்ந்த எனக்கு நற்கதியுண்டோ? இதைக் கவனியாது உன்னையும் சிறுமைப்படச்செய்தேன். யானும் இழுக்கடைந்தேன். என் சொல்தவறாது நடுயாமத்தில் மதுரைவர முழுமனத்தோடு எழுந்த உன்னைக்காணுந்தோறும் என் மனம் வெட்கமடைகின்றது. என்ன பாவம் செய்தேன், நான் எவ்விதம் உய்வேன்."

அது கேட்ட கண்ணகி "யான் அது காறும் நீவிரில்லாமையால் இல்லறம் நடத்தமுடியாது, நீவிர்தகாத ஒழுக்கத்தில் வீழ்ந்ததினால் என் மாமியவர்க்கும் மாமனவர்க்கும் உண்டான வெறுப்பு யான் எதிரில் நிற்பதாலே அவர்க்கு விருத்தியாவதனாலும், அன்றியும், உம்மிடம் யான்கொண்ட பாசத்தின் வலிமையும், இரண்டும் கலந்து நீவிர்கூவியதும் யான் ஒருமைப்பட்டு வந்தனன். நீவிர் வருத்தமடையவேண்டா"மென்று கூற, கோவலன் "இனியுன் சிலம்பைத்தா. அதை மதுரை சென்று விற்றுவருவேன்" என்றான். அவளுமதை மிக வணக்கத்தோடு தந்தனள். அதை வாங்கிக்கொண்டு "என் பிறிவாற்றாது வருத்தப்படவேண்டாம். நான் துரிதமாய் வருவேன். கவலையொழி" என்று சொல்லிக்கொண்டேயிருந்த கோவலன் அவள் தனித்திருக்கும் நிலைமையை யோசித்து தன் கண்ணில்கண்ணீர் ததும்ப, அவள் கண்டால் வருந்துவாளென்று எண்ணி திரும்பிப் பாராமல் எதிர்க்கண்ட துற்சகுணங்களைக் கவனியாது மதுரையூர் அடையப் போந்தனன்.

கோவலன் போனதும் அநேக துற்சகுனங்கள் நேர்ந்தன. பிரையிட்ட தாழிகளில் பால் தோயவில்லை. காளை மாட்டின் கண்களின் நீர் சிந்தியது சிந்தியவண்ணமாக நின்றது. வெண்ணெய் உருகவில்லை. கன்றுகள் துள்ளி விளையாடவில்லை. குழைந்து நிற்கின்றன. பயந்து பசுக்கூட்டம் அரற்றும். பசுவின் கழுத்திற்கட்டிய மணிகள் அறுந்து வீழ்ந்தன. இவற்றை எல்லாம் கண்ட மாதரி நமக்கேதோ துன்பமுள்ளது. இதை நீக்க வழி தேடவேண்டுமென்று நிஸ்சயித்தாள்.

யோசித்தனள். நோபாலனைந்காக்கும்படி வேண்டவேண்டுமென்றனள். மாயவனை வாழ்த்திடில் மாயமாத் துன்பம் போமென்றெத்தினாள். முன்னாள் திருமாலை இத்தகைய காலத்தில் வணங்கும் பொருட்டு ஒரு கூத்தாடுவதுண்டு. இது ஓர் பெருவிழா. கண்ணனது மகிமையைக் கூறும் கூத்து. இதற்கு ஆய்ச்சியர் குரவை என்று பெயர். குரவை என்பது எழுலது ஒன்பது பேர் கைக்கோத்தாடுமோர் கூத்து. இக்கூத்தைப் பெண்மணியாகிய கண்ணகி எதிரில் ஆடத் தலைப்பட்டனர். இதனால் பசுவும் கன்றும் துன்பம் நீங்குமென்று சொல்லினாள்.

பாணர்கள் வந்து மாயவனென்னும் நரம்பும் பின்னையுங் கலக்க கைக்கிளை இடப்பக்கத்தே படரயாழைமீட்ட தோழிகளெல்லாங் கலந்து கைக்குட்கைக்கலந்து கண்ணனைப்பாடி கன்றுகளின் வலிதீர குரவையாடினார். "புள்ளூநங் கடவுளைப் போற்றுதும் போற்றுது" மென்று எல்லாரும் போற்றி,

"மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழி
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே! [த்த
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே!

"பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணுந்
திருவடியுங் கையுங் கனிவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே!

"மடர்தாழ நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பா னுற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே!
நாராய ணாவென்ணா நாவென்ன நாவே.!" *

எனத்துதித்து (கண்ணகிக்காய்தெரியாது). போற்றிய ஆய்ச்சியர் குரவை அவட்கெவ்வாறு உதவியாகியதென்பது பின்தானே தெரியவரும்.

* சிலப்பதிகாரம்—ஆய்ச்சியர் குரவை—படர்க்கைப்பரவல்.

விசேஷ வர்த்தமானங்கள்
GENERAL NEWS

ஹாலிவால் நக்ஷத்ரம்.—நமது போதினியில் பிரசுரமான இயற்கை அற்புதங்கள் என்னும் தலைப்பின் கீழ் 1909ஞு ஏப்ரல்மீ 10-ம் பகுதியில் எழுதி வெளியிட்டுள்ள வால் நக்ஷத்ரங்கள் என்னும் வியாஸத்தைப் படிப்பவர்களுக்கு ஹாலிவால் நக்ஷத்ரத்தைப்பற்றிய விஷயங்கள் சில (305-பக்கத்திலிருந்து) தெரியவரும். இந்த நக்ஷத்ரம் ஸுமார் 1911-வருஷம் தெரியவேண்டியது. இது 1909ஞு அக்டோபர்மீ 10வ அன்று இங்கிலாந்திலுள்ள கேம்ப்ரிட்ஜ் நகரத்து நக்ஷத்ர சாலையில் தூர திருஷ்டிக் கண்ணாடி மூலமாகப் பார்க்குங்கால் புலப்பட்டதாம். இது ஸாதாரண கண்ணுக்குத் தென்படுவது அஸாத்யம். இந்த வால்நக்ஷத்ரம் பூமியின் அருகாமையில் வந்துகொண்டே இருக்கின்றது. பூமிக்கு மிகவும் ஸமீபத்தில் வந்தால் ஒருவேளை ஸாதாரணமாகத் தெரிந்தாலும் தெரியலாம். ஸூர்யனுக்கும் இந்த வால் நக்ஷத்திரத்திற்கும் பொதுவாகஸுமார் 3,00,00,00,000 மைல் தூரம் இருக்கும். இப்பொழுது இது நாள் ஒன்றிற்கு ஸுமார் 25,00,000 மைல் வீதம் ஓடி வருகின்றது. பூமிக்கு அருகாமையில் வரும்பொழுது இதற்கும் பூமிக்கும் ஸுமார் 2,40,00 000 மைல் தூரம் இருக்கும். இது முதலில் மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தின் அருகாமையில் மங்கலான நக்ஷத்திரம் போலக் காணப்படுமாம். பின்னர் வானத்தில் இது கொஞ்சம் பரந்து காணப்படுமாம். இத்தருணம் தப்பினால் இதை மறுபடியும் சற்றேறக்குறைய 1987-ம் வருஷம்தான் பார்க்க முடியும்.

* * *

விவசாய வறுமையும் பட்டுப் பூச்சி வளர்த்தலும்.—நம்முடைய விவசாயிகள் வறுமை யடைந்திருப்பதற்கு அநேகம் காரணங்கள் உள. ஆனால் இவ்வெளிமைத்தனத்தை ஒருவாறு குறைப்பதற்கு வழியொன்றுண்டு. பயிர் நடும் காலத்தில் இவர்களுக்கு இடைவிடாமல் வேலை செய்யும்படியாயிருக்கும், ஆனால் மற்ற காலங்களில் இவர்களுக்கு வேலையில்லை யென்றே சொல்லலாம். அப்பொழுது வீண்காலம் கழிக்காமல் ஏதாவது ஒரு தொழிலைச் செய்தால் அதனால் கொஞ்சம் வரும்படியடையலாம். பட்டுப் பூச்சி வளர்த்தலை ஒரு தொழிலாகக் கொள்ளலாம். பட்டுப் பூச்சிகளில் மூன்று வகையுண்டு. அவைகாட்டுப் பூச்சி, ஆமணக்கிலை, மாவிலை இவைகளைத்தின்று ஜீவிக்கும் பூச்சி, முசுக்கட்டைச் செடியின் இலையையே உண்ணும் பூச்சி என்பன. ஆமணக்குச் செடியும் மாமரமும் இந்தியாவில் எவ்விடத்திலும் விசேஷமாய் விளையும். ஆகையால் இவைகளின் இலையைத் தின்னும் பூச்சியைச் சுலபமாய் வளர்க்கலாம். மாவிலையைத் தின்னும் பூச்சியின் பட்டுப் பிசின் ஏறியும், கூண்டினின்று பிரித்துச் சுற்றுவதற்குச் சிரமத்தை உண்டுபண்ணின போதிலும் தக்க யந்திரத்தைக்கொண்டு அந்த மேன்மையான பட்டை முற்றிலும் உபயோகிக்கலாம். முசுக்கட்டைச் செடியினிலையையே தின்னும் சைனு அல்லது ஜப்பான் பூச்சியையும் இந்தியாவில் வளர்க்க முடியும். முசுக்கட்டைச் செடி குளிரான காஷ்மீரத்திலும், வறட்சியுள்ள பர்மாவிலும் வளர்க்கப்படுவதனால், அதை இந்தியா முற்றிலும் வளர்க்கலாம். நம்முடைய விவசாயிகள் இப்படிப்பட்ட லாபமுள்ள ஒரு தொழிலைப் பயிர்வேலையில்லாதகாலத்தில் செய்வார்களானால் அவைகளைக்கொடிய வறுமை தீண்டாது.

* * *

சப்பாத்துக்கள்ளி ஒரு கால்நடைத் தீவனம்.—சப்பாத்துக்கள்ளி முள்ளில்லாமல் வளர்க்கப்படும் பட்சத்தில் கால்நடைகளுக்கு ஒரு நல்லதீவனமாகலாம் என்று ஒரு கிருஷிசாஸ்திரி அபிப்பிராயங்கொள்ள, கால்நடைத் தீவனமின்றி வருந்தும் நம்மிந்தியாவில் இவ்விஷயமாய்ச் சில பிரயத்தனங்கள் நடந்தன. உதாரணமாகப் 'புனகாட்டில் பார்மில்' சிலர் வெகு பிரயாசைப்பட்டும், கடைசியில் சப்பாத்துக்கள்ளி தீனிக் குதவாது என்ற தீர்மானத்திற்கு வந்தனர். நிற்க, அமெரிக்காவில், காலிபோர்னியா என்ற பிரதேசத்தில் மிஸ்டர் பர்பாங்க என்ற ஒரு தாவரசாஸ்திரி, முள்களும், கெட்டியான நரம்புகளும் இல்லாமல், ஒருவரைச் சப்பாத்துக் கள்ளியை விருத்தி செய்திருப்பதாகக் கேள்விப்பட்டுக் கீழ் வங்காளத்திலுள்ள தென் சில்ஹெட்டில் இவ்வகையான சப்பாத்துக்கள்ளி தருவிக்கப்பட்டுப் பயிற்சி செய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. இக்கள்ளியில் முள்ளில்லாமலிருப்பதுடன், ஏக்கர் ஒன்றுக்கு வருஷா வருஷம் 100 முதல் 200 டன் வரையில் தீவனத்திற்குரிய கள்ளி விளைகிறதாம். இந்தியாவில் கால்நடைத் தீவன விஷயம் நம்மை வருத்திக்கொண்டிருப்பதாலும் இக்கள்ளியால் கால் நடைகளின் கஷ்டம் நிவர்த்தியாகலாம் என்ற நம்பிக்கை யுண்டாவதாலும், பாரஸ்ட் உத்தியோகஸ்தர்களும், தாவர சாஸ்திர நிபுணர்களும், தென்சில்ஹெட்டில் நடந்துவரும் பரிசோதனையை ஆவலுடன் கவனித்து வருவார்களென்று உறுதியாக நம்பப்படுகின்றது.

* * *

மண் எண்ணெய்.—உலகத்தின் நானுபாகங்களிலும் காலாகாலங்களில் காடுகளிலுள்ள ஏராளமான பெரிய மரங்கள் விழுந்து மண்ணோடுசேர்ந்து பூமிக்குள் பென்னம் பெரிய பர்வதம்போல பார்ப்பாராய்ப் புதைந்திருக்கின்றன. இந்த மரச் சிதைவுதான் நிலக்கரி என்பது. கரியிலிருந்து ஒருவித திராவகமானது தண்ணீர் போலக் கசிந்து ஊறுகிறது. அதுதான் மண்ணெண்ணெய். இந்த எண்ணெயானது உலகமுழுவதிலும் இருந்த போதிலும் ஐம்பது வருஷங்களுக்கு முன்னேதான் அதைக் கண்டுபிடித்தார்கள். அமெரிக்க இந்தியர் அதை வெகு காலத்துக்கு முன்னே கண்டறிந்து அதை வாதம், குளிர்க்காய்ச்சல் முதலிய வியாதிகளுக்கு மருந்தாக உபயோகித்து வந்தார்கள். மண் எண்ணெயின் உற்பத்திஸ்தானங்கள் சாதாரணமாய்ப் பள்ளத்தாக்குகளேயாம். அது இருக்குமிடத்தை அதைச்சுற்றிலுமுள்ள ஆகாயத்திற் விசேஷித்த வாசனையினாலும், அங்குள்ள தண்ணீரில் தோன்றும் எண்ணெய் மயத்தினாலும் அறியலாம். அமெரிக்காவில் மண்ணெண்ணெய் எடுக்கிற நாட்டிற்குப் பென்சில்வேனியா என்று பெயர். மண்ணெண்ணெயிருக்குமிடத்தில் உயரமான இருப்புக்கிராதிகளை நாட்டி அவற்றினருகில் ஒரு சிறு குடிசைகட்டுவார்கள். அந்தக்குடிசைக்குள் ஒரு யந்திரத்தைவைத்துக் கிராதியுடன் இசைத்துச் சில இடங்களில் வெகு ஆழமாய்ப் பூமியைத் தோண்டுவார்கள். சில ஸ்தலங்களின் சமீபத்திலே எண்ணெய் இருக்கும் இதனால் அங்குள்ள ஏழைகளான அநேக ஜனங்களுக்கு நல்லவேலை இருக்கிறது. பணக்காரரும் அதில் பணம் போட்டுப் பெருந்திரவியம் திரட்டுகிறார்கள். மண்ணெண்ணெய் இருக்கிற கூடுகள் திடீரென்று பெரிய பட்டணங்களாய் எழும்பி எண்ணெய் வற்றினவுடன் அழிந்துபோகின்றன.

நமது நாட்டுக்கு அமெரிக்காவிலிருந்தும் ருஷியாவிலுமிருந்தும் பர்மாவிலிருந்தும் மண்ணெண்ணெய் வருகிறது. இந்த எண்ணெயில் பல தரங்களுண்டு. தரங்களுக்குத் தக்கதாக விலையும் வித்தியாசப்படும். உயர்தர எண்ணெய் உபயோகிப்பதால் அதிக தீங்கொன்றும் சம்பவியாது. தாழ்ந்ததரத்தெண்ணெய் ஏராளமான புகையை யெழுப்பி ஆகாயத்தை அசுசியாக்குவதுடன் மற்றும் பலதீங்குகளும் விளைவிக்கிறது. ஆதலால் சிறிது விலை கூட்டிக்கொடுத்து உயர்தர எண்ணெய் வாங்கி உபயோகிப்பதே உத்தமம்.

நமக்கு நூதனமாய்ப் புகைவண்டி, புகைக்கப்பல் மின்தபால் முதலியவைகள் கிடைத்திருப்பதுபோல் இந்த மண்ணெண்ணெயும் கிடைத்திருக்கிறது. ஆகின்விலை இலகு, அதின் பிரகாசமோ அதிகம். மேலும் அது துர்வாடைகளை அகற்றக்கூடியதாகவும் இருக்கிறது. அது தேசத்திலே அதிகமாய்ப் பரவினபோதிலும் பழைய எண்ணெய்களின் விலை முன்னைப் போலவும் அதற்கதிகமாகவு மிருக்கிறது. அது வராவிலலையானால் நமது பழைய எண்ணெய்கள் ஒருதுட்டுக்கு ஒரு சொட்டென்றாகிவிடும்.

* * *

தண்ணீரைப் பரீக்ஷிக்க.—அநேக இடங்களில் குடிக்கத்தகுந்த சுத்த சலம் அகப்படுவதில்லை. அதிக அசுத்தமான சாக்கடைச் சலங்களின்சாரம் சில கிணறுகள், குளங்கள், ஆறுகள் இவைகளின் சலத்தில் கலந்திருப்பதுண்டு. இந்தமாதிரிச் சலத்தைக் குடிப்பது தேகத்துக்குப் பல வியாதிகளை உண்டாக்கும். சலத்தில் அசுத்தம் கலந்திருக்கிறதாவென்று அறிவதற்குக் கீழே சொல்லியிருக்கும் பரீட்சையைச் சோதித்துப் பார்க்கலாம். எந்தச்சலத்தைப் பரிசோதனை செய்யவேண்டுமோ அதை ஒரு சுத்தமான வெள்ளைப்போத்தலில் நிறைய ஊற்றவேண்டும். அந்தப்போத்தலில் கொஞ்சம் சர்க்கரையைச் சேர்த்துக் காற்றுப்போகாதபடி நன்றாய் அடைத்து மூடிவிடவேண்டும். இந்தப் போத்தலை வெயிலில் இரண்டு மூன்று நாட்களுக்கு வைக்கவேண்டும். போத்தலிலுள்ள சலம் சாதாரண சலம்போல் இருந்தால் அசுத்தம் இல்லை. பால்போன்ற நிறமாகிவிட்டால் அசுத்தம் கலப்பு என்று ஊகிக்கவேண்டியது.

* * *

கொசுக்களைப்பிடிக்க.-சாதாரணமாய்க் கொசுகு பகலில் மனிதர்களைத் தொந்தரவு செய்கிறதில்லை. இரவிற்தான் சனங்களைத் தூங்கவொட்டாமற் கடிக்கிறது. இதற்குக்காரணம் என்னவென்றால், கொசுகுகள் சூரியவெளிச்சங் கண்டவுடன் வெளிச்சத்தைவிட்டு ஓடி, வீட்டு அறைகளிற் குளிர்ச்சியான இடத்திற் போய் மறைந்துகொள்ளும். இந்தச் சுபாபத்தையறிந்து இந்திய அரசாட்சியிற் சிற்றுயிர் லட்சண சாஸ்திரியாயிருக்கும் மார்க்ஸ்வேல் லீப்ராய் என்பவர் கொசுகுகளைப் பிடிக்க ஒரு சுலபமான வழி கண்டுபிடித்திருக்கிறார். ஒரு அடி நீளம் ஒன்பது அங்குல அகலமுள்ள ஒரு சிறிய பெட்டிக்குக் கீல் வைத்து மேல்மூடி போடவேண்டும். இந்தப்பெட்டி மேல்மூடியில் ஒழு சிறு துவாரஞ்செய்து அதை இழுத்து மூடும்படியாய்ச் சிறிய சொருகுபலகை வைக்கவேண்டும். பெட்டியின் அடிப்புறத்திற் தகரம் போட்டுப் பச்சைக் கம்பளி போட்டுவைக்கவேண்டும். இப்படிச் செய்த பெட்டியைக் காலையிலெடுத்து, வீட்டு அறையிற் குளிர்ச்சியானவிடத்தில் மூடியைத்திறந்து வைத்துவிடவேண்டும். கொஞ்சநேரங்கழித்து மூடியைச் சாத்திவிடவேண்டும். பின்பு பென்சீன் என்று சொல்லப்பட்ட திராவகத்திற் கொஞ்சமெடுத்துப் பெட்டி மூடியிலுள்ள சிறுத்துவாரத்தின் வழியாய் உள்ளேவிட்டுச் சொருகு பலகையை இழுத்து மூடி விடவேண்டும். இப்படி ஒருமாதஞ் செய்ததில் 2300 கொசுகுகள் பிடிக்கப்பட்டனவாம். இப்படிச் செய்வதாற் கொசுகுகள் தொந்தரவு முழுமையுந்தீருமென்று தோன்றவில்லை. ஒருக்கால் கொஞ்சங் குறையலாம். மேலே சொல்லியபடி செய்வதில் அதிகம் செலவாகாது. ஆகையால் அதைச் செய்துபார்க்கலாம்.

சிறந்த தமிழ்ப் புத்தகங்கள்

இவை யாவராலும் புகழ்ப்பெற்றது. அநேகம் பாடசாலைகளிலும் பாடப்புத்தகமாக உபயோகப் பட்டு வருகின்றன. மிகவும் சுலபமான நடையில் எழுதப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீராமாயண வினாவிடை, 2-ம் பதிப்பு.— ரூ. அ. இதில் அநேக நூதனமான விஷயங்கள் ஒழுங்குபடுத்திச் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனந்த ராமாயணம், அத்யாத்ம ராமாயணம் இவைகளிலிருந்து எடுத்தெழுதிய சுருக்கமும் ராமாயணத்தின் உட்பொருளும் அடங்கியது. 226-பக்கங்கள் கொண்டது. ஸ்ரீராம பட்டாபிஷேக படத்துடன். 0 12 0

ஸ்ரீமகாபாரத வினாவிடை, முதல்பாகம்.— இதில் ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்தியோக பர்வங்களடங்கியது. புதிப் பதிப்பு. இப்பதிப்பில் சிற்சில சீர்திருத்தங்களும் ஒழுங்குகளும் புதிதாகச் செய்யப் பட்டிருக்கிறது. பீடிகையில் சிற்சில பாகங்கள் புதிதாகஸம்ஸ்கிருத பாரதத்திற்கு ஏற்பமாற்றி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வோர் பர்வ ஆரம்பத்திலும் அவ்வவ்விடத்தில் வில்லிபுத்தூரார் எழுதியுள்ள காப்பு செய்யுளை அமைக்கப்பட்டிருக்கிறது. முடிவில் எழுதியுள்ள அனுபந்தத்தில் தமிழ்ப் பாரத்திலுள்ள புதிய கதைகளைச் சுருக்கமாகஎடுத்து எழுதப்பட்டிருக்கிறது ... 0 12 0

ஆரியமத உபாக்கியானம், 3-ம் பதிப்பு.— உயர்ந்த தர்மங்களைத் தெளிவாய் எடுத்துக்காட்டும் 50-இனியகதைகள் கொண்டது. ஒவ்வோர் கதையும் நமது புராணங்களிலிருந்தே எடுத்து எழுதியது. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு நீதியை நன்கு விளங்குகிறது. 0 2 0

ஸ்ரீ மஹா பாரத வினாவிடை, 2-ம் பாகம் இதில் பீஷ்ம, துரோண, கர்ண, சல்லிய ஸௌப்திக, ஸ்திரீ பர்வங்களடங்கியது. மிகவும் இனிய நடையில் எழுதப்பட்டது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, அர்ச்சுனனுக்குக் கீதை உபதேசம் செய்யும் பாகம் மிகவும் அழகாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது இத்தகைய புத்தகம் ஒவ்வோர் ஹிந்துக்கள் வீட்டிலும் அவசியமிருக்கவேண்டும்.... 0 12 0

குறிப்பு.—மேற்குறித்த புத்தகங்களைத் தவிர, இன்னும் எங்களிடம் அநேக விதமான தமிழ்ப் புத்தகங்கள் கிடைக்கும். கிரய ஜாப்தா வேண்டுவோர் ½-அணா ஸ்டாம்பு அனுப்பினால் உடனே அனுப்பப் படும்.

பிரதாப முதலியார் சரித்திரம்	... 1 0 0
மதிமோசவிளக்கம்	... 0 12 0
அராபினைட் கதை படங்களுடன்	... 2 8 0
மஹாராஜா துறவு ...	... 0 6 0
விபின சந்திரபாலர் உபன்யாஸம்	... 0 8 0
குணசீலன்	... 0 10 0
கமலாம்பாள் சரித்திரம் ...	... 1 4 0
தேவலோக கிரிமினல் கேஸ் ...	... 1 8 0
களாபூர்ணோதயம்	... 0 10 0
விக்டோரியா சரித்திரம் ...	... 1 4 0
பிரபு லிங்கலீலை (வசனம்) ...	... 0 12 0
விநோதரஸமஞ்சரி	... 1 2 0
தானவன் எனும்போலீஸ் நிபுணன் கண்டு பிடித்த அற்புதக்குற்றங்கள் ...	... 1 0 0
கைவல்லிய நவநீதம், மூலமும் உரையும்	... 1 0 0
சிவமஹாபுராணம் 48 படங்களுடன்	... 5 0 0
நாலடியார் மூலமும் உரையும் ...	... 1 2 0
ஸ்ரீபக்த லீலாம்ருத வசனம் ...	... 3 0 0
ஸ்ரீ விவேகாநந்த விஜயம் ...	... 1 4 0
நைடதம் மூலமும், உரையும் (படங்களுடன்)	... 2 0 0
நீதிவிவாதமஞ்சரி (இந்தியன் பினல் கோட் சட்டம் சாக்ஷி சட்டம், அடி தண்டனைச் சட்டம், இவை வியாக்கியானத்துடன்	... 2 8 0
மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் ...	... 1 0 0
பிரபோத சந்திரோதய வசனம்	... 1 0 0
பக்த விஜயம் முதல்பாகம் ...	... 2 0 0
ஷை 2-ம் பாகம் ...	... 2 0 0
ஷை 3-ம் 4-ம் பாகங்கள்	... 2 0 0
தேகதத்வசாஸ்திரம் படங்களுடன்	... 2 8 0
கலாவதி	... 1 8 0
ரூபாவதி	... 1 0 0
மதிவாணன்	... 0 6 0
சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா 6-திருமுறையும் ...	... 3 0 0
கருட புராணம் வசனம் படத்துடன்	... 0 8 0
தேவி பாகவதம்	... 3 12 0
நவக்ரகஸ்தோத்ரம் அஷ்டோத்தர அர்ச்சனை தமிழ் சுலோகம் தமிழில் அர்ச்சனை நாமம் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் படிக்கவேண்டியது ...	... 0 2 0
சிவஸஹஸ்ர நாமம் சுப்பிரமணியர், கணபதி லலிதா இவர்களுக்கு அஷ்டோத்தரம், தமிழ் சுலோகம் தமிழில் அர்ச்சனை ஒவ்வொருவரும் வாங்கிஅர்ச்சிக்கவேணும்	0 4 0
தேசிகப்ரபந்த வ்யாக்கியானம் ...	... 3 0 0

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி,

மைலாப்பூர், மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
10 MAR 1910
MADRAS.



* * * மாணிக்கக் கற்கள் தேறியதும் * * அரசன் திகைத்துப்போயதும்,
காலம் ஒன்றுதான் * * * (ஸ்திரீகளுக்கான பக்கத்தில் பக்கம் 229-பார்க்க.)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
10 MAR 1910
MADRAS.

விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி II } ஸௌம்ய ஹு தைமீ 1910-ஹு ஜனவரிமீ { பகுதி 7

ஆராதனை: சிறப்பான பிரிவுகள்

WORSHIP: SPECIAL DIVISIONS

ஆராதனைகளைச் சிறப்பாக நோக்கில் (அதாவது அவைகள் சென்றடையும் பொருளை உத்தேசித்து நோக்கில்) பின்வரும் நான்கு பிரிவுகளை உடைத்தாயிருக்கின்றன. அவையாவன, பரம்பொருள் ஆராதனை, இஷ்டதேவதா ஆராதனை, ஆசார்ய ஆராதனை, பிதிர்க்கள் ஆராதனை ஆகிய இவைகளே. இவைகளுள் முறையே பின்னதைவிட முன்னது சிறந்தது. இவைகளில் எங்கிருந்து ஒருவன் தொடங்கினாலும், முடிவிற்குப்போகும் வரையில் அவனுக்குத் திருப்திவரக்கூடாது. இவ்வாறின்றி எதாவது ஓர் நிலையில் நின்றுவிடுவது மேன்மையன்று.

பிதிர்க்கள் ஆராதனம் என்பது நாம் நமது தாய் தகப்பன் முதலிய பந்துக்களுக்குச் செய்யும் சிரார்த்த தர்ப்பணாதிகளே. இவைகள் நமது ஸநாதன தர்மத்தைப் பின்பற்றுவோர், ஒவ்வொருவரும் அவசியம் செய்யவேண்டியவை. இவைகளால் உண்டாகக்கூடிய ஸந்ததிவிருத்தி ஐசுவர்யவிருத்தி முதலியவைகளை நாம் கவனியாது இவைகளை அவசிய கர்மங்களாகச் செய்து வந்தால்தான் நாம் கர்மபந்தத்திலிருந்து எளிதில் விடுபடலாம்.

ஆசார்ய ஆராதனம் என்பது நமக்கு ஞானோபதேசம்செய்த குருவை ஆராதனம் செய்தல். குருவைக்கண்ணுக்குப் புலப்படும் ஈசனாக எண்ணி வழிபடும்படி சாஸ்திரங்கள் விதிக்கின்றன. தேகத்தைக் கொடுத்து உதவிய தாய்தந்தையரைவிட மானிட ஜன்மத்தின் முடிவாகிய மோக்ஷத்தை அடைய ஸஹாயம் செய்யும் ஞானத்தை உபதேசித்தருளிய குருவே மேலானவர். ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாள், ஸ்ரீமத் ராமானுஜாசாரியர், ஸ்ரீ மத்வாசாரியர், ஸ்ரீமத் நீலகண்டசிவாசாரியாள் முதலிய ஸமயாசாரியர்களை ஆராதிப்பதும் இந்தப் பிரிவைச்சேர்ந்தது. ஆனால் இவர்களை ஆராதிப்பது ஒருவனை மதத்வேஷாதிகளைக்கொண்டு விடுவதால் இது இஷ்டதேவதாராதனத்தை விடத் தாழ்ந்தது என்று கூறப்பட்டது. ஆனால் ஆசார்ய ஆராதனையில், பரம ரகஸ்யத்தைப் பக்குவம் அறிந்து வெளியிட்டு ஒருவனை ஞானானந்த அனுபவத்தில் முழுத்திவைக்கும் ஸத்குரு ஆராதனையை அடக்கினால், இந்தப் பாகத்திற்கும் பரம்பொருள் ஆராதனைக்கும் பேதமே இல்லை. அவ்வளவு சிறந்தது இந்தப் பாகம்.

இஷ்டதேவதா ஆராதனம் என்பது, பரம்பொருளைத் திருமூர்த்திகள், அவர்கள் அவதாரங்கள் இவைகளுள் எந்த மூர்த்தியையாவது தன் மனதிற்குப்பிடித்த தேவதையாகக்கொண்டு ஆராதிப்பது. இதனுள் எல்லாதேவதா ஆராதனத்தையும், யஞ்ஞாதிக்ருதுக்களையும் பலவித பக்திகளையும் அடக்கிவிடலாம். இந்த ஆராதனையின் முக்கிய கோட்பாடு யாது எனில் 'எல்லாத் தேவதைகளையும் தனது இஷ்ட தேவதையாகப் பாவித்து ஒருவன் வணங்கவேண்டும்' என்பதே. இதைத்தான் ஔவை 'தெய்வமிகழேல்' என்றாள். இதை மறந்தபொழுது இந்த ஆராதனம் மதத்வேஷத்தை உண்டாக்கி ஒருவனைக் கெடுத்துவிடும்.

முடிவில் இருப்பதாகிய ஆராதனமே பரம்பொருள் ஆராதனம். இதற்கே பரபக்தி என்றும் ஞானநிஷ்டை என்றும் பெயர். இதில் மூர்த்திபேதாதிகளே இரா. வெளிச் செல்லுவதே இப்பொழுது குணமாக உடைய மனம் அடங்க, நாம் என்ற எண்ணமே இராது. பரம்பொருள் (நித்யவஸ்து) மாத்திரமாக சேஷித்து நிற்பதே இந்த ஆராதனையின் ஸ்வரூபம். இதற்கும் ஸத்குரு ஆராதனத்திற்கும் பேதமேயில்லை. தீவ்ர மோக்ஷாபேக்ஷையே இதற்குத் தகுந்த ஸாதனம்.

விவேக போதினி

தொகுதி 2] ஸௌம்யஸூ தைமீ [பகுதி 7

கர்மகாண்டம்-யாகம்

KARMAKANDA–YAGAS

யாகம் என்பது கர்மகாண்டத்தில் கூறப்பட்டுள்ள கர்மங்கள் எல்லாவற்றிலும் மிக முக்கியமானது. இதற்கு ஆராதனை என்பது பொருள். யாகத்தில் பாகம் வாங்க அழைக்கும் பல தேவதைகள் மூலமாகப் பரம்பொருளை ஆராதிப்பதே யாகத்தின் நோக்கம். இந்த நோக்கத்தை யாகம் உடைத்தாயிருத்தலால், யாகம் என்ற பதத்திற்குப் பரம்பொருள் என்ற ஒரு பொருளும் ஏற்பட்டுவிட்டது. இந்தப்பொருளை உள்ளடக்கித் தான் புருஷஸூக்தத்தில் 'தேவர்கள் யஞ்ஞத்தை யஞ்ஞத்தால் ஆராதித்தார்கள்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் முதலில் உள்ள யஞ்ஞத்திற்குப் பரம்பொருள் என்றும், இரண்டாவது யஞ்ஞத்திற்கு யாகம் என்றும் பொருள். இதில் ஆராதனை முக்கியமே ஒழிய, பிராணி ஹிம்ஸைகள் முக்கியமன்று.

யாகங்கள் அநேகவிதம். அவைகளுள் த்விஜன் அவசியம் செய்யவேண்டியதாயும், பொதுவாக யாகலக்ஷணங்கள் எல்லாம் அமைந்ததாயும் உள்ள ஸோமயாகத்தை எடுத்து விஸ்தரிப்போம்.

ஹிமாசலச்சாரலில் அகப்படக்கூடிய ஸோமக்கொடியினது சாற்றைப்பிழிந்து தேவதைகளுக்கு அர்ப்பிதம் செய்து, இந்த யாகத்தில் குடிக்கப்படுவதால் இந்த யாகத்திற்கு ஸோமயாகம் என்று பெயர். நமது தேசமாகிய தக்ஷிணதேசத்தில் இந்தக் கொடி அகப்படாததால். இதைப்போன்றதாக உள்ள வேறொரு செடியை இங்கு உபயோகப்படுத்தி வருகிறார்கள். யாகம் நடத்துவதற்கு வேண்டிய விஷயங்கள் எல்லாவற்றையும் ஓர் பெரிய பந்தலுள் சேர்த்து வைப்பது வழக்கம். இந்தப் பந்தலுக்கு யாகசாலை என்று பெயர். இந்தப் பந்தலுள் யாகம் நடக்கும் இடத்தில் உயர்ந்த படிபோன்ற கட்டிடம் கட்டப்பட்டிருக்கும். இதற்கு யாகவேதி என்று பெயர். இது விசித்திரரூபங்கள் அளவுகளுடன் கட்டப்பட்டிருக்கும். இது கட்ட ஏற்பட்டிருக்கும் விதிகளிலிருந்து தான் நம் முன்னோருக்கு க்ஷேத்ரகணிதம் நன்றாகத் தெரியும் என்பது வெளியாகின்றது.

இந்த யாகம் ஐந்துநாள் நடக்கவேண்டியது. இவ்வைந்து நாள்களிலும் யாகம் செய்பவனாகிய யஜமானனும் அவன் பத்னியும் உபவாஸம் விருதம் முதலியவைகள் அனுஷ்டித்துக்கொண்டு பரிசுத்தராக இருத்தல்வேண்டும். யாகசாலைப் பிரவேசமாவதற்குமுன் யஜமானனும் அவன் பத்னியும் வயிறாரச் சாப்பிட்டுவிடவேண்டியது. யாகம் நடக்குங்கால் முதல்நாள் பசுவின் ஒரு முலைக்காம்பில் ஒருதரம் கறந்தால் எவ்வளவு பால் வருமோ அதுதான் யஜமானனும் அவன் பத்னியும் உட்கொள்ளவேண்டியது. அடுத்தநாள் இருமடங்கு, இதுபோல ஒவ்வொருநாளும் இவர்கள் ஆஹாரம் அதிகமாக்கப்படும். ஐந்தாம்நாள் நடக்கும் அவபிருதஸ்நானத்திற்குப் பின் இவர்கள் முன்போல சாப்பாடு உட்கொள்ளலாம்.

யஜமானன் யாகசாலையுள் பிரவேசிக்கும் முன்னர், க்ஷௌரம் செய்துகொண்டு ஸ்நாநம் செய்யவேண்டியது. அவன் புது வேஷ்டி கட்டிக்கொண்டு மான் தோலைப் போர்த்துக்கொள்ளவேண்டியது. அதையே அவன் படுக்கையாக இரவில் உபயோகப்படுத்திக்கொண்டு எவ்வளவு தூக்கம் அவசியமோ அவ்வளவுதான் தூங்கவேண்டியது. அதிகமாகத் தூங்கவே கூடாது. தலைப்பாகை, தடி முதலியவைகளை அவன் வைத்துக்கொள்ளவேண்டியது. மேலே எங்கேயாவது தினவு எடுத்தால் சொறிந்து கொள்ளுவதற்காக ஒருமான் கொம்பைக் கையில் வைத்துக்கொள்ளவேண்டியது. வெறுங் கையை இவ்விஷயத்தில் உபயோகப்படுத்தவே கூடாது. இவன் பத்னி, யாகம் தொடங்கும்முன் கையிலிருக்கும் நகங்களை நன்றாக எடுத்துவிடவேண்டியது. இவளும் ஸ்நானம் செய்து புது ஆடை தரித்து பரிசுத்தப் படுத்திக்கொள்ளவேண்டியது. இவள் தன் தலையில் ஓர் பக்கத்தில் ஓர் தங்கக் குண்டை கட்டித் தொங்கவிட்டுக்கொள்ளவேண்டியது.

யாக தீக்ஷிதனாவதற்கு முன் யஜமானன் ஓர் பிராம்மணனை அழைத்து, வேதம் உணர்ந்த பிராம்மணரிடம் தான் யாகம் செய்யப்போகிறதைத் தெரிவித்து அவர்களை யாகத்திற்கு அழைத்து வரும்படி ஏவுவான். இந்தத் தொழிலைச் செய்பவனுக்கு ஸோமப்ரவாகன் என்று பெயர். இவன் ஓர் அத்வர்யுவிடம் சென்று, யஜமானன் பெயரைச் சொல்லி 'இவர் யாகம் செய்யப்போகிறார், உம்மை அதில் அத்வர்யுவாகவிருந்து ஸஹாயம் செய்யும்படி விநயத்துடன் பிரார்த்தித்தார்' என்று கூறுவான். 'இதற்குத் தக்ஷிணை என்ன?' என்று அத்வர்யு கேட்க, ஸோமப்ரவாகன் '21-பசு' என்று சொல்லுவான். இதன் பின்னர் அவன் யஜமானனுக்கு அக்னி ஆதானம் முதலிய ஆரம்பகர்மங்கள் இன்னாரால் செய்து வைக்கப்பட்டன, இவ்வளவு பிராம்மணர்கள் அதற்கு வந்திருந்தனர், அவர்களை யஜமானன் இவ்வாறு நடத்தினான், என்பவைகளை விசாரித்து யஜமானனது நடத்தை இத்தன்மையது என்று அவன் தெரிந்துகொள்ளுகிறான். யஜமானன் நடத்தை நல்லதாக இருப்பதாகத் தோன்றாவிட்டால், அத்வர்யு ஸ்தானத்தை அவன் அங்கீகரிக்கவே மாட்டான். தக்ஷிணையைவிட நடத்தை பிரதானம் என்ற கோட்பாட்டைப் பிராம்மணர்கள் எல்லோரும் முன் காலத்தில் பின்பற்றி நடந்து வந்தார்கள். கால வித்யாஸத்தால் பெரும்பாலும் இந்தக் கோட்பாட்டை ஒருவரும் பெரிதாக இப்பொழுது எண்ணுவதில்லை.

அத்வர்யு கிடைத்ததும் ஸோமப்ரவாகன் மற்றைய ஸ்தானங்களுக்கு வேண்டிய பிராம்மணர்களை எளிதில் நியமித்துவிடுவான். அத்வர்யு, ஹோதா, உத்காதா, பிரம்மா ஆகிய இந்த இடங்களில் அமருபவர், தமக்குக் கீழ் உதவியாக மும்மூன்று பிராம்மணர்களை ஏற்படுத்திக் கொள்ளுவார்கள். இதுவும் அல்லாமல் வத்ஸ்யன் என்ற ஒரு பிராம்மணனும் நியமிக்கப்படுவான். இவன் எல்லாவற்றையும் மேல் பார்வை பார்க்கவேண்டியது. ஆகவே ஸோம யாகத்திற்கு 17-பிராம்மணர்கள் ஸஹாயம் வேண்டும். இவ்வாறு 17-பெயர்கள் நியமித்து முடிந்ததும், யஜமானனும் அவன் பத்னியும் யாகசாலையைப் பிரவேசம் செய்வார்கள். உடனே யாகதீக்ஷை தொடங்கிவிடுகிறது. யஜமானனும் அவன் பத்னியும் யாகம் முடியும்வரையில் குளிக்கவே கூடாது. பல்கூடத் தேய்க்கக்கூடாது. கொஞ்சம் பாலையே ஆஹாரமாக உட்கொண்டு வரவேண்டும். இரவில் அதிகமாகத் தூங்கக்கூடாது. இதுதான் ஸோமயாகத்தில் முதல்நாள் வேலை.

இரண்டாம்நாள் நடக்கும் கர்மத்திற்கு ப்ரவர்க்யம் என்று பெயர். இதுதான் யாகத்தையே மேன்மைப் படுத்துவது. இதனால்தான் யாகம் என்பது பரம்பொருளுக்கு வேறொரு பெயரே ஒழிய வேறல்ல என்பது தெரியவருகின்றது. இரண்டாம்நாள் ஆரம்பத்தில் உபஸத்என்ற ஓர் ரக்ஷைபான கர்மம் ஒன்று செய்யப்படுகிறது. யாகத்தில் கொடுக்கப்படும் ஆஹுதிகளை அஸுரர்கள் கொண்டுபோகாமலிருப்பதற்காகவும், யாகத்திற்கு அஸுரர்களால் தடை ஒன்றும் வாராமலிருப்பதற்காகவும் இதைச் செய்வது. மேலும் ஒவ்வொரு ஆஹுதி கொடுக்கும்பொழுதும் அது ஸரிவர தேவதைகளிடம் போய்ச் சேருவதற்காக ஓர் ரஹஸ்ய அக்ஷரத்தையும் உச்சரிப்பது உண்டு. இந்தக் கர்ம

மானது ‘உலகில் நல்ல விஷயங்களில் பாடுபடத் தொடங்குபவர்கள் எவ்வளவோ கெட்ட விஷயங்களால் தடுக்கப்படுவார்கள். அவர்கள் அதற்கு வேண்டிய ஜாக்கிரதையுடன் கெட்டவிஷயங்கள் அணுகவொட்டாது நல்ல காரியங்களைச் செய்துமுடிக்க வேண்டியது’ என்ற அரியவிஷயத்தைக் குறிப்பிக்கின்றது.

யாகம் நடந்து வருங்காலத்தில் அந்த விஷயத்தில் அதிகத் தேர்ச்சியுடைய அத்வர்யூ இன்ன ஆஹுதிக்குப்பின் இன்ன தேவதைக்கு ஆஹுதி கொடுக்கவேண்டும் என்றறிந்தவனாகையால், ஹோதாவை நோக்கி இன்ன தேவதையை அழைத்து இந்த ஆஹுதியைக் கொடு என்று ஒழுங்காகக் கட்டளையிட்டுக்கொண்டுவருவான். இந்த உத்திரவு பிறந்ததும், வந்து கூடும் அஸுரர்களை ஒதுக்க ஆக்னீத்ரன் என்ற ஸ்தானத்தில் இருப்பவன் ஓர் ரஹஸ்ய அக்ஷரத்தை உச்சரிப்பான். ஹோதா அந்த ஸமயத்தில் சொல்லவேண்டிய ருக்கைச் சொல்லி ஆஹுதியைவிட்டு அஸுரர்களைத் தடுக்கும் அக்ஷரத்தை உச்சரிப்பான். இந்த ஸமயத்தில் காலையிலேயே நன்றாகப் போஜனம் செய்து திருப்தி அடைந்து, புஷ்பம், சந்தனம் முதலிய வஸ்துக்களால் அலங்காரம் செய்யப்பெற்று உத்காதாவும் அவன் கீழிருக்கும் மூன்று பிராம்மணர்களும் ஆஹுதி வாங்கவரும் தேவதைகளை அவரவர்களுக்குத் தகுந்த ஸாமகானம் செய்து திருப்திப்படுத்துவார்கள். மற்றைய பிராம்மணர்கள் அன்று செய்யவேண்டியவை முடிந்ததும் தான், போஜனம் செய்யவேண்டியது.

மூன்றாம்நாள் இரண்டு கர்மங்கள் செய்யப்படுகின்றன. முதல் கர்மத்திற்கு மத்ய உபஸத் என்று பெயர். இதனால் அஸுராதிகளை ஓட்டுவது. இரண்டாவது யாகவேதிகள் யூபஸ்தம்பங்கள் ஆகிய இந்த வஸ்துக்களை உபயோகப்படுத்தத் தொடங்குவது.

நான்காம்நாள் தான் பிராணிவதம் நடக்கும் தினம். அன்று மூன்று ஆட்டைக் கொல்லுவது. முதல்ஆடு அக்னிக்கும் ஸோமனுக்கும், இரண்டாவது, த்விஜத்வத்திலிருக்கும் அசுத்தியை நீக்குவதற்காக அச்வினீ தேவதைகளுக்கும், மூன்றாவது, மூன்று தலைமுறையாக ஸோமயாகம் செய்யாதிருந்ததனால் தன் குடும்பத்திற்கு ஏற்பட்டிருக்கும் இழிவைத் தொலைப்பதற்கும், கொல்லப்படுகின்றது (இந்த மூன்றாவது ஆடு அவசியம் இருந்தால்தான் கொல்லவேண்டும்). இந்த மூன்றாவது ஆடு யாகத்தில் முக்கிய தேவதைகளாகிய இந்திரன் அக்னி இவர்களுக்காகக் கொல்லப்படுவது.

கடைசி நாளாகிய ஐந்தாம் நாள்தான் ஸோமரஸத்தைப் பிழிந்து குடிப்பது. ஆதலால் இதற்கு ஸுத்யஹஸ் என்று பெயர். காலை, நடுப்பகல், மாலை ஆகிய மூன்று நேரங்களிலும் இந்த நாளில் அவசியம் செய்யவேண்டிய கர்மங்கள் உண்டு. இவைகளுக்கு ஸவனங்கள் என்று பெயர். ஐந்தாம் நாள் ஆரம்பத்தில் அக்னிக்கு ஓர் ஆடு பலி கொடுப்பது. அன்று மாலை யஜமானனும் அவன் பத்னியும், அவப்ருதஸ்நாநம் செய்யவேண்டியது. இதனால் அவர்கள் நியமங்கள் முடிவு பெறுகின்றன. இதுமுதல் யஜமானனுக்குத் தீக்ஷிதர் என்ற பெயர் வருகின்றது.

இந்த யாகம் நடக்கும் ஐந்துநாளும் பெரிய பிராம்மண போஜன ஸமாராதனை நடக்கும். ஆயிரம் பேர்களுக்குக் குறையாமல் போஜனம் செய்துவைக்கவேண்டும். ஏழைகளுக்குத் தங்குதடையின்றி பணம் முதலியன கொடுக்கப்படவேண்டும். யாகத்தில் கொல்லப்படும் பிராணிகளுக்கு உண்டாகும் கஷ்டத்தால் யஜமானனுக்கு வரக்கூடிய பாபங்களைத் தொலைப்பதற்காக இவைகளை எல்லாம்நடத்தவேண்டும். யாகம் நடந்துவரும் நாளில் மாலைநேரங்களில் யாதொரு கர்மங்களும் நடக்கவேண்டியதில்லை. அப்பொழுது யாகம் பார்க்கவந்த பண்டிதர்கள் மஹான்கள் எல்லோரும் யாக

சாலையில் ஸபைகூடி சாஸ்திரவிஷய ஆராய்ச்சி, புராண கதாசிரவணம் முதலிய ஸத்விஷயங்களில் காலம் போக்குவார்கள். (நைமிசாரண்யத்தில் சௌனகாதி ரிஷிகள் செய்த ஸத்ரம் என்ற 12-வருஷ யாகத்தில்தான் ஸூதபுராணிகரால் ஸகல புராணங்களும் சொல்லப்பட்டு வெளியாயின). ஸபையைத் தமது திறமையால் ஸந்தோஷப்படுத்துபவர்களுக்கு ஏராளமான வெகுமதிகளும் கொடுக்கப்படும். யஜமானன் யாகசாலையில் புகுங்கால் திடதேகத்துடன் வாட்டமில்லாதிருக்கவேண்டும் என்றும் யாகம் முடிந்து வெளிவருங்கால் ஸகலஸத்தும் அடங்கி வரவேண்டும் என்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் நல்ல யௌவன வயதில் தான் ஒருவன் யாகம் செய்ய முயலவேண்டும் என்பது விளங்கும். யாகம் முடிந்து அவப்ருத ஸ்நாநமானதும் யஜமானனும் அவன் பத்னியும் பிராம்மணர்களிடமிருந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு வீடுகொண்டுபோய் சேர்க்கப்படுவார்கள். அங்கு மிகுந்த கோலாஹலத்துடன் நடத்தப்படும் ஸமாராதனையில் இவர்கள் இருவரும், யாகத்தை நடத்திவைத்த 17-பிராம்மணர்களும் உண்டு பரமானந்தராக இருப்பார்கள்.

இதுதான் ஸோமயாகம் என்று சொல்லப்படுவது. இதில் நடக்கும் கர்மங்களின் உட்கருத்தைப் பின்வருமாறு தைத்ரீய ஆரண்யகத்தில் ஞானியினது நிலையோடு ஒட்டி விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

“ஞானி செய்யும் யஞ்ஞத்தில், (அவன் ஜீவ) ஆத்மாவே யஜமானன்; (சாஸ்த்ரம் குரு உபதேசம் ஆகிய இவைகளில் உள்ள) சிரத்தையே பத்னி; சரீரமே ஸமித்துக்கட்டு (இது இல்லாவிடில் யாகமே நடப்பதரிது.); மார்பே வேதி; ரோமங்களே தர்பங்கள்; சிகையே வேதம் (என்கிற தர்பமுஷ்டி); (திடமான) ஹ்ருதயமே யூபஸ்தம்பம்; காமமே நெய்; கோபமே பசு; (மானஸ) தபஸே அக்னி; (மன) அடக்கமே தக்ஷிணை; வாக்கே ஹோதா; பிராணனே உத்காதா; கண்களே அத்வர்யூ; மனதே ப்ரஹ்மா; காதுகளே ஆக்னீத்ரன்; எதுவரையில் (இத்தேகத்தில் உயிர்) தரித்து நிற்கிறதோ அதுவரையில்(யாக) தீக்ஷை; சாப்பிடப்படுவனவே ஹவிஸ்; குடிக்கப்படுவனவே ஸோமபானம்; (நற்காரியத்தில்) ப்ரியமே உபஸத்; (அவனுடைய, (ஸஞ்சாரம், உட்காருதல், எழுந்திருத்தல் ஆகிய இவைகளே ப்ரவர்க்யம்; (அவன்) முகமே ஆஹவனீயாக்னி; (ஸப்த) வ்யாஹ்ருதிகளே ஆஹுதிகள்; (அவன்) விஞ்ஞானமே ஆஹுதி செய்தல்; எவை காலை மாலைகளில் உட்கொள்ளப் படுகின்றனவோ அவைகளே ஸமித்துக்கள்; காலை, நடுப்பகல், மாலை (இவைகளில் செய்யப்படுபவைகளே) ஸவனங்கள்; இரவு பகல் (இவைகளில் செய்யப்படுபவைகளே) பர்வகால யஞ்ஞங்கள்; பக்ஷங்களும் மாஸங்களுமே சாதுர்மாஸ்ய யஞ்ஞங்கள்; ருதுக்களே பசுயாகங்கள் (பந்தங்கள்); வருஷமும் வருஷக் கூட்டங்களும் (இவைகளில் செய்யப்படுபவைகள்) அஹர்கணம் (என்னும் க்ருதுக்கள்); இவ்விதமாகச் சொல்லப்பட்டஎண்ணரூபமான யஞ்ஞமானது தனக்கு உள்ள ஸர்வஸொத்தையும் கொடுத்து செய்யப்பட்ட ஸத்ரம் (என்ற நெடுங்கால யஞ்ஞம்) ஆகும்; மரணமே இந்த யாகத்தில் அவப்ருதஸ்நாநம் (முடிவு). கிழத்தனமடைந்து சாகும்வரை செய்யக்கூடிய அக்னி ஹோத்ரமும் ஸத்ரயாகமும் இதுவே.’’

இதிலிருந்து யாகத்தில் மூட நம்பிக்கையுடன் செய்யும் ஒருவன் இவ்வாறு யாகம் செய்யும் நிலையைவிட்டு மேல் நோக்கி விருத்தியாகவேண்டும் என்பது வெளியாகும். யாகத்தைப்பற்றியும் கர்ம காண்டத்தைப்பற்றியும் உள்ள ஆக்ஷேப ஸமாதானாதிகள் பொதுக்குறிப்புக்கள் முதலியவைகளை அடுத்த ஸஞ்சிகையில் எடுத்து விவரிப்போம்.

மகர ஸங்கராந்தி

MAKARA SANKARANTHI

இது ஆரியர்களின் ஜோதிஷசாஸ்திரத்தின்படி மேஷம் முதலிய பன்னிரண்டு ராசிகளாகப் பிரிக்கப்பட்ட ராசிசக்ரத்தில் பத்தாவது பாகமாகிய மகரராசியின் முதலாவது பாகத்துடன் ஸூரியன் ஸம்பந்தப்படுகிற காலம். அதாவது பூமியின் புறத்திலிருந்து பார்க்கிறவர்களுக்கு அசுவதி முதலான 27-நக்ஷத்திரங்களாகப் பிரிக்கப்பட்ட நக்ஷத்ரசக்ரத்தில் 21-வது நக்ஷத்திரத்தின் முதல்பாகத்துடன் ஸூரியனுடைய முதல்பாகம் ஸமரேகையில் இருப்பதாகத் தோன்றக்கூடிய காலம்.

இந்த ஸங்கராந்திக்கு முந்தின நாளுக்குப் போகிப்பண்டிகை என்று பெயர். இதில் எல்லோரும் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து, நல்ல சாப்பாடு சாப்பிட்டு ஸுகம் அடைவார்கள். மார்கழிமாதம் நல்ல மாஸமல்லாததாலும், அதில் வியாதி முதலியன ஏராளமாய் ஸம்பவிக்கிறதாலும் அந்த மாஸம் முழுவதிலும் [illegible] பொருள் நன்மைக்காக ஒவ்வொருவரும் அதிகாலையில் [illegible] ஒவ்வொரு [illegible] வழக்கம். இந்த மாஸம் முடிவதாகிய போகிப்பண்டிகையன்று கெட்டமாஸம் முடிந்துவிட்டது என்று எங்கும் கொண்டாட்டம் செய்கின்றனர். போகிப்பண்டிகையன்று காலையில் வீட்டிலுள்ள பழைய வஸ்துக்கள் எல்லாவற்றையும் போட்டு வாசலில் தீ மூட்டி எல்லோரும் குளிர்காய்வது சில இடங்களில் வழக்கம்.

மகரம் அதாவது தைமாஸம் முதல்தேதி மகர ஸங்கராந்தி. அன்றைக்குள் வீடுகள் எல்லாம் வெள்ளை அடிக்கப்பெற்று வாயிலில் அழகாக [illegible] பட்டிருக்கும். [illegible] பழைய வஸ்துக்களுக்குப் பதிலாக புதிய வஸ்துக்கள் வாங்கி வைத்திருக்கும். புதுப்பானைகளில் அன்று பூஜைக்கு உபயோகப்படுவதற்காகச் சர்க்கரைப்பொங்கல் முதலிய உண்டிகள் தயார் செய்யப்படும். கரும்புதான் அன்று முக்கிய நிவேதன ஸாதனம். பொதுவாக, தித்திப்பான வஸ்துக்களே அன்று முக்கிய நிவேதன ஸாதனங்களாக ஏற்பட்டவை. இந்தப் புண்யகாலத்தில் திலதேனு * வஸ்திரம் முதலியவைகளைத் தானம் செய்து, ஆலயங்களில் எண்ணெ தீபங்கள் போடுவது, திலஹோமங்கள் செய்வது முதலிய கர்மங்களைச் செய்யவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. அன்று ஸ்வாமி தர்சனம் செய்வது மிகுந்த விசேஷம். பிரயாகை க்ஷேத்திரத்தில் அன்று திரிவேணீஸ்நானம் மஹாவிசேஷம் என்று அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது; முன் குறிப்பிட்ட 12-ராசிகளுள் ஒவ்வொரு ராசியிலும் ஸூர்யன் ஸம்பந்தப்படும்பொழுது எல்லாம் இங்குக் குறிப்பிக்கப்பட்ட தர்ப்பணாதி கர்மங்கள் செய்யவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறபோதிலும், இம்மகர ஸங்கராந்தியில் இவைகளைச் செய்தால் எவ்வளவோ மேன்மை உண்டாகும் என்று மிகச் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது.

இந்த ஸங்கராந்தியன்று நடுப்பகலில் ஒவ்வொருவர் வீட்டு முற்றத்திலும் செம்மண்ணால் ஸூர்ய சந்திர பிம்பங்கள் எழுதி வீட்டில் பெரியவராக இருப்பவர் ஸூர்யபூஜை செய்வது வழக்கம். இதற்குத்தான் சக்கரைப்பொங்கல் முதலியன நிவேதனம் செய்யப்படும். மகரஸங்கராந்தியன்று ஸூர்யன் வடக்கே திரும்ப உத்தராயணம் தொடங்குகிறது. தக்ஷிணாயனம் முழுவதும் ஸூர்யனுக்குப் பலக்குறைவு, உத்தராயணம் பலம் அதிகம். மகர ஸங்கராந்தியன்று ஸூர்யன் பல விருத்தி தொடங்குவதால் அன்று ஸூர்யபூஜை முக்யம். ஸூர்யன் விருத்தியானல் அதனால்

* திலதேனு என்பது எள்ளால்செய்யப்பட்ட பசுவிக்ரஹம்.

பிராணி முதலியவைகள் எல்லாவற்றிற்கும் மிகுந்த உத்ஸாஹம் தொடங்கும். இது பற்றியே வருஷத்தில் உத்தராயண காலம் மிகுந்த சிறந்த பாகம். இதுவே ஜனங்கள் சுறுசுறுப்புடன் தொழில் செய்யுங்காலம். கல்யாணாதி சுபகர்மங்கள் இதில் தான் நடக்கவேண்டும். இவ்வாறு ஸகல உத்ஸாஹத்திற்கும் ஆரம்பகாலம் இந்த ஸங்கராந்தி. ஆதலால்தான் இது மிகுந்த கோலாஹலமாக ஜனங்களால் கொண்டாடப்படுகிறது. பாலஸூர்யனுக்குச் சர்க்கரையே மிகப்ரீதியாதலின் தித்திப்பு வஸ்துக்களே இன்று நிவேதனம். முக்ய நிவேதனம் சர்க்கரைப்பொங்கலாதலால் இந்தப் பண்டிகைக்குப் பொங்கல் என்ற ஒரு பெயரும் உண்டு. இந்தக் கோலாஹல ஸமயத்தில் மாப்பிள்ளைகள் மாமனார் வீடுசென்று சீரு முதலிய மரியாதைகள் பெற்று இரண்டொருநாள் ஸுகமாக இருந்து வருவது சில ஜில்லாக்களில் வழக்கம். அநேக ராஜஸபைகளில் வித்வான்களுக்குப் பரிசுகொடுக்கும் காலமும் இதுவே.

இந்த ஸங்கராந்திகாலத்தில் காஞ்சீபுரம், திருவண்ணாமலை, ஸ்ரீரங்கம், மதுரை முதலிய திவ்ய க்ஷேத்ரங்களில் பெரிய உத்ஸவங்கள் நடப்பது வழக்கம். முன்னொரு காலத்தில் இந்த ஸங்கராந்தி புண்யகாலத்தில் மிகுந்த அற்புதமான திருவிளையாடலை மதுரை ஸுந்தரேசுவரர் செய்தருளியதாக ஓர் கதைகூட ஹாலாஸ்ய மஹாத்ம்யத்தில் காணப்படுகிறது. ஓர் ஸங்கராந்தியன்று அப்பொழுதிருந்த பாண்டியன் பகவானைக்கண்டு தரிசித்துவர, தனது கையில் கரும்பை ஏந்திக்கொண்டு மற்றைய நிவேதன வஸ்துக்கள் ஏந்தி கோலாஹலமாக வந்த தனது பரிவாரத்தால் சூழப்பெற்று புறப்பட்டான். கோயிலை வலம் வருகையில் வடக்குப் பிராகாரத்தில் வாயுமூலையில் ஓர் ஸித்தர் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். இவர்கள் அருகாமையில் போனபோதிலும் ஸித்தர் வழி விடாது குறுக்கேயே உட்கார்ந்திருந்தார். அரசன் மிகக்கோபங்கொண்டு தனது ஸேவகர்களை நோக்கி ஸித்தரை ஒதுக்கி உட்கார்த்திவிட்டு வழியை விலக்கும்படி ஏவினன். ஸேவகர்களோ ஸித்தரிடம் போனவுடன் அவரை ஒன்றும் செய்யமுடியாதவராக விழித்தனர். அப்பொழுது ஆச்சரியம் மிகுந்த அரசன் ஸித்தரை நோக்கி, ' இவ்வளவு சக்தியுடைய உமக்கு இந்த விமானத்திலிருக்கும் கல்யானையை என் கையிலிருக்கும் கரும்பைத் தின்னும்படிசெய்ய முடியுமா?' என்று வினவ, கல்யானையுடனே தன்னிடத்திலிருந்தபடியே அரசன் கையிலிருந்த கரும்பைத் துதிக்கையால் வளைத்து இழுத்துத் தின்றது. உடனே தன்னிடம் கிருபைகூர்ந்து தன்னை ஆட்கொள்ள ஸித்தர் உருவாய் வந்தவர் ஸோமஸுந்தரக் கடவுளே என்ற எண்ணம் அரசனுக்கு உண்டாக அவன் ஸித்தரை அடிபணிந்து கிருதார்த்தனானன்.

ஸங்கராந்திக்கு அடுத்தநாளுக்கு மாட்டுப் பொங்கல் என்று பெயர். இன்று பிராம்மணர்கள் தவிர மற்றைய ஜாதியார்கள் மிகக் கோலாஹலமாகத் தமது ஆடு மாடுகளை அலங்கரித்து அவைகளுக்கு நல்ல உணவளித்து அவைகளை ஆதரிப்பது வழக்கம். சில கள்ளர் ஜாதிகளில் இந்தத் தினத்தில் காளைகளைத் தம்பட்டம் முதலியவைகளின் சப்தங்களால் வெறியுண்டாகும்படி செய்துவிட்டு, அவைகளின் கொம்புகளிலிருக்கும் வஸ்திரங்களைச் சிலர் எடுக்க முயலுவது வழக்கம். இதற்குத்தான் ஜெல்லிக்கட்டு என்று பெயர். சிற்சில ஸமயங்களில் அந்த வஸ்திரத்தின் ஸொந்தக்காரர் வீட்டுப்பெண்கள் கல்யாணமாகாதிருந்தால், வஸ்திரம் எடுத்துவரும் பிள்ளைகளையே கல்யாணம் செய்துகொள்வது வழக்கம். இவ்வாறு இந்த ஸங்கராந்தியில் எல்லாவித ஜாதியாரும் ஸம்பந்தப்பட்டு ஆனந்திக்கும்படியான விஷயங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

மாட்டுப்பொங்கலுக்கு அடுத்தநாளுக்குக் கனு என்று பெயர். இதில் ஒன்றும் தொடங்குவதில்லை. இதற்குக் கரிநாள் என்று பெயர். உலகில் ஸுகதுக்காதிகள் மாறிமாறி அடுத்து வருகின்றன என்பதற்கு இதுவே ஓர் குறிப்பாகும். இந்தத் தினத்தில் காலையில் வர்ணச் சோறுகளால் பெண்பிள்ளைகள் காக்கை முதலிய பக்ஷிகளை ஆராதித்துவிட்டு ஸ்நாநம் செய்வது வழக்கம். அன்று தக்ஷிணதேசங்களில் பெண்களை தமது கணவனிடம் அனுப்பி அவர்களுக்குச் சீர் ஒன்றும் குறையாதனுப்ப வேண்டும். இம்மி குறைந்தாலும் ஏளனத்திற்கிடமாகும்.

இம்மகர ஸங்கராந்தி காலத்தையே உத்தராயண புண்யகாலம் என்று சில ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. சில ஸ்மிருதிகளில் அயனமும் ஸங்கராந்தியும் வெவ்வேறு என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்விஷயங்களின் உண்மையைப்பற்றிச் சற்று ஆராய்வோம்.

ஸூரியனுடையதோ அல்லது பூமியினுடையதோ கதி விசேஷத்தினால் வருஷப்பிறப்பு முதல் ஒவ்வொரு காலமும் வித்தியாசப்பட்டுக் கொண்டே வருமென்று ஜோதிஷ சாஸ்திரத்தின் மூலமாயும் வேதவாக்கியங்களின் மூலமாயும் வெளியாகிறது. சதபதப்பிராம்மணத்தில் "வஸந்தம் கிரீஷ்மம் வருஷருது இம்மூன்று ருதுக்களும் தேவர்களைச் சேர்ந்தவை. சரத், ஹேமந்தம், சிசிரம் இம்மூன்றும் பிதுருக்களைச்சேர்ந்தவை. சுக்கிலபக்ஷங்கள் தேவர்களைச்சேர்ந்தவை. கிருஷ்ணபக்ஷம் பிதுருக்களைச் சேர்ந்தவை. பகல்கள் தேவர்களைச்சேர்ந்தவை. இராத்திரிகள் பிதுருக்களைச் சேர்ந்தவை. பகலின் முன்பாதி தேவர்களையும் பின்பாதி பிதுருக்களையும் சேர்ந்தவை. சூரியன் வடக்காக (உத்தராயணத்தில்) திரும்பும்பொழுது தேவர்களைச் சேர்ந்த வஸந்தம் முதலிய மூன்று ருதுக்களில் இருந்து தேவர்களை ரக்ஷிக்கிறார். தெற்கு நோக்கிச் செல்லும்போது (தக்ஷிணாயனத்தில்) சரத் முதலிய மூன்று ருதுக்களிலிருந்து பிதுருக்களைக் காக்கிறார்" என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த வாக்கியங்களைப் பார்க்கும்பொழுது வஸந்த ருதுவில் உத்தராயணம் தொடங்குவதாகத் தெரிய வருகிறது.

தைத்திரீயப் பிராம்மணத்தில் "வஸந்தம் என்பது ருதுக்களின் முகம்" என்ற வாக்கியத்திற்குக் "காலமாதவீயம்" என்ற கிரந்தத்தில் "வருஷத்தின் துவக்கமாயிருப்பதால் வஸந்தன் முகம் என்று சொல்லப்பட்டது." என்று வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது. இதனால் வஸந்த ருது வருஷத்தின் ஆதியென்றும் உத்தராயணத்தின் ஆதியென்றும் தெரியவருகிறது. கர்க்க ஸம்ஹிதா என்ற ஜோதிஷ கிரந்தத்தில் "சாந்திரமானத்தின்படி மகரமாஸத்தின் சுக்லபக்ஷத்தின் பிரதமை திதியில் உத்தராயணம் தொடங்குகிறது" என்று அர்த்தமுடைய சுலோகமிருக்கிறது. இதனால் மகமாஸம்முதல் வஸந்த ருது ஆரம்பமென்று தெரியவருகிறது. அப்படியே மஹாபாரதத்தில் அனுசாஸன பருவத்தில் பீஷ்மர் தர்மபுத்திரருக்குத் தன்னுடைய முடிவுகாலத்தைப்பற்றி இவ்விதம் சொல்லியிருக்கிறார். "உத்தராயணம் வந்துவிட்டது. மாகமாஸம் வந்துவிட்டது. இந்த மாகமாஸத்தின் சுக்கிலபக்ஷத்தில் மூன்றிலொருபாகம் பாக்கியிருக்கிறது இதனாலும் மாகமாஸம் தொடங்கி உத்தராயணம் என்று தெரிகிறது. இதற்கேற்ப மாகமாஸம் வரும் ரதஸப்தமி ஸூர்ய ரதம் வடக்கே திரும்பிய நாளை குறிப்பிக்கின்றது. இப்படியே வைதீகஜோதிஷமென்ற புஸ்தகத்தில் அவிட்ட நக்ஷத்திரத்தின் ஆரம்பத்தில் உத்தராயணாரம்பமும் ஆயிலியத்தின் பாதியில் தக்ஷிணாயனமும் அதாவது மாகமாஸத்தில் உத்தராயணமும் ச்ராவணமாஸத்தில் தக்ஷிணாயனமுமென்று காணப்படுகிறது. அமரகோசமென்ற புத்தகத்தில் மாகம் முதலிய இரண்டிரண்டு மாதங்கள் ஒவ்வொரு ருதுவென்றும் அப்படியே மூன்று ருதுக்கள் அயன

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 10 MAR 1910 MADRAS.

மென்றும் சொல்லப்படுகிறது. வராஹமிஹிரர் என்பவர் முன்னொருகாலத்தில் ஆயில்ய நக்ஷத்திரத்தின் பாதியின்மேல் தக்ஷிணாயனமும், அவிட்டம் முதல்கொண்டு உத்தராயணமும் இருந்தபடியால் முன்சாஸ்திரங்களில் அப்படி எழுதப்பட்டுள்ளது. அவர் காலத்தில் கர்க்கடக ராசி முதற்கொண்டு (ஆடிமீ) தக்ஷிணாயனமும் மகரமுதற்கொண்டு உத்தராயணமும் பிரத்தியக்ஷமாய்ப் பரீக்ஷித்துப் பார்த்ததில் தெரியவருகிறது" என்று வரைந்திருக்கிறார்.

இதில் முன்னால் சொல்லப்பட்டிருக்கிற வாக்கியங்களைக் கவனிக்கும்பொழுது வெகுநாளடைவில் சூரியகதி பேதப்படுகிறதென்றும் அதன் மூலமாய்த் தக்ஷிணாயன உத்தராயண புண்ணிய காலங்கள் காலத்துக்குக் காலம் வித்தியாஸப்படுகிறதென்றும் தெளிவாகிறது. தற்காலத்திய பரீக்ஷையில் வராகமிஹிரர் குறிப்பிட்ட காலத்தைவிட சுமார் 20நாளைக்கு முன்பாகவே தக்ஷிணாயனமும் உத்தராயணமும் ஏற்படுகின்றன என்பது, சுத்த பஞ்சாங்கங்களால் வெளியாகிறது. அதாவது மார்கழிமீ 8-ந்தேதியில் உத்தராயணமும் ஆனிமீ 8-ந்தேதியில் தக்ஷிணாயனமும் சம்பவிக்கிறதாகத் தெரிகிறது. அதை அனுசரித்தே விஷுவமென்று சொல்லப்படும் அற்பிசி முதலிலும் சித்திரை முதலிலும் சம்பவித்திருந்த விஷுவமென்ற இரண்டு புண்ணியகாலங்களும் முறையே புரட்டாசிமீ 8-ந்தேதியிலும், பங்குனிமீ 8-ந்தேதியிலும் ஸம்பவிக்கின்றன. அப்படியே ரிக்வேதத்தின் கருத்தை வெளிப்படுத்துவதற் கேற்பட்ட யஸ்கரென்பவரும் பாத்திரபத மாசம் தொடங்கி தக்ஷிணாயனமென்று சொல்லியிருக்கிறார். இவ்வித புண்ணிய காலங்கள் வேறுபடக்கூடியது சஹஜமே.

இம்மாதிரி மகர ஸங்கராந்தி பின்னடைவதற்குக் காரணம் என்ன என்ற சங்கை பிறக்கும். கிரேக்கர் காலத்தில் ஹிப்பார்க்கஸ் என்ற வானசாஸ்திரி ஸமராத்ரஸ்தானம் (இரவும் பகலும் ஒன்றாக இருக்கும் ஸ்தானம்) வானத்தில் மெதுவாக இடம் பெயருகிறது என்பதை க்ரேக் இலக்கியங்களிலிருந்து உணர்ந்தார். நமது பெரியோர்களும் இதை உணர்ந்திருக்கின்றனர் என்பது, முன்னர் எடுத்துக் காட்டிய உதாரணங்களிலிருந்து வெளியாகும். இந்தப் பின்னடைவு மிக மெதுவாக நடப்பதால்தான் வெகுநாள் கழிந்தபின் இந்த மாறுதல் வெளியாகின்றது. ஆங்கல நாட்டில் ஸர் ஐஸக் நியூடன் பிரபஞ்ச ஆகர்ஷண சக்தி, அதன் ஸ்வரூபம். இவைகளைக் கண்டுபிடித்தபின்னர் இந்தப் பின்னடைவு உண்டாவதன் காரணம் நன்றாக வெளியாயிற்று.

பூமி சுற்றுவதால் அதன் மத்தியபாகம் வெளிவந்திருக்கிறது. அதனால் ஸூர்யன் ஆகர்ஷண சக்தி மற்றைய பாகத்தைவிட அதில் அதிகமாகத் தொழிற்படுவதால் பூமி சுற்றுவதை அது ஒருவாறு மாற்றிவிடுகிறது. இது மாற்றும் விதத்தை நன்கு உணர சுற்றும் பம்பரத்தை எடுத்துக்கொள்ளுவோம். பம்பரம் சரிவாகச் சுற்றினால் அது தன்னைச் சுற்றி வருவதோடுகூட சக்கிராகாரமாக ஓர் நேர் உச்சிக் கோட்டைச் சுற்றியும் வரும். இது நாம் எல்லோரும் அறிந்த விஷயமே. இதுபோல பூமியும் ராசி சக்கிரமட்டத்திற்குச் சரிவாக தன்னைத்தானே சுற்றிவருவதால் ஸூர்யன் ஆகர்ஷண சக்தியால் மாற்றப்பெற்றுப் பூமியின் இருசுக்கோடு பம்பரம் சுற்றுவதுபோல்ராசி சக்கிரத்தின் துருவத்தைச் சுற்றி ஒழுங்காக வரவேண்டும். பூமத்யரேகையின் மட்டத்திற்கும், ராசி சக்கிரமட்டத்திற்கும் இருக்கும் வித்யாஸத்தால் பூமியின் துருவம் இதற்கேற்ற சிறிய சக்கிரத்தில் ராசிசக்ரத்துருவத்தைச் சுற்றி வருகிறது. இம்மாதிரி சுற்றுவதால் பூமத்யரேகை மட்டம் நகருகிறது. அதனால் அதுவும் ராசிசக்ரமட்டமும் ஸந்திக்கும் இடம் ஆகாயத்தில் மேற்கே இருந்து கிழக்குநோக்கி

மெதுவாகப் போகிறது. இந்த ஸந்திக்கும் இடத்திற்கு ஸூர்யன் வந்தால்தான் ஸமமான இராப்பகல்கள் உண்டாகின்றன. இதனால் இந்த ஸ்தானத்திற்கு ஸமராத்ரஸ்தானம் என்று பெயர். இவை ஆகாயத்தில் இரண்டு உண்டு. இவைகளில்தான் வருஷத்திற்கு இருமுறை ஸம இராபகல்கள் உண்டாகும். இந்த விஷயம் முன் காலத்தில் சித்திரை முதல் தேதியில் உண்டாகிக்கொண்டிருக்கலாம். இப்பொழுது அது பங்குனி மாதம் 8வ-யில் உண்டாகிறது. அதாவது இவைகளுள் முதல் ஸமராத்ரஸ்தானம் மேஷராசியிலிருந்தது, இப்பொழுது மீனராசிக்கு வந்துவிட்டது. இதற்கேற்ப உத்தராயணம் தொடங்கும் ஸ்தானமும் பின்னடையவேண்டும். உத்தராயணம் இப்பொழுது மார்கழிமீ 8உ யில் தொடங்குவதால் இந்த ஸ்தானம் மகரராசியைவிட்டுத் தனுஸில் போய்விட்டது. பீஷ்மர்காலத்தில் ரதஸப்தமியன்று உத்தராயணம் தொடங்கியதாகத் தெரியவருகிறதால், அவர்காலத்தில் இந்த ஸ்தானம் கும்பராசியில் இருந்தது என்று தெரியவருகிறது. முற்கூறியபடி ஸூர்ய கதியில் (பூமிகதியில்) ஸம்பந்தப்பட்ட ஸமராத்திரி ஸ்தானப் பின்னடைவே இந்த மாறுதலுக்குக் காரணம். முன் தெரிந்திருக்கும் காலங்களில் ஸமராத்திர ஸ்தானத்திற்கு ஸூர்யன் வருங்காலத்தையும், இப்பொழுது ஸூர்யன் அதே ஸ்தானத்திற்கு வருங்காலத்தையும் கொண்டு வருஷம் ஒன்றுக்கு ஸம இரவுபகல் ஏற்படுவது 50·2 விநாடி பின்னடைகிறது. இது முன் ஒருதரம் ஏற்பட்ட தினத்திற்கு மறுபடியும் வருவதற்கு 25,800-வருஷங்களாகும்.

முன்கூறியவற்றிலிருந்து பூமியின் துருவம் ராசிசக்கிர துருவத்தை 25,800 வருஷத்திற்கு ஒருதரம் சுற்றிவருகிறது என்பது வெளியாகிறது. இதனால் ஏற்படக் கூடிய மாறுதல்களைச் சற்றுவிசாரிப்போம். இப்பொழுதிருக்கும் துருவநக்ஷத்திரத்திற்கு அருகாமையிலேயே பூமியின் துருவம் வருகிறது. இன்னும் இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்குப் பூமியின் துருவம் துருவநக்ஷத்திரத்தை அணுகிக்கொண்டேயிருக்கும். பின்னர் வரவர அதைவிட்டு விலகிக்கொண்டேவரும். பூமியின் துருவம் போகும் மார்க்கத்திலிருக்கும் மற்றைய நக்ஷத்திரங்கள் பின்னர் துருவ நக்ஷத்திரமாக இப்பொழுதிருக்கும் துருவ நக்ஷத்திரத்திற்குச் சலனம் ஏற்படும். இதனால் பூமிக்கு இம்மாதிரி மாறுதல்கள் ஏற்படும் என்று இப்பொழுது எவ்வாறு கூறமுடியும்?

நம்மவர்கள் சாஸ்திரீயமான புண்ணியகாலமின்னதென்று தீர்மானித்துக்கொண்டு அந்தந்தக் காலத்திற்குரிய ஸத்கர்மங்களை அனுஷ்டிக்கவேண்டிய தவசியம். அவ்வளவில்லாவிட்டாலும் கணிதசாஸ்திரப்படி நன்றாய்க் காலத்தை ஆராய்ந்து இன்றைக்குப் புண்ணிய காலம் இன்ன ஸமயத்தில் ஏற்படுமென்பதை லோகோபகாரார்த்தமாகப் பிரசுரப்படுத்துகிற சுத்த பஞ்சாங்கத்தின்படியாவது அனுஷ்டிக்க வேண்டும். அப்படிக்கில்லாவிட்டால் தாங்கள் செய்யும் ஸத்கர்மங்கள் அகாலத்தில் செய்யப்படுவதினால் உள்ளபடி பலனைத்தரா. இதை ஆஸ்தீகர்களெல்லோரும் கவனித்து, கண்ட பஞ்சாங்கங்களை நம்பாமல் சரியாய்க் கணிக்கப்பட்ட பஞ்சாங்கத்தின்படி நடப்பது நலம். ஸரியானபஞ்சாங்கம் எது என்றினியாவது நாம் ஆராயாதிருப்பின், நமது விரதமுதலியவெல்லாம் முறைபுரண்டு போகுமென்பதற்கென்ன தடை?

மஹாமஹோபாத்யாயர்
ஆர். சந்திரசேகர சாஸ்திரிகள்.

மிகவும் அருமையான தமிழ் நாவல்கள்.

ஆனந்தமடம்: தேசபக்தி புகட்டும் ஓர் அருமையான நாவல்—இந்த நாவலும் ஸ்ரீ பங்கிம் சந்திரசட்டர்ஜி பங்காளி பாஷையில் எழுதியதை ஸ்ரீ மஹேசகுமாரசர்மா அவர்கள் மொழிபெயர்த்தது. ...	0 8 0
போஜசரித்திரம்—2-ம் பதிப்பு. மனதை கவறக்கூடிய 16-ஆப்டோன் படங்கள் சேர்த்திருக்கிறது. ம-ள-ள-ஸ்ரீ ஹைகோர்ட்டு வக்கீல் T. S. நாராயண சாஸ்திரியார் இயற்றியது—ரொம்பவும் நன்றாய் அச்சிடப்பட்டிருக்கிறது.	1 8 0

பண்டித நடேச சாஸ்திரியார் இயற்றியவை:

மதிகெட்ட மனைவி	1 0 0
தீனதயாளு	0 8 0
ஸ்ரீ மாமிகொலுவிருக்கை	0 8 0
தலையணை மந்திரோபதேசம் 3-ம் பதிப்பு	0 8 0
வேணீ ஸம்ஹாரம்	0 3 0
மிருச்சகடி	0 4 0
முத்திராராக்ஷஸம்	0 4 0

ம-ள-ள-ஸ்ரீ ஹைகோர்ட் வக்கீல் ப. சம்பந்த முதலியார் இயற்றியவை.

லீலாவதி ஸுலோசனை	0 12 0
இரண்டு நண்பர்கள்	0 12 0
மனோஹரன்	0 12 0
கள்வர் தலைவன்	0 8 0
சாரங்கதரன்	0 8 0
சத்ருஜித்	0 12 0
யயாதி	0 8 0
வேதாள உலோகம்	0 8 0
அமலாதித்யன்	1 0 0
காதலர் கண்கள்	0 12 0
பேயல்ல பெண்மணியே	0 8 0

வாஸந்திகா ஒரு தமிழ்நாடகம் ...	0 8 0
வெனிஸ்வர்த்தகன்	1 0 0
கற்புக்கரசி	0 8 0
குணமாலிகை அல்லது கற்பின் வன்மை	0 6 0
கனகவல்லி	1 0 0
கமலினிகல்ஹம்ஸம்	0 8 0
எலன்	0 6 0
வசீகரி	1 0 0
ஞானரஞ்சனி	0 8 0
ஸுஜாதா	0 8 0
லலிதாங்கி	0 8 0
வனஸுதா	0 8 0
லலிதா	0 10 0
தமயந்தி	0 9 0
ஞானம்பாள்	0 6 0
மங்களாம்பாள்	0 8 0
சுகுணங்கதன்	0 12 0
பாவலர் விருந்து	0 8 0
வில்லிபுத்தூரார்; பிள்ளை பெருமாள் சரித்திரச் சுருக்கம்	0 8 0
மதிவாணன்	0 8 0
வால்மீகருமாயணம் கிளைக்கதைகள் ...	0 8 0
ஸ்ரீமான். ஜி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் ஜீவிய சரிதம்	0 8 0
ஸ்ரீபாலகங்காதரர் ஜீவிய சரிதம் ...	0 3 0
அந்தப்புர ரகசியம்	1 0 0
கவிரத்தினசிந்தாமணி என்னும் காளிதாசன்சரித்திரம்...	1 0 0
மோகனாங்கி	1 4 0
குடும்ப ஸம்ரக்ஷணி...	2 0 0
மன்மதகாந்தன் கதை	0 8 0
பீமலா அல்லது திவான் மகள் ...	0 6 0
மகாமகம் அதின் மகிமை	0 4 0
ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியின் ஜீவிய சரிதம்...	0 2 0
கந்தபுராணச் சுருக்கம் வசனம் ...	0 12 0
பகவத்கீதை ஷை ப்ரதிபதத்துடன் சங்கர, ராமாநுஜ, மத்வ பாஷ்யத்தை தமிழ் மொழி பெயர்ப்பு	1 4 0
கல்கிபுராணம்(தசாவதாரத்தில் கடைசி அவதாரம்) ஸம்ஸ்கிருதத்திலிருந்து தமிழ் வசனமாய் கலியுக விசித்திரத்தையும் அக்ரமத்தையும் கேதுபுராணம் சுருக்கம், கங்காபுராணசுருக்கம், காவேரி புராணச் சுருக்கம்	0 12 0
யஜுர், ஸாம, ருக், சந்தியாவந்தனம், புருஷஸூக்தம், ஸ்ரீஸூக்தம், பூஸூக்தம், நீளாஸூக்தம், நாராயண ஸூக்தம், சங்கர, ராமாநுஜ, மத்வ, பாஷ்யங்களை ப்ரதிபதத்துடன் தாத்பர்யம் 3-வேத அமாவாஸ்ய தர்ப்பணங்கள் திருவாராதனம், விஷ்ணுஸஹஸ்ரநாமம், ப்ரஹ்மயஞ்யம் ஸ்மார்த்த தேவதாபூஜை இவைமுதலானதுகள்.	1 4 0
தசோபநிஷத், சங்கர, ராமாநுஜ, மத்வ பாஷ்யங்களை ப்ரதிபதத்துடன் தமிழில் மொழிபெயர்ப்பு	6 0 0
தசாவதாரப்ரபாவம் ஸ்ரீமந்நாராயணன்பத்து அவதாரம் எடுத்த விஷயத்தைப் பற்றி ஸம்ஸ்கிருதத்திலிருந்து தமிழில் வசனமாக, ...	1 0 0

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி,
மைலாப்பூர், மதராஸ்

விளம்பரங்கள்

மிகவும் அருமையான தமிழ்ப் புத்தகங்கள்

ஸ்ரீபகவத்கீதை கிரந்த சுலோகமும் தமிழில் பொழிப்புரை, பாஷ்யங்களின் கருத்துரை, குறிப்புகள் முதலியன அடங்கியது. முதல் 6-அத்தியாயங்கள் வரையில்	0	12	0
ஸ்ரீ சங்கரவிஜயம் (ஆதி சங்காசாரிய சுவாமிகள் சரித்திரம்; சங்கரர் சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாள் படங்களுடன்)	1	0	0
இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்கிற 4-வேத ரகசியம், மனுநீதி சாத்திரச் சுருக்க அட்டவணை, பிராயச்சித்த நிருணய சாத்திர சங்கிரகம்	0	8	0
நவநீதசாரம் வினாவிடை (வேதாந்தம்)	0	8	0
அகம்புற ஆராய்ச்சி விளக்கம் வசனம் (வேதாந்தம்)	1	4	0
வேமன்னபத்தியம் 1000-பாடல் உரையுடன்	1	0	0
ஷை 100-பாடல் உரையுடன்	0	4	0
சைவ சித்தாந்த சாஸ்திரம் 11-ம் உரையுடன்	1	4	0
நியாயப் பிரகாசம் (ஹிந்திபாஷையிலிருந்து தமிழ் மொழிபெயர்ப்பு) வசனம்	4	0	0
நாஞ ஜீவவாதக்கட்டளை குறிப்புரையுடன் 2-ம் பதிப்பு	0	4	0
கட்டளைத்திரட்டு (வேதாந்த சித்தாந்த கட்டளைகள் 20-ம் ஒரு கட்டடம் ...	0	12	0
ஸ்ரீராம ரகசியம் (ஸ்ரீராமமூர்த்திக்குப் பட்டாபிஷேகமான பிறகு நடந்த வரலாறு)	0	5	0
ஸ்ரீசிவ மஹாபுராண வசனம் படங்களுடன் (இதில் 6-சங்கிதைகளடங்கியிருக்கின்றன)...	5	0	0
மருத்துவ சாஸ்திரம்...	1	8	0
அனுபோக வைத்திய பிரம்ம ரகசியம் 8-காண்டங்கள்	3	0	0
மாதர் நீதி அரிச்சந்திர புராண வசன அனுபந்தத்துடன் நீதிமார்க்கக் கும்மியுஞ் சேர்ந்தது...	0	12	0
பிரதாப முதலியார் சரித்திரம் ...	1	0	0

ஷை புஸ்தகங்களுக்குத் தபாற்கூலி முதலியன பிரத்தியேகம்.

ஸ்ரீமஹாபாரத வசன சங்கிரகம் 18-பருவமும் கதை விரிவாயுள்ளது, தின் காகிதம் ஒரு கட்டடம்	2	0	0
இராமாயணம் உத்தரகாண்ட வசனம்	0	6	0

விலாசம் :— அ. மஹாதேவசெட்டி,
நெ. 288, லிங்கசெட்டி வீதி,
முத்தியாலுப்பேட்டை, சென்னை.

வெளியாகிவிட்டது! வெளியாகிவிட்டது!!
காப்பிக்கு முந்துங்கள் தாமதிக்காதீர்கள்

சந்திரகாந்தா

துப்பறியும் தமிழ் நாவல்

"இராஜாம்பாள்."—எழுதிய ஜே. ஆர். ரங்கராஜு அவர்களால் எழுதப்பட்டது. இராஜாம்பாளை வாங்கி வாசித்தவர்கள் இதை வாங்கி வாசிக்க விரும்புவார்களென்பது திண்ணம். இப்புஸ்தகம் பளபளப்பான 20-பவுன் காகிதத்தில் 202-பக்கங்கள் அடங்கியது. மேலும் இதிலும் இங்கிலீஷ் நாவல்களைப்போல் புதுமாதிரியாகக் கண்டோர் மனதைக் கவரும் மூன்று சித்திரப்படங்கள் ஆர்ட் பேப்பர் என்னும் வழவழப்பான காகிதத்தில் அச்சடித்துச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதைப்போலொத்த நாவல் இதுவரையில் வெளி வந்ததில்லையென்று பத்திராசிரியர்களாலும் மற்றவர்களாலும் புகழப்பெற்றது.

சந்திரகாந்தா விலை 0—12—0.

போஸ்டேஜ் வி. பி. கமிஷன் அணா 3 பிரத்தியேகம்.

கிருஷிகன்

விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்யமுமுள்ளவர்களால் எழுதப்படும் மாதாந்தரப் பத்திரிகை. எல்லாரும் வாங்கி வாசித்து விவசாயம் விருத்தி அடையவேண்டும் என்னும் எண்ணத்துடன் வருஷ சந்தா தபால்கூலி உள்பட அணா 12 என்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. கமிஷன் அணா 1 பிரத்தியேகம்.

இராஜாம்பாள்

மூன்று அழகிய சித்திரப்படங்களுடன் கூடிய துப்பு அறியும் சிறந்த நாவல். இதைப்போலொத்த நாவல் இதுவரையில் பிரசுரிக்கப்பட்டதில்லையென்பது இதை வாசித்தவர்களுடைய அபிப்பிராயம். வாங்கி வாசித்தால்தான் இதன் அருமை தெரியும். விலை அணா 12.

தபால் கூலி வி. பி. கமிஷன் அணா 2 பிரத்தியேகம்.

மேற்படி புஸ்தகங்கள் வேண்டியவர்கள்,
ரங்கராஜு அண்ட் பிரதர்ஸ்,
மௌண்ட்ரோட், சென்னை.
என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழ்வசன நூற்சரிதம்

HISTORY OF THE TAMIL PROSE LITERATURE

யாம் முன்பொருமுறை விவேகபோதினியில் எழுதிய விஷயத்தில் தமிழ்வசனநடை இவ்வாறு இருத்தல் வேண்டும், அதன் இலக்கணம் இன்னது என்பதைக் குறித்து எழுதினோம். இனி, தமிழ் வசன நூல்களின் சரிதத்தை ஆதிகாலந் தொட்டு இன்றளவும் ஆராய்வோம். ஆராய்வதற்கு முன் கவனிக்கவேண்டுவது ஒன்றுண்டு. அஃது என்னவெனில், 'ஆராய்வதற்கு வேண்டிய கருவிகள் உளவா?' என்பது. தமிழ் நூல்களின் முற்காலத்திய வரலாறு இது, இடைக்காலத்து வரலாறு இது, பிற்காலத்து வரலாறு இது, எனத் தெளிவுபடக் கூறப் போதுமான கருவிகள் கிடையா. தமிழ் இலக்கண இலக்கிய நூல்களின் பரப்பைக் கடற்பரப்புக்கு இணையெனக் கூறலாம். எங்ஙனம் பரந்து விரிந்த பரவையுள் மறைந்து புதைந்து கிடக்கும் பொருள்கள் பலவுளவோ அங்ஙனமே அகன்று விரிந்த தமிழ்க்கடலுள்ளும் ஆழ்ந்து மறைந்த பொருள்கள் பலவுள.

சீரார் தமிழ்மொழியுந் தெண்டிரையுமொக்குமென்ப
நேரா முவமை நிகழ்த்துவமால்-காரார்
கலியபக்குஞ் செம்பொருள்கள் காமர் தமிழின்
கலைபயக்குஞ் செம்பொருள்கள் காண்.

இன்னும், கடலுக்கு முந்நீர் என்றும் பெயர் வாய்ந்ததுபோலத் தமிழுக்கு முத்தமிழ் என்னும் பெயரும் வாய்ந்தது. முந்நீர்ச் சுவையைக் கண்ட முனிவரனும் அகத்தியன் முத்தமிழ்ச் சுவையையுந் துய்த்தனனன்றே.

மல்லன் மலையன்ன மாதவத்
தோன்பண்டு வாரிதியின்
சொல்லுஞ் சுவைபோற் றமிழின்
சுவையையுந் துய்த்தறிந்தான்
எல்லை யிலாக்கடல் முந்நீ
ரெனும்பெயர்த் தின்றமிழும்
நல்லறி ஞோர்புகழ்
முத்தமிழ்ப் போரா னலமுறுமே.

இம்மட்டேயோ? கடலுக்கும் ஒரு பெருங் குறைவு உளது. தமிழுக்கும் ஒருபெருங்குறைவு உளது. கடலிலுள்ள நீர் நமது பானத்துக்குப் பலன்தராது நிற்கின்றது. தமிழும் நாம் எளிதில் கற்றறியக்கூடிய வசனநூல்கள் இன்றிக் குறைபடுகின்றது. ஆனால் கடலின் தன்மையை நம்மால் மாற்ற இயலாது. தமிழின் குறையோ நம்மால் மாற்றக் கூடியது. வசன நூல்கள் மல்கிப் பெருகினால், நந்தமிழ்க் கடல் நன்னீர் நிறைந்த கடலெனப் பொலியும். தமிழ்வசன நூற்குறையை நீக்கவேண்டியது நமது கடமையாதலின் தமிழ் வசன நூல்களின் வரலாறு இது, அவை மல்கிப் பெருகும் வழி இது, என்னும் விஷயத்தை யாம் இங்கு கவனிப்போம்.

முதற் பகுதி

இப்பகுதியில் மூன்று விஷயங்களைப்பற்றிப் பேசுவோம். அவை என்னவெனில் (1) தமிழ் வசன நூற்குறைவு (2) வசன நூலின் இன்றியமையாமை (3) தமிழ் வசன நூல் அளவு.

1. தமிழ்வசன நூற்குறைவு—தமிழ்ச் செய்யுணூல்களின் விரிவை நோக்க நோக்கத் தமிழ் வசன நூல்களின் குறைவு மிகத் தெளிவாகப் புலப்படுகின்றது. டாக்டர் மில்லர் துரையவர்கள் 'இந்தியாவுக்கு என்ன குறை இருக்குமாயினும் ஒரு குறை மாத்திரம் என்றுங்கிடையாது. அதாவது செய்யுணூல்களின் குறை என்பதே கிடையாது' எனக் கூறியிருக்கின்றனர். அவர் சொல்லின் உண்மை தமிழ் மொழிக்கே நன்கு பொருந்தும். இலக்கண நூல்கள், நிகண்டுகள், சரித்திரங்கள், முகவுரைகள், சாசனங்கள், வைத்திய நூல்கள், சோதிட நூல்கள், கணித நூல்கள், தர்க்க நூல்கள் முதலிய எல்லா நூல்களும் செய்யுள் நடையிலேயே எழுதப்பட்டுள்ளன. பின்னர் எங்குத்தான் நம்முன்னோர்கள் வசன நடையை உபயோகித்தனர் என வினவில், பழைய காப்பியங்க

ளுக்கு உரை எழுதுமிடத்து மாத்திரம் வேறு வகை தோன்றாது, வசன நடையை உபயோகித்ததாகக் காணவருகின்றது. இவ்விஷயத்தினின்றும் நமது தமிழ்ப் பாஷையிலுங்கூட, மற்று எல்லாப் பாஷைகளிலும் போல ஆதிகாலத்திற் செய்யுணடையே மிகுதிபட்டும் வசன நடையே குறைவுபட்டும் நூல்களில் ஆளப்பட்டன என்னும் விஷயம் தெரியவருகிறது. எமர்ஸன் என்னும் ஆங்கிலவித்துவான் 'எவ்வாறு எல்லா உணர்ச்சிக்கும் முந்தியதாக இசையினும் பாட்டினுமே குழந்தைகளுக்கு இன்பம் பிறக்கின்றதோ, அவ்வாறே ஒரு பாஷையின் வரலாற்றை நோக்கும்போதும் ஆதியில் இசையும் பாட்டுமே மிக்குப் பயின்றுளதாகத் தெரியவரும்' எனக் கூறுகின்றார். நோர்ட்ஹோப் என்ற மற்றொரு ஆங்கில வித்துவான் 'வசன நடையில் விஷயங்கள் எழுதப்பட்டால் அவைகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது கஷ்டமாதலாலும், செய்யுள் ரூபமாக இருந்தால் விஷயங்களை நினைவில் நிறுத்துதல் எளிதாதலாலும் எல்லாப் பாஷைகளிலும் செய்யுணடையே ஆதிகாலத்தில் ஆளப்பட்டது' என எழுதியுள்ளார். இவர்கள் கூறியது நமது தமிழ்மொழிக்கும் நன்கு பொருந்தும். தமிழ்ச் செய்யுணூல்கள் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே இருந்தும் வசனநூல்களோ வீரமாமுனிவர் (Constantius Beschi) காலம் முதற்கொண்டுதான் பெரிதுங் காணப்படுகின்றன.

காகிதம், அச்சுயந்திரம் இவை இல்லாமையும் ஆதியில் வசனநூல்களெழுதப்படாமைக்குக் காரணமாகும். அளவின்றி ஓடும் வசனத்தாலமைந்த நூல்களைப் பனையோலையில் எழுதுவது எளியதோர் வேலையல்ல. ஆதலின் அன்றே கதைகள்கூடப் பாட்டு ரூபமாகவே நம் முன்னோர்களால் அமைக்கப்பட்டன. அளவின்றி ஓடும் வசனவாக்கியங்களை அளவுபடக் குறுக்கும் வழியாதெனத் தேடினர். செய்யுளே தக்கதென்று நாடினர். அங்ஙனமே செய்யுணூல் பல பாடினர். இக்காரணத்தாற்றான் செய்யுணூல்களுக்கு உரையெழுதுமிடத்தும் உரையாசிரியர்கள் சொல்ல வேண்டுவனவற்றை வெகு சுருக்கமாகவே சொல்லியுள்ளார்கள். சிலப்பதிகாரம் என்னும் பெருங்காப்பியத்துக்கு உரையெழுதின அடியார்க்கு நல்லார் அந்நூலின் பதிகத்தின் முதல் இரண்டு அடிகளுக்கு வெகு விரிவாகப் பொருளெழுதி "இனிப் பதிகச் செய்யுளுள், முதலீரடியும் போல் யாண்டும் விரியாதது உரைபெருகும் என்பதனைக் கருதியெனக் கொள்க" என விரிந்து உரை எழுதாது விடுத்தனர். இப்போது நமக்கு இருக்கும் அச்சுயந்திரம், எழுது கருவி, காகிதம் முதலிய ஸௌகரியங்கள் நம் முன்னோருக்கும் இருந்திருந்தால், அவர்கள் பல வசன நூல்களை எழுதியிருப்பார்கள் என்பதற்குத் தடையே இல்லை.

2. வசனநூலின் இன்றியமையாமை.—இனி வசன நூலின் இன்றியமையாமையைக் கவனிப்போம். எளிதில் நமது கருத்தைப் பிறருக்கு வெளியிடுவதற்கும், பிறர் கருத்தை நாம் எளிதில் அறிதற்கும் வசன நடையே செய்யுணடையைக் காட்டினும் பாராட்டத் தக்கது. தமிழ் வல்லுநர் பலர் தமது அருமையான காலத்தைக் கஷ்டமான பலவித செய்யுணூல்களியற்றுவதிற் செலவிட்டனர். அங்ஙனம் வெகு கஷ்டப்பட்டு இயற்றவேண்டிய செய்யுள் வகைகள் பலவுள. உதாரணமாக—நிரோட்டக யமக அந்தாதி என்பது ஒருவித நூல்வகை. இவ்வந்தாதி இயற்றவேண்டினால் நுட்பமான பல விதிகளைக் கவனிக்க வேண்டும். யமக அந்தாதிக்கு வேண்டிய லக்ஷணங்களிருப்பதுடன் அந்தாதியைப் படிப்பவர்களுடைய மேல் உதடும் கீழ் உதடும் ஒன்றோடொன்று ஒட்டவே கூடாது. எங்கேனும் ஒட்டுமேல் அச்செய்யுள் பிழைப்படும். அதாவது ப, ம, வ, உ, ஒ என்னும் எழுத்துக்கள் எங்கும் வரக்கூடாது. சிறந்த கவிவல்லவர்களே இந்நூல் செய்ய முயலுதல் உசிதம். புலவர் பெருமானாகிய சிவப்பிரகாச சுவாமிகள் 'திருச்செந்தில் நிரோட்டக யமகவந்தாதி' என்னும் நூல் ஒன்று இயற்றியுள்ளார். அந்நூலினின்றும் இங்கு ஒரு பாட்டு எடுத்துக் காட்டுவோம்:—

கணக்காக நாய்கடின்
காயநிலை யெனக்கண்ணி யென்ன
கணக்காக நானலைந் தெய்த்தே
னெழிற் செந்திற் கந்த ! நெற்றிக்
கணக்காக னார்தந்த நின்றனை
யேயினிக் காதலினாற்
கணக்காக னிகர்த் தேயழி
யங்கத்தின் காதலற்றே.

இச்செய்யுளின் பொருள் வருமாறு:—

எழிற் செந்திற் கந்த! கணக்காகம், நாய்கள் தின் காயம் நிலையெனக் கண்ணி, என்ன கணக்காக நான் அலைந்து எய்த்தேன். கனி நிகர்த்தே அழி அங்கத்தின் காதலற்று, நெற்றிக்கண்ணக்கு ஆகனார் தந்த நின்றனையே இனிக் காதலினாற் கண்ணக்கா. (கருதுமாறு காத்தருள்).

இன்றும் தமிழ்க் கவிகள் பலர் இவ்வாறு 'மிறைக்கவி' பாடுவதில் தத்தம் வாழ்நாளைப் போக்குகின்றனர். அந்தப்பொழுதை வசன நூல்களியற்றுவதிற் செலவிட்டால் அவர் முயற்சி எவ்வளவோ பலனைத் தமிழ் மக்களாயினோர்க்குத் தரும். அதுகொண்டு நந் தமிழ்நூற்பரப்பைக் கடைகளில் மட்கலன் இல்லாது பொற்கலனே நிரம்பியுள்ள ஒரு நகரத்துக்கு ஒப்பிடலாம். பொருட்செல்வம் உள்ளவர்கள் தாமே பொற்கலன் வாங்கி உபயோகிக்கக்கூடும்? அவ்வண்ணமே கல்விச் செல்வம் உள்ளவர்தாமே செய்யுணூல்களைப் படித்து அங்குள்ள பொருளை அநுபவிக்கக்கூடும்? பொற்கலன் வாங்கும் ஆற்றல் இல்லாதவர்கள் அந்நகரத்தை விட்டு மட்கலன் கிடைக்கும் நகரத்தை நாடுவார்கள். அதுபோலவே தமிழ்ச் செய்யுணூல்களைப் படித்தறிந்து பொருள்கொள்ளமாட்டாதவர் ஆங்கிலம் முதலிய வேறு பாஷைகளில் உள்ள வசன நூல்களைப் பாராட்டிப் படிக்கின்றனர்.

3. தமிழ் வசனநூல் அளவு.—இது எவ்வளவென்பதை ஆராய்வாம்.

வசன நடை என்பதன் பொருளென்ன? வசன நடையாவது மக்கள் பேசுவதுபோலவே அமைக்கப்படும் வாக்கியங்களால் ஆயது. இப்பொருளைக்கொண்டு ஆராயப்புகுந்தால் பழய நூல்களிலுள்ள நடையுள் வசன நடையைக் காண்பது அரிதாகும். வசன நடை என்பதற்குச் சுத்த தமிழ்ப்பெயர் உரை நடை என்பது. சிலப்பதிகாரத்துக்குப் பொருள் எழுதப்பட்ட உரைநடை செய்யுள்போலப்பிரிந்து 'ஆசிரியப்பா என்னும் பாவினத்தின் தன்மையொடு பெரும்பாலும் விளங்குகின்றது. கோல்ரிட்ஜ் என்னும் ஆங்கில வித்துவான் 'வசன நடை சொற்களின் முதற்றரக் கோவையாலாயது செய்யுணடை முதற்றரச்சொற்களின் முதற்றரக் கோவையாலாயது' என விளக்கி உள்ளார். இப்பொருளின் வழியே நோக்குமிடத்து செய்யுணடைபோல் இருக்கும் உரைநடையையும் வசனநடை எனக் கூறலாம். செம்பாகமான கவிகளுள் முதற்றரக்கோவையாவது மோனை, எதுகை முதலிய யாப்பிலக்கணம் நிரம்பியிருப்பதோடு, முதற்றரச் சொற்களும் அமைந்திருக்கவேண்டும். யாப்பிலக்கணம் 'முதற்றரக் கோவையை உண்டுபண்ணும் வழி இது'வெனத் தெரிவிக்கின்றது. இனி, முதற்றரச்சொற்கள் இவை என அறிந்து இடமறிந்து அவைகளைப் பிரயோகம் செய்பவனே நல்ல கவிஞன். செய்யுணூல்களின் ஏற்றத்தாழ்வை 'முதற்றரச் சொற்கள்' அமைந்துள்ள நிலைமையைக்கண்டு எளிதில் உணரலாகும். முதற்றரச் சொற்கள் முதற்றரக் கோவையாயிருப்பதினாலன்றோ கச்சியப்ப சிவாசாரியர் அருளிய கந்தபுராணம், பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடல் முதலிய நூல்கள்

பெரிதும் வித்துவான்களாற் பாராட்டப்படுகின்றன. பழைய உரை நடையெல்லாம் சொற்களின் முதற்றாக் கோவையாலாயது. ஆதலின் செய்புள்போல அமைந்துள்ள உரை நடையையும் நாம் உரைநடை என்றே கொள்வோம். அங்ஙனம் செய்யுள்போலிருக்கும் உரைநடையை பழைய ஆசிரியர்களின் உரையிற் காணலாகும். உதாரணம்: —

(1) அகப்பொருளுரையாசிரியர் :—

கருங்கு ழற்கற் றைமருங் கிருத்தி
அளகமு நுதலுந் தகைபெற நீவி
ஆகமுந் தோளும் அணிபெறத் தைவந்து
குளிர்ப்பக் கூறித் தளிர்ப்ப முயங்கி etc.

(2) நச்சினார்க்கினியர் :—

பறந்து செல்லுஞ் செலவிலே தருக்கின பாத்தலையுடைய போரிலே திரிவன.

(3) பரிமேலழகர் :—

கூடாநட்பு. அஃதாவது, பகைமையானகத்தாற் கூடாதிருந்தே, தமக்கு வாய்க்குமிடம்பெறுந் துணையும் புறத்தாற் கூடி ஒழுகுவார் நட்பு.

(4) அடியார்க்கு நல்லார் :—

மஹாமஹோபாத்தியாயர் ஸ்ரீ சாமிநாத அய்யர் பின் வருமாறு இவர் நடையைப் பற்றி எழுதியுள்ளார் :—'இவருடைய உரை நடை சிற்சில இடத்து எதுகை, மோனை முதலியவற்றோடு கூடி இனிய சுவை பயந்து செய்யுணடையாக அமைந்துள்ளது,

இங்ஙனம் செய்யுணடைபோலத் தமிழில் உரை நடை அமைவது படிப்பதற்கு இன்பத்தைத் தருகின்றது. ஆனால் ஆங்கில வித்துவான்களுக்கு வசனநடை செய்யுள்போல அமையுமாயின் அது லக்ஷணமாய் இராதென்பது கொள்கை. சேம்பர்ஸ் என்சைக்லோபீடியா என்னும் புத்தகத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது :—

"வசனநடை செவிக்கு இன்பமாயிருக்க வேண்டின் அதில் எதுகை முதலிய செய்யுளுறுப்புக்கள் விரவுதல் அழகன்று. அங்ஙனம் எதுகை, மோனை தவறி வருமாயினும் அங்ஙனம் அவை வருதல் வசனநடையைப் பெரிதும் இழிவுபடுத்தும்."

இப்போது 'வசனநடை' என்பதை முற்காலத்தில் 'உரை நடை' என்றும் 'உரைச் செய்யுள்' என்றும் சொல்லிவந்தார்கள். உரை நடையைப் பற்றித் தொல்காப்பியத்தில் 'செய்யுளியல்' என்னும் பிரிவில் ஆசிரியர் தொல்காப்பியர் எழுதியுள்ளார். செய்யுளியலில் வசன நடையின் இலக்கணத்தை ஏன் சொன்னார்? என்பதை யோசித்தபோது செய்யுள் என்னும் பதத்தைத் தொல்காப்பியர் காலத்தில் என்ன பொருளில் உபயோகித்தனர் என்பதைக் கவனிக்கவேண்டியதாயிற்று.

"செய்யுள்" என்னுஞ் சொல்லின் வரலாறு:—

"செய்யுள்" என்னுஞ் சொல் "செய்" என்னும் பகுதியடியாகப் பிறந்தது. ஆதலின் "செயப்படுவன எல்லாம் செய்யுளாம்." ஆதலின் நூல்கள் யாவும் செய்யுள்களே. பாட்டுக்களாலாய நூல் ஒருவகைச் செய்யுள்; உரை (அஃதாவது) வசனத்தால் ஆயநூல் ஒருவகைச் செய்யுள்; உரையும் பாட்டுங் கலந்து வருவதால் ஆய நூல் ஒருவகைச்செய்யுள். ஆக செய்யுள் ஆதிகாலத்தில் மூன்று வகைகளாகப் பிரிந்திருந்தது. அவை (1) "பாட்டுடைச் செய்யுள்" (Poetry), (2) "உரைச்செய்யுள்" (Prose) (3) "உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்" (Poetical composition in which prose is intermixed). இனிச் சூத்திரச் செய்யுள் என்னும் சொற்றொடரும் பிரயோகத்தில் உளது.

தொல்காப்பியம் செய்யுளியல் உரையில் "பாய்த்துள், விக்குள் என்றாற்போலச் செய்யுள் என்பதூஉம் தொழிற் பெயர்" என வருவதாலும், இலக்கணக்கொத்துரையில் "உரை செய்யுளாமோவெனின், செய்யுளென்னுஞ் சொற்குப் பொருளோர்ந்தும் உணர்க" என வருவதாலும் செய்யுள் என்னுஞ் சொல் செய்யப்படுவனயாவோ அவை தமைக் குறித்து நின்றது. எனவே, பாட்டும்செய்யுள்தான், வசனமும் செய்யுள்தான், சூத்திரமுஞ் செய்யுள் தான். "சிலப்பதிகாரமென்னும் பெயரால் நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்" என்ற இடத்துச் சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் பாட்டுடைச்செய்யுள் என்பது 'உருவாகிய பாட்டுக்களையுடைய காவியம்' என்றார். இதனாலன்றோ தொல்காப்பியர் செய்யுளியலில் வசனத்தையுங் கூறினர். செய்யுளை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்தார். ஒன்று 'அடிவரை யறையுடையன.' அதாவது பாட்டு, இரண்டு 'அடிவரை யறை இன்றி வருவன. அதாவது உரை, முதலிய சூத்திரங்கள் அடிவரை யறையின்றி வருவன ஆதலின் செய்யுளியலில் உரையாசிரியர் 'சூத்திரம் பாட்டெனப் படாவோவெனின் படா' என்றார். தொல்காப்பியஞ் செய்யுளியலில் "உரைநடை" என்பது கீழ்க்காட்டியுள்ள பகுதியைச் சார்ந்ததாக எழுதப்பட்டுளது.

செய்யுள்

- I அடிவரையறை யுடையன (பாட்டு)
  1. வெண்பா
  2. ஆசிரியப்பா
  3. கலிப்பா
  4. வஞ்சிப்பா
  5. மருட்பா.
- II அடிவரையறை யின்றி வருவன (பாட்டல்லாதன)
  1. நூல்
     - (1) சூத்திரம்
     - (2) ஒத்து
     - (3) படலம்.
  2. உரை
     - (1) பாட்டிடை வைத்த குறிப்பு
     - (2) பாவின் றெழுந்த கிளவி
     - (3) பொருளொடு புணராப் பொய்ம்மொழி
     - (4) பொருளொடு புணர்ந்த நகைமொழி
     - (5) சூத்திரத்து விசேட உரை.
  3. பிசி
  4. முதுமொழி
  5. மந்திரம்
  6. கூற்றிடை வைத்த குறிப்பு.

இங்ஙனம் விரிந்த பொருள்கொண்டிருந்த 'செய்யுள்' என்னும் சொல்லுக்கு வர வரப் பொருள் குன்றினது. செய்யப்படுவன எல்லாம் செய்யுளாமாயினும் செய்தல் என்னும் தொழிலின் கஷ்டம் 'பாட்டுடைச்செய்யுள்' அமைக்கும்போது தானே நன்கு புலப்படுமாதலின் செய்யுள் என்னும் பெயர் பாட்டுக்கு மாத்திரம் முக்கியமாய் உபயோகிக்கப்பட்டது. இங்ஙனம் சொற்கள் தத்தம் பொருள் குறுகிவரு நியமத்தைப் "பொதுப் படை நியமம்" என்பர் 'தமிழ் மொழியின் வரலாறு' என்னும் சிறந்த நூலை இத்தமிழுலகுக்கு அளித்த பண்டிதர் சூரியநாராயண சாஸ்திரியார் பீ. ஏ.

வீரசோழிய உரையாசிரியர் செய்யுள் என்னும் சொல்லை முதலில் அதன் விரிந்த பொருளிலும், இரண்டாவது அதன்குறுகின 'பாட்டு' என்னும் பொருளிலும் பின் வரும் செய்யுளில் உபயோகப்படுத்தி உள்ளார் ;

"பத்தியங் கத்திய மென்றிரண்
டாஞ்செய்யுள் பத்தியமே
லெத்திய பாதங்க ளால்வர்
தியலு மெனமொழிந்த
கத்தியங் கட்டுரை செய்யுளின்
போலி கலந்தவற்றோ
டொத்தியல் கின்றமை யாலொன்று
தாமு முரைத்தனரே."

இனி 'இலக்கணவிளக்கம்' என்னும் நூல் செய்த வைத்தியநாத தேசிகர் உரைநடையைப் பற்றித் தாம்செய்த செய்யுளியலில் தொல்காப்

பியர் கூறினதுபோலவே கூறியிருக்கின்றார். ஆனால் பாட்டியல் எழுதிய அவர்மகன் தியாகராஜ தேசிகர் 'உரைச்செய்யுள்' என்னும் சப்தத்தைக்கண்டு மயங்கி, உரைச்செய்யுளைப்பற்றிப் பாட்டியலில் தவறிச் சூத்திரம் சொல்லியுள்ளார். எனவே இலக்கணவிளக்க நூலின் பாட்டியற் சூத்திரம் 143-ஆவதான "பாட்டிடைவைத்த குறிப்பினானும்" என்பது அவ்வியலுக்கு முந்திய செய்யுளியலில் இருந்திருத்தல் வேண்டும். இலக்கணக்கொத்து எழுதின ஈசானதேசிகர் செய்யுள் என்பதன் விரிந்த பொருள் கொண்டாலுஞ் சரி, குறுகின பொருள் கொண்டாலுஞ் சரி உரைச்செய்யுள் என்பதை வசனம் என்னும் பொருள்பட உரைப்பதிற் பிழையில்லை என்றார். "இலக்கண மிலக்கிய முறையெனப் பெயர்பட்டிருக்கு மென்றெண்ணுக செய்யுளி னியல்பே" என்னுஞ் சூத்திரத்தின் கீழ்ப் பின்வருமாறு எழுதுகிறார்:— "இலக்கணமும் உரையுஞ் செய்யுளாமோவெனின் 'சூத்திரங்குறித்த யாப்பிற்றாகும், பல்வகைத் தாதுவின்' நூற்பாவகவல்' எனப்பலருமோதலானும், "சூத்திரமுஞ் செய்யுளாதலின்" என நச்சினார்க்கினியா ரெழுதலானும் "விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும்" 'பொருப்பு வில்லிபால் விருப்பமிலரே' என வாசகங்களைச் செய்யுளுருப்புத் தோன்ற எழுதலானும், 'உண்டான் தின்றான் ஓடினான் பாடினான்' என வுதாரணங்களை அவ்வுருப்புத் தோன்ற எழுதலானும், இலக்கணச் செய்யுள், இலக்கியச் செய்யுள், உரைச் செய்யுள், உரைச் சூத்திரம் எனப் பலரும் ஆளுதலானும், வடநூலாரும் இவ்வாறு கொள்ளுதலானும், இன்னும் பலவாற்றானு மாமென்க. செய்யுளென்னுஞ் சொற்குப் பொருளோர்ந்து முணர்க."

'உரைச்செய்யுள்' என்னும் சப்தத்தை நோக்கியே தொன்னூல் விளக்கம் எழுதிய பெஸ்கி (வீரமாமுனிவர்) 'கொன்றைவேந்தன் முதலிய கத்திய மெனக்கண்டுணர்க' என்றார்.

'தமிழ்மொழியின் வரலாறு' எழுதிய சூரிய நாராயண சாஸ்திரியார் 'இவ்வாறு வசன நடையும் ஒருவகைச் செய்யுணடையாகப் பாவிக்கப்பட்டு வந்தால் அதற்குரிய தனித்தியங்கும் நிலைமையும் அற்றுக் கட்டுப்பாடுடையதாகின்றது. இது மிகவும் பரிதபிக்கத் தக்கதோர் விஷயம்' என வருந்துகின்றனர். ஆனால் நமது ஆராய்ச்சியால் 'செய்யுள்' என்னுஞ்சொல் பொருளிற்குறுகினதால் வந்தன இம்மயக்கங்களெல்லாம் என்பதை அறிந்தோம். இப்போது செய்யுள் என்னும் சொல்லுக்குப் பாட்டு என்னும் பொருளே பொருளாதலின், "உரைச்செய்யுள்" என்பது வழக்கற்ற சொல்லாயிற்று. இனி அடுத்த பிரிவில் ஆதிகாலந்தொட்டு இன்றளவும் எழுதப்பட்டுள்ள முக்கியமான வசன நூல்கள் இவை, வசன நூல் எழுதின ஆசிரியர் இவர்,இவர் என்னும் விஷயத்தை எழுதுவோம்.

வ. சு. செங்கல்வராயன். எம்.,ஏ.

உண்மையான பக்தியின் சிறப்பு.—இன்னது என்பதே நமக்குத் தெரியாது. நாம் இப்பொழுதிருக்கும் ஸாதாரண நிலையிலிருந்து நோக்கினால், பக்தியின் வீர்யம், செழிப்பு, அபாரசக்தி ஆகிய இவைகள் நமக்கு நன்றாய விளங்கமாட்டா. பக்திமலையைத் தூக்குவது, அலக்ஷ்யமாய்ப் பெரிய ஸமுத்திரங்களைத்தாண்டுவது, பஞ்சபூதங்களை அழிப்பது, பிரபஞ்சத்தையே அசைப்பது ஆகிய அற்புதச் செயல்களுக்குக் காரணமாக இருக்கும். பக்தியாலாகாத தொன்றில்லை. பக்தியால் ஒருவன் தொழில் செயயும் காலத்தில் அவன் ஆத்மசக்தியே வெளிவருவதால் நடக்கும் தொழில் அற்புதமாக இருக்கும். சுத்த ஹிருதயம் உடைய மஹான்களிடத்தில் இந்தப்பக்தியின் சக்தியை நன்றாகக் காணலாம். வருவனகூறல், அற்புத மருந்துகள், தம்மை அறியாமல் வெளிவரும் உண்மை வாக்கியங்கள், மெய்ம்மறந்து கூறல், இவைப்போன்ற அற்புத சக்திகள் சுத்தாத்மாக்களுக்கு எதிர்ச்சையாய் உண்டாவது. இப்பெரியோர்கள் உலகத்தில் வாழ்வதே அற்புதம். மற்றைய ஜீவராசிகள் எவ்வாறு நாளைக்கு என்ற எண்ணமின்றி வாழ்கின்றனவோ, அவ்வாறே இவர்களும் மறைவாக இருக்கும்படியான ஓர் சக்தியின் வைபவத்தாய் காப்பாற்றப்பட்டு வாழ்கின்றனர் என்பது இவர்களது நடத்தையை உற்று நோக்குவோருக்கு விளங்கும்.

ஸ்ரீ ரமேச சந்த்ர தத்தர்

R. C. DUTT B.A., LL.B., C.I.E.

(A LIFE SKETCH)

வங்கமாதாவின் வரபுத்திரரும் மாத்ருபூமியின் திருத்தொண்டில் அமர்ந்தவரும் தாய்மொழியை வளர்ப்பதில் தன்னயம் பாராட்டாத ச்ரத்தைகொண்டவருமான ஸ்ரீ ரமேச சந்த்ர தத்தர் சென்ற நவம்பர்மீ 31௳ செவ்வாய்க்கிழமையன்று லோகாந்தரமடைந்த துக்கச் செய்தியைக்கேட்டுப் பாரதநாடு முழுவதும் விசனமுறும். வங்காள நாட்டின் அரங்கத்தில் வங்காளியரின் நூதன வாழ்க்கை நாடகத்தை ஸூத்ரதாரராய் நின்று ப்ரஸ்தாவனை செய்தவர்களெல்லோரும் ஒருவர் பின்னொருவராய்த் திரைக்குள் மறைவாராயினர். "பழையன கழிதலும் புதியன புகுதலும்" எல்லா விஷயங்களிலும் சகஜமாய்க் கொண்டுவருகிறது. ஆயினும் புதியன புகுந்த மாத்ரத்தினாலேயே புராதனத்தின் இன்மை பூர்ணமாய் விடுகிறதில்லை. வங்காளநாட்டில் காலதர்மமடைந்துவிட்டவர்களைப் போன்றவர்கள் இன்னும் தோன்றவில்லை. இந்தத் தரித்ரதேசத்தின் ரத்நங்களை ஒவ்வொன்றாய்க் காலஸாகரத்தில் முழுகிப்போகப் பறிகொடுத்துவிட்டு நமது திருத்தாயானவள் கண்ணீர் உகுத்துக்கொண்டு எவர்களின் முகத்தைப்பார்த்து ஆசையோடு மார்பில் கைவைத்து ஒளிபொருந்திய வருங்கால நிகழ்ச்சியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாளோ அவர்கள் அஸ்தமித்துப்போன மஹா புருஷர்களின் திருவடிப்பொடியால் புனிதமான நெறியைப் பின்பற்றும் சக்தியுள்ளவர்களாயிருப்பார்களா?

ஸ்வதேச நிஷ்டரும் ஸ்வதேச வாஸிகளினிடத்திற் ப்ரியங்கொண்டவருமான ரமேச சந்திரரே! தேர்ச்சிபெற்ற ராஜாங்க உத்யோகஸ்தராகிய ரமேச சந்த்ரரே! தீர்க்காலோசனையும் ஆழ்ந்த அறிவுமுடைய ராஜநீதி நிபுணரான ரமேச சந்த்ரரே! காங்கிரஸ் வேள்வியை அத்வர்யுவாயிருந்து நடத்தியவர்களில் ஒருவரும் நாவன்மைகொண்ட நவநவமான உபன்யாஸங்கள் புரிவதில் சதுரருமான ரமேச சந்த்ரரே! எளிய நிலைமையிலிருக்கும் வங்கஸாஹித்ய இலக்கியத்தைப் பக்தியுடன் உபாஸிப்பவரும், நவீனகதாசிரியரும், ரிக்வேதத்தை வங்காளிபாஷையில் மொழிபெயர்த்தவருமான ரமேசசந்த்ரரே! ஆங்கில இலக்கியத்தில் கரைகண்டவரும் பற்பல ஆங்கில நூல்களை ஆக்கியோனுமான ரமேச சந்த்ரரே! அரசிறை, சட்ட நிரூபணம் இவைகளின் நுணுக்கமறிந்தவரும், தர்க்க நூல் வல்லவரும் கர்ஸன் பெருமானுடன் வாதம் புரிந்து வெற்றிகொண்டவருமான ரமேசசந்த்ரரே! மன்னருக்கும் மன்னுயிருக்கும் ஒருங்கே நண்பரும்விசேஷ புலமையுடன் கூடிய சட்ட நிரூபணகாரருமான ரமேசசந்த்ரரே! காயக்வாட் மஹாராஜாவின் அமைச்சரும் படோதா (இவ்வார்த்தை மஹாராஷ்ட்ர மொழி தெரியாதவர் 'பரோடா' என்று ஆங்கிலத்தில் சிதைந்து வந்திருப்பதைப்பார்த்து தமிழிலும் வழங்கு

வர். அது பிழை.) ராஜ்யத்தின் திவானுமாகிய ரமேச சந்த்ரரே! பாரதநாட்டில் நடைபெறும் தேச நன்மைக்குற்ற சகல நற்கருமங்களுக்கும் அநுகூலமாயிருந்து உதவிபுரிந்த சுத்த கர்ம வீரரே! பாரத நாட்டின் ஹிதத்தையே ஸதா விரும்பினவராய் உம்முடைய வாழ்க்கையைக் கழித்துக் கடைசியில் உமது கர்ம க்ஷேத்ரத்திலேயே உமது வாழ்க்கைச் சுமையை இறக்கி நித்ய சாந்தியை அடைந்தீர். கல்விப்புலமையிலும் சரி, கல்வி புகட்டுவதிலும் சரி, ராஜநீதியிலும் சரி, சட்டநிரூபணத்திலும் சரி, மதியூகமான மனோ தர்ம ஸாம்ராஜ்யத்தின் எந்தப் பகுதியில் உமது திறமையின் அடையாளம் அழுந்தியிருக்கவில்லை? உம்மையிழந்ததனால் இன்று வங்கநாடு வறுமை யுற்றதாயிற்று. பாரத நாடானது மதியூகமுள்ள மேதாவியை இழந்துவிட்டுத் தன் கண்ணீரால் இன்று உமது திருவுள்ளத்துக்குப் பூசனை புரிகின்றது. பங்காளத்துக்கு-பாரதநாட்டுக்கு-உள்ள இந்தச் சோகமானது சீக்ரத்தில் மறக்கற்பாலதோ? உம்மை இழந்த குறையை வெகு தூரத்திலுள்ள பவிஷ்யத் (எதிர்) காலமும் துர்பாக்கியான பாரதநாடும் நிறைவெய்துவிக்கும் ஆற்றலுடையதாமோ?

ரமேச சந்த்ரரே, போய்வாரும்! நாங்கள் உமக்குப் பரிவுடன் வழியனுப்புகிறோம். உம்முடைய வினையின் பயனாக எந்த உலகத்தை ஈட்டினீரோ அவ்வுலகத்தில் அக்ஷய சாந்தியை அனுபவியும். வங்காளத்திலே-பாரதநாட்டிலே-உமது பெருமை பொருந்திய வாழ்க்கையின் நினைவு வெகுகாலம் மங்காமலிருக்கும். வங்காளிகளின்-பாரதர்களின்-பின் ஸந்ததியார் உம்முடைய படிப்பினையால் தன்யர்களாகவும் உம்முடைய ஆதர்சத்தால் உயிர்க்கிளர்ச்சியுற்றவராகவும் ஆவார்களாக! உம்முடைய கர்ம வாழ்க்கையின் ஜாஜ்வல்யமான ஞாபகமானது த்ருவ நக்ஷத்ரம் போல் பாரத வாஸிகளின் வாழ்க்கைப் பாதையில் வழிகாட்டியாய் ஒளிர்ந்து கொண்டிருப்பதாக!

I. வாலிபப்பருவம்

கி. பி. 1848-ம் ௵ ஆகஸ்ட்மீ 13உயில் கல்கத்தா நகரத்திலே ரம்பாகான் என்னும், பேட்டையிலுள்ள காயஸ்த ஜாதியைச் சேர்ந்த தத்த குடும்பத்திலே ரமேசசந்த்ரர் பிறந்தார்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் ரமேச சந்த்ரரின் பிதாமஹரான நீலமணி தத்தர் கல்கத்தாவின் காயஸ்தர் மரபுக்குத் தலைவராயிருந்தார். ரமேச சந்த்ரரின் சிறியபாட்டனார் ரஸமய தத்தரென்பார் கல்கத்தா ஸம்ஸ்க்ருதகாலேஜின் 'ப்ரின்ஸிப'லாயிருந்தார். ரஸமயபாபுக்குமுன் வேறெந்த பாரதவாஸியும் இந்த உயர்பதவியில் உத்யோகம் பெறவில்லை. ரஸமயபாபு அதன்பிறகு கல்கத்தா சின்ன கோர்ட்டில் ஜட்ஜானார். ரமேசசந்த்ரரின் பிதாவாகிய ஈசான சந்த்ரர் பங்காளிகளுக்குள் முதல் முதல் டெப்யுடி கலெக்டர் உத்யோகம் வஹித்தவர். அப்போது தான் லார்ட் உவில்யம் பெண்டின்ங்க் என்னும் கவர்னர் ஜெனரல் இந்தியர்களை உயர் பதவியில் நியமிக்கும்படி ஒழுங்கு ஏற்படுத்தினார். அந்த ஒழுங்கின் பயனை முதலில் பெற்றவர் ஈசான சந்திரரே. இங்க்லிஷ் ப்ரெஞ்ச் பாஷைகளிலே இனிமை கவிதை செய்து கீர்த்திபெற்ற தருபாலாதத்தை என்னும் பெண்மணியும் இந்த வம்சத்தில் பிறந்தவளே.

ஈசான சந்த்ரர் தம் உத்யோகத்தை முன்னிட்டு வங்காளத்தின் உள்நாட்டு பாகங்களிலேயே வஸித்து வந்தபடியால், ரமேச சந்த்ரரின் வாலிபப் பருவமானது வங்கநாட்டின் பசுமைகொண்ட நாட்டுப்புறங்களிலேயே கழிந்தது.

தாய் தந்தையர் தேகவியோக மடைந்தபின் ரமேசசந்த்ரர் தம் சிறு தகப்பனாகிய சசிசந்த்ரரின் போஷணையின் கீழ் கல்விப்பயிற்சி செய்யத்தொடங்கினார். சசிசந்த்ரர் இலக்கியத்தில் ஆர்வமுள்ளவர். ரமேசசந்த்ரர் ஆயுளளவும் இலக்கியத்தில் வைத்திருந்த வாஞ்சைக்கு இவரிடத்தில் வளர்ந்தமை ஒரு காரணமாயிருக்கலாமெனத் தோற்றுகிறது.

ரமேசபாபு 1864-ம்௵த்தில் பிரவேச பரீக்ஷையில் தேறினார். அவர் படித்துவந்த வித்யாசாலைக்குள் அந்தப் பரீக்ஷையில் தேறினவர்களுள் அவரே முதன்மையாய் நின்றார். 1866-ம் வருஷத்தில் அவர் எப். ஏ. பரீக்ஷையில் தேறி ஸர்வ கலாசாலையில் இரண்டாவதாக நின்றார்.

1868-ம்௵ மார்ச்மீ 3உயில் ரமேச சந்த்ரரும், ஸ்ரீயுத விஹாரிலால் குப்தரும் தேசபூஜ்யரான ஸ்ரீயுத ஸுரேந்த்ரநாத பானர்ஜி வந்த்யோபாத்யாயரும் இங்கிலாந்துக்கு ப்ரயாணமானார்கள். ரமேசசந்த்ரரும், ஸ்ரீயுத விஹாரிலாலரும் தம்தம் ஸம்ரக்ஷண கர்த்தர்களின் அநுமதிபெறாமலே அவர்களுக்குத் தெரியாமல் நள்ளிரவில வீட்டைவிட்டு வந்துவிட்டார்கள். ஸுரேந்த்ர பாபு மாத்திரம் தம் பிதாவின் உத்திரவு பெற்றே இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். இம்மூன்று நண்பர்களின் உத்தேசமும் அவர்களுடைய வாழ்வின்கனவான் கொண்டிருந்த ஸிவில் ஸர்விஸேயாகும். அம்மூவருடைய வாழ்க்கைக்கனவும் நிறைவேறியது. அவர்களுள் இருவர்—ரமேச பாபுவும் விஹாரிலால் பாவும்—ஸர்க்கார் உத்தியோகத்திலேயே தம் வாழ்க்கையின் பெரும்பாகமான காலத்தைக் கழித்து பெயரும் புகழும் சம்பாதித்தார்கள். வங்காள நாட்டின் நல்லதிருஷ்டத்தினால் ஸுரேந்த்ரநாதர் ஸிவில் ஸர்விஸினின்றும் நீங்கி மாத்ருஸேவையில் அமர்வாராயினார்.

1869-ம் ௵த்தில் ரமேச சந்த்ரரும், விஹாரிலாலும், ஸுரேந்த்ரநாதரும் ஸிவில் ஸர்விஸ் பரீக்ஷையில தேறினார்கள். அந்த வருஷத்தில் ஏறக்குறைய முன்னூறு ஆங்கிலர்கள் பரீக்ஷை கொடுத்தார்கள். ரமேச சந்த்ரர் இந்தக் கடினமான போட்டியில் புகழுடன் தேறி மூன்றாவதாய் நின்றார். ஆங்கில இலக்கியத்தில அவர் ஆங்கில பரீக்ஷார்த்திகளைத் தோல்வியுறச்செய்து எல்லாருக்கும், முதன்மையாய் நின்றார்.

மஹேச குமார சர்மா.

இயற்கை ஆயுதங்கள்

STUDIES IN ANIMAL LIFE
1. NATURAL WEAPONS

இவ்வுலகத்துள்ள ஒவ்வொரு ஜீவப்பிராணியும் தான் வாழ்ந்து ஸுகம் பெறுவதன் பொருட்டு, மற்றப் பிராணிகளோடும், தாவரங்களோடும் ஓயாப்போர் புரிகின்றது என்பது உயிர் நூலார் (Biologists), கொண்ட ஓர் கொள்கையாம். அக்கொள்கை உயிர் நூல் வல்லாரன்றி, மற்றவர்களும் அங்கீகரிக்கத் தக்கது என்பது நம்மைச் சுற்றிலுமுள்ள ஜீவராசிகளையும் அவை செய்யுங் கருமங்களையும் உற்று நோக்கினால் நன்கு விளங்கும். ஈக்களையும் கொசுக்களையும் தமது வலையில் சிக்கும்படி. செய்து முடிவில் தமக்கு இரையாக்கிக் கொள்ளும் சிலந்திப்பூச்சியையும், சிலந்திப்பூச்சி முதலியவற்றைக் கொன்றுதின்னும் கரப்பாம் பூச்சியையும்; கரப்பாம் பூச்சியும் தேளும்,. ஒன்றையொன்று உண்ணவேண்டிச் செய்யும் மிகக் கடுமையான யுத்தத்தையும், அதிற் செயங்கொண்ட தேளும் பல்லியும் முறையே ஒன்றோடொன்று எதிர்த்துச்செய்யும் போரையும், நோக்கியவர் இயற்கையில் எங்கும் இத்தகைய ஓயாப்போர் நடக்கின்றது என்பதை மறுக்கமாட்டார். இப்போர் எதற்காக நடக்கின்றது? மற்றவற்றைக்கொன்று தாம் வாழ்வதற்கே. ஆனால் இவ்விதச்சண்டையில், ஒன்று மற்றொன்றுக்கு உடனே இணங்காது, தன்னாலியன்றவளவு கொடும்போர் புரிந்து முடிவில் தோற்று இரையாகின்றது. இம்மல் யுத்தத்திற்கு உபகரணங்களாவன, இப்பிராணிகள் கொண்ட இயற்கை ஆயுதங்களே. ஈயும் கொசுவும் இறகுகளையும், சிலந்திப்பூச்சியானது தன் வலையையும், கரப்பாம் பூச்சியானது இறகையும் கொடிய பற்களையும், தேளானது இடுக்கிபோன்ற கைகளையும், விஷப்பையையும், பல்லியானது பற்களையும் கடின

மான தோலையும், கொண்டிருக்கின்றன. இங்ஙனம் மற்றப் பிராணிகளும், சில இயற்கை ஆயுதங்கள் பூண்டு வேறு பிராணிகளோடு யுத்தஞ்செய்து, தோற்றும் செயித்தும் காலம் செலுத்துகின்றனவாம். இவற்றைப் பற்றிச் சிறிது கவனித்தால், எவ்வளவுக்கெவ்வளவு ஒரு பிராணியானது சிருஷ்டிப் பொருள்களுள் உயர்ந்ததாக இருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு அதுகொண்ட ஆயுதம் நுணுக்கமானதாயும், விநோதமானதாயும், இருக்கின்றது என்பது புலப்படும். சிருஷ்டிப் பொருள்கள் எல்லாவற்றிலும் உயர்ந்தவன் மனிதனல்லவா? பற்களும் நீண்டு வளர்ந்த நகங்களும், அவன் முதன்முதல் கொண்ட ஆயுதங்களாம். பின்பு சிறு கற்களைக் கையால் வீசியெறிந்தும், அதன் பின்பு அவற்றை வில்லிற் பூட்டி எறிந்தும், தனது எதிரிகளைவென்று வந்தான். நாகரீகம் அதிகரிக்கவே, துப்பாக்கிகளையும் பீரங்கிகளையுங் கண்டுபிடித்தான். இக்காலத்தோ வெடிகுண்டுகளையும், கப்பல்களையுடைக்கும்படி சமுத்திரத்தில் மறைவாக இட்டுவைக்கும் விநோதக் குண்டுகளையுஞ்செய்து ஆண்டுவருகிறான். ஆனால் மனிதன் இத்தகைய அற்புதமானவைகளைச் செய்வதற்கு அவனது புத்தியும் சாதுர்யமும் உதவி செய்கின்றன. செயற்கறிவு மிகக் குறைந்த கீழ்ப் பிராணிகளிலோ, தமக்கு இயற்கையாகவே யுண்டாயிருக்கும் ஆயுதங்களே பீரங்கிகளும், வெடிகுண்டுகளுஞ் செய்யும் வேலைகளைச் செய்கின்றன. சிங்கத்திற்கு மிருகேந்திரன் எனப் பெயரிட்டிருக்கிறது, சரியானதன்றோ? ஏனெனில், எந்தப் பிராணியானது அதன் காலடியோசையைக்கேட்டு நடு நடுங்குவதில்லை? எந்தப்பிராணியானது அதன் உக்கிரமான கர்ச்சிப்பைக் கேட்டுத் திடுக்கிடுவதில்லை? எந்தப் பிராணியானது அதன் பந்தம்போல் எரிகின்ற கண்களையும், கோரமான பற்களையும், பருத்துவளைந்த நகங்களையுங்கண்டு அது வரும்திக்கு விட்டோடி ஒளிவதில்லை? இவ்வண்ணமே, புலி முதலான வேறுமிருகங்களின் பற்களும் நகங்களும் அவைத் தம்மைக் காப்பாற்றிக்கொள்வதன் பொருட்டுக்கொண்ட ஆயுதங்களல்லவா? இன்னுஞ் சிலவற்றில் கொம்பே பேராயுதமாகின்றது. ஆடு மாடுகளிலும், சில வகை மான்களிலும், இக்கொம்பானது உட்புறத்து நீண்டு வளர்ந்த எலும்பினாலும் வெளிப் புறத்து நகம்போன்ற பொருளினாலுமாக்கப்பட்டிருக்கின்றது. கலைமான் முதலியவற்றின் கொம்போ எலும்பினாலாகாததானாலும், பல கிளைகள் கொண்டு அவற்றைப் பாதுகாப்பதற்கேற்ற கருவியாயிருக்கின்றது. இவ்வகைக் கொம்புகள் சில காலமிருந்து பிறகு உதிர்ந்துபோக, வேறு கொம்புகள் அவ்விடத்தே வளரும். காண்டாமிருகத்தின் கொம்பு வெகு கெட்டியும் உறுதியுமானது. அது பல உரோமங்கள் ஒன்று சேர்ந்து அமைந்ததோரங்கமாம். இவ்வித ஆயுதங்களைப் பற்றி வியக்கக்கூடியதொன்றுமில்லாவிடினும், வேறுசில மிருகங்களும், சீவப்பிராணிகளும் வெகு ஆச்சரியமான கருவிகள் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, முள்ளம்பன்றியைப் பாருங்கள். அதனுடம்பிலுள்ள ஒவ்வொரு உரோமமும், ஒவ்வொரு நீண்டு வளர்ந்த கூரிய முள்ளாக மாறியிருக்கின்றது. யாரேனும் அதைத் தொந்திரவு செய்தால் திடீரென்று அம்முட்களை நிமிர்த்திக்கொண்டு எதிரியின் முகந்தேகங்களையெல்லாம் இரத்தமாக்கிவிடும். நமது முள்ளம் பன்றியைப்போலவே ஐரோப்பிய நாடுகளில் ஒரு பிராணி இருக்கின்றது; அதற்கு எய்ப்பன்றி (Hedgehog) யென்றுபெயர்; நமது பெருச்சாளியின் அளவானது. அதுவும் முட்பன்றியைப்போல் தேகமுழுவதும் முட்கள் கொண்டிருக்கின்றது. அது சுபேச்சையாய்த் தோட்டங்களில் உலாவி, பூஞ்செடிகளையும், காய்ச்செடிகளையும், தன்னிஷ்டப்போல் நாசமாக்கும். ஆனால், யாரேனும் அதைப்பார்த்து

அதைப்பிடிக்கமுயன்றால் தன்னுடம்பைத்திடீரென்று பந்துபோல் உருட்டிக்கொள்ள, முட்களெல்லாம் நிமிர்ந்து நிற்கும். அப்போது அதைப் பயமின்றித் தொடுவார் யாருமில்லை.

தென்னிந்திய மலையடிகளில் எறும்பு தின்னி (Ant-eater) என்ற ஒரு பிராணி வசிக்கின்றது. அது உருவத்தில் கீரிப்பிள்ளையைப் போலிருக்கும். சென்னப்பட்டணத்தில் "செத்த காலேஜி" யென்று சொல்லப்பட்டதும், அற்புதப்பிராணிகளும், பொருள்களுஞ் சேகரித்துவைத்து மிருக்குஞ் சாலையில் இறந்துபோன இப்பிராணியின் பஞ்சடைத்த உருவங்கள் இரண்டு மூன்றுவைத்திருக்கின்றார்கள். அதன் தேகமெல்லாம், தட்டையான சிறுசிறுசெதிள்கள்மூடிக் கொண்டிருக்கின்றன. அச்செதிள்கள் ஒவ்வொன்றும் முதன் முதல் உரோமமாயிருந்து பிறகு செதிள்களாகமாறி அப்பிராணிக்குத் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஏற்பட்டதோர் ஆயுதமாம். அப்பிராணியை யாரேனும் எதிர்த்தால், முகத்தை நடுவில் வைத்துக்கொண்டு உடம்பை ஒரு சுருள்போல சுற்றிக்கொள்ளும். அந்நிலைமையிலிருக்குங்கால் துப்பாக்கியாற் சுட்டாலும், அப்பிராணிக்கு யாதொரு அபாயமுமுண்டாகாது. அச்செதிள்கள் யாவுமொன்றாய்ச் சேர்ந்து அதற்கு ஓர் இரும்பாற் செய்த கவசம்போல் உதவுகின்றது. எறும்புதின்னியில் செதிள்கள் தனித்தனியாய்ப் பிரிந்து நிற்கின்றன. ஆனால் ஆமையின் ஓட்டிலோ அத்தகைய செதிள்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு ஆமை சிறிதாயிருக்கும் போதே ஒரு கெட்டியான கூடாகப் பின்னப்படுகிறது. தலையுங்கால்களு மட்டும் வெளிவரும்படி அக்கூட்டில் துவாரங்களிருக்கின்றன. யாரேனும் எதிர்த்துத் தொந்திரவு செய்ய முயல்வரேல், தலையையுங் கால்களையுஞ் சரேலென்று உள்ளேயிழுத்துக்கொள்ள, தலையின்மேலும் கால்களின் நுனியிலும் பலமாக அமைந்திருக்குஞ் செதிள்கள் அத்துவாரங்களைச் செம்மையாய் மூடிக்கொள்ளும். அச்சமயத்து அந்தக் கூடானது பெரும் மதிள்கள் கொண்ட கோட்டையினும் வலுத்ததாய், யாவராலும் வெல்லக் கூடாததாகும்.

இன்னுஞ்சில ஜீவப்பிராணிகள் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேறுவிதக் கருவிகள் கொண்டிருக்கின்றன. தேரை யென்னும் ஒருவகைத் தவளை அதைத் தொட்டவுடன் ஒருவித நீரைப்பீச்ச, அதைக்கண்டு பயந்து தேரையைவிட்டு விலகுவார் எத்தனையோபேர். இங்ஙனமே, பீரங்கி வண்டென்று பெயர்கொண்டு நமது வீடுகளில் இராக்காலங்களில் சுவற்றிலோரமாய் ஓடி நடமாடும் சிறுவண்டொன்றைத் தொட்டால் அதன் பின்புறத்தினின்று ஒரு வெடிச்சத்தங் கேட்கும். அது காரணம்பற்றியே அதற்குப் பீரங்கி வண்டென்று பெயர். அச்சத்தம் ஒரு திராவகம் வெளிவருவதா லுண்டாகின்றது; அத்திராவகம் சிறுபூச்சிகள் முதலானவற்றை உடனே கொல்லும். மற்றப் பிராணிகள் அச்சத்தத்தைக் கேட்டும், அத்திராவகத்தின் நாற்றத்தை மோந்தும் விலகி ஓடிப்போம். இதுவுந் தவிர திராவகம்பட்ட இடமெல்லாம் வெந்துபோம். பாம்புந் தேளும் விஷங்கொண்டிருப்பதும் தம்மைக் காப்பாற்றிக்கொள்வதற் கேற்பட்ட கருவியேயாம். இவ்வண்ணமே வேறு சில பிராணிகள் வேறுவித சாதனங்கள் கொண்டிருக்கின்றன. அவற்றைப்பற்றிப் பின்னொரு சமயம் விவரித்தெழுதுவோம்.

வி. நரஸிம்மய்யங்கார், பி.ஏ., எம்.எல்.

கைத்தொழிலல்லது மெய்த்தொழிலில்லை

NO INDUSTRY : NO WORK

ஒரு தேசம் முன்னுக்கு வரவேண்டுமானால், அதிலுள்ளவர்களுக்கு ஞானம், ஆரோக்யம், பணம் மூன்றும் வலுத்திருக்கவேண்டும். இம்மூன்றில் ஒன்று குறைந்தாலும் தேசத்திற்கு ஹானியுண்டாகும். நாகரீகத்தில் பெருமையடைந்த மேனாட்டுத் தேசங்களிலும் கீழ்நாட்டுத்தேசங்களிலும் புதிய கண்டத்திலுள்ள தேசங்களிலும் ஞானம் பெருக்கக் கலாசாலைகளும், ஆரோக்யமும் தேகவலிமையும் ஓங்க தேகப்பயிற்சி சாலைகளும், வியாபாரம் பிரபலப்பட அதற்கென்றே வித்யாசாலைகளும் நிலைநாட்டி ஜனங்களும் ராஜாங்கத்தாரும் ஒருங்கு கூடி முயன்று வருகிறார்கள். முயற்சி விசேஷத்தால், இரண்டொரு தேசம் தவிர ஐரோப்பா முழுமையும், அமெரிக்காவில் சேர்ந்த மாகாணங்களும், கனடாவும், ஆசியாவில் ஜப்பானும் இக்காலத்தில் நாகரீகத்திலும் பணத்திலும் பிரபலப்பட்டிருக்கின்றன. உலகத்திலுள்ள எல்லா தேசங்களிலும் மேலோங்கியது அங்கில தேசம். அங்கிலேயர்கள் உலகம் முழுமையும் பரவி அநேக தேசங்களைக் கைப்பற்றி வெகு சீர்திருத்தங்கள் செய்து நன்கு ஆண்டுவருகிறார்கள். அத்தேசத்திய வியாபாரிகள் வியாபாரச் சக்கிரவர்த்திகளாயும் பூலோகத்தில் பிரத்தியக்ஷமான குபேரர்களாயும் விளங்குகிறார்கள். அவர்களுடைய கலாசாலைகளுக்குப் பலவித நூல்களின் மேற்புறமான படிப்பைப் படிப்பதற்காகப் பல இதர தேசங்களிலிருந்து கல்விமான்களான சிறுவர்கள் அனுப்பப்பட்டு அவரவர்கள் படிப்பதற்கு எடுக்கப்பட்ட நூல்களில் கை தேர்ந்தவர்களாய் வருகிறார்கள். ஆங்கிலேய ராணுவ முறைமைக்கு நிகரான ராணுவ முறைமை உலகமெங்குமில்லை. அவர்கள் வியாபார மரக்கலங்கள் ஓடாத கடலில்லை. அவர்கள் முயற்சிக்குச் சாத்தியமாகாத கருமமில்லை.

இவ்விதமாய் எவ்விதத்திலும் தேர்ச்சியடைந்த பெருமை பெற்றோங்கிய ஆங்கிலேயர்களுடைய ஆளுகையாலுண்டாகும் நன்மைகளை நம்மாரிய நாடு அடையப் பெற்றிருப்பது நம்மவர்களுடைய பாக்கியமென்றே சொல்லவேண்டும். இவ்வுண்மை நம் தேசசரித்திரத்தைப் படித்த கல்விமான்களுக்குப் புலப்படும். இக்காலத்தில் ஆங்கில தேசம் எப்படி முதற்றரமென்று மொழியும்படி மாக்ஷிமை தங்கி விளங்குகின்றதோ அப்படியே, நம்தேசமும் சுமார் ஒரு ஆயிரம் வருஷங்களுக்கு முன்வரையில் அக்காலத்தில் நாகரீகமடைந்திருந்த எல்லா தேசங்களிலும் எவ்விதத்திலும் சிறப்புற்றோங்கியே விளங்கிவந்தது. பிற்காலத்தில் இந்நாட்டிற்குப் பல விஷயங்களிலும் வலிமை குறைந்ததற்குக் காரணம் இந்துதேச சரித்திரம் படித்த வித்வான்களுக்குத் தெரிந்திருக்கும். இவ்விடத்தில் அக்காரணங்களைப் பரிசோதிப்பது அவசியமில்லை.

ஆங்கிலேயர்கள் வந்ததால் இந்துதேசத்திற்கு க்ஷேமம் பிறந்ததென்று சொல்லலாம். அரசன்போலவே பிரஜைகளும் இருப்பார்கள் என்பது உண்மையானால், ஆளுபவர்களுடைய குணவிசேஷங்களெல்லாம் ஆளப்படுகிறவர்களுக்கும் காலகிரமத்தில் வரவேண்டியது அவசியமே. இதற்கு அத்தாக்ஷியாக மேனாட்டுப்படிப்பு, ஜாதிவர்ணாசிரம வித்தியாஸமில்லாமல் எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்யப்பட்டுக் கல்விக்களஞ்சியமாய் ஆயிரக்கணக்காய் அனேகம்பேரைச் செய்திருப்பதே போதும். இதைத்தவிர நமது துரைத்தனத்தார் தேக ஆரோக்கியத்திற்கு வைத்தியசாலைகளும் நீர்ப்பாய்ச்சல்களுக்குக் கால்வாய்களும் ஜனப்போக்குவரவிற்கு ரஸ்தாக்களும் இருப்புப் பாதைகளும் இன்னும் பலவித நன்மைகளும் புரிந்து வருகின்றார்கள். மேலும் நகரங்களினுடையவும் கிராமங்களுடையவும் ஆளுகையை நமக்கே அளித்து ராஜ்யம் நிர்வஹிக்கும் விஷயத்தில் நம்மவர்களுக்கு ஞானப்பெருக்கு உண்டாக்கிக்கொண்டு வருகிறார்கள். இப்பொழுது தான் இந்திய ராஜப்பிரதிநிதியின் சபையிலும், இராஜதானிகளாகிய மாகாணச்சட்ட நிர்மாண சபையிலும், உத்தியோகத்திலில்லாத பிரபுக்களின் தொகை அதிகப்படுத்த சட்ட நிர்மாணம் பண்ணப்பட்டுச் சக்கிரவர்த்தியவர்களின் உத்திரவுபெற்று இச்சைப்படி நூதன சபைகள் கூடி இருக்கின்றன.

இதுவரையில் ஆங்கிலேயர்களால் படிப்பிலும், நடுநிலைதவறாது நீதியிலும், ஜீவரக்ஷணத்திலும், சொத்து ரக்ஷணத்திலும், கிருஷிவிருத்தியிலும், இவை முதலான பலமார்க்கங்களிலும் நம்மவர்களுக்கு அபிவிருத்தி உண்டாயிருக்கிறது. நாம் அடைந்திருக்கும் சீர்திருத்தங்கள் பலவாயிருப்பினும் இன்னும் அடையவேண்டியவை இதுவரையில் நடந்திருப்பதைவிட பதின்மடங்காயிருக்கின்றன. அவைகள் காலகிரமத்தினால் கிடைக்குமே யொழிய ஒரே க்ஷணத்தில் எதிர்பார்க்கமுடியாது. ஏனெனில், சக்தி பெருகப்பெருகத்தான் புதிய அதிகாரங்களை நிர்வஹிக்கவும் புதிய சீர்திருத்தங்களைப் பெறவும் நாம் யோக்யர்களாவோம். ஈசுவர கடாக்ஷத்தால் அரசுபுரியும் ஆங்கிலர்களுக்கும் நமக்கும் நட்பு பலப்பட்டு இருவரும் ஒருமையாய் வாழ்வதினால் இந்து தேசம் மேன்மேலும் ஓங்கி வளர்ந்து உலகத்திலுள்ள எல்லாநாகரீகம் மிகுந்த தேசங்களுக்கெல்லாம் நடுநாயகமாய் விளங்குமென்பதற்கு ஐயமில்லை.

கருணைக்கடலாகிய கடவுளின் காருண்யம் ஆரியாவர்த்தத்திய ஜனங்களுக்கு விசேஷமாயிருப்பினும், அதையே நம்பி கையைக் கட்டிக்கொண்டு அஸமஞ்சர்களாய் நாம் ஜபித்துக்கொண்டிருப்பது சரியோ. அரசுநிலைமை நடாத்தும் ஆங்கிலேயர்களுடைய நம்மவர்களின் க்ஷேமத்தைக் குறித்த பிரயத்தினங்கள், சீக்கிரம் நிறைவேற நாமும் ஒருங்குசேர்ந்து முயற்சி செய்வது நம்கடமை யல்லவா? மரமேறுபவன் தான் உச்சிபோகும் வரையில், கீழிருப்பவன் தன்னைத் தாங்கியிருக்க வேண்டுமென்று எதிர்பார்த்தால் நடக்குமா? துரைத்தனத்தார்கள் செய்யும் உதவியைக் கொண்டும் நம் சொந்த பிரயத்தனத்தினாலும் எந்தெந்த விஷயங்களில் நாம் குறைவு பெற்றிருக்கிறோமோ, அவ்விஷயங்களிலெல்லாம் நாம் முன்னுக்கு வரும் வழியைப் பார்க்கவேண்டும்.

1857-ம் வருஷத்தில் சர்வகலா ஸங்கங்கள் ஏற்பட்ட காலம் முதற்கொண்டு தற்காலம் வரையில் ஆங்கிலபாஷையை எழுதவும் பேசவும் நம்மவர்களுக்குச் சக்தி உண்டானதும் தவிர மேனாட்டில் பிரபலமடைந்த சிற்சில சாஸ்திரங்களிலும் ஞானம் மிகுந்து கொண்டிருந்தது. இதை இவ்விடத்தில் விஸ்தரிக்க வேண்டியது அவசியமில்லை. இதுகாறும் நம்மவர்கள் தேர்ச்சியடைந்த மேனாட்டுப் படிப்பெல்லாம் இத்தேசத்தாருக்குக் கைத்தொழிலாவது வியாபாரத்திலாவது மேன்மையடையச்செய்ய உபயோகப் படாததாயிருந்தது. இக்காரணத்தினால்தான் நம்மவர்களில் அநேகர் ஆங்கிலர்களைப்போல் இங்கிலீஷ் பேசுவார்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் கைபோல் நம்மவர்கள் கைவேலை செய்யாது. ஆங்கிலேயர்களைப்போல் எழுதுவார்கள். ஆனால் அவர்கள் ஒருங்குகூடி வியாபாரத்தில் ஓங்குவது போல் இவர்களுக்கு ஓங்கமாளாது. ஆங்கிலேயர்களைப்போல் நடை உடை பாவனைகளில் நடிப்பார்கள். ஆனால் அவர்களைப்போல் பணம் பெருக்கடைந்து சுகமடையத் தெரியாது.

படிப்பிற்குப்பயன் தருமம், அர்த்தம், காமம், மோக்ஷமென்ற நான்காகும். தருமம், காமம், மோக்ஷமென்ற இம்மூன்றும் அர்த்தத்தைக்கொண்டே கிடைக்கக் கூடியன,

பொருளில்லாதவரையாவது பொருளில்லாத தேசத்தையாவது ஒருவரும் பொருட்டாய் மதியார்கள். இதனாலேதான் "பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும், பொருளல்லதில்லை பொருள்" என்று அருளினார் தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவ நாயனார். ஒரு தேசம் பொருளில் மேன்பட மூன்று வழிகளுண்டு. முதலாவது அத்தேசத்திலுள்ளவர்களுக்கு வேண்டிய ஸாமான்களை அவர்களே செய்துகொள்ள வேண்டும். இதனால் அத்தேசத்திய பணம் சாமான்களுக்கென்று வெளியில் போகாது. சுதேசிகள் சம்பாதித்த பணம் தேசத்திலேயே தங்கும். இரண்டாவது பிறதேசத்துக்குச் சுதேச சாமானை யனுப்பி அதனால் பிறதேசத்தார் பணத்தைச் சுதேசத்திற்கு வரும்படி செய்ய வேண்டும். மூன்றாவது ஒரு தேசத்தில் பணம் சம்பாதிக்க எவ்வித ஹேதுக்கள் இருந்தபோதிலும், அந்த ஹேதுக்களை யெல்லாம் அத்தேசத்தவர்கள் தங்களுக்குப் பயன்பட உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். இரண்டாவது வழிக்கு ஸௌகரியமில்லாவிட்டாலும், முதலாவது வழியையும் மூன்றாவது வழியையுமாவது ஒருதேசத்தினவர் கைப்பற்றாவிட்டால், தேசத்திற்கு க்ஷேமக் குறைவுண்டாய்விடும். கீழ் நாட்டுத் தேசங்கள் தற்காலத்தில் க்ஷேமக் குறைவடைந்ததற்கு இதுவே காரணமாம். மேனாட்டுத் தேசங்களும், அமெரிக்காவில் சிற்சில தேசங்களும், க்ஷேமப் பெருக்கடைந்ததற்கும் இதைத் தவிர வேறு காரணமில்லை.

ஏழைத்தனமடைந்து வருந்துமோர் தேசம் பிறதேசங்களுக்குச் சாமான்கள் அனுப்ப முயல்வதற்கு முன்பாக தனக்கு வேண்டிய சாமான்களைத் தானே செய்துகொள்ள முயலவேண்டும். ஒவ்வொரு தேசத்திற்கும் வேண்டிய சாமான்கள் விளைபொருள்கள், கைத்தொழில் சாமான்கள், என இருவகையாம். விளைப்பொருள்கள் கிருஷியால் விருத்தியடையும். இதர சாமான்கள் கைத்தொழிலால் உற்பத்தியாகும். கைத்தொழிலா லுண்டுபண்ணப்பட்ட ஸாமான்கள் வியாபாரத்தால் மிகுதியடைய வேண்டும். வியாபாரியும் முதலுமில்லாமல் கைத்தொழில் விசேஷமாய் அபிவிருத்தியடைய இடமில்லை. ஆகையால் கிருஷி, வாணிஜ்யம் என்றஇரண்டும் ஒருதேசத்திற்குப் பொருள்சம்பாதிக்க இரண்டு கைகள்போலும். இவைகளை மேன்படச் செய்யும்படிப்பு, தனார்ஜன விஷயத்தை நுட்பமாய்ப் பார்த்து கிருஷி, வாணிபமென்ற கைகளைத் தன் தன் கருமத்தில் பிரவேசித்து நடப்பிக்க கண்கள் போலும். ஆகையால் ஒரு தேசம் நாகரீகத்தில் ஓங்கிய இக்காலத்திய பலதேசங்கள் போல முன்னுக்கு வர கிருஷி, வாணிபம் இவைகளைக் குறித்தபடிப்பு, இவைகளில் மேம்பாட்டை அடையவேண்டும். கிருஷி, வாணிபம் இரண்டும் கைத்தொழிலில் அடங்குமாகையால், ஒரு தேசத்தின் க்ஷேமத்திற்குக் கைத்தொழிலும் அதைச்சேர்ந்த படிப்பும் இன்றி அமையாதவையாம். கைத்தொழில் மேன்பாடு அடைந்தாலொழிய, ஒரு தேசத்திய பணம் அதிலேயே தங்கி நிற்காது. புதிய பணமும் சேராது. கைத்தொழிலை அலக்ஷியம் பண்ணும் தேசம் வறுமையாலும், பஞ்சத்தாலும் வருந்தும். பணமில்லாதவனுக்கு இவ்வுலகமில்லை யென்பது பிரத்யக்ஷமாய்த் தெரிந்தவிஷயம். தனத்தினாலல்லது தருமத்திற்கு ஸாதனமில்லை யாகையால், வறுமையால் வருந்துவோர்க்கு அவ்வுலகுமில்லை. உழைப்பினாலும், கைத்தொழிலினாலும் எதுவும் பொருந்தும். இது காரணம்கொண்டே "கைத்தொழிலல்லது மெய்த்தொழிலில்லை" யென்று இவ்வியாஸத்திற்குப் பெயரிட்டோம். வறுமையாலும் பஞ்சத்தாலும் வருந்தும் இந்து நாட்டிற்குச் சுகம் விளையவேண்டுமானால் கைத்தொழிலைப் பெருகச் செய்வது நம் முதற்றொழிலாகையால், இது விஷயமாய்ச் சமயம் வாய்த்தக்கால் வியாஸங்கள் இப்பத்திரிகையில் எழுதுவோம்.

ஏ. பஞ்சாபகேசய்யர், எம்.ஏ., எல்.டி.

10 MAR 1910 MADRAS

இத்தேசத்தின் பாசன முறைகள்

IRRIGATION IN INDIA

வேளாண்மையை உயிர்த் தொழிலாய்க் கொண்ட நமது தேசத்தில் ஜனங்களின் க்ஷேமத்திற்குப் பயிரிடும் முறைகளும் அவற்றின் உதவிகளுமே முக்கியகாரணமன்றோ? இப்போதுள்ள அமைதியாலும் துரைத்தன நன்முறைகளாலும் ஜனத்தொகையின் பெருக்கத்திற்கு இடையூறாக ஏற்றப்போயின. குடிகள் அதிகமாக அதிகமாகப் பயிரிடப்படும் நிலங்களும் அதிகமாகின்றன. ஏரையே காணாத வறண்ட பூமியைக்கூட பயிர்செய்து பிழைப்பதற்கு முயலுகிறார்கள். எத்தேசத்திலும் முதல் முதல் பயிர்த்தொழிலுக்குச் சுலபமான நிலங்களையே பயிரிடுகிறார்கள். ஜனங்களின் பெருக்கத்தால் ஏராளமான உணவுப்பொருள்களுக்குக் கிராக்கி ஏற்பட் ஏற்பட, ஸ லபமான பாசன வழிகளில்லாத நிலங்களையும் பயிர்செய்ய ஆரம்பிக்கிறார்கள். எத்தேசத்திலும் நிலங்களின் பரப்பு வரயரைக்குட்பட்டதே. பிணி, பஞ்சம், போர் முதலான கஷ்டங்களில்லாவிடின் பிரஜா விருத்திக்கு எல்லையே இல்லை. இக்காரணம்பற்றியே ஜனங்களின் பெருக்கத்தால் வேளாண்மைக்கு வேண்டிய சௌகரியங்களைப் பெறாத நிலங்களும் சாகுபடி செய்யப்படுகின்றன.

இவ்விதம் விளைபொருள்களுக்குக் கிராக்கி உண்டாக உண்டாக, ஆறு, குளம், ஏரி முதலிய ஜலாசயங்களுக்கு வெகு தூரத்திலிருக்கும் நிலங்களைக்கூட ஒருவாறு பயிர் செய்ய வழிகளைத் தேடுகிறார்கள். மேலும் இத்தேசத்தில் சென்ற நூறு வருஷங்களாகப் பெருகிவரும் அமைதியால் ஜனப் பெருக்கத்திற்கு எவ்விதமான இடையூறுகளும் ஏற்படவில்லை. ஆகையால் மலை நாடுகளிலும் காடுகளிலுமுள்ள நிலங்களைக்கூட பயிர் செய்ய உபாயங்களைத் தேடுகிறார்கள். அன்றியும் நமது நாட்டில் மேகத்தையும் ழையும் நம்பிக்கொண்டு நிலத்தைப் பயிரிடுத மடைமையாகும். இப்பெரிய கண்டத்தில் மற்கு வடகிழக்கு நாடுகளில் ஏராளமான ம ழபெய்கின்றது. இத்தேசத்தின் மத்தியிலுள் சில பாகங்களில் திக் விஜயம் செய்யும் வீர வுடைய படையைப்போல் வரிசை வரிசைய க ஆகாய மார்க்கமாய் விரைந்து செல்லும் மேகங்களைக் கண்குளிரப் பார்ப்பதே பெரும் பனாக விருக்கின்றது. வடமேற்கு பாகங்க ல் இந்தக் காட்சியுமில்லை. ஆகையால் செல்வவ ன்களுடைய பொருள் ஏழைகளுக்கும் பய ர் படுவதுபோல், மழை மிகுதியாயுள்ள தே ற்கு வடமேற்கு பாகங்களிலுள்ள மேட்டுப் பூமிகளின் ஜலாசயங்கள் மற்ற விடங்களுக்குப் உபயோக மாகின்றன.

ஆகை ால் இப்பெரிய கண்டத்தில் தொன்று தொட்டு பாசன முறைகளைக் கவனிப்பதும், திறமைப் படுத்துவதும், முக்கிய அரசியல் கடமைக ாகவே இருந்து வருகின்றன. ஜலாசய ங்களைக் கட்டலும், கால்வாய் குளங்களை வெ டலும், பாசன முறைகளைக் கவனித்தலும் த கால சுகத்திற்கும் பிற்கால சுகத்திற்கும் கா ணமான முக்கிய தருமங்களென்றே குடிகளு அரசர்களும் நினைத்து வந்தார்கள். இவ்வண் ணமே இப்போதுகூட துரைத்தனத்தின் வ ப த்தின் ஒருபகுதியானது இத்தேசத்துள்ள ஜ லாசயங்களைப் பலப்படுத்தவும், கால்வாய்களை சீர்படுத்தவும் உபயோகமாகின்றது. சற்றேற குறைய 70 கோடி ரூபாயை இவ்வழியில் செலவிட்டிருக்கிறார்கள். மேன்மேலும் அ க்கப்பணத்தை இவ்விஷயத்தில் செலவிட ண்டுமென்றும் அவாவுற்றிருக்கிறார்கள்.

மேட் நிலங்களிலிருந்து தாழ்ந்த பூமிக்கு ஜலத்தை க்கொண்டு வருவதுமல்லாமல், பள்ள பூமியில ிருந்து மேட்டுப் பாகங்களுக்குத் தண்ணீரை ழப்புகிறார்கள். இவ்வழியில் குடிகளும் அ ரத்தனத்தாரும் வெகு ஊக்கத்தைக் காண்பி ிருக்கிறார்கள். அநேகவிடங்களில்

இறைகூடை, ஏத்தம், கபிலை, திருகு ஏத்தம் முதலிய ஸாதனங்களைக்கொண்டு கிணறுகளினின்றும் ஆறுகளினின்றும் ஜலத்தை எழுப்பப் பலர் கண்டிருக்கலாம். இத்தேசத்தின் வடபாகங்களில் படத்திற்காட்டிய ஸாதனங்களும் உபயோகமாகின்றன. ஆயினும் இவ்விதஸாதனங்கள் நீரைச் சிறிது உயரந்தான் எழுப்பக்கூடும். மேலும் ஏராளமான ஜலத்தை இவ்விதம் எழுப்பமுடியாது. ஆகையால் சிறந்த யந்திர ஸாதனங்களைக்கொண்டும் அணை, அணைக்கட்டு முதலான தடைகளாலும் ஏராளமான நீரை எழுப்பி, இவ்விதமான ஜலாசயங்களினின்றும் கால்வாய்கள் வழியாய் வெகுதூரத்திலிருக்கும் நிலங்களுக்குக் கூட நீரைப் பாய்ச்சுவது துரைத்தனத்தாரின் கடமையாய் விட்டது. ஆகையால் கோடிக்கணக்கான பணத்தைப் பாசனமுறைகளிலும் ஸாதனங்களிலும் செலவு செய்து, வேளாண்மையில் அமர்ந்துள்ளோர்களுக்கு உதவி புரிவது அடிக்கடி நேரிடும் பஞ்சத்துன்பத்தைக் குறைக்குமன்றோ?



ஜலாசயங்களின் அமைப்பும் பாசனமுறைகளும் பற்பல விடங்களில் பற்பல விதமாய் இருக்கின்றன. இந்தியாவின் வடமேற்கு பாகத்தில் ஸிந்து நதியிலும் அதன் உபநதிகளிலும் ஏராளமான வெள்ளம் சிலமாதங்களில் பெருகுகின்றது. இப்படிப் பெருகும்போது, இரண்டு பக்கங்களிலும் மேடான கரைகளில் வெட்டப்பட்ட கால்வாய்களின் வழியே ஜலம் ஓடி வெகு தூரத்திள்ள நிலங்களுக்குப் பாய்கின்றது. இவ்விதம் ஜலம் பெருகும்போது மாத்திரம் உபயோகப்படும் கால்வாய்களுக்கு வெள்ளக் கால்வாய்களென்று (Inundation Canals) சொல்லலாம். இம்மாதிரியான பாசனமானது எப்போதும் நம்பத்தக்கதில்லை. வெள்ளம் பெருகாவிடின் இவைகளால் நிலங்களுக்கு எவ்விதமான பிரயோஜனமுமில்லை. ஆகையால் மே (சித்திரை) மாதம் முதல் ஸெப்டம்பர் (ஆவணி) மாதம் வரையில் வெள்ளம் பெருகும் காலத்தில் மட்டும் இந்தக் கால்வாய்கள் பாசனத்திற்கு உபயோகப் படுகின்றன. சற்றேறக் குறைய 45 லட்சம் ஏகராக்கள் இக்கால்வாய்களால் பாய்ச்சப்படுகின்றன.

இந்தியாவின் மற்றபாகங்களில் ஆறுகளின் குறுக்கே அணைகளைக்கட்டி, ஜலத்தைத்தேக்கிப் பக்கங்களில் வெட்டப்பட்ட கால்வாய்களின்வழியே அதனைப்பாய்ச்சி நிலங்களுக்கு உபயோகமாகச் செய்கின்றார்கள். அநேகமாய் இம்மாதிரியான கால்வாய்கள் ஜீவநதிகளைப்போல் எப்போதும் பிரவாஹமுள்ளனவா யிருக்கின்றன. கங்கை, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி முதலிய தீரங்களில் இக்கால்வாய்கள் பெரும்பாலும் உள்ளன. ஆங்கிலேய அரசியலுக்கு வெகு காலம் முந்தியே பிரூஸ் டோக்லக், ஆக்பர், கிருஷ்ணராயர் முதலான அரசர்கள் கால்வாய்களை உண்டாக்கிக் குடிகளுக்கு அருள்புரிந்தார்கள். இக்காலத்திலும் கால்வாய்கள் அணைக்கட்டுகள் முதலான உபாயங்களைப் பார்ப்பவர் வியக்கும்படி செய்துவருகிறார்கள். எங்கவிடத்தில் இரண்டு மலைகளுக்கு நடுவே குறுகலான வழியில் நதி வெளிப்படுகின்றதோ அந்த விடத்தில் ஸாதாரணமாக அணையைக் கட்டுகிறார்கள். ஆற்றின் அகலத்தையும் ஜலத்தின் பெருக்கத்தையும் கணக்கிட்டு 15-அடி முதல் 160-அடிவரையில் உயரமாய் அடியில் அகலமாயும் மேலே போகப்போக அகலக்

குறைவாகவும் அணைகளை அமைக்கிறார்கள். இவ்விதமாகவே மதுரைக்குச் சமீபத்தில் பேராற்றின் அணையையும், மைஸூர் மாகாணத்தில் மாரிகணவாய் அல்லது வேதவதியின் அணையையும் அநேக ஆச்சரியமான யந்திர ஸஹாயங்களைக்கொண்டு கட்டி உபயோகமற்று ஓடிக்கொண்டிருந்த ஜலத்தை வளமுள்ள நிலங்களுக்குப் பிரயோஜனப்படுத்தி யிருக்கிறார்கள். இவைகளுக்குச் செலவு செய்த ஏராளமான பொருள் வீணன்று. தொன்றுதொட்டு நீரைக் காணாத வறண்ட பூமியெல்லாம் இச் சிறந்த உபாயங்களாலேயே மனிதர்களுக்கு உபயோகத்திற்கு வரவேண்டும். இக்காரணம்பற்றியே குளங்கள் ஏரிகள் முதலான ஜலாசயங்களைப் பலப்படுத்துவதும், பழைய கால்வாய்களைப் புதுப்பித்தலும், புதிய கால்வாய்களை வெட்டலும், வேளாண்மையையே பெரும்பாலும் நாடிவருகிற குடிகளுக்குப் பாசன முறைகளில் சகாயம் செய்வதும், இத்தேசத்தில் அரசுபுரிவோர்களுக்குச் சிறந்த கடமைகளென்றே கொள்ளவேண்டும்.



மற்றெல்லா மாகாணங்களைவிட நம்முடைய மாகாணத்தில் பாசன முறைகளை வெகுகாலமாகவே கவனித்து வருகிறார்கள். கிருஷ்ணா, கோதாவரி, காவேரி முதலான நதிகளின் தீரங்களில் அநேக அணைக்கட்டுகளாலும் கால்வாய்களாலும் சற்றேறக்குறைய 24-லட்சம் ஏகராக்களைப் பாய்ச்சுகிறார்கள். அநேக விடங்களில் பழைய கால்வாய்களையும் அணைகளையும் துரைத்தனத்தார்கள் புதுப்பித்திருக்கிறார்கள். இன்னும் இவ்வழியில் செய்யவேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கின்றன. பல்லாரி, அநந்தபுரம், கர்நூல், கடப்பை, நெல்லூர் முதலான ஜில்லாக்களில் பாசன ஸாதனங்களில்லாமல் வெகு விசாலமான நிலங்களெல்லாம் மனிதர்களுக்கு உபயோகமில்லாமல் தரிசாகக் கிடக்கின்றன. இவற்றைக்கூட துங்கபத்திரா நதியினின்றும் கால்வாய்களை வெட்டி வேளாண்மைக்கு உபயோகமாகச் செய்யவேண்டுமென்று முயன்றுவருகிறார்கள்.

ஸ்வதேச ராஜ்யங்களிலும் இவ்வண்ணமே செய்து வருகிறார்கள். இவற்றுள் மைஸூர் ராஜ்யம் சிறந்ததென்றே சொல்லவேண்டும். இந்நாட்டில் சற்றேறக்குறைய நாற்பதினாயிரம் குளங்களிருக்கின்றன. உயர்ந்த விடத்திலுள்ள குளங்கள் நிரம்பினவுடன் அதிக ஜலம் தாழ்ந்த குளங்களிற் பாய்ந்து இவைகள் நிரம்பினவுடன் இன்னும் தாழ்ந்த குளங்களும் நிரம்புகின்றன. இவ்விதம் குளங்கள் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் கணவாய்களின் வழியே ஓடுகிற நதிகளைப் பலமான அணைகளால் தடுத்து அவற்றின் ஜலத்தைத் தேக்கிப் பாசனத்திற்கு உபயோகிக்கிறார்கள். நிஜாம் ராஜ்யத்திலும் சென்ற இருபது வருஷங்களுக்குள்ளாக ஏழாயிரம் குளங்களைச் செப்பம் செய்திருக்கிறார்கள்.

இம்மாதிரியான பாசன முறைகளுமேற்பட்டு, விளைபொருள்களும் இருப்புப்பாதைகளின் வழியே பலவிடங்களுக்கும் உபயோகப்பட்டு வர வர, பஞ்சத்தினாலுண்டாகும் துன்பம் நீங்குமென்றே நினைக்கவேண்டும்.

டி. எஸ். சுப்பிரமணிய அய்யர், எம்.ஏ., எல்.டி.

இயற்கை அற்புதங்கள்
WONDERS IN NATURE

XIII. காற்றுகள்
WINDS

வாயுவில் அசைவு ஏற்பட்டால் அதற்குக் காற்று என்று பெயர். வாயுவில் அசைவு ஏற்படக் காரணம் என்ன? வாயு ஓரிடம் இருந்து வேறோரிடம் ஓடும் தன்மையுடையது. இது கண்ணுக்குப் புலப்படாததால் இதுபோன்ற ஓடும் தன்மையை உடைய தண்ணீரை எடுத்துக்கொண்டு அதில் சில சோதனைகள் பார்த்து அவைகளின் முடிவை வாயுவின் விஷயத்தில் பொருத்திப் பார்ப்போம். ஒரு பாத்திரத்திலிருக்கும் தண்ணீரைக் கையால் சுற்றிவிட்டால் அதில் அசைவு ஏற்படுகிறது. இதுபோன்றது தான் விசிறி முதலியவைகளால் வாயுவில் சலனம் ஏற்படுவது. இதில் விசிறியால் வாயுவை ஒருபக்கம் தள்ள, தள்ளப்பட்ட இடத்துள் ஓடும் தன்மையை உடைய வாயு வந்து மூடிக்கொள்கிறது. ஆனால் வாயுவில் இடம் ஏற்பட்ட இடங்களில் எல்லாம், வாயு இவ்வாறு ஓடிவந்து நிரப்புகிறது என்று சொல்லமுடியாது. முன் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள பாதரஸ வாயு சக்தி அளவையிலிருந்து 30-அங்குலத்திற்குமேல் ஏற்படும் இடத்துள் வாயு வந்து புகுவதும் இல்லை.* பாதரஸத்தை ஏற்றி நிரப்புவதும் இல்லை. ஆதலால் இடம் உண்டாவதால் மாத்திரம்தான் வாயுவில் அசைவு ஏற்படும் என்பதை ஸாதிக்கமுடியாது.

தண்ணீரில் இன்னொருவிதத்திலும் அசைவை உண்டாக்கலாம். ஓர் பீச்சாங்குழலை எடுத்து உபயோகப்படுத்தினால் இவ்விதம் நன்றாகவெளியாகும். தண்ணீர் நிறைந்த பீச்சாங்குழலின் அழுந்து கோலை அமுக்கினால்தான் அதன் மூக்கின் வழியாகத் தண்ணீர் வெளியில் வருகிறது. பீச்சாங்குழலின் மூக்கைத் தண்ணீருள்விட்டு அமுக்கு கோலை இழுத்தால் தண்ணீர் குழலுள் ஏறுகிறது. இரண்டாவது செய்ததை நோக்கில், இடம் உண்டானதால் தண்ணீர் ஏறிற்று என்று சொல்லும்படி வரலாம். ஆனால் முதல் செய்ததை நோக்கில் அவ்வாறு சொல்லமுடியாது. வெளியில் எப்பொழுதும் தான் இடம் இருக்கிறது. அப்படி இருக்க, கோலை அமுக்குங்கால் மாத்திரம் தண்ணீர் மூக்கின் வழியாக வெளிவருவானேன், அமுக்காதிருக்குங்கால் வெளிவராதிருப்பானேன்? ஆதலால் தண்ணீர் சலனத்திற்கும் அமுக்குவதற்கும் ஏதோ ஸம்பந்தம் இருக்கின்றது. ஒரு பக்கம் நாம் பீச்சாங்குழலுள் உள்ள தண்ணீரைத் கோலால் அமுக்குகிறோம். மூக்கின்பக்கத்தில் வாயு அமுக்கிக்கொண்டிருக்கின்றது. நாம் அமுக்குவது வாயுவின் சக்தியைவிட அதிகரித்தால் மூக்கின் வழியாகத் தண்ணீர் வெளிவருகின்றது. நாம் எவ்வளவு வேகமாக அமுக்குகிறோமோ அதற்கேற்ப தண்ணீரும் மூக்கின்வழியாக வேகமாக வெளியாகும். ஆதலால் தண்ணீரில் எந்தப்பாகத்திலாவது அமுக்கும் சக்தி(யாது காரணத்தினலாவது) மற்றையவிடங்களிலிருக்கும் சக்தியிலிருந்து மாறுபட்டால் தண்ணீரில் அசைவு உண்டாகிறது என்பது தெரியவருகிறது. மேலும் அதிக சக்தி இருக்குமிடத்திலிருந்து குறைந்த சக்தி இருக்கும் இடத்தை நோக்கி அசைவு உண்டாகின்றது. பீச்சாங்குழலில் தண்ணீர் உறிஞ்சும்பொழுதும் இதே ஒழுங்குப்படி தான் நடக்கின்றது. உறிஞ்சும் முன்னர் அமுக்கு கோல் குழலுள்ளே இருக்கின்றது. அதைத் தண்ணீருள் விட்டு அமுக்கு கோலை வெளியிலிழுக்கிறோம். அமுக்குகோல் உள்ளிருக்குங்கால் அதன் அடிப்பாகத்திற்கும் குழலின்மூக்கிற்கும் இடையில் காற்றே அதிகம் இல்லை. கோலை வெளியில் இழுக்கும்பொழுது குழலுள் காற்று ஏற இடம் இல்லை. ஏனெனில் அதைத் தண்ணீருள் முழுகும்படி செய்திருக்கிறோம். குழலுள்ளோ அதிக வாயு இல்லாததாலும், இடம் அதிகம் ஏற்படுவதாலும் வாயுவில் அடர்த்தி குறைந்துபோக அமுக்கும் சக்தி குறைந்துபோகிறது. உடனே வெளியிலிருக்கும் வாயு தனது சக்தியால் தண்ணீரைக் குழலுள் ஏற்றுகிறது. இவ்வாறே தான் வாயுவிலும்.

முன்னர் கூறியவைகளிலிருந்து வாயுவில் யாது காரணத்திலாவது ஒரு பாகத்தில் அமுக்குஞ் சக்தியானது மற்றைய பாகத்து சக்திகளைவிட வேறுகிவிட்டால் வாயுவில் அசைவு உண்டாகின்றது. அமுக்கும் சக்தி அதிகமாக இருக்கும் இடத்திலிருந்து சக்திகுறைந்த இடத்தை நோக்கி இந்த அசைவு ஏற்படுகின்றது என்ற விஷயங்கள் வெளியாகின்றன. இம்மாதிரி சக்தி வித்யாஸம் வாயுவில் ஏற்படக்காரணம் என்ன? முன்னே காட்டியபடி வாயுவானது ஒரு பக்கத்தில்(விசிறி முதலியவைகளால்) ஒதுக்கப்பட்டால் அந்தப்பக்கத்தில் சக்தி அதிகமாகும்.

அல்லது பீச்சாங்குழல் விஷயத்தில் ஏற்படுவது போல கொஞ்ச வாயுவுக்கு அதிக இடம் ஏற்பட்டால் அதன் அடர்த்தி குறைய அமுக்கும் சக்தி குறையலாம். இதுபோலவே அதிக வாயு கொஞ்ச இடத்தில் அடைபட்டால் அடர்த்தி அதிகமாக அமுக்கும் சக்தி அதிகமாகும். ஆனால் இம்மாதிரி அமுக்கும் சக்தி மாறுபடுவதால் உலகில் காற்றுகள் உண்டாகின்றன என்று சொல்லமுடியாது; ஏனெனில் வெளியிலிருக்கும் வாயு ஓர் இடத்திலும் அடைபட்டிருக்கவில்லை. ஆதாலால் வாயுவில் சக்தி மாறுபாடு ஏற்பட வேறு ஒரு காரணம் இருத்தல் வேண்டும். இந்தக் காரணத்தை நன்றாக உணரப் பின்வரும் சோதனையைச் செய்வோம்.



ஸாதாரண விளக்கிற்கு வைக்கும் கண்ணாடிப்புகை அடக்கியை எடுத்து வந்து அதன் மேல்பாகத்தில் போகும்படி ஓர் தகரத்தகடை T மாதிரியாக வெட்டுவோம். T இன் நடுப்பாகம் புகை அடக்கியில் பாதிதூரம்போகக் கூடியதாக வைப்போம். மேஜைமேல் ஓர் சிறு மெழுக்குவத்தியை ஏற்றிவைப்போம். அதைச்சுற்றிப் புகைஅடக்கியைவைத்து, அதன் மேல்பாகத்தில் தகர T யைப் போடுவோம். இத்தகரம் புகைஅடக்கியை இரண்டு ஸமபாகமாகப்பிரிக்கும். ஓர்பாகத்தின் அடியில் மெழுக்குவத்தி எரியும்படி புகையடக்கியை ஸரிப்படுத்துவோம். வேறோர் மெழுக்குவத்தியை ஏற்றி விளக்கு எரியும் பாகத்திற்கு நேரே மேலே T அருகில் கொண்டுவருவோம். தீபஜ்வாலை மேலே தூக்கப்படும். மேலும் கீழே இருந்து தீபத்தையாரோ ஊதுகிறது போலக்காணப்படும். ஒருவேளை வெளி மெழுகுவத்தி அணைந்தாலும் அணையும். இதனால் அந்தப்பாகத்தில் வாயு வெளியே ஓடி வருகின்றது என்பது தெரியவருகிறது. இந்த மெழுக்குவத்தியைப் புகை அடக்கியின் அடுத்தபாதியின் மேல் கொண்டு போவோம். தீபஜ்வாலை புகை அடக்கியுள் நுழைகின்றது. இதனால் வெளிக்காற்று இந்த வழியாக உள்ளே போகின்றது என்பது வெளியாகும். ஓர் காகிதத்தைக் கொளுத்தி புகையும்படி செய்து அதை விளக்கு எரியாதிருக்கும் பாதிக்கு மேலே கொண்டுவந்தால் இந்தப் புகை புகையடக்கியுள் எரியும் விளக்கு வரையில்போய் அடுத்த பாதி வழியாக வெளி ஏறுவதையும் காணலாம். இதனால் உஷ்ணத்தால் வாயுவில் அசைவு உண்டாகலாம் என்பது தெரியவருகிறது. மேலும் இந்தப் புகை அடக்கியின் இரண்டு பாகங்களிலும் கையை வைத்துப் பார்த்தால் வெளியேவரும் வாயு உஷ்ணமாக இருப்பதை உணரலாம்.

முன்பார்த்த சோதனையில் இருந்து தெரிந்துகொள்ளக் கூடியவைகளை சுருக்கிச்சொல்லுவோம். விளக்கு எரியும்பொழுது விளக்கால் உஷ்ணப்படுத்தப்பட்டவாயு மேலே கிளம்பிவிடுகிறது. அருகாமையில் உள்ளகுளிர்ந்தவாயு விளக்கைநோக்கி நான்கு புறத்திலிருந்தும் ஓடிவருகின்றது. வந்து விளக்கால் உஷ்ணப்படுத்தப்பட்டு மேல்கிளம்புகிறது. இம்மாதிரிவிளக்கு அணையும் வரையில் அதிலிருந்து உஷ்ணமான வாயு மேலே கிளம்பிக்கொண்டே இருக்கிறது: சுற்றுமுள்ள குளிர்ந்த வாயு விளக்கை நோக்கிவந்துகொண்டே இருக்கின்றது. இதனால் தான் விளக்கை எப்படித் திருப்பிய போதிலும் தீபஜ்வாலை எல்லாப் புறங்களிலும் அமுக்கப்பட்டு மேல் நோக்கியே கூருகக் காணப்படுகின்றது. இம்மாதிரி உஷ்ணத்தால் வாயுவில் அசைவு ஏற்படுகின்றது.

இந்தச் சோதனையின்பின் இரண்டு சங்கைகள் உண்டாகலாம். அவையாவன 'உஷ்ணமான வாயு மேலே கிளம்புவதால் நாம் என்ன அறிந்துகொள்ளலாம்? இங்கு எவ்விதமாக அமுக்கும் சக்தி மாறுபாடு வாயுவில் உண்டாகின்றது?' என்பவைகளே. ஒரு சொம்பைத் தண்ணீரால் நிறைத்துத் தண்ணீர் உள்ளபெரிய பாத்திரத்துள் விடுவோம். அது உள்ளே போய்விடும். அதை வெளியில் எடுத்துக் கொஞ்சம் தண்ணீரைக் கொட்டிவிட்டு உள்ளே விடுவோம். இவ்வாறு அடிக்கடி சோதனை செய்து பார்த்தால் சொம்புள் வாயு ஏற ஏற சொம்பு கீழே முழுகும் வேகம் குறைந்துகொண்டே வரும். இப்படிச் செய்துகொண்டுவந்தால் சொம்பைப் பின்னர் உள்ளே அமிழ்த்திவிட்டாலும் வெளியே கிளம்பி வந்துவிடும். இங்குச்சொம்பு கிளம்புவதற்குக் காரணம் தண்ணீரைவிட

அடர்த்தி குறைந்த வஸ்துவாகிய வாயு சொம்புள் அதிகமாக ஏறிவிட்டபடியால் பித்தளைத் தண்ணீருள் போட்டால் முழுதும் தன்மையுடையதாக இருந்தாலும் சொம்பு மேல் கிளப்பப்படுகிறது. இதேமாதிரி தண்ணீரைவிட அடர்த்தி (கனம்)குறைந்த வஸ்துக்களைத் (சடை, மரம் முதலியவைகளை) தண்ணீருள் அமிழ்த்திவிட்டாலும் அவை மேலேயே வந்துவிடும். உஷ்ணமான வாயு மேலே கிளம்புவதால் அது உஷ்ணப்பட்டதும் சுற்றும் உள்ள வாயுவைவிட அடர்த்தியில் குறைந்துவிடுகின்றது என்பது வெளியாகும். இந்த உஷ்ண அடர்த்தி குறைந்து மேலே கிளம்பியதும் விளக்கண்டையில் உள்ள அமுக்கும் சக்தி குறைந்து விடுகின்றது, உடனே சுற்றுமுள்ள வாயு விளக்கை நோக்கி வருகின்றது.

ஆகவே இதுவரையிலும் செய்த சோதனைகளிலிருந்து நாம் தெரிந்து கொண்டவை பின் வருவன:—(1) வாயுவில் எங்கேயாவது ஓர் இடத்தில் உள்ள அமுக்கும் சக்தி மற்றை இடங்களிலிருக்கும் சக்தியிலிருந்து மாறுபட்டால் வாயுவில் அசைவு உண்டாகின்றது. (2) வாயு அமுக்கும் சக்தி அதிகமாக இருக்கும் இடத்திலிருந்து அமுக்கும் சக்தி குறைந்த இடத்திற்கு ஓடும் தன்மை உடையது. (3) வாயுவில் அமுக்கும் சக்தியின் ஏற்றத்தாழ்வு முறையே அதன் அடர்த்தி அதிகக் குறைவாலும், அது அடங்கியிருக்கும் இடத்தின் குறைவு விரிவாலும் உண்டாகின்றது. (4) இந்த ஏற்றத்தாழ்வு சீத உஷ்ணங்களாலும் உண்டாகும். நெருப்பு எங்கெங்கே எரிகிறதோ அங்கங்கே எல்லாம் வாயு அசைந்து கொண்டேதான் இருக்கிறது. கீழ்பாகத்தில் வாயு அசையாவிட்டாலும் ஆகாயத்தில் மேகங்கள் ஓடுவதால் அங்குள்ள சீதோஷ்ண ஸ்திதியால் வாயுவில் சலனம் உண்டாகின்றது. பிரபஞ்சத்தில் காற்றுகள் உண்டாவதற்கு (4)வது கூறியதே முக்கியக் காரணம்.

ஓரிடத்தில் சீதோஷ்ண ஸ்திதியால் வாயுவில் திடீரென்று அமுக்கும் சக்தி மிகக் குறைந்துவிட்டால் சுற்றிலும் உள்ள காற்றுமிகுந்த வேகமாய் அங்குவந்து பாய்கின்றது. அடியில் துவாரம் உள்ள ஓர் தொட்டியின் தண்ணீர் எவ்வாறு சுழன்றுகொண்டு வெளிப்படுகின்றதோ அவ்வாறே இங்கு வேகமாக வரும் காற்றானது சுழன்று கொண்டே வரும். இதற்கே சுழல் காற்று என்று பெயர். இம்மாதிரி சிறிய காற்று தெருவில் அடித்து தூசி குப்பைகளைச் சுழற்றுவதை நாம் ஸாதாரணமாகக் காற்றுக்காலங்களில் காணலாம். இதுவே பெரும்புயலாக உண்டானால் தான் மரங்களை முறித்து விடும்; கப்பல்களை கவிழ்த்து விடும்.

இக்காரணத்தால் பலவிதக் காற்றுகள் இவ்வாறு உண்டாகின்றன என்பதை இனிமேல் விவரிப்போம்.

ஏ. எஸ். கஸ்தூரிரங்கன், பீ.ஏ., எல்.டி.,

திருமலை சேதுபதி *
TIRUMALAI SETUPATHI
(ஒரு தமிழ் நாடகம்)

களம்.—நெல்லைக்கோட்டையில் தலைவர் அரண்மனை.

காலம்.—வைகறை.

[திருமலை சேதுபதியும், (அவர் மனைவி) தருமிநாச்சியாரும் பிரவேசித்தல்.]

தருமி.—இப்படித் தூக்கமின்றி விழித்திருந்தால் நம்ம சோமுவுக்கு உடம்புக்காகுமா? வேறு ஆளில்லாவிட்டால்தான் தீராது; தலைவர், தளவீரர், எல்லாரும் இருக்கிறார்களே.

திரு-சே.—இதுவரையும்தான் உன் மனப்படி வளர்த்துவந்தாய்; இனிமேலாகிலும், தன் ஆண்மைக்கும் அந்தஸ்துக்கும் தக்கபடி, அவன் யுத்தமுறைகளிலும், அரசியல் நடவடிக்கைகளிலும் பழகித் தேறவேண்டாமா? பெண்ணானால் உன்னிஷ்டப்படியே இருந்துவிடலாம். ஏன் ஆணைப்பெற்றாய்?

தருமி.—அதற்காக ஒரே தீர்வையாகப் போட்டுக் கொல்லுகிறதா? சிறிது சிறிதாகவாவது பயில வேண்டும்.

திரு-சே.—அவனாக உன்னிடம் எதாவது சொன்னானோ?

தருமி.—நான்தான் சொல்லுகிறேன். அவனைத் தான் காண்பதே அரிதாகிவிட்டதே.

திரு-சே.—தருமி! நான் சொல்வதைக் கேள்: இதற்கெல்லாம் நீ கவலைப்படாதே. எனக்கும் மகன் தானே? உனக்குள்ள அருமை எனக்கில்லையா? அல்லது, எனக்கு வேறொரு ஆசை மகன் இருக்கிறானோ? அவன் தேகசௌக்கியத்தை, நான் கவனித்துக்கொள்ளுகிறேன். உடல் உழைப்பு உலகத்தில் ஒருவரையுங் கொன்றதில்லை.

தருமி.—ஆனால் சாவுதான் ஒன்றா? நாட்டுக்கு எதாவது வந்துவிட்டால், உங்களுக்குத் தாயும் வேண்டாம், பிள்ளையும் வேண்டாம்; அவர்களிருப்பதையே மறந்து விடுவீர்கள். உங்கள் உடம்பைப் பார்த்துக்கொள்ள நான் வந்திருக்கிறேன். பளா! நீங்கள் அவனைப் பார்த்துக் கொள்கிறது எங்கே?

திரு-சே.—எல்லாம் சௌபாக்கியவதி தருமி நாச்சியார்தானே என்னைக் குழந்தைப் பருவமுதல் இப்பொழுது ஐம்பத்தாறு வயசுவரையும் பேணி வளர்த்துக் கண்பார்த்து வந்ததெல்லாம்; அந்தப் புண்ணியத்துக்காகத்தானே 'தருமி' என்ற பட்டமும் வந்திருக்கிறது.

தருமி.—உங்கள் அரண்மனைக்குள் நான் அடியெடுத்து வைத்தது முதல், என்னாலியன்றமட்டும், எனக்குத் தெரிந்தவரையும், என் கடமையைச் செலுத்த முயன்றுகொண்டுதான் வந்திருக்கிறேன்; உங்கள் மனதே அறியும்.

திரு-சே.—இத்தனை கோபமும் உரோசமுமா? ஏது, அம்மாளைப் பரிகாசம்கூடச் செய்யப்படாதுபோலிருக்கிறதே. 'என் மனதறியும்' என்று ஒரு வார்த்தை சொன்னையே, அது மெய்தான்: என் தருமி யில்லாவிட்டால், என்பாடு கொஞ்சம் மோசமாய்த்தான் இருந்திருக்கும். இந்தப் பணியாரத்தில் சருக்கரை அதிகம்; என் தருமி பேச்சைப்போலில்லாமல் திகட்டுகிறது.

தருமி.—இத்தனை வயசாகியும், கேலியும், குறும்பும் போகவில்லையே இன்னும்.

திரு-சே.—என்னைப் பார்த்தால் கிழவனைப்போலா தோன்றுகிறது உன் கண்ணுக்கு? சரி, சரி, இனி விழிப்பா யிருக்கவேண்டும். சோமு எங்கே? இன்னும் வரவில்லையா?

தருமி.—இன்னும் வரவில்லை; இராத்திரிச் சாப்பாட்டுக்குப் பின் நான் பார்க்கவில்லை. தூதுச்சங்கதி யெல்லாம் மகாலிங்கம் சொன்னான்: பார்த்துப் பார்த்து, உங்களிடம் வந்து சொல்லவந்தார்களே இப்படிப்பட்ட பேச்சை!

திரு-சே.—தன் மனக்கொண்டு பிறர்மனம் அளப்பதே மனித சுபாவம். சேர்ந்திருக்கும் இருவருமே மகா துரோகிகள்; பழிபாவத்துக்கு அஞ்சாதவர்கள்; அவர்கள் சூழ்ச்சி இப்படித்தானே இருக்கும்.

[பணியாள் ஒருத்தி பிரவேசித்தல்.]

பணியாள்.—கோட்டைத் தலைவர் வந்திருக்கிறார்; ஏதோ தூது வந்திருக்கிறதாம்.

திரு-சே.—இதோ வந்துவிட்டேன் சொல். [பணியாள் போதல்.] தருமி! நான் போய்வருகிறேன். சோமுவைப்பற்றி நீ கவலைப் படவேண்டாம்.

தருமி.—அவனைக் கண்டால் வரச்சொல்லுங்கள். காலையில் ஒன்றும் சாப்பிடவில்லை இன்னும்.

[போதல்.]

அ. மாதவையர், பீ.ஏ.

* அச்சுக்குச் சித்தமாயிருக்கும் இப்பெயர்பூண்ட நாடகத்தில் ஒரு காட்சி இங்கெடுத் தெழுதப்பட்டிருக்கிறது.

சிறுவர்க்கான பக்கங்கள்
CHILDREN'S PAGES

நல்லோர் இணக்கத்தால் வரும் நன்மை அல்லது காஜியின் தந்திரம்.—துலுக்க தேசத்தில் நியாயாதிபதிக்குக் காஜி என்று பெயர். அரசனுக்குக் காலிப் என்று பெயர். ஒருநாள் ஒரு காலிப் தனக்கு உத்யானவனம் லதாக்ருஹம் முதலிய ஸுக வஸ்துக்களைக் கட்டிக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்துடன், ஓர் கைம்பெண்ணினது நிலத்தைத் தனக்கு விற்கும்படி அவளை எவ்வளவோ கேட்டுப்பார்த்தான். அதற்கு அவள் 'எங்கள் மூதாதைகள் முதல் இந்தப்பூமி எங்களைச் சேர்ந்தது. இதில் ஓர்வித பற்றுதல் எனக்கு உண்டாகிவிட்டது. இந்த ஸுகம் எங்கே போனாலும் எனக்கு வாராது. ஆதலால் தயவுசெய்து இந்த நிலத்தை என்னிடம் ஒப்புவித்தீர்களாகில், ஓர் அனாதையைக் காப்பாற்றிய புண்யம் தங்களைத் தலைகாக்கும்' என்று எவ்வளவோ விநயமாக மன்றாடினாள். எப்படியாவது அந்த நிலத்திலேயே தன் ஸுக மண்டபங்களை ஏற்படுத்தவேண்டும் என்றதூர் எண்ணங்கொண்ட காலிப் தன் நயத்தையே கருதினவனாய் கைம்பெண்ணின் மனோவ்யாகூலத்தைக் கவனியாது அவளிடம் இருந்து பலாத்காரமாக நிலத்தைப் பிடுங்கிக்கொண்டு ஈவு இரக்கம் இன்றி அவளைத் துரத்திவிட்டான். அவளுக்கு அவளது கழுதையும் ஒருவெறும் கோணியும் தான் மிஞ்சியது. வெறுங் கோணியைத் தன் கழுதைமேல் போட்டுக்கொண்டு 'கடவுளே என்கதி இவ்வாறாய் விட்டதா?' என்று மனம்நொந்து தலையின்மேல் கையைவைத்து அழுதுகொண்டு புறப்பட்டாள். இவள் அழுதுகொண்டு வரும்வழியில் நியாயாதிபதியாகிய காஜி இருந்ததைக்கண்டு அவனிடம் தனக்கு வந்த கஷ்டத்தை விடாது சொல்லிவிட்டாள். இதைக் கேட்டதும் மஹா பக்திமானான காஜி 'ஐயோ! அரசர்கள் ஏன் வீணாகக் கெட்டுப் போகிறார்கள்! அவர்களுக்கு இம்மாதிரி ஏழைகளை வருத்தவா இவ்வளவு ஐசுவரியமும் பலமும் கொடுக்கப்பட்டிருக்கிறது? எனக்குச் சிரிப்பு, உனக்கு வயிற்றெரிச்சல் என்ற கதையாய் ஏன் நமது காலிப் இவ்வாறு அநீதியில் பிரவேசிக்கவேண்டும். பணமும் உந்நத பதவியும் மனிதனைக் குருடனாக்கி விடுகின்றனபோலும். அனா

தையாகிய இந்த ஏழைக்கைம்பெண்ணை வருத்திப் பிடுங்கிய நிலத்தில் இவன் எவ்வளவு நாள்தான் ஸுகிக்கப் போகிறான்? இவள் வயிற்றெரிச்சல் வீண்போகுமா? என்றிவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டு, மனங்கனிந்த பிறகு மிகுந்த பரிவுடன் கைம்பெண்ணை நோக்கி'அம்மா!என் வார்த்தையைக் காலிப் ஒருவேளை கேட்டாலும் கேட்பார். என்னால் கூடியவரையில் உன் நிலத்தை வாங்கிக்கொடுக்க முயலுகிறேன்'என்று கூறி அவளிடமிருந்த கழுதையையும்சாக்கையும் வாங்கிக்கொண்டு காலிப்இருக்கும் இடம்சென்றான் காஜி. இவனைக்கண்டதும் காலிப் கைம்பெண்ணின் மூடத்தனத்தை எடுத்துக் கூறி அவள் முரட்டுத்தனமாக நிலம்கொடுக்க முடியாது என்று மன்றாடியதால் நிலத்தின் கிரயத்தைக்கூட அவள் அடையவொட்டாது துரத்தப்பட்டாள் என்பதை எடுத்து விஸ்தரித்தான். காஜிக்கு மனது பொங்கியது, ஒருவாறு தன் மனக்கிளர்ச்சியை அடக்கிக்கொண்டான். பின்னர், அரசன் தான் அந்த நிலத்தில் கட்டப்போகும் ஸுகமண்டபங்களின் அமைப்பு முதலியவைகளை எடுத்துப்பேசினான். 'அந்யாயத்தில் ஒரு ஆனந்தமா?' என்றெண்ணிப் பெருமூச்சு விட்டான் காஜி. அரசன் சொல்லவேண்டியவைகளைச்சொல்லி மௌனமானதும், காஜி தனக்கு ஓர் விண்ணப்பம் இருக்கிறது என்று கேட்டுக்கொண்டு காலிப்பை நோக்கி, 'நான் அந்தக் கைம்பெண்ணைக் கண்டேன். ஐயோபாவம்! அவள்மிகவும் நொந்திருக்கிறாள். தன் நிலம்போய் விட்டபோதிலும், அதிலிருந்து ஒருகோணி மண்ணாவது கிடைத்தால் நலமாக இருக்கும் என்று ஆசைப்படுகிறாள். இதோ கோணியையும் கழுதையையும் கொண்டு வந்திருக்கிறேன். மண்ணெடுக்க உத்தரவு அளிக்கவேண்டும்' என்று கேட்டான். காலிப் உத்தரவின்பேரில் காஜி சாக்குநிறையமண்ணை நிரப்பிவிட்டுக் காலிப்பைநோக்கி'ஐயா இந்த மண்ணைத்தூக்கிக் கழுதைமேல் வைக்க எனக்கு ஸஹாயம் செய்யும்' என்றான். அதற்குக் காலிப் 'என்ன விளையாடுகிறாயா? என்னால் இந்தப்பாரத்தை எப்படித் தூக்கமுடியும். மாட்டேன் போ' என்றான். மிகுந்த மனஉருக்கத்துடன் கையை உயர்த்திக்கொண்டு'இந்த ஒரு சாக்குமண்ணைத் தூக்குவது உமக்குக் கஷ்டமாகி விட்டதே! நாளை நீர் கடவுள் முன்னிலையில் உமது பாபங்களை எடுத்துரைக்குங்கால் நிலத்தை முழுவதும் கைம்பெண் கதறகதற பிடுங்கியதால் ஏற்பட்ட பாபத்தை எவ்வாறு தாங்குவீர்? என்ன தீராக் கஷ்டத்திற்கு உள்ளாகி விட்டீரே!' என்று நயந்து கூறினார். காஜி சொல்வதன் உண்மை அரசன் மனதில் பதிந்தது. முன்னர் கைம்பெண்ணைக்கண்டதும் காஜிகொண்ட எண்ணங்களையும் வெளியிட்டான். பார்த்தான் காலிப். அநியாயமாகப் பாபத்திற்குள்ளானேமே என்று பரிதவித்தான். உடனே கைம்பெண்ணை அழைத்து வரச்சொல்லி அவளிடம் அவள் நிலத்தை ஒப்புவித்தான். காஜி தன்னை மஹத்தான பாபத்தில் வீழாதிருக்கும்படி தக்க தருணத்தில் காத்ததை எண்ணி எண்ணி மனமுருகிப் பரவசமானான். 'அரசர்களைச் சேர்ந்தவர்கள் இம்மாதிரி இல்லாவிடில் அரசர்கள் பாபங்களையே அறியாது செய்து மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாவார்கள்' என்று எண்ணமிட்டுக்கொண்டு காலிப் தனது அரண்மனை புகுந்தான்.

நன்மை விதைத்தால் நன்மை விளையும்—ஒரு குருவும் சிஷ்யனும் ஓர்வழியாகப் போய்க்கொண்டிருந்தனர். அங்கு வயல் வரப்பின் அருகில் இருந்த புதரின் அருகாமையில் வழியில்போகும் ஜனங்கள் கண்ணில் அதிகமாகப் படாதபடி ஓர் சட்டைவைக்கப்பட்டிருந்தது. ஐந்தாறு வயல்கள் தாண்டி அப்பால் ஓர் குடியானவன் வேலை செய்துகொண்டிருந்தான். இவர்கள் அந்தச் சட்டை அம்மனிதனது தான் என்று தீர்மானித்துக்கொண்டு அதை மெதுவாக எடுத்துக்கொண்டு புதரினுள் வந்து பரிசோதித்தனர். அதில் ஒரு பவுன் இருக்கக்கண்டார்கள். அப்பொழுது சிஷ்யன் குருவை நோக்கி, ஸ்வாமீ இந்தப் பவுனை எடுத்துக்கொண்டு இந்தச் சட்டையை முன்னிருந்த இடத்தில் வைப்போம். நாம் இந்தப்புதருள்ளேயே இருந்து வேடிக்கை பார்ப்போம். குடியானவன் வந்து என்ன செய்வானோ அதிலிருந்து அவன் குணத்தை அறிந்துகொண்டு இந்தப் பணத்தைக் கொடுத்துவிடுவோம்' என்றான். அதற்குக் குரு 'அப்பா! நீ சொல்லியபடி செய்தால் 'உனக்குச்சிரிப்பு எனக்கு வயிற்றெரிச்சல் என்ற கதையாக முடியும். மேலும் குடியானவனை அநியாயமாக வருத்துவதில் என்னபயன்? அவனையும் வருத்தாமல் அவன் குணத்தை நன்றாக அறியும் வழி இருக்கிறது, அதாவது சட்டையின் மற்றொரு பையில் நமது கையிலிருக்கும் பவுனையும் கூடவேபோட்டு அந்தச் சட்டை இருந்தவிடத்தில் வைத்துவிடுவோம். அவன் வந்து எவ்வாறு நடந்து கொள்ளுகிறான் பார்ப்போம். 'செல்வம்வந்துற்றகாலை' ஒருவன் மனம் சாந்தமாக இராது. கஷ்டகாலத்தில் மனிதன் சித்தசுத்தியுடன் இருந்தாலும் இருப்பான். ஸுகம் வந்தகாலத்தில் அதைச் சாந்தமனதோடு ஸஹித்து பகவானை ஞாபகம் வைத்திருப்பது கஷ்டம். ஆதலால் இந்த வழியில் அவன் குணம் நன்றாகத்தெரியவரும்' என்றார். இருவரும் அவ்வாறே செய்துவிட்டுப் புதரில் ஒளிந்துகொண்டனர். குடியானவன் வந்து சட்டை எடுத்துப்பார்த்துத் தான்வைத்துப்போன பவுன்இருக்கிறதா என்று பார்த்தான். என்ன ஆச்சரியம்!ஒரு பவுனுக்கு இரண்டு பவுன் இருந்தது! இவ்வாறு தன் சட்டையில் அகஸ்மாத்தாய்வந்த பவுனைக்கூட அதிகமாகக் கவனியாது தனக்கு இம்மாதிரி வரும்படி செய்தது கடவுளே என்று மதித்து பகவானைக் கொஞ்ச நாழிகை வாயாரத் துதித்துவிட்டு, இந்தப் பவுன் இன்னாரது என்று விசாரித்துக் கொடுத்துவிட்டால் நலமாக இருக்கும் என்ற எண்ணத்தையும் தனக்குத் தானே வெளியிட்டான். பின்னர் சட்டையை எடுத்துப்போட்டுக்கொண்டு புறப்படும் ஸமயத்தில் இவன் பக்தி பரவசம் நல்ல எண்ணங்கள் இவைகளைக் கண்டு மகிழ்ந்து மிகுந்த ஆனந்த பரவசராகி ஒளிந்திருந்த குருவும் சிஷ்யனும் வெளிவந்து தாம் செய்த விஷயங்களை ஆதியோடந்தமாகச் சொல்லி அவன் நற்குணத்திற்காக அவனுக்கு அந்தப் பவுனைப் பரிசளித்தனர். குடியானவன் மிகுந்த திருப்தியுடன் தனது வீடுசென்றான். அப்பொழுது குரு சிஷ்யனைப்பார்த்து "அப்பா! நீ கூறியபடி செய்திருந்தால் நமக்கு இவ்வளவு ஆனந்தம் வந்திருக்குமா. மனிதனைக் கஷ்டப்படுத்தித்தான் அவன் குணத்தை உணரவேண்டும் என்பதல்ல. ஸுககாலங்களில் எவன் மனங்கலங்காது பகவத்பக்தி செய்கிறானோ அவனே சிரேஷ்டன். அநேகர் துக்ககாலங்களில் பக்தசிரோமணிகளாக இருந்து ஸுகம் வந்தகாலத்து கழுதைகளாகி விடுகின்றனர். ஆதலால் எங்கும் நாம் நன்மையையே செய்துவரவேண்டியது. பரிசோதனைக்குக்கூடத் தீமை செய்யலாகாது. அதனால் நமக்கு வரக்கூடிய ஆனந்தத்தைப்போல, தீமை செய்வதனால் உண்டாகாது. தீமையாகப் பரிசோதனை செய்து ஒருவன் மனம் நொந்து நற்குணம் உடையவனல்ல என்று காட்டிக்கொண்டால் 'ஐயோ என் நாம் அநியாயமாகப் பரிசோதித்தோம். நாமே அவனைக் கெட்டவனாக்கி விட்டாற்போல இருக்கிறதே' என்ற எண்ணம் பாதிக்கும். அப்படியல்லாமல் அவன் நல்லவன் என்று தெரியவந்தால் 'ஐயோ! இந்த மஹா புருஷனையா நாம் இவ்வாறு கஷ்டப்படுத்தினோம்! என்ன பாபத்திற்கு ஆளாகிவிட்டோம்!' என்ற எண்ணம் பாதிக்கும். ஆனால் நன்மை செய்து பரிசோதனை செய்தால் அவன் கெட்டவனாகப்பட்டாலும் நமது மனது அதிகக் கஷ்டப்படாது; நல்லவனாக இருப்பதாக வெளிவந்தால் நமக்கு வரும் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. ஆதலால் எப்பொழுதும் நன்மையையே செய்யவேண்டும். பரிசோதனை விஷயம் என்ற சாக்கைப் பின்பற்றிக் கூடத் தீமை செய்யலாகாது நன்மை செய்தால் நம் மனதிற்கு வரும் ஸமாதானத்திற்கு நிகர் வேறொன்றும் இல்லை. ஆகவே 'நன்மை விதைத்தால் நன்மை விளையும்' என்ற இந்த விஷயங்களைச் சிந்தனை செய்'' என்று கட்டளையிட்டார்.

***

பெருந்தன்மை.—ஒரு பணக்காரனுக்கு அதிக வயதாகி விட்டபடியால் தான் ஸம்பாதித்த பணத்தைத் தனது பிள்ளைகள் மூவருக்கும் பிரித்துவைத்தான். அப்பொழுது ஓர் விலையுயர்ந்த ஆபரணம் ஒன்றுமாத்திரம் இப்பாகங்களுள் அகப்படாது நின்றுவிட்டது. அப்பொழுது தனது பிள்ளைகளை நோக்கி 'நீங்கள் செய்த காரியங்களுள் எது சிறந்ததோ அதைக் கூறுங்கள். அவைகளுள் பெருந்தன்மை வாய்ந்ததாக இருக்கும் காரியம் செய்திருப்பவனுக்குத்தான் இந்த ஆபரணத்தைக் கொடுப்பதாக எண்ணி இருக்கிறேன்' என்றான். அப்பொழுது முதல் பிள்ளை தகப்பனைநோக்கி, 'ஒருவன் என்னிடத்தில் வெகுநாளைக்கு முன்பு ஏராளமான பணத்தை ஒப்புவித்துவிட்டுப் போனான். என்னிடமிருந்து ரசீது முதலியவைகளும் அவன் பெற்றுக்கொள்ளவில்லை. வெகுநாள் கழித்து இப்பொழுது வந்து பணத்தைக்கேட்டான். நான் அவனிடம் இருந்து பணத்தைக் காப்பாற்றியதற்காக யாதொரு பரிசும் பெற்றுக்கொள்ளாது தயங்காது பணத்தை அவனிடம் கொடுத்துவிட்டேன். இதுதான் நான் செய்தவைகளுள் மிகச்சிறந்தது' என்றான். அதற்குத் 'தகப்பன், அப்பா! நீ செய்தது நியாயமான காரியமே ஒழிய பெருந்தன்மை வாய்ந்த காரியமல்லவே' என்று மறுமொழி கூறினான். உடனே இரண்டாவது பிள்ளை தகப்பனை நோக்கி, 'நான் கொஞ்சநாளைக்குமுன் ஓர் குழந்தை ஓர் ஏரியில் விழுந்ததைக் கண்டேன். உடனே ஓடோடியும் போய் என் உயிரைக்கூடக் கவனியாது அந்தக் குழந்தையைக் கரை ஏற்றினேன். இதுதான் நான் செய்த காரியங்களுள் மிகச் சிறந்தது' என்று

கூற, தகப்பன் ‘அப்பா! இது ஜீவகாருண்யம் நிறைந்த கர்மமே ஒழிய, பெருந்தன்மை வாய்ந்த கர்மம் அல்ல’ என்று மறுத்துவிட்டான். அப்பொழுது மிகுந்த விநயத்துடன் கடைக்குட்டியாகிய மூன்றாவது பிள்ளை தன் தகப்பனை நோக்கி ‘பிதாவே! நான் கொஞ்ச நாளைக்குமுன் நடுராத்திரி இருட்டில் அருகாமையில் உள்ள மலைக்குப் போகவேண்டி வந்தது. அங்கு என்ன ஆச்சரியம்! எனது பிராணசத்ரு ஒருவன், ஓர் செங்குத்தாயும் உயரமாயும் உள்ள பாறையின்மேல் படுத்து உறங்குவதைக் கண்டேன். அவனை நான் கொஞ்சம் அசைத்திருப்பேன் ஆகில் அவன் கீழே இருக்கும் பாதாளத்தில் விழுந்து இறந்திருப்பான். அவனைக் கொல்ல எனக்கு மனம் வராது, நான் அவனை எழுப்பி அபாயம் இல்லாத இடத்தில் கொண்டு சேர்த்தேன். இதுதான் நான் செய்த கார்யங்களுள் மிகச் சிறந்தது என்று எனக்குத் தோற்றுகிறது’ என்றான். உடனே தகப்பன் தனது பிள்ளைகளை நோக்கி ‘பிள்ளைகளே! பிராண விரோதியினிடத்தும் காருண்யம் இருந்தலே பெருந்தன்மையின் முக்கிய அடையாளம். ஆதலால் இந்த ஆபரணம் மூன்றாவது பிள்ளையினுடையது’ என்று தீர்மானம் செய்தான்.

சந்தாதாரர்கள் மாத்திரம் சற்றுக் கவனிக்கவும்

ஸ்ரீமத் பாகவத வினாவிடை.—முதல் பாகம், முதல் ஒன்பது ஸ்கந்தங்கள் கொண்டது. 10 அழகிய படங்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது. விலை ரூ 1. ஸ்ரீ இராமாயண வினாவிடை, ஸப்தகாண்டங்களும் இனிய செந்தமிழ் நடையில் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் உபயோகமாகும்படி எழுதப்பட்டிருக்கிறது. விலை அணா 12. ஸ்ரீ மஹாபாரத வினாவிடை, முதல்பாகம், ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்தியோக பர்வங்களடங்கியது. விலை அணா 12. ஸ்ரீ மஹாபாரத வினாவிடை, இரண்டாம் பாகம், பீஷ்ம, துரோண, சல்லிய ஸ்திரீ, ஸௌப்திக பர்வங்களடங்கியது. விலை அணா 12. இப்புத்தகங்கள், சந்தாதார்க்கு மாத்திரம், ஸ்ரீமத் பாகவத வினாவிடை 12 அணாவுக்கும், மற்றைய ஒவ்வொன்றும் 8 அணா வீதம் கொடுக்கப்படும். பிரபாவதி, இப்பொழுதுதான் தயாரான ஓர் சுவையுள்ள சரிதை, விலை அணா 4. ‘கிரிஸெல்டா’ அல்லது ‘பொறுமையுள்ள மனைவி’ விலை அணா 3. ஆரியமத உபாக்கியானம், 50 சிறிய நீதிக் கதைகள் கொண்டது. விலை அணா 2. இப்புத்தகங்கள் நமது சந்தாதாரர்க்கு மாத்திரமே 3 அணா, 2 அணா, 0-1-6 விலைத்துத் தனித் தனியே கிடைக்கும். வேண்டுவோர், தாமதமின்றியில், விவேகபோதினி மானேஜருக்கு உடனே எழுதிக்கொள்ளவும். சந்தாதாரர்க்காகவென்று இன்னும் அநேக புத்தகங்களும் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும். தயவுசெய்து விளம்பர பக்கங்களைப் பார்க்கவும்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIE'S PAGES

கண்ணகி அல்லது பத்தினிக்கடவுள்

3. தெய்வந் தொழுத காதை

ஆய்ச்சியர்குரவை ஆகியது. வையை ஆற்றின் கரையில் சுத்தமாகிய நீரில் ஸ்நாநம்செய்ய மாதரி சென்றாள். இப்பால் வந்தார் யாரோ தம்முள் தாம் கோவலன் கொலையுண்டதைப்பற்றி ஊகையாக ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டனர். இதைக் கண்ணகி அறியமுடியவில்லை. ஜனங்களு மவளுக்கிதை எவ்வாறு சொல்லுவதென்று மயங்கினார்கள். இவர்கள் நிற்கும் தன்மையையும், தன்னையே நோக்கிக் கூறும் செயலையும் கண்டு, கண்ணகி பொறுக்க முடியாதவளாய், அவர்களை நோக்கி “எனக்குத் தாய்போலும் நின்றவர்களே! நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? என்கணவன் போனவனின்னம் வரவில்லை. வாராமையால் உலையையூதும் துருத்தியின் மூக்கைக்காட்டினும் என் நெஞ்சம் புகைகின்றது. அவர்கள் கூறுவது என் மனத்தில் ஸங்கடமுண்டாகச் செய்கிறது. அதுமாத்திரமன்று. இந்நடுமத்தியானத்தில் என்னாற் பொறுக்கமுடியாத ஸங்கடமும் மனோவேதனையும் உண்டாகியது; என்கணவனையு மின்னம் வரக்காண்கிலேன். ஆகையால் இவர்கூறுவதென்மனதில் ஸங்கடமுண்டாகச்செய்கிறது. இவர் கூறுவதைக் கவனித்தால் எனக்கென்னமோ ஸந்தேக மூட்டுகிறது. அவர் சொல்லுவது அற்பமாக எனக்குப்படவில்லை. என் கணவன் வாராமையால் என்னை இவர் வஞ்சிக்கிறார்கள். இவர்கள் என்னையே பார்த்து குறிப்பாக கூறுகின்றனர். எனக்கு ஸங்கடமுண்டாக்குகிறார்கள். அவ்வாறு இவர் கூறுவதெல்லாம் என் மனத்தில் ஸங்கடம் உண்டாக்கச் செய்கின்றது” என்று தோழிகளாகிய பக்கத்தில் உள்ளவர்களோடு மனவருத்தத்தோடு கண்ணகிக்கூற, மனதிற் பொறுக்கமுடியாது அயலில் நின்றவள் ஒருவள் “மன்னன் அந்தப்புரத்தில்சென்று அரசியின் சிலம்பைக் களவாடியதற்காக அரசனால் கொலையுண்டான்” என்று சொல்லமுடியாது வாயாற் குழறினள்.

என்றது கேட்டனள். கணவன் பாடுபட பொறுப்பவள் கண்ணகியோ? அயர்ந்து மயங்கிக் கீழ்

வீழ்ந்தாள். அம்ருதகிரணம் வீசும் சந்திரன் மேகங்களிடை மயங்கிட அம்மழைக்கால்கள் பூமியை அடைவதுபோல், கூந்தற்கூட்டம் முகமறைக்க ஒன்றுந்தோன்றாது பூமிமேல் உணர்வற்று வீழ்ந்தாள். சற்றே அயர்ந்து எழுந்தாள். சற்று அழுதாள். தலைமேல் கைமோதிப் புரண்டனள். தன்னோடு கூடிவாழ்ந்த கணவன் துயரமுற்றிறக்க, தானும் ஸஹகமநம் செய்யாது கைம்மை நோன்பு கொள்ளும்படி பாண்டியன் செய்த தவறைக்கண்டுமிருப்பவள் நானுமொருத்தியோ! தன் கணவன் தணலுக்கிரையாக தானும் நெருப்பிற் குளிக்காது ஆறுங்குளமும் தேடிக் குளிரக் குளிக்கும் கைம்மைக்கொண்ட பெண்டிரைப் போல ஏக்கங்கொள்வது நான் ஒருத்திதானோ? தரும வழியிற் செல்கிற பாவனைசெய்து அதர்மவழியிற் செல்லும் பாண்டியனை ஒத்த தருமத்திற்குத் தேவதையாய் நின்ற நீ தான் எனக்குப்பதில்கூறு? உனக்கு அறிவுமுள்ளதோ? ஆ ஆ! இதுவும் என்கதியோ” என்று அழுதுக் கொண்டிருந்த கண்ணகி அங்கிருந்த ஆயமாதரை நோக்கி “ஆயமகளீர்! கேண்மின், நீங்கள் எல்லாரும் ஒருமித்துக்கேளும். நான் சொல்வது பொய்யன்று. என் கணவன் கள்வன் அல்ல. இது பொய்யன்று! ஸத்தியவாக்கிதுவே! ஹே! ஸூர்யனே! இவ்வுலகில் நீ யறியாத பொருளொன்றுமில்லை. ஆகையால் நீதான் இவர்களறிய உள்ளதை உள்ளவாறு சொல்” என்றாள். என்றதும், அங்கோர் பெரும் சப்தம் உண்டாகியது. “உன் கணவன் கள்வனல்ல. அவனைக் கள்வனென்ற இவ்வூர், கூடிய சீக்கிரத்தில், எரிந்துவிடும். நீயும் அதைக் காண்பாய்”—என்ற சப்தம் பேரிரைச்சலோடு எல்லார் மனதையும் கலக்கியது.

நன்வழியில் நடப்பவர்க்குக் கோபம் வருவதரிது. இது பிறப்பின் இயற்கை. பெண்டிருக்குமப்படியே. தனக்கு எதுவரினும் கவலைகொள்வது கிடையாது. தம்முடைய கணவர்க்கேதேனும் தகாதவை செய்யில், அவர் யாராயினும் ஸரி,—லக்ஷ்யம் செய்யாது அவர்களைத்தடுத்துத் தன் கணவனை அலக்ஷ்யம் செய்ய காரணமென்னவென்று கேட்டு, ஸரியான பதில் கிடைத்தாலன்றி வெறுமை விடமாட்டார். இது ஆத்திரங்கொண்ட மங்கையரின் ஸ்வபாவம். அவர்களுக்குத் தாமெண்ணாது தம் கணவர்க்குக் கேடு வந்திட்டால் ஓர்கோபமும் ஓர் ஆஸ்சரியமு முண்டாவது மானுஷ இயற்கைதான். அதுபோல் கண்ணகிக்குத் தன்கணவனைப் பாண்டியன் கொன்றான் என்றகோபம் ஓர்பக்கம் இருக்க “சிலம்பு விற்கச் சென்றவனைக் கள்வன் என்றும் கொன்றார்களே! இதுவும் ஓர் ஆஸ்சரியமே!” என்று எண்ணிக்கொண்டு கண்ணகி ஆயமாதரை நோக்கி “யான் யாவரும்படாத துயரமெல்லாமடைந்தேன். இனி ஒன்றுதான் உள்ளது. அதற்கு நான் பயப்படேன். கள்வன் என்றென் கணவனைக் கொன்றார்கள். ஈதென்ன ஆஸ்சரியம். இனி என் கணவனை முன்போல் உயிருமுடலுங் கூடிக் காண்பனோ? ஆஹா! அவ்வாறு காண்பேனாயில் அவர் கள்வனோ கள்வனில்லையோ அவர் வாயிலிருந்தே அறிவேன். அது மாத்திரமன்று. அவரைக் கண்டு யான் இம்மொழியைக் கேளேனாகில் என்னைப் பழியுடையாள் என்று ஏளனம் செய்யும். உயிரோடவரை கண்டிம்மொழியை அவர் வாயிலிருந்து அடையேன் ஆகில் என்னை நீவிர் எல்லோரும் பழியுடையாய்! நீ கள்வன் மனைவி என்றழையும்! இது ஸத்யம். என் கணவனைக் கள்வனென்றேத்தி கொலை செய்ததென்ன வாஸ்சரியம்!” என்று கண்ணகி ஆழ்ந்து வாயார வயிறெரியக் கூறியதெல்லாம் மதுரைப் பதியாரின் மனதைக் கலக்கியது.

இவ்வாறு மலர்ந்த உடன் உதிர்ந்த பூவையொத்த மங்கையாகிய கண்ணகி ஸூரியனை ஸாட்சியாகக் காட்டியது முதல் நின்றவிடம் நில்லாது, தன் கணவனைக் காணாத துயரத்தால் படபடத்து நடந்து வரும் வழியில், கண்ட ஜநங்கள் எல்லாம் “இம்மங்கையின்பால் அரசன் அநீதி செய்தான். செங்கோல் சாய்ந்து விட்டது. இவள் தெய்வம்போல் உலாவுகின்றனள். நமக்கு எத்தீங்கை விளைவிக்குமோ? ஐயோ! இவள் பால் ஆலோசியாது அரசன் செய்த அநீதிக்கென்ன விளையுமோ. அரசன் பெருமை இழந்தது. செங்கோல் தாழ்ந்தது. அரசனுடைய நிலைமைக்கும் ஏங்குகிறோம். இவளுடைய நிலைமைக்கும் வருத்தமடைகிறோம். இனி என்ன விளையுமோ என்று அஞ்சுகிறோம்” என்று தம்முள் தாம் வருந்த, வழியறிந்து தன் கணவனைக் கொலை செய்த இடத்தை அடைந்தனள்.

தன்னைத் தன் கணவன் காண முடியா நிலைமையிலிருப்பது அவளுடைய மனதைப் புண்படுத்தியது. இதைப் பார்க்க ஸகியாதவனாய் ஸூரியனும் மேற்புறம் சென்றான். வ்யஸன மென்னும் உருவே கண்

ணகி எனினும் ஸரியாக விருக்கும், காலையில் கலந்து பேசியக் கணவனைக் கனவிலிழந்தது போ லிழப்பின் அது மனைவியாதியை யுயர்த்துவ தாஸ்சரியமா? மாலைப்பருவமும் அரசன் மேற்கொண்ட கோபம் போல் சிவந்தொலித்தது. மதுரைக் கிருள்மூட வருவதுபோல் இருளும் கவிழ்ந்தது. கண்ணகியின் மனதும் படபடத்தது. மனம் புகைந்தது. வயிறெரிந்தது. பொறுமையுமொழிந்தது. தன் கணவனைக்கள்வனென்ற சொல்லொன்றே அவள் மனத்தில் நின்றது. இரத்தப்ரவாஹத்தில் மிதந்து கிடக்கும்கோவலனைக் கண்டதும் ஆ ஆ! வென்றலறியதொன்றே ஊரை அடக்கிவிட காரணமாகலாம். திக்பிரமையும் தன்னை அடக்கமுடியா மனக்கவலையும் அவளை மயக்கியது. தன்னுணர்ச்சி தனக்கு வந்ததும் அவன் உடல் மேலிருந்த மாலையைத் தன்மேல் அணிந்துக்கொண்டனள். அவன் ரக்தத்தைத் தன்னுடலிற் பூசிக்கொண்டனள். அவள் மனம் கொஞ்சமேனும் ஆறவில்லை. "யான்படுந்துயரம் உமக்குத் தெரியவில்லையோ? யான்படவேண்டுமென்னும் எண்ணம் உமக்கிருக்கிறதா?—அது போகட்டும்—உம்முடைய அழகிய வடிவம் இப்புழுதியுள் பதிந்து கிடப்பது தகுமோ?—அப்படியேயாயிடில், இம்மன்னனால் செய்யப்பட்ட இந்த அநீதியான கொலை,—எவ்விதத்தால் வந்ததென்றறியாத, எனக்கு,—யான்முன் ஜென்மத்திற் செய்த பாவத்தின் பயன் என்று இவ்வூரார் கூறுவர்களோ?—இது நிற்கட்டும், இதுவும் ஒரு நியாயமாகுமோ? இந்நியாமத்தில் நிச்சப்தமாகிய விந்த ஸமயத்தில் துணையொன்றுமில்லாத ஒருத்தியாகிய என்னைக் கவனிக்கலாகாதோ? என்கண் முன்னும் என்னோடு கூடிக் குலாவிய இம்மார்பு இந்த மண்ணிற் படுத்திருப்பதையும் பார்க்கவும் யான் செய்த பாவமோ? இது தகுமோ? இது என்னைத் தூற்றுதற்குக் காரணமல்லவோ? இந்நாட்டார் என்னை ஏளனம் செய்யாரோ? கள்வன் மனைவி என்று சொல்லார்களா? யான் எவ்வாறதைப் பொறுப்பது? யான் செய்த வினை என்றால் யான் எவ்வாறதைப் பொறுப்பது? அநீதி அரசனது செய்கையை என்னவென்று சொல்வது? யான் கண்ணும் கண்ணீருமாயிருப்பது உமக்காமோ? என்முன் நீரிப்படி இருப்பதாமோ? மண்மேல் மார்பகம்பட புழுதியுள் புரண்டிருப்பதுமாமோ? இவ்வணியாய நகரில் நற்குல மாதரும் உள்ளாரோ? கற்புடைய மகளிரும் உள்ளாரோ? பெரியோரும் இருப்பாரோ? இவ்வூரில் தெய்வமென்பதும் ஒன்று உண்டோ? உண்டாயின் இது உண்டாமா?" என்று ஏங்கி அழுத கண்ணகி தன் கணவன் பாற்கொண்ட ஆசையால் தூண்டப்பட்டந்த சவமாகிய கோவலனுடலைக் கட்டிக் கொண்டனள். அதை மார்போடு மார்பகம் வைத்துத் தழுவிக் கொண்டனள்.

தழுவியதும் கோவலன் எழுந்து நின்றனன். "அழகிய உன்முகம் ஏன் வாடிய தென்" றவள் கண்ணைத் துடைத்தான். துடைத்ததும் அவன் பாதமிரண்டிலும் வீழ்ந்து தொழுதாள். உடனே "நீ இரு" என்று சொல்லி அமரர் போற்ற மேலுலகமடைந்தான். "ஈதோர் மாயமோ? அன்றியில் வேறென்ன இது? ஈதோர் தெய்வமோ? ஒன்றையும் தெரிந்திலேன்? இதை யாரோடு கூடி ஆராய்வேன்? அவ்வாறு செய்வதற்கு எனக்குள்ள கோப மாறவில்லை? இக்கோபம் எவ்வாறழியும்? அப்பாழுமரசனையே எதிர்த்து அறிவேன்? என் கணவனைக் கொன்றவனை ஏன் கொன்றாயென்று நேரில் கேட்பேன்" என்று தனக்குள் தானே பேசிக்கொண்டு அரசன் அரண்மனைவாயில் இடத்தை அடைந்தாள்.

கணவன்மேற்கொண்ட அன்பானது மனமுழுதும் ஊறி, உடல் முழுதும் பரவி, வைராக்யமென்னும் கோபத்தால் செழிப்பிக்கப்பட்டு, நாணமென்னும் தகைமையை ஒழிக்கச் செய்வததிசயமல்ல; தன் கணவனது பெயரைக் கள்வன் அல்லவென்று நிலைநாட்டுவதற்கு ஸாதனமெதுவோ அதுதான் முக்கியம். மற்றதெல்லாம் வீணே. அந்நாயகனது பெயரை நிலைநாட்டவேண்டுமென்ற போராத்திரத்தோடு வந்த கண்ணகி படபடவென்று கடைமணியை, உற்பாத வைபவங்கள் பலவும் செயற்கொள்ள, கோபங்கொண்ட மனதின் வலிவோடு ஒலிச்செய்தாள். செய்ததும், வாயிலோன் வரவுகண்டு "வாயிலோய்! நீ சென்று கையில் சிலம்புடையாள் ஒருவள்—கணவனை இழந்தவள்—வந்துள்ளாள் என்று தெரிவிப்பாய்" என்றனள். அவனும் சென்று "வாழிய அரச! கடைவாயிலில் ஒருவள் வந்துள்ளாள். அவள் காளியுமல்லள். பிடாரியுமல்லள்! கணவனை யிழந்தவள்! கோபங்கொண்டுள்ளாள்! கையில் சிலம்பொன்றுடையாள்! உன்னைக் காண விரும்புகிறாள்" என்றான். "அவளை வரச்செய்" என்றான் அரசன்.

கண்ணகியும் வந்தனள். "நீ யார்? ஏன் அழுகிறாய்?" என்றனன் அரசன். "தீர ஆலோசனை செய்யாத அரசனே! கேளும் யான் சொல்வதை: "ஆடுங் கடைமணி நாவசையாது" செங்கோல் நடத்தும் சோழன்பதியாகிய புகாரே என்னூர். அவ்வூரில் வணிகர் குலத்திலகனாகிய மாசாத்துவான் மகனாகி, வாழ விரும்பி—என் [illegible] யை விலை பகர்தல் பொருட்டு இங்குவந்து, நியாயத்தை அறியாது கள்வனாக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்ட அக்கோவலனார்தம் மனைவியே யான். உன் கொடுங்கோன்மைக்கு இரையாகிய கோவலனார் மனைவியே யான். என்பெயர் கண்ணகி" என்றவள் சொல்ல "கள்வனைக் கொல்லுதல் அநீதி எவ்வாறாகும்" என்றான் அரசன். "என் கணவன் கள்வனல்லவே யல்லன். என் காற்சிலம்புள் மாணிக்க பரல்கள் உள்ளன; வேண்டுமாயின் பரீட்சைசெய்து மற்றது பேசும்" என்றனள் கண்ணகி. என்றதும் அரசன் தன்னிடத்திருந்த சிலம்புள் முத்துப் பரல்தான் உள்ளனவெனலும் "உமதைக் கொண்டு வரும்படிச் செய்யும். என் கணவன்பால் கொண்ட சிலம்பையும் கொண்டுவரும்படிச்செய்யும். அதுவும் பார்ப்பேன். மாணிக்கப் பரலுள்ளது எனதென்று காட்டுவேன்" என்று கண்ணகி கூற அரசனும் கொண்டுவரும்படிச் செய்தனன்.

தன் கணவனது பெயரை நிலைநாட்ட வேண்டுமென்ற பேராவலூட்டிய ஆவேசத்தால் தனக்கும் தெரியாது தன்னிருகைக்குள் அச்சிலம்பை வைத்து, என் கணவனும் கள்வனோ!,—, ஹூம்!—, என்றோர் இறைச்சல் செய்து தன் கையைப் பிசைந்தனள், எங்கிருந்து தான் வலிவென்பதுண்டாகியதோ தெரியவில்லை. உடனே அச்சிலம்புடைந்து மாணிக்கக் கற்கள் சிதறியதும் "கொடுங்கோன்மைக்காளாகிய யானு மரசனோ?" என்று கூறிக்கொண்டே அரசன் தலைசாய்ந்துயிர் போயதும், காலம் ஒன்று தான் என்பதற்கு ஸந்தேஹம் கிடையாது.

அரசன் இறந்ததறியாத அரசி தன்னைக்காக்க வேண்டுமென்றதும், அவளை லக்ஷியம் செய்யவில்லை. உடனே கண்ணகி "யான் கற்புடையாளாயின், இவ்வூழியக்கடவது. என் கணவனுக்கிணங்கிய இக்கொங்கைகள் எனக்கேன்" என்று சொல்லிக்கொண்டு மனவுறுதி முழுதுங்கொண்டு இடக்கொங்கையைத் தனது வலக்கையால் பிசைந்து திருகியெடுத்து "உனக்கின்பமூட்டியவனைக்கொன்ற இவ்வூரை எரியுள் புகுவிப்பாய்" என்று கூவி மதுரையம்பதியின் மேலதை வீசி எறிந்தாள்.

உடனே அக்நிபகவான் அவள் முன் வந்து "இவ்வூரை எவ்வாறு அழித்தல் வேண்டுமென்று வினவ" "பிராஹ்மணர், தர்மஞ் செய்வோர் பசுக்கள், கற்புடையோர், பெரியோர், இளங்குழந்தைகள், [illegible]வர்கள் இவர்களை விட்டுவிட்டுக் கீழ்க்குண மோங்கி வளரு[illegible] [illegible]மிப்பாயாக" என்று சொல்ல, அக்நிபகவான் அவ்வாறே செய்தான். இதைப் பொறுக்கமுடியாது பூமி தேவியானவள் கண்ணகிபால் வந்து அவளது பூர்வ ஜன்ம விருத்தாந்தங்களைக்கூறி, அவளைத் தேற்றி, அவள் கோபத்தீயையாற்றி "இன்றைக்குப் பதினாலாவது நாள் நீ கணவனோடு தேவருலகடைவாய்" என்று சொல்லிப்போந்தனள். கண்ணகியும் வையையாற்றங்கரையோரமே சென்று, மலைநாடடைந்து, அங்குத் திருச்செங்குன்றமென்னு மலைமீதிருந்த வேங்கை மரத்தின்கீழ் இருந்தாள். பதினான்காநாள் இரவு, கோவலன் தெய்வவடிவொடு வந்தவளை விமானத்தின் மேலேற்றிக்கொண்டு தேவருலகு சென்றான்.

கண்ணகிக்காகத் தமிழ்நாடுமுழுதும் கோயில்களாக்கப்பட்டன. கோயில்கள், சேரன் சோழன்பாண்டியன்முதலிய வரசர்களாலும், இலங்கையிலாண்ட கஜபாஹு என்னு மரசனாலும் கட்டப்பட்டன. கண்ணகியின் கோபத்தைத்தணிக்கவும், கோவலனிறந்தது முதல் மதுரைக்குவந்த கேட்டை ஒழிக்கவும் ஆயிரம் பொற்கொல்லரை (தட்டாரை) பலியிட்டுக் களவேள்வி (யாகம்) ஒன்றியற்றினன் இளஞ்செழியன் என்னும் பாண்டியன்.— என்பது சிலப்பதிகாரக்கதை. *

வா. சேஷகிரி.

* கோவலனைக் கொலைசெய்த இடத்திற்கு 'கோவலன் பொட்டல்' என்று இப்பொழுது வழங்குவதாகவும், அதில் பயிர் விளைவதில்லை ஆயினும் இப்பொழுது நாகப்பட்டினம் சுப்ரமண்ணிய அயயர் என்பவர் வாங்கி விருத்திசெயதும் செழிக்கவில்லை என்றும் கேள்விப்படுகிறேன். வா. சே.

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

மரங்களை வைத்துண்டாக்குதல்.—ஒவ்வொ[illegible]ரும் தங்களால் எ[illegible]யங்களை வைத்துண்டாக்[illegible]மோ அவ்வளவு வைத்துண்டாக்கவேண்டும். முதல் முதல் மரங்கள் எல்லோருக்கும் மனோரம்யம் உண்டாக்கி அவைகளின்மேல் பிரீதி யுண்டாக்குகிறது. அவைகள் வெயில் நேரத்தில் நிழல் கொடுக்கிறது. அவைகள் அடுப்புக்கு விறகு தருகின்றது. அவைகளின் நிழலால் புல்விருத்தி பாகிறது. அவைகளின் இலை காய்கள் மாட்டுத் தீனிக்கு உபயோகப்படுகிறது. கடைசியாய் மரங்களிலிருந்து உத்திரங்கள் முதலிய சாமான்களும் கிடைக்கிறது. குடியானவன் தன் நிலத்தின் மத்தியிலிருக்கும் மரங்களை வெட்டி அப்புறப்படுத்தாமல் அதைச்சுற்றிலும் உழுதுகொண்டு வரும் பழக்கம் அனேகமாய்த் தப்பான காரியம். ஆனால் கொல்லைகளின் ஓரங்களிலும், தெருக்கள் பாட்டைகளின் பக்கங்களிலும், வீடுகளைச் சுற்றிலும் மரங்களை வைத்துண்டாக்குவது தப்பிதமல்ல. இத்தேசத்தில் மரங்கள் வைத்துண்டாக்குவதில் கொஞ்சமும் பிரயாசை கிடையாது ; ஆரம்பத்தில் கொஞ்சம் கவனம் செலுத்தி விட்டால் அவைகள் சுலபமாய் உண்டாகின்றன. நல்ல விதைகளாய்ச சேகரித்து அவைகளைச் சரியானபடி உரம்போட்டு தயார்செய்த சிறு பாத்திகளில் விதைக்கவேண்டும். செடிகள் கொஞ்சம் வளர்ந்து சுமார் ஒரு அடி உயரமாகி நட லாயக்காயிருக்கும்போது, 3 அடி ஆழமுள்ளவும், 3 அடி சச்சதுரமுள்ள குழிகள் தோண்டி அக்குழிகளிலிருந்து எடுத்த மேல் மண்ணையும், கெட்டியாயிருக்கும் கீழ்மண்ணையும், வெவ்வேறு குவியல்களாய்ப் போட்டு வைக்கவேண்டும். இக்குழி தோண்டப்பட்ட இடம் கல்காடாயிருந்தால் அக்குழிகளுக்குள் கொஞ்சம் நல்ல களிமண்ணையும், களி நிலமாயிருந்தால் அவைகளில் கொஞ்சம் கல்சரளையையும் போடவேண்டும். அப்பால் குழி தோண்டும்போது வைத்திருக்கப்பட்ட மேல் மண்ணையும், கொஞ்சம் கலப்பு பசளை எரு மண்ணையும் (Vegetable mould) சமபாகம் சேர்த்து நன்றாய்க் கலக்கி அக்குழியில் போட்டு நன்றாய் மிதித்து அதில் செடி நடவேண்டும். செடியை நட பாத்திகளிலிருந்து அப்புறப்படுத்தும்போது அதன் வேர்களைச்சுற்றிக் கொஞ்சம் மண்ணிருக்கும்படி கட்டியுடன் பெயர்த்து, அந்த மண்ணை உடையாமல் நன்றாய் உருண்டைசெய்து அதை நடவேண்டும். நட்டவுடன் செடிக்கு நன்றாய்த தண்ணீர் [illegible]த்து அப்பால் வாரத்துக்கு ஒருதரம் ஒரு சட்டி தண்ணீர் வார்க்கவேண்டும்.

***

இந்தியாவிலிருந்து எருவகைகளின் ஏற்றுமதி.— 1907-08-ம் வருஷத்தில் 4,30,000 ரூபாய் பெறுமான எலும்புகளும், $7\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் பெறுமான மீன் எருவும், 15 லக்ஷம் ரூபா பெறுமான பிண்ணாக்கு எருவும், 28 லக்ஷம் ரூபா பெறுமான கால்நடைகளுக்கு உணவாக உபயோகப்படும் பிண்ணாக்கு வகைகளும் ஆக 54,80,000 ரூபாய் பெறுமான வஸ்துக்கள் ஏற்றுமதியாயின. இப்படியிருக்க, கால் லக்ஷம் ரூபாய் பெறுமான எருவகைகள் தான் மற்ற தேசங்களிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியாயின. இப்படியுண்டான ஏற்றுமதி இறக்குமதிகளுக்குள்ள பேதம் பெரிதாயிருக்கிறது. இதைத்தவிர அயல் தேசங்களுக்கு ஏற்றுமதியாகும் தைலவித்துக்களையும் சேர்த்துக் கணக்கிட்டால் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்குமுள்ள வித்தியாசம் மிக்கப்பெரிதாகும். ஏனென்றால் அவைகளிலிருந்து அதிக உபயோகமுள்ள பிண்ணாக்கு செய்யப்படுகிறது. அவ்வருஷத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட தைல வித்துக்களின் மொத்த விலை மதிப்பு 169-லக்ஷ ரூபாயாகிறது. இவ்விதமாக இவ்விராஜதானியிலிருக்கும் நிலங்கள் ஒவ்வொரு வருஷமும் அடையும் நஷ்டம் சுமார் இரண்டு கோடி ரூபாய் விலைமதிப்புள்ளதாயிருக்கிறது. எலும்புத்தூள், எலும்பு எருவகைகள், பிண்ணாக்கு எருவகைகள், மீன் எரு முதலாகிய இந்நாட்டு எருப்பொருட்களை இங்கேயே முன்னிலும் அதிகமான அளவுக்கு உபயோகப்படுத்துவதால் மேற்சொன்னபடி யுண்டாகும் அதிகமான கெடுதியை நிவர்த்திக்கக்கூடும். எலும்புத்தூளைப் புன்செய் சாகுபடியில் உபயோகித்தால் அது பக்குவமடைந்து பயிர்களுக்கு உணவாவதற்குக் காலதாமதப் படுவதாயிருந்தாலும், நன்செயசாகுபடியில் உபயோகித்தால் அதைவிட சீக்கிரத்தில் பயிருணவாகிறது. மேலும் "போட்டாஸ் எரு" வென்று சொல்லும் சாம்பல் காரத்துடன் கலந்தால் அந்தக் கலப்புப் பொருள் பயிர்களுக்கு அவசியமான எல்லா உணவுப்பொருள்களையும் கொடுக்கக்கூடிய "சம்பூர்ண எரு" வாகிறது. இந்தக் கலப்பெருவானது நெற்பயிருக்கு அதிகப்பயன் தருவதை நிரூபிப்பதற்குப் போதுமானமட்டிலும் வேண்டிய ஆதாரம் சென்னை விவசாய டிபார்ட்டுமெண்டாரால் சேகரிக்கப்பட்டிருக்கிறது. இவ்விராஜதானியில் எலும்புத்தூள் அநேக தரங்களாகச் செய்யப்படுகின்றது. மேலும் "எலும்பு சூபர்பாஸ்பேட்" என்னும் எருவும் இப்போது செய்யப்படுகின்றது. இவ்வெருவகைகள் கிருஷிகருக்கு அதிகமாய்த் தேவையாகும்போது எலும்புத்தூள் செய்யும் வியாபாரம் அதிகமாக விர்த்தியடையக்கூடும். "எலும்பு சூபர்பாஸ்பேட்" அநேக பயிர்களைச் சீக்கிரத்தில் வளரச்செய்து பலன் கொடுக்கச் செய்யும் எருவாகும்; மேலும் அதைப் புன்செய் சாகுபடியிலும் உபயோகிக்கலாம்.

***

அவுரி.—இது பசுந்தாளுக்காகப் பயிரிடுவதற்கு வெகு உபயோகமுள்ள பயிர். இது நீடித்த கோடையிலு முண்டாகும். களிமண் நிலங்களில் ஈரந் தங்கியிருக்கும்போது உண்டாகும். ஆனால் கொஞ்சமாவது களருள்ள நிலங்களில் உண்டாகாது. காவேரி நதி தீரத்தில் இது இப்போது அதிகமாய்ப் பயிராகிறது. சம்பாப்பயிர் அறுவடையாகுங் காலத்தில் இந்தப் பயிர் விதைக்கக்கூடும். விதை முளைப்பதற்குப் போதுமான ஈரமிருக்குமானால் அறுவடையானவுடனே கூடிய சீக்கிரத்தில் நிலத்தை உழுது விதைத்துவிடலாம். நிலம் அதிகமாய்க் காய்ந்து போனாலும், அல்லது கலப்பையில் மண் ஒட்டும்படி அவ்வளவு அதிக ஈரமாயிருந்தாலும், நெற்பயிர் அறுவடையாவதற்கு ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்கு முன் வயலில் தண்ணீரிருந்தால் அதை வடித்துவிட்டு அவுரி விதைகளை விதைத்துவிடவேண்டும். பெரம்பலூர் தாலூகாவில் குளத்துப்பாசன நிலங்களில் அவுரியைக் கம்புப்பயிருடன் கலந்து விதைத்துக் கிணற்றுத்தண்ணீர் பாய்ச்சும் மேன்மையான பழக்கம் இருந்து வருகிறது. கம்புப்பயிர் விளைவானவுடனே அதை வெட்டிக்கொண்டு அவுரியை நிலத்தில் விட்டுவைக்கிறார்கள். இதில் அதிகமான தழைப்பயிர் உண்டாகிறது. சம்பாப்பயிர் நடுகைசெய்யுங் காலத்தில் இதை நிலத்தில் மடித்து உழுதுவிடுகிறார்கள்.

மஹாபாரதம்.—தற்காலத்திலிருக்கும் மஹாபாரதப் பதிப்பானது மெத்தப் பிழையுள்ளவைகளாய் இருக்கிறபடியால், அவற்றைப் பரிசீலனஞ் செய்து சுத்தப் பிரதியாய் ஒன்று பதிப்பிக்க 1904 வருஷத்தில் ஐரோப்பாவிலுள்ள வித்வத்ஸபைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தீர்மானித்தன. அதற்கு இப்போது 2500 (பவுன்) சேர்ந்திருக்கிறதாம். ஆனால் இதற்கு இன்னும் ஒரு லக்ஷம் ரூபாய் தேவையாம். இதை இந்தியாவின் சிற்றரசர்களே கொடுத்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

***

பால் பொடி.—ஜெர்மெனியில் கோதன்பர்க்கிலிருக்கும் டாக்டர் எம். எகன்பர்க் என்பவர் பாலை மாவு போன்ற ஒருவிதப் பொடியாகச் செய்ய ஒரு யந்திரம் கண்டுபிடித்திருக்கிறார். இந்தப் பொடியில் ஜலம் தவிர பாலிற்கு இருக்கவேண்டிய குணங்களெல்லாம் இருக்கிறதாம். பாலை நாம் எந்தெந்த விதத்தில் உபயோகப்படுத்திக் கொள்ளுகிறோமோ, அந்தக் காரியங்களுக்கெல்லாம் இந்தப் பொடியை ஜலத்தில் கரைத்து உபயோகப் படுத்திக்கொள்ளலாம். அநேக நாட்களுக்கு தகரப் பெட்டியில் போட்டு வைத்துக்கொண்டு எங்கே வேண்டுமானாலும் கொண்டுபோகலாம். ஏடெடுத்த பாலை இது வரையில் வீணாகி வந்ததைத் தவிர்த்து இந்தப்பொடி செய்ய உபயோகித்து வருகிறார்களாம்.

***

எலித்தோல் கைத்தொழில்.—எலித் தோலைக் கொண்டு சீமையில் படங்களுக்குச் சட்டங்கள் செய்கிறார்கள். புஸ்தகங்கள் பைண்டு செய்கிறார்கள். தவிர பை முதலியவைகளும் செய்கிறார்கள். இந்த மாதிரி போன வருஷத்தில் செய்யப்பட்ட சாமான்கள் $7\frac{1}{2}$-லக்ஷத்துக்கு விற்கப்பட்டனவாம். கல்கத்தாவில் எலி அதிகமாக அகப்படுகிறதென்று எண்ணிச்சில ஐரோப்பியர்கள் சீமையிலிருந்து வந்து இந்தச்சாமான்களைக் கல்கத்தாவில் செய்யப் போகிறதாகத் தெரிய வருகிறது.

The Lakshmi Silver Shirt Buttons



★ SEND A TRIAL ORDER AND YOU WILL BE CONVINCED OF THE TRUTH ★

★ LOOK SHARP — DON'T LOSE THIS OPPORTUNITY ★

A PAIR OF SOLID SILVER SLEEVE LINKS AND WATCH CHARMS SWADESHI MANUFACTURE with the impressions

OF THE LIKENESSES OF

Queen Victoria, King Edward VII, Queen Alexandra, Maharaja Sivaji, Vigneswar, Hanuman, Krishna, Naradh, Thukaram, Sri Guroo Dathathria, Lala Lajpat Rai, Bal Gangadhar Tilak, Dadabhoy Naoroji, Shanker, Mother India, Lakshmi, Saraswati, and other Hindu Goddesses, Aum, Rama, and Vande Matharam Links in Sanskrit letters and various other sorts available.

One complete set	...	**Rs. 3-0**	**Postage extra.**
One pair sleeve links	...	**„ 1-8**	
3 sets at a time	...	**„ 8-8**	

PURE SILVER ALBERT CHAINS

HALL MARKED



All patterns at Rs. 4, 4-4, 4-8 & 5 each according to weight

Assorted patterns always in stock

Please quote the number and price when ordering to avoid confusion

மேற்கண்டமாதிரி கடியாரச்சங்கிலிகள், ஷர்ட் பித்தான்கள், கடியாரச் சங்கிலியில் சேர்த்துத் தொங்கவிட்டுக் கொள்ளக்கூடிய அழகிய உருவங்கள், பளபளப்பான வெள்ளைக்கல் வைத்த பித்தான்கள் எங்களிடம் கிடைக்கும். வேண்டுவோர் எழுதி வரவழைத்துக்கொள்ளலாம்.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி,

மைலாப்பூர், மதராஸ்.

REGISTERED 7-APR 1910 OFFICE OF THE ... BOOKS MADRAS.

விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி II } சௌம்ய௵ மாசி௴ 1910-௵ பிப்ரவரி௴ { பகுதி 8

ஆராதனை : பொதுக் குறிப்புகள்

WORSHIP. GENERAL REMARKS

ஆராதனைகள் பொதுவாக வெளிப்படை, அந்தரங்கம், காம்யம், நிஷ்காம்யம், என்ற நான்கு வகை என்றும், சிறப்பாக நோக்கின் பிதிர்க்கள், ஆசாரியன், இஷ்டதேவதை, பரம்பொருள் ஆகிய இவர்களை ஆராதிப்பது என்று நான்குவிதம் என்றும், தெரியவருகிறது.

வெளிப்படை அந்தரங்கம் இவ்வித ஆராதனைகளின் முக்கிய நோக்கம் யாதெனில், நமது உலகத்தொழில்களிலிருந்து நம்மைப் பிரித்து உலகவிஷய லாபம் ஒன்றும் இல்லாத செயல்களில் கொஞ்சமாகிலும் பிரவர்த்திக்கும்படி செய்து, நமது மனதைத் தகுந்தபடி விசாலப்படுத்தி ஏகாக்ரப்படுத்த வேண்டும் என்பதே. இவ்விதமாகச் சுத்தப்பட்ட மனதில் ஆத்மாவின் நிஜரூபம், அசைவற்ற தண்ணீரில் ஆகாயம் பிரதிபலிப்பதுபோல், நன்றாக வெளியாகும். இவ்வாறு வெளியாவதனால் உண்டாகும் ஆனந்தமே எந்நாளும் அழியாது நிலைத்திருப்பது. இந்த ஆனந்தமாகிய ஆத்மானந்தம் மனிதனிடம் இருக்கிறது. இதை அடையும் சக்தியும் இவனிடம் உண்டு. ஆனால் இக்காலத்திய நாகரீகத்தால் மனிதனுக்கு ஏற்படும் தொழில்களில் அவன் மனம் அழுந்தி அசுத்தப்பட, அவன் காலத்தைப் பெரும்பாலும் அவைகளிலேயே ஓயாது கழிப்பதால், இவ்வித ஆராதனைகளுள் ஒன்றையும் செய்யக் காலமில்லாமற்போக, வரவர உலக விஷயங்களில் அவன் பற்றுடையவனாகி அசுத்தனாகிறான். இதிலிருந்து மனிதர்களைக் காக்கவே இவ்விருவித ஆராதனைகளும் ஏற்பட்டுள்ளன.

காம்ய நிஷ்காம்ய ஆராதனைகளும் இதையே நோக்கமாக உடையன. மேலும் உலகத்தில் ஸாதாரணமாக ஸுகதுக்கங்கள் மாறிமாறி வரும். இதில் ஸுகத்தைத் தக்கவைக்கவேண்டும், துக்கத்தை நீக்க வேண்டும் என்று மனிதனுக்கு வீண் ஆசை. ஆகவே துக்ககாலத்தில் அது நிலையற்றது, மிகுந்த வெறுப்பை உண்டாக்குவது என்று உணர ஒருவனுக்குச் சித்தசுத்தி உண்டாகின்றது. ஸுக காலத்திலோ அவ்வாறின்றி மனிதனுக்குப் புத்திமழுங்கிப் போகின்றது. ஸுகத்தின் நிலையாமை அப்பொழுது விளங்காமல் போக அதில் மனம் அழுந்தி மனிதன் மனம் கலங்குகிறது. காம்ய ஆராதனை மூலமாக வேதம் மனிதன் மனதில் ஆராதனத்தைப் புகட்டி விடுகின்றது. வரவர உலக விஷய நிலையாமை விளங்க மனிதனிடம் ஆராதனை மாத்திரம் தங்கிவிடுவதால் அது நிஷ்காம்யமாகிறது. ஆகவே இவ்விருவித ஆராதனைக்கும் பரம்பொருளை உலகப் பற்றின்றி மனிதனை வழிபடச் செய்யவேண்டும் என்பதே நோக்கம். ஆனால் காமிகள் இதை உணரார்கள். அவர்கள் தமது ஆராதனையால் ஸுகம் நிலைத்துவிடும் என்று நிஷ்காமிகளாகும் வரையில் வீணாக எண்ணிக்கொண்டிருப்பார்கள்; பழக்கத்தால் இந்த எண்ணம் மாறும்.

சிறப்பாகக்கூறிய ஆராதனக் கிரமங்களின் நோக்கம் யாதெனில் நாம் ஆராதிக்கும் வஸ்து, தோற்றங்களுக்கு அப்பாற்பட்டது, நம்மைவிட மேலான நிலையில் இருப்பது என்று காட்டுவதே. இந்த வஸ்து தோற்றங்களைப்போல மாறுதலடைவதன்று, இது நித்யவஸ்து என்று இந்நான்கு சிறப்புவித ஆராதனைகளும் குறிப்பிக்கின்றன. இத்தகைய வஸ்துவின் நிஜரூபம், ஆனந்தம் முதலியன உள்ளபடி பரம்பொருள் ஆராதனத்தில் தான் நன்றாக வெளியாகும்.

ஆதலால் இக்காலத்திய நாகரிக அவஸரத்துள் அகப்பட்டு வீணாகக் கெட்டுப்போகாது, நம்முள் ஒவ்வொருவருக்கும் சிறப்பாக ஏற்பட்டுள்ள ஆராதனைகளை விடாது, அவைகளின் நோக்கத்தை மறவாது, அவைகளில் தகுந்தபடி தினம் கொஞ்சகாலமாகிலும் பழகி, மேலான நமது நித்யானந்த நிலையை நாம் அடைய முயலவேண்டும்.

விவேக போதினி

தொகுதி 2] ஸௌம்ய௵ மாசி௴ [பகுதி 8

யாகங்கள் - பொதுக் குறிப்புகள்

YAGAS—GENERAL REMARKS

இக்காலத்தில் மாம்ஸ பக்ஷணமே கனவிலும் அறியாத பிராம்மணர் முதலிய சில ஜாதியார்களுக்கு முன்னர் எடுத்துக் காட்டியுள்ள ஸோமயாகம் முதலியவைகளைச் செய்ய மனம் வராது. இவர்கள் ஜீவ ஜந்துக்களைத் தமக்கு ஸ்வர்காதி போகம் வேண்டும் என்றோ அல்லது பகவானை ஆராதிக்கவேண்டும் என்றோ எவ்வாறு கொல்லத் துணிவர்? இது "அஹிம்ஸாபரமோதர்ம:' என்ற ஜீவகாருண்யக் கோட்பாடுக்கு விரோதம் அல்லவா?' என்று அவர்களுக்கு அடிக்கடித் தோற்றிக்கொண்டிருக்கும் என்பதற்கு என்ன ஸந்தேகம்? ஆதலால் இந்து முதலில் யாக விஷயமாக ஏற்படும் இந்தச் சங்கைக்கும், இதிலிருந்து மேல் உண்டாகக்கூடிய மற்றைய சங்கைகளுக்கும் தகுந்த ஸமாதானம் கூறப்புகுவோம்.

இந்தச் சங்கையை எடுத்து விஸ்தரிக்கும் முன்னர், நாம் அவசியம் தர்ம விஷயமாக ஒன்றை ஞாபகத்தில் வைக்கவேண்டும். 'எது தர்மம், எது அதர்மம்?' என்ற விஷயத்தைத் தீர்மானிக்க நாம் நமது புத்தியை மாத்திரம் ஆதாரமாகக் கொள்ளக்கூடாது. இந்தப்பொருள் ஔவையார் உலக நீதியில் 'மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்' என்ற வாக்கியத்தில் அமைந்து கிடப்பதையும் காணலாம். பொதுவாக ஜாதியார்கள் செய்யும் தீர்மானத்தால் அறியலாமோ எனின், அதுவும் அவ்வளவு நல்ல வழியல்ல. ஜாதியார்களுக்குப் பொதுவாக வரும் தீர்மானம், அவர்களுள் பெரியவனால் ஏற்படக்கூடியதே ஒழிய வேறல்ல. அவனும் குறைவுகள் நிறைந்த மனிதனாதலின் அவனுடைய மனோபலத்திற்கேற்பவே அவனிடம் இருந்து தீர்மானங்கள் பிறக்கும். இதை இவ்வழிகளில் ஒன்றும் தீர்மானம்செய்ய முடியாதாகையால் இதற்கு ஒரே வழிதான் உண்டு. அதாவது வேதம் முதலியவைகள் உணர்ந்த நமது குருவோ அல்லது மூதாதைகளோ செய்யும் தீர்மானத்தின்படியே நாம் நமது நடவடிக்கைகளைத் திருத்திக்கொள்ளவேண்டும். இதிலும் வேதமே முக்கியமாக நாம் எடுத்துக்கொண்டு யோசிக்க வேண்டிய விஷயம். அதிலுள்ள விஷயங்களைப் பரிசீலனம்செய்து பார்த்துவிட்டுப் பின்பு நமது பெரியோர்கள் நடத்தை (அதாவது சிஷ்டாசாரம்) இவ்வாறிருக்கிறது என்பதை நன்குணர்ந்து அதன்படி ஒழுகவேண்டும். இதையே தருமபுத்திரர் கொக்கு ரூபமான யக்ஷன் கேட்ட கேள்விகளில் ஒன்றிற்குப் பதிலாகக் கூறுகிறார். 'எது மோக்ஷ பந்தா?' என்ற கேள்வி பிறக்க, தருமபுத்திரர், 'வேதங்கள் பலவாறாக இருக்கின்றன. தர்க்கத்தால் பயனில்லை. ரிஷிகளது அபிப்பிராயங்கள் பேதப்பட்டிருக்கின்றன. மத விஷய உண்மைகளோ ரஹஸ்யமாக இருக்கின்றன. ஆகையால் சிஷ்டாசாரமே மோக்ஷ பந்தா.' என்று மறுமொழி கூறினார். ஆதலால் பரமகுருவாகிய ஈசனிடம் இருந்து வந்திருக்கும் வேதங்களை இவ்வாறு சிஷ்டர்கள் அநுஷ்டித்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து நாம் இன்னது தர்மம் இன்னது அதர்மம் என்று கண்டு நடத்தல்வேண்டும்.

யாகங்கள் பண்ணுவது நியாயமன்று என்று கூறுவதற்கு முக்கிய காரணம், அவைகளில் பிராணிஹிம்ஸை இருத்தலே. பிராணி ஹிம்ஸையை நோக்கி இவ்வாறு வீரிட்டெழுவது நமக்கு அழகன்று. உலகில் பிராணிஹிம்ஸையே செய்யாமல் ஒருவனால் இருக்கக்கூடுமோ?

வீரஸ்வர்க்கம் என்ற பதவிக்கு மனிதனைத் தகுந்தவனாக்கி அவன் புகழை உலகுள்ள அளவும் நிலைநிறுத்திவைப்பது தர்மயுத்தம் அல்லவா? அதன் முக்கியமான ஸ்வரூபம் பிராணி ஹிம்ஸை அல்லவா? போர்முனையில் உள்ள ஓர் வீரன் மற்றொருவனைக் கொல்லுகிறான். அவ்விருவர்களுக்கும் முன்பின் விரோதம் ஏதாவது உண்டா? அல்லது, ஏதாவது சண்டைதான் நேரிட்டதா? அப்படி இருந்தும் ஒருவரை ஒருவர் அடிக்கும்படி யுத்தத்தில் நேர்ந்து விடுகிறதில்லையா? இந்த ஸமயத்தில் போர்வீரன் கொலைத்தொழிலை ஜீவகாருண்யத்தால் நிறுத்தி விட்டால் அவன் குற்றவாளியாகி விடுகிறான். இவ்வாறே அநேக ஸமயங்களில் பிராணி ஹிம்ஸை நாம் அவசியம் செய்யவேண்டி வந்துவிடும். இம்மாதிரி விஷயங்களில் யாகம் ஒன்று. ஜீவஹிம்ஸை இருக்கிறதே என்ற பயத்தால் மாத்திரம் யாகத்தில் நம்பிக்கை உடையவர்கள் அதை நிறுத்திவிடக்கூடாது. போர்வீரன் போரை நிறுத்திய குற்றம் அவனுக்கு வந்துவிடும். அவசியம் வரக்கூடிய மரணத்திற்குத் தர்மத்தை நடத்துங்கால் இவ்வளவுபயம் மனிதனுக்குஇருக்கவே கூடாது. இந்த ஸமயத்தில்தான் ஆத்மா அழியாதது, அது வேறு சரீரம் ஏற்றுமரணத்திற்குப்பின் மறுபடியும் கர்மானுஸாரம் பிறக்கும் என்ற ஞானம் ஸஹாயமாக வந்து நமக்குத் தர்மத்தை நடத்துவதில் ஏற்படும் தடைகளை நீக்கவேண்டும். இல்லாவிடில் நாம் தொடை நடுங்கிகளே யாகிவிடுவோம். ஸ்வதர்மம் நடத்துங்கால் தீரனாக இருத்தல்வேண்டும் என்ற ரஹஸ்யத்தைத்தான் கிருஷ்ண பரமாத்மா யுத்த ஸமயத்தில் பகவத்கீதையில் அர்ச்சுனனுக்கு உபதேசித்தது.

ஹிம்ஸை செய்வது கொடியபாபம்தான். ஆனால் நம்முள் ஜீவகாருண்யம் நிறைந்தவர்களுக்குக்கூட கொஞ்சமேனும் எதற்காவது கஷ்டங்கொடுக்காது ஜீவிக்கவே முடியாது. மாம்ஸபக்ஷணிகளை விட்டுவிட்டு மற்றையவர்கள் நிலையை உற்றுநோக்குவோம். அவர்கள் மூச்சுவிடும் காலத்தும், நடக்கும் காலத்தும், கஷ்டம் அனுபவிக்கும் காலத்தும், நாக்குப்பூச்சி, மூட்டைப்பூச்சி, தேள், பாம்பு, முதலியவற்றைக் கொல்லுங்காலத்தும் அவர்கள் செய்வது பிராணிஹிம்ஸை அல்லவா? மரத்தை வெட்டுவது, பிஞ்சுகளைத் திருகுவது இவைகளைச் செய்யலாகாது என்று பெரியோர்கள் சொல்வார்கள் அல்லவா? இதைப்போன்றது தானே, புஷ்பம், இலை, காய், பழம் முதலியவைகளைச் செடி, கொடிமரங்களிலிருந்து பறித்து உண்பதும். இதனால் தானே சில மஹான்கள் மரம் முதலியவைகளிலிருந்து உதிரும் சருகு பழங்களை உண்டு காலம் தள்ளியிருக்கின்றனர். ஆதலால் இம்மண்ணுலகில் வாழுவதற்கு ஏதாவது ஓர்விதத்தில் பிராணிஹிம்ஸை இல்லாது முடியாது. ஆகவே 'கொல்லுவது தர்மமா அதர்மமா' என்ற சங்கை நிலைக்க இடமே இல்லை. நமக்கு நியாயமாக யோசிக்குங்கால் எதைக்கொல்வது தர்மம்? எதைக்கொல்வது அதர்மம் என்ற சங்கையே உண்டாகவேண்டியது. இதுதான் கர்மகாண்டத்தில் தீர்மானம் ஆகின்றது. *

* இது வரையில் வாசிக்கும் மிகுந்த ஜீவகாருண்யமுடைய நமது நண்பர்களுக்கு முற்கூறிய ஒழுங்குப்படி இக்காலத்து கோடானுகோடியாகக் கணக்கின்றி ஊனுக்கு வீங்கும் மாம்ஸபக்ஷிணிகளது செய்கையை நியாயம் என்று கூறிவிடும்படி வந்துவிட்டதே என்ற பரிதாபம் உண்டாகும். இதை நீக்க இரண்டு விஷயம் ஞாபகத்தில் வைக்கவேண்டியது. முதலாவது அதிகமாக 'ஊனைத்தின்று ஊனைப்பெருக்கவேண்டும்' என்ற ஆசையில்லாது ஏதோ வழக்கத்தின்கீழ் ஊன்தின்று வந்த பிராம்மணஜாதியார் பிராம்மணத்வம் நிலைக்க அக்காலத்தில் செய்துவந்த சில யாகங்கள் விஷயமாகவே இந்த ஆராய்ச்சி பொருந்துமே ஒழிய, இதை விபரீத அர்த்தம்செய்து குதர்க்கம் செய்யவேண்டும் என்ற கருத்துடன் எழுதியதல்ல. இரண்டாவது, இதை எழுதுபவர்களுக்கு ஜீவகாருண்யம் உண்டு, இருந்தும் இவ்வாறு எழுதிவரக் காரணம் ஏதாவது இருக்கும். ஆதலால் எழுதுபவர்கள் எண்ணங்களுக்கு விரோதமாகக் குதர்க்கம் பண்ணுவது அழகன்று. எழுதுவோரது நோக்கம் இவ்வியாஸம் முடிவில்தான் வெளிப்படுத்த முடியும். அதுவரையில நண்பர்களே! தயவு செய்து பொறுத்துக்கொள்ளவேண்டும்.

கர்மகாண்டமும் ஸ்மிருதிகளும் கொல்லுதல் பாபம் என்று முற்றிலும் கூறிவிடவில்லை. யாகவிஷயமாகக் கொல்லுவது பாபம் அல்ல என்பதே அவைகள் துணிபு. மேலும் இவ்விதம் பிராம்மணன் தவிர மற்றையவர்களுக்குக் கொல்லாமையை விதிக்கவில்லை. இந்த விஷயத்தைப்பற்றிச் சற்று ஆராய்வோம். யாகத்தின் பொது நோக்கம் ஸ்வர்க்க ஸுகத்தை அடைய வேண்டியது என்பதே. ஸ்வர்க்கத்தில் வெளி விஷயங்களில் இருந்து யாதொரு துக்கமும் வாராது. அப்படி இருப்பினும் இந்த ஸுகம் நீடித்து நிற்பதல்லவே; புண்யம் க்ஷீணித்தால் மறுபடியும் பூலோகம் போகவேண்டுமே; என்ற எண்ணங்களால் உண்டாகும் துக்கம் மாத்திரந்தான் அங்கு உண்டு. ஸ்வர்க்கத்தில் யாதொரு வித வெளிக்குறைவும் இல்லாததால், நன்மை செய்தல் முதலிய நற்குணங்களில் பழக இடமேஇல்லை. உலகில் செய்த நல்வினைகளின் பலத்தை மாத்திரந்தான் அங்கு அனுபவிக்கலாம். ஆகலால் ஸ்வர்க்கவாஸிகளான தேவதைகள் தமது நற்குணங்களில் பழகுவதற்கு உலகம் நோக்கி வரவேண்டியதுதான். தேவதைகளுக்கும் தத்தமக்கு உரிய ராகத்வேஷாதிகள் (விருப்பு வெறுப்புகள்) உண்டு. இதை அறிந்து அவர்களைத் திருப்திசெய்பவர்களுக்கு அவர்கள் நன்மை புரிகின்றனர். அவர்களை அச்சிரத்தையாக விட்டுவிடுபவர்களுக்கு அவர்கள் நன்மை புரிவதும் இல்லை. தேவதைகளிடம் ஸத்ஸங்கம், கெடுதியின்மை ஆகிய இவைகள் அமைந்திருக்கின்றன. இத்தகைய தேவதைகளையே பெரும்பாலும் யாகத்தில் பிராணி ஹிம்ஸை மூலமாக இஹலோக ஸ்வர்க்கலோக ஸுகம் வேண்டும் என்று பிராம்மணர்கள் ஆராதிப்பது.

'இத்தகைய தேவதைகளையா அநித்யமான ஸ்வர்க்க போகத்திற்காக ஆராதிக்க வேண்டும் என்று வேதங்கள் விதிக்கின்றன?' என்ற சங்கை பிறக்கும். இவ்வாறு விதிப்பது வேதத்தின் ஸ்வபாவமே. எல்லோருக்கும் பொதுவாக விதிக்கும் வேதம் அவரவர்கள் நிலைக்குத் தக்கவாறு தாழ்ந்தவர்களுக்குத் தாழ்ந்ததையும், மேலானவர்களுக்கு மேலானதையும், விதிப்பதில் என்ன தவறு. உலகப்பற்றுகள் உள்ள ஒருவனுக்கும், உலகம் ஸுகிக்கவேண்டும் என்ற ஆவலுடையவனுக்கும் வேதம் யாகத்தை விதித்தது. யாகத்தில் ஆராதிக்கும் தேவதைகள் நம்மைப் போலத்தாழ்ந்தவர்கள் என்று எண்ணிவிட வேண்டாம். இவர்கள் பரம்பொருளை உத்தேசிக்க மிகத் தாழ்ந்தவர்களாயினும், உலகில் வாழ்ந்துவரும் அவதாரங்களைத் தவிர, மற்றைய நம்முள் சிறந்தவர்களைவிட அநேக ஆயிரம் மடங்கு மேற்பட்டவர்களே. அவர்களிடம் பகவான் அதிகமாக விளங்குகிறார். ஆதலால் அவர்கள் மூலமாக இந்த யாகங்களில் பரம்பொருளையும் ஆங்காங்குத் துதிக்கும் மந்திரங்கள் தெளிவாகக் காணப்படுகின்றன. இவைகளே யாகங்களின் அந்தரங்க நோக்கத்தைக் குறிப்பாகக் காட்டுகின்றன. ஆதலால் பொதுவாக யாகங்களில் ஆராதிக்கப்படும் தேவதைகளாலே நமக்கு சிறந்த மேன்மைகள் வர இடம் உண்டு. அவர்கள் மிகத்தாழ்ந்தவர்கள் என்று இழிவாகப் பேசவேண்டியதில்லை.

இவ்வளவு நற்குணம் வாய்ந்த தேவதைகளைப் பிராணிஹிம்ஸை செய்து ஆராதிக்கவேண்டுமோ? இந்தக் குற்றமற்ற பிராணிகளைக் கொன்றதால் ஸ்வர்க்கம் வரும் என்று மனிதன் எண்ணுவது நியாயமா? என்ற சங்கை உண்டாகலாம். வேதத்தின் அந்தரங்கநோக்கம் எவ்வாறிருப்பினும், உலக விஷயங்களில் காணப்படும், மாம்ஸ பக்ஷணம் முதலியவைகளைக் கண்டு அவைகளுக்கு ஆளாக இருந்தவர்களுள் மேலான ஜாதியாரை நோக்கி 'நீங்கள் பகவத் அர்ப்பிதம் செய்யாது மாம்ஸம் உண்ணவேகூடாது' என்று விதித்தது. அவரவர்கள் வழக்கப்படி பொதுவாக எதை எவர்கள் உண்டபோதிலும், அதைப் பகவத் அர்ப்பிதம் செய்துவிட்டு உண்ணவேண்டும் என்பதே வேதத்தின் வெளிக்கொள்கை. இதை விதித்த வேதம் ஆஹுதியைச் செய்தபின்னர் வரும்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 7- APR 1910 MADRAS.

புகையை முகர்ந்தால்மாத்திரம் போதும் என்றது. ஆதலால் மாம்ஸம் முதலியவைகளை விட்டொழிவது வேதத்தின் உட்கருத்தாயினும், அதை உண்ணுபவர் அதை நிவேதனம்செய்து பகவானை ஆராதிப்பதைத் தடுக்காமல் விட்டது. இப்படி இருப்பினும் வேதத்தின் அந்தரங்க நோக்கம் கர்மகாண்டத்தில் ஆங்காங்கு வெளியாகின்றது, ஸ்வர்க்ககாமிகளாக இந்த யாகங்களைச் செய்பவர்கள் இந்த ரகஸ்யத்தை அறிவது மிகக் கஷ்டம். ஆதலால் தேவதைகள் பிராணி ஹிம்ஸையில் பிரியமுடையவர்கள், அவர்களுக்கு ஆடுகளைப் பலிகொடுக்கவேண்டும் என்பது கர்மகாண்டத்தின் நோக்கமே அல்ல, மேலும் யாகங்களில், பசுக்கள் இறக்குங்கால் கத்துவது முதலிய கஷ்டங்களுக்குப் பரிஹாரமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஆஹுதிகளே இந்த நோக்கத்தை வற்புறுத்துகின்றன. தேவதைகளை ஆராதிக்க வேண்டும். அவனவன் தனக்குப் பிரியமான வஸ்துக்களை அவர்களுக்கு அர்ப்பிதம்செய்து திருப்தி செய்யவேண்டும். முன்காலத்தில் மேலான ஜாதியாரும் மாம்ஸம் புஜித்திருந்தனர். ஆதலால் அவர்களுக்குப் பிராணி ஹிம்ஸை மூலமாக ஆராதனத்தை வேதம் கர்மகாண்டத்தில் விதித்தது. இதை நன்கு உணர்ந்து வேதத்தில் காட்டப்பட்டிருக்கும் கருணையைத் தெரிந்தவர்களாய் மாம்ஸ பக்ஷணத்தில் பழகியவரது யாகத்தை, கசாப்புக் கடையிலிருந்து வயிறு வீங்கமாம்ஸம் உண்ணும் ஸாதாரண ஜனங்கள் பிராணிவத நிமித்தம் பழிப்பது, குடியன், மருந்துக்காகத் தீராதென்று கொஞ்சம் மதுவைச் சேர்த்து மருந்துண்ணும் தர்மசீலனைப்பழிப்பதற்கு ஸமமே ஒழிய வேறில்லை.

இதுவரையில் கூறியதிலிருந்து மாம்ஸபக்ஷணத்திலிருந்த பழக்கம் விட்டு, பிராணிகளைக்கொல்லுவதில் ஓர்வித வெறுப்புடையவன் ஒருவன் யாகம் செய்யவேண்டியது அநுவசியம் என்பது நன்கு விளங்கும். ஆனால் வேதத்தில் வியக்தமாகக் கூறப்பட்டுள்ளதாயும், பிராம்மண்யம் நிலைப்பதற்குஅவசியமாயும் உள்ளயாகத்தை எவ்வாறு செய்யாது விடுவது என்ற சங்கை பிறக்கும், இதை இரண்டு விதமாக எடுத்து ஆண்டு ஸமாதானம் கூறலாம். (1) வேதங்கள் அதிகாரி பேதத்திற்கு ஏற்ப கர்மங்களை விதிக்கின்றன. மேலும் ஓர் கூட்டத்தார்களது ஸதாசாரமும் அவர்களது நிலைக்கேற்பமாறுதலும் அடைகின்றது. முன்காலத்தில் சிராத்தத்தில் மாம்ஸம் உபயோகப்படுத்திவந்ததும் அதற்குப் பதிலாக பின்னர் உளுந்து உபயோகப்பட்டுவருவதும் எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். ஆதலால் பிராணி ஹிம்ஸை இல்லாத வைதிககர்மங்களைச்செய்துகொண்டு மற்றவைகளை விட்டுவிடுவதால் நாம் வேதவிரோதிகளாகமாட்டோம். ஏனெனில் மேல்நோக்கி விருத்தியடைபவன் தாழ்ந்தவைகளை விட்டுவிடவேண்டியது நியாயம்தான். (2) யாகங்களில் ஆராதனமே முக்கியம், பிராணிஹிம்ஸை முக்கியமல்ல. ஆனால் முன்னர் எடுத்துக்காட்டியபடி பிராணியைக் கொல்லவேண்டும் என்பதன் உட்கருத்து நமது கோபத்தைக் கொல்லவேண்டும் என்பதே. ஆகவே நாம் செய்யும் யாகத்தில் கொடியபிராணிவதம் இல்லாவிடினும் அந்த ஸ்தானத்தில் உட்கருத்தைக்காட்டும் அறிகுறியான கர்மம் வேண்டும். இதற்கு ஓர் பிராணிபோன்ற உருவம்செய்து அதைப் பலிகொடுக்கவேண்டும். ஆகவே யாகத்தைப் பிராணிஹிம்ஸையின்றி நடத்தலாம்.

இங்கு எடுத்துக் கூறப்பட்ட ஸமாதானங்கள் நாமாகக் கூறியவைகள் அல்ல. இதற்கு ஆதாரமாகச் சிஷ்டாசாரமும் இருக்கின்றது. வைஷ்ணவர்கள் நாராயணனைப் பரதெய்வமாகக்கொண்டு 'ஸர்வம் வாஸுதேவமயம் ஜகத்' என்று மதித்து ஜீவகாருண்ய மிகுதியால் யாகத்தையே செய்யாது விட்டனர். இதுபோல சைவ ஸித்தாந்திகளும் கொல்லாமையைக் கைக்கொண்டு பிராணி ஹிம்ஸையை

உடைய யாகத்தைவிட்டனர். மாத்வர்களோ வேதத்தில் உள்ள கர்மத்தையும் விடாது, பிராணிஹிம்ஸையும் செய்யாது பிஷ்டபசுவை (மாவால் செய்தபசுவை) பலிகொடுத்து யாகத்தை நடத்துகின்றனர். * இதனால் ஆராதனமும் வைதிகதர்மப்படி நடக்கின்றது, பசுவதத்தால் ஏற்படவேண்டிய உட்கருத்தும் மாறுதிருக்கின்றது. அத்வைத ஆசார்யராகிய ஸ்ரீமத் சங்கராசாரியாரோ 'கர்மஸங்கிகளாக இருப்பவர்கள் நம்பிக்கைகளை அநாவசியமாகச் சீர்குலையும்படி செய்யக்கூடாது; வேதத்திலுள்ளவைகளைக் குற்றங் கூறலாகாது' † என்ற கொள்கைகளைப் பின்பற்றி யாகத்தைப் பழிக்காதும் 'இதை அதிகாரி பேதப்படி நடத்துபவர்கள், நடத்தட்டும்,' என்ற உட்கருத்துடன் யாகத்தை அவசியம் செய்யவேண்டும் என்று கூறினர்போலும். இதனால் தான் ஸ்மார்த்தர்களில் சிலர் மாத்திரம் இன்னும் ஆட்டைக்கொன்று யாகம் செய்து வருகின்றனர்.

இந்தப் பொதுக்குறிப்புக்களிலிருந்து நாம் உணரவேண்டிய விஷயம் பின்வருவன. வேத விஷயங்கள் அந்தரங்க நோக்கங்களை உள்ளடக்கியுள்ளன, ஆதலால் வேதத்தில் காணப்படும் விஷயங்கள் எதையும் குற்றங்கூறுவது பாபஹேது. வேதங்களில் அநேக மார்க்கங்கள் காணப்படுகின்றன. அவைகளுள் நமது நிலை சிஷ்டாசாரம் முதலியவைகளை உத்தேசித்து நமக்குத் தகுந்த மார்க்கங்களைப் பின்பற்றி ஒழுகலாம். இதை உத்தேசித்து பிராணிவதத்துடன் யாகஞ்செய்வது நமக்கு வெறுப்பாகவிருந்தால் நாம் செய்யாதும் விடலாம், யாகம்செய்ய வேண்டும் என்று வருபவருக்கு த்ரவ்ய ஸஹாயம் செய்யாதிருந்தாலும் இருக்கலாம். ஆனால் வீணாக வேதத்தையும், யாகங்கள் செய்பவரையும், அவைகளுக்கு ஸஹாயம் செய்பவரையும் பழித்துப் பாபத்திற்கு ஆளாகக்கூடாது. பிராணிவத சாலைகள் ஏற்படுத்தப்பட்டு மாம்ஸங்கள் தயார்செய்யப்பெற்று, ஜனங்களில் பெரும்பாலார்கள் மனம்போனபடி 'ஊனைத்தின்று ஊனைப் பெருக்கும்' இக்கொடிய காலத்தில், அவர்களையும், அந்தச்சாலைகளையும் குற்றங் கூறாதிருக்கும் தன்மை வாய்ந்தவர்கள், வேதங்களில் மாம்ஸ பக்ஷணங்களை நிறுத்த ஏற்பட்டிருக்கும் யாகங்களைக் குற்றங்கூறி மகிழுவாராயின் நரகில் வீழ்ந்து பரிதவிப்பார் என்பதற்கு என்ன ஸந்தேகம் ?

* இவ்வாறு செயவதற்குப் பாகவதம் நான்காம் ஸ்கந்தத்தில் வரும் ப்ராசீனபர்ஹிஸ் உபாக்யானமும் (சிறுவர்க்கான பக்கத்தைப் பார்க்க ;) மஹா பாரதம் சாந்தி பர்வத்திலுள்ள ஓர் உபாக்யானமும் மாத்வர்களுக்கு முக்கிய ஆதாரங்கள்.

† விவேக போதினி தொகுதி 2, முதல் ஸஞ்சிகையில் சிறுவர்க்கான பக்கத்தில் உள்ள 'மயானம் என்பது ஞான வாய்ப்பு' என்ற கதையை வாசித்தால் அவஸரப்பட்டு பழிப்பதால் வரும் கேடு வெளியாகும்.

இனிமேல் வரவேண்டியதைப்பற்றி நாம் அதிக கவலை கொண்டிருக்கலாகாது.—நியாயமாகக் கவலையென்பது எப்பொழுதுமே கூடாது. எல்லாவித பாரத்தையும் ஈசுவரன் தலையில் சுமத்தி, நாம் செய்யவேண்டியவைகளை மட்டும் சரிவர நடத்தி ஈசுவரன் விட்டவழி விடட்டும் என்று கவலையென்பதே யில்லாமலிருப்பது மிகவும் உத்தமகுணம். ஏற்கனவே நடந்துபோன விஷயத்தைப்பற்றியும் இனிமேல் வரப்போகிற விஷயத்தைப் பற்றியும் யோசித்து யோசித்துக் கவலைப்படும் மனிதன் கால்மனிதன். இவ்விருவித கவலைகளும் அவனிடமிருக்குமாயின் அவன் தற்காலத்தில் செய்ய வேண்டியதையுமிழப்பான். நாம் தற்காலத்தில் எதைச் சரிவர நடத்தவேண்டுமோ அதை நடத்தி வீண் துக்கங்களிலேயும் வீண் விசாரங்களிலேயும் வீண்காலம் கழிக்காமலிருக்க வேண்டும். தற்காலத்தைப்பற்றி நாம் விசாரப்பட்டால் போதாதா, வீணாகக் கடன்வாங்கி, சென்ற சங்கதிகளைப் பற்றியும் இனி வரப்போகிற விஷயங்களைப்பற்றியும் விசாரப்படவேண்டுமா? தற்காலம் ஒன்றையேபற்றி நாம் விசாரப்படுகின்ற குணத்தை அப்பியசித்து வந்தால் மற்ற காலங்களைச்சேர்ந்த விஷயங்கள் தங்களுக்குத் தானாகவே ஏற்பட்டுவிடும்.— பண்டித நடேச சாஸ்திரி.

அவஸரம்

HASTINESS

அவஸரம் என்பது எப்பொழுதாவது ஒரு ஸமயத்தில் எல்லோருக்கும் உண்டாகலாம் என்றிருந்தபோதிலும், நாம் எப்பொழுதும் அவஸரத்துடனேயே ஒரு காரியம் செய்யும் வழக்கத்தைக் கைப்பற்றக்கூடாது. நாம் இவ்வித அப்பியாஸத்தில் விழுந்து விடுவோமேயானால் இதைவிட்டுத் தப்பிப்பது வெகு கஷ்டம். ஒரு பட்டணத்தில் நடக்கும் வேலைகளை நாம் உற்று நோக்கினால் அவஸரமே எப்பொழுதும் மேலிட்டிருக்கும். ஒருவனாவது வீண்காலம் போக்கமாட்டான். ஒவ்வொருவனும் அவனவன் தொழிலை வெகு வேகமாய்ச் செய்து கொண்டேயிருப்பான். நகரங்களில் போட்டி அதிகமானமையால் விவ்விதமாய் உழைத்தால் ஒழிய முடியாது. நியாயஸ்தலங்களில் வக்கீல்களும், ஔஷதம் கொடுப்பதில் வைத்தியர்களும், விசேஷமாய்ப் போட்டி போட்டுக் கொண்டு பட்டணங்களில் உழைப்பார்கள். அவ்வாறேதான் பட்டணத்திலிருக்கும் வியாபாரிகளுக்கும், ஸாவகாசம் என்பதே கிடையாது. ஸாவகாசத்தின் சுகமனுபவிக்கவேண்டி உட்காருவார்களேயானால் அவர்களுடைய வியாபாரமெல்லாம் கெட்டுப்போய்விடும். பட்டணத்தில் ஜட்காக்குதிரைகளைப்போல் எவர்களும் உழைத்துத் தீரவேண்டும்.

எல்லா விஷயங்களையும் சீக்கிரத்தில் முடித்துக்கொடுக்கப் பட்டணத்துக்கு என்று சில அவசர சாதனங்கள் எங்கும் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன. பம்பாயில் கால் மணிக்கொரு தடவை புறப்பட்டுப்போகும் ரெயில் வண்டிகள், ஐந்து நிமிஷங்களுக்கொருதடவை புறப்பட்டுப்போகும் டிராம் வண்டிகள் முதலிய சாதனங்கள் இருக்கின்றன. லண்டன் முதலான ஐரோப்பிய தேசத்துப் பிரதான நகரங்களில் ரெயில், டிராம், இவைகளுடைய அவஸர ஏற்பாடுகளை நாம் சொல்லிமுடியாது. இவ்வித சாதனங்கள் சற்று ஏறத்தாழ நமது சென்னையிலும் உண்டு. இவைகளல்லாமல், 'டெலிபோன்' என்று சொல்லப்படும் நேர்நின்று பேசிக்கொள்ளும் மின்சாரக் கம்பிகள், 'டெலிகிராப்' என்ற மின்சாரக் கம்பிகளுமுள. இவைகளுடைய அனுகூலம் நமக்குத் தெரிந்த விஷயமே. அவசரம் அவசரம் என்று காலை முதல் மாலை வரையில் அவஸரப்பட்டுக்கொண்டே வேலை செய்யும் பலவேலைக்காரர்களை நாம் நகரங்களிற் காணலாம். அவர்களுக்கு எல்லாம் அவஸரம்; ஸ்நானம் அவஸரம் ; ஜபதபம் அவஸரம்; சாப்பாடு அவஸரம்; எல்லாம் அவஸரம். ஏன் இவ்வளவு அவஸரம்? எல்லாம் பணத்தாசையால்; 'பணம் என்ற பேராசை பற்றிக் கொண்டதும் எல்லாம் அவஸர அவஸரமாய்ச் செய்யாவிட்டால் லாபம் கிட்டுவது துர்லபம். இவ்வித அவஸரத்தில் கடைசியாய் நமக்குக் கிடைக்கும் லாபம் நமது தேக சௌக்கியம் முற்றிலும் குன்றிச் சப்பை அற்ற மாடுகள் பொத்தென்று விழுவதுபோல் நாம் சக்தியற்று விழவேண்டியது தான். சிறு பிராயத்தின் பலத்தின் நம்பிக்கையால் 'என் உடம்புக்கு ஒன்றும் பண்ணுகிறதில்லை' என்று டம்பமாகச்சொல்லிக்கொண்டு எல்லா விஷயத்திலும் அவஸரப்பட்டுக்கொண்டு காலைமுதல் மாலைவரையில் நாயாக உழைத்து ஜட்காக்குதிரைகள் போல் ஓடி ஆடி அலைந்து திரிந்து பிராணனை விட்டுப் பணம் தேடுகின்றோம். தேகத்தில் பலமிருக்கிற வரையில் எல்லாம் ஸரிவர நடந்துவருகின்றதென்பதில் ஆக்ஷேபனையில்லை. கொஞ்சம் அயர்ந்து கீழே படுத்தோமோனால் அத்துடன் நமது தேக சௌக்கியமே தொலைந்தது. அப்புறம் எழுந்திருக்கும் வழியேயில்லை. படுத்ததுமுதல் திருநாடு செல்லும்வரையில் மருந்து சாப்பிடாமல் ஒரு நாளாவது நாம் கழிக்க முடியாது. எப்பொழுதும் கையும் மருந்துமாக வேயிருந்து பிராணனை விடவேண்டும். இவ்வளவும் முதல் அவசரம் அவசரம் என்று

எல்லாவற்றிலும் அவசரமாயிருந்ததால் விளைந்த நோய்! அப்புறம் விடாமருந்து! தேகத்தைச் சீர்திருத்திக்கொள்ளக்குற்றாலம் நீலகிரி முதலிய தேச சஞ்சாரமும் அவசரத்திலேயே இவ்வளவும் எவ்வாறு விளைந்தன ?

அவசரத்தால் முதன்முதல் விளையும் ரோகம் அஜீர்ணம். வெகு நாட்கள் அவசர அவசரமாய் உழைத்தவனுக்கு அஜீர்ணம் வந்துவிட்டால் அதிலிருந்து அவன் தன்னைத்தான் விடுவித்துக்கொள்ள முடியாமல் அதற்கே இரையாவான். முதலில் அஜீர்ணம். அதனால் ஆகாரம் செல்லாமல் முற்றிலும் கைகால்களின் ஓய்ச்சல், சக்தியின்மை, தீராத பலவித நோய்கள், கடைசியாய்த் தூக்கமற்றுப்போகுதல்.

எனது நண்பரொருவர் இவ்வித அவஸ்தைக்குள்ளானார். அவர் வெகு புத்திமான். தமது தேக சக்திக்கு மேல் அவஸர அவஸரமாய் இடைவிடாமல் 10, 15 வருஷகாலம் படித்துப் பிரஸித்த பரீக்ஷைகளில் தேறி உயர்ந்த பதவிக்கு வந்தார். வந்தது தான் லாபம். அஜீர்ணநோய் அவரைப்பற்றிற்று. அவர் வெகு சீமான். ராஜ வைத்தியம் செய்து எவ்வளவோ பொருள் செலவிட்டுப் பார்த்தும் அவ்வஜீர்ணம் நீங்காமல் அதிகரித்து அவருடைய தூக்கம் நீங்கி அவஸ்தைப்படும் நிலைமைக்கு அவரைக்கொண்டுவந்து விட்டது. பல தடவைகளில் அவர் பட்ட அவஸ்தைகளைப் பற்றி நாம் அவரிடமிருந்தே கேட்டிருக்கின்றோம். இரவு 10-நாழிகைக்கு மேல் அவர் தமது படுக்கையில் படுத்துக்கொள்வாராம். சூரியோதயம் வரையில் கண்மூடா நோன்பு நோற்பாராம். என்ன சிரமப்பட்டுப் பார்த்த போதிலும் ஒரு நிமிஷமாவது தூக்கம் பிடிக்காதாம். எலிகள் ஓடுவது, அவைகள் ஸங்கிதை, மற்றவர்கள் எழுந்திருப்பது, ஏதாவது பேசிக்கொண்டிருப்பது, இவைகள் அவ்வளவும் அவருக்கு இரவில் ஒன்று விடாமல் தெரியும். இவ்வாறு அவஸ்தைப்பட்டு ஒரு பெரிய வைத்தியர் உபதேசப்படி அவர் இரண்டொரு வருஷகாலம் ஸிங்களத்தில் சஞ்சாரம் பண்ணி ஒருவாறு தன் தேகத்தைத் தேற்றிக்கொண்டார் என்றாலும் சரியான நிலைமைக்கு இன்னும் வரவேயில்லை. இவ்வளவு தூரம் நாம் இங்குச் சொல்ல வேண்டிய காரணம் என்னவென்றால், நாம் ஒரு சமயத்தில் இவ்வாறு அவசரத்தா லிழந்த தேக சௌக்கியம் ஒருபொழுதும் நமக்குத் திரும்பி வரவேமாட்டாதென்பதாம். எந்த வேலையாக விருந்தபோதிலும் தனது பலத்துக்குமேல் உழைத்தவன் ஒருபொழுதும் பிற்காலத்தில் அவஸ்தைப் படாமலிருக்கமாட்டான். அவஸரமாய்ப் பணக்காரனாக நாம் கொள்ளும் எண்ணத்தால் இவ்வளவு ஸங்கடங்களும் நமக்கு விளைகின்றன. ஒருதடவை யிழந்த தேக சௌக்கியம் மறுபடி திரும்பிவருவதுமில்லையாகையால் இவ்வளவு அவஸரம் ஒருவருக்கும் கூடாது. மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும் நாமே இக்குற்றங்களுக்கு உள்ளாயிருக்கலாம். இவ்வித அவஸ்தைகள் எல்லாம் பட்டு நம்மைப்போல் மற்றவர்களும் அவஸ்தைப்படவேண்டாமென்று மற்றவர்களை எச்சரிக்கும் பொருட்டே நாம் இதை யிப்பொழுது இவ்வளவுதூரம் விவரிக்கின்றோம். பின்னாலுண்டாகும் துக்கங்களை நமது சிறுவர்கள் நன்றாக அறிந்துகொண்டு நம்மைப்போல் 40-வயதிலேயே 80-வயதுள்ள கிழவர்களைப் போலாகாமல் சௌக்கியப்படவேண்டுமென்று இவ்வளவுதூரம் எச்சரிக்கலானோம்.

பண்டித நடேச சாஸ்திரி.

தர்க்கிப்பதை ஒழித்தல்.—பலபேர்கள் சேர்ந்திருக்கும் சங்கத்தில் தர்க்கித்தல் என்பதே கூடாது. ஏனெனில் அது எவ்வளவுதான் கொஞ்சமாயிருந்தாலும் சிறிது மன வருத்தத்தையே விளைவிக்கும். ஒருகால் நம்மையறியாமலே நாம் தர்க்கித்துத் தர்க்கமும் முற்றி விட்டால் சிரிப்பான தொரு சந்தர்ப்பத்தை அந்தச் சமயம் பார்த்தெடுத்து ஜனங்கள் மனதைச் சந்தோஷப்படுத்தித் தர்க்கத்தை விட்டுவிட வேண்டும்.—

ஸ்ரீ ரமேச சந்த்ர தத்தர்

R. C. DUTT B.A., LL.B., C. I. E.

(A Life—Sketch)

பரீக்ஷைக்குப்பின்

ஸிவில் ஸர்விஸில் தேறிய பிறகு ரமேச சந்த்ரர் தம் இளமைத்தோழர்களாகிய விஹாரிலாலோடும், ஸுரேந்த்ர நாதரோடும் ஐரோப்பாக் கண்டத்தைச்சுற்றி ப்ரயாணம் செய்யப் புறப்பட்டார். 1871-ம் ௵ ஆகஸ்ட் மாதத்தில் அவர்கள் ப்ரான்ஸ் தேசத்தின் ராஜதானி பட்டணமாகிய பாரி (பாரிஸ்—Paris—என்று எழுதியிருப்பதற்கு ப்ரெஞ்ச் பாஷை யுச்சரிப்பு இதுவே) நகரத்துக்கு வந்துசேர்ந்தார்கள். 1870-71-ம் ௵த்திய யுத்தம் அப்போது முடிந்துவிட்டது. ப்ரான்ஸில் அமைதியும் அமரிக்கையும் இன்னும் ஏற்படவில்லை. 'கம்யூனியனிஸ்ட்'கக்ஷியார் நகரங்களுக்குள் ராணியாய், உப்பரிகைகளாகிய கிரீடமணிந்து விளங்கும் பாரிநகரத்தின் மனோஹரமான மாளிகைக் கூட்டத்தைச் சூர்ணமாக்கி த்வம்ஸம்செய்தனர். அதன்மேல் ப்ரெஞ்ச் போர்வீரர் கம்யூனியனிஸ்ட் கக்ஷியாரைக் குண்டுபோட்டுச் சுடுவாராயினர். இந்தச் சமயத்தில் ரமேசர், விஹாரி, ஸுரேந்த்ரர் ஆகிய இம்மூன்று நண்பர்களும் பாரி நகரத்துக்குவந்திருந்தனர். அவர்கள் மார்ஸேல்ஸ் என்னுமிடத்தைப் பார்க்கப்போயிருந்தனர். அந்த இடத்தில்தான் ப்ரெஞ்சுக்காரர் இவர்களை விதேசீய கம்யூனியனிஸ்ட் கக்ஷிக்காரர் என்று சந்தேகித்து அரெஸ்ட் செய்தார்கள். அம்மூவரும் ப்ரெஞ்ச் கவர்ன்மெண்டின் காவற்சாலையில் ஒரு இரவு கழித்தனர். அடுத்தநாள் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டின் பாஸ்போர்ட்டைக்காட்டி அவர்கள் மரணதண்டனையடையாமல் விடுதலைபெற்று மீண்டனர். இன்னும் சில தினங்களுக்குமுன் அவர்கள் பாரியில் பிடிக்கப்பட்டிருப்பார்களாயின், பாரி நகரியின் பஞ்சபூதங்களிலேயே அவர்களின் பாஞ்சபௌதிக சரீரம் கலந்துபோயிருக்கும்.

ஸிவில் ஸர்விஸ்

1871-ம் ௵த்தில் ரமேச சந்த்ரர் வங்காளத்தில் ஸிவில் ஸர்விஸில் நியமிக்கப்பட்டார். 1871-ம் ௵முதல் 1872-ம் ௵வரையில் அவர் வங்காளத்தின் வெவ்வேறு ஜில்லாக்களில் வேலைபார்த்தார். 1874-ம் ௵த்தில் நதீயா என்னும் நவத்வீப ஜில்லாவின் பஞ்ச நிவர்த்தி அலுவலில் நியமிக்கப்பட்டார். 1876-ம் ௵த்தில் நிகழ்ந்த பெரும் புயற்காற்றால் கீழ்வங்காளத்துக்குப் பெருத்த நாசம் உண்டாயிற்று. பாகர்கஞ்ஜுக்குத் தென்பாலுள்ள ஷாஹராஜபூர் சின்னபின்னமாகிச் சுடுகாடாய் மாறிவிட்டது. ஸமஸ்த தீவுகளும் பிணவுடம்புகளால் மூடப்பட்டுப் போயின; வழிகளிலும் கடைத்தெருவுகளிலும் வயல்களிலும் மரித்த நரநாரியரின் சவங்களே; மரக்கிளைகளிலே ஒதுங்கி நழுவிய நரநாரியரின் பிணங்கள் தொங்கலாடிக் கொண்டிருந்தன; தடாகத்திலும், குட்டையிலும், வாவியிலும், ஆற்று நீரிலும் செத்த பிணங்களே காணப்பட்டன. நாடெங்கணும் ம்ருத்யு பயமும், உயிரற்ற தேகங்களினின்றெழும் பிண நாற்றமும் நிறைந்திருந்தது. ம்ருத்யுவின் தாண்டவத்தினால் த்வம்ஸம் செய்யப்பட்ட ஷாஹராஜபுரத்தில் ரமேசர் அமைதியையும் அமரிக்கையையும் நிலைநிறுத்தி தேசவாஸிகளின் வாழ்த்துகளையும் துரைத்தனத்தாரின் புகழ்ச்சியையும் பெற்றார்.

உத்தியோக நிலைமை

ஸிவில் ஸர்விஸில் ரமேச சந்த்ரருக்குப் பதினொரு வருஷங்கள் கழிந்தன. இந்தப் பதினொரு வருஷங்களில் ரமேச சந்த்ரர் இரண்டு தடவை சிறிது காலமட்டும் காயமாயில்லாத மாஜிஸ்ட்ரேட் உத்யோகத்துக்கு நியமிக்கப்பட்டார். அப்போதும் ஒரு வெங்காளி ஸிவிலியனாவது ஜில்லாவின் பக்கா மாஜிஸ்ட்ரேட்டாக ஆனது கிடையாது. பிறகு 1883-ம் ௵த்தில் அவர் பாரிஸால் மாஜிஸ்ட்ரேட்டாக

நியமனம் பெற்றார். 1875-ம் ௵ வரைக்கும் அதே வேலையிலிருந்தார். வங்காளத்து ஸர்க்கார் சரித்திரத்திலே பாரிஸாலுக்குக் கெட்ட பெயர் உண்டாயிருக்கிறது. எப்போதும் கொந்தளிப்புடன் கூடிய பாரிஸாலில் அமைதியின்மையும் உபத்ரவமும் கலசமும் கலவரையும் குறைவில்லாமல் இருந்துகொண்டேயிருக்கும். வெங்காளி ஸிவிலியனாகிய ரமேசசந்த்ரர் துரைத்தன நிர்வாகத்தில் நிபுணரென்று பெயர் பெற்றிருந்ததனாலும், ஜனங்களின் குறையையறிந்து ஒழுகும் தன்மையினாலும், இந்திய கவர்ன்மெண்டார் அவரை விஹாரதேசத் தலைவராக நியமனம் செய்தனர். துரைத்தன நிர்வாகப்பகுதியின் உயர்ந்த பதவியில் வெங்காளிகள்ப்ரவேசிப்பதற்கு வழியைப் பரிஷ்கரித்து வைத்தார். தம்முடைய விசாரணைக்குட்பட்ட உயர்ந்த அந்தஸ்துள்ள ஆங்கல உத்யோகஸ்தர்களையும் ஜாயின்டும் அஸிஸ்டென்டுமான மாஜிஸ்ரேட்டுகளையும், ஸிவில் ஸர்ஜன், போலிஸ் ஸுபரின்டென்டெண்ட் முதலியவர்களையும் நல்ல மாதிரியாகவே தட்டிக்கொடுத்து வேலை வாங்கி ரமேச சந்த்ரர் தம் திறமையை வெளிப்படுத்தினார். கவர்ன்மெண்டார் ஸர்க்கார் கெஜெட்டிலே இதைப்பற்றி அவரைப் புகழ்ந்து பேசியிருந்தார்கள். ரிப்பன் ப்ரபு ஒருதடவை அவரைக் கூப்பிட்டனுப்பினார். ரமேசசந்த்ரர் அந்த அழைப்பை ஏற்று பேட்டி செய்துகொள்ள வந்தபோது, ரிப்பன் ப்ரபு அவரை நோக்கி "நான் பாரதநாட்டை விட்டுப் போவதற்கு முன் உம்மை ஒரு தடவை பார்க்கவேண்டுமென்று உம்மை வரவழைத்தேன். நீர் 'உம் அலுவலைச் செய்யும் விதம் சீமையிலுள்ளவர்களுக்குத் தெரியும் பட்சத்தில், அப்போது துரைத்தன நிர்வாகத்தில் பாரதவாஸிகளுக்கு ஸாமர்த்தியம் இருக்கிறதா என்னும் விஷயத்தில் சீமையில் இனி ஸந்தேஹமே உண்டாகாது," என்றார்.

கர்ம வாழ்க்கையைத் தொடங்கும்போதே ரமேச சந்த்ரர் வங்காளிப் பயிரிடுவோரின் நிலைமையின் சம்பந்தமாய் நூல் எழுதலானார். அது மாத்திரமன்று. குடி முறைமையைப் பற்றிய சட்டத்திற்காக உழைத்து வந்தார். இவர் விஹாரதேசத் தலைவராகவிருந்தபோது ராஜாங்கமெவ்வாறு நடத்தவேண்டும் என்று காட்டிய ஓர் குணவிசேஷத்தால் தேசப் பிரதிநிதியாரின் சட்டசபையின் அங்கத்தினரில் ஒருவராக ஏற்படுத்தப்பட்டனர். இவர் எவரும் மதிக்கும்படி இந்த நிலைமையை வஹித்து வந்தனர். இதற்குள் இடை இடை இவர் இங்கிலண்டிற்குச் சென்று வந்துக்கொண்டிருந்தனர். 1892-௵ இவருக்கு இந்திய ஸம்ராடநேசன் என்னும் பட்டம் அளிக்கப்பட்டது. 1897 ௵ அவர் இந்திய கவரன்மெண்ட் வேலையிலிருந்து "பின்சின்" வாங்கிக்கொண்டார். இடையில் இந்திய ஜாதிய மஹாநாட்டிற் கொருமுறை அக்கிராசனாதிபத்யம்வஹித்துப் பின் பரோடாராஜ்யத்து மந்திரியாக விருந்து, இடையில் ராஜத்வ பிரிவினை சூழ்ச்சிக்கூட்டத் (Decentralisation Committee) திற்கூடி உழைக்கும் பொருட்டு அந்த நிலைமையிலிருந்து வெளிவந்து, அது முடிந்ததும் மறுபடியும் பரோடா நகரத்து மந்திரித்வத்தை வஹித்து, இறக்கும் வரை நன்றாக ஒழுகி வந்தனர்.

அவரதுமேன்மை

ரமேசசந்திரர் வடமொழியில் தேர்ந்த அறிவினர்; அதிலுழைத்து பாடுபட்டவர். வங்க பாஷையிலும் தேர்ந்து நுண்ணுணர்வுடையார். ஆங்கிலத்திலும் மிக உழைத்த ஞானி. சரித்திரம், சாஸ்திரம், இலக்கியம், பாஷா விவரணம், மத ஒழுங்கு இவை முதலிய எல்லாவற்றிலும் ஆழ்ந்த உணர்ச்சி யுடையவர். வங்கஸாஹித்திய பரிஷாதத்தை 1893-௵த்தில் ஏற்படுத்தி வங்கபாஷையைச் சீர்திருத்த முயன்றார். அப்பாஷையில் "ஆக்ரா நகரத்து ஊழியக்காரி" என்னும் ஓர் நவீன

மெழுதினர். பின் ஆங்கிலத்தில் "தென்னைத் தடாகம்" என்னும் ஓர் நவீனமும் உண்டாக்கி, பிமலா வென்னும் கதையும் இயற்றினர். ரிக்வேதத்தை வங்கத்தில் மொழிபெயர்த்து வங்க நாட்டாரது மனதை விஸ்தரித்தனர். இவருடைய நூல்களெல்லாம் ஆங்கிலத்தில் மிகப் பெயர் பெற்றன. சாரித்ரத்தைச் சீர்திருத்தித் தனது வடமொழி அறிவால் அதன் நிஸ்சயத்தை அறிந்து,புன்மையைக் கழித்து, ஸத்தியத்தைக் காட்டினர். புராதன இந்தியரின் நாகரீமென்னும் நூல் இன்னமும் சாரித்திரம் படிப்பவரின் முதநூலாகி நிற்கிறது.'கர்ஸன் ப்ரபுவிற்கு எழுதிய பஹிரங்கக் கடிதங்கள்,''விக்டோரியாவின்காலம்,'புராதன இந்தியசரித்திரத்தின் காலநிலை முதலிய புத்தகங்கள் மனத்தின் நிலைமையையும் ஆராய்ச்சியின் ஆழ்ந்ததன்மையையும்; இந்தியகுடி நிர்வாஹ சரிதை அவர் குடிகளிடத்துக்கொண்ட அன்பும், ஆர்வமும்; ஆங்கில நகரத்தில் சென்றிருந்தபோது அங்கு லண்டன் நகரத்து சர்வகலாசங்கத்து இந்திய சரித்திர பண்டிதராக ஏற்படுத்தப்பட்டபொழுது இடையில் ஆங்கிலகவியில் இராமயணத்தையும், மஹாபாரதத்தையும் இயற்றியது அவரது வடமொழி இடத்திருந்த பேரவாவையும் காட்டுகின்றன: பரோடா நகரத்து மந்திரியாக வாழ்ந்தகாலத்து இயற்றிய ராஜாங்க விமரிசைகள் அவரது அன்பின் உயர்வையும், எளியோரைக் காப்பாற்றும் குணத்தையும் விளக்குகின்றன.

இத்தகைய மஹான் நம்மிடையிருந்தூட்டிய அமுதமெல்லாம் மனத்திலூறி பெருமைவாய்ந்திருக்கும்படிச் செய்யா தொழியாதென்பது திண்ணமாசக் கூறலாம். அவருடைய காலடிமேல் நாம் பாதை கொள்ள முயற்சித்து உயர்ந்து, இந்திய நாட்டிற்கும், உலக விருத்திக்கும் உபயோகமாகும்படி முயலவேண்டுமென்பதே அவர் சரிதையைப் படிப்பதின் படிப்பினை எனக்கூறலாம்.

சில உயர்ந்த கற்கள்

1 : மாணிக்கக்கல் அல்லது செம்பு

SOME PRECIOUS STONES
1: THE RUBY

சாதாரணமாகக் கெம்பு என்று வழங்கப்படுகிற மாணிக்கக்கல் குருவிந்த (Corundum) ஜாதியின் சிறந்த ரத்நம். மனோரம்யத்தை உண்டாக்கும் விஷயத்திலும், பார்வைக்கு அழகைக் காட்டும் விஷயத்திலும் மாணிக்கக் கற்கள் சிறந்தன. இந்தக் குருவிந்த ஜாதியின் கற்களுக்குப் பிரகாசம் மிகவும் மேன்மையானதாகவிருக்கின்றது, அதன் மழமழப்பான முகம் பிரகாசத்தை அதிகப்படுத்துகிறது. ஒளியில் வைரம் பாய்ந்திருப்பதன்றிக் குணத்தில்அதை ஒவ்வாது. வலிவு நிறைவின்மையாலும் ஸ்வபாவத்தில் கண்ணாடியைப்போல் வெடிக்கக்கூடியதாலும் வைரத்தை அது ஒவ்வாது. இதைப்போன்ற பிரகாசமும், நெருப்புப்போல் பிரகாசிக்கும் தன்மையும் வைரம் தவிர மற்ற எந்த ரத்தினத்திற்கும் கிடையாது. அதுபோலன்றிப் பொய்ம் மாணிக்கமும் தாப்புக்கல்களும், மாணிக்கத்துக்கு ஈடாகா. குற்ற முள்ள மாணிக்கமும்கூட, தன்னொளியின் ஸ்வபாவத்தினால், செதுக்கப்பட்டால் பிரகாசம் உயர்ந்து மதிப்படைகிறது. மேலும் அஜாக்ரதையாக உபயோகப்படுத்தினாற்கூட, அதன் ஒளி மாறாது. அதன் சுத்தமான தன்மையும், உயர்ந்த பிரகாசமும், அழகிய வர்ணத்தோடு கலந்து மயங்கி மனதை ரம்யப்படுத்துகின்றது.

ரத்தின பரீக்ஷை செய்பவர்களும், நகை செய்வோரும், கெம்பு (மாணிக்கம்) என்னும் பதத்தைப் பேதமின்றி உபயோகப்படுத்துகிறார்கள். அது இரண்டுவிதம். பொய்ம்மாணிக்கம், மெய்ம்மாணிக்கம் (கெம்பு), என இரண்டு வகைப்படும். பொய்ம்மாணிக்கம் சிறந்ததாக மதிக்கப்படாது. தாப்புக் கல்களும் இந்த

ஜாதியின் ஓர் வகை. இதன் பிரகாசம் மந்தமாயிருக்கும் நீரோட்டமென்பதின்றி விளங்கும்.

மெய்ம்மாணிக்கம் வனுவிற் சிறந்தது. பிரகாசத்தில் உயர்ந்தது. பால் ரோஜா வர்ணத்திலிருந்து ரத்த வர்ணம் வரை கெம்புக்கல்லில் பிரகாசம் வீசும். இதன் இடை இடையில் ஊதா நீலம் பாய்ந்தாற்போல் பக்கவாட்டில் பார்க்கத்தென்படும், இந்தக்குணத்திற்கே நீரோட்டமென்று ஜனங்களால் சொல்லப்படுகிறது. பொய்ம்மாணிக்கத்தில் இது காணப்படாது. சிறந்த மாணிக்கத்தின் வர்ணம் கருஞ்சிவப்பில் பால் நீலம் பாய்ந்தாற்போல் பிரகாசிக்கும். மாதுளைப்பழத்தின் விதைபோல் ஒளிவீசும். இந்த வர்ணம் இயற்கையாய் அமைந்தது. குரோமியம் எனும் லோஹத்தில் பிராணவாயு கலப்பினால் உண்டாகும்உப்பின் (Oxide of chromium) இருப்பினால் இவ்வாறு பிரகாசிக்கிறது. ஓர் பக்கம் விட்டு மற்றோர் பக்கத்தில் பார்த்தால் மாணிக்கக் கற்கள் பருமன் அதிகமாவதாகத் தோற்றும். இதற்கே த்விவர்ண ஸ்வபாவம் (Dichroism)என்று சொல்லப்படும். இந்தக்குணவிசேஷத்தால்தான் தரப்புக்கற்கள், பொய்ம்மாணிக்கங்கள், இவற்றிலிருந்து மெய்ம்மாணிக்கத்தை ரத்ன பரீக்ஷகர்கள் அறிகிறார்கள். அவற்றிற்கு இக்குணம் இல்லை. மற்றோர் விதமாகவும் அறியலாம். ஒரே (முகத்தலளவு) அளவான தரப்பு கல்லையும், பொய்ம்மாணிக்கத்தையும் நீரில்வைத்து நிறைசெய்வோமானால் மெய்ம்மாணிக்கம் கனம் அதிகமாக இருப்பதாகத் தெரியவரும் மெய்ம்மாணிக்கம் தன் அளவான ஜலத்தைக் காட்டிலும் நான்கு மடங்கு கனமானது. பொய்ம்மாணிக்கமும் தரப்புக்கற்களும் கெம்பைக்காட்டிலும் கனம் மிகக்குறைவு. இதுமாத்திரமன்று: மற்றோர் விதத்திலும் அறியலாம். மாணிக்கக்கல்லை எடுத்து அதன் கூறிய முனையால் பொய்ம்மாணிக்கம் தரப்புக்கல்கள் இவை மேல் கீறினால் கோடுகள் விழும். அவைகளால் மாணிக்கத்தின் மேல் கீற முடியாது. இம்மூன்று குணங்களாலும் கெம்புக்கல்லானது மற்றைய பொய்க் கற்களிலிருந்து பிரித்தெடுக்கப்படுகிறது. பக்கம் பக்கத்திற்கு ஒளி வேறு படுவதால் ஒளிக்குத் தக்கவாறு மாணிக்கத்தைச் செதுக்கவேண்டும். அவ்வாறு செதுக்கினால்தான் உயர்ந்த ஒளி உண்டாகும். இல்லாவிடில் மிகத்தாழ்ந்த ஒளிதான் கிடைக்கும்.

மெய்ம்மாணிக்கங்கள் நமது தேசத்திலும் பூமியின் பூர்வபாகங்களிலும் கிடைக்கின்றன. ஐரோப்பிய நாடுகளில் கிடைக்கும் கற்களெல்லாம் தரப்புக்கற்கள். இந்திய நாட்டில் கிடைக்கும் கற்கள்மிகவும் உயர்ந்தவை. குற்றமற்ற மாணிக்கம் கிடைப்பது மிகவும் அருமை. மூன்று கேரட் (Carat) கனமுள்ள கல் கிடைப்பதே அருமை. மூன்றுகேரட்டுள்ள வைரக்கல்லின் விலை 2000 ரூபாய். மூன்றுகேரட்டு கனமுள்ள கெம்புக்கல்லின் விலை 20,000 ரூபாய். அதாவது வைரத்தைக்காட்டிலும் பதின்மடங்கு உயர்வானது. மாணிக்கத்தின் விலையை மதிப்பவர் கிடையாது. கன்ஸ் என்னும் (Mr.G.F, Kunz) அமெரிக்கா தேசத்து ரத்ன பரீக்ஷகர், ஒன்பது கேரட் கனமுள்ள கெம்பின் விலை 105,000 ரூபாய் என்று ஓர்தரம் மதித்திருக்கிறார். ஸ்டிரீடேர் (Mr. E.W. Streeter) என்பவர் 32, 38 கேரட் கனமுள்ளவை 150,000 ரூபாய் முதல் 300,000 ரூபாய் வரை என்று விலை மதித்ததாகச் சொல்லுகிறார்.

இவ்விதமாகிய உயர்ந்தவிலை குற்றமற்ற கெம்புக்கற்களுக்குத்தான் கிடைக்கும். கெம்புக்களில் பலவித குற்றங்கள் உண்டு. ஒளிமங்கியிருக்கும் தன்மை, வெள்ளைவெள்ளையாகி முகில் பாய்ந்திருக்கும் நசினைகள், இவைகள் பால்வர்ண பதும ராகங்களில் சந்திக்கக்கூடியவை. இவைமாத்திரமன்றி, வெடிப்பு, கோடுகள், சரியாக ஒளிபரவாதிருத்தல் இவைமுதலானவை கெம்புக்கற்களில் காணக்கூடிய குற்றங்கள்.

கீழ்நாடுகளில் யாத்திரைசெய்து பெயர்பெற்ற

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 7- APR 1910 MADRAS.

டேர்ரர்நியர் (Terrernier) என்பவர் பீஜாபுர (Bijapur) மன்னனிடத்து 600000ரூ மதிக்கப்பட்ட 50 கேரட் பருமனுள்ள கல்லையும், ஆவாநகரத்து அரசன் காதணியில் பொருந்திய 74,550ரூக்கு மதிக்கப்பட்ட 15 கேரட் பருமனுள்ள மாணிக்கக் கற்களைக் கண்டதாகவும் கூறியிருக்கின்றனர். ஜெர்மானிய தேசத்தரசனாகிய இரண்டாவது ரோடால்ப்(Rodolph II) என்னுமரசன் 420,000 ரூக்கு மதிக்கப்பட்ட மாணிக்க மடைந்திருந்தான் என்றும் கூறுகிறார். டேர்ரர்நியர் மொகலாய ராஜ்யத்தின் ஸிம்ஹாஸனத்தில் 108 மாணிக்கக் கற்கள் இழைத்திருந்ததாகவும், ஒவ்வொன்றும் 100 அல்லது 200 கேரட் பருமனுள்ளதென்றும் கூறியிருக்கின்றனர். இவர் மாத்திரமன்றி வேறு யாத்ரிகர்களும் இத்தகைய விருத்தாந்தங்களெல்லாம் கூறுகின்றனர். ஆயினும் இவர்கள் தரப்புக் கற்களை மாணிக்கக் கற்களென்று மயங்கிவிட்டனரென்று தோன்றுகிறது. ஆங்கிலேய நாட்டரசாது மகுடத்தில் இழைக்கப்பட்டிருக்கிற கீர்த்திபெற்ற ரத்நமும் தரப்புக்கல் என்றுதான் ஊஹிக்கப்படுகிறது. இவைகள் எல்லாவற்றைக் காட்டிலும் மிகப் பெரிய மாணிக்கமாக விளங்கியது, இலங்கை நகரத்தரசனிடத்திருந்ததென்று மார்க்கோ போலோ (Marco Polo) என்னும் கீர்த்திபெற்ற யாத்ரிகர் கூறுகின்றனர். அது ஒரு சாண் நீளமும், கைப்பிரமாணம் பருமனும் உடைத்தாயிருந்ததாம். அதுமாத்திரமன்றிக் குற்றமென்பது லவலேசமுமின்றி யிருந்ததாம். இதைக் குப்லாய்கான் என்னுமரசன் தன் பிரதிநிதி மூலமாக விலைக்குக்கேட்டு அதற்குப் பதிலாக ஓர் பெரும் நகரம் கொடுப்பதாகவும் சொல்ல, இலங்கைநாட்டு மன்னன் அதற்கிணங்கவில்லை. பின் அந்த மாணிக்கத்தின் வரலாறு என்னவாயதோ இன்னமும் தெரிந்ததில்லை.

1903௵ காட்டிய இந்திய கைத்தொழிற் காட்சியில் ராயபஹதூர் தாஸ்பஹதூர் அண்ட் ஸன்ஸ் என்னும் கும்பெனியாரால் காட்டப்பட்ட "சத்ரபதி மாணிக்கம்" என்னும் மாணிக்கம் 2-அங்குலம் நீளமும், $1\frac{1}{2}$-அங்குலம் அகலமுமுள்ளது. இது க்ரமமாக இந்திய, மஹமதிய அரசர்களால் அவரவர் காலங்களில் உரிமை பாராட்டப்பட்டு வந்தது. இக்கல் சிறந்த இந்திய பட்டை வைரக் கற்களோடு கூடிய ஆபரணம் ஒன்றில் நடுநாயமாக அமைக்கப்பட்டிருக்கிறது.

இனிவரும் பகுதியில் மாணிக்க கற்களைக் கடைசல் செய்யும்விதம் முதலியவற்றைப் பற்றி விரித்தெழுதுவோம்.

பி. வி. ஸ்வாமிராவ், எம். ஏ.

பிராகிருதி சாஸ்திரசாலை.—லண்டன் நகரத்தில் ஒரு பெரிய சாஸ்திரசாலையிருக்கின்றது, வயது சென்ற சாஸ்திரிகள் அங்கே போகிறதுவழக்கம். பெரும்பாலும் வெள்ளிக்கிழமை சாயங்கிரம் அங்கே அநேகம்பேரைக் காணலாம். தெருவில் வண்டிகள் நிறைந்திருக்கும்: துரைகளும் துரைசானிகளும் பற்பல இடங்களிலிருந்து வந்து சேருவார்கள். அந்தச் சாலைக்குள் பிரவேசித்தபோது எதிரில் ஒரு கூடம் இருக்கும். அதின் மத்தியில் ஒரு பெரிய படி இருக்கும். அது கருங்கல்லால் கட்டியது. கூடத்தின் இருபுறத்திலும் அறைகள் உண்டு. அந்த அறைகளில் சுவர் தெரியாமல் கணக்கில்லாத புத்தகங்கள் அடுக்கியிருக்கும். மேஜையின்மேல் அக்காலத்துச் சாஸ்திரபத்திரிகைகள் பரப்பியிருக்கும். நானாவிதமான இயந்திரங்களைக் காணலாம். சாஸ்திரபரீக்ஷைக்கு வேண்டிய அரும்பொருள்களும் அங்கே வைக்கப்பட்டிருக்கும். படியின்மேலேறி வலதுகைப்பக்கமாயத் திரும்பினால் பிரசங்கசாலை காணப்படும். அங்கே பெரிய மேஜை ஒன்றிருக்கின்றது. அது லாடத்தைப் போலிருக்கும். பரீக்ஷைக்கு ஏற்றதாயச் செயயப்பட்டு இருக்கிற அந்த மேஜைக்குப் பின்புறத்தில் உலைக்களமும் கறுப்பு நிறமான பலகையும் இருக்கும். மேஜையைச் சுற்றி உட்காருவதற்கு வரிசை வரிசையாக நாற்காலி போட்டிருக்கும். ஏறக்குறைய எழுநூறுபேர் இருப்பதற்குப் போதுமான இடமிருக்கின்றது. மெத்தையின் கீழே ரசாயனசாஸ்திர பரீக்ஷைசாலை ஒன்றுண்டு. அதில் இப்போது தேவையாயுள்ள சகல கருவிகளையும் காணலாம். அந்தக் கட்டடத்திலேயே ஒரு இடத்தில் அதற்கு அதிகாரிகள் குடியிருக்கிறார்கள். தெரியாதவற்றைத் தெரிந்துகொள்ளவும், புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டு உபயோகமுடையதாகிய சகலத்தையும் ஜனங்கள் எளிதில் அறிந்துகொள்ளவும், நெடுகிலும் செய்துவரும் பிரசங்கத்தினாலும் செய்து காட்டுகிற பரீக்ஷையினாலும் சாஸ்திரத்தில் சொல்லிய உண்மைகளை அனுபவத்தில் கண்டறியும்பொருட்டும் ஏற்படி சாலை கட்டப்பட்டது.

தூங்காதிருங்கள்

BE INDUSTRIOUS

சில நூற்றாண்டுகளுக்குமுன் கைத்தொழிலிலும், வியாபாரத்திலும், விவசாயத்திலும் சமானமில்லாமலிருந்த நாம் இப்பொழுது என்ன ஸ்திதியிலிருக்கிறோம், நமது கைத்தொழில்கள் என்னவாயின, நமது வியாபாரம் எங்கே போயிற்று, நமது விவசாயம் எப்படியிருக்கிறது, என்னும் விஷயங்களைச் சற்றுக் கவனிப்போம்.

அயல் நாட்டார் எல்லாரும் யந்திரசகாயத்தினால் கைத்தொழில்களை விருத்திசெய்து குறைந்த விலைக்கு விற்றுக்கொண்டிருப்பதாலும் நாம் நமது புராதன வழக்கத்தைவிடக் கூடாதென்னும் ஒரே வைராக்கியத்தைக்கொண்டு சுலபமாய் வேலை செய்யும் யந்திரங்களை, நமக்கு முன்னால் எவராவது கொண்டுவந்து காட்டினாலுங்கூட அதைக் கண்ணெடுத்துக் கூட பார்க்காமலும், அது எப்படி வேலை செய்கிறதென்று பார்ப்பதற்குக்கூட பொறுமையில்லாமலும் அதுகளெல்லாம் நமக்குத் தகாதென்று சொல்லிவிட்டும் மாமூல் பிரகாரம் நமது முன்னோர்கள் செய்தபடியே நாமும் செய்துவருவதாலும் நாம் செய்யும் சாமான்களின்விலை அதிகமாவதாலும் நமது சரக்குகள் சரியான விலையாகாமல் நமது கைத்தொழில்கள் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகின்றன. மற்ற தேசத்தார் எப்படிக் குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்கள் என்று கவனித்து அவர்கள் உபயோகப்படுத்தும் கருவிகளையும் யந்திரங்களையும் உபயோகித்து நமது கைத்தொழில்களை விருத்தி செய்ய பிரயாசைப்படாமல் இன்னமும் தூங்கிக்கொண்டிருந்தால் நமது கைத்தொழில் இருந்த இடம் தெரியாமல் போகுமென்பதில் கொஞ்சமாவது சந்தேகமில்லை.

நமது நாட்டின் முக்கியமான வியாபாரங்களுக்கெல்லாம் சொந்தக்காரர் யார்? நிச்சயமாய் நாமல்ல. ஏன்? வியாபாரங்களுக்கு வேண்டிய வீடு முதல் நம்மிடம் இல்லையென்னும் காரணம் ஒப்பத்தக்கதல்ல. ஏனென்றால் சிலவருஷங்களுக்கு முன்னால் இன்சால்வன்ட் ஆன அர்பத்நட் கம்பெனியே அதற்கு போதுமான சாக்ஷி. இப்போது சரிவர நடத்தப்படும் வியாபாரஸ்தலங்களிலெல்லாம் வியாபாரம் அன்னியர்களுடையதாயிருந்தாலும் வியாபாரத்தைச் சரிவர நடத்திக்கொண்டு போவதெல்லாம் நாம் ஆகையால், நமக்கு வியாபாரம் நடத்தக்கூடிய சக்தியுமில்லையென்பதும் ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. ஆனால் நம்மிடத்தில் ஒற்றுமையில்லாததும் நம்பிக்கையில்லாததும்தான் முக்கிய காரணங்கள். இப்போது முன்னாலிருந்ததைப் போலிராமல் நமது ஜாதியார் கொஞ்சம் ஒற்றுமையுடனும் நம்பிக்கையுடனும் வியாபாரங்களைக் கூட்டுப் பிராமாணத்தால் செய்துவருகிறார்களென்பதைப் பார்க்க அதிகச் சந்தோஷப்படுகிறோம். இன்னும் இந்த விஷயம் பூராவாய் விருத்தியாகவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறோம். இவ்விஷயங்கள் இப்படியிருக்க, நமக்கு ஜீவாதாரமாயிருக்கும் விவசாயம் என்ன ஸ்திதியிலிருக்கிறதென்பதையும் கைத்தொழில்களை விட்டுவிட்டதுபோல் விவசாயத்தையும் சற்றுக் கவனிப்போம். நமது தேசத்திலிருக்கும் ஜனங்களில் முக்கால் பங்குக்குமேல் விவசாயத்தையே ஜீவனோபாயமாகக் கைக்கொண்டிருக்கிறார்கள். அயல் தேசங்களிலிருந்து அனேகமாய் உணவு தானியங்கள் இறக்குமதியாவதில்லை. ஜனத்தொகையானது நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. அனேகமாய்ச் சாகுபடிக்கு லாயக்கில்லாத கல்லாங்குத்துகளும் ஓடைப்போக்குகளும் களர் நிலங்களுந்தான் இப்போது விவசாயம் செய்யப்படாமலிருக்கின்றன. மாசூல் குறைந்தும் தரத்தில் தாழ்ந்தும் இருக்கிறது. மழைப்பதம் சீதோஷ்ணம் முதலிய காலவியல்புகள் மாறியிருக்கின்றன. தற்காலத்தில் விவசாயமானது கேவலமான தொழில் என்று மதிக்கப்படுவதால் கற்றவர்களாலும் புத்தி விசாலமுடையவர்களாலும் நேரில் செய்யப்படாமல் புத்திவிசாலமில்லாதவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அவர்கள் தங்கள் முறைகளே சிலாக்கியமானவைகளென்றும் விவசாய விருத்தியே அனாவசியமென்றும் அபிப்பிராயப்படுவதால் நாளுக்கு நாள் விவசாயம் க்ஷீணித்து வருகிறது. சாஸ்திர விதிப்படி விவசாயம் செய்பவர்களுக்கு அகப்படும் மாசூலில் நமக்கு நாலில் ஒரு பங்குதான் அகப்படுகிறது. உயர்தரக்கல்வியில் தேர்ந்தவர்களுக்கு இப்போதே சரியானவேலை அகப்படாமல் கஷ்டப்படுகிறார்கள். இன்னும் சில வருஷங்களில் இவர்களுக்கு வேலை அகப்படுவது அதிக கஷ்டமாகும். ஆகையால் இப்போதே இவர்கள் கைத்தொழில் வியாபாரம் விவசாயம் முதலியவைகளில் தேர்ச்சியடைவது சிலாக்கியமாகும். ஆகையால் இன்னமும் தூங்கிக்கொண்டிராமல் தூக்கத்தை உதறிவிட்டு நன்றாய்க் கண்களைத் துடைத்துக்கொண்டு ஜாக்கிரதைப் படுவார்களென்று நம்புகிறோம்.

ஜே. ஆர். ரங்கராஜு.

ஒருவரையும் அதிகமாய் நம்பாதே.—என்னதான் மனிதர்கள் எல்லாரும் ஒன்றென நாம் சொன்னபோதிலும், ஒவ்வொருவர்க்குள்ளும் சில வித்தியாசங்கள் இருக்க நாம் பரிசோதித்தால் காணலாம். யோக்கியமுள்ளவர்களும் அயோக்கியமான காரியத்தை ஒரு சமயத்தில் செய்து விடுகிறார்கள்; அந்தஸ்துள்ள மனிதன் அற்ப விஷயங்களையும் செய்து விடுகிறான்; நல்லவன் கெடுதியையும், கெட்டவன் நல்லதையும் ஒரு சமயத்தில் செய்வதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? ஆகையால் ஒவ்வொருவரையும் நாம் பரிசோதித்துப் பார்க்க வேண்டுமென்று ஏற்படுகிறதல்லவா? ஒரு மனிதன் தான், மிகவும் கௌரவமுள்ளவனென்று சொல்லிக் கொள்வான்; ஐயோ அப்படியே அவன் சொல்லிக் கொள்ளட்டும்; அதைப் பற்றி நமக்கு ஒன்றும் பொறாமை வேண்டாம். ஆனால் அவன் சொல்வதை நம்பி நமது கைப்பொருளை அவனிடம் ஒப்புவித்துவைப்போமேயானால் நம்மைவிடப் பெரும் மூடர்கள் இல்லை. "தன்னாயுதமும் தன் கையிற் பொருளும் பிறர்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே."

தன்பொறுப்பு

RESPONSIBILITY

"கட்டிக்கொடுத்த அமுதும் சொல்லிக்கொடுத்த புத்தியும் எத்தனை நாள் வரும்" என்றும், "தென்னைமரத்தில் ஏறுகிறவனை எவ்வளவு தூரம் தாங்கலாம்" என்றும் உலகத்தார் சொல்லுவதை நாம் கேட்டிருக்கிறோம். இச்சொற்கள் வெகு உண்மையான சொற்கள். தாய் தந்தையர்கள் புத்தி புகட்டி நடத்துங் காலம் சொற்பகாலம். நாம் நமது சொந்த விஷயங்களைச் செய்யத் தெரியாது வகையற்று வெகு சிறுவர்களாயிருக்கிறவரையில் நமக்கு உடை உடுத்துவதும் புசிப்பு ஊட்டுவதும் நம்மைத் தூக்கி எடுப்பதும் நமது தாய் தந்தையர்கள் உதவியாலாகின்றன. அதேமாதிரி நமது குருவும் நண்பர்களும் நமக்குப் புத்தி சொல்லி அறிவு புகட்டி நம்மை நடத்துங் காலம் சொற்பகாலம். இக்காலம் கழிந்த பின்பு ஒவ்வொருவரும் தம்மைத் தாமே இவ்வுலகத்தில் நடத்திக்கொள்ளும் காலம் வருகின்றதல்லவா? இக்காலம் 14-ஆவது வயது முதல் 20-வயதுக்குள் என்று சொல்லலாம். அதுவரையில் நாம் பொறுப்பற்ற சிறு குழந்தைகளாக விருந்தோம். சட்டங்களிற்கூட 12-வயதுக்குள் ஒரு குழந்தை ஒரு குற்றஞ்செய்துவிட்டால் அது சிற்சில சமயங்களில் குற்றமாகாதென்று விதித்திருக்கின்றது. குழந்தைகளாயிருந்த வரையிற்றான் மற்றவர்கள் பொறுப்பில் நாமிருந்துவிட்டோம். தன் பொறுப்பு தனக்கு வந்தபிறகு ஒருவன் மற்றொருவனுக்கு அடங்குகிறவனாகமாட்டான். தன் செயலுக்குத் தானே உத்தரவாதியாகின்றான். அவனிஷ்டப்பட்டால் ஈசுவரனுக்குக் கூட அவன் அடங்கி நடக்கவேண்டியதில்லை. ஆகையால் இவ்விதமாகத் தன்பொறுப்பு வரும் பருவம் அதாவது, 14-ஆவது வயது முதல் 20

வயதுக்குள்ளாகிய காலம் ஒவ்வொருவன் ஆயுளிலும் வெகு சிலாக்கியமான காலம். ஒருவனை நற்பதவிக்குக் கொண்டுவருகிற காலமும் அதுதான்; ஒருவனைக்கெடுக்கிற காலமும் அதேதான். இதன் நுட்பமான அர்த்தமாவதென்ன? என்னை மேன்மையாக எண்ணிக்கொள்ளவோ, அல்லது என்னையே நான் கெடுத்துக்கொள்ளவோ, இப்பருவத்தில் நான் சர்வாதிகாரம் பெற்றிருக்கிறேன் என்றபடி. இப்பருவம் நமக்கு வந்ததும் நம்முள் ஒவ்வொருவரும் வெகு நாகரிகமான நிலைமையில் தத்தளிப்பவர்களாகின்றோம். ஒவ்வொரு நிமிஷமும் நாம் செய்யப்புகும் வேலைகளில் இவ்வாறு செய்வது நியாயமா அநியாயமா என்பதை நாமே நிச்சயித்துக்கொள்ளும் பதவியில் வந்துவிடுகின்றோம். நமது தேகப்பயிற்சி, படிப்பு, உழைப்பு, வேடிக்கை, விநோதம், வ்யவகாரம் எல்லா விஷயங்களிலும் நாமே நமக்குள் இவ்வாறு செய்வது உத்தமம், அவ்வாறு செய்வது குற்றம், என்று நிச்சயித்துக்கொள்ளுகின்றோம்.

இவ்வண்ணம் நமது பொறுப்பால் நாம் நியாயத்தை நியாயமாகவே பார்த்து இறங்கி விடுவோமேயானால் அதுதான் நாம் மேன்மேலும் அபிவிருத்திக்கு வருவதற்கு ஓர் பெரும் அத்தாக்ஷி; அதற்குப் பதிலாக அக்கிரமத்தைக் கிரமமாகவும் அநியாயத்தை நியாயமாகவும் நமது பொறுப்பால் கருதி, குற்றமான நிச்சயங்களைக் கைக்கொண்டு ஒரு விஷயத்தில் இறங்கிவிடுவோமேயானால் அத்துடன் நமது க்ஷேமம் அப்பொழுது தொலைவதுமல்லாமல் நாளுக்குநாள் நாம் சங்கடங்களில் சிக்கிக்கொண்டு வெகு கஷ்டதசையில் வீழ்ந்து பரிதவிப்போம். "ஒரு நொடியில் அழிந்த கற்பு ஒரு யுகமானாலும் திரும்பி வராது" என்றபடி, தன் பொறுப்பு வந்த காலத்தில் நாம் ஒரு விஷயத்தில் தப்பி நடந்து அக்கிரமத்தில் இறங்கிவிட்டால் அக்குற்றத்தை நாம் மறுபடியும் சீர்திருத்திக்கொள்ளவே முடியாதாகையால் இந்த விஷயத்தில் ஒவ்வொருவரும் வெகு கவனமாகவிருக்கவேண்டும்.

இன்னும் சிலர் தன்பொறுப்பு வந்தபிறகும் பிறர் உதவியையும் செயலையும் கொண்டு தன் காரியங்களைச் செய்ய ஆரம்பிப்பார்கள்; அம்மாடித்தன்; அப்பாடிமித்தன்; மித்திரன் டித்தன்; மந்திரி டிமித்தன் என்ற சிலர், (இவ்விதமான புருஷர்களுடைய பட்டத்தின் அருத்தம் என்னவெனில்) அம்மா சொல்லுகிறபடி நடக்கிறவன்; அப்பா சொல்லுகிறபடி நடக்கிறவன்; ஒரு சிநேகிதன் புத்திப்படி நடக்கிறவன்; ஒரு மந்திரி புத்திப்படி நடக்கிறவன் என்பதாம். இவ்வாறான அம்மா, அப்பா, மித்திரன், மந்திரி இவர்கள் நல்லவர்களாகவிருந்து நல்வழியிலேயே ஒருவனை நடத்தினபோதிலும் அவனுக்கும், கடியாரத்தில் நாம் நமதிஷ்டப்படி திருப்பி வைத்து ஓட்டும் நிமிஷமுள்ளுக்கும், விநாடிமுள்ளுக்கும் வித்தியாசமே இல்லை. தன் ஸ்வய புத்தியைக் கொண்டு ஒரு காரியம் செய்யச் சக்தியற்று மற்றவர்கள் உதவியை நாடுகிறவன் மனிதனல்ல; மனிதவடிவங்கொண்ட ஒரு கருவியாவான்.

நீ முன்னுக்கு வர உனக்கு மனமிருந்தால் நீ ஒரு தீரனாகவிருக்கவேண்டும். உன் பொறுப்பும் உன்னறிவும் உன் உள்ளத்திலிருந்தே உதிக்கவேண்டும். வெளியார்கள் பூசும் மேல்பூச்சு ஒரு பிரயோஜனமும் ஈயாது. பெரிய வம்சத்தில் பிரபுக்களின் குழந்தைகள் சிற்சில சமயங்களில் மற்றவர்கள் சொற்கேட்டு நடப்பவர்களாய் ஆகிவிடலாம். கஷ்டதசையிலிருந்து அவஸ்தைப்பட்டு முன்னுக்கு வருகிறவர்கள் பெரும்பாலும் மற்றவர்கள் சொற்கேட்டு நடக்காமல் தங்கள் பொறுப்பைக்கொண்டு நடப்பவர்கள் என்பது சாஸ்திரம்.

இதுவுமன்றித் தன் பொறுப்பால் ஒரு காரியத்தை நடத்தாமல் மற்றவர்கள் உபதேசத்தால் நடத்தப்பட்டவர்கள் தங்கள் வேலையைத்

தாங்களே செய்ய சோம்பேறிகளாய் மற்றவர்களிடம் ஒப்புவைத்துச் சுகப்படும் நுட்ப அறிவுள்ளவர்களாய் அபவாதம் பெறுவார்கள். இவர்கள் ஒருபொழுதும் சுகப்படப்பட்டவர்களல்லர். சுகப்படுவதாக இவர்கள் எண்ணுவது தப்பிதமான கொள்கை. ஏனெனில் இருவர்கள் எப்பொழுதும் எவ்விஷயத்திலும் ஒரேவித நிச்சயித்துக்கு வரவேமாட்டார்கள். சொற்பகாலம் ஒரேவழியில் நடந்து அப்புறம் எப்பொழுதாவது பிரிந்தே தீரவேண்டும். முதல் முதல் அவ்வாறு பிரிவதால் உண்டாகும் வித்தியாசம் வெகு நுட்பமாயிருக்கும். நாளாக நாளாக இவ்விருவர்களும் முற்றிலும் வித்தியாசப்பட்டுச் சொற்பமேனும் ஒவ்வாமல் நடப்பவர்களாவார்கள்.

கப்பலை நடத்துவோன் தலைமைப்பூண்டு நடத்தினாலன்றிப் பெரும் புசலடிக்கும் பொழுது தலைவன், இப்பாயை இறக்கென்றால் அவன் நண்பன் "வேண்டாம், இப்பாய் இப்படியே இருக்கட்டும்" என்றால், அப்புறம் அம்மரக்கலம் எவ்வண்ணம் மூழ்காமலிருக்கும்? அதுபோலவேதான் தன் பொறுப்பு வந்தபின்னர், தன் புத்தியால் சரியான வழியில் நடப்பவன் முன்னுக்கு வருவான்; மற்றவர்கள் புத்தியைக்கொண்டு நடப்பவன் மேற்கூறிய மரக்கலம்போல நாசமடைவான்.

ஸ்ரீ காலடி : கும்பாபிஷேகம்

ஆர்யதேசமான இந்தப் பாரதநாட்டில் கலியின் மகிமையால் தர்மங்கள் யாவும் தவறிப்போய் அதர்மமே மேலோங்கி வரும்போது கருணாநிதியான.ஸர்வேச்வரன் ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யர்களாக அவதரித்துத், துர்மதங்களைக் கண்டித்து, அத்வைதம் முதலிய ஆறு வைதிகமதங்களை மாத்திரம் நிலைநிறுத்தி, இவைகள் எப்போதும் குறைவு அடையாவண்ணம் ஆங்காங்கு மடங்களையும் அவைகளில் தன் சிஷ்யர்களான மகாத்மாக்களையும் ஏற்படுத்தி, நம்மவருக்கு மிகவும் உதவி புரிந்திருக்கிறாரென்பது நம்மவர்களெல்லாருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயமே. இந்தப் பரமாசார்யாள் அவதாரமடையும்படியான பாக்யத்தையடைந்தது காலடி என்னும் ஒரு திவ்ய க்ஷேத்ரம். இதற்கு ஸமீபத்தில் சூர்ணீ என்ற ஒரு நதியுண்டு. இந்த க்ஷேத்ரம் திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் அங்கமலி என்னும் ரயில்வே ஸ்டேஷனுக்கு 5-மைல் தூரத்திலுள்ளது. இப்போது கொஞ்சகாலத்திற்கு முந்தி சில ஆஸ்திக கனவான்கள் இந்த க்ஷேத்ரத்தில் நமது பரமாசார்யாளின் ஆலயத்தை நன்றாய்க் கட்டி முடித்தார்கள். இதற்கு இப்போது சிருங்கேரியில் பிரகாசித்துக் கொண்டிருக்கிற ஆசார்யாளவர்கள் வந்து கும்பாபிஷேகம் செய்து பிரதிஷ்டை செய்யப்போகிறார்கள் என்று கேள்விப்பட்டு நமது தேசத்தின் எல்லாபாகத்திலிருந்தும் ஜனங்கள் வந்து கூடினார்கள். அந்த மகா பரிசுத்தமான கும்பாபிஷேகம் சென்ற மாசிமீ 10௳ திங்கட்கிழமை பகல் மணி 12-30-க்கு வெகு மங்களகரமாய் நடந்தேறியது. அப்போது கணக்கற்ற பிராம்மணர்களும் யதீச்வரர்களும் ராஜாக்களும் இன்னும் மற்றுமுள்ள கனதனவான்கள் யாவரும் வந்திருந்தார்கள். இந்த அத்புதகாக்ஷியைத் தரிசித்தவர்களின் பாக்யமே பாக்யம். குறிப்பிட்ட ஸமயத்தில் பஞ்சலோஹங்களால் சாஸ்திரப்படி செய்யப்பட்ட ஸ்ரீ சாரதாம்பாள் விக்ரஹத்தையும் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாள் விக்ரஹத்தையும் ஸ்ரீமத் சிருங்கேரி ஆசார்யாளவர்கள் பிராம்மணர்களின் உபநிஷத் முதலிய வேதகோஷங்களை முன்னிட்டுக்கொண்டு நன்றாய் அமைக்கப்பட்டிருந்த ஆலயங்களில் பிரதிஷ்டை செய்தார்கள். இந்தப் புண்ய காரியம் சரியாய் நிறைவேறியதும் அன்று மாலை ஸ்வாமிகளவர்களின் ஸந்நிதானத்தில் கூடின வித்வ மகாஸபையில் சில பண்டிதர்களால் ஸ்ரீ சாரதாம்பாள், ஆசார்யாள் இவர்களைப்பற்றி ஸம்ஸ்கிருதத்திலும் மற்றைய பாஷைகளிலும் வந்தனப் பத்திரிகைகள் படிக்கப்பட்டவுடன், ஸ்ரீமத் சிருங்கேரி ஆசார்யள் சுமார் ஒரு மணி நேரம், தமிழில், சிஷ்யன் குருவினிடமிருக்க வேண்டிய முறை, நித்யகர்மாநுஷ்டானம், மனதை அடக்க வேண்டிய வழி, கர்மம், ஜன்மாந்தரம், யோகம், அத்வைதம் இந்த விஷயங்களைப் பற்றியும் அந்தந்த மதவிஷயத்தில் நமது காருண்ய கவர்ன்மெண்டார் நமக்குக் கொடுத்திருக்கும் ஸ்வதந்திரத்தைப்பற்றியும் தெளிவாயும் ஜனங்கள் மனதில் படும்படியாயும் பேசினார்கள். இவ்விதம் சிரேயஸ்ஸாக்கிடமான இந்த மகாகும்பாபிஷேக மகோத்ஸவம் நன்றாய் நிறைவேறியது.

இயற்கை அற்புதங்கள்
WONDERS IN NATURE

XIV. காற்றினங்கள்
KINDS OF WINDS

வாயுவில் உண்டாகும் அசைவுகளுக்கே காற்று என்று பெயர். இவைகள் உண்டாக பொதுவான காரணத்தை முன்னமே கூறியாய் விட்டது. இவைகள் சிற்சில சிறப்பான காரணங்களால் அநேக விதமாகக் காணப்படுகின்றன. ஸமுத்திரக்கரை ஓரமாக உள்ள பட்டணங்களில் கடல்காற்று, நிலக்காற்று; வருஷங்களில் சிற்சில மாதங்களில் ஒழுங்காக அடிப்பனவாகிய பருவக்காற்றுகள்; அத்லாந்டிக் பஸிபிக் மஹா ஸமுத்திரங்களில் அடிக்கும்படியான வர்த்தகக்காற்று, பிரதி வர்த்தகக்காற்று, ஆகிய இவைகளே காற்றின் முக்கியமான மாறுபாடுகள்.

முதலில் கடற்கரைப் பட்டணங்களில் கடற்காற்று, நிலக்காற்று முதலியவைகள் உண்டாகும் விதத்தை ஆராய்வோம். பூமி ஸூர்யனிடம் இருந்து அதிக சீக்கிரமாக உஷ்ணம்ஏற்று உஷ்ணத்தை வெளிப்படுத்திவிடும். தண்ணீரோ அவ்வாறின்றி மெதுவாக உஷ்ணத்தை வாங்கி மெதுவாகவே வெளிவிடும். காலைப் பத்துமணிக்குக் குளத்தின் கரையிலுள்ள மண்ணை மிதித்துவிட்டுக் குளத்துள் இறங்குவோமாகில் மணல்உஷ்ணமாயும், தண்ணீர் குளிர்ச்சியாயும் இருக்கும். இதனால் இவைகளின் உஷ்ணம் ஏற்கும் சக்திவெளியாகிறது. பனிபெய்யாத இரவு 7-அல்லது 8-மணிக்கு இதேமாதிரி செய்வோமாகில் மணல் குளிர்ச்சியாயும் தண்ணீர் ஸுக உஷ்ணமாயும் இருக்கும். இதனால் இவைகளின் உஷ்ணம்வெளிவிடும் சக்தி வெளியாகின்றது. பூமிக்கு ஸூர்யனிடமிருந்து உஷ்ணம் நடுப்பகல் 12 மணிக்கு அதிகமாக வந்தபோதிலும் மேல்மேலும் 1-மணி வரையில் அதிக உஷ்ணம் வந்துகொண்டே இருப்பதால், பூமி ஸுமார் பகல் 1-மணிக்குத்தான் தான் வாங்கிய உஷ்ணத்தை வெளிவிடத் தொடங்குகிறது. அப்பொழுது பூமிமேல் உள்ள காற்று உஷ்ணப்படுத்தப்பட்டு மேலேகிளம்புகிறது. உடனே பூமியில் அமுக்கும் சக்தி குறைய ஸமுத்திரத்திலிருந்து குளிர்காற்று கரையை நோக்கி அடிக்கின்றது. பூமியில் மேலே கிளம்பும் காற்று உஷ்ணங்குறைந்த உடன் அடியில்வரும் உஷ்ணக் காற்றால் தள்ளப்பட்டு ஸமுத்திரப் பக்கம்போகிறது. இம்மாதிரி ஸாதாரணமாக ஒவ்வொருநாளும் ஸுமார்பகல் 1-மணிமுதல் இரவு 1-மணி வரையில் கடற்காற்று அடித்துக்கொண்டிருக்கும். இரவு 1 மணி ஸுமாருக்குப் பூமி நன்றாகக் குளிர்ந்துவிடும். அப்பொழுது மெதுவாக ஸூர்யாஸ்தமனம் வரை உஷ்ணம் வாங்கிக்கொண்டிருந்த ஸமுத்திர ஜலம் உஷ்ணத்தை வெளிவிடுகின்றது. அப்பொழுது ஜலத்தில் மேலுள்ள வாயு உஷ்ணமாகி மேலே கிளம்பிவிட அங்கு அமுக்கல் சக்தி குறைந்துவிடும். பூமியிலிருந்து குளிர்காற்று கடல்நோக்கி அடிக்கும். கடலிலிருந்து கிளம்பிய உஷ்ணக்காற்றுமேல்போய்க்குளிர்ந்து விட கீழே வரும் உஷ்ணக்காற்றால் பூமியைநோக்கித் தள்ளப்படும். இம்மாதிரி பூமியிலிருந்து தினம் இரவு 1-மணி முதல் காலை 9-அல்லது 10 மணி வரையில் கடல் நோக்கி அடிக்கும் காற்றிற்கு நிலக்காற்று என்று பெயர். கடற்கரை ஓரங்களில் பூமியில் உஷ்ணம் ஏறுங்கால் கடலிலிருந்து குளிர்க்காற்று வந்து அதைத் தணித்தும், பூமியில் குளிர்ச்சி அதிகப்பட்டால் காற்று கடலுள் போய் அங்கிருக்கும் காற்று பூமிக்கு வந்து குளிர்ச்சியை ஒருவாறு குறைத்தும் வருவதால், கடற்கரை இடங்களில் எந்தக் காலத்திலும் அதிக உஷ்ணமோ அதிகக்குளிர்ச்சியோ உண்டாகமாட்டாது. நான்கு புறமும் தண்ணீர் சூழ்ந்த நிலமாகிய தீவுகளில் இதே காரணத்தால் சீதோஷ்ண ஸ்திதி ஒழுங்குபடுத்தப்படும். இம்மாதிரி ஒழுங்குபடுத்தப்பட்ட சீதோஷ்ண ஸ்திதிக்கே த்வீப சீதோஷ்ண ஸ்திதி என்று பெயர். இதற்கு மாறாக உள்ளது உள்நாட்டு சீதோஷ்ண ஸ்திதி என்பது. உள்நாடுகளில், அதாவது கடலை விட்டு வெகு தூரத்தில் இருக்கும் நாடுகளில், முற்கூறியபடி சீதோஷ்ணங்களை ஒழுங்குபடுத்துவதான காற்றுக்கள் உண்டாக இடமில்லை. ஆதலால் அங்கு உஷ்ணகாலத்தில் அதிக உஷ்ணமும், குளிர்க்காலத்தில் அதிகக் குளிரும் இருக்கும்.

இனிப்பருவக் காற்றுகளின் விஷயத்தை எடுத்துக் கூறுவோம். நம் பரதகண்டத்தில் இரண்டு விதமான பருவக்காற்றுக்கள் உண்டாகின்றன. அவையாவன, வைகாசிமாஸம் முதல் ஆனிவரையில் அடிக்கும் தென்மேற்குப் பருவக்காற்றும், புரட்டாசி முதல் கார்த்திகைமாதம் வரையில் அடிக்கும் வடகிழக்குப் பருவக்காற்றும் ஆகிய இவைகளே. இதே மாதிரி நேடாலில் முன் ஆறுமாதத்திற்குள் அடிக்கும் தென்கிழக்குக்காற்றும், பின் ஆறுமாதத்திற்

குள் அடிக்கும் வடமேற்குக்காற்றும் பருவக்காற்றுக்களே. இதில் தென்மேற்குக்காற்று அதிக மழையைக் கொண்டுவந்து மேற்குத்தொடர்ச்சிமலைகளில் கொட்டுகின்றது. வடகிழக்குக் காற்று அதைவிட குறைந்ததாகிய மழைகளைக் கொண்டுவந்து துலாமாஸ மழையாக தக்ஷிணதேசத்தில் எங்கும் பெய்யும்படி செய்கின்றது. இப்பருவக்காற்றுக்கள் பொதுவாக மழைகொண்டுவரும் காற்றுக்கள். இவைகளுக்கு முக்கியகாரணம் ஸூர்யனது உத்தராயண தக்ஷிணாயணமே. உத்தராயணகாலத்தில் பூமியின் மத்தியபாகத்திற்கு வடக்கில் ஸூர்ய கிரணம் நேராக 12-மணிக்கு விழும். அந்தப்பாகம் அதிகமாக உஷ்ணப்படுத்தப்பட உஷ்ணவாயு மேலே கிளம்பும். அங்கு அமுக்கும் சக்தி குறையும். அப்பொழுது காற்று தெற்குப் பாகத்திலிருந்து வடக்கே ஓடிவரும். இதுதான் நேடாலில் தென் கிழக்குக் காற்றாகவும், பரதகண்டத்தில் தென்மேற்குக் காற்றாகவும் காணப்படுகிறது. இதுபோல தக்ஷிணாயண காலத்தில் காற்று பூமியின் வடபாகத்திலிருந்து தெற்கே ஓடும். இதுதான் பரதகண்டத்தில் வடகிழக்குக் காற்றாகவும் நேடாலில் வடமேற்குக் காற்றாகவும் காணப்படும். ஆனால் வடக்கே இருந்து தெற்கேயும், தெற்கே இருந்து வடக்கேயும் ஓடும் காற்று நேரே போகாது சாய்ந்துபோவதற்குப் பூமி தினம் ஒருதரம் தன்னைத்தானே மேற்கே இருந்து கிழக்கே சுற்றிவருவதே காரணம்.

இனி வர்த்தகப் பிரதிவர்த்தகக் காற்றுகளைப் பற்றி விசாரிக்கப் புகுவோம். பூமியானது தினம் ஒருதரம் தனது துருவரேகை மத்தியமாகக் கொண்டு சுற்றிவருகின்றது. இதனால்தான், இராப்பகல் ஆகாயத்தில் தொங்கும் கோளங்கள் உதயாஸ்தமனமாவது ஆகிய இத்தோற்றங்கள் உண்டாகின்றன. வடக்குத்தெற்கு துருவபாகங்களுக்கு மத்தியில் பூமியைச் சுற்றிப்போகும் ரேகைக்குப் பூமத்யரேகை என்று பெயர். இதற்கு வடக்கிலும் தெற்கிலும்தான் ஸூர்யன் உத்தராயண தக்ஷிணாயணங்களில் போவது. ஸூர்யன் உத்தராயண தக்ஷிணாயணங்களில் ஸஞ்சரிக்குந்தூரம் எவ்வளவோ அவ்வளவே பூமத்ய ரேகையின் இருபுறத்திலும் உஷ்ணம் அதிகமாக இருப்பது. இந்தஅளவுக்கு மேற்பட்ட வடக்கு தெற்குபாகங்களில் அதிக உஷ்ணமே இல்லை. வடக்கு தெற்கு துருவபாகங்களில் பனிக் கட்டிகளும் அதிகக் குளிருமே காணப்படும். ஒரு குடையைப் பிரித்து அதன் காம்பைச் சுற்றிவரும்படி அதைச் சுற்றினால் காம்பின் அருகாமையிலுள்ள குடையின் பாகங்கள் எல்லாம் சிறு வட்டத்திலும், குடைக்கம்பியின் நுனி எல்லாம் பெரிய வட்டத்திலும் சுற்றிவரும். காம்பில் உள்ள பாகங்களோ சுற்றவேமாட்டா. எல்லா வட்டங்களும் ஒரே நாழிகையில் பூர்ணமாக்கப்படுவன. ஆகையால் குடைக்கம்பி நுனிகள் அதிக வேகமாகச் சுற்றுகின்றன. காம்பிற்கு அருகாமையிலுள்ள பாகங்களின் வேகம் போகப் போகக் குறைந்துகொண்டு வருகின்றது என்பது தெரியவருகிறது. இதுபோல பூமத்யரேகைகு அருகாமையில் உள்ள பிரதேசங்கள் அதிகவேகமாயும் துருவரேகைக்கு அருகாமையில் போகப்போகப் பிரதேசங்கள் குறைந்த வேகமாயும் சுற்றுகின்றன என்பதற்கு என்ன ஸந்தேகம்.

இப்பொழுது பூமத்யரேகைக்கு வடக்கிலும் தெற்கிலுமுள்ள அருகாமைப் பிரதேசங்கள் ஸூர்யனால் அதிக உஷ்ணப்படுத்தப்பட மேலுள்ள வாயு உஷ்ணம் அடைந்து மேலே கிளம்புகிறது. உடனே இங்கு அமுக்கும் சக்தி குறைந்து விடுகின்றது. இந்தப் பாகத்தை நோக்கி வடக்கு தெற்கு துருவ பாகங்களிலிருந்து குளிர்க்காற்று வீசுகின்றன. இவைகளுக்கே அத்லாந்திக் பஸிபிக் மஹா ஸமுத்திரங்களில் வர்த்தகக்காற்று என்று பெயர். இவைகள் வர்த்தகர்களுக்கு ஸஹாயமாக இருந்திருக்கலாம். இவைகள் நேரே வடகாற்றாயும், தென்காற்றாயும் அடிக்காமல் வடகிழக்குக்காற்றாகவும் தென் கிழக்குக் காற்றாகவும் அடிக்கின்றன. மேலேகிளம்பிய உஷ்ணக்காற்று மேல் பாகங்களில் குளிர்ச்சியடைந்து கீழே இறங்க யத்தனிக்கையில் அடியில் கிளம்பிவரும் உஷ்ணக் காற்று அவைகளைப் பூமியில் வடக்கு தெற்கு பாகங்களில் தள்ளிவிட வெகு தூரம் வடக்கிலும் தெற்கிலும் போய் அங்கு இவை முறையே தென் மேற்கு, வடமேற்குக் காற்றுகளாக வீசுகின்றன. இவைகளே பிரதிவர்த்தகக் காற்றுகள்.

வர்த்தகப் பிரதிவர்த்தகக் காற்றுக்கள் நேராக அடிக்காது மூலையிலிருந்து அடிப்பானேன்? என்ற சங்கை பிறக்கும். இதற்கு ஸமாதானம் சொன்னால் பருவக்காற்றுகள் மூலையிலிருந்து அடிப்பதற்கு எளிதில் காரணம் கூறிவிடலாம். வடக்கே இருந்து பூமத்யரேகையை நோக்கி வரும் வர்த்தகக் காற்றானது சுற்றும் வேகம் குறைந்த இடத்திலிருந்து அதிகமான வேகம் உடைய இடத்திற்கு வருகின்றது. ஆதலால் அது கொஞ்சம் மேற்கேபின்னடைந்துவிடும். அதாவது அது வடகிழக்கிலிருந்து வருவது போலக் காணப்படும். எவ்வாறு காற்றில்லாது மழை நின்று பெய்யுங்காலத்தில் கூட நாம்

ஓடினால் நமது முகத்திற்கு எதிரே மழைத்துளிகள் சரிந்து அடிப்பது போலக் காணப்படுகின்றனவோ அவ்வாறே இக்காற்றும் சரிந்து மூலையிலிருந்து வருவதாகக் காணப்படுகின்றது. வடக்கே அடிக்கும் பிரதி பருவக்காற்றோ வேகமாகச் சுற்றும் இடங்களில் இருந்து வேகம் குறைந்த இடங்களில் அடிப்பதால் சற்றே அவை முன்னோக்கி கிழக்கே போகின்றன. இதனால் அவை தென்மேற்கு காற்றாக வீசுகின்றன. (ஓடும் வண்டி திடீரென்று நின்றால் உள்ளிருப்போர், முன் நோக்கி விழுவது போல), இம்மாதிரியே தான் பூமத்யரேகையின் தென் பாகத்திய வர்த்தகப் பிரதிவர்த்தகக் காற்றுகள் சாய்ந்து அடிக்கின்றன.

இனிப் பருவக்காற்றுகள் விஷயத்தைக்கூறி இவ்வியாஸத்தை முடிப்போம். ஸமுத்திரத்தில் வர்த்தகப் பிரதிவர்த்தகக் காற்றுக்களே நிலத்தில் பருவக் காற்றுக்களாக மாறுகின்றன. உத்தராயணத்தில் ஸூர்யன் பூமத்யரேகையின் வடபாகங்களுக்கு நேரே மேலே வருங்கால் அங்கு வாயுவில் அமுக்கும் சக்தி குறைய துருவபாகங்களிலிருந்து குளிர்காற்று வருகின்றது. இதில் பூமத்யரேகையின் தெற்கே இருந்து வரும் தென்கிழக்குக் காற்று நேடாலில் தென்கிழக்குப் பருவக்காற்றாக இருக்கின்றது. இது அமுக்கும் சக்தி குறைந்திருக்கும் இடம் வந்து சேருவதற்கு முன் பூமத்யரேகையைத் தாண்டும்படி நேரிட அதிக வேகத்துடன் சுற்றும் இடத்திலிருந்து வேகக் குறைவாய்ச் சுற்றும் இடத்திற்குப் போகவேண்டிவருகிறது. உடனே இதே வர்த்தகக்காற்று தென்மேற்கு பருவக்காற்றாகப் பாரதகண்டத்தில் அந்தகாலத்தில் வீசுகின்றது. இந்தப் பருவக்காற்று பெரும்பாலும் ஸமுத்திரத்தின் மேலாகவே வருவதால் ஏராளமான மழையைக்கொண்டு வருகிறது. இதேமாதிரி தக்ஷிணாயண காலத்தில் வடகிழக்கு வர்த்தகக்காற்று பாரதகண்டத்தில் வடகிழக்கு பருவக்காற்றாகவும், நேடாலில் வடமேற்குப் பருவக்காற்றாகவும் வீசுகின்றது.

மலைகளின் அமைப்பால் காற்றுக்களின் மார்க்கம் மாறுபடும். மலைதொடர்களில் கணவாய்கள் ஏற்பட்டால் அவைகளின் வழியாகக் காற்றுப் புகுந்து புறப்பட்டால், அவைகள் நோக்கும் திக்கை நோக்கியே காற்றும் அடிக்கும். எவ்வாறு சுவற்றில்போய் அடிபடும் பந்தானது போகும் மார்க்கம் மாறி வேறு மார்க்கமாக எழும்பி வருகின்றதோ அதுபோல வேகமாக அடிக்கும் காற்றும் மலைசாரல்களால் தடுக்கப்பட்டுத் தனது மார்க்கத்தில் மாறுதல் அடைந்து வெவ்வேறு திக்கிலிருந்து அடிப்பது போலத் தோற்றலாம்.

ஆகவே ஸூர்ய உஷ்ணத்தால் பூமி உஷ்ணமாகி வாயுவில் அசைவு ஏற்படுவதாலும், அது பூமி சுற்றுவதாலும், நிலமும் நீரும் உஷ்ணத்தை ஏற்று வெளியிடக்கூடிய சக்தி பேதத்தாலும், மலை முதலியவைகளின் அமைப்பாலும் உலகில் உள்ள காற்றினங்கள் உண்டாகின்றன என்பது தெரியவருகிறது.

பர்மா தேக்குமரம்

THE TEAK OF BURMA

மிருகங்களுள் சிங்கம் எப்படியோ, அப்படியே மரங்களுள் தேக்குமரமும். இம்மரம் விசேஷமாய் பர்மாதேசத்து காடுகளிற் காணலாம். இம்மரத்தின் குணங்களை முடிவில் விவரிக்கலாம். பர்மா தேசத்தில் இம்மரம் மாத்திரமல்ல. அனேகவித மரங்களைக் காண்கிறோம். ஆனால் பர்மா மரமென்றால் எல்லாரும் தேக்குமரமென்றே எண்ணுவார்கள். ஏனென்றால் இம்மரம் நானாவித தேசங்களுக்கு ஏராளமாய் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இம்மரங்களை நன்றாய் முதிர்ந்த பிறகு கவர்ன்மெண்டார் வெட்டுவதற்கு உத்தரவு கொடுக்கிறார்கள். வெட்டினபிறகு மேலுள்ள பட்டையையும் பச்சை நாரையும் கோடரியால் வெட்டியெடுக்கிறார்கள். பிறகு மரத்தின் இலைகள் உதிர்ந்து மரம் உலர்ந்த மரமாகிறது. இம்மாதிரி இரண்டு மூன்று மாதங்கள் உலரப்பட்டு, பிறகு தண்ணீரில் மிதக்கவிடப்படுகிறது. இக்காலங்களில் மிகவும் ஜாக்கிரதையாயிருப்பார்கள். ஏனெனில் ஒருவேளை சூரிய வெப்பத்தினால் மரம் கெட்டுப்போகக்கூடும். அல்லது தரையோடு சேர்ந்து மரமாக வளரவுங்கூடும். அம்மாதிரி வளர்ந்தால் வெட்டின மரமென்று கருதாமல் விட்டுவிடவுங்கூடும். நன்றாய் முதிர்ந்தமரங்களை எப்பொழுதும் அடிப்பக்கத்தில் வெட்டித்தள்ளுவார்கள். முண்டும் முடிச்சாயிருக்கும் மரங்களை மேற்பக்கத்தில் இம்முடிச்சு இல்லாத பாகமாய்ப் பார்த்து வெட்டுவார்கள்.

இம்மாதிரி வெட்டினபிறகு, மரங்களை ஸரியான துண்டுகளாக வெட்டுவார்கள். இது எதற்காகவெனில் ஜனங்களுக்கு நதிக்கரையோரங்களுக்கு இழுத்துக்கொண்டு போவதற்குச் சுலபமாயிருப்பதற்காகத்தான். இழுத்துக்கொண்டு போதல் மிகவும் கடினமான காரியம். ஏனெனில் குறைந்தபட்சம் மரத்தின் தூரிலிருந்து சமீபத்திலுள்ள நதிக்கரைக்கு ஒன்று அல்லது இரண்டு மைல் தூரமிருக்கும். மேலும் வழி கரடு முரடாய் மேடுபள்ளமாய் வலித்துக்கொண்டுபோகும் ஆட்களுக்கு அதிக சிரமத்தைக் கொடுக்கக் கூடியதாயிருக்கும். இம்மாதிரி வேலை மானிடர்களால் செய்யக்கூடியதல்ல. இதையறிந்து தான் ஸகல ஜீவராசிகளையும் புற்பூண்டு

களையும் எப்பொழுதும் ஒரே மாதிரியாய்ப் பாதுகாத்துவருகின்ற லோகநாதர் இக்காடுகளில் ஏராளமாய் யானைகளைப் படைத்திருக்கிறார். இந்த ஸாதுவான பிராணிகள்தான் அக்கடினமான வேலையைச் செய்துகொண்டு வருகின்றன. திருவாங்கூர் இராஜ்யத்துக் காடுகளிலும், கொச்சி தேசத்துக் காடுகளிலும், இப்பிராணிகள்தான் கடினமான வேலையைச் செய்கின்றன. இம்மாதிரி இழுத்துக்கொண்டு போவதற்கு ஸாதனமாய் காலமுமுண்டு. அதாவது மழைகாலந்தான். ஏனென்றால் நதிகளும் ஓடைகளும் தண்ணீர் நிறைந்துள்ளதாயிருக்கும். தரையோ ஈரமாயும் சருக்குள்ளதாயுமிருக்கும். சீதோஷ்ண ஸ்திதியோ அதிக உஷ்ணமில்லாமல் இவ்வாயில்லாப் பிராணிகள் உத்ஸாகத்துடன் வேலை செய்யத் தகுந்த குளிர்ச்சியாயிருக்கும். இம்மாதிரி காலங்களில் மரங்களை யிழுத்துக்கொண்டு போவதால் அவ்வழி முழுவதும் ஒரு மாதிரி பள்ளமாய் தண்ணீர் நிறைந்து மரங்களை யிழுப்பதற்கு அதிக சுலபமாகிறது. இப்பிராணிகள் மரங்களையிழுப்பதற்காக ஒரு நுனியில் ஒரு துவாரமிட்டுச் சங்கிலி கோர்த்து அவைகளின் வாயில் கொடுத்திருக்கும். மற்றொரு நுனியில் வேறொரு மரத்தைச் சேர்த்திருக்கும்.

வலித்துக்கொண்டு போகும் வழியில் இருக்கின்ற ஓடைகளோ நதிகளோ எல்லாவற்றையும் உபயோகிக்கிறார்கள். ஏனெனில், தண்ணீரில் பளுவான வஸ்துக்களை எளிதில் கொண்டுபோகலாம். இம்மாதிரிப் பிராணிகளைப் பதினெட்டு வயதில் இக்கடினமான வேலையில் அமர்த்தக்கூடாது. இவ்வேலைக்குத் தகுந்த வயது முப்பதுமுதல் அறுபது வரை. அந்த வயதிற்றான் அவைகளுக்குப் பலமும் உத்ஸாகமும் ஏற்படுகிறது.

இம்மரத்துண்டுகளைப் பெரிய நதிகளில் பிரவாகம் வந்தாலொழிய விடுவதில்லை. இவைகளை ஒவ்வொன்றாய் ஆழமான பாகத்திற்குத் தள்ளி அப்புறம் தினுசு தினுசாய்க் கோர்த்து தண்ணீரில் அனுப்புவார்கள். ஐராவதியிலும் ஸிட்டான்கிலும் மரங்களை எந்த இடத்தில் வேணுமென்றாலும் அனுப்பலாம். ஆனால் ஸால்வின் நதியில் முகத்துவாரத்திலிருந்து அறுபது மைல் தூரத்திற்குள்தான் அனுப்பலாம். ஏனெனில் இந்நதி முழுவதும் மலைகளின் ஊடே செல்லுகின்றது. அப்படிச் செல்வதால் தேக்குமரங்கள் நதியின் வேகத்தால் குச்சி குச்சியாய்ப் போய் உபயோகமற்றுப் போகின்றன. இம்மரங்களை ஒன்று சேர்த்துக் கட்டி ஒரு படகுபோலச் செய்து அதன்மீது நாலு ஐந்து ஆள்கள் உட்கார்ந்து செல்லுவார்கள். எந்தெந்த இடங்களில் நிறுத்தவேண்டுமோ அந்தந்த இடங்களில் நிறுத்தி கரையோரஞ்சேர்த்ததும் முன்போலவே யானைகள் வந்து கரையின் மீது இழுத்துச் செல்லும். அந்தந்த இடங்களில் சேர்த்து வைத்து அப்புறம் கப்பலில் ஏற்றி வெளி தேசங்களுக்கு அனுப்பப்படுகிறது.

இதன் குணத்தைப்பற்றிக் கூறுவோம். அதிக நீளமாயும் வீரம் பாய்ந்ததாயும் பெரிய உத்தரங்களாய்க் கிடைக்கக்கூடியதுமான மரம் இது ஒன்றே. மிகவும் கனமுள்ளதுமல்ல. ஏனெனில் கோடரி அரிவாள் இழைப்புளி இவைகளைக் கொண்டு சேதமில்லாமல் இம்மரங்களில் வேலை செய்யலாம். மேலும் இம்மரங்களினூடே கட்டைகளுக்குச் சேதமில்லாமல், ஆணிகளைச் செலுத்தலாம். சில மரங்களோ ஆணியை அடித்தால் கீறல் ஏற்படும். எல்லாவற்றிலும் சிலாக்கியமான குணம் எது என்றாலோ இம்மரங்களோடு சேர்ந்துள்ள இரும்பு ஆணிகளோ அல்லது இரும்பு உத்தரங்களோ இவைகள் ஒருபொழுதும் துருப்பிடிப்பதேயில்லை. இத்தகைய குணம் வேறே மரங்களுக்கு இல்லாமலிருப்பதினால்தான் எல்லா தேசத்து ஜனங்களும் கட்டடங்களுக்கு இம்மரத்தையே உபயோகிக்கிறார்கள். இதைத் தவிர இதன் நிறமோ கண்ணுக்குத் திருப்தியாயும் வார்நீஷ் கொடுத்தாற்போல கருஞ் சிவப்பு. இதன் வாஸனையோ மரத்தை யரிக்கின்ற புழுப் பூச்சிகளையோட்டக் கூடியதா யிருக்கிறது. இம்மரத்திலிருக்கும் ஒருவித எண்ணைப் பசையாற்றான் இம்மரம் கெட்டுப்போகாமல் வெகுகாலம் நீடித்திருக்கின்றது. இத்தகைய மரம் நம் தேசத்திலிருக்கும் போது ஜனங்கள் ஏராளமாய் இரும்புத்தூண்களையும் இரும்பு உத்தரங்களையும் வெளிதேசத்திலிருந்து வரவழைத்து நமது பணத்தை வீணாகச் செலவு செய்கிறார்கள். நமக்கு வேணுமென்ற ஸாமான்கள் நம்தேசத்திலிருக்கும் பொழுது ஏன் வெளியிற் செல்லவேண்டும். இம்மரத்தை எம்மாதிரியானாலும் உபயோகிக்கலாம்.

வி. ஜி. சுப்பய்யா ஐயர் பி.ஏ., எல்.டி.

நமது பாடசாலைகளில் மதக்கல்வி பயிற்றுவிக்க ஒரு வேண்டுகோள்

A PLEA FOR RELIGIOUS EDUCATION IN OUR SCHOOLS

பர்மாவில் கவர்ன்மெண்டு கலாசாலைகளிலும் முனிசிபல் கலாசாலைகளிலும் மாணாக்கர்களுக்கு மத விஷயங்களைக் கற்பிக்க இங்கிலாந்திலிருக்கும் இந்திய செக்ரேடேரியினிடமிருந்து 1909-ம் வருஷம் அக்டோபர்மீ உத்தரவு வந்தது. மாணவர்களின் பெற்றோர்களெல்லாம் சம்மதித்திடின், இம்மத வித்தையைக் கலாசாலை நேரத்தில் கற்பிக்கலாமென்றும், இல்லாவிடில் நாளின் கல்விநேரம் முடிந்தபின் கலாசாலையிலேயே மதாசாரங்களையும் மதக்கொள்கைகளையும் பற்றி உபாத்திமார் உபன்னியாசஞ் செய்ய வேண்டுமென்றும் கட்டளை பிறந்திருக்கிறது. இந்த ஆஜ்ஞையை யறிந்ததும், மகிழ்ந்து கொண்டாடாத பர்மர்களில்லை. இந்த உதாரச் செய்கைக்காகப் பர்மா லெப்டினண்டு கவர்னரையும் லார்டு மார்லியையும் வாழ்த்தி பர்மாவில் பல விடங்களிலிருந்தும் தந்திகள் பறந்துகொண்டிருக்கின்றன.

நமது ஆரியமதத்தில் ஒரு வாலிபனுக்கு எழாமாண்டில் உபநயநம் நடந்ததும் அவன் பூர்வத்தில் எப்படி குருகுலவாசஞ்செய்து தன் ஆசாரியனிடத்தில் அட்சராப்பியாசந் தொடங்கி சாஸ்திரங்களில் தேர்ச்சி யடையவேண்டுவ தவசியமாயிருந்ததோ, அப்படியே பர்மாவிலும் சிறு பையன்கள் 8-வயது ஆவதற்குள்ளேயே பொஞ்சி யென்னும் புத்தயதிகளின் மடஞ்சென்று அங்கேயே தங்கியிருந்து அவர்களிடம் வித்தையைக்கற்று தர்ம சாஸ்திரங்களிலும் பௌத்தமதக் கிரந்தங்களிலும் தேர்ச்சிபெற வேண்டியதவசியமாயிருந்தது. இப்படிப் பொஞ்சிமடங்களில் பெற்ற சிட்சைதான் பர்மர்களிடம் பெரியோரை வழிபடுதல், விருந்தோம்பல், குணந்தழுவல், ஒப்புரவறிதல் முதலிய பல மேலான குணங்களைப் பொருந்தியிருக்கச் செய்தது. ஆங்கிலேய கலாசாலையிற் கற்கும் பிள்ளைகள் பொஞ்சிமடப் பிள்ளைகளைப்போல அடக்கவொடுக்கமும், பயபக்தியும், சீலசிஷ்டமும், கிருதஜ்ஞை விசுவாசங்களும் பெற்றிருப்பதில்லையென்று வெகுநாளாக முறைபாடுகள் இருந்துவந்தன. இவைப் பர்மப்பிள்ளைகளின் பெற்றோர்களால் மாத்திரமன்று. அநேக ஐரோப்பிய பெரிய மனிதர்களே பொஞ்சி மடங்களில் கற்றுவரும் பிள்ளைகளின் குணங்களையும் இங்கிலீஷ் கலாசாலைகளில் படித்துவரும் மாணவர்களின் குணங்களையும் ஒப்பிட்டு மேற்சொன்ன தாரதம்மியத்தைக் கண்டுபிடித்து முறையிட்டிருக்கிறார்கள். பர்மா சர்வகலாசாலை வருஷாந்திர ரிபோர்ட்டுகளைப் படித்துப்பார்த்தால் மேற்சொன்ன முறைபாடுகள் உண்மையேயென்று நன்கு விளங்கும்.

ஆங்கிலேயர் 1852-வது வருஷத்தில் பெகு மாகாணத்தைக் கைப்பற்றியது முதல் கீழ் பர்மாவில் மதாசாரமும், ஒழுக்கமும், சீலமும், துறவோரை வழிபடுதலும் குறைந்துவருகின்றனவென்று ஒரு சாரார் சொல்லிக்கொண்டார்கள். அதிலும் கவர்ன்மெண்டாராலும் கிறிஸ்தவப் பாதிரிகளாலும் ஆங்கிலேய பாஷை கற்பிக்கப் பலவிடங்களிலும் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டதும் இப்பாடசாலைகளில் கற்றுவந்த மாணவர்களின் குணங்களும் ஒழுக்கங்களும் விரும்பக் கூடாமையாயிருந்தமை விசிதமாயிற்று.

பிரிட்டிஷ் பர்மா சீப் கமிஷனராயிருந்த ஸர் ஆர்தர் பேர் என்பவர் பொஞ்சிமடக் கல்வியின் உயர்தரவியல்பை யாராய்ந்தறிந்து பர்ம வாலிபர்களுக்கு அவ்விதக் கல்வியே பயன் படைக்கத்தக்கது, ஆனால் அக்கல்வியுடன் பூகோளசாஸ்திரம், கணிதசாஸ்திரம் இவைகளையும் கற்பித்தால் சிறுவர்கள் சுதேசவித்தையுடன் ஐரோப்பியவிதச் சிட்சையும் பெறுவார்களென்றெண்ணி 1866-வது வருஷம் இந்தியாகவர்ன்மெண்டுக்குப் பொஞ்சிமட சுதேசக் கல்விப் பயிற்சியை யபிவிருத்தி செய்யவேண்டுமென்றும் எழுதித் தெரிவித்தார். இந்தியா கவர்ன்மெண்டாரும் இவ்வேண்டுகோளுக்கிணங்கினார்கள். உடனே பர்மாவுக்கு ஒரு டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் என்னும் சர்வ கலாசாலை யதிபதியும், அவருக்குதவி புரிய சில இன்ஸ்பெக்டர்களும் சஞ்சார உபாத்தியாயர்களும் நியமிக்கப்பட்டார்கள். ஐரோப்பிய விதிப்படி இயற்றப்பட்ட சில பூகோள நூல்களையும் கணித நூல்களையும் பர்மா பாஷையில் அச்சிட்டுப் பொஞ்சி மடங்களுக்கு இனாமாகப் பங்கிட்டார்கள். இதன நலத்தை அநேக பொஞ்சிமார்கள் அறிந்துகொண்டு ராஜாங்கத்தாரின் அபிப்பிராயத்தை நிறைவேற்றத் தங்களால் கூடிய உதவியைச் செய்தார்கள்.

ஆனால் நாளடைவில் பொஞ்சிமடத்தின் செல்வாக்குப்போய் பிள்ளைகளெல்லாம் கவர்ன்மெண்டு, முனிசிபல், பாதிரி கலாசாலைகளில் வித்தை கற்கத் தொடங்கினார்கள். மதக்கல்வி க்ஷீணிக்கவே பர்மப் பிள்ளைகளின் குணங்களும் நடவடிக்கைகளும் பழுதுபடத்தொடங்கின. ஆங்கிலேயக் கல்வி பரவாத மேல்பர்மா பிள்ளைகளைவிட, ஆங்கிலக் கலாசாலைகள் நிறைந்த கீழ் பர்மாவிலுள்ள பிள்ளைகள் ஜாதி மதாசாரங்களைக் கைவிட்டவர்கள் என்று இன்றும் ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

இதற்குக்காரணம் கீழ்பர்மாவில் கவர்ன்மெண்டு, முனிஸிபல் கலாசாலைகளில் மதவிஷயங்களைப்பற்றிக் கற்பிக்காமையும் பாதிரிமார் நல்லூநளில் அன்னிய மதத்தைப்பற்றிக் கற்பிப்பதுமே. மேல் பர்மாவிலோ இன்னும் பொஞ்சிகளுக்குச் செல்வாக்கு அதிகமாயிருக்கிறது. அவர்களிடம் ஜனங்களுக்குப் பயம் பக்தி, மதிப்பு, விசுவாசம் இவைகள் அதிகமாயுண்டு. ஆதலால் ஆசாரங்களும் கொள்கைகளும் கீழ்பர்மாவைவிட மேல்பர்மாவில் அதிகமாக அனுசரிக்கப் பட்டுவருகின்றன. ஆனால் நாளடைவில் மேல்பர்மாப்பிள்ளைகளும் கீழ்பர்மாவிலுள்ள பிள்ளைகளைப்போல விராத்தியர்களாகி விடுவார்களென்ற ஒரு பயமிருக்கிறது.

வெகுநாளாக விருந்து வந்த ஜனங்களுடையவும் ஐரோப்பியர்களுடையவும் முறைப்பாடுகளை நீக்குவதற்காகவே இந்திய செக்ரெடரியிடமிருந்து முற்சொன்ன உத்திரவு வந்திருக்கிறது.

இனி ஒவ்வொரு கவர்ன்மெண்டு முனிசிபல் ஸ்கூலில் மதவிஷயங்களையும் கற்பிப்பதற்காகப் பொஞ்சிகளாவது அல்லது மிக்க மதிப்புடைய பெரியோர்களாவது நியமிக்கப்படுவார்கள் என்று கருதப்படுகிறது. இவ்வுத்தரவினால் பாதிரிமார்களின் கலாசாலைகளுக்கு மிக்க நஷ்டம் நேரிடுமென்றும் அவர்களுடைய கலாசாலைக்கு பர்மர்கள் தங்கள் பிள்ளைகளை இனி அனுப்ப மாட்டார்களென்றும் ஒருவதந்தி இருக்கிறது.

நமது இந்திய வாலிபர்களும் பள்ளிக்கூடங்களில் ஆசாரம் ஒழுக்கங்களைப்பற்றிக் கற்பிக்கப்படாமையால் சுயமதப் பற்றில்லாமல் நாஸ்திகர்களாகவாவது நம்பிக்கையற்றவர்களாகவாவது வாழ்நாளை வீணாக்குகிறார்கள் என்பது பொய்யல்ல. கிறிஸ்தவ கலாசாலைகளில் அன்னிய மதத்தைப்பற்றிப் பெருமையாகப் பேசிக் கற்பிக்கப்படுகிறபடியால், அம்மாணவர்கள் சுயமதத்தின் அருமை பெருமைகளை யறியத் திறனற்றவர்களாகிறார்கள். கவர்ன்மெண்டு முனிசிபல் கலாசாலைகளிலோ ஒரு மதத்தைப்பற்றியும் அறிவூட்டுகிறதில்லை. ஆதலால் அவற்றில் கல்வி கற்கும் மாணவர்களும் எம்மதத்தின்மேலும் பற்றில்லாமல் உலகவாழ்க்கையெல்லாம் பொருள் இன்பம் இவற்றை யீட்டுதற்கேயன்றி அறம்,வீடு இவற்றைப்பற்றிச் சிந்தனை செய்வதற்கல்லவென்றிருக்கிறார்கள். இந்தியர்களாலேற்படுத்தப்பட்டுச்சம்ரட்சிக்கப்பட்டுவரும் சுதேச கலாசாலைகளிற்கூட பெரும்பாலும் இம்மத வித்தை ஊட்டப்படுகிறதில்லை. சென்ற சிலவருஷங்களாக ஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மாளின் முயற்சியால் அநேக இந்து ஸ்கூல்களில் ஸனாதன தர்மங்களைப்பற்றிக் கற்பித்து வருகிறார்கள். இதுவே சரியான நெறி. சுதேசிகளால் கையாளப்பட்டுவரும் பாடசாலைகளிலேயே அவர்கள் தங்கள் சொந்த மதத்தைக் கற்பியாதிருக்கும்போது கவர்ன்மெண்டு பாடசாலைகளில் சமயவறிவூட்டாமலிருப்பதற்காக நாம் கவர்ன்மெண்டாரை நோவதிலென்ன பயன்? சுதேச கலாசாலைகள் கவர்ன்மெண்டு கல்லூரிகளை யொட்டி யமைக்கப்பட்டிருக்கிறபடியால் அவற்றில் மதக்கல்வி யூட்டப்படவில்லை யென்று சிலர் வாதிக்கலாம். ஆனால் ஒரு சிஷ்யன் தன் குருவைக்காட்டிலும் பாண்டித்தியம் அதிகமாகப் பெறக்கூடாதென்று விதியிருக்கிறதோ? நமது கலாசாலைகள் கவர்ன்மெண்டாரின் பாடசாலைகளை யனுசரித்து ஏற்படுத்தப்படவேண்டியவே. அப்படிச் செய்யும்போது கவர்ன்மெண்டு பாடசாலையின் குறையின்னதென்று தெரிந்து அக்குறை நமது பாடசாலைகளிலும் காணப்படாதபடி பூர்த்தி செய்வதன்றோ பேரறிவு.

பர்மாவைப் போன்ற தேசங்களில் ஜனங்களில் ஏதோ சிலபேர்தவிர ஏனையோரெல்லாம் பௌத்த மதம் ஒன்றையே அனுசரிப்பதால் அங்கு மதாசாரங்களைக் கற்பிப்பது எளிது. ஆனால் இந்தியாவில் நூற்றுக்கணக்கான மதங்களும் ஒவ்வொரு மதத்திலும் உட்பிரிவுகளனேகமுமிருத்தலால் அந்நாட்டுப் பிள்ளைகளுக்கு எந்த மதத்தைப்பற்றி உபதேசிப்பது என்று ஒருகேள்வி பிறக்கலாம். இப்பொழுது ஸெண்ட்ரல் ஹிந்துகாலேஜிலும் அதையனுசரித்த அநேக பாடசாலைகளிலும் கற்பிக்கும் ஸனாதன தர்மவிஷயங்கள் எவராலும் ஆட்சேபிக்கப் படவில்லை. அவற்றை ஒவ்வொரு கலாசாலையிலும் பயிற்றுவதற்கு யாவரும் அங்கீகரிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இந்து மாணவர்கள் எவ்வகுப்பராயினும் அவர்களுக்கெல்லாம் இவ்விஷயத்தையும் மகமதியர்களுக்கு அவர்களுடைய மதங்களில் சிரேஷ்டமான நூல்களையும் அப்படியே கிறிஸ்தவர்களுக்கு அவர்களுடைய மதத்தைப்பற்றியும் கற்பித்து வந்தால் இந்தியர்களுடைய சீரும் தூய்மையும் புராணகாலங்களில் எப்படி உயர்ந்திருந்ததோ அப்படியே திரும்பவும் உயரும் என்பதும் பொய்யோ?

நமது உதார குணமும், பேரறிவுமுடைய இந்திய செக்ரடெரி பர்மாவுக்குச் செய்ததுபோலவே இந்தியாவிலும் கவர்ன்மெண்டு முனிசிபல் கலாசாலைகளில் மதவறிவூட்ட வேண்டுமென்று ஆணை பிறப்பித்தால் இந்தியர்களனைவரும் அவருக்கு மிக்கக் கடமைப்பட்டிருப்பார்கள் என்று சொல்லவும் வேண்டுமோ?

நீலி வசீகரம்

TAMING OF THE SHREW

நா.—கேட்டுக் கொள்ளுகிறீரா! இப்படிக் கெஞ்சிக் கேட்டுக் காலில் வீழ்ந்தால், வராமலிருப்பாளா? இதற்காகவாவது வருவாள்.

பிர.—உமது மனைவி, காலில் வீழ்ந்து கும்பிடு? வருந்தி யழைத்தாலும் வரமாட்டாளே.

(கேசவன் திரும்பிவருதல்.)

எங்கே என் மனைவி?

கே.—நீர் ஏதோ வம்புக்குக் கூப்பிடுகிறீராம்; அவள் வரமாட்டாளாம்; வேண்டுமானால், உம்மைத்தான் அவளிருக்குமிடத்துக்கு வரச்சொல்லுகிறாள்.

நா.—பேஷ்! பேஷ்! நல்லபதில்! வரமாட்டாளா அதோடு விடாமல் அவரையும் அங்கேவரச்சொல்லுகிறாளா? நிரம்பவும் நன்றாகவிருக்கிறது!— பொன்னா! உன் எஜமானியிடம் போய், அவளை உடனே வரும்படி நான் கட்டளையிடுவதாகச் சொல். (பொன்னன் போதல்)

பிர.—அவள் சொல்லக்கூடிய பதில் எனக்கு இன்னதென்று தெரியும்.

நா.—என்ன?

பிர.—வரமாட்டாள்.

நா.—வாராதபோனால், இதோடு சனி தொலைந்தது.

ரது.—இதென்ன விந்தை! இதோ வருகிறாளே கௌதமி!

(கௌதமி வருதல்.)

கௌ.—எதற்காகக் கூப்பிட்டனுப்பினீர்கள், நாதா? என்னசெய்யவேண்டும்?

நா.—உனது தங்கையும், பிரதாபருத்திரரின் மனைவியும் எங்கே யிருக்கின்றனர்?

கௌ.—சமையல் அறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கின்றனர்.

நா.—அவர்களை அழைத்துக்கொண்டுவா; வாராமல் போனால் இழுத்துக்கொண்டு வா; சீக்கிரம்போ.

(கௌதமி போதல்).

விஜ.—ஏது! பெரிய அதிசயமாக விருக்கிறதே!

பிர.—அப்படித்தானிருக்கிறது; என்ன முடிவு உண்டாகுமோ தெரியவில்லை.

நா.—என்ன முடிவுஉண்டாகுமோவா? ஏன்! மனவொற்றுமை, பணிவு, சந்தோஷம், இன்பம் இவைகள்தாம்:

ரது.—நாராயணதேவரே! நீர் சௌக்கியமாக வாழும்! இந்தப் பணயத்தை நீர் வென்றுவிட்டீர்; இதனோடு நான் இன்னும் ஒரு இருபதினாயிரம் பவுன் கொடுக்கிறேன்; என் மகள் குணவதியாக முற்றிலும் மாறிவிட்டாள்; ஆகவே இன்னொரு பெண்ணுக்கு இந்த இருபதினாயிரம் பவுனையும் சீதனமாகக் கொடுக்கிறேன்.

நா.—அவளுடைய புதுக்குணங்களாகிய, பணிவு, அடக்கம், நற்புத்தி முதலியவற்றை இன்னும் நன்றாக நிரூபிக்கிறேன்; அதோ பாருங்கள். அந்த இரண்டு பெண்களையும் தனது சாமார்த்தியத்தால் அழைத்துக்கொண்டு வருகிறாள்.

(வநிதேசுவரியையும் சுசீலையையும் அழைத்துக் கொண்டு கௌதமி திரும்பிவருதல்.)

கௌ.—நாதா! இதோ அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன்.

நா.—கௌதமி! உன் தலையில் வைத்துச் சடைபோட்டுக்கொண்டிருக்கிற சவரி நன்றாகவிருக்கவில்லை; அதை யெடுத்தெறிந்துவிடு. (கௌதமி தன் சடைச் சவரியை எடுத்தெறிகிறாள்.)

சு.—நன்றாகவிருக்கிறது! இப்படித்தான் இல்லாததையெல்லாம் செய்யச்சொல்வார்களோ? நான் அப்படியெல்லாம் செய்யமாட்டேன்.

வநி.—இதெல்லாம் ஒரு காரியமா? பைத்தியக்காரன் செய்கிற வேலையல்லவா?

விஜ.—வநிதை! சிறந்து; நீ சாமார்த்தியசாலியென்று நினைத்துக்கொண்டிருக்கிறாய்; உன்னால் எனக்கு இப்போது நூறு பவுன் நஷ்டம்.

வநி.—அப்படி நஷ்டம் வரும்படி நான்தான் செய்யச் சொன்னேனோ?

நா.—கௌதமி! ஸ்திரீகள் தங்கள் தங்கள் நாயகர்களிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறைகளைப்பற்றி, இந்த அகம்பாவம் படைத்த இருவர்களுக்கும் சொல்லு.

சு.—நல்ல பரிகாசம் பண்ணுகிறாய்: எங்களுக்கு ஒன்றும் சொல்லவேண்டாம்.

நா.—கௌதமி! முதலில் இவளுக்குச் சொல்லு.

சு.—எனக்கு ஒன்றும் வேண்டாம்; அவள் புராணத்தை அவளே வைத்துக்கொண்டிருக்கட்டும்.

நா.—கௌதமி! முதலில் இவளுக்குத் தான் சொல்லவேண்டும், நீ—

கௌ.—சீ! சீ! உனது பதியாயும், நாதனாயும், ஆள்பவனாயும் உள்ளவர்மீது கோபக்குறியோடு பார்ப்பதைத் தவிர்; அதனால் உனது அழகு குன்றும்; உனது நற்பெயர் அழிந்துவிடும். ஸ்திரீக்கு அவள் புருஷனே தெய்வம் "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை" என்பதை நீ கேட்டதில்லையோ? கோபமுள்ள ஸ்திரீ யொருத்தி கலங்கிய நீரையுடைய குளத்துக்குச் சமானம்; அக்குளத்தில் ஒருவரும் தண்ணீர் குடிக்கமாட்டார்; அதுபோல உன்னிடம் ஒருவரும் அணுகமாட்டார்; உனது புருஷனே உனக்கு எஜமானன்; உன் உயிரும் அவனே; உன்னைக் காப்பாற்றுபவன் அவன் தான். உனக்குப் போஷணை செய்பவனும் அவன்தான்; பகலென்றும் இரவென்றும் பாராமல் வெளியில் அலைந்து கடல்மீதும் கரைமீதும் போய்த்தேடி சிரமப்பட்டு உழைக்கிறான்; நீ சௌக்கியமாய் வீட்டிலிருக்கிறாய். இவ்வித கஷ்டஜீவனத்துக்குப் பதிலாய் அவன் உன்னிடம் எதிர்பார்ப்பது என்னவெனில் முகமலர்ச்சியும், பணிவும், நல்லுரையுமேயாம்; அவன் படும் கஷ்டத்தையும் செய்யவேண்டியவற்றையும் சீர்தூக்கிப் பார்த்தால் நீ செய்யவேண்டியது வெகு அற்பமானதென்று தெரியவரும். அரசனிடம் குடிகள் அடங்கி நடப்பதைப்போல, புருஷனிடம் ஸ்திரீ அடங்கிநடக்கவேண்டும். அவ்வாறிராமல், எப்போதும் முகத்தைச் சுளித்துக்கொண்டும் வெடுவெடுவென்றும், வாயாடியாயும் இருந்தால், அந்த ஸ்திரீ இராஜதுரோகிக்கெல்லாம் கேடுகெட்டவள் என்னலாம். அன்புடன் பணிந்து, பணிகேட்கவேண்டியிருக்கையில், அவ்வாறிராமல், நாயகர்களுடன் சண்டையிடும் ஸ்திரீகள், கேவலம் கலகக்காரர்கள் போன்றவரேயாவார்கள். நமது சரீரம் கடினவேலைக்குத் தகுந்ததாக இராமல் மிருதுவாகவிருப்பது எதற்காக? தேகத்தைப்போலவே மனமும் இருக்கவேண்டுமென்று காட்டுவதற்காகத்தான்; என் மனமும் வெகு கடினமாகத்தானிருந்தது! நான் ஒருவருக்கும் கீழ்ப்படிந்ததில்லை. எப்போதும் சண்டையிடுவதிலேயே திருப்தியுள்ளவளாகவிருந்தேன். ஆனால் அநுபவசித்தமாகச் சொல்லுகிறேன்! நமது சக்திகளெல்லாம் வெகு கேவலமானவை; ஒப்புவமை சொல்வதற்கேற்காது; ஆதலால், ஒன்றும் பதில்சொல்லாமல், இன்றே உங்கள் கணவர்களது கால்களில் விழுங்கள். அம்மாதிரி நீங்கள் செய்து காட்டுவதற்காக, நான் இதோ எனது நாதர் திருவடிகளில் வணங்குகிறேன்.

(கௌதமி வணங்கி யெழல்)

நா.—கௌதமி! பேஷ்!—ஓடிவந்து, என்னை ஒருதரம் முத்தமிட்டுக்கொள். துரோபதை சத்தியபாமைக்குச்செய்த உபதேசம்கூடக் கெட்டது!

விஜ.—நான் இவ்வாறு முடியுமென்று எதிர்பார்க்கவேயில்லை. கௌதமி சொன்னது முற்றிலும் உண்மைதான்.

நா.—கோது, வா; நாம் போவோம்.—நாங்கள் மூவரும் கல்யாணம் செய்துகொண்டோம்; நீங்கள் இருவரும் ஓடிவிட்டீர்கள்; பந்தயத்தை வென்றவன் நானே. ஆதலால் ஜயத்தோடு போய்வருகிறேன்.

(கௌதமியும் நாராயணத்தேவரும் போதல்).

பிர.—போ, போ; நீலியை நன்றாய் வசப்படுத்திவிட்டாய்

விஜ.—அடங்காப்பேயாகிய அவள் இந்தமாதிரி அடங்கி விடுவாளென்று நான் கனவில்கூட நினைத்ததில்லை; இஃது, பெரிய அதிசயமாகவிருக்கின்றது.

(அனைவரும்போதல்

நீலிவசீகரம் முற்றிற்று

மரியாதையுடன் மறுத்துரை.

—ஜனங்கள் பிரசங்கம் செய்யும்பொழுது அவர்கள் சொல்லுவது ஏதாவது உனக்குத் தெரியாததாயிருந்தால் அப்பொழுது அதை மிகவும் வணக்கத்துடனே கை கால் முதலியவைகளை ஒடுங்கிக்கொண்டு மிருதுவான தொனியில் வெகு நயமாய் நீ மறுதலிக்கவேண்டும். அப்படி மறுதலிப்பதிலும் கண்டிப்பென்பது கொஞ்சமேனும் இல்லாமல் ஒருகால் இப்படி இருக்கலாமோ என்னவோ நிச்சயமாயத் தோன்றவில்லை. ஆனால் சந்தேகமா யிருக்கிறது, ஏதோ இப்படியும் தோன்றுகிறது என்று தாழ்ந்த பேச்சாயச் சொல்லவேண்டும். அப்படிச் சொல்வதிலும் நாம் வாதிப்பது பிரசங்கிப்பவனுக்குக் கொஞ்சமேனும் வருத்த முண்டாகாதபடிக்கு ஏதாவதொரு சிரிப்புண்டாக்கும் சங்கதியாயச் சொல்லி முடிக்கவேண்டும்.

உ

கடவுள் துணை

சாகுந்தலம்

அல்லது

"காணமற்போன கணையாழி"

இஃது

ஸ்ரீ காளிதாஸ மஹாகவியவர்களால்
ஸம்ஸ்கிருத பாஷையி லியற்றப்பட்டதின்
தமிழ் மொழி பெயர்ப்பு

முகவுரை

இவ்வுலகின்கண் பல்வகை ஸுகஸாதனங்களுக்குள்ளும் காவ்யமே சிறந்த ஸாதனமாம். இக்கவிதையானது, அற்புதமான ப்ரதிபை (கவித்வ சக்தி)யும், அபாரமான வ்யுத்பத்தி (கல்வி)யும், அஸாதாரணமான அப்யாஸமு (பயிற்சியு)ம் பொருந்திய லோகோத்தர வர்ணனா நிபுணனான மஹாகவியினால் ஸ்ருஷ்டிக்கப்பட்டு, சப்தார்த்தங்களென்னும் சொற்பொருட்களையே ஸ்தூல ஸூக்ஷ்மரூபமான இருவகை யுடலாயும், சொற்சுவை பொருட்சுவையென்னும் ரஸபாவங்களையே ப்ரத்யகாத்ம பரமாத்ம ஸ்வரூபமான இருவகை யுயிராயும், சொல்லணி பொருளணி என்னும் இருவகை யலங்காரங்களையே ஆபரணங்களாயும், ஓஜஸ் (வலி), ப்ரஸாதம் (தெளிவு), மாதுர்யம் (இன்பம்) முதலிய தர்மங்களையே குணங்களாயும், சொற்களியைதற்குக் காரணமான நெறியையே ரீதியாகவும், செய்யுணடையையே சய்யையாகவும் பொருந்தி, ச்ருதிதுஷ்டம் (வன்மொழி தொடுத்தல்), அபுஷ்டார்த்தம் (நின்று பயனின்மை) முதலிய சொற்குற்றங்கள் பொருட்குற்றங்களாகிய இருவகை தோஷங்களுமின்றி, காவ்ய சோபையாகிய ஸமாஸபாஷணம் (சுருங்கச் சொல்லல்) முதலிய முப்பத்திரண்டுவகை அழகும் பொருந்தி, சிற்றறிவினர்களுக்குக்கூட 'ராமன் முதலானோரைப்போல் நடக்கவேண்டும், ராவணன் முதலானோரைப்போல் நடக்கலாகாது' என்று க்ருத்யாக்ருத்ய ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி யுபதேசவாயிலாய், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நால்வகை புருஷார்த்தங்களையும் வெகு ஸுலபத்தில் பயப்பிக்கும் ஓர் உத்தம வநிதைபோல் விளங்கா நிற்கின்றது. இதனை ஆதரவுடன் அடுத்தவர்களுக்கு மனதில் எவ்வகை வ்யஸனங்கள் தோன்றினும் க்ஷணத்தில் இருந்தவிடமே தெரியாமல் மறைந்துபோவது மன்றி, பிரம்மானந்தத்திற்கொப்பான ஓர் அதிசயமான ஆனந்தமும் உண்டாம்.

இத்தகைய காவ்யமானது ஸம்ஸ்கிருத பாஷையில் 'ச்ரவ்யகாவ்யம்' என்றும் 'த்ருச்யகாவ்யம்' என்றும் இருவகையாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. அவற்றுள் ச்ரவணேந்திரியத்திற்கு மாத்திரம் ஆனந்தத்தைக் கொடுப்பனவான 'ராமாயணம்' 'ரகுவம்சம்' முதலிய காவ்யங்கள் ச்ரவ்ய காவ்யங்கள் என்றும், நடர்களால் அபிநயித்துக் காட்டப்படுதலினால் ச்ரவணேந்திரியத்திற்கு மாத்திரமேயன்றி நயனேந்திரியத்திற்கும் ஒரேஸமயத்தில் ஆனந்தத்தைக் கொடுப்பனவான 'சாகுந்தலம்,' 'உத்தரராம சரிதம்' முதலிய காவ்யங்கள் த்ருச்ய காவ்யங்கள் என்றும் வழங்கப்படும்.

இத் த்ருச்ய காவ்யமும் பரதமுனிவர் முதலிய முற்காலத்திய ஸாஹித்ய வித்வான்களால் 'ரூபகம்,' 'உபரூபகம்' என இருவகையாய் பகுக்கப்பட்டிருக்கின்றது. அவற்றுள்ளும் ரூபகமென்பது (1) நாடகம், (2) ப்ரகரணம், (3) பாணம், (4) வ்யாயோகம், (5) ஸமவாகாரம், (6) டிமம், (7) ஈஹாம்ருகம், (8) அங்கம், (9) வீதி, (10) ப்ரஹஸநம் என்று பத்து பேதங்களையுடையது. உபரூபகமோவெனில் (1) நாடிகை, (2) த்ரோடகம், (3) கோஷ்டி, (4) ஸட்டகம், (5) நாட்யராஸகம், (6) ப்ரஸ்தானம், (7) உல்லாப்யம், (8) காவ்யம், (9) ப்ரேங்கணம், (10) ஸம்லாபகம், (11) ஸ்ரீகதிதம், (12) சில்பகம், (13) விலாஸிகை, (14) ராஸகம், (15) துர்மல்லிகை, (16) ப்ரகரணி, (17) ஹல்லீசம், (18) பாணிகை என பதினெட்டு பேதங்களோடு விளங்கும். இவ்விருபத்தெட்டு பேதங்களோடு கூடிய த்ருச்யகாவ்யத்திற்குள், ஸகல லக்ஷணங்களும் பொருந்தியிருப்பதனால், நாடகமே முக்கியமாம். இந்நாடகங்களுக்குள்ளும் ஸ்ரீ காளிதாஸ மஹாகவி யியற்றிய நாடகங்களே ரமணீயமானவையாம். அவற்றுள்ளும் ச்ருங்கார ரஸபரிதமானதும் சந்திர வம்சத்தரசனாகிய துஷ்யந்த மஹாராஜாவினுடையவும் ஸ்ரீ விச்வாமித்ர மஹர்ஷிகளுக்கு மேனகை என்னும் ஓர் அப்ஸரோத்தமையினிடத்தில் ஜநித்தவளான சகுந்தலையினுடையவும் காதற் பெருமையை எடுத்துக்காட்டும் இச் சாகுந்தல நாடகமே ஸர்வ சிலாக்கியமாம். ஸம்ஸ்கிருத நாடகத்தின் பெருமையும், காம்பீர்யமும் இந்நாடகமொன்றினாலேயே அறிந்துகொள்ளலாம்.

இச் சாகுந்தல நாடகமே ஸம்ஸ்கிருத காவ்யங்களுக்குள் ஸர்வோத்தமமான காவ்யமென்னும் விஷயத்தில் நமது முன்னோர்களான பண்டித சிகாமணிகள் தொன்றுதொட்டு வழங்கிவரும் கீழ் வரையப்பட்ட சுலோகமே போதுமான பிரமாணமாம்.

"பாஷாஸு ரம்யா கைர்வாணீ,
தஸ்யாம் காவ்யம் மனோஹரம்
தஸ்மிந்ஹி நாடகம் ரம்யம்
தத்ராபி ச சகுந்தலா"

'உலகினின் மொழிக ளுக்குள்
உயர்வட மொழியே யாகும்,
பலவித கலைக்கு ளாங்குப்
பாங்குறும் காவ்ய மேயாம்;
நலமுடன் சுவைகள் தோன்று
நாடகமதினு மேலாம்,
பொலிவுசா குந்த லந்தான்
புகழுடைத் ததனின் மீதே.'

இவ்வாறு நம்தேசத்துப் பண்டிதர் இந்நாடகத்தை விசேஷமாய்க் கொண்டாடியிருப்பது மாத்திரத்திலேயன்றி, நம்தேசத்திலும் பிறதேசங்களிலும் ஸம்ஸ்கிருத பாஷையிலிருந்து ஆங்காங்கு வழங்கிவரும் ஒவ்வொரு தேசபாஷையிலும் மொழிபெயர்க்கப் பெற்று ஆங்காங்குள்ள பற்பல வரங்கசாலைகளில் அபிநயிக்கப்பட்டு அனைவராலும் அபிநந்திக்கப்படுகிற அநுவாதங்களினாலேயும் இந்நாடகத்தின் சிறப்பு நன்று புலப்படுவதனால், அதனைப் பற்றி ஈண்டு விசேஷமாய் ப்ரசம்ஸித்து எழுதவேண்டியது அநாவச்யமாம். ஆயினும் தற்காலத்திய ஸாஹித்ய நாடக வித்வான்களுக்குள் சக்ரவர்த்திபோல் விளங்கிவந்த ஸ்ரீகீதி என்னும் ஜராமாந்ய 'ஜர்மனி' தேசத்துப் புலவரின் அபிப்பிராயம் ஒன்றை மாத்திரம் ஈண்டு எடுத்துக்காட்டுவாம். இப் பண்டித சிரோமணி அபத்த புஷ்கலமான இந்நாடகத்தின் ஆங்கலாநுவாதத்தைக் கண்டே இவ்வாறு களித்துக் கூறியிருக்கின்றனர்.

"Wouldst thou the life's young blossoms
and fruits of its decline,
And all by which the soul is pleased
enraptured, feasted, fed,
Wouldst thou, the earth and heaven itself
in one sweet name combine?
I name thee, O Sakuntala
and all at-once is said."

'வாழ்நாளின் வாலிபத்தின் தளிரும் பூவும்
மாண்புடைய மூதறிவின் பழமுஞ் சாறும்
பேழ்நான்கு புருஷார்த்தப் பயனும் பூண்டு
பேரின்பக் கடல் மூழ்கிப் பூரித் தோங்கி
காழ்நாம மொன்றதனுள் விண்ணு மண்ணும்
கவினுடனே கலந்திடுமோ கனவிற் போலும்
தாழ்நாவா லுனதுபெய ரொருதரந்தான்
சகுந்தலையே! என்றலுமே எல்லா மாமே!'

அந்தோ! இத்தகைய சிறந்த நாடகம் கேவலம் நமது தேசத்தில் மாத்திரமின்றி உலகிலுள்ள மற்ற எல்லா முக்கிய தேசங்களிலும் அந்தந்தத்தேசபாஷைகளில் ஆவலுடன் மொழிபெயர்க்கப் பெற்று விளங்குவ தன்றியும், விசேஷ உத்ஸாஹத்துடன் தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய திராவிட பாஷைகளில் பல பெயரால் பற்பலவிதமாய் மொழிபெயர்க்கப்பெற்றுப் பிரஸித்தி பெற்றிருக்க, திராவிட பாஷைகளுக்கெல்லாம் மாத்ரு பாஷைபோன்றதும், கிரந்த பாஹுள்யத்திலும் காலவரையிலும் ஸம்ஸ்கிருத பாஷைக்குச் சமானமெனச் சொல்லக்கூடியதும் நமது தென்னாட்டிற்கே ஓர் சிறந்த ரத்னம்போல் விளங்குவதுமான தமிழ்ப் பாஷையில் மாத்திரம் இந்நாடகம் ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ளபடி செய்யுளுக்குச் செய்யுளாயும் வசநத்திற்கு வசநமாயும் அந்தந்த நாடக பாத்திரத்திற்குத் தக்க நாடக நடையில் இதுகாறும் மொழிபெயர்க்கப்படாமலிருப்பது இத்தமிழ் நாட்டிற்கே ஒரு பெருங்குறையாம்! இப்பெருங்குறையைச் சற்றேனும் நீக்குவதற்காகவே ஸ்ரீ வித்வன் மனோரஞ்ஜனீ ஸபையோரின் வேண்டுகோளின்படி 1901-ம் வருஷத்திலேயே இந்நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்துச் சுமார் இரண்டு அங்கம் வரையிலும் அச்சிடலுமாயினோம். ஆயினும், "ச்ரேயாம்ஸி பஹுவிக்நாநி" 'நல்ல காரியத்திற்கு நாலாயிரமிடர்' என்பதுபோல இந்தற்காரியத்திற்கு நாநாவிதமான இடையூறுகள் உண்டாய் நினைத்த வண்ண மிந்நாடகத்தை முற்றிலும் அச்சிட்டு வெளியிட அவகாசமில்லாமற்போயிற்று. இப்பொழுது எமது நண்பராகிய ம-ா-ா-ஸ்ரீ, வி. குப்புஸ்வாமி ஐயர் அவர்கள் எம்மை கேட்டுக்கொண்டதின்பேரில் அவர்கள் சென்னை மயிலையிலிருந்து பிரசுரித்துவரும் "விவேக போதினி" என்னும் இம்மாதாந்தர தமிழ்ப் பத்திரிகை வாயிலாய், மாதம்மாதம் நான்கு பக்கங்களுக்குக் குறையாத வண்ணம் இந்நாடகத்தை அந்தந்தக் களங்களின் ஸந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி வெகு முயற்சியுடன் அமைக்கப்பட்ட ஆலோக சித்திரபடங்களுடன் வெளியிடலாயினம்.

யாம் இந்நாடகத்தைச் சென்னை விக்டோரியா

ஸபாமண்டபத்திலும் இன்னும் சென்னையில் வந்திருந்த பற்பல பிரசித்திபெற்ற பாரஸீக நாடகசாலைகளிலும் ஸம்ஸ்கிருத பாஷையிலேயே ஸ்ரீவித்வந் மனோரஞ்ஜநீ ஸபையோரைக்கொண்டு பன்முறை அபிநயித்துக்காட்டியிருப்பதனால் சில நண்பர்களின் கோரிக்கைக்கிணங்கி, யாவரும் எளிதில் அபிநயிக்கும் வண்ணம் பிராசீந நவீந நாடகசாஸ்திரங்களுக்கொத்தவாறு ஸ்தலவிபாகஞ்செய்து ஒவ்வோரங்கத்தையும் களங்களாகப் பிரித்து இம் மொழிபெயர்ப்பில் காட்டியிருக்கின்றனம்.

இம் மொழிபெயர்ப்பு பலபல தேசங்களில் பற்பல லிபிகளில் அச்சிட்டு வெளியிடப்பட்டதும் இன்னும் அச்சிட்டு வெளிப்படாததுமான சாகுந்தல நாடகத்தின் மூலங்களுடையவும் வியாக்யானங்களுடையவும் பற்பல பாடபேதங்களோடு கூடிய சுமார் முப்பது பிரதிகளைப் பரிசோதித்து எமது புத்திக்குச் சரியானதாகத் தோன்றின ஒரு பாடத்தை மூலாதாரமாகக்கொண்டு எழுதப்பட்டிருக்கின்றது. மற்றைய பாட பேதங்களை அவற்றின் மொழி பெயர்ப்புடன் இந்நாடகத்தின் அநுபந்தங்களொன்றில் குறித்துக் காட்டுவோம். பிரஸித்த மூலபாடத்தை சிற்சிலவிடங்களில் அதிக்கிரமித்து ஆங்காங்கு யுக்திக்குத் தக்கவாறு அவலம்பித்த சிறிய வேறுபாடுகளுக்குக் குணதோஷஜ்ஞர்களான பண்டித சிகாமணிகள் எம்மை மன்னிப்பாராகவும்.

இந்நாடகத்தை யியற்றிய ஸ்ரீ காளிதாஸ மஹாகவியின் காலநிர்ணயமும், அவரது சரித்திரமும், அவர் இயற்றிய கிரந்தங்களின் வரலாறும், அவற்றின் சிறப்பும், விசேஷமாய் இந்நாடகத்தின் விமர்சமும், இன்னும் எல்லா நாடகங்கள் முதலாகிய இருபத்தெட்டுவகை த்ருச்ய காவ்யங்களுக்குப் பொதுவான பற்பல அருமையான விஷயங்களும் இந்நாடகத்தை புஸ்தக ரூபமாய் அச்சிட்டு வெளியிடும் பொழுது பிரமாணோதாஹரணங்களுடன் சேர்த்து வெளியிடப்படும்.

இத்தகைய மொழிபெயர்ப்பு தமிழ்ப்பாஷாபிமானிகளால் நன்று ஆதரிக்கப் படுமாயின், காளிதாஸர், பவபூதி முதலிய மஹாகவிகளால் இயற்றப் பட்ட மற்ற முக்கியமான ஸம்ஸ்கிருத நாடகங்களையும் இவ்வாறே மொழிபெயர்த்து வெளியிடக் கருதியிருக்கின்றோம்.

டி. எஸ். நாராயணசாஸ்திரியார், பி.ஏ., பி.எல்.

இந்துலேகை

மலையாள நாவல்

(153-ம் பக்கம் தொடர்ச்சி)

“புருஷர்களாகிய நீங்கள் சுத்தமூடர்களாகையால் ஸ்திரீகளின் முன் ஸரஸசிங்கார மோஹநாலங்காரமாய் ஸல்லாபஞ் செய்வதிலும் நடந்து கொள்வதிலும் கைதேர்ந்தவர்களென்று உங்களை வெளிப்படுத்திக் கொள்வதில் பெருமையும் சந்தோஷமும் உண்டாகிறதென்று எண்ணுகிறீர்கள். இப்படி நீங்கள் மனம்போனபடி செய்யும் தப்புத் தண்டாக்கள் அநாதைகளாகிய எங்கள் தலைமேல் வந்துவிடிகின்றன. அதனால் நாங்கள் சொல்லிமுடியாத தேகவருத்தத்தையும் மனவருத்தத்தையு மடைகிறோம். நாங்கள் படும்பாடு, எல்லாம் உணர்ந்தவராகிய சர்வேசுவரனுக்கே தெரியும். அதைப்பற்றி உங்களுக்கென்ன? உங்களுக்கு ஆகவேண்டியதெல்லாம் ஸ்திரீகளை உங்களுடைய கொடுங்கோன்மைக்கும் மூடத்தனமான அதிகாரங்களுக்கும் உட்படுத்துவதுதானே. நீங்கள் எந்த மதத்தை, எந்த ஜாதியை, எந்த வம்சத்தை, எந்தக் கூட்டத்தைச் சேர்ந்திருக்கிறீர்களோ அதே மதத்தையும், அதே ஜாதியையும், அதே வம்சத்தையும், அதே கூட்டத்தையுஞ் சேர்ந்தவர்களாகிய ஸ்திரீகள், உங்களுக்கென்னென்ன சுதந்தரங்கள் உண்டோ, அந்தச் சுதந்தரங்களுக்கெல்லாம் பாத்தியதை யுடையவர்களாயிருக்க, உங்களுக்கு மான அவமானம் என்னும் உணர்ச்சி கிஞ்சித்தாவதிருக்குமானால்; ஸ்திரீகளை இவ்வளவு கெட்டவர்களெனவும் வியபிசாரிகளெனவுங்கூறி, அவர்களது சிறந்த குணங்களுக்கு இவ்வளவு அவதூறும் இகழ்ச்சியும் உண்டாக்க மாட்டீர்கள். பதிவிரதா தர்மத்தில் மயிரிழையும் தவறாமல், புருஷர்களது சமூகத்தில் ஸ்திரீகள் ஆநந்தமாயும் விநோதமாயும் உல்லாஸமாயும் சேர்ந்து ஸம்பாஷிக்க எத்தனையோ சந்தர்ப்பங்களிருக்கின்றன. இப்பேர்ப்பட்ட பொழுதுபோக்குகளில் சேருகிறவர்கள் கேவலம் தங்கள் காமவேட்கைகளைத்தீர்த்துக் கொள்வதாகிய ஒரே கருத்துடன்தான் சேருகிறார்களென்று அவதூறு செய்துகொண்டு திரியும் அடாவடி ஆசாமிகளின் கட்சியை ஸ்தாபிக்க மாதவனும் முயல்கிறானென்பது உண்மையானால், எனக்குப் பெருத்த ஆச்சரிய முண்டாகும்.

என்னைக்கேட்கும்பட்சத்தில், ஸ்திரீகளின் சுதந்தர விஷயத்தில் ஏற்படுத்தியிருக்கும் அநாவசியமான கட்டுத்திட்டங்களும், அவர்கள் கேவலம் மிருக ஜாதியைச் சேர்ந்தாற்போல எவ்வித கல்வி பயிற்சியுமின்றி அவர்களை மூடங்களாக வளர்த்துவரும் வழக்கமுமே வியபிசாரத்துக்கு முக்கியமான காரணமென்று சொல்லுவேன். அப்படியிருக்க, மிருக ஜாதியைச் சேர்ந்த பசுவாவது நாயாவது தன் இஷ்டப்படி இந்திரிய சுகமனுபவிக்கும்பட்சத்தில், அதனிடத்தில் வியபிசாரதோஷம் ஆரோபிப்பவருமுண்டோ? ஸ்திரீகளுக்காவது புருஷர்களுக்காவது கல்வி நாகரிகங்கள் ஏற்படுவதனாலேயே அவர்கள் வியபிசாரதோஷத்துக்குட்படாத சுத்தாத்மாக்களாய்விடுகிறார்களென்று நான் சொல்லவில்லை; ஏனெனில் எவ்வளவு படித்தவர்களுக்கும் துர்புத்தியும் துர்வியாபாரமும் சிலசமயம் உண்டாகின்றன. ஆனால் அப்படி உண்டாவதற்குக் காரணம் படிப்பும் அறிவுந்தானென்று சில கற்றறிமோழைகள் சாதிப்பதைக் கேட்கும்போதுதான் எனக்கு எங்குமில்லாத ஆச்சரியமுண்டாகின்றது.

உண்மையை ஆராயுங்கால், கல்வியும் அறிவும் எங்கும் பரவுவதே வியபிசாரத்தையும் துராசாரத்தையும் அழிப்பதற்கு முக்கிய காரணமென்று ஏற்படும். ஆனால் மலையாள நாட்டில் ஒரு ஸ்திரீ தனக்கிஷ்டமானபடி ஒரு புருஷனைத் தள்ளிவிட்டு மற்றொருவனை வைத்துக்கொள்வதும் நியாயமென்று அங்கீகரித்திருக்கும் நம் ஆசாரத்தைப்பற்றி ஒருவேளை மாதவன் ஆக்ஷேபித்திருக்கலாம். இப்படிப்பட்ட சுதந்தரந்தான் நமக்கு இருக்கிறதேயென்று சில மானங்கெட்ட ஸதிரீகள் வியவஸ்தையின்றி நடப்பதுண்டென்றாலும், இந்தச் சுதந்தரம் மாத்திரம் நமக்குள்ள அருமையான பாக்கியங்களில் ஒன்றென்பதற்குச் சந்தேகமில்லை. இப்படிப்பட்ட சுதந்தரம் ஐரோப்பாவில்கூட கிடையாதாம். ஆனால் இந்த உரிமையானது சர்வஜன சாமான்யமாயிருக்க வேண்டுமென்று ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள மகாமேதாவிகளிற் சிலர் கருதுவதாகப் படித்திருக்கிறேன். இப்படிப்பட்ட சுதந்தர அதிகாரமில்லாமையால்தான், ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் எத்தனையோ தம்பதிகள் கரையற்ற துக்கசாகரத்தில் மூழ்கி சங்கடப்படுகிறார்கள். இந்தச் சுதந்தரத்தை மாத்திரம் துர்எண்ணமின்றி நியாயமும் யுக்தமுமாக காரணமிருந்து செலுத்தும்பட்சத்தில், ஸ்திரீகளுக்கு மிகவும் அவசியமான பாதுகாப்பைத் தருவதில் இது சிறந்த சாதனமாய் நின்று உதவும். சென்ற பத்து வருஷங்களாக நியாயமான காரணமின்றி எத்தனை ஸ்திரீகள் தங்கள் புருஷன்மாரைத் தள்ளிவிட்டிருக்கிறார்கள், எத்தனை புருஷர் தங்கள் மனைவிமாரைப் பரித்தியாகம் செய்திருக்கிறார்களென்பதை மாதவன் சரியாய் எண்ணிக் கணக்கெடுக்கும் பட்சத்தில் சராசரி ஆயிரத்தில் ஒன்றுகூடத் தேறாதென்று நான் நிச்சமாய்ச் சொல்லுவேன். இப்படிப்பட்ட பரித்தியாகங்களில் சிலவற்றிற்குச் சரியான காரணங்கள் ஏற்பட்டிருக்கலாம்; சிலவற்றின் விஷயத்திலே அவைகள் ஸ்திரீபுருஷர்களுக்குள் யாருடைய துர்புத்தி காரணமாகவாவது துரதிர்ஷ்டம் காரணமாகவாவது நேரிட்டிருக்கலாம்; அதை வைத்துக்கொண்டு மலையாள ஸ்திரீகள் இந்த வழக்கத்தை ஸர்வ ஸாதாரணமாய் அனுசரிக்கிறார்களென்று அவர்களைத் தூற்றுவதைக் கேட்க கஷ்டமாயிருக்கிறது. ஆகவே இந்தச் சுதந்தரம் உண்டாயிருப்பது அனுகூலமேயாம். ஆனால் அது சரியானபடி உபயோகப்படும் பொருட்டு ஏற்பட்டதேயன்றித் துருபயோகப் படுத்துவதற்கன்று. அப்படித் துருபயோகப்படுத்தினால் அபகீர்த்தியும் அவமானமும் உண்டாவது சகஜமே. ஆயினும் அது அந்தச் சுதந்தரத்தைத் துருபயோகப்படுத்தினதனாலுண்டான தோஷமேயன்றி அந்தச்சுதந்தரத்தையே சேர்ந்ததல்லவாகையால், ஸ்திரீகளாகிய எங்கள் ஜாதிமுழுவதையும் மாதவன் இப்படி அடியோடு தூஷித்துப் பேசினதை நான் கண்டிக்காமல் விடமாட்டேனென்பது நிச்சயம்.”

இந்துலேகை கடைசியாகச் சொன்ன அபிப்பிராயத்தை மாதவன் அங்கீகரியாதவனாய், “ஸ்திரீபுருஷர்கள் தங்களுக்கிஷ்டமானபோதெல்லாம் தங்கள் அந்யோந்யமான சம்பந்தத்தை நிவர்த்தி செய்துகொள்ளும்படியான சுதந்தரம் அவர்களுக்குக் கொடுத்திருப்பதை நியாயமென்று நான் ஒப்புக்கொள்ளேன். அப்படிப்பட்ட சுதந்தரத்தினால் ஸ்திரீபுருஷர்களுக்குள்ள விவாகசம்பந்தம் கேவலம் வ்யாபார சம்பந்தமான ஒப்பந்தமாயேற்படுமேயன்றி அதில் பரஸ்பர பிரீதியும் கௌரவமும் முக்கியமாயிருக்க வழியில்லை.” என்றான்.

“ஆகவே மலையாள தேசத்தில் உள்ள வழக்கப்படி நடக்கும் கலியாணம் உனக்குச் சம்மதமாயிராதாக்கும்?” என்றாள் இந்துலேகை.

“இராது தான்” என்றான் மாதவன்.

"அப்படியானால், வேறெந்த நாட்டுக்காவது போய்விட உத்தேசித்திருப்பதாகச் சற்றுமுன் சொன்னையல்லவா? ஒருவேளை நீ அப்படிச் செய்தாலும் நல்லதுதான்."

"அதுதான் வாஸ்தவத்தில் என் எண்ணம். அதற்கு நீ சம்மதிக்கிறையா, இந்துலேகா?" என்றான் மாதவன்.

"அதற்கு என்னுடைய சம்மதம் எதற்காக?" என்றாள் இந்துலேகை.

"இந்துலேகா, நீ என் பெண்டாட்டியாகும் பட்சத்தில், மலையாளதேசமே எனக்கு ஸ்வர்க்கமாகும்" என்றான் மாதவன்.

"மலையாள தேசத்திலுள்ள விவாகசம்பந்த மாதிரி தான் உனக்குப் பிடிக்கவில்லையென்கிறையே?" என்றாள் இந்துலேகை.

"நம்முடைய சம்பந்தம் அந்த மாதிரியாயிராதே, இந்துலேகா." என்றான் மாதவன்.

"அதுசரி, மிகவும் வாஸ்தவந்தான்" என்றாள் இந்துலேகை.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்துலேகையின் தாயார் வரவே அவர்களுடைய சம்பாஷணை தடைப்பட்டது; வந்தவளும் அவர்களைக் கண்டு நகைத்தாள். இதனால் மாதவனுக்கு அன்றையதினம் வேட்டைக்குப்போக உத்தேசித்தது நிறைவேறாமற் போனதுடன் இந்துலேகையுடன் பின்னும் அந்தரங்கமாய்ப் பேசுவதற்கான சமயமும் இல்லாமற் போயிற்று.

ஆனால் நான் என் கதையைத் துரிதமாய்க் கொண்டுபோக வேண்டியிருப்பதால் இந்தப் பீடிகை சுருக்கித்தானாகவேண்டும்.

மாதவனுக்கு உண்டான மந்மதாவஸ்தை வரவரப் பொறுக்கமுடியாமற் போய்விட்டது. அவனுக்கு அன்னம் அருவருப்பாய்விட்டது. தூக்கம் வரவில்லை; இந்துலேகையின் கன்னிமாடத்துக்கு வந்துகொண்டிருந்ததும் கொஞ்சங்கொஞ்சமாய்க் குறைந்து வந்தது. ஒருநாள் அவன் தாயாராகிய பார்வதியம்மா இந்துலேகையுடன் பேசிக்கொண்டிருந்தாள்; அப்போது பேச்சின்மேல் பேச்சாய் மாதவன் சங்கதி வரவும், "அவனுக்கு என்ன உடம்போ தெரியவில்லை. ரொம்ப சோர்வடைந்தும் களைகுன்றியும் இருக்கிறான்." என்றாள்.

"அதற்கு ஏதாவது காரணமிருக்கத்தான்வேண்டும்" என்றாள் இந்துலேகை.

"எனக்கு ஒரு காரணமும் தெரியவில்லை." என்றாள் பார்வதி அம்மா, "அவன் சோறு சரியாய் உண்கிறதில்லை. இரண்டு வேளையுஞ் சேர்ந்து நாலு கவளம் அன்னம்கூட உள்ளே போகிறதில்லை. பாலோ டீயோ ஒன்றும் வேண்டாமென்கிறான். ராத்ரியில் அவனுக்குத் தூக்கமுமில்லையென்று கூட இருக்கிறவர்கள் சொல்லுகிறார்கள். இருக்கிறதைப்பார்த்தால் ஏதோ பிரமாதமாய் உடம்புக்கு வரும்போலிருக்கிறது"

"அப்படியானால் நான் அவரை இரண்டொரு கேள்விகேட்க வேண்டியிருக்கிறது. இங்கே வரச் சொல்லுங்கள்." என்றாள் இந்துலேகை.

பார்வதியம்மா அப்படியே போய்ச்சொன்னாள். மாதவனும் அந்த ஆக்ஞையைச் சிரசில் வகித்து இந்துலேகையின் மாடிக்கு வந்தான்.

"ஏன், இங்கே வருவது அவ்வளவு அபூர்வமாய் விட்டதே? என்று கேட்டாள் இந்துலேகை.

"எனக்கு வரப்பிடிக்கவில்லை" என்றான் மாதவன்.

"இங்கே வருவது உனக்கு அவ்வளவு வருத்தமாயிருக்கிறதா?"

"தடையன்னியில்" என்றான் மாதவன். "எனக்குச் சாதாரணமாய் எப்போதுமிருக்கிற துக்கம் இங்கே வருவதனால் இன்னும் ஜாஸ்தியாகிறது."

"நான் சேலை கட்டிக்கொள்ளப்போகிறேன்." என்றாள் இந்துலேகை. "அந்த ஸோபாவில் படுத்துக்கொண்டு நியூஸ்பேபர் வாசித்துக்கொண்டிரு. நான் ஒரு நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்; அப்புறம் எல்லா சங்கதிகளும் நீ என்னுடன் சொல்லலாம்."

மாதவன் ஸோபாவின்மேல் படுத்துக்கொண்டானேயன்றி நியூஸ் பேப்பரைத் தொட்டானில்லை.

"நியூஸ் பேப்பர் என்ன தப்பு செய்தது?" என்று கேட்டுவிட்டுச் சிரித்துக்கொண்டே இறங்கிப்போனாள் மாடியிலிருந்து இந்துலேகை. அவள் இறங்கிக் கீழே போகும்போது ஒரு வேலைக்காரன் மாதவனுக்கு ஒரு தந்திக் கடுதாசியை எடுத்துக்கொண்டு வருவதைக்கண்டாள். இந்தத் தந்தியில் மாதவன் பரீட்சை சங்கதிதான் இருக்க வேண்டுமென்று இந்துலேகை நிச்சயங்கொண்டு சிறிதும் யோசிக்காமல் அந்தக் கடுதாசியைத் திறந்து, அதில் எழுதியிருந்த சமாசாரத்தைப் படித்துப்பார்க்க அவளுக்கு ஆநந்தம் பொங்கிற்று. அவள் உடனே மாதவனிடம் ஓடிவந்து "பீ. எல். தேறிவிட்டது, தேறிவிட்டது" என்று கத்திக்கொண்டே தந்தியை அவன் கையில் நீட்டினாள். மாதவனோ அதைத்

தன்கையில் வாங்கக்கூட வாங்காமல் "சரி நல்லது" என்று மாத்திரம் சொன்னான். அவன் தந்திக்கடிதத்தைப் பார்க்கவுமில்லை; மேலே ஒரு அக்ஷரம் பேசவுமில்லை. இருந்த இடத்தை விட்டுக் கொஞ்சமும் அசையாமல் இந்துலேகையின் சந்திரபிம்பம் போன்ற முகத்தைக் காதல் நிறைந்த நோக்குடன் கண்ணுற்ற வண்ணமாயிருந்தான். இதைக்கண்டபோது இந்துலேகைக்கே ஒரு தீவிரமான மன்மதாவஸ்தை உண்டாயிற்றென்றாலும், அதைஅவள் தைரியத்தோடு அடக்கிக்கொண்டு "இது என்ன சங்கதி, மாதவா? நீ ஏன் இவ்வளவு வியசனமாயிருக்கிறாய்? பீ. எல். பரீட்சையில் முதல் க்ளாஸில் முதலாய்த் தேறினை என்ற சங்கதியைத் தெரிவித்தால் நீ இவ்வளவு விசனப்படுவானேன்? இவ்வளவு கவலையற்றுக்கிடப்பது ஆச்சரியம்! ஆச்சரியம்!!" என்றாள்.

"எனக்கு இதில் ஓர் அக்கறையும் இல்லை. பீ. எல். பாஸானாலும்ஆகாவிட்டாலும் எல்லாம் எனக்கு ஒரு மாதிரிதான்." என்றான் மாதவன்.

"பாஸான சங்கதியை நான் போய் வலியச்சனோடும் நம் இருவருடைய தாய்மார்களோடும் சொல்லுகிறேன். நானே ஓடிப்போய் சொல்லுகிறேன். அவர்களாவது கேட்டு ஸந்தோஷிக்கட்டும்" என்றாள் இந்துலேகை.

"நீ ஏன் அதற்காக இவ்வளவு ஆத்திரப்படுகிறாய்? அவர்களிடத்தில் நானே சாவதானமாய்ப் போய்ச் சொல்லமாட்டேனா? நீ ஏன் இவ்வளவு அவசரப்படுகிறாய்?" என்றான் மாதவன்.

"கூடாது" என்றாள் இந்துலேகை. "நானே உடனேபோய் அவர்களுடன் சொல்லிவருகிறேன். இந்தத் தந்தியை நீ வாசிக்கத்தான்வேணும். இதோ பார்."

"எனக்கு அதைப்படிக்க மனமில்லை. பாஸானதில் எனக்குக் கொஞ்சமாவது ஸந்தோஷமிருந்தால்தானே" என்றான் மாதவன்.

"ஏன்?" என்று கேட்டாள் இந்துலேகை.

"என் மனதில் உள்ள துயரத்தினால்" என்றான் மாதவன்.

"இப்போது நீ, பீ. எல். ஆயிருந்தும் இன்னும் மனத்துயரமா?" என்று குறும்பாய்க் கேட்டாள் இந்துலேகை.

"உனக்கு இவ்வளவு கல்மனது இருக்குமென்று எனக்கு முன்னமே தெரிந்திருந்தால்" என்று ஆரம்பித்த மாதவன் மேலே சொல்லாமல் சடக்கென்று நிறுத்திவிட்டான்.

"எனக்கு முன்னமே, தெரிந்திருந்தால்" என்று அவன் சொல்லியதை இந்துலேகையும் பிடித்துக்கொண்டு "நீ சொன்னதைக் குறையும் சொல்லித் தயவுசெய்து முடித்துவிடு" என்றாள்.

"எனக்கு முன்னமே தெரிந்திருந்தால்" என்று மீண்டும் மாதவன் சொன்னான்.

"உனக்கு முன்னமே தெரிந்திருந்தால் என்ன?" என்றாள் இந்துலேகை. அப்படிக் கேட்கும்போது அவள் மாதவன் சமீபத்துக்கு வந்துவிட்டாள்.

'எனக்கு முன்னமே தெரிந்திருந்தால், இந்தச் சங்கடமும் நாசமும் வாராமலிருக்கும்" என்றான் மாதவன்.

"சங்கடமும் நாசமுமா? நீ என்ன எண்ணிக் கொண்டிருக்கிறாய்?" என்றாள் இந்துலேகை.

"என்னைப்பற்றி உன் நெஞ்சத்தில் கொஞ்சமாவது தயாதாட்சணியம் இல்லையே, இந்துலேகா;" என்றான் மாதவன்.

"அதிருக்கட்டும்" என்றாள் இந்துலேகை. "அதைப்பற்றி நான்வந்து பேசிக்கொள்ளுகிறேன். இப்போது நான் நொடிக்குள் போய் உனக்குப் பாஸானதை வலியச்சனோடும் என் தாயாரோடும் உன் தாயாரோடும் நம் மாமாமாரிடத்திலும் சொல்லிவிட்டுவருகிறேன்; இதோ போய்க்கொண்டிருக்கிறேன்; ஓடிப்போய்ச் சொல்லிவிடுகிறேன். நீ மாத்திரம் இங்கேயிரு. உனக்குப் பரீட்சைதேறிய சங்கதியைவந்து நான் சொன்னதற்காக நீ இவ்வளவு சோர்வடைந்திருக்கக்கூடாது?"

"எனக்காக நீ இந்தச் சிரமமெல்லாம் எடுத்துக் கொள்ளவேண்டாம், இந்துலேகா" என்றான் மாதவன். "இந்தப் பாஸானதில் எனக்கு ஒரு ஸந்தோஷமில்லை. என் உயிர் இந்தத் தேகத்தைவிட்டுச் சீக்கிரத்தில் பிரிந்து போய்விட வேண்டுமென்று கடவுளை நான் பிரார்த்திக்கொள்ளவேண்டியது மாத்திரமே இப்போது எனக்குள்ள குறை. உயிருள்ள வரைக்கும் வேதனைப்பட்டுக்கொண்டு இந்தப் பாஸ் யாருக்கு வேண்டியிருக்கிறது?" என்று சொல்லி மாதவன் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருக அழுதான்.

இந்தப் பரிதாப நிலையைக்கண்டு சகிக்க இனி க்ஷணநேரமும் இந்துலேகையால் முடியவில்லை.

அடக்கமுடியாதகாதலும் தாபமும் அவள் உள்ளத்தில் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்க, இனி ஒரு நிமிஷமும் அதைத்தாங்க முடியாமல் அவள் முற்றிலும் அவற்றிற்குப் பரவசமாகி சோபாவில் தானும் உட்கார்ந்து மெய்ம்மறந்து மாதவன்மேல் சாய்ந்த வண்ணமாய் அவனுடைய கோமளமான

முகத்தோடு தன் சந்திரவதனத்தைச் சேர்க்கவே அடக்கமுடியாத ஆநந்தங்களிப்பில் ஒருவரையொருவர் முத்தமிட்டு இதழுடன் இதழ் கலந்தனர். அப்போது இந்துலேகை சொல்லலுற்றாள், "என் உயிரே, என் ஒன்றான உண்மைக்காதற் களஞ்சியமே! என் இப்படி விசனிக்கிறாய்? இரண்டு வருஷத்துக்கு முன் நான் உன்னை என் உள்ளத்தில் குடிகொள்ளச் செய்தேன். அது முதல் என் சரீரத்தையும் மனதையும் உனக்கு சமர்ப்பித்தேன். இனி நாம் ஆநந்த பூர்த்தியான சுகவாழ்வில் இருப்போம் வா. உன்னைத்தவிர எவரிடத்திலும் எப்போதும் என் மனம் சென்றதில்லை. இனி இந்த ஜன்மமுள்ளவரையிலும் வேறொருவரிடத்தும் நான் காதல் கொள்ளேன். உன்னையே என் மன மொழி மெய்களால் காதலிக்கின்றேன்."

என்று சொல்லி ஒரு க்ஷணகாலம் மாதவன் ஆலிங்கனத்துக்குத் தன்னை வசமாக விட்டு, அவன் கண்ணீரைத் துடைத்து, பிறகு எழுந்து அவன் பக்கத்தில் நின்றாள் இந்துலேகை. மாதவனுக்கோ இந்துலேகை சொன்ன சில வார்த்தைகள் மாத்திரமே காதில்பட்டன. உடனே அவன் இன்பக்கடலில் மூழ்கவே தன்னைச் சுற்றிலுமிருந்த எதுவும் அவன் கண்ணுக்குத் தெரியவில்லை, காதுக்குக் கேட்கவுமில்லை. கடைசியாக அவன் எழுந்து நிமிர்ந்து நின்றான்.

"இப்பொழுது நான் பரீட்சையில் தேறியதை உலகத்துக்கெல்லாம் வெளிப்படுத்து. இந்த வாழ்க்கையில் எனக்குக் கிடைக்கும் சகல போக பாக்கியங்களையும் இனி இந்துலேகை என்னுடன் சேர்ந்து அனுபவிக்கப்போகிறபடியால் எனக்கு இப்போதிருப்பதெல்லாம் நான் இவ்வுலகத்தில் ஜீவித்திருக்கவேண்டுமென்ற ஒரே விருப்பந்தான். நான் வாஞ்சித்த மேலான வரம் எனக்குக் கைகூடி விட்டபடியால் நானே மகா பாக்கியவானென்பதற்குச் சந்தேகமில்லை. இனி, இந்துலேகா, நீ போய் எனக்குப் பரீக்ஷை தேறின சங்கதியை அவர்களோடு சொல்லலாம். அந்தச் சந்தோஷசெய்தி உன் வாய்மொழியாய் வருவதே இப்போது உத்தமமாகும்." என்று மொழிந்தான் மாதவன் வெற்றி வீராப்புடன்.

மாதவனுக்கும் இந்துலேகைக்கும் உண்டாயிருந்ததென்று ஏற்கனவே நாம் சொல்லியிருந்த ஆத்ம சம்பந்தம் இவ்வாறாகத் தான் நிறைவேறியது. இவ்விருவரும் தமக்குள்ளாகவே ஒருவித ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்களென்றும், மாதவன் இந்துலேகையை மணக்க உத்தேசித்திருக்கிறானென்றும் பஞ்சு மேனவனுக்குத் தெரியவந்தது. இந்தச் சம்பந்தம் அவ்வளவாய் அவனுக்கு இஷ்டப்படவில்லையென்றாலும் அந்தச்சமயத்தில் அவன் அதற்கு எவ்விதவிரோதமும் காட்டவில்லை.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

சிறுவர்க்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

உண்மையான மனிதன்.—முன்னொரு காலத்தில் க்ரீஸ்தேசத்தில் டையோல்னீஸ் என்றொரு மஹான் இருந்தார். அவர் சிறந்த தபோதனர்: உலக விஷயங்களில் பற்றற்றவராக விருந்தார். இவர் எப்பொழுதும் கந்தல்களை உடுத்திக்கொண்டும், தாடியை வளரவிட்டுக்கொண்டும், கையில் தடி பிடித்துக்கொண்டும், தோளில் ஓர் சிறு மூட்டையைத் தாங்கிக்கொண்டும், வெறுங்காலுடன் தாம் இருந்த பட்டணத்தில் பகற்காலங்களில் உலாவி வருவது வழக்கம். இரவில் அவர் ஓர் தொட்டியில் தூங்கி வந்தார். இவர் பிக்ஷை எடுத்தே உண்டு வந்தார். மழைக்காலங்களில் இவர் வீட்டுக்கூரைகளின் அடியில் உட்கார்ந்து தமது மேல் விழுந்த தண்ணீரைக் கவனியாதிருப்பது வழக்கம். சீதோஷ்ண ஸுகதுக்கங்களை இவர் ஸமமாகப் பாராட்டி வந்தார். இம்மஹான் ஒரு நாள் நடுப்பகலில் கையில் ஓர் ஏற்றிய விளக்கை எடுத்துக்கொண்டு ஏதோ ஓர் வஸ்துவைத் தேடுவதுபோலப் புறப்பட்டார். இவர் வரும் வழியில், இவரைப் பைத்தியக்காரன் என்று எண்ணிய சிலர் இதையும் பைத்தியத்தின் ஓர் அடையாளம் என்று கொண்டு 'ஏன் அய்யா இந்தப் பட்டப் பகலில் இவ்வாறு விளக்கை எடுத்துக்கொண்டு புறப்பட்டீரே. உமக்கு இந்தப் பகலில் கண் தெரியாமல் போய்விட்டதா?" என்று பரிஹாஸம் செய்தனர். அதற்கு அவர் மஹா விநயத்துடன் 'அப்பா இப்பாழுலகில் மனிதன் என்று கூறத்தக்கவன் யாரேனும் இருக்கிறானா என்று உணர நான் பட்டப்பகலில் விளக்கிட்டுத் தேடுகிறேன்' என்று கூறிவிட்டுத் தமது கருமமே கண்ணாகப் புறப்பட்டு விட்டார். இம்மறுமொழியால் இவர் பைத்தியம் முற்றிவிட்டது என்ற எண்ணம் கேட்போர் மனதில் திடப்பட்டது. பாம்பிற்கன்றோ பாம்பின் கால் தெரியும்; மஹான்கள் நிலை பாமரர்களுக்கு எவ்வாறு தெரியும்? மஹான் ஓர் கோயிலண்டைபோய் அப்பொழுது அங்கிருந்த பூசாரியிடம் அவர் பிச்சை கேட்டார். இவரைக்கண்டதும் பூசாரி மிகுந்த பரபரப்புடன் 'நான் உன்னை வாழ்த்துகிறேன் இதுவேபோதும்.' என்று கூறிவிட்டுக் கோயிலுள் மறைந்து விட்டான். மஹான் வேடிக்கை ஸாமான்கள் நிறைந்த ஓர் கடையண்டை வந்து நின்றார். உள்ளே மிகுந்த ஆடம்பரத்துடன் ஓர் பெண் சில ஸாமான்களை வாங்கிக்கொண்டிருந்தாள். அவளை நோக்கி மஹான் 'அம்மணீ! வேடிக்கை ஸாமான்களை வாங்கும் காலத்தில் என்னைக் கவனியாது விட்டுவிடக்கூடாது. நான் பசியால் வருந்துகிறேன்' என்று கூறிப் பிச்சை கேட்டார். உடனே அவள் 'ஐயோ, பாவம், மிகுந்த கஷ்டப்படுகிறாயா' என்று கூறி ஒரு பைஸாவை விட்டெறிந்தாள். அதே ஸமயத்தில் அவள் தன் நாய்க்குக் கழுத்துப்பட்டை

வாங்கியதற்காக அந்தக்கடைக்காரனிடம் 12 ரூபாய்களை எடுத்துக் கொடுத்தாள். இதைக் கண்டு தலையைச் சொறிந்துகொண்டே மஹான் போய்விட்டார். போனவர், ஓர் இராஜ குமாரன் அழகிய ரதத்தில் வருவதைக் கண்டு அதன் அருகில் ஓடிப்போய் ரதத்தை நிறுத்திக்கொண்டு, 'மஹாராஜா! என் கஷ்டத்தைச் சற்றுக் காதுகொடுத்துக்கேட்கவேண்டும்' என்று மேல் சொல்ல வாய் எடுத்தார். அப்பொழுது இராஜகுமாரன் கோபத்துடன் 'அடே மடையா! விலகி நில். இல்லாவிடில் உன்னை அடிக்கவாவது செய்வேன், அல்லது ரதத்தை உன் மேல் ஏற்றியாவது விடுவேன்' என்று கதறினான். அப்பொழுது அருகாமையில் போய்க்கொண்டிருந்த அடிமை ஒருவன் மஹான் படும் கஷ்டத்தைக்கண்டு மிகுந்த மனக்கனிவுடன் (தரித்திரத்தின் கொடுமை நன்றாக உணர்ந்தவன் அல்லவா அவன்!) அவரைக் கட்டி அணைத்து விலக்கி ஒரு பைஸாவை அவர் ஓட்டில் போட்டுவிட்டுத் தன் வேலையின்மேல் கவனமாகப் போய்விட்டான் மனக்கனிவுடன் தன்னால் இயன்ற அளவு அன்புடன் அளித்து, அதற்குப்பதிலாக வரும் யாதொரு கைம்மாறையும் ஏற்றுக் கொள்ளப் பின்னடையாத அடிமையைக் கண்டார் மஹான்! ஆனந்த பரவசரானார். 'ஓ தெய்வமே! உன்னருளால் இப்பாழுலகில் ஓர் உண்மையான மனிதனைக் கண்டேன்! அவன் ஓர் அடிமையாகக் காணப்படுகிறான். நான் கிருதார்த்தனானேன்!' என்று கூத்தாடிவிட்டு விளக்கை அணைத்தார். பின்னர் அவர் தமது இருப்பிடம் சென்று அமைதியுடன் இருந்தார். பட்டப்பகலில் தீவட்டியிட்டுத் தேடினபோதிலும் உண்மையான மனிதர் எக்காலத்திலும் குறைவுதான். ஸதா மனக்கனிவுடன் தம்மால் இயன்றமட்டும் கொடுத்து, அவ்வாறு செய்வதால் வரும் சிறப்பை அபேக்ஷிக்காதிருத்தலே அவர்கள் முக்கிய வெளிஇலக்ஷணமாக இருக்கும். இந்தக் கருத்தை உள்ளடக்கியே ஔவை 'இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்' ஆகச் 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்றாள்.

***

இக்கரைக்கக்கரை பச்சை.—இந்தத் தொடர், ஆடுகள் மேய்வதிலிருந்து எடுக்கப்பட்டது. ஆடு ஓர் கால்வாய்க் கரையில் மேய்ந்துகொண்டு அக்கரையை நோக்குமாம். அங்கு உள்ள பச்சிலைகள் மிகுந்த பச்சையாகக் காணப்படுவதைக்கண்டு இக்கரையில் தின்னுவதை நிறுத்திவிட்டு அக்கரைக்கு ஓடிவிடுமாம். பின்னர் அங்கிருந்து இக்கரையை நோக்க இது அதிகப் பச்சையாக இருப்பதைக் கண்டு இங்கு வருமாம். இவ்வாறு அங்கும் இங்கும் அலைந்துதான் ஆடு தழை மேய்வது வழக்கம். 'தூரத்துப் பச்சை கண்ணிற்குக்குளிமை' ஆதலால் ஆடுகள் இவ்வாறு ஏமாறுவது. இதுபோல, தான் இருக்கும் நிலையைவிட்டு ஒருவன் மற்றொருவன் நிலைக்கு மாற உத்தேசித்தால் அவனை நோக்கி 'இக்கரைக்கு அக்கரை பச்சைதான் அப்பா! வீணாக ஏமாந்து உன் நிலையைவிட்டு மாறி பரிதவியாதே' என்று இந்தத் தொடரைக் கூறி புத்தி கூறுவது வழக்கத்தில் வந்துவிட்டது. இவ்விஷயமாக ஓர் கதை ஒன்றும் உண்டு.

ஓர் ஆட்டிடையன் கடற்கரையில் தனது ஆடுகளை மேய்ப்பது வழக்கம். ஒரு நாள் தனது ஆடுகளை மேய விட்டுவிட்டு, அருகிலிருந்த உயர்ந்த பாறையின்மேல் வந்து உட்கார்ந்தான். ஸமுத்திரத்தை நோக்கினான். அது அலையற்ற பாய் விரித்ததுபோல அசைவற்றுச் சாந்தமாக இருந்தது. வேலையற்றிருந்ததால் ஆட்டிடையன் மனோராஜ்யம் செய்யத் தொடங்கினான். 'ஆஹா! என்ன ஸமுத்திரம்! இதில் கப்பல் யாத்திரை செய்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்! மேலும் இதில் கப்பல்கள் மூலமாகச் சரக்குகள் கொண்டுபோய் வியாபாரிகள் தமது வியாபாரத்தால் பெரிய பணக்காரராகின்றனர். நாம் மாத்திரம் கரையிலிருந்து வெயிலிலும் மழையிலும் அடிபட்டு ஸுகங்கள் யாதொன்றும் இன்றி வருந்துவானேன்!' என்ற எண்ணமிட்டு விட்டுத் தன் ஆட்டு மந்தையை விற்றுவிட்டு வியாபாரியாகி 'திரைகடலோடித்திரவியம் தேட' த் துணிந்தான். மறுநாள் அவன் அவ்வாறே செய்து பின்னர் கப்பல் யாத்திரை செய்யத் தொடங்கிவிட்டான். போகும் வழியில் ஓர் பெரும்புயல் அடிக்கத் தொடங்கிவிட்டது. கப்பல் முழுகிவிடும்போலத் தோற்றியது. இப்படியிருக்கையில் கப்பல் கரைஓரமாக வர ஓர் பாறையில் மோதி தவிடுபொடியாகி விட்டது. மிகுந்த பசியுடன் அருகாமையிலிருந்த கிராமத்துள் போய் அங்கு ஒருவனிடம் ஆட்டிடையனாக அமர்ந்தான். மறுபடியும் முன்போல ஒரு நாள் ஆடுகளை மேய விட்டுவிட்டு ஸமுத்திரக்கரையில் ஓர் பாறையின் மேல் இவன் வந்து உட்கார்ந்தான். முன்போல ஸமுத்திரம் அசைவற்றுச் சாந்தமாக இருந்தது. கண்டான் இடையன்! ஆனால் முன்போல ஏமாறவில்லை. 'என் வேலையில் எவ்வளவு கஷ்டமிருக்கிறதோ, அது போல வாணிபத்திலும் கஷ்டங்கள் இருக்கின்றன. ஆனால் என் வரையில் நோக்கில் வாணிபம் எனக்குத் தகுந்ததல்ல. மேலும் நான் கடலின் சாந்தத்தைக் கண்டு இனி மோசம் போகேன்.' என்று தீர்மானம் செய்தான். இம்மாதிரி இக்கரைக்கு அக்கரைபச்சை என்பதன் உண்மையை உணர்ந்தவர்கள் பிறர் நிலை தனக்கு வேண்டும் என்று வீண் எண்ணங்களை எண்ணார்கள். தாயுமானவர் கூறியபடி

எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணியெண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப்
போதும் பராபரமே

என்றுகூறி மனம் ஆறி இருப்பர் இத்தகையோர்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்
LADIES' PAGES
கௌரி அல்லது வேற்றுமை அழிவு

தான் வந்த குலத்தின் நிலைமையை எண்ணாது, கொண்ட கணவனது குலத்தையே யுயர்ந்ததாக எண்ணி, அவர்க்குத் தக்கவாறு நடத்தல்தான் பெண்டிரின் குணத்தை உயர்த்தும் தன்மையது. மன முழுதும் தன் கணவன் வழிபாட்டின் பொருட்டு ஒடுக்கித் தன்னைப்பற்றிய கவலைகள் சேரவிடாது, கணவர்க்குக் குறை ஒன்றும் வாராதிருக்கும்படிச் செய்வதுதான் குலமங்கையரின் குணம். தான் வந்தவீட்டின் பெருமையையும, அங்கு ஒன்றுமில்லாவிடினும். தான் வளர்ந்த இடத்துக்கொண்ட ஆசையையும், தன்னையும்தாண்டி மேற்செல்லும்படி விடாதுதான் புகுந்தவீடு எத்தகையதாகினும் கீழ்மைப்படுத்தாது கௌரவமுடையதாக வெளியிற் காட்டுவதன்றி, மனத்திலுமவ்வாறே எண்ணி நடப்பதுதான் பெண்ணின் குணமென்று சொல்லப்படும். அத்யந்த விச்வாசமும், தயையும், குணமுங் கலந்து, கணவனை ஆதரித்தலே பெண்டீரது பெருமையை விஸ்தரிக்கச் செய்கிறது. அது மாத்திரமன்று: தான் பிறந்த வீட்டின் பெயரையும் விளங்கசசெய்யும். இத்தகையாரு முண்டென்பதற்கோர் உதாரணம் காட்டுவோம்.

முற்காலத்தில் பாண்டிய நாட்டரசர் மதுரையில் அரசாட்சிசெய்த காலத்தில் அவ்வூரில் ஓர் பிராஹ்மணன் இருந்தனன். ஆழ்ந்த படிப்பும், சிறந்த ஒழுக்கமுங்கூடி பெருமையோடு விளங்கிய இவர்க்கு ஓர் பெண் குழந்தைபிறந்தது. சிவபிரானிடம்கொண்ட ஆசையென்னும் கடலிலாழ்ந்து நின்ற தனக்குண்டாகிய பெண் குழந்தைக்குக் கௌரியெனப் பெயரிட்டனன். அவளுக்குச் சிறுவயதிலேயே தனக்கு, வந்த சிறந்த குணங்கள் படிந்து பெருமை எய்துவண்ணம், நற்குண கவிதைகளும, சாஸ்திர விஷயங்களும் கற்பித்துக், கடவுளிடத்தன்பொழுகுமாறு பஞ்சாக்ஷரஉபதேசஞ்செய்து ஒழுக்கத்திற் சிறக்கும்படி வளர்த்து வந்தனர்.

பெண்ணிற்கு வயதாயதும், அவளுக்குத்தக்க கணவன் வேண்டுமெனத் தேட ஆரம்பித்தனர். எவராயினும் சரி, படிப்பிலுழைத்தவனும், குலத்திலுயர்ந்தவனும், குணத்திற் சிறந்தவனுமாகியவற்கே தன் பெண்ணைக் கொடுப்பதாக நிஸ்சயித்துக் கொண்டார்.

அழகின் ஜ்வாலையால் உள்ளம் புகையாதவர் யாவருண்டு? அவ்வூரில் பிச்சைக்கொண்டு வாழும் வைணவ ப்ராஹ்மணனொருவன், மிகப் படித்தவன். இவளைக் கண்டு மோஹங்கொண்டவனாய் எவ்வாறேனும் அவளை மணப்பது என்னும் எண்ணம் கொண்டு அலைந்து வந்தனன். அவன், அவள் தகப்பன் மனத்திலுள்ள எண்ணம் இன்னதென்றும் அறிந்தனன். அறிந்ததும் பிச்சைக்கு வருமுன் ஒருநாள் வைகையாற்றங்கரையில் தானணிந்திருந்த நாமங்களை எல்லாம் அழித்துவிட்டுச் சுத்தமாகிய விபூதியை முறைப்படி அணிந்து அப்பார்ப்பனன் வீட்டிற்குப் பிச்சைகொள்ள வந்தனன்.

வந்ததும் அவன் வேத முதலிய சொல்லும் வகையாலும், நடந்து கொள்ளும் ஒழுக்கத்தாலும் நன்றாகவே தோன்றுகின்றனன். இவனுக்கே நமது குழந்தையை மனைவியாகச் செய்யவேண்டும் என்று எண்ணம் கொண்டவனாய், அப்பொழுதே அவ்விடத்து அவனுக்குக் கௌரியை அளித்து மணஞ்செய்வித்தனன்.

முற்காலத்தில்மணம் ஆகியதும் பெண் கணவன் வீடே சேரவேண்டும். அதன்பின் கணவனது ஆஞ்ஞையின்றித் தந்தைவீடு நோக்கலாகாது. ஆகையால் கௌரி தனது கணவனுடன் வையையாற்றைக் கடந்து வந்தனள். கடக்கும்போழ்தங்குத்தனது தலைவன் விபூதிமுதலியவற்றை ஒழித்துத் திருமண் காப்பிட்டுக் கொண்டு தன் வீடுநோக்கலானான். இதை எல்லாம் கௌரி கண்டனள். கொஞ்சமேனும் அருவருப்பென்பதின்றி அவர் பின்னே நடந்தனள். தன் சாதி யில்லாதவனை மணந்ததாக அவள் எண்ணவில்லை. அவளுக்குத் தனது கணவனது சாதியே தனது என்று திடமான சித்தமிருந்தால்தான் அவள் இவ்வாறிருந்தாளென்பது நாம் சொல்லவேண்டியதில்லை.

தன் வீட்டிற்கு வந்த வைணவன் கௌரியை வீட்டு வாயலில் நிறுத்தித் தன் பெற்றோரது ஆஞ்ஞை பெற்று அவளை ஓர் தனி அறையுள் உறிருக்கச் செய்து தாமுண்டு எஞ்சியவற்றை அளிப்பது வழக்கம். தனக்கவைப் பிடிக்காவிடினும் கணவன்பாற்கொண்ட அன்பினால் அதைச் சிறந்த அமுதமாக உண்டு வாழ்ந்து வந்தாள்.

இவ்வாறிருக்கும் ஸமயத்தில் வைணவனும் அவன் கூட்டத்தாரும் ஓர் மணத்திற்குப் போகவேண்டி வந்தது. அப்பொழுது அவர் கௌரியை வாசல் அறையுள் வைத்து வீட்டைப் பார்த்துக்கொள்ளும்படி போயினர். இதைத் தலைமேற்கொண்டு ஒழுகித் தன்தந்தையூட்டிய பஞ்சாக்ஷரத்தைச் சபித்து வரும் நாளில் ஓர் கூன்கொண்டுவந்த கிழவனொருவன் அவ்வீட்டிற்கு வந்து "யான் மிகப் பசிப்பிணிப்படுகிறேன். அதைத் தணிக்கவேண்டும்" என்று கேட்டனன். "என்னிடம் திறவுகோலில்லை" என்றாள் கௌரி. "நீ சென்றுபார், கதவு திறக்கமுடியும்" என்றார் கிழவர். அவளுமவ்வாறங்குச் சென்று கதவு தொட்டதும் திறந்தது. உடனே மடபள்ளிக்குள் சென்று நல்லுணவை அவர்க்கு அளித்துக்கொண்டிருந்தனள். இதற்குள் வாலிபன்போல் வடிவுகொண்டு பெருமான் கௌரியின் மனம் துடிதுடிக்கச் செய்தனர். இவ்வாறிருக்கும் ஸமயத்தில் வாயிலில் தன் கணவன் முதலியவர் வந்து

கூவுவதைக் கேட்டுத் திக்ப்ரமையுற்று என் செய்வதென்று தெரியாது மயங்கி மெதுவாக கதவைத் திறந்ததும், அங்கு ஓர் குழந்தை துவா துவா என்றழுவதைக்கண்டனர். வாலிபனைக் காணமுடியவில்லை. இதைக் கண்டவர் "ஹே! சண்டாளி! குலத்தைக் கெடுத்தக் கோடரிக்காம்பே! நடத்தையும் குறைந்த கொடியாய்! தூரச்செல்" என்று கூவுவதைக் கண்டதும் அயர்ந்து மெலிந்து விளங்கினாள் கௌரி. இதனிடையே அக்குழந்தையையும் காணமுடியவில்லை. முடியாமையால் கௌரியை ஓர் பேய் என்று அவர் நிஸ்சயித்து பலவாறு துன்பப்படுத்தினர்.

கணவன்பாற் கொண்ட அன்பின் முதிர்ச்சியால் அவர் செய்ததெல்லாமவளுக்குத் துன்பமாகவே படவில்லை. சிவபிரானும் கருணைகூர்ந்து ரிஷபாரூடராகிசேவை தந்து அவளுக்கு மோக்ஷமளிப்பதாகக்கூறினர். அதைக்கேட்ட கௌரி "எனக்கு மோக்ஷம் வேண்டியதில்லை. என் கணவனார்க்கு மோக்ஷ ஸாதனமளித்து அவர் அதை அடையுமாறு ஊழியஞ் செய்ய ஏழையேற்கு அருளும்" என்று கூறிய மொழிகளைக் கேட்டவர் தம்பதியரிருவருக்கும் மோக்ஷமளித்தார் என்பது ஸ்ரீபரஞ்சோதி முனிவரியற்றிய திருவிளையாடற்புராணத்தின் விருத்த குமாரபாலரான படலத்தை ஒருவாறு தழுவி எழுதப்பட்டது.

வா. சேஷகிரி.

புருஷனைக் காப்பாற்றும் பதிவிரதை.—ஓர் பொல்லாத மனிதன் தன் பெண்சாதியை அடித்து அடித்து அவள் காதைக் கடித்ததற்காகப் போலீஸ் கோர்ட்டில் கொண்டுவரப்பட்டான். பெண்சாதி மிகவும் நல்லவளானபடியால் தன் புருஷனைத் தப்பித்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் கோர்ட்டுக்குப் போனாள். அவள் வாக்குமூலத்தை வாங்குகிறதற்காக நியாயாதிபதி அவளைக் கூப்பிட்டு 'உன் புருஷன் உன்னைக் குரூரமாய் நடத்தினானல்லவா? என்று கேட்டார். அதற்கு அவள் "இல்லை துரைகளே" யென்று மறுமொழி கொடுத்தாள். "என்ன? அவன் உன் காதைக் கடித்துக் கொஞ்சம் சதையை எடுத்துப்போடவில்லையா?" வென்று ஆத்திரமாய்க் கேட்டார். அப்போது நிஷ்கபடமுள்ள அந்த நல்ல ஸ்திரீயானவள் "இல்லை துரைகளே, நானே கடித்துக்கொண்டேன்" என்றாள். நியாயாதிபதி பெண்சாதியின் விசுவாசத்துக்காகப் புருஷனை மன்னித்துப் போட்டார்.

விசேஷ வர்த்தமானங்கள்
GENERAL NEWS

ஜப்பான் நாட்டின் விரிவு.—பன்னிரண்டு வருடங்களுக்குமுன் ஜப்பானிய ராஜ்யம் 3,20,000-சதுரமைல் விஸ்தாரமுள்ளதாயிருந்தது. சீனாவோடு யுத்தஞ்செய்து ஜயமடைந்த பின்னர் 35,000-சதுரமைல் ஜப்பான் ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டது. ஐரோப்பா கண்டத்திற் பாதி என்று சொல்லக்கூடிய பெரிய நாடாகிய ருஷியாவுடன் யுத்தஞ்செய்து வெற்றியடைந்தபின் 250,000-சதுரமைல் சேர்க்கப்பட்டது. ஆகவே ஜப்பான் ராஜ்யம் இப்போது முன்னிலும் இருமடங்கு விஸ்தாரமுள்ளதாகவிருக்கிறது.

***

மணிலாக்கொட்டை.—புதுச்சேரி துறைமுகத்தில் நாளொன்றுக்கு ஆயிரக்கணக்கான நிலக்கடலை மூட்டைகள் ஏற்றப்படுகின்றன.

***

காகிதம் செய்வதற்குத் தகுந்த ஏற்பாடு.—காகிதம் செய்யும் தொழிலைப் பலப்படுத்தும் நோக்கத்தோடு இம்பீரியல் பாரஸ்டு ரீஸர்ச்சு இன்ஸ்டிட்யூடார் இந்தியாவில் மரச்சோறு செய்யும் முறையை அனுபவமூலமாய் விளக்கத்தகுந்த ஏற்பாடு செய்ய முயன்று வருகிறார்களாம்.

***

பிரிட்டிஷ் வர்த்தகக் கணக்குகள், லண்டன், ஜனவரி 8.—இவ்வருஷத்திய பிரிட்டிஷ் இறக்குமதி சாமான்களின் விலை 62,47,40,000 பவுன் என்றும், பிரிட்டிஷ் ஏற்றுமதி சாமான்களின் விலை 37,83,79,000 பவுன் என்றும், இவை முறையே முன் வருஷத்தைக் காட்டிலும் 3,959,899 பவுனும், 43,88,321 பவுனும் அதிகப்பட்டிருக்கின்றனவென்றும் அறிவிக்கப்படுகின்றது. ஏற்றுமதியில் அதிகமான சாமான்கள், இரும்பு, உருக்கு, பருத்தி, கம்பளி, கைத்தொழிற் சாமான்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

***

ஜெர்மனியின் பருத்தி வியாபாரம், லண்டன், ஜனவரி 9.—தென் ஜெர்மனிப் பருத்திக் கைத்தொழிற் சங்கத்து அக்கிராசனாதிபதி வெளியிட்டிருக்கும் சென்ற வருஷத்திய ரிபோர்ட்டில், ஜெர்மனி

யின் பருத்தி வியாபாரம் சென்ற வருஷத்தில் மிக க்ஷீணதசை அடைந்திருக்கின்றதென்றும், இவ்வருஷத்திலும் இன்னும் ஆறுமாதகாலத்துக்கு ஜெர்மன் பருத்தி வியாபாரம் தலைதூக்காது என்றும் கூறுகிறார்.

***

அமெரிக்காவில் இந்து தேவாலயம்.—அமெரிக்காவைச் சேர்ந்த ஸான் பிரான்ஸிஸ்கோவில் ஒரு இந்து தேவாலயம் நிர்மாணமாகிச் சென்ற வருஷம் ஏப்ரல் மாதத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண வர்க்கத்தாரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அது தாஜ் மஹால் போன்று இந்து, மகம்மதிய கிரிஸ்தவக் கோயில்களின் சிற்ப லக்ஷணங்களெல்லாம் ஒருங்கே அமையப் பெற்றுப் பார்க்க வெகு அழகாய் விளங்குகிறதாம் அந்தத் தேவாலயத்தில் வழிபடுவோர் எல்லோரும் அமெரிக்கரே என்று தெரிகிறது.

***

சாதுரீயமான ரணவைத்தியம்.—இங்கிலாண்டிலுள்ள பர்மிங்ஹாம் பட்டணத்தில் ஒருவன் சாராயத்துக்குப் பதிலாய் ஏதோ ஒரு திராவகத்தைக் குடித்துவிட்டான். அதனாலே அவனது நெஞ்சு புண்ணாகிவிட்டது; ஆசுபத்திரியில் சிகிச்சை செய்துகொண்டபோது, டாக்டர்கள் அவனைச் சாராயம் முதலான லாஹிரிவஸ்துக்களை இனி புபயோகிக்க வேண்டாமென்று எச்சரித்தார்கள். ஆனாலும் அவன் கேட்கவில்லை. ஆசுபத்திரியிலிருந்து வெளிவந்ததும் பழய வழியில் திரும்பித் திராவக மதிகமுள்ள சாராயாதிகளைக் குடித்து முன்னிலும் பதின்மடங்கு அதிகமாகத் தொண்டையைப் புண் செய்துகொண்டான். ஆகாரம் உள்ளே செல்லவில்லை. அதனால் மிக்க அவதியடைந்த அந்த வியாதியஸ்தனண்டை ரணவைத்தியரொருவர் வந்து கழுத்துக்கு இடதுபாகத்தில் பக்கவட்டாய் ஓர் குழாயைவைத்து அதன்வழியாக அன்னயாஹாதிகளை உள்ளே செலுத்திவர, காலக்கிரமத்தில் இந்த வாயே அவ்வியாதியஸ்தனின் ஜீவாதாரத்திற்குப் போதியதாய் விளங்குவதாகக் கூறப்படுகின்றது. என்னே ரணவைத்தியத்தின் சாமர்த்தியம்.

***

ஒரு நூதன யந்திரம்.—நிலத்திலும் தண்ணீரிலும் போகும் மோடார் வண்டிகளுக்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்துவரும் இக்காலத்தில் மனிதனை ஆகாயத்தில் பறக்கத்தக்க ஒரு புது யந்திரம் வரப்போகிறதாம். இதை லிலிந்தால் என்னும் ஜெர்மன் தேசத்தவர் கண்டுபிடித்திருக்கிறார். சாதாரணமாயோடும் மோடார்வண்டிக்கு எந்த விதமான இயக்கும் விசைவேண்டுமோ அந்த விதமான விசை யெதுவும் இந்தப் புதிய யந்திரத்திற்கு வேண்டுவதில்லையாம். இதை யோட்டுவிக்க சாமான்ய மனிதனாகட்டும் ஸ்திரீயாகட்டும் முன்வந்து முயற்சிக்கலாம். அவர்களுக்கு இருக்கக் கூடியசொற்ப பலத்தைக்கொண்டே இந்த யந்திரத்தைத் தாங்கி மனிதப் பறவைபோல் வானத்தில் பறக்கமுடியுமாம். பைஸிக்கில் வண்டியில் ஏறி வீதி வழியாய் எவ்வளவு சுலபமாய்ச்சவாரி செய்கின்றோமோ அவ்வளவு சுலபமாய் இந்த யந்திரத்தினால் ஆகாயத்தில் பறக்கமுடியும். இது ஒரு பட்சியுருவத்தைப்போலிருக்கிறது. இதைத் தாங்கிக் ககனமார்க்கமாய்ச் செல்லுமொருவன் வேலை செய்ய முடியாமல் சோர்வடைந்து விட்டால் யந்திரம் தானே மெதுவாகக் கீழ்க்கொண்டு வந்து சேர்த்து விடுமாம். என்னையே கலிகால விநோதம். பூர்வம் இந்திரஜித்து முதலான இராக்ஷசர்கள் ஆகாசசஞ்சரிகளாய் மேக மண்டலத்தில் மறைந்துகொள்ளுந் தன்மையராயிருந்தார்களென்று புராணங்களில் படித்திருக்கிறோமே. இந்த நூதன யந்திரம் பலித்துப்போமாகில், பூர்வம் இருந்தது உண்மையாகுமென்று சொல்ல வேண்டியதனவசியம்

***

தலை ஜோடிப்புக்காகப் பறவைகளைக் கொல்லுதல்.—ஐரோப்பிய துரைசானிமார்களின் தொப்பிகள் பல பறவைகளின் சிறகுகளால் அலங்கரிக்கப்படுகின்றன. இதற்காக வருஷத்தில் எத்தனை கோடி பறவைகள் வீணாய்க் கொல்லப்படுகின்றன. இதற்காக வருஷத்தில் எத்தனை கோடி பறவைகள் வீணாய்க் கொல்லப்படுகின்றனவென்று யோசித்தால் மெய்யாகவே வியசனிக்கத் தக்கதாயிருக்கிறது. 30-வருஷங்களுக்கு முன் அமெரிக்காவில் புளோரிடா மாகாணத்தில் 30,00,000-நாரைக் கூட்டங்களிருந்தன. சீனா தேசத்திலும் நாரைகள் ஏதேஷ்டமாயிருந்தன. இப்போது அமெரிக்காவிலும் சீனாவிலும் வெள்ளை நாரையென்பதே கிடையாது. வெஸ்டு இண்டியா தீவுகளில் சர்க்கார் சட்டம் கெடுபிடி பண்ணினபோதிலும் பலவித ரீங்காரப் பக்ஷிகள் அடியோடு தொலைக்கப்பட்டன. ஆஸ்ட்ரேலியா, டாஸ்மேனியா முதலான தீவுகளில் ஏழு என்ற அழகுள்ள சிறகுகளையுடைய பறவை ஜாதி முழுவதும் அற்றுப்போயிற்று. மனுஷருடைய சிலாக்கியத்துக்காக எத்தனை அருமையானபக்ஷிகள் நாசப்படுகின்றன;

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 7- APR 1910 MADRAS.

விவேக போதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி II } ஸௌம்ய ௵ பங்குனி ௴ 1910-௵ மார்ச்சு ௴ { பகுதி 9

பரிசுத்தம்

PURITY

முன்னர் எடுத்துக் கூறிய ஆராதனைகளை ஸரிவரச் செய்வதற்குப் பரிசுத்தமே ஒருவனிடம் அவசியம் இருக்கவேண்டியது. இந்தப் பரிசுத்தத்தின் ஸ்வரூபத்தை எடுத்து இங்கு விஸ்தரிப்போம்.

பரிசுத்தம் மூன்றுவிதம், நிஜபரிசுத்தம், அகப்பரிசுத்தம், புறப்பரிசுத்தம் என்பவைகளே. ஸாதாரணமாகப் புறப்பரிசுத்தமே பரிசுத்தம் என்ற பதத்திற்குப் பொருளாக எல்லோராலும் மதிக்கப்படுகிறது. பல்விளக்கல், ஸ்நானம் செய்தல், மடிவஸ்திரம் உடுத்தல், அசுத்தவஸ்துக்களைத் தொடாதிருத்தல், தேகத்தைக் கழுவுவது, ஆராதனைக்கு வேண்டிய வஸ்துக்களைச் சுத்தப்படுத்தல், சுத்தமாக இருந்து சேகரித்தல் ஆகிய இவைகளே புறப்பரிசுத்தத்தின் ரூபபேதங்கள். வெளிவித ஆராதனையின் நோக்கம் எதுவோ அதுபோன்றதுதான் இதன் நோக்கமும். மனிதன் மனதை ஆராதனைசெய்ய தகுதியாக்குவதற்கு இவைகள் ஸாதனமாக இருக்கும். மனிதன் ஸாதாரணமாகத் தொழிலற்று இருக்குங்கால் பழகிக் கெட்டுப் போகக்கூடிய விஷயங்களிலிருந்து இந்தப் புறப்பரிசுத்தம் அவனைத் தப்புவிக்கிறது.

இப்படிப் புறப்பரிசுத்தம் மாத்திரம் கவனிக்கப்பட்டால் மனிதன் தன்னை அறியாது கர்வியாகிவிடுவான். 'கோபம் சண்டாளம்,' 'ஆறுவது சினம்,' என்ற அரியவாக்கியங்களை அவன் மறக்கும்படி நேரிடும். அசுத்தமாக இருப்பவன்மேல் வெறுப்பும் தன்மேல் பெரியவிருப்பும் அவனுக்கு உண்டாகிவிடும். புறப்பரிசுத்தத்துடன் மாத்திரம் ஒருவன் ஆராதனை செய்துவருவானாகில் ஏவர அகம்பாவம் மற்றையவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற இவ்வித எண்ணங்கள் பலப்படும். இதை நீக்கத்தான் அகப்பரிசுத்தம் ஏற்பட்டிருப்பது. இது புறப்பரிசுத்தத் தொழில்களைச் செய்யுங்கால் கூறும் மந்திரங்கள், பிரபஞ்சம் அனந்தமாயும் தான் அதனுள் சிறியாரில் சிறியனாயும் இருத்தல், தேகநிலையாமை, ஆத்மாவின் பெருமை இவைகளைப் பற்றி விசாரித்தல் ஆகிய இவைகள் ரூபமாக இருக்கும். இதுவும் முன்னதும் கூடியிருந்தால்தான் மனிதனை உள்ளபடி ஆராதனம் செய்து மேன்மை அடையும்படி செய்யும். வேலி எவ்வாறு நல்ல செடியைக் காக்குமோ அவ்வாறு புறப்பரிசுத்தம் ஒருவனைக்காக்கும். அகப்பரிசுத்தமோ, எருமுதலிய வஸ்துக்கள் எவ்வாறு செடியை நேரிட வளர உதவிசெய்யுமோ அவ்வாறு ஒருவன் செய்யும் ஆராதனையை ஓங்கச்செய்து அவனுக்கு அடக்கத்தையும் கொடுக்கும்.

பரிசுத்தமான சர்க்கரை, அல்லது வஸ்து என்றால் அது தனிமையாக வேறொன்றோடும் ஸம்பந்தப்படாது இருக்கிறது என்பது பொருள். ஆகவே பரிசுத்தம் என்பதில் தனிமை, கலப்பற்று நிற்றல் என்ற அர்த்தபாவம் இருக்கிறது. இந்த உட்பொருளை நோக்கில் பக்தன் உலக விஷயங்களில் மனதைக்கலையவிடாது தனிமையாகப் பரம்பொருள் ஒன்றிலேயே செலுத்த எண்ணுவதே நிஜபரிசுத்தம் என்ற பதத்தின் ஸ்வரூபம் என்பது விளங்கும். இந்தத்தனிமை, அதாவது, பரம்பொருளிடம் மாத்திரம் மனஞ்செலுத்தல், ஆராதனைக்கு ஸாக்ஷாத் ஸாதனம், நேரானவழி. இதுவிரையின் வளரும் சக்திக்கு நிகர். விரைக்குவளரும் சக்தி குறைந்தவிடத்து நல்ல வேலியும் எருவும் எவ்வாறு அதைத்தழைக்கும்படி செய்யமாட்டாவோ, அவ்வாறே இந்த நிஜபரிசுத்தம் இல்லாது வேறு முற்கூறிய பரிசுத்தங்கள் இருப்பின் ஆராதனையின் முடிவு கைகூடாது. ஆகவே உண்மையாக ஆராதனை செய்வதற்கு முக்கியமானது பகவத்ஸ்வரூபத்தை மாத்திரம் நாடிச் செல்லுதல் என்ற நிஜபரிசுத்தமே. மற்றைய பரிசுத்தங்கள் யாவும், இந்தத் தன்மையை உண்டாக்கக்கூடிய ஸாதனங்களே.

விவேக போதினி

தொகுதி 2] ஸௌம்ய௵ பங்குனி௴ [பகுதி 9

கர்மகாண்டம்:

ஆக்ஷேபஸமாதானங்கள்

KARMA KANDA
OBJECTIONS AND ANSWERS

வேதபாஹ்யர்களுக்கும், வேதங்களின் அந்தரங்க நோக்கங்கள் இப்படிப்பட்டவை என்று அறியாதவர்களுக்கும், வேத விஷயங்களை அரைகுறையாக அறிந்த வெளி நாட்டார்களுக்கும் கர்மகாண்டம் மிகுந்த தாழ்ந்தபாகமாகத் தோற்றலாம். இதுபற்றியே மேனாட்டவர்களில் சிலர் வேதங்களை "குழந்தைப் பருவத்திலுள்ள ஜனங்களது மழலைச்சொற்கள்" என்றும், "வேறே எந்த நாட்டாரது சாஸ்திரங்களிலும் காணப்படாத பௌரோஹித்ய விஷயங்களைப்பற்றிய நிஸ்ஸாரமும் கல்விமதம் நிறைந்ததுமான தர்க்கவாதங்களும், யுக்திவிரோதமான மனோராஜ்ய விசேஷங்களுமே வேதங்களில் நிறைந்துள்ளன," என்றும் மனம்போன போக்கே அபிப்பிராயப்படுகின்றனர். இவர்கள் அறியாமை அதிகப்பட இவர் அபிப்பிராயங்களும் அதிக குரூரமாகவே வெளிவரும். அறியாமை மனிதனைக் கழுதையாக்கிவிடுகிறது என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம். இவ்வபிப்பிராயம் கூறுவோர் மூதாதைகள் உழத்தெரியாமலும், நெருப்பென்று ஓர் வஸ்து இருக்கின்றது அது இவ்வாறு மனிதனுக்கு உபயோகப்படும் என்பதை அறியாமலும், கிடைத்ததை அப்படியே உண்டு மிகுந்த கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், மிகுந்த நாகரீகத்துடன் இருந்து பரம்பொருளது சிறப்பை உள்ளபடி உணர்ந்து உலக இன்பங்களில் சிக்கிவருந்தாது தேறியிருந்த ஆரியரது வேதத்தை இக்காலத்தில் கற்றுக்குட்டிகளாக இருக்கும் மேனாட்டவர்கள் குற்றங்கூறுவது கொசு யானையை எதிர்ப்பதுபோலவே இருக்கின்றது. மிகச்சிறந்ததாகிய வேதத்தைக் குற்றங்கூறி, ஒருவருக்கும் தீங்கு நினைக்காத ஹிந்துக்களை அவமதிப்பதால் வெளிநாட்டாரது சிறுமை நன்றாக வெளியாகின்றது. இங்கு இவர்கள் அபிப்பிராயம் அறியாமையால் உண்டாகின்றது என்பதை நன்றாக எடுத்துக்காட்டி அவர்கள் வாயை மூடிக்கொள்ளும்படி செய்வோம்.

முன்னர் கூறியபடி கர்மகாண்டம் பின்வரும் வேதாரஹஸ்யமாகிய ஞானகாண்டத்தை விடத் தாழ்ந்ததாகிலும் அகங்காரிகளான வெளிநாட்டார் கூறுவதுபோல அவ்வளவு கேவலமான பாகமல்ல. வெளிநாட்டார் கூறுவதுபோல அவ்வளவு தாழ்ந்த விஷயங்கள் கர்மகாண்டத்தில் காணப்பட்டபோதிலும், வேதம் இவ்வாறு மனிதனை அவைகள் மூலமாக மேலான ஞானகாண்டத்துள் புகும்படி செய்யவேண்டும் என்றகருத்துடன் அந்தத் தாழ்ந்த பாகங்களையும் விட்டுவிடாது எடுத்து ஆளுகின்றது என்பதை நாம் மறவாதிருந்தால் வெளி நாட்டார்கள் போல நமக்கு முதலில் உண்டாகும் அபிப்பிராயத்தை கண்மூடித்தனமாக வெளிவிடாது தகுந்தபடி உள்ளேயே மாற்றிக்கொண்டு அறிவுடையோராக விளங்கலாம். வெளி நாட்டாரோ இதை உணராது தமது கல்வி மதத்தில் உலக மதங்கள் எல்லாம் தமக்கு நன்கு விளங்கிவிட்டதாக எண்ணி இறுமாப்புடன் அவஸரமாகத் தமது முதல் அபிப்பிராயங்களை வெளியிட்டார்களே ஒழிய வேறில்லை. நிதானித்திருந்தால் அவர்கள் இவ்வாறு செய்தேயிருக்கமாட்டார்கள். இப்பொழுது யோசிப்பார்களாகில் அவர்கள் தமது அவஸரகாரியத்தை நோக்கி

வெட்கம் அடைவார்கள் என்பதற்கு ஸந்தேகம் இல்லை.

முதலில் கர்மகாண்ட பாகத்தில் ஸாதாரணமாக நுணிப்புல் மேயும் தன்மை உடையவர்களுக்குத் தாழ்ந்தவை என்று காணப்படும் விஷயங்களை எடுத்துக் காட்டுவோம். கர்மகாண்டத்தில் சிற்சில விஷயங்கள் ஸர்வ ஸாதாரணமாயும், விருத்த விஷயங்களாயும், அஸம்பாவிதங்களாயும், கூறியது கூறலாயும், அபூதகல்பனைகளாயும் காணப்படும். ஒரே கர்மவிஷயத்தில் அநேகவித விரோதமான விதிகளும், அநேகவித விரோத வர்ணனைகளும், காணப்படும். இதில் சிற்சில கதைகள் காணப்படுகின்றன. பார்ப்பவர்களுக்கு இவைகளை அடக்கியுள்ள வேதம் சிறந்தது என்று எவ்வாறு கூறுவது என்ற சங்கை உண்டாகும்படி இவைகள் செய்யும். ஆதலால் நாம் நமது வேதத்தின் சிறப்பை நிலைநிறுத்த வேண்டுமாகில் இத்தகைய தாழ்ந்த பாகங்கள் உண்மையில் இவ்வாறிருப்பனவல்ல; இவைகளுள் மிகச் சிறப்பான அர்த்தங்கள் மறைந்து கிடக்கின்றன என்று நன்றாக விளக்கவேண்டும்.

முற்கூறிய விஷயங்களுள் ஒன்றை உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம். சதபத பிராம்மணத்தில் பர்வகாலயஜ்ஞங்களைப் பண்ணத்தொடங்கும் யஜமானன் ஒருவன் முதலில் கார்ஹபத்ய, ஆஹவனீயாக்னிகளின் இடையில் நின்றுகொண்டு சுத்த ஜலத்தால் தனது கையைத் துடைத்துக்கொண்டு, அக்னியை நோக்கி, "ஏ, அக்னி! நான் யாகதீக்ஷிதனாகிவிட்டேன். யாகத்தை முடிக்க எனக்கு அவசியம் வேண்டிய பலத்தைக்கொடு. யாகம் ஸரிவர முடிந்து எனக்குப் பூர்ணபலனை அளிக்கும்படி அனுக்கிரஹி. இந்தத் தீக்ஷையால் யான் அஸத்யத்திலிருந்து ஸத்யத்துள் பிரவேசிக்கிறேன்." என்ற மந்திரத்தையும், இந்த யாகம் முடிந்ததும் யஜமானன் 'யாகத்தை முடித்துவிட்டேன். முன்னிருந்தபடியாகிவிட்டேன்.' என்ற பொருள் உள்ள ஓர் மந்திரத்தையும் கூறுகிறான். ஆஷாடர் என்ற ரிஷி இந்த யாகத்தைப் பற்றிக் கூறுங்கால் இந்த யாகங்களில் முதலிலிருந்து முடிவு வரையில் சுத்த பட்டினியே தீக்ஷையின் முக்கிய பாகம் என்று கூறுகிறார். வேறு சிலர் ஆஹாரம் செய்தும் செய்ததற்கு ஸமானமாகாத சிற்சில ஆஹாரங்களை உட்கொள்ளுவது நியாயம் என்று கூறுகின்றனர். யாகத்திற்கு முந்திய இரவு யஜமானன் கட்டில் மெத்தை முதலியவைகளில் படுக்கக்கூடாது. வெறும் தரையிலே யாகஅக்னிகள் இருக்கும் இடத்தில் படுத்துறங்கவேண்டும். அதிகாலையில் எழுந்து நித்ய கர்மானுஷ்டானங்களை ஒழுங்காக முடித்துவிட்டு ஆஹவனீயாக்னியின் வலது புறத்திலிருக்கும் பாத்திரத்தில் காணப்படும் தீர்த்தத்தின் மூலமாக யாகத்தை ஒழுங்காகத் தொடங்கவேண்டும். அக்னிக்கும் இந்தப் பாத்திரத்திற்கும் இடையில் ஒருவரும் போகவேகூடாது, போனால் மிகுந்தபாபம் ஸம்பவிக்கும். இந்த யாகத்திற்கு இரட்டை இரட்டையாக இருக்கும் பத்துகருவிகள் (பாத்திரங்கள்) அவசியம் வேண்டியது. இவைதான் யாகஆரம்பத்தில் அவசியம் செய்யவேண்டியவை.

இவைகளின் நோக்கத்தை பிராம்மணங்கள் நன்கு வெளியிடுகின்றன. தண்ணீர் சுத்தப்படுத்தும் வஸ்துவாதலால் அதைத்தொட்டுக்கையைத் துடைத்துக்கொள்ளவேண்டும். இதைச் செய்வது அவன் அந்தரங்க நோக்கமாகிய மனஸ் சுத்தியை அவனுக்கு ஞாபகப்படுத்துகின்றது. அக்னிக்கு விருததேவதை என்று பெயர். அதனுடைய திவ்ய தேஜஸ்ஸாலும், அசுத்தங்களை அற எரிக்கும் சக்தியாலும் அதற்கு இப்பெயர் வந்தது. உலகில் தேஜோவான்களான தேவதைகளை அக்னிதான் ஒருவாறு குறிப்பிக்கும் அடையாளம்.

ஆகையால் தேவதைகளை அக்னி மூலமாக ஆராதித்து யாகங்கள் நடத்தப்படுகின்றன. யாகம் தொடங்கி முடியும்வரையில் தேவதைகளை ஆராதிக்கும் யஜமானனுக்குத் தெய்வத்தன்மை வந்து விடுகின்றது. ஏனெனில், மனது எதை ஊன்றி யோசிக்கின்றதோ அதே உருவத்தை அது அடைகின்றது. அதாவது மனிதன் எதை நினைத்து நிலைபெறுகிறானோ அதன் நிலையை அடைகிறான். மனிதர்களைவிட தேவர்கள் நெடுங்காலம் அழியாதிருப்பதால் அவர்கள் உண்மையில் இருப்பவர்கள் என்றும், மனிதர்கள் உண்மையில் இருப்பவர்கள் அல்லர் என்றும் மதிக்கப்படுகிறார்கள். இதனால்தான் யஜமானன் யாகத்தொடக்கத்தில் 'இந்தத் தீக்ஷையால் நான் அஸத்யத்திலிருந்து ஸத்யத்துள் பிரவேசிக்கிறேன்" என்று பொருள்படும் மந்திரத்தைக் கூறுகிறான். இம்மந்திரத்துள் அதிரஹஸ்யமாயும் சிறந்ததாயும் உள்ள உட்பொருளும் மறைந்துகிடக்கிறது. அதாவது, 'தேவதைகள் மூலமாக ஆராதிக்கப்படும் நித்யமான பரம்பொருளது சிறப்பால் யான் நிலையற்றதாயும் பொய்யாயும் உள்ள உலகம் விஷயப்பற்று முதலியவைகளிலிருந்து விடுபட்டு நித்யத்வத்தை அடைந்தேன்' என்பதே. யஜமானனது வீட்டிற்கு உபஸதா என்று பெயர். இதன் பொருள் சேர்ந்து வஸிக்கும் இடம் என்பதே. யாககாலத்தில் தேவதைகள் யஜமானனுடன் சேர்ந்துவஸிப்பதால் அவன் வீட்டிற்கு இப்பெயர் வந்தது. தேவதைகள் அதிதிகளாக வந்திருக்கையில் அவர்களுக்கு உணவளிக்காது யஜமானன் புஜிப்பது நியாயமல்ல. ஆகையால் யாகம் முடியும் வரையில் அவன் ஆஹாரம் உட்கொள்ளக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன்மேல் அதிகாரிபேதம், தேகவலிமை இவைகளுக்குத் தக்கபடி இன்னவஸ்துக்களை உண்டால் யஜமானனுக்கு உண்ட பாபம் வாராது என்று விஸ்தாரமாகக் கூறிவிட்டு, தேவர்கள் இருக்கையில் அவர்களுக்கு மரியாதை செய்வதற்காக யஜமானன் கட்டில் முதலிய ஸுகஸாதனங்களை அங்கீகரிக்கக் கூடாது என்ற விஷயத்தை பிராம்மணங்கள் எடுத்துக் கொள்ளுகின்றன. யாக காலங்களில் தண்ணீரை அதிகமாக உபயோகப் படுத்துவதற்கு, பூமி திரவஸ்திதியிலிருந்து கடின ஸ்திதிக்கு வந்து நமக்கு இப்பொழுது பலன் கொடுக்கின்றது என்பதைக் குறிப்பித்து அதன் மூலமாக யஜமானனுக்கு வரக்கூடிய சிறந்த பலனைக் காட்டவேண்டும் என்பதே உட்கருத்து. யாகம் நடந்துகொண்டிருக்கையில், 'யஜமானன் இன்னான் என்று குறிப்பிடமுடியாது, இந்த யாகத்திலிருந்து வரக்கூடிய பலனை இவ்வளவென்று அளவிடமுடியாது' என்று பொருள்படும் மந்திரத்தைக் கூறுவது வழக்கம். இவை முறையே ஸகலமும் பிரம்மம், ஆகலால் யஜமானன், ஆராதிக்கப்படும் வஸ்து இவைகளோடு இரண்டறக் கலந்திருக்கும் பரம்பொருளது கருணை விசேஷத்தால் யாகமூலமாக யஜமானனுக்கு வரக்கூடிய பலன் ஏராளமானது, என்பவைகளைக்குறிக்கின்றன. அக்னியும் ஜலமும் அருகாமையிலிருந்து யஜமானனை சுத்தப்படுத்திச் சிறந்த பலன்கள் உண்டாகும்படி செய்வதால அவைகள் இடையில் ஒருவரும் போகவே கூடாது. யாகத்திற்கு அவசியமாகிய பத்துப் பாத்திரங்கள் விசுவரூபியாகிய பகவானை ஆராதிக்க ஏற்பட்டுள்ள சிறந்த மந்திரத்தினது பத்து எழுத்துகளையும் குறிப்பிக்கின்றன. இம்மாதிரிப் பிராமணங்களில் கூறியபடி உட்கருத்தை அறிந்து கொண்டால் முற்கூறிய வேடிக்கையான செயல்கள்யாவும் சிறந்தவைகளாக மாறிவிடும். இதனால் உண்மையில் யாகமே பரம்பொருள் என்பதும் அதை உள்ளபடி அறிந்து செய்பவர்கள் பரம்பொருளை ஆராதித்தவர்களாவார்கள் என்பதும் விளங்

கும். இம்மாதிரியே 'குழந்தைப் பருவத்திலுள்ள ஜனங்களது மழலைச்சொற்களே, வேதங்கள்' என்று பதட்டத்துடன் வீண் குற்றங் கூறும் அவஸரக்காரர்களுக்குப் புத்தி மட்டு, என்பதை அவர்கள் தமக்கு ஆதாரமாக எடுத்து ஆண்டிருக்கும் வேதபாகங்கள் மூலமாகவே நாம் நன்றாக ஸ்தாபிக்கலாம். இத்தகைய எல்லா விஷயங்களும் பரம ரஹஸ்யத்தை அறிவதற்கு ஏற்பட்டுள்ள படிகளே ஒழிய வேறல்ல.

'கர்மகாண்ட பாகங்களில் காணப்படும் கதைகள் சிறுபிள்ளைத்தனமானவைகளாக இருக்கின்றன,' என்ற அவஸர அபிப்பிராயத்தைஎடுத்துக்கொள்ளுவோம். வைதிககதைகள் பொதுவாக மூன்று விதமாகக் காணப்படுகின்றன. முதல் விதம், நிஜமாக நடந்த விஷயங்களைக் கூறுவன. இவைகளைச் சரித்ர கதைகளாகவே மதிக்கலாம். இரண்டாவதுவிதக் கதைகளில் உண்மையான சரித்திரங்களுடன் வரம்பு கடந்த கற்பனைகள், உண்மையாக நடவாதன முதலிய விஷயங்கள் கலந்திருக்கும். மூன்றாவது விதங்களில் முழுவதும் நடவாதனவாகவே காணப்படும். பின் இரண்டுவித கதைகளுக்கும் அர்த்தவாதங்கள் என்று பெயர். இவை சிறந்த உண்மைகள் கேட்போர் மனதில் லகுவாயும் நன்றாயும் பதியும்படி செய்யும் தன்மை வாய்ந்தன. புராணகதைகள் பெரும்பாலும் இத்தகையவே. இம்மாதிரிக் கதைகளின் சிறப்பை நமது ரிஷிகள் எவ்வளவோ மேன்மையாகக் கூறி இருக்கின்றார்கள். ஆதலால் இக்கதைகளை முழுவதும் உண்மை எனக்கருதுவது மூடத்தனமாயினும், இக்கதைகள் நன்கு மதிக்கத் தக்கனவைகள் அல்ல, இவைகளை அலக்ஷ்யம் செய்யவேண்டும் என்று எண்ணுவது முழுமூடத்தனமே ஒழிய வேறல்ல. இங்குக் குறிப்பிட்டிருப்பவைகளை நன்கு விளக்கச் சதபத பிராம்மணத்திலிருந்து ஓர் கதையை எடுத்துக் கொள்ளுவோம்.

முன்காலத்தில் தேவாஸுரர்களுள் பெரிய யுத்தம் உண்டாயிற்று. எங்கே அஸுரர்கள் ஜயித்து விடுவார்களோ என்ற பயம் தேவர்களுக்கு வந்துவிட்டது. அஸுரர்களுக்கு ஸகல லோகங்களும் நம்மதே என்ற இறுமாப்பு வந்துவிட்டது. உடனே அவர்கள் தமது ஸேனைகளுடன் பூமியைக் கவர்ந்துகொண்டு பாகம் போட்டுக்கொள்ளத் தொடங்கினர். தமது கை களைப்பதைக் கண்ட தேவர்கள் வாமன உருவத்துடன் வந்த விஷ்ணுவை முன்னிட்டுக்கொண்டு அஸுரர்களிடம் வந்து பூமியில் தங்கள் பாகத்தைக் கொடுக்கும்படி கேட்டார்கள். அஸுரர்கள் ஒப்புக்கொள்ளாதது கண்டு தங்களோடு வந்திருக்கும் குட்டையர், படுத்துக்கொள்ள அவசியம் வேண்டிய இடத்தையாவது கொடுக்கும்படி கேட்க அவர்கள் இசைந்தார்கள். இப்படி இசைந்ததும் விஷ்ணு தமது விசுவரூபத்தை எடுத்து பூமிமுழுவதும் மறையும்படி படுத்துக் கொண்டார். அப்பொழுது தேவதைகள் விஷ்ணுவை யாகத்தின் ரூபம் என்றே கருதி யாகத்தால் ஆராதிக்கத்தொடங்கினர். அவரைக் காயத்ரி விருத்தத்திலிருந்த மூன்று மந்திரங்களால் மூன்று பக்கங்களிலும் கட்டி, அவர் தலையிருந்த கிழக்குப்புறத்தில் ஆஹவனீயாக்னியை ஆதானம்செய்தனர். இக்காரியங்களால் அஸுரர்கள் தடுக்கப்பட்டுப் பாகத்தை இழக்கும்படி நேர்ந்தது. இவைகளால் களைப்பு மிகுந்த தேவதைகள், சற்றுக்களைப்பாற, அப்பொழுது விஷ்ணுவுக்குத் தாம் செலுத்த வேண்டிய கடன்களை மறந்துவிட்டனர். முற்கூறியபடி கட்டுண்ட விஷ்ணு தம்மை விடுவிக்கவேண்டும் என்று பிரியப்பட்டார். தேவதைகள் தம்மைக் கவனியாமல் போனதும், மந்திரங்களைச் சிதற அடிப்பதற்கு மனம்வராதவராய் விஷ்ணு வாமன உருவுடன் பூமியுள் மறைந்து பச்சிலைகளின் வேர்பாகங்களில் சென்று அமர்ந்தார். தேவதைகளுக்கு மயக்கம்

தெளிய தமது அஜாக்கிரதையை எண்ணித் துக்கித்துவிட்டு விஷ்ணுவை எங்கும் தேடிப் பார்த்தனர். தங்கள் சிரமங்கள் எல்லாம் வீணானது கண்டு, ஒருவேளை அவர் தாம் இருக்கும் பூமியுள்ளேயே மறைந்திருப்பாரோ என்ற சங்கை பிறந்தது. உடனே அங்கே இயற்றிய சிறு வேதியில் ஓர் யாகம் செய்து பூமியை மூன்று அங்குலம் தோண்டிப் பார்த்தனர். அங்கே பச்சிலைகள் வேரில் விஷ்ணு வாமன உருவத்துடன் இருப்பதைக் கண்டார்கள். ஆதலால் ஆதியில் தேவதைகள் பூமி முழுவதும் வேதியாகக்கொண்டு யாகம்செய்த போதிலும், மனிதன் அவன் சக்திக்கு ஏற்ப தேவதைகள் பின்னர் செய்ததுபோல சிறிதான வேதிகளில் மூன்றங்குல ஆழத்தில் யாகம் செய்யலாம்.

இது ஓர் வைதிக கதை. இது ஸாதாரணமான ஜனங்களுக்குச் சிறுபிள்ளைத்தனமான கதையாகத் தோன்றலாம். ஆனால் வேத நோக்கத்தை உள்ளபடி உணர்ந்தவர்களுக்கு இதன் உட்பொருள் உடனே வெளியாகும். அது பின்வருவது.

தேவாஸுர யுத்தம் பிரபஞ்சத்தில் ஸதா இருக்கும் நன்மை தீமைக்கு உள்ள விரோதத்தைக் காட்டுகின்றது. இது இருந்தால்தான் பிரபஞ்சத்தில் சுறுசுறுப்பும் தொழிலும் காணப்படும். பூமியைத் தேவாஸுரர்கள் கவர எண்ணுவது மனிதனது மனது இவ்வாறு நன்மை தீமைகளால் தாக்கப்படுகின்றது என்பதைக் குறிப்பிக்கும். தேவதைகள் மனிதனது நன்மைக்கே இவ்வாறு செய்ய எண்ணுகின்றனர். பகவான் முன்னர் வருவது அவர் நன்மை அல்லது தர்மத்திற்கு அதிபதி என்பதைக் காட்டுகிறது. அஸுரர்கள் விஷ்ணுவைக் குட்டை ஆளாகமதிப்பது, பகவான், 'பொய்யரும், நெஞ்சினர் காணாத காட்சியே' என்பதையும், காயத்ரீ மந்திரங்களால் பகவான் பிடிபடுவது, உண்மையையே விடாது கூறும் வேதத்தில் பகவான் ஈடு படுவார் என்பதையும், அவர் தலைப்புறம் வளர்க்கப்பட்ட ஆஹவானீயாக்னி பகவானது திவ்ய தேஜஸ் பரமசுத்தம் ஆகிய இவைகளையும், குறிப்பிக்கின்றன. பகவான் பெரிய உருவம் தரிப்பது அவரது ஸர்வாந்தர்யாமித்வத்தையும், சிறிய உருவம் தரிப்பது எங்கும் ஒரே மாதிரியாக இருக்கும் திறத்தையும், காட்டுகின்றன. அதிகப் பழக்கத்தால் தேவதைகளிடம் உண்டான அசிரத்தையை நீக்க உண்மையாகிய வேதங்கள் அவருக்கு ஏற்படுத்தியிருக்கும் வரம்புகடக்காது மறைந்தார். இதனால் தேவதைகளுக்கு அசிரத்தையால் விளையும் தீங்கைக்காட்டினார். தேவதைகளுக்குப் பகவத் ஞாபகம் வந்து பூமியுள் இருப்பாரோ தங்கள் நாதன் என்ற எண்ணம் பிறந்ததும், அங்கேயே அவர் காணப்பட்டார். இதனால் தம்மை எங்கும் பக்தர்கள் துதித்தபோதிலும் அங்கேயே அவர்களுக்குக் காட்சி கொடுப்பதே தம் ஸ்வபாவம் என்பதைக் குறிப்பித்தார். வேதிகள் விஷயம் பார்த்தால் அவரவர்கள் தமது சக்திக்கு ஏற்றபடி பகவத் ஆராதனம் செய்யலாம் என்று மனிதர்களை ஆராதனைகள் செய்யும்படி தூண்டுவனவாகக் காணப்படும். இதனால் பகவான் ஆராதனையின் ஆடம்பரத்தைக் கவனியாது உள்ளன்பைக் கவனிக்கும் நிஷ்பக்ஷபாதி என்பது வெளியாகும்.

வைதிக கதைகளில் அடங்கியிருக்கும் உட்பொருளைப் பாருங்கள்! ஒருவேளை சிலர் நாமாக நமது மனோதர்மத்திற்கேற்ப வைதிக கதைகளை அர்த்தம்பண்ணுகிறோம் என்று குற்றங் கூறலாம். இவ்வாறு பொருள் படுத்துவதற்கு வேதமே ஆதாரம். அதுவே அநேக இடங்களில் தன் வாக்கியங்களில் ஆழ்ந்த பொருள்கள் அடங்கியிருக்கின்றன என்று கூறுகின்றது. இதுபோல வைதிக கதைகள் ஒவ்வொன்றிலும் சிறந்த உண்மைகள் அடங்கியிருக்கின்றன என்பதை நன்கு விளக்கலாம். ஆகவே கர்மகாண்ட விஷயமாக வெளிநாட்டார் கூறும் அவசர அபிப்பிராயங்கள் யாவும் முழுத் தவறேயல்லது வேறல்லஎன்பது திண்ணம்.

முந்திரி மரம்

CASHEW TREE

முன்னுரை.—இது நமது இந்தியாவில் நெடு நாளாகவுள்ளதோர் பயிர். இதன் பெயர் பழைய நூல்களில் உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. இதை ஒரு பழவகைப் பயிராகக் கொள்ளலாம். இது சாதாரணமாய்ச் சமுத்திரக்கரையோரத்திலும், மணல்பாங்கான விடத்திலும் அதிகமாய் இருக்கிறது.

பூமி.—மணற்சாரி பொருத்தமானது. சற்றுக்களிவாயும் உரித்தானது. தண்ணீர் தங்கும் படியான பள்ளத்தாக்குப் பிரயோஜனமில்லை.

பூமிதிருத்தல்.—இந்த ஒரு ஏக்கர் நிலத்தை நன்றாய் இரண்டு மூன்று சால் உழுது அதின் கண்ணுள்ள புல் பூண்டு முதலியவைகளை நீக்கல் வேண்டும். பிறகு இருபது அடிக்கு ஒரு குழி வீதம் மூன்று அடி ஆழம் குழி வெட்டல்வேண்டும். ஒருவாரம் ஆறும் படி விட்டுவிடவேண்டும். அக்குழிகளில் மாட்டெருவு ஆட்டெருவு தழைகள் மடிந்ததினால் உண்டாகும் எரு, சாம்பல் முதலியவைகளில் கிடைத்ததைக்கொண்டு இரண்டடி உயரம் குழிகளில் நிரப்பவேண்டும். பிறகு அரையடி யுயரம் சுற்றுப் பக்கங்களிலுள்ள மணலைத் தள்ளி நிரப்பிப் பின்னர் நன்றாய்க் கொத்தி ஒருவாரம் சும்மாகப் போட்டுவிடல் வேண்டும்.

விதை போடல்.—ஒரு குழிக்கு இரண்டு வீதம் குழிகளில் விதையைப் போடல்வேண்டும். சிலர் விதை போடுவதற்கு இரண்டு மூன்று நாள் முன்னரே ஜலத்தில்ஊறப்போட்டு பிறகு ஊன்றுகிறார்கள். சிலர் ஊறப்போடாமலும் ஊன்றுகிறார்கள். இது ஏழுநாள் முதல் 20-நாள்வரையில் முளைக்கும். விதைபோட்ட நாளிலிருந்து இரண்டு மாசம் வரைக்கும் தினம் தண்ணீர் ஊற்றிக்கொண்டு வரல்வேண்டும். பிறகு, இரண்டு நாளைக்கு ஒரு தண்ணீர் விட்டுக் கொண்டும், 6-மாதம் ஆனவுடன் நான்கு நாளைக்கு ஒரு தண்ணீரும், மரம் ஒரு ஆள் உயரம் வளர்ந்த பிற்பாடு ஒருவாரத்திற்கு ஒரு தண்ணீரும் விடல்வேண்டும். இவ்வரையறையின்றிக் கோடைக்காலத்தில் அதிகமாய் ஊற்றிக்கொண்டும் மழை பெய்த காலத்தில் நிறுத்திக்கொண்டும் வரல்வேண்டும். சிலர் நிலத்தையுழுது படைச்சாலிலேயே கொட்டைகளைப் போடுகிறார்கள். இது அவ்வளவு சிலாக்கியமானதல்ல.

மரங்காய்ப்புக்கு வருதல்.—மூன்று வருஷத்தில் பூக்கும். ஒன்றிரண்டு காய்களையும் காணலாம். ஐந்து வருஷத்தில் நன்றாய்க் காய்ப்புக்கு வந்துவிடும்.

மரத்தின்வளரும் சுபாபம்.—இது 10-அல்லது 15-அடி உயரம் வளரும். இது நிலத்தில் கொடி போல் படரும் ஸ்பாவமுள்ளது. இது மரத்தைச்சுற்றி நாலா பக்கங்களிலும் கிளைகள் ஓடி நன்றாய்ப் பரந்திருக்கும்.

பூ.—வருஷத்தில் இரண்டுதரம் பூக்கும். இப் பூ சில ஏழை ஜனங்களால் தின்னப்படுகிறது.

காய்.—கறி வகைகளாகச் செய்யப்பட்டுச் சாப்பாட்டுக்கு உபயோகப்படுகிறது.

பழம்.—இது நம் நாட்டு ஜனங்களால் அதிகமாகத் தின்னப்பட்டு வருகிறது. ஒரு பைசாவுக்கு நான்கு பழம் விற்கிறது. இதைக் கூலிக்கார ஜனங்களல்லாமல் ஏனையோர் தின்றால் தொண்டையைக் கட்டிக் கொள்ளுகிறது. இதன் ரசம் உஷ்ணம். இப்பழத்தினின்றும் சாராயம் காய்ச்சுகிறார்கள்.

கொட்டை.—இந்த ஒருவகை பழத்திற்குத்தான் கொட்டை வெளியிலிருக்கிறது. இக்கொட்டை பிஞ்சாக விருக்கும். அதன் பருப்பு நமக்கு ஆகாராதிகளுடன் சம்பந்தப்பட்டும் தனியாயும் உபயோகப்படுகிறது. கொட்டையி

லிருந்து எடுக்கும் பருப்பும் நமக்கு ஆகாராதிகளுடன் சம்பந்தப்படுகிறது. இதற்கு ரத்தவிருத்தி குணமுண்டு. ஆனல் சற்று உஷ்ணமானது. கொட்டையிலிருந்து பச்சையாகவும் பருப்பெடுக்கிறார்கள். வறுத்தும் சுட்டும் எடுக்கிறார்கள். இது பண்ணுருட்டி திருவெண்ணெய்நல்லூர் முதலிய விடங்களில் அதிகம். மற்ற இடங்களில் சுமாராக இருக்கின்றது. இதை ரெயில்வே ஸ்டேஷன்களில் சேர் இரண்டணுவாக விற்கிறார்கள். இந்தப் பருப்பிலிருந்து ஒருவித எண்ணெய் எடுக்கிறார்கள். முந்திரிக்கொட்டை யோட்டினின்றும் எண்ணெய் எடுக்கிறார்கள். இது பூச்சி வைக்கும் புண்ணுக்கு உபயோசப்படுத்தப்படுகிறது.

பிசின்.—இம்மரத்தினின்றும் ஒருவிதமான பிசின் எடுக்கிறார்கள். அது வார்னீஸ் கொடுக்க உபயோகப்படுகிறது.

பட்டை.—இது துவர்ப்பானது. இதன் கஷாயம் தோல்பதனிட உபயோகப்படுகிறது.

மரம்.—விறகாக உபயோகப்படுகிறது. ஆயினும் புகையுந் தன்மையுள்ளது.

இலை.—எருவாகப் பிரயோஜனப்படுகிறது. இதைத் தைத்துச் சாப்பாட்டுக் கலன்களாகவும் உபயோகப்படுத்துகிறார்கள். இதன் இலை உதிரும் நிலம் கொழுப்படைகிறது.

மாசூல்.—நன்றாய்ப் படர்ந்து இருக்கும் மரம் சராசரி 10000-கொட்டைகள் வரையில் கொடுக்கிறது. ஆயிரம்எட்டணுவாகவிற்கிறது. மாதத்துக்கு ரூபா 5-கிடைக்கும். இது நல்ல பலன் கொடுக்கும் மரமே.

கற்பனை.—நமது சென்னைராஜதானியில் ஏராளமாய்ப் புஞ்சையிருக்கிறது. இது பயிரிடும்படியான நிலம் அதிகம். நம்நாட்டு ஜனங்கள் காலத்திற்கு ஏற்றவாறு பயிர் செய்து தக்கபலனையடைந்து நம் வறுமையை நீக்க முயலவேண்டும்.

பு. து. இரத்தினம் பிள்ளை,

ஸ்ரீ காலடி க்ஷேத்திரமும் ஸ்ரீ ஆதிசங்கராசார்ய மூர்த்தி பிரதிஷ்டையும்

ADI SANKARA'S TEMPLE AT KALADI

இக்காலடி க்ஷேத்திரம் ஸ்ரீமத்-ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகள் திருவவதாரமெடுத்த புண்ணிய ஸ்தலமென்பது யாவருக்குந் தெரிந்த விஷயமே.

"க்ருதே ஸதாசிவோ விஷ்ணு:
ப்ரஹ்மா சேந்த்ரோ குரு: ஸ்ம்ருத:!
ராமோ வஸிஷ்டோ தூர்வாஸா:
வால்மீகிச்ச த்விதீயகே !!
சக்தி: பராசரோ வ்யாஸ:
ஸ்ரீக்ருஷ்ணோ த்வாபரே யுகே!
கலௌ சுகோ கௌடபாதோ
கோவிந்தச் சங்கரார்யக:!!"

என்று 'பிருஹத் சங்கரவிஜயத்தில்' கூறியிருப்பதுபோல், ஸதாசிவன், விஷ்ணு, பிரஹ்மா, இந்திரன் கிருதயுகத்திலும், ஸ்ரீராமபிரான், வஸிஷ்டர், தூர்வாஸர், வால்மீகி திரேதாயுகத்திலும், சக்தி, பராசரர், வியாஸர், ஸ்ரீகிருஷ்ண பகவான் துவாபரயுகத்திலும், சுகர், கௌடபாதர், கோவிந்த பகவத் பாதர், சங்கராசார்யர் கலியுகத்திலும் வேதாந்தோபதேசத்தினால் அத்துவைத ஞானத்தைத் தெரிவித்து ஸநாதந தர்மத்தை ஸ்தாபித்த பரமாசார்யர்கள் ஆவர். அவர்களுக்குள் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் பெயரை அறியாதவர் இப்பூவுலகில் ஒருவருமிலர். இவருடைய புத்தி கோசரத்தைக்கண்டு மயங்கி ஆச்சரியப்படாதவர் எங்குமில்லை. தத்துவ தர்சநத்தில் இவருக்குச் சமாநமானவர் ஒருவருமில்லையென்பது நமது தேசத்துப் பண்டித சிகாமணிகளின் அபிப்பிராய மாத்திரமேயன்றி, இவருடைய பாஷ்யாதி கிரந்தங்களைப் பரிசீலநஞ் செய்த யூரோப்பு, அமெரிக்கா முதலிய மேல்

விவேக போதினி

ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை 1908-ம் வரு முதல் பிரசுரமாகிவருகிறது. யாவராலும் சிலாகிக்கப்பெற்றது

இப்பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோர்களைக்கொண்டே, இதன் பெருமையை நன்கு அறியலாம். மிகவும் சுலபமான நடையில் எழுதப்படுகிறது. சிறுவர்கள் சிறுமிகள்கூட உத்ஸாகத்துடன் வாசிக்கக்கூடியது. ஒவ்வொரு மாதமும் ஒழுங்காகப் பிரசுரமாகிறது. சித்திரப்படங்கள் ஒவ்வோர் சஞ்சிகையிலும் உபயோகிக்கப்படுகின்றன. எத்திறத்தாரும் வாங்கி வாசித்து நற்பயனடையும் பொருட்டே சந்தாத்தொகையும் மிகவும் ஸுலபமாய் வைக்கப்பட்டிருக்கிறது. [இம்மாதிரி யாவருக்கும் உபயோகத்தையும் உத்ஸாஹத்தையும் கொடுக்கக்கூடிய பத்திரிகை இன்னமும் எவராலும் பதிப்பிக்கப்படவில்லையென்று தைரியமாய்ச் சொல்லுவோம்.

இப்பத்திரிகையில் பிரசுரமாகும் விஷயங்கள்

1. நீதிகளைக் கற்பிக்கக்கூடிய பொது விஷயங்கள்.
2. பொது நன்மைக்காகப் பாடுபட்ட மஹான்களின் ஜீவிய சரிதைகள்.
3. இயற்கை அற்புதங்கள்.
4. உலக ஒழுக்கங்கள்.
5. கல்வியபிவிருத்திக்குரிய பாஷா விஷயங்கள்.
6. வியவஸாயம், கைத்தொழில், வியாபார விஷயங்கள்.
7. தக்க நிபுணர்களைக்கொண்டு எழுதப்பட்டு வரும் உயர்தரமான நாவல்கள், நாடகங்கள்.
8. சிறுவர்க்காகவென்று எழுதப்படும் நீதியைப் புகட்டும் சிறந்த கதைகள்.
9. ஸ்திரீகளுக்கேற்ற நற்போதங்கள்.
10. சாஸ்திரீகமான விசேஷ வர்த்தமானங்கள்.

தபாற்கூலி உள்பட சந்தா விபரம்

இந்தியா, பர்மா, சிலோன்,					பினங்கு, சிங்கப்பூர், நேடால், ஆ. இடங்களுக்கு				
ஒரு வருஷத்துக்கு	ரூ.	3	0	0	ஒரு வருஷத்துக்கு	ரூ.	4	8	0
ஆறு மாதத்திற்கு	,,	1	12	0	ஆறு மாதத்திற்கு	,,	2	4	0
தனிப்பிரதி	,,	0	5	0	தனிப்பிரதி	,,	0	6	0

☞ சந்தாத்தொகை முன்பணமாகத்தான் அனுப்பவேண்டும். அல்லது, முதல் ஸஞ்சிகையை ஒரு வருஷத்துக்கு, அல்லது ஆறு மாத சந்தாவுக்கு வி. பி. மூலமாய் அனுப்பிப் பெற்றுக்கொள்ளப்படும்.

இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு மட்டுமே எங்களிட சொந்தப்புத்தகங்களும், இன்னும் அநேக தமிழ்ப் புத்தகங்களும் குறைந்தவிலைக்கு அனுப்பப்படும். ஆகையால், இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு எப்பொழுதும் நஷ்டமில்லை. பத்திரிகையின் அபிவிருத்தி விஷயமாய் எழுதப்படும் நிருபங்களை எங்களால் இயன்றமட்டில் கவனித்து, முடிந்தவரையில் சீர்திருத்தமுயலுவோம். மற்றும் வேண்டிய விபரங்கள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர், "விவேக போதினி" ஆபீஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

நமது பத்திரிகைக்கு விஷயதானம் செய்யும்

கனவான்களில் சிலர் :—

ம-ா-ா-ஸ்ரீ, மஹா மஹோபாத்யாயர் பண்டித-ஸ்ரீ வே. சாமிநாதய்யரவர்கள்.
,, மஹா மஹோபாத்யாயர் பண்டித-ஸ்ரீ சந்திரசேகர சாஸ்திரிகளவர்கள்.
,, கனம் ஆர். ரகுநாதராவ் அவர்கள், திவான் பஹதூர், ஸி.எஸ். ஐ.
,, பண்டித-ச. ம. நடேச சாஸ்திரியாரவர்கள்.
,, டி. செல்வகேசவராய முதலியார் அவர்கள், எம்.ஏ.
,, த. கனகஸுந்தரம் பிள்ளை அவர்கள், பி.ஏ.
,, டி. ஏ. கோபிநாத ராவ் அவர்கள், எம்.ஏ.
,, வ. சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள், எம்.ஏ.
,, பி. வி. ஸ்வாமி ராவ் அவர்கள், எம்.ஏ.
,, எஸ். குப்புஸாமி சாஸ்திரிகள் அவர்கள், எம்.ஏ.,
,, டி. எஸ். சுப்பிரமணிய அய்யரவர்கள், எ.ம்.ஏ., எல்.டி.
,, ஏ. பஞ்சாபகேசய்யர் அவர்கள், எம்.ஏ., எல்.டி.
,, வி. அப்பாஸாமி அய்யர் அவர்கள், எம்.ஏ.
,, மஹேச குமார சர்மா அவர்கள்.
,, ஏ. எஸ். கஸ்தூரிரங்கய்யர் அவர்கள், பி.ஏ., எல்.டி.
,, வ. சேஷகிரி சாஸ்திரியார் அவர்கள்.
,, வி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், பி.ஏ.
,, ஜே. ஆர். ரங்கராஜு அவர்கள்.
,, ஏ. மாதவய்யா அவர்கள், பி.ஏ.
,, எஸ். சிதம்பர அய்யர் அவர்கள்.
,, கே. நாராயண அய்யர் அவர்கள், பி.ஏ., எம்.பி., ஸி.எம்.
,, பண்டித-ஸ்ரீ கோபாலகிருஷ்ண அய்யர் அவர்கள்.
,, ஜ. வே. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், பி. ஏ.
,, ஸி. ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள், பி. ஏ.
,, வி. ஜி. சுப்பய்யர் அவர்கள், பி. ஏ., எல்.டி.
,, ஜீ. சுந்தரேச அய்யரவர்கள், பி.ஏ., எல்.டி.
,, ஜீ. தாதாசாரியாரவர்கள், பி. ஏ.
,, ப. சம்பந்த முதலியாரவர்கள், பி.ஏ., பி.எல்.
,, ஆ. நரஸிம்மய்யங்கார் அவர்கள், பி.ஏ., எம்.எல்.
,, ப. கிருஷ்ணஸாமி சாஸ்திரி அவர்கள், பி.ஏ., பி. எல்.
,, டி. எஸ். நாராயண சாஸ்திரியாரவர்கள், பி.ஏ., பி.எல்
,, எஸ். ஈ. சங்கர அய்யர் அவர்கள, பி.ஏ., பி.எல்.
,, என், ஆர். கே. தாதாசாரியார் அவர்கள், பி.ஏ., பி.எல்.
,, ஸி. சுந்தரம் அய்யர் அவர்கள், பி.ஏ.
,, ஸி. எஸ். சுந்தரம் அய்யர் அவர்கள், பி.ஏ., எல்.டி.
,, த. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி.ஏ.
,, ஸி. பி. வெங்கிடராமய்யரவர்கள், பி.ஏ.

குறிப்பு:—இன்னும் அனேகம் நிபுணர்களும், ஸ்திரீகளும் நமது பத்திரிகைக்கு வியாஸங்கள் எழுதுகிறார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டபடியாலும், இங்கு இடம் இல்லாமை பற்றியும் அவர்கள் பெயர்கள் இவ்விடம் அச்சிடப்படவில்லை.

'சூரியோதயம்'

இஃது பூஸ்திதியுடைய ஓர் பிரஞ்சு ராஜ தந்திரியால் நடத்தப்பெறும் சித்திர விளக்கமுள்ள வாராந்தப்பத்திரிகை.

இதில் பாரத ஜாதீய தர்மம், ராஜரீகம், சரித்திரம், கைத்தொழில், விவஸாயம், விகடம் முதலியவை நிறைந்து வெளிவரும்.

விஷயதானஞ் செய்வோர்:—

ஸ்ரீ நீலகண்டம்
ஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதி
ஸ்ரீமதி கமலநாயகி முதலியவர்கள்.

வருட சந்தா	ரூ	3	0	0
ஆறு மாதத்திற்கு	ரூ	1	12	0

ஏஜெண்டுகள் தேவை.

மானேஜர்,
'சூரியோதயம்' பத்திரிகாசாலை,
புதுச்சேரி.

குளிர்காலத்தில்

சரீரத்தைப் பாதுகாக்க பிரியப்படுகிறீர்களா?
முந்துங்கள்! அப்படியானால், முந்துங்கள்!!
உடனே எழுதுங்கள்!!!

6-முழ நீளம் 3-முழ அகலமுள்ள கலப்பில்லாத கம்பளி ரோமத்தால் நெசவு செய்ததும், நேர்த்தியும், அழகுமுள்ள போர்வைகள் பலவித நிறங்களிலும் உண்டு. விலை 1-க்கு ரூ. 5.

காஷ்மீர் "கழுத்துப்பட்டி"

இது கலப்பற்ற கம்பளி ரோமத்தால் நெசவானது. அழகான வேலைப்பாடுள்ளது. குளிர்காலத்திற்கு மிகவும் பிரயோஜனமானது. 6-இஞ்சி அகலம் 4-அல்லது 5-முழ நீளம் விலை ரூ 2 8 0 முதல் ரூ 10 வரையில்.

"மடிதாவளி" வைதீகர்கள் மடியாக அணிந்துகொள்ளும்படியான கலப்பற்றவெண்மை நிறமுள்ள கம்பளிரோமத்தால் நெசவுசெய்தது. 24, 29, 37, 40; இஞ்ச அகலமுள்ளதும் 5, 6, 7, 8, 9, 10. 15-முழம் நீளமுள்ளதும் விலை 1-க்கு கிரமமாக, 0-12-0. 1-0-0, 1-4-0, 1-12-0, 3-0-0, 3-12-0, 4-8-0 வரை,

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,
பட்டு பீதாம்பர வர்த்தகம், ஸ்ரீகாசி.
BENARES CITY.

அருமையான தமிழ்ப் புத்தகங்கள்

போஜனப் பந்தலில் போர் விளைந்தகதை அல்லது ஒழுங்கற்ற சமஸ்தானம்	0	10	0
தாயுமான சுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மூலமும், நூதனமாக எழுதிய மெய்கண்ட விருத்தியுரையும(புதியபதிப்பு)	3	8	0
கல்யாணப் பாட்டுகள் (தமிழ்) ...	0	4	0
அழகு சுந்தரி ...	0	8	0
படுக்கையறையில் பாசாங்கு செய்த பங்கஜவல்லிக் கதை ...	0	8	0
மோகன சுந்தரி ...	0	6	0
தனேசுவரி 1-ம் பாகம் ...	0	6	0
நீதிநூற்றிரட்டு விருத்தியுரை 1-ம்பாகம்	1	2	0
டில்லிபாஷா கதைகள் ...	0	5	0
பூலோகரம்பை நாடகம் ...	1	0	0
விசித்ர வினாவிடை ...	0	4	0
சுந்தராங்கி ...	0	6	0
மைனாவதிக்கதை ...	0	12	0
மனோரஞ்சனி ...	0	12	0
ஜெயங்கொண்ட சவுந்தரவல்லிக் கதை	1	0	0
இல்லற சார சங்கிரகம் ...	0	8	0
மஹாபாரதச் சுருக்கம் வசனம் (தின் காகிதம்) ...	2	0	0
ஸ்ரீராம கோடி ...	2	0	0
சகலகலாபூஷணம் ...	2	0	0
ஆசாரத்திரட்டு ...	0	4	0
பரிமளா (நாவல்) ...	0	10	0
துர்க்கபூஜை அல்லது கமலம் ...	0	8	0
சாவித்திரி சரிதை ...	0	1	0
முருகக்கடவுள் துதிமஞ்சரி ...	0	3	0
தேசிகப் பிரபந்த மூலம் ...	0	8	0
பூர்வாசாரியர்கள் அருளிச்செய்த கோயிலொழுகு ...	0	4	0
ஸ்ரீ மணவாள மாமுநிகள் உபதேச ரத்நமாலை வியாக்கியானம் ...	0	14	0
திருப்பாவை வியாக்கியானம் படங்களுடன் (கித்தான்) ...	0	12	0
டை மார்பில் பயிண்டு ...	0	8	0
திருக்கழுக்குன்றம் பக்ஷிதரிசன தேவரகசிய படம் ...	0	1	0
திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் படம் ...	0	0	6
நாமாவளிசதம்பம் 1ம் பாகம் படத்துடன்	0	4	0
டை கித்தான் பயிண்டு ...	0	5	0
இங்கிதமாலை உரை ..	0	8	0
சங்கரவிஜயம் வசனம் 2-படமும் ...	1	0	0

[டை புஸ்தகங்களுக்குத் தபாற்கூலி பிரத்தியேகம்.]

அ. மஹாதேவ செட்டி,
நெ. 288, இலிங்கசெட்டி வீதி,
முத்தியாலுப்பேட்டை, சென்னை.

Luxurious Writing **Fountain Pens.** *Fountain Pen Clips assorted Sizes from As. 2 to As. 12*

British and American Manufacture.

The 'WATERMAN'S IDEAL,' with Cone cap holder, fitted with No. 2 Gold Nib and spoon-feed - Very reliable writing instrument ... ... **Rs. 7-14**

The "IMPROVED FORTUNE." Made specially to our order by one of the best Makers of Fountain Pens, is fitted with a high class 14-Carat Gold Nib, and fitted with Silver Regulator. A very Reliable Writing Instrument, with box, filler, directions, &c , complete. Appreciated by one and all ... ... **Rs. 3-8**

Do. do. No. 3 cone Cap holder, with large Nib ... „ **4-8**

"JEWEL" Fountain pen, has a chased barrel is fitted with a large 14 Carat Gold Nib ... **Rs. 3-12**

The "CALTONIAN."—Same as above but with no spiral.—Has a chased barrel. Is fitted with 14-Carat Gold Pen and double feed,—with box, directions, &c., complete ... ... **Rs. 2-12**

"Supplies" Fountain Pen same as above with plain reservoir and fitted with 14-Carat Gold Nib **Rs. 2-8**

"FISCAL."—Fountain Pen—has a plain barrel and fitted with a 14-Carat Gold Nib and double feed—a Reliable Writing Instrument and is very popular ... ... **Rs. 2-0**

"RED GIANT STYLO."—Same as illustration—Fitted with a Spring Needle—works beautifully well— Tan color, ... **Rs. 2-12**

"WEE-MITE."—A Vest Pocket Fountain Pen, suitable for presentation, gives perfect satisfaction, Tan color ... ... **Rs. 2-4**

The "COUNTY" PEN—Fitted with screw section and duplex feed but has a Metal Nib ... **As. 12**

Spare Nibs for this pen, per dozen ... ... **As. 6**

We have also in stock, Swan Pens, Moore's Non-Leakable Fountain Pens, Efficient, Warren. All these are fitted with high class Gold Nibs—we have also very attractive and durable Stylographic Pens, Spare gold Nibs and parts.

We have 'Swan' Inks in Blue-Black, Blue, Green, Violet, Red—Each Bottle of ink has a thick Glass filler.

Leather pockets to hold single and double fountain pens As. 6 and 9 only.

Fountain Pen Inks—As. 8.

FIREFLY PENS

Have

TEN GOOD POINTS

- DURABILITY
- FLEXIBILITY
- Write in any position
- Glide over any paper
- Give character to writing
- Prevent writers' cramp
- Are Incorrodible
- Are better boxed
- Better advertised
- And better liked than any other pens in the world



FIREFLY PEN

ARE OBLIQUE, POINTED AND ARE SPECIALLY ADAPTED FOR

RAPID WRITING

* * * *

Per Box containing 12 doz., Rs. 2-8

Per dozen ... ... As. 4

POSTAGE EXTRA

The General Supplies Co.

Stationers, Etc., MYLAPORE, MADRAS.

நாட்டுப் புலவர்களின் துணிபுமேயாம். "அவர்களின் மனத்தின் பெருமையும், ஹ்ருதயத்தின் காம்பீர்யமும், எண்ணத்தின் உறுதியும், விஷயங்களை எடுத்துரைப்பதில் அவர்களின் பக்ஷபாதமின்மையும், அவர்களின் தெளிவான நடையும், இவைகள் ஒவ்வொன்றுமே நமக்கு அவர்களிடத்துள்ள கௌரவத்தை அதிகரிக்கச் செய்கின்றது,' என்று விசிஷ்டாத்வைதியான பாஷ்யாசாரியர் என்னும் ஓர் பண்டிதர் (Age of Sankaracharya) ''சங்கராசாரியர்காலம்'' என்னுமாங்கில கிரந்தத்தில் கூறியுள்ளார். விஷயங்களை யுள்ளவாறுணர்ந்து தத்துவாராய்ச்சி செய்வதிலும், பூர்வபக்ஷோபந்யாஸ பூர்வகமாய் நியாயப் பிரமாணங்களைக்கொண்டு ஸித்தாந்தஞ்செய்வதிலும், உள்ளத்திற் கருதியதை யாவருங் கேட்டமாத்திரத்தில் ஐயந்திரிபின்றி எளிதிலறிந்து கொள்ளும்படி தக்கமொழிகளைக்கொண்டு எடுத்துரைப்பதிலும் இவர்கள் இயற்றிய கிரந்தங்களுக்கு நிகரான கிரந்தத்தை ஸம்ஸ்கிருத பாஷையிலாயினும் மற்ற பாஷைகளிலாயினும் யாம் இதுவரை கண்டதில்லை. இம்மஹான்களுடைய அவதார விசேஷமும், இவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட அத்துவைததர்சநத்தின் மஹிமையும், இவர்கள் தாம் பூமியில் ஜீவித்திருந்த முப்பத்திரண்டு வயதிற்குள்ளாக இயற்றிய ஸர்வோத்தமமான கிரந்தங்களும், புரிந்த அத்புதமான கிருத்தியங்களும், இவைகள் ஒவ்வொன்றுமே இம்மஹாபுருஷர் ஸ்ரீபரமாத்மாவின் ஓர் விசேஷ அவதாரமென்பதைத் தெள்ளென விளக்கும்.

இத்தன்மைய அமாநுஷப் பிரஜ்ஞையோடு கூடிய ஸ்ரீமத் ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகளுடைய சரித்திரத்தைப்பற்றி அநேக கிரந்தங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஆசார்ய ஸ்வாமிகளுடைய முக்கிய சிஷ்யர்களான ஸ்ரீசித்ஸுகாசார்யர், ஸ்ரீமதாநந்தகிரி யதீந்திரர் இயற்றிய பிராசீந சங்கரவிஜயமும், பிருஹத்சங்கரவிஜயமுமே புராதநமாயும் பிராமாணிகமாயுமுள்ளவைகள். பிறகு ஸ்ரீவியாஸாசல கவியினால் இயற்றப்பட்ட வியாஸாசலீயமென்னும் சங்கராப்யுதயமும், ஸ்ரீகோவிந்தநாதரால் இயற்றப்பட்ட கேரளீய சங்கர விஜயமென்னும் ஆசார்ய சரித்திரமும், அநந்தாநந்தகிரியினால் இயற்றப்பட்ட குருவிஜயமும், ஸ்ரீஸதாசிவப்ரஹ்மேந்திரரால் இயற்றப்பட்ட குருரத்நமாலிகையும் மத்திபகாலத்தில் ஏற்பட்ட கிரந்தங்கள். ஸ்ரீ சித்விலாஸயதீந்திரர் இயற்றியதாக அச்சிடப்பட்ட சங்கரவிஜயவிலாஸமும், ஸ்ரீ மாதவாசாரியர் பெயரால் அபிநவகாளிதாஸர் இயற்றிய சங்கர திக்விஜய காவ்யமும், ஸ்ரீ சதாநந்த ஸ்வாமிகளால் இயற்றப்பட்ட சங்கரதிக்விஜயஸாரமும், அவைகளின் வியாக்யாநமாகிய ஸ்ரீ சங்கராசார்ய விஜயடிண்டிமமும், அத்வைதராஜ்யலக்ஷ்மியும், துந்துபியும், தற்காலத்து மடாபிமாநிகளால் இயற்றப்பட்ட கிரந்தங்களே. இவைகள் பெரும்பாலும் கலியுகம் 2593-ஹுத்தில் காலடியில் ஸ்ரீ சிவகுருவுக்கும் ஆர்யாம்பாளுக்கும் பிறந்து, பூமியில் முப்பத்திரண்டு வருஷமிருந்து துவாரகையிலும், பதரிகாச்ரமத்திலும், சிருங்ககிரியிலும், ஜகந்நாதத்திலும் காளிகாபீடம், ஜ்யோதிஷ்மதீபீடம், சாரதாபீடம், விமலாபீடம் என்னும் நான்கு பீடங்களை ஏற்படுத்தி அவற்றில் தமது சிஷ்யர்களாகிய பத்மபாதரையும், தோடகாசார்யரையும், விச்வரூபாசார்யரையும், ஹஸ்தாமலகரையும் ஸ்தாபித்து, ஸ்ரீ காஞ்சியில் தமக்காக ஸ்ரீ காமகோடி பீடத்தையும் ஸ்தாபித்து, ஸ்ரீ காஞ்சியில் ஸ்ரீ காமாக்ஷியம்மன் ஸந்நிதியில் கலியுகம் 2625-ம் வருஷத்தில் தேஹத்தியாகஞ்செய்த ஸ்ரீமதாதி சங்கராசார்யருடைய சரித்திரத்தையும், கலியுகம் 3889-ம் வருஷம் சிதம்பரத்தில் விச்வஜித் ஸோமபாஜிக்கும் விசிஷ்டாதேவிக்கும், பிதா இறந்து

இரண்டரை வருஷங்களுக்குப்பின் பிறந்து ஸ்ரீ காமகோடி பீடத்தில் 38-வது ஆசார்யராய் விளங்கி, சிவாநந்தலஹரி, ஸௌந்தர்யலஹரி முதலிய பற்பல அற்புதக் கிரந்தங்களையியற்றி ஸ்ரீமத் ஆதிசங்கராசார்யரைப்போல் திக்விஜயம் செய்து பட்டோத்படவாக்பதி, அபிநவகுப்தர், முதலிய வித்வான்களை ஜயித்து, ஷண்மத ஸ்தாபனஞ் செய்து, ஸ்ரீ காச்மீரத்தில் ஸர்வஜ்ஞபீடம் ஏறி, தத்தாத்திரேயர் குஹைக்குச் சென்று, தமது 52-வது வயதில் கலியுகம் 3941-ம் வருஷத்தில் கைலாயஞ் சென்று சீனர்களாலும், துருஷ்கர்களாலும் பாஹ்லீகர்களாலும் பரமாசார்யராக மதிக்கப்பட்டிருந்த அபிநவ சங்கராசார்ய சரித்திரத்தையும் கலந்து காலதேச வர்த்தமானங்களையுணராது எழுதப்பட்ட கிரந்தங்களே. இவைகளன்றியும் ஸ்ரீ காஞ்சீகுருபரம்பரை, ஸ்ரீ சிருங்கேரி குருபரம்பரை, ஸ்ரீ துவாரகா குருபரம்பரை, புண்ணியசுலோகமஞ்ஜரி, ஸுஷும்னை, சிவரஹஸ்யம், பத்மபுராணம், ஸ்காந்தபுராணம், விமர்சம், பதஞ்ஜலி விஜயம், ராஜதரங்கிணி முதலிய கிரந்தங்களிலும், ஜிநவிஜயம், மத்வவிஜயம், மணிமஞ்ஜரி முதலிய அந்நிய மதஸ்தர்களின் கிரந்தங்களிலும் இவ்வாதி சங்கராசார்யருடைய சரித்திரத்தையும் அபிநவ சங்கராசாரியருடைய சரித்திரத்தையுங் கலந்து. எழுதப்பட்ட ஓர் வகை சரித்திரமுமிருக்கின்றது.

ஆகலின் ஸ்ரீமத் ஆதிசங்கராசார்யருடைய திவ்விய சரித்திரத்தைப்பற்றி இங்கு விரிவாய் எழுதுவது அநாவசியமே. உலகமெங்கும் ஸ்ரீபகவான் வேதவ்யாஸர் இயற்றிய பிரஹ்மஸூத்திரத்தின் உண்மைப் பொருளை மறந்து சார்வாகம், ஜைநம், பௌத்தம் என்னும் வேதபாஹ்ய தர்சநங்களாலும், வைசேஷிகம், நியாயம், ஸாங்கியம், யோகம், மீமாம்ஸை முதலிய வைதிக தர்சநங்களாலும், பாசுபதம், பாஞ்சராத்திரம், சாக்தம் முதலிய பாஷண்ட மதங்களாலும், ஆரியர்களுக்குப் பரமநிதியாய் தொண்டு தொட்டு வழங்கிவந்த ஸநாதந தர்மம் பல மதங்களாக விரிந்து, நல்வேள்வியென்பதொழிந்து, நரகமென்பது தழைந்து, அதர்மம் மேலிட்டு, தர்மம் குலைந்து மிகவும் கோரமான கிருத்தியங்களெல்லாம் மதமென்கிற பெயரைக்கொண்டு நடத்தப்படவே, அக்காலத்தில் பிரஹ்மாத்துவைத ஞானத்தைப் பூமியெங்கும் பரவச்செய்து, துராசாரங்களையெல்லாம் தொலைத்து, பாஷண்ட மதங்களைப் பறக்கடிக்கச் செய்து, வைதிகமார்க்கத்தை நிலைநாட்டி, ஸநாதன தர்மத்தை ஸ்தாபித்துப் பிறவிக்கடலில் மூழ்கியிருக்கும் நம்போன்றவரை ஞானோபதேச நாவத்தைக் கொண்டு கரையேற்று நிமித்தம் கேரளதேசமென்னும் மலையாளநாட்டில், பூர்ணாநதியென்றும், சூர்ணீநதி யென்றும் வழங்கிவந்த ஆல்வாய் நதிக்கரையில் சசலகிராமமென்று வழங்கிவந்த காலடி க்ஷேத்திரத்தில் ஆத்திரேய கோத்திரத்தில் ஸ்ரீவித்யாதிராஜர் வம்சத்தில் மஹாபண்டிதராய் அவதரித்த ஸ்ரீசிவகுருவென்னும் பிராஹ்மணோத்தமருக்கு அவர்களுடைய தர்மபத்நியாகிய ஸ்ரீமதார்யாம்பாளின் பவித்திரமான கர்ப்பத்தில் வர்த்தமான கலியுகாப்தம் 2593ம் வருஷத்துக்குச்சரியான கி. மு. 509-ம் வருஷம், நந்தந ஸம்வத்ஸரம், உத்தராயணம், வைசாகமாஸம், சுக்லபக்ஷம், பஞ்சமிதிதி, புநர்வஸு நக்ஷத்திரம், தநுர்லக்கினம் கூடிய இந்தச் சுபதிநத்தில் ஸ்ரீமத் ஆதிசங்கராசாரிய ஸ்வாமிகள் அவதரித்தார் என்பது பிராசீந சங்கரவிஜயத்தாலும், பிருஹத் சங்கரவிஜயத்தாலும், குருரத்நமாலிகையாலும், புண்யச்லோகமஞ்சரியாலும், ஸுஷும்னையாலும், ஜிநவிஜயத்தாலும், ராஜதரங்கிணியாலும், கதாஸரித்ஸாகரத்தினாலும், பதஞ்ஜலி விஜயத்தாலும், விமர்ச கிரந்தத்தினாலும்,

OFFICE OF THE REGI... REGISTERED 7- APR 1910 MADRAS.

துவாரகாதி பீடங்களின் குரு பரம்பரைகளாலும், ஸ்ரீ ஸுதர்ம ஸார்வபௌம தாம்ரபத்திராநுசாஸநத்தினாலும், இன்னும் பற்பல பிரமாணங்களாலும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் யாவருக்கும் விளங்கும்.

ஆகவே இம்மஹாபுருஷருடைய பெயரையும் புகழையுங் கொண்டாடுவதற்கு இவர்களது ஜந்மபூமியாகிய காலடி க்ஷேத்திரத்தில் ஓர் ஆலயமும் மடமுமமைத்து அவர்களது பெருமைக்கேற்றப் பிரதிஷ்டையொன்று செய்யவேண்டுமென்று ஆரிய மதாபிமாநிகளின் மநதில் வெகுநாளாய் ஓர் எண்ணங் குடிகொண்டிருந்தது. ஆனால் இக்காலடி என்னும் க்ஷேத்திரம் எங்கேயிருக்கின்றது, எந்த ஸ்திதியில் இருக்கிறது என்பதுகூட பலருக்குந் தெரியாமலிருந்தது. ஆதியில் இக்காலடி க்ஷேத்திரம் ஓர் அநாதி ஸ்வயம்புலிங்கக்ஷேத்ரமாய் ஏற்பட்டிருந்ததென்றும், ராஜசேகரன் என்னும் ஓர் அரசனால் சூர்ணீ நதிக்கரையில் ஒரு பக்கத்தில் விருஷாத்ரிநாதருடைய ஆலயத்துடனும் மற்றொரு பக்கத்தில் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஆலயத்துடனும் ஒரு பெரிய பிராஹ்மணாக்கிரஹாரமாக அமைக்கப்பட்டிருந்ததென்றும், அதனுள் வேத வேதாங்க பாரங்கதர்களான அநேகம்பிராஹ்மணோத்தமர்கள் நமது ஆசார்ய ஸ்வாமிகளின் காலத்தில் வஸித்து வந்தார்களென்றும் நாம் புஸ்தகங்களில் படித்திருக்கின்றோமேயன்றி அத்தகைய பிராஹ்மணாக்ரஹாரம் இக்காலத்தில் ஒன்றும் காணப்படவில்லை. சுமார் பதினைந்து வருஷங்களுக்குமுன் இக்காலடிஎன்னும் ஊரைக்கவனித்தவருங்கூடஇல்லை. முன் பிரபல அக்கிரஹாரமாயிருந்த இடம் சில மாசங்களுக்குமுன்வரையில் பெருங்காடாயிருந்ததாகத் தெரியவருகின்றது. ஏதோ தெய்வாநுகூலத்தினால் ஸ்ரீமதாசார்யஸ்வாமிகள் பால்யத்தில் திருவிளையாடல்கள் ஆடின கிருஹமும், பின்பு தமது தாயாராகிய ஆர்யாம்பாளைச் சுவாமிகள் தஹநஞ்செய்த ஸ்தலமுமாகிய ஓர் இடம் மாத்திரம் தொண்டுதொட்டு பரம்பரையாய்க் குறிப்பிக்கப்பட்டு வந்தது. அந்தவிடத்தையுங்கூட, ஊரை ஆக்கிரமித்துக்கொண்டதுபோல, துலுக்கர், கிருஸ்துவர் முதலிய அந்நிய மதஸ்தர்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கியதை கேள்வியுற்று என்ன செய்வோமென்று சில ஆரியமதாபிமாநிகள் துயரமுற்றிருக்குங்கால் ஜகதீசனது அம்சம்போல் அவதரித்திருந்த பிரஹ்மவித்தியாபத்திராதிபராய் பலகாலம் விளங்கி வந்த எமதாசிரியர் பிரஹ்மஸ்ரீ பாஸமய பஞ்சாநந பாஞ்ச ஜந்ய பண்டித ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் சில கனவான்களுடன் இக்காலடி க்ஷேத்திரத்திற்குச் சென்று, ஸ்ரீமதாதி சங்கராசார்ய ஸ்வாமிகளுடைய கிருஹமும் ஸ்ரீமதார்யாம்பாளுடைய தஹந ஸ்தலமுமாகிய அந்த விடத்தை மாத்திரம் வெகு பிரயாசைப்பட்டு, அந்நிய மதஸ்தர்களின் கையினின்றும் மீட்டி, அவ்விடத்தில் ஒரு குடீரமுமேற்படுத்தி சென்ற விகாரி வருஷம் முதல் ஆசார்ய ஸ்வாமிகளுடைய பிறந்த நாளாகிய வைசாக சுத்த பஞ்சமியில், வித்வஜ்ஜநங்களைக்கூட்டி, ஆசார்யருடைய சரித்திர விஷயமாயும், அவர்கள் ஸ்தாபித்த அத்துவைத மதவிஷயமாயும், பற்பல உபந்நியாஸங்களைச்செய்து ஆசார்ய ஜயந்தி மஹோத்ஸவத்தை விமர்சையுடன் தாம் உயிருடனிருந்தவளவும் நடத்தி வந்தார்கள். அச்சமயங்களில் ஸ்ரீமத் ஆதிசங்கராசார்ய ஸ்வாமிகளுக்கு அவ்விடத்தில் ஓர் ஆலயமும் மடமும் பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்கிற அவருடைய பிரார்த்தனையைக் கேட்டிருப்பவர் அநேகர் உளர். அக்காலடியில் ஒரு பிராஹ்மணர்கூட வஸிக்காமல் மிலேச்ச பூயிஷ்டமாய் இருந்ததைப்பற்றி அவர் வருந்தியதையும் அநேகர் கேள்வியுற்றிருக்கின்றனர்.

அந்தோ! இக்காலடி க்ஷேத்திரத்தின் மஹி

மையையும், ஜீவநதியாய் விளங்கும் துர்ணீநதிக்கரையில் அது அமைக்கப்பட்டிருக்குந் தன்மையையும், பிராஹ்மணுக்கிரஹாரத்திற்கே உரித்தான அதனது ஸந்நிவேசத்தையும், அங்கு அமரிக்கையுடன் பிரஸந்நமாய் வளைந்து பிரவஹிக்கின்ற துர்ணீநதியின் அழகையும், அதன் கரைகளிலுள்ள மரச்சோலைகளின் வனப்பையும் வர்ணிக்க யாவரால் ஆகும். இவ்வதிசயங்களை யெல்லாம் கண்ணாரக்கண்டே ஸ்ரீ ஸ்ரீநிவாஸசாஸ்திரியார் அவர்கள் சென்ற விகாரிவருஷத்தில் ஸ்ரீமதாசார்ய ஜயந்தி மஹோத்ஸவ ஸமயத்தில் "ஸ்ரீஜகத்குரு தாமஸேவாசதகம்" என்னும் ஓர் அழகிய பிரபந்தத்தை ஸ்ரீமதாசார்ய ஸ்வாமிகளின் ஜநநபூமியாகிய இக்காலடி க்ஷேத்திரத்தின் பெருமையைக் குறித்து எழுதியிருக்கின்றனர். ஆனால் சாஸ்திரியார் அவர்கள் தமது கோரிக்கை முடிவுபெறுமலே திடீரென்று விண்ணுலகம் சென்றதற்கு யாம் வருந்துகின்றோம். ஆயினும் பரமகருணாநிதியாகிய ஸ்ரீபகவானுடைய கிருபையினாலும், ஸ்ரீமதாதிசங்கராசார்ய சுவாமிகளின் பரம்பரையைச் சேர்ந்த ஸ்ரீசிருங்ககிரி மடத்தைத் தற்காலம் அலங்கரிக்கும் ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகேத்யாதிபிருதாங்கித ஸ்ரீ சாரதா பீடாதிப ஸ்ரீசங்கர நவாவதார ஸ்ரீ ஜகத்குரு ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிஹ்ம பாரதீ ஸ்வாமிகளின் அநுக்கிரஹத்தாலும், நமது தேசத்தவர் செய்த பாக்கிய விசேஷத்தினாலும், அச்சாஸ்திரியாரின் கோரிக்கை இப்பொழுது நிறைவேறியதைப்பற்றி யாம் மிகவும் ஸந்தோஷத்துடன் பரமாத்மாவின் பாதாரவிந்தங்களுக்கு வந்தனம் புரிகின்றனம். ஸ்ரீ சிருங்ககிரி ஜகத்குரு ஸ்வாமிகள் தமது தேஹச்சிரமத்தைப் பாராமல், பெருமையைப் பாராட்டாமல் தக்ஷிணதேசத்தில் இதற்கென பலவிடங்களில் யாத்திரையாய் விஜயஞ் செய்து மைசூர் ரிடையர்டு ஹைகோர்ட்டு ஜட்ஜி திவான்பஹதூர் ம-ள-ள-ஸ்ரீ ஏ. ராமசந்திரய்யரவர்களுடைய விசேஷ ஸஹாயத்தினாலும் இன்னும் பற்பல மஹாராஜாக்களுடைய உதவியினாலும், ஜமீன்தாரர்களுடைய உதவியினாலும், மற்றுமுள்ள கனவான்களுடைய ஆதரவையினாலும், விசேஷ திரவியம் செலவழித்து ஸ்ரீகாலடி க்ஷேத்திரத்தில் ஸ்ரீமதாசார்ய ஸ்வாமிகளுக்கு ஓர் ஆலயமும், அவர்கள் பூஜித்துவந்த ஸ்ரீசாரதாம்பாளுக்கு மற்றொரு ஆலயமும், தமக்கு ஒருமடமும் நிர்மாணமாய் முடிவாகிவந்ததை யாம் முன்னரே கேள்வியுற்று ஆநந்தஸாகரத்தில் முழுகியிருந்தோம். அப்படியே சென்ற 1910ஆ பிப்ரவரிமீ 21உக்குச் சரியான நிகழும் ஸௌம்யஆ மாசிமீ 10உ மஹா சுத்தத்திரயோதசியாகிய திங்கட்கிழமை தினம் பகல் பன்னிரண்டு மணிக்கு ஸ்ரீ மதாசார்ய ஸ்வாமிகளுடைய மூர்த்தியும், ஸ்ரீ சாரதாம்பாளுடைய மூர்த்தியும் அவ்வாலயங்களில் ஸ்ரீசிருங்ககிரி ஜகத்குரு ஸ்வாமிகளால் வைதிக விதானத்துடன் பிரதிஷ்டை செய்யப்பட்டு, அவ்வாலயங்களுக்கு மஹா கும்பாபிஷேகமும் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டதைக் கண்ணாரக்கண்டு களிப்புற்றனம். இக்கும்பாபிஷேக மஹோத்ஸவத்தின் பெருமையை யெடுத்துரைக்க ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேஷனும் வல்லவரல்லர். இத்தகைய மஹோத்ஸவத்தை யாம் இதுவரை கண்டதுமில்லை, இனிக் காணப்போகிறதுமில்லை. ஆயினும் யாம் நேரில் கண்டவற்றுள் சில விஷயங்களை மாத்திரம் அடுத்த ஸஞ்சிகையில் எடுத்துரைப்பாம்.

டி. எஸ். நாராயண சாஸ்திரி, பி.ஏ., பி.எல்.

"தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்"

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்"

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்."

நாம் முன்னுக்கு வருவதெப்படி

THE SECRET OF SUCCESS

உனக்குச் சம்பளம் ஆறு ரூபாயாயிருந்தாலும் சரி, ஆயிரமாயிருந்தாலும் சரி, உனக்குக் கிட்டும் பொருள் நீ சம்பாதிக்கும் பொருளாயிருந்தாலும் சரி, அல்லது மற்றவர்கள் தானங் கொடுத்த பொருளாயினும் சரி, நீ மட்டும் முன்னுக்குவர மனமுள்ளவனாகவிருந்தால் அவசியம் மேற்கூறியபடி பாதியோ அல்லது மூன்றிலொன்றோ மிகுத்தே தீரவேண்டும். நமது நாட்டில் மட்டும் இக்குணம் இல்லவேயில்லை. எத்தனையோ பெயர்கள் தங்களுக்குத் தகப்பனார் கொடுத்த லட்சக்கணக்கான ஆஸ்திகளைத் தலை தெரியாமல் மைவிழியார் மனைகளிலும் மற்ற விதமாயும் ஒரே வருஷத்தில் அழித்துவிட்டு எல்லாராலும் இகழப்பட்டு முச்சந்தியில் நிற்கின்றார்கள். ஆனால் இக்குணம் அமெரிக்கா தேசத்தில் வெகு சாஸ்திரோக்தமாய் விளங்கி வருகின்றது. அவ்விடத்தில் தான் ஸ்ரீதேவியும் கூத்தாடுகிறாள்.

பணவிஷயத்திலும் "காலம்" என்பதின் கீழ் நாம் சொன்னதுபோல் ஏற்பாடுகள் சட்டதிட்டங்கள் என்பது செலவு விஷயத்தில்வேண்டும். "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" என்றபடி எந்தச்செலவுக்கும் நாம் கணக்கு வைக்கவேவேண்டும். சிறுவர்களாய் சிறுபள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டு நமது தந்தை முதலானவர்கள் நமக்கனுப்பும் பணத்தைச் செலவிடும் பொழுதும், கலாசாலைகளில் பெரிய படிப்பு படிக்கும்பொழுது செலவிடும்பொழுதும், நமக்குத் தானமாகக் கிட்டியபொருளை நாம் செலவிடும் பொழுதும், நாம் ஒவ்வொரு சிறுகாசு செலவிட்டதற்குக்கூடத் தப்பாமல் கணக்கு வைக்கவேண்டும். அப்படி நாம் மட்டும் செய்வோமேயானால் நாம் எந்த விஷயத்தில் அதிகமாகச் செலவிட்டோம், எவ்வாறு சிறு செலவிலிருந்து சில விஷயங்களில் நமக்கு அதிகச் செலவு ஸம்பவித்தது என்ற ஸங்கதிகளைப்பற்றி நாம் ஆலோசித்துப் பார்க்க வகை ஏற்படும். நாம் புத்திசாலிகளாயிருந்தால் எந்த விஷயத்தில் நாம் நமது செலவைக் குறைக்கலாம், எதில் அவசியம் அதிகம் பண்ணியே தீரவேண்டும் என்பது நமக்கு நன்கு விளங்கும்.

ஒவ்வொருவனும் தன் விஷயமாய் எவ்வளவு மட்டும் அத்தியாவசியமாய்ச் செலவு செய்ய வேண்டும் என்பதற்கு ஒரு வரம்பு ஏற்படுத்துவது ஒருபொழுதும் முடியாது. ஏனெனில், ஒவ்வொருவனுடைய செலவு வெவ்வேறு மாதிரி, வெவ்வேறு போக்காக விருக்கும்; ஆனால் செலவு விஷயமாய் இரண்டொரு சித்தாந்தங்கள் நாம் திட்டமாய்ச் சொல்லலாம். உனக்குச் சம்பளம் வரும் முன்னதாகவே வரவுக்குத் தக்க செலவு: இவ்வளவுமிகுக்கவேண்டும்; இவ்வளவு செலவிடவேண்டும் என்ற கணக்கை முதலிலேயே ஏற்படுத்திக்கொண்டு அக்கணக்குப்படி நடக்கவேண்டும். இது முதல் சித்தாந்தம்.

"உபயோகமற்றவைகளில் நீ எவ்வளவு செலவிடுவாயோ அதைப்போல் உபயோகமுள்ளவைகளில் இரட்டிப்பு மடங்கு செலவிடவேண்டும்." அவ்வாறு செலவிடுவது சொற்பமாயினும், கடைசியில் கணக்குப் பார்க்கும் பொழுது ஒரு ஸ்திரமான ஆஸ்தியாய்விடும். ஓர் உதாரணம்! நமக்கு ஒரு குரு இருந்தார். அவருக்கு 8 ரூபா பென்ஷன். அவர் மாதந்தோறும் ஒரு ரூபா வர்த்தமான பத்திரிகைகளுக்கும் இரண்டு ரூபா புஸ்தகங்களுக்கும் செலவிடுவார். 20, 22-வருஷம் பென்ஷன் வாங்கினார். கடைசியில் அவர் 500 ரூபா

விலையுள்ள கோசம் தனக்கு மிகுந்திருந்ததைக் கண்டு ஸ்திரமாய் நமக்குக் கையில் அழியாமல் நிற்கும் அழகான புஸ்தகங்களில் நான் மாதம் ஒன்றுக்கு இரண்டு ரூபா தான் செலவிட்டேன் என்றாலும் ஐந்நூறு ரூபா விலையுள்ள கோசம் என் குழந்தைகளுக்கு ஆஸ்தியாக்கிவிட்டேன். அதாவது மாதம் இரண்டு ரூபா மிகுத்து ஐந்நூறு ரூபா கோசம் சேர்ந்ததைக் கண்டு களியுங்கள்.

எவனொருவன் கண்டபடி கணக்கில்லாமல் வரம்பின்றித் தன் பொருளைத் தோன்றியபடி எல்லாம் செலவிடுகின்றானோ அவன் வருஷக் கடைசியில் கணக்குப்பார்த்து ஐயோ! இத்தனைப் பணம் எங்குப் போயிற்று! எவ்வாறாயிற்று! என்று பரிதவிப்பான்.

நாம் ஒப்புக்கொள்ளும் காரியத்தைச் சரிவர முடித்து அதில் கீர்த்தியும், புகழும், வெற்றியும், பதமும் பெறவேண்டும் என்பது நமக்குள் ஒவ்வொருவனுக்கும் இருக்கவேண்டிய நியாயமான ஆசையல்லவா? அப்படியிருக்கும்பொழுது பலர் தாங்கள் மேற்போட்டுக்கொண்டு செய்ய எத்தனிக்கும் கருமங்களில் வெற்றியின்றித் தோற்பானேன்? அதற்கு முக்கிய காரணம் அக்கருமங்களைச் செய்யப் புகும்பொழுது நடுவில் உண்டாகும் சங்கடங்களை வெல்ல அவர்கள் வகையறியாமலிருப்பதேயாம். அச்சங்கடங்கள் யாவை? அவைகளை வெல்ல ஏன் நமக்கு வகை தெரியாமற் போகவேண்டும் என்ற கேள்விகள் உண்டாகலாம். வகைதெரியாமற் போவதற்கு முக்கியமான காரணம் அவ்வித சங்கடங்கள் உதித்தவுடன் நாம் அவைகளைத் தீரத்துடனும் தைரியத்துடனும் கைப்பற்றி அவைகளை அப்பொழுதே வெல்லாமல் மேலெழுந்தவாரியாக அவைகளைச் சங்கடங்களாகவே காட்டிக்கொள்ளாமல் கையாண்டு மறைத்துவைத்து ஒளித்து அப்பொழுது அதைவிட்டு நீங்கி எவ்வண்ணமாவது ஒருவிதம் காரியத்தை முடித்துவிட முயலுவதேயாம். கலெக்டர் நாளைக்கு கஜானா சோதிக்க வருகிறார் என்ற சமாசாரம் தெரிந்தவுடன் ஒரு சாது சராப்பு பணங்களை எண்ணி கணக்குப்பார்த்துப் பைகளைக் கட்டிவைக்கும்பொழுது இரண்டு ரூபா குறையவே அந்த இரண்டு ரூபாயையும் தன் கையிலிருந்துபோட்டுப் பைகளைக்கட்டி அழகாய்வைத்து விட்டார். இதா நியாயம்? எப்படிக்குறைந்தது? எண்ணினது பிசகா என்னவென்று இவர் மறுபடியும் சோம்பலின்றி எண்ணவேண்டாமா? சங்கடத்தை நியாயமான வழியாய் வெல்லாமல் மறைப்பதில் என்ன லாபம்? இந்த ஸராப் வெகு யோக்கியர்; அப்படியிருந்தும் மறுநாள் கலெக்டர் வந்து சோதிக்கும் பொழுது இருக்கவேண்டிய பணத்துக்கு மேல் இரண்டு ரூபா அதிகமாயிருந்ததைக் கண்டு அந்த ஸராபுக்கு வேலை தெரியாதென்று தண்டிக்கவே தண்டித்தார். ஆகையால் சங்கடங்களை எளிதில் ஒளித்து வெல்ல நாம் ஒருபொழுதும் பிரயத்தனப்படவே கூடாது. நீ செய்யும் தொழிலில் எப்பொழுதாவது ஒரு கஷ்டம் வந்தால் அதை உடனே கைப்பற்றி எப்படி இந்தக் கஷ்டம் வந்தது, எப்படிச் செய்தாலிதை வெல்லலாம், எது நியாயமான வழி, எது நியாயமான யுக்தி என்று நீ நன்றாக யோசிக்கவேண்டும். நீ பள்ளியில் படிக்கும்பொழுது ஒரு கணக்கு உனக்கு உன் உபாத்தியாயர் கொடுக்கிறார், அல்லது ஒரு சிறு உபந்நியாஸம் எழுதச் சொல்லுகிறார். அவ்வேளைகளில் உனக்குச் சரியானவழி தெரியாது. அடுத்தபையன் சொற்பம் உன்னைவிட சமர்த்தனாகவிருப்பான். அவன் வழியைப் பார்த்து அப்படியே நீ எழுதிவிடலாம். அல்லது திருட்டுத்தனமாக அக்கணக்கும் உபந்நியாசமும் வேறு புஸ்தகங்களிலிருப்பதாக நீ கேள்விப்பட்டு அவைகளிலிருந்து எடுத்து எழுதிக்கொள்ளலாம். நீ உத்தியோகத்திலிருக்கும்பொழுது நீ எழுதும் நிருபங்களில் ஒரு கஷ்டமான சங்கடம் ஏற்படலாம்; அவ்விடம் என்னமாய் நிருபம் எழுதுகிறது என்பதை உனக்கு அடுத்த உத்தியோகஸ்தனைக் கேட்டால் சொல்லிவிடுவான். அரைக்கால் நாழிகைகூடப் பிடிக்காது. உனக்குச் சிரமமே இருக்காது. ஆயினும் உண்மை

யாய் உழைத்து நீ அறிவதிலும், மற்றொருவர் சொல்லுவதில் கண்மூடியாக நம்பி நடத்தலிலும் வேறுபாடில்லையா? தன் உணர்ச்சி இருந்தால் பிழையுண்டாகும் இடமெல்லாம் நன்கு அறியலாம். ஆதலால் தன்னைத்தானறிந்து வரவுக்குத்தகுந்த செலவு செய்து முன்னும் பின்னும் யோசித்து பொருள் சேகரித்து வாழ்வதாலன்றி நாம் முன்னுக்கு வருவதெப்படி?

பண்டித நடேச சாஸ்திரி.

பாபமில்லாத தொழில் முயற்சியால் பணம் ஸம்பாதித்தல்.—பணம் ஸம்பாதிப்பதற்கு உலகத்தில் அநேக தொழில்கள் இருந்தாலும், அவற்றுள் எது பாபமில்லாததாயும் ஒருவருக்கும் வருத்தத்தை உண்டாக்காததாயும் இருக்கிறதோ அந்தத் தொழிலையே நாம் கைப்பற்றவேண்டும். பாபத்தை உண்டுபண்ணும் களவு சூது மோசம் முதலானவைகளால் நமக்குப் பணம் சீக்கிரத்தில் அதிகமாகப் பெருகினாலும் அந்தத் திரவியம் விரைவில் நம்மைவிட்டு நீங்கிப்போகும். நாம் செய்த அத்தீத் தொழில்களால் உண்டான பாபமாத்திரம் நம்மைவிட்டு நீங்காது அதைக்குறித்து கடவுளால் தண்டிக்கப்படுவோம். உலகத்தில் அநேகர் தாங்களிருக்கிற மேலான அதிகாரத்தினால் ஏழைகளை வருத்திப் பணத்தைப் பறிக்கிறார்கள். அதனால அவர்கள் ஸௌக்யம் அடைகிறதும் அதை அனுபவிக்கும் அவர்கள் ஸந்ததி விருத்தியடைகிறதும் இல்லை. ஹிம்ஸை செய்து பொருள் ஸம்பாதிப்பவர்கள் உயிருடன் இருக்கிறவரைக்கும், தாங்கள் செய்யுங் கொடுமை எவ்விஷயத்தில் வெளியாகுமோ, அதனால் தமக்கு என்ன தண்டனை ஸம்பவிக்குமோ என்று இரவும் பகலும் மனவருத்தம் கொண்டிருப்பதுமன்றி, அந்தப் பொருளையாரிடத்திலாவது கொடுத்துவைக்கத் துணிகிறார்கள். வாங்கிவைத்துக் கொண்டவர்கள் அதை அபஹரித்துக்கொண்டு தங்களிடத்தில் கொடுத்தவர்களையாவது அல்லது அவர்களுக்குப் பின்பு அவர்கள் வம்சஸ்தர்களையாவது வஞ்சிக்கிறார்கள். எவர்களும் வருத்தமுறும்படி ஸம்பாதிக்காமல் நாம் சரீரப்ரயாசைப்பட்டுப் பொருள் ஸம்பாதித்தால், அதை நாம் ஒருவருக்கும் அஞ்சாமல் அனுபவிக்கலாம். அதை அனுபவிக்கும் நமது வம்சஸ்தர்களும் நன்றாக விருத்தியடைவார்கள் அந்தப் பொருளை ஒருவரும் அபஹரிக்கமாட்டார்கள். ஒருவேளை அபஹரித்தாலும் அது நமது ஸொந்த முயற்சியினால் ஸம்பாதிக்கப்பட்டதாகையால், நியாயஸ்தலத்தில் பிராது முதலானதுகளும் செய்து அதைப் பெற்றுக்கொள்ளாமல் இருக்கமாட்டோம்.

ஆசாபாசம்

FETTERS OF FAMILY LIFE

புண்ணியம் தழைக்கும் இப்பரத கண்டத்தில் வட இந்தியாவில் ஒரு கிராமத்தில் முன்னொரு காலத்தில் ஒருவன் அறுசுவை அமைக்கப்பெற்ற தின்பண்டங்களைச்செய்து விற்று ஜீவனம் செய்து வந்தான். அவன் வீடும், வீட்டுக்கடுத்த பெயர்பெற்ற கடையும், கிராமத்திற்குச் சற்று விலகியிருந்தன. கடையில் வரும் லாபத்தில் தன் வீட்டுச் செலவுக்குவேண்டியதை எடுத்துக்கொண்டு மீதியை ஒருவரும் அறியாத விதம் தினம் தினம் சேகரித்து வந்தான். அவன் குடும்பம், அவன் ஸம்ஸாரமும் இரண்டு சிறிய பிள்ளைகளும்தான்.

ஒருநாள் பகலில் அவன் கடையில் உட்கார்ந்து கொண்டிருந்தபொழுது, ஒரு கிழிந்த ஆடையைத் தரித்தவரும், நல்ல தேஜஸுடையவருமான ஒரு ஸந்நியாஸி வெயிலினின்றும் தங்கி இளைப்பாறுவதற்காக அங்கே வந்தார். சிறிது சிரமம் தீர்ந்ததற்பின் தன் தாகத்தைத் தணிப்பதற்கு நல்ல ஜலம் கேட்க, அந்தக் கடைக்காரன் ஒரு பாத்திரத்தில் குளிர்ந்த நீரும், கொஞ்சம் தித்திப்பான பக்ஷணமும் கொடுத்தான். பசியும் தாகமும் அடங்கினவுடன் அந்தச் சாதுவானவர் அவனைப் பார்த்து தன்னுடைய ஆடை மிகவும் கிழிந்திருப்பதினால் கொசுவின் உபத்திரவத்தினால் தனக்கு இரவில் தூக்கமேயில்லையென்று சொல்லி, அதைச் செம்மையாக்கும்படி அவனைக் கேட்டுக்கொண்டார். நல்ல மனிதனான அந்த வியாபாரி மூன்று மணிநேரம் அவ்வாடையோடு பாடுபட்டுக் கடைசியில் அதைத் தரிக்கத்தக்கதாகச் செய்துகொடுத்தான். அன்றிரவு அவர் நன்றாய்த் தூங்கினார்.

மறுநாட் காலையில் அந்த மஹான் அவன் கடையிலிருந்தபோது அவன் எதிர்முன் வந்தார். இச்சமயத்தில் அவனிடத்தில் ஒன்றும் யாசிக்கவில்லை. ஆனால் அவன் தனக்கு முன்பு செய்த நன்றிக்குப் பிரதிசெய்ய நினைத்து, துறவியாதலின் அவனுக்குத் திரவியத்தைக் கொடுக்க மனமில்லாமல் அதனினும் அதிக மேலான இன்பத்தைக் கொடுக்க கருதினார் மஹா தத்துவங்களை உணர்ந்த ஞானி ஆனபடியால்

அவரால் ஆகாதது என்னவுண்டு? இவரைப்போன்ற ஸாதுக்கள் இவ்வுலகத்தில் பற்றற்றவராயிருந்தும், மாயையினால் மூடப்பட்ட ஜனங்களுக்கு உதவி புரிவதற்கும், நன்மார்க்கத்தைப் போதிப்பதற்கும் சஞ்சரிக்கிறார்கள். இந்த வியாபாரிக்கு உலகவாழ்க்கையில் வாஞ்சை அதிகரித்திருப்பதையும் கடவுளை வந்தனஞ்செய்து மேன்மையான பதவியை அடையவேண்டுமென்கிற எண்ணம் அவனுக்குச் சிறிதும் இல்லாதிருப்பதையும் கண்டார். அவர் அவன்மேல் கருணைகூர்ந்து அளவற்ற பதத்தைக்கொடுக்கும் மோக்ஷலோகத்திற்கு வருவாயா வென்று அவனைக் கேட்க அவன் சிறிதுநேரம், தயங்கி,ஆலோசித்து "ஸ்வாமி, யார்தான் அந்தவிடத்திற்குப் போக விரும்பார். மனிதர்கள் இவ்வுலகத்தில் செல்வத்தையும், பதவியையும் துறந்து இந்த ஜன்மம் நீங்கியபின் அந்த உயர்ந்த பதவியை அடைவதற்காகவே பல்லாண்டு வனத்தில் தபஸிகளாய்த் திரிகிறார்கள் அல்லவா? ஹே! க்ருபாகடாட்சமுள்ள முனி சிரேஷ்டரே! உம்முடைய உபகாரம் ஈடற்றதாயிருக்கிறது. இதோ பாருங்கள் என்னுடைய இரண்டு சிறிய பிள்ளைகளை. அவர்களுக்கு இங்கே என்னைத்தவிர கதி ஒருவருமில்லை. இப்பொழுதே இவர்களை அநாதையாய் விட்டுவிட்டுத் தங்களுடன்வருவேனானால் யார் இவர்களை ரக்ஷிப்பார். ஆகையால், தாங்கள் தயவுசெய்து 8-வருஷம் கழித்து வந்தால் தங்களுடன் வருவேன்: அதற்குள் இவர்களுக்குப் பொருள் தேட திறமை வந்துவிடும். இதுவே எனக்கு ஒரு பேருபகாரம்" என்றான். இதைக் கேட்டவுடன் ஸாது, அவனுக்குப் பிள்ளைகளினிடத்தில் பற்று அதிகமாயிருப்பதையே கண்டாரே அல்லது, கடவுளிடத்தாசையாவது மோக்ஷசாம்ராஜ்யத்தை அடையவேண்டுமென்கிற விருப்பத்தையாவது அவனிடத்தில் சிறிதும் கண்டாரில்லை. ஆனாலும், அவன் விருப்பத்திற்கிசைய தான் 8-வருஷம் கழிந்தபின் வருவதாகச் சொன்னார்.

குறித்தகாலத்தில் அந்த ஸன்னியாசி திரும்பிவந்து அவனைப் பார்த்ததில்,அந்தக் கடைக்காரன் மிக விசனத்துடன் தனக்கு இடையில் நேரிட்ட கஷ்டங்களையும், தன் பிள்ளைகளின் துர் நடத்தையையும், தான் அருமையாகத் தேடிவைத்த பொருள்களை அவர்கள் துன்மார்க்கத்தில் செலவழித்ததையும் சொல்லித் தன் பிள்ளைகளை நல்ல வழியில் கொண்டு வர வேறொருமார்க்கம் தோன்றாமையால் அவர்களுக்குக் கல்லியாணம் செய்தால் குடும்ப பாரம் உறைத்து நல்லவழியில் திரும்புவார்கள் ஆகையால் தான் அவர்களுக்கு விவாகம் செய்யப்போவதாகச் சொல்லி இந்தச் சுபகாரியத்தை நிறைவேற்ற பணம் அவசியம் வேண்டியதால் இன்னும் 5-வருஷம் கெடு கொடுக்கவேண்டுமென்று மன்றாடி கேட்டுக்கொண்டான்.

இதையெல்லாம் பொறுத்துக்கேட்ட அந்த முனி சிரேஷ்டர் இவனுக்கு நாளுக்குநாள் குடும்பத்தில் பற்று அதிகருத்திருப்பதைக் கண்டு, அவன்மீது இரக்கங்கொண்டு அவனிஷ்டப்படி திரும்பி வருவதாகச் சொன்னார்.

ஐந்து வருஷங்களும் சீக்கிரம் சென்றன. சொன்ன கெடுவில் மஹானும் அந்தக் கடைமுன் தோன்றினார். அந்தக் கடையோ ஒரு குடிசையாய் மாறி அதில் அவனுடைய மூத்த பையன் சொல்ப விலையுள்ள பண்டங்களை ஏழைகளுக்கு விற்பதைப் பார்த்தார். அவனை நெருங்கி,அவனுடைய தகப்பனார் எங்கேயென்று விசாரித்ததில் அந்தப் பையன் "சுவாமி! எங்கள் பிதா எங்களைத் துக்கசாகரத்தில் தள்ளிவிட்டுக் காலஞ்சென்று நாலுவருஷங்களாயின. நாங்கள் வறுமையால் வாடுகிறோம். முன்னிருந்த நேர்த்தியான கடை இப்பொழுதில்லை. நானே சில்லரைச் சாமான்களை விற்கிறேன். அதோபாருங்கள் என்னுடைய தம்பியை. அவன் உழுது கொண்டிருக்கிறான்" என்றான். இதை யெல்லாம் மௌனமாய்க் கேட்ட அத்துறவி முக்காலமுணர்ந்தவராகையால் அந்த மனிதன் தன் இரண்டாவது குமாரனால் வயலில் ஓட்டப்பட்ட எருதுகளில் ஒன்றாய்ப் பிறந்திருக்கிறான் என்பதை அறிந்து, எப்பொழுது கலப்பையினின்றும் எருதுகளை விடுவிப்பார்கள் என்று நன்பகல் வரைக்கும் காத்திருந்து, அண்டையில் ஒருவருமில்லாத தருணத்தில் மாடுகள் கட்டியிருக்கும் கொட்டகைக்குச் சென்று, தன் கையிலுள்ள கலசத்திலிருந்து சிறிது மந்திரநீர்த்தத்தை அம்மாட்டின் மீது தெளிக்கவே, அதற்குப் பூர்வஞானம் உதித்தது. மஹானுக்கும் தனக்கும் ஏற்பட்ட நிபந்தனையை அம்மாடு நினைத்து, தலைகுனிந்து,"ஸ்வாமி! நீர் குறித்ததினத்தில் வந்தீர். தங்களுக்கு மறைவாயிருக்கும் பொருள் ஒன்றுமில்லை. எப்பக்கமும் வறுமை சூழ்ந்திருப்பதை அறியலாம். நான் பாடுபட்டுத் தேடிவைத்த பொருள் அனைத்தையும் இம்மூடர்களாகிய என் பிள்ளைகள் வாரிச் செலவிட்டார்கள். இன்னும் இரண்டொரு வருஷத்தில் இவர்கள் சாப்பிடுவதற்கு வழியில்லாமல் தடுமாறுவார்களென்பதில் ஸந்தேகமில்லை. சுவாமி இச்சமயத்தில் இவர்கள் பொருட்டுச் சிலகாலம் உழுவதற்குதவி ஆபத்தினின்றும் இவர்களை நீக்க நினைக்கிறேன்" என்றது.

இதைக்கேட்ட அந்த ஸன்னியாஸி,இவனுக்கு எவ்வளவோ போதித்தும் பற்று அதிகமாயிருப்பதையும், அதை விட்டுவிட மனம் திடமாயில்லாததையும் தெரிந்து அவன்மீது கருணைகூர்ந்து சிலவருஷம் சென்றபின் வருவதாகச் சொன்னார்.

மறுபடியும் அக்கடையைத் தேடினார். கடையை அவர்காணாமல் வீட்டிற் போய்த்தேடவும் அங்குப் பசியால் இளைத்திருந்த ஒருநாய் அவரை எதிர்த்தது. உடனே வீட்டிற்குள்ளிருந்த ஜனங்களைக் கூப்பிடவே பெரியபிள்ளை வெளியில் வந்தான். குடும்பத்தின் யோக க்ஷேமத்தையும், அம்மாட்டைப்பற்றியும் விசாரித்ததில், அந்தப்பிள்ளை

"ஸ்வாமி! மாடு இறந்து வருஷம் ஒன்றாயிற்று. ஐயோ! எவ்வளவு நல்ல பிராணி. புஜிக்கும் ஆஹாரமோ கொஞ்சம். அது காலைமுதல் மாலைவரை நன்றாய் வருந்தி உழைக்கும். அதற்கீடான எருது கிடைப்பதரிது." என்றான். இதைக்கேட்டதும் அவர், தன் வரவைக்கண்டு குலைத்த நாய் வியாபாரி என்றும், வீட்டில் பாக்கியிருந்த சொத்துக்களை வெகு விசுவாஸத்தோடு பிறர் ஒருதுரும்புகூட எடுக்கவொட்டாமல் காத்துக்கொண்டிருப்பதையும் அறிந்தார்.

முற்பிறப்பில் ஏற்பட்ட நிபந்தனையை ஞாபகப்படுத்தும்பொருட்டு அந்நாய்க்குப் பூர்வஞானம் தோன்றும் வண்ணம் செய்வித்தார். உடனே அந்நாய் அவர் பாதத்தில் விழுந்து தனக்கு நேரிட்ட துக்கங்கள் அனைத்தையுஞ் சொல்லி அழுது, "ஸ்வாமி, என்னுடைய அதிருஷ்டஹீனர்களாகிய பிள்ளைகளுக்காக நான் தேடி வைத்த சொத்தில் மிஞ்சியதை, சுற்றுப் பக்கத்திலிருக்கும் திருடர்கள், அபகரியாமலிருக்கும் பொருட்டுச் சிலவருஷம் இங்கேயே திரிய தயவு செய்யவேண்டும்" என்று சொன்னான்.

அவனோடு வாதாடுவது வீண் என்று நினைத்து அவன் கேட்டுக்கொண்டபிரகாரம் திரும்பி வருவதாகச் சொன்னார்.

இன்னும் ஒருமுறை அவ்விடத்தை நாடிச்சென்றார். அங்கே கடையைக்காணாமல் புதிதாய் அமைக்கப்பட்ட இரண்டு சிறு குடிசையைக்கண்டு பக்கத்தில் விசாரித்ததில் இரண்டு சகோதரர்களும் தாயபாகத்திற்காக வழக்காடி பொருள் அனைத்தும் இழந்தார்களென்று தெரிந்து மெதுவாய் பிள்ளைகள் வசிக்கும் ஒரு வீட்டுக்குள் புகுந்தார். அங்கே நாயைக் காணவில்லை. அவ்வடிகள், யோகசித்தி பெற்றவராகையால் அந்தக்கடைக்காரன் ஒருவரும் அறியாமல் பலகாலமாய் பணத்தைச் சேகரித்துப் போட்டுவைத்திருந்தஒரு பித்தளைக்குடத்தைச்சுற்றி வீட்டினுள்ளே ஒரு சுரங்கத்தில் பாம்பாயிருப்பதை அறிந்தார். அப்பொழுது அப்பிள்ளைகள் இருவரும் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டு வீட்டினின்றும் வெளியே வந்தார்கள்.

இச்சாதுவைப் பார்த்து அவர்களுள் பெரியவன் "அடா தம்பி, இந்தப் பாவியாகிய நாடோடி எப்பொழுது நம்வீட்டில் காலைவைத்தானோ அன்று தொட்டு நமக்குத் தரித்திரம் மேலிட்டு வருந்துகிறோம்" என்று சொல்லி இருவரும் அவரைப் பார்த்து "ஏ துஷ்டா, உடனே எங்கள் வீட்டை நாடாமல் ஓடிப்போ. இல்லாவிடில் இன்று உன் ஆயுள் முடியும்" என்று கூவினார்கள். அந்தத் தபசி சிறிதும் அஞ்சாராகி சாந்தமாய் அவர்களைப் பார்த்து "என் நண்பர்களே, அவ்வளவு வறுமை உங்களைப் பீடித்ததா. உங்களுக்குப் பணக்குறை மேலிட்டிருக்கிறதுபோல் தோன்றுகின்றது. அப்படியானால் நான் ஒன்று சொல்லுகிறேன். உங்கள் தகப்பனார் வழக்கமாய்த் தூங்கும் அறையிலிருக்கும் சுரங்கத்தில் புதையலிருக்கிறது. அதை யெடுத்து இருவரும் பங்கிட்டு உங்கள் கஷ்டத்தைத் தீர்த்துக்கொள்ளும்" என்றார். இதைக்கேட்ட மாத்திரத்தில் அதிக சந்தோஷத்துடன் அறைக்குட் சென்று சுரங்கத்தைத் தோண்டவும், ஒரு ஸர்ப்பம் இவர்களைச் சீறி வெளியே வந்தது. அவர்கள் பயந்து ஓடி வெளியேவந்து இச்சாதுவானவர் ஒருபெரிய

மாயாவி யென்றும், போக்கிரி என்றும், தங்களைப் பாம்புக்குப் பலிகொடுக்க நினைத்தார் என்றெண்ணி, உடனே அவரைத் தண்டத்தால் புடைக்க எத்தனித்தார்கள். இவர்கள்கருத்தை யறிந்த சாதுஉடனேஅவர்களைப்பார்த்து, "என்னைப்பொய்யனென்று நினைக்கிறீர்போலும். அந்தக் குடத்தின்மேலிருக்கும் துருப்பிடித்த மூடியைப்பாரும். அதில் நீங்கள் இச்சிக்கும் சொத்துயிருக்கிறது. சர்ப்பத்தைக் கொன்று எடுத்துக்கொள்ளுங்கள்" என்றார். இதைக்கேட்ட மாத்திரம் சற்றுத் தூரத்தினின்றும் துவாரத்தை உற்று நோக்கிப் பார்த்ததில் அழுக்குப் படிந்த மூடியைக்கண்டதும், ஸன்னியாஸியைக் கொல்லவேண்டுமென்கிற கெட்டஎண்ணத்தைவிட்டுத் தங்கள் முழுக்கோபத்தையும் பாம்பின்மேல் தாக்கி அதைக் கொன்றுவிட்டார்கள். இவ்வுலகத்தில் கடைசியாயிருந்த பற்றினின்றும் விடுபட்ட அப்பாம்பின் ஜீவன் சன்னியாசியைப் பின்தொடர்ந்து வெகுகாலம் அவருக்குத் தொண்டு புரிந்து முடிவில் அவருடைய கருணையால், மோக்ஷபதவியை அடைந்தது.

"அற்றது பற்றெனில் உற்றது வீடு"

க. ராமஸ்வாமி அய்யங்கார், பி.ஏ.,

படிக்கத்தகுந்த புத்தகங்கள்.—உலகத்தில் வழங்கும் புத்தகங்களில் சில, பால்யர்கள் படிக்கத் தகாதனவாய் இருக்கின்றன. ஆகையால், அப்படிப்பட்ட புத்தகங்களைப் படிக்க நாம் விருப்பம்கொள்ளலாகாது. அவைகளைப் படிப்பதனால், நம்முடைய புத்திக்குத்தோஷம் உண்டாகும். நாம் படிக்கத் தகுந்த புத்தகமென்று தெரியவந்தால், அது யாரால் செய்யப்பட்டது, அவர் எங்கே இருந்தவர், அவரைப்பற்றியும் அவர் செய்த நூலைப்பற்றியும் மனிதர்களுடைய அபிப்பிராயம் என்ன என்கிற ஸங்கதிகளை முதலில் அறியவேண்டும். அவைகளை அறிந்த பின்பு, அந்த நூல் என்ன காரணத்தினால் செய்யப்பட்டதென்றும், அந்த நூலாசிரியர் தன்னைக் குறித்தும் தன்னால் செய்யப்பட்ட புத்தகத்தைக் குறித்தும் என்ன சொல்லுகிறாரென்றும் பார்க்கவேண்டும். இப்படிப் பலவிதத்தினாலும் அது படிக்கத் தகுந்ததென்று தோன்றினால், அதைப் படிப்பதற்கு நம்முடைய காலத்தில் எது தகுதியான காலமாகத் தோன்றுகிறதோ அந்தக் காலத்தை ஏற்படுத்திக்கொண்டு, ஜனசங்கம் இல்லாத இடத்திற்போய் அதைப்படிக்க ஆரம்பிக்கவேண்டும்.

நமது நோன்புகள்

OUR OBSERVANCES

V. மஹா சிவராத்திரி

MAHASIVARATRI

சிவராத்திரி விரதம் ஸாதாரணமாகச் சிவனுக்கு மிகப் பிரீதியான நோன்பு. இது ஸாதாரணமாக ஒவ்வொரு மாதத்திலும் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியன்று அனுஷ்டிக்கப்படுவது. ஆகவே இது மாதம் ஒருமுறையும், சிற்சில ஸமயங்களில் மாதம் இருமுறையும் வருவது வழக்கம். மாசிமாதம் வரும் கிருஷ்ண சதுர்த்தசிக்கு மஹா சிவராத்திரி என்று பெயர். இதுவே எல்லா சிவராத்திரிகளிலும் முக்கியமானது. மாசிமாதத்தில் இரண்டு கிருஷ்ண சதுர்த்தசிகள் வந்தால் பஞ்சாங்கங்கள் ஒழுங்குப்படி முதலாவதாவது அல்லது இரண்டாவதாவது மஹாசிவராத்திரி எனக் கொண்டாடப்படும். பொதுவாகப் பின்னதையே மஹா சிவராத்திரி என்று மதிப்பது வழக்கம்.

இவ்விரதத்தை எவ்வாறு அனுஷ்டிப்பது? என்ற விஷயத்தை ஆராயப்புகுவோம். கிருஷ்ண சதுர்த்தசியன்று காலையில் எழுந்ததும் மனதில் தான் சிவராத்திரி விரதத்தை அன்று அனுஷ்டித்துத் தனது ஜன்மத்தைக் கிருதார்த்தம் செய்துகொள்ளப்போவதாக முதலில் விரதம் அனுஷ்டிப்பவன் ஒருவன் ஸங்கல்பம் செய்துகொள்ளவேண்டும். பின்னர் தான் செய்யவேண்டிய நித்ய கர்மானுஷ்டானத்தை விதிப்படி முடித்துவிட்டுச், சிவாலயம் சென்று தனது சிவபூஜையை அன்று சிவஸந்நிதானத்தில் செய்யவேண்டும். இது முடிந்ததும் பகவானிடம் தனது விரதம் யாதொரு குறைவும் இன்றி முடிவு பெறவேண்டும் என்று பிரார்த்தனை செய்துகொண்டு, விரதத்திற்கு வேண்டிய ஸாமான்களைச் சுத்தமனத்தோடும் சிரத்தையோடும் சேகரிக்கத் தொடங்கவேண்டும். இவைகளைக்கொண்டு அருகாமையிலுள்ள ஆலயத்தில் பூஜையை முதலில் விதிப்படி செய்விக்கவேண்டும். பின்னர் விரதம் அனுஷ்டிப்போன் பார்த்திபலிங்க பூஜை செய்வது வழக்கமாகில் அதைச் செய்யவேண்டும். பின்னர் பகல் முழுவதையும் சிவஸ்தோத்திரம் சிவகதாசிரவணம் இவைகளிலேயே போக்கவேண்டும். அன்று முழுவதும் ஜலபானம்கூடச் செய்யாது பட்டினியாக இருக்கவேண்டும். சிவராத்திரி இரவில் ஜாமத்திற்கு ஒருதரம் முற்கூறியபடி விதிவத்தாகப் பார்த்திபலிங்க பூஜையைச் செய்து, ஆகாரம் நித்திரையின்றி மறுநாள் ஸூர்யோதயம் வரையில் நிர்வஹிக்கவேண்டும். மறுநாள் அமாவாஸையன்று, இரவில் பூஜைகள் செய்யுங்கால் ஸங்கல்பித்தபடி 12-பிராம்மணர்களுக்குக் குறைபாது ஸமாராதனைசெய்து சிவநிர்மால்யம், பிராம்மணர்கள் கொடுக்கும் ஆசீர்வாத அக்ஷதை முதலியவற்றை ஏற்றுப், பின்னர் விரதம் அனுஷ்டிப்போன் தனது குடும்பத்தோடு போஜனம் செய்யவேண்டும். இதுவே பொதுவாகச் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கும் விதி. இம்மாதிரி ஒரு மஹா சிவராத்திரி தொடங்கி மறு மஹா சிவராத்திரிவரையில் வரும் மாஸ சிவராத்திரிகளில் விரதம் விடாது அனுஷ்டித்து, மறு மஹாசிவராத்திரியில் விரதத்தை முடிக்கவேண்டியது. இம்மாதிரி சிவராத்திரிவிரத ஆரம்ப உத்யாபன விஷயமாக அனேக விதமான தானங்கள், ஸமாராதனைகள் கலசபூஜைகள் தெளிவாகச் சிவபுராணங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளின்படி நடந்து வேளியேற சக்தியுடையவர்கள் சிரத்தையுடன் அவைகளை அனுஷ்டிப்பார்களாகில் சிறந்த பலன் உண்டாகும் என்பதற்கு ஸந்தேகமில்லை.

இனிச்சிவராத்திரி விரதத்தில் அடங்கியிருக்கும் உட்கருத்து விஷயமாகச் சற்று ஆராய்ச்சிகள் செய்வோம். பொதுவாகக் கூறுமிடத்துப் பக்ஷங்களில் முதல் பத்துநாள் இந்திரிய ஸம்பந்தமான தினங்கள், ஏகாதசிதான் பதினோராம் இந்திரியமாகிய மனஸுக்குரிய நாள். அன்று பத்து இந்திரிய வியாபாரங்களையும் அடக்கிப் பதினோராம் இந்திரியமாகிய மனதைச் செழிக்கச் செய்யவேண்டும். அதாவது பட்டினி முதலியவைகள் இருந்துகொண்டு மனதைப் பகவான் விஷயத்தில் செலுத்தும் ஓர் வேலையைமாத்திரம் கடைப்பிடிக்கவேண்டும். இவ்வாறு செய்தபின்பு பன்னிரண்டாம் விஷயமாகி ஜீவாத்மஸ்தானம் அடைய, விரதம் அனுஷ்டிப்போனுக்குச் சற்றுக்களைப்பாறும் தருணம் கிடைக்கும். இதுவே துவாதசி பாரணைசெய்து சற்று விச்ராந்தி அடைதல். ஜீவாத்மாவுக்குத் தனியாக இருப்பு இல்லை. ஆதலால் அங்கு அதிகநாழிகை மனதினால் தரிக்கமுடியாது. அதிலிருந்து 13-ம் ஸ்தானத்தில்பரம்பொருள் ஆனந்த பவனிவருவதைக்காண ஏகாதசியிற் செய்த அப்பியாஸ விசேஷத்தால் மனிதன் தூண்டப்பட்டுப் போவான். இது துவாதசி திரயோதசி ஸந்தியில் பகவான் பிரதோஷ உலாப்புறப்படல். இவ்வாறு ஜீவாத்மஸ்தானத்தில் தரியாது பகவத் அதீனமானதும் மனிதனுக்குப் பழக்க விசேஷத்தால் ஸமாதிகைகூடி துரிய ஜாக்கிரதை (அதாவது ஸதா பகவத் ஸ்வரூபத்தை மறவாதிருக்கும் தன்மை) வருகிறது. இதுவே சதுர்த்தசிதினம். இதனால் தான் அஞ்ஞானந்தகாரமாகிய தூக்கத்தில் மூழ்காது இத்தினம் இரவில்கூட விழித்துக்கொண்டு மனதைப் பகவானிடம் செலுத்தவேண்டியது என்று விதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு சிவராத்ரியில் மனம் செலுத்தும் பழக்க விசேஷத்தால், பர்வகாலத்தில் ஜீவன் சிவமாகி, ஜீவன் முக்தி பெறுவான். ஆகவே ஜீவன் முக்திக்கு முந்தியநிலை சிவராத்திரி நிலை. இந்த அரிய உண்மைகளைத்தான் ஏகாதசி, துவாதசி, திரயோதசி (பிரதோஷம்) சதுர்த்தசி (சிவராத்திரி) ஆகிய விரதங்களில் நமது பெரியோர்கள் அடக்கி இருக்கிறார்கள். இந்த உட்கருத்தை இனி விஸ்தரிப்பதற்கு நமக்கு யோக்கியதையில்லை. இதன் விவரங்களை ஸத்குரு மூலமாக ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளவேண்டியது. இங்குப் பொதுவாக நாம் சொல்லக் கூடியது யாதெனில், இங்குக் காட்டியிருக்கிறவரையில் இக்கருத்தை மனதில் அமைத்துக்கொண்டு இங்குக் கூறியிருக்கும் விரதங்களைச் சுத்தமனதோடும் சிரத்தையோடும் அனுஷ்டித்து வருவோமாகில் காலக்கிரமத்தில் விரதங்களின் கொடுமைகள் நமக்குத் தோற்றாமலும், இக்கருத்து வேரூன்றியும் வர நமக்கு மோக்ஷ பதவியை அடைவதற்கு அவசியம் வேண்டிய சாந்தி நமது சித்தத்தில் குடிகொள்ளும். பின்னர் ஆசாரியன் அனுக்கிரஹத்தால் பரமபதம் கைகூடும் என்பதற்கு என்ன ஸந்தேகம்?

'ஸகல சதுர்த்தசிகளுக்கும் இவ்வுட்கருத்து இசையும் ஆதலின், சிவ ஸம்பிரதாயத்தில் கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசிகளை மாத்திரம் சிவராத்திரிகளாக மதிப்பானேன்?' என்ற சங்கை பிறக்கும். உடனே 'சிவ உத்ஸவாதிகள் எல்லாம் சுக்லபக்ஷத்தில் நடக்கின்றன, பௌர்ணமிகள் தவறாது சிவன் கோயில்களில் சிறந்த உத்ஸவங்கள் நடைபெறுகின்றன' என்ற விஷயங்கள் ஞாபகம் வந்துவிட்டால்,

‘இந்தச் சிவராத்திரி விரதம் மாத்திரம் ஏன் கிருஷ்ணபக்ஷத்தில் அமைக்கப்படவேண்டும்’ என்ற கேள்வி பிறந்து முற்கூறிய சங்கையைப் பலப்படுத்தும். இதற்குப் பரிஹாரம் பின் வருமாறு கூறலாம். சைவ ஒழுங்கு ஸாதாரணமாக இருபாகமாகக் காணப்படும். அவையாவன: ஜனஸமூகங்களுக்கு உபயோகப்படக்கூடிய பக்திபாகம், ஒவ்வொருவருக்கும் தனித்தனியே உபயோகப்படக்கூடிய ஞானபாகம் என்பவைகளே. இந்தப் பக்திபாகம் முக்கியமாக மனக்குதூஹலம் உண்டாக்கி மனதைச் சீர்திருத்திப் பகவானுக்கு அர்ப்பிதம்செய்யப் பக்குவமாக்குவது. இந்தப்பாகத்தைச் சேர்ந்தவையே சிவாலய உத்ஸவங்கள். சுருதிகளின்படி மனஸுக்கு அதிபதி சந்திரன் (சந்த்ரமா மனஸோஜாதஃ, என்பது சுருதி). ஆகையால் மனது தழைத்துக் குதூஹலம் அடைந்து பக்தியால் பக்குவமாவது, சுக்கிலபக்ஷத்தில் சந்திரன் வளர்ந்து பர்வத்தில் பூர்த்தியாவதோடு ஸம்பந்தமுடையது. இதனால் ஜனங்களுக்குப் பொதுவாகப் பக்தி உதித்து மனப்பக்குவம் வரும்படி செய்வதையே நோக்கமாக உடைய சிவாலய உத்ஸவங்கள் சுக்கிலபக்ஷத்திலேயே அமைக்கப்பட்டுப் பர்வங்களன்று அவை முடிவுபெறுகின்றன. சிவராத்திரி விரதமோ, உட்கருத்தில் காட்டியபடி ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக உபயோகப்படக்கூடிய ஞானபாகத்தைச் சேர்ந்தது. பக்தி பாகப்படி மனம் கனிந்த ஒருவன் ஞானபாகத்தில் விருத்தியடைந்து வருவானாகில் அவனுக்குப் பரம்பொருள் விஷயம் அதிகமாக விளங்கிக்கொண்டும், மனதின் காரியமான உலக விஷயங்கள் வரவர மறைந்துகொண்டும் வரும். அதாவது ஞானபாகத்தில் பழகுவோருக்கு மனது வரவர அடங்கிக்கொண்டேவரும். இது கிருஷ்ணபக்ஷத்தில் சந்திரன் குறைந்துவருவதோடு ஸம்பந்தப்பட்டது. ஆகவே ஞானபாகத்தில் பகவான் சிறப்பைக்கண்டு அவரோடு இரண்டறக்கலப்பதற்கு முந்திய நிலையாகிய ஸமாதிகாலத்தில் மனது மிகக்குறைந்து நிற்குமாதலின் சிவராத்திரியைக் கிருஷ்ண சதுர்த்தசியன்று அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பக்குவமனம் அடங்குவதை முக்கியலக்ஷணமாக உடைய விரதங்களுள் ஒன்றாகிய சிவராத்திரி கிருஷ்ணபக்ஷத்தில் அமைந்திருப்பது நியாயமே.

இவ்வளவு சிறப்பமைந்த சிவராத்திரியை அறியாமல் அனுஷ்டித்தபோதிலும் ஒருவனுக்கு மேன்மை உண்டாகும் என்று புராணங்கள் கூறும். இதற்குத் திருஷ்டாந்தமாகச் சிவபுராணங்களில் இரண்டு கதைகள் காணப்படுகின்றன. அவைகளைச் சுருக்கமாக எடுத்துக் கூறுவோம்.

முதல்கதை வேதநிதி என்ற துராத்தமர் சிறப்படைந்ததைப்பற்றிக் கூறுவது. அது பின்வருமாறு. அவந்தி என்றபட்டணத்தில் ஸகல குணங்களும் அமைந்த தீக்ஷிதர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியும் மிகச்சிறந்த குணங்கள் வாய்ந்தவள். அவர்களுக்கு ஸுநிதி, வேதநிதி என்ற இரண்டுபிள்ளைகள் இருந்தனர். மூத்தவனாகிய ஸுநிதி தன் தாய் தகப்பன்மார்கள் போன்ற ஸன்மார்க்கியாகி அவர்களை மிக ஸந்தோஷப் படுத்திவந்தான். இளையவனாகிய வேதநிதியோ தாசிவீட்டிற்குப் போதல் முதலிய கெட்ட குணங்களிலேயே பழகிவரவரக்கொடியவனானான். தாய் தகப்பன்மார் இவனை எவ்வளவு கண்டித்தும், இவன் துன்மார்க்கத்தைவிட்டுத் திரும்பவே இல்லை. இப்படி இருக்கையில் அவந்தி தேசத்து அரசனுக்கு இந்தத் தீக்ஷிதரிடம் பிரீதி உண்டாக, அவன் இவருக்கு ஒருநாள் ஓர் விலையுயர்ந்த ரத்ன மோதிரத்தைக் கொடுத்தான். இதைத் தீக்ஷிதர் ரஹஸ்யமாகத் தம்மனைவியிடம் கொடுத்துப் பத்திரப்படுத்தி வைக்கச் சொன்னார். இதை எவ்வாறோ அறிந்த வேதநிதி, ஜாக்கிரதையாக இதைத் திருடித் தன் வேசிக்குக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டான். அதை அவள் போட்டுக்கொண்டு ராஜஸபைக்கு நாட்டியம் செய்யப் போயினள். அரசன் அவள் கைவிரல் மோதிரத்தைக் கவனித்துப்பார்க்க, அது தான் தீக்ஷிதருக்குக் கொடுத்தது என்று அவனுக்குத் தெரியவந்தது. உடனே அந்தத் தாசியை அரசன் ‘இம்மோதிரம் உனக்கு எப்படிக் கிடைத்தது’ என்று கேட்க, அவள் முதலில் பொய்சொன்னாள். பின்பு அரசன் பயமுறுத்திக் கேட்க, அவள் தீக்ஷிதர் பிள்ளை வேதநிதியிடமிருந்து தான் அதைப் பெற்றுக்கொண்டதாகச் சொன்னாள். உடனே அவளிடமிருந்து அரசன் மோதிரத்தைப் பிடுங்கிக்கொண்டு அவளை அனுப்பிவிட்டான். பின்னர் அரசன் தீக்ஷிதருக்கு ஆளனுப்பி வரவழைத்து ‘நான் கொடுத்த மோதிரத்தைச் சற்றுக் கொண்டு வாரும். கூடியசீக்கிரத்தில் அதைத்திருப்பிக் கொடுத்து விடுகிறேன்,’ என்று சொன்னான். தீக்ஷிதர் வீட்டிற்கு ஓடோடியும் வந்து மனைவியிடம் மோதிரத்

தைக்கேட்டார். மனைவி எவ்வளவு தேடியும் அவளுக்கு மோதிரம் அகப்படவில்லை. இந்த ஸங்கதியை மிகுந்த பரபரப்புடன் வந்து தீக்ஷிதர் அரசனிடம் தெரிவித்தார். அரசன் தீக்ஷிதரது மனஸ்தாபத்தைக்கண்டு இரங்கி, மோதிரம் தன்னிடம்வந்த விவரத்தைத் தெரிவித்து, அதை அவரிடம் ஒப்புவித்தான். தீக்ஷிதர் வீடுசென்று மனைவியைக் கண்டித்துவிட்டு, வேதநிதியை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டனர். அன்று சிவராத்திரி தினம். அன்று முழுவதும் எங்குத்திரிந்து பார்த்தும் வேதநிதிக்கு ஆகாரமே கிடைக்க வில்லை. பசியால் மிகவருந்தி நிற்கையில், ஸூர்யாஸ்தமன ஸமயத்தில் சிவபக்தர்கள் நிவேதன வஸ்துக்கள் பூஜாத்திரவியங்கள் முதலியவைகளை எடுத்துக்கொண்டு சிவாலயத்துள் புகுவதை வேதநிதி கண்டான். இவனும் சிவாலயத்துட் புகுந்து, ‘எப்பொழுது இவர்கள் போவார்கள்; நாம் இந்த வஸ்துக்களை உண்டு பசி தீரலாம்’ என்ற ஆவலுடன் விழித்துக்கொண்டு அங்கு உட்கார்ந்திருந்தான். முதல்ஜாம பூஜையானதும் எல்லோரும் தமதுவீடுசென்றனர். கோயில் குருக்கள்களும் தமக்குக்கிடைத்த நிவேதன வஸ்துக்களை மூலஸ்தானத்தில் வைத்துவிட்டு நித்திரைசெய்யத் தொடங்கினர். எல்லோரும் நித்திரை செய்கையில் வேதநிதி எழுந்து மூலஸ்தானத்துள் போனான். அங்குத்தீபம் அணையும் தருணமாக இருந்தது. தன் திருட்டுவேலைக்கு ஸஹாயமாக இருப்பதற்காக அந்த அணையும் விளக்கை வேதநிதி தூண்டினான். இதுதான் இதுவரையில் அவன் செய்த ஸத்கிருத்தியம். வேண்டிய உணவுகளை எடுத்துக்கொண்டு மிகுந்த ஆவலுடன் வெளி ஏறுகையில் ஓர் குருக்களை வேதநிதி மிதிக்க, அவர் “திருடன்! திருடன்!!” என்று கூக்குரலிட்டுக் கொண்டெழுந்தார். எல்லோரும் எழுந்து வேதநிதியைத் துரத்தித் தெருவில் சென்றனர். இந்தச் சப்தத்தைக் கேட்டு இராஜ ஸேவகர்கள் தமது அம்புகளை விடுத்து வேதநிதியைக் கொன்று தள்ளினர். மஹா சிவராத்திரியன்று ஓர் ஜாமம் சிவஸந்நிதானத்தில் விழித்திருந்து சிவாலயத்தில் அணையும் விளக்கைத் தூண்டின புண்யத்தால் வேதநிதிக்குக் கலிங்கராஜ ஜன்மம் கிடைத்தது. அதிலிருந்து காலக்கிரமத்தில் அவன் முக்தியை அடைந்தான்.

இரண்டாவதுகதை வேடன் சிறப்படைந்ததைப் பற்றிக் கூறுவது. ஓர் காட்டில் குருத்ருஹன் என்ற ஒருவேடன் இருந்தான். அவன் வேட்டையாடி ஜீவஹிம்ஸைசெய்து மாம்ஸம் கொணர்ந்து தன் குடும்பத்தைஸம்ரக்ஷிப்பது வழக்கம். இப்படி இருக்கையில் ஓர் சிவராத்திரியன்று அவன் வேட்டைக்குப் புறப்பட்டுக் காடெங்கும் திரிந்தான். அன்று ஸூர்யாஸ்தமனம் வரையிலும் அவனுக்கு ஒரு மிருகமும் அகப்படவில்லை. ஸூர்யாஸ்தமனமானதும் இருள் மூடிக்கொண்டுவர அவன் வீடுநோக்கிப் புறப்பட்டான். ‘நாம் ஆஹாரம் கொண்டுபோகாது வீடு போய் என்ன பயன்? நமது குடும்பம் கஷ்டப்படுவதைப் பார்த்துக்கொண்டுதானே இருக்கவேண்டும். இதைவிட வீடுபோகாது இங்கேயே இருக்கலாம்’ என்று எண்ணமிட்டுக்கொண்டு வருகையில் இருள் நன்றாக மூடிக்கொண்டது. அப்பொழுது அவன் ஓர் குளக்கரை வந்து சேர்ந்தான். அங்குத் தீர்த்தம் குடித்துவிட்டு நிமிர்ந்தான். உடனே ‘இங்கு மறைந்துகொண்டிருப்போம். ஏதாவது ஓர் ஜந்து இன்றிரவு தண்ணீர் குடிக்க வராமலா போகும்? அதைக்கொன்று எடுத்துக்கொண்டு வீடு செல்வோம்’ என்று அவனுக்குத் தோன்றியது. கையிலிருந்த பாத்திரத்தில் தண்ணீரெடுத்துக்கொண்டு அவன் கரையிலேறினான். அப்பொழுது ‘துஷ்டமிருகங்கள் வந்து நம்மை கொன்றுவிட்டால் என்னசெய்வது?’ என்ற பயம் தோன்ற, அருகிலிருந்த மரத்தின்மீது ஏறிக்கொண்டு மிகுந்த ஜாக்கிரதையாக விழித்துக்கொண்டிருந்தான். முதல் ஜாமத்தில் ஓர் பெண்மான் வந்து தண்ணீர் குடிக்க இறங்கியது. வேடன் வில்லில் அம்பைவைத்துக் குறிபார்க்க மரம் அசைந்தது. உடனே அதிலிருந்து சில இலைகளும், வேடன் பாத்திரத்தில் இருந்து கொஞ்சம் தீர்த்தமும், மரத்தடியில் மறைந்துகிடந்த சிவலிங்கத்தின் தலையில் விழுந்தன. அந்த மரம் வில்வமரமாக இருந்தபடியால், வேடன் மஹாசிவராத்திரியன்று முதல்ஜாம பூஜை செய்தவனானான். இந்தச் சப்தத்தைக்கேட்ட பெண்மான் மிகுந்த ஸந்தோஷத்துடன், வேடனைநோக்கி ‘நான் கிருதார்த்தனானேன். என்மாம்ஸம் நல்லவழியில் உபயோகப்படுகிறது. ஆனால் எனக்கு ஓர் கணவனும், சிலகுழந்தைகளும் உண்டு. அவைகளிடம் சென்று உத்தரவு பெற்றுக்கொண்டு நான்காம்ஜாமம் உன்னிடம் வந்துவிடுகிறேன்’ என்றது. வேடன் முதலில் இந்த வார்த்தையை நம்பாமலிருக்க, பின்னர் மானகூறிய உ

றுதிமொழியை நம்பிமானைப்போகவிட்டு,வேறு ஏதாவது மிருகம் வாராதா என்று விழித்துக் கொண்டிருந்தான். முதல்மானின் தங்கை தனது அக்காளைத்தேடிக்கொண்டு இரண்டாம்ஜாமத்தில் குளக்கரைக்குவர, முன்போல எல்லாம் முறையே நடந்தன. வேடன் இரண்டாம் ஜாம சிவபூஜை செய்தவனானான். மானும் முதல்மான் கூறியதுபோலக் கூற வேடன் அதையும் போகவிட்டான். மூன்றாம் ஜாமத்தில் முன்வந்த இருமான்களின் கணவனாகிய ஆண்மான் தன் இரு பெண்சாதிகளையும் தேடிக்கொண்டு குளக்கரை வந்தது. முன் நடந்தவைகள் முறையே நடந்தேறின. வேடன் மூன்றாம் ஜாம பூஜை செய்தவனானான். இந்த மானும் தன் நிலையைக்கூறி நான்காம் ஜாமம் வருவதாக வேடனிடம் விடைபெற்றுச் சென்றது. நான்காம் ஜாமம் இவைகள் வரவில்லை. வேடன் தான் ஏமாந்ததாக மதித்துக்கொண்டு மிகத்துக்கித்தான். ஸூர்யன் உதயமாயிற்று. எதிரே அருகாமையில் மூன்று மான்களும் அதன் குட்டிகளும் நிற்பதை வேடன் கண்டான். அவைகளுள் 'நான்தான் வேடனுக்கு இரையாகிக் கிருதார்த்தனாவேன்'என்று தர்மவிஷயமாகப் போட்டிவர, முடிவில் மூன்று மான்களும் வேடனிடம் வந்துநின்றன. முன்போல எல்லாம் நடக்க,வேடன் நான்காம் ஜாம பூஜைசெய்தவனானான். அப்பொழுது தம்மைச் சீக்கிரம் கொன்று உபயோகப்படுத்தும்படி அவைகள் வேடனை வேண்டிக்கொண்டன. சிவராத்திரி இரவு முழுவதும் விழித்திருந்து வேடன் சிவபூஜை செய்ததால் நிர்மலமாகிய மனது உடையவனாக இருந்தமையால், அவன் ஜீவஹிம்ஸை செய்யமாட்டேன் என்று விரதம் கொண்டு தான் இதுவரையில் செய்த பாபங்களை எண்ணி மனம் உருகினான். உடனே சிவபெருமான் பிரத்தியக்ஷமாகி மான்களுக்கு மோக்ஷம் கொடுத்து, வேடனுக்கு ஸத்புத்தி வரும்படி செய்து, குஹன் என்ற பெயரையும் அளித்து, அவனைப் பூமியில் கொஞ்சகாலம் இருந்து பின்னர் வரும் ராமசந்திர மூர்த்திக்குக் கைங்கரியம் செய்து கிருதார்த்தனாகித், தன் பதவியை அடையும்படி கட்டளையிட்டு மறைந்தார். மோக்ஷமடைந்த மூன்று மான்கள் மூன்று, மிருகசீர்ஷ (மான்தலை) நக்ஷத்திரங்களாக இன்னும் விளங்குகின்றன என்று புராணங்கள் கூறும்.

இவ்விருகதைகளும் சிவராத்திரி விரதத்தின் சிறப்பை நன்கு விளக்குகின்றன. இந்த வியாஸத்தை முடிக்கும் முன்னர் இந்த விரதத்திற்கு முக்கியமாகிய சிவலிங்கத்தின் உட்கருத்தைப்பற்றிச் சற்றுச் சுருக்கமாக ஆராய்வோம்.



சிவலிங்கத்தை நாம் எல்லோரும் பார்த்திருக்கிறோம். அதன் அடிபாகமாகிய பீடத்திற்கு ஆவடை என்றுபெயர். அதன் மேல்பாகத்திற்குப் பாணம் அல்லது லிங்கம் என்று பெயர். முதல் முதல் இதைப்பார்ப்பவர்களுக்கு இது ஒருரூபமாகக் கண்ணிற்குப் பட்டபோதிலும்,ஸாதாரணமாகக்காணப்பட்டஒருரூபமும் இதில்இல்லை என்பதுதெரியவரும். இதனாலேயே பிரம்ம நிற்குண ஸகுண ஸ்வரூபங்கள் உடையது, அரூபமாயினும் ஸகலரூபங்களையும் அடக்கியுள்ளது, அதாவது ரூபாரூப ஸ்வரூபமானது என்பதைச் சிவலிங்கம் முதலில் நமது மனதிற்குக் கொண்டுவருகின்றது. மேலும் நமது வீட்டில் ஜ்யோதீ என்ற சிறு பூஜாவிளக்கை நாம் கண்டிருக்கிறோம் அல்லவா? அதில் நிற்கும் திரியை இட்டு விளக்கேற்றினால் இந்தலிங்கம்போன்ற ஆகிருதிவரும். இதனால் பாணமானது மேல்நோக்கிய (ஊர்த்வமுக) தேஜஸ்ஸையும், ஆவடை என்பது அது புறப்படும் பிரபஞ்சாதிகளையும் குறிக்கும். சிவலிங்கத்தின் மேல் பாகத்தில் விபூதி இட்டிருப்பது ஊர்த்வமுகமாகப் போய் அடையக் கூடியசாந்தி அல்லது நிர்விகல்ப ஸமாதிநிலையைக் குறிக்கின்றது. விபூதி சாம்பலாக இருப்பது நாம ரூபாதிகள் நசித்தநிலையையும், மூன்றாக இடுவது திரிகுணாதிகளின் இயல்பு நீங்கிய குணாதீதமான நிலையையும் குறிக்கின்றன. யோகிகளும் லிங்காகிருதியாக இருந்து நிஷ்டை செய்வது வழக்கம். இந்தஸமயத்தில் காலைமடித்து உட்காருவது போல உட்கார்ந்து மேல்முட்டுகளைத் தூக்கிக் கைகளால் அவை மார்புக்கு எதிரே நிற்கும்படி கட்டிப் பிடித்திருப்பதே, இந்த ஆகிருதி வர உட்காரவேண்டிய ஆஸனம். ஸந்யாஸிகளையும் இம்மாதிரி ஆஸனத்தில் உட்காரவைத்துத்தான் ஸமாதி வைப்பது. இந்தச் சிவலிங்கத்திற்கு முற்கூறிய சிறப்பு இருத்தலில் பெரியோர்கள் இந்து உருவத்தை இவ்வளவு மதிக்கின்றனர். லிங்கம் என்ற பதத்திற்குக் குறி என்று பொருள். எளிதில் அறியக்கூடாத வஸ்துவைக்காட்டும் அடையாளம் என்பது இதன் கருத்து. இந்த அர்த்த விஷயமாக ஓர் பெரியவர் 'ஸகலத் தோற்றம், அதாவது நாம ரூபாதிகள், கடந்து அப்பாற்பட்டுச் சேவிப்பது எதுவோ அதுவே முடிவான மூலலிங்கம்' என்று கூறியிருக்கிறார். இவ்வித சிறந்த கருத்துக்கள் அடங்கிய இந்தச் சிவலிங்கத்தை * முற்கூறிய உட்கருத்துக்களை வைத்துக்கொண்டு ஆராதித்தால் நமது மனது நிர்மலமாகிச் சிறந்த ஆஸ்திக புத்தி அதில் பதிந்து, அப்பிரஸாத விசேஷத்தால் பரமபதம் ஸித்திக்கும் என்பதற்கு ஸந்தேகம் இல்லை.

* இக்காலத்தில் பழயன பரீக்ஷகர்கள் என்ற ஒருகூட்டத்தார் கிளம்பி சிவலிங்க ஆராதனம் உண்டான வழிகளை ஆராய்ந்து வாயால் கூறத்தகாத மாதிரியான விஷயங்களை அதனுடன் ஸம்பந்தப்படுத்திக் கூறுகின்றனர். இந்த அருவருப்பான விஷயங்கள் சில காட்டாள் ஜாதிகளில் காணப்படுவதால், அவைகளைப் போன்ற சிவலிங்காராதனத்துடன் அவைகளை ஒட்டிப்பார்த்து இத்திறத்தார் மகிழ்ச்சி அடைகின்றனர் போலும். இவர்கள் கூறுவதைச் சைவஸித்தாந்திகளில் சிலர்ஒருவாறு அங்கீகரித்துக் கூறினாலும் கூறலாம். கேவலம் மோக்ஷப்பிரதமாகிய சிவலிங்க ஆராதனத்திற்கும் பழயன பரீக்ஷகர்கள் கூறும் கொடிய விஷயங்களுக்கும் யாதொரு ஸம்பந்தமும் இருக்க இடமே இல்லை. இந்த விஷயம் எடுத்து விஸ்தரிக்கத்தக்கத அவ்வளவு கொடியது ஆதலின் இதில் ஆராய்ச்சி யொன்றும் செய்யாது முடிவுரையைக் கூறினோம்.

இயற்கை அற்புதங்கள்
WONDERS IN NATURE
XV. தண்ணீர் : அதன் குணங்கள்
WATER : ITS PROPERTIES

நீர்வாயு—Steam
சுருங்காமை—Incompressibility
அழுத்தமாற்றம்—Communication of pressure
மட்டமாகல்—Finding level
கீழ்நோக்க அழுத்தம்—Downward pressure
மேல்நோக்க அழுத்தம்—Upward pressure
பக்க அழுத்தம்—Sideways pressure
பரப்பு—Layer
உள் அழுத்தம்—Internal pressure
ஒட்டும் சக்தி—Adhesion
நழுவு சக்தி—Repulsion
தந்து ஏற்றம்—Capi'lary ascent
தந்து இறக்கம்—Capillary descent
தந்துகுணம்—Capillarity
குழிவான—Concave
திரண்ட—Convex
போல்—Bore
ஸஹஜவாயு—Air
பாரம்—Thrust

தண்ணீர் : என்பது நாம் கழுவுதல், குடித்தல், முதலியவைகளுக்கு ஸாதாரணமாக உபயோகப்படுத்தும் ஓர் திரவ வஸ்து. இது ஸர்வ ஸாதாரணமாக இருப்பதால் இதன் ஸம்பந்தமான அற்புதங்கள் நமக்கு வெளியாகாமல் இருக்கின்றன. இப்படி இருப்பினும் இதைப்பற்றிசிற்சில விஷயங்களை நாம் எல்லோரும் அறிந்துகொண்டிருக்கிறோம். அவைகளை முன்பு எடுத்துக்கூறி, நமக்கு ஸாதாரணமாகத் தெரியாத அற்புத விஷயங்களைப் பின்னர் எடுத்துக் கூறுவோம்.

தண்ணீர் திரவ வஸ்து. அது குவிந்து மணல் போல நிற்கமாட்டாது. எப்பொழுதும் அதற்குப் பாத்திர ஸஹாயம் வேண்டும். இல்லாவிடில் அது ஓடிப் பரந்துவிடும். பாத்திரத்திலும் அசைவற்று நிற்குங்கால் தண்ணீர் கூடியவரையில் அதன் கீழ் பாகத்தில் சென்று அமர்ந்து, தன் மேல்பாகத்தை மட்டமாக வைத்துக்கொள்ளும். வாயுவைப்போல அது பாத்திரத்தை நிரப்பும் தன்மை உடையதல்ல

தண்ணீர், அதிருக்கும் பாத்திரத்தின் ரூபமாகும். அதற்கு ஸ்வந்தமாக ரூபமில்லை. தண்ணீரைச் சிறு உருண்டையான துளிகளாகப் பிரிக்கலாம்; அவைகளைச் சேர்த்தால் அவைகள் ஒன்றாகிவிடும் தன்மை உடையன. தண்ணீரை அதிகமாகக் காய்ச்சினால் நீர்வாயுவாகிவிடும். இது சற்றுக் குளிர்ச்சி அடைந்தால் புகைரூபமாகிய நீராவியாகிவிடும்; இன்னும் அதிக குளிர்ச்சியில் அகப்பட்டால் மறுபடி தண்ணீராக மாறிவிடும். தண்ணீர் அதிகக் குளிர்ச்சியில் வைக்கப்பட்டால் செய்போல உறைந்து பனிக்கட்டி ஆகிவிடும்; இப்பனிக்கட்டி உஷ்ணத்துடன் ஸம்பந்தப்பட்டால் மறுபடியும் தண்ணீர் ஆகிவிடும். தண்ணீர் அநேக வஸ்துக்களைக் கரையச்செய்யும் சக்தியை உடையது. கரைந்த வஸ்துக்களை வேறு கப்பிரிக்க வேண்டுமாகில், அவை கரைந்திருக்கும் தண்ணீரைக் காய்ச்சி நீர்வாயுவாக ஓடச்செய்யவேண்டும். இவைகளே நமக்குத் தண்ணீரைப்பற்றி ஸாதாரணமாகத் தெரிந்தவை. இனி நமக்கு ஸாதாரணமாகத் தெரியாத அற்புதங்களை எடுத்து விவரிப்போம்.

முதலாவது தண்ணீரை எவ்வளவு தான் அமுக்கிய போதிலும் வாயுவைப்போல அளவில் குறையும்படி செய்யமுடியாது. இதற்குச் சுருங்காமை என்று பெயர். அரைப்படி ஜலத்தை அமுக்கி ஒரு கால்படியாக்க முடியாது. அமுக்கியதனால் அளவு குறையாமல் போனால் நமது அமுக்கும் பலம் என்னமாகப்போகிறது என்ற சங்கைபிறக்கும். இதற்கு ஓர் சோதனைசெய்து பார்ப்போம். ஓர்சிறிய ரப்பர் பந்தை எடுத்து அதில் சிறு துளைகள் 10-அல்லது 15-ஐ எல்லாப்பக்கங்களிலும் விடுவோம். பின்னர் ஓர் கட்டைவிரலால் மூடக்கூடிய பெரியதுளை ஒன்றும் அதில் விடுவோம். இந்தப்பந்தைத் தண்ணீருள் போட்டுக் கசக்கினால் அதிலுள்ள ஸஹஜவாயுவெல்லாம் குமிழிகளாக வெளிவரும். பின்னர் கையை விட்டால் அது நிறையத் தண்ணீர் ஏறிவிடும். இந்தப்பந்தை வெளியில் எடுத்து அகன்றதுளையை கட்டைவிரலால் மூடிக்கொண்டு அழுத்துவோம். உடனே எல்லாச் சிறுதுளைகள் வழியாகவும் தண்ணீர் நேராகப்பீரிட்டு எழும். இதனால் தண்ணீரை அழுத்தினால் அந்த அழுத்தம் அதனுள் எல்லாப் பாகத்திலும் பரவிசென்று, தாக்கும் இடங்களில் எல்லாம் அழுத்தத்தை உண்டாக்குகின்றதே ஒழியத் தண்ணீர் சுருங்கி அளவில் ஒருக்கால் குறைவதில்லை என்பது வெளியாகும். ஆகவே ஓட்டைகள் இல்லாப் பாத்திரத்தில் தண்ணீரைவிட்டுப் பலமாக அழுத்தினால் பாத்திரத்தின் பக்கங்கள் எல்லாம் அழுத்தப்படுகின்றன. ஆகவே பாத்திரம் பலமானதாக இருப்பின் இதைத்தாங்கும். இல்லாவிடில் உடைந்துபோகத் தண்ணீர் வெளியில் ஓடிவருமே ஒழியத் தண்ணீர் ஒரு நாளும் அளவில் சுருங்காது. வேறொரு விஷயமும் முற்கூறிய சோதனையிலிருந்து வெளியாகின்றது. தண்ணீரை ஒரு பாகத்தில் அழுத்தினால் அந்த அழுத்தத்தை அது எல்லாப் பக்கங்களை நோக்கிக் கொண்டுபோகும் திறனுடையது என்பதே. இந்தச் சக்திக்கு அழுத்த மாற்றம் என்று பெயர். இது தண்ணீரின் சுருங்காமையால் உண்டாவதே ஒழிய வேறல்ல.

இரண்டாவது அற்புதகுணம் தண்ணீர் அசைவற்றிருக்குங்கால் அதன் மேல்பாகம் மட்டமாக இருப்பதே. ஒரு பாத்திரத்திலிருக்குங்கால் மாத்திரம் தான் தண்ணீர் மேல்பாகம் மட்டமாக இருக்கும் என்று எண்ணவேண்டாம். பெய்குழல்போன்ற வாய் அகன்ற பாத்திரம், சிறு நேரான நீண்டகுழாய், பாம்பு போன்றவளைந்த குழாய், வாய் குறுகி அடி அகன்ற பாத்திரம், இன்னும் இவைபோன்ற வேறு அநேக பாத்திரங்கள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். இவைகளின் அடிப்பாகங்கள் எல்லாம் ஒரேகுழாயால் ஓட்டை கொஞ்சமேனும் இன்றிச் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் வைத்துக்கொள்ளுவோம். இவைகளுள் போதுமான தண்ணீர்விட்டு அது அசைவற்றிருக்கும்படி செய்வோம். அப்பொழுது ஒவ்வொரு வித பாத்திரத்திலும் தண்ணீரின் மேல் பாகத்தை பார்த்தால் எல்லாம் ஒரேமட்டத்தில் காணப்படும். இந்தப் பாத்திரங்களை எப்படிச் சாய்ப்பினும் உயர்ந்த பாத்திரத்தில் தண்ணீர் தணிந்தும், தணிந்ததில் தண்ணீர் ஏறியும்விட, முடிவில் அசைவற்று நிற்குங்கால் எல்லா மேல் பாகங்களும் ஒரே மட்டத்திற்கு வந்து விடுகின்றன. ஆகவே குழாய் மூலமாக ஸம்பந்தம் உடைய அநேகவித பாத்திரங்களுள் தண்ணீரை விட்டால் அது அசைவற்று நிற்குங்கால், எல்லாப் பாத்திரங்களில் உள்ள மேல் பாகங்களும் ஒரே மட்டத்தில் வந்து நிற்கும். இதற்கு ஸாதாரண உதாரணம், கிட்டில், கண்டி முதலியவைகளில் உள்ள நீர் மட்டம் அவைகளின் மூக்குக்களில் உள்ள நீர்மட்டத்துடன் ஒன்றாக இருப்பதே.

முற்கூறிய சோதனையை வேறுவிதமாகச் செய்வோம். ஒரேகுழாயால் சேர்க்கப்பட்டுள்ள அநேக பாத்திரங்களுள் சிறுகுழாயை ஓர் சடையால் நன்றாக மூடிவிட்டு அவைகளுள் தண்ணீரைவிடுவோம். மேலும் அந்தக்குழாய் மற்றைப் பாத்திரங்களை விட மிகத் தாழ்ந்ததாயும் நேராகவளைக்கப்பட்டதாயும் இருக்கட்டும். இப்பொழுது தண்ணீர் அடைக்கப்பட்ட பாத்திரம் தவிர எல்லாப் பாத்திரங்களுள்ளும் ஏறும். அடைக்கப்பட்ட பாத்திரத்துள் அடைபட்டிருக்கும் ஸஹஜவாயு தண்ணீரை உள்ளேறவிடமாட்டாது. இவ்வாறு பாத்திரங்கள் நிறையத் தண்ணீர் விட்டுவிட்டுத் தண்ணீர் அசைவற்று நின்றதும், அதன் மேல்பாகங்கள் ஒரே மட்டமாக இருப்பதையும் பார்த்துவிட்டு மெதுவாகச் சடையை எடுப்போம். உடனே தண்ணீர் அசையத்தொடங்கி சிறு தாழ்ந்தகுழையை நோக்கி ஓடி அதன்வழியாக வெளியேவிழுகின்றது. எல்லாப் பாத்திரத்திலும் தண்ணீர் இறங்கிக்கொண்டே வருகின்றது. அவைகளின் மட்டம் சிறுகுழாய் மட்டம் வரும்வரையில் அசைந்து பின்னர் நிலைபெறுகின்றன. இதனால் குழாயால் சேர்க்கப்பட்டுள்ள அநேக பாத்திரங்களில் நீர்மேல்பாகம் மேலான விடத்திலிருந்து தாழ்ந்த விடத்திற்குத் தண்ணீர் ஓடும் சக்தியை உடையது. தண்ணீர் எக்காலத்திலும் தன்மட்டத்திற்குமேல் ஓடிச்செல்லாது என்பது விளங்கும். தண்ணீருக்கு உள்ள இந்தச் சக்தியை அனுஸரித்துத்தான் பெரிய பட்டணங்களில் அவைகளை விட உயர்ந்த மேல்பாகங்களை உடையஏரிகளிலிருந்து குழாய்கள்மூலமாகத் தண்ணீரைக் கொண்டுவருகிறார்கள். ஏரிமேல்பாகத்தை விடத் தாழ்ந்த பாகங்களில் இம்மாதிரிக் குழாய்களால் வரும் தண்ணீர் வேகமாக வந்துகொண்டும், அந்தப் பாகத்திற்கு அருகாமையில் வரவர வேகம் குறைந்து வந்துகொண்டும், அதைவிட மேலான பாகங்களில் தண்ணீரே வராமலும் இருக்கின்றன. இந்தக் குணத்திற்கு மட்டமாகல் என்று பெயர்.

இனித் தண்ணீரின் மூன்றாவது அற்புத குணத்தை எடுத்து விவரிப்போம். தண்ணீர் கனம் உடைய வஸ்து. ஆகவே அதன் உள் செல்லச்செல்ல அதன் கனத்தால் வரவர பாரம் அதிகரிக்கும். இதைச் சோதனை மூலமாகவும் காணலாம். ஓர் நீண்ட குழாயை எடுத்து அந்த ஒருபாகம் மிக நீளமாயும்,



மற்றைய பாகம் குறுகலாயும் இருக்கும்படி வளைப்போம். பின்னர் அதனுள் போதுமான பாதரஸத்தை விடுவோம். பாதரஸத்தின் மேல் பாகங்கள் இரண்டும் ஒரே மட்டத்தில் காணப்படும். நீண்ட பாகத்தைப் பிடித்துக்கொண்டு இதை மெதுவாகத் தண்ணீர் நிறைந்த உயர்ந்த கண்ணாடிப் பாத்திரத்துள் விடுவோம். கீழே போகப் போகக் குறுகல் பாகத்தில் பாதரஸ மேல் பாகம் வரவர அதிகமாகத் தாழ்ந்து கொண்டும் நீண்டபாகத்தில் பாதரஸ மேல் பாகம் உயர்ந்துகொண்டும் வரும். இதனால் தண்ணீருள் கீழே போகப்போக அழுத்தம் அதிகரிக்கிறது என்பது விளங்கும். இதற்குக் கீழ்நோக்க அழுத்தம் என்று பெயர்.

இவ்வாறு தண்ணீருள் கீழ்நோக்க அழுத்தம் அதன் கனத்தாலேயே இயற்கையால் அமைந்திருப்பின், தண்ணீரது அழுத்தமாற்றம் என்ற சக்தியால் அவ்விடத்திலேயேஸமமான எல்லாவித அழுத்தமும் இருத்தல் வேண்டும். இவைகளைச் சோதனைகள் மூலமாக வெளிப்படுத்துவோம்.



முதலில் தண்ணீரில் உள்ள மேல்நோக்க அழுத்தத்தைப்பற்றி எடுத்துக் கொள்ளுவோம். ஓர் சாண் குழாயை எடுத்துக்கொண்டு, அதன்வாயை மூடத்தக்க இலேசான வட்டத்தட்டைத் தயார் செய்து, அதன் மத்தியிலிருந்து நீண்டகயிறு கட்டி விடுவோம். இப்பொழுது அந்தத் தட்டால் குழாயை மூடி கயிற்றை அதனுள்ளாகவிட்டு மற்றைவாயின் வழியாக வெளிவரும்படி செய்து பிடித்துக்கொள்ளுவோம். தட்டுகீழேநிற்கும்படி குழாயை மேல்கீழாகப் பிடித்துக்கொண்டு சற்றுக்கயிற்றைவிடுவோம். அடித்தட்டு வேறாக விழுந்துவிடத் தொடங்குகிறது. மறுபடியும் தட்டை சேர்த்துப் பிடித்துக்கொண்டு குழாயை நேராக ஓர் கண்ணாடிப்பாத்திரத்திலுள்ள தண்ணீருள் ஆழமாக அழுத்திக் கயிற்றை விட்டுப் பார்ப்போம். தட்டு விழுவதே இல்லை. இதனால் தண்ணீருள் மேல்நோக்க அழுத்தம் இருக்கின்றதுஎன்பது வெளியாகும். இதன் அளவைக்காண வர்ணத் தண்ணீரைக் குழாயுள் விடுவோம். வர்ணத்தண்ணீர் மேல் பாகம் வெளித்தண்ணீரின் மேல்பாகத்தோடு ஒரேமட்டமாக வந்த உடன் அடித்தட்டு விழத்தொடங்குகிறது. இதனால் தட்டின்மேல் வெளிநீர் மேல்பாகம்வரையில் நிற்கக்கூடிய தண்ணீரின் கனம் எவ்வளவோ அவ்வளவுதான் தட்டில் மேல் தாக்கும் மேல்நோக்க அழுத்தத்தின் அளவும் என்பது விளங்கும். ஆனால் இந்த அளவுதான் தட்டின்மேல் தாக்கும் கீழ்நோக்க அழுத்தமும். ஆதலால் தண்ணீருள் ஒவ்வொரு பரப்பிலும் மேல்நோக்க அழுத்தம் இருக்கின்றது. அது அதன்மேல் உள்ள கீழ்நோக்க அழுத்த அளவிற்கு ஸமம் என்பது இச்சோதனையால் வெளியாகின்றது.



இனிப் பக்க அழுத்தங்களை எடுத்துக்கொள்ளுவோம். ஓர் உயர்ந்த பாத்திரத்தை எடுத்து அதன் பக்கத்தில் நேராக ஒன்றன்கீழ் ஒன்றாக ஐந்து துளைகள்விட்டு அவைகளைக் கண்ணாடிக்குழாய் ஏற்றப்பட்ட சடையால் அடைத்து, அக்கண்ணாடிக்குழாய்களை ரப்பர்குழாய், அடைப்பு, மூலமாக அடைக்கவும் திறக்கவும் வேண்டிய ஏற்பாடு செய்வோம். இந்தப் பாத்திரம் நிறையத் தண்ணீரைவிட்டு ஐந்து குழாயையும் திறந்து விடுவோம். உடனே கீழ் குழாய் மூலமாகத் தண்ணீர் அதிவேகத்துடனும், மேலே போகப் போகத் தண்ணீர் குறைந்த வேகத்துடனும் வருவதைக் காணலாம். மேலும் மேல் குழாயில் வரும் தண்ணீர் உள்ளிருக்கும் தண்ணீர் மேல்பாகம் இறங்கி வரவர வேகம் குறைந்துவந்து முடிவில் நின்றுவிடுவதையும் காணலாம். இதனால் தண்ணீருள் பக்க அழுத்தங்கள் இருக்கின்றன என்பதும் அவை ஆழத்திற்கேற்ப கீழ்நோக்க அழுத்தத்தைப் போல மாறுகின்றன என்பதும் வெளியாகும்.

ஆகவே ! தண்ணீருள் ஓர் புள்ளியை எடுத்துக் கொண்டால் அதன்மேல் எல்லாப் பக்கங்களிலும் அழுத்தம் இருக்கின்றன. இவை அந்தப் புள்ளி

யின்மேலுள்ள தண்ணீரின் கனத்தால் உண்டாகும் கீழ்நோக்க அழுத்தத்தால் உண்டாகித் தண்ணீரின் அழுத்தமற்ற சக்தியால் ஸமமாக எல்லாப் பக்கங்களிலும் நோக்கும் அழுத்தமாக மாற்றப்படுகின்றன. அந்தப் புள்ளியில் மேல்நோக்க அழுத்தம், பக்க அழுத்தங்கள் காணப்படுகின்றன. இவைகள் ஒவ்வொன்றும் அந்தப் புள்ளியின் மேலுள்ள கீழ்நோக்க அழுத்தத்திற்கு ஸமம்’ என்பவை விளங்கும். இந்த உள் அழுத்தம் தண்ணீரின் மூன்றாவது அற்புதகுணம்.

நான்காவது அற்புதகுணம் தண்ணீருக்கு உண்டு. இது மட்டமாகல் என்ற குணத்திற்கு விரோதமாக இருக்கும். இதை உணரப் பின்வரும் சோதனையைச் செய்வோம். ஒருகண்ணாடி பாத்திரத்திலுள்ள தண்ணீரில் அநேகவித போலுள்ள கண்ணாடிக் குழாய்களை விடுவோம். உடனே போல் குறைந்த குழாயுள் தண்ணீர் வெளிமட்டத்தைவிட அதிக உயர்ந்தும், போல் அதிகமாக, உள் தண்ணீர் வெளிமட்டத்தைவிட கொஞ்சம் உயர்ந்தும் காணப்படும். மயிரிழைப் போலுடைய குழாயுள் தண்ணீர் வெளிமட்டத்தைவிட அதிக உயரம் கிளம்பிநிற்கும். இதற்குக்காரணம் பின்வருமாறு. தண்ணீர் கண்ணாடியில் ஒட்டும் தன்மை உடையது. ஆதலால் குழாயின் போல் குறையக்குறைய அதன் பக்கங்கள் கிட்டநெருங்கிவிடுகின்றன. உள்ளிருக்கும் தண்ணீரும் குறைந்து விடுகின்றது. ஆகவே ஒட்டும் சக்தி தண்ணீரின் கனத்தைவிட மிக அதிகமாகிவிடுகின்றது. சிறுபோலுடைய குழாயுள் ஒட்டும்சக்தி தண்ணீர் கனத்தைவிட அதிகப்பட தண்ணீரை மேல் தூக்கி நிறுத்திவிடுகிறது. மயிரிழைக்குழாயுள்ளோ இந்த ஒட்டும் சக்தி மிக அதிகமாகத் தண்ணீர் மிக உயர்ந்து நிற்கின்றது. போல் அதிகமான குழாயுள் பக்கங்கள் விலகியும் உள் தண்ணீர் அதிகமாயும இருப்பதால் ஒட்டும் சக்தி தண்ணீர் கனத்தைவிட அதிக ஏற்றமுடையதாக இராமல்போக, தண்ணீர் அதிக உயரம் ஏறுவதில்லை. இந்த ஏற்றம் குழாயின் போல் அதிகமாகக் குறைந்தவிடத்து நன்றாகக் காணப்படுவதால் இந்தக்குணத்திற்குத் தந்துஏற்றம் என்று பெயர்.

இதேமாதிரி தந்து இறக்கமும் தண்ணீர் விஷயத்தில் காணலாம். இது ஒட்டும் சக்தியே இல்லாததால் வருவது. ஓர் கண்ணாடிக்குழாயைத் தேங்காய் எண்ணெயில் தோய்த்து நன்றாக உதறிவிட்டுத் தண்ணீரில் விட்டால் உள் தண்ணீர் வெளிமட்டத்தைவிட சற்றுத் தாழ்ந்து நிற்கும். எண்ணெய்க்கும் தண்ணீருக்கும் ஒட்டும் சக்தி இல்லை. தண்ணீர் தனது கனத்தால் எண்ணெயோடு ஸம்பந்தப்பட்டவிடங்களில் நழுவிவிடுகின்றது. இந்த நழுவும் சக்தியால் தண்ணீர் அமுக்கப்படுகின்றது. குழாயின் போல் குறைந்தவிடத்து, நழுவும் சக்தி, குறைந்திருக்கும் தண்ணீரின் மேல்நோக்க அழுத்தத்தைவிட அதிகரிக்க உள் தண்ணீர் வெளிமட்டத்தைவிடக் கீழே அமுக்கப்படுகின்றது. குழாயின் போல் அதிகமாக இந்த நழுவும்சக்தி உள் தண்ணீரின் மேல்நோக்க அழுத்தத்தைவிட கொஞ்சம் அதிகமாக இருக்கின்றது. இதனால் உள் தண்ணீர் கொஞ்சம் தான் அமுக்கப்படுகின்றது. இந்த தாழ்வு அல்லது இறக்கமும் குழாய்களின் போல் அதிகக் குறைந்தவிடத்தே நன்றாகத் தெரிவதால் இந்தக் குணத்திற்குத் தந்து இறக்கம் என்று பெயர். வெறும் கண்ணாடிக் குழாயிலேயே தந்து இறக்கத்தைக் காணலாம். வெறும் கண்ணாடிக் குழாயை அதனோடு ஒட்டும் சக்தி இன்றி நழுவு சக்தி மிகுந்த பாதரஸத்தில் விடவேண்டியது. உடனே உள் பாதரஸம் வெளிமட்டத்தைவிடத் தாழ்ந்திருப்பதைக்காணலாம்.

இவ்விருகுணத்திற்கும் பொதுவாகத் தந்துகுணம் என்று பெயர். இதுவே நான்காவது குணம். கண்ணாடிப் பாத்திரத்திற்கும் தண்ணீருக்கு ஒட்டும் சக்தி இருத்தலால் ஸாதாரணமாக நீர் மேல்பாகம் பாத்திரத்தின் அருகில் சற்று உயர்ந்தும் மத்தியில் தணிந்து மட்டமாகவும் காணப்படும். அதாவது கண்ணாடிப் பாத்திரத்திலுள்ள தண்ணீரின் மேல்பாகம் (தந்து ஏற்றத்தால்) மேலிருந்து நோக்கில் சற்றுக் குழிவாக இருக்கும். கண்ணாடிப்பாத்திரத்தில் பாதரஸத்தைவிட்டால் நழுவும் சக்தியால் அதன்மேல் பாகம்பாத்திரத்தின் அருகில் தணிந்தும்மத்தியில் உயர்ந்து மட்டமாகவும் காணப்படும். அதாவது கண்ணாடிப் பாத்திரத்தில் உள்ள பாதரஸத்தின் மேல் பாகம் (தந்து இறக்கத்தால்) மேலிருந்து நோக்கில் திரண்டு இருக்கும். சாம்பல் துணியை தண்ணீரில் நனைத்தால் அதில் ஈரம் ஏறுவது, ஒத்துகாகிதத்தில் மை ஏறுவது, மணல்குவியலைச் சுற்றிவிட்ட ஜலம் முழுவதையும் நனைப்பது, விளக்குத்திரியில் எண்ணெய் ஏறுவது, செடிகள் அடியில்விட்ட தண்ணீர் அவைகள் உச்சிவரை ஏறுவது, ஆகிய இவைகள் எல்லாம் தந்து ஏற்றகுணத்தால் உண்டாகும் தோற்றங்களே.

இங்குத் தண்ணீரின் நான்குகுணங்கள் எடுத்து விவரிக்கப்பட்டன. அவையாவன, சுருங்காமை (அழுத்தமாற்றம்), மட்டமாகல், உள் அழுத்தம், தந்துகுணம் ஆகிய இவைகளே. ஐந்தாவது முக்கிய குணம் ஒன்றிருக்கிறது. அதற்குத் தாங்குகுணம் என்று பெயர். இத்துடன் அநேக அற்புத விஷயங்கள் ஸம்பந்தப்பட்டிருப்பதால் இதை வேறாக எடுத்து அடுத்த ஸஞ்சிகையில் விவரிப்போம்.

இந்துலேகை

(264-ம் பக்கத் தொடர்ச்சி)

3-ம் அத்தியாயம்

கோபத்தினாற் செய்த சபதம்

பஞ்சமீனனுக்கும் மாதவனுக்கும் நடந்த வாக்குவாதத்தைப்பற்றி நாம் முதல் அத்தியாயத்திற் கூறியிருப்பது எல்லோருக்கும் ஞாபகமிருக்கும். அச்சண்டையின் காரணமாக பஞ்சமீனனுக்குக் கோபம் மேலிட்டது. அவன் கண்களினின்றும் நெருப்புப்பொறி பறந்தன. அவன் சுபாவமாக அற்பத்திற்கெல்லாஞ் சினங்கொள்பவன். அப்பேர்ப்பட்டவனுக்கு இப்போது கேட்பானேன்? பேய்க்குக் கள்வார்த்தாப்போலிருந்தது. அவன் புத்தி தடுமாற்றங்கொண்டது. லக்ஷ்மி கடாக்ஷம் பூர்ணமாய்ப் பொருந்திய செம்பேழியத்துப் பூவல்லி என்னும் வீட்டிற்கு அவன் எஜமானனாயிருந்தான். அவனுக்கு முன் அந்த எஜமான ஸ்தானத்திலிருந்தவர்களில் இரண்டு பேர் ஒரு சுதேச மன்னனின் கீழ்த் திவான் (மந்திரி) உத்தியோகம் பார்த்துவந்தவர்கள். பூர்வகாலந்தொட்டே இந்தப் பூவல்லிவீட்டார் ஐசுவரியத்திலுஞ் சிறப்பிலுஞ் செல்வாக்கிலுஞ் சிறந்தவர்களா யிருந்துவந்தனர். இந்தவம்சத்திற் பிறந்தவர்களின் சாமர்த்தியத்தினாலும் அதிர்ஷ்டத்தினாலும் இவ்வீட்டினது செல்வமுஞ் செல்வாக்கும் தினேதினே விருத்தியாயிற்று. ஆனால் சிறிதுகாலமாக ஏதோ கொஞ்சம் அதிர்ஷ்டக்குறைவினால் க்ஷீணதசையடைய வாரம்பித்ததெனினும் இன்னும் இது, தன் பூர்வ அந்தஸ்த்தினின்றும் அதிகமாய்த் தாழ்ந்துவிடவில்லை. நமது கதை யாரம்பிக்குங் காலத்தில் வருஷத்திற்கு நிலங்களிலிருந்து தானிய வகையில் 26,000-படியும் தோட்டந் துரவுகளிலிருந்து ரொக்கத்தில் ரூபா 10,000-மும் வருமான மிருந்தது. குடும்பம் பெரிதானதாலும் செலவும் அதற்குத் தக்கபடி அதிகமா யிருந்ததினாலும் வருஷவாரியில் செலவுபோக மீந்தது ரூபா 5,000-தான். பஞ்சமீனன் ஒரு உலோபி. எச்சிற்கையால் காக்கையோட்டமாட்டான். ஆயினும் அவன் ஜெபம் இங்குச் சாயவில்லை. ஏனெனில் தர்மசிந்தையுந் தயாளகுணமும் ஒருங்கே அமையப் பெற்ற இவனது முன்னோர்கள், பிராமணர்களுக்குத் தினம் இரண்டு வேளைகளிலும் அன்னமளிக்கும் இரண்டு சத்திரங்களையும், சகல உற்சவாதிகளும் அதிக வைபவத்துடன் நடைபெறும் லக்ஷ்மி கோவிலொன்றையுங் கட்டி வைத்துவிட்டுப் போயினர். இந்தத் தர்மங்களை நிறுத்த இவனுக்கு யாதொரு அதிகாரமுங் கிடையாது. இதுவுமல்லாமல், பெரியோர் காலந்தொட்டே குடும்பத்தார் வெகு டாம்பீகமானகுடித்தனஞ் செய்து வந்தனர். ஸ்திரீகள் எப்போதும் விலையுயர்ந்த பட்டாடைகளையே உடுத்தனர். ஸ்நானஞ் செய்வதற்கு எண்ணெய் முதலியன எப்போதுங் குறைக்கப்படாமல் அளவிற்கு மிஞ்சியே வாங்கப்பட்டு வந்தன. வீட்டில் ஸதா ஸர்வகாலமுஞ் சேவகர்கள் பலர் உழைத்து வந்தனர். இவற்றிலெல்லாஞ் செலவை இழுத்துப்பிடிக்க அவனாற் சாத்தியப்படவில்லை. ஆனபோதிலும், செலவு அதிகமாய்ப் பிடித்த வருஷத்தில் ரூ 5,000-த்திலிருந்து எடுப்பது அவனுக்கு எட்டிக்காயாயிருந்தது. இவ்வளவு உலோபத்தனத்திலும், அவன் தன் மனைவியாகிய குனி குட்டியம்மாளுக்கும் தன் குமாரியான லக்ஷ்மி குட்டியம்மாளுக்கும் ரூ. 30,000-பெறும்படியான சொத்தை எழுதிவைத்தான். இந்த லக்ஷ்மி குட்டியம்மாள் தான் இந்துலேகையின் தாயார். அவன் மனைவியும், அவன் சென்னையினின்று வந்தபோது அவனது குமாரனாகிய கோவிந்த குட்டிமீனனும், இந்துலேகையும் அவளது தாயும் எல்லாரும் பஞ்சமீனனுடன் பூவரங்கிலிருக்கும் அவனது வீட்டில்வசித்துவந்தனர். அவனுக்கு இரண்டு மூன்று வீடுகளிருந்தன. எல்லாம் இரண்டு மாடிகளையுடையன. இந்த இருப்பிடத்திற்கருகில்தான் ஸ்நானாலயம், குளம், தேவாலயம், பிராமணர்களுக்கான அன்னசத்திரம் முதலியவைகளிருந்தன. இப்பூவரங்கு வீட்டிற்கு இருநூறு, முந்நூறு கஜங்களுக்கப்பால்தானிருந்தது பூவல்லி வீடும். ஆனால் இரண்டிற்குஞ் சேர்த்து ஒரே மதில்சுவர்தான் போடப்பட்டிருந்தது.

நமது கதை தொடங்குங் காலத்தில் பஞ்சமீனனுக்கு வயது எழுபதாயிற்று. அவனது சிற்றப்பன்மார்களில் ஒருவர் திவான் உத்தியோகத்திலிருந்தபோது, அவன் ஒரு தாசீல்தாரனாயிருந்தான். இப்போது அவன் வேலையைவிட்டு முப்பது வருஷகாலமாய்விட்டது. அவன் கண்ணுக்கழகாயிருப்பான். தேகம் பெருமனுங் குள்ளமாயும் அமையப்

பெற்றவன். தலையோ வழுக்குத்தலை. வாயில் மேல்வரிசையில் மூன்று பற்களும் கீழ்வரிசையில் ஐந்து பற்களுந்தான் போயிருந்தன. அவன் இடுப்பில் தங்கபெல்டு போட்டிருந்தான். தங்கத்திற்கட்டப்பட்ட உத்திராக்ஷமாலையொன்று அவன் கழுத்தில் தொங்கிற்று. தலையில் ஒரு கம்பளிக்குல்லாவுங் கையில் வெள்ளிப்பிடிபோட்ட தடியொன்றுமிருந்தன. அவன் தாசீல் உத்தியோகம் பார்த்தானென்று நாம் கூறியிருப்பதைக்கொண்டு அவனுக்கு ஆங்கிலபாஷை தெரியுமென்று நமது நண்பர்கள் அபிப்பிராயப்படலாகாது. ஆங்கிலத்திலொரு அக்ஷரங்கூட அவனுக்குத் தெரியாது. அவன் உண்மையில் தயை, தாக்ஷிணியம், அன்பு முதலிய நற்குணங்களை யுடையவனாயினும், அவனுக்கும் கோபத்திற்கும் வெகு சிநேகம். நண்பர்கள் ஒருவரைவிட்டொருவர் பிரிந்திருப்பது துர்லபம்; இதனுடன் வயதுமாய்விட்டபடியால் கேட்கவேண்டுமோ? யாரைக் கண்டாலும் எரிந்து விழுவான். எப்போது பார்த்தாலும் முகத்தில் எள்ளுங் கொள்ளும் வெடிக்கும். சாந்தமென்பது ஒருவேளையுங் கிடையாது. இவைகளுடன் கிழநச்சுங் கூடச்சேர்ந்தது. அவன் சிரித்த முகத்துடன் பேசுவது இந்துலேகையொருவளுடன்தான். இதற்குக் காரணம் உயிரோடிருக்கும்போது பேஷ்கார் உத்தியோகம் பார்த்துவந்தத் தன் குமாரனாகிய கிருஷ்ண மீனனிடமிருந்த அன்போ அல்லது இந்துலேகையின் உத்தம குணங்களோ என்பது புலப்படவில்லை. இவைகளிலேதாவதொன்றுதான் இருக்கவேண்டும். பஞ்சமீனனுக்கு அவனுடைய முன்கோபம் அவனுக்கே நன்றாய்த் தெரியுமாதலால், இந்துலேகையின் முன்னிலையில் எங்கே தனக்குக் கோபம் வந்துவிடப்போகிறதோவெனப் பயந்து அவளைப் பார்க்க அவன் அவளுடைய வீட்டிற்குப் போவதில்லை. ஆனபோதிலும் தினத்திற்குக் குறைந்தபக்ஷம் இரண்டு மூன்று தடவை யவளைப்பற்றி விசாரித்துக்கொண்டே யிருப்பான். இந்துலேகையைத் தவிரப் பூவரங்கிலாகட்டும், பூவல்லியிலாகட்டும் வசிப்பவர்களில் ஒருவராவது அவனுடைய கோபத்திற்காளாகாமல் ஒரு தினமாவது கழிப்பதில்லை. மாதவனுக்கும் அவனுக்கும் வாக்குவாதம் நடந்தபோது காலை சுமார் 6-மணி இருக்கும். இந்தச் சச்சரவு முடிந்தவுடன் பஞ்சமீனன் கோபாக்கிராந்தனாய்ப் பூவரங்கிலிருக்குந் தனது வீட்டிற்குப் போய்த் தாழ்வாரத்தில் தன் குமாரத்தி லக்ஷ்மி குட்டி மாத்திரமிருப்பதைக்கண்டு "அந்த மூட ஈன ஜாதிப்பயலைப் பார்த்தாயா? சண்டாளன்! நீசன்! ஒரு காசுக்கு முதவாத தாதலை! அவன் என்னிடம் எவ்வளவு அவமரியாதையாய்ப் பேசினான் தெரியுமா? என்னைக் கொஞ்சங்கூட லக்ஷியம் பண்ணாமற் பேசினான் துஷ்டன்." என்று உளறினான்.

"யார்?" என்று லக்ஷ்மிகுட்டி கேட்டாள்.

"யார்? மாதவன் தான்."

"என்ன, மாதவனா?" என்றாள் லக்ஷ்மி.

"ஆம், மாதவனென்று நான் முன்னமே சொல்லவில்லையா?" என்று பதைபதைத்து விடைகூறினான் பஞ்சமீனன்.

பிறகு மாதவன் கூறினவற்றைக்கூடக் கொஞ்சம் சுவயமாய்க் கலந்து ஜாஸ்தியாக்கிச் சொன்னான். அவன் இதைத் தன் மகளிடஞ் சொல்லிக்கொண்டிருந்தபோது, கேசவன் நம்பூதிரி ஓர் அறையிலிருந்து வெளிவந்து எல்லாவற்றையுங் கேட்டுக்கொண்டிருந்தான். பஞ்சமீனன் திரும்பி யவனைப்பார்த்து "இக்கீழ்மகனுக்கு என்னுயிருள்ளமட்டும் நான் இந்துலேகையை மணம் புரிவிப்பதில்லை. என்ன, லக்ஷ்மிகுட்டி, மௌனஞ் சாதிக்கிறாய்?"

"நான் என்ன சொல்வது?" என்றாள் லக்ஷ்மி குட்டி.

"இன்னும் மாதவன்மீது நீ அவ்வளவு அன்பு பாராட்டுகிறாயா? சொல், என்ன, அவனது கட்டழகில் நீ மயங்கிவிட்டனைபோலும். இல்லாவிட்டால், நீ இவ்வாறு வாய்புதைத்து நிற்பதின் அருத்தமென்ன? நீங்களெல்லாரும் அற்பபுத்தியுடையவர்கள். பாரபுத்தி யென்பதே லவலேசமுங் கிடையாது. உங்கள் தலைகளையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து ஒரே நொறுக்காய் நொறுக்கிவிட்டாலும் என் ஆத்திரந் தீராது." என்று கூறினான் பஞ்சமீனன்.

"மாதவன் எப்படிப் போனாலெனக்கென்ன? இந்த விஷயமாய் நான் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை.

ஆனால், நான் சொல்லவேண்டியது கொஞ்சமிருக்கிறது. நான் வழிபடும் பகவதிதேவி சாக்ஷியாய் நான் இந்துலேகையை மாதவனுக்கு மணம் புரிவிப்பதில்லை. இது சத்தியம்."

இச்சபதஞ் செய்தானோ, இல்லையோ, உடனே

பஞ்சமீனனுக்குப் பூர்வஞானம் வந்துவிட்டது. தான் முன்பின் ஆராயாதுசெய்த சபதத்தைப்பற்றி நினைத்து நினைத்து அனலிட்ட மெழுகுபோல் மனமுருகுவானாயினான். இந்துலேகையின் புத்தி சாதுரியத்தையும் அவள் மனதின் வலிமையையுந் தீரத்தையும் அவன் நன்றாய் அறிவான். மாதவனுக்கும் அவ்விளங்கொடிக்கும் பரஸ்பரம் உள்ளநேசமுமவனுக்குத் தெரியும். ஆதலால் தன் சபதம் நிறைவேறுமோ, நிறைவேறாதோ வெனப் பெரிதுங் கிலேசப்பட்டான். தன் வார்த்தை பொய்யானால்தான் மிகவும் அவமானப்படவேண்டியிருக்குமேயென்று பெரிதும் வருத்தமுற்றான். இவ்விதமான எண்ணங்களால் மனதைப் புண்படுத்திக்கொண்டு தாழ்வாரத்தில் ஒரு பலகையின்மீது உட்கார்ந்திருக்கும்போது, ஒருமணிநேரங் கழித்துத் திடீரென அவனுக்கு ஓர் எண்ணந் தோன்றிற்று. உடனே கேசவன் நம்பூதிரியை யழைத்துவரும்படி ஒரு ஆளையனுப்பினான்.

நம்பூதிரி வந்து பலகையின்மீது உட்கார்ந்தவுடன் பஞ்சமீனன் அவனருகிற் சென்று அவனது காதில் வெகு இரகசியமான சில வார்த்தைகளைச் சொன்னான். "என் அருமை நண்பா, அன்றைக்கு மூர்க்கிலத்த நம்பூதிரியைப்பற்றி என்னிடம் நீ பேசிக்கொண்டிருந்தாயே, அப்போது நான் இந்துலேகையைப்பற்றி அவன் கேள்விப்பட்டிருக்கிறானென்றும் அவளை மணம்புரிய அவன் அதிக ஆவல் கொண்டிருக்கிறானென்றுஞ் சொன்னதாக எனக்கு நினைவிருக்கிறது. அவன் கண்ணுக்கழகாயிருப்பானா? தெரியுமா உனக்கு?"

"அவன், அழகில் மன்மதனையும் பழிப்பவன். அவன் முகம் நல்ல தங்க வர்ணத்தையுடையது. இந்துலேகையின் முகத்தைக்காட்டிலும் எத்தனையோமடங்கு அதிக அழகு வாய்ந்ததென்றால் அவன் முகம், அதைப்பற்றித் திரும்பியுஞ் சொல்லவேண்டுமோ? நான் இதுவரையில் அத்தகைய சுந்தர புருஷனைக் கண்டதேயில்லை." என்று தன்னாலானவரையில் வஞ்சனையின்றிப் புளுகினான் கேசவன்.

"இந்துலேகை யவனைப்பார்த்தால் அவனிடங் காதல் கொள்வாளென்பது உனக்கு நிச்சயமா?" என்று கேட்டான் பஞ்சமீனன்.

கேசவநம்பூதிரி பூணூலைக் கையிற் பிடித்துக்கொண்டு "நான் இந்த யக்ஞோபவீத சாக்ஷியாய்ச் சொல்லுகிறேன். அவனைக்கண்ட அத்தக்ஷணமே அவள் அவனை விவாகஞ் செய்துகொள்ள பேராவாக் கொள்வாளென்பதிற் யாதொரு ஐயமுமில்லை. வீண் வார்த்தையிலென்ன பிரயோசனம். அவனை நீர் நேரில் பார்த்தால் எல்லா சங்கதிகளும் கரதலாமலகம்போல் வெளிச்சமாய்த் தெரியும்." என்றுவாய் கூசாமற் பதிலுரைத்தான் கேசவன்.

"அதற்கென்ன? அப்படியே வரவழைத்துவிடுகிறேன்."

"அவனை இங்குக் கொஞ்சகாலம் வரவழைக்க உன்னால் முடியுமா?" என்று ஆவலுடன் கேட்டான் பஞ்சமீனன்.

"அவன் இங்குவந்தால் இந்துலேகை மாதவன் மீது வைத்திருக்குங் காதலை யொழிப்பாளென்பது என்ன நிச்சயம்?" என்றான் பஞ்சமீனன்.

கேசவன் நம்பூதிரி மறுபடியும் பூணூலைக் கையிற் பிடித்துக்கொண்டு, "நான் பிராமணனாயிருப்பது உண்மையானால், அவள் மாதவனை மறந்து நம்பூதிரியை மணம் புரிவாளென்பதும் உண்மையே. எனக்கு இதிற் கிஞ்சித்தாயினுஞ் சந்தேகங்கிடையாது." என்றான் கேசவன்.

பஞ்சமீனன் ஆனந்தக்கடலில் மூழ்கினவனாய். "அப்படியானால் அவனை இங்கு வரும்படி எழுது. ஆனால் மூடத்தனமான தொன்றுமெழுதாதே, உனக்குத்தான் இந்துலேகையின் குணாதிசயங்கள் நன்றாய்த் தெரியுமே. ஆகையால் ஜாக்கிரதையாய் எழுது. கடைசியில் நாமிருவரும் அவமானப்படாமலிருக்கும் விதமாய்க் காரியத்தை நடத்து. இங்கு வந்து இரண்டு மூன்று தினங்கள் தங்கியிருக்கும்படிக்கு நம்பூதிரிக்கெழுது." என்று குதூகலத்துடன் சொன்னான் பஞ்சமீனன்.

"உண்மையில், எல்லாவற்றிற்கும் ஈசனொருவனிருக்கிறான். இந்துலேகை அடையப்போகும் சுகத்திற்கோர் அளவில்லை. அவளது குடும்பம் நல்ல ஸ்திதியிலிருக்குமானால், எனக்கும் நல்லகாலந்தான். இதோ போய் உடனே எழுதுகிறேன்." என்றுரைத்தான் கேசவன்.

"பத்திரம், கடிதமெழுதுவதில் ஜாக்கிரதையாயிரு இந்துலேகைக்கு ஆங்கிலபாஷை முதலியவை நன்றாய்த் தெரியும். பிடித்த பிடியை விடாது அடம் பண்ணுவாள். அப்புறம் நம்முடைய ஜெபமொன்றுஞ் சாயாது. எல்லாம் நம்பூதிரியால் தான் ஆகவேண்டும். அவனுடைய நடவடிக்கைகளால் அவனேதான் இந்துலேகையின் மனதைத் திருப்பிக்கொள்ளவேண்டும். இதைத்தவிர வேறு வழியொன்றையுங் காணோம்." என்றான் பஞ்சமீனன்.

"நம்பூதிரி அவளுடன் ஒரு மணிநேரம் பேசியபின், இந்துலேகை யவன்மீது காதற்கொள்ளாள் என்பது நிஜமானால், கீழ்த்திசையிலுதிக்குஞ் சூரியன் மேற்றிசையி லுதிப்பானென்பதும் உண்மையே' என்றான் கேசவன் நம்பூதிரி.

"அவ்வளவு தைரியமாய்ச்சொல்லுகிறாயே என்ன? நம்பூதிரி அவ்வளவு கட்டழகு உடையவனா?" என ஆவலுடன் வினவினான் பஞ்சமீனன்.

"இந்த விஷயத்திற் கிஞ்சித்தும் ஐயமில்லை. நான் இதோபோய் உடனே எழுதுகிறேன்" என்றான் கேசவன் நம்பூதிரி.

"என்ன, நான் சொன்னது தெரிந்ததா? அதே மாதிரி செய்யவேண்டும்" என்றான் பஞ்சமீனன்.

தள்ளக்கூடாத சங்கடத்துக்குத் துக்கப்பட்டுலாபமென்ன:—இதைத்தான் பெரியோர்கள் "தெய்வசங்கற்பம்" என்பார்கள். மானிடர்களாகிய நம்மால் இதை அகற்றமுடியாது, தெய்வம் தான் செய்வதைச் செய்தே தீரும். மானிடர்களாகிய நம்மால் எது செய்யக்கூடுமோ அதைச் செய்துவிட்டு நாம் துக்கப்படாமலிருக்கவேண்டும். இனிமேல் இதிலிருப்பது ஈசன்செயல் என்று எல்லாவற்றையும் தெய்வத்தின் கையில் ஒப்பித்துவிட்டு நாம் துக்கப்படாமலிருக்கவேண்டும். சிறுவயதில் இதன் உண்மை நமக்கு அவ்வளவு செவ்வையாக விளங்கமாட்டாது. வயது செல்லச் செல்ல நமக்குத் தெய்வபக்தியும், தெய்வத்தின்கடாக்ஷமும் அதிகமாகவே, இதன் உண்மை விளங்கும். வீணான ஏக்கத்துடன் விசாரமும் துக்கமுமடைந்து தீராத்துன்பத்தை யகற்றமுயலுவதைவிட எல்லாம் தெய்வசங்கற்பம் என்று தெய்வத்தின் மேல் பழியைப்போட்டு நமது துயரத்தைவிட்டு நீங்கிச் சுகமாக வாழ்வது எவ்வளவு மேன்மை? இதே விஷயத்தைத்தான் பகவத்கீதை முதலான கிரந்தங்கள் நாம் துயரப்படும்பொழுது நாம் ஈசுவரனையே துணையாக அடையவேண்டுமென்று முறையிடுகின்றன,

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமா?—கரும்பு தின்னுவது மிகக் கடினம். அது பலமான கழியாக இருப்பதால் அது தின்னத்தின்னப் பல்வலி எடுக்கும். அஜாக்கிரதையாய்க் கணு முதலியவற்றைக் கடித்துவிடுவோமாகில் நமது பற்களிலிருந்து ரத்தம் வந்தாலும் வரும். இவ்வளவு கஷ்டமான வேலையாகிலும் அதைத் தின்றால் அதன் சாறு மிகத் தித்திப்பாயும் பசி தாக முதலியவற்றைச் சாந்தம் செய்வதாயும் இருக்கின்றது. மேலும் வாழை மரத்தை வெட்டிவரும் கத்திகூராகிவருவதுபோல்கரும்புதின்னப் பற்களில் உள்ள அழுக்குக்கள் எல்லாம் போய்ப் பற்குச்சி போட்டுப் பல் தேய்த்துவிட்டாற்போல சுத்தமாகிவிடும். கஷ்டமான வேலைகளை செய்து முடிப்பதற்கு ஜனங்கள் பொதுவாகக் கூலி கேட்பது வழக்கம். இதன்படி கரும்புதின்ன ஏன் கூலி கேட்பதில்லை? அந்த வேலை கஷ்டமான வேலையாயினும் அதைச் செய்வதினாலேயே செய்பவனுக்குத் தித்திப்பான ஆஹாரமும் பானமும் கிடைக்கிறது. ஆகையால் இதைச்செய்ய ஒருவரும் கூலி கேட்பதில்லை. இதுபோலவேதான் காற்றக்காலங்களில் குடை பிடிக்கும்பொழுதும், குடையை அக்காலங்களில் கையில்நிலை பெறும்படி பிடிப்பது மிகக் கஷ்டமாயினும், அது வெயில் அல்லது மழையிலிருந்து நம்மைக் காப்பாற்றுவதால் அந்தக் கஷ்டத்தைப் பாராட்டாது நாம் அதையும்பிடித்துப் போகிறோம்.

இதுபோலவேதான் ஸன்மார்க்கத்தில் பழகுவதிலும், சிற்றின்பங்கள் நிறைந்த இப்பாழுலகில் ஸன்மார்க்கத்தில் நிலைபெற்று நடப்பது மிகக்கடினம். 'நன்மை விதைத்தால் நன்மை விளையும்' என்ற பழமொழி ஒரே ஜன்மத்தில் பெரும்பாலும் உண்மையாகக் காணப்படுவதில்லை. அவனவன் கர்மானுஸாரம் அனேக ஜன்மங்களில்தான் அதன் உண்மை வெளியாகும். ஒரு ஜன்மத்தில் உள்ளவைகளை நோக்கில் ஸன்மார்க்கத்தில் நடப்பவர்களுக்கு இஹலோக ஸுகம் குறைவாகவும், துன்மார்க்கிகளுக்கு இது அதிகமாயும் காணப்படும். தருமபுத்திரர் ஸீதை முதலியவர்கள் பட்ட கஷ்டங்களையும் பின்னர் அவர்கள் மனம் நொந்து வாழ்நாட்களை முடித்

தையும், துரியோதனாதிகள் இராவணன் முதலியோர் இருந்தவரையில் ஸுகமாக இருந்ததோடும், முடிவில் வீராகப் போர்க்களத்தில் முன்வைத்த கால் பின்வைக்காது கீர்த்திபெற இறந்ததோடும் ஒப்பிட்டால் நாம் முற்கூறியதின் உண்மை நன்கு வெளியாகும். இதனால் ஸாதாரண ஜனங்களால் எளிதில் ஸன்மார்க்கத்தில் நிலைபெற முடியாது. ஸன்மார்க்கத்தில் நிலைபெற்று நடப்பது இவ்வளவு கடினமாயினும், அதில் சற்றுப் பழகினால் அதனால் நமது மனதிற்கு வரும் சாந்தம், விசாலம், ஸந்தோஷம் சற்று வெளியாகும். இம்மார்க்கத்தில் பழகுவதால் உண்டாகும் கஷ்டங்களுக்கு இவைகளே தகுந்த பரிஹாரமாகும். ஆகையால் ஸன்மார்க்கத்தால் எவ்வளவு கஷ்டம் உணடானபோதிலும், அதில் நடைபெறுவதற்கு எவ்வளவு தடை ஏற்பட்டபோதிலும் அதனால் மனதிற்கு வரும் மேன்மையை அறிந்த ஒவ்வொருவனும் அந்தக்கஷ்டத்தைத்தாங்கிக்கொண்டு வேறு பலன் ஒன்றையும் அபேக்ஷிக்காது ஸன்மார்க்கத்தில்விடாது முயலுவான். ஸன்மார்க்கக் கரும்பைத்தின்னக் கூலியும் கேட்பாருண்டா? அது கரும்பென்று உணர்ச்சி மாத்திரம் ஒருவனுக்கு இருந்தால் போதும்.

* * *

ஆகவே கரும்புதின்னக் கூலியும் வேண்டுமா? என்ற பழமொழிக்கு ஒருவேலையைச் செய்வதே ஒருவனுக்குச் சிறந்த பலனைக்கொடுக்குமாயின் அதைச் செய்வதற்கு ஒருவனும் கூலிகேட்கமாட்டான் என்பது பொருள்.

வாயிலாநாயனார் திவ்யகதை.—இப்பொழுது தான் திருமயிலை அறுபத்துமூவர் உத்ஸவம் நடந்தேறியது. இந்த ஸந்தர்ப்பத்தில் அறுபத்து மூவருள் ஒருவராயும் திருமயிலையில் அவதரித்தவராயும் உள்ள வாயிலாநாயனாரைப்பற்றிக் கூறி ஆனந்திப்போம்.

வருஷங்களில் ருதுக்கள் எவ்வாறிருக்கின்றனவோ, அவ்வாறே மத விஷயங்களிலும் தகுந்த காலங்கள் உண்டு. எவ்வாறு வஸந்தருதுவில் செடிகொடி வர்க்கங்கள் தழைத்து ஓங்கி அழகிய புஷ்பங்களைத் தாங்கி நிற்பதும் அல்லாமல் வழியிலுள் புற்பூண்டுகளும்கூடப் புஷ்பித்து ஆனந்தகரமாக விளங்குகின்றனவோ, அவ்வாறே கடைசிப்பாண்டியர்கள் காலத்தில் ஏற்பட்ட சிவமதக்கிளர்ச்சியில் தென் இந்தியாவில் ஒவ்வொரு மூலை முடுக்கிலிருந்தும் மஹான்கள் கிளம்பினர். இவர்கள் ஸகல ஜாதியார்களிடத்திலிருந்தும் கிளம்பி நமது நாட்டைப் புனிதமாக்கினர். நந்தன் முதலிய இத்தகைய மஹான்களை நாம் எல்லோரும் மிகுந்த மனஉருக்கம் பக்தி முதலியவைகளுடன் இன்னமும் மறவாது ஞாபகத்தில் வைத்திருக்கிறோம். நமது கதாநாயகராகிய வாயிலார் இந்தக்கிளர்ச்சிக் காலத்தில் திருமயிலையில் வேளாளர் குலத்தில் உதித்தவர். அவர் வாழ்க்கைத்தொழில் பகவத் ஆராதன மாத்திரமாயிருந்தபடியால் அவர் வாழ்நாளில் அற்புதவிஷயங்கள் ஒன்றும் ஸம்பவிக்கவில்லை. இந்தத் தொழில், பெரும்பாலார்க்கும் மிகஸாரமற்றதாகத் தோன்றிய போதிலும், நாயனார் ஆயுள்முழுவதைக் கவர்ந்து அவருக்குப்பேரானந்தத்தை அளித்துக்கொண்டு வந்தது.

வாயிலாரது பூஜை மிக அற்புதமானது. ஊரிலுள்ள கோயிலுக்கு அவர் போனவரேயல்லர். அங்கு நடக்கும் விஷயங்கள் அவர் மனோநிலைக்குத் தாழ்ந்தவைகளாகவே அவருக்குப்பட்டபடியால் அவர் ஓர் பெரிய கோயில் கட்டினார். அதைப்போன்ற சிறந்தகோயில் இவ்வுலகில் எங்கும் இல்லை. அதற்கு அநேகம் பொற்கோபுரங்களை அமைத்தார். வெள்ளிச்சுவர், ரத்னஸ்தம்பங்கள் முதலியவைகளோடுகூடி விஸ்தாரமானய மண்டபங்களை அங்கு அமைத்தார். நல்ல ஒழுங்காக அந்தக் கோயில் கட்டப்பட்டிருந்தது. அதைச்சுற்றிப் பஞ்சலோகங்களால் செய்த ஐந்து பிரகாரங்கள் இயற்றி அவைகளுள் வெளிச்சுவரை இரும்பாலேயும், உள்சுவரை பொன்னாலேயும் அமைத்தார். அந்தக் கோயிலுள் மாம்பழம் பிரமாணமாக உள்ள ரத்னங்கள் மூலமாகப் பிரகாசம் உண்டாக்கினாரே ஒழிய,ஸாதாரண தீபங்களை அவர் அங்குப் போடவில்லை. கண்ணாடிகளை விசித்திரமாக ஒழுங்குபடுத்தி வைத்துக் கோயில் வைபவங்கள் மிகச் சிறப்புற்று விளங்கும்படி செய்தார். இந்தக் கோயிலின் மத்தியில்தான் கைலாஸத்திற்கு ஸமமாகிய மூலஸ்தானத்தை அமைத்தார். இதில் பகவத் ஸ்வரூபமான மூல லிங்கம் அமைக்கப்பட்டு" விலை உயர்ந்த ஆபரணங்கள், நல்ல பரிமளம் வீசும் புஷ்பங்கள் ஆகிய இவைகளால் அனந்தமாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. இந்த லிங்கத்தின் இருபுறத்திலும் இரண்டு கல்பக விருக்ஷங்கள் அமைக்கப்பட அவைகள் தமது திவ்ய கந்தத்தைக் கோயிலெங்கும் பரவச்செய்தன. இவர் கட்டிய கோயிலின் பெருமையை மனிதர்கள் நாவால் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் அதன் லவலேசத்தைக்கூட உள்ளபடி வர்ணிக்கமுடியாது.

இவ்வளவு சிறந்த கோயிலைக்கட்டப் போதுமான திரவ்யம் வாயிலாருக்கு எங்குக் கிடைத்தது? அவர் எங்கு இதைக்கட்டினார்? என்ற சங்கை எல்லோருக்கும் பிறக்கும். அவர் திரவ்யத்தால் இக்கோயிலைக் கட்டவில்லை. அவர் கற்பனாசக்தியே இதற்கு முக்கிய ஸாதனம். இந்த கற்பனாசக்தி முற்கூறியபடி ஒழுங்காகத் தொழிற்படுவதற்கு அபூர்வ திரவ்யமாகிய பகவத் பக்தியே அவருக்கு மூலபலமாக இருந்தது. இவ்வற்புதக் கோயிலை அவர் தமது மனதிலேயே கட்டிக்கொண்டார். அவர் இந்தக் கோயிலிலுள்ள பரம்பொருளோடேயே ஸதா இணைபிரியாதிருப்பார். தமது சாப்பாடு, தூக்கம், தொழில் முதலியவைகளைக்கூட மறந்து, இராப்பகல் ஓய்வு ஒழிவு இன்றி இப்பகவானுக்குப் பூஜைகளை நடத்துவார். இரவானாலும் பகலானாலும் ஸரி, இடி இடித்தாலும் மழைபெய்தாலும் ஸரி, ஒன்றையும் கவனியாது இவர் தமது பகவத்பூஜையை விடாது நடத்திப் பரவசயாகி, தமது கோயில் பரம்பொருள் எல்லாவற்றையும் மறந்து தான் மாத்திரமாகச் சேவித்து அசைவற்றிருப்பார். வரவரப் பழக்க விசேஷத்தால் இவர் மானஸபூஜை பழுத்து ஞானநிஷ்டையாக, விக்கிரஹம் மறைந்து தானே பரம்பொருளாகச் சேவித்து நின்றார். நாயன்மார்கள் திவ்ய சரிதைகளை எழுதிய சேக்கிழார்,

> 'மறவாமை யானமைத்த
>   மனக்கோயி லுள்ளிருத்தி
> யுறவாதி தனையுணரு
>   மொளிவிளக்குச் சுடரேற்றி
> யிறவாத வானந்த
>   மெனுந்திருமஞ் சனமாட்டி
> யறவாணர்க் கன்பென்னு
>   மமுதமைத்தர்ச் சனைசெய்வார்.

ஆனந்த பரவசமாகக் கூறுகிறார். அவரது மௌனமான மானஸபூஜையின் சிறப்பு காலக்கிரமத்தில் பலர் அறிய வெளிவர, அவர் விதேக முக்திபெற்றதும் ஸமாதிசெய்யப்பெற்று நாயன்மார்களுள் ஒருவராக மதிக்கப்பெற்றார்' என்று புராணங்கள் கூறும். இப்பொழுது திருமயிலை அம்பாள் ஸந்நிதிக் கெதிரில் பிராகாரத்தில் வாயிலாநாயனார் கோயில் இருப்பதை யாவரும் காணலாம்.

இதுவே மானஸபூஜையின் சிறப்பு. நண்பர்களே! பரமபதம் இவ்வளவு எளிதில் கிடைக்கக்கூடியதாயினும், எவ்வளவு சிரமஸாத்யமாகவும் இருக்கிறது பாருங்கள்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

சகுந்தலை அல்லது பிரிவினிலை

1. கடிதம் வரைந்த காதை

> காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
> தீதி லொருகருமஞ் செய்பவே—ஓதுகலை
> யெண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கல்
> கண்ணிரண்டு மொன்றையே காண.

என்பது நன்னெறி. தருமவழியின்கண் உண்டாகும் அமுதமூட்டிய நூலில் காணப்பட்ட அப்பாடலின் கருத்து ஒவ்வோர் பெண்டிரின் மனத்திலுமிருப்பின் உலகிற்கு ஸுகமன்றித் துக்கமெங்குண்டாகும்? கணவன் சொற்கிணங்கி அவன் சொல்லிய வண்ணம் நடக்கும் பெண்டிர் இக்காலத்து கிடைப்பதரிதென்பர்—அது எம்முறையன்று, தருமவழியில் நடப்பின், முதலில் இன்பமடைந்த காலத்தில் மாத்திரம் தமது வழியென அதைக்கொண்டு, நடுவில் ஏதோ தமது கரும விசேஷத்தால் துன்பமுண்டாகுமெனில், தருமவழியில், விட்டுவிடலாமோ? தமக்கு வேண்டிய காலத்தில் தருமம், மற்றையகாலத்தில் அது வேண்டாமென்பது ஒரே தன்மையான குணமுடைமையில்லாமையைக் குறிக்கும். ஆதலால் கஷ்டம், ஸுகம் இவற்றை எண்ணாது, கணவனது எண்ணத்தை எக்காலத்தும், எவ்விடத்தும் ஒற்று நடப்பின், இடையே சில துன்பம் அடைந்தாலும், முடிவில் ஸுகமடையாமலிருக்கமுடியாது. அதுமாத்திரமன்றிக் கணவன் மூலமாகத் தனது முக்தி மார்க்கமறியும் ஸாதனமாதலால் அவன் கருத்தில் தான் ஒருமித்ததும், இரு கண்ணும் ஒரேபொருளை நோக்குதல் போல் இரு

வரும் முக்திமார்க்கத்தை நோக்கலாகும். இவ்வித அம்ருதமூட்டிய இப்பாடலின் கருத்தென சகுந்தலையின் சரித்திரத்தை யாம் இனிக்கூறுவோம்.

மாலினி என்னு மாற்றினோரம். அயோத்தியா நகர்க்கு அருகாமை: பூவுங்காயும் நிறைந்து கீழ் உதிர்ந்து மனதை இழுக்கும் இடம். வரிசை வரிசையாக வளர்ந்துயர்ந்த மரங்களின் அடர்த்தியால் மயங்கி விளங்கும் தவவனம். இதனிடத்திருப்பது கண்வமாமுனிவரது ஆச்ரமம். மோனத்திலிருக்க மனத்தையூட்டுமிடத்து பெண்டிருமிருப்பரோ? அழகுமிக்கு ஆர்வமடைந்த பெண்டிருறையும் வீடிங்கிருத்தலாமோ? மெல்லிய உடம்பு இக்காடு முரடான விடத்திலிருக்கக்காரணமு முண்டோ என ஸந்தேஹ முண்டாகலாம். நம்மாலது ஒழிக்கமுடியும் என்று சொல்லவில்லை. ஆயினும் இப்பெண்டிர் யார் மொழியைக்கேட்டு அவ்வாறு ப்ரமை அடைகிறார்கள்?

"பாழும்சேனை யிங்குப் புகுந்து நம்மை என் பரிதவிக்கச் செய்யவேண்டும். ப்ராஹ்மணர்களது தவத்தொழிலைக் காவாது தமது விளையாட்டென்னும் அஹங்காரத்திற்குட்பட்டுத் தவஞ்செய்யு மிக்காட்டை நாசம் செய்வது அரசற்கு இயல்பாமா?" என்றொருவன் கூற, மற்றொருவன் "அடே! முழுமூடனாகி மொழிகின்ற உரை நன்றாக விருக்கின்றது! தவத்தினரைக் காக்கும் பொருட்டுத் தனது சேனை பரிவாரத்துடன் வந்து கொடிய மிருகங்களை வேட்டையாடி நம்மவர் பயமின்றித் தவஞ்செய்ய செய்யும் வினை அரசரியல்பன்றோ?" என்றான். இதற்குள் கொடியுங் குடையுங்கொண்ட தேரொன்று கடகடவென்று சுழன்றங்கு வந்தது. "ஹே! அரசர்க்கரச துஷ்யந்த! நீடுழி வாழ்க. செங்கோலோங்குக" வென்றனர் அவர். தேர்க்குள் இருந்த மன்னனும் "தவமுனிவர்களே! உமது முனித்தலைவர் கண்வரிங்கிருக்கின்றனரோ" என்றனர். "கண்வர் தமது ஆச்ரமத்தில் இப்பொழுதிலர். அவர் சகுந்தலையை வந்தவர்க்கு விருந்தோம்பச் சொல்லிவிட்டு லோமதீர்த்தக்கரைக்கு அதன் துன்பமொழிக்கச் சென்றுள்ளார்" என்றனர். "ஸரி யான் அவளைக்கண்டு செல்வன். ஆயினும், யான் விசாரித்ததாக நீங்கள் கண்வமாமுனிவர்க்குக் கூறுவீராக." என்றனன் மன்னன்.

தேர் நில்லாது ஓடி அங்கடைந்தது. துஷ்யந்தன் தன்னுடுப்புக்களைக் களைந்துவிட்டு ஸாதாரண ஆடையுடன் கீழிறங்கி "ஸாரதி! நீ சென்று குதிரைக்கு நீராட்டிச் சீராட்டு. யான் வந்துவிடுவேன்" என்றதும் தேரைக் கடத்தும் பாகனும் சென்றான். இடையே எதிர்புறத்து சகுந்தலை தன்னினத்தாரோடு விளையாடுவதைக் கண்ணுற்ற மன்னன் "இவள் பார்ப்பனப்பெண் என்பது ஸரியோ? கண்வரது புதல்விதானோ?" என ஐயமுற்றதன்றித் தனக்குத் தெரியாதவள்பால் இதயம் இழுக்கப்பட்டவனானான். இதனிடை ஓர் வண்டு சகுந்தலையின் முகத்திற் கொட்டியது. ஹா! என்றவள் அலறியதும், அவள் நேசர்கள் "ஏன் கஷ்டமடைகின்றனை? நமது நாட்டரசன் துஷ்யந்தனே நம்மைக் காப்பாற்றுவோன். அவனைத்தான் நீ அபயமென்றடைய வேண்டும்" என்றனர். என்றதும் யார் அவ்விடம் வந்தது? துஷ்யந்தனைக் கண்டதும் அவர்க்கு அச்சமும் நாணமுமுண்டாவது பெண்டிரது இயல்பன்றோ?

"இப்பெண் யார், யான் அறியேன்" என்றான் துஷ்யந்தன். "உமது ஆச்ரமங்களில் வைதிக ஒழுக்கங்களும் அவற்றிற்கு வேண்டிய உபகரணங்களும் நன்றாய் நடக்கின்றனவா?" எனக் கேட்டனன் மன்னன். "முழுமணிப்பூணிற்கு பூண் வேண்டா" இயற்கை அழகே அழகு. காட்டில் வாழும் இப்பெண்ணின் சிற்றுடையிலும் இவள் அழகு விளங்குகின்றது. வீட்டிலுயர்பதவியிலிருக்கும் அழகெல்லாம் இவருடைய வடிவின்முன் சூரியனைக்கண்ட பனிபோல் இன்றாய் விடும்" என்றெண்ணிக்கொண்டவனாய் மற்றும் அவளைப்பற்றி யோசனை செய்வதில்லை என்று மன உறுதி செய்துகொண்டான். ஆயின் பெண்வடிவைக் கண்டு மயங்காதவரெவர். மற்றுமவளையே நோக்கி நோக்கி மனமயர்ந்தான். அவள் மனமுழுதும் நோக்கவும் வெட்கமுற்றனன். பார்ப்பனன் மகள்மேல் மனதைச் செலுத்துவது அழகன்றெனத் தன்னைத் தானே நிந்தித்துக்கொண்டான், ஆயினும் மனமடங்கவில்லை. பொறுக்கமுடியாது வாய்துடித்தது.

இதற்குள் வந்தவர்கள் சகுந்தலையை அவ்வனத்திற்கு வந்த மனிதற்கு முகமன் முதலிய அளிக்கும்படி சொல்லினார்கள். அதுமாத்திரமன்றி வந்த மனிதனை ஆதரிக்கவேண்டியது தமது கடமை எனக்கூறி அங்குட்கார்ந்தனர். இடையே அரசன் "உம்மிடையுள்ள இப்பெண்மணி யார்?" என வினவினான். பெண்களும், காம்பீர்யமும் வீர்யமுமுள்ள மனிதனிங்குவரக் காரணமின்னதென்று அறியாது மயங்கியதன்றிச்சகுந்தலைக்கு ஏதோ தனக்கிதுவரைக் காணாத சில எண்ணங்கள் மனத்திலுண்டானதாகப்பட்டது. ஆனால் அரசனுக்கு யாரும் பதில் கூறவில்லை. மறுபடியும் மன்னன் "யான் புருவம்சத்தரசரால் வனத்திலிருக்கும் முனிவரது யாகம் முதலியவைகளைப் பரிசீலனஞ்செய்ய நியமிக்கப்பட்டவன்—" எனக் கூறுநிற்புழி சகுந்தலை ஏதோ மனவாட்டமடைந்ததாகக் காணப்பட்டாள். வந்தவற்கும் ஏதோ.. மனோவியாதி இருந்ததாகவும் கண்டார். அவர்க்கும் தெரியாது அவர் மனத்துவகை உண்டாகியது.

இன்னமும் அரசன் கேள்விக்கு விடையில்லை. மற்றும் அரசன் "பிரமசாரியாகிய காச்யபர்க்குப் பெண் குழந்தையுமுண்டோ?" எனக்கேட்டனன். "அதெல்லாம் ஒன்றுமின்று. விச்வாமித்திரர் என்னும் அரசமுனியரின் புதல்வியிவள். காச்யபர் அவளை வளர்த்ததினால் வளர்த்த தந்தை ஆனார் ஒழிய, இவள் விச்வாமித்திரர்க்கு மேனகை என்னும் அப்ஸர ஸ்திரீயிடம் பிறந்தவள்" என்ற விடையுடனே கிடைத்தது. நெருப்பென கிட்டக் நெருங்க முடியாது ஜ்வலித்த வஸ்துவானது அடையக் குளிர்ச்சியும் இனிமையும் அளிக்கும் மாணிக்கம்போல் விளங்கியதாக அம்மன்னன் ஆர்வமுற்றான். "இழந்தமணி புற்றரவு எதிர்த்ததென"லானான். அடையமுடியா பார்ப்பனக்குலத்து மங்கை எனப்பட்டவள் அரசவம்சத்து வந்த அணங்கானது அவனுக்கு அன்பூட்டியதன்றி ஆசையையும் பெருகச்செய்தது.

இதற்குள் தேர்ப்பாகன் தேரோடு எதிர்வந்து நின்றனன். சகுந்தலையின் நிலைமையைப் பக்கலிருந்து நன்றாயறிந்தவர்கள் அவள் ஏதோ ஓர்வகையான மயக்கத்துட்பட்டதாக நன்கு அறிந்திருப்பர். ஆயினும் மன்னன்பால் பார்வை முற்றும் கொண்டிருப்பினும் அவனை நேராகப் பார்க்க வெட்கமுற்றாள். சற்றுப் பார்த்ததும் இருவர் கண்ணும் ஒன்றாயது. இருவர் மனமும் ஒன்றாயதென்னும் குறியை அவர் கண்ணே காட்டும். அரசன் தேரேறிச் சென்றனன்.

கண்ட மன்னன்மேல் தனக்கென்ன எண்ணம் உண்டானதென்று சகுந்தலைக்கே தெரியவில்லையாயினும் அவள் ஹ்ருதயம் பொங்கிப் பொங்கி புகைந்துகொண்டேயிருந்தது. மனோவியாதிபட்ட மடந்தை எனக் காட்டிக்கொள்ளக் கூடாதென்னுமெண்ணமே அதை முழுதும் காட்டியது. தனது நேசர்கள் என்ன செய்தும் அவள் மனம் அமைதியடையவில்லை. உடம்பில் உஷ்ணமும் காங்கையும் பொறுப்பதரிதாயிற்று. தாமரைக்குளமும், பூவும் சாந்தமும் குளிர்ச்சியளிக்கவுமில்லை. சந்திரனும் காற்றும் சூரிய ஜ்வாலையாகவே அவளுக்குப்பட்டது. "வெப்புநோயர் நீரில் மூழ்கின் வெம்மையாறுமேகொலாம்?" ச்வரமடைந்தவர் குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்தால் சாந்தியுண்டாமோ? மதிமயங்கி மன்னன்பால் கொண்ட ஆசைப்பெருக்கம் பித்தம்போல் விரிந்திடில் என் செய்வது? பாழும் மன்னன் செய்த படுவினை ஈது என்று பக்கத்திருந்தவர்கள் எண்ணி, சகுந்தலையைத் தன் ஆசைபாய்ந்த மன்னர்க்கு ஓர் கடிதம் எழுதும்படிக் கூறினள். இனி ஒளித்தலிற் பயனில்லை என தாமரையிலையில் தன் நகத்தால் கடிதம் எழுதத் தலைப்பட்டாள்.

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

மிளகு.—*மிளகுக்கொடி மலையாளதேசத்திற்கேயுரித்தானது. மேற்கு மலைத்தொடர்ச்சியின் அடிவாரத்திலுள்ள பெருங்காடுகளில் அது தானாகவே வளர்வதை நாம் இன்னும் காணலாம். அங்கிருந்து மிளகுக்கொடி ஒருபக்கத்தில் வயநாடு, குடகு என்னும் பிரதேசங்களின் திக்கில் பரவியும் மற்றொரு பக்கத்தில் மேற்குக் கடலுக்கும் மலையடிவாரத்திற்குமுள்ள பிரதேசங்களில் பரவியும் இருக்கிறது. ஆகவே மரங்கள் நிரம்பியுள்ள ஒவ்வொரு தோட்டத்திலும் மிளகுக்கொடி பயிராக்கப்படுகிறது. ஆனால் ஆதியில் மலையாளத்திலேயே மிளகு பயிராக்கப்பட்ட போதிலும் தற்காலத்தில் வேற்று தேசங்களிலும் பயிராக்கப்படுகிறது. இப்பொழுது ஆஸ்திரேலியாகண்டம் வரையில் பரவியுள்ள தீவுகளில் ஏராளமாக மிளகு உண்டாகிறது. மிளகு முற்காலத்தில் முக்கியமாய் விலையாகிய இடம் இந்தியா. இப்பொழுது அது மிகுதியாக விலையாகுமிடம் சிங்கப்பூர். தலைச்சேரியிலிருந்து ஏற்றுமதியாகுவதைவிட நூற்றுக்கணக்கான மடங்கு அதிகமாய் மிளகு சிங்கப்பூரிலிருந்து ஏற்றுமதியாகிறது. இவ்வாறு மலையாளம் மிகவும் பின்தங்கிய போதிலும், தலைச்சேரி மிளகு மற்றெந்த மிளகைக்காட்டிலும் மிகச்சிறந்ததென்றே இன்னும் மதிக்கப்படுகிறது. அம்மிளகு இந்தியாவின் மேற்குக் கடற்கரையிலே தான் செவ்வையாகப் பயிராகிறது.

சரித்திர ஆராய்ச்சி செய்கையில் இந்துதேச வாழ்க்கையை மிளகு முறைப்படுத்தியது போல மற்றெந்தச் செடியும் செய்யவில்லை யென்று நாம் அறிகிறோம். ஐரோப்பிய பிரயாணிகளையும், வியாபாரிகளையும் இந்தியாவைப்பற்றி ஆதியில் கவனிக்கும்படி செய்தது மிளகே. மிளகின் விலையைக் குறைக்க வேண்டு மென்றே தான் வாஸ்கோடிகாமா என்பவர் குட்ஹோப் என்னும் முனை வழியாக இந்திய மேற்குச்சமுத்திரத்திற்குச் சுற்றுப்பிரயாணஞ் செய்தார். அப்போது தான் போர்த்துக்கேசியர் மேற்குக் கடற்கரையில் குடியேறினார்கள். அதற்குக் கொஞ்ச காலத்திற்குப் பிறகு டச்சுக்காரர்கள் ஐரோப்பாவில் மிளகைத் தாங்களே முழுவதும் வியாபாரஞ் செய்தார்கள். ஆனால் அவர்கள் மிளகை அதிக விலைக்கு விற்றதினால், லண்டன் நகரத்திலுள்ள சில பெரிய வியாபாரிகள் ஒன்றாசேர்ந்து இந்தியாவுடன் நேரே வியாபாரஞ்செய்யத் தீர்மானித்து 'ஈஸ்ட் இந்தியா கம்பெனி' என்னும் சங்கத்தை ஸ்தாபித்தார்கள்.

* கவர்ன்மென்டு பாடனிஸ்டு, மிஸ்டர் பார்பர் ஆங்கிலத்தில் எழுதியதின் மொழிபெயர்ப்பு.

ஆகவே, இந்தியாவில் முதல் முதல் பிரிட்டிஷ்காரர்கள் வந்து குடியேறியதற்குக் காரணம் மிளகே. இந்துதேச சரித்திரத்தில் நாம்படிக்கும் தீராப்போர்கள் அடக்கப்பெற்று, வேறுபட்டிருந்த அநேக ஜாதியர்கள் ஒரே யாட்சிக்குள்ளாகியதற்குக் காரணமும் மிளகே.

மிளகுக்கொடியைப் பயிராக்குவது வெகு சுலபம். அது படரும் மரத்தில் சற்றுப்படர ஆரம்பித்தவுடனே அதை யதிகமாய்க் கவனிக்கவேண்டியதில்லை. ஆனால் அதைப் பயிர்செய்வதில் எவ்வளவு அஜாக்கிரதையாயும் அசட்டையாயு மிருந்தபோதிலும் ஒவ்வொரு வருஷமும் நன்றாக விளைந்து அதைப் பயிர்செய்வோர் ஒவ்வொருவருக்கும் நல்லலாபத்தைக் கொடுக்கிறது. ஆனால் ஒரே தோட்டத்தில் மிளகு வெவ்வேறு விதமாக வளர்கிறதென்பது யாவர்க்குந் தெரிந்த விஷயமே. சிலகொடிகள் நன்றாகவளர்கின்றன. சில அவ்வளவு நன்றாகவளர்வதில்லை. சிலகொடிகளில் மிளகு மிகுதியாய்க் காய்க்கிறது. சில கொடிகளில் மிகவும் சுவல்பமாய்க் காய்க்கிறது. மிளகைப் பயிராக்குவோர் மிளகுக் கொடிகளை நன்றாகப் பயிராக்கும் விதத்தை யறிந்துகொள்ளும்பொருட்டுக் கவர்ன்மெண்டார் தலிப்பரம்பா என்னுமிடத்தில் ஓர் மிளகுத் தோட்டத்தை யேற்படுத்தியிருக்கிறார்கள். இப்பொழுது, பயிரிடுவதற்கு முன் உயர்ந்தவிதமான மிளகுக்கொடி எவ்வாறு பயிரிட்டால் வளருமென்பதை நிர்ணயித்துப் பயிரிடுவது வெகு சுலபம். இதைப்பற்றி யறியவேண்டுவோர் அந்தக் கவர்ன்மெண்டு தோட்டத்து மானேஜருக்கு எழுதிக்கேட்டால், அவர் சந்தோஷமாய்ப் பதிலெழுதுவார். நல்ல கொடிகளைப் பயிராக்குவதில் எவ்வளவு சிரமமிருக்கிறதோ அவ்வளவுசிரமம் தாழ்ந்த கொடிகளைப் பயிராக்குவதிலுமிருக்கிறது. ஆனால் அதைச் சிரத்தையுடன் வளர்ப்பின் ஒவ்வொரு வருஷமும் மிகவும் ஏராளமாய் விளையுமென்பதற்கு ஐயமில்லை. மிளகு விளைவதற்கு அதிக காலம் பிடிக்கிறதென்பதுண்மையே. ஆகையால் அதைப் பயிராக்குவதில் சிரமப்படுவது பிரயோசனமில்லையென்று சிலர் சொல்லக்கூடும். ஆனால் பிரயோஜனமற்ற ஒருமரத்தை வளர்ப்பதைக் காட்டிலும், காலமாகியபோதிலும் நல்ல பலத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு மரத்தை வளர்ப்பது நலமல்லவா? ஆகை ~~யால் உங்கள் மக்களின் நித்தம் வளர்வதில் தாம~~ திக்கும் மிளகைப்பற்றி நீங்கள் அதிகமாய் கவனிக்கவேண்டியது இன்றியமையாததே. ஏனெனின் மிளகு நல்ல லாபத்தைக் கொடுக்கக்கூடியது. மிகச் சிறந்த கொடிகளின் கீழ் ஒவ்வொரு வருஷமும் நன்றாக மண்ணைக் கொத்தித் தோட்டத்தில் இருக்கக்கூடிய மண்ணோடு இலைகலந்த எருவையெடுத்து வீட்டுப் புறங்கடையிலுள்ள கூளங்குப்பைகளுடன் சேர்த்து மிளகுக்கொடி படரும் மரத்தின் அடியில் பரப்பி ஓர் பாத்தியாகக் கட்டவேண்டும். மலையாள தேசத்தார் அவர்கள் பயிராக்கும் மிளகுக் கொடியிலிருந்து அடையும் மிளகைவிட ஐரோப்பிய சாகுபடிக்காரர்கள் அதிகமாய் அடைகிறார்களென்பது நாம் விசனிக்கவேண்டிய விஷயமன்றோ? முற்காலத்தில் உலகத்தில் மிளகு மிகவும் விலையாகிய இடம் இந்தியாவாயிருந்தது போக, இப்பொழுது வேறிடத்தில் மிளகு அதிகமாய் விலையாவது நமக்குச் சிறப்பன்றன்றோ?

***

ஓர்தமாஷுக்கு 3 மாச தண்டனை.—ஓர் பாம்பாட்டி வேடிக்கை காட்டிக்கொண்டு இருக்கையில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ஒருவன் கழுத்தில் நல்ல பாம்பை மாலையாகப்போட அது உடனே அவனைக் கடித்துவிட்டது. அவன் சில நிமிஷத்தில் மாண்டானும். அதன்நிமித்தம் ராய்ப்பூர் ஹாடி மாஜிஸ்டிரேட் பாம்பாட்டியை மூன்றுமாச தண்டனை விதித்தாராம்.

***

மருதாணை.—இதன் இலையைப் பெண்கள் காசுக்கட்டி முதலியவைகளோடு அரைத்து நகத்துக்குச் சாயம் ஏற்றுவதுண்டு. அரேபியா முதலிய துருக்கர் வசிக்கும் தேசங்களில் இந்தப் பயிரில் அதிக வியாபாரம் நடக்கிறது. இது சாதாரணமாய் நமது ராஜதானியில் வேலிக்காகப் பயிரிடப்படுகிறது. இதன் கிளைகளை வெட்டிப் புதைத்தாலே வேரூன்றி துளிர்க்கும். இது மரமாகாமல் செடியாகவே இருக்கும். வாசனையுள்ள இதன் புஷ்பங்களிலிருந்து தைலம் செய்யப்படுகிறது. இதை உபயோகிப்பதால் தேகத்துக்குக் குளிர்ச்சியும் ஆரோக்கியமுமுண்டாகும். வியர்வை அதிகமாய் வரும் குணத்தைக் கண்டிக்கக்கூடியதாகச் சொல்லப்படுகிறது. ஆகையால் அரேபியா, ஈஜிப்ட், ஆப்பிரிக்கா முதலான இடங்களில் ஜனங்கள் இந்தப்பயிரினால் லாபமடைவதுபோல நாமும் தைலம், அத்தர் முதலியவைகள் செய்துவிற்றால் லாபம் அடையலாம்.

விவேக போதினி

296 உ

ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை 1908-ம் ஹூ முதல் பிரசுரமாகிவருகிறது. யாவராலும் சிலாகிக்கப்பெற்றது

இப்பத்திரிகைக்கு விஷயதானம் செய்வோர்களைக்கொண்டே, இதன் பெருமையை நன்கு அறியலாம். மிகவும் சுலபமான நடையில் எழுதப்படுகிறது. சிறுவர்கள் சிறுமிகள்கூட உத்ஸாகத்துடன் வாசிக்கக்கூடியது. ஒவ்வொரு மாதமும் ஒழுங்காகப் பிரசுரமாகிறது. சித்திரப்படங்கள் ஒவ்வோர் சஞ்சிகையிலும் உபயோகிக்கப்படுகின்றன. எத்திறத்தாரும் வாங்கி வாசித்து நற்பயனடையும் பொருட்டே சந்தாத்தொகையும் மிகவும் ஸுலபமாய் வைக்கப்பட்டிருக்கிறது. [இம்மாதிரி யாவருக்கும் உபயோகத்தையும் உத்ஸாஹத்தையும் கொடுக்கக்கூடிய பத்திரிகை இன்னமும் எவராலும் பதிப்பிக்கப்படவில்லையென்று தைரியமாய்ச் சொல்லுவோம்.

இப்பத்திரிகையில் பிரசுரமாகும் விஷயங்கள்

1. நீதிகளைக் கற்பிக்கக்கூடிய பொது விஷயங்கள்.
2. பொது நன்மைக்காகப் பாடுபட்ட மஹான்களின் ஜீவிய சரிதைகள்.
3. இயற்கை அற்புதங்கள்.
4. உலக ஒழுக்கங்கள்.
5. கல்வியபிவிருத்திக்குரிய பாஷா விஷயங்கள்.
6. விவசாயம், கைத்தொழில், வியாபார விஷயங்கள்.
7. தக்க நிபுணர்களைக்கொண்டு எழுதப்பட்டு வரும் உயர்தரமான நாவல்கள், நாடகங்கள்.
8. சிறுவர்க்காகவென்று எழுதப்படும் நீதியைப் புகட்டும் சிறந்த கதைகள்.
9. ஸ்திரீகளுக்கேற்ற நற்போதகங்கள்.
10. சாஸ்திரீகமான விசேஷ வர்த்தமானங்கள்.

தபாற்கூலி உள்பட சந்தா விபரம்

இந்தியா, பர்மா, சிலோன்,				பினங்கு, சிங்கப்பூர், நேடால், ஆ இடங்களுக்கு			
ஒரு வருஷத்துக்கு	ரூ. 3	0	0	ஒரு வருஷத்துக்கு	ரூ. 4	8	0
ஆறு மாதத்திற்கு	,, 1	12	0	ஆறு மாதத்திற்கு	,, 2	4	0
தனிப்பிரதி	,, 0	5	0	தனிப்பிரதி	,, 0	6	0

☞ சந்தாத்தொகை முன்பணமாகத்தான் அனுப்பவேண்டும். அல்லது, முதல் ஸஞ்சிகையை ஒரு வருஷத்துக்கு, அல்லது ஆறு மாத சந்தாவுக்கு வி. பி. மூலமாய் அனுப்பிப் பெற்றுக்கொள்ளப்படும்.

இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு மட்டுமே எங்களிட சொந்தப்புத்தகங்களும், இன்னும் அநேக தமிழ்ப் புத்தகங்களும் குறைந்தவிலைக்கு அனுப்பப்படும். ஆகையால், இப்பத்திரிகையின் சந்தாதாரர்களுக்கு எப்பொழுதும் நஷ்டமில்லை. பத்திரிகையின் அபிவிருத்தி விஷயமாய் எழுதப்படும் நிருபங்களை எங்களால் இயன்றமட்டில் கவனித்து, முடிந்தவரையில் சீர்திருத்தமுயலுவோம். மற்றும் வேண்டிய விபரங்கள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர், "விவேக-போதினி" ஆபீஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

நமது பத்திரிகைக்கு விஷயதானம் செய்யும்

கனவான்களில் சிலர் :—

ம-ா-ா-ஸ்ரீ, மஹா மஹோபாத்யாயர் பண்டித-ஸ்ரீ வே. சாமிநாதய்யரவர்கள்.
,, மஹா மஹோபாத்யாயர் பண்டித-ஸ்ரீ சந்திரசேகர சாஸ்திரிகளவர்கள்.
,, கனம் ஆர். ரகுநாதராவ் அவர்கள், திவான் பஹதூர், ஸி.எஸ். ஐ.
,, பண்டித-ச. ம. நடேச சாஸ்திரியாரவர்கள்.
,, டி. செல்வகேசவராய முதலியார் அவர்கள், எம்.ஏ.
,, த. கனகஸுந்தரம் பிள்ளை அவர்கள், பி.ஏ.
,, டி. ஏ. கோபிநாத ராவ் அவர்கள், எம்.ஏ.
,, வ. சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்கள், எம்.ஏ.
,, பி. வி. ஸ்வாமி ராவ் அவர்கள், எம்.ஏ.
,, எஸ். குப்புஸாமி சாஸ்திரிகள் அவர்கள், எம்.ஏ.
,, டி. எஸ். சுப்பிரமணிய அய்யரவர்கள், எ.ம்.ஏ., எல்.டி.
,, ஏ. பஞ்சாபகேசய்யர் அவர்கள், எம்.ஏ., எல்.டி.
,, எஸ. அப்பாஸாமி அய்யர் அவர்கள், எம்.ஏ., எல்.டி.
,, மஹேச குமார சர்மா அவர்கள்.
,, ஏ. எஸ். கஸ்தூரிரங்கய்யர் அவர்கள், பி.ஏ., எல்.டி.
,, வ. சேஷகிரி சாஸ்திரியார் அவர்கள்.
,, வி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், பி.ஏ.
,, ஜே. ஆர். ரங்கராஜு அவர்கள்.
,, ஏ. மாதவய்யா அவர்கள், பி.ஏ.
,, எஸ். சிதம்பர அய்யர் அவர்கள்.
,, கே. நாராயண அய்யர் அவர்கள், பி.ஏ., எம்.பி., ஸி.எம்.
,, பண்டித-ஸ்ரீ கோபாலகிருஷ்ண அய்யர் அவர்கள்.
,, ஐ. வே. சுப்பிரமணிய அய்யர் அவர்கள், பி. ஏ.
,, ஸி. ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள், பி. ஏ.
,, வி. ஜி. சுப்பய்யர் அவர்கள், பி. ஏ., எல்.டி.
,, ஜீ. சுந்தரேச அய்யரவர்கள், பி.ஏ., எல்.டி.
,, ஜீ. தாதாசாரியாரவர்கள், பி. ஏ.
,, ப. சம்பந்த முதலியாரவர்கள், பி.ஏ., பி.எல்.
,, ஆ. நரஸிம்மய்யங்கார் அவர்கள், எம்.ஏ., பி.எல்.
,, ப. கிருஷ்ணஸாமி சாஸ்திரி அவர்கள், பி.ஏ., பி. எல்.
,, டி. எஸ். நாராயண சர்ஸ்திரியாரவர்கள், பி.ஏ., பி.எல்.
,, எஸ். ஈ. சங்கர அய்யர் அவர்கள, பி.ஏ., பி.எல்.
,, என். ஆர். கே. தாதாசாரியார் அவர்கள், பி.ஏ., பி.எல்.
,, ஸி. சுந்தரம் அய்யர் அவர்கள், பி.ஏ.
,, ஸி. எஸ். சுந்தரம் அய்யர் அவர்கள், பி.ஏ., எல்.டி.
,, த. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள், பி.ஏ.
,, ஸி. பி. வெங்கிடராமய்யரவர்கள், பி.ஏ.
,, வி. கே. விராகவாசாரியார் அவர்கள், பி.ஏ.

குறிப்பு:—இன்னும் அனேகம் நிபுணர்களும், ஸ்திரீகளும் நமது பத்திரிகைக்கு வியாஸங்கள் எழுதுகிறார்கள். அவர்கள் கேட்டுக்கொண்டபடியாலும், இங்கு இடம் இல்லாமை பற்றியும் அவர்கள் பெயர்கள் இவ்விடம் அச்சிடப்படவில்லை.

POST CARDS

White and Double Coloured

Neatly printed with the words Post Card and with attractive Coat-of-arms. Cards are sufficiently thick and have a smooth writing surface.—

White Cards per		100	...	0	2	6
do	do	1000	...	1	6	0
Double Color cards per		100	...	0	2	0
do	do	1000	...	1	2	0

NOTE:—Special rates for quantities over 5000 cards—Sample cards forwarded on receipt of one anna Postage Stamps.

THE GENERAL SUPPLIES Co.,
Mylapore, Madras.

துரைத்தன விளக்கம்

Elements of Civics for India

(in Tamil)

Approved by the Text-Book Committee, Madras, *for Elementary & Training Schools* (Vide *Fort Saint George* Gazette Dec. 21, 1909.)

"துரைத்தன விளக்கம்" என்ற நூல் துரைத்தனத்தாருடைய நன்மைகளையும், குடிகள் அவர்களுக்குச் செய்யும் உதவிகளையும், ஷை நன்மைகள் அளிக்கப்படும் விதங்களையும், இந்தியாவின் சுருக்கமான சரித்திரத்தையும் முறையே தெரிவிப்பனவாகிய நான்கு பாகங்கள் இப்புஸ்தகத்தில் அமைந்துள்ளன, புஸ்தகத்திலுள்ள விஷயங்கள் படிப்பவர் மனதில் நன்றாகப் பதியும்பொருட்டு, சுமார் 50-பொருத்தமான சித்திரப்படங்களும், தேசப்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உபாத்தியாயர்கள், மாணாக்கர்கள், குடித்தனக்காரர்கள் பெண்பாலார்கள் யாவருக்கும் இப்புத்தகம் அவசியமென்றே நினைக்கிறார்கள். விலை ரூபாய் ஒன்று.

ராப்பர் பைண்டு அணா 12.

1910-ம் வருஷத்திய

ஜ்யோதிர் விலாஸ பாக்கட் டைரி

இதில் யாவருக்கும் உபயோகமான அநேக விஷயங்கள் தமிழில் அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த டைரியின் மேன்மையைக் குறித்து அநேக கல்விமான்கள் மிகவும் சிலாகித்து நற்சாக்ஷி பத்திரங்கள் அளித்திருக்கிறார்கள். அழகாய் அச்சிட்டுப் பைண்டு செய்திருக்கிறது.

சாதாரண பைண்டு	...	...	0	4	0
பிளாப், பென்சலுடன்	...	...	0	6	0

"விவேக போதினி"

சந்தாதாரர்க்கு மாத்திரம் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும் புத்தகங்கள் :—

பண்டித நடேசசாஸ்திரியார் இயற்றிய ஸ்ரீமத் வால்மீகி ராமாயண வசனம்.—பால காண்டம் ரூ 1-12. அயோத்தியா காண்டம் ரூ 3. ஆரண்ய காண்டம் ரூ 1-12. கிஷ்கிந்தா காண்டம் ரூ 1-12.

சந்தாதாரர்க்கு மாத்திரம் ரூ **6-8.**

தீனதயாளு 3-ம் பதிப்பு.—பண்டித நடேச சாஸ்திரியார் இயற்றியது. பள்ளிக்கூடங்களுக்கு உபயோகத்துக்காகவென்று 8 அணா விலைக்குக் குறைக்கப்பட்டது நமது சந்தாதார்க்கு மாத்திரம் அணா **6**

தேக தத்வசாஸ்திரம்.—தேக உறுப்புகளின் அமைப்பும், தொழிலும் விலை ரூ 2-8.

சந்தாதாரர்க்கு மாத்திரம் ரூ **I-12.**

நீதிவிவாத மஞ்சரி.-(இந்தியன் பினல்கோட் சட்டம், சாக்ஷி சட்டம், அடிதண்டனைச்சட்டம் இவை வியாக்கியானங்களுடன். ... ரூ 2-8

சந்தாதாரர்க்குமாத்திரம் ரூ **I-12**

கவனிப்பு.—மற்றும் ஜாப்தாவில் கண்ட புத்தகங்களுக்கு ஆர்டர் செய்யும் சந்தாதாரர்க்கும் ரூபாயிக்கு 1-அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்

'ஸாவரன்' பல்பொடி

THE 'SOVEREIGN' TOOTH-POWDER

இப்பற்பொடி இதன் பேருக்கேற்ப மிகவும் குணத்தைக் கொடுக்கக்கூடியது. பல்வலியை நீக்கி, ஈறுகளைப் பலப்படுத்தும். துர்க்கந்தத்தை நீக்கி மனோஹரமான வாஸனையை உண்டாக்கும். விலையும் குறைவுதான்.

விலைவிபரம்

ஒரு பாட்டில்	...	...	...	0	2	6
ஒரு டெஜன்	...	...	...	1	8	0
மூன்று டெஜன்	...	...	...	4	2	0
ஆறு டெஜன்	...	...	...	7	8	0
பன்னிரண்டுடெஜன் அல்லது ஒரு குரோஸ்				14	0	0

ஆறு டெஜன், ஒரு குரோஸ் ஆர்டர் செய்வோர்க்குப் பாக்கிங் இனாமாகச் செய்து கொடுக்கப்படும். அரை டெஜனுக்குக்குறைந்தஆர்டர்கள் அனுப்பமுடியாது. மாதிரிப் பற்பொடி வேண்டுவோர் 4-அணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்பற்பொடி நம்மிடம் மாத்திரமே கிடைக்கும். ஒவ்வொரு பார்ஸலும் மிகுந்த ஜாக்கிரதையுடன் பாக்கிங் செய்து அனுப்பப்படும்.

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், மதராஸ்.

மிகவும் முக்கியமான பதிப்புகள்

இங்கிலீஷ் வைத்திய சங்கிரகம்

Compendium of English Medical Science

இதை இயற்றியவர் சலஞ்சென்ற M. ரங்காசாரியுமே. இவர் மைசூர் கெர்ன்மெண்டில் சேர்ந்து பொருந்திய லார்ஜன்மரின் ஆப்புன் வேதபாடசாலை தலைமையும், சென்னை மெடிகல் காலேஜில் உபாத்தியாயருமாயிருந்தனர். யாவருக்கும் உபயோகமாகும்படி எழுதப்பட்டிருக்கிறது. விலை ரூபா 3—8—0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

இப்புத்தகம் 7-பாகங்கள் கொண்டது

முதல் பாகம்.—சரீரம்—மனுஷ சரீரத்தின் ஏற்பாடு அதாவது சரீரத்தின் உறுப்புகள் அவைகளின் ஒவ்வொன்றின் தொழில்கள்.

இரண்டாம் பாகம்.—சரீர வியாபாரம்—மனிட சரீரத்தின் உறுப்புகளின் சகஸ்திதி.

மூன்றாம் பாகம்.—குணபாடம்—ஒவ்வொரு பதார்த்தத்தின் குணம் பிரயோசனம் தோஷம் அதனைப் பிரயோகிக்கின்ற கிரமம், ஒருவேளைக்கு உபயோகிக்கவேண்டிய பிரமாணம்.

நான்காம் பாகம்.—ஔஷத வைத்தியம்—வியாதிகளின் விபரம் ஒவ்வொன்றும் விமரிசையாக அநுபோகமானவரையில் எடுத்துக்காட்டி அவ்வியாதிக்குத் தக்கபடி ஔஷதம் உபயோகிக்கக் கைவல்லியமாகாது. இதில் வியாதிகளின் குணங்களை விமரிசையாய்ச் சொல்லியிருக்கிறது.

ஐந்தாம் பாகம்.—ஸஸ்திரகம்—இரணவைத்தியம் இதில் சமக்குக்கொஞ்சம் ஞானமிருக்கவேண்டுவதவசியம்.

ஆறாம் பாகம்.—பிரசவ வைத்தியம்—இதிலுள் கர்ப்ப உற்பத்திமுதல் பிரஸவகாலம்வரை நடக்கின்றனுமிறவிதம் அவர்களுக்கு அந்தந்தக்காலத்தில் ஏற்படும் வியாதிகளுக்குத் தகுந்த பரிகாரம், மற்றும் பிரஸவகாலத்தில் ஸ்திரிகளுக்கு இருக்கவேண்டிய கிரமம், புருஷர்கள் கவனிக்கவேண்டிய விதிகள், சிசு உற்பத்தியானதும் அதைக் கவனிக்கவேண்டிய விதங்கள்.

ஏழாம் பாகம்.—சுகபரிபாலனம்—நாம் உட்கொள்ளும் வஸ்துக்களினுடையவும் மப்பு விஷயங்களில் உபேக்ஷம் வஸ்திரம் ஜலபானாதிகள் வகையரா இப்புத்தகம் ஒன்று ஒவ்வோர் குடும்பத்துக்கும் அத்தியாவசியமானது.

விவசாய போதினி

அவசியம் குடித்தனக்காரர் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டிய ஓர் அருமையான புத்தகம். அநேக சித்திரப் படங்களுடன் கூடியது.—

இப்புத்தகத்தில் நிலங்கள் சம்பந்தமான விஷயங்களும், கருவிகள் எருக்கள் சம்பந்தமான சாஸ்திர தட்பங்களும், சகலவித நன்செய், புன்செய் தோட்டக்கால் பயிர்களின் சாகுபடிகளும் விவசாய சீர்திருத்தத்திற்குவேண்டிய முக்கிய சாதனங்களும் காட்டப்பட்டிருக்கின்றன.

கனம் மாஜி ஹைகோர்ட்ஜட்ஜ் சுப்பிரமணிய அய்யர், திவான் பஹதூர் ரெகுநாதராவ், கனம் P.S. சிவஸ்வாமி அய்யர், விவசாய காலேஜ் உதவி தலைமை உபாத்தியாயர், சைதாபேட்டை கவர்ன்மெண்டு பண்ணை மானேஜர், சுதேசமித்திரன் பத்திராதிபர் கனம் ஜி. சுப்பிரமணிய அய்யர் முதலிய பெரியோர்களும், விவசாய சாஸ்திர வல்லோர்களும் நற்சாக்ஷிப்பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆங்கிலேய சுதேசப்பத்திரிகைகளாலும் நன்கு மதிக்கப்பட்டிருக்கிறது.

போர்ட்பயிண்டு செய்தது	ரூ.	1 4 0
காலிகோ	,,	2 0 0
பருத்திப்பயிர் சாகுபடி		0 4 0

நன்றாய்ப் பார்வையிட்டு நல்ல காகிதத்தில் தெளிவாய் அச்சிட்ட சிறந்த பதிப்பு

மூவர் தேவாரம்-பண்முறை—1044-பக்கம் 3 0 0

இப்பதிப்பில் (1) சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூவர்களின் சரித்திரக் குறிப்பும், (2) தேவார வரலாறும், (3) தேவாரப்பண் அட்டவணையும், (4) தேவாரப் பாடல்பெற்ற ஸ்தல அகராதியும், (5) தேவார ஸ்தலங்களுள்ள நாடுகளின் விபரமும், (6) அட்டவீரட்டானங்களைக் குறிப்பிக்கும் செய்யுளும், (7) தேவாரப்பொதுப் பாடல்களின் பக்க அட்டவணையும், (8) தேவார வைப்பு ஸ்தல அட்டவணையும், (9) காரைக்காலம்மையார் அருளிச்செய்த மூத்த திருப்பதிகமும் பிரதானமாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

நாலாயிர திவ்யப்பிரபந்தம்.—640 பக்கம் ரூ 3 0 0

இப்பதிப்பில் (1) ஆழ்வார்களின் காலவைபவக் குறிப்பும், (2) ஆழ்வார்கள் அருளிச்செய்த பிரபந்தங்களின் அட்டவணையும், (3) ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்யதேசங்களின் அட்டவணையும், (4) அந்தத் தேசங்களின் வைபவக் குறிப்பும், (5) பாசுரங்களின் முதலடி அகராதியும், (6) பாடபேதக் குறிப்புகளும் சேர்த்துப் பல பிரதிகளுடன் ஒத்திட்டுப்பார்த்து, நன்றாய் அச்சிடப்பெற்றது.

ஜெனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், மதராஸ்

2377
2869
REGISTRAR OF BOOKS
18 MAY 1910

"விவேகபோதினி'' அனுபந்தம்

ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதீ ஸ்வாமிகள்



ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாள்

பிரசுரம் செய்பவர்கள்:—ஜெனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மைலாப்பூர், மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
16 MAY 1910
237

விவேக போதினி

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''—திருவள்ளுவர்

தொகுதி II } ஸாதாரணஞு சித்திரைமீ 1910-ஞு ஏப்ரல்மீ { பகுதி 10

வைராக்கியம்

NON-ATTACHMENT

ஆத்மாநித்யம் என்ற மாறா உணர்ச்சி உண்டாவதற்கு ஸன்மார்க்கத்தில் பழகுவதே முக்கியஸாதனம். இது (1) வைராக்கியம் (2) உபரதி (3) ஞானம் என்ற மூன்றனுள் அடங்கும்.

இவைகளுள் வைராக்கியத்திற்குக் காரணம் விஷயத்தில் தோஷதிருஷ்டி வருவதே. உலகில் உள்ள விஷயங்கள் எவ்வளவு தான் ஸுகம் கொடுப்பனவாயினும், நிலையற்றவை, முன் ஆசை என்ற துக்கத்தையும், பின் கிட்டிப்போதல் என்ற துக்கத்தையும், அனுபவிக்குங்கால் இவை போய்விடுமே என்ற துக்கத்தையும் உடையவை, மனதை மேன்மேலும் சஞ்சலப்படுத்தும்குணமுடையவை, ஆத்மலாபம்என்பது ஒன்று உண்டு என்ற உணர்ச்சியை எழவொட்டாது தடுப்பவை, அவைகள் ஒருவனை மீளாத்துயரத்திற்கு ஆளாக்கிவிடும், ஆதலால் அவைகளை ஒருபோதும் விரும்பலாகாது என்ற உணர்ச்சிக்கே விஷயதோஷ திருஷ்டி என்று பெயர். இது உலகஸுகங்களில் தோன்றினால் மாத்திரம் தான் தீவிர வைராக்கியம் பிறக்கும். உலகதுக்கங்களில் கோப வேளையில் இது உண்டானால் ஆபாஸ வைராக்கியத்திற்குக்காரணமாகி ஒருவனைத் திரிசங்கு ஸ்வர்க்கத்தில் நிறுத்திவிடும்.

இவ்வாறு நேர்மையான விஷய தோஷ திருஷ்டியால் உண்டாகும் வைராக்கியத்திற்கு ஸ்வரூபம் யாது எனில் விஷயங்களைக்கண்டால் அருவருப்பு உண்டாவது. நாய் வாந்திசெய்த சோற்றைக் கண்டால் நமக்கு எவ்வளவு அஸங்கியம் உண்டாகிறதோ, அவ்வாறே விஷயஸுகங்களைக் கண்ட மாத்திரத்தில் தன்னை அறியாமலே அவைகள் முற்கூறிய தீங்குகளை உடையன என்ற எண்ணங்கள் கிளம்பி மனது கஷ்டப்பட, ஸுகங்களில் அருவருப்பு உண்டாவதே நிஜ வைராக்கியத்தின் ஸ்வரூபம்.

நிஜ வைராக்கியம் உண்டாவதால் ஏற்படும் காரியம் என்ன? அதாவது, முடிவுஎன்ன? என்ற சங்கை பிறக்கும். நிஜவைராக்கியம் ஒருவனுக்கு வருமாயின் அவனுக்கு வர வர விஷயங்களில் வெறுப்பால் ஆசை குறைந்து முடிவில் விஷயத்தைக் கண்ட போதிலும் அதனிடம் ஆசை உண்டாகாதநிலைவரும். அதாவது அப்பியாஸ நிலையில் விஷயங்களைக் கண்டு வெறுப்புடன் பயந்து ஓடியதுபோல ஓடாமலும், அவைகளைக்கண்டவிடத்து ஆசைவராமலும் இருக்கும் உபேக்ஷை நிலையே இந்த வைராக்கியத்தின் காரியம்.

இந்த வைராக்கியம் எந்த எல்லைவரையில் பழக வேண்டியது. உலக விஷயங்கள், உலகில் உள்ளபதவிகள் இவைகள் விஷயத்தில் மாத்திரம் தான் பழக வேண்டியது. என்று சாஸ்திரங்கள் கூறும். மேலான பதவியாகிய பிரம்மலோக பதவிவரையில் உள்ள எல்லாப் பதவிகளையும் துரும்புபோல மதிக்கவேண்டியது; பிரம்மலோகத்தில், வைராகி பிரம்மாவால் உபதேசம் பண்ணப்பெற்று முக்திஅடைகிறான் என்பது சாஸ்திரங்களிலிருந்து வெளியாகும். ஆகவே ஆசார்ய சிஷ்யபதவி தவிர மற்றைய உலக ஸம்பத்துக்கள் எல்லாவற்றிலும் வைராக்கியம் செலுத்த வேண்டியது. இதுதான் வைராக்கியத்திற்கு எல்லை.

இனி வைராக்கியத்தால் வரும் பயன் யாது? பிரம்மலோகப் பிராப்தி என்று கூறப்பட்டிருக்கிறது அதாவது ஸத்குருலாபம் என்பதே. ஒருவன் நிஜ வைராகியாகிப் பக்குவமாகுங்கால், நல்ல சிஷ்யன் ஸத்குருவைத் தேடுவது போல, நல்ல சிஷ்யனைத் தேடிவரும் ஸத்குரு அவனுக்கு வந்து சேருவார். இந்த ஸத்குரு லாபமே நிஜவைராக்கியத்தின் பலன்.

இதுபற்றியே பஞ்சதசப் பிரகரணத்தில் ஸ்ரீவித்யாரண்ய ஸ்வாமிகள் 'வைராக்கியத்திற்கு ஹேது, விஷய தோஷ திருஷ்டி, அதன் ஸ்வரூபம், ஓக்காளம், கார்யம் விஷய ஆசை திரும்பவும் வாராமலிருத்தல், எல்லைபிரம்மலோக பரியந்தம் துரும்பாக எண்ணுதல், பலன் பிரம்மலோகப் பிராப்தி' என்று கூறி இருக்கிறார்.

விவேக போதினி

தொகுதி 2] ஸாதாரணஹு சித்திரைமீ [பகுதி 10

கர்மகாண்டம் :
அதன் நோக்கம்
KARMAKANDA : ITS OBJECT

முன் இரண்டு வியாஸங்களில் கூறியவைகளிலிருந்து கர்மகாண்டத்தில் கூறப்படும் யாகாதிகளை நாம் செய்யாதுவிட்டாலும் குற்றமில்லை அல்லது உயிருடைய பசுவுக்குப் பதிலாக மாவாற் செய்த பசுவை உபயோகப் படுத்தி யாகங்களைச் செய்தாலும் யாகம் செய்ததாகும் என்றும், கர்மகாண்டத்தில் கூறப்படும் விஷயங்கள் தாழ்ந்தவைகள் அல்ல: கதைகள் வேடிக்கைக் கதைகள் அல்ல என்றும், இவைகள் எல்லாவற்றிற்கும் சிறந்த உட்கருத்தும் நோக்கமும் இருப்பதால் இவைகள் மிகச் சிறப்புவாய்ந்தவை என்றும், வாசிப்போர் தெரிந்து கொள்ளலாம். கர்மகாண்டத்தின் உட்கருத்தையும், அது இவ்வாறு மனிதனைப் பக்குவியாக்க மெதுவாக மேலான ஞான பாகத்தில் வந்து சேரும்படி செய்கிறது என்பதையும் இங்குக் கர்மகாண்ட மந்திரங்களிலிருந்து வற்புறுத்தி, நன்கு விளக்குவோம்.

கர்மகாண்டத்தில் அங்கும் இங்கும் பரம்பொருள் ஸ்தோத்திரங்கள் காணப்படுகின்றன. பொதுவாகக் கர்மங்களையும் அவை சென்றடையும் தேவதைகளையும், அவர்களை ஸ்தோத்திரம் செய்யும் வகைகளையும் கூறிக்கொண்டு வரும் கர்மகாண்டத்தில் தேவதைகளை வியாஜமாகக்கொண்டு அவைகள் மூலமாகப் பரம்பொருளையே நேரிடத் துதிக்கும் மந்திரங்கள் அடிக்கடிக் காணப்படுகின்றன. இதனுல் கர்மகாண்டத்தில் ஸம்பந்தப்பட்டவைகள் முழுவதும் கர்மவிஷயங்கள் அல்ல, அவைகளில் சிற்சிலகர்மத்தைவிட மேலான நிலைகளைக் குறிப்பிக்கின்றன, என்பது விளங்கும். இவைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு சிலமஹான்கள் வேதமுழுவதுமே பரம்பொருளைப்பற்றி ஏற்பட்டது, கர்மங்களைப்பற்றிக் கூறும் பாகங்களைக்கூட உட்கருத்து மூலமாகப் பரம்பொருளைப்பற்றிக் கூறுவதாகக் கொள்ளலாம், என்று அபிப்பிராயப்படுகின்றனர். இதை அநேகப்பெரியோர்களும் அங்கீகரிக்கின்றனர். இதன்பிரகாரம் வேதம்முழுவதும் ஸகலலோகத்திற்கும் ஆதாரமான பரம்பொருளையே நேரிடத் துதிக்கும் மந்திரங்களை உடையதாகும். ஆனுல் ஸாதாரண ஜனங்கள் எளிதில் உணரக்கூடாவண்ணம் பரம்பொருளைப்பற்றி வேதம் கூறுவானேன், என்ற சங்கை பிறக்கும். ஸாதாரண ஜனங்கள் மனம் கர்மங்களில் பற்றியிருப்பதால், அவர்களையும் விருத்தியடையும்படி செய்ய வேதம் பொதுவாகக் கர்மகாண்டத்தில் ஞான விஷய உட்கருத்துகள் அமைந்த கர்மவிஷயமந்திரங்களை கூறி சிறப்பாகச் சிற்சில விடங்களில் பரம்பொருளை (தேவதைகளை முன்னிட்டுக் கொண்டு) நேரிடத் துதித்திருக்கின்றது. மேலும் பிராம்மணங்களில் ஞானஉட்கருத்துக்கள் கொஞ்சம் வெளிப்படையாகின்றன. இதனுல் ஸாதாரண ஜனங்கள் கர்மபாகத்தை எளிதில் பின்பற்ற, சிறப்பாகிய பரம்பொருள் துதி பாகங்களால் அவர்களுக்கு ஆஸ்திக புத்தி உண்டாக்கிக் காலக் கிரமத்தில் அவர்களை ஞானகாண்ட அதிகாரிகளாக்கவேண்டும் என்பதே வேதத்தின் கருத்து. இப்பொழுது கர்மகாண்டத்தில் நேரிடப் பரம்பொருளைத் துதிக்கும் சில மந்திரங்களையும் இருபொருள் மந்திரங்களையும் உதாரணங்களாக எடுத்துக்காட்டுவோம்.

பரம்பொருளை நேரிடத்துதிக்கும் மந்திரங்கள் பின்வருவன.

1. ருக்வேதம் 1-5-17.—'விஷ்ணு (எங்கணும் வியாபி), பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் ஆகிய

இவைகளை மூன்றடியால் அளந்து எங்கணும் வியாபித்தார்.

2. ருக்வேதம் 1-5-18.—ஜயிக்க முடியாதவரும், பிரபஞ்ச ரக்ஷகருமாகிய விஷ்ணுவானவர் பரிசுத்தமான கர்மங்களைக்காக்க (முற்கூறியபடி) மூன்று அடியால் அளந்தார். விஷ்ணுவின் செயல்கள் எவ்வளவு அத்புதமாயிருக்கின்றன! ஓ! ரிஷிகளே! அவரைத் தியானம் செய்து துதியுங்கள். அவருடைய ஸஹாயத்தால் யஜமானன் தனது கர்மங்களை ஸரிவர முடிக்க முடியும். இந்திரனுக்கும் அவர்தான் ரக்ஷகராகிய பிராண ஸ்நேஹிதர்.'

3. ருக்வேதம் 1-5-19:—'ஸாதாரண ஜனங்கள் ஆகாயப்பரப்பைத் தமது கண்களால் தெளிவாகப் பார்ப்பதுபோல சாஸ்திரங்களின் ஸஹாயத்தால் (ஞானக்கண் உண்டாகப்பெற்ற) ரிஷிகள் விஷ்ணுவின் பரமபதத்தைத் தெளிவாக உணருகிறார்கள்.

4. ருக்வேதம் 1-5-20:—விஷ்ணுவின் சிறப்பை வித்வான்கள் (பிரம்மவித்துக்கள்) தமது தெளிவான ஞானம், ஸ்தோத்திரம் முதலியவைகளால் பிரஸித்தப்படுத்தப்படுகின்றனர்.

பின்வரும் இரண்டு மந்திரங்கள் இருபொருள் உடையவைகள். அவைகளுள் ஒன்று பரம்பொருளைக் குறித்துள்ளது. ஸாதாரணமாக நோக்கில் இவைகள் ஸூர்யனைக் குறித்துள்ளன என்று தோன்றும்.

1. 'ஓ ஸூர்யா! நீ அளவிடமுடியாத தூரம் ஓடித்திரிகின்றாய். உன்னைச்சற்றுக் கண்ணெடுத்துப்பார்த்த உடனே பார்ப்பவன் புனிதனுவான். சந்திரன்போன்ற கோளங்கள் உன்னிடமிருந்து பிரகாசம் பெறுகின்றன. இதுமாத்திரமன்றிப் பிரபஞ்சம்முழுவதும் உன்னுலேயே பிரகாசிக்கின்றது.'

2. தபஸ்ஸுசெய்யும் நாங்கள் இருளுக்கெல்லாம் அப்பாற்பட்டதாகியும் ஒப்பு உயர்வில்லாதவனுகியும், தேவாதி தேவனுகியும் உள்ள ஸூர்யன் ஆகாயத்தில் கிளம்புவதைக் காண்கிறோம்.

இவ்விரு மந்திரங்களுக ஸூர்யனைப்பற்றியவைகள் போலக் காணப்படுகின்றன. கர்மகாண்டமாதலால் முதல் மந்திரம் முதல் பாகத்தில் ஸூர்யனைப்பற்றி நேராகக்கூறி, வேதமானது மெதுவாகவும் வெகு அழகாகவும் முதல் மந்திர இறுதியில் தன் உட்கருத்தை 'இதுமாத்திரமன்றிப் பிரபஞ்சம் முழுவதும்உன்னுலேயே பிரகாசிக்கின்றது?' என்ற பாகத்தால் சற்று வெளியாக்கி, அடுத்த மந்திரத்தில் தனது உட்கருத்தை முழுவதும்வெளிப்படுத்துகிறது. 'சந்திரன்போன்ற கோளங்கள் உன்னுல் பிரகாசிக்கின்றன' என்றவரையில் ஸூர்யனைப் பற்றி நேர வேதம் கூறுகிறது என்பதை ஒருவராலும் தடுத்துக் கூறமுடியாது. அதேமாதிரி, முதல் மந்திரத்தின் கடைசி வாக்கியத்தையும் இரண்டாவது மந்திரத்தையும் உற்று நோக்குங்கால் ஸூர்யனைப்பற்றியவை என்று மதிக்கவே முடியாது. பொதுவாய் மேலெழுந்தவாரியாக நோக்குபவர் ஸூர்யோபாஸகன் ஒருவன் தன் தெய்வத்தைப் பற்றி இவ்வாறுதான் கூறுவன் ஆதலால் இப்பாகங்களும் ஸூர்யனைப்பற்றியே கூறுகின்றன, என்று கூறிவிடலாம். ஆனுல் ஸூர்யன் பிரபஞ்சம் முழுவதும் பிரகாசிக்கிறுன் என்பது முழுத்தவறல்லவா? ஸூர்யனைப்போல எத்தனையோ பிரகாச கோளங்கள் இருக்கின்றன என்பது நமது ரிஷிகளுக்குத் தெரியாதா? ஸூர்யன் இந்தத்துதிக்கு அருகன் அல்ல. மேலும், 'தபஸ்ஸு செய்பவர்களுக்குத்தான் அது ஆகாயத்தில் கிளம்புவது தெரியுமோ? மற்றவர்களுக்குத் தெரியாதோ' என்ற சங்கை உண்டாக, 'ரிஷிகள் ஸாதாரண ஜனங்களுக்கு எந்தச் சிறந்த உண்மையை எடுத்துக்கூற இவ்வாறு ஸூர்யனை வியாஜமாக வைத்துக்கொண்டு முயலுகின்றனரோ? நேரிடக் கூறினுல் ஸாதாரண ஜனங்கள் மனதில் நன்றாகப் பதியாதென்றே எண்ணி இவ்வாறு முயன்றார்கள் போலும்' என்ற எண்ணங்கள் நமக்குண்டாகும். இது பரம்பொருளைப்பற்றிக் கூறுகின்றது என்று என் ஆஸ்திகர்கள் மனதில் உடனே தோற்றாது? இத்தோற்றம் உண்டானதும், முதல் மந்திர

த்தின் முற்பாகத்தில்கூட ஸூர்யனைப்பற்றி நேரே கூறவில்லை யென்பதும், அங்குஸூர்யனைப் பரம்பொருளது குறி அல்லது விக்கிரஹமாகக் * கொண்டுதான் கூறப்பட்டிருக்கிறதென்பதும் விளங்கும். இப்பொழுது அவ்விரு மந்திரங்களும் பின்வருமாறு பொருள்படும்:—

1. ஓ பரம்பொருளே! நீர் எங்கும் ஓடிப்பரவியவர், உம்மைச் சற்றுத்தியானித்தால் மோக்ஷம் அடைந்து பரிசுத்தமாவோம். நீரே ஸகலத்திற்கும் ஆதாரம். உம்மால்தான் உலகமே பிரகாசிக்கின்றது. உம்மால்தான் மனித தேவாதி பிரபஞ்சத்திற்கு அறிவு உண்டாகிறது.

2. தபோமஹிமையால் அஞ்ஞானம் நீக்க அதற்கப்பாற்பட்ட பரம்பொருளாகிய உம்மைக் காணுகிறோம். நீர் ஒப்புயர்வற்றவர், தேவாதி தேவன், நமது சிதாகாசத்தில் இப்பொழுது பிரகாசிப்பதை நாங்கள் உணருகிறோம்.

இதுபோலவேதான் ருக்வேதத்தில் அக்னியைப்பற்றிக் கூறும் மந்திரமும்.

1. (1-வது மந்திரம்). யாகத்தில் முதன்மையாயும், யாகத்திற்குத் தேவதையாயும், தேவதைகள் புரோஹிதராயும், யஜமானனுக்கு ஸகல ஸம்பத்துக்களைக் கொடுப்பவராயும் உள்ள அக்னியை நான் துதிக்கிறேன்.

2. ஓ அக்னீ! ஸகல சிறப்பையும் கொடு. எங்கள் துக்கத்தையும் போக்கி, பரமஸுகத்தைக்கொடுத்து, எங்களுடன், தகப்பன் பிள்ளையிடத்திருப்பதுபோல ஸதா பற்றுள்ளவனாக இரு.

இவைகள் அக்னியைத் துதிப்பவைபோலக் காணப்படுகின்றன. அக்னி என்னும் பதத்திற்குச் சிறந்த அதிபதி என்று பொருள். இந்தப்பொருளில் இப்பதம் ஆதிகாரணமாகிய பரம்பொருளையே உணர்த்தும். மேலும் இந்த மந்திரங்களில் கூறியுள்ள விஷயத்தை நேரிட ஸாதாரணநெருப்பைப்பார்த்துக்கூறுவதுபொருந்தாது என்பதும், இவை அக்னியை விக்கிரஹமாக உடைய பரம்பொருளையே நோக்கிக் கூறியவை என்பதும் விளங்கும். ஆகவே இவையின் உட்பொருள் பின்வருவன.

1. சிறந்ததாயும், எல்லாவற்றையும் விடப் பெரிதாயும், யாகத்தில் ஆராதிக்கப்படும் பொருளாயும், யஜமானனுக்கு ஒப்புயர்வற்ற பதத்தைக் கொடுப்பதாயும் உள்ள பரம்பொருளை நான் துதிக்கிறேன்.

2. ஓ பரம்பொருளே!......................................

இம்மாதிரியே இந்திரன், வருணன், வாயு, ஸவிதா முதலிய பதங்களுக்கும் தாதுக்கள் மூலமாக நோக்கில் பரம்பொருள் என்ற ஒரு அர்த்தம் உண்டு. இந்த விஷயத்தை வியாஸர் தாம் எழுதிய வேதச்சுருக்கமாகிய பிரஹ்ம ஸூத்திரத்தில் விஸ்தாரமாக எடுத்துக் கூறியிருக்கிறார். ஆகையால் ஸகல தேவதைகளையும்பற்றிக்கூறும் மந்திரங்கள் ஆழ்ந்துநோக்கில் பரம்பொருளைப்பற்றிக் கூறுவன என்பது விளங்கும்.

இந்தச் சிறந்த பொருளை நேரிற்கூறாமல் எடுத்துக்கூறி, சற்று நிதானிப்பவர் மனதில் நன்றாகப் படும்படியாகவும், ஸாதாரண ஜனங்கள் கண்டு பிரமித்து நிதானிக்கும்படியாகவும் வேதம் எவ்வளவு அழகாய் கர்மகாண்டத்தில் நுழையவிட்டுக் கர்மகாண்டத்தின் நோக்கத்தைக்காட்டியிருக்கிறது பாருங்கள்! இதுபோலவே கர்மகாண்டத்தில் அநேக இடங்களில் காணலாம். எவ்வளவு தான் ஜனங்களுக்கு வேதம் அபக்குவ காலங்களில் பரம ரஹஸியத்தை மறைத்துக் கூறப் புகுந்த இடத்தும், தனது கருணை மிகுதியால் ஆங்காங்கே தன் நோக்கத்தின் கோடியைக் காட்டாமல் போகவில்லை! இம்மாதிரிக் காட்டுவதைக் கூடக் கவனியாமல் தான், மேனாட்டவர்கள் கர்ம காண்டத்தைப்பற்றி வாயில் வந்தபடி எல்லாம் பிதற்றுகின்றனர். இம்மாதிரிவேதங்களில் காட்டியிராவிடில் நாமும், 'ஓர் நாசகாலியின்பாட்டைக்கேட்டுச்சிலர் பன்றியாக மாறியதுபோல' மேனாட்டவர்களது வாக்சாதுரியம் யுக்திவாதம் முதலியவைகளில் ஈடுபட்டு வேதத்தை நிந்திக்கும் கழுதைகளாயிருப்போம்.

மேனாட்டவர்கள் கர்மகாண்டத்தின் நோக்

* வேதத்தில் விக்கிரஹ ஆராதனமே இல்லை என்று கூறும் அவஸரக்காரர் வாக்கை நம்பவேண்டாம்.

162049

கத்தை அறியும் திறமில்லாது வெகு சாதுரியமாகப் பின்வருவாறு கூறுவதுண்டு. 'கர்மகாண்டம் முதலிலும், ஞானகாண்டம் பின்னரும் எழுதப்பட்டது. கர்மகாண்ட கர்த்தர்களுக்குப் பரதெய்வம் உண்டென்பது தெரியாது. ஆதலால் அவர்கள் கர்மம், அற்புத அல்லது பயங்கரமான தோற்றங்கள், உபயோககரமான வஸ்துக்கள், இறந்தவர்களின் உயிர்கள் இவைகளைத் தெய்வமெனக் கொண்டாடினர். பின்னர் வரவரப்பிரபஞ்சப் பழக்கம்முதிர்ந்து தமது அறியாமை நீங்கியதும், பெரியோர்கள் உண்மையானதெய்வம்ஒன்றுண்டுஎன்றுஉணர்ந்துஞானகாண்டத்தைஎழுதலாயினர். இதற்கு ஆதாரம் கர்மகாண்டத்திலிருக்கும் ஸம்ஸ்கிருதத்திற்கும், ஞானகாண்ட ஸம்ஸ்கிருதத்திற்கும் உள்ள பேதமே' என்று கூறி முடிக்கின்றனர். * இவர்களது வாக்கியங்கள் எவ்வளவு ஒழுங்காக இருக்கின்றன! கண்டு மலைக்கவே வேண்டாம்! முன் எடுத்துக்காட்டிய கர்மகாண்ட நோக்கத்தை ஐயம் திரிபற உணர்த்தும் மந்திரங்களும், அவைபோன்ற மற்றைய மந்திரங்களுமே, மேனாட்டார் கர்மகாண்ட கர்த்தர்களுக்கு உண்மையான பரம்பொருள் ஒன்றுஉண்டு என்பது தெரியாது என்று கூறுவது, வெறும் கலஹஹேதுவான பொய்என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்குகிறது. மேலும் ஸம்ஸ்கிருத பேதத்தால் மாத்திரம் ஞானகாண்டம் உண்டான காலம் கர்மகாண்டம் உண்டான காலத்திற்குப் பின்னாக இருத்தல்வேண்டும் என்று ஸ்தாபிக்கவே முடியாது. விஷயங்கள் மேன்மையானவைகளாகுங்கால் அவைகளைக்கூறும் பாஷை நடை எளிதாயும், மிக ஆற்றலுடையதாயும்மாறும். கர்மகாண்டம் பிராம்மணர்களுக்கு மாத்திரம் ஏற்பட்டதாயும், ஞானகாண்டம் பொதுவாக ஏற்பட்டதாயும் இருப்பதால் கர்மகாண்ட நடை மிகக் கடினமாயும் மரபுச்சொற்கள் அதிக உடைத்தாயும், ஞானகாண்டம் எளிய நடையில் அமைக்கப்பட்டதாயும் இருக்கலாம். இவைகளைக் கவனியாமல் ஆரியர்களுக்கும் தமது மூதாதைகளைப் போல ஒன்றும் தெரியாதுஎன்று ஸ்தாபிக்கவேண்டும்என்ற அகங்காரத்துடன், தமது மதபுஸ்தகத்திலிருக்கும் புதிய பழய ஏற்பாடுகளைப்போன்றவை இக்காண்டங்கள் என்று கூறித் திருப்தி அடையவேண்டும் என்று முயலும் வெளிநாட்டார் சொல்லைக்கேட்டு ஏமாறவேண்டாம். அவர்கள் கூறுவதுபோல முன்பின்னாக இவ்விரு காண்டங்களும் வந்தபோதிலும், இப்பொழுது உலகத்தில் அகங்காரம் கொண்டு உலாவும் மதங்களை ஏற்படுத்தியவர்கள் பிறப்பதற்கு அநேக காலங்களுக்கு முன்னர் இது நடந்தேறி யிருக்கவேண்டும். அப்படிக்கூறினும் ஸனாதன தர்மத்திற்கு யாதொரு குறைவும் இல்லை என்பதையும் மறந்துவிடக்கூடாது.

இந்த நோக்கத்துடன் வெளிவந்த கர்மகாண்டம் எவ்வாறு மனிதனைப் பக்குவப்படுத்துகிறது என்பதைச்சற்று விசாரிப்போம். கர்மகாண்டம் முதலில்தான்குறிப்பிடுங்கர்மங்களால்இவ்வுலக விஷயங்களிலிருந்து மனிதனது மனதை எளிதில் நீக்கி, இவ்வுலகத்திற்கப்பாற்பட்டதாகிய விஷயங்களில் பற்றும்படி செய்கிறது. இவ்வாறு பழகிவரும் ஒருவனுக்குக் கர்மகாண்டத்தில்ஆங்காங்குமறைவாயும்நேராயும் கூறப்படுவதாயும், யாகங்களில் ஆராதிக்கப்படுவதாயும் உள்ள பரம்பொருளைப் பற்றிய துதிகள் அவன் மனதில் பதிந்துகொண்டேவரும். மேலும் யாகம் செய்வதில் உண்டாகும் கஷ்டம் முதலியவைகளால் கர்மத்தில் பொதுவாக ஒரு வெறுப்பும் உண்டாகும். யாகத்தின் முடிவாகிய ஸ்வர்க்கலோக வாஸம் நிலையற்றதாயும், சீக்கிரம் முடிந்துவிடுமே என்ற பயத்தோடு ஸம்பந்தப்பட்டதாயும் இருப்பதால் யாகவிஷயங்களில் இவனுக்கு வரவர வெறுப்பு அதிகரித்துக்கொண்டேவரும். இதனால் கர்மகாண்டத்தில் கூறும் பரம்பொருள் எந்த ஸ்வரூபம் உடையது? ஆராதிக்கும் என் ஸ்வ

* இந்த விஷயத்தின் விஸ்தாரத்தை விவேகபோதினி முதல் தொகுதி 7-ம் பகுதியிலிருக்கும் முதல் வியாஸத்தைப் பார்க்க.

SL
3m 211, No8VB

ரூபம் என்ன? எனக்கும் அந்தப் பரம்பொரு ளுக்கும்யாது ஸம்பந்தம்? யாகபலனைவிட எக் காலத்திலும் நிலைத்து நிற்கக்கூடிய பயன் ஒன்றும் இல்லையா? உலக விஷயங்களைப் பற்றி நிற்றல் கர்மம் செய்தல் முதலியவைக ளால் உண்டாகும் மனச் சஞ்சலம் நீங்க உபாயமில்லையா? என்ற கேள்விகள் பிறந்து அவன் மனதைப் புண்படுத்தும். கர்ம காண்டத்தில் இவைகளுக்குத் தகுந்தபதில் அகப்படாததால் அவன் மனம் வரவர மிக வருத்தம் அடையும். உடனே வேதங்களை முற்றிலும் உணர்ந்த பெரியோர்களிடம் சேர்ந்து பழகி இவைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணி ஸாதுஸங்கம் செய் யத் தொடங்குவான். அவர்களுள் தன் மன திற்குப் பிடித்த ஒருவரை ஆசார்யனுக்கிக் கொண்டு அவரிடம் ஸமித்தைக் * கையிலேந் திப்போய் நின்றுகொண்டு தான் படும் கஷ் டங்களை எடுத்துரைத்துத் தன்னைக் கஷ்டத்தி னின்றும் விடுவித்து நல்ல வழிகாட்டிக் காக்கவேண்டுமென்று பிரார்த்திப்பான். அவர் அவனைச் சோதித்து மெதுவாக ஞானகாண்ட விஷயத்தைக் காலக்ரமத்தில் புகட்டத் தொடங்குவார்.

இம்மாதிரி உலக விஷயங்களில் ஓர் வெறு ப்பையும் அவைகளுக்கு அப்பாற்பட்ட ஞான காண்ட விஷயமாகிய பரம்பொருளை உள்ள படி உணர்ந்து கஷ்டம் தீரவேண்டும் என்ற ஆவலையும் உண்டாக்குவதே கர்மகாண்டத் தின் நோக்கம். அதிற் கூறியவைகளை ஒழுங் குப்படி நம்மால் இயன்றமட்டும் இந்த ஞானத் துடன் நடத்திவந்தால் முடிவில் அவை நமக்குத் தீவிர மோக்ஷாபேக்ஷை உண்டாக்கி ஆசார் யனைத்தேடி அடையும்படி செய்யும்.

* ஸமித்தைக் கொண்டுபோவது ஆசார்யனது அக்னி ஹோத்திரத்திற்கென்றும், ஆதலால் ஞானசாரியன் கிரு ஹஸ்தனு யிருத்தல்வேண்டும் என்றும் சிலர் கூறுகின்ற னர். இக்கருத்து அவ்வளவு பொருத்தமாகப் பட வில்லை. ஆசாரியன் எந்த ஆசிரமத்தனுக இருப்பினும் இருக்கலாம். ஸமித்தின் உட்கருத்து பின்வருவது. 'ஸமி த்து எவ்வாறு நீர் வற்றி உலர்ந்திருக்கிறதோ அதுபோல என்மனமும் உலகப்பற்று அற்று உலர்ந்திருக்கிறது, மேல் என்ன இருப்பது என்பது விளங்கவில்லை. ஸமித்துத் தவ னுவதுபோலப் பரிதவிக்கிறேன்.' என்ற சிஷ்யனது உள் கஷ்டத்தை உலர்ந்த ஸமித்து குறிக்கிறது.

விச்வநாத நாராயண மாண்டலிகர்

RAO SAHEB, VISWANATH NARAYAN MANDLICK, C S I.

அறிவ தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி
யுறுவ துலகுவப்ப செய்து—பெறுவதனா
லின்புற்று வாழு மியல்புடையா ரெஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்த லரிது.

என்னும் நாலடி வெண்பாவிற் கூறிய வாறு படிக்கவேண்டியதையெல்லாம் ஐயம் திரிபு அறக்கற்று. அவற்றிற் கூறியவாறு நின்று, தான் என்று கொண்ட கர்வமொழி ந்து, கொடுமை முதலிய புன்மைச் செயல் கட்கு அஞ்சி, நன்மை செய்ய வருங்காலத்து வரும் துன்பங்களை அஞ்சாது மன வலிமைக் கொண்டு, உலகிற்குழைத்து, உலகத்தார் ஒப்ப நடந்து, கிடைத்ததைக்கொண்டு இன்பமடை ந்துவாழுந் தன்மையை உடையவர் எவ்விடத் தும், எக்காலத்தும், எவ்விதத்திலும் கஷ்டப்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
18 MAY 1910

படுவர் என்று சொல்வது மிகவும் அரிது. மனவமைதியுற்றவர் சாந்தகுணமும் நிறைந்த படிப்பு முடையாராதலால் அவர் தாம் கஷ்ட மடையாதிருத்த லன்றித் தம்மினத்தாரைக் கஷ்டப்படாம லிருக்கச் செய்வது அவரது ஸ்வபாவம்.

மஹாராஷ்ட்ர வம்சத்தலைவர்களாய் முன்பு பேஷ்வாக்களது ஸந்ததியாரோடு ஸம்பந்தங் கொண்டு நற்குலத்தில் உதித்த விச்வநாத நாராயண மாண்டலிகற்கு இக்குணங்களெல் லாம் பொலிந்திருந்தனவென்று நாம் என் சொல்லவேண்டும். 1833ஆு மார்ச்மீ 3வ கோங்கண தேசத்து ரத்நகிரி தாலூக்காவில் முருதா என்னுங்கிராமத்தில் பிறந்த இவர், சிறு வயதில், பேஷ்வாக்களின் கீழ் ஸுபேதாராக இருந்த தோண்ட்பண்ட் என்னும் பேர் கொண்ட தன் பாட்டனாரிடை கல்வி கற்று வந்தனர். பின் பத்து வயதாயதும் ரத்நகிரியில் ஆங்கிலம் படிக்க அனுப்பப்பட் டங்கு ராவ்பஹதூர் ராமசந்திர பாலகிருஷ்ணர் என்னும் மஹானிடமிருந்தும் கல்வி பயின்று, பொம்பயில் எல்பின்ஸ்டன் கலாசாலையில் படித்தனர். அங்குப் பரிசு பலபெற்றுத் தனது குணவிசேஷங்களால், வித்வச்சிரோ மணிகளாகிய ஹார்க்னஸ், பேட்டன், கீரீன் இவர்களுடைய ஆதரவையும் அடைந்து வாழ் ந்தார். இவர் சிறுபொழுது காட்டிய கல்வி வி சேஷம், தனது ஆசிரியராகிய கணிதசாஸ்திர வித்வான் ஒழிவிலிருந்த காலத்து, இவரை அவர் வேலையை நடத்தும்படி ஏற்படுத்தியதே சான்றாகும்.

மாண்டலிகர் அக்காலத்தில் சிறந்த ஆங்கி லப்பரிக்ஷைகளில் ஒன்றில் தவிர மற்றெல்லா பாகங்களிலும் முதன்மையாய்த் தேறினார். அவர்க்கு அப்பொழுது வயது பத்தொன்பது. பேட்டன் இவரைச் சீமைக்குச்சென்று ஸிவில் ஸேர்விஸ் பரிக்ஷைக்குப் படிக்கும்படிச் சொன் னார். மாண்டலிகர் தன்னுறவினர்க்கு ஒப்பா தென்று விட்டுவிட்டார். பின் ஸிந்துநாட் டின் இராசாங்ககாரகரின் உதவி உத்யோகஸ் தராக ஏற்படுத்தப்பட்டுக் கர்ணல் ஜேகோபியின் கீழ் உத்யோகஞ் செய்து அவரால் பல பெரிய இடங்களில் பயின்று வந்தனர். மாண்டலிகர் பின் உபவித்யாபரீக்ஷகராகவும், பின் "ஸபார் டிநேட்ஜட்ஜா"கவும், அதன்பின் ராஜாங்கப்புத் தகசாலை பரீக்ஷகராகவும், வருமானவரி வசூலிக் கும் பிரிவினர் உதவியோராகவு மிருந்தனர். இவ்வளவு உயர்ந்த பதவியடைந்த மாண்டலி கர்க்கு, ராஜாங்க வேலையிலிருப்பின் உயர்ந்த தொகையாக வருமானம் வராதெனப்பட்ட தும் தன் வேலையை ராஜீநாமா கொடுத்துவிட் டார். பின் நியவாத பரிக்ஷைக்குப்படித்து 1863ஆு நியாயவாதியாகப் பிரசுரிக்கபட்ட னர். அப்பொழுது தான் பொம்பயி "ஸதார் அட லட்" கச்சேரி "பொம்பயி ஹைகோர்ட்" என் று பெயர் மாற்றப் பெற்றுக் காரிய விவகாரங் களும் உயர்த்தப்பட்டன. அக்காலத்து நமது மாண்டலிகரைப் போல் சிறந்த படிப்பாளி இல்லை. இவர் நியாயவாதவேலையில் தன் மனஸ் ஸாட்சிக்கு கொஞ்சமேனு மாறுசெல்லாது, ராஜாங்கத்தார்க்கு அருவருப்பு இன்றி நடந்து வந்தார். தன்னுடையவேலையில் மிகக்கவலை உள்ளவர். பூனாவில் ஓர் "கேஸ்" விஷயமாக "ஹாஜர்" ஆகவேண்டிய காலத்து, "ரயில்" தப்பி விட்டபடியால் நேரம் கழித்துச் செல்லக் கூடாதென்று "ஸ்பெஷல் ட்ரெயின்" வைத் துக்கொண்டு அவ்விடம் சேர்ந்தார். மற்றோர் ஸமயத்தில் பெருஞ்செல்வம் கிடைக்கக்கூடிய கட்சியில் கட்சிக்காரன் ஸரியான ஸமயத்தில் வாராமையால் கட்சிக்காக "ஹாஜர்" ஆக மாட்டேனென்று விட்டனர். மற்றோர்காலம் ரத்நகிரிக்குத் தன்கட்சி விஷயமாகச் செல்ல கப்பல் கிடைக்காதபொழுது தன்னொருவனுக் காகத் தனிக்கப்பல் வைத்துக்கொண்டு சென்

றார். "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார், உயிர்நீப்பர் மானம் வரின்" என்னுங் குறளடியை மனத்திற்கொண்டார் போல தன் மானமழியாது, வாய்மையழியாதுத் தன்னைக் காத்துக் கொள்வதவரியல்பென்று இனி நாம் சொல்லவேண்டியதேயில்லை.

தனது இனத்தொழிலுடையாரது கஷ்டங்களை நீக்கவும் முயன்றார். அப்பொழுது அஸல் தரப்பு வாதிக்கும்படி எல்லோரையும் விடவேண்டும் என்று மிக உழைத்தார். ஹைகோர்ட்டில் இவரையும் மற்றுமிரண்டுபேரையும் மாத்திரம் விடுவதாகச்சொல்லியபொழுது, அதை தன் மூலஹமைக்கு மாறுபட்டதென்று மறுத்துவிட்டனர். தன்னை மாத்திரம் கவலைகொள்ளாது, தன்னைப்பற்றிய யாவர்க்கு முழைக்கவேண்டும் என்னும் தீபம் அவர் ஹ்ருதயத்தில் எரிந்துகொண்டே யிருந்தது. இவ்வாறிருக்கும் ஸமயத்தில் 1884௵ மாண்டலிகர் ராஜாங்க வக்கீலாக நியமனஞ்செய்யப்பட்டார். இந்த நிலைமையை இவர்தான் முதல் முதல் அடைந்தவர்.

மாண்டலிகர் நியாயவாதி மாத்திரமன்று, பொம்பய் நகரவிசாரணைக் கூட்டத்தொருவராகியும், அமைதி யொழுக்கத்தலைவராகியும் (Justice of peace), பொம்பய் ராஜாங்க ஸர்வகலாசாலை அங்கத்தினராயும், பொம்பய்ராஜாங்க சட்டநிரூபணைக் கூட்டத்தங்கத்தினராகவுமிருந்து, நகர்ஸுக நிலைமையையும், ஜனங்களின் ஸுகதுக்கங்களையும்பற்றி மிகக்கவலைகொண்டு உழைத்துவந்தார். நகர விசாரணை ஸபையில் ஒழுங்கில்லாது நடந்துவந்த அக்கிரசனுதிபதியை, தமது ஸத்யத்தைப் பயமின்றிப் பிரகாசிக்கச் செய்யும் சக்தியால், ராஜாங்கத்தாரால் அவ்வேலையிலிருந்து ஒழிக்கும்படிச் செய்து நகர விசாரணைக் கூட்டத்தின் நிலைமையைப் புதுப்பிக்கும்படிச் செய்தனர். தான் அக்கூட்டத்தில் கலந்திருந்த காலத்தில் "துளசிநீர்க்குழாய் வேலை"யைத் துவக்கி ஜலஸுகத்தை ஜனங்களுக்குண்டாக்கினர். இவ் வேலையில் நடுநிலைமையினின்று தவறாது நடந்துவந்தனர்.

மாண்டலிகர் தொழில் வேலையில் மாத்திரம் சிறந்துவிளங்கவில்லை. படிப்பிலும் மிக உழைத்தவர். பலமுறை ஸர்வகலா ஸங்கத்தில் மஹாராஷ்ட்ரம், கூர்ஜரம், ஸிந்துமுதலிய பாஷைகளில் பரீக்ஷகராகவிருந்தனர். இதற்குள் இவர் ஸர்வகலாஸங்கத்து சூழ்ச்சிக்கூட்டத்திலொருவராகச் செய்யப்பட்டு, கலாகுரு (Dean of Arts) என்னும் பட்டமும் அளிக்கப்பட்டார். இப்பட்டம் இந்தியருள் இவர்க்குத்தான் முதலில் கிடைத்தது. இடையே ராஜாங்கத்தாராலும் "ராவ்ஸாஹேப்" என்னும் பட்டமும் அடைந்தார். அப்பொழுதுதான் இவர் ராஜாங்க சட்டநிரூபண ஸபையில் அங்கத்தினராகச் செய்யப்பட்டதும். அங்குத் தனது பயமின்மையாலும், வாய்மை ஒழுக்கத்தாலும், ராஜாங்க கட்சியாரைக் கௌரவமாகத் தடுத்து ஜனங்களது கஷ்டங்களை எடுத்துக்காட்டி வாதித்து வந்தனர். இந்த நிலைமைக்கு மாண்டலிகர் மூன்று முறை வந்தனர்.

ரிப்பன் ப்ரபு இந்தியதேசத்து ராஜ ப்ரதிநிதியாக வந்தகாலத்தில் இவரை இராஜப்ரதிநிதியாரின் சூழ்ச்சிக்கூட்டத்து அங்கத்தினராக ஏற்படுத்தினர். டப்பரின் ப்ரபு பிரதிநிதியாகவிருந்தகாலத்தும் இந்த நிலைமையை மாண்டலிகர் அடைந்தனரென்பது அவர்பால் இராஜாங்கத்தினர்கொண்ட அன்பைக் காட்டுகின்றது. இவர் வருமான வரிச்சட்டம், உப்புச் சட்டம், குடிமுறைமைச்சட்டம் இவைகளைப் பற்றி மிகவுழைத்து ஜனங்களுக்காக நன்மைசெய்ய கஷ்டப்பட்டனர். இவரது படிப்பு முதலிய வெல்லாவற்றையும் எல்லாருமறிந்தனர். ராஜாங்கத்தார் இவர்க்கு இந்திய தாரகா நேசன் (C. S. I.) என்னும் பட்டம் அளித்தனர். ஜனங்களு மிவர்ஞாபகச்சின்னமாக ஓர் தங்கப்பதக்கம் ஸம்ஸ்கிருதபாஷையில் முதலில் வருபவர்க்களிக்கும்படி பொம்பய் ஸர்வகலாஸங்கத்தி லேற்படுத்தினர். வேத சாஸ்த்ரோடஜ பாடசாலையில் இதேமாதிரியாக ஓர் பரிசு ஏற்படுத்தப்பட்டது,

முன்னமே மாண்டலிகர் பாஷாஞானமுடையவர் என்று கூறினோம். இவர் முதலில் தன் ஸ்வயபாஷையில் மிக உழைத்துவந்தனர். ஆங்கிலத்தில் எட்ஜ்வொர்த் அம்மை (Miss Edgeworth) எழுதிய "லாட்டரி" என்னுங் கதை மஹாராஷ்ட்ர பாஷையிலெழுதி சிறுவயதிலேயே பரிசுபெற்றார். ஸ்ரீ ஹரிராவ் என்பவரோடுகூடி "ராஜ்யதந்த்ர ஸம்பாஷணை" என்னும் புத்தகமொன்று மஹாராஷ்ட்ரத்தில் எழுதினர். ஸிந்து தேசத்திற்குச் சென்றபொழுது ஸிந்து பாஷையைக்கற்று அதில் ஓர் இலக்கணநூல் எழுதினர். பின் கூர்ஜர பாஷைக்கற்று, மௌண்ட் ஸ்டேவர்ட் எல்பின்ஸ்டன் (Mount Stuart Elphinstone) எழுதிய இந்திய சரித்திரத்தைக் கூர்ஜரப்படுத்தினர். அதை மஹாராஷ்ட்ரத்திலும் எழுதினர். சட்ட புத்தகங்களனேகம் ஸ்வயபாஷையிலியற்றினர். இடையில் ஸம்ஸ்கிருதம் ஐயமறக்கற்றனர். பூர்வீகவிஷய ஆராய்ச்சியைப்பற்றிய சிலசிறந்த வியாஸங்களை ராயல் ஏஷியாடிக் கூட்டத்தினர் (Royal Asiatic Society) முன்படித்தனர். தன்னுயிர்க்குப் பின்னும் பெருமையும் புகழும் ஒழியாதிருக்கும் வண்ணம் ஹிந்து நியாய சாஸ்திரத்தைச் சுத்தப்படுத்தும்பொருட்டு யாக்ஞவல்க்ய ஸ்ம்ருதியை நீலபந்துவின் வியவபாஸுமாயுபா என்னும் விருத்தியுடனும், ஆங்கில மொழிபெயர்ப்புடனும் பிழையறப்பரிசோதித்துப் பிரசுரஞ்செய்தனர். இவ்வாறு ஜனங்களுக்குதவியதன்றித் தேசநன்மையின் பொருட்டு "ஸ்வதேசாபிப்ராயம்" (Native Opinion) என்னும் வாரப்பத்திரிகை ஒன்றேற்படுத்தி அதற்கும் வேலைசெய்து வந்தார்.

இவ்வாறு உலகத்தவர் யாவரும் புகழும்படி நடந்து, உறவினரும் உற்றவரும் கொண்டாட, குலாசார மொன்றையேனும் வழுவாது முன்னோர் விதிப்படி நடந்தும், ஒழுக்கத்திலுயர்ந்தும், தயாளகுணமும் ஈகைத்தன்மையுங் கொண்டு விளங்கியும் நின்ற நமது மாண்டலிகர் 1889௵ மேமீ 9௳ உலகத்திலிருந்து கொண்ட பூதங்களை அதற்கே அளித்து அதன் கடனை ஒழித்துவிட்டார். அவர் பிரிவு எல்லார் மனதையும் உருக்கியது. இனி அவர் போல் ஒருவர் வருவதென்றோ?

ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசாரியாள்

SRI ADI SANKARACHARYA

மூன்றா மாண்டில் முதலை வாய்ப்பட்
டேழா மாண்டி லெழுபிறப் பறக்கநீ
யுலகந் துறந்து வுய்ந்திடின் விடுவே
னென்றலு மருமைத் தாயுங் கேட்டுச்
சொன்ன சொல்லும் பழுதற வண்ணங்
கன்றிய மனத்துடன் காவியு மீய,
இல்லற மின்றித் துறவறம் பூண்டு
எல்லாக் கலைகளு மெளிதி லுணர்ந்து
புத்த மதத்தைப் புற்றடங்க வைத்துச்
சமண மதத்தைச் சன்ம மறுத்துச்
சமயவாதி களைச் சிறகறுத் தோட்டி,
யில்லறமி யாதென வினவிய மாதிற்
கிறக்கு மன்ன னிப்பியிற் புகுந்து [ர்ந்து,
குறித்தகாலங் காமநுகர்ந்து கரைகண் டுணர
கணத்தில் வென்றுதம் மாற்றல் காட்டிப்
பல்வகை மதத்தோர் பலவாய்ப் போற்றச்
சாரதா பீடம் சமைவுற விளக்கிப்
பாரிலத் வைதம் பரவச் செய்து
பரமாத் மாவே வுருவெடுத் தாற்போற்
பக்குவ முற்றுப் பக்தர்கள் வணங்கத்
தர்ம மதமாம் பிர்ம்ம மதத்தைத்
தாபனம் செய்த தகமை யுடையோன்
ஸ்ரீமத் சங்கர பாதா சாரியன்
ஏம மலரடி யேற்றித் துதிப்பாம்.

வி. எஸ். மணியம்,

STUDIES IN ANIMAL LIFE

1. வெளவால்

BATS



வெளவாலைப்பற்றி எழுதத் துவக்குங் காலத்து, முதல் முதல் விசாரணை செய்ய எற்படும் விஷயம், அது பட்சியா மிருகமா என்பதாம். ஆனால் வெளவாலின் அவயவங்கள் முதலானவற்றைப் பரிசோதித்துப் பார்க்கும்போது இத்தகைய விசாரணை சந்தேகத்திற்குச் சிறிதேனும் இடங் கொடாது. ஏனெனில் அது மிருகமென்றே சொல்வதற்குப் போந்த காரணங்கள் பலவுள. மற்றப்பட்சிகளைப்போல் வெளவாலும் பறக்கின்றதே, அதையேன் பறவையென்றுசொல்லலாகாது என்னுங் கேள்வி பிறக்கும். ஆனால் பறக்குந் திறங்கொண்ட ஒவ்வொரு பிராணியையும் பட்சிக்கூட்டத்திற் சேர்ப்பது சரியாமோ? பறக்கும் மீன்களும், பறக்கும் பல்லிகளும் நமது தென்னிந்தியாவிலிருக்கின்றன; அவ்வொரு காரணத்தினாலேயே அவை மீன் கூட்டத்தினின்றும் பல்லிக்கூட்டத்தினின்றும் விலக்கப்பட்டுப் பட்சிக்கூட்டத்திற் சேர்க்கப்படமாட்டா. மற்றும், பறப்பதற்குதவியாகிய வெளவாலின் சிறகிற்கும் பட்சிகளின் சிறகிற்கும் வேறுபாடு பலவுண்டு. பட்சிகளுள் சிறகு என்பது அவற்றின் முன்னங்கால் விகாரப்பட்டு, அதன்மேல் அனேக இறகுகளுண்டாகி, அவ்விறகுகள் ஒவ்வொன்றும் தனித்தனி பிரித்தெடுக்கக்கூடியதாய் அமையப்பெற்ற ஓரங்கமாம். மேலும், இச்சிறகுகளுக்கும், பட்சியின் கால்கள், வால் முதலியவற்றிற்கும் ஒருவித சம்பந்தமுமில்லை. வெளவாலிற்கோ, சிறகென்பது, முன்னங்கால் பின்னங்கால் இவற்றின் விரல்கள் மிகுதியாய் நீண்டு அவற்றினிடையே வளர்ந்திருக்கும் தோற்பரப்பேயாம். பறவையின் சிறகைப்போல் பற்பல சிறிய இறகுகளால் ஆகாது, விரல்களினிடையே விரிந்து படர்ந்த மெல்லிய தோலே வெளவாலின் சிறகென்பதாம். இத்தோலானது, முகத்தின் இருபுறங்களிலும் ஆரம்பித்து, முன்னங்கால் பின்னங்கால் இவற்றின் நீண்ட விரல்களையும், வாலையும் உள்ளடக்கிப் பரவிநிற்கும். மேலும், பட்சிகளின் சிறகுகளில் நகமென்பதேயில்லை; ஆனால் வெளவாலின் முன்னங்கால் விரல்களின் நுனியில் கூரிய நகங்களுண்டு. ஆகவே பட்சியின் சிறகுகளுக்கும், வெளவாலின் சிறகென்று சொல்லப்படும் அங்கத்திற்கும் ஏராளமான வித்தியாசமுண்டென்பது மேற்சொன்னவற்றால் நன்கு விளங்கும்.



இனி, வெளவாலுக்கும் மிருகத்திற்குமுள்ள ஒற்றுமையைப் பார்ப்போம். மிருகத்தைப் போல் வெளவாலும் நான்கு கால்கள் கொண்டிருக்கின்றது. ஆனால் வெளவாலானது நடக்குந்திறத்தை விட்டுப் பறக்குந்திறங் கைப்பற்றியதால், அக்கால்கள் மிகவும் நீண்டு மெலிந்து இலேசானதாயிருக்கின்றன. இதன்றி இதை மிருகமென்று சொல்வதற்கு வேறு காரணங்களுண்டு. பறவைகளுக்குப் பற்களில்லை; வெளவாலோ மிருங்களைப்போல் இருவரிசைப்பற்களுடையது. பறவைகள் யாவும் முட்டையிட்டே குஞ்சுபொறிக்கும்; வெளவாலோ மற்ற மிருகங்களைப்போல, உயிரோடு குட்டிகளையீன்றெடுத்துப் பின்பு பால்கொடுத்து வளர்க்கும். பறவைகளுக்குச் சிறு துவாரந் தவிர சவ்வான வெளிக்காது கிடையாது. வெளவாலினத்தில், அகண்டுபிரிந்த வெளிக்காதுகளுண்டு. இவற்றைத்தவிர பறவைகளுக்கும் வெளவாலுக்கும் வித்தியாசத்தை விளக்கிக் காட்டும் வேறு அங்க விபாகங்களிருப்பினும், அவை பிரதானமற்றவையாதலால், ஈங்கெடுத்து விவரிக்காதுவிட்டனம்.

வெளவாலானது பகற்காலங்களில் இருட்டான விடங்களையே விரும்பி மறைந்திருந்து இராக்காலங்களிலேயே வெளியேறிச் சஞ்சரிக்கும். அதன் கண்கள் மிகச்சிறியன. ஆனால் அதன் மூக்கும் காதும் வெகு தீர்க்கமாய் வளர்ந்திருக்கின்றன. சில வகை வெளவாலில் மூக்கைச்சுற்றி இலைகளைப்போன்ற உபாங்கங்கள் பலவுண்டு. அவற்றைக்கொண்ட வெளவாலின் முகம் மிகக்கோரமாயிருக்கும். அவை வெளவாலின் மோப்பு உணர்ச்சியை மிகுதியாக்குந் திறனுடைத்தென்பதற்கு ஐயமில்லை. இங்கிலாந்தில் வசிக்கும்வெளவாலினம் ஒன்றில் (Plecotus auritus) அதன் காதும், உடம்பும் ஒரேநீளமுள்ளதாம். கண்ணின் பார்வை மிகக்குறைந்திருப்பதினிமித்தம், காதும் மூக்கும் பூரணமாய் அமைந்திருக்கின்றன போலும். இராக்காலத்து வெளியேறிச் சிறுபூச்சிப் புழுக்களைத்தின்று ஜீவிக்கும். ஒருஜாதி வெளவால் மரங்களின் பழத்தைத்தின்று காலங்கழிக்கும். அமெரிக்காவில் வசிக்கும் மற்றொரு ஜாதி வெளவால் வேறுமிருகங்களின் உதிரத்தைக் குடித்து உயிர்பிழைக்கும். வெளவாலானது இருண்டவிடங்களில் தங்கும்போது கால்நகங்களினுதவியால் கட்டடத்தின் மேற்புறத்தைப் பற்றிக்கொண்டு தலை கீழாகத் தொங்குகின்றது என்பது யாவருமறிந்த விஷயம். அது அந்நிலையிலிருக்குங்கால், அதன் வாயானது கீழ்ப்புறம் நோக்குமல்லவா? அப்போது அது மலஞ்சலம் போக்குமாயின் வாயினாலே அந்நனஞ் செய்கிறது என்ற கொள்கை நம்மவரிற் பலரும் கொண்டிருக்கின்றார்கள். அக்கொள்கை மிக்க பிழையுற்றதென்பதற்கு

அத்தாட்சியாக வௌவாலொன்றைப் பிடித்துச் சற்றுப்பரீட்சித்துப் பார்ப்பார்களானால், வாய் வேறு அபானம் வேறு என்று எளிதில் அறிவார்கள்.

வௌவால்களுள் சுமார் நூறு இனங்களுக்கு மேலுண்டு. நமது வீடுகளிலும் கோயில்களிலும் வசிக்குஞ் சிறிய வௌவாலுக்குத் துரிஞ்சில் என்று பெயர். இரத்தங் குடிக்கும் அமெரிக்க வௌவாலுக்கு உதிரமாகாளி என்று பெயர். இன்னும், ஆசியா ஆபிரிக்கா கண்டங்களில் வசிக்கும் பெரிய வௌவால்களுக்குப் பழந்தின்னி என்று பெயர். இவ்வினத்திற் சேர்ந்ததும், ஜாவா தீவில் வசிப்பதுமான காலாங் என்னும் வௌவாலே எல்லாவற்றினும் மிகப்பெரிது. ஏனெனில் அதன் சிறகை விரித்து ஒரு நுனியிலிருந்து மற்றொரு நுனிக்கு அளக்க, ஐந்தடிக்கு மேற்பட்ட அகலமுள்ளதாகவிருக்கும்.

வே. நரசிம்மன், எம்.ஏ., பி.எல்.

சோதித்துப் பார்த்தபின் அபிப்பிராயங்கோள்.—சிலருக்கு மற்றொருவர் முகத்தைக் கண்டால்பிடிக்காது. அவனைக் கண்டால் வெட்டிவைக்கலாம்போல் தோன்றும். அந்த மனிதன் வெகு யோக்கியனாகவிருக்கலாம். அவனைப்பற்றி நாம் தீர விசாரித்திருந்தால் அவனை நமது குருவாக நாம் அங்கீகரித்துக்கொள்ள நமக்குப் புத்தி தோன்றலாம். அப்படியிருக்க அவன் முகத்தைக் கண்டமாத்திரத்தில் அருவருப்புற்று அவனைத் துவேஷிப்பது நமக்கு எவ்வளவு பெரும்பாவம். எந்தவிஷயம் எப்படியிருந்தபோதிலும் நாம் சோதித்தே அபிப்பிராயங்கொள்ளவேண்டும். சோதித்தல் என்பதுதான் உள்ளத்தைத் திறக்கும் திறவுகோல். இவ்வாறு சோதனை என்பதேயில்லாமல் திடீரென்று பார்த்தமாத்திரத்தில் ஒருவனிடம் நல்ல எண்ணமும் கெட்ட எண்ணமும் கொண்டு நியாயத்துக்கு விரோதமாய்ப் பலர் நடக்கின்றார்கள். இது அக்கிரமம்; பாவத்தையும் அவமானத்தையும் விளைவிக்கும்.

பண்டிதர் நடேச சாஸ்திரி.

நட்பு

FRIENDSHIP

சில வாலிபர்கள் சிறிதும் கபடமில்லாமல் உலக வழக்கம் கொஞ்சமேனும் தெரியாதவர்களாயிருக்கின்றனர். இவர்களிடம் யாராவது போக்கிரி அல்லது துஷ்டன் வந்து சேர்ந்துகொண்டு பரம மித்திரன்போல் காட்டுவானேயானால் அதைக் கபடமென்று சிறிதேனும் எண்ணாமல் அவனை முற்றிலும் நம்பிவிடுகிறார்கள். அவனிடத்தில் அதிக நம்பிக்கை வைத்துவிடுகிறார்கள். கடைசியாய்க் கைப்பொருள்களையெல்லாம் இழந்து அவஸ்தைப்படுகிறார்கள். ஆகையால் இவ்விதமான கபடநேசர்களை யொருநாளும் நம்பலாகாது. அவர்கள் உன்னிடத்தில் எவ்வளவு வேஷத்துடன் வருகிறார்களோ நீயும் அவ்வளவு வெளி மரியாதையுடன் அவர்களைப் பெற்றுக்கொள். பேச்சுமட்டும் இன்பமாய்ப் பேசலாம். நம்பிக்கை யென்பதை யொருநாளும் வைக்கலாகாது. உண்மையான சிநேகம் திடீரென்றுவது சொற்பகாலத்திற்குள்ளாவது உண்டாகமாட்டாது. அது கொஞ்சங் கொஞ்சமாய் நாளடைவிலே உண்டாகவேண்டும். சிநேகிப்பவர்கள் இருவர்களிடமும் ஒரேவித நற்குண நற்செய்கைகள் இருந்தாலொழிய சிநேகமென்பது அவர்களுக்குள் வேரூன்றாது. அன்றியும் முதலில் நாம் பார்க்கும்பொழுதே எவன் நம்மிடம் அதிக அன்பைக்காட்டுகிறானோ அவன் சிநேகம் நாளுக்குநாள் குறைந்து கடைசியில் கபடவேஷமாய் முடியும். நல்ல சிநேகமென்பது அப்படியில்லாமல் முதல்முதல் மிகவும் சூக்ஷமாயும் கொஞ்சங் கொஞ்சமாயும் ஆரம்பித்து நாளாக நாளாக நன்றாய் வேரூன்றி நிற்கும்.

சிலர் சிறிதுகாலம் அந்யோந்திய சிநேகமாயிருப்பார்கள். இவர்கள் யாவர்களென்றால்

குடி அல்லது குடிசை நுழைதல் முதலான கெட்ட நடத்தைகள் உள்ளவர்களாம்; இந்தக் கெட்டநடத்தைகளே இவர்களுடைய சிநேகத்திற்கு முதலில் காரணங்களாகின்றன. ஐயோ அநியாயம்! இதையும் சிநேகமென்று சொல்லுகிறார்களே! நல்நடத்தைகளைக் கெடுக்க வந்த சண்டாளர்களென்று ராஜாங்கத்தார் இவர்களைத் தண்டிக்காமல் விட்டுவிடுகிறார்களே! இவர்கள் முதலில் ஒருவருக்கொருவர் சகாயமாய்க் கடன் கொடுத்துக்கொள்வார்கள்; சண்டை சச்சரவுகளில் ஒருவரையொருவர் பாதுகாத்து வருவார்கள்; பிறகேதாவது ஒரு சங்கடகாலத்தில் ஒருவன் மற்றொருவனை விட்டுவிட்டுத் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள எவ்வளவு பொய் சொல்லவேண்டுமோ அவ்வளவையும் சொல்வான். ஒரு மனிதன் "சத்தியமாய், ஆணைப்படிக்கு" என்று ஒரு சமாசாரத்தை நீ நம்புதலின் பொருட்டுச் சொல்ல ஆரம்பிப்பானேயானால் அவன் உன்னை மோசம் செய்ய வந்தவனென்று நிச்சயமாய் எண்ணு. அவன் சொல்லப்போகிற சங்கதியில் உண்மையில்லாததனாலல்லவோ சத்தியம், ஆணை முதலான மொழிகளை அவன் முறையிடுகிறான். இப்படி அவன் செய்வதெல்லாம் நமக்கு நம்பிக்கை யுண்டாகும்பொருட்டே யாதலின் அதை நாம் ஒருநாளும் நம்பக்கூடாது. அவன் சொல்லும்பேச்சில் உண்மையிருக்கும் பக்ஷத்தில் சத்தியம், ஆணை முதலியவைகளை யெடுத்துக் கூறுவானேன்?

அறிமுகம் நேசம் இவ்விரண்டையும் நாம் நன்றாய்ப் பகுத்தறியவேண்டும். சிலர் நமக்கு அறிமுகமாய் இருக்கலாம். அவர்களை அவ்வளவுடனே வைத்துக்கொள்ளவேண்டுமேயல்லாது நமது சிநேகிதர்களென்று ஜனங்கள் சொல்ல இடங்கொடுக்கக்கூடாது. ஒருககால் மதிமயங்கி நாம் அப்படிச் செய்வோமேயானால் அது நமக்குப் பின்னால் கெடுதியாய் முடியும். நீ யாருடன் சிநேகம் பண்ணுகிறாயோ அவர்களுடையயோக்கியதையைக்கொண்டு ஜனங்கள் உன் யோக்கியதையையும் நிச்சயிப்பார்கள். "நீ யாருடன் இணங்கி இருக்கிறாய் சொல்லு, உன் யோக்கியதையை நான் சொல்லிவிடுகிறேன்" என்று ஒரு பழமொழி ஸ்பெயின் தேசத்தில் வழங்கி வருகிறது. அதற்குச் சரியாக நமது தேசத்து ஔவை என்னும் சீமாட்டியும் "கற்றாரைக் கற்றாரே காமுறுவர் கற்றிலா மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்" என்றுசொல்லியிருக்கிறாள். இந்தவசனங்களின் முக்கிய கருத்தாவது படித்தவர்கள் படித்தவர்களோடும் படியாத மூடர்கள் மூடர்களோடும் சேருவதுபோல ஒரேகுணமுள்ளவர்களே ஒருவரோடு ஒருவர் சேருவார்களென்பதேயாம். இந்தக் கருத்தை உத்தேசித்தே ஒருவன் யாரோடு இணங்கியிருக்கிறானோ அவர்கள்பேரைச் சொன்னாலே அவனது குணத்தைத் தெரிந்துகொள்ளலாமென்னும் அர்த்தமுள்ள ஸ்பெயின் தேசத்துப் பழமொழியும் ஒன்று வழங்கிவருகிறது.

நாம் ஒரு போக்கிரியுடன் அதிக சகவாசம் வைத்துக்கொண்டால் நம்மையும் ஜனங்கள் போக்கிரியென்று ஏன் சொல்லக்கூடாது. ஆகையால் கெட்டவர்களுடன் நாம் சேரவேகூடாது; அவர்களுடன் நாம் சேரக்கூடாதென்பதால் அவர்களைச் சத்துருக்களாகப் பண்ணிக்கொள்ளவேண்டுமென்பதல்ல; அவர்களிடம் நமக்கு சிநேகமும் வேண்டாம், சண்டையும் வேண்டாம். அவர்கள் குணத்திற்காக நமது மனதில் வெறுப்பிருப்பினும் அவர்களை நாம் நேரே காணும்பொழுது முகத்தில் சிரிப்பு இருந்தால் அதனால் யாதொன்றும் குறைந்துபோகாது. மனதிற்குள் ஒவ்வொருவருக்கும் அடக்கமான அபிப்பிராயமிருக்கவேண்டியது அவசியமே; வெளியில் மாத்திரம் எல்லாருடனும் கலகலப்பாய் இருக்கவேண்டும். கலகலப்பாய் இராமல் கடுகடுப்பாய் இருப்போமேயானால் அது மிகவும் துன்

பங்களை விளைவிக்கும். அதிக கலகலப்பும் கூடாது, முற்றிலும் கடுகடுப்புங் கூடாது; இவ்விரண்டிற்கும் நடுநிலை ஒன்றுண்டு. அதைத் தெரிந்து நடப்பவர்கள் க்ஷேமத்தை அடைவார்கள்; தெரியாதவர்களோ பிரயோஜனமற்றவைகளில் வெகு அடக்கமாயிருந்து ஜனங்களுடைய விரோதத்தைச் சம்பாதிப்பார்கள்; தங்களுக்குத் தெரிந்தவைகளைக் கண்டவர்களிடமெல்லாம் சொல்லித் தங்கள் மதிப்பைக் குறைத்துக்கொள்ளுவார்கள்.

பண்டித நடேச சாஸ்திரி.

திருமயிலை அறுபத்துமூவர் உத்ஸவம்

ARUPATHUMOOVAR AT MYLAPORE

(*All rights reserved*).



திருமயிலை அல்லது மயிலாப்பூர் என்பது சென்னப்பட்டணத்தின் தென்புறத்தில் கடற்கரை ஓரமாக இருக்கும் ஓர்பாகம். இதில் பட்டணத்து வக்கீல்கள் அநேகர் வஸிக்கின்றனர். இங்குப் பெரிய பணக்காரர்களும் ஸாதாரணமாகத் தமது வரவிற்கும் செலவுக்கும் ஸரியாகப்போகும் ஜனங்களும் அதிகமே ஒழிய நடுநிலைமையிலிருப்பவர்கள் அதிகமில்லை. இப்படி இருப்பினும், இந்தப்பாகத்திற்கு விசேஷம் இதன் கோயிலே. கபாலீசுவரரும், கற்பகவல்லியும் இங்குத் திருக்கோயில்கொண்டெழுந்தருளி யிருக்கின்றனர். இங்குப் பகவான் மேற்கு நோக்கி இருக்கின்றார். கோயிலின் மேற்குப்புறத்தில் ஓர்பெரிய திருக்குளம் இருக்கின்றது.

இந்த ஸ்தலத்திற்கு அநேகவிதமான மஹாத்வங்கள் உண்டு. இங்குத் தான் அம்மன் (பார்வதி தேவி) மயிலாயிருக்கும்படி நேர்ந்தகாலத்து பரமசிவத்தைப் புன்னைமரத்தடியிற் பூஜித்து மயிலுருவம் நீங்கி பகவானோடு சேர்ந்தது (இது பிரம்மோத்ஸவத்தில் இங்கு முதல்நாள் இரவு கொண்டாடப்பட்டு வருகின்றது). இங்குத் தான் அறுபத்துமூவருள்ஒருவரும் மானஸ பூஜையாலேயே பரமபதம் பெற்றவருமாகிய வாயிலா நாயனார் அவதரித்துப் பரமபதம் பெற்றது. (இவர் சரித்திரத்தை விவேகபோதினி 2-ம் தொகுதி 9-ம் பகுதி சிறுவர்க்கானபக்கத்திற்காண்க). இங்குத் தான் திருக்குறள் செய்தவராகிய மஹா ஞானியான திருவள்ளுவ நாயனார் அவதரித்து வாழ்ந்தது. திருமயிலை கீழ்கோபுரத்திலிருந்து நேரே வடக்கேபோகும் பாதையே போனால் ஓர் பெருமாள் கோயில் பின்புறமாகப்போகும். அது தாண்டியதும் பாதைக்கு மேல்புறம் காணப்படும் ஓர் சிறுகோயிலே திருவள்ளுவர் கோயில். வைஷ்ணவ மரபின்படி நோக்கிலும் இது திவ்ய ஸ்தலம் தான். முதலாழ்வார் மூவருள் பேயாழ்வார் பிறந்து பரமபதம் பெற்றதும் இங்கேதான். ஆழ்வார்கள் பாடல்கள் நாயன்மார் பாடல்கள் இவைகளிலிருந்து அவர்கள் காலத்தில் இம்மயிலை சிறப்புவாய்ந்த பட்டணமாக இருந்ததென்றும், இவ்வூர் ரத

வீதியில், உத்ஸவகாலங்களில் தர்சனம் செய்யவரும் அடியார்களுக்கும் கோயிலுக்கும் உபயோகப்படும்படியான அநேக சத்திரங்கள் நடைபெற்று வந்தன என்றும் தெரியவருகிறது.

இந்தத் திருமயிலையில் வருஷம் ஒருமுறை பங்குனி உத்தரத்தை ஒட்டி ஓர் பிரம்மோத்ஸவம் நடப்பது உண்டு. அதில் எட்டாம் திருநாளுக்கே அறுபத்துமூவர் உத்ஸவம் என்று பெயர். அன்று பகவான் அறுபத்துமூன்று நாயன்மாரோடு மாலை 3-மணிக்குத் திவ்யஸேவை அளிப்பது வழக்கம். இந்த உத்ஸவம் மிகுந்த கோலாஹலமாக, அநேக ஜனங்களால் தர்சிக்கப்பட்டும், இவ்வூரை மிகச் சிறப்புற்று விளங்கும்படியாகச் செய்யும் தர்மங்கள் விசேஷ ஐதிகங்கள் முதலியவைகளோடு ஸம்பந்தப்பட்டும், இருப்பதால் இதைப்பற்றி யாவரும் நன்றாகக் கூடியவரையில் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். ஆதலால் இதை இங்கு எடுத்து விவரிக்கலானோம்.

இவ்வுத்ஸவத்தோடு ஸம்பந்தப் பட்டிருக்கும் பெரியபுராண கதை பின்வருவது. பார்வதீதேவியிடமிருந்து ஞானப்பால் உண்டு, உலகில் ஸன்மார்க்கத்தை நிலைநிறுத்திய ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர் அவதாரமாகிய திருஞானஸம்பந்த ஸ்வாமிகள் காலத்தில் திருமயிலையில் வைசியர் குலத்தில் சிவநேச செட்டியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் பெயருக்கேற்றபடி அவர் சிவபெருமான் சிவனடியார்கள் ஆகிய இவர்களிடம் பக்தி செலுத்தி ஸதா பரிசுத்தராக இருந்தார். இவருக்குப் பணமும் ஏராளமாக இருந்தது. இவர் திருஞானஸம்பந்தஸ்வாமிகள் செய்த திவ்யச்செயல்கள், ஸன்மார்க்க ஸ்தாபனம் செய்தவழிகள் முதலியவைகளைக் கேள்விப்பட்டு அவரிடம் சிறந்த அன்பு பாராட்டி வந்தார். ஆனால் அவரைப் பார்க்கமாத்திரம் செட்டியாருக்கு ஸந்தர்ப்பம் வாய்க்கவில்லை. ஒவ்வொருநாளும் செட்டியாரிடம்வந்து எட்டும் திருஞானஸம்பந்தரது அற்புதச் செய்கைகளெல்லாம் அவருக்கு ஸம்பந்தர் மேலிருந்த அன்பை அதிகப்படுத்தியது.

இப்படி இருக்கையில் இவருக்கு வெகு காலத்திற்குப்பின் பூம்பாவை என்றொரு அருமைப்பெண், பிறந்தாள். இவள் சிவபக்தி மிகுந்தவளாய் வளர்ந்து வரும்நாளில் திருஞானஸம்பந்தரது அற்புதச்செயல்களில் அநேகம் சிவநேச செட்டியார் காதில் வந்து எட்ட, அவர் ஆனந்த பரவசத்தில் தன் பெண் ஸொத்து முதலியவைகள் எல்லாவற்றையும் ஸம்பந்தஸ்வாமிகளுக்கு அர்ப்பிதம் செய்தனர். இவ்வாறு இவர் ஸம்பந்தஸ்வாமிகளின்மீது அன்புவளர்த்து வரும் நாளில், இவர் அருமைப்பெண் பூக்கொய்ய தோட்டத்திற் போன விடத்து பாம்புகடித்து இறந்தாள். சிவபக்தி விஷயத்தில் தன் பெண்ணிடம் இருந்தபற்றால் செட்டியார் சற்றுத் துக்கித்துவிட்டுத், தன்பெண்ணைத் தகனம் செய்து ஸம்பந்தஸ்வாமிகள் திருமயிலைக்கு வருங்கால் அவர் பாதத்தில் அவள் எலும்பை அர்ப்பிதம் செய்வதாக எண்ணி, அதை ஓர் பானையில் இட்டு அதையே தன் பூம்பாவையாகப் பாவித்துத் தகுந்த மரியாதைகள் செய்து கொண்டுவந்தார்.

இவ்வாறு கொஞ்ச நாளாக, திருமயிலைக்கு வடக்கிலுள்ள திருவொற்றியூரில் ஸ்வாமி தர்சனத்திற்காக ஸம்பந்தஸ்வாமிகள் எழுந்தருளி யிருப்பதாகச் செட்டியாருக்கு ஸமாசாரம் எட்டியது. உடனே அவர் ஸம்பந்தஸ்வாமிகளுக்குத் தகுந்த மரியாதைகள் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு, அவரை எதிர்கொண்டழைத்து வர செட்டியார், திருவொற்றியூரை நோக்கிப் புறப்பட்டார். இதற்குள்ளாக ஸம்பந்தஸ்வாமிகளும் திருமயிலைநோக்கிப் புறப்பட்டுவிட்டார். இருவரும் வழியில் ஸந்தித்தனர். செட்டியார் ஆனந்தபரவசராகிக் ‘கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்துவிட்டதே’ என்று மனங்களித்தார். இருவரும் வார்த்தையாடி வருகையில் செட்டியார் தன் பெண் விஷயத்தை முழுவதும் சொல்லி அவள் எலும்பைக் கிருபைகூர்ந்து அங்கீகரிக்கவேண்டும் என்று ஸம்பந்த ஸ்வாமிகளை வேண்டிக்கொண்டார். இதைக் கேட்டுக்கொண்டு ஸம்பந்த ஸ்வாமிகள் மயிலை வந்து சேர்ந்து, ஸ்நானம் முதலியவைகளை முடித்துக் கொண்டு கபாலீசுவரரைச் செட்டியாருடன் தர்சித்து ஸந்நிதியில் வந்து, செட்டியாரைத் தன் பெண் எலும்பைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டார்.

செட்டியார் அந்த எலும்புப்பாத்திரத்தைப் பல்லக்கில் ஏற்றிச் சீர்முதலியவைகளோடு எடுத்து வந்து பகவத்ஸந்நிதானத்தில் வெளியில் கொண்டு நிறுத்தினார். அப்பொழுது அங்குச் சிவபக்தர்கள் எல்லோ

ரும் வந்து கூடினர். ஆகாயத்தில் தேவர்கள் முதலியோர் எல்லோரும் வந்து கூடினர். எல்லோரும் மிகுந்த ஆவலுடன் என்ன நடக்கப்போகிறதென்று கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருக்கையில், சிவபிரானை மனதிலே தியான மூலமாக அமைத்துக்கொண்டு அந்த பலத்தால், 'சிவனடியார்களுக்குத் தொண்டுசெய்தலும், சிவபெருமான் திருவிழாக்கண்டு ஆனந்தித்தலுமே, துர்லபமான மானிடப் பிறவியின் பயன் என்பது உண்மையாகில் இப்பூம்பாவை உயிருடன் எழட்டும்' என்று சபதம் செய்துகொண்டு ஸம்பந்த ஸ்வாமிகள் பின்வரும் பதிகத்தைப்பாடி அருளினர்.

* திருமயிலாப்பூர்—பூம்பாவாய் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மட்டிட்டபுன்னையங்கானன்மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சரமமர்ந்தா
னொட்டிட்டபண்பினுருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டல்காணாதேபோதியோபூம்பாவாய். 1

மைப்பயந்தவொண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பயந்தநீற்றான்கபாலீச்சரமமர்ந்தா
னைப்பசியோணவிழாவுமருந்தவர்க
டுய்ப்பனவுங்காணாதேபோதியோபூம்பாவாய். 2

வளைக்கைமடநல்லார்மாமயிலைவண்மறுகிற்
றுளக்கில்கபாலீச்சரத்தான்றொல்கார்த்திகைநாட்
டளத்தேந்திளமுலையார்தையலார்கொண்டாடும்
விளக்கீடுகாணாதேபோதியோபூம்பாவாய். 3

ஊர்திரைவேலையுலாவுமுயர்மயிலைக்
கூர்தருவேல்வல்லார்கொற்றங்கொள்சேரிதனிற்
கார்தருசோலைக்கபாலீச்சரமமர்ந்தா
னார்திரைநாள்காணாதேபோதியோபூம்பாவாய். 4

மைப்பூசுமொண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பூசுநீற்றான்கபாலீச்சரமமர்ந்தா [டுந்
னெய்ப்பூசுமொண்புழுக்கனேரிழையார்கொண்டா
தைப்பூசங்காணாதேபோதியோபூம்பாவாய். 5

மடலார்ந்ததெங்கின்மயிலையார்மாசிக்
கடலாட்டுக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தா
னடலானேறூருமடிகளடிபரவி
நடமாடல்காணாதேபோதியோபூம்பாவாய். 6

மலிவிழாவீதிமடநல்லார்மாமயிலைக்
கலிவிழாக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
பலிவிழாப்பாடல்செய்பங்குனியுத்திரநா
ளொலிவிழாக்காணாதேபோதியோபூம்பாவாய். 7

தண்ணாவரக்கன்றோள்சாய்த்துகந்தாளினான்
கண்ணார்மயிலைக்கபாலீச்சரமமர்ந்தான்
பண்ணார்பதினெண்கணங்கடம்மட்டமிநாட்
கண்ணாரக்காணாதேபோதியோபூம்பாவாய். 8

நற்றாமரைமலர்மேனான்முகனுநாரணனு
முற்றாங்குணர்கிலாமூர்த்திதிருவடியைக்
கற்றார்களேத்துங்கபாலீச்சரமமர்ந்தான்
பொற்றாப்புக்காணாதேபோதியோபூம்பாவாய். 9

உரிஞ்சாயவாழ்க்கையமணுடையைப்போர்க்கு
மிருஞ்சாக்கியர்களெடுத்துரைப்பநாட்டிற்
கருஞ்சோலைசூழ்ந்தகபாலீச்சரத்தான்றன்
பெருஞ்சாந்திகாணாதேபோதியோபூம்பாவாய். 10

திருச்சிற்றம்பலம்.

இப்பாட்டுப்பாடி வருகையில் முதலில் பூம்பாவை உருவம் பெற்றுப் பின்னர் முறையே பன்னிரண்டு வயது வரையில் வளர்ந்தமுடிவில் மிகுந்த அழகிய உருவத்தோடு அவள் குடத்தைவிட்டு வெளிவந்தாள். எல்லோரும் கண்டு வியந்தனர். சிவநேச செட்டியார் ஆனந்தபரவசமாகி ஸம்பந்த ஸ்வாமிகள் காலில் விழுந்து தாம் முன்னர் செய்த பிரதிக்ஞைப்படி தன் பெண்ணை ஸம்பந்தஸ்வாமிகளுக்கு அர்பித்துப் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். அதற்கு ஸம்பந்த ஸ்வாமிகள் செட்டியாரை நோக்கி 'நீர் இப்பூம்பாவையைப் பெற்றெடுத்தால் அவளுக்குப் பிதா

* இப்பதிகத்தில் 2-ம் பாட்டு முதல் 10-ம் பாட்டு வரையில் ஒவ்வொரு பாட்டிலும் மயிலாப்பூரில் ஒவ்வொருவருஷத்திலும் முன்னர் நடந்துவந்த உத்ஸவங்கள் ஒவ்வொன்றையும் பற்றிக் கூறியிருக்கிறது. இப்பாகங்களையெல்லாம்தடித்த எழுத்தில்இங்குஅச்சிட்டிருக்கிறது. இவைகளுள் 3 முதல் 7-பாட்டு வரையில் உள்ள உற்ஸவங்கள் இப்பொழுதும் நடந்து வருகின்றன. இவைகளுள் 7-ம் பாட்டில் கூறப்பட்டிருக்கும் ஒலி விழாவாகிய பங்குனி உத்தர விழாவே இவ்வூர் பிரம்மோத்ஸவம். இதில் பிக்ஷாண்டர் வேஷம் (பலிவிழா) மிக முக்கிய உத்ஸவம் என்று தெரியவருகிறது.

அதுபோல இறந்த அவளை மறுபடி உயிரோடு எழும்படி செய்த நானும் அவளுக்குப் பிதாவாகவேண்டும். ஆதலால் நான் அவளைக் கல்யாணம் செய்து கொள்வது தகுதியல்ல,' என்றுபேக்ஷித்தார். செட்டியாரும் அவர் உறவினர்களும் மிகுந்த துக்கத்திற்கு ஆளாகித் தத்தளிப்பதைக்கண்டு, ஸம்பந்தஸ்வாமிகள் வேதத்திலிருந்து நியாயம் காட்டி அவர்களைத் தேற்றி, திருமயிலைவிட்டு வேறு திருப்பதிகளைத் தரிசிக்கப் புறப்பட்டனர். ஸம்பந்தஸ்வாமிகளுக்கென்று குறிக்கப்பட்டமையின் பூம்பாவையை செட்டியார் வேறொருவருக்கு விவாஹம் செய்து கொடுக்காமல்விட, அவள் வாழ்நாள் முழுவதும் கன்னிகையாகவேயிருந்து பரமபக்த சிரோமணியாக விளங்கி முடிவில் பரமபதம் பெற்றாள்.

இனி இக்கதையின் ஐதிகப்படி மயிலாப்பூரில் எட்டாம் திருவிழாவன்று நடத்தப்படும் கோயில் காரியங்களை எடுத்துக்கூறுவோம். எட்டாம் திருவிழாவன்று காலை 8-மணிஸுமாருக்கு திருஞானஸம்பந்த ஸ்வாமி கோயிலிலிருந்து எழுந்தருளி ரதவீதி வழியேவந்து பெரிய குளம் மேலண்டைக்கரையிலுள்ள படித்துறையில் போட்டிருக்கும் தென்னண்டைப்பந்தலில் இறங்குவார். இதற்குமுன்னமேயே சிவநேச செட்டியாரையும் குளம் மேல்துறையிலிருக்கும் வடவண்டைப் பந்தலில் கொண்டுவந்து வைத்திருப்பார்கள். அன்று அதிகாலைஸூர்யோதயத்திற்கு முன்னமேயே பூம்பாவையை அலங்கரித்துத் திரையால்மூடப்பட்டு மேலண்டைவீதி வடக்கு மூலையில் உள்ள ஓர் பந்தலில் வைத்திருக்கும். ஞானஸம்பந்தரும் செட்டியாரும் குளத்தில் ஸ்நானம் முதலியவைகள் செய்து ஸ்வாமி தர்சனம்செய்யத் தயாராவதாகப் பாவனை. உடன், அவர் விக்கிரஹங்களுக்கு அபிஷேகம் அலங்காராதிகள் செய்யப்படும். இவைகள் எல்லாம் முடிய நடுப்பகல் 1-மணியாகும். உடனே செட்டியாரும், ஸம்பந்த ஸ்வாமிகளும் புறப்பட்டுக் கோயிலுக்குச்சென்று ஸ்வாமி தர்சனம்செய்யப்போவார்கள். பின்பு மேலண்டை வீதி ஸ்வாமி ஸந்நிதிக் கெதிரில் வைக்கப்பட்டிருக்கும் பூம்பாவை விமானத்தருகில், செட்டியாருடன் ஸம்பந்த ஸ்வாமிகள் வந்து நிற்பர். உடனே பூம்பாவைக்குரிய சீர்கள் எல்லாம் உள்ளூர் திருவண்ணாமலை மடாதிபதியால் எடுக்கப்பெற்று வந்து சேரும். பின்னர் கோயில் ஓதுவார் முறையே முன் எடுத்தெழுதியுள்ள பூம்பாவைத் திருப்பதிகம் பாடுவர். ஒவ்வொரு பாட்டு முடிந்ததும் ஸம்பந்த ஸ்வாமிகளுக்குக் கற்பூரஹாரத்தி செய்யப்படும். பதிகம் முடிந்ததும் பூம்பாவை விமானத்தை மறைத்திருக்கும் திரை நீக்கப்பட, உள்ளிருக்கும் அலங்கரித்த பூம்பாவை விக்கிரஹத்திற்கும் ஸம்பந்த ஸ்வாமிகளுக்கும் தீபாராதனை நடைபெறும். இதன் பின்பு ஸம்பந்தஸ்வாமிகள், செட்டியார், பூம்பாவை ஆகிய மூவரும் புறப்பட்டுக் கோயில்பக்கம் போக அங்குக் கபாலீசுவரர் அறுபத்துமூன்று நாயன்மாருடன் வந்து நிற்பர். மூன்று பெயர்களும் கோயிலுள் சென்று மூலலிங்கத்தை ஆராதித்தப் பின்னர் உத்ஸவமூர்த்திவலம் எதிரேநிற்க, பகவான் இம்மூன்றுபெயர் அறுபத்துமூன்று நாயன்மார்கள் ஆகிய இவர்களுடன் மாலைமூன்றுமணிக்குத் திருமயிலைவீதியில் ஆனந்தபவனிபுறப்படுவர். பூம்பாவையை எழுப்புங்கால் ஸகல தேவதைகளும் அடியார்களும் வந்திருந்ததாகக் கூறியிருக்கும் கதையின்படி நடத்தப்படும் ஐதீகம் இதுவே. இந்தத் திருவிழாவன்று ஸ்வாமிகோயிலுள்சென்று இறங்கும்முன்ஸூர்யாஸ்தமனஆகிவிடும். சென்றநாலைந்துவருஷமாக, இவ்வூர் திருவள்ளுவர் கோயிலிலிருந்து திருவள்ளுவ நாயனாரும் எழுந்தருளப்பண்ணப்பெற்றக்கபாலீசுவரர்பின்னர் இந்த எட்டாம் திருவிழாவன்று 64-வது நாயனாராக வந்துகொண்டிருக்கின்றனர்.

இத்திவ்ய உத்ஸவத்தைக்கண்டு ஆனந்திக்கவரும் ஜனங்களைப்பற்றிச் சற்றுவிசாரிப்போம். இந்த உத்ஸவம் பார்க்கவரும் ஜனங்கள் சற்றேறக்குறைய 4-அல்லது 5-லக்ஷத்திற்கு இருக்கும். இவர்கள் காலை 9-மணிஸுமார் முதல்கொண்டு மாலை 5-மணி வரையில் வந்துகொண்டே யிருப்பார்கள். நடுப்பகல் 11-அல்லது 12-மணிக்குள் மயிலாப்பூர் நிறைந்துவிடும். 1-அல்லது 2-மணி ஸுமாருக்கு மயிலாப்பூருள் வண்டிகளை விடுவதில்லை. கூட்டம் அவ்வளவு அதிகமாகிவிடும். இந்த உத்ஸவத்தில் நடைபெறும் விருஷபோத்ஸவம், பிக்ஷாடனர் வேஷம் இவைகளில் நடக்கும் பாணவேடிக்கைகள் இந்த எட்டாம் நாளில்லை. இந்த உத்ஸவம் ரதோத்ஸவம்போல காலையில் சீக்கிரம் முடிவதுமல்ல. இப்படி இருப்பதால் ஜனங்கள் அதிகமாகக்கூடுவதற்கு, பகவத்தர்சனம் செய்யவேண்டும் என்ற ஆவல் தான் காரணம் என்பது வெளியாகும்.

வரும் ஜனங்களுக்கு என்னவேலை என்பதைக் கூறவோம். ஜனங்கள் வந்ததும் கோயிலில் உள்ள மூலஸ்தானம், அதன் எதிரிலிருக்கும் மண்டபத்தில் வைத்திருக்கும் அறுபத்துமூன்று நாயன்மார்கள், வெளியே புறப்பட அலங்கரித்து வைத்திருக்கும் உத்ஸவமூர்த்திகள், ஞானஸம்பந்தஸ்வாமி முதலிய விக்கிரஹங்களுக்குத் தேங்காய் உடைத்துச் செய்ய வேண்டிய மரியாதை செய்தல், பின்னர் மயிலாப்பூரில் அன்று நடைபெறும் தர்மசத்திரங்களில் போஜனம் செய்தல், மாலை இரண்டுமணிக்குத் திருமயிலைப் பதிகம் பாடி பூம்பாவையை ஆக்கியருளும் வைபவத்தைக்கண்டுகளித்தல், பின்னர் 4-மணிக்கு ஆனந்தபவனிவரும் ஸ்ரீ கபாலீசுவரஸ்வாமியைக் கண்டுபரவசமாதல் ஆகிய இவைகளே. அன்று உடைபடும் தேங்காய்களுக்குக் கணக்கேயில்லை. அன்று மயிலாப்பூர்வரும் பக்திமான்களுக்கு, அன்று பகல்முழுவதும் பகவத் விஷயமான தொழிலே இருக்கும். அன்ருவது சற்றுத் தமது லௌகிக விஷயங்களை மறந்து நிற்க ஜனங்களுக்கு ஸமயம் வாய்க்கும். ஸதா ஒருவருக்கொருவர் ஸம்பந்தஸ்வாமிகள், பரமசிவம், இவர்களின் வைபவத்தையே சொல்லிக்கொண்டு காலங்கழிப்பார். இவ்வாறு அநேக ஜனங்களை ஒரேகாலத்தில் உலகப்பற்றைச் சற்று மறந்து நிற்கும்படி செய்யும் திறனுடையது இந்தத் திவ்ய உத்ஸவம்.

இனி இந்த எட்டாம்நாள் நடைபெறும் தர்மங்களைப்பற்றிக் கூறுவோம். இந்த உற்ஸவத்தன்று ஸுமார் நடுப்பகல் 12-மணிக்கு நாம் வெளியே புறப்பட்டுக் கூட்டத்தைக் கவனியாது மயிலாப்பூர் ரதவீதியை ஒருதரம் சுற்றிவந்தால், அநேகவித தர்மங்களைக் கண்ணாரக்கண்டு களிக்கலாம். வீதிகளில் குளக்கரை ஓரமாக வருபவர் ஸ்வாமி புறப்பட்டு வரும்வரையில் தங்கி இளைப்பாறுவதற்காக விஸ்தாரமான அநேக தண்ணீர்ப்பந்தல்கள் ஏற்பட்டிருக்கும். மயிலாப்பூர் முற்காலத்தில் அநேக அன்னஸத்ரங்களை உடையதாக விருந்தது. இப்பொழுது அவைகளுள் காலத்தின் கொடுமையால் சிற்சிலதான் நடைபெற்று வருகின்றன. இவைகளில் சிலவற்றில் தர்சனத்திற்குவரும் பிராம்மணர்களுக்கும், மற்றவைகளில் சூத்ரர்களுக்கும், இதுபோல மற்றஜாதியார்களுக்கும் அன்று ஸமாராதனை நடந்துகொண்டேயிருக்கும். இவைகள் போதாவென்று வண்டிகளில் நீர்மோர் பானகம் தண்ணீர் வாழைப்பழம் வெள்ளரிக்காய் முதலியவைகளைப் போட்டுக்கொண்டு கோயிலை வலம் வந்து ஜனங்களுக்கு ஒருதிறத்தார் இவைகளைக் கொடுத்துக்கொண்டு வருவார்கள். சர்க்கரை தர்மம், சிறு புத்தக தர்மம் இவைபோன்ற அநேக சிறு சிறு தர்மங்கள் ஒவ்வொருவரும் ஆங்காங்கே தம்மால் இயன்றமட்டும் செய்வர். சிற்சில வீடுகளில் தண்ணீர் பந்தல்களும் வைக்கப்பட்டிருக்கும். தர்சனத்திற்கு வருபவர் எடுத்துவரும் சிறு குழந்தைகளுக்குச் சுத்தமான பசும்பால் தர்மம் ஓரிடத்தில் நடந்துகொண்டிருக்கும். இவ்வாறு அநேகவித தர்மங்கள் அங்கங்கே வீதி முழுவதும் ஓயாது அன்று நடந்துவரும். மேலும் மயிலாப்பூர் உள்ளேவந்து சேரும் அநேக பாதைகளில் ஸுமார் இரண்டுமூன்று மைல் தூரம் வரை அன்று தண்ணீர்ப்பந்தல்கள் காணப்படும். இவைகளை எல்லாம் உற்றுப்பார்த்து செய்பவர்கள் இன்னார் என்று தெரிந்து பத்திரிகையில் பிரசுரம் செய்தால் ஒருபக்கம் முழுவதும் வேண்டிவரும்போலத் தோற்றும்.

இத்தர்மங்களில் முக்கியமாக இரண்டு விஷயத்தை நாம் மறவாதிருக்கவேண்டும். இக்காலத்தில் ஸொத்திருப்பவர் தனித்தனியே தம்மனதிற்குத் திருப்தி வரும்படி தர்மம் செய்வது என்பது குறைந்துகொண்டே வருகிறது. இக்காலத்தவர் தர்மத்திற்காகப் பணத்தைக் கொடுத்துத் தர்மகர்த்தர்கள் ஏற்படுத்திவிட்டுத் தாம் தர்மம் செய்துவிட்டதாக இறுமாந்து, மற்றைய விஷயங்களில் தமது காலத்தைச் செலவிடுகின்றனர். இதனுல் விளையும் தீங்கு பல. தர்மகர்த்தர்கள் குண விசேஷத்தால் தர்மத்திற்குவைத்திருக்கும் பணம் குறையலாம், அதை நடத்துவதற்கு ஏற்படுத்தப்படும் சிப்பந்திகள் அதை மேலும் குறைக்கலாம், முடிவில் யாரை உத்தேசித்து பணம் வைக்கப்பட்டதோ அவர்களுக்குப் படிக்குப் பாதிதான் வந்து எட்டும். இதுவே இக்காலத்து ஸமூக தர்மங்களின் கதி. தர்மம் செய்தல் என்பது நமது சாஸ்திரப்படி பணம் கொடுப்பதோடு நின்றுவிடவில்லை. தர்மமானது செய்பவனையும், பெறுபவனையும் ஏககாலத்தில் மேன்மைப்படுத்துமாயினும், உற்று நோக்கில் ஒழுங்குப்படி பலனை உத்தேசிக்காது ஆராதனையாக எண்

ணிச் செய்யப்படும் தர்மம் செய்பவனையே அதிகமாக மேன்மைப்படுத்தும். ஆதலால் பணங்கொடுப்போன் அந்தத்தர்மத்தில்புகுந்து நடத்தவேண்டுவது முக்கியம். இம்மாதிரியாகப்பணங்கொடுப்போர் புகுந்து நடத்துவதை இந்த அறுபத்துமூவர் உத்ஸவங்களில் நடைபெறும் எல்லாதர்மங்களிலும்காணலாம். இரண்டாவது இக்காலத்துமஹான்கள் தாம் நன்கொடையாக ஓர் விஷயத்திற்குக்கொடுப்பது பத்திரிகைகள் மூலமாக அங்கீகரிக்கப்பட்டு வெளிவருமாகில் அதிகமாகக்கொடுப்பது வழக்கம். இவ்வாறு அநேகருக்கு இக்காலத்தில் பெயரும் பதவியும் வந்திருக்கின்றன. இம்மாதிரியான ஒருவித தாழ்ந்த கீர்த்தியையும் கருதாது ஒருவித கீர்த்தியும் வாராது என்பதை நன்ருகத் தெரிந்துகொண்டு சுத்த மனதுடன் இந்த அறுபத்து மூவான்று ஸகல தர்மங்களும் நடத்தப்பெறுகின்றன. இதிலிருந்து எந்தத் தர்மம் செய்தபோதிலும் தனியாகப் பகவத் ஸம்பந்தம் இன்றிச் செய்யவேகூடாது, அவ்வாறு செய்தால் வீண்கர்வம் என்ற படுகுழியிலேயே மனிதனை அது வீழ்த்தும் என்பது விளங்கும். அந்தோ! இக்காலக்கொடுமையால் நடைபெறும் தர்மங்கள் யாவும் பலர் கூடி களம்பறிப்பதாகவும், பகவத்ஸம்பந்தம் அற்றதாகவும் இருக்கின்றனவே! இவைகளால் தர்மம் செய்வோருக்கும், தர்மகர்த்தர்களுக்கும், தர்மம் சென்று சேர்வோர்களுக்கும் வீண் கஷ்டம் மாத்திரமே ஒழிய பூர்ண பலன் ஒன்றும் கிடைப்பதாகக் காணோமே!

இவ்வளவு கோலாஹலமாக நடைபெறும் உத்ஸவத்தின் காரணமான கதையை உண்மையா அல்லவா என்று இக்காலத்தவர் அநேகர் சங்கிக்கலாம். இம்மாதிரி ஸந்தேகம் பகவத்பக்தர்கள் மனதில் வாராது. வரினும் அவர்தம் மனோநிலை குறையாது. தம்மை ஒருவாறு திருப்திப்படுத்திக்கொள்வர். அவர்கள் மனனத்தை இங்கு ஒருவாறு எடுத்துக் கூறுவோம். இக்காலத்தியப் பெரும்பாலாரும் இதைக்கவனித்துத் திருப்தியாக இருப்பின் ஸமாதானம் அடையலாம்.

உட்கருத்தை ஒட்டி நோக்கில் எல்லா அற்புத கதைகளும் உண்மைதான் என்பதற்கு ஸந்தேகமில்லை. வெளிப்படையாக உள்ள விஷயங்களை ஒட்டிநோக்கினும் அவைகளுக்கும் ஓர் சிறந்த சக்தி உண்டு. இந்த விஷயமாக ரேனன் என்ற குணதோஷ நிரூபகர் பின்வருமாறு கூறுகிறார். 'அஸாத்ய காரியங்களே பக்தியை உண்டாக்கி நிலைபெறச் செய்பவை. இவைகளைவிடச் சற்றுத் தாழ்ந்த விஷயங்கள் பக்தர்களுக்குத் திருப்தியை உண்டாக்கமாட்டா." இன்றைக்கும் நாளைக்கும் திரௌபதி ஐந்து கணவரை உடையவளாயினும் பதிவிருதைதான் என்று ஸ்திரப்படுத்த சில ஹிந்துக்கள் நீதிக்கின்றனர். இதுவும் அல்லாமல் "நேரான உண்மையைவிட கட்டுக்கதையை போலவிருக்குங்கதை இவ்வாறு சிறந்த உண்மையாக இருக்கும்; இவ்வாறு அற்புதகதைகள் அவை குறிப்பிக்கும் கதாநாயகன் மஹிமையாலேயே உண்டாவன; அவன் இல்லாவிடில் இத்தகைய அற்புத விஷயங்களை ஒருவராலும் சிருஷ்டிக்கவே முடியாது; அவனுடைய மஹிமைதான் அவனுடன் ஸம்பந்தப்படும் ஒவ்வொருவரையும் இவ்வாறு மேன்மைப்படுத்துவது என்ற விஷயங்களை உணர்ந்தால் தான் ஸம்பந்தஸ்வாமிகள் அற்புதச்செயல்களைக் கண்டு, வீண்சங்கை செய்து கெட்டுப்போகாது, மூடநம்பிக்கையால் அறியாமையிலும் அழுந்தாது, மனசுத்தத்தோடு அவைகளைக்கண்டு வியந்து எளிதில் பரமபதம் அடைவதிலேயே எவனுக்கும் கண்ணு இருக்க முடியும். மேலும் இவ்விஷயமாகப்பின்வரும் அற்புதவாக்கியத்தையும் நாம் மறவாதிருக்கவேண்டும். "உண்மையான பக்தியின் சிறப்பு இன்னது என்பதே நமக்குத்தெரியாது. நாம் இப்பொழுதிருக்கும் ஸாதாரண நிலையிலிருந்து நோக்கினுல், பக்தியின் வீர்யம், செழிப்பு, அபாரசக்தி ஆகிய இவைகள் நமக்கு நன்ருய் விளங்கமாட்டா பக்திதான் மலையைத் தூக்குவதும், அலக்ஷ்யமாய் பெரிய சமுத்திரங்களைத் தாண்டுவதும், பஞ்சபூதங்களை அழிப்பதும், பிரபஞ்சத்தையே அசைப்பதும் ஆகிய அற்புதச் செயல்களுக்குக் காரணமாக இருக்கும். பக்தியால் ஆகாததொன்றில்லை. பக்தியால் ஒருவன் தொழில் செய்யுங்காலத்தில், அவன் ஆத்மசக்தியே வெளிவருதலால், நடக்கும் தொழில் மிக அற்புதமாகத்தான் இருக்கும்."

"எல்லாமவன்செயலே யென்றிருக்கும் வல்லார்க்கு
இல்லை காணாத இறையே பராபரமே."

பைத்தியக்காரத் தையற்காரன்

THE MAD TAILOR

அநேக வருஷங்களுக்குமுன் அலக்ஸாண்டிரியா (Alexandria) என்னும் பட்டணத்தில் ஹேபிபுல்லா (Habibulla) என்னும் தையற்காரனொருவனிருந்தான். அவன் தையல் வேலையில் மிகவும் கெட்டிக்காரன். அவன் நடை உடைபாவனைகள் மட்டும் கொஞ்சம் விசித்திரமாயிருந்தன. சில சமயங்களில் அவன் மிக்க சுறுசுறுப்பாயிருந்தபோதிலும் வேறு சில சமயங்களில் ஒன்றுந்தோன்றாமல் பிரமித்து ஒரேபக்கத்தைப்பார்த்து வெகுநேரம் உட்கார்ந்திருப்பான்.

ஹேபிபுல்லா மகமதியனாகையால் வெள்ளிக்கிழமைகள்தோறும் பள்ளிவாசலுக்கு நல்ல உடை உடுத்துக்கொண்டு போவதுண்டு. போகுங்காலும் திரும்புங்காலும் யாராவது அவனை க்ஷேம ஸமாசாரம் விசாரித்தால் வாயைத்திறந்து ஒன்றுஞ் சொல்லாமலே கையை அசைத்துவிட்டும், கண் ஜாடைகள் செய்துவிட்டும் பிறர்களை மதியாதவன்போல் போய்விடுவான். அவனை வேலைக்காக அமர்த்தியிருந்த எஜமானன் அவனைப்பார்த்து அவன் இராஜகுமாரனாக இருக்கவேண்டுமென்று பரிகாசஞ் செய்வதுண்டு. ஹேபிபுல்லா அதை நிஜமென்று நம்பி தானும் அவ்வாறே அநேகந்தடவைகளில் எண்ணினதாகச்சொல்லுவான். அவன் நல்ல வேலைக்காரனாக இல்லாவிடில் அவனை அவன் எஜமானன் துரத்தியிருப்பான்.

ஒரு நாள் எகிப்த் (Egypt) தேசத்து ஸுல்தான் ஒரு சிறந்த பட்டாடையைச் செய்ய ஹேபிபுல்லா எஜமானனுக்கு உத்திரவு அனுப்பினான். ஹேபிபுல்லா மிகவும் மேலான வேலைக்காரனாகையால் அவ்வுடையைச்செய்ய அவன் எஜமானன் அவனுக்குக் கட்டளையிட்டான். சிலதினங்களுக்குள் ஹேபிபுல்லா அதை முடித்துவிட்டு ஒருவருமில்லாத சமயம் பார்த்து அவ்வுடையைத் தான் போட்டுக்கொண்டு கண்ணாடியில் முகத்தைப்பார்க்க தான் மிகவும் அழகுள்ளவனென்றும் தான் இராஜகுமாரனாக இருப்பது தகுதிதானென்றும் நினைத்தான். இதே எண்ணம் அவன் மனதில் குடிகொண்டதினால் இரவில் அவன் அடங்கவேயில்லை. பொழுது விடிவதற்குள் அவ்வுடையை மேலே போட்டுக்கொண்டு கையிலிருந்த கொஞ்சம் பணத்தையும் எடுத்துக்கொண்டு ஊர்ப்பிரயாணம் போவதென்று புறப்பட்டுவிட்டான். கொஞ்சதூரம் அலைந்ததும், ஒரு இராஜகுமாரன் கால்நடையாகப் போவது, கௌரவத்திற்குச் சரியல்ல என்று நினைத்து கையிலிருந்த பணத்திற்கு ஒரு கிழக்குதிரையொன்று வாங்கி அதின்மேல் ஏறிச் சவாரி செய்துகொண்டு போகையில் இவனைப்போல் வேறொரு வாலிபன் குதிரையேறி வருவதைக் கண்ணுற்றான்.

இருவரும் சமீபித்துவரவே, ஒருவருக்கொருவர் தங்கள் தங்கள் விருத்தாந்தங்களை விசாரிக்க ஆரம்பித்தார்கள். ஹேபிபுல்லா தன் விருத்தாந்தத்தைமட்டும் சரிவரச் சொல்லவில்லை. அவனுடன்கூட வந்த வாலிபன் தன் பெயர் ஸெலீம் என்றும், தான் குழந்தைப்பருவம் முதல், தன் மாமனாகிய எகிப்து பாச்சா வீட்டில் வசித்துவந்ததாகவும் தன் தகப்பனார் தாயார் யாரென்று தனக்குத் தெரியாதென்றும், தான் தன் மாமனிறக்கையில் அளித்த உத்திரவை கீழ்ப்படிந்து நடப்பதற்காக அவ்வழியாய்ப் போவதாகவும் சொன்னான். ஹேபிபுல்லா அவ்வுத்திரவு என்னவென்று கேட்க ஸெலீம் தான் ஒரு பெரிய ஸுல்தானின் குமாரனென்றும் தன் தகப்பனார் சில ஜோஸ்யர்கள் பேச்சைக்கேட்டுத் தன்னை இருபத்தோராவது வயதுவரையில் மாமன் வீட்டிலேயேயிருக்கும்படி யனுப்பினதாகவும் தனக்கு நான்கு தினங்களில் இருபத்தோராவது வயது முடிவதால் தன் தகப்பனாரிடம் போவதாகவும் கொஞ்சதூரம் சென்றால் ஒரு பெரிய மலையடிவாரத்தில் அநேகம் ஜனங்களிருப்பார்களென்றும் தன் வசம் தன் மாமன் கொடுத்த சிறு கத்தியை அவர்களிடம் காட்டினால் அவர்கள் அவனைத் தெரிந்துகொண்டு ஊருக்கு அழைத்துச் செல்வார்களென்றும் தன் மாமன் இறக்கையில் தன்னிடம் சொல்லியிருக்கிறானென்றும் சொல்ல அதையெல்லாம் மிக்க கவனத்துடன் ஹேபிபுல்லா கேட்டான். உடனே அவனுக்கு ஸெலீம் பேரில் பொறாமையும் தான் இராஜகுமாரனாக ஏனிருக்கக்கூடாதென்ற ஆவலும் ஏற்பட்டது.

இருவரும் கொஞ்சதூரஞ்சென்று ஒரு சத்திரத்தில் தங்கினார்கள். ஸெலீம் களைப்பாயிருந்ததினால் படுத்த உடனே அயர்ந்து நித்திரைபோனான். ஹேபிபுல்லாவுக்குத் தூக்கம் வரவேயில்லை. ஸெலீமை

அவன் வசமிருந்த கத்தியைக்கொண்டு கொன்றுவிட்டுக்குதிரையேறிச் செல்லலாமாவென்று யோசித்துக் கத்தியை மெள்ள எடுத்து ஸெலீமைக் கொல்ல எண்ணினான். உடனே மனதில் அருவருப்புண்டாகி அவ்வளவு கெட்டகாரியத்தைச் செய்வது தகுதியல்லவென்று எண்ணி கத்தியைத் தன்னிடுப்பில் கட்டி ஸெலீம் குதிரையின்மேலேறி கடுவேகமாய்ச் சென்றான்.

பொழுது விடிந்ததும் ஸெலீம் தன் கத்தியையும் குதிரையையும் காணாமல் மனந்தளர்ந்து இன்னது செய்வதென்றுதோன்றாமல் சற்றுநேரம் பிரமித்துப் பின்பு சற்றுத்தேறி ஹேபிபுல்லாவின் கிழக்குதிரையின் மீதேறிக் கடுவேகமாக குதிரையை முடுக்கி மலையடிவாரத்தை நோக்கிச்சென்றான். இவன் போவதற்குள்ளாகவே ஹேபிபுல்லா வெகு வேகமாய்ப் போய்ச்சேர்ந்தான். மலையடிவாரத்தில் அநேகங்கூடாரங்களையும் குதிரைகளையும் ஒட்டகங்களையுங் கண்ணுற்றான். மார்பு படபடவென்று அடித்தது. தான் ஸெலீமுக்குச்செய்த துரோகத்தை எண்ணினான். திரும்பிப்போகலாமென்று கருதினான். எடுத்தகாரியத்தை முடிக்காமல் நடுவில் விட்டுவிடுவது பிசகென்றும் தான் இராஜகுமாரனாகலாமென்ற அவாவினாலும் ஒருவாறு மனந்தேறினான். குறிப்பிட்ட தினத்திற்கு முந்தினதினமே மலையடிவாரத்திற்குச் சமீபத்துச் சென்றதினால் கூடாரங்களின் சமீபமாகப் போவது சரியல்ல வென்று எண்ணி தூரத்திலேயே குதிரையை ஒருமரத்தில்கட்டி, 'தன்னிடமிருந்த உணவை உண்டு அன்றிரவு தங்கியிருந்தான்.

பொழுதுவிடிந்ததும் எழுந்து குதிரையேறி வேகமாக அம்மலையடிவாரத்திற்குச் சென்று அவ்விடமிருந்த மனிதர்களின் உடைமுதலியவைகளால் சுல்தான் யார் என்று ஊகித்தறிந்து, தன்னிடமிருந்த கத்தியைக் காட்ட சுல்தான் உள்ளமகிழ்ந்து மகனைக் கண்ட சந்தோஷத்தினால் ஆநந்தசாகரத்தில் மூழ்கி அவனை மார்போடணைத்துத் தன்னுடனிருந்த பிரபுக்களுக்கெல்லாம் தன் குமாரனைக்காட்டி எல்லாரும் ஆயத்தர்களாய் குதிரைகளின் மேலும் ஒட்டகங்களின்பேரிலும் ஏறி பேரிகைமுழங்க சகலவாத்தியங்களும் கோஷிக்கப் புறப்படுகிற சமயம், பின்னால் சற்றுப்பொறுங்கள், சற்றுப்பொறுங்கள் என்று கதறிக்கொண்டு முகம் வியர்க்க பெருமூச்செறிந்துகொண்டு கிழக்குதிரையின்மீது ஸெலீம் வந்து சேர்ந்தான். இதென்ன அற்புதமென்று சுல்தான் மலைத்தான். ஹேபிபுல்லா மனம், என்னாகுமோவென்ற பயத்தால், பதைத்தது. ஸெலீம், 'அவனை இராஜகுமாரனென்று எண்ணி மோசம்போகாதீர்கள். அவன் மோசக்காரன்' என்று சொன்னான். ஹேபிபுல்லா 'மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு, " என் பிதாவே! அவன் பைத்தியம் பிடித்தவன். அவனை வழியில்கண்டேன். அவன் ஹேபிபுல்லா என்ற தையற்காரனாம்'' என்று சொல்ல சுல்தான் நம்பி ஸெலீமை ஒரு ஒட்டகத்தின்மீது பின்கட்டு முறையாகக் கட்ட உத்திரவளித்து யாவருடனும் ஊர் புறப்பட்டான்.

இராஜகுமாரன் இருபத்தொரு வருஷங்களுக்கப்பால் வருகிறானென்ற ஆவலால் நகரத்து ஜனங்களெல்லாம் சந்தோஷப்பட்டு வீடுகளையெல்லாம் அலங்கரித்துத் தோரணங்கள் கட்டி ஊர்கோலம் போகையில், "ஸெலீம் நீடூழி வாழ்க" என்று ஆரவாரித்து அரண்மனையை நோக்கிச் சென்றார்கள். அரண்மனையிலோ சுல்தானின் மனைவி பெரிய ஹால்களையெல்லாம் இந்திரசபைபோற் செய்து புத்திரன் வரவையெதிர்பார்த்திருந்தாள். சுல்தான் புத்திரனை அழைத்துச் சென்று இராணியிடத்தில் போக அவன் அவளை நமஸ்கரித்தான். தாயாகையால் அவனைப் பார்த்ததும் முகக்குறிகள் சிலவற்றால் அவன் தன் புத்திரனல்லவென்று அவளுக்கு மனதிற்பட்டது. அவள் 'இவன் என் புத்திரனல்ல, இவன் என் புத்திரனல்ல' என்று கூவினாள்.

சுல்தான் மீசை பதைக்க இராணியைக் கடிந்த முகத்துடன் பார்க்க இதற்குள் வெளியில் கட்டுண்டிருந்த ஸெலீம் மனம் கொதித்துக் கயிறுகளையெல்லாமறுத்து காவற்காரர்களை மீறி உள்ளேசென்று இராணியைப் பார்த்து, "அம்மா, அவன் மோசக்காரன். என்னைமோசஞ்செய்துவிட்டுப் புத்திரனென்று சொல்லித் தங்களிடம் வந்துவிட்டான்" என்று சொல்ல, இராணி, அவன் முகத்தை நன்கு உற்றுப்பார்த்து அவன்தான் தன் புத்திரனென்று மனந்தெளிவுபட்டு, "இவன்தான் என் புத்திரனென்று சொன்னாள்." ஹேபிபுல்லா அவன் பைத்தியக்காரன் என்று சொல்ல, சுல்தான் சேவகர்களைப் பார்த்து "அவனைக்கட்டுங்கள் அவள் பேச்சைக் கேட்கவேண்டாம். அவள் பெண்பிள்ளைதானே,

என்று சொல்ல, சேவகர்களும் உடனே ஸெலீமைக் கட்டிக்கொண்டுபோய் ஒரு அறையிலடைத்துவைத்தார்கள். அன்று பொழுதுஞ் சென்றது. இரவு முழுவதும் இராணிக்கு நித்திரை வரவே இல்லை.

தன் புத்திரனல்லவென்று மனதிற்கு நன்றாய்த் தெரிந்தபோதிலும் தன் கணவன் மனதை எப்படித் திருப்புவதென்று பலவாறு சிந்தித்தாள். மலைவாரத்திற்குச் சென்றவர்களை வரவழைத்து அவ்விடம் நடந்த விஷயங்களையெல்லாங் கேட்டாள். தன்குமாரனென்று வந்திருப்பவன்தான் தையற்காரனாக இருக்கலாமென்று தன்புத்தியிற் றோன்றிற்று. கடைசியில் அவளுக்கோருபாயம் மனதிற்பட்டது. மறுநாள் காலையில் தன் கணவனிடஞ் சென்று "வணங்கி, என் பிசகை மன்னிக்கவேண்டும். நான் தங்களை ஒருவரங் கேட்டுக் கொள்கிறேன், அதை எனக்குத் தரவேண்டும்," என்று சொல்லவே சுல்தானும் மனமிரங்கி, "நான் உன்னைக் கோபித்துக்கொண்டேன். ஆயினும் என்னவரங் கேட்ட போதிலும் தருகிறேன்" என்று உத்தரமளித்தான். அவள், "ஹேபிபுல்லா, ஸெலீம் ஆகிய இருவருக்கும் பட்டுநூல் ஊசி முதலியவற்றை வாங்கிக்கொடுப்போம். அவர்களை இரண்டு தினங்களில் ஒருபட்டாடையை நெய்யும்படி செய்வோம்" என்றாள். சுல்தான், "எனக்கு ஒன்றும் ஆக்ஷேபனையில்லை. அந்தப் பைத்தியக்காரன் எவ்வளவு நன்றாக பட்டாடையை நெய்தபோதிலும் அவனை என் புத்திரனென்று ஒப்புக்கொள்ளவே மாட்டேன்" என்று சொல்லி இரண்டு அறைகளைச் சித்தப்படுத்தி வேண்டிய கருவிகளையும் கொடுத்து ஹேபிபுல்லா, ஸெலீம் ஆகிய இருவரையும் வரவழைத்து இரண்டு தினங்களில் ஒரு பட்டாடையை நெய்ய உத்திரவளித்தான்.

ஹேபிபுல்லா அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. தான் ஒரு மேலான பட்டாடையை நெய்து இராணி மனங்களிக்கச் செய்துவிட்டாற் போதுமென்று உள்ளம் பூரித்தான். இருவரும் உடனே தங்கள் தங்கள் இடங்களுக்குச் சென்று வேலையைச் செய்ய ஆரம்பித்தார்கள். ஸெலீம் துக்கக்கடலிலாழ்ந்தான். மூன்றுநாள் சுல்தானும் இராணியும் இருவரையும் வரவழைத்து அவர்கள் வேலையைப் பரிசோதிக்கையில் ஹேபிபுல்லா உயர்ந்த பட்டாடையைக் காட்ட, ஸெலீம் ஒன்றுஞ் செய்யத் தெரியாதவனாகையால் நூல், ஊசி, முதலிய சாமான்களைக் கீழே யெறிந்து வெகு கோபத்துடன் "நான் இராஜகுமாரன். எனக்கு வில்வித்தை குதிரையேற்றம் சண்டைபோடுதல் இவைகளைக்கற்றுக் கொடுத்தார்களேயொழிய கீழ்மகன்செய்யுந் தையல் வேலையை ஒருவருங் கற்றுக்கொடுக்கவில்லை" என்றான். இராணிக்கு இப்பொழுது தன்புத்திரனின்னானென்று வெளிப்பட்டது. சுல்தானைப் பார்த்து, "ஐயா, நம் புத்திரனுக்குத் தையல்வேலை யார் கற்றுக் கொடுத்தவர்கள்? இவன்தான் நம்புத்திரன் சந்தேகமே இல்லை" என்றுரைத்தாள். சுல்தானுக்கும் மனம் இப்பொழுது சற்றுக் கலங்கினது. நன்றாய் நெய்த ஹேபிபுல்லா தன் புத்திரனல்லவென்றும் தன் புத்திரனை மோசஞ்செய்துவிட்டு வந்திருக்கிறானென்றும் அவன் தீர்மானித்தான்.

இருந்தபோதிலும் வேறு ஒரு உபாயத்தாலும் உண்மை கண்டுபிடிக்கவேண்டுமென்று எண்ணினான். பலவாறு சிந்தித்தான். மந்திரி பிரபுக்கள் யாவருடனுங் கலந்து யோசித்தான். பக்தியுள்ள மகம்மதியனாகையால் அல்லாவைப் பிரார்த்தித்தான். தன் குலகுருவை வரவழைத்துக் கேட்டான். அவர் மகா புத்திமான். அவர் வீடுபோய் சிறிதாய் இரண்டு பெட்டிகள் செய்தார். ஒரு பெட்டியின்மேல் 'ஐசுவரியமும், சந்தோஷமும்' என்றும், மற்றொரு பெட்டியில் 'கீர்த்தியும் கௌரவமும்' என்றெழுதிப் பெட்டிக்குள் சில சாமான்களை வைத்துப் பெட்டிகளை மூடி அரண்மனைசென்று சுல்தானிடத்தில் அவைகளைக் கொடுத்து இதில் சரியான பெட்டியைத் தனக்கு வேண்டுமென்று எடுத்துக்கொள்பவன் உன் குமாரன் என்று சொன்னார். சுல்தான் பெட்டியைத் திறக்கவேயில்லை.

மறுநாள் சபை கூடினது. இரு பெட்டிகளையும் சபை நடுவில் வைத்து ஹேபிபுல்லாவை முதலில் வரவழைத்து இருபெட்டிகளிலொன்றை யெடுத்துக்கொள்ள உத்திரவு கொடுக்க அவன் கொஞ்சம் யோசித்து, தனக்கு வேண்டியது ஐசுவரியந்தானென்று சொல்லி 'ஐசுவரியமும், சந்தோஷமும்' என்று எழுதியிருந்த பெட்டியை எடுத்தான். உடனே அப்படியே அதை அவ்விடத்திலேயே வைக்கச்செய்து ஸெலீமைக் கூப்பிட்டு இருபெட்டிகளிலொன்றை எடுக்கச்செய்ய ஸெலீம் பலகால் சிந்தித்து, "தனவான்களே செல்வம் எப்பொழுதும் செல்வோம்என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறது. செல்வம் சந்தோஷம் நிலையற்றவை. நிலைத்திருப்பது கீர்த்தியும் புகழுமே. ஆகையால் நான் இப்பெட்டியை எடுக்கிறேன்" என்று சொல்லி "கௌரவமும், கீர்த்தியும்" என்று எழுதப்பட்டிருந்த பெட்டியை எடுத்தான். உடனே இருவர்களையும் அவரவர்களெடுத்த பெட்டியைத் திறக்கும்படி சொல்ல, அவர்கள் திறந்தார்கள். ஸெலீம் எடுத்த பெட்டியில் தங்கத்தினால் ஒரு சிறிய கிரீடமும் இராஜனுக்குரிய கத்தியும் இருந்தன. ஹேபிபுல்லா எடுத்த பெட்டியிலோ நல்லஊசியும் பட்டுநூலும் வைத்திருந்தன. சுல்தானுண்மையை யறிந்துகொண்டான்.

ஹேபிபுல்லாவுக்குப் புத்திவந்து தான்செய்த பிசகையெல்லா மொப்புக்கொண்டான். அவன் சுல்தான் ஸெலீம் இவர்கள் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்தான். தான் செய்தது குற்றம் குற்றமென்று ஒப்புக்கொண்டான். ஸெலீம் கம்பீர குணமுள்ளவனாகையால் தன் பிதாவிடம் அவனை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டு அவனை ஊருக்கு அனுப்பினான். அலெக்ஸாண்டிரியா போய்ச்சேர்ந்து தான் திருடிவந்த உடுப்பையும் அதற்கு அபராதமாக இரண்டு பங்கு பணமும் கொடுத்துவிட்டுத் தன் தையல்வேலையிலமர்ந்து வெகுகாலம் வாழ்ந்தான். ஸெலீம் தன் உண்மைப் பதவியை யடைந்து சுல்தானுக்கும் இராணிக்கும் தன் மாமன்வீட்டில் நடந்த விஷயங்களையெல்லாஞ் சொல்லி அவர்களை உற்சாகப்படுத்திக்கொண்டு சுல்தானிறக்கவே தான் சிம்மாசனமேறிப் பிரஜைகளுக்கெல்லாம் ஹிம்ஸையில்லாமல் நீடூழிகாலம் அரசாண்டான். இக்கதையால் உண்மையே சிறந்தது என்பது நன்கு விளங்குகிறது.

"மேலிருந்து மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்,
கீழல்லார் கீழல் லவர்"

"இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு"

ஜி. ஸுந்தரேசய்யர், பி.ஏ., எல்.டி.

மிதந்துக்கு மிஞ்சின உழைப்பு.—ஏதோ இவ்வித உழைப்பு நமக்கு அதிகலாபத்தைக்கொடுக்கும் என்று ஜனங்கள் ஒருவித தப்பபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். குடுமியில் கயிறுகட்டி அதை விட்டத்தில்மாட்டி தூங்கும் பொழுது அக்கயிறு தொங்கும் நமது தலையை யிழுப்பதால் விழித்துக்கொண்டு அவ்வளவு அதிகமாய்ப் படித்து சிலர் பெரிய பரீட்சைகள் கொடுத்து உயர்ந்த பதவியிலிருப்பதாகப் பலர் கட்டுக்கதைகள் சொல்லுவார்கள். இவைகள் கவைக்குதவா பேச்சுகள்.

குமார ஸம்பவம்

BIRTH OF KUMARA

பண்டித நடேசசாஸ்திரியாரால் மொழிபெயர்ப்பு

(முன் தொடர்ச்சி.)

77. ஒன்றுமில்லாதவராயிருந்துகொண்டு அவர் எல்லாவித ஸம்பத்துக்களுக்குமிருப்பிடமாய் விளங்குகின்றார். அவர் மயானத்தில் வஸித்துக்கொண்டே மூவ்வுலகங்களுக்கும் நாதனாய் விளங்குகின்றார். அவர் பயங்கரமான உருவங்கொண்டவர் என்றாலும் அவர் பெயர் அழகானவர் (சிவன்) அன்றோ. இதுவரையில் சிவபெருமானை உண்மையாக ஆராய்ந்தறிந்தவர்கள் ஒருவருமில்லை யன்றோ!

78. ஒரு சமயத்தில் அவர் தனது மேனியை நகைகளால் சிங்காரித்துக்கொண்டிருப்பார். மற்றொரு சமயத்தில் பாம்புகளையே அணிந்து விளங்குவார். ஒருசமயத்தில் அவர் யானைத்தோல் உரித்து உடுத்திருப்பார். மற்றொரு சமயத்தில் வெண்பட்டு உடுத்திருப்பார். தன் தலைமேல் ஒருபொழுது மண்டை ஓட்டைக்கவிழ்த்துக்கொண்டிருப்பார். மற்றொருபொழுது சந்திரனையே அணிந்திருப்பார். எண்ணுருவங்கொண்டு விளங்கும் ஜகதீசனுடைய உடலை அறிந்தவர்களுமுண்டோ!

79. சுடலைச்சாம்பல் அவர்மேனியில் பட்டமாத்திரத்தில் மற்றவர்களைப் பரிசுத்தம்பண்ணும் மேற்பதவியை அடைகின்றதன்றோ. அதே சாம்பற்பூசி அம்பலத்தாடி தாண்டவம் செய்யும்பொழுது அவர் மார்பினின்று உதிரும் சுடலைச்சாம்பலைத் தலைப்பில் வந்திக்கொள்ள தேவர்கள் காத்து நிற்கின்றார்களன்றோ!

80. ஒன்றுமில்லாத அச்சிவபெருமான் எருதின் மீதேறிச் செல்லும்பொழுதுதான் மதம் பெருகும் திசைகளில் ஏறிவரும் இந்திரன் அவர் பாதங்களைத் தனது தலையால் வணங்கித் தான் தலையிலணிந்த நன்றாக மலர்ந்திருக்கு மந்தாரை மலர்களின் பூந்தாதுகளால் அவருடைய கால்விரலை அலங்காரம் பண்ணுகின்றான்.

81. கெட்டுப் போன நீ சிவபெருமானிடம் தோஷங்கள் இவை என்று எடுத்துச் சொல்லும்பொழுது ஒன்றை மட்டும் உண்மையாகச் சொன்னாய். தனக்குத்தானாய்த் தோன்றிய பிரமதேவருக்கும் காரணமாய் சிவபெருமானை மாமுனிவர்கள் குறிக்கும்பொழுது அவருடைய காரணத்தைக் கண்டறிய எவரால் முடியும்.

82. உன்னுடன் விவாதம் செய்வதில் என்ன பிரயோஜனம். உனக்கு முற்றிலும் நீ கேட்டபடியே சிவபெருமானிருக்கட்டும். நானோ சிவபெருமானிடம் என்னாசையை முற்றிலும்வைத்துவிட்டேன். தனது மனத்தின் போக்குப்படி நடக்கின்றவர்களை உலக நிந்தை ஒன்றும்பண்ண முடியாதன்றோ.

83. அடிதோழி இவளை இங்குவிட்டு அப்புறப்படுத்து. இவன் உதடு அசங்குகின்றதைப் பார்த்தால் இவன் மறுபடி ஏதோ பேச எத்தனிக்கின்றவன் போல் காண்கின்றான். பெரியவர்களை நிந்தித்துப் பேசுகின்றவன் மட்டும் பாவியல்ல. அவன் செய்யும் நிந்தையைக் கேட்கின்றவர்களும் பாவிகளாகின்றார்கள்.

84. அல்லது நாமே இவ்விடம்விட்டு வேறிடம் போவோம் " என்று சொல்லிக்கொண்டு அச்சிறுமி வேகத்தால் தான் தனது குசங்களின் மேல் மூடியிருந்த முந்தணிபரக்க அவ்விடம் விட்டு நடக்கலானாள். இடபக்கொடியோனும் தனது நிஜ உருவங்கொண்டு புன்சிரிப்புடன் அவளைப் பற்றிப் பிடித்துக் கொண்டான்.

85. சிவபெருமானைக் கண்டதும் மெய்பதற, தேகமெல்லாம் வியர்வை ஓட, வெட்கந் தோன்ற அப்பார்வதி தான் பிரயாணத்துக்காக முன்னெடுத்த காலை அப்படியே நிறுத்தினவளாய் வெகு வேகமாக ஓடிவரும் வெள்ளம் நடுவில் பெரும் மலை ஓங்கி நிற்கக் கண்டதும், முன்னும் போக முடியாமல் பின்னும் போகமுடியாமல் குழம்பி நிற்பது போல மனம் பதறினின்றாள்.

86. "பார்வதி, இன்று முதல் நான் உனது அடிமையாய் விட்டேன். உனது தவத்தால் நீ என்னை விலைக்கு வாங்கிவிட்டாய்'' என்று சந்திரசேகரன் சொல்லவே பார்வதி ஒரு பெருமூச்செறிந்து அன்றுவரையில் தான் தவத்தால் பட்டிருந்த சிரமத்தை அத்துடன் தன்னைவிட்டு அகற்றினாள். நாம்பட்ட சிரமத்துக்குத் தக்கபயன் நமக்குக் கிடைத்துவிட்டால் அந்தச் சிரமம் சிரமமாக அதன் பிறகு தோன்றவே தோன்றுதல்லவா.

உமையை வரித்தல் என்ற 6-வது சருக்கம்

அவ்வாறு தேவதேவன் தம்மிடம் அருள் புரிந்த பின்பு பார்வதியும் இரகசியமாய் தனது தோழியிடம் சிவபெருமானுக்கு ஒரு சமாசாரம் சொல்லியனுப்பினாள். அது யாது எனில் தம்மைத் தமது தந்தையாகிய ஹிமவான் சிவபெருமானுக்குக் கன்னிகாதானம் செய்துகொடுக்கும்படி உத்தரவாகவேண்டும் என்பதேயாம்.

2. அவ்வண்ணம் தமது தோழி மூலமாய் சிவபெருமானுக்குச் சமாசாரம் சொல்லியனுப்பின பின்னர் அப்பார்வதி அவரிடம் மாறாத அன்புடன் துடிக்கின்றவளானாள். வசந்தகாலத்தில் எப்பொழுதும் குதூகலத்துடன் விளங்கும் கட்டி மாங்கிளை குயில் தன்னிடம் வந்து உட்காரக் காண்பதை எதிர்பார்த்துக்கொண்டு தவித்து நிற்குமன்றோ!

3. மன்மதனையே தீயிட்டு எரித்த அச்சிவபெருமானும் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு நீராதபக்ஷமாக உமையிடம் விடைபெற்று அவ்விடம் விட்டு நீங்கி சோதி உருவாய் விளங்கும், அங்கிரஸர் முதலான ஏழு ரிஷிகளையும் தம் மனத்தால் கருதலானார்.

4. தவத்தையே தங்கள் பொருளாகக்கொண்ட அம்மா முனிவர்கள் தங்கள் தேக ஒளியின் சமூகத்தால் ஆகாயத்தையே விளங்கச்செய்துகொண்டு அருந்ததியுடன் கூட உடனே ஈசனார் முன்பாக வந்து தோன்றினார்கள்.

5. (முனிவர்களுடைய சிறப்பு): கரையில் ஓங்கி நிற்கும் மந்தாரமரத்தின் மலர் உதிரப்பெற்ற அலைகள் அம்மலர்களையே வாரி வீச திசைக்கரிகளின் மதமணம் பரிமளிக்க விளங்காநிற்கும் ஆகாயகங்கையின் ஜலத்தால் ஸ்நானம் செய்தவர்களாய்,

6. நல்முத்தாலாகிய பூணூல் அணிந்து பொன்மாலை பூண்டு ரத்தினங்களால் கோர்க்கப்பட்ட ஜபமாலை கைப்பற்றித் துறவறம் சேர்ந்த கற்பக தருக்கள்போல் விளங்குகின்றவர்களாய்,

7. தாம் சூரியமண்டலத்துக்கு மேலே ஸஞ்சரிக்கின்றவர்களாகையால் தங்களிருப்பிடத்துக்குக் கீழாகத் தமது குதிரைகளை ஓட்டிச் செல்லும் சூரிய பகவானால் தம் ரதத்தின்கொடியைத் தாழச்செய்து நமஸ்காரத்துடன் கண்களை மேலெடுத்துப் பார்க்கிறவர்களாய்,

8. மகாவிஷ்ணுவின் மகா வராக அவதாரத்தின் கொங்கப்பல்லைத் தமது கையால் பற்றச்செய்து ஆதரவுடன் தூக்கி எடுக்கப்பட்ட பூமாதுடன் பிரளய காலத்திலும் அழிவின்றிச் சுகமாய் இளைப்பாறுகின்றவர்களாய்,

9. பிரம்மதேவருக்கு அடுத்தபதவியில் அவர் படைத்து நிறுத்தியதின் மேல் இன்னும் மிகுந்திருந்த படைப்புகளைப் படைத்த காரணத்தால் பெரியோர்களால் பழைய பிரும்மதேவர்கள் என்று புகழப்படுகின்றவர்களாய்,

10. முற்பவத்தில் நிர்மலமான தவத்தின் அருளடைந்து அத்தவத்தின் பயனை முனிவர்களாயிருந்த போதிலும் இச்சென்மத்திலும் அனுபவிக்கின்றவர்களாய் விளங்கிய அம்மாமுனிவர்கள் எழு பெயர்களும் அங்கு வந்துதோன்றினார்கள்.

11. அவர்கள் நடுவில் தமது கணவன் பாதங்களில் கண்வைத்தவளாய் மகாபதிவிரதையாய் தவத்தின் பயனே உருவெடுத்து வந்தாற்போல சோபிக்கின்றவளாய் அருந்ததி தேவி வெகு அழகாய் விளங்கலானாள்.

12. ஈசனார் அம்மாது சிரோமணியையும் அம்மாமுனிவர்களையும் ஏற்றத்தாழ்வின்றி ஒரேவிதமாய் உபசரிக்கலானார். பெரியோர்கள், ஸ்திரீ புருஷன் என்ற வித்தியாஸத்தை ஒருபொழுதும் கவனியார்கள். நல்லொழுக்கம் ஒன்றன்றோ அவர்கள் எப்பொழுதும் கொண்டாடிப் புகழும் குணம்.

13. அருந்ததியைக் கண்டபிறகு ஈசனாருக்குத் தாமும் மனையாட்டியை வெகு சீக்கிரம் அடைய வேண்டும் என்ற ஆவல் தோன்றிற்று. யாகம் முதலிய இல்லற சடங்குகளுக்கு மனைவியன்றோ முதற்காரணம்.

14. இல்லறத்தின் பொருட்டு ஈசனார் பார்வதியைத் தமது மனத்தில் நினைத்ததும், முதற் குற்றத்தை நினைத்து நடுங்கி நின்ற மன்மதனுடைய பிராணனும் மறுபடியும் மூச்சுக்காற்றுளது போலாயிற்று.

15. அம்மாமுனிவர்கள் எல்லோரும் ஈசனாரை வணங்கிய பின்னர் ஜகத்குருவாகிய அக்கடவுளைப் பார்த்து வேத மொழுகும் தங்கள் வாய்களால் அன்பு நிரம்பிய தங்கள் மேனி மயிர்க்கூச்செறிய பின்வருமாறு சொல்லலானார்கள்.

16. நாங்கள் நியம பூர்வகமாய் இதுவரையில் ஓதிய வேதம், நாங்கள் இன்றுவரை முறைப்படி வளர்த்துவரும் ஹோமம், நாங்கள் செய்ததவம் இவைகள் எல்லாவைகளுடைய பயனும் இன்று தான் எங்களுக்குக் கிட்டிற்று.

17. உங்கள் மனமோ ஒருவருடைய வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத மனம். அவ்விதமாகிய உங்கள் மனத்தாலேயே எல்லா உலகங்களுக்கும் ஈசனாகிய நீங்கள் எங்களை நினைக்கும்படியான பாக்கியம் பெற்றோமென்றால் எங்கள் பெருமைக்குச் சொல்லவும் வேண்டுமோ.

18. எவனொருவன் உங்களை உள்ளத்தால் ஆராய்ந்தறிகின்றானோ, அதாவது எவன் உள்ளத்தில் நீங்கள் விளங்குகின்றீர்களோ அவன் பெரியோர்களில் பெரியோன். அப்படியிருக்க வேதத்துக்கே பிரமாணமாக விளங்கும் உங்கள் மனத்தில் இருக்கும் எங்கள் பெருமைக்குக் கங்குகரை ஏது.

19. சூரியபகவான் சந்திரபகவான் இவர்களுடைய பதவியைக்காட்டிலும் மேலான பதவியில் நாங்கள் ஏற்கனவே யிருக்கின்றோம் என்பது நிச்சயம். இன்று தாங்கள் எங்களை நினைத்தமாத்திரத்தால் அப்பதவியைக்காட்டிலும் இன்னும் மேலானபதவியை அடைந்தோம் என்பது திண்ணம்.

20. தங்களால் அருளளிக்கப்பட்ட எங்களை நாங்கள் இப்பொழுது வெகு அதிகமாகத்தான் எண்ணிக்கொள்ளுகின்றோம். பெரியவர்கள் நம்மிடம் அன்பு பாராட்டினால் நமக்கிருக்கும் நற்குணத்தில் எப்பொழுதும் அதிக நம்பிக்கை உண்டாவது வழக்கமன்றோ!

21. முக்கண்படைத்த கடவுளே நீங்கள் எங்களை நினைத்த காரணத்தால் எங்கள் உள்ளத்திலிருக்கும் ஸந்தோஷத்தை நாங்கள் வாய்விட்டுச் சொல்லவும் வேண்டுமோ? நீங்கள் எல்லாருடைய உள்ளங்களிலேயும் புகுந்து பார்க்கப்பட்டவர்கள் அன்றோ!

22. நாங்கள் இப்பொழுது தங்களை நேராகக் கண்டுவிட்டோம்; ஆனால் தங்களுடைய தத்துவத்தை அறிய; எங்களுக்குச் சக்தி யேது? ஆகையால் கருணைகூர்ந்து தங்களுடைய நிஜ உருவை வெளிக்காட்டுங்கள். தாங்கள் புத்திக்கு எட்டாதவர்களாயிற்றே. தங்களுடைய உருவத்தை நாங்கள் அறிய தாங்களே சொல்ல வேண்டுமன்றோ.

23. தாங்களிப்பொழுது இருக்கும் கோலம் எல்லோருக்கும் எதிரில் விளங்கும் பிரபஞ்சத்தைப் படைக்கும் கோலமா; அல்லது அதை ரட்சிக்கும் கோலமா; அல்லது அதை ஸங்காரம்பண்ணும் கோலமா. இம்மூவிதக் கோலங்களில் இது எக்கோலம்.

24. ஒருக்கால் எங்கள் வேண்டுகோள் பெரும்

வேண்டுகோளா யிருக்கின்றபடியால் அதற்கு மறுமொழி அப்புறம் வரட்டும். எங்களைத் தாங்கள் நினைக்கலானீர்கள். உடனே நாங்கள் இவ்விடம் சித்தமாய் வந்துவிட்டோம். இனி நாங்கள் நடந்துகொள்ளவேண்டியதென்ன. அதைக் கட்டளையிடுங்கள்.

பரமசிவத்தின் மறுமொழி

25. அவ்வாறு முனிவர்கள் வேண்ட, ஈசனார் தமது தலைமேல் பிரகாசிக்கும் சந்திரகலையில் சொற்பகாந்தியைத் தமது அட்டகாஸத்தில் சோபிக்கும் பற்கள் காந்தியால் பெருகச் செய்துகொண்டு மறுமொழி சொல்லலானார்.

26. முனிவர்களே, நான் செய்யப்புகும் காரியம் ஒன்றுவது எனது சொந்த பிரயோஜனத்தை உத்தேசித்துப் புகும் காரியமில்லை என்பது உங்களுக்குத் தெரியுமே. நான் எனது எண் மூர்த்திகளால் இவ்வுருவம்கொண்டு எப்பொழுதும் உலக நன்மைக்காகவே முயலுகின்றேன்.

27. அதிக தாகத்தால் வருந்தும் சாதகப் பறவைகள் மேகத்தினின்று மழையை வேண்டிக்கொள்ளுவதுபோல தங்கள் சத்துருக்களால் ஹிம்ஸையடைந்திருக்கும் தேவர்கள் எப்பொழுதும் பிறருக்குதவி செய்வதையே நோன்பாக கொண்டிருக்கும் என்னிடம் வந்து நான் ஒரு குமாரனை அவர்களுக்கு அளிக்கவேண்டும் என்று யாசித்தார்கள்.

28. தேவகாரியத்தை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு ஒரு குமாரனை அடைய ஹோமத் தீயை உண்டுபண்ண யஜமானன் அரணியை விரும்புவதுபோல நான் இப்பொழுது பார்வதியை விவாகம் செய்துகொள்ள விரும்புகின்றேன்.

29. எனக்காக நீங்கள் ஹிமவானிடம் சென்று அக்கன்னிகையைக் கேட்கவேண்டும். பெரியவர்கள் முடித்துவைக்கும் சம்பந்தங்கள் ஒரு பொழுதும் கெட்டுப் போகாதல்லவா?

30. வெகு புகழ் பெற்றவராயும் உயர்ந்த வம்சத்தில் தோன்றியவராயும் பூமியின் பாரத்தையே வகிக்கின்றவராயுமிருக்கின்ற ஹிமவானுடன் நானிப்பொழுது சம்பந்தம் பண்ணப்போவது யோசித்துச் செய்யும் சம்பந்தமாகவே நீங்கள் கருதவேண்டும்.

31. ஹிமவானிடம் அவருடைய கன்னிகையை இவ்வாறு கேட்கவேண்டும் என்பது நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. ஏனெனில் நீங்கள் இவ்விஷயமாய் இயற்றியிருக்கும் ஸ்மிருதியல்லவா எல்லாப் பெரியோர்களும் ஆசாரமாகக் கொண்டாடுகின்றார்கள்.

32. வெகு உத்தமியான அருந்ததியும், இந்த விவாக விஷயத்தில் செய்யவேண்டியதைச் செய்ய வேண்டும். விவாகம் முதலிய இவ்வண்ணமான காரியங்களில் பெண்டுகள் ஸாமர்த்தியமல்லவா அதிகமாக எப்பொழுதும் வித்தியைக்கொடுக்கின்றது.

33. ஆகையால் நீங்கள் ஹிமவானுடைய நகரமாகிய ஔஷதிப்ரஸ்தத்துக்கு இக்காரியத்தை நிறைவேற்றிவைக்க ஏகுங்கள். மஹாகோசி என்ற நதி விழும் இடத்தில் அவ்விமயமலையில் நாம் மறுபடி ஸந்திப்போம்.

34. யோகிகளுக்குள் முதல்வரான அவ்வீசனாரே தமது கலியாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய ஆரம்பிக்கவே பிரம்ம தேவருடைய புதல்வர்களான அத்தவஸிகள் தாங்கள் ஏற்கனவே கலியாணம்செய்து கொண்டு கிரகஸ்தாச்ரமத்திலிருக்கும் வெட்கத்தைத் துறந்தார்கள்.

35. "அப்படியே" என்று அம்முனிவர்கள்ஒப்புக்கொண்டு அவ்விடம்விட்டுப் புறப்பட்டார்கள். ஈசனும் தாம் ஏற்கனவே குறிப்பிட்ட இடத்தைப் போய்ச்சேர்ந்தார்.

36. மனத்துக்கொப்பான வேகத்துடன் சென்ற அம்மாமுனிவர்கள் கத்திபோல் நீல நிறம்பெற்று விளங்கிய ஆகாயமார்க்கமாகப் பிரயாணப்பட்டு ஔஷதிபிரஸ்த நகரம் சேர்ந்தார்கள்.

ஔஷதிபிரஸ்த வருணனை.

37. எல்லாவித ஐசுவரியங்களும் நிரம்பி விளங்கும் குபேரன் பட்டணமாகிய அளகையை அடுத்து ஸ்வர்க்கத்திலிருந்து கக்கப்பட்ட ஒரு நகரம் கட்டிவைக்கப்பட்டதுபோல் அவ்வௌஷதிபிரஸ்தம் விளங்கலாயிற்று.

38. நாற்புறமும் கங்கையின் பிரவாகத்தால் சூழப்பட்டதாய், மதில் சுவர்களில் எங்கும் சோதிக் கொடிகள் அமைந்ததாய் பெரும் மாணிக்கக் கற்களால் கட்டப்பட்ட கோபுரவாசல்கள் பொருந்திய கோட்டையாகுந்தபோதிலும் வெகு ரமணியமாய் அந்நகரம் [illegible]பித்தது.

39. அந்நகரத்து யானைகள் சிங்கத்தின் பயத்தை வென்றவைகள், 'அதாவது * சிங்கத்தைக்காட்டிலும் அதிக பல முள்ளவைகள் என்றபடி' அந்நகரத்துக் குதிரைகளோ இந்திரபகவானுடைய குதிரையாகின்ற உச்சை சிரவஸ் என்ற குதிரையின் வம்சத்திலுண்டானவைகள். அந்நகரத்துப் புருஷஜனங்கள் யக்ஷர்களும் கின்னரர்களும் பெண்டுகள் வனதேவதைகளுமாக விருந்தார்கள்.

40. அந்நரத்து மாளிகைகளின் உச்சியில் எப்பொழுதும் மேகங்கள் தொங்கா நிற்கும். அவைகள் ஒலிக்கும் போது உண்டாகும் எதிரொலி அம்மாளிகைகளில் வாசிக்கப்படும் முரஜவாத்திய நாதத்துக்கு லயம் கொடுப்பதுபோல் காணப்படும்.

41. அந்நகரத்தில் ஓங்கிநிற்கும் கற்பகத்தருக்களின் கிளைகளில் அசைந்தாடும் துணிகளே அந்நகரத்தார்கள் சிரமப்பட்டுக் கட்டாத கொடிமரங்களாய் விளங்கலாயின.

42. அந்நகரத்தில் இராக்காலத்தில் படிகக் கற்களால் கட்டப்பட்ட மாளிகைகளின் உச்சியில் ஜனங்கள் உல்லாஸமாக உட்கார்ந்து பானம்செய்யும் பொழுது ஆகாயத்திலிருக்கும் நக்ஷத்திரங்கள் அப்பளிங்கு கற்களுள் தென்படுகிற தோற்றத்தால் அப்பளிங்குபூமியில் இறைக்கப்பட்ட வெண்மலர்களாய் விளங்குகின்றன.

43. அந்நகரத்து மடந்தைகள் இருள் மண்டிய இரவுகளிலும் தங்கள் காதலனை நாடிச்செல்லும் பொழுது ஆங்காங்கு விளங்கும் சோதிக் கொடியின் ஒளியால் தாங்கள் போகும் வழி காட்டப்பட்டவர்களாய் சென்றுகொண்டு இருளின் கொடுமை இன்னதென்றே அறியாதவர்களா யிருக்கின்றார்கள்.

44. அவ்வூரில் ஒவ்வொருவருக்கும் உயர்ந்த வயது என்பது யௌவனம் தான். அவ்வூராரை நாசம் பண்ணுகிறவன் மன்மதனே யல்லாது யமனல்ல. மெய்ம்மறந்த தூக்கம் என்பது மன்மதஸுகத்தின் சிரமத்தால் உண்டாகும் தூக்கம்ஒன்றே தான்.

45. அவ்வூரில் இளைஞர்கள் வணங்கி வேண்டிக்கொள்ளுவதெல்லாம் புருவம் நெடிக்க உதடுதுடிக்கத் தமது அழகிய கைவிரல்களால் சுகமாய் அடிக்கும் கட்டழிகளின் கோபம் நீங்கி அவர்கள் தங்களை ஆதரித்து ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது ஒன்றேதான் *

46. அவ்வூரில் சந்தான விருக்ஷத்தின் நிழலில் வித்தியாதரர்கள் என்ற வழிப்போக்கர்கள் தூங்கிக்கொண்டிருப்பார்கள். பரிமளம் வீசும் கந்தமாதன பருவதம் அவ்வூருக்கு அடுத்த சிங்காரத்தோட்டம்.

47. அவ்வண்ணம் விளங்கிய அவ்வௌஷதி பிரஸ்தத்தை அத்தேவமுனிவர்கள் கண்டவுடன் சுவர்க்கலோகத்தில் சுகம் என்று தாங்கள் அதுவரையில் கருதியிருந்ததை பிசகான அபிப்பிராயம் என்று நினைக்கலானார்கள்.

48. அம்முனிவர்கள் வெகு வேகமாய் இறங்கும் பொழுது அவர்களுடைய ஜடைகள் சித்திரத்தில் எழுதப்பட்ட அலன்போல அசைவற்று சோபிக்க, அந்நகரத்து வாயிற்காப்போர்கள் தங்கள் முகங்களை மேல்தூக்கி திகைத்துப் பார்த்துக்கொண்டிருக்க வெகு வேகமாக ஹிமவானுடைய மாளிகையை அடைந்தார்கள்.

49. பெரியோர்களின் பின் சிறியோர்களாய் ஆகாயத்தினின்று கீழ் இறங்கிய அம்முனி சமூகம் ஜலத்துக்குள் பிரதிபிம்பித்துக்காணப்படும் சூரிய பங்தி போலும் விளங்கினது.

50. அவ்வாறு தம்மை நாடி வந்து கொண்டிருந்தவர்களும் தம்மால் ஆராதிக்க வேண்டிய சிறப்புப் பெற்றவர்களுமான அம்முனிவர்களை ஹிமவான் தமது கரங்களில் அர்க்யம் எடுத்துக்கொண்டு வெகு பலமாய் வைக்கப்படுவதால் பூமியையே வளையச்செய்யும் காலடிவைத்து நடந்து வெகு தூரத்திலவர்கள் வரும் பொழுதே ஹிமவான் எதிர்கொண்டு சென்றார்.

51. தமது நற்செங்கற் பொடியடைந்த தாழ்வரைகளே செவ்வுதடாக தமது தேவதாரு விருக்ஷங்களே பெருங்கைகளாக இயற்கையாக தனக்கேற்பட்டிருக்கும் இலையே மார்பாக அவர் சொல்லிக்கொள்ளாமலே ஹிமவானென்று எல்லோரும் அறிந்து கொள்ளும்படி விளங்கலானார்.

52. அவ்விமவான் சாஸ்திரப்பிரகாரம் அந்த ஸப்தரிஷிகளுக்கு மரியாதை பண்ணி தாமே அவர்களுக்கு வழியைக் காட்டிக்கொண்டு வெகு பரிசுத்தமானவர்களாய் விளங்காநின்ற அம்முனிவர்களைத் தமது அரண்மனைக்குள் உபசரித்து உள்கட்டுக்குள் அழைத்துப் போனார்.

---

*கிழத்தனம் மரணம் இவ்விரண்டும் ஔஷதிப்பிரஸ்தத்தில் இல்லை என்றபடி.

* சத்துருக்களின் கோபத்துக்குப் பயப்படுகின்றவர்கள் அங்கில்லை என்றபடி.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

ஆநமில்லா ஊரில் அசுவமேதயாகம் செய்கிறது.—அசுவமேத யாகம்செய்யவேண்டுமாகில்யாகதீக்ஷிதனாக இருக்கும் அரசன் சாஸ்திரத்திற் கூறியபடி ஹோமாதிகள் செய்தபின்னர் தகுந்த அலங்காரங்கள் செய்து ஓர் குதிரையைப் பூப்பிரதக்ஷிணம் செய்யும்படி விடவேண்டும். அதன் பின்னரே அநேகம் வீரர்களைச் செல்லவிடவேண்டும். இந்தக் குதிரை தன் முகபடத்தோடு எங்கே வேண்டுமானாலும் திரிந்துகொண்டுவரும். அந்த முகபடத்தில் இன்ன ராஜாவின் அசுவமேதக்குதிரை என்று எழுதியிருக்கும். இதைக் கண்டதும் வழியிலிருக்கும் ராஜ்யாதிபதிகள் இந்தக் குதிரையைப் பிடித்துக் கட்டிவிடுவார்கள். அவர்களைக் குதிரை பின்வரும் வீரர்கள் யுத்தத்தில் தோற்க அடித்துத் தமது ராஜனது மேன்மையை அங்கீகரிக்கும்படி செய்யவேண்டும். இவ்வாறு பிடித்துக் கட்டாத அரசன்தான் இவ்வீரரது அரசன் ஸ்நேஹிதன் அல்லது அவனைவிடத் தாழ்ந்தவன் என்று அங்கீகரிக்கவேண்டும். இவ்வாறு ஸகல அரசர்களையும் ஜயித்த பின்பு குதிரை திரும்பிப் புறப்பட்ட இடம் வர, அதை விடுத்த அரசன் எல்லா அரசர்களையும் வைத்துக்கொண்டு தன் யாகத்தை நடத்தவேண்டும். ஆகவே அசுவமேதயாகம் செய்வதற்குப் பலவான்களான ஸகல ராஜாக்களையும் ஜயித்தல் வேண்டும். இது எளிதான காரியமல்ல.

இதனால் அசுவமேதயாகம் செய்வது என்றால் அஸாத்யமான பெரிய காரியத்தை அநேக விரோதிகளால் தடுக்கப்பெற்றும், அவர்களை எல்லாம் அடக்கிவிட்டு மிகுந்த ஸாமர்த்தியத்துடன் செய்தல் என்ற பொருளில் இப்பழமொழியில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது தெரியவரும். இந்தப் பழமொழிக்கு ‘தடுக்கக்கூடிய எதிரிகள் இல்லாதஸமயம் பார்த்து பெரிய காரியத்தைச் செய்து முடிப்பதாக வீண்பெருமை பேசுவது’ என்பது பொருள்.

இப்பழமொழியின் பொருள் புராண கதைகளில் அநேகர் நடத்தையில் நன்றாக வெளிவருவதைக் காணலாம். உத்தரன் கௌரவ ஸேனையை எளிதில் வென்றுவிடுவதாகவும், கர்ணன் அர்ச்சுனனைக் கொன்றுவிடுவதாகவும், இராவணன் பக்கத்து வீரர்கள் எளிதில் ராமஸேனையை ஜயிப்பதாகவும், ஹிரண்யகசிபு ஹரியையும், பௌண்டரீக வாஸுதேவன் கிருஷ்ண பரமாத்மாவையும் கொல்லுவதாகத் தனிமையாக விருக்குங்கால் வீண்பெருமை பேசியதும் இந்தப் பழமொழிக்குத் தகுந்த உதாரணங்கள். ‘உத்தரன் ஆரும் இல்லா ஸமயத்தில் அசுவமேதயாகம் பண்ணினது’ மிக வேடிக்கையாகவிருக்குமாதலின் இங்கு அதை மாத்திரம் எடுத்துக் கூறுவோம்.

பஞ்சபாண்டவர்கள் விராட நகரத்தில் 13-வருஷம் மறைந்து வாஸம் செய்து தமது ஏற்பாட்டின்படி ஒருவராலும் கண்டுபிடிக்கப்படாது, ஒருவருஷ காலத்தைக் கழித்து முடிக்குமுன் அவர்களைக் கண்டுபிடித்து மறுபடி 12-வருஷம் வனவாஸம், 1-வருஷம் அஞ்ஞாதவாஸம் செய்யும்படி அனுப்பவேண்டும்; என்ற எண்ணத்துடன் துரியோதனாதியர் விராட நகரத்தின் மேல்படை எடுத்துவந்தனர். அவர்கள் தமது ஸேனைகளை இருபாகமாகப்பிரித்து ஒருபாதியால் ஒரு நாள் விராடநகரத்து வடபுறத்திலிருந்த பசுக்கூட்டங்களைபிடித்தனர். இங்கு விராடராஜன், அர்ச்சுனன் தவிரப் பாண்டவர் நால்வரோடும் ஸகல ஸேனைகளோடும்வந்து எதிர்சேனைகளைத்தோற்கும்படி செய்த இவர்கள் மறுநாள் பட்டணம் திரும்பி வருவதற்குமுன் துரியோதன ஸேனையின் மற்றைப்பாகம் விராடநகரத்துத் தென்புறமிருந்த மாடுகளைப்பிடிக்க, இந்த ஸங்கதியைக் கோபாலர்கள் நகரம்வந்து அங்கிருந்த விராடராஜன் குமாரனான உத்தரனுக்குத் தெரிவித்தனர். உத்தரன் அப்பொழுது பெண்டுகள் மத்தியில் இருந்தான். இவர்கள் வந்து கூறியதும், ‘இந்த கொடியிலேயே கௌரவ ஸேனையை நான் சின்னபின்னமாக்கி விடுவேன். எனக்குத் தகுந்த ஸாரதிமாத்திரம் வேண்டும். அது இல்லாமற் போயிற்றே!’ என்று மிகுந்த பரபரப்புடன் பெருமை பாராட்டித் தனக்குத்தகுந்த ஸாரதி ஒருவனைக்கூட வைக்காதுபோன தன் தகப்பனைக் கடிந்துகொண்டான். அப்பொழுது அங்கிருந்த பெண்டுகள் உத்தரன் பராக்கிரமத்தைப் புகழ்ந்து பேச, அவன் தனக்கு உண்டான கர்வ வெறியில் வாயில்வந்தபடி எல்லாம் தன்னைத்தானே புகழ்ந்து பேசிப் பிதற்றத்தொடங்கி விட்டான். அந்த ஸமயத்தில் பிரகந்நளையாகிய அர்ச்சுனன் ஸாரதியாகவந்து அமர, உத்தரன் மிகுந்த

உத்ஸாஹத்தோடு தன் ரதத்தில் ஏறிக்கொண்டு தென்புறம்நோக்கி யுத்தத்திற்குப் புறப்பட்டான். யுத்தகளம் சென்றதும் கௌரவ ஸேனையைக்கண்டு மிகப்பயந்து ‘நான் படத்தில்தான் ஸேனைகளைப் பார்த்திருக்கிறேன். உண்மையான ஸேனை இப்படி இருக்கும் என்று எனக்குத்தெரியாதே! தெரிந்திருந்தால் நான் இங்குவந்தே இருக்கவே மாட்டேன்! உயிருடன் பிழைத்தால் இன்னும் எவ்வளவோ ஸுகங்களை அனுபவிக்கலாமே! தெரியாமல் வந்து அகப்பட்டுக் கொண்டுவிட்டேனே! என்னசெய்வேன்! என்று உளறிக்கொட்டிவிட்டு உத்தரன் தேரிலிருந்து குதித்து ஊர்நோக்கி ஓடிப்போனான். பின்னர் பிரகந்நளை அவனைத்தேற்றித் தான் அர்ச்சுனன் என்பதைத் தெரிவித்து தைரியப்படுத்தி அவனையே ஸாரதியாகக்கொண்டு யுத்தத்தில் ஜயமடைந்து விராட நகரம் வந்து சேர்ந்தான். இக்கதையில் உத்தரன் ஆநமில்லா ஊரில் அசுமதேயாகம் செய்தவன்.

⁂

யாகங்கள் செய்யும் வழி.—வேதங்களில் இருக்கும் யாகங்களை எல்லாம் செய்யாது விட்டுவிடலாம். யாதொரு குற்றமும் இல்லை. ஆனால் கர்மகாண்டத்திலேயே பிராணி ஹிம்ஸையோடு ஸம்பந்தப்பட்ட ஸோம யாகத்தை மாத்திரம் ஒருவன் விட்டுவிட முடியாது. இதை த்விஜனாகப் பிறந்த ஒவ்வொருவனும் அவசியம்செய்தே தீரவேண்டும் என்றுவேதம் விதிக்கின்றது. இது செய்யாவிடில் பிராம்மணத்வம் நிற்காது என்பதே வேதத்தின் துணிபு. ஆகவே இந்த ஸோம யாகத்தைவிட்டுவிட ஒருவனுக்கு மனம் வராது. யாகம் வேதசம்மதமான கர்மம், அதில் பிராணியைக்கொன்றால் பாபம் இல்லை, கொல்லப்படும் பிராணிமோக்ஷத்தையே அடைகிறது, அதில் உண்டாகும் சிறுபாபங்களுக்குப் பரிஹாரம் யாகத்திலே நடைபெறுகின்றன, என்ற இவைபோன்ற அநேக ஸமாதானங்களை முன்னிட்டுக்கொண்டபோதிலும், மாம்ஸபக்ஷண லேசமே தமது ஸ்வப்னத்திலும் இல்லாத இக்காலத்துப் பிராம்மணர்களுக்கு இந்த ஸோமயாகத்தை நேரிடச் செய்ய எவ்வாறு மனந்துணியும்? ஆகவே ஸோமயாக விஷயத்தின் உட்கருத்து முதலியவைகளை நோக்கில் இதை அவசியம் செய்யவேண்டும் என்றும், இதில் ஏற்படக்கூடிய பிராணி ஹிம்ஸையை நோக்கி இதை விட்டிடவேண்டும் என்றும் நமது மனம் கவலைப்பாய்ந்தோடும். இந்த விஷயத்தில் தான் இக்காலத்தில் ஜீவகாருண்யம் நிறைந்த சில ஆசாரியர்கள் ஒருவாறு ஸித்தாந்தம் செய்திருக்கின்றனர். மாவால் ஆடுகள் செய்து இந்த யாகத்தை நடத்தலாம் என்பது அவர்கள் துணிபு. நமது தக்ஷிணதேசத்தில் ஸோமக்கொடி அகப்படாததால் அதற்குப்பதிலாக ஒரு செடியை உபயோகப்படுத்துகிறார்களோ அதுபோல பிராணிஹிம்ஸை மிகக்கஷ்டமான தொழிலாதலால் பிராணிக்குப் பதிலாக மாவாற் செய்த பசுவை ஏன் உபயோகப்படுத்தக்கூடாது? இவ்வாறு மாற்றிச் செய்வதால் பிராணிஹிம்ஸை என்ற கொடிய செயல் இன்றி, அதனால் வெளியாகும் உட்கருத்துக்கு யாதொரு குறைவில்லாமல் யாகத்தை வேதவிதிப்படி செய்துவிடலாம். ஆதலால் அவசியம் செய்யவேண்டும் என்று வேதத்தில் கூறப்பட்டிருக்கும் இந்த யாகத்தை மாவால் செய்த பசுவை வைத்துக்கொண்டு மற்றைய யாகங்களை இக்காலத்தில் விட்டுவிடுவதால் யாதொரு கெடுதலும் இல்லை.

இங்கு ஸோமயாக விஷயமாகக் கர்மகாண்ட நோக்கத்திற்குவிரோதமின்றிச்செய்யப்பட்டிருக்கும் தீர்மானத்தைச் சில கடுமையான வைதீகர்கள் பின்வருமாறு ஆக்ஷேபிக்கலாம். அது ‘எப்பொழுது நாம் ஒரு வஸ்துவை வேறொன்றாகப் பாவித்து விடுகிறோமோ அப்பொழுது நம்வரையில் அது அவ்வாறே ஆகிவிடுகின்றது. மாவாற் செய்த பசுவை உயிருள்ள பசுவென்று பாவனை செய்து அதை வெட்டி யாகம் நடத்தினால் நமக்குப் பிராணிஹிம்ஸை செய்த பாபம் வராதா? வராதென்றால் யாகத்தில் பிராணி உண்டாகும் கஷ்டங்களால் நமக்கு வரக்கூடிய பாபங்களை நிவர்த்திக்க ஏற்பட்ட கர்மங்கள் வீணாகும். ஆதலால் மாவால் செய்த பசுவால் என்ன லாபம்’ என்பதே. இந்த ஆக்ஷேபனையை எளிதில் நாம் நீக்கிவிடலாம். பிராணியைக்கொன்ற பாபம் நமக்குப் பாவனையால் மாத்திரம் வரும். ஆனால் குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தும் வேண்டுமா? நேரிட பிராணியைக் கொல்வதால் உண்டாகும் பாபத்திற்கும், பிராணியைக் கொன்றுவிட்டோம் என்ற பாவனையால் உண்டாகும் பாபத்திற்கும் அஜகஜாந்திர வித்யாஸம் என்பது சொல்லாமலே விளங்காதா? மேலும் மாவால் செய்த பசுமூலமாகச் செய்யப்படும் யாகம் எல்லா விஷயத்திலும் வேதத்தில் கூறியபடி செய்யப்படும் யாகமே, யஜமானனுக்குப்பிராணிஹிம்ஸையால் வரக்கூடிய பாபமும் கொஞ்சம் வந்துவிடுகின்றது. ஆனால் பிராணிஹிம்ஸை மாத்திரம் உண்மையில் இல்லை. இந்த லாபம் போதாதா? ஆதலால் முற்கூறிய ஆக்ஷேபனை வீரியமற்றுப் போகிறது.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

சகுந்தலை அல்லது பிரிவினிலை

2. உள்ளம் கலந்த காதை

அடைய முடியாதென்றிருந்த பொருள் அடையக்கூடியதுதான் என்று அரசனுக்குப்பட்டதென்று நாம் முன்பே கூறினோம். ஆயின் தாம் எண்ணுவதற்குக்காலமும் இடமும் கிடைத்தாலன்றி ஸுகமெவ்வாறு உண்டாகும்? தான் வெறுப்புற்று கிடைக்கமுடியாதென்று இருந்தனன், அதுக்கிடைக்கக்கூடியதென்றும் தெரிந்து விட்டது.—இனிக் கட்டவிழ்ந்த கழுதைபோல் மனம் அலையாது என்ன செய்யும்? சகுந்தலையின் உருவமே துஷ்யந்தனது மனவெளியின் முன் நின்றது. அதைப்பற்றி எண்ண அவன் மனம் ஓர்வித குதூஹலமும் துயரமும் அடைந்தது.—அவளை அடைந்தால் ஸுகமுண்டாகும் என்ற எண்ணத்தால் குதூஹலம், அவளை எவ்வாறு அடைவது என்னும் சிந்தனையால் துயரம். வேட்டையாட வந்த விடத்தில் தான் செய்யவேண்டிய கடமைகள் ஒருபால் வருத்த, சகுந்தலையை அடையவேண்டுமென்னும் எண்ணம் மற்றோர் பால் தூண்ட, தான் இவ்வாறு சகுந்தலையின் மேல் காமங் கொண்டதற்குக் காச்யபர் என்ன செய்வரோ என்னும் ஐயம் மனத்தை வெருட்ட, ஒன்றும் தோன்றாது மன்னன் ஸ்தம்பித்துச் சற்றயர்ந்து இருந்தான். இதற்குள் அவ்விடம் சிலவனத்தில் வசிக்கும் தவத்தினர் அரசன்பால் வந்து தாம் செய்யும் வேள்வியைக் காக்கவேண்டுமென்றுக் கேட்டுக்கொண்டனர். வேட்டையாடுவதை நிறுத்த நிமித்தம் வேண்டுமென்றுக் காத்திருந்த மன்னனுக்குக் 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல' அம்முனிவர்களது வாக்கு பட்டது. 'காற்றுள்ள பொழுதே தூற்றிக்கொள்ளவேண்டும்' என்றவாறு இதுதான் ஸமயமென்று அரசன் தனது சேனாபதிக்குத் தனக்கு வேலை இருப்பதால் வேட்டையாட வரமுடியாதென்று சொல்லும்படிச் செய்தான். ஸரி என முனிவர்களது வாக்கிற்கு 'அவ்வாறே ஆகட்டும்' என்று விடை கூறினான்.

முனிவர்களும் தம் உறையிடம் அடைந்தார். இதற்குள் சூரியன் மேற்பால் சென்றான். சிவந்த கோலங்கொண்டு செவ்வானங் கண்டது. சின்னாழி ஆனதும் தனக்கும் தெரியாது சகுந்தலையின் வடிவம் அவன் மனவெளிக்கு முன்பட்டது. குளிர்ந்த சந்திரனும் தனது பூரண கிரணங்களுடனும் மன்னன் மனத்தில் உத்ஸாக மூட்டமுடியாமல், மதிமயங்கினான். ஆகிலும் சற்றே அயர்ந்து பொழுதுபோக்கியும் மனவமைதி அடையவில்லை. காட்டினழகும் அவன் மனத்தில் பதியவில்லை. நிலவின் விரிவும் அவன் மனத்தை இழுக்கவில்லை. இதற்கிடை இடைவுண்டாகும் ஒலி எல்லாம் சகுந்தலையின் மெல்லடி என்று எண்ணி மயங்குவான். மனது பொங்கி வெப்பமடைந்து சோர்வு கொண்டது. ஆயினும் அச்சோர்விலும் அவன் மனத்தின் முன் ஒரே வடிவந்தான் தெரியும். அது சகுந்தலையின் வடிவமொன்றுதான். மரத்தினிழலும் சகுந்தலையின் நிழலோ என ஐயமுறுவன். இருட்டில் சற்றே மறைந்தவையும் பொருளெல்லாம் ஓர் வேளை சகுந்தலையின் வடிவுதானோ என்று ஐயமுறுவதன்றிச், சோர்வுற்ற மனதிலும் ஓர்வகை உவகையால் ஓர் வலிவுண்டாகிச் சற்றெழுந்து தன்கண்முன் நின்றதாக எண்ணியசகுந்தலையை நோக்கச்செல்வன். அங்கு சகுந்தலையுமுண்டோ? ஆ! கொடியமனமே உனது செயலல்லவா இவற்றிற்குக் காரணம்?

துயாமுற்றோர் மனதை ஸரிப்படுத்த ஸூரியனுமுதித்தான். கனவிலும் சகுந்தலையின் பித்தேறிய மன்னன் எழுந்து தான் கண்டது கனவுதானோ என மனத்தில் உண்மை அறியுமாறெழுந்தான். இம்மீனகேதனன் செய்யும் பெருந்தீங்கிற்கு என்ன செய்வது? என்னை வாட்டிய விதமே என்மனத்தைக் கொள்ளைக்கொண்டவள் மனத்தை வாட்டல் ஆகாதோ? ஹூம்! இனியாகமும் கடந்தது. அது இருந்தது அடக்கமுடியாத என்மனத்திற்கோர் கடிவாளமாக நின்றது. அதுவும் போய்விட்டது. யான் இனி எங்குச் செல்வது? கதிரவனும் வெப்பமதிகமாகும்படி. மேற்கிளம்பா நிற்கின்றது. என் மனத்தின் வெப்பமும் எழுச்சியிலேயே வளர்கின்றது. இக்காலம் சகுந்தலை மாதவிப்பொதும்பரில் ஸுகமே இருப்பள். இருபக்கமும் மாலினி ஆற்றின் காற்று. அழகிய மலர்களின் பூத்துகள் நீரில் கலந்து வாசனை வீசும். குயிலெங்கும் பஞ்சம ஸ்வரத்தில் இனிமையான ஒலியைக் காட்டாநிற்கும் அவ்விடமே யானும் சேர்வேன். அவளைக்காணேனாயினும் அவளிருந்த இடத்தைக் கண்டேனும்

ஆனந்தமடைவேன். இனி நடப்பேன். இதுவே அவள் மனத்திலென்று மழியாது பதிந்த தவநிலையின் இடம். இம்மரத்திற்குத்தான் அவளும் அவள் தோழியும் இருவரும் நீர் பாய்ச்சுவது. இக்கொடியின் அழகே அவளழகை ஒருவாறு ஒத்திருப்பது. இம்மான் தான் அவளோடு விளையாடுவது. இனி நான் அவளிருக்கும், மாதவிப்பொதும்பரை, அடைவேன்." என்று மனத்தில் பல பல எண்ணி, துஷ்யந்தன் தன் மனத்தின் எழுச்சிக்கொப்ப கால்நடையும் ஒற்றுக்கொள்ளும்படி நடந்தான். ஏதோ சற்றுப் பிரமைக்கொண்டு கிடுகிடுவென ஓடி அம் "மாதவிப்பொதும்ப" ரின்பக்கில் வந்தான்.

இடையே சகுந்தலை தன்மேற்கொண்ட காதலையும் தனக்கவள் கடிதமெழுத இசைந்ததையும் மன்னன் பின்புறமிருந்துக்கண்டான். சகுந்தலையின் நிலைமையையும் அவள் தோழிகட்கு "அம்மன்னனைக்கண்டதும் என்கதி இவ்வாறாயிற்று" என்று எல்லாரும் அவள் நிலையில் அநுதாபமடையுமாறு கூறியதையும் கேட்டனன். "இனி யான் சற்று மறைந்து அவள் என்ன எழுதுகின்றாளோ பார்ப்பேன். நான் முன் செல்லும்பொழுது என்னைக் கடைக்கண்ணால் பார்த்ததால் அவள் என்பால் ஆசை கொண்டாளென்று நினைத்தேன். மற்றும் நடவடிக்கையாலும் மனங் கலங்கினனென்று மறிந்தேன். அவ்வறிவே எனக்கும் தெரியாது தூண்டி இவள்பால் ஆசைக்கொள்ளச் செய்தது. இவற்றை முழுதும் அவ்வாசையின் மிகுதி அறியமுடியாது மறைத்தது. இனி அவ்வாசை விசாலித்து இவளும் நம்பால் காமம் கொள்ளுமாறு செய்து, வேகம் குறைந்தொடுங்கியுள்ளது. மனவமைதி சற்று அடைந்துள்ளேன். அவள் இனிச்செய்வதைச் சற்று அவளறியாதவண்ணம் கவனிப்பேன்." என்று எண்ணியதன்றி அவள்பாலே கண்ணோக்க முழுதும் நிலைத்தது.

சகுந்தலையும் சொல்லமுடியாத வெட்கமடைந்தவளாய் தோழியர்கள் விருப்பத்திற்காகக் கடிதம் வரைந்ததுபோல் காட்டிக்கொண்டு தான் "உன் மனம் அறியேன். ஆயினும் கொடுமனமுடையாய்! உன்பால் பாய்ந்த என் ஆசைப் பெருவெள்ளம் என்னைத்துன்பத்துள் வீழ்த்திவிட்டது" என்றவெழுதிய கடிதத்தை வாசித்துக்கொண்டிருக்கும்போழ்தே துஷ்யந்தன் அவள் முன் தோன்றி "உன்னைத் துன்பத்துள் ஆக்கிவிட்டது என் உடலம் முழுதும் எரியச்செய்துவிட்டதென்று" மன்னன் படபடத்துக் கூறினான். உட்கார்ந்திருந்த சகுந்தலை மன்னனுக்கு உபசாரம் செய்யவேண்டி எழுந்திருக்கப் பார்த்தாள். வெட்கம் அவளைத் தடுத்ததன்றி எல்லார் மனத்தையும் பிரமையுள் புகுத்திவிட்டது. ஒருரையும் சகுந்தலைப்பின் சொல்லவில்லை. அங்கிருந்த தோழியரும் மறைந்தனர். சகுந்தலை "அவர்களும் போய்விட்டனர் யான் போகவேண்டும்" என்றாள். "ஒருவராவது என்பால் இருக்கக்கூடாதா" என்று மற்றும் கூறினாள். அரசன் "கவலைவேண்டாம் யான் உன்பால் உள்ளேன். உனக்கு எது வேண்டுமாயினும் யான் செய்வேன்" என்றான்.

"புருகுலத்து மன்னனே! ஆத்திரம் வேண்டாம். யான் ஆசைநோயுள் கிடைப்பினும் யான் என் ஆள் அல்ல. என் இஷ்டப்படி நடக்கக்கூடியள் அல்ல. கண்வரது உரையின்றி யான் ஒன்றும் செய்ய முடியா"தென்றாள் சகுந்தலை. "மதனனால் கொலையுண்ட என்னை மற்றோர் கொலை உன் மொழியால் செய்யாதிரு" என்றான் மன்னன். "சற்றுப்பொறும். வெளிச்சென்ற என் தந்தை வந்திடில் அவரது அநுமதியின்பேரில் உம்மை முறையே மணப்பேன்" என்றாள் சகுந்தலை, மன்னனும் "நூல்களில்மணம் எண்வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை பிராஹ்மம், தைவம், ஆர்ஷம், ப்ராஜாபத்தியம், அசுரம், கந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம் எனமனு எழுதியுள்ளார். அவற்றுள் முதல் நான்கு பிராஹ்மணர்க்கும், முதலாறு அரசர்க்கு முரியதாகும். அவற்றுள் காந்தர்வமே சிறந்தது. அவ்வாறு நாம் மணப்பின் உமது தந்தை தடை கூறார். இது பெரியோர்கண்டவழி" என்றான். "அன்றியும் உனக்கும் என்பால் ஆசையுள்ளது; எனக்குமவ்வாறே பொருந்தியுள்ளது. இனியுன்பயமேன். காந்தர்வ வழியால் என்னை மணக்கலாம்" என்றான் மன்னன். "ஆயினும் ஒன்று வேண்டும்; நீவிர் கூறுவதே முறையாயின், இத்தனியான இடத்தில் நம்மிருவர்க்குள்ளாக ஓர் வரம் கேட்பேன். அதற்கு ஒப்புவீராயின் ஸரி. என்னிடம் பிறக்கும் மகனுக்கு நாட்டைமுற்றுமளிப்பதாக ஏதோர்வரமே வேண்டும்" என்றாள். "மன்னனும் அவ்வாறே ஆகுக!" என்றான்.

காந்தருவவீதத்திலே இருவரும் மணந்தார். சின்னாள் கடந்ததும் "யான் உன்னை எவ்வாறு என்பதியுள் கொள்ளவேண்டுமோ அச்சீருடன் அடையச் செய்வேன்" என்று சொல்லி நாட்டை யடையப் புறப்பட்டனன், "நீவிர் சொல்லிய மொழிகள் உமது மனத்தை அகலாது இருக்கவேண்டும்" என்று சகுந்தலையும் வற்புறுத்தினாள்.

மன்னனும் தான் செய்த வினையைக் குறித்து காச்யபர் என்னவெண்ணங் கொள்வாரோ என்னும் ஸந்தேஹம் மனதைக்கவிந்து சிந்தையுள் ஆலாக்கத் தன்னூர் நேர் நோக்கலானான்,

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

பிரிந்த இருவர், இருந்த இடத்திலிருந்து கண்டுக்கொண்டே பேசல்.—இதுவரையும் தூரத்திலிருப்பவர் இருவர் காணாத மின்சார தந்தியின் மூலமாகப் பேசுவதைக் கண்டிருக்கிறோம். இப்பொழுது சில மாதங்களிற்கு முன் ஹாலண்ட்காட்டில் ஓர் ப்ரகிருதி சாஸ்திர வல்லவர் ஓர் புதிய யந்திரம் கண்டுபிடித்திருக்கின்றனர். ஒருவரை ஒருவர் நேராகக் காணாவிட்டாலும் இதன் மூலமாக இருவர் நேராகக் கண்டாற்போல ஒருவரோடு செய்கை முதலிய எல்லா இயல்போடும் பேசலாம்.

***

ஒளியில்லா இடத்தில் ஒளி.—நாம் கண்மூடிக்கொண்டிருந்தால் நமக்கொன்றும் தெரியாது இருட்டாய் இருக்கும். ஆனால் மூடிய கண்ணைச் சற்றே கைவிரலால் தேய்த்தோமானால் கண்ணிற்கு பக்கத்தில் ஓர் பிரகாசமாகிய ஒளி சுழல்வதுபோல் காணப்படும். இருந்தாற்போல் இருந்து கண்மேல் ஏதேனும் தாக்கினால் கண்முன் தளதளவென்று ஒளிப்பொறிகள் பறப்பதுபோல் காணப்படும். இது மூளையின் பார்வை நரம்புகளின் சலிப்பினால் உண்டாகும் மயக்கம்.

***

மூன்று சிசுக்களைப் பிரசவித்தல்.—மாத்துறைப் பகுதியிலுள்ள ஓர் ஸ்த்ரீ சிலநாட்களுக்கு முன்னே ஒரேகர்ப்பத்திலிருந்து இருபெண்ணும் ஒரு ஆணுமாய் மூன்று சிசுக்களைப் பிரசவித்தனள். பிள்ளைகள் மூன்றுஞ் சௌக்கிய நிலையிலிருக்கின்றனவாம். அவள் பிள்ளைகளுடன் மாத்துறை வைத்தியசாலையிலிருக்கிறாள்.

***

இந்தாலியா தேசத்திலும் புத்தமதம்:—பல வருஷங்களுக்கு முன்னே இலங்கைக்குவந்த ஓர் ஜெர்மனியன் இங்கிருந்த காலத்திலே புத்தசமயப் பிரவேசஞ்செய்து அதற்குச் சிலகாலத்துக்குப் பின் சந்நியாசியாயினான். மைனாற்றிலியோக்கா (Myna-tilioka) என்பது அவன் நாமம். அவன் இலங்கையிலேயே 9-வருடத்திற்கு மேலிருந்து அப்பால் ஐரோப்பாவுக்குப்போனான். இப்போ இத்தாலியாவிலுள்ள என்னும் டாக்சி மலையிலேயே சில ஐரோப்பியரைத் தன்னோடு சேர்த்து, அவர்களையுந் தன் மதமாக்கி வைத்துக்கொண்டிருக்கிறான். அந்த மலையிலே இப்போது புத்த சந்நியாசிகள்பலரிருக்கிறார்கள். அவர்களெல்லாரையும் ஒன்றுசேர்த்துப் பிரசாரணங்கள் செய்து, புத்தசமயத்தை எங்குஞ்சென்று பரப்பும்படி அவர்களை ஏவிவருகின்றான்.

***

கல்மழை:—வயனாட்டைச் சேர்ந்த எருமைக்கொல்லை தோட்டத்திலும் சுற்றுப்புறங்களிலும் சென்ற மார்ச்சுமீ 22௳ பிற்பகல் 3½-மணிக்கு கடலை பருமனுள்ள "கல்மழை"யுடன் மழை தொடங்கிற்று. சிறிது நேரத்திற்குள் மழைநின்று சகலமும் உறைத்த மழையாய் கால்மணி நேரம் கடலை முதல் எலுமிச்சைப்பழம் அளவுவரை பருமனுள்ளதாய்ச் சொரிந்தது. தண்ணீருக்குப்பதிலாக உறைந்த மழை ஓடிற்று. சகல இடங்களிலும் பூமி காணப்படாமல் உறைந்த மழையால் மூடப்பட்டிருந்தது. பின் 4-மணிவரை மழையும் உறைந்த மழையுமாய்ப் பெய்தது. ஷை உறைந்த மழை மறுநாள் காலை 9-மணிவரையில் கரைந்துபோகாமலிருந்தது. சுற்றுப்புறங்களில் இவ்வளவு ஜாஸ்தியில்லை என்று கேள்வி.

***

அறுகால் பசு.—பொதுவாக அறுகால் என்னும் பதத்திற்குத் தமிழில் வண்டு என்று பொருள்படும். வண்டிற்கு ஆறுகால்என்பது அன்றிப்பசுவிற்கு ஆறுகால் காண்பது அதிசயமன்றோ. இந்த வருடம் திருமயிலை உற்சவகாலத்து ஓர்பசுகாட்டப்பட்டது. இதற்கு ஆறுகால், இருவால், ஒருடல், இருமடிக்கூடி ஓர் முகத்துடன் விளங்கியது. இது இயற்கைப் பிறப்பின் அதிசயமே.

***

மையின்றி அச்சுப்பதித்தல்.—மையில்லாமல் எழுத்துக்களை அச்சுப்பதித்தற்கிசைவான ஓர் அச்சியந்திரம் தற்போது ஒருவராலியற்றப் பட்டிருக்கின்றது. அச்சுப்பதிக்கும் வேலை முழுவதும் மின்சார உதவிகொண்டே நடத்தப்படும். இப்படி யச்சிட்ட எழுத்துக்களை ஒருவகைத் திராவக மூலமாய்க்கழுவியழித்து, முந்தியகடுதாசிகளிற் பின்னும் அச்சுப்பதிக்கலாமெனவும் அவர் கூறுகிறாராம்.

REGISTRAR OF BOOKS REGISTERED 13 JUN 1910 MADRAS

விவேகபோதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

தொகுதி II } ஸாதாரண௵ சித்திரைமீ 1910-௵ மேமீ { பகுதி 11

உபரதி

SELF-CONTROL

இரண்டாம் ஸாதனமாகிய உபரதியைக் கைவல்ய நூலாசிரியர் 'அமர்செய்யும் காமமாதி வரின் அடக்குதல் ஸஹித்தல்' என வர்ணித்திருக்கிறார். பொதுவாக முமுக்ஷுவானவன் விஷயங்களைவிட்டு ஒதுங்கி மிக ஜாக்கிரதையாகத் தன் மனதை அடக்கிச் சுத்தநிலையிலேயே நிற்க முயலவேண்டும். அவ்வாறு செய்யுங்கால் எழும் விஷய எண்ணங்களைத் தடுப்பதே உபரதி என்று சொல்லப்படும். 'நாம் வரும் விஷயங்கள்தம்முள் இருந்துகொண்டே உபரதியைப் பழகுவோம்' என்று இறுமாந்திருக்கவே கூடாது. ஒதுங்க வேண்டியவனுக்கு இந்த எண்ணம் பிறந்ததே அவன் மனது விஷயங்களில் ஈடுபட்டுவிட்டது என்பதற்கு அடையாளம். மேலும் பழகுபவன் விஷயமத்தியில் ஒதுங்காது இருப்பானாகில் அதில் பெரும்பாலும் ஈடுபட்டு முன் பலநாள் கஷ்டப்பட்டு ஸம்பாதித்த மனஸ்சுத்தத்தை ஒரே தடவையில் இழந்து, மிகுந்த தாழ்ந்த நிலையை அடையும்படி நேரிடும். உபரதிவிஷயத்தில்தான் 'சாண் ஏற' ஏமாந்தால் 'முழம் சறுக்கும்' என்ற பழமொழி நன்றாகப் பொருந்தும். இவைகளை உணர்ந்து விஷயங்கள் மத்தியில் முதலில் ஒதுங்கியும், அவ்வாறு செய்ய முடியாவிடில் அவைகளால் உண்டாக்கப்படும் மனப்பற்றை எழவொட்டாது அடக்கியும் முமுக்ஷு உபரதியில் பழகவேண்டியது.

இத்தன்மையான உபரதிக்குக் காரணம், யமம் (கொல்லாமை முதல் தானம் வாங்காமை வரை உள்ள 5 குணங்கள்) நியமம் (சுத்தம் முதல் பகவானிடம் ஈடுபடுதல் வரைஉள்ள 5-குணங்கள்) ஆஸனம் (வெகுநாழிகை மாறாது நிலைத்து உட்காரக்கூடியவிதம்) பிராணயாமம் (மூச்சை அதிகவேகமில்லாமலும், அதிக மெதுவாக இல்லாமலும் ஒழுங்காகவிடுதல்) பிரத்யாஹாரம் (மனதை விஷயத்திலிருந்து நீக்கும் அப்பியாஸம்) தாரணை (மனதைஏகாக்கிரப்படுத்தல்) தியானம் (ஏகாக்கிரப்பட்டுக்கொஞ்சநாழிகை நிற்றல்) ஸமாதி (புத்திஅசையாது பரம்பொருளிடம் நிற்றல்) என்ற எட்டு அங்கங்களை உடைய யோகமே. இது ஹடயோகம் போலில்லாதுபகவத் ஸம்பந்தமாக இருப்பதால் இதற்கு ராஜயோகம் என்ற ஒரு பெயரும் உண்டு. பகவத்பக்தி, மனம் அடக்கிப்பழகுதல் இவைகளால் வரும் உபரதி நிலைத்து நிற்காது.

இதன் ஸ்வரூபமாகிய மனோநிரோதத்தைப்பற்றி முன்னரே கூறியாய்விட்டது. இதன் காரியம் விஷய வியவஹாரம் குறைவது. நாம் ஸதாவிஷயங்களிலேயே காலத்தைப் போக்குகிறோம். சிற்சில ஸமயங்களில் தொழில் செய்து மற்றைய ஸமயங்களில் அவைகளைப்பற்றி விடாது பேசுதல், பின்னர் எல்லாவற்றையும் விட்டுவிஷய ஸ்வப்நங்களால் அடிக்கடிக்கலைக்கப்பட்டு உறங்குதல், ஆகியஇம்மாதிரியே நாம் காலம் கழிக்கிறோம். இதையே தாயுமானவரும் 'யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதும்' ஆகமுடியும் என்றார். இந்தவிதக் காலம் போக்குதல் உபரதியால் வரவரக்குறைய பகவத்காலக்ஷேபம் வரவர அதிகரிக்கும். நல்ல ஸ்வப்நம்அற்ற ஸுஷுப்தி காலத்தில் தேகத்தை மறப்பதுபோல தேகம் முதலியவைகளை மறக்கும் வரையில் இதில் பழகவேண்டியது. இதற்கப்பால் இது வேண்டியதில்லை. இதன் பலம் பிரம்மலோக ஸாமீப்யம் என்று சாஸ்திரங்கூறும். அதாவது ஆசார்யனிடம் செய்யும் சிரவணாதிகள் வேறொன்றி நன்றாகத் தழைத்து யாதொருகஷ்டமுமின்றி நிஷ்டைக்கு ஸஹாயமாக ஏற்படுவதே.

இதைத்தான் வித்யாரண்ய ஸ்வாமிகள் பஞ்சதசிப் பிரகரணத்தில் பின்வருமாறு கூறியிருக்கிறார். 'உபரதிக்கு ஹேது அஷ்டாங்கயோகம், ஸ்வரூபம், மனோநிரோதம், கார்யம், வியவஹாரம் குறைதல், எல்லை, தேகத்தை மறத்தல், பலம், பிரம்மலோக ஸாமீப்யமே."

விவேக போதினி

தொகுதி 2] ஸாதாரணஹு சித்திரைமீ [பகுதி 11

ஞானகாண்டம்

GNANAKANDA

முன்னர் எடுத்துக் காட்டியபடி கர்மகாண்டத்தில் கூறப்பட்டிருக்கும் ஸன்மார்க்கத்தில் பழகி அதன்நோக்கத்தின்படி நிஜவைராக்கியம் அடைந்து, ஸத்குருவை அணுகி அவரால்செய்யப்படும் சோதனையில் தேறிய பின்பு அவர் அவன் கஷ்டத்தைத் தீர்க்கப் புகட்டும் விஷயங்களே ஞானகாண்ட விஷயங்கள். இவைகளுக்கு உபநிஷத்துக்கள் அல்லது வேதாந்தங்கள் என்றபெயர்களும் உண்டு. உபநிஷத்து என்ற பதத்திற்கு அஞ்ஞானத்தை அழிப்பது என்றும், பரம்பொருள் அருகாமையில் முமுக்ஷுவை அஞ்ஞானம் நீக்கிக்கொண்டு சேர்ப்பது என்றும் பொருள்கள் தாதுப்படி நோக்கில் வெளியாகும். வேதாந்தம் என்பது வேதத்தின் முடிவு என்று பொருள்படும். இதில் இரண்டுவித அர்த்தபாவங்கள் அடங்கியிருக்கின்றன. முதலாவது இவைகள் வேதங்களின் முடிவில் இருக்கின்றன என்பதையும், இரண்டாவது ஸாதாரண விஷய அறிவுகள் அநேகவிதமாக இருப்பினும் எல்லாம் இந்த ஞானகாண்டத்தில் கூறப்படும் முடிவில் அடங்கி ஏகரூபத்தை அடைகின்றன என்பதையும் கருத்தாக உடையது. ஆகவே இதில் அடங்கியிருக்கும்சாந்தமானபரமபதவிஷயமே ஆவலுடன் வரும் முமுக்ஷுவைத் திருப்திப்படுத்தும் திறனுடையது. ஆதலால் ஸத்குரு இதை ஒழுங்காகப் பக்குவியான தன் சிஷ்யனுக்கு உபதேசிக்கத் தொடங்குவார்.

அவர் உபதேசிக்கும் ஒழுங்கைச் சற்று எடுத்து விவரிப்போம். சிஷ்யன் குருவைச் சென்றடைந்ததும், அவனுக்கு முதலில் ஞானகாண்டங்களாகிய உபநிஷத்துக்களை அவர் அத்யயனம் செய்துவைப்பார். இந்த விஷயம் அனாவசியம் என்றும், முன்னர் புஸ்தகங்களில்லாத காலங்களில் இது அவசியமாயினும் இப்பொழுது வேண்டியதில்லையென்றும் எண்ணிவிட வேண்டாம். வேதஸ்வரங்களைப் பற்றிக் கூறுங்கால் வேதத்தை ஸ்வரத்தோடு அத்யயனம் செய்தவன் சிறப்பை எடுத்துக் கூறியாய் விட்டது. உபநிஷத்துக்களின் நடை மிக எளிதாகவும், விஷயம் மிகச்சிறந்ததாகவும் இருப்பதால் அவைகளை அத்யயனம் செய்யும் பொழுதே சிஷ்யனுக்கு மனம் ஸ்வரத்தில் ஈடுபட்டு நிலைப்பதோடுங்கூட ஒருவாறு அவைகளின் அர்த்தங்களிலும் ஈடுபட்டுத் திருப்தி அடையும். இவ்வாறு அத்யயனம் முடிந்ததும், குரு அவைகளின் பொருளைக்கூறி, உபநிஷத்துக்களை ஒன்றோடொன்று ஒப்பிட்டு அவைகளின் விஷயங்கள் இப்படிப்பட்டவை, அவைகளுள் எது முடிவான மார்க்கம் என்பவைகளை நேரிடக்கூறாமல் சிஷ்யன் உணரும்படி கற்பிப்பார். இதோடு ஆதிமுதல் கொண்டே அவன் தேஹஸ்திதி, மனோநிலை முதலியவைகளுக்கு ஏற்ப அவனுக்கு ஓர் உபாஸனையை விதித்து அவனை அதில் பழகி வரும்படி செய்வார். இவ்வாறு அவனுக்குப் பழக்கமும், அறிவும் முதிர்ந்து வரவர அவனுக்கு மேலான நிலைகளுக்குரிய பழக்கங்களை உபதேசித்துத் தாமும் அவ்வாறு இருந்து காட்டி உபநிஷத்துக்களில் உள்ள ரஹஸ்ய விஷயங்களையும் எடுத்துக் காட்டி அவனை எளிதில் விருத்தி அடையும்படி செய்வார். இவைகளால் தேஹம் நானல்ல, பிரபஞ்ச விஷயங்கள்எனதல்ல, நான் இவைகளுக்கு அப்பாற்பட்டவன், இவைகளைவிட அறிந்துகொள்ள வேண்டியவை வேறொன்றுமில்லை என்று

REGISTERED 13 JUN 1910 MADRAS.

உபநிஷத்துக்களில் கூறப்படு ஞானநிலை சிஷ்யனுக்குப் பழக்க பலத்தால் உறுதியானதும், ஸமயம் பார்த்துப் பக்குவகாலத்தில் குரு தமது முடிவான தொழிலாகிய மஹா வாக்ய உபதேசம் செய்வார். எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட நீயே உண்மையான பரம்பொருள் என்ற விஷயத்தைக் குரு தக்க நிலையில் கூற, இதுகாறும் விருத்தியானமனதில் அதுநேரிடப் பதியும். உடனே அவனுக்குத்தேகப்பிரஞ்ஞாதிகள் மறைய அவன் அசைவற்று ஞான நிஷ்டையிலிருந்து ஸமாதி நிலையை அடைந்து, வெயிலில் அடிபட்டவன் நிழலில் வந்து இளைப்பாறுவதுபோல சற்றுக் களைப்பாறுவான். பின்னர் பழக்க பலத்தால் குரு இவனுக்கு ஸமாதி ஸதாகாலமும் நிலைக்கும்படி செய்ய, முடிவில் தமக்கும் தமது சிஷ்யனுக்கும் யாதொரு பேதமே இல்லாத ஸம நிலைக்கு அவன் வரும்படி செய்வார். அதாவது சிஷ்யனை அவர் ஜீவன் முக்தன் ஆக்குவார்.

மானிடப்பிறவியின் முடிவாகிய இப்பரமபத விஷயத்தை வெளியாக்கும் ஞானகாண்ட பாகங்கள் எவை என்ற விஷயத்தை எடுத்துக் கொள்வோம். ஞானகாண்ட பாகங்களுக்கு உபநிஷத்துக்கள் என்று பெயர். அவைகள் அநேகம். அவைகளுள் 1008-உபநிஷத்துக்கள் முன் காலங்களில் இருந்தன என்று தெரிய வருகின்றது. இப்பொழுது நமக்கு 108-உபநிஷத்துக்கள் தான் வந்து எட்டியிருக்கின்றன. இவைகளுள் 10-உபநிஷத்துக்களே முக்கியமானவைகளாகப் பெரியோர்களால் மதிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுள் ஞானகாண்ட விஷயங்களும் அதற்குவேண்டிய உபாஸனா பேதங்களும் பூர்ணமாக அடங்கியிருத்தலால் இவைகள் இவ்வாறு மதிக்கப்பட்டனபோலும். ஈச, கேன, கட, பிரச்ன, முண்டக, மாண்டேக்ய, தைத்ரீய, அயிதிரேய, சாந்தோக்ய, பிரஹதாரண்யக உபநிஷத்துக்களே, 10-முக்ய உபநிஷத்துக்கள். மற்றைய உபநிஷத்துக்கள் சிறியவையாயும், அதி ரகஸ்ய விஷயங்களைச் சுருக்கமாகவும் கூறுவதால் ஸாதாரண உபநிஷத்துக்களாக மதிக்கப்படுகின்றன.

இவ்வுபநிஷத்துக்களில் கூறப்படும் விஷயங்களை ஒருவாறு குறிப்பாகக் கூறுவோம். உபநிஷத்துக்களில் பொதுவாக முதலில் அநேகவித உபாஸனாக்கிரமங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளில் சிலபின்வருவன. எந்தத்தேவதைகளையும் சிவ விஷ்ணுக்களாகப் பாவனை செய்து ஆராதனை செய்வது, பரம்பொருளை ஹிருதய குகையில் இருப்பதாகவாவது, அல்லது ஸூர்யமண்டலத்தில் இருப்பதாகவாவது பாவித்து ஆராதனை செய்வது, ஓம் என்ற பிரணவ மந்திரத்துள் அடங்கியிருக்கும் அர்த்தபாவத்தை பரம்பொருளாக எண்ணி ஆராதனை செய்வது, பிரபஞ்சம், ஜீவாத்மாக்கள் இவைகளுள் பரவியிருந்து இவைகளை அடக்கியாளும்பொருளைப் பரம்பொருளாக எண்ணி ஆராதிப்பது, பிரபஞ்சம் முழுவதும் பார்த்தவிடமெல்லாம் ஸத்சிதானந்தமயமான பரம்பொருளாக எண்ணி ஆராதிப்பது, ஆகிய இவைகளே கர்மகாண்டத்தில் முதிர்ந்துவரும் முமுக்ஷுவுக்கு உபநிஷத்துக்களில் ஏற்பட்டுள்ள சில ஆராதனைகள். இதன் பின்பு நடுவில் வரும் சிறு கதைகளில் ஏற்படும் குரு சிஷ்ய ஸம்வாதங்கள் மூலமாக அவை சிறந்த உண்மையை வெளிப்படுத்தி, முடிவில் பரமநிலையிலிருப்பவர் மனதிலூறும் ஆனந்த வெள்ளம் ததும்பி வழிவதால் வெளியாகும் பரவச வாக்கியங்களால் அந்நிலையைக் கூறாமல் கூறும். பொதுவாக உபநிஷத்துக்களில் முன் எடுத்துக்காட்டிய ஆனந்தக்களிப்பே ஏராளமாக விருப்பதால் அவைகள் ஒழுங்காக ஓர்வித ஸித்தாந்தத்தையும் நிலை நிறுத்துவனவாகத் தோற்றா. உபநிஷத்துக்களை

வாசிக்கும் ஸாதாரண ஜனங்கள் எல்லோரும் அவைகளில் ஒழுங்கே இல்லை என்னும், முரணானவாக்யங்கள் காணப்படுகின்றன என்றும் அவைகளைக் குற்றங்கூறுவர். இந்த அபிப்பிராயத்தை உண்டாக்கும் சிற்சில வாக்கியங்கள் பின்வருவன.

1. ‘ஆதியில் இரண்டற்ற ஒன்றே இருந்தது.’

2 ‘இரண்டு உண்டு, பரம்பொருள் ஒன்று அவரை அனுஸரித்து நிற்பது ஒன்று. ஒன்று தொழில் நடத்துகின்றது, மற்றொன்று ஸாக்ஷி மாத்திரமாக நிற்கின்றது.’

3. ‘இரண்டாவதை உணருகிறவன் பிறந்து இறந்து வருந்தவேண்டும்.’

4. ‘பரம்பொருள் ஸத்யத்தை விரும்புவர், அதையே எண்ணுவர், பூம்யாதி பிரபஞ்சமும், ஜீவாத்மாவும் அவனுக்குத் தேஹம்.’

5. ‘பரம்பொருள் ஸத்யஞானம் அனந்தம்.’

6. ‘ஸச்சிதானந்தம் பிரம்மம்.’

இவைகள் இவ்வாறு முரணாக இருப்பினும், ஸனாதன தர்மம், வேதம் இவைகளின் நோக்கம், இதை அவைகள் அதிகாரிபேதம் அவஸரபேதம் முதலியவைகளை அனுஸரித்து வெளியாக்கும் வழி. இவைகளை நன்குணர்ந்தவருக்கு இந்த விஷயத்தில் உண்டாகும் மனச்சஞ்சலம் உடனே நீங்கிப்போகும். மற்றையவர்களுக்கும் இந்த விஷயங்களை நினைப்பூட்டினால் உடனே வந்த சங்கை என் தீராமாட்டாது?

இவ்வாறு உபநிஷத்துக்களும் கர்மகாண்டம்போல அதிகாரி பேதத்திற்கு ஏற்பமாறுபாடான உபாஸனாதிகளைக்கூறின் அவைகளின் உண்மை நோக்கம் இன்னது என்பது விளங்காமல் போய்விடுமே என்ற சங்கை பிறக்கும். உபநிஷத்துக்கள் வேதத்தின் நோக்கத்தை வெளியிடவந்தவைகளாதலின் அவைகளில் இந்த நோக்கம் வெளியாகாமல் போகவில்லை. ஆனந்தங்களிப்புகளையே இந்தவிஷயத்தில் அவைகளுள் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். இவைகள் பொதுவாக முடிவுகூறும் பாகமாகிய இறுதியிலேயே பெரும்பாலும் காணப்படுகின்றன. இவைகளிலிருந்து இரண்டற்ற பரிசுத்தநிலையே இவைகளது முடிவாகியபரமபதம் என்பது விளங்கும். இவைகளை வற்புறுத்த நேராக உபநிஷத்ஸாரம் என்று மதிக்கப்படும் நான்கு வாக்கியங்கள் இவைகளில் காணப்படுகின்றன. அவைகளுக்கே மஹா வாக்கியங்கள் என்று பெயர். அவை பின்வருவன.

1. பிரஜ்ஞானம் பிரம்மம்:—இது ருக்வேதம், அயிதிரேய உபநிஷத்தில் இருப்பது. இது விசாரணையால் ஏற்படக்கூடிய முடிவு. இதன்பொருள் ‘அறிவே பிரம்மம்’ என்பது.

2. தத்வமஸி:—இது ஸாமவேதம் சாந்தோக்யோபநிஷத்தில் இருப்பது. இது உபதேசமஹாவாக்கியம். இதன் பொருள் ‘நீயே அது’ அல்லது ‘நீ அது ஆனாய்’ என்பது.

3. அஹம்பிரஹ்மாஸ்மி:—இது யஜுர்வேதம் பிரஹதாரண்யக உபநிஷத்தில் இருப்பது. இது அனுபவ மஹாவாக்கியம். இதன் பொருள் ‘நானே பிரம்மம்’ அல்லது ‘நான் பிரம்மமாய் இருக்கிறேன்’ என்பது.

4. அயமாத்மா பிரஹ்ம:—இது அதர்வணவேதம் முண்டகஉபநிஷத்தில் இருப்பது. இது ஸஹஜஸ்திதிமஹாவாக்கியம். இதன் பொருள் ‘இந்த ஆத்மா பிரம்மம்’ என்பதே

ஆகவே உபநிஷத்துக்களில் அநேகவிதக் கொள்கைகள் காணப்பட்டபோதிலும் அவைகளின் நோக்கம் இன்னது என்பது இப்பொழுது நன்றாக விளங்கியிருக்கும்.

இப்படியிருப்பினும் முற்கூறிய உபநிஷத்துக்களிலிருக்கும் விஷயங்கள் குறிப்பாகவும் மற்றைய பேதமான விஷயங்கள் மத்தியிலும் இருப்பதால் இவைகளுக்குப் பொருள் கூறப்புகுந்தோர் தம் நிலைக்கேற்ப ஒவ்வொரு முடிவை ஏற்றமாகக் கொண்டிருக்கின்றனர். தமது ஸித்தாந்தத்திற்கு முரணான விஷயங்களை ஒடித்துப் பொருள்கூறி தமது நிலையை அவர்கள் ஸ்தாபித்திருக்கின்றனர். இவ்விதமான அநேகம் விருத்தி உரைகள் (வியாக்கியானங்கள்) உபநிஷத்துகளுக்கு உண்டு. இவை

களுள் நான்குவித ஸித்தாந்தங்களே நம்பரதகண்டத்தில் எல்லோராலும் இப்பொழுது அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. பரதகண்டவாஸிகள் எல்லோரும் இந்த நான்கு ஸித்தாந்தங்களுள் ஏதாவது ஒன்றைப் பின் பற்றுபவர்களாகத் தான் இருப்பார்கள். இந்த முடிவுகளுக்கு, அத்வைதம், சிவாத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம், என்று பெயர். இவைகள் நான்கும் உபநிஷத்துக்கள் பொருளை விளக்குவனவாக வெகு காலமாக இருப்பன. இவைகளைப் பிற்காலத்தில் ஒழுங்குபடுத்தி தகுந்த யுக்திவாதங்கள் வேதஸம்பந்த ஆராய்ச்சிகள் முதலியவற்றால் நிலைநிறுத்தி எல்லோருக்கும் பயன்படும்படி வெளியிட்டவர்கள் தக்ஷிண தேசத்தைச் சேர்ந்த நான்கு பரமாசாரியர்கள். அவர்கள் பெயர் முறையே ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாள், ஸ்ரீமத் நீலகண்ட சிவசாரியர், ஸ்ரீமத் ராமானுஜாசாரியர், ஸ்ரீமத்வாசாரியர், என்பவைகளே. இவர்கள் சரித்திரம், இவர்கள் உபநிஷத்துக்களைப் பொருள்படுத்தி வெளிப்படுத்திய முடிவான விஷயங்கள், இவைகளைப் பின் வரும் ஸஞ்சிகைகளில் முறையே தொகுத்து எழுதுவோம். இங்கு அவர்கள் எடுத்துக்கூறும் முடிவைமாத்திரம் காட்டுவோம்.

அத்வைத ஆசார்யராகிய ஸ்ரீமத் சங்கராசாரியர்:—உண்மையாயிருப்பது பிரம்மம் ஒன்றே மற்றவை எல்லாம் தோற்றமே ஒழிய வேறல்ல, ஆதலால் பிரம்மமே நான் என்று நிலைத்திருப்பதே பரமபதம் என்பர். சிவாத்வைத ஆசார்யராகிய நீலகண்ட சிவம்:—உண்மையாக இருப்பன ஜகத் ஜீவன் சிவன், முன்னிரண்டும் தனி வஸ்துக்களல்ல, சிவனைச் சார்ந்தவை அவைகளுள் ஜீவன் பக்குவியாகி சிவனது அருளால் முடிவில் சிவனோடு ஸூர்யன் ஒளியில் மங்கி நிற்கும் விளக்குப்போலக் கலந்து ஓர்வித ஸ்வதந்த்ரப் பிரஞ்ஞையோடிருப்பதுவே பரமபதம் என்பர். விசிஷ்டாத்வைதஆசார்யராகிய ஸ்ரீமத் ராமானுஜாசார்யர்:—மூன்று தனி வஸ்துக்களாகிய சித், அசித், ஈசுவரன் என்பவை இருக்கின்றன, இவைகளுள் சித்தாகிய மனிதன், அசித்த நான் என்ற அகங்காரம், இரண்டையும்மறந்து ஈசுவர ஞாபகத்தில் (வைகுண்டத்தில் ஈசுவரன் முந்நிலையில்) பெருநெருப்பிலிருந்து வரும்பொறி எவ்வாறு அதன் பாகமாகியும் நெருப்பால் பரவப்பட்டும் இருக்கிறதோ, அவ்வாறே தானும் பரமாத்மாவால் பரவப்பெற்ற அவரதுபாகம் என்று ஆனந்தித்துக்கொண்டிருப்பதேபரமபதம் என்பர். த்வைத ஆசாரியராகிய ஸ்ரீமத்வாசாரியர்:—முன்னர் எடுத்துக்கூறிய மூன்று பொருள்களும் தனித்தனியே இருப்பவை, ஓர் சித்தாகிய ஜீவன் அபாரசக்திமானாகிய ஈசுவரனது தாஸன் என்ற மாறா உணர்ச்சியுடையவனாகி அந்நிலையில் நிலைபெறுவதே பரமபதம் என்பர். இவ்வாறு இவர்கள் முன்னுள்ள ஸித்தாந்தங்களைக் கைக்கொண்டு இந்த முடிவிற்குத் தகுந்த வேத வாக்கியங்களைத் தமக்கு ஆதாரமாகக் காட்டி தம் நிலையை உறுதிப்படுத்துகின்றனர்.

இவர்கள் கூறும் முடிவுகள் பேதப்பட்டிருந்தபோதிலும் இவர்களுக்கு அநேக விஷயங்களில் ஒற்றுமை உண்டு. எல்லோரும் தத்வமஸி என்றது போன்ற வேதங்களில் காணப்படும் மஹாவாக்கியங்களையே முடிவாகக்கருதி வ்யாக்யானம் செய்கின்றனர். எல்லோரும் தோற்றமான விஷயம் வரையில் ஜகத், ஜீவன், பரன் ஆகிய மூன்றையும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். கர்மத்தால் பந்தம் உண்டாகின்றது என்றும் அநேக ஜன்மங்களில் செய்யப்படும்பகவத்பக்தி, ஸத்கர்மங்கள் ஆகிய இவைகள் பந்தத்தை நீக்க ஸஹாயமாகும் என்றும், பந்தம் முற்றிலும் விடுபட முமுக்ஷுக்கள் மூன்று நிலைகள் மூலமாகப்போகவேண்டும் என்றும், அவைகளுக்கு ஏற்ப பிரஸ்தானத்திரயங்கள் மூன்று இருக்கின்றன என்றும், எண்ணுகின்றனர். அவர்கள்

கூறும் பிரஸ்தானத்ரயங்கள் பின்வருவன.

1. பகவத்கீதை.—இது பாரதம் பீஷ்மபர்வத்தில் கிருஷ்ணபகவானால் யுத்தம் செய்யப் பின்னடைந்த அர்ச்சுனனுக்குத் தைர்யம் வருவதற்காகக் கூறிய சிறந்த உண்மைகள் அடங்கியது. இது உபநிஷத்துக்களின் ஸாரமாதலால் இதை முமூக்ஷு முதல் நிலையில் படிக்கவேண்டியது.

2. உபநிஷத்துக்கள்.—இவை கீதாவிஷயங்களை விஸ்தாரமாக எடுத்துக் கூறுபவை. இவை இரண்டாம் நிலைக்கு ஏற்றவை.

3. பிரம்மஸூத்ரம்.—இதற்கு சாரீரகமீமாம்ஸம் என்று ஓர் பெயருமுண்டு. இது வேதவியாஸரால் உபநிஷத் விஷயங்களைத் தொகுத்துச் சுருக்கமாகக் கூறப்பட்ட அட்டவணை. இது மூன்றும் நிலையில் சிஷ்யனுக்கு மனனம் நிஷ்டை இவைகளுக்கு உபயோகமாவது.

ஓம் என்ற பிரணவ மந்திரத்திலும் காயத்ரீ மந்திரத்திலும் வேதஸாரம் அடங்கியிருக்கிறது என்று எல்லா ஆசார்யர்களும் அங்கீகரிக்கின்றனர்.

இப்பொழுது முற்கூறிய நான்கு நிலைகளும் வேத ஸம்மதமானவை என்பது விளங்கும். இப்படி இருப்பினும் இவைகள் ஒவ்வொன்றிற்கும் விரோதமான வாக்கியங்கள் வேதத்தில் காணப்படுகின்றன. அவைகளுக்கு அர்த்தம் கூறுங்கால் ஒவ்வொரு ஆசாரியரும் தாம் எடுத்துக்கொண்ட நிலைக்கேற்ப அவைகளைப் பொருள் படுத்துகின்றனர். இவர்கள் பொருள் படுத்தும் விதங்களை உற்று நோக்கில், நிஷ்பக்ஷபாதமாகப் பார்க்கும் ஒருவனுக்கு இவர்களுள் இன்னோர் கடைப்பிடித்த நிலையே வேதநோக்கத்திற்கு நன்றாகப் பொருந்தியது என்பது அவர் பண்ணும் விசித்திர அர்த்தங்களின் பொருத்தங்களிலிருந்து வெளியாகும். இப்படிப் பார்த்ததில் இக்காலத்தவர்களில் அநேகர் ஸ்ரீமத்வாசாரிய ஸித்தாந்தப்படி வேதம் முழுவதையும் பொருள்படுத்துவது பெரும்பாலும் பொருந்தாது என்றும், ஸ்ரீராமானுஜாசாரியர் ஸித்தாந்தப்படிப் பொருள்படுத்துவது பெரும்பாலும் பொருந்தியபோதிலும், சில முடிவான முக்கிய வாக்கியங்களுக்கு அவை பொருந்தாவென்றும், நீலகண்ட சிவத்தினது அர்த்தமும் சற்றேறக்குறைய இதேமாதிரி என்றும், ஸ்ரீமத் சங்கரரதுபொருள் ஸ்ரீமத்ராமானுஜாசாரியர் ஆதாரமாகக்காட்டும் அநேகவாக்கியங்களுக்கு இசைந்தும் அவர் அர்த்தங்கள் பொருந்தாத வாக்யங்களுக்கு மிகநன்றாகப் பொருந்தியும் இருக்கின்றன என்றும், சிற்சில இடங்களில் மாத்திரம் இவரது அர்த்தம் முற்றிலும் பொருந்தாமல் காணப்படும் என்றும், அபிப்பிராயப்படுகின்றனர். ஸ்ரீமத்சங்கராசாரியர் பாகுபாடாகிய பரவித்தை அபரவித்தை என்பதைப் பின்பற்றி நோக்கில் ஸ்ரீமத் சங்கரர் ஒருவருக்குத்தான் வேதத்தை அதிகமாக ஒடிக்காது நேராக அர்த்தம் பண்ணமுடியும் என்றும், இப்படி அர்த்தம்பண்ணினால் முற்கூறிய மற்றைய மூன்று நிலைகளுக்கு ஓர்வித சிறப்பு உண்டாக இடமிருக்கின்றது என்றும், இக்காலத்தில் அநேகப்பெரியோர்கள் அங்கீகரிக்கின்றனர். ஆகவே சங்கரர் எல்லா நிலை பேதங்களையும் ஒப்புக்கொண்டு அவை வேதத்தில் கூறும் அபரவித்தைகள், வேதத்தில் இவைகளைவிட மேலானதாயும், இவைகள் கொண்டு சேர்க்கும் முடிவாயும் உள்ள அத்வைதநிலை என்னும் பரவித்தை ஒன்றிருக்கிறது, அதுவே வேதமுடிவு என்று கூறுவதால், அவர் செய்த விசித்திர அர்த்தங்களின் ஸஹாயமின்றியே அவர் ஸித்தாந்தந்தான் முடிவானது என்பது எல்லோருக்கும் விளங்கும். ஸ்ரீமத் சங்கரர் எடுத்துக் காட்டிய முடிவை பலர் பலவிதமாக உலகவிஷயங்கள் முதலியவைகளைக்கைக்கொண்டு ஆக்ஷேபித்து, மற்றைய மூன்றுநிலைகளை முடிவுநிலைகள் என ஸ்தாபிக்கமுயலலாம். ஸ்ரீமத் சங்கரர் கூறும்நிலை ஞான காண்ட முக்கிய பாகங்களில் உள்ளது, அதை அங்கீகரிக்க மற்றைய நிலைகள் இல்லை என்று ஸ்தாபிக்கவேண்டியது அனாவசியம்.

REGISTERED 13 JUN 1910 MADRAS

அது ஸ்வபாவத்திலேயே மேலானது, அனுபவத்தால் நேரிட அறியக்கூடியது, வாதத்தால் கலைக்க முடியாதது, அதை அங்கீகரிக்கின் மதத்துவேஷம் மூர்த்தி துவேஷம் முதலிய கெட்ட குணங்கள் ஒருவனை அணுகா, அந்த நிலையே நமது ஸநாதனதர்மத்தின் விரவிற்குப் பொருத்தமானது. மற்றைய மூன்று நிலைகள் முடிவில் இந்நிலைபோலத் தோன்றும், என்பவைகளை ஒருவராலும் எவ்வித யுக்தியாலும் மறுக்கமுடியாது.

ஆகவே ஞானகாண்டவழியும் முடிவும் யாவை என்றகேள்விகளுக்குப்பதில்பின்வருவன. பலபெரியோர்கள் அபிப்பிராயப்படி ஞானகாண்டமுடிவு பிரம்ஸத்யம் ஜகத்மித்யா. இதை உள்ளபடி உணர்ந்து நிலைபெறுவதற்கு மற்றை ஆசார்யர்கள் கூறும் நிலைகள் யாவும் அவசியமான படிகள். அவைகளை நம்மைப்போன்ற ஸாதாரண ஜனங்கள் பின்பற்றுவிடில், வேதசிகையின் முடிவு அவர்களை மீளாத்துயரத்துக்கு ஆளாக்கும். ஆகவே தகுந்த உபாஸனைகள் ஸித்தாந்தங்கள் மூலமாக மனிதனைப் பரம்பொருளாகி நிற்கும்படி செய்வதே ஞானகாண்டத்தின் நோக்கம். இதைச்சிலர் அத்வைத ஸம்பிரதாயப்படி ஞானகாண்டமுடிவே ஒழிய வேறல்ல என்று ஆக்ஷேபிக்கலாம். இந்த முடிவே உபநிஷத்துக்களின் இறுதியில் காணப்படுவதால் இங்கு எடுத்துக்கூறப்பட்டது. எல்லாமதஸ்தர்களுக்கும் ஸம்மதமாக இருக்கும்படி பொதுவாகக்கூறின் தகுந்த உபாஸனைகள் மூலமாகப் பரமார்த்தமாகிய பரமபத நிலையை மனிதன் அடையும்படி செய்தலே உபநிஷத்துக்களின் நோக்கம், என்று கூறலாம். இதில் பரமபத நிலை என்ற தொடரை ஒவ்வொரு மதஸ்தர்களும் தத்தம் முடிவுக்கேற்பப் பொருள்படுத்திக்கொள்வர்.

இனிப் பின்வரும் ஸஞ்சிகைகளில் 10-முக்கிய உபநிஷத்துக்களின் ஸாரபாகத்தை எடுத்து எழுதுவோம்,

நூல் பயிற்சி

STUDY OF LITERATURE

"கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை"

இந்தச் செய்யுளுக்குப் பொருள் எழுதிய பரிமேலழகர் "உம்மைக் கற்கவேண்டு மென்பதுபடநின்றது" என்று குறிப்பாகச் சொல்லி முடித்தார். கற்கவேண்டியது ஒவ்வொருவனுடைய கடமையென்பதே இதன் கருத்து. அப்படிக் கல்வியில்லாதபோது பெரியோர் பாற்சென்று கேட்டாயினும் உறுதி பயப்பதாகிய பொருள்களை உணர்ந்தொழுக வேண்டுமென்பது இங்கே வற்புறுத்தப்பட்டது. அப்படிக் கற்பதுதான் பாஷையைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ள ஸாதகமாகு மென்பது நிச்சயம்.

அநேககாலமாகப் பாஷையைப்படிப்பது உபயோகமா, அல்லது, தொழில்செய்வதற்கு மிகவும் ஸாதகமாகவுள்ள கருவிநூல்களை மட்டில் கற்பது உபயோகமா என்ற சந்தேகம் பலருக்கிருந்தது. இவ்விஷயத்தில் பல தேசங்களிலும் கற்றறிந்த பெரியோர் தமக்குத் தோன்றியுள்ளகருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். பார்க்கப் போனால் ஒருவன் எந்தெந்தப் பிரயோஜனத்தை நாடிக் கல்வி கற்க முயற்சி செய்கிறானோ அதைப் பொருத்தே அவன் படிக்கவேண்டிய நூல்களையுந் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது புலப்படும். எனினும் பாஷாஞான மிருந்தால் நன்னடக்கை, உண்மை, நன்றியறிதல் முதலிய நற்குணங்களின் கருத்தும், அவற்றின் மேம்பாடுந் தெளிவாகத் தெரிவதோடு, பதார்த்தங்களைப் பகுத்தறியும் சக்தியும், தன்னுடைய குற்றக்குறைபாடுகள், பிறருடைய தோஷங்கள், முதலியவைகளை அப்போதைக்கப்போது தெரிந்து, அதற்கேற்ப நல்வழியில் நடக்க ஊக்கமும், ஒருவன் அடைவானென்று நூலாராய்ச்சி செய்தப் புலவர்கள்

எல்லாரும் திடமாகக் கூறுகின்றார்கள். நமது தேசத்தில், சாதாரணமாக வழங்கிவரும் பழைய கதைகளுள், உண்மையைச் சோராது காப்பாற்ற வேண்டுமென்று தனக்கு ஒரு பெரியவர் உபதேசித்த விஷயத்தை எக்காலத்திலும் மனத்துட்கொண்டு அதன்படி நடந்துவந்த கள்வனொருவனும்மந்திரியாய்விட்டானென்பதும், இன்னும் இதைப்போன்ற சில நல்லபழக்கங்களாலும் குற்றமற்ற ஒழுக்கங்களாலும், பலர் தாழ்ந்த நிலைமையினின்றும் உயர்ந்த பதவிக்கு வந்திருக்கிறார்களென்ற அநேக சரித்திரங்களும், எல்லோருக்குந் தெரிந்திருக்கலாம். ஆகவே வியாபாரத்துக்கு ஏதாவது மூலதனம் வேண்டியது அவசியமாவது போலவே, ஒருவன் வாழ்நாட்களைக் கௌரவமாய்க் கழிக்க நற்குண நற்செய்கைகள் முக்கியமாகத் தோன்றும்.

இவ்விதம் நல்ல பழக்கங்களைக் கைக்கொள்வதற்கும், மனம், வாக்கு, காயம் என்ற மூவிடத்தும் பரிசுத்தகுணம் மேம்பட்டு விளங்குவதற்கும், நமது முன்னோர்களுடைய சரித்திரங்கள், அவர்களுடைய நடவடிக்கைகள், முதலியவை யாவும் நாம் நன்றாயறிய வேண்டுமென்பது நன்கு விளங்கும். ஆதலால் பாஷா ஞானம் அத்துணைச் சிறந்ததல்லவென்றும், தொழிலுக்கு உபயோகமாகவுள்ள கருவிநூல்களைக் கற்பதே போதுமானதென்றுங் கூறுவது பிழையாகும். இதனால் ரஸவாதம் முதலிய உபயோகமான ஸாதகசாஸ்திரங்களைக் கற்கக்கூடாதென்றாவது அல்லது அவைகளைக்கற்பது குறைவென்றாவது சொல்ல வரவில்லை. எந்தத்தேசத்திலும் தொழிற்பயிற்சி மிக்கிருக்கவேண்டியது பொதுஜன நன்மைக்கு அவசியம். இந்தியாதேசத்திலோ இப்படிப்பட்ட தொழிலபிவிருத்தி நாளுக்கு நாள் மேம்பட்டு வரவேண்டுமென்றே எல்லோருக்கும் கருத்துள்ளது. ஆயினும் வெகுகாலமாக நமது தேசத்தில் பாஷா ஞானமும் தொழில் முயற்சியும் ஒன்றுக்கொன்று சாதகமாகவே பழக்கத்தில் வந்ததாகத் தெரிகிறதே தவிர, இவ்விரண்டனுள் ஒன்றுதான் மேன்மையுள்ளது, இன்னொன்று தாழ்ந்தது என்ற விவாதம் ஒருபோதும் இருந்ததேயில்லை. முழுமையும் யோசியாதவர்களே நமது பெரியோர்கள் உலகத்தில் பணம் முக்கியம் என்ற கருத்தைத் தெரிந்துகொள்ளாமல், மோக்ஷத்தையே நாடிக் கொண்டிருந்தார்களென்று சொல்லுவார்கள். "வைகறையாமந் துயிலெழுந்து தான் செய்யும், நல்லறமும் ஒண்பொருளுஞ் சிந்தித்து" என்று தொடங்கிய செய்யுளில் உள்ளகருத்து மிகவும் இக்காலத்தில் பாராட்டற்கு உரியது. ஒவ்வொருவனும் தன் குடும்ப ஸம்ரக்ஷணைக்காகவும், இன்னும் தான் அவசியம் செய்தே தீரவேண்டிய கடமைகளாகிற தருமங்களைச் சரிவரச்செய்து முடிப்பதற்குமாகப் பொருள்தேடவேண்டுமென்றே, நமது முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது பற்றியே "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்று சுருக்கமாக இந்த அறிவு நமக்குப் புகட்டப்பட்டிருக்கிறது. இன்னும் தமிழகத்துக்கு ஓர் திலகம்போல் விளங்கும்பரமஉபகாரியாகிய மகா மகோபாத்தியாயர் ம-ள-ள-ஸ்ரீ சுவாமிநாதய்யரவர்கள் அருமையாகத் தேடி நமக்கு அச்சிற்பதிப்பித்துதவியுள்ள மதுரைக் காஞ்சியென்ற சங்கச் செய்யுளில், விடியற்கால வருணனையைப் பலவாறு சொல்லும் கவி, இல்லறத்திலிருக்கும் ஒவ்வொருவனும், தான் அன்று தேடவேண்டிய பொருளைக் காலையில் நினைத்துக் கொண்டு எழுந்தான் என்று சொல்லியிருக்கிறார். செல்வம் நிலையில்லாதது என்றும், பொன்னும் மண்ணும் ஒன்றுதான் என்றும், நமது பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்களென்றால், பொருளைப் பிறருக்குபயோகமாக்க வேண்டுமென்றும், இக்காலத்திலிருப்பவர்களைப் போல, அதில் விசேஷ அபிமானம் வைக்கக்கூடாதென்றும், அப்படி அபிமானித்தல் பிறருக்கு மனதின் நிம்மதிக்குந் தூய்மைக்குமிடையூறாகி விடுமென்றும், நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கவே அப்படிச் சொன்னார்களென்று கொள்ளவேண்டும். இப்போது மேனாட்டில் பிரபல சீமானான கார்னேகி யென்பவர் "கோடீச்வரனாக இறப்பவனைப் பிறர் மதிக்கமாட்டார்கள்" என்ற சுருக்கமான கருத்தால் மேற்கூறிய உண்மையைத் தான் விளக்கினார்.

இவ்விதமாகப் பாஷையைப் படிப்பதால் செல்வத்தின் பெருமை, அதன் உபயோகம் முதலியவை தெரிவதோடு, அதைச் சம்பாதிக்கவேண்டிய முறைகளும், ஒவ்வொருவனும் தன் குடும்பத்தை நல்ல ஸ்திதியில் வைத்துக் கொள்ளவேண்டு மென்ற தருமமும் நன்கு விளங்கும். இக்கருத்து அடியில் உள்ள குறளால் தெரியும்.

"நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்"

எனவே தொழிலபிவிருத்தியில் மனதைப் பூர்ணமாய்ச் செலுத்துவதோடு, பாஷையினபிவிருத்தியிலும் கவனிக்கவேண்டியது அவசியமாகின்றது. பாஷாபிவிருத்தியென்றால், சிலர் பாஷையைத் தாங்கள்தான் சீர்திருத்த வேண்டுமென்று தொடங்குகின்றார்கள். அவ்விதந் தொடங்கி தமக்குள்ள பாஷா ஞானமே பிறருக்கும் உள்ளதென்று நம்பி, ஆங்கிலம், வடமொழி முதலிய பாஷைகளிலிருந்து தமக்குச் சுலபமாய்ப் பதங்கள் வருவதால், அம்மாதிரியே யாவரும் உபயோகிக்கவேண்டுமென்றும், அக்கருத்துக்கிணக்கமாய்ப் பல புத்தகங்களை எழுதி வெளியாக்கிவிடவேண்டுமென்ற எண்ணத்துடன், தமக்குத் தெரியாததொரு நெறியில் பிரவேசித்து விடுகிறார்கள். வேறு சிலர், புத்தகங்கள் எழுதினாலன்றிப் பாஷையிலுள்ள நயம் தமக்கும் பிறருக்குந் தெரியாதென்று நினைத்துவிடுகிறார்கள். கிராமவாசிகளின் தமிழ்க் கல்வியை நன்றாய்த் தெரிந்துகொள்ளாத பலர், தாம் பேசுவதுபோலவே யெழுதத் தலைப்பட்டு இதுதான் எளிய நடையென்று சொல்லுகிறார்கள். இதற்கெல்லாங் காரணம் என்னவெனின், பாஷாபிவிருத்தியென்ற சொற்றொடரின் பொருள் தெரியாமையாம். ஒவ்வொருவனும் தான் பாஷையைக் கற்றுத் தன்னை விருத்திசெய்துகொள்ளவேண்டுமென்பதே இச்சொற்றொடரின் கருத்தாகக் கொள்ளவேண்டும். பலர் கற்றால்தான், பாஷை யெல்லோருக்குந் தெரிந்து விருத்தியாகுமேயல்லது ஒவ்வொருவரும் தாம் தாம் பேசுவதுபோலவே யெழுதத் தலைப்பட்டுப் பல திசைச்சொற்களைச் சேர்த்து விடுவார்களானால் பாஷை சீர்திருத்தமடையுமென்பது பகற்கனவாகும்.

ஏராளமாகப் புத்தகங்கள் எளிய நடையிலும் உயர்ந்த நடையிலும் ஏற்கனவே எழுதப்பெற்றிருக்கின்றன. சிந்தாமணி, சிலப்பதிகாரம், குறள் முதலிய உயர்ந்த கிரந்தங்களும், வெற்றிவேற்கை, நன்னெறி முதலிய எளிய நடையில் எழுதப்பட்டுள்ள அறிவு புகட்டும் நூல்களும், தமிழ்ப்பாஷையில் அநேகம் இருக்கின்றன. இவற்றைக் கற்றுத் தெரிந்துகொள்ள யாவரும் முயற்சி செய்யவேண்டும். கடவுள் சிருஷ்டியில் மனிதன் உயர்ந்த பொருளாயிருக்கிறான். அவன் மூளையும் இடைவிடாது ஏதாவது ஒரு தொழிலில் பிரவேசிக்கக்கூடியதே. ஆகவே, வேறு ஒன்றுமில்லாதபோது சாதாரண மனிதர்கள் "வெறுங்கோட்டி" நிரப்பி ஏதாவது வம்பு பேசியாவது பொழுது போக்குவார்களேயொழிய, சும்மாவிருப்பது யோகிகளுக்குத்தான் கூடும். இவ்விதமாகப் பிரயோஜனமற்ற சொற்களையே சொல்லிக்கொண்டு காலம் போக்குவதில் கிராம

வாசிகளுக்கு நகரவாசிகள் தோற்றவர்களில்லை. ஜான் மோர்லீ துரையவர்கள் பாஷையைப் பற்றிச் (Morley's Studies in Literature) செய்துள்ள உபந்நியாஸமொன்றில் வருஷ வரும்படியில் ஆயிரத்தி லொரு பாகங்கூட புத்தகங்களில் செலவழிக்காதவர்கள் அநேகர் இருக்கிறார்களென்றும், காலம் போவதை யெண்ணி தினம் அரைமணி நேரமாவது ஒருவன் படித்தால் ஒரு வருஷத்தில் எவ்வளவோ படித்து விஷயங்கள் தெரிந்து கொள்ளலாமென்றும், ஆன்மாவுக்கு உறுதி பயப்பதும், வாழ்நாளைக் கழிப்பதில் நமக்குத் தெரியவேண்டிய பொதுவிதிகளைச் சொல்லக் கூடியதுமான பழைய நூல்களை ஒவ்வொருவரும் படிக்கவேண்டு மென்றும் பல நியாயங்களுடன் சொல்லியிருக்கின்றார்.

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனில்லாச் சொல்"

என்று திருவள்ளுவர் எடுத்துக் கூறுவது போல உபயோகமற்ற வீண் வார்த்தைகளைத் தவிர்த்துப் பாஷாபிமானம் மேலிட்டு வருவதே நன்மை பயப்பதாகும். பாஷாஞானம் அறிவின் முதிர்ச்சிக்கும், மனத்திண்மைக்கும், நன்னடக்கைக்கும் ஆதாரமாகுமாதலால் அதை யொவ்வொருவருங் கைக்கொள்ள வேண்டும். இவ்விஷயமாக மேற்கூறிய ஜான் மோர்லீ பிரபு அடியில் வருமாறு சில வருஷங்களுக்கு முன் சொல்லியிருக்கிறார். "நான் இப்போது சொல்ல வந்தது நீங்கள் பணத்தில் ஆசைவைக்கக்கூடாதென்றல்ல; அல்லது பலர்கூடிப்பேசி ஆனந்திப்பது, அயல்வீட்டுக்காரர்களுடன் அளவளாவுதல், முதலிய பல சௌகரியங்களைப்பற்றியும் கூட்டுறவினாலடையும் பயனைப்பற்றியும் இழித்துக் கூறவும் எனக்கு மனமில்லை. ஆனால் எல்லாப் பொருள்களுள்ளும் மேலானதாக நினைக்கப்படும் நிம்மதியாகிய இன்பமடையவும், தருமம், கடமை முதலிய குறைவின்றி நிலைபெறவும், முக்கியமாக ஒருவனுக்கிருக்க வேண்டியவை யிரண்டுள. அவை யாவன; மூதறிவும், நடுவுநிலைமையும். பிறவற்றினும், பாஷாஞானமே இந்த இரண்டு வஸ்துக்களும் நமக்கு எளிதில் கிட்டும்படி செய்கிறது. ஆகையால் நீங்கள் பாஷாஞானத்தை யபிவிருத்தி செய்ய முயற்சிக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றார்.

ஸி. பி. வேங்கடரமண அய்யர், பி.எ

முக்கியமானதை முதலிற் செய்.—பிரதிதினமும் நாம் செய்யவேண்டிய பலதொழில்களையும் சீர்தூக்கிப் பார்ப்போமேயானால் அவைகளில் சில வெகு முக்கியமானவைகளாகவும் மற்றவைகள் சாதாரணமானவைகளாகவும் காணப்படும். எவை முக்கியமானவைகளோ அவைகளைத்தான் நாம் முதலில் செய்யவேண்டும். சிலர் அவ்வண்ணம் நடந்து கொள்ளாமல் சாதாரணமானவைகளை முதலில் செய்வார்கள்; அப்புறம் கை, கால், புத்தி, இவைகளெல்லாம் ஓய்ந்தபிறகு முக்கியமானவைகளை ஆரம்பித்துத் தயங்கி நிற்பார்கள். இதன்றி, சிலர் எப்பொழுதும் சாதாரணமானவைகளையே முதலில் ஆரம்பித்துச் செய்வார்கள். இது இவர்களுடைய புத்தியும் சாதாரணமென்று வெளிக்காட்டுவதுபோலாம். எத்தொழிலால் தங்களுக்குப் பொன்காசு கிட்டுமோ அத்தொழிலை விட்டு விட்டுப் பித்தளைக் காசுகிட்டும் ஒரு சாதாரணத் தொழிலை எவனாவது செய்வானோ? இவ்வாறான பழக்கத்தில் நாம்விழாமல் நம்மைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்.

நீ எந்தக் கருமத்தைத் தொட்டாலும் அதை முதலில் முடித்துவிட்டு மற்றவைகளை ஆரம்பி. அநேகமாய் முடிந்துவிட்டதென்று ஒரு காரியத்தை விட்டுவிட்டு மற்றதை ஆரம்பிக்காதே. அது அநேகமாக முடிந்தபோதிலும் முற்றிலும் முடியவில்லையல்லவா? முக்கியமானதை முதலில் செய்து மற்றவைகளைப் பிந்திச் செய்வதும், தொட்ட காரியத்தை முற்றிலும் முடித்துக்கொண்டு மற்ற காரியங்களில் புகுவதும், நம்முடைய உறுதியையும், எல்லாக் கருமங்களையும், முடிக்கும் சக்தி நம்மிடமிருப்பதையும் வெளிக்காட்டுகின்றன. நீ தொட்ட காரியங்களில் ஏதாவதொன்றை நிறுத்தும்படி வந்தால், அது நீ உத்தேசித்த காரியங்களில் வெகு சொல்பமானவையாகவிருக்கட்டும்.

பண்டித-நடேச சாஸ்திரி.

ஸம்பாஷணை குறிப்புகள்

HINTS ON CONVERSATION

கல்வி கேள்விகளிலும் அநுபவத்திலும் மிகத் தேர்ச்சி பெற்றவரான ஒருவர் தன் மகனுக்கு வேண்டிய பல நீதிகளை உபதேசித்திருக்கிறார். அவற்றுள் முக்கியமான சிலவற்றை இதனடியில் எடுத்தெழுதுவோம்:—

ஒரு சங்கத்தில் நீ போய் உட்கார்ந்தால் அடிக்கடிப்பேசவேண்டியதாக நேரிடும். நேரிட்டால் ஒவ்வொரு தடவையும் நீடித்த காலம் பேசாதே. அப்படி நெடுநேரம் பேசாமலிருக்கும் பக்ஷத்தில் ஒருகால் உன் பேச்சு ஜனங்களுக்கு உவப்பாயிராவிடினும் சங்கத்திலிருப்பவர்கள் உன் பேச்சைக்கேட்டுச் சலித்துப்போகாமலிருப்பார்கள். இது ஒரு பெரிய காரியமல்லவா?

நீ ஒரு சங்கத்துக்குப்போய் சேர்ந்தவுடன் அங்கு நடக்கும் நடத்தை, குணம், இவைகளை முதலில் நன்றாய் அறிந்துகொண்டு பேசத் தொடங்குமுன் உன் மனதில் வெளியிடச் சில அபிப்பிராயங்களிருக்கலாம். சங்கத்தில் உன்னைச் சாதாரணமாகப் பேசுகிறவனென்று எண்ணுகிறவர்களைப் பார்க்கிலும் விகல்பமாய்ப் பேசுவதாக எண்ணுகிறவர்களே எப்பொழுதும் மிகுதியாய் இருப்பார்களென்று நீ எண்ணி நடக்கவேண்டும். நீ செய்யும் நிந்தைகள் அவர்களுக்கு எவ்வளவு உயர்ந்ததாயிருப்பினும் அவைகளை அவர்கள் விரும்புவார்களா? ஆகையால் சில நற்குணங்கள் சிறிதும் ஒரு சங்கத்திலில்லை யென்பதை நீ முன்னமே அறிந்திருப்பாயானால் அவ்வித நற்குணங்களைப் பற்றிய பேச்சை நீ எடுக்கக் கூடாது. அதுபோலவே யாரிடமாவது ஒரு துற்குண மிருப்பதாய் உனக்கு நிச்சயமாகத் தெரிந்தால் அதைப்பற்றியும் வாயைத்திறக்கலாகாது; ஏனெனில் நீ அவைகளைப் பற்றி என்ன தான் பொதுவாய்ப் பிரசங்கித்தாலும் யாரிடத்தில் இவைகளின் பொதுநிலை மிதமோ அவர்களெல்லாரும் தங்களைப் பற்றியே நீ நோக்கம் வைத்துச் சொல்வதாக எண்ணுவார்கள். இவ்விதமான எச்சரிக்கைகளை நீ உனக்கே உபயோகப்படுத்திக்கொண்டு, வேறு யாராவது பேசும்பொழுது உன்னைக் குறித்தே பேசுவதாக நீசந்தேகப்படக்கூடாது.

பேசும்பொழுது பேச்சின் மத்தியில் அடிக்கடி வேறு விஷயங்களைக் கொண்டுவராதே. அந்த விஷயங்கள் வெகு சுருக்கமாயும் ஸந்தர்ப்பத்தை நன்றாய் ஒட்டினதாயுமிருந்தால் மாத்திரமே அவைகளை நீ சொல்லலாம்; அடிக்கடிக் கிளைக்கதைகளைச் சொல்வது, நீ கேட்டுக் கொண்ட சங்கதியைப்பற்றி மிகுதியாய்ப் பேச யோக்கியதை இல்லாததை வெளியிடுவதாகும்.

நீ சொல்வதை ஜனங்கள் அதிக ஆவலுடன் கேட்கவேண்டுமென்று உனக்கு இஷ்டமிருக்கும்பக்ஷத்தில் அவர்களைக் கையைப்பிடித்து உட்காரவைக்காதே. எப்பொழுது அவர்கள் ஆவலுடன் கேட்கவில்லையோ அப்பொழுதே நீயும் வாயை மூடவேண்டியதுதான்.

சிலபேர்கள் நீடித்துப் பேசுகிறவர்களாயிருப்பார்கள். அப்படி அவர்கள் நீடித்துப் பேசிக்கொண்டிருக்க உனக்கு இஷ்டமில்லாவிட்டால், உன் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவர்கள் காதில், குசுகுசு என்று மாத்திரம் ஓதாதே. அப்படிச் செய்வாயாகில் அதைவிடப் பேசுகிறவனுக்கு அதிகமான மனவருத்தம் வேறொன்று மிராது. பேச்சென்பது எல்லாருக்கும் பொதுவான ஆஸ்தியாம். ஒரு சமயத்தில் ஒருவன் புண்ணியவசத்தினால் இந்த ஸம்பத்தை அடைந்திருந்து வாயைத்திறந்து விட்டானானால், நீ மரியாதையாய்க் காது கொடுத்துக் கேட்கவேண்டுமேயன்றி நீ அப்பிரியப்பட்டதாய் காட்டக்கூடாது. அவனிஷ்டப்படி நீ சாந்தமாய் உன்மட்டில் காது கொடுத்துக் கேட்கும் பக்ஷத்தில் பேசுகிறவனுக்கு உன்னிடத்தில் அளவில்லாத பிரியமிருக்கும். அப்படியில்லாமல் அவன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது நீ எழுந்துபோவதனாலாவது, அல்லது வேறு எவ்விதத்தினாலாவது, அவன் சொல்லுவது உனக்குப்பிரியமில்லையென்று காண்பிப்பாயாகில், அதைவிட அவனுக்கு அவமரியாதை வேறில்லை.

பண்டித நடேச சாஸ்திரி.

துர்க்கவதி ராணியர் வீரத்தன்மை

RANI DURGAVATI: HER HEROISM

வீரத்தன்மை சிரேஷ்டம் என்பர்; அதையுடைய வீரரைச் சாமான்னியராக நினைத்தல் கூடாது. சாதாரண பரகதியினும் சிறந்த பரகதிக்குரியவராவர் அவர். ஆண்பாலரான வீரரைப்பற்றிக் கொண்டாட வேண்டியதாயிருக்க வீரத்தன்மை காட்டிய பெண்பாலரான அரசியர்களை, எவ்வளவுதான் புகழக்கூடாது.

தலைப்பில்கண்ட ராணிதுர்க்கவதி என்னும் புண்ணியவதியும், இத்தகையனர் என்பது கீழ்கண்ட விவரங்களால் தெளிவுறும்.

நாகபுரத்திற்கு வடமேற்குப் பிராந்தியத்தில், நர்மதை ஆறு உற்பத்தியாகிற மேட்டு நிலத்தில், மத்யமாகாணங்களும், மத்திய இந்தியா கார்ய நிர்வாஹ நாடுகளும் கலந்து மயங்கும் பாகத்தில் காண்ட்வானு, என்னும் பிராந்தியம் உண்டு. அவ்விடத்து ஜனங்கள், காண்டர் எனப்படுவர். இங்கே கர்க் என்னும் பழையபட்டணம் இருந்தது;—கர்க-மண்டலர் என்னும் அரசவம்சத்தினர் துரைத்தனம் செய்து வந்தனர்.

கி. பி. 358ல் ஜாதுராவ் அரசரானார். இவர்க்குப் பின் 40-வது அரசர் ஸங்கராம்-ஸா என்பவர் சுமார் 50 வருஷம்வரை அரசுநடத்தி கி. பி. 1530ல் இறந்தார். அப்பொழுது டெல்லி நகரத்தில் பேபர் ஆளத்தொடங்கிய காலம். ஸங்காராம ஸாகுமாரர் ஆமன்-தாஸ் சொல்பகாலம் துரைத்தனம் நடத்தி இறந்து விட்டார். இறந்தபின் அவர் குமாரர், தளபதி-ஸா என்றவர் சிங்காசனம் ஏறினர். ஏறும்பொழுது கல்யாணமாகாத சிறுவராயிருந்தார். பக்கத்தில் மோஹோபா (Mohoba) என்னும் மற்றொரு இராஜதானியில், துர்க்கவதி என்னும் இராஜகுமாரி, கல்யாணத்துக்குத் தகுதியான பருவம் அடைந்திருந்தாள். இவள் விசேஷ ரூபவதி எனப்பெயர் பெற்றிருந்தாள். இம்மாதை விவாகம் செய்துகொள்ள, தளபதி-ஸா எண்ணங்கொண்டு, அவர் தரபில் வதுவைப் பேச்சு விட்ட காலத்தில் தாழ்ந்த குலம் என்றும், வேறு நிச்சயம் நிறைவேறிவிட்டதென்றும், பெண்ணுக்குத் தகப்பனார் அப்பேச்சை ஆதரிக்கவில்லை. அக்கன்னியர்க்கு மாத்திரம் தளபதி-ஸாவை அடையவேண்டுமென்று இச்சை இருந்தது. அதன்பேரில் தண்டு எடுத்து வந்து தகப்பனாரை யுத்தத்தில் வென்றே, தன்னை மணம் செய்துகொள்ள வேண்டுமென்று, துர்க்கவதி இராஜக்கன்னிகை தெரிவித்ததின்பேரில், தளபதி-ஸா அப்படியே சண்டையில் கன்னிகையைக்கொண்டுபோய் விசேஷ உற்சாகமாக செலவுகளுடன் மணம் செய்துகொண்டார். நான்கு வருஷத்துக்குள் பீர் நாராயணர் எனபுத்திர சந்தானம் உண்டாய் தளபதி-ஸா காலகதி அடைந்தார். தம் குமாரர் இளம் பிராயமாயிருந்ததைப் பற்றித் துர்க்கவதி ராணியர் தாமே ராச்சிய பரிபாலனம் ஒழுங்காயும் வலிமையாயும் நடத்தி வந்தனர். துலுக்க ராணியர்களால் (Begums of Bhopal) செம்மையாய் இக்காலத்தில் ஆளப்பட்டு வருகிற போபால் நாடு, துர்க்கவதியரால், ஜெயிக்கப்பட்டு, கர்க-மண்டல இராச்சியத்தில் சேர்க்கப்பட்டது. ஜப்பல்பூர் என்ற ஊருக்குப்பக்கத்தில் ஒரு பெரிய தடாகத்தை இவ்விராணியர் வெட்டுவித்து, அதற்கு ராணிதால் என்னும் பெயர் நாளைக்கும் வழங்கிவருகிறது. (Indore) இண்டூர் அஹலியா பாய் என்னும் அரசி எப்படி பேர் பெற்றாளோ, போபால் ராணியர் எப்படி தம் பரிபாலனத்தை செவ்வையாய் நடத்தி வருகிறாரோ, அப்படிப்பட்ட மேலான பராக்கிரமும், புண்ணிய சிந்தனையும் அடைந்து துர்க்கவதி பிராட்டியரும் தம் ராச்சியத்தை நடத்தி. தமது பேர் நாளைக்கும் ஞாபகம் இருக்கும்படி, நன்மை புரிந்தனர்.

அதற்குமுன், பல துலுக்க அரசர் இந்த கர்க-மண்டல ஆதிபத்தியத்தை அடக்கப் பார்த்தும் மாளாது போய்விட்டது. டெல்லியில் அக்பர் அரசர் ஆட்சி நடை பெற்று வந்தது. அக்பர் நெறி தவறாத் துரையே ஆயினும் வெளி நாடுகளை வெல்ல வேண்டும் என்ற ஆசைப் பற்றற்றவரல்ல.

அக்பர் மகாவரசர் குறிப்பையறிந்த படைத்தலைவர் அஸாப்கான் (Asaf Khan) என்றவர் கற்றுமாணிக்கபுரம் என்ற ஊரில் தம்படையை வைத்திருந்தவர். கர்க-மண்டல இராஜதானிக்குக் கிட்டமான ஊரில் இருப்பவர். அக்பர் ஆட்சி ஆரம்பமாய் 9-ஆண்டுக்கெல்லாம், 10000-கால் படையினரைக்கூட்டிக்கொண்டு கர்க மண்டல ராஜதானியைப்பிடிக்க வந்து சேர்ந்தார். திடீர் என படை வரவே குடிகள் வெருண்டனர், துர்க்கவதி-ராணியர், தம் திகிலைக்காட்டிக் கொள்ளாமல், 1000 யானை, 1000 குதிரை, சொற்ப கால்படையினர் இவர்களைக்கூட்டி, தாமும் யுத்தசன்னதராய், ஈட்டி அம்புகளைப் பூண்டு யானைமேல் உட்கார்ந்து படையை நடத்தினர். (கிரீஸ்தவ சகம் 1565) இப்படை எதிர்நிற்குமா, என அஸாப் கான் கர்வப்பட்டு நினைத்தார்; கைகலந்தது, ராணியருடைய படை வீரத்தனமாய்ப் பாய்ந்து குதித்து வரவே, எதிரியர் கலங்கினர்; கலைந்தனர்; இடம் பெயர்ந்து ஓடினர். ராணியர் ஜனம் வெருட்டிப் போயிற்று, துலுக்கர் ஓட, இராணியர் வெருட்ட வெகுதூரம் சென்றனர். இப்படிக்கு இருக்கையில் பொழுது விழுந்து இருட்டிற்று. சில நேரம் பட்டாளம் இளைப்பாறி மறுபடியும் துலுக்கரை வெருட்டலாம் என்று ராணியர் நினைத்திருந்தார். இதனுள் இந்துக்கள் மனம் மாறிற்று; வெருட்டிப்போக மனவலிவு இல்லாதவராய்த் தளர்ச்சி பெற்றனர். இதனை அறிந்த அஸாப் கான் முன்னடி கொண்டுவராமல் விடப்பட்டிருந்த பீரங்கிகளைத்தருவித்து, மறுநாள் உதயவேளையில் ராணியரைத் தாக்கினான். ராணியரும், குமாரரும், வைகறையில், மலைச்சந்து நுழை ஒன்றில், கலைந்த படையைச் சேர்த்து, ஒழுங்கு படுத்தி எதிர்த்தனர். இரண்டு தடவை துலுக்கர் ஜனம் கலைந்து தளர்ந்தது. துலுக்கர் தாம் யுத்தநோக்கம் துறந்து கும்பு கூடி தாய் மகவு இவர்களை எப்படியாவது மாய்க்கக் கருதி வளைத்தனர். இதற்குள், பீர்-நாராயண அரசச் செல்வர்க்குக் காயம்பட்டுக் குதிரைவாயினின்று கீழே விழுந்தனர். உடனே குழந்தையை வெளியில் சிகிச்சையின் நிமித்தியம் அனுப்பி விட்டு, ராணியர் தாம் மாத்திரம் இரணத்தில் நின்று, படையினர் நெருங்கிப் போகப் பார்த்தனர். இந்தச் சமயத்தில் ஒரு அம்பு வந்து ராணியர் கண்ணில் தைத்தது. தைத்ததைப் பிடுங்கினதில், முள்ளு வெளியில் வாராவிடினும், அவரைவிட்டு விலக மனம் வரவில்லை. யானைப்பாகர் திரும்பிச் சென்று ஆற்றினைத் தாண்டித் தப்பித்துவிடலாம் என்று சொல்லியும் இராணியர் இணையவில்லை. இந்துப்பட்டாளத்தினர் பின்பக்கத்தில் பெரிய ஆறு; முன்னாள் நீரற்று மணலாயிருந்த ஆறு, திடீர் என வெள்ளப் பெருக்கு எடுத்து நீச்சாய் ஓடிற்று. பின்னிடையவோ வழி கிடையாது. இந்தச் சந்தர்ப்பத்தில், இராணியர் அமரின்பேரில் நோக்கமாயிருந்த வேளையில், மறுபடியும் அம்பு ராணியர் கழுத்தில் வந்து தைத்தது. இனிமேல் உயிர் துறத்தலே தகும் எனக்கொண்டு, யானைப்பாகன் கைவாளைத் தாம் வாங்கித் தம் உடம்பைத் தாமே குத்திக்கொண்டு உயிர் மாய்ந்தனர். பக்கத்திலிருந்த ஆறு படையினரும் தற்கொலை புரிந்தனர்.

இவ்விராணியர் உயிர்விட்ட இடத்து, மலையில் பளிங்குக்கல் மிகுதியாவதுபற்றி, அப்பளிங்கினாலேயே ஸமாதி கட்டப்பட்டுள்ளது. ஸமாதியை நாளைக்கும்பார்க்கலாம். அந்நாட்டினர், துர்க்கவதி இராணியரை இன்னும் நினைத்து வருகிறார்கள், பெயரை வாழ்த்தி வருகிறார். சுமார் 400-ஆண்டுக்கு முன் நடந்த சங்கதியானாலும் நாட்டில் துர்க்கவதி கதை வழங்கப்படுகிறது.

அஸாப்கான் பின்பட்டு ராணியர் இளம்குமாரர் பீர் நாராயணர் மறைந்திருந்த சௌராகர் என்னும் கோட்டையை விரைந்து சென்று, தம் தண்டுகளுடன் முற்றுகையிட்டனர். இரண்டுமாதம் வரையில் முற்றுகை நடந்து கோட்டை பிடிபடாமல் நின்றது. முற்றுகையில் பீர் நாராயண துரை இளைஞர் கொல்லப்பட்டார். ராஜவம்சத்தில் சேர்ந்த பெண்பாலர் அனைவரும் எதிராளி கையில் அகப்படக்கூடாது என்று ஹடமாய் ரஜபுத்திரப் பெண்பிள்ளைகளுடைய வழக்கப்படி அரண்மனையில் நெருப்பு மூட்டி அதில் தாமே உயிர் விட்டனர். ரஜபுத்திரப் பெண்கள் இவ்வாறு உயிர்விடுவதற்கு ஜோஹார் என்றபேர். இராணி துர்க்கவதியின் தங்கையரும் பீர் நாராயணர் வதுவை செய்ய நிச்சயமாயிருந்த மற்றொரு பெண்ணரும் நெருப்பில் சாகாமல் பிழைத்த இவ்விருவரையும் அக்பர் இடத்துக்கு அனுப்பினார்கள்.

இந்தக் கதையில் மகிழ்ந்துகொண்டாடவேண்டிய சங்கதிகளாவன: (1) கர்க-மண்டலகுலத்தினர் கி. பி. 400-முதல் 1560 வரையில் க்ஷேமமாய் அரசாண்டது, (2) துர்க்கவதி ராணியர் கல்யாணம், யுத்தத்தின்பேரில் தகப்பனார் சம்மதம் நிறைவேறியது, (3) தளபதிஸா அல்பாயஸானது, (4) துர்க்கவதிக்கு ஆண் சந்ததி சீக்கிரத்தில் உண்டானது, (5) கணவர் இறந்தபின்னரும் துர்க்கவதி சீராயும்

பராக்கிரமமாயும் துரைத்தனம் செய்தது, (6) அவரால் பெரிய தடாகம் பிரதிஷ்டையாய் அது இன்னும் இருப்பது, (7) துலுக்கர் பொறாமைகொண்டு இராச்சியத்தைக் கட்டிக்கொள்ளப் பார்த்தும் வெகுநாள்வரையில் நிறைவேறாமல் இருந்தது, (8) அக்பர் நாளில் அஸாப்கான் செய்தப் பிரயத்தனம், அதற்குச் சளைக்காமல் தர்க்கவதி போர் ஆடினது, (9) முதல் முதல் ராணியர்ஜனம் வெற்றி யடைந்தது, துலுக்கர் கலைந்து ஓடினது, (10) இரவில் இராணியரைச் சேர்ந்த இந்துக்கள் வெருண்டு பின்னிடைந்தது, பீர் நாராயணர் காயப்பட்டு விலகவேண்டி நேர்ந்தது, (11) இராணியர்க்கும் அம்பு இரண்டு தடவை தைத்தது, (12)-பின் பக்கத்து ஆறு தெய்வீகமாய் இரவில் வெள்ளம் பெருக வாய்ந்தது, (13) இராணியர் தாமே குத்திக்கொண்டது, (14) பீர் நாராயணர் கொல்லப்பட்டது, (15) மற்று அரசக்குலத்துப் பெண்கள் நெருப்பு வைத்துக் கோட்டையை எரியச் செய்து தங்கள் மானத்தைக் காப்பாற்றிக்கொண்டது. இச்சங்கதிகள் அற்புதங்களாம்.

டி. ஆர். ராமநாதய்யர், பி.ஏ., எல்.டி.

கௌரவமான மாதிரிகள்.—இது இக்காலத்து நாகரிகத்துக்கு மாத்திரமல்ல, எக்காலத்திலும் ஒருவனுக்கு இவ்வுலகவாழ்க்கையில் மேன்மேலும் மரியாதையை விளைவிக்குமாகையால், எல்லாரும் அவசியமாக அப்பியசிக்க வேண்டும். நிஜமாகவே அதிக சக்தியில்லாதவர்கள், கௌரவமான மாதிரிகளைப் பழகிவருவதால், தங்களுக்கு மேலானவர்கள் தங்களைக் கண்டு மயங்கும்படி செய்து விடுவார்கள். ஒருவன் தான் நடந்துகொள்ளும் மாதிரி வெகு கௌரவமாயிருந்தால், அவனுக்கு எவ்வளவு திறமையிருக்கிறதோ, அதற்குப் பதின்மடங்காம், நன்கு மதிக்கப்படுவான். உலகத்தில் அநேகம் பெயர்கள் அதிசீக்கிரத்தில் முன்னுக்கு வருவது கௌரவமான மாதிரிகள் அவர்களிடம், மற்ற குணங்களுடன், அதிகமாக விருப்பதாற்றான். என்ன சிலாக்கிய குணங்களிருப்பினும், சிலர் அநியாயமாக அடங்கி கீழ் ஸ்திதியிலிருப்பது, இக்கௌரவமான மாதிரிகள் இல்லாத காரணத்தாற்றான்.

S. M. N.

இயற்கை அற்புதங்கள்

WONDERS IN NATURE

XVI. தண்ணீர்: தாங்கு குணம்

WATER: BUOYANCY



தண்ணீரின் ஐந்தாவது அற்புத குணத்திற்குத் தாங்கு குணம் என்று பெயர். இது தண்ணீரில் இருக்கிறது என்பதை நாம் எளிதில் அறியலாம். தண்ணீரில் சடை, மரத்துண்டு முதலிய இலேசான வஸ்துக்களைப் போட்டால் மேலே மிதக்கின்றன. உள்ளே முழுகிப்போகக்கூடிய, கல், இரும்பு முதலிய பதார்த்தங்களைத் தண்ணீரில் போட்டு அவைகளைத் தூக்கிப்பார்த்தால், அவைகள் நிறை குறைந்து விட்டதுபோலக் காணப்படுகின்றது. கிணற்று மாக்காலை நன்றாக அடிவரை எட்டும்படி விட்டு வெளியில் இழுப்போமாகில் தண்ணீர் மேல் மட்டம் வருகிறவரையில் லேசாகவும் பின்னர் அது அதிக கனமாகவும் காணப்படுகின்றது. இதுபோலவே தான் குளம் அல்லது ஆறுகளில் தண்ணீர் எடுக்கும் பொழுதும் தண்ணீருள்ளிருக்கும் வரையில் குடம் இலேசாகவும், வெளியே வந்ததும் கனமாகவும் காணப்படுகின்றது. மேலும் முற்கூறிய சடை முதலியவற்றை தண்ணீருள் அழுத்திப் பிடித்தால் அவை நமது கையை வந்து அழுத்துகின்றன, அவைகளைவிட்டுவிட்டால் வேகமாக மேலேகிளம்பி தண்ணீர் மேல்மட்டத்தில் வந்து மிதக்கின்றன. இந்த அனுபவங்களிலிருந்து தண்ணீருள் ஓர் வஸ்துவை அழுத்தினவுடன் ஏதோ ஒன்று அதைத் தாங்கி நிற்க, இருவர் சேர்ந்து தூக்கும் பாரம் ஒவ்வொருவனுக்கும் குறைந்து விட்டதாகத் தோற்றுவது போல, நமக்கு வஸ்து நிறையில் குறைந்துவிட்டதாகக் காணப்படுகின்றது. இந்தக் குணத்திற்கே தாங்கு குணம் என்று பெயர். இந்தக் குணம் சடை முதலிய இலேசான வஸ்துக்களைத் தண்ணீருள் அழுத்துங்கால் கண்ணுக்குப் புலப்படும், மற்றைய முழுகும்வஸ்துக்கள் விஷயத்தில் நிறைக்குறைவுரூபமாக அவைகள் தூக்குபவர் கைக்குப் புலப்படும் இருக்கின்றது. மேலும் முற்கூறியதிலிருந்து தாங்கு குணத்தின் அளவு வஸ்துவின் நிறைக்குறைவே என்பது விளங்கும்.

இந்தத் தாங்கு குணத்தை அளப்பதற்குத் தண்ணீரின் மூலமாக வஸ்துக்களின் பருமனை அறியும் வழி முக்கியம். அது பின்வருமாறு, தண்ணீரில் ஓர் வஸ்துவை அழுத்தினால், தண்ணீர் மேலே உயருகிறது. முன்னிருந்த உயரத்திற்கும் பின்னிருந்த உயரத்திற்கும் இடையில் உள்ள தண்ணீரின் பருமன் உள்ளே அழுத்தப்பட்ட வஸ்துவின் பருமனுக்கு ஸரியாகத்தான் இருக்கவேண்டும் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். தண்ணீருள் வஸ்து போய் கொஞ்சம் இடத்தைப் பிடித்துக்கொண்டு விட்டபடியால், அவ்வளவு பருமனுடைய தண்ணீர் வேறு அவ்வளவு இடத்தைப் பிடித்துக்கொள்ள வேண்டியது. முன்னிருந்ததைவிடப் பின்னர் தண்ணீர் மேல்மட்டம் ஏறுவதால் முன் மட்டத்திற்கும் பின் மட்டத்திற்கும் இடையிலுள்ள தண்ணீரின் பருமன் அழுத்தப்பட்ட வஸ்துவின் பருமனுக்கு ஸரியாக இருத்தல் வேண்டும். ஆகவே அழுத்தப்படும் வஸ்துவால் தன் பருமனுக்கு ஸமமான அளவு உள்ள தண்ணீர் இடம் மாற்றப்படுகிறது. இந்த அதிகத் தண்ணீருக்கு இடம்மாறும் தண்ணீர் என்று பெயர். இதன் பருமன் தண்ணீருள் அழுந்தும் வஸ்துவின் பருமனுக்கு ஸரி. ஒருவஸ்துவின் பாதிபாகத்தைத் தண்ணீருள் அழுத்தினால் இடம் மாறு தண்ணீரின் பருமன் அதற்குத் தகுந்தபடி இருக்கும், முழுவதும் அழுத்தினால் அது முன்னிருந்ததைப்போல இரண்டுமடங்கு ஆகும். இந்த விஷயத்தின் ஸஹாயத்தால் தண்ணீரில் முழுகும் வஸ்துக்களின் பருமனை எளிதில் கண்டுபிடிக்கலாம். இதற்காகவே (அவுன்ஸ்கிளாஸ் போன்ற) அளவுகள் குறிக்கப்பட்ட அளவு உருளைப்பாத்திரங்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. இதில் இடசத அம்ச அளவுகள் ஒழுங்காகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதில் 60-அளவு வரையில் தண்ணீரை விடுவோம். பின்னர் கரடுமுரடான ஓர் சிறு கல்லை இதனுள் போடுவோம். தண்ணீர் 65-வரையில் ஏறினால் உடனே கல்லு 5-இடசத அம்ச அளவு உடையது என்போம். மிதக்கும் வஸ்துக்களுக்கு இவ்வளவு எளிதில் பருமன் கண்டுபிடித்துவிட முடியாது. ஓர் மிதக்கும் வஸ்துவைத் தண்ணீரில் போட்ட உடன் தண்ணீர் 60-லிருந்து 62-க்கு ஏறினால், தண்ணீருள் அழுந்திய வஸ்துவின் பாகம் 2-இடசத அம்ச அளவு உடையது என்று அறியலாம். இந்த வஸ்துவின் பருமன் உணரவேண்டுமாகில் இதைத் தண்ணீருள் முழுத்தக்கூடிய கல்லை எடுத்து முதலில் அளவு உருளைப் பாத்திரத்தில் 50-லிருக்கும் தண்ணீரில் போடவேண்டும். 54-வரைத் தண்ணீர் ஏறினால், கல் 4-இடசத அம்ச அளவுடையதாகும். பின்னர் சிறு நூலால் கல்லை மிதக்கும் வஸ்துவோடு கட்டித் தண்ணீருள் இரண்டையும் முழுகவிடவேண்டும். தண்ணீர் 60-க்கு ஏறினால் கல்லும் மிதக்கும் வஸ்துவும் சேர்ந்து 10-இடசத அம்ச அளவுடையதாகும். ஆதலால் மிதக்கும் வஸ்து (10—4) அல்லது 6-இடசத அம்ச அளவு உடையதாகும். இவ்வாறு தண்ணீரில் கரையாத எந்தவஸ்துவினது பருமனையும் அறியலாம்.

முன்னரே ஒருவஸ்துவைத் தண்ணீருள் முழுத்துங்கால் அதில் ஏற்படும் நிறைக்குறைவே தண்ணீரின் தாங்கு குணத்தின் அளவு என்று கூறினோம். அதை இங்கு அளக்கப்புகுவோம். ஒருதட்டு சிறிதாயும் அடியில் கொக்கியுடையதாயும் உள்ள தராசு ஒன்றை எடுத்துக்கொள்வோம். இதற்குத் திரவநிறைத்தராசு என்று பெயர். சிறிய தட்டின் கொக்கியிலிருந்து ஒரு சிறு கல்லைத் தொங்கவிட்டு அதை முதலில் நிறுப்போம். பின்னர் சிறிய தட்டில் ஓர் சிறு அளவு உருளைப்பாத்திரத்தை வைத்து அதற்கும் தடைகட்டுவோம். பின்னர் வாய் அகன்ற அளவை உருளைப்பாத்திரத்தில் ஓர் அளவு வரையில் (40-இடசத அம்ச அளவு என்போம்.) தண்ணீர்விட்டுச் சிறு தட்டடியில் கொண்டுவந்து, கல் தண்ணீரில் உடனே நீண்ட தட்டு இறங்கும். இதனாலேயே தண்ணீருக்குத் தாங்குகுணம் உண்டென்பது விளங் தண்ணீர் மத்தியில் நிற்கும்படி வைப்போம். முழுவதும் முழுகி பாத்திரத்தில் எங்குந் தாக்காது

கும். இப்போது அடிப்பாத்திரத்தில் தண்ணீர் 48-இடசத அம்ச அளவுக்குப் போயிற்று என்றால் கல், 8-இடசத அம்ச அளவு உடையது என்பதாகும். மெதுவாகச் சிறு தட்டின்மேலிருக்கும் பாத்திரத்துள் தண்ணீரை விடுவோம். இங்கு எட்டாவது அளவிற்குத் தண்ணீர் வந்து எட்டியதும் திராசு ஸமமாகிவிடும். இதனால் கல்லின் மேலுள்ள தாங்கு குணம் 8-இடசத அம்ச அளவுடைய தண்ணீரின் நிறைக்கு ஸமம்: அதாவது கல்லின் பருமனுடைய தண்ணீரின் நிறையே கல்லின்மேல் தாக்கும் தாங்குகுணம் என்பது வெளியாகும். ஆனால் கல்லின் அளவு தண்ணீரே கல்லை முழுத்துங்கால் இடம்மாறும் தண்ணீர். ஆதலால் ஓர் வஸ்துவைத் தண்ணீருள் முழுத்தினால் அதன்மேல் உண்டாகும் தண்ணீரின் தாங்கு குணம் அதனால் இடம் மாறும் தண்ணீரின் நிறைக்கு ஸமம் என்று தெரியவரும்.

மிதக்கும் வஸ்துவின் விஷயத்தில் ஓர் அற்புதம் காணப்படும். முன்போன்ற சோதனையை ஒரு சடையைக்கொண்டு செய்வோம். அதன் முழுகிய பாகத்தின் அளவு எவ்வளவோ அவ்வளவு உள்ள தண்ணீரின் நிறையே அதன் தாங்குகுணம் என்பது வெளிவரும். உடனே அடிப்பாத்திரத்தை எடுத்துவிட்டுச் சடையை அவிழ்த்து நீண்ட தட்டில் போட்டு அதிலிருக்கும் தடையைத் தவிர மற்றைய கனங்களை எடுத்துவிடுவோம். திராசு ஸமமாகவே இருக்கும். இதனால் சடையைத் தண்ணீரில்போடுங்கால் அதன் முழுநிறையே அதன்மேல் உள்ள தாங்கு குணத்தின் அளவு: அதாவது சடையைத் தண்ணீரில் போட்டால் அது தன் முழுநிறையையும் இழக்கின்றது என்பது வெளியாகும். ஆகவே தண்ணீரில் மிதக்கும் வஸ்துக்கள் எல்லாம் தமது முழுநிறையையும் இழக்கின்றன; இந்தநிறையே அதன்மேலுள்ள தாங்குகுணத்திற்கு ஸமம்; இந்த நிறை மிதக்கும் வஸ்துவின் முழுகிய பாகத்தின் அளவு எவ்வளவோ அவ்வளவு உடைய தண்ணீரின் நிறை: இந்தத் தண்ணீரே இடம்மாறு தண்ணீர் என்பவை தெரியவருகின்றன.

இம்மாதிரி வஸ்துக்களுக்குத் தண்ணீரில் முழுத்தப்படுங்கால் அதன் தாங்கு குணத்தால் தம்பருமனுக்கு ஸமமான பருமனுடைய (அதாவது இடம்மாற) தண்ணீரின் நிறை எவ்வளவோ அவ்வளவு நிறை குறையும் என்பதை ஆதியில் ஸைரக்யூஸிலுள்ள (ஸிஸிலித்தீவில் உள்ள ஓர் பட்டணம்) ஆர்கிமீடீஸ் என்ற ஓர் தத்துவசாஸ்திரி ஆராய்ந்து அறிந்தார். ஆதலால் இந்த உண்மைக்கே ஆர்க்கிமீடீஸ் ஸித்தாந்தம் என்று பெயர். இவருக்கு முதலில் இந்தத் தாங்கு குணத்தின் அளவு முழுத்தப்படும் வஸ்துவின் பருமனைப்பொருத்ததே ஒழிய அதன் நிறையைப் பொருத்ததல்ல என்று தோன்றிய மாதிரியைப்பற்றி ஓர்கதை உண்டு. ஹைறோ என்ற ஸைரக்யூஸ் அரசன் பொன்னால் ஓர் கிரீடம் செய்யும்படி ஓர் தட்டானுக்கு உத்தரவு அளித்தான். தட்டான் கொஞ்சநாளில் உத்தரவுப்படி கிரீடத்தைக் கொண்டுவந்து கொடுக்க அதில் கொஞ்சம் வெள்ளி கலந்திருக்குமோ என்ற ஸந்தேகம் அரசனுக்குப் பிறந்தது. இதை உள்ளபடி அறிய முடியாது அரசன் ஆர்க்மீடீஸிடம் இதை ஒப்புவித்து முடிவு செய்யும்படி உத்தரவளித்தான். ஆர்க்மீடீஸ் இதில் முயற்சித்துக்கொண்டிருக்கையில், ஒருநாள் ஆற்றில் ஸ்நானம் செய்யுங்கால் ஓர் எண்ணம்தோன்ற திடீரென்று நிர்வாணமாக 'கண்டுபிடித்துவிட்டேன்! கண்டுபிடித்துவிட்டேன்!' என்று கூவிக்கொண்டு வெளியிலே ஓடி வந்தாராம். உடனே வீடு சென்று ஓர் நல்ல தங்கத் துண்டை எடுத்து தண்ணீரில் நிறுத்து அதன் நிறைக்குறைவைக் கண்டுபிடித்துத் தங்கம் தன் நிறையில் $\frac{1}{19}$ குறையும் என்று கண்டார். பின்னர் அரசன் கிரீடம் தன் நிறையில் $\frac{1}{19}$ விட அதிகமாகக் குறைவதைக் கண்டு இதில் ஏதோ கலப்பிருக்கிறது என்று நிரூபித்தார். தட்டானுக்குத் தகுந்த தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வாறு ஆர்க்மீடீஸால் கண்டறியப்பட்ட இந்தத் தாங்குகுணத்திற்கும் தண்ணீருள் உள்ள மேல்நோக்க அழுத்தத்திற்கும் உள்ள வித்தியாஸத்தை நன்றாகத்தெரிந்துகொள்ளவேண்டும். தாங்குகுணம், ஓர் வஸ்துவை தண்ணீருள் போடுங்கால் அந்த வஸ்துவின்மேல் தாக்குவது. இது வஸ்துவின் நிறையைப் பொருத்ததல்ல. அதன் முழுகிய பாகத்தின் பருமனைப் பொருத்தது. முழுகும் வஸ்து பாத்திரத்தில்படாது, எந்தஆழத்திலிருந்தபோதிலும் அதன் மேலுள்ள தாங்குகுணம் மாறாமலே இருக்கும். இதன் அளவு முழுத்தியிருக்கும் வஸ்துவால் இடம்மாறும் தண்ணீரின் நிறை. மேல்நோக்க அழுத்தம் தாங்கு குணத்தைப்போல மேலேநோக்கியிருந்தபோதிலும் முழுத்தப்படும் வஸ்துவோடு ஸம்பந்தப்பட்டதன்று

தண்ணீருள் ஒவ்வொரு இடத்திலும் இருப்பது. அது ஆழம் அதிகமாக ஆக அதிகமாகும் தன்மையுடையது. முழுத்தப்படும் வஸ்துவின் மேல் தாக்கும் மேல்நோக்க, கீழ்நோக்க, பக்க அழுத்தங்கள் சேர்ந்து உண்டாவதே தாங்குகுணமாதலில் மேல் நோக்க அழுத்தம் தாங்குகுணத்தின் ஓர் பாகமே ஒழிய வேறல்ல.

ஆகவே ஓர் வஸ்துவைத் தண்ணீரில் போட்டு நடுவில் உள்ளே நிறுத்தினால் அதன்மேல் உள்ள அழுத்தங்களால் முடிவாக உண்டாகும் தாங்கு குணம் அதை, நேரே மேல் நோக்கியும், அதன் நிறை அதைக் கீழ்நோக்கியும், தள்ளுகின்றன. ஆகவே தாங்குகுணம் வஸ்துவின் நிறையைவிடக் குறைந்திருப்பின் வஸ்து கீழே முழுகிப்போய்ப் பாத்திரத்தடியில் நிற்கும். தாங்குகுணம் நிறையை விட அதிகமானால் வஸ்து மேலே நோக்கிக் கிளம்பும். இதன் மேல்பாகம் நீர் மட்டத்தைத் தாண்டத் தொடங்கியதும் தண்ணீருள் முழுகியிருக்கும் பாகம் வரவரக் குறைந்துகொண்டே வரும். அப்பொழுது அந்த வஸ்துவின்மேலுள்ள தாங்குகுணம் வரவரக் குறைந்துகொண்டே வரும். முடிவில் இரண்டும் ஸமமாகுங்கால் வஸ்து மேலே கிளம்பாது நின்று மிதக்கும். ஆகவே வஸ்து அசையாது மிதக்குங்கால் முழுகிய பாகத்தால் உண்டாகும் தாங்கு குணம் வஸ்துவின் நிறைக்கு ஸமமே. அசைவற்று மிதக்கும் வஸ்துவைச் சற்றுத் தண்ணீருள் அழுத்தினால் முழுகும் பாகம் அதிகப்பட தாங்கு குணம் வஸ்துவின் நிறையைவிட அதிகரித்துவிடும். உடனே வஸ்துமேலே கிளம்பி முன்நிலைக்குப்போய் விடும். அந்த வஸ்துவைச் சற்று உயர்த்தினால் முழுகும்பாகம் குறையத் தாங்குகுணம் வஸ்துவின் நிறையைவிடக்குறையும் ஆதலால் வஸ்து கீழே அழுந்தி முன்னிலைக்கே போகும். ஆகவே மிதக்கும் வஸ்துக்களில் தாங்குகுணம் நிறைக்கு ஸமமாக இருந்தால்தான் அவை அசையாமல் மிதக்கும். ஆதலால், அசையாமல் மிதக்கும். ஒரு வஸ்துவின் மேலுள்ள தாங்குகுணம் அதன் நிறைக்கு ஸமமாக இருத்தல் வேண்டும். தண்ணீருள் இருக்கும் வஸ்துவின் நிறையும் அதன் மேலுள்ள தாங்குகுணமும் ஸமமாக இருப்பின் வஸ்து தண்ணீருள் விட்ட இடத்தில் எல்லாம் நிற்கும். ஊர்க்காய்க்குப்போடும் எலுமிச்சம் பழங்களை ஜலத்தில் போட்டுச் சுடவைக்குங்கால் அவைகளுள் உஷ்ணஸமயத்தில் இரண்டொன்று தண்ணீருள் நடுவில் கீழும் போகாது மேலும் போகாது நிற்பதை சிலர் பார்த்திருக்கலாம். இந்தவிடத்தில்தான் நிறையும் தாங்கு குணமும் ஸமமாக இருப்பது முற்கூறிய விஷயங்களோடு தாங்குகுண அளவை ஸம்பந்தப்படுத்தி நோக்கில் பின்வருவன தெரியவரும். தண்ணீருள் முழுத்தப்பட்டிருக்கும் வஸ்துவின் நிறை, தன்னளவு உள்ள தண்ணீரின் நிறையை விட, அதிகமாயிருப்பின் வஸ்து உள்ளே முழுகும்: குறைந்திருப்பின் வஸ்து மேலே கிளம்பி ஒழுங்குப்படி மிதக்கும்: அதற்கு ஸமமாக இருப்பின் வஸ்து தண்ணீருள் எங்கு நிறுத்தினாலும் நிற்கும்.



வஸ்துபரிமாணம் குறையாதிருக்க தாங்குகுணத்தால் குறையும் நிறை எங்கு மாயமாக மறைந்துவிடுகின்றது என்ற சங்கை பிறக்கும். இதைத் தீர்க்கப் பின்வரும் சோதனையைச் செய்வோம். முன்னெடுத்துக் கொண்ட திரவ நிறைத்தராசை எடுத்து, அதன் சிறுதட்டில் முன்போல சிறு அளவைப் பாத்திரத்தை வைப்போம். நீண்டதட்டில் வாயகன்ற அளவைக்குழாயில் 30 வரையில் நிற்கும்படி தண்ணீரைவிட்டு, சிறு தட்டில் நிறையிட்டுத் தராசை ஸமப்படுத்துவோம். பின்பு கயிற்றில் ஓர் கல்லைக்கட்டி அதைத் தராசில் படாமலும், தண்ணீருள் பாத்திரத்தைத்தொடாமலும், மூழ்கியும் இருக்கும்படி ஓர் தாங்கு கருவியிலிருந்து தொங்கவிடு

வோம். உடனே தண்ணீரின் நிறை அதிகரிக்கும். பாத்திரத்தில் தண்ணீர் 36 வரையில் ஏறியிருப்பின் கல் 6-இடசத அம்ச அளவுடையது என்பது தெரிய வரும். சிறு தட்டிலுள்ள பாத்திரத்தில் தண்ணீரை விடுவோம். இது அறு அளவு வந்ததும் தராசு ஸமமாகும். இதனால் கல்லின் பருமனுக்கு ஸமமான அளவுடைய தண்ணீரின் நிறை பாத்திரத்தில் அதிகமாகிவிட்டது என்பது வெளியாகும். அதாவது பாத்திரத்துள் கல்லின் இட அளவு உடைய தண்ணீரை விட்டதற்கு ஸமம் என்பதே. ஆகவே கல்லிழக்கும் நிறை தண்ணீர் பெற்றது. இதைமுன் செய்த சோதனையோடு பொருத்திப்பார்த்தால் பின்வரும் உண்மை வெளியாகும்: ஒரு வஸ்துவைத் தண்ணீருள் அழுத்தி அந்த வஸ்துவை மாத்திரம் தனிமையாக நோக்கில் நிறையில் குறைந்ததாகவும், பாத்திரத்தையும் தண்ணீரையும் மாத்திரம் தனியே நிறுத்தால் முன் குறைந்த அவ்வளவு நிறை அதிகமாக இருப்பதாகவும் காணப்படும். இரண்டையும் சேர்த்து (தண்ணீரையும் வஸ்துவையும் முதலில் வெவ்வேறாக வெளியிலும், பின்னர்வஸ்துவை தண்ணீருள்போட்டும்) நிறுக்கில் யாதொரு நிறைக்குறைவும் காணப்படாது. வஸ்து இழந்த கனத்தைத் தண்ணீர் பெறுகின்றதே இதற்குக்காரணம்.

தண்ணீர்போன்ற எண்ணெய், பால், பாதரஸம் முதலிய திரவபதார்த்தங்களிலும் இந்தத் தாங்கு குணம் உண்டு: முற்கூறிய ஆர்க்கிமீடீஸ் ஸித்தாந்தமும், மிதக்கும் ஒழுங்கும் உண்டு. இந்த விஷயத்தையும் இதிலிருந்து வெளியாகும் விஷயங்களையும் பின்னர் கூறுவோம். இவைகள் வாயுவுக்கும் உண்டு. காற்றெடுக்கும் கருவியின் மேல் தட்டில் ஓர் சிறுதராசைவைத்து அதில் ஒரே நிறையுள்ள இரும்புத்துண்டை ஓர் தட்டிலும், சடையை மற்றொரு தட்டிலும் வைத்துத் தராசை ஸமப்படுத்துவோம். பின்னர் இதை ஓர் கண்ணாடிப் பாத்திரத்தால் மூடி உள்ளிருக்கும் காற்றைக் கூடியவரையில் எடுத்துவிடுவோம். உடனே சடையின் நிறை அதிகமாகிவிட்டதுபோலக் காணப்படும். இதிலிருந்து ஸாதாரண ஸமயத்தில் சடை இழந்திருக்கும் நிறை, இரும்பு இழந்த நிறையைவிட அதிகம் என்று தெரியவரும். இது சடையின் பருமன் அதிகமாயும் இரும்பின் பருமன் குறைவாயும் இருப்பதற்குத் தகுந்தபடி இருப்பதால் வாயுவிலும் திரவ வஸ்துக்களிலிருப்பதுபோலத் தாங்குகுணம் இருக்கின்றது என்பது தெரியவரும்.

பருமன்—Volume.
இடம்மாறும் தண்ணீர்—Displaced water.
அளவு உருளைப் பாத்திரம்—Graduated cylinder.
அளவு—Metre.
இட சத அம்ச அளவு—Cubic centimetre.
திரவநிறைத்தராசு—Hydrostatic balance.
நிறை—Weight.
கனம்—Gramme.
வஸ்து பரிமாணம்—Mass.
தாங்கு கருவி—Stand.
காற்றெடுக்கும் கருவி—Air-pump.
ஸித்தாந்தம்—Principle.
குவிந்த—Convex.
குழிவான—Concave.

நீட்டல் அளவு—**Length**

1 அளவு—$39\frac{4}{8}$ அங்குலம்
[10 ஸஹஸ்ர அம்ச அளவு—1 சத அம்ச அளவு
10 சத அம்ச அளவு—1 தச அம்ச அளவு
10 தச அம்சஅளவு—1 அளவு
10 அளவு—1 தச அளவு
10 தச அளவு—1 சத அளவு
10 சத அளவு—1 ஸஹஸ்ர அளவு
10 ஸஹஸ்ர அளவு—1 மஹா அளவு]

நிறை அளவு—**Weight**

1 கனம்—1 சத அம்ச இடம் சுத்த ஜலத்தின் நிறை
[10 ஸஹஸ்ர அம்ச கனம்—1 சத அம்ச கனம்
10 சத அம்ச கனம்—1 தச அம்ச கனம்
10 தச அம்ச கனம்—1 கனம்
10 கனம்—1 தச கனம்
10 தச கனம்—1 சத கனம்
10 சதகனம்—1 ஸஹஸ்ர கனம்
10 ஸஹஸ்ர கனம்—1 மஹா கனம்]

இடம்—**Litre**

(1000 சத அம்ச இடம்)—1.இடம்

இதையும் கனம்அளவு இவைகளைப்போல எடுத்து விஸ்தரிக்கலாம்.

குமார ஸம்பவம்

BIRTH OF KUMARA

பண்டித நடேசசாஸ்திரியாரால் மொழிபெயர்ப்பு

(முன் தொடர்ச்சி)

53. அவ்விடத்தில் பிரம்பாலாகிய ஆஸனங்களில் அம்மாமுனிவர்களை ஹிமவான் இருக்கச்செய்து அவர்கள் உத்தரவுப்படி தாமும் உட்கார்ந்து அஞ்சலி பந்தம் பண்ணிக்கொண்டு பின்வருமாறு பேசலுற்றார்:—

54. "முனிவர்களே! தங்களை நான் இன்று கண்டுகொள்ளும்படி பெற்ற பாக்கியமும், நான் எதிர்பார்க்காமல் தாங்களே யிவ்விடம் வரும்படி நான் அடைந்த ஸம்பத்தும், மேகங் காணாமல் மழை பொழிந்ததுபோலும், பூப்பூக்காமல் பழம் பழுத்ததுபோலும் எனக்கு விளங்குகின்றது.

55. தாங்கள் இன்று என்மேல் கருணைபுரிந்த கடாக்ஷத்தால் நான் என்னை, ஒரு மூடன் திடீரென்று புத்திமானாய்விட்டால் எவ்வாறு தன்னை எண்ணிக்கொள்வானோ,அதுபோலும் இரும்புமயமாயிருந்த ஒரு பொருள் ஒரே நொடியில் தங்கமாய் மாறினால் அது எவ்விதப் பெருமை அடையுமோ அதுபோலும் எண்ணிக்கொள்ளுகின்றேன்.

56. இன்று முதல் எல்லாப் பிராணிகளும் தங்கள் தங்கள் பரிசுத்தப்பதவியை வேண்டி என்னை நாடிவரும் மகிமையை நான் அடைந்துவிட்டேன். ஏனெனில் தங்களைப்போன்ற மாமுனிவர்கள் எங்கெங்கு ஒரு நிமிஷகாலமாவது வாஸம் செய்கின்றார்களோ அவ்விடம் தீர்த்தம் என்ற மகிமையை அடைகின்ற தன்றோ.

57. அந்தண உத்தமர்களே! நான் பரிசுத்தமடைந்திருக்கின்றது இரண்டு மகிமையாற்றான் என்று நான் எண்ணியிருக்கின்றேன். அவைகள் யாவை எனில் என் தலையில் கங்கையின் பிரவாஹம் விழுவதாலும், தாங்களிப்பொழுது காலலம்பிய ஜலம் என் வீட்டில் விழுந்ததாலும் தான்.

58. எனக்கோ என்தேகம் இருவித அமைப்பாகவிருக்கிறது. அசையும் தேகம் (ஜங்கமம்) ஒன்று; அசையாத்தேகம் (ஸ்தாவரம்) மற்றொன்று. இவ்விருவித தேகங்களையும் நான் உங்களுக்கு ஊழியம் செய்வதில் நான் அமர்த்தியிருக்கின்றேன். அசையுந்தேகம் உங்களுக்கு ஏவல் செய்வதற்கும் அசையாத்தேகம் உங்கள் கால் மிதிப்பதற்குமாக நீங்கள் அனுக்கிரகம் பண்ணவேண்டும்.

59. என் தேகம் எல்லாத்திசைகளிலேயும் வியாபித்து நின்ற போதிலும் என்னிடம் இப்பொழுது பொங்கியிருக்கும், உங்களுக்கு ஊழியம் செய்யவேண்டும் என்ற அவாவானது தங்கிநிற்க என் தேகத்திலிப்பொழுது இடமில்லை.

60. வெகு ஒளிபொருந்தி பிரகாசிக்கும் உங்கள் தர்சனத்தால் எனது குகைகளுக்குள்ளிருக்கும் இருள் அகன்றதுடன் என் உள்ளத்தில் ரஜோகுணத்தையும் தாண்டி நிற்கும் தமோகுணம் என்ற அக்ஞான இருளும் நீக்கப்பட்டது.

61. என்னாலுங்களுக்கு ஏதாவது ஒருகாரியம் ஆகவேண்டியிருக்கும் என்பதை நான் நினைக்க இடமேயில்லை. அப்படி ஏதாவது ஒருக்காலிருக்குமாயின் இது என் என்னால் முடித்துக் கொடுக்கமுடியாமலிருக்கும். அதெல்லாம் ஒன்றுமல்ல. தாங்கள் இங்குவந்ததெல்லாம் என்னைப் பரிசுத்தம் பண்ணி வைக்கவேண்டியே என்று நான் நினைக்கின்றேன்.

62. உங்களுக்கு ஒன்றிலும் ஆசை என்பதில்லை. என்றிருப்பினும் ஏதாவது ஒருவித அடிமைத்தொழிலில்என்னை ஏவவேண்டுமென்று நான்கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனெனில் சேவகர்கள் தங்கள் யஜமானர்கள் அதிகமாகத் தங்களை ஒருவேலையில் ஏவினாற்றான் தங்களிடம் அவ்வெஜமானர்கள் அதிக கருணை வைத்திருப்பதாக எண்ணவிடமுண்டு.

63. இதோ நானிருக்கின்றேன். அதோ என் மனைவி யிருக்கின்றாள். எங்கள் வம்சத்தின் உயிராக விளங்கும் எனது குமாரத்தியும் இதோ விருக்கின்றாள். எங்களுள் யாரைக்கொண்டு உங்களுக்கு என்ன காரியமாகவேண்டும் கட்டளையிடுங்கள். ரத்தினம் முதலிய வஸ்துக்களைப்பற்றி எனக்கு அவசியமேயில்லை. எல்லாம் உங்களுடையதாகவே நீங்கள் எண்ணலாம்."

64. இவ்வாறு இமவான் சொல்லவே அதே பொருளை மறுபடியும் இரண்டாவது தடவை எடுத்துச் சொல்லுவதுபோல் அவர் பேசின சப்தம் குகையாகின்ற முகத்தினின்று எதிரொலியால் வெளிக்கிளம்பிக் கேட்கலாயிற்று.

65. அவ்வாறு இமவான் பேசி ஓய்ந்ததும் முனிவர்கள் தங்களுக்குள் பேசுவதில் முதல்வரான அங்

கிரஸரை மறுமொழி சொல்ல ஏவலானார்கள். அவர் அம்மலைகளின் மன்னவரை நோக்கிப் பின்வருமாறு பேசலானார்:—

66. "இதோநான், அதோ என் மனைவி" என்று தாங்கள் சொன்ன சொற்கள் எல்லாம் உங்களுக்கு முற்றிலும் தகும். இவைகளுக்கு மேலாகவும் செய்ய உமக்கு இஷ்டமுண்டு. ஏனெனில் உமது மனம் உமது சிகரங்கள்போல் உயர்ந்து ஓங்கி நிற்கின்றது.

67. ஸ்தாவர உருவங்கொண்ட விஷ்ணுபகவான் நீங்கள் என்று கூறியிருப்பது உண்மையே. *உமது வயிற்றிலன்றோ அசைகின்றவும் அசையாதவுமான அநேக வஸ்துக்கள் தங்கியிருக்கின்றன.

68. நீங்கள்மட்டும் பாதாள உலகம் முதல்பற்றி இப்பூமியின் பாரத்தைத் தாங்கிக்கொண்டு ஓங்கி நிற்காவிடில் இப்பாரத்தைத் தாமரைத்தண்டுபோல் மிருதுவாக விருக்கும் தமது படங்களால் ஆதிசேஷன் எவ்வாறு தாங்கிக்கொள்ளுவார்.

69. உமதுகீர்த்திகளாகின்ற நதிகள் ஒருஇடத்திலும் குறுகாதவைகளாய் வெகு வெண்மையானவைகளாய் சமுத்திரத்தின் அலைகளாலும் தடுக்க முடியாதவைகளாய் வெகு புண்யமானவைகளாகையால் உலகத்தையே பரிசுத்தம் பண்ணுகின்றவைகளாய் விளங்குகின்றன. அப்படியே உமது ஸந்ததிகளும்.

70. கங்கைக்கு விஷ்ணு பாதத்திலிருந்து பெருகுவதால் எவ்வளவு மகிமை உலகத்தாரால் சொல்லப்படுகின்றதோ அதே மகிமை மறுபடியும் அக்கங்கை இரண்டாவது தடவை உம்மிடமிருந்து உதிப்பதால் அடைந்திருக்கின்றதன்றோ.†

71. குறுக்கும் நெடுக்கும் கீழுமாய் விஷ்ணுபகவான் வியாபித்தார் என்ற மகிமை அவருக்குத் திரிவிக்கிரமாவதாரம் பண்ணினபொழுது விளங்கலாயிற்று. அவ்விதமகிமை உம்மிடத்தில் எப்பொழுதும் இயற்கையாகவே யிருக்கின்றதல்லவா.

72. யாகத்தில் கொடுக்கப்படும் யஜமான பாகம் வாங்கிக்கொள்ளும் யோக்கியதை (இந்திராதிகளுக்குப்போல)உமக்கேயிருக்கின்றமையால் மேருவுக்குப் பெருமையான தங்க சிகரம் கிடைத்தும் பிரயோஜனமற்றதாய்ப்போயிற்றன்றோ.‡

73. உமது கடினகுணங்கள் எல்லாவற்றையும் உமது ஸ்தாவரசரீரத்தில் (இலை முதலியவைகளில்) விட்டிருக்கின்றீர். நல்லோர்களுக்குப் பணிவிடை செய்ய பக்தியால் வணங்கி நிற்கும் இச்சரீரத்தில் அவைகள் ஒன்றுமில்லையன்றோ.

74. ஆகையால் நாங்களிப்பொழுது வந்திருக்கும் காரியத்தைக் கொஞ்சம் சொல்லுகின்றோம். கேளுங்கள். அது தங்களுக்குத்தான் முக்கியமான காரியம். உமக்குப்பெருமை கிடைக்கும் வழியைச் சொல்லப்புகுவதால் இக்காரியத்தில் நாங்கள் ஸம்பந்தப் பட்டவர்களாகின்றோம்.*

75. எவரொருவர் பாலசந்திரனை வஹிப்பதுடன் மற்றவிதப் பொருளை ஒரு பொழுதும் குறிக்காது அணிமா முதலிய எண்வித ஐசுவரியம் நிரம்பியதாய் விளங்கும் ஈசுவரன் என்றபதத்தையும் வஹித்திருக்கின்றாரோ,

76. ஒன்றுடன் மற்றொன்று பரஸ்பரம் இணங்கும் சாமார்த்திய முள்ளவைகளாய், பிருதிவீ, அப்பு என்ற எண்ணுருவம் கொண்டவைகளாய் காணப்படும் எண் மூர்த்திகளால் (அஷ்டமூர்த்தி) எவரொருவர் நாம் நம்மூன்னர்க்காணும் இவ்வுலகத்தை வழியில் ரதத்தைக்குதிரைகள் வகிப்பதுபோல வகிக்கின்றாரோ,

77. எவரொருவரை யோகிகள் பரமாத்ம ஸ்வரூபீ என்று தேடிக்கொண்டும் வித்வான்கள் மறுபிறப்பை நீக்கி வைக்கும் வழி என்று சொல்லிக் கொண்டும் இருக்கின்றார்களோ,

78. அவ்வீசுவரர், இவ்வுலகத்தில் நடக்கப்பட்ட எல்லாவித நடவடிக்கைகளுக்கும் சாட்சியாயிருக்கப்பட்டவர் எங்களிடம் ஸமாசாரம் சொல்லியனுப்பி உங்கள் கன்னிகையைத்தமக்கு விவாகம்செய்து கொடுக்கக்கேட்கின்றார்.

79. மொழியின் பொருளை மொழியுடன் சேர்த்து வைப்பதுபோல உமது பெண்ணை நீங்கள் சம்புவுடன் சேர்த்து வைக்கக் கடவீர்களாக. நல்ல புருஷனிடம் ஒப்பிவைக்கப்பட்ட கன்னியின் விசாரம் தந்தைக்கு நீங்குமன்றோ!

80. சராசரங்களாய் இவ்வுலகத்தி லிருக்கும் எல்லாவஸ்துக்களும் உமது குமாரியை ஒருதாயாகக்

* ஸ்தாவராணாம் ஹிமாலய கீதை

† ஆகையால் நீங்கள் எங்களைப்போன்ற முனிவர்கள் நாடி வரவேண்டிய தீர்த்த ரூபமுள்ளவர் என்றபடி. விஷ்ணுசரணத்துக் கொப்பானவர் என்றபடியுமாம்.

‡ மேருவுக்குத் தங்க சிகரம் இருந்தும் நீர்தான் பெரியவர் என்று முனிவர்கள் இமவானைப் புகழ்ந்தபடி அதற்கு ஆதாரமாக யக்ஞபாகம் இமவானுக்காகையால் அவர் தான் பெரியவர் என்று அங்கிரஸர் எடுத்துக் காட்டலானார்.

* பயனை அனுபவிக்கப் போகிறவர்கள் நீங்கள்தான் என்றபடி.

கருதட்டும். ஏனெனில் ஈசன் இவ்வுலகத்துக்கே தந்தையல்லவா?

81. தேவர்கள் முதல் முதல் ஈசனுக்கு வணங்கி அதன் பின்னர் தங்கள் கிரீடக்காந்தி உமது கன்னிகையின் பாதங்களில் பரவ அவ்வம்மணிக்கு வணங்கட்டும்.

82. கலியாணப்பெண்ணோ உமை; அப்பெண் கன்னிகாதானம் பண்ணிக்கொடுக்கப்பட்டவர் நீங்கள்; பெண்ணைக் கேட்கவந்தவர்கள் ஸப்தரிஷிகளாகிய நாங்கள்; மாப்பிள்ளை ஜகதீசன்;—இவைகளிவ்வளவும் உமது குலத்தின பெரும் சிறப்புக்காகவன்றோ.

83. தாம் ஒருவரையும் புகழாது மற்றெல்லோராலும் புகழப்பட்டவராய் தாம் ஒருவரையும் வணங்காது மற்றெல்லோராலும் வணங்கப்பட்டவராய் இவ்வுலகம் முழுமைக்கும் குருவாய் நிற்கும் ஈசனுக்கு உமது பெண்ணைக் கொடுப்பதால் நீங்கள் குருவாகும் பெருமையை அடையுங்கள்."

84. இவ்விதமாய் மாமுனிவர்கள் சொல்லிக்கொண்டிருந்தபொழுது இமவானுக்குச் சமீபத்தில் கீழ் நோக்கின முகத்துடன் நின்றுகொண்டிருந்த பார்வதி விளையாட்டாக ஒரு தாமரைமலரைத் தனது கையில் பற்றி அதிலிருந்த இதழ்களை எண்ணிக்கொண்டிருந்தாள்.

85. இமவான் தமது மனோரதம் நிரம்பிற்றென்று கருதிக்கொண்டபோதிலும் தமது மனைவியாகிய மேனையின் முகத்தைப் பார்க்கலானார். கன்னிகளைக் கலியாணம் செய்து கொடுக்கும் விஷயத்தில் புருஷர்கள் பெரும்பாலும் தங்கள் மனைவிகளுடைய நோக்கப்படி செய்கின்றவர்களன்றோ!

86. மேனையும் தனது கணவன் மனோரதங்கள் எல்லாம் சரிவர நிரம்பியதாக எண்ணினாள். உத்தமிகள் தங்கள் கணவர்கள் மனத்தின் நோக்கப்படி நடந்து அவ்வாறே நடக்கும் குணமுள்ளவர்களல்லவா!

87. இனிமேல் நாம் செய்யவேண்டிய காரியம் இதுதான் என்று இமவான் தமது உள்ளத்தில் கருதி தாம் பேசிமுடித்ததும் மங்கலசிங்காரம் செய்துகொண்டிருந்த தமது பெண்ணைக் கையால் எடுத்துக்கொண்டு,

88. "குழந்தாய்! வா. இங்கு நான் உன்னை ஜகதீசனுக்குக் கலியாணம் செய்துகொடுக்க நிச்சயித்துவிட்டேன். உன்னைக்கேட்க மாமுனிவர்கள் வந்திருக்கின்றார்கள். இன்றுதான் கிருகஸ்தன் அடைய விரும்பும் கன்னிகாதான பயனை நான் அடைந்தேன்"

89. என்று பார்வதியிடம் சொல்லி முனிவர்களை நோக்கி இமவான் "முக்கண்ணருடைய மனைவி உங்கள் எல்லாரையும் இதோ வணங்குகின்றாள்" என்றார்.

90. அவ்வாறு இமவான் சொல்லவே தாங்கள் கருதிவந்த காரியத்தை அவ்வண்ணம் மேன்மையாகச் செய்து முடித்ததற்கு முனிவர்கள் அவரை துதித்து எப்பொழுதும் முன்னிற்கும் பயனுடன் கூடியவைகளான ஆசீர்வசனங்களை அம்பிகையை உத்தேசித்து முனிவர்கள் விடுத்தார்கள்.

91. தான் அவ்வாறு நமஸ்காரம் செய்யும் பொழுது தனது காது தங்கக்குண்டலங்கள் நழுவவிளங்கிய பார்வதியை, அருந்ததீ தேவி, பார்வதி என்ன வெட்கபட்டபோதிலும் தூக்கித் தமது மடியின்மேல் உட்காரவைத்துக் கொண்டார்.

92. தமது பெண்ணைவிட்டுப் பிரிந்து போகப் போகின்றோம் என்ற எண்ணத்தால் கொஞ்சம் துக்கத்துடன் கண்களில் நீர்ததும்ப காணப்பட்ட மேனையைப் "பயப்படவேண்டாம். மற்றொரு மடந்தையை நாடாத மாப்பிள்ளை கிட்டினார்" என்று சொல்லி அருந்ததி ஆற்றலானாள்.

93. மரவுரி உடுத்த அம் மாமுனிவர்களை இமவான் 'என்று முகூர்த்தம் வைத்துக்கொள்ள விடை கொடுக்கின்றீர்கள்?' எனவே அவர்கள் 'இன்று நான்காம் நாள்' என்று சொல்லி அவ்விடம் விட்டுப் பிரயாணப்பட்டார்கள்.

94. ஸப்தரிஷிகள் அவ்வண்ணம் இமவானிடம் விடைபெற்றுப்புறப்பட்டு மறுபடியும் சிவபெருமானிடம் வந்து, தாங்கள் போன காரியத்தை முடித்து வந்ததாக அவரிடம் சொல்லி அவரிடம் விடை பெற்று ஆகாயமார்க்கமாய் தங்களுடைய இருப்பிடத்துக்குச் சென்றார்கள்.

95. பார்வதியைச் சீக்கிரம் அடைய அதிக அவாவுடனிருந்த ஈசனும் அம்மூன்று நாட்களையும் வெகு சிரமத்துடன் கழிக்கலானார். இவ்விதமான ஆசை ஐம்புலன்களையும் வெற்றிகொண்ட ஈசனையே வாட்டிற்றென்றால் மற்றவனைதான் வதைக்காமல் விடும்!

உமையின் விவாகம் என்ற

ஏழாவது சருக்கம்

1. அம்மூன்று நாட்களும் கழிந்தபிறகு இமவான் சுக்கிலபட்சத்தில் பார்வதியின் ஜன்மலக்கினத்திலிருந்து ஏழாவது லக்கினங்கூடிய திதியில் தமது பந்துக்களுடன்கூட தமது பெண்ணின் கலியாண ஸம்ஸ்கார விதியை ஆரம்பிக்கலானார்.

2. ஒவ்வொரு வீட்டிலும் அவ்வோஷதி பிரஸ்தத்தில் பெண்பிள்ளைகள் தாங்கள் பார்வதியின்மேல் வைத்திருந்த அபிமானத்தால் கலியாணத்துக்கு என்று நடத்தவேண்டிய ஸந்தோஷ அலங்காரங்களை நடத்துவதில் மெய்ம்மறந்திருந்தார்கள். குடிகள் அந்நகரத்தில் தங்கள் அரசரிடம் அதிக அன்பு பாராட்டி வந்தவர்களாகையால் அரண்மனைக்கும் மற்ற வீடுகளுக்கும் கலியாண அலங்கார விஷயத்தில் ஓர்வித வித்தியாஸமுமில்லாமலிருந்தது.

3. ராஜ வீதிகளெல்லாம் மந்தாரை மலர்கள் பரப்பப்பட்டு ஒவ்வொரு உயர்ந்த இடங்களிலும் கொடிகள் தூக்கிக்கட்டப்பட்டுப் பிரகாசிக்கின்ற தங்கத் தோரணங்கள் எங்கும் விளங்க அந்நகரம் அன்று தன்னிடம் விட்டு அங்குவந்த சுவர்க்கலோகம் போல் காணலாயிற்று.

4. இமவானுடையகுஞ்சுகுழந்தைகளில் பார்வதி ஒருவள் என்றாலும் அவள் அக்காலத்தில் இமவானுக்கு வெகுநாள் பிரிந்து கண்ட குழந்தைபோலும், உயிர்போய் திரும்பிப் பிழைத்த பெண்போலும் அவள் விவாக சமயம் ஸமீபிக்கவே அதிக அன்புக்குப் பாத்திரமானாள்.

5. பார்வதியை ஒவ்வொரு பதிவிரதையும் தங்கள் மடியில் உட்காரவைத்து ஆசீர்வாதம் பண்ணலானார்கள். நகையின்மேல் நகை அவளுக்கு ஸன்மானம் வரலாயிற்று. இமவான் வம்சத்தைச் சேர்ந்த பந்துக்களுக்கு வெவ்வேறு குழந்தைகள் இருந்தனவென்றாலும், எல்லாப் பந்துக்களுடைய அன்பும் பார்வதியினிடம் ஒரேவிதமாக விளங்கலாயிற்று.

6. சூர்யோதயமான மூன்றாவது முகூர்த்தத்தில் சந்திரனுடன் உத்திரபல்குனநக்ஷத்திரம் சேர்ந்திருந்த சமயத்தில் அநேக குழந்தைகளுக்குத் தாயார்களாக விருந்த சுமங்கலிகள் பார்வதியின் மேனியை சிங்காரிக்க ஆரம்பித்தார்கள்.

7. பார்வதி வெண்கடுகு அமைந்து அருகம்புல் கலந்துவைக்கப்பட்டிருந்த பட்டாடையை இடுப்பில் உடுத்து கையிற் விற்பற்றி* மங்கலஸ்நானத்துக்காக சிங்காரம் பண்ணிக்கொண்டபொழுது அச்சிங்காரத்துக்கே ஒரு அழகாக விளங்கினாள்.

8. கலியாண சிங்காரத்துக்காக வென்று பார்வதி வழக்கப்படி வில்லொன்றை கைப்பற்றியபொழுது சுக்லபக்ஷத்தின் ஆரம்பத்தில் சூரியனுடைய கரத்தால் (கிரணத்தால்) விருத்தி அடைகின்ற சந்திர ரேகைபோல் விளங்கலானாள்.

9. ஸுமங்கலிகள் பார்வதியை மங்கலதைலம் தேய்த்து அதன்மேல் லோத்திரப் பொடிபூசி குளிப்பாட்டி அவள் மேனியில் உயர்ந்த வாசனைப்பொடி பூச ஸ்நானத்திற்குத் தக்க ஆடையுடன் ஸ்நானம் செய்யும் அறைக்குள் அழைத்துப்போனார்கள்.

10. அங்கு நல்முத்து மாலைகள் அழகாய் எங்கும் தொங்கிக்கொண்டிருந்த வைடூரிய பீடத்தில் பார்வதியை உட்காரச்செய்து மங்கல வாத்யங்கள் கோஷிக்க பொற்குடங்களில் ஏற்கனவே எடுத்து வைக்கப்பட்டிருந்த தீர்த்தங்களால் அவ்வுத்தமிகள் அம்பிகைக்கு ஸ்நானம் பண்ணிவைத்தார்கள்.

11. மங்கல ஸ்நானத்தால் வெகு பரிசுத்தமான மேனியுடன் விளங்கிக்கொண்டும், மணக்கோலத்துக்கேற்ற ஆடையணிந்தும் நின்ற பார்வதி, மேகங்கள் நன்றாக மழைபொழிந்து ஓய்ந்தவுடன் அழகாய் காணற் பூத்து விளங்கும் பூமியுகம்போல் சோபிக்கலானாள்.

12. ஸ்நானஞ்செய்த விடத்திலிருந்து அம்மடந்தைகள் பார்வதியை தங்கள்மேல் அணைத்துக்கொண்டு ஏற்கனவே அஸ்மானகிரி கட்டப்பட்டு மாணிக்க ஸ்தம்பங்கள் நான்கு நாட்டப்பட்டு மங்களாஸனம் போடப்பட்டு கலியாண சடங்குகள் நடத்த திட்டாணி கட்டப்பட்டு விளங்கிய முகூர்த்தப்பந்தலில் அழைத்துவந்து உட்காரவைத்தார்கள்.

13. பார்வதியை சிங்காரிக்க நியமிக்கப்பட்டிருந்த பெண்டுகள் அக்கலியாணவேதியில் பார்வதியை கிழக்குமுகமாக உட்காரவைத்து அவள் முன்பாக நின்று எல்லாவித ஆபரணங்களும் தங்களிடம் சித்தமாயிருந்தபோதிலும் அவளுடைய இயற்கையான அழகானது அவைகளை எல்லாம்

* ராஜகன்னிகைகள் விற்பிடித்து ஸ்நானம் செய்யவேண்டும் என்பது விதியாம்.

விட அதிகமாயிருந்தபடியால் கண்கள் கூச்சலடைந்தவர்களாய் இன்னத்தைக்கொண்டு அவளை இன்னும் அதிக அழகாகச் செய்யலாம் என்பது தெரியாமல் ஒரு நிமிஷம் திகைக்கலானார்கள்.

14. ஒரு சுமங்கலி வாசனைப்புகை ஏற்றிப் பார்வதியின் தலைமயிரை உலர்த்தி அருகம்புல்லும் வெண்மதூக மலரும் பின்னலில் வைத்து வெகு அழகாகப் பார்வதியின் கூந்தலைப் பின்னலானாள்.

15. வெண் அகில் குழம்பைப் பார்வதியின் மேனியில் வாஸனைச் சாந்தால் அம்மேனியின் மேல் சில மடந்தைகள் சித்திரமெழுதலானார்கள். அவ்வாறு சிங்காரிக்கப்பட்ட பார்வதியின் தேகம் சக்கிரவாக பறவைகள் உட்கார்ந்திருக்க சோபிக்கும் கங்கையின் மணற்குன்றுகளைவிட அதிக சோபையுடன் விளங்கிற்று.

16. கூந்தல் சிங்காரிக்கப்பட்ட அழகு பெற்ற பார்வதியின் முகம் வண்டு உட்காரப்பெற்றச் சோபிக்கும் தாமரை மலர் மேகரேகையால் கொஞ்சம் மறைக்கப்பட்டுச் சோபிக்கும் சந்திரபிம்மம்இவைகளுடைய அழகையும் கீழாக்கிற்றென்றால் அதற்கு அழகில் ஒப்பிட்டுக் கூற ஒன்றுமே யில்லாமலிருந்தது என்று சொல்லலாம்.

17. ‘லோத்திர’ச்சாந்தால் முதல் முதல்பரிசுத்தமாகப் பண்ணப்பட்டுக் கோரோசனைச் சாந்துப்பூச்சால் அதிகசெவந்திருந்தபார்வதியின் கன்னங்களில் அவள் காதுகளின்மேல் வைக்கப்பட்டுத் தொங்கிக்கொண்டிருந்த யவாங்குரங்கள் (நாத்துகள்) தங்களுக்குள்ள நிறத்தைக்காட்டிலும் மேலான நிறம் அடைந்திருந்தபடியால் பார்ப்பவர்கள் கண்களைப் பறிக்கின்றவைகளாய் விளங்கின.

18. வயிற்றில் அழகாய் மடிப்புகள் விழுந்து வெகுபுஷ்டியுடன் விளங்கிய பார்வதியின் உதடுகள் தேன்மெழுகால் தடவப்பட்டதும் தங்கள் இயற்கை நிறத்தினின்று கொஞ்சம் நீங்கி பட படவென்று அசையும்பொழுது அம்மாது சிரோன்மணி அடைந்திருந்த இளமைப்பருவத்தின் பயன் சமீபித்தது என்பதைத் தெரிவிக்கலாயின.

19. அப்பார்வதியின் தோழிகள் அவள் பாதங்களில் செங்குழம்பு ரஸத்தால் அலங்காரம் செய்யும்பொழுது பரிகாசமாய் உன் கணவருடைய தலையிலிருக்கும் சந்திரகலையை இப்பாதங்களினால் நீ உதைவாய் என்று ஆசீர்வசனத்துடன் சொன்னபொழுது பார்வதி வாயைத்திறவாமல் தமது கையிலிருந்த புஷ்பஹாரத்தால் அவர்களை அடிக்கலானாள்.

20. பார்வதிக்குக் கண்களில் மையிடவந்த மடந்தை நன்றாக மலர்ந்திருக்கும் கருநெய்தல் பூவின் இதழ்போல் பிரகாசித்த அவளுடைய கண்களின் அழகைக்கண்டு திகைத்து அவளுடைய கண்களுக்கு அதிக அழகை உண்டாக்கக் கருதி அம்மையையிடும் புத்தியைவிட்டு ஒழிந்து கலியாணகாலத்தில் ஒரு மங்கலமான அலங்காரம் அது என்று செய்யலானாள்.

21. ஆபரணங்களினால் நன்றாகச் சிங்காரிக்கப்பட்ட பார்வதி மலர்ந்து கொண்டிருக்கும் மலர்களினால் கொடி எவ்வாறு விளங்குமோ அதுபோலும் உதயமாகும் நட்சத்திரங்களினால் இரவு எவ்வண்ணம் சோபிக்குமோ அதுபோலும், வந்து கரைகளோரம் உட்கார்ந்து கொண்டிருக்கும் நீர்ப்பறவைகளால் நதி எவ்வாறு சோபிக்குமோ அதுபோலும் சோபிக்கலானாள்.

22. பார்வதி கண்கொட்டாதபடி நிலைக் கண்ணாடியில் வெகு சோபையுடன் விளங்கும் தனது அழகைப்பார்த்துக்கொண்டு எப்பொழுது சிவபெருமான் வரப்போகின்றார் என்று மனத்தினுள் அவஸரப்படலானாள். உத்தமிகள் தங்கள் மேனியைச் சிங்காரித்துக்கொள்ளுவதின் பயன் தங்கள் அன்பன் தங்களை அவ்வாறு சிங்காரித்துக்கொண்டிருக்கப் பார்க்கவேண்டும் என்பது ஒன்றேதான்.

23, அப்பொழுது மேனை,

24 மங்கலார்த்தமாய் குழைத்து வைக்கப்பட்டிருந்த ஹரிதாலச்சாந்தையும் மனச்சிலைச் சாந்தையும் தமது நடு விரலால் குழைத்தெடுத்துக் கொண்டு வெள்ளை *தந்த ஓலையிட்டுவிளங்கிய பார்வதியின் முகத்தை கொஞ்சம் நிமிர்த்தி பார்வதிக்கு நினைவு தெரிந்த காலம்முதல் எதானது தமது ஒரே எண்ணமாய் எப்பொழுதும் தமது மனத்தினுள்ளிருந்ததோ அதாகின்ற கலியாணக் கோலத்திற்கிடும் பொட்டைத் தமது பெண்ணின் நெற்றியில் இடலானார்.

25. அதன் பிறகு மேனை பார்வதியின் மணிக்கட்டில் கலியாணக் கங்கணமாகிய சரட்டைக் கட்ட ஆரம்பித்துத் தமது கண்களில் ஆநந்த பாஷ்பம் பெருகவே கட்டவேண்டிய இடம் தவறி அதை

வைக்கத் தமது தாதி அதைத் தன் கைவிரலால் சரியான இடத்தில் அகற்ற அதன்மேல் கட்டி முடிக்கலானார்.

26. பார்வதி புதிய வெண்பட்டாடை அணிந்து தம் மேனியைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்ட பொழுது நுரைத்திரள் நிரம்பிய பாற்கடற்கரை போலும் பூர்ணசந்திரன் கூடி விளங்கும் சரத்கால ராத்திரிபோலும் சோபிக்கலானாள்.

27. எச்சமயத்தில் எதுசெய்து வைக்கவேண்டுமோ அதைச் செய்து வைப்பதில் வெகு சாமர்த்தியமுள்ள மேனை தமது குலத்துக்கே கீர்த்தி விளைவிக்கத்தோன்றி யிருந்த பார்வதியைத் தாம் எப்பொழுதும் பூஜைசெய்யும் குலதேவதைகளுக்கு நமஸ்காரம்பண்ணும்படி செய்து அதன் பிறகு பதிவிரதைகளையும் நமஸ்காரம் செய்யும்படிப் பார்த்தாள்.

28. அவ்வுத்தமிகள் "உமை தங்களை வணங்கின போது உனது கணவருடைய அன்பு உன்னிடம் ஒருநாளும் குறையாத அன்பாக இருக்கக்கடவது" என்று ஆசீர்வாதம் பண்ணலானார்கள். ஆனால் அச்சிவபெருமானுடைய பாதி சரீரத்தையே தன்னுடையதாகச் செய்துகொண்ட பார்வதி அவ்வாறு தனது பந்து ஜனங்கள் தனக்குச்செய்த ஆசீர்வாதத்துக்கும் மேலான பதமடைந்தாளன்றோ!

29. வெகு சமர்த்தரான இமவான் தன்மனத்தின் உற்சாகத்துக்குத் தக்கபடிக்கும், தனது சம்பத்துக்கு ஏற்றபடிக்கும் தான் அச்சமயத்தில் பார்வதிக்குச் செய்ய வேண்டியவைகளை எல்லாம் செய்து முடித்துத் தனது நல்லோர்களான நண்பர்கள் நிரம்பிய சபை நடுவே உட்கார்ந்து சிவபெருமானுடைய வரவை எதிர்பார்க்கலானார்.

30. இவ்வண்ணம் உனக்கு சிங்காரம் நடந்து கொண்டிருந்தபொழுது கைலாயத்தில் சிவபெருமானுடைய கல்யாணத்துக்குத் தக்கபடி அவர் சிங்காரம் செய்துகொள்ள பிராஹ்மி முதலான எழு மாதிரிக்களும் சில அலங்காரங்களைக் கொண்டுவந்து முப்புரத்தை முன்பு எரித்த அவர் முன்பாக வைக்கலானார்கள்.

31. அவ்வாறு அவர்கள் கொணர்ந்து வைத்தார்கள் என்ற கௌரவத்தால் சிவபெருமான் அவ்வலங்காரங்களைத் தமது கையில் தொட்டார் (தரிக்கவில்லை என்றபடி) ஆனால் ஸர்வேசுவரனாயிருக்கும் அச்சிவபெருமானுடைய விபூதி கபாலம் முதலிய வேஷங்களே கலியாணம் செய்துகொள்ளப் போகும் மணக்கோலமாக மாறலாயின.

32. அவரது திருநீறுப்பூச்சே அழகான சந்தனப்பூச்சாகவும் அவரிடமிருந்த மண்டைஓடே அழகான கிரீடமாகவும் அவர் உடுத்திருந்த ஆனைத்தோலே ஓரங்களில் அன்னப்பறவை பூ போட்டிருந்த வெண்பட்டாகவும் மாறின.

இந்துலேகை

(295-ம் பக்கத் தொடர்ச்சி)

4-ம் அத்தியாயம்

காதலர்—பிரிவு

"அம்மா, நாளை சூர்யோதயம் பட்டணம் போகிறேன். தயைசெய்து எனக்கு வேண்டியவற்றையெல்லாஞ் சித்தஞ் செய்து வை. தகப்பனார் உள்ளே இருக்கிறாரா?"

"ஆனால், போவது நிச்சயந்தானோ? என்ன, போவதென்று தீர்மானித்துவிட்டனையா?" என்று கேட்டாள் பார்வதியம்மாள்.

"ஆமாம். நிச்சயந்தான். யாதொரு சந்தேகமுமில்லை. நான் காலையில் புறப்படத்தான்வேண்டும்" என்றான் மாதவன்.

"உன் தகப்பனார் காலையில் வெளியே போகும் போது உன்னை வரும்படிச் சொன்னார். ஆகையால், போய் உன் தந்தையைக் கண்டுவா" என்றாள் பார்வதியம்மாள்; உடனே மாதவன் கோவிந்தபாணிகருடைய வீட்டிற்குப் புறப்பட்டான்.

கோவிந்தபாணிகர் கொஞ்சம் சரக்குடையவர்தான். மகா யோக்யர். நல்ல புத்திசாலி. தாராள மனதுடையவர். அவர் வீட்டில் அவரை யாச்ரயித்திருப்பவர் ஒருவருமில்லையாதலால் பணச்செலவு அதிகமில்லை. கொஞ்ச காலத்திற்குள் அளவற்ற திரவியஞ் சேகரித்துவிட்டார்.

மாதவன் போனவுடன் பாணிகர் அவனைப் பார்த்து ஸ்நானம் முடிந்துவிட்டதாவெனக் கேட்டார். மாதவனும் ஆயிற்றென்று பதிற் கூறினான். பிறகு கோவிந்தபாணிகர், "நீ நாளைக்குப் போகப்போகிறாயோ?" எனக் கேட்டார்.

"அண்ணா, தாங்கள் விடையளித்தீர்களானால், நான் போகிறேன். நான் போகத்தான்வேண்டுமென நினைக்கிறேன்" என்றான் மாதவன்.

"அவசியமாய் போகவேண்டுமென்று உனக்குத் தோன்றினால், நீ போகத்தான் வேண்டும். உன் வழிச்செலவுக்கும் மற்றுமுள்ள சில்லரை செலவுகளுக்கும் பணம் உன் குடும்பத் தலைவனைக் கேட்க வேண்டியதில்லை. நான் தருகிறேன். உனக்குவேண்டியவற்றை உனக்கு ஒரு ஜதைக்கடுக்கன் வாங்கியிருக்கிறேன். இதோ பார். கெம்பு எப்படியிருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டு ரூ 500 பெறும்

படியான இரண்டு கடுக்கன்களை அவனிடம் கொடுத்தார். பின்னும் தன் அருமைப் புதல்வனைப்பார்த்து, "அப்பா, கண்மணி, சட்டப்பரீக்ஷையில் அவ்வளவு உயர்வாய்த் தேறியதற்காக உனக்கொரு வெகுமதியளிக்கவேண்டுமென்றிருந்தேன். இதோ இருக்கின்றன அவைகள்" என்று அன்பாய் மொழிந்தார்.

"ஓ! இக்கடுக்கன்கள் மிகவும்அழகாயிருக்கின்றன. உமது பரிசுக்கு நான் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நீர் மகா தாராளகுணமுடையவர். அண்ணா, உன்னோடு காலைபோஜனம் அருந்த ஆசைப்படுகிறேன். நான்போய்ச் சென்னைக்கொரு கடிதம் எழுதவேண்டும். தபால் வேளையாயிற்று. கடிதம் எழுதிப்போட்டு இதோ ஒரு க்ஷணத்தில் திரும்பி வந்துவிடுகிறேன்." என்றான் வணக்கத்துடன் மாதவன்.

மாதவன் தன் வீட்டினருகே வந்துகொண்டிருக்கையில், இந்துலேகையின் தோழி அம்மு வீட்டினின்று வருவதைப் பார்த்தான்.

"என்ன சமாசாரம்? ஏதாவது விசேஷமுண்டோ?" எனக்கேட்டான் மாதவன்.

ஐயா, என் எஜமானியம்மாள் வீட்டின் ஸ்நானலயத்திற்குட் போயிருக்கின்றனள். உங்களுக்கு அவகாசமிருந்தால் என்னுடன் வந்துபார்த்துப்போகச்சொன்னாள்" என்றாள் அத்தோழிப்பெண்.

"ஆ அப்படியானால் நிரம்பவும் நல்லது" என்றான் மாதவன்.

"அவளுடன் இன்னும் யாராவது இருக்கின்றனரோ?"

"வேறொருவருமில்லை, ஐயா," என்றாள் அம்மு.

"முன்னேபோ" என்று கூறி மாதவன் அவளைப் பின்றொடர்ந்து சென்றான். அவன் ஸ்நானலயஞ் சென்றவுடன் இந்துலேகைத் தன் ஓலைகளைக் கழற்றிவிட்டு எண்ணை தேய்த்துக்கொள்ளச் சித்தமாயிருப்பதைக் கண்டனள். இந்துலேகைத் தன் காதலனைக் கண்டவுடன் ஓலையைத் திரும்ப காதிற் போட்டுக்கொண்டு புன்சிரிப்பாய்ச் சிரித்து நின்றனள்.

மாதவன் ஆவலாய்த் தன் காதற்கிழத்தியை அருகே அழைத்து நன்றாய் ஆலிங்கனஞ் செய்துகொண்டான். இந்துலேகை உடனே தன் நாயகனின் அதரத்தில் ஒருமுத்தமிட்டுவிட்டு, அவனது கைகளினின்றும் மார்புனின்றும் விடுபட முயன்றனள். தன் ஆசைமணாளன் தன்னைப்பின்னையும் அதிகமாய் இறுகத் தழுவுவதைக்கண்டு "என்னை விட்டு விடு, என்னை விட்டு விடு." என்று கூவினாள்.

"நான் நாளையதினஞ் சென்னைக்குப் போகின்றேன்" என்றான் மாதவன்.

"அப்படித்தான் எனக்குங் கேள்வி. ஆனால் ஐகோர்ட் இன்னும் பதினைந்து தினங்களுக்கு மூடியிருக்குமாமே. அது உண்மையா? அப்படியாயின், நீ ஏன் நாளைக்கே செல்லவேண்டும்? உனது பாட்டனார் கோபம் மேலிட்டவராயிருப்பதினால், நீ என்ன, இவ்வளவு அவசரமாய்ப் போகவேண்டும்?" என்றாள் இந்துலேகை.

"நேற்றையதினமவர் ஒரு சபதஞ் செய்துகொள்ளவில்லையா?" என்றான் மாதவன்.

"ஆம். என் சமாசாரம் அவருக்குத் தெரியாது போலும். ஆகையால்தான் இத்தகைய சபதஞ்செய்திருப்பர்" என்று பதில் சொன்னாள் இந்துலேகை.

"உன் சமாசாரம் அவருக்குத் தெரியவேண்டியதேன்? உன் யோசனையை யவர் ஏன் கேட்கவேண்டும்? அவரிஷ்டபிரகாரம் நீசெய்துதான் தீரவேண்டும், மாதவீ!" என்றான் மாதவன்.

"ஆம் அவர் விருப்பத்தின்படிதான் நான் ஒழுகவேண்டும். அதுமாதிரியே நான் செய்வேன். ஆனால் சில விஷயங்களில் என் கோரிக்கைபடியேதான் காரியம் முடியும். அதேமாதிரிதான் நானுஞ் செய்வேன். அச்சில விஷயங்களி லொன்றுதான் இந்தச் சபதமும்" எனக்கூறினாள் இந்துலேகை.

"என் கண்மணியே! என் காதற்களஞ்சியமே! இவ்வாறு நீ பேசுவாயானால் உன் பாட்டனார் உன்னை வீட்டினின்றுந் துரத்தி விடுவார்."

"நல்லது, நேற்றையதினம் நான் மனதிற் வரித்திருக்கும் என் நாயகனைத் துரத்தவில்லையா? நாளையதினம் என்னையுந்தான் துரத்திவிடட்டுமே."

"ஆனால் மாதவி, உன் நாயகன் உன்னைக் காப்பாற்ற வழியற்றிருக்கும்போது................"

"ஆனலென்ன? உலகத்தில் வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டவர்களுக்கு ஈச்வரன் சாதாரணமாய் என்ன கொடுக்கிறானோ அவற்றிற்குமேல் அதிகமாய் ஒன்றும் நான் ஆசைப்படவில்லையே. இன்னும் சிறிது நேரமாவது நாம் என் இங்கு தாமதிக்கவேண்டும்? எல்லாருக்கும் நமது உள்ளக்கருத்தை

மரியாதையாய்ச் சொல்லிவிட்டு, நமது விருப்பத்தின்படி நடப்போம். அது நன்றாயிருக்கும்."

"நாம்செய்ய வேண்டியதைப்பற்றி எல்லாம் முன்னமே தீர்மானித்ததாய் விட்டது. என் மாமனும் அதற்கு இசைந்துவிட்டார். எவரும் எதிர்பாராத இந்தச் சச்சரவு அப்புறந்தோன்றிற்று. இப்போதோ, நமது தீர்மானங்கள் எல்லாம் கலைந்துபோயிற்றே."

"கொஞ்சங்கூட இல்லை. நமது தீர்மானங்களை மாற்ற பிரம்மதேவன் வந்தாலும் முடியாது. நாளை கழித்து என்னை நீ பட்டணம் அழைத்துப்போவதாயிருந்தால், நானும் புறப்படச் சித்தமாயிருக்கின்றேன்."

மாதவன், "ஐயோ, அது பெரிய தப்பு தண்டாவாய் முடியுமே. மாதவி, உன்னைவிட்டு ஒரு கணமாவது பிரிந்திருந்தால் நான் படும் துன்பம் ஈசுவரனுக்கே தெரியும். இத்துன்பமே எனக்குச் சகிக்கக்கூடாததாயிருக்க, ஜனங்கள் என் கண்மணியைப் பற்றி அவதூறாய்ப் பேசினால், என் மனம் எப்படியிருக்கும்! வெயிலிலிருக்கும் புழுப்போல துடிப்பேனே! அத்துன்பம் என்னாலாற்றற்பாலதோ! ஆகையால் நாம் எக்காரியத்தையும் முன் பின் தீர ஆலோசித்துத்தான்செய்யவேண்டும். உனக்குத்தான் திருக்குறள் கெட்டுருவாயிற்றே. அதில்

"எண்ணித் துணிகக் கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு"

என்ற அடிகள் உனக்கு ஞாபகமில்லையா? எவற்றிலும் 'பொறுத்தார் பூமியாள்வார், பொங்கினார் காடாள்வார்.' எக்காரியத்தையுந் தீர ஆலோசித்தே செய்யவேண்டும். சற்று நிதானி, அவசரப்படாதே எல்லாம் நமது பக்ஷமாகவே முடியும். ஐந்து ஆறு தினங்களுக்குமுன் மிஸ்டர் ஜில்ஹேம் எனக்கொரு கடிதமெழுதினார். கவர்ன்மெண்ட் ஸெக்ரடேரியட் ஆபீஸில் 150 ரூபா வேலையொன்று கூடிய சீக்கிரத்தில் காலியாகப் போகிறதாம். அந்த வேலையை எனக்கு இஷ்டமானால் எனக்கே காயம்பண்ணுவதாய் எழுதியிருக்கிறார். நான் ஆகட்டுமென்று சொன்னேன். ஆனால் இன்னும் எத்தனை தினங்கள் காக்கவேண்டுமோ தெரியாது. வேலையாய்விட்டால் மாதவி, உடனே வந்து உன்னைக் கூட்டிப்போகிறேன். என் தகப்பனார் பெரிய பணக்காரரென்பதும் உனக்கும் எனக்கும் எவ்வளவு வேண்டுமானாலும் முகங்கோணாது தருவாரென்பதும் உண்மையே. ஆனால் அப்படிச்செய்வது என் மனதிற்குத் திருப்தியாயிராது. நாம் பிழைக்க ஒரு வேலையுந் தேடிக்கொள்ளாமல், என் காதலியைப் பட்டணமழைத்துப் போவதற்கு என் மனம் ஒப்பவில்லை."

"மாதவா, என் கண்ணே, என்ன உன்கையில்?"

"என் தகப்பனார் சற்று முன் எனக்கொரு பரிசளித்தார். இரண்டு கெம்பு கடுக்கன்கள். எவ்வளவு அழகாயிருக்கின்றன பார்."

"இவைகள் என் கண்களிரண்டையும் பறிக்கின்றன. உட்கார், நானே அவைகளை யுன் காதில் போடுகிறேன்."

மாதவன் உட்கார்ந்தான். இந்துலேகை கடுக்கன்களைக் காதிற் போட்டாள். உடனே மாதவன் எழுந்தான்.

"உட்கார், என்ன அவஸரம் துள்ளிப்போகிறது. நானே உன் தலைமயிரை வாரி முடிபோடவேண்டும். அவைகளை முடித்து ஒரு பக்கம் போட்டு அப்புறம் உன் முகமும் கடுக்கன்களும் எப்படி ஒத்திருக்கின்றன வெனப் பார்க்கவேண்டும்."

தலையை யொழுங்காய் வாரி முடிபோட்டுவிட்டு இந்துலேகை மாதவன் முகத்தையுற்று நோக்கினள். கடுக்கன்கள் அவன் முகத்திற்கொரு அழகு தந்தனவென்பதற்கடையாளமாக, மார்பு வெடித்துவிடும்படியாய் பெருமூச்செறிந்தாள். உடனே காம நோயின் கொடுமையால், அவனது சிவந்த கன்னங்களில் தன் ஆசைதீர முத்தங்களிட்டாள். மாதவன் ஆநந்த பரவசமானான். அவனை யறியாமல் அவன் உடலம் புளகாங்கத மெய்தியது.

"ஆனால் நீ நாளைக்குப் போய்தான் ஆகவேண்டியதுபோலும். லாகாலேஜ் இன்னும் மூன்று தினங்களில் மூடப்படுமென்று மாமா எழுதினாரே. அவரை உடனே புறப்பட்டு வரச்சொல்லவும்" என்று முணுமுணுத்தாள் இந்துலேகை.

காதலரிருவரும் இவ்வாறு ஸரஸ சல்லாபங்கள் செய்துகொண்டிருக்கையில், லக்ஷ்மிகுட்டியம்மாள் அறையின் கதவண்டை வந்து, "யார் அங்கே சம்பாஷித்துக்கொண்டிருப்பது" என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்துவிட்டாள். "உங்களிருவர்க்கும் மான ஈனமென்பது கிஞ்சித்துங் கிடையாதா" நீங்களிருவரும் பைத்தியம் பிடித்திருக்கிறீர்கள்போலும். கோவிந்தபாணிகர் தன் மகனை யழைத்துவரும்படி ஒரு ஆளை இங்கே அனுப்பியிருக்கிறார் மாதவா, அவருடன் பகற் போஜனத்திற்கு வருகிறேன் என்று சொல்லிவிட்டு இங்கு வந்து நீ ஸரஸமாடுவதின் அர்த்தமென்ன? நிஜமாய் இந்துலேகைக்கு இன்றையதினம் பசியென்பதே சிறிதுமில்லை. மூட பசங்களா! என் செல்வமே, நீ நாளைக்குச் சென்னைக்குப் போவது உண்மையா?" என்று ஆசையுடன் கண்டித்தாள் லக்ஷ்மி.

"மணியெத்தனை யிப்போது" என்று கேட்டான் மாதவன்.

"பத்தரையாயிற்று."

"மணி பத்தரையாய்விட்டதா? இன்றைக்கோர் கடிதமெழுதியிருக்கவேண்டும். ஆனால் இப்போது நாழியாய்விட்டது. என் தகப்பனார் கோபமாயிருப்பார். நான் புறப்படுதற்குமுன் உன்னை இன்னொரு தடவை வந்து பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு வெகு துரிதமாய்த் தன் பிதா வீட்டிற்குச் சென்றனன்.

கோவிந்தபாணிகர் ஒரு வாழையிலை போட்டுக்கொண்டு மாதவனுக்காகக் காத்திருந்தார். மாதவன் வந்தவுடன் அவனுக்குமோர் இலைபோடச் சொல்லிவிட்டு அவனைப்பார்த்து, "பையா, இவ்வளவு நேரமேன்? எங்குச் சென்றிருந்தனை?" எனக் கேட்டார். "நான்ஒருவருடன் பேசிக்கொண்டிருந்ததில் நாழியாய்விட்டது. அண்ணா, தாங்கள் சாப்பிடு நேரமாயிற்றென்பதை மறந்துவிட்டேன். எனக்காகத் தாங்கள் இவ்வளவுநேரம் பசியுடன் காக்க நேர்ந்தது எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. என்னை மன்னிக்கவும்" என்று வணக்கத்துடன் மறுமொழி கூறினான் மாதவன்.

"உனக்காகமட்டுமல்ல நான் தாமதித்தது. இந்துலேகைக்காகவுந்தான். தப்பிதத்தை உன்மீதுமாத்திரஞ் சுமத்துவது நன்றாயிராது. அடே! கடுக்கனைக் காதிலிட்டுக்கொண்டுவிட்டனையே. இந்துலேகையின் காரியம்போலும் அல்லவா?" என்று சொன்னார் கோவிந்தபாணிகர்.

மாதவன் வெட்கத்தினாலும் வருத்தத்தினாலும் தலை குனிந்துகொண்டு சாப்பிட வாரம்பித்தான்.

சாப்பாடானவுடன், கோவிந்தபாணிகர் தன் மகனை வீட்டினுள்ளே அழைத்துப்போய் மார்போடு மார்த்தழுவி உச்சிமோந்து பின் வருமாறு சொல்லலாயினார்.

"உனக்கு இந்துலேகையைப்பற்றிய கவலை யதிகமாயிருக்கிறது. அதனால் நீ மனந்தளர்ச்சியுறவேண்டிய அவசியமில்லை. நம்பிக்கையாயிரு. எனக்கு அவளுடைய குணாதிசயங்கள் நன்றாய்த் தெரியும். அவளைப்போன்ற மனோதிடமுடையப் பெண் ஒருத்தியையும் யான் இதுகாறுங் கண்டதில்லை. அவளது ரூபலாவண்யத்தைக் கண்டேயன்று அவளுடைய புத்திசாலித்தனத்தையும், நல் நடத்தையையும், மனோதிடத்தையுங் கண்டு நான் அவளைப் பெரிதும் விரும்புகின்றேன். இந்த ஜன்மத்தில் அவள் உன்மீது காதலைமாற்றி பின்னொருவனை மணம் புரிவாளென்று நீ கிஞ்சித்துஞ் சமுசயிக்கவேண்டாம். இதைப்பற்றிக் கவலையை யொழித்திடு. பஞ்சுமேனனாகட்டும், அவளுடைய விதியேயாகட்டும், உன்னையும் அவளையும் பிரித்துவைக்க எவ்வளவு முயன்றாலும் அவர்களுடைய பாக்ஷா பலியாது. அவர்கள் இந்த ஜன்மத்திலில்லை, இந்த உலகிலில்லை, அவளுடைய மனோதிடத்தை மாற்றுவது."

மாதவன் தன் தகப்பனாரின் மார்மீது தலையைச் சாய்த்துக்கொண்டு மௌனமாய் இருந்தான்.

கோவிந்தபாணிகர் பின்னும் மாதவனை நோக்கி, "இப்போது உன்னுடன் சீனனையும் அழைத்துப் போக உத்தேசித்திருக்கிறாயா" எனக் கேட்டார்.

"எனக்கதுதான் உத்தேசம். உமக்கு எது உசிதமாய்த்தோற்றுகிறதோ அவ்வாறே செய்கிறேன்." என்றான் மாதவன்.

"உன்னிஷ்டப்படி செய். நீ அவனை யழைத்துப் போனால், வேண்டிய செலவுகளுக்குப் பணந் தருகிறேன்" என்றார் கோவிந்தபாணிகர்.

"அண்ணா, நீ என் தரவேண்டும். என் சிற்றப்பன் தானே கொடுக்கவேண்டும்" என்றான் மாதவன்.

"ஆனால், அவன் மாட்டேனென்கிறான். அவன் கொடுப்பானென்று எனக்குத் தோன்றவில்லை" என்றார் கோவிந்தபாணிகர்.

"அவன் கொடுக்காவிட்டால்..............." என்றாரம்பித்தான் மாதவன்.

"அதுதான். அதைப்பற்றிச் [illegible]டையிடாதே. பஞ்சுமேனன் குணம் [illegible] உனக்குத்தெரியுமே. அவனுக்குக் [illegible]ய வந்துவிட்டால் தலைகாலொன்றுந் தெ[illegible]றதில்லை. அப்போது தான் செய்வது சரி, தப்பு என்னும் பகுத்தறிவையெல்லாம் அவன் இழ

ந்துவிடுகிறான். ஏதாவது சண்டைசச்சரவு நடந்தால், உலகத்தார் அவன்காரணங்களை நன்கு ஆராய்வதில்லை. சண்டையிற் சம்பந்தப்பட்டவர்களைத் தாறுமாறாய்த் தூஷிப்பதே உலகத்தின் இயற்கை. ஒருவனாவது இவன் நியாயமாய்ச்சண்டையிட்டான், இவன் அநியாயமாய்ச் சண்டையிட்டான் என்பதைக் கருதுவதில்லை. ஆனால் லோகாபவாதம் மிகவுங்கெட்டது" என்றார் அவன் தகப்பனார்.

"அண்ணா, என்னைப்பற்றி இச்செலவு உனக்கு உண்டானது எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது" என்றான் மாதவன்.

"குழந்தாய்! இந்தச் செலவு ஒரு பெரியதா? இச்செலவினால் எனக்கு ஒன்றுங் குறைந்துப் போகவில்லை. உன் குடும்பத்தாருக்கு இருக்கும் அவ்வளவு திரவ்யம் எனக்கில்லையெனினும், உன் குடும்பத்தாரைப்போல அவ்வளவு செலவு எனக்கு இல்லையாகையால் நான் அதிகமாய்ச் சேர்த்துவைக்கிறேன். நான் செலவழிக்கவேண்டியது உனக்கு ஒருவனுக்குத்தானே. அப்படியிருக்க உனது நன்மைக்கும், உனது மனோபீஷ்டங்களை நிறைவேற்றிவைப்பதற்கும் என்செல்வத்தை உபயோகிக்கஎன்ன தடை. உனக்காக எவ்வளவு செலவு நேரிடினுங் கொடுக்க நான்தயாராயிருக்கிறேன். ஆகையால் சீனனை உன்னுடன் அழைத்துப்போ. ஆனால்முதன்முதலில் குடும்பத்தலைவனின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்.—வேண்டாம்; நீ போகாதே. நான் பையனுடைய தகப்பன் சீனுபட்டரை யனுப்பிக் கேட்டுவரச்சொல்கின்றேன். ஆனால், எப்படியிருந்தபோதிலும் நீ பஞ்சுமீனனிடம் 'போய்வருகிறேன்' என்று கூறி விடைபெற்றுக் கொள்ளவேண்டும். அவன் அப்பொழுது சண்டைக்கிழுத்தால் பதில் வார்த்தையொன்றுஞ் சொல்லாமல் திரும்பிவந்து விடு." என்றார் கோவிந்தபாணிகர்.

"நல்லது அண்ணா, அப்படியே செய்கின்றேன். இன்றிரவு உங்களுடன் சாப்பிட வருகிறேன். எனக்காகத் தாங்கள் கார்க்கவேண்டாம். தங்களுக்கும் எப்போது வேளையோ, அப்போது சாப்பிடுங்கள். நான் வந்து [illegible]ப்பிட்டுப்போகிறேன்" என்றான் மாதவன்.

தந்தைக்கும் மகனுக்கும் இ[illegible] சம்பாஷணை நடந்து கொண்டிருக்கும்போது, கோவி[illegible]ாணிகரைக் கண்டுபோகவந்த சீனுபட்டர் வெளித்தா[illegible]வாரத்தில் நின்றுகொண்டிருந்தார். பேச்சு முடிந்தவுடன் சீனுபட்டர் மெதுவாய் இருமினார்.

இருமலைக் கேட்ட கோவிந்தபாணிகர் "யார் அங்கே?" என்று வினவினார்.

"நான்தான்—சீனுபட்டர்."

"உள்ளே வாருங்கள்" என்றார் பாணிகர். உடனே தன் மகனைப்பார்த்து, மாதவா, நாம் அவரைப்பற்றி இப்போதுதான் பேசிக்கொண்டிருந்தோம்."

உடனே அறைக்குள் பிரவேசித்த சீனுபட்டரைப் பார்த்துக் கோவிந்தபாணிகர், "தயைபண்ணி உட்காரவேண்டும்" என்றார்.

"யார் இவர்? மாதவனா? என்ன சமாசாரம்; ஏதோகேள்விப்பட்டேனே. என்னமோ, மாதவனுக்கும் அந்த.......................................க்கும் வாக்கு வாதம் நடந்ததாமே. எஜமானர் முகத்தில் கோபக்குறிகள் மிகுதியாய்க் காணப்படுகின்றன. என்மேலென்ன அவருக்குக் கோபம்? காரணமொன்றும் புலப்படவில்லையே, கோயிலிலிருந்து வந்துகொண்டிருக்கும் போது வழியில் அவரைப் பார்த்தேன். என்னுடன் பேசவேயில்லை. தலை குனிந்துகொண்டு அப்புறம் ஒதுங்கிப் போய்விட்டார். இவ்வளவுகோபம் அவருக்கு வந்ததை நான் ஒருபோதுங் கண்டதில்லை. இதற்குமுன் ஒரு தடவையோ இரண்டு தடவையோ என் மீது அவருக்குக் கோபமுண்டாயிற்று. ஆனால் அவைகளுக்கெல்லாஞ் சரியான காரணங்களிருந்தன. ஆனால், இந்தத் தடவை இவ்வளவு மூர்க்கமாய் இருப்பதற்குக் கிஞ்சித்துங் காரணமில்லையே."

"நீ சீனனின் தந்தையன்றோ? அதுவே போதுமான முகாந்தரம்" என்றான் மாதவன்.

பக்கத்திலிருந்தவர்களெல்லாம் நகைத்தனர். கோவிந்தபாணிகர் சீனுபட்டரைப்பார்த்து, "நீர் இப்பொழுது போய் பஞ்சுமீனனிடம் சீனன் பட்டணம் போகப் போகிறானென்று சொல்லி, அதற்கு அவனுடைய அனுமதியைப்பெற்று வரவேண்டும். மற்றப் பணவிஷயம் ஒன்றையும்பற்றி நீர் அவனைக் கேட்கவேண்டியதில்லை. நான் சீனனுக்கு வேண்டிய பணமெல்லாம் தருகின்றேன் என்று அவனிடஞ்சொல்" என்று கூறினார்.

"அப்பா, அப்பா இப்பொழுதாபோய் அவனிடஞ் சொல்லுகின்றது? ஆனால் சீனனுக்குப்பணம் நானே தருவதாய்ச் சொல்கின்றேன். நான் கொஞ்

சம் மரியாதையாய்ச் சொல்லிக்கொள்ள வேண்டும். என்ன சொன்னாலும் ஒன்றுதான். ஒன்றும் வேறுபடு இராது. ஆனால் அவன் என்னைத் தூஷணையாய்ப் பேசினால், எதிரே பதிலுக்குப் பதில்சொல்லிவிட்டு வந்து விடுகிறேன்" என்றார் சீனுபட்டர்.

"வேண்டாம், வேண்டாம். சண்டை சச்சரவு ஒன்றும் உண்டாக்கிக் கொள்ளாதே. சீனனுக்கு வேண்டியப்பணச்செலவை உனக்கு என்ன தோன்றுகிறதோ அதைச்சொல். ஆனால் பொய் மாத்திரஞ் சொல்லாதே" என்று சொன்னார் கோவிந்தபாணிகர்.

"அது உண்மையாயினும், இல்லாவிடினும் அப்படியே நான் சொல்கின்றேன்."

இம்மொழிகளைக் கேட்டுக்கொண்டிருந்த மாதவன் தகப்பனாரைப் பார்த்துச் சிரிக்கலானான். கோவிந்தபாணிகருஞ் சிரித்தார். கடைசியாய்ச் சீனுபட்டரும் நகைத்துத் தலையையாட்டிக்கொண்டு அப்படியே ஆகட்டுமெனச் சொல்லிவிட்டு உடனே பூவரங்கிக்குப் போய்விட்டார். பஞ்சுமீனனிருக்கும் மாடியறையினருகேயுள்ள வெளித் தாழ்வாரத்தில் நின்றுகொண்டிருந்தார். வெளியில் காத்திருப்பது யாரென்றறிந்துகொள்ள பஞ்சுமீனன் கேட்ட கேள்விக்குப் பட்டர் "நான்தான்—சீனு" என்று பதில்மொழி யளித்தார்.

"என்ன விசேஷம்? இங்கு வந்த காரணம் யாது" என்று அதிகாரக்குரலுடன் கேட்டான் பஞ்சுமீனன்.

"உம்மிடத்தில் சில விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டும். அதற்காகத்தான் வந்தேன். வேறொன்றும் விசேஷமில்லை."

"என்ன சமாசாரம்? சொல்" என்றான் பஞ்சுமீனன் கோபத்துடன்.

"நான் நமது பையன் சீனனுக்கு..............இ............இங்.........இங்கிலீஷ் சொல்லிவைக்கப் போகின்றேன்" என்று நாக்குளற சொல்லிவிட்டான் சீனுபட்டர்.

"ஓய் உமக்கென்ன? இங்கிலீஷ் தெரியுமா" என்று கேட்டான் பஞ்சுமீனன்.

"நான் என் கைப்பணம் போட்டுச் சொல்லிவைக்கப் போகின்றேன் சீனனுக்கு" என்று ஸாவதானமாய்ப் பதில்சொன்னார் சீனுபட்டர்.

"போ; அப்படியே உன் மனோபீஷ்டத்தின்படி சொல்லிவை" என்றான் பஞ்சுமீனன்.

"அவனைப் பட்டணத்துக்கனுப்ப உத்தேசித்திருக்கிறேன்" என்றார் சீனுபட்டர்.

"பட்டணத்திற்காவதனுப்பு, பாடைக்காவதனுப்பு. இல்லாவிட்டால் கிணற்றில் தள்ளிப் பாறையைப்புரட்டு. நீ எப்படிச் செய்தாலென்ன. இங்கே யாருக்கென்ன வந்தது?" என்று உறுமினான் பஞ்சுமீனன்.

பெரியவர் தாங்கள் சொல்லியபடியே செய்ய அடியேன் காத்திருக்கிறேன். உங்கள் ஆசீர்வாதத்தின்படியே கிணற்றில் தள்ளிப் பாறையைப்புரட்டி விடுகிறேன். ஆனால், ஒரு விண்ணப்பம்; யமனது பட்டணத்தில் இங்கிலீஷ் கற்பிப்பதுண்டோ? இந்தச் சந்தேகம் எனக்குப் பெரிதாயிருக்கிறது. தாங்கள் தயவு செய்து இந்தச் சந்தேகத்தைத் தீர்க்கவேண்டும்" என்றார் சீனுபட்டர்.

"என்னடா உளறுகிறாய்? அடே, நீசப்பயலே! கிட்டவரத் தகாத பறையா! இந்தப் பிரசங்கங்களெல்லாம் என்னிடம் வேண்டாம். உன் அதிகப்பிரசங்கத்தனத்தை யெல்லாம் மூட்டையாய்க் கட்டிக் கக்ஷத்தில் வைத்துப்போ. ஓஹோ! என்னைத் தூஷிக்க மாதவன் உன்னை அனுப்பினான்போலும். கண் மறவாய்ப்போ. என்முன்னிலையில் நில்லாதே. அப்புறம்விலகும் அற்பக் கைம்பெண்டாட்டிப் பயலே. நீ மரியாதையாய்ப் போகப் போகிறாயா? என்ன? 'அடே, யாரடா அங்கே? இந்தப் பறப்பையலுக்கு அர்த்த சந்திரப்பிரயோகஞ் செய்தனுப்பு வெளியே" என்று ஊத்துக் கூவினான் பஞ்சுமீனன்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட சீனுபட்டர் சரேலென்று மாடியினின்றிறங்கி, "நான் பறப்பயலாயிருந்தால், உன் வீட்டுப் பெண்களுக்கும் எனக்கும் ஏதாவது சம்பந்தமிருக்குமா?" என்று முணுமுணுத்துக்கொண்டே போய்விட்டான்.

பஞ்சுமீனனுக்குண்டாகிய கோபத்தின் உக்கிரத்தையும் மும்முரத்தையுங் கண்டு பயந்து அவனிடம் விடைபெற்றுக் கொள்ளாமலே, மறுநாள் அருணோதய காலத்தில் சீனனை யழைத்துக்கொண்டு சென்னைக்குப் போய்விட்டான் மாதவன்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

உலகவாழ்க்கையின் உண்மை நிலை:—பாரத யுத்தம் முடிந்ததும் அதில் உயிர் இழந்த தமது பிள்ளைகள் முதலியவர்கள் விஷயமாகத்திருதராஷ்டிரன் பெருந்துக்கத்தில் மூழ்கி வருத்தப்படுங்கால் விதுரர் அவனை அணுகி உலகவாழ்க்கையின் உண்மை நிலையைப்பின்வரும் கதையால்நன்கு உணர்த்தி அவனைத் தேற்றினார்:—

ஒரு பிராமணன், ஒருஸமயத்தில் அணுகமுடியாத துஷ்ட மிருகங்கள் நிறைந்தது ஓர் காட்டுக்குள் வந்து சிக்கிக்கொண்டான். அதில் எங்கும் மிருகங்களின் சப்தம் அதிகமாகக் கேட்டுக்கொண்டே இருந்தது, இதனால்பிராமணன்மனம் மிகப்பதறியது. அவன் உடனே அங்குமிங்கும் பயத்தால் ஓடத்தலைப்பட்டான். அந்தக்காட்டைச்சுற்றி வலைபோட்டிருந்தமையாலும், வெளியில் கோரமான ஒரு ஸ்திரீ தனது கையைப் பரப்பிக்கொண்டிருந்தமையாலும் அந்தப் பிராமணனால் காட்டைவிட்டு வெளி வர முடியவில்லை. மேலும் அந்தக்காட்டில் பெரிதாகிய ஐந்து தலை நாகங்கள் உலாவிக்கொண்டிருந்தன. அங்கு ஒரு படுகுழி, பலமான செடி கொடிகளால் மூடப்பட்டிருந்தது. பயத்தால் வெருண்டு ஓடிவந்த பிராமணன் தலைகீழாய் அந்தக் குழியில் விழுந்து, செடிகொடிகளில், பலமாய்ச் சிக்கிக்கொண்டான். அப்பொழுது அவனுக்கு அநேக கஷ்டங்கள் உண்டாயின. அந்தக்குழி அடியில் ஒரு பெரும்பாம்பு இருப்பதையும், அந்தக் குழியின் கரையில் தன்னை நோக்கி ஒரு யானை வருவதையும் அவன் கண்டு மிகுந்த துக்கத்தை அடைந்தான். அந்த யானைக்கு ஆறுமுகமும், பன்னிரண்டு கால்களும் இருந்தன. அவன் தொங்கிக்கொண்டிருக்கும் கொடிகளை வெள்ளை எலிகளும் கருப்பு எலிகளும் அறுத்துக்கொண்டே இருந்தன. அந்தச் செடிகொடிகளின் மத்தியில் சிலதேனடைகள் இருந்தன. அதிலிருந்த தேனீக்கள் உலாவி வருகையில் அந்தப் பிராமணனைக் கொட்டிக் கொண்டிருந்தன. இந்தக் கஷ்டங்களின் மத்தியில் தேனடைகளிலிருந்து தேன் துளிகள் பிராமணன் கன்னத்தில் விழுந்தன. அதை நாக்கால் மிகுந்த கஷ்டத்தின்பேரில் நக்கிக்கொண்டு அவன் அத்தித்திப்பைப் பெரிதாகத் எண்ணி தான் படுங்கஷ்டங்களை மறந்து இன்னும் நமக்குத் தேன் கிடைக்காதா என்றும் அவ்வாறே தான் வீழ்ந்து சுகமடைய வேண்டும்என்றும்எண்ணிக்கொண்டு அங்குக் காலம் கழித்துவந்தான். இந்தக்கதையைவிதுரர் சொல்லி உலகவாழ்க்கை அந்தப் பிராமணன் வாழ்க்கை போன்றது என்று அறிந்து ஞானிகள் பாபங்களிலிருந்து விடுபடுகிறார்கள் என்று வற்புறுத்தினார்.

ஆகையால் பிராமணன் அங்குமிங்கும் ஓடியகாடு ஒருமனிதன் வாழ்க்கையையும், துஷ்டமிருகங்கள் அவனுக்கு வரும் வியாதிகளையும், காட்டின் வெளியிலிருந்த கோரஸ்திரீ கிழத்தனத்தையும், குழிதேகத்தையும், குழி அடியிலிருந்த பாம்பு காலத்தையும், செடிகொடிகள், மனிதனுக்குள்ள தேகாபிமானத்தையும், யானை, ஆறு ருது, பன்னிரண்டு மாதங்களுடைய வருஷத்தையும், வெள்ளை எலி கருப்பு எலிகள் இராப்பகலையும், தேனீக்கள் ஆசைகளையும், தேன்துளிகள், ஆசையின் பூர்த்தியால் உண்டாகும் இஹலோகஸுகத்தையும், அவைகொட்டுவது நமது ஆசை பூர்த்தியாகாததால் உண்டாகும் கஷ்டத்தையும் உணர்த்துகின்றன.

இலவுகாத்த கிளிபோலாதல்.—இங்கு 'இலவு' என்பது 'இலவம்'-பஞ்சுமரத்தின் காய்களைக்குறிக்கிறது. இது பார்ப்பதற்கு மிகவும் பச்சைவர்ணம் உடையதாயும், உயர்ந்ததாயும் அதிக இலைகள் இல்லாதகிளைகளை உடையதாயும், முட்கள் உடையதாயும் உள்ள ஓர் மரம். இதன்காய்கள் பச்சைவர்ணம் உடையனவாய் 8-விரல் நீளமும் ஸாதாரண வாழைப்பழம் அவ்வளவு பருமனும் உடையனவாக இருக்கும். இந்தக்காயை ஏதோ தின்னக்கூடிய காய் என்று பழங்களில் மிகுந்த பிரீதியுடைய கிளி எண்ணி இதன் அருகில்வந்து, இது பழுத்து மிருதுவாகும் வரையில் மற்றையப் பழங்களிடம் காத்திருப்பதுபோலக் காத்திருக்குமாம். இந்தக்காய் வரவரப் பழுக்கக் கிளிக்கு ஆசை அதிகரிக்கும். ஆனால் அதுமிருதுவாகாமலிருப்பதைக்கண்டு அதைத்தின்று பார்க்காமலிருக்க பின்னர், அதுஉலர்ந்துகொண்டே வந்து முடிவில் வெடிக்கும். உடனே அதிலிருந்து இலவம்பஞ்சு பரக்கத் தொடங்கிவிடும். இதனால் வெடிக்குங்கால் மிகுந்தஆவலுடன் தின்பண்டம் கிடைக்கும் என்று காத்திருந்த கிளியின் நிலைமிகப்

பரிதாபப்படக் கூடியதாகவிருக்கும். மிகுந்த ஆவலுடன் கிளியைக் காத்திருக்கும்படியும், ஏதோ பசி அடக்கக்கூடிய உணவு கிடைக்கும் என்ற பூர்ண நம்பிக்கை அதற்கு வரும்படியும் செய்த இலவங்காய் முடிவில் வெடித்துப்பஞ்சாகப்பறந்துவிட்டால் அதன் நிலை என்னமாக இருக்கும்! ஆகவே இலவுகாத்த கிளிபோலாதல் என்றால் ஓர் விஷயம் அல்லது மனிதனிடமிருந்து ஒருவன் தனக்கு மிகுந்த உபயோககரமான விஷயங்கள் உண்டாகும் என்று எண்ணியிருந்து முடிவில் அவ்வாறு ஆகாததுகண்டு பரிதவிப்பது என்பது பொருள், அதாவது நம்பி மோசம்போதல் என்பதே இதன் பொருள்.

இலவுகாத்தகிளிபோலாவதற்குச் சில உதாரணங்கள் கூறலாம். ஒரு தகப்பனுக்கு ஓர் அருமைப் பிள்ளை இருப்பதாக எண்ணிக்கொள்வோம். அவன் வியாதி ஒன்றும் இல்லாது ஸுகமாக வளர்ந்து நற்குணம்உடையவனாகி சிறந்தபண்டிதனாகிக்கொண்டு வருவதாகவும் வைத்துக்கொள்வோம். இவனிடம் தகப்பனுக்கு விசேஷ நம்பிக்கை உண்டாகும். 'இவன் எனது குலத்திற்கே நல்ல பெயர் வரும்படி செய்வான், மஹா கீர்த்திமானாக இருப்பான். நமது வயஸு காலத்தில் நம்மைக் காப்பாற்றுவான். இவனால் நமது குடும்பம் சிறப்படையும்' என்ற எண்ணங்கள் தகப்பன் மனதில் இராதா? இப்படி இருக்கையில் உலகில் ஸர்வஸாதாரணமாக உள்ளவைகளுக்கேற்ப, அந்தப்பிள்ளை இறக்கும்படி யாகவோ, அல்லது சித்தப்பிரமைபிடித்தவனாகும்படியாகவோ, அல்லது குணம்மாறிக்கெட்டவனாகும்படியாகவோ, அல்லது தாய் தகப்பன்களைக் கவனியாத கொடியவனாகும்படியாகவோ திடீரென்று நேர்ந்துவிட்டால் தகப்பன் உடனே இலவுகாத்தகிளி போலாவான். அன்பு மிகுந்த புருஷனை இழந்த பெண்மணியும், அருமைப்புதல்வனை இழந்த அன்னையும், நம்பிக்கையான மனிதன் மோசக்கருத்துடையவன் என்றறிந்த எஜமானனும், நியாயஸ்தலங்களுக்கு வழக்குக்கொண்டு போகிறவனும், பரீக்ஷை கொடுத்துவிட்டால் பெரியநிலைவரும்என்றுஎண்ணுபவனும், ஸன்மார்க்கத்திலிருந்தால் உலகஸுகம் வரும் என்றுஎதிர்ப்பார்ப்பவனும், உலக விஷயங்களிலிருந்து நி[illegible]மான ஸுகம் உண்டாகும் என்று எண்ணுபவனும் இலவுகாத்த கிளிகளே. 'வெளுத்ததெல்லாம்பால்கருத்ததெல்லாம் தண்ணீர்' என்றபடித் தோற்றங்களைக் கண்டு ஏமாறும் ஒவ்வொருவனும் இலவுகாத்த கிளியே.

கோகிலம் என்ற பறவைக்கு முட்டை பொறிக்கத் தெரியாதாம். அது முட்டையிட்டுக் காக்கையின் கூட்டில் தனது முட்டைகளைக் கொண்டு வைத்துவிடுமாம். காக்கை அதைத்தன் முட்டை என்று கருதி பொறித்துவிடுமாம். கோகிலமும் கருப்பாக இருப்பதால் அதன் குஞ்சும் முதலில் காக்கை குஞ்சுபோல இருக்கும். காக்கை அதைத் தன் குஞ்சு என்று கருதி வளர்த்து வருமாம். அடுத்த வஸந்தகாலம் வந்ததும் கோகிலக்குஞ்சு சப்திக்கும். அப்பொழுது அது தன் குஞ்சு அல்ல என்று காக்கைக்குத் தெரியவர அது கோகிலக்குஞ்சைத்துரத்தியடிக்குமாம். இங்கு காக்கையின் நிலை இலவுகாத்த கிளியின் நிலையே.

இந்த விஷயமாக ஓர் கட்டுக்கதை கூட உண்டு. இரண்டு பூனைகள் சேர்ந்து ஒரு அப்பத்தைத் திருடி வந்தன. வெளிவந்ததும் இதைப் பங்கு போட்டுக் கொள்ளுவதில் இரண்டிற்கும் வாக்குவாதம் வந்துவிட்டது. இவை இரண்டும் அருகாமையிலிருந்த குரங்கண்டை சென்று தமது வழக்கைத் தீர்க்கும்படிகுரங்கைவேண்டின. குரங்குஒருதராசைக்கொண்டுவந்து அப்பத்தை இரண்டுதுண்டாக்கி ஒவ்வொரு துண்டை ஒவ்வொரு தட்டில் போட்டது. உடனே ஒருபுறம் அதிக கனமாக இருப்பதைக்கண்டு அந்தத் தட்டிலிருந்த துண்டைக் குறைக்க அதில் ஒரு பாகத்தைக் கடித்துத் தின்றுவிட்டது. இப்படிச் செய்யும் பொழுதே கொஞ்சம் அதிகமாகக் கடித்துவிட இரண்டாவது தட்டு தணிந்துவிட்டது. அப்பொழுது அதை ஸமப்படுத்தவேண்டும் என்று பூனைகளுக்குச் சொல்லிவிட்டுஅங்கிருந்த துண்டைக்கொஞ்சம் அதிகமாகக்கடித்துவிட்டது. மறுபடியும் முதல் தட்டு தணிந்துவிட்டது. இம்மாதிரி பூனைகளுக்காக ஏதோ சிரத்தையாகப் பாடுபடுவதுபோலப் பாசாங்கு செய்து கொண்டுமெதுவாக அப்பம் முழுவதையும் குரங்குதின்றுவிட்டது. பூனைகளோ இலவுகாத்த கிளிபோல வெகு நாழிகை மிகுந்த ஆவலுடன் காத்திருந்து முடிவில் அப்பத்தை இழந்து மோசம்போயின.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

சகுந்தலை அல்லது பிரிவினிலை

3. புரழறப் புகுந்த காதை

தனக்குயர்ந்த பெரியோன் ஒருவனிருக்க அவனுடைய விடைபெறாது, ஓர் காரியம் செய்தால் செய்தவன் மனம் என்ன நிலையுள் நிலைக்கும்? திருடத் தெரியாத ஒருவன் திருடி பலர்முன்பட்டால் அவன் மனம் எவ்விதம் துடிக்கும்? அவ்விதமே சகுந்தலையும் கண்வரைக்கண்டதும் மனம் பதைத்தாள். ஸோம தீர்த்தத்திற்குச் சென்றிருந்தவர் திரும்பி வரும்வழியில் நடந்தவை முற்றும் தனது ஞானத்தால் உணர்ந்தார். தன்னைக் கண்டதும் வெட்கமும் பயமும் கொண்டு பேசாதிருந்தவளைப்பார்த்து "உன் வயிற்றுள், உலகவுதவிக்காக வன்னிமரத்துள் நெருப்பு விளங்குவதுபோல், புகழ்கொண்ட கருவொன்று உள்ளதென்றெனக்குத் தெரியும். நீ பயப்படவேண்டாம். காதலர் இருவரும் மனம் ஒருமித்துக்கூடும் மணமே அரசர்க்கு உரியது. மந்திரம் முதலிய இல்லாத மணமாயிருந்தாலும் இவ்விதமாகிய காந்தர்வ மணமே அரசர்களுக்குள் சிறந்தது. உன் ஸந்தேஹத்தை ஒழி" என்றார் கண்வர்.

தகப்பனாயிருப்பினும் பெண்பாலார் அவனிடத்துத் தம் உள்மன நோக்கத்தைக் கூறுவது அரிது. வளர்த்த தந்தையிடம் கூறவெட்கமுண்டாவது அதிசயமன்று. சகுந்தலை இதுவரையும் வாயைத்திறவாதிருந்ததற்கிதுவே காரணம். பேசாததைக் கண்ட கண்வர் "குழந்தாய்! நீ என் விருப்பமின்றிச் செய்ததாக எண்ணி மனமுருகவேண்டாம். நீ நெறிதவறி ஒன்றும் செய்யவில்லை. இனியேனும் உன்பயத்தை ஒழி" என்றார். சகுந்தலை தலைக்குனிந்து நின்றாள். தன்னடத்தை இவர்க்கெவ்வாறு தெரிந்ததென்றவளுக்கு ஆஸ்சரியம்.

சற்று அயர்ந்துநின்றாள். ஸரி! என நிஸ்சயித்தாள். "எனக்குந் தெரியாது நான் செய்ததைக் குறித்து மன்னிக்கவேண்டும். நீங்கள் சொல்லிய மொழிகள் என் பதபதைப்பை ஒருவாறொழித்தது. எனக்குந்தெரியாது அம்மன்னன்மேல் நன்மையே விரும்பும்படி தோன்றுகிறது. ஏதோ நான் தெரியாது செய்துவிட்டேனாகிலும் அவர் என் தலைவன் ஆனார், என் உயிர்க்குள் இடம் கொண்ட இறைவனார். அவர்க்கு நல்லதே உண்டாகும் வண்ணம் உமது மனமிசைந்து வாழ்த்தவேண்டும்" என்று மெதுவாகச் சொல்லினாள். தவமுனிவரும் "உன் கணவன் மானிடர்க்குள் மணியானவன், பெரும் வள்ளல்; அவன் மகன் அவனினும் சிறந்தவனாவன். நீ எது கேட்பினும் நான் அளிக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்றார். சகுந்தலையும் மெதுவாகத் தன் நிலைமையை அடைந்து மனவமைதியோடு "புருவம்சத்து அரசர்கள் கோல் தாழாது, என்றும் அரசுபிரியாதிருக்கவேண்டும் என்ற ஈதோர் வரம் தா" என்று கூறினாள். முனிவரும் ஓம் என்றனர்.

துஷ்யந்தனைவிட்டுச் சகுந்தலை பிரிந்து நெடுநாளாயிற்று. சகுந்தலைக்கோர் ஆண் குழந்தை பிறந்தது. அது கொழுந்துவிட்டெரியும் நெருப்புபோல அழகு மிக்கு ஜ்வலித்தது. ஸாமுத்திரிகா லக்ஷணங்கள் முழுதுங் கொண்டு விளங்கிய இக்குழந்தைக்குக் கண்வர் நூல் முறைப்படி செய்யவேண்டியவைஎல்லாம்செய்தனர். மூன்றாவதுவயதிலேயே அவனது திறமை விளங்கியது. ஆறு வயதானதும் எதனிடத்தும் பயமின்றி சிம்ஹம் முதலிய எல்லா மிருகங்களையும் அடக்கியாளும் தன்மை உண்டாகியது. இதனாலே இவனுக்கு ஸர்வதமனன் என அங்குள்ளவர் பெயரிட்டார். இது நிற்க.

இன்னம் மன்னன் ஸகுந்தலையிடம் சொல்லிய வாக்கைக் காப்பாற்றவில்லை. ஒவ்வோர் தினமும் சகுந்தலைக்கிதுவே மனத்தைக் கலக்கும். மனக்குழப்பமின்றி இரவும் பகலும் அமையா. தன்னைப் பற்றிய கவலை அரசர்க்கு இல்லை என எண்ணினாள். ஆயினும் தான் நடத்தவேண்டிய தர்ம காரியங்களுள் அலுவலின்றி இருப்பினுமிருக்கலாம் என்று எண்ணிக்கொண்டு மேல் வருமாறு தனக்குள் நினைத்தாள். "கணவனை விட்டுப்பிரிந்த வாழ்க்கை பழிக்கும் இழிவிக்கும் வேரூன்றும். தாய்வீட்டாசை தன்னையே கெடுக்கும். இனி நான் இங்கிருக்கலாகாது. மன்னன்பால் செல்லவேண்டும். செல்லும்வழி அறியேன். நான் எளியள்; என் செய்வது. புகுமிடம் ஓர் பக்கமிருக்க அதை அடையாதிருப்பதழகாமோ? அன்றி அரசனும் என்னை ஒருவேளை மறந்துவிட்டனனோ? அவ்வாறாயில் எல்லாரும் கூறும் அவரது பெருமை நிலைக்குமா? என்னைவந்தழைத்துச் செல்லாதகாரணமென்னவோ?—எதுவிருக்கலாம்? அவர் மனத்தில் ஏதேனும்ஸந்தேஹமுண்டாயிருக்குமோ?

அன்றி ஏன் இவ்வளவுநாள் சென்றும் என்னை அழைத்துக்கொள்ளவில்லை. அன்றி அவருக்கே ஏதேனும் மனவமைதி இல்லையோ? இராச தருமத்திலுழைப்பதினால் அலுவலில்லையோ? அன்றி நான் கூறியவற்றுளேதேனுமவர் மனத்தில் வெறுப்புண்டாக்கியதோ? ஒன்றுமென்னால் அறியமுடியவில்லை. ஒருவேளை என் பொறுமையைப் பரீக்ஷிக்கின்றனரோ? அப்படி இருப்பினும் இருக்கலாம். ஏதோ கண்டதும் மனமொத்து மணந்ததால் நமது குணமறிந்திலார் ஒருவேளை. ஆகையால் நமது குணமும் நெறியும் அறியுமாறு இவ்வாறு நம்மைத்தனியே விட்டிருப்பின் எந்த நிலைமையுள் இருக்கிறாள் என்று அறியவேண்டி செய்திருந்தாலும் செய்திருக்கலாம் அல்லவா? இருப்பினும் இருக்கும். அன்றி முற்றும் மறந்திருந்தாலும் மறந்திருக்கலாம். அவ்வாறுமறந்திருப்பின் அவர் மனத்திற்கு அதை ஞாபக மூட்டுவதெவ்விதம்? இதற்கென்ன செய்வது? ஒருவேளை நீயென்மனைவி அல்ல என்று தடுப்பின்எவ்வாறவர்க்கு விடைகூறுவது? ஒன்றும் தெரியாதலைவதா? வருவது தானேவரட்டும்!—என்ன செய்வது. யாதும் நம்மால் ஆவதல்ல. கால மென்னும் கணக்கனிட்டவாறுதான் ஆகும். நாம் சாந்தியோடு இருப்போம். நமது கணவன்பாலிருக்குமன்பே நமது ஸுகத்திற்குக் காரணமாகும். ஆயினும் நமக்குக்கஷ்டம் வருவதாயிருந்தாலும் அதை அடைய வித்தமாயிருக்கவேண்டும். கஷ்டமின்றி ஸுகமெங்குண்டாகும்."

இவ்வாறு மனமயங்கி நிற்கும் சகுந்தலையிடம் கண்வர் வந்தார். ஸர்வதமனனது விளையாடலை முற்றுங்கண்டு வியந்து 'இனி இவனைத் துஷ்யந்தனிடை அனுப்பினால் இளவரசுபட்டத்திற்குத் தகுந்தவனாவன்' என்று எண்ணி "சகுந்தலை! பெண், தாய் வீட்டிலிருப்பது அவளுக்கழகல்ல. அவள் புகழுக்குத் தாழ்ச்சியுண்டாக்கும். தாய் வீட்டாசை பெண்களுக்குத் தாங்க முடியாக் கஷ்டங்களுக்காளாக்கிவிடும். தான் பிறந்தவீட்டிலன்றி, தன் தந்தை தாயர்க்குஉறைவினராகியர்வீட்டிலிருப்பதும் புகழுக்கிடமாகாது. கணவனை விட்டு தனித்திருப்பது பழிக்கே இடமாகும். ஆகையால் நீ உன் தலைவன் வீட்டிற்குச் செல்லவேண்டும்" என்று கூறி பக்கத்திலிருந்த சிஷ்யருள் சிலரை நீங்கள் "சகுந்தலையையும் அவள் குழந்தையையும் துஷ்யந்தன் பால் விட்டு வா, வேண்டியவைகளைச் சித்தஞ்செய்யும்" என்றார்.

"சகுந்தலை நீயும்சென்று உனக்கு வேண்டியவைகளை எடுத்துக்கொண்டு புறப்படுவாயாக!"

சாகுந்தலைக்கு வேண்டிய பொருளும் அளித்து, அவள் எவ்வாறு அரசனிடம் செல்லவேண்டுமோ அவ்வாறு அமைத்து தனது சிஷ்யர்களைக் கூவி நீங்கள் இவ்விருவரையும் கொண்டு துஷ்யந்தனிடம் "உள்ளன்பு ஊறி இருவரும் சேர்ந்ததினால் உண்டான மகனிவன், இவளுன்மனைவி. தவத்திற்சிறந்த எமது குலத்திற்கும், புகழில் பெருத்த உமது குலத்திற்கும், இரண்டிற்கு நன்மையுண்டாகும் வண்ணம் இவரிருவரையும் கொள்வாயாக! அதற்குமேல் உண்டாவது பரம்பொருளின் செயல், எமதல்ல" என்று நான்கூறியதாகச் சொல்லி, இவ்விருவரையும் விட்டு மற்றும் "மீண்டுவருவீராக" என்றார்.

"சகுந்தலை! நீ யிதுவரையும் இங்கு விளையாட்டிலேயே பொழுது போக்கினாய். ஆடல் முழுதும் இனிவிட்டுவிடு. கணவனுக்குபயோகமாக வேண்டுமென்பதே நோக்கங்கொண்டு தக்கவாறு நட. பெரியோரை வணங்கி இரு. வாய் படபடப்பு வேண்டாம். கோபங்கொண்டவரிடத்தும் அன்பாகவிரு. கணவன் கோபித்துக் கொள்ளினும் அருவருப்பின்றியிரு. அவன் கோபித்துக்கொள்ளும்போது நீ கோபித்துக்கொண்டால்அவன் கோபமதிகமாகுமே அன்றி குறையாது. அது உனக்கு நன்மையாகாது. சிறந்த பெருமை வந்ததாக எண்ணி கர்வம் வேண்டாம். அது கீழ்மைக்கு வழியைத்தேடும். மாமி மாமன்களைத் தெய்வம்போல் பாராட்டு. அவர்ஸுகமடைந்தால் உனக்கு ஸுகமுண்டாகும். அவர் மனத்திற்கு ஆயாஸமுண்டாயில் அவரது ஆயாஸம் உனது ஸுகத்தை அழிக்கவந்த பெருநெருப்பென்றறி. பதைபதைத்த மொழியும், பாசாங்கும் பழிக்கு ஆளாக்கிவிடும். எது நடப்பினும் மனத்துள் வைத்து நட. உன்னை வைவோரது மொழிகளை ஒருகாதால் வாங்கி மறுகாதால் விட்டுவிடு. உன் பெரியோர் சொல்லும் கொடுமொழிகள் உனக்கு நன்மை பயக்கவந்த மந்திரமென்றிரு. அவர் ஹ்ருதயத்தில் உனக்குத் துன்பமுண்டாக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. அவர் எண்ணுவது கொடுமையே என்று எண்ணுவதற்கு உனக்கதிகாரமில்லை. உன் சக்களத்திகளிடத்து அன்புடன் கூடி வாழ். வீட்டு மொழிகளை வெளியிட வேண்டாம். அவ்வாறு செய்யின் அது உனக்கே

துன்பமுண்டாக்கும். கூடிப்பார்ப்பவர்க்கு வேடிக்கை அது; உனக்குக் கஷ்டத்துக்கு வேராகும். உன் கீழ் இருப்பாரிடம் மரியாதையோடிரு. உன் பெற்றார் உற்றார் எல்லாரையும் மறந்து கணவன், மாமன், மாமி முதலியோரை நினை. அதுதான் உனது தருமம். அவர் மனம் கோணாது நடத்தலே உனக்கழகு. அவ்வாறு நடத்தல்தான் நீ வந்த வீட்டில் பெருமையை விளக்கும். அவ்வாறு நடவாதவள் இரு வீட்டையுங் கெடுக்கவந்த பாவி ஆகிறாள். 'குலத்தைக் கெடுக்கவந்தக் கோடரிக்காம்பு' போலாவாள். உன்னைக்கடுமையாக உன் கணவன் நடத்தினாற்கூட உன்னை நன்றாக நடத்துவதாக நீ வெளிக்காட்டினால் அதுவே அவன் மனதைமயக்கி உன் வசப்படுத்தும். மாயாவியாய், ஒன்றும் செய்யாதவனைப் பற்றி நீ தூறேற்றித் திரிவாயானால் கணவன் உன்பால் ஆசைகொள்வனென்று கனவிலுமெண்ணவேண்டாம். நன்றாயிருந்துநலம்பெற்றுபுகழ் அடைவாயாக! இதுதான் யான் கூறவேண்டியது. இனி நீ செல்லலா" மென்றார் கண்வர்.

சகுந்தலையும் கண்வர்கூறிய ஒவ்வோர் மொழியையும் மனதிற் பதித்துக்கொண்டு தனது தந்தையின் ஆசீர்வசனங்களைப் பெற்றுக் குழந்தையுடன் தனது கணவனூர்ப்புகக் காலடி எடுத்துவைத்தாள். அப்பொழுதவளுக்கிரு கண்களும் துடித்தன. அச்சமும் வியப்பும் உண்டாகியது. ஆயினும் சிஷ்யரிருவரும் முன்வழிகாட்டிச் செல்ல தானும் தன் குழந்தையுமாக அவர் போனவழியில் நடக்கலானாள்.

பவழம்.—இது சமுத்திரத்திலுள்ள ஒருவகைப் பூச்சிகளிலிருந்து உண்டாகும் பதார்த்தம். அஃது அந்தப் பூச்சிகளின் தேகத்திலிருந்து வெளிவருகின்றது. அதுவே அந்தப் பூச்சிகள் வசிப்பதற்கு வீடாய் ஏற்படுகின்றது. அது பல வர்ணங்களாயிருக்கும். அவைகளுள் சிவப்பு வர்ணமானதை நம் தேசத்தவர் கொண்டாடி ஆபரணங்களாய்ச் செய்து கொள்ளுகிறார்கள். அது பல வடிவங்களாய்ப் படரும்; சிலவேளை ஒரு செடியைப்போல் படர்ந்திருக்கும். ஆதலால் சாமான்னிய ஜனங்கள் அஃதொரு செடியேயென்று தப்பிதமாய் நினைக்கின்றார்கள்; அதைச்சேர்த்து எடுப்பதைப்பற்றியும் வேடிக்கையான கதைகள் சொல்லுகின்றார்கள்.

விசேஷ வர்த்தமானங்கள்

GENERAL NEWS

ஹாலியின் வால் நக்ஷத்திரம்.—இவ்வால் வெள்ளி இப்பொழுது சுமார் இருபது நாளாக நன்றாகத் தெரிகிறது. முதலில் சாயங்காலத்தில் 7½-மணிக்குள் கண்ணிற்குத் தெரியாது மயங்கிவிட்டுக்கொண்டிருந்தது. இப்பொழுது 7-அல்லது 8-நாளாகக் காலை நக்ஷத்திரமாகக் காண்கிறோம். இதன் வால் மேல் நோக்கிக்கொண்டு சுக்கிரவக்ருஹத்திற்கு வடகிழக்கில் காணப்படும். கோடைக்கானல் ஜ்யோதிஷ உப்பரிகையில் (Observatory) இவ்வால் வெள்ளி நன்றாகப் புலப்படுகிறது. இதற்கு 7-வால்கள் இருப்பதாகத் தெரிகின்றது. மேனாட்டு வான சாஸ்திரிகள் பரிக்ஷை செய்ததில் இதன்வால் 2-கலை (2°) நீண்டிருப்பதாகத் தெரிகிறது. அதாவது 15-லக்ஷம் மைல் நீண்டு இருப்பதாகத் தெரியவரும். இதனால் சிலபேர் வரும் மேமீ 19-ம் தேதியன்று இத்தூமகேது பூமியின் பக்கில் நெருங்கி செல்லுமிடத்து பூமியதன் வாலாகிய தூமத்திரளின் உள் ஊடுருவிச் செல்லவேண்டியதாய் வரும் என்று சிலர் எண்ணுகிறார்கள். இவ்வாறு நடக்குமாகில் பூமியிலுள்ளவர் ஹாலி வால் வெள்ளியின் வாலாகிய வாயுத்திரளாகிய உஷ்ணப்புகையில் சில நாழிகை கம்மியிருக்கவேண்டிவரும். நீராவியில் குளிப்பது போல் உடல் வியர்வைவிட நேரலாம். ஆனால் இவ்வாறு நடப்பதரிதென்றெண்ணப்படுகிறது. நடக்குமாயினும் நடுப்பகல் வேளையில் நாம் நேராகக்காணும் படியாகத்தான் நடக்கும்.

***

கஸ்தூரி.—இது கொழுப்பு சம்பந்தமான பதார்த்தம்; அது வாசனையுள்ளது; ஹிமாலயப் பிராந்தியங்களிலிருக்கும் கஸ்தூரி மான் என்னும் மிருகத்தின் நாபிப்பிரதேசத்திலொரு பையிலிருந்து எடுக்கப்படுகின்றது; ஒருவகை எருமைக்கடாவிலிருந்தும் கஸ்தூரி எடுக்கிறார்கள். அதனை வாசனைத்திரவியமாகவும் மருந்தாகவும் உபயோகிக்கிறார்கள். வாசனையில் வித்தியாசத்தினாலும் பருமனில் வித்தியாசத்தினாலும் குணமும் விலைவும் வித்தியாசப்படுகின்றன.

***

வஜ்ரபசை.—இது கொஞ்சம் ஒளியுருவத்தக்கதொரு வஸ்துவாகும். பதனிட்ட தோலைச் செதுக்கிய துண்டுகள், மாட்டின் குளம்பு முதலியவைகளைத் தண்ணீரில் வேகவைத்து, அவை கரைந்துகெட்டியான பாகாய் ஆனபிறகு அந்தப் பாகையுலர்த்தியெடுப்பதே வஜ்ரப்பசையாகும். அதனை நெருப்பின்மீது இளகவைத்துத் தடவி மரப்பலகை முதலியவைகளையொட்டிச் சேர்க்கலாம்.

***

சணற்றழை எருவு.—கும்பகோணம் விவசாய சங்கத்தார் இந்த வருஷத்தில் ஜனங்களுக்கு அனுபோககரமாய் ரூபிக்க தங்களுடைய சங்கத்தின் பண்ணையில் பயிர்செய்த சடம்பு (சணல்) பயிர், தஞ்சாவூர் ஜில்லாவில் விவசாயம்செய்யும் ஒவ்வொருவருக்கும் நிரம்பவும் உபகாரப் படத்தக்கது. ஜூன்மீ மத்தியில் காலில் ஜலம்வந்தவுடன் வயல்களில் தண்ணீரைப்பாய்ச்சி, உழுது, ஏகர் ஒன்றுக்குச் சுமார் 6 (ஆறு) பட்டணம்படி விதை தெளிக்கப்பட்டது. ஆகஸ்டுமீ 22உயில் மேல்சொன்ன பயிரைப் பார்க்கும்பொழுது அது சுமார் 3-அடி (இரண்டுமுழம்) உயரம் வளர்ந்திருந்தது. நெல் சாகுபடி செய்யுமுன் இதை நிலத்தில் தழை எருவுக்கென்று அப்பால் உழப்பட்டது. இந்த நிலத்திற்கு வேறு குப்பை எரு முதலானதுகள் போடாமல் இந்தப்பயிரையே உழுது மக்கவைத்திருப்பதின் மாகூல், எப்படிக்காணுமென்று ஆவலுடனும் சிரத்தையுடனும் எதிர்பார்க்கலாம். இப்படித் தழைப்பயிர்செய்து அதை உழுது எருவாக உபயோகிப்பதில் விதை செலவே தவிர வேறொன்றில்லை. பயிர் உண்டாக்க உழவு முதலானதுகளில் செலவாகுமென்று கொஞ்சப்பேர் ஆக்ஷேபனை சொல்லலாம். ஆனால் நெல் சாகுபடிசெய்யும் நிலங்கள் ஆகஸ்டு மாதத்தில் முதல்முதல் உழவாவது வழக்கம். அப்படிக்கில்லாமல் தழைப்பயிர் செய்ய பிரயத்தனம் சேய்யும்போது காலில் ஜலம் வந்தவுடன் ஜூன் மாதத்தில் முதல் உழவு போடப்படுகிறது. ஆகவே பின்னால் செய்யப்பட்ட உழவு முன்னால் செய்யப்படுவதால், உழவு செலவு ஜாஸ்தி இதனாலாகிறதென்று சொல்ல மார்க்கமில்லை.

***

அவுரித்தழை எருவு.—பிரம்பலூர் தாலுக்காவில் அவுரிப்பயிரானது சாயத்திற்கென்று அனேக வருஷங்களாய் பயிரிடப்பட்டு வந்தது. ஆனால் அவுரி மருந்தின் (நீலத்தின்) விலை சகாயமானது. கொஞ்சகாலமாய் இந்தப்பயிரானது தழை எருவுக்கென்று சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கிருஷிகருக்குத் தழை எருவு சுலபமாய் அகப்பட மார்க்கமில்லாததினாலும் தழை எருவு உபயோகிப்பதின் குணம் சிலாக்கியமானதென்று குடியானவர்களுக்குத் தெரிந்து எல்லாரும் அதை உபயோகிப்பதால் ஜாஸ்தி தழை எரு அகப்பட மார்க்க மில்லாமையினாலும், இந்த அவுரிப்பயிரை இந்தத் தாலுக்காவில் தழை எருவுக்கென்று பயிர் செய்கிறார்கள். பிரம்பலூர் தாலுக்காவின் மேற்குப் பாகத்திலிருப்பவர்கள் தங்களுடைய சொந்த சாப்பாடு உபயோகத்திற்காக நஞ்சை நிலங்களிலும், கிணற்று இறவை நிலங்களிலும், கேழ்வரகு, கம்பு முதலாகிய பயிர்களைச் சாகுபடி செய்கிறார்கள். தங்களுக்கு நேரிடும் ரொக்க பணச்செலவுகளுக்காக நெல்லும் சாகுபடி செய்கிறார்கள். ஆகவே கிணறுகளிருக்கும் ஒவ்வொருவரும் நெல் கட்டாயமாய் சாகுபடி செய்து வருகிறார்கள். அந்தப் பிரகாரமே நஞ்செய் சாகுபடி செய்யும் குடியானவர்கள் ஒவ்வொருவரும் கிணறுகள் தங்கள் நிலங்களில் வெட்டியிருக்கிறார்கள். அப்படிக்கில்லாவிட்டாலும் கிணறு வெட்டவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். ஆகையால் நஞ்செய் நிலங்களும் கிணற்றுப்பாய்ச்சல் நிலங்களும் எப்போதும் பயிரிடப்பட்டுக்கொண்டு இருக்கப்படுகின்றன.

மேல்சொன்ன நிலங்களில் தாள்மாற்றி (பயிர் மாற்றி) சாகுபடி செய்கிற வழக்கமுமிருக்கிறது. இவ்விடத்தில் சாதாரணமாய் கையாடிவரும் பின் குறித்த தாள்மாறிப் பயிரிடுதல் மிக சிலாக்கியமானதாக இருக்கிறது. அதாவது மார்ச்சு, எப்ரல் மாதங்களில் கோடைக்கம்பு கிணற்று இறவைப் பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. இத்துடன் ஏக்கர் ஒன்றுக்குச் சுமார் 3-பட்டணம்படி அவுரி விதையும் கலந்து தெளிக்கப்படுகிறது. கம்புப் பயிர் ஜூலைமாதத்து கடைசிக்குமுன் அறுவடையாகிவிடும். அப்பால் அதில் விதைத்திருக்கும் அவுரிப்பயிரை ஆகஸ்ட், ஸெப்டம்பர் மாதம்வரை வளரும்படி செய்து அப்பால் அதைச் சேற்றில் சடைச்சம்பா நெல் நடுமுன் உழுது மக்க வைக்கிறார்கள். அடுத்த வருஷத்தில் நெல்லுக்குப் பின்னால், இந்தக் கம்பும் அவுரியையே விதைக்கிறார்கள். இல்லாவிட்டால் கரும்பு சாகுபடி செய்கிறார்கள். மேல்சொன்ன கம்புப்பயிரும், கரும்புப்பயிரும் செய்யாவிட்டால் கேழ்வரகு நடுகிறார்கள். இதற்கு யாட்டுச்சாணி குப்பை முதலாகிய எருக்கள் போடுகிறார்கள். இது அறுவடை செய்தபின் காட்டுத்தழை எருவிட்டுச் சேற்றில் சடைசம்பா நெல்சாகுபடி செய்கிறார்கள்.

மேல்சொன்னபிரகாரம் அவுரித்தழை பசுந்தாள் எருவுக்காகப் பயிரிடச் செலவு 3-பட்டணம்படி விதையேதவிர வேறில்லை. ஆகையால் இவ்விதமான கிணற்று இறவைப்பயிர்களும் நீர்ப்பாய்ச்சும் சாதனமும் உள்ள எல்லா ஜில்லாக்களிலும் மேல்சொன்ன பிரகாரம் தழை எரு சுலபவாய் செய்யக்கூடும்.

புத்தக விமர்சை
REVIEWS

சந்திரகாந்தா.—இது ம-ா-ா-ஸ்ரீ ஜே. ஆர். இரங்கராஜு அவர்களால் எழுதப்பட்ட நவீனம். இதைப் படிக்கும்பொழுது சிலசமயங்களில் ஆங்கிலத்தில் ஆலிவர் கோல்ட்ஸ்மித் (Oliver Goldsmith) தால் எழுதப்பட்ட "வேக்பீல்ட் நகரத்து பிரதிகுரு" (Vicar of Wakefield) என்னும் நவீனத்திற் பதிந்த சில பத்திரங்களின் குணம் மனதிற்கு ஆயாஸமின்றி ஞாபகத்திற்கு வருகின்றது. அண்ணுசாமி, சொண்டேர்ராஜா, சந்திரவதனு, சந்தரகாந்தா, திருக்கள்ளூர் பண்டாரசன்னதி இவர்கள் சில வேறுபாடுகளுடன் பர்ச்செல், ஸ்கியர்தார்ண்ஹில், சோபையா, வொலிவியா, ஜென்கின்ஸன் இவர்களது தமிழ் அவதாரமென்று சில ஸமயங்களில் ஊஹிக்கலாமென்று தோன்றுகிறது. கோவிந்தனது துப்பறியும் தன்மையும் அண்ணுசாமியின் மனவமைதியும் மனதைப் பிரமிக்கச்செய்யும்: சன்னியாஸ . வேஷங்கொண்டவர்கள் செய்யும் தவறு காரியங்களும், பெரிய குடியிற் பிறந்தவரது அகந்தையும் நன்றாக வெளியிட்டது. ஜாதியின் குணத்தை யுயர்த்தும் ; இராகவரெட்டியின் மேன்மை பெருந்தன்மை இவை சந்திரவதனுவின் குணங்களுடன்தான் ஒற்று விளங்குமென்பது, இனமினத்தோடோ வாழ்தலைக்காட்டும். சந்திரவதனுவின் முன் புத்தியையும் சந்தரகாந்தாவின் பின் புத்தியையும் விளக்கிக் காட்டுமாறு முதலும் கடையும் கொண்டு சந்திரகாந்தாவென்று பெயர் இந்நவீனத்திற்கிவைத்தது இயற்றியாரது ஆழ்ந்தறியும் குணத்தை விளக்கும். முதல் அத்யாயத்தில வ்யவாஹாரம் செய்த நாயகி தொழில் மனதை இழுத்ததால் இன்னம் ஜானகி, கமலம் இவரது பின் சரிதை சிறிது வந்திருந்தால் மிகவும் நன்றாயிருக்குமென்று நமது அபிப்பிராயம். கதை மனதைக் கவரச் செய்வதுபோல் பதிப்பும் மனத்தைத் தன்பாலிழுக்கின்றது.

ரத்நாவளி.—வடமொழியின்கண் ஸ்ரீ ஹர்ஷனியற்றிய நாடகமிது. ம-ா-ா-ஸ்ரீ ப. சம்பந்தமுதலியாரால் தமிழ்ப்பிக்கப்பட்டது. வடமொழியின் ஆழ்ந்த ஒளி இதனிடத்து வீசாவிடினும் தமிழர்கட்கு ஸ்ரீஹர்ஷனது இரத்நாவளியின் காதையைக் காட்டும் ஓர்வழியாக இருக்கின்றது. தாமாய் சில பாத்திரங்களை யுத்பவித்து நாடகத்தைத் தன் மனத்திற்கேற்றவண்ணம் சிலசெப்பஞ் செய்துளார். இயற்கையி லவரப்பொழுதுமெழுதும் ஸ்வபாவத்திலேயே இந்நாடகமுமெழுதப்பட்டுள்ளது. புத்தகப் பதிப்புமிக நன்றாக அமைக்கப்பட்டுள்ளது.

ஸந்நியாசி கீதமும் பாரதஜாதிய கீதமும்.—விவேகாநந்தராலும், பாபாப்ரேமாநந்த பாரதியாரின் சிஷ்யையான அந்தோனி அம்மையாராலும் முறையே இயற்றப்பட்ட ஆங்கிலப்பாக்களின் தமிழ் மொழிப் பெயர்ப்பாகி. இப்பாடல்கள் படிப்பவர் மனதையும் இருதயத்தையும் ஆநந்தத்தில் மூழ்கச்செய்து பரவசமடையச் செய்யும் என்பதிற்கையமில்லை. மதுரை காலேஜ் பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ கோபாலக்கிருஷ்ணய்யரால் இயற்றப்பட்டது. இப்பாக்கள் இனிமையுடையனவாயிருத்தலுமன்றி முதனூலினின்று வேறுபடாதிருத்தல் களிப்படையச் செய்யும்.

விநாயகரநுபூதி.—இது மாயூரம் பண்டிதர்ஸ்ரீ எஸ். வேலாயுதம் முதலியாரால் இயற்றப்பட்டது. கந்தரநுபூதி நடையிலெழுதப்பட்டது. இம்மாதிரி பழைய நடையில் தானும் சில காவியங்கள் செய்வாராயின் தமிழ் பாஷைக்கு வரவாகும். இருப்பதைப் போல் பல எழுதுவதைவிட தானே தனது கவி சமத்காரத்தின் வன்மையால் புதியதோர் காவியம் புனைந்திடில் அது மிகவும் எமக்கின்பம் பயக்கும். இவர் எழுதிய நடைக்குதாரணமாக இந்நூலின் 45-வது செய்யுள் வருமாறு:—

> அதுவென் றிதுவென் றறிதற் கமையாப்
> பொதுவொன் றுமயக் ககலப் புரிமோ
> முதுகா ரணஞா னமுனோர் வலனை
> யதிமோ கபுரந் தரவா தியனே.

பொய்யாமொழிப்புலவர் சரிதம்.—இது கோவைச்சாரதாவிலாஸ் செந்தமிழ்ச்சங்கக் காரியதரிசியாகிய ஸ்ரீ. சி. கு. நாராயணஸ்வாமி முதலியாரால் தொகுக்கப்பட்டது. இத்தகைய நூல் தமிழ் பாஷைக்கு மிகவேண்டியதாக இருக்கின்றது. இதில் புலவர் பெருமானது கால முதலியவைகளைப் பற்றி ஆராய்ச்சிசெய்ததுடன் அவரது குணவிசேடங்களும் கூறப்பட்டுள்ளது. தனிப்பாடற்றிரட்டு, விநோதரசமஞ்சரி முதலிய நூல்களுள் ஸரியான விஷயம் கிடைப்பதரிதாகி, இடை இடையே சில பாக்கள் மாத்திரங்கிடைப்பின் அது இத்தகையப் பாவலரும் இருந்தனரோ என ஐயங்கொள்ளுமாறு செய்யும் எண்ணத்தை ஒழிக்குமாறே இச்சிறிய நூல் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. தஞ்சைவாணன் கோவையை இயற்றிய இப்புலவரது காலம் 12-ம் நூற்றுண்டில் விளங்கிய நாற்கவிராச நம்பி காலத்திற்கும், சிந்தாமணி இயற்றிய திருத்தக்க தேவர் காலத்திற்கும் இடை இருக்கலாமென்று சர்ச்சை செய்யப்பட்டிருக்கின்றது.

3649

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
2-JUL 1910
MADRAS.

மாட்சிமைப்பெற்ற அரசன்—சத்ரபதி
ஏழாவது எட்வர்டாரின் தேக வியோகம்

கனவிலும் நினைக்கமுடியாது இருந்தாற்போலிருந்து அரசன் மரிக்க நேர்ந்த விஷயம் இந்தியநாட்டின் மனத்தைக்கவிந்து துன்பஸாகரத்தில் ஆழ்த்திவிட்டதென்று நாம் என் கூறவேண்டும்? அது கூறுமலே வெளிப்படை? 1901ஆு ஜனவரிமீ 2-தேதி யன்று இறந்த மாட்சிமைப்பெற்ற அரசி விக்டோரியாவின் பிரிவானது சற்று மறைவதன் முன்னமே நமது அரசனும் 9ஆு 3மீ 14 நாட்கள் அரசு புரிந்து இறந்துமாகிவிட்டது. இதுவும் காலத்தின்கொடுமை! இவரைக் கொலைபுரிய பலபேர் போட்டிக்கொண்டிருந்தனர். முதலில் நோய்: அது 1871ஆு விஷஜ்வர ரூபமாகியும் 1902ஆு ஓர் கட்டிவடிவாகியும் தோன்றி அரசரை மிக்கதுன்பத்திற்காளாக்கிப் பின்னவரை உயிரோடுவிட்டது தெய்வச்செயல்தான். இரண்டாவது அரசுரிமை த்வேஷர்கள் (Anarchists): இவர்கள் கூட்டத் தொருவனுகிய ஸ்பீடீ என்பவன் நமது காலஞ்சென்ற அரசர் ருஷ்யா (Russia) தேசத்தில் சென்ற பீட்டர்ஸ்பர்க் (St. Petersburg) என்னு நகரில் சென்றுகொண்டிருக்கும் பொழுது கொலை புரிய

யத்தனித்தது. ஆனால் அப்பொழுது தப்பித்துக்கொண்டதன்றி, தன்னைக்கொலை செய்ய வந்தவனை இவரெதிரில் கொண்டு நிறுத்தினபொழுது மிக்க மன அமைதியோடு "வெறும் முட்டாள்" என்று பதில் கூறினார். மூன்றாவது நமன்: இவன் தன் இயற்கைபோல் இவருயிரைக்கவர்ந்து சென்று நமது நாட்டைத் துன்பக்கடலில் மூழ்த்தினான்.

தன் தாயின் குணமுற்றுங்கொண்டு, எல்லார்க்கு நன்மைபுரிய வேண்டுமென்று கவலையுற்று வாழ்ந்து, தான் இந்தியர்க்காக மிக்க அன்புபாராட்டியதன்றித் தான் அரசுரிமைப் பூண்டதும் இந்தியர் நிலைமையை உயர்த்த புதிய சட்டங்களியற்றியதும், எத்தேசத்திலும் சண்டை சச்சரவு கூடாதென்று 'யத்யஸ்த'மாகி நின்று நடுநிலைமையை நாட்டியதும், சிறுபொழுது முதலிலிருந்து ஜனங்களுடன் பயின்று அவர்களுக்குவேண்டியவற்றையறிந்து வாழ்ந்ததும், இவை முதலாகிய விஷயங்களையறியாதவருமுண்டோ? ஆனால் இந்தியர்களுக்கு அரசன் மரணம் ஏதோ தூரதேசத்தில் வாழ்ந்து, தன் பிரதிநிதிகளின் மூலமாகத் தமதுநாட்டை ஆண்டவன் இறந்தான் என்னும் விஷயமாத்திரமன்று. அவர்களுக்கு அரசன் என்னும் லக்ஷியம் தெய்வீகத்தன்மைப் பெற்று, பெருமை சிறுமை என்பதைக் கவனியாது, அஞ்சாமன உறுதியோடு தாக்ஷண்யமின்றி நியாயத்தை நடத்தி, மிக்க அன்போடு, துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனஞ் செய்யும் தெய்வீக மூர்த்தமென்னும் எண்ணம் மனத்தைக் கவிந்திருப்பதோடு, ஆங்கில அரசருள் முதல் முதல், தாயின் அநுக்ரஹத்தோடு, இந்தியநாட்டிற்கு வந்து கோரக ஜனங்களின் இயற்கையையறிந்து சென்றனன் என்னும் ஞாபகம் மூட்டவும், செங்கோல் கைக்கொண்டதும் ஜனங்களுக்கெழுதிய உறுதிமொழியும் நமது ஜனங்களின் ஹ்ருதயத்தை உருக்கியதை நாம் சொல்லவும் வேண்டுமோ?

நமதரசரது மரணம் நமது ஸமூஹத்தார்க்கு மாத்திரமன்றி உலகமுழுதிற்கும் துன்பமூட்டும்; எங்கும் அவர் எல்லாராலும் நன்கு மதிக்கப்பட்டவர். இவ்வாறெல்லாரும் வ்யஸனிப்பது ஓர்பாலிருக்க மாட்சிமைப் பெற்ற அரசி அலக்ஸாண்ட்ரா அம்மையாரின் மனமும், அவர் குழந்தைகளின் ஹ்ருதயமும் எவ்வாறு அலையும், கலங்கும், துன்பக்கடலில் ஆழும் என்று எண்ணுவதும் மிகக்கடினம். வீட்டிற்குத்தலைவனும் நாட்டிற்குத்தலைவனுமிறந்தால் ஒரே குழப்பந்தான். அரசன் இறந்தது எல்லார் மனதையும் ப்ரமையுள் ஆழ்த்திவிடினும், உலகிலெல்லோருடைய ஸுகத்திற்கும் தேசத்தின் க்ஷேமத்திற்கு ஆளாகி நின்று மிக உழைத்த மன்னன் மரித்தான் என்றெல்லோரும் அலமந்து நிற்பினும், தேசமுழுதும் மணியிழந்த நாகம்போல் நிலைமையுறினும், அரசியர்பாலும், அவர் மக்கள்பாலும், உறவினர்பாலும் வீட்டிற்குப்பெரியோன் உயிர் நீத்ததால் உண்டான அநுதாபமின்னதென்று சொல்லிமுடியாது. ஆகையால் தமிழ்வகுப்பார் மாத்திரமன்றி, எல்லா இந்தியர்க்குத்தமது ஹ்ருதயத்தில் மூண்டு கிளம்பி மேலெழும்பு அநுதாபத்தை, அவர் பொருட்டு இப்பத்திரிகை வாயிலாக வெளியிடுவதன்றி இப்பெருந் துன்பப்பெருக்கைத் தாங்கக்கடவுள் அரசியர்க்குஅவர் மக்கள், உறவினர் யாவர்க்கு மனவலியளிக்கவும் விரும்புவதோடு உலகமுழுதும் கவிந்து நிற்கும் துன்பப்பெருக்கத்தையும் வெளியிடுகிறோம்.

3646

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
2 - JUL 1910
MADRAS.

விவேகபோதினி அனுபந்தம்



சென்னை கன்னைத்தொழிற்சாலை—ஸோடா வீலா பண்ணும் இடம்
377, 378-ம் பக்கங்களைப் பார்க்க

REGISTERED 2-JUL 1910 MADRAS
365

விவேக போதினி

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி II } ஸாதாரணஸ்ரீ வைகாசிமீ 1910-ஸ்ரீ ஜூன்மீ { பகுதி 12

ஞானம்

KNOWLEDGE PAR-EXCELLANCE

ஸந்மார்க்க வழியில் மூன்றாவதாக இருப்பது ஞானம். இதை ஸாதாரணமாக நாம் கூறும் அறிவு என்று எண்ணி விடப்படாது. ஸாதாரணமாகக் கூறும் அறிவுக்கு அறிபவன், அறிபடும் பொருள், அறியும் தொழில் ஆகிய மூன்று இருத்தல் வேண்டும். இந்தத் திரிபுடி (மூன்றும்) ஒடுங்கிய இடத்து தனித்து, இன்னதென்று வாக்கினாற் கூறொணாததாயும், மனத்தால் நினைக்கொணாததாயும் உள்ள ஒன்று இருக்கின்றது. அதுவே எக்காலத்தும் உண்மையாக அழிவற்று நிற்பது; மற்றவைகள் எல்லாம் உண்மையல்ல, என்று மாறாது நிற்குநிலைக்கே ஞானம் என்று பெயர். இந்த ஞானத்தை உள்ளவாறு அறிந்து தெளியப்புகுவோம்.

இந்த ஞானத்திற்குக் காரணம் சிரவண, மனன, நிதித்யாஸனம் ஆகிய இவைகளே. இதைத் தாயுமானவர் "கேட்டலுடன் சிந்தித்தல் தேடிலாமெய்த் தெளிவு" என்றார். இதில் சிரவணம் குரு சாஸ்திரி முடிவான விஷயங்களை எடுத்துக்கூறுவதைக் கருத்துடன் கேட்பது. மனனம் என்பது சுருதி, யுக்தி மூலமாகக் கேட்ட குருமொழியை மனத்தில் ஆலோசித்து ஒருவாறு நிலைநிறுத்திக்கொள்வது. நிதித்யாஸனம் என்பது குருமொழியின் முடிவில் மனதை நிறுத்தி நிஷ்டை பழகுவது. இவைகளால் பிரஹ்மம் இருக்கிறது என்ற உணர்ச்சியில்லாத நிலையாகிய அஞ்ஞானமும், குருமொழியில் பூர்ண நம்பிக்கை வரவொட்டாது தடுக்கும் ஸந்தேகமும், ஜகத்மெய் தேஹமே நான் என்று அடிக்கடிவரும் விபரீதபாவனையும் முறையே நீங்க, பிரஹ்மம் இத்தன்மையது என்ற மாறா ஞானமுண்டாகும்.

இந்த ஞானத்தின் ஸ்வரூபம் என்ன? ஸத் (உண்மையானது) இன்னது, அஸத் (பொய்யானது) இன்னது என்று உள்ளபடி பகுத்தறிவதே ஞானமாகும். பகவான் கீதையில் 'ஸத் ஒருநாளும் இல்லாமலிருக்காது, அஸத் என்பது என்றுளும் உள்ளது என்று கூறத் தகாதது' என்று கூறியிருக்கிறார். அதாவது மூன்று காலத்திலும் பாதிக்கப்படாது நிலைத்திருப்பதே ஸத்; ஸதாமாறிக்கொண்டிருப்பதே அஸத் என்பது தெரியவருகிறது. பரம்பொருள் ஒன்றே ஸத்; மற்றவையெல்லாம் அஸத் என்று உணர்வதே ஞானத்தின் ஸ்வரூபம்.

இதில் உள்ளபடி நிலைத்தவன் மனதில் நான் வேறு என்ற எண்ணம் திரும்பவும் எழவொட்டாது தடுத்தலே இதன்காரியம். எப்படிப்பட்ட மஹானாக இருப்பினும் அவன் மனதில் அஹங்காரம் வெகு நுட்பாக ஒளித்திருக்கும். இது பற்றியே ஓர் கவி 'ஆன்றோர் அடி அழுக்கு இவ்வஹங்காரமே' என்று கூறுகிறார். மஹான் சற்று ஏமாந்திருப்பாராயின் இந்த அஹங்காரம் வெளிக்கிளம்பிவிடும். ஜடபாதர் முதலியோரே இதற்கு உதாரணம். இம்மாதிரி அகங்காரத்தை எழவொட்டாது தடுத்து முடிவில் இதை வேரோடு கல்லுவதே ஞானத்தின் முக்கிய காரியம்.

இந்த ஞானத்தில் எதுவரையில் பழகவேண்டும்? இப்பொழுது நமக்குத் தேகம் நான் என்ற எண்ணம் எவ்வளவு திடமாக இருக்கிறதோ அவ்வளவு திடமாகப் பிரஹ்மம் நான் என்ற எண்ணம் ஸஹஜமாக வரும் வரையில் இந்த ஞானத்தில் பழகவேண்டும். இதைத்தான் திருபுடி பாவம் நீங்குவரையில் பழக வேண்டும் எனப் பெரியோர் கூறுவர்.

இதன்பலம் மோக்ஷம். அதாவது உலக விஷயம் முதலியவைகளிலிருந்து முற்றிலும் விடுபட்டுப் பரம்பொருளாக உள்ளது உள்ளபடி நிற்றல். இம்மாதிரி நிற்பதற்கு ஞானமே நேரான ஸாதனம்; ஏனெனில் ஞானம் உலகவிஷயங்களுக்கு வேர் போன்றதாகிய திரிபுடியை அழிக்கும் திறனுடையது.

இதுபற்றியே வித்யாரண்ய ஸ்வாமிகள் பஞ்சதசப்பிரகரணத்தில், 'ஞானத்திற்கு ஹேது, சிரவண மனன நிதித்யாஸனம்; ஸ்வரூபம், ஸத்அஸத்பாவனை; கார்யம், மறுபடி அகங்காரம் எழாதிருத்தல்; எல்லை, பிரஹ்மம் தான் என்ற திடம் வரும் நிலை; பலம், மோக்ஷம்,' என்றார்.

விவேக போதினி

தொகுதி 2]ஸாதாரணஹு வைகாசிமீ [பகுதி 12

முக்ய உபநிஷத்துக்கள்

THE PRINCIPAL UPANISHADS

I & II. ஈசகேன உபநிஷத்துக்கள்

THE ISA & THE KENA

எல்லாவித புருஷார்த்தங்களைப் பார்க்கிலும் பரமாத்துமாவை உணர்ந்து தெளிவதே மிகச் சிறந்தது என்ற விஷயத்தை வற்புறுத்துவதே ஈசோபநிஷத்தின் நோக்கம். இதில் பக்குவியான சிஷ்யன் ஒருவன் ஓர் குருவை அடுத்து முடிவான பரமபதத்தைத் தரக்கூடிய ஞானம் எது என்று கேட்க, அவனுக்கு ஆசார்யன் விடை கொடுப்பதாகக் கொண்டு, முமூக்ஷுக்களுக்கு அவசியம் இருக்கவேண்டிய உணர்ச்சியை இந்த உபநிஷத்து நன்றாக எடுத்துரைக்கின்றது.* இந்த உபநிஷத்தின் விஷயம் பின்வருவது.

முமுக்ஷுவுக்கு இரண்டு மார்க்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவையாவன: ஞானமார்க்கம், கர்மமார்க்கம் ஆகிய இவைகளே. இவை இரண்டனுள் முன்னது மிகச் சிறந்தது. பிரஹ்மத்தை உணர்ந்த ஞானிகள் எல்லாவற்றையும் பிரஹ்மமாகவே பார்க்கின்றனர். எல்லா விஷய ஆசைகளையும் ஒழித்து, ஞானிகள் எல்லாம் பிரஹ்மம் என்ற நினைப்பிலேயே ஈடுபட்டிருக்கவேண்டும். பரம்பொருளை உள்ளபடி உணர்ந்து, அது மாறாதது, தேஹ (விஷய) ஸம்பந்தமற்றது, ஸர்வஜ்ஞம் பரிசுத்தமானது, எல்லாவற்றிற்கும் ஆதாரமானது, ஸ்வயம்புவானது, எல்லாவற்றிலும் இருப்பினும் அவைகளால் தடுக்கப்படாதது, மனம், இந்திரியங்கள் இவைகளுக்கு அப்பாற்பட்டது, அது எல்லாவற்றிலும் இருப்பது, அதனுள் எல்லாம் அடங்கியது என்று அறிந்து தெளிந்தால் ஒருவன் ஸகலவித புருஷார்த்தங்களையும் அடைந்தவனாவான். இதன்மேல் அவனுக்குத் துக்கம், மயக்கம் இரண்டும் ஏற்படாது.

மனம் சுத்தப்பட்டு இம்மாதிரியான சிறந்த எண்ணங்கள் அதில் குடிகொள்வது மிகக் கஷ்டம். இம்மாதிரி எண்ணங்களில் ஈடுபட்டு நிற்கத் திறனில்லாதவர்கள் வைதிக கர்மங்களைச்செய்தே தீரவேண்டும். இந்த முடிவை மூன்றுவிதமாக அடைய முயலலாம். அவையாவன: கர்மங்களை மூடமாகச் செய்தல், பரம்பொருளை (ஒருவாறு) உணர்ந்து நிற்றல், பரம்பொருளை உணர்ந்து கர்மம் செய்தல் ஆகிய இவைகளே. இம்மாதிரி பழகுவதால் மனிதன் இறந்தபின் பரமபதத்தை அடைவன். ஞானத்தை விருத்தி செய்துகொண்டே கர்மம் செய்தால் வரவர அப்பியாஸிக்குச் சிறந்த விஷயஸுகங்கள் உண்டாகும். இதனால் இவனுக்கு ஸுகங்களில் உள்ள இச்சை குறைக்கப்பட்டு முடிவில்வரும் ஞானத்தை ஏற்பதற்கும் இவன் அதிகாரியாவான். இப்படி இருப்பினும் இந்த மார்க்கம், பிரஹ்மஞானத்தைவிட மிகத் தாழ்ந்ததே. ஏனெனில் பிரஹ்மஞானத்தால் உண்மை ஞானமும் ஆனந்தமும் உண்டாகும். முன்னதால் நிலையில்லாப் பலன்களே ஏற்படும்.

இனித் தளவகார உபநிஷத்து என்று கூறப்படும் கேநோபனிஷத்தை எடுத்துக்கொள்ளுவோம். இதன் முதல் மந்திரம் கேன (எதனால்) என்ற கேள்விப் பதத்தொடு தொடங்குவதால் இந்த உபநிஷத்திற்கு இப்பெயர் வந்தது. பிரஹ்மம் ஒன்றுதான் முடிவாகத்தனிக்கும் உண்மைப்பொருள், அது இவ்வாறு உலக ஸம்பந்தமான எண்ணங்களுக்கு அப்பாற்பட்டு வேறாக இருப்பது, என்பதை ஸ்தாபிப்பதே இதன் முக்கிய நோக்கம். இதில் சிஷ்யன் குருவை நோக்கி 'யாரால் நியமிக்கப்பட்டு மனது தன் வேலையையும், பிராணன் தன் வேலையையும், வாக்கு உச்சரிப்பு என்ற தன் வேலையையும், கண் காது முதலியவைகள் தமது தொழில்களையும் செய்கின்றன?' என்று பல கேள்விகள் கேட்கிறான். இதற்குப் பதில் கூறப்புகும் ஆசாரியன் முதலில் 'ஸகலத்திலும் ஸம்பந்தப்பட்டதான ஆதிகாரணம் ஒன்று இருத்தல்வேண்டும். இது ஸ்வதஸித்தமாயும் ஒன்றின் காரியமாகாமலும் இருத்தல் வேண்டும்' என்ற கொள்கைகளைப் பின்பற்றியே மறுமொழி கூறுகிறார். 'காதுக்குக்காதாகியும், கண்ணுக்குக் கண்ணாகியும் உள்ள ஓர் ஆதிகாரணப் பொருள் உண்டு. இந்த ஆதிகாரணந்தான் காது முதலிய இந்திரியங்களுக்கு அவைகள் தொழில்களை நடத்தும் சக்தியைக் கொடுப்பது. இதனால்தான் அறிவு உண்டாவது. இந்த ஆதிகாரணமாகிய உண்மையான பரம்பொருளை உள்ளபடி அறிந்தால் உடனே ஒருவனுக்கு நித்யத்வமும், பூர்ணத்வமும் வரும்.

இம்மாதிரி ஒருவாறு குறிப்பாகத்தான் பிரஹ்மத்தின் லக்ஷணத்தைக்கூற முடியும். பிரஹ்மம் மனோவாக்கெட்டா வஸ்துவாதலால் வேறு எவ்விதத்திலும் அதை விளக்க முடியாது. நமது ரிஷிகள் பிரஹ்மம் அறியப்படும் பொருளைவிட வேறாகியிருப்பதாயும், அறியக்கூடியதாகிய பொருளுக்கு அப்பாற்பட்டதாயும் உள்ளது என்று மதிக்கின்றனர். பிரஹ்மம் என்ற பரம்பொருள் வரம்புள் அடங்காததால் உலக விஷய ஸ்ம்பந்தமாகி எண்ணங்களையே பொருளாக உடைய வாக்கால் அதை நேரிட வர்ணிக்கமுடியாது. உபநிஷத்தில் வ்ரும் விகந்தா (அறிபடுபொருள்), அவிகந்தா (அறிபடாததாகியும், அறியக் கூடியதாகியும் உள்ள பொருள்) என்ற இரண்டு பதங்களும் வ்யக்தம் (வெளிப்படை) அவ்யக்தம் (மறைவுநிலை) என்று உலகத்தின் விஷயமாகக் கூறப்படும் இரண்டு பதங்களது பொருளை முறையே அடக்கி உள்ளவைகள். வெளிப்படையான பிரபஞ்சமானது நமது இந்திரியங்களுக்குப் புலப்படும் எல்லாக் கோளங்களுமே, இது காரியம். மறைவாகி இருப்பது இந்தத் தோற்றப் பிரபஞ்சத்திற்கு ஸூக்ஷ்மமாக இருந்து காரணமாக இருப்பது, இது எளிதில் புலப்படாதது, ஆகிலும் ஸூக்ஷ்மமாக அறியக்கூடியதே. பிரஹ்மமோ இவ்விரண்டிற்கு அப்பாற்பட்டு இவைகளுக்கும் காரணமாக இருப்பது. ஆதலால் இது இந்திரியம் முதலியவைகளால் அறியக்கூடிய வஸ்துவல்ல, ஆனால் இந்தப் பரம்பொருளாலே தான் ஸகல இந்திரியங்களும் உண்டாகிய தொழில் நடத்துகின்றன. இது இல்லாவிடில் எல்லாம் செயலற்று நிற்கும்.

ஆகவே பிரஹ்மத்தைப் பற்றிய உணர்ச்சி எல்லாம் ஸாதாரண உலகவிஷய உணர்ச்சியைப் போன்ற இந்திரியாதிகளால் நேரிட உண்டாகக்கூடியவையல்ல. பிரஹ்மம் என்ற ஓர்வஸ்து இருந்தே தீரவேண்டும். அது இத்தன்மையை உடையது என்று நேரிடவர்ணிக்கமுடியாது. நமது இந்திரியாதிகளால் ஏற்படும் அறிவு அனந்தவஸ்துவாகிய பிரஹ்மத்தைச் சென்று எட்டாது. பிரஹ்மத்தை நேரிட அறிய முடியாததால், அது அறியக்கூடியதென்றும் சொல்ல முடியாது, அதை நாம் அறியவில்லை என்றும் கூறமுடியாது. பிரஹ்மம் அறியக்கூடியது, அதாவது அது பிரபஞ்ச காரணம், மனம், முதலியன என்று வர்ணிக்கக்கூடியது என்று எண்ணுபவர் பிரஹ்மத்தை உண்மையாக உணர்ந்தவர் அல்லர். இம்மாதிரியாகப்பிரஹ்மத்தை உணர முடியாது

* உபநிஷத்துக்கள் பொதுவாகக் குரு சிஷ்ய ஸம்வாதமாகவேயிருக்கும் இவைகளுக்கு முன்னர் கூறப்படும் சாந்திமந்திரமும் பொதுவாக த்விவசனத்திலேயே யிருக்கும். அதாவது குரு, சிஷ்யன் ஆகிய இருவருக்கும் சாந்தி உண்டாகட்டும் என்ற பிரார்த்தனை ரூபமாக இருக்கும்.

என்று உணர்ந்தவரே பிரஹ்மத்தை உண்மையாக உணர்ந்தவர். இதைப் பின்வருமாறு விளக்கலாம். மனிதனது புத்தியே அறியும் சக்தியை உடையது. அதனால் அறியப்படும் பொருள் அதைவிட வேறாக இருத்தல் வேண்டும். எவ்வளவு ஸூக்ஷ்மமாக மனிதன் அறிந்தபோதிலும் அங்கும் அறிபடுபொருள் அறியும் பொருளைவிட்டு வேறாகவே நிற்கும். இம்மாதிரி வேறாகநிற்கும் இருபொருள்கள் கண்ட (அளவுள் அடங்கிய) வஸ்துக்களாதல்வேண்டும். ஆகவே மனிதனால் அளவுள் அடங்கக்கூடிய அதாவது கண்ட வஸ்துக்களையே உணரமுடியும். பிரஹ்மமோ அகண்டம் (அளவுள் அடங்காதது). ஆகவே மனிதன் அறிவால் அதை உள்ளபடி அறியவே முடியாது. மனிதன் தேகதாரியாக இருந்து இந்திரியங்களில் ஈடுபட்டிருக்கும் வரையில் பிரஹ்மத்தைப் பூர்ணமாக அறியமுடியாது. இம்மாதிரியான மனிதர்கள் வரவர பிரஹ்மத்தைத் தமது அப்பியாஸ பலத்தால் அணுகலாமே ஒழிய அதை முற்றிலும் உணரமுடியாது என்பதே. 'உண்மையில் பிரஹ்மத்தை அறிய முடியாதென்று தெளிந்தவர்களே பிரஹ்மத்தை உண்மையில் உணர்ந்தவர்கள்' என்ற உபநிஷத்வாக்கியத்தின் பொருள். ஆகவே இந்திரியாதிகள் மூலமாகவே அறியும் பழக்கம் உடைய ஒருவனுக்குத் தன்புத்தியால் பிரஹ்மத்தை அறிய முடியாது என்ற உணர்ச்சியே பரமஞானமாகும். பிரஹ்மத்தை அறிவது என்பது பரஸ்பரம் விருத்தமான பதங்களை உடைய வாக்கியம். புத்தி அறியும் தொழிலை நிறுத்திவிட்டு அடங்கி நின்றால் அப்பொழுதுதான் பிரஹ்மம் உண்மையாக வெளியாகும்.

முன் எடுத்துக்காட்ட முயன்றபடி உணரும் உணர்ச்சிதான் மனிதன் அடையவேண்டிய மிகச் சிறந்த புருஷார்த்தம். பிரஹ்மத்தை வேறு எவ்வாறு உணர்ந்தபோதிலும் மனிதன் துக்கம் தொலையாது. இது ஜீவனை மறுபடியும் பிறந்து இறந்து வருந்தும்படி செய்யும். உலக வாழ்க்கையில் ஏற்படக்கூடிய துக்கங்கள் மாறாமலிருக்கும்.

மேற்கூறியவைகள் முதலிரண்டு பாகங்களில் உள்ள விஷயம். இந்த உபநிஷத்தில் பின்னிரண்டு பாகங்களில் மேற்கூறிய விஷயங்களை விளக்கும் ஓர் கதை காணப்படுகிறது. பிரஹ்மம் அஸுரர்களை ஜயிக்க, தேவர்களுக்குச் சிறப்பு உண்டாயிற்று. அப்பொழுது தேவர்கள் "ஜயம் நம்முடையது. இந்தச் சிறப்பு நம்முடையது" என்ற கர்வங்கொண்டு தமக்கு இவை எல்லாம் பிரஹ்மத்தினிடமிருந்து உண்டாயின என்பதை மறந்துவிட்டனர். இந்த மயக்கத்தை நீக்கப் பிரஹ்மம் அவர்கள் முன் ஓர் அற்புத உருவுடன் வந்துநின்றது. அப்பொழுதுகூட பிரஹ்மத்தின் சிறப்பு அவர்களுக்கு விளங்காமல் போக, தேவர்கள் "இந்த உருவம் வணங்கத் தக்கதோ?" என்று சங்கித்தனர். இந்த ஸமயத்தில் அவர்களிடம் வந்த அக்னியை அவர்கள் இந்த விஷயத்தின் உண்மையை உணர்ந்துவரும்படி ஏவினர். அக்னி பிரஹ்மத்தினிடம் ஓடோடியும் வந்து தனது எரிக்கும் சக்தியைப் பற்றிப் புகழ்ந்து பேசிற்று. இதைக்கேட்டதும் பிரஹ்மம் ஓர் சிறு புல்லை எதிரேவைத்து "இதை எரி பார்ப்போம்!" என்றது. அக்னி தன்னால் ஆனமட்டும் பார்த்தது. அதனால் ஒன்றும் முடியாமல் போய்விட்டது. இதன் பின்புகூட அக்னிக்குப் பிரஹ்மத்தின் சிறப்பு விளங்கவில்லை. பின்னர் தேவர்களால் வாயு அனுப்பப்பட்டுப் பிரஹ்மத்தினிடம் வந்து "நான் எல்லாவற்றையும் பஞ்சாகப் பரத்திக்கொண்டு போய்விடுவேன்" என்று பெருமை பேசிற்று. அப்பொழுது பிரஹ்மம் ஓர் சிறு புல்லை முன்பு வைத்து "எங்கே இதை அடித்துக்கொண்டுபோ பார்ப்போம்!" என்றது.

அப்பொழுது வாயுவின் சிரமமும் வீணாயிற்று. பின்னர் தேவர்கள் இந்திரனை அனுப்பினர். இந்திரன் வந்ததும் பிரஹ்மம் மறைந்தது.

பார்த்தான் இந்திரன்! ஆச்சரியம் அடைந்தான்! "இவ்வளவு அற்புத சக்தி உடைய இந்தவஸ்து என்னமாக இருக்கலாம்," என்ற எண்ணம் எழ அவன் பரவசமாகி அந்தவஸ்துவைப்பற்றியே தியானிக்கத் தொடங்கிவிட்டான். அப்பொழுது தன் மனதுள் பர்வதராஜ குமாரியாகிய உமை ஸர்வாலங்கார பூஷிதையாகத் தோன்றுவதைக்கண்டு ஆனந்தமுற்றான். அவளை நோக்கி "இப்பொழுது மறைந்துபோனது வணங்கத்தக்கது தானா?" என்று இந்திரன் கேட்டான். அதற்கு அவள், "இந்தப் பிரஹ்மம்தான் வணங்கத்தக்க பொருள். இது ஒப்பு உயர்வற்றது. இந்தப் பிரஹ்மம் ஜயித்ததால்தான் உங்களுக்கு இவ்வளவு சிறப்பு ஏற்பட்டது" என்று மறுமொழி கூறினாள். உமையின் வாக்கியத்தால் இந்திரனுக்குப் பிரஹ்மஜ்ஞானம் வந்தது. தான், அக்னி, வாயுமுதலிய ஸகல தேவதைகளுக்கும் சக்திகொடுப்பது இந்தப் பரப்பிரஹ்மம்தான். இவனன்றி ஓரணுவும் அசையாது. இவன் மின்னலைப்போல அற்புதப் பிரகாசத்துடன் தோன்றிமறைதலால் இவனை இந்திரியங்கள் உணரமாட்டா. ஆதலால் மனதால் தியானம்செய்து ஒவ்வொருவனும் தன் உணர்ச்சியை விசாலப்படுத்திக்கொள்ளவேண்டும். இவ்வாறு பிரஹ்மத்தை அறிபவனே எல்லோராலும் ஆராதிக்கத் தகுந்தவன். இந்தச் சிறந்த ஞானத்தை அடைவதற்கு இந்திரிய நிரோதம், பரிசுத்த கர்மங்கள், தியானம் ஆகிய இவைகளே முக்கிய ஸாதனங்கள். அநேக சாகைகளோடு கூடிய வேதங்களே பிரஹ்மவிஷயத்தில் ஆதாரமாயிருப்பவை. ஸத்யமே பிரஹ்மத்தின் நிலைமை. இம்மாதிரி பிரஹ்மத்தை உணர்ந்தவன் பரிசுத்த கர்மம், எண்ணம் ஆகிய இவைகளால் ஸகல பாபங்களிலிருந்து விடுபட்டு மாறாப்பரமபதத்தில் நிலைபெறுவன்: இதுவே உபநிஷத்.

ஓம் தத்ஸத்.

சிலப்பதிகாரக்கால ஆராய்ச்சி

THE DATE OF SILAPADIKARAM

பண்டைக்காலத்துச் சிறப்புற்று விளங்கி, சேர, சோழ, பாண்டிய அரசர்களால் போற்றப்பட்டு, முதல், இடை, கடையென்னும் முச்சங்கத்தார் காலத்தும் ஓங்கிச்செழித்து வளர்ந்த அமிழ்தினுமினிய தமிழ்ப்பாஷையில், ஐம்பெருங்காப்பியங்களெனவழங்கும் ஜீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி யென்னும் பௌத்த, க்ஷமண நூற்கள் எக்காலத்தன, எனும் வினா சென்ற சொற்பகாலமாக ஆங்கிலங்கற்ற வித்வான்களாகிய மேனாட்டார், கீழ்நாட்டார் எனும் இருவகுப்பினருடைய மனதிடத்தும் குடிகொண்டிருக்க, இதுபரியந்தம் யாதொரு திருப்திகரமான விடையும் வெளிவந்ததாகத் தோன்றவில்லை. ஸுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னமேயே, மேனாட்டுப் பாதிரிகளில் ஒருவரும், தமிழில் மிகப்பாண்டித்தியம் அடைந்தவருமான காலஞ்சென்ற G. U. போப்பையர் (Rev. G. U. Pope) அவர்கள், முதன் முதல் தாம் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அருளிய திருக்குறளைத் தமிழ்நாட்டார் மாத்திரமல்ல மற்றென்னாட்டாரும் ஓதிப் பயன் பெறுதல்கூடும் என்றறிந்து, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அந்நூலின் பாயிரத்தில், திருக்குறள் செய்த காலத்தை வரையறுக்கையில் பின்வருமாறு வரைந்துள்ளார்: "நம் ஆசிரியர் காலத்தைத் திண்ணமாய் வரையறுக்கப் போதுமான சாதனங்களில்லை, ஆயினும், கி. பி. 800 முதல் கி. பி. 1000 க்குள் இருக்குமென வெண்ணுகிறேன்." இவருக்கு வெகு நாளைக்குப் பிறகு மற்றுமொருவித்வான், தாமியற்றிய தமிழ் (Essay on Tamil) என்னும் நூலில் "குறளாசிரியர் திருவள்ளுவ

ஞர், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இவ்விரண்டின் நூலாசிரியர்கள் காலத்திற்கு முற்பட்டவர். சுமார் ஒருநூற்றாண்டிற்கு முன்னுவதிருக்கவேண்டும்" என்று எழுதியுள்ளார். ஆனால் அன்னவர் தம் நூன்முகத்தில் 5-வது பக்கத்தில், "குறளாசிரியர் திருவள்ளுவர் கி. பி. இரண்டாமாண்டிலிருந்தவர். ஸிம்மளத்தரசன் முதல் கயவாகுவின் காலத்தவர்" என்று கூறியுள்ளார்.

இது நிற்க, அகச்சாதனம், புறச்சாதனம் எனும் இரண்டினுள் முன்னையதில் நமக்கு யாவுள? என்று சற்று ஆராய்வாம்.

1. சிலப்பதிகாரம், மணிமேகலை யெனும் இரண்டு நூற்களினின்றும், அவற்றின் ஆசிரியர்கள் ஒரேகாலத்தவர் என்பது நன்கு விளங்குகின்றது. சேரநாட்டரசன் தம்பியும் சிலப்பதிகாரத்தின் ஆசிரியருமான இளங்கோவடிகள் தம் நூலுக்கு வேண்டிய கருவிகளை மணிமேகலை யாசிரியர் மதுரைக்கூலவாணிகன் சாத்தனார் மூலமாய்ப் பெற்றார் என்பதும் தெரிந்த விஷயம்.

2. சிலப்பதிகாரக் கதாநாயகன் கோவலன், மாதவி மூலமாய்ப் பெற்ற மணிமேகலை துறவு புகுந்து பௌத்தபிக்ஷுணிக் கோலங் கொண்ட வன்மையை விவரிக்கின்றவிடத்து, ஆசிரியர் பௌத்த தர்மங்களை விவரியா நிற்கின்ற பான்மையை நோக்குங்காலத்துப் பௌத்தமதம் அக்காலத்துத் தமிழ்நாட்டில் மிகவும் தழைத்தோங்கி நின்றதாகவே யெண்ண வேண்டியிருக்கிறது.

3. அக்காலத்து, சேர, சோழ, பாண்டிய வரசர்கள் முறையே, செங்குட்டுவன், கரிகாலன், நெடுஞ்செழியன் எனவும் அறிகிறோம். சிலப்பதிகாரம் கடைக்காதையில் கயவாகுவென்னும் ஓர் அரசன் இலங்கையிலிருந்து சேரநாடு வந்து, அங்குக் கண்ணகிக்குப் பத்தினிக் கடவுளெனப் பெயரிட்டு, கோயில் கட்டித் தெய்வமாக வணங்குவதைக்கண்டு, தன் நாடுசென்று அங்கும் கண்ணகிக்குக் கோயில்கள் கட்டி வணங்கி வந்ததாகவும் கூறப்படுகிறது. இனிப் பௌத்தமதம் எக்காலத்துத் தென்னாட்டில் க்ஷீணமடைய வாரம்பித்தது என்பதை, அடுத்த சஞ்சிகையிற் கூறுவாம். பல ஆதாரங்களைக் கொண்டு கி. பி. மூன்றாவதாண்டில் தலை சாய நேரிட்டதென்பதைமட்டும் இங்கு ஒப்புக்கொள்வோம்.

காலஞ்சென்ற கனகசபை பிள்ளையவர்கள் 'ஆயிரத்தெண்ணூறு வருஷங்களுக்குமுன் தமிழர்களின் நிலைமை' (The Tamils Eighteen Hundred Years Ago) என்னும் தம் நூலில் கி.பி. முதல், இரண்டாவது நூற்றாண்டுகளிலிருந்த பாண்டியவரசர்களில் ஐவர் பெயரையும் அவரவர் காலத்தையும் கூறுகிறார்.

நெடுஞ்செழியன் I., கி. பி. 50-75.
வெற்றிவேற் செழியன், கி. பி. 75-90.
நெடுஞ்செழியன் II., கி. பி. 90-128.
உக்ரப்பெருவழுதி, கி. பி. 128-140.
நன்மாறன், கி. பி. 140-150.

மேற்கூறியவற்றினின்றும் நெடுஞ்செழியன் என்னும் பெயருடைய இருவரில் எவர் நம் நூலாசிரியர் காலத்தவர் என்றறியவேண்டும். [மணிமேகலையாசிரியர் தாம் மதுரையில் கோவலன் கொலையுண்டதும், கண்ணகி மதுரையை யெரித்ததும் நேரிற் கண்டதாகவும் நமக்கு ஓர் ஆதாரமிருக்கிறது. ஆகவே நூலாசிரியர் காலமும் நூலிலுள்ள விஷயம் நடந்த காலமும் ஒன்றாகும்.] மதுரை டிஸ்டிரிக்ட் கெஜட்டீயரில் (Madura District Gazetteer, Vol. I, Page 27) "கி. பி. 50-75-அரசாண்ட நெடுஞ்செழியன் I. என்னும் பாண்டியவரசன் கோவலனை முன்பின் யோசியாமல் கொலை செய்தான் எனக் கூறப்படுகிறது," என்ற விஷயம், பின்னர் கூறும் ஆதாரத்தால் பிசகெனவே கூறப்படவேண்டும். "Ceylon by an officer late of the Ceylon Rifles" என்னும் நூலில் கஜபாஹு எனும் இரண்டு அரசர்கள் இருந்ததாகவும், அவர்களில் முதல்வர் கி. பி. 113-ல் அரசுபுரிய வாரம்பித்ததாகவும், இரண்டாமவர் கி. பி. 1127-ல் அரசு புரிந்ததாகவும் கூறப்படுகிறது. கயவாகு என்பது கஜபாஹு என்னும்வடமொழியினின்றும்வந்த தமிழ்த்திரிபேயாம். ஆகவே கயவாகு காலத்திலிருந்தபாண்டியன் இரண்டாவது நெடுஞ்செழியன் ஆகிறான். இதுவரை நாம் நூலாசிரியர் காலத்தை யொருவாறு வரையறுத்தோம். இனி நூல் எக்காலத்தில் செய்யப்பட்டது என்பதை யாராய்வோம்.

சிலப்பதிகாரத்தினின்றும் 'கண்ணகி சிலம்பையொடிக்க மாணிக்கப்பரல்கள் சிதறினதும் அரசனும் உயிர் துறந்தான்' என்று அறிகிறோம். ஆகவே நூல் கி. பி. 128-க்குப் பின்னரே யெழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் எப்பொழுது? கண்ணகி மதுரையை எரித்ததும் மேற்றிசை நோக்கி மலைநாடடைந்து அங்குச் சுவர்க்கம் புக்கதைக்கண்டிருந்த இடையர் மூலமாய் சேரன் செங்குட்டுவன் அறிந்து உடனே இளங்கோவடிகளுடன் அவ்விடம் சென்றான். சென்று அதைக்கண்டு அதிசயித்து அக்கண்ணகிக்குக் கோயில் கட்டுவிக்க ஏற்பாடு செய்யுங்கால் அங்கு வந்திருந்த மதுரைப்புலவர் சாத்தனாரை இளங்கோவடிகள் கண்டார். அவர் மூலமாய் மதுரையில் நடந்த விஷயங்களை யறிந்தார். மேலும், மணிமேகலையைத் தான் பாடியாய்விட்டதென்று சாத்தனார் கூற, தன் எண்ணத்தைப் பூர்த்திசெய்ய முடியாது, சிலப்பதிகாரத்தைமட்டும் பாடினார் இளங்கோவடிகள், இவையெல்லாம் அதிசொற்பகாலத்திற்குள்ளாகவே யிருத்தல் வேண்டும். ஆகவே, சிலப்பதிகாரமும், மணிமேகலையும் கி. பி. 128-க்குமேல் கி. பி. 130-க்குள்ளாகவே யெழுதப்பட்டிருத்தல் வேண்டும் எனத் தோன்றுகிறது.

க, வி, ஸா. மணியம்.

REGISTERED ... 1910 ... MADRAS

அழுக்காறு

ENVY

அழுக்காறு என்பது பொறாமை; அது அழுக்கின் வழி அல்லது அழுக்குள்ள வழி என்று பொருள்படும். தாழ்ந்த, அதாவது கீழ்மைபால் பட்ட, வழி யென்றும் பொருள்படும். இவ்வழுக்காறு பிறர் நன்னிலைமையிலிருப்பதைக் கண்டு, மனம் பதைபதைத்துத் தனக்கில்லாததை ஒருவனடைந்திருப்பதா என்று கொள்ளும் தீய நினைவென்று ஒருவாறு சொல்லலாம். அயல்வீட்டார் வாழ்ந்தால், அதைக் கண்டு, கொள்ளும் வெறுப்பு, இதன் முதல் ஸ்வபாவம். அவ்வாழ்வை கெடுக்க முயல்வது இதன் செயற்கையாகும்.

ஸம்ஸாரஸாகரத்தில் தத்தளித்துச் செல்லும் ஜீவியகப்பல் உடைந்துடையும் பாறையாக இருப்பது பொறாமைதான். இப்பொறாமை மோகமுதலிய கீழ் குணங்களைப்போல் கீழ்நிலைமைபாற்பட்டது. மலத்தின் குணத்தை அரும்பச்செய்யும் குணமுடைமையாலே திருவள்ளுவர் 'அழுக்காறெனு ஒருபாவி' என்றார். பாபகுணத்தையே விருத்தி செய்து நல்லவற்றை எல்லாம் எரிக்கும் தன்மையுடையது.

நெருப்பிற்கு 'சேர்ந்தாரைக் கொல்லி' என்று பெயருண்டு. அது பொறாமைக்கும் பொருந்தும். தன்னை யுடையாரைக் கொல்லும் கருவி அதுதான். பிறர்பால் பொறாமை கொள்வதினால் கோபமரும்பும்; கோபமரும்ப மதிமயங்கும்; மதிமயங்க தனக்கும் தெரியாது பெருங்குற்றம் செய்யநேரும்; அக்குற்றங்களைப்பற்றிப் பின் என் செய்தோமென்று மனக்கவலையுறத் 'தன்னெஞ்சே தன்னைச்சுடும்.' அதுமாத்திரமன்று. உலகில் வாழ்வார் யாவருக்கும் உலகோடொழுகவேண்டியதவசியம். அவ்வாறு செய்யாதுவிடில் அவர் வாழ்

க்கை நிலை மிக வருத்தமடையும். தம் ஆடை உணவு உறையுமிடம் எவையும் துன்பமின்றி அடையவேண்டுமெனின் பொறாமை யிருத்தலொல்லாது. வாழ்க்கைக்கு முதலாதாரமாகிய இவற்றை இழக்க நேரும்படிச் செய்யும்.

இது ஒருவிதம் நிற்க, பொறாமையின் மற்றோர்நிலையையும் அறியலாகும்:—அது நன்மைபாற் கொள்ளும் தீய வெண்ணம் தீய வழியுள் மனத்தைச் செலுத்தலாம். மனத்திலெப்பொழுதும் பொறாமை குடிகொள்வதினால் எல்லாரிடத்தும் ஓர் அவநம்பிக்கை கொள்ளச்செய்யும். நல்லவர்கள்பால் பொறாமை கொண்டு அவர்க்குக் கெடுதி செய்யவேண்டுமென்று கீழினத்தாரொடு கலத்தல் பொறாமையின் முதல் வழி. பின் அக்கீழினத்தார்பால் பொறாமையின் ஸ்வபாவத்தினால் அவநம்பிக்கைகொள்ளல்; அதனால் கீழோரைத் தனக்குப் பகைவராக்கிக்கொள்ளல் அதன் பின் வழி, மேலோரைப் பகைத்துக் கொள்ளினும் கொள்ளலாம்; அவர் நமக்குக் கெடுதி செய்யார்; கீழோரைப் பகைத்துக் கொள்ளல் மிகக் கேட்டையுண்டாக்கும். ஆனதினால் கீழோர் பகை பொறாமையின் மிக்க தோழனாக விளங்கும் நிலைமைக் கடைப்படியாகும். அவை இரண்டுங் கலந்து மனிதனை 'இன்மையிற் புகுத்தி விடும்.' இவற்றை எல்லாம் எண்ணித்தான் திருவள்ளுவரும்,

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்"

என்று கூறியுள்ளார்.

ஆகையால் பொறாமையுடையான் நல்லோர் அல்லார் என்னும் இரு திறத்தார்க்கும் ஆகாதவனாகிறான். பின்னவன் யாவராலும் துறக்கப்பட்டு மனநோய்க்கு ஆளாவன். பின் பித்து பிடித்தாற்போல் மயங்கி அப்பித்தால் மனவெறியுண்டாகி மதிமயங்கி தனக்கும் தெரியாது செய்யும் தொழில்கள் அவன் அழிவைத் தேடிவிடும். இது பொறாமையால் வரும் தீங்கை உணர்த்திற்று.

இவ்வாறுமுண்டோ என்னும் ஐயம் தீருமாறு முற்காலத்திலும் இக்காலத்திலுமுள்ள அநுபவ வழியால் உதாரணம் காட்டுவோம். துரியோதனன், பீமன் வலிவைப் பொறாது பல தீங்கடைந்து,

ஆற்றி னீர்விளை யாடிய நாண்முதற்
காற்றின் மைந்தனோ டெத்தனை கன்றினேன்
சாற்றி னென்வினை தானென்னை யேசுடக்
கூற்றின் வாய்ப்புகுர் தேற்கென்ன கூற்றையா!

என்றுகூறி உயிர்விட நேர்ந்தது. 'அயல் வீடு வாழ்ந்தால் ஐந்துநாள் பட்டினி' என்றாற்போல வசிட்டனிட்ட உணவால் அவன்மேல் பொறாமைகொண்டு காமதேனுவைக் கவரமுயன்ற கௌசிகன் கதையையும் எல்லாரும் அறிவர். காமவியற்கையால் பொறாமைபட்ட ஸுந்தோபஸுந்தர் வரலாறும் தெரிந்ததே! கற்பிற்சிறந்த அருந்ததிப்பால் பொறாமை கொண்ட லக்ஷ்மி, ஸரஸ்வதி, பார்வதி, இவர் மாங்கல்ய பிக்ஷை கேட்க நேரிட்ட கதையையும் நாம் படித்திருக்கிறோம். குந்தி மகப்பேறு அடைந்தாள் என்று கேட்ட காந்தாரித் தன் கருவைத்தாக்கிப் பெற்ற மைந்தரைக் கடையில் துறக்கவேண்டி முடிந்ததை எவரும் அறிவர். கல்விச் செருக்காற்கொண்ட பொறாமையால் புகழேந்தியைச் சிறையில்வைத்து ஒட்டக்கூத்தன் பட்டபாடும் நாமறியோமா? மதவெறியால் ஹிந்துக்களின்பேரில் பொறாமைகொண்டு கோயில் கோயிலாகக் கொள்ளை கொண்டப் பணக்குவியலைக்கண்டு மனங்கலங்கிய கஜனிமகமத் சரிதையை யார் அறியார்? மைசூர் அரசரின்மேல் பொறாமையால் எதிர்த்து மேலோங்கிய ஹைதர் சாயபுவின் வம்சம் எத்தனை நாள் இராஜ்யபாரஞ் செய்தது? குமணராஜன் மேல் தாயபாகத்தால் பொறாமை கொண்டவனைக் கொல்லும்படி ஏவிய அவன் தம்பி

என்ன மன அமைதியை உற்றான்?—இவை முதலான காதைகளிலிருந்து அழுக்காறு அல்லது பொறாமை இத்தகையது என்று ஒருவாறு அறியலாகும்; அதன் விசாலம் ஒழிபு இத்தகையது என்றும் ஊகிக்கலாகும்.

அழுக்காறை அழித்தற்குப் பிரபலகாரணம் ஒன்றுண்டு. அது வருமாறு:—நியாயஸ்தலங்களிலும் குற்றமுற்றும் விசாரிக்குமிடத்து 'இவன் எண்ணமித்தகையது' என்று விசாரித்துப் பின் தீர்ப்பு செய்வர். ஒவ்வோர் காரியத்திற்கும் மனத்திலுள்ள எண்ணம் நல்லது அது அல்லது என்றறியவேண்டியது அவசியம். பொறாமைகொள்வார் உள்ளத்து எண்ணம் கொடியதே என்று நாம் கூறாமலே அறியலாம். ஆதலின் மனவெண்ணத்தைக் கொடுமையுள் புகுத்தும் பொறாமையை அழிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். மேலும் ஒருவன் தமக்குத் தகாதவைசெய்திடில் அவனுக்குத் தீங்கிழைத்தல் அதிசயமன்று. ஆனதினால் அவ்வாறு செய்வதால் ஒருவற்குப் பெருமைவாராது. ஒருவர் தமக்குத்துன்பஞ்செய்யினும் அவர்க்கின்பஞ்செய்தலே பெருமைக்கிடமாகும். அவ்வாறிருக்க ஒன்றும் செய்யாது நல்ல நிலையில் இருப்பார் மேல் 'அவர் அவ்வாறு இருத்தலா!' என்று எண்ணங்கொள்ளுதல் நியாயமா? அதன்பின் அவரைக் கெடுக்கமுயல்வதும் தகுமோ? ஆதலின் அழுக்காறென்னு மாற்றைக் கடந்து அறநிலத்திற் சேர்வது மனிதர் நிலைமைக்கு அமைதியையூட்டும். இது உண்மை மொழி. இதற்கு மனன் என்னும் மந்தியை அடக்கித் தனக்கதை ஆளாக்கிக் கொள்ளவேண்டுமே அல்லாது அதன் வழிப்பட்டுத் துன்பமடைவது நமக்கியலாது.

வா, சேஷகிரி.

விவசாய சம்பந்தமான குறிப்புகள்

திருநெல்வேலி ஜில்லாவில் பருத்தியைச் சால் சாலாய் விதைக்கும் முறையின் அபிவிர்த்தி

PROGRESS OF DRILL CULTIVATION OF COTTON IN TINNEVELLY DISTRICT

இம்முறையின் அனுகூலங்களைக் காட்டிய ஒரு குறிப்பு 1909-ம் வருஷத்திய விவசாயப் பஞ்சாங்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இம்முறையில் விதைத்த பயிரின் மாசூலைப்பார்த்த குடிகளுக்கு இதன் அனுகூலங்கள் தெளிவாய்த் தெரியவந்தன. பொதுவாகக் குடிகள் எப்போதும் தாங்கள் அனுஷ்டித்துவந்த பழக்கங்களில் உபயோகமுள்ள சீர்திருத்தங்களைக் கண்டவுடனே, வெகு சீக்கிரத்தில் அவைகளின் உபயோகத்தை அறிந்துகொள்ளும் புத்திக் கூர்மையுடையவர்களாயிருக்கிறார்கள்.

சென்ற வருஷத்தில் அனேக கிராமங்களில் குடிகள் விவசாய டிபார்டுமெண்டாருடைய வேண்டுகோளின்படி விதைக்காக மறுவருஷம் விதைப்பதற்கு நல்விதையைக் கோறிப் பருத்தியைச் சால்விதைக் கருவிகொண்டு விதைத்துப் பயிரிட சம்மதித்தார்கள். அப்படி விதைத்த ஒவ்வோரிடத்திலும் அந்தப் பயிரின் மாசூலைப்பற்றித் திருப்தி அடைந்தார்களென்றே நான் நினைக்கிறேன். ஏனென்றால், சென்ற வருஷத்தில் இம்முயற்சியில் இந்த டிபார்டுமெண்டாருடன் சேர்ந்து வேலை செய்யக் குடியானவர்களைத் தூண்டுவது கொஞ்சம் பிரயாசமாகவே யிருந்தது. இவ்வருஷத்திலோ அக்கிராமங்களிலும் அவைகளையடுத்த கிராமங்களிலுமுள்ள அநேகங் குடிகள் தங்கள் நிலங்களை இம்முறைப்படி

விதைப்பதற்காக எடுத்துக்கொள்ளும்படி தாங்களே வேண்டிக்கொள்கிறார்கள்.

என்றாலும் சென்ற வருஷத்தின் காலநிலை இம்முறையின் மேன்மையைக் காட்டுவதற்கு விசேஷமாய் ஏற்றதாயிருந்தது. அநேகவிடங்களில், முக்கியமாக அந்த ஜில்லாவின் தென் பாகங்களில், விதைப்புக்கு ஏற்ற பருவம் வந்த தினங்கள் வெகு சொற்பந்தான். ஆகையால் சாதாரணமாய் செய்யப்படும் விதமாய் அதாவது கைவிதைப்பாய்—பருத்தி விதைக்கப்பட்ட அதிகமான விஸ்தீரணங்களில் விதைகள் முளைக்கவே இல்லை. அப்படியிருக்க விதைக்கருவிகொண்டு அதே காலத்தில் விதைப்பான எல்லா நிலங்களிலும் பயிர் சரியானபடி முளைத்து நிலைபெற்றிருந்தது.

இதற்குக் காரணம் எளிதில் வெளியாகும். விதைகள் முளைப்பதற்கு நிலத்தில் ஈரமிருக்கவேண்டியது அவசியம். ஆனால் கைவிதைப்பில் விதைத்துக் கலப்பைகொண்டு உழுது விதை மூடும்போது, அப்படி நெகிழ்வடைந்த மண்ணிலுள்ள ஈரம் வெகு சீக்கிரத்தில் காய்ந்து போகிறது. பின் மழைபெய்யாமற் போகுமானால் விதைத்த விதைகள் முளையாமலே போனாலும் போகும். விதைக்கருவிகொண்டு விதைக்கும்போது நிலத்தில் முதல் முதல் 'குண்டகா' என்னும் அலகுக் கலப்பையை ஓட்டுவதால் நிலம் சமமாகி மெதுவடைவதன்றி விதையழுந்தும், மண் உறுதிப்படுகிறது. விதைகள் எல்லாம் ஒரே ஆழத்தில் விழுகிறது. அதனால், நிலத்தில் ஈரம் வற்றிப் போகக்கூடிய அரும்பருவமாயிருந்தால் அவ்சியமானால் கூடக்கொஞ்சம் ஆழத்தில் விதைகள் விழும்படி செய்யலாம். விதைத்தபின் மறுபடியும் 'குண்டகா' என்னும் கருவியை ஓட்டினால் விதைகள் சரியாய் மூடப்படுவதுமல்லாமல் விதைக்கப் பட்ட மண் சரியானபடி உறுதியடைந்து விடும். விதைத்தநிலம் இப்படி உறுதியடைந்து அதன்மேல் நுண்ணிய நெகிழ்வடைந்த மண் மூடிக்கொண்டிருந்தால், சாதாரணமாக உழுதமண் படைமுழுவதும் நெகிழ்வாயிருந்தால் எவ்வளவு சீக்கிரத்தில் அதிலிருக்கும் ஈரம் காய்ந்துபோகுமோ அவ்வளவு சீக்கிரத்தில் காய்ந்துபோகாது. விதைக்கலப்பைகொண்டு விதைத்த நிலங்களிலெல்லாம் பயிர் சரியானபடி முளைத்ததின் காரணம் இதுதான்.

விதைக்கருவிகொண்டு விதைப்பதில் கிருஷிகர் மனதில் பதிந்த மற்றொரு அநுகூலம் என்னவெனில் அதனால் விதைப்பு வெகு சீக்கிரத்தில் நடந்து முடிவாதல். விதைக்கருவியும், குண்டகாவென்னும் அலகுக் கலப்பையும் உபயோகிக்கும்போது இரண்டு ஜதைக் கால்நடைகொண்டு ஒருநாளில் ஐந்து ஏகரா நிலத்தை விதைத்து விதைமூடலாம். ஆனால் கைவிதைப்பாய் விதைத்தால் அந்தக்கால்நடைகளைக் கொண்டு இரண்டு ஏகரா நிலந்தான் விதைக்கக்

கூடும். இந்த ஜில்லாவில் இது முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம். ஏனென்றால் அநேகவிடங்களில் பருத்தி விதைப்புக்காலமும், இவ்விராஜதானியின் இந்தப் பாகத்தில் முக்கியமான உணவுதானியமாகிய கம்புப்பயிரின் ஊடே பயிருழவு நடத்துங் காலமும் ஒன்றாயிருக்கிறது.

இந்தப்பருத்திப் பயிருண்டானபின் செய்யும் பருவங்களைப்பற்றி யோசிக்குங்கால், கால்நடைகளைப் பூட்டியோட்டும் சிறுபயிரடிக்குங் கருவிகள் அல்லது 'தந்துலு' என்னுங் கருவிகளை யுபயோகிப்பதாலுண்டாகும் அநுகூலங்களைக் கிருஷிகர் சிலாக்கியமாய் மதித்தார்கள். அக்கருவிகள் மிக்க உபயோகமுள்ளவையென்பதை எல்லாரும் தெரிந்துகொள்ளும்படியாய் அவைகளைக்கொண்டு வேலை நடத்திக்காட்டப்பட்டது. அந்த ஜில்லாவின் தென் பாகத்தில் பருத்திக்கரிசல் நிலமுள்ளபாகங்களிலெல்லாம் பருத்தி விதைத்துக் கிட்டத்தட்ட இரண்டு மாதக் காலம்வரையிலும் மழை பெய்யவில்லை. கடைசியாய் மழைபெய்தபோது நிலமானது கோடைகாலத்தின் முடிவில் இருப்பதுபோல் அதிகமாய் வறண்டுபோயிருந்தது. அப்பொழுதுங்கூட அந்த மழையில் நிலம் சரியாய் நனையவில்லை. இவ்விதமாகக் கைவிதைப்புப்பயிருக்கு அம்மழை அதிகப் பிரயோஜன மில்லாமல் போயிற்று. ஆனால் விதைக்கருவிகொண்டு விதைத்துப் பயிரிடப்பட்ட எல்லா நிலங்களிலும் வெகு சீக்கிரத்தில் பயிருழவு நடத்தி மேல் மண்ணைக் கிளறி நெகிழ்க்கக் கூடியதாயிற்று. இதனால் அதிக நாட்களுக்கு நிலத்தில் ஈரந்தங்கிச் சாதாரணகாலத்தில் பயிர்கள் எப்படி வளருமோ அப்படி வளர்ந்துவந்தன என்றாலும், சால்விதைக் கருவிகொண்டு விதைத்த நிலங்களையுடைய அநேகருக்கு இந்தப்பயிருழவு வேலை நடந்துகொண்டிருக்கும்போது அதன் உபயோகம் அவ்வளவாய்த் தெரியவில்லை. ஏனென்றால் அவர்கள் 'தந்துலு' என்னும் கருவியை ஓட்டிக்கொண்டிருந்த கூலியாட்களை அந்தக்கருவிகூடியமட்டும் ஆழமாய்ப் போகும்படி அதன் கைப்பிடியைப் பலமாய் அழுத்திப் பிடிக்கவேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டிருந்தார்கள். என்றாலும் இப்படி ஆழமாய்ப் பயிரடித்தல் முற்றிலும் அனாவசியம். இவ்வேலை செய்வதின் நோக்கம் களைகளை அப்புறப்படுத்துவதன்றி, மேல்மண்ணைக் கிளறி நெகிழவைத்துக் கீழ்மண்ணிலுள்ள ஈரம் மேல் மண்ணில் ஏறி ஆவியாய்ப் போய்விடாமல் தடுப்பதற்காகத்தான். நெகிழ்க்கப்பட்ட மேல் மண் வெகு சீக்கிரத்தில் உலர்ந்துபோவதால் அடியிலிருந்து ஈரம் மேல் மண்ணுக்கு ஏறுமலும் ஆவியாய்ப் போய்விடாமலும் காக்கிறது. ஆகையால் 'தந்துலு' என்னுங்கருவியை ஆழத்தில் போகும்படி ஓட்டுவதால் அநுகூலமில்லை, பிரதிகூல முண்டாமென்றே சொல்லவேண்டும்.

பருத்திப்பயிரைக் கலைத்தல் அனேகவிடங்களில் ஒரு நூதனப் பழக்கமாயிருக்கிறது. கிருஷிகர் தங்கள் கம்புப்பயிரைக் கலைப்பதுண்டு. ஏனென்றால் அந்தப் பயிரின் ஊடே அதிகமான இடை வெளியிருந்தால் அது நன்றாய் வளருமென்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் பருத்திப்பயிர் வளர்ச்சிக்கும் அதிகமான இடைவெளி யிருக்கவேண்டுமென்பதையே அவர்கள் நிச்சயமாய் அறியவில்லை. பருத்தியானது கம்புப்பயிரைப்போல் மூடிகட்டிக் கிளைப்பதில்லையாயினும் அதன் மத்திய சாகையிலிருந்து கிளைகளுண்டாகும். அவைகளை வளரவிட்டால் ஒவ்வொரு கிளையிலும் காய்கள் பிடிக்கும். இது மட்டுமல்ல. ஒரு பயிரைக் கலைக்கும்போது வலிமையுடன் செழிப்பாய் வளர்ந்திருக்கும் செடிகளாய்ப் பார்த்து விட்டுவிட்டு, கேவலமாயிருக்கும் செடிகளைப் பிடுங்கி எறியக்கூடும். இது மிக

வும் முக்கியமான காரியம். ஏனென்றால், ஒரு பயிரானது, எவ்வளவுக்கு வலிமையுள்ளதாயும் செழிப்பாயும் வளர்ந்திருக்கிறதோ அவ்வளவுக்கு அதில் பூச்சிகள் நோய் நொடிகள் உண்டாகாமலிருக்கும். சால்விதைக் கருவி கொண்டு விதைத்தால் அந்தப்பயிரைக் களைத்தல் மிகவும் எளிது. முதல் முதல் பயிர் களைக்கும் போது சாதாரணமான வளமுள்ள நிலத்தில் ஒரு அடி அல்லது ஒன்றரை அடி தூரத்துக்கு இரண்டு மூன்று செடிகளை விட்டு வைக்கவேண்டும். சுமார் மூன்று வாரத்துக்குப்பின் இப்படி விடப்பட்ட இரண்டு மூன்று செடிகளில் எது பலமாயும் செழிப்பாயும் வளர்ந்து வருகிறதென்று தெளிவாய்த் தெரிந்துகொள்ளப் போதுமானபடி பயிர்மேல் வந்திருக்கும். அப்போது இரண்டாந்தரம் பயிர் களைத்தல் செய்ய வேண்டும். அதாவது பலமாயிருக்கும் ஒரு செடியைமட்டும் விட்டுவிட்டு மற்றவைகளைப் பிடுங்கிவிட வேண்டும். இவ்விதமாக நிலத்திலுள்ள எல்லாச் செடிகளுக்கும் அவைகள் வளர்வதற்குச் சரிசமானமான இடைவெளி ஏற்பட்டிருக்கும். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கிருஷிகர் முதல் முதல் சால்விதைக் கலப்பையை உபயோகித்துப் பருத்திப் பயிரிடத்தொடங்கியபோது, அந்தப்பயிரைக்களைக்கக் கொஞ்சமும் மனமில்லாதவர்களாயிருந்தார்கள். ஆனால் இப்போது களைத்த பருத்திப்பயிர் அதிக மேன்மையாய்ப் பலன் கொடுப்பதைப் பார்க்கப் பார்க்க இந்த ஆக்ஷேபனை மறைந்துபோகிறது. என்றாலும் மண்பாங்கு அதிக வளமுள்ளதானால் அதின் வளத்துக்குத் தக்கதாகச் செடிகளுக்கு அதிகமான இடைவெளி விடவேண்டியது அவசியமென்பதைக் கவனிக்கவேண்டியது முக்கியம். சென்ற வருஷத்தில் சால்விதைக் கருவியால் விதைத்ததில் ஒரே ஒரு நிலத்திலுண்டான பயிர்மட்டும் சரியான மாசூல் கொடுக்காமல் போயிற்று. அந்த நிலத்தில் ஆட்டுக்கிடை வைத்ததுமல்லாமல் அதிகமான சாணி எருவும் போடப்பட்டிருந்தது.

எச். சி. சாம்ப்ஸன்,
தென்பாகம் விவசாய டெப்டி டைரெக்டர்.

சென்னை கண்ணாடித் தொழிற் கூட்டம்

THE MADRAS GLASS WORKS Co., (Ltd.)

மயிலாப்பூரிலிருந்து ஸமுத்திரக்கரை ஓரமாக இருக்கும் பாதையின் வழியே திருவல்லிக்கேணிக்குப் போகும்போது முன்னர் ஐஸ் மெத்தை என்று கூறப்பட்ட கட்டிடத்திற்கு அருகாமையில் ஓர் புதிய கட்டிடம் காணப்படும். இந்தவிடத்தில் முன்னர் திருவல்லிக்கேணி சாக்கடைத் தண்ணீர் உபயோகப்படுத்தும் சாலை இருந்தது. இந்தப் புதிய கட்டிடத்தில்தான் கண்ணாடிக் கைத்தொழில் இப்பொழுது நடந்து வருகின்றது. இந்தவிடத்தில் நடக்கும் அத்புதத் தொழிலைப் பின்வரும் பாகத்தில் நன்கு விவரிப்போம்.

இந்தத் தொழிற்சாலையுள் பிரவேசித்ததும் தென்னண்டைபுறம் சிறு அறைகள் காணப்படும். அவைகளுள் ஒன்றில்தான் இந்தக்கூட்டம் மேல் அதிகாரி இருப்பது. அங்குதான் இந்தத் தொழிற்சாலையில் செய்யப்படும் வஸ்துக்களில் ஒவ்வொன்று மாதிரிக்காக வைக்கப்பட்டிருக்கும். அடுத்த அறையில் தான் இங்கு செய்யப்படும் வஸ்துக்களைச் சேகரித்து ஒழுங்காக வைக்கப்பட்டிருப்பது. இதில் ஒருவரையும் விடுவதில்லை. கொஞ்சம் மேற்கே சென்றால் இந்தத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய இரும்பு ஆயுதங்கள் செய்யும் கொல்லன் பட்டரை காணப்படும். அங்கிருந்து பார்த்துக்கொண்டே கிழக்கே வரும்பொழுது ஓர் பெரிய காரையால் கட்டப்பட்ட தண்ணீர் தொட்டியும் அதனுள் ஓர் தண்ணீர்க் குழாயும் காணப்படும். இதனுள் மணலைக்கொண்டு வந்து கொட்டிக் களைந்து சுத்தப்படுத்துவது. இதன் அருகாமையில் ஸுமார் 25-அடி நீளம் 12-அடி அகலம் உள்ள ஓர் காறைக்கட்டு திண்ணை இருக்கிறது. இதில்தான் களைந்த மணலை உலர்த்துவது.

தொழிற்சாலை வடகிழக்குப் புறத்தில் துத்திநாகத் தகட்டுச்சார்பு ஒன்றிறக்கப்பட்டிருக்கிறது. அதில்தான் பெரிய உலை அடுப்பு இருக்கிறது. இதில் நேரிட கட்டையை எரித்து நெருப்பு உண்டாக்குவதில்லை. இதன் அடிப்பாகத்தில் நெருப்பு எரிகிறது. அதன்மேல் பருமனான இரும்புக் கம்பிகள்

பட்டைகளாலாகிய சல்லடைக்கண்கள் போடப்பட்டு அதன்மேல் இரண்டு குவியல் கட்டைகள் அடுக்கி இருக்கும். இக்கட்டைகளை மேலே காணப்படும் இரண்டுதொட்டிகள்மூலமாகப்போட்டு அவைகளை நன்றாக மூடிவிடுவது. இவைகளிலுள்ள கட்டைகள் எரியாது உள்ளே அவிந்துவருவதால் அவைகளிலிருந்து மாவாயு உண்டாகின்றது. இது குழாய்கள் மூலமாகக் காற்றுக் காளவாய் அடுப்புள் போகின்றது. போகும் வழியில் விசிரிச் சக்ரம்போன்ற ஏற்பாட்டால் இந்த மாவாயுவை அதிகவேகமாகப் போகவொட்டாமல் தடுக்கப்படுகின்றது. இந்த மாவாயு காளவாய் அடுப்பில் ஏற்றப்பட மஹாஜ்வாலை விட்டெரிகின்றது. இதைக் காற்றுக்குழாயுள்ளிருந்துவரும்காற்றுகளவாய் முழுவதும்பரவி அதிகஉஷ்ணப்படுத்தும்படி ஊதுகின்றது.

இனித்தொழிற்சாலையுள்ளிருக்கும் காளவாய் அடுப்பைப்பற்றி விசாரிப்போம். இது மண், கல்முதலியவைகளால் பெரிய குதிர்போலவும் அறைபோலவும் தெற்கு வடக்காகக் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு ஆறு ஜன்னல்கள் உண்டு; மூன்று கீழ்புறத்திலும், மூன்று மேல்புறத்திலும் உள்ளன. இவைகளைக் காற்று அடைப்பாய் அடைக்கும் கதவுகளும் உண்டு. இவ்வடுப்புள் தென்புறம் ஒன்றும் வடபுறம் ஒன்றுமாக மாவாயுக் குழாய்கள் கொண்டுவந்து சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகளை அடைக்கவும் திறக்கவும் வேண்டிய யந்திரம் வெளியில் வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த யந்திரத்தால் ஸுமார் அரை மணிக்கு ஒருதரம் மஹா ஜ்வாலை வடக்கு நோக்கியும் தெற்குநோக்கியும் மாறித்திருப்பப்படும். இதனால் இந்த அடுப்புள்உள்ள வஸ்துவின் எல்லாப்பாகங்களிலும் உஷ்ணம் ஒரே நிலையில் மாறாதிருக்கும்.

இந்த அடுப்புள்தான் ஒவ்வொருநாளும் மாலை நேரத்தில் கண்ணாடியாக வேண்டிய வஸ்துக்களைத் தகுந்தபடி கூட்டிபோட்டு, ஜ்வாலை உண்டாக்கி ஜன்னல்களை எல்லாம் மூடி விடுவது. இவ்வஸ்துக்கள் மறுநாள் காலை 7-மணி ஸுமாருக்குத் ததகாயமானமாகிய கண்ணாடிக் குழம்பாக உள்ளே ஆகிவிடும். காலையில் ஜன்னல்களைத் திறந்தால் உஷ்ணம் ஸஹிக்க முடியாதது போலக் காணப்படும். இதை நோக்கினால் வைதரணீ என்ற அக்னி ஆறோ என்னும்படி பயங்கரமாக இருக்கும். இதன் அருகில் வேலை செய்பவர்களுக்கு இது லக்ஷ்யமேயில்லை. உள்ளிருக்கும் கண்ணாடிக்குழம்பை பார்த்தால் கண்ணுக்குப்புலப்படாது. உற்று நோக்கினால்மேலே அசைந்தாடும் ஜ்வாலையின் பிரதிபிம்பம் அடியில் தெரிவதால் நடுவில் ஏதோ ஓர் மட்டம் தோற்றுவதாகத் தோன்றும். பக்கத்தில் வைத்திருக்குந் தண்ணீரை ஒரு கை வாரி உள்ளே இறைத்தால், இது ஆவியாக உடனே மாறும்பொழுது சிறு முத்துப்போல உருண்டையாகக் கண்ணாடிக் குழம்பின்மேல் மட்டத்தில் ஓடியாடிச் சுழலும். இதனால் கண்ணாடிக்குழம்பின் மேல் மட்டத்தைக் கண்ணாரக் காணலாம். கண்ணாடிக்குழம்புள் கண்ணாடி ஊது குழலைத்தோய்த்துத் தூக்கினால் கண்ணாடிக் குழம்பின் மட்டம் நன்றாகத் தெரியவரும்.

ஸுமார் 5-அடி நீளமுள்ள எஃகுக்குழாய்கள் இந்த அடுப்பருகில் இருபுறங்களிலும் குளிர்ந்த ஜலத்துள் தோய்க்கப்பட்டுத்தயாராக இருக்கும். இதில்கீழ்புறத்திலிருப்போர் ஸோடா ஸீஸாக்கள் செய்கின்றனர். முதலில் இவர்கள் எஃகுகுழாயால் கண்ணாடிக் குழம்பைவேண்டியஅளவு எடுத்துவெளியேகொண்டுவந்து ஓர் கவர்பாய்ந்து ரோஜன்தடவிய இரும்பின் இடை வைத்து உருட்டுகின்றார்கள். இதனால் கண்ணாடிக் குழம்பின் சிறுபாகம் எஃகுக்குழாய் நுனியில் நன்றாக ஒட்டிக்கொள்ள மற்றையபாகம் உருண்டையாகத்தொங்கும். உடனே இதைஎடுத்துமறுபுறத்தில் வாயைவைத்து ஊதுவர். இதனால்கண்ணாடிக்குழம்பு உருண்டையுள் இடம் உண்டாக அது உப்பி வரும். இந்த ஸமயத்தில் உருண்டையாக்கும் ஓர் ரோஜன்தடவிய இரும்புக் குழியுள் இந்த உப்பிவரும் குழம்பை வைத்து குழாயை உருட்டி அதை உருண்டுவரும்படி செய்வர். இப்படிச் செய்கையில் உஷ்ணம் குறைந்திருப்பதாகத் தோற்றினால் அதை அப்படியே எடுத்துக்காளவாயில் காய்ச்சுவர். பின்னர் அதை எடுத்து லாகவமாகச் சுழற்றுவர். கண்ணாடிக்குழம்பு நீண்டுவரும். இந்த ஸமயத்தில் கீழேயிருக்கும் ஸீஸா அச்சுள் இதைவிட்டு அச்சைக் காலால் அமுக்க அது மூடிக்கொள்ளும். உடனே வாயால் தம்மால் இயன்றமட்டும் குழாயுள் ஊதுவர். மேலும் வாயு வேண்டுமானால் வாயு அடைக்கும் கருவியால் அதனுள் வாயுவை அடைப்பர். இப்படிச் செய்கையில் வெளியில் அச்சின் மேல் தெரியும் கண்ணாடிப்பாகம் சற்று உப்பிக்

கழுத்துப்போல் படியும். இந்த ஸமயம் பார்த்து அச்சைத்திறந்து கண்ணாடியை வெளியில் எடுத்தால் அது பழுக்கக்காய்ந்த ஸோடா ஸீஸாவாகவே இருக்கும். இதன்கழுத்து அருகில்கிட்டேஇருக்கும்தண்ணீரில் தோய்த்த கத்தியால் இழுத்துவிடுவர். எதிரே இருந்து ஓர் வேலைக்காரன் இரும்புக்கம்பியின் நுனியில்உள்ள தகுந்த இரும்புக் குவளையுள் ஸீஸாவைப் பிடிப்பான். உடனே ஓர்அசைப்பால்அந்தஸீஸாவை தண்ணீர் தடவிய இடத்தில் தொழிலாளிஉடைத்து ஸீஸா ஏந்திய குவளையைத் தான் வாங்கிக்கொண்டு அதைக் காளவாயில் காய்ச்சுவான். பின்னர் அதை வெளியேகொண்டுவந்து அருகிலிருக்கும்கண்ணாடிக் குண்டை எடுத்து அதனுள் போட்டுச் சற்றுக் காய வைப்பான். உடனே அதைவெளியில் எடுத்து அதன் கழுத்தில் கொஞ்சம் கண்ணாடிக் குழம்பைச் சுற்றிலும் பட்டையாக விடுவான். பின்னர் கழுத்து உண்டாக்கும் அச்சை எடுத்து அதனுள் ஓட்டை அடையாதிருப்பதற்காக இருக்கும் மத்தியக் கம்பியை ஸீஸா உள்விட்டுப் பக்கங்களை இறக்கிப்பிடித்துக் கொண்டு ஸீஸாவைச் சுழற்றுவான். அப்பொழுது கழுத்துப்பாகம் பட்டையாயும் குறுகலாயும்போகும். ஸீஸாவைக் கவிழ்த்துப் பார்த்து உள்ளிருக்கும் குண்டு விழாதிருந்தால் அதை அப்படியே வேலைக்காரனிடம் கொடுத்துவிடுவான். அதை அவன் வாங்கி உஷ்ண அறை ஒன்றில் மெதுவாகக் குளிர்ந்து வருதற்காகப் போட்டு விடுவான். இவைகள் எல்லாம் ஸுமார் $1\frac{1}{2}$ அல்லது 2 நிமிஷத்தில் முடிந்துவிடும்.

காளவாயின்மேல்புறத்தில் கண்ணாடிஓடுகள் செய்யப்படுகின்றன. இங்கேஅச்சின் அடிப்பாகத்தில் கண்ணாடிக்குழம்பைத் தண்ணீரில் தோய்த்திருக்கும் இரும்புக்கரண்டியால் இட்டலிமா வெடுப்பதுபோல திட்டமாக எடுத்து ஓர் தொழிலாளி போடுவான். சில வேலைக்காரர்கள் தாமதிக்காது அச்சின் மேல் பாகத்தைத்திடீரென்று இறக்கி அமுக்குவர். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் அச்சைத் தூக்கினால் உள்ளே மங்கலாபுரம் மண் ஓடுபோன்ற கண்ணாடி ஓடு தகதகாயமானமாகப் பழுத்துக்காய்ந்து காணப்படும். இதை உடனே எடுத்து உஷ்ண அறையில் போடுவர். இரண்டு நிமிஷத்திற்கு ஓர் ஓடு முடியும். இந்தப்புறத்தில்தான் கண்ணாடி வேலை கற்றுக்கொள்ள வேண்டும் என்ற வித்யார்த்திகள் வேலை செய்வது.

இந்த வேலைகளில் உடைந்து போகும் கண்ணாடிகள் வீணாகப் போவதில்லை. இவைகளை எல்லாம் சேர்த்துவைத்து மாலை தொழில்முடிந்து போகும் பொழுது வேலைக்காரர்கள் காளவாயுள் போட்டுவிட்டுப் போய்விடுவார்கள். இவை மறுநாள் கண்ணாடிக்குழம்பாகிவேலைக்குத்தகுந்தநிலையில் இருக்கும். மரவாயு உண்டாகும் இடத்தில் கீல் எண்ணெய்போன்றகருப்பானவஸ்துஒன்று உண்டாகின்றது. இவைகள் கப்பல்களுக்குஉபயோகப்படுமாதலின் இவைகளையும் ஜாக்கிரதையாகப் பீப்பாயில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது.

இனி அதிக உஷ்ணமாக இருக்கும் வஸ்துக்கள் மெதுவாகக் குளிர்ந்துவர ஏற்பட்டிருக்கும் உஷ்ண அறையைப்பற்றிக் கூறுவோம். இதனுள் வஸ்துக்களை வைப்பதற்காக ஒரே ஜன்னல்தான் உண்டு இதை அடைத்துவிட்டால் இந்த உள் காற்றடைப்பாக இருக்கும். இந்த அறையுள் நல்ல ஸந்நமான மணல் நிறைய விரிக்கப்பட்டிருக்கிறது. இதனுள் செய்யும் வஸ்துக்கள் ஓர் புறத்தில் ஒழுங்காக வைக்கப்படும். எதிர்புறத்தில் மரவாயுக் குழாயால் உண்டாக்கப்பட்ட ஜ்வாலை அசைந்தாடி உள்ளே உஷ்ணப்படுத்திக்கொண்டிருக்கும். ஒருநாள் செய்த வஸ்துக்களை உள்ளே வைத்துவிட்டு மாலையில் போகும் பொழுது மரவாயுவை நிறுத்தி ஜ்வாலை அடங்கும்படி செய்து ஜன்னலை மூடிப்பூட்டி அதில் அன்று தேதியையும் போட்டுவிட்டு வேலைக்காரர் போய் விடுவார்கள். ஐந்துநாள் கழித்து இதைத் திறந்து குளிர்ந்திருக்கும் ஸீஸா ஓடு முதலியவைகளை எடுத்து அலம்பி சேகரிக்குமிடத்தில் கொண்டு சேர்ப்பர். இவ்வாறு செய்யாது ஸாதாரண இடங்களில் இவைகளை ஆறும்படி வைத்தால் இவைகள் ஸமமாகவும் மெதுவாகவும் எல்லாவிடங்களிலும் குளிர்ந்து வராமல் போகக் கீறல் விட்டு உடைந்து போம். இம்மாதிரி சில உஷ்ண அறைகள் இங்கு இருக்கின்றன.

முன்னர் கூறியுள்ள ஓடு குளிர்ந்து பக்குவமானதும் அதை எடுத்து ஒருபுறத்தை மங்கும்படி செய்ய வேறோர் அறைக்குக் கொண்டு போவார்கள். அங்கே ஓர் காற்றடைக்கும் யந்திரம் வேலைசெய்து காற்றை ஓர் ஸந்ந மணல் நிறைந்த பாத்திரத்துள் அடைக்கும். அதிலிருந்து ஓர் குழாயுள் காற்றால் மணல் கொண்டுபோகப்பட்டு அதன் கூறிய நுனியிலிருந்து பீறிட்டுக்கொண்டு வெகு வேகமாக

வரும். இந்த பீறிட்டு வரும் மணலில் நமது விரலைப் பிடித்தால் மணலின் வேகத்தால் கையில் காயம்பட்டு இரத்தம் வரும். அருகாமையில் கண்ணாடியால் மூடப்பட்டுத் திறக்கக்கூடிய ஓர் சிறு பெட்டி சுவற்றோரமாக இருக்கும். அதில் பக்குவமான கண்ணாடி ஓடு இரண்டு மூன்றைச்சாற்றி வைத்து அவைகளின்மேல்மணல்பீறிட்டுவரும் குழாயைப்பிடிப்பார்கள். ஸுமார்கால்மணிநேரத்திற்குள் ஓட்டின் ஓர்புறம்மணலால்தேய்க்கப்பட்டுபுள்ளிவிழுந்ததுபோல மங்கலாகும். இவ்வாறு மங்கலான கண்ணாடி ஓடு செய்யப்படும். இதைக் கூரையின்மேல் போட்டால் உள்ளே வெளிச்சம் ஏராளமாகவும் இருக்கும். வெயிலும் அடிக்காது. கண்ணாடிபெட்டியிலுள்ள மணல் பெரும்பாலும் கீழேவிழும். சில பாகம் பெட்டியின்மேலுள்ள குழாய் மூலமாக உள்ளேயுள்ள காற்று வேகத்தால் வெளியே லேசான புகைபோலக் கொண்டுபோகப்படுவதைக் கட்டிடத்தின் மேல்புறம் வெளியே நோக்கில் காணலாம். ஓடு இவ்வாறு மங்கலானதும் பக்கத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் சாணைக்கல்லால் அதன் முனைகள் கூறிய பாகங்கள் மட்டமாக்கப்படும்.

காளவாய்அடுப்பில் போடப்படும் வஸ்துஇன்னது என்பதைப்பற்றி விவரிப்போம். களைந்து உலர்த்திய மணலை உள்ளே கொண்டுவந்து சல்லடையால் முதலில் சலிப்பார்கள். பருக்கைக் கற்களை அரைக்கும் யந்திரத்தில் இட்டுப் பொடி பண்ணுவார்கள். கடற் கிளிஞ்சில்களும் இவ்வாறு சுத்தம் செய்யப்பட்டு அரைக்கப்படும். ஸோடா உப்பும் இவ்வாறு பொடிபண்ணப்பட்டபின் இவைமூன்றிலும் தகுந்த நிறைகள்(இது தான் இங்குள்ள ரஹஸ்யம்) எடுத்துக் கலக்கும் யந்திரத்தில் இட்டுக் கலக்கப்படும். வேறு சில வஸ்துக்களும் சேர்க்கப்படும்) இந்தக்கலவையைத்தான், காளவாய் அடுப்பில் இடுவது. இந்தத்தொழிற்சாலையில் சாணைக்கல், காற்றடைக்குங் கருவி, அரைக்கும் யந்திரம், கலக்கும் யந்திரம் இவைகள் நீராவி யந்திரத்தின் ஸஹாயத்தால் தொழிற்படுவன.

இந்தத் தொழிற்சாலைக்கு வேண்டிய வஸ்துக்கள் விஷயத்தைப்பற்றி நோக்குவோம். பட்டணத்திற்கு 12-மைல் தூரத்திற்குள் இருக்கும் எண்ணூரில் ஓர் மணற்சுரங்கம் இக்கூட்டத்தாருக்கு அகப்பட்டிருக்கிறது. அதிலிருந்து எடுக்கப்படும் அதிக இரும்பில்லாத மணல் படகுகளில் ஏற்றப்பட்டுப் பக்கிங்ஹாம் கால்வாய் மூலமாக இந்தத் தொழிற்சாலையின் பின் அருகாமையில் வந்து சேருகிறது. பட்டணத்தில் கடற் கிளிஞ்சில்களுக்கோ கேட்க வேண்டியதில்லை. ஸோடா உப்பும் வெளிதேசத்தில் இருந்து வருவது. இவைகளுக்கு வேண்டிய விறகுச் செலவுதான் மிக அதிகம். இந்தத் தொழிற்சாலை அதிகாரி சென்னை கவர்னர் துரையவர்களை அழைத்துவந்து நடக்கும் வேலைகளின் நயத்தைக் காட்டி ஏதாவது தமக்கு ஸஹாயம் செய்தால் நலமாக இருக்கும் என்றதில் அவர் பெரிய மனது செய்து ஸுமார் $\frac{3}{4}$-லக்ஷம் ரூபாய் பெறுமானவரையில் விறகு கிரமமாக இத்தொழிற்சாலைக்குக் கொடுத்துவரும்படி அவர் உத்தரவளித்தார். கவர்ன்மெண்டார் செய்த இப்பேருதவியாலேயே இந்தத் தொழிற்சாலை ஓங்கிச் செழித்து வருகின்றது.

இப்பொழுது இச்சாலையில் ஏராளமாக ஸோடா ஸீஸா (பெரிது சிறிது), ஓடு, வாய் அகன்ற ஜாடி, ஸீஸா, கண்ணாடிகள் இவைகளைச் செய்கின்றனர். இவைகளுள்:—

பெரிய ஸோடா ஸீஸா 144-க்கு ரூ. $13\frac{1}{2}$ விலை, வெளியூர் விலையோ ரூ 18. சிறியதன் விலை ரூ $11\frac{1}{4}$. வெளி விலை ரூ. 15. ஓடு மங்கலாக்கியது ஒன்றுக்கு ரூ. 1—12—0 வும், மங்கலாக்காததற்கு ரூ. 1—8—0 வும் விலை. வெளிவிலையோ முறையே ரூ. 4—4—0, ரூ. 3—12—0-ம் ஆம். மற்றையவைகளும் இவை போலவே மிகுந்த தாழ்ந்த விலைக்குக் கிடைக்கும்.

இங்கு 2 அல்லது $1\frac{1}{2}$-நிமிஷத்தில் செய்யப்படும் ஸோடாஸீஸா ஸுமார் 450-பவுன் அழுத்தத்தை உடையாமல் தாங்குகின்றது. வெளி ஸீஸாக்கள் ஸுமார் 225-பவுன் அழுத்தம்தான் தாங்கும்.

இனி இக்கூட்டத்தார் எல்லாவிதக்கண்ணாடி ஸாமான்களும் செய்யவேண்டும்என்று முயல்கின்றனர். இதற்காகயந்திரங்கள்வெளியூரிலிருந்துவருகின்றன இவர்களுக்கு வேலை கற்றுக்கொடுக்கக் கண்ணாடி வேலைநிபுணர்கள் வெளியூரிலிருந்து வந்துகொண்டிருக்கின்றனர். கூடியசீக்கிரத்தில் இதைப்போல சில தொழிற்சாலைகள் இதன் அருகாமையில் ஏற்படலாம். இந்தக் கைத்தொழில் நன்றாக விருத்தியடைந்து நம் ராஜதானியிலுள்ள அநேகருக்கு ஜீவனோபாயம் உண்டாக்கி, நம் உபயோகத்திற்கு வேண்டிய கண்ணாடி ஸாமான்களைத் தந்து, நம்மைச் சிறப்பிக்க வேண்டும் என்று நாம் கடவுளைப்பிரார்த்திக்கிறோம்,

அடங்காப்பிடாரி *

THE SHREW

இதலி தேசத்தில் பாடுவா என்ற ஒரு பட்டணமுண்டு. அதில் பாப்டிஸ்டா என்ற ஒரு பணக்காரக் கனவானிருந்தான். அவனுக்கு இரண்டு பெண்கள் உண்டு; முறையே காதரீன், பையான்கா என்று அவர்களுக்குப் பெயர். பையான்கா இளைய பெண், மிகுந்த ரூபவதியாயும் குணவதியாயும் இருந்தாள். உலகில் எல்லா விஷயத்திலும் பூர்ண ஸுகம் உடையவர்கள் இல்லை என்பதற்கேற்ப இவ்வளவு பாக்யங்கள் அமைந்திருந்தும், ஒரு தீராக் குறை மாத்திரம் பாப்டிஸ்டாவுக்கு இருந்தது. அவன் மூத்த பெண்ணாகிய காதரீனே இந்தக் கஷ்டத்திற்குக் காரணமாக ஏற்பட்டாள். அவள் ஓர் அடங்காப்பிடாரி. வீட்டில் தகப்பன் சொல்வதைக் கேட்பதேயில்லை. அகாரணமாகச் சண்டைகளை உண்டாக்கிக்கொண்டு வீட்டை அல்லோலகல்லோலப்படுத்தி வருவாள். இதுவும் அல்லாமல் அடிக்கடித் தன் தங்கைபையான்காவிடம் அகாரணமாகக் கோபித்துக்கொண்டு அவளை ஈவு இறக்கமின்றி அடித்துவிடுவாள். அக்காள் தங்கைகளது சண்டைகளை விலக்குவதே தினம் பாப்டிஸ்டாவின் ஓயா தொழிலாகிவிட்டது. "என் கதி இவ்வாறாகிவிட்டதே! நல்ல வெள்ளை வேஷ்டி மத்தியில் ஓர் கருப்புப் புள்ளியைப்போல நமது கீர்த்தி முதலியவற்றிற்கு இந்தக் காதரீன் தடையாக ஏற்பட்டாளே!" என்று அவன் ஸதா துக்கித்துக்கொண்டிருந்தான்.

இவ்வாறிருக்கையில் பெண்கள் இருவரும் நன்றாகப் போஷிக்கப்பெற்றுத் தகுந்த பருவத்தை அடைந்தனர். உடனே பாப்டிஸ்டா துக்கம் அதிகரித்துவிட்டது. "அப்பனுக் கடங்காப்பெண் எவ்வாறு ஆமக்கனுக்கு (புருஷனுக்கு) அடங்கும்? இவளை யார் கல்யாணம் செய்துகொள்வார்கள்? பெரிய குலத்தில் பிறந்து கல்யாணமின்றிப் புருஷர்களால் நிராகரிக்கப்பட்டா நமது மூத்த பெண் வாழவேண்டும்!" என்ற ஏக்கம் பாப்டிஸ்டா மனதைக் கவர்ந்தது. இதற்குள் காலக்கிரமத்தில் கிரீமியோ, ஹார்டென்ஸியோ என்ற இரண்டு தனிகர்கள் தாங்கள் பையான்காவைக்கல்யாணம்செய்துகொள்ள விரும்புவதாகத் தெரிவித்தனர். பின்னர் இந்த விஷயத்தில் பாப்டிஸ்டாவை அடிக்கடி இவர்கள் இருவரும் தொந்திரவும் செய்யத் தொடங்கிவிட்டனர். பாப்டிஸ்டா மனம் பதைக்கத்தொடங்கிவிட்டது ஒருநாள் பையான்காவிடம் பிரீதிகொண்ட இருவரும் பாப்டிஸ்டா வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தனர். எதிரில் பாப்டிஸ்டா, காதரீன், பையான்கா மூவரும் வருவதைக்கண்டு இவர்கள் ஸந்தோஷித்து மறுபடியும் அவர்கள் தகப்பனுரை தம் எண்ணத்திற்கு இசையும்படிவேண்டினர். அதற்குப்பாப்டிஸ்டா "என் மூத்தபெண்ணுக்குப்புருஷன் கிடைக்காதவரையில் நான் என் இளையபெண் விவாஹத்தைப்பற்றி யோசிக்கவேமாட்டேன்! என்னை வீணாக வருத்த வேண்டாம்! உங்களில் யாராவது காதரீனை மணஞ்செய்துகொள்ள விரும்பினுல் அவளை இசையும்படி செய்துகொள்ளலாம்" என்று மிகவும் நொந்துகொண்டு சொன்னான். இந்த வார்த்தையே காதரீனது துர்க்குணத்தை வெளிப்படுத்தியது. அவள் தன்னைப்பற்றி இகழ்ந்து பேசியதாக எண்ணி மிகுந்த கோபங்கொண்டு வாயில் வந்தபடியெல்லாம் தகப்பனை வைதுத் தன் தங்கையையும் வெருட்டிநோக்கினாள். பையான்கா வாய்கூடத் திறக்காது மிகுந்த சாந்தமாக இருந்தாள். பார்த்தான் பாப்டிஸ்டா! என்ன செய்வான்! பையான்கா அங்கிருந்தால் வந்திருப்பவர் இருவரும் தன்னைக் கட்டாயப்படுத்துவர்; மேலும் காதரீன் கொடுமைக்கு ஆளாகி விடும்படி நேரிட்டாலும்நேரிடும். நடுத்தெருவில் இது ஊர்சிரிக்கும் நாடகமாக முடிந்துவிடும் என்று அவனுக்குத் தோற்ற பையான்காவை வீட்டிற்குப் போகும்படி கட்டளையிட்டான். தகப்பன் கட்டளையைச்சிரமேற்கொண்டு "அக்கா, இவ்வளவுகோபமாகாது" என்று மெதுவாகக்கூறிவிட்டுத்தன் படிப்பு, பாட்டுமுதலியவைகளைக் கவனிக்கப் பையான்கா போய்விட்டாள். உடனே பாப்டிஸ்டாவும் தன் இளையபெண்ணுக்குப் படிப்பு, பாட்டு இவைகளில் இருக்கும்ஞானத்தை ஒருவாறு வந்தவர்களுக்கு எடுத்துக்கூறி அவளுக்குத்தகுந்த உபாத்தியாயர் அகப்பட்டால் கொண்டுவிடும்படி வேண்டிக்கொண்டு, தன் பெண் காதரீனுடன் வீடு நோக்கிப் போய்விட்டான். ஹார்டென்ஸியோவும்

* நமது விவேக போதினியில் தொடர்ச்சியாக வந்துகொண்டிருந்த நீலிவசீகரம் என்ற கதையை ஷேக்ஸ்பீயர் மஹாகவி கூறியவாறு கூறி, அதைப்பற்றிய குறைகுண விமர்சையையும் எழுதப் புகுமிடத்தில் இங்கு அந்தக் கதையைச் சுருக்கிக் கூறுவோம்.

கிரீமியோவும் அங்கேயே கொஞ்சநாழிகை பேசிக்கொண்டிருந்தனர். இதன் முடிவில் பையான்காவுக்குத் தகுந்த உபாத்தியாயர் ஸம்பாதித்துக்கொண்டு மறுபடியும் பாப்டிஸ்டாவிடம் போகவேண்டும் என்றும், அதன் மத்தியில் காதரீனுக்குத் தகுந்த பணத்தாசை பிடித்த புருஷன் ஒருவனை ஸம்பாதித்து பையான்கா நிலையை ஸரிப்படுத்திப் பின்னர், தாம் பாப்டிஸ்டாவிடம் அவள் கல்யாண விஷயத்தை எடுக்கவேண்டும் என்றும் தீர்மானித்துக்கொண்டு தமது இருப்பிடம் சென்றனர்.

முற்கூறியவைகளை ஒளிமறைவிலிருந்து லூஸென்ஷியோ, டிரேனியோ என்ற இருவர் கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தனர். இவர்களுள் லூஸென்ஷியோ என்பவன் பைஸா என்ற நகரத்திலிருந்த பிரபுவின்பிள்ளை. இவன்டிரேனியோ, பயான்டிலோ என்ற வேலைக்காரர்களுடன் அதிகப் படிப்புகள் படித்து சிறப்படைவதற்காக பாடுவா வந்தவன். பயாண்டிலோ கப்பலிலிருந்து ஸாமான்களை இறக்கிக்கொண்டிருந்தான். இதன் மத்தியில் லூஸென்ஷியோவும் டிரேனியோவும் ஊர்பார்க்கச் சற்று துறைமுகத்தைவிட்டுஉள்ளேபுகுந்தனர்அங்குபாப்டிஸ்டா முதலிய முற்கூறியவர்கள் வருவதைக்கண்டு இவர்களிருவரும்சற்று ஒதுங்கிநின்றுநடப்பவைகளைப்பார்த்துக்கொண்டிருந்தனர்.அப்பொழுதுபையான்காவின் அமைதி, கல்வித்திறன்முதலிய குணங்கள், அழகு முதலியவைகள் ஆகியஇவைகளுக்குலூஸென்ஷியோ ஈடுபட்டுவிட்டான். இவர்கள் போனதும் தனக்கு எப்படியாவது பையான்கா மனைவியாக அமைய வேண்டுமே என்ற ஏக்கம் அவனுக்கு வந்துவிட்டது. தன்யஜமானன்ஹிதத்தையே ஸதா எண்ணும் தன்மை வாய்ந்த டிரேனியோவுக்கு லூஸென்ஷியோவை உபாத்தியாயர் வேஷம் போடும்படி செய்து பையான்காவிடம் கொண்டுவிட்டு விடலாம் என்று தோன்ற அதை அவன் வெளியிட்டான். உடனே லூஸென்ஷியோவுக்கு டிரேனியோவைத் தன் ஸ்தானத்திலிருந்து பாடுவாவில் பழகும்படி செய்யலாம் என்று மேல்யோசனை தோற்றியது. அவர்கள் அப்பொழுதுதான் வந்து இறங்கியதால் அவர்களை ஒருவருக்கும் இன்னார் என்று தெரியாது. இது அவர்கள் யோசனைக்கு ஸஹாயமாக விருந்தமையால் அவர்கள் உடனே வேஷம் மாறிக்கொண்டனர். இதற்குள் பையாண்டிலோ வர அவனுக்கு லூஸென்ஷியோ தனது ஏற்பாட்டைக் கூறி டிரேனியோவைக் காரியம் முடியும் வரையில் யஜமான ஸ்தானத்தில் வைத்து நடத்தவேண்டும் என்று உத்தரவு செய்தான்.

இங்கு இப்படி இருக்க, அன்று ஹார்டென்ஸியோ வீட்டிற்கு பெட்ரூகியோ என்ற அவன் ஸ்நேஹிதன் ஒருவன் வந்தான். தன் ஸ்நேஹிதன் வீட்டுக்கதவு பூட்டி இருந்தது. இதைக்கண்டு அவன் தன் வேலைக்காரனை நோக்கி இலக்கணமாகக் கதவைத் தட்டித் தான் வந்திருப்பதாகத் தெரிவிக்கும்படி உத்தரவளித்தான். இந்தஇலக்கணமொழிவிளங்காத வேலைக்காரன் இன்னது செய்வதென்று விளங்காதுவிழிக்க, யஜமானன்வேலைக்காரனை அடித்தான். அவனிட்ட கூக்குரலைக்கேட்டு ஹார்டென்ஸியோ வாயில்கதவைத் திறந்து 'கூத்தில் கோமாளிபோல்' வந்த ஸ்நேஹிதனை ஸமாதானப்படுத்தினுன். இந்தப் பெட்ரூகியோ வெரோனுவைச் சேர்ந்த ஓர் பிரபு. இவன் தகப்பன் இறந்து கொஞ்சநாள்தான் ஆயிருந்தது. வீட்டைக் கவனிப்பவர்கள் ஒருவருமில்லாததால் அதற்கு ஸஹாயமாயிருப்பதற்காக ஓர் பெண்ணைக் கல்யாணம்செய்துகொள்ளத்தான் அவன் பாடுவாவுக்கு வந்தது. இவன் நல்ல குணமுடையவன். ஆனுல் ஸமயத்திற்குத் தக்கபடி கோமாளிபோல நடிப்பான். இதனுல் இவனைச் சிலர் கொடியவன் என்று எண்ணிவிடலாம். ஹார்டென்ஸியோவைக் கண்டதும் பெட்ரூகியோ தான்வந்த நோக்கத்தைத் தெரிவித்தான். அப்பொழுது அவன் காதரீனது அழகு, ஸொத்துமுதலியவைகளைஎடுத்துக்கூறி அவளது நீலித்தனத்தையும் ஒளிக்காது சொல்லிவிட்டான். இதைக்கேட்டதும் "அவள் நீலியானுல் என்ன, அவளுக்கு அழகும் ஸொத்தும் இருக்கின்றனவல்லவா? அதுபோதும். மற்றதை நான்பார்த்துக்கொள்ளுகிறேன்! எனக்கு அவள்தான் வேண்டும்! இனி அவளைக் கல்யாணம் செய்துகொள்ளாது எனக்குத் தூக்கம் பிடிக்காது!" என்று மிகுந்த பரபரப்புடன் சொன்னான். ஹார்டென்ஸியோ எவ்வளவு தடுத்தும் அவன் கேட்கவேயில்லை. பின்னர் ஹார்டென்ஸியோகாதரீன்தங்கைபையான்காவிடம் இருந்த தனது காதலை வெளியிட்டு, தான் ஓர்உபாத்தியாயர் வேஷம் போட்டுக்கொண்டு வருவதாகவும் தன்னைப்பெட்ரூகியோ பாப்டிஸ்டாவிடம் கொண்டு சேர்த்து, அவன் இளையபெண் பையான்காவுக்கு

உபாத்தியாயராக அமர்த்திவிடவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டான். இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் பையான்காவை விரும்பிய க்ரீமியோ என்பவன் ஓர் உபாத்தியாயரைக்கூட்டிக்கொண்டு அங்கு வந்தான். இவன்கூட்டிக்கொண்டு வந்தவன் தன்வேலைக்காரனோடு உடைமாற்றிய லூஸென்ஷியே என்பவனே. இவன்க்ரீமியோவின் சிறப்பைப் பற்றியே பையான்காவிடம் அடிக்கடிக் கூறுவதாக வாக்களித்தான். இவர்கள் பேசிக்கொண்டு வந்ததும் ஹார்டென்ஸியோவைக் கண்டார்கள். க்ரீமியோ பையான்காவிற்குத்தக்க ஓர் உபாத்தியாயர் அகப்பட்டுவிட்டார் என்று கூறினான். தனக்கும் ஓர் பாட்டு உபாத்தியாயர் சீக்கிரத்தில் அகப்படுவார் என்று ஹார்டென்ஸியோ கூற இருவருக்கும் பையான்காவிடம் தமக்கிருக்கும் காதல்விஷயமாகச் சற்று தர்க்கம் உண்டாயிற்று. இதன் முடிவில் ஹார்டென்ஸியோ தான் காதரீனுக்கு ஓர் புருஷன் ஸம்பாதித்து விட்டதாகவும் அவன்தான் அருகிலிருக்கும் பெட்ரூகியோ என்பதாகவும்கூற, எல்லோரும் பெட்ரூகியோவை க்ஷேமம் விசாரித்துக் காதரீனது நீலித்தனத்தைப்பற்றி வெகுவாகக் கூறினர். எல்லாவற்றையும் மிகுந்த அமைதியுடன் கேட்டு வந்த பெட்ரூகியோ "பெண்கள் நீலித்தனம் எனக்கு லக்ஷ்யமில்லை. மூட்டைப்பூச்சிக்கு ஸமானம்! பெண்களது நீலித்தனம் செய்வதெல்லாம் என் விஷயத்தில் ஸூர்யனைப்பார்த்து நாய்குலைப்பது போலாகும்" என்று உறுதியான மறுமொழி கூறினான்.

இப்படி இருக்கையில் அங்கு யஜமானன் வேஷம்போட்ட டிரேனியோ வந்து சேர்ந்தான். அவன் மிகுந்த ஆடம்பரத்துடன் பாப்டிஸ்டா வீட்டை விசாரித்தான். சீக்கிரத்தில் இந்தப் பிரபுவும் பையான்காவின்மீது காதல்கொண்டு வந்ததாகத்தெரியவந்தது. ஹார்டென்ஸியோ, க்ரீமியோ இருவரும் தாங்கள் பையான்காவின்மீது காதல் கொண்டிருப்பதாகச் சற்றுத்தர்க்கம்செய்துகொண்டனர். இதன் இடையில் பெட்ரூகியோ "அடங்காப்பிடாரி என்னைச் சேர்ந்தவள்! அவளை ஒருவரும் காதலித்துத்தர்க்கம் செய்யக்கூடாது!" என்றுகூற, அவர்கள் தர்க்கம் நின்றது. முடிவில் காதரீனைக் கைப்பற்றித் தமது பையான்காவைச் சிறைமீட்டதற்காகப் பெட்ரூகியோவுக்கு மூன்று காதலர்களும் விருந்தளிப்பதாக ஏற்பாடு செய்துகொண்டு ஒவ்வொருவராகப்பாப்டிஸ்டா வீட்டிற்குப்போகத் தலைப்பட்டனர்.

பாப்டிஸ்டா வீட்டிலோ முன் அறையில் பையான்கா உட்கார்ந்து வாசித்துக்கொண்டிருந்தாள். அங்குக்காதரீன் திடீரென்று ஓடிவந்து அவள்கையை சேர்த்துப்பிடித்து, "உன்னை விரும்பி வருபவர்களுள் யாரிடம் உன் மனம்பற்றி யிருக்கிறது" என்று கேட்டாள். அதற்கு அவள் உண்மையை ஒளிக்காது "இப்பொழுது வருபவர் எவரிடத்தும் என் மனம் பற்றவில்லை" என்று சொல்ல, "நீ பொய் சொல்லுகிறாய், உண்மையைக் கூறு," என்று அடிக்கடிக் காதரீன் கேட்டாள். பையான்கா மௌனமாயிருப்பதைக் கண்டு அதிகக் கோபங்கொண்டு அவள் கன்னத்தில் காதரீன் பளீரென்று அடித்தாள். இந்த ஸமயத்தில் பாப்டிஸ்டா அங்கு வர அவர்கள் சண்டையை விலக்கிக் காதரீனைக்கண்டித்தான். பையான்கா தனது உள்ளை நோக்கிப் போய்விட்டாள். காதரீனும் "அவள் மௌனம் என் கோபத்தை மூட்டியது. வேறொரு ஸமயம் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்றுகதறிக்கொண்டு போய்விட்டாள். பார்த்தான் பாப்டிஸ்டா! என்ன செய்வான்! "இம்மாதிரி சண்டைவிலக்குவதே நமக்குத்தொழிலாகிவிட்டது! ஈசுவரா! என்றைக்கு இந்தத்துக்கம் தீரும்?" என்றுபெருமூச்செறிந்தான்.

இந்தஸமயத்தில் க்ரீமியொஉபாத்தியாயர் வேஷத்துடன் கூடிய லூஸென்ஷியோ வுடனும், பெட்ரூகியே பாட்டு உபாத்தியாயர் வேஷத்துடன் வந்து ஹார்டென்ஸியோ வுடனும், லூஸென்ஷியோ வேஷம்பூண்ட டிரேனியோ புஸ்தகம், வீணை முதலியவைகளை ஏந்திவந்த தன் வேலைக்காரனுடனும் அங்கு வந்து சேர்ந்தார்கள். வந்ததும் முன்பின் யோசிக்காது பெட்ரூகியோ தன்காரியத்தைக்கூறப் புகுந்து காதரீனை வாயாரத்துதித்து அவளைத்தான் கைப்பற்றிக் கொள்ளுவதாகத்தெரிவித்தான். பின்னர் தான் கொண்டுவந்திருந்த பாட்டு உபாத்தியாயரைப் பாப்டிஸ்டாவிடம் ஒப்புவித்தான். க்ரீமியோவும் தான் கூட்டிக்கொண்டுவந்த உபாத்தியாயரை ஒப்புவித்தான். டிரேனியோ தான் கொண்டுவந்த புஸ்தகங்கள், வீணைகள் முதலியவைகளைப் பாப்டிஸ்டாவிடம் ஒப்புவித்துத் தனக்குப் பையான்காவிடம் இருக்கும் காதலை வெளியிட்டான். பின்னர் பெட்ரூகியோவும், டிரேனியோவும் தமது வம்சம், சொத்து முதலியவைகளை எடுத்துக்கூற எல்லோரும் பாப்டிஸ்டாவுக்குத் தெரிந்தவர்களாகவே போய்விட்டனர். பாப்டிஸ்டா உடனே இரண்டு உபாத்தியாயர்களையும் சென்று வேலைபார்க்கும்படி ஏவ, அவர்கள் அங்கிருந்த திரவ்யங்களை எடுத்துக் கொண்டு உள்ளே சென்றனர்.

இதன் மேல் பெட்ரூகியோ பாப்டிஸ்டாவை நோக்கி "என் காரியம் அவஸரம். நான் அடிக்கடி என் காதலைக் காட்ட இங்கு வரமுடியாது. சீக்கிரமாகக் கார்யத்தைத் தீர்ப்போம்" என்று சொல்ல, "எனது பூஸ்திதியில் பாதியும், ரொக்கம் 75,000 ரூபாயும் காதரீனுக்கு ஸ்திரீதனமாகக்கொடுப்பேன் என்று பாப்டிஸ்டா சொன்னான். ஆனால்அவனுக்குக் காதரீன் பெட்ரூகியோவைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்பவேண்டுமே என்ற கவலை வந்துவிட்டது. அப்பொழுது பெட்ரூகியோ "அடங்காப்பிடாரிக்குத் தக்கவிடா முண்டனாக்கும் நான். எங்கள் இருவருக்கும் ஸம்பந்தம் ஏற்பட்டால் எங்கள் இருவர் கொடிய குணங்களும் சாந்தமாகும். இந்த விஷயத்தில் கவலை வேண்டாம்" என்று தேற்றினான். இந்த ஸமயத்தில் பாட்டு உபாத்தியாயர் மண்டை உடைபட்டு ஓடி வந்து காதரீன் வீணை வாசிக்குங்கால் செய்த குற்றத்தைத் திருத்தக் குனிந்த ஸமயத்தில் அவள் தன்னை வீணையால் அடித்து மண்டையை உடைத்துவிட்டதாகக்கூக்குரலிட்டுக்கொண்டுசொன்னார். இந்த ஸங்கதி கேட்டதும் "ஆ! காதரீன் மிக சுறுசுறுப்புள்ளவள் போலக்காணப்படுகின்றது; அவளிடமிருந்த காதல் அதிகரித்துவிட்டது; அவளைக்கண்டு பேச எனக்கு எப்பொழுது கிடைக்குமோ?" என்று பெருமூச்செறிந்தான் பெட்ரூகியோ. இதைக்கண்டு பாப்டிஸ்டா "என் இளையபெண் உம்மை நன்கு மதிப்பாள், போம்" என்று பாட்டு உபாத்தியாயரை அனுப்பிவிட்டுப் பெட்ரூகியோ இஷ்டப்படி அங்கு காதரீனை அனுப்புவதாகக் கூறி உள்ளே போய்விட்டான்.

பெட்ரூகியோ தனித்துவிட்டான். அப்பொழுது காதரீன் வந்து, வைதால் பாடுவதாகவும், கோபித்தால் ஸௌமுகமாக இருப்பதாகவும், பேசாதிருந்தால் குரல் குயில்போலிருக்கிறது என்று புகழ்ந்தும் கூறி, ஓடிப்போனாலும் மிகுந்ததிருப்தி அடைந்தவன் போலவும் நடிப்பதாகத் தீர்மானித்துவிட்டான். வந்தாள் காதரீன்! பெட்ரூகியோ அவளைக் கேட் என்ற செல்லப்பெயரிட்டழைத்தான். அவளுக்குக் கோபம் வர வாய் ஓயாது கேட் என்ற பெயரை அமைத்து அவளைத் துதித்தான். இருவருக்கும் பிரமாத வாக்குவாதம் நடந்தது. அதில் காதரீன் காதலனை அடிக்க அவன் "ஜாக்ரதை! உன்னை மொத்திவிடுவேன்!" என்று பயமுறுத்தினான். வெருண்டுபோனாள் காதரீன். இவ்வளவு கோமாளிக் கூத்தடிப்பவன் நம்மை அடித்துவிட்டால் என்ன செய்கிறது என்ற பயம் வந்துவிட்டது. பின்னர் பெட்ரூகியோ தனக்கு அவளிடம் இருக்குங்காதலைவெளியிட்டு, அவளைப்பலர் பலவித இகழ்ச்சியாகக் கூறியது பொய் என்று கடிந்து கொண்டான். முடிவில் "நான் உன்னையே கல்யாணம் செய்துகொள்வேன்! உன் இஷ்டம் எப்படியாயினும் ஸரி. உன் தகப்பனாருக்கு இது தான் இஷ்டம், மற்றைய விஷயங்கள் எல்லாம் அநுகூலம் தான். உன் தகப்பனாரிடம் வீணாக ஒன்றையும்தடுத்துக்கூறாதே" என்று அழுத்தமாகவும்திருத்தமாகக்கூறினான். இதற்குள்பாப்டிஸ்டாமற்றையவர்களோடுஅங்குவந்துநடந்ததைவிசாரிக்கபெட்ரூகியோ தனக்குக் காதரீன் பசுப்போலடங்கி இசைந்து விட்டாள் என்றும் கல்யாணம் முடியும்வரை அவள் முன்போலவே இருப்பாள் என்றும் முன்னதாகக் கூறிவிட்டான். காதரீன் எவ்வளவு தடுத்துக்கூறியும் ஒருவரும் அவள் வார்த்தையை நம்பவில்லை. பெட்ரூகியோவும் தடபடலாக "அடுத்த ஞாயிற்றுக்கிழமையிலேயே இந்தக் கல்யாணத்தைமுடித்துவிடுவோம். என் அவஸரம் உங்களுக்கு என்னதெரியும்! என்வீடு பாழாகக்கிடப்பது உங்களுக்கு என்ன தெரியும்! நான் கல்யாணத்திற்கு வேண்டியவைகளைச்சேகரித்துக்கொண்டுஞாயிற்றுக்கிழமை இங்கு தயாராக வந்துவிடுவேன். நீங்களும் கல்யாணத்திற்குத்தயாராக இருங்கள்" என்றுகூறி முன்பின் யோசிக்காதுக் காதரீன்கையைப்பிடித்துப் பிரமாதமாகக் குலுக்கிவிட்டுகோமாளியைபோலஓடிவிட்டான். காதரீன் எவ்வளவு சொல்லியும் கேட்காது எல்லோரும் இந்தக் கல்யாணத்தை நடத்திவிடுவதாகத் தீர்மானித்தனர்.

இன்னும் வரும்.

குமார ஸம்பவம்

BIRTH OF KUMARA

பண்டித நடேசசாஸ்திரியாரால் மொழிபெயர்ப்பு

(முன்தொடர்ச்சி)

33. நெற்றியிலும் பின்நடுவில் சிவந்த விழியுடன் வெகு அழகாக விளங்கிய ஈசனுருடைய மூன்ருவது கண் அவர் அக்காலத்துத் தக்கபடி தரிக்க வேண்டிய அழகான பச்சை நெற்றிப் பொட்டாக மாறிற்று.

34. ஈசனுர் தமது மேனியில் அணிந்திருந்த கட்செவிகளின் உடல்கள் மட்டும் ஒவ்வொரு நகையாக மாறின அக்கட்செவிகளின் மாணிக்கங்கள் அப்படியே உருமாருமல் மாணிக்கங்களாகவே விளங்கலாயின.

35. பகலிலும் தனது கிரணகாந்திகளை வெளிக்கக்கிக்கொண்டு எப்பொழுதும் இளஞ்சந்திரனுடையால் கலங்கம் என்பது ஒருபொழுது மில்லாமல் விளங்கும் சந்திரனையே தமது மகுடமாகத் தரிக்கும் ஈசனுருக்கு வேறு மகுடம் நாடுவது அனுவசியமாகவிருந்தது.

36. இவ்வாறு தமது ஆச்சரியமான மகிமையால் புகழ்பெற்ற சிங்காரங்களை உண்டாக்கும். வல்லமை அமைந்த ஈசனுர், தாம் தமது மேனியில் செய்துகொண்ட சிங்காரத்தைத் தமதுசணங்கள் கொணர்ந்த கத்தியில் தமது மேனியைப் பார்த்துக்கொள்ளலானுர்.

37. அதன்பின்பு அவர் நந்திகேசுவரர் கையைப் பற்றிக்கொண்டு புலித்தோல் போர்த்து விசாலமாக விளங்கிய தமது விருஷபத்தின் முதுகில் அது பரமபக்தியால் குனிந்து கொடுக்கக் கைலைமலையின் மேல் ஏறுவதுபோல் ஏறி பிரயாணப்படலானுர்.

38. அவரைப் பின்தொடர்ந்து தங்கள் தங்கள் வாகனங்களில் ஏறிச்சென்று ஏழு தாய்மார்கள் வாகனங்கள் அசையும் பொழுதெல்லாம் தங்களுடைய காது குண்டலங்கள் அசைய தங்களுடைய இயற்கையான ஒளியின் கிரணங்களால் வெகு சிவப்பாகக் காணப்பட்ட தங்கள்முகங்களால். ஆகாயத்தையே ஒரு தாமரை ஓடைபோல் விளங்கச் செய்துகொண்டு புறப்படலானுர்கள்.

39. பொன்னின் நிறம் போன்றவர்களாய் விளங்கிய அவர்களின் பின், காளி வெண்மண்டை ஓடுகளையே தமது குண்டலங்களாக வணிந்து வந்தாளது தனதுமுன் மின்னற்கொடி விழுந்து பின்னர் கொக்குக்கூட்டம் பறக்கக் காணப்படும் கார் மேகம்போல் விளங்கிற்று.

40. சிவபெருமான் முன்பாகச் சென்றுகொண்டிருந்த அவருடைய பிரமதகணங்கள் கோஷித்த வாத்தியங்கள் தங்கள் தங்கள் விமானங்களில் வந்து காத்துக்கொண்டிருந்த தேவர்களுக்கு அவ்விமானங்களில் இக்கோஷம் மோதிய காரணத்தால் ஈசனுரைத் தர்சனம் செய்யக் காலம் இதுவென்று தெரிவிக்கலாயின.

தேவர்கள் ஈசனுரைச் சேவித்தல்

41. விசுவகர்மாவால் புதிதாகப் பண்ணப்பட்ட ஓர் குடையை ஆயிரம் கிரணங்களமைந்த சூரிய பகவான் ஈசனுர் தலைக்குமேல் பிடிக்கலானுர். அக்குடையிலிருந்து தொங்கின வெண்பட்டு முனைகள் ஈசனுர் தலைக்குச்சமீபத்திலிருந்தமையால் அவர் தலையில் விழும் கங்கைபோலும் விளங்கிற்று.

42. அச்சமயத்தில் கங்கையும் யமுனையும் ஸமுத்திரத்தை நோக்கிச் செல்லும் தங்கள் நடையைவிட்டு அன்னநடை நடந்துகொண்டு கைகளில் சாமரம்பற்றி ஈசனுருக்குச் சாமரம்போடலானுர்கள்.

43. ஈசனுர் முன்பாகப் பரமதேவரும் விஷ்ணுவும் வெற்றியுண்டாவதாக வென்று சொல்லிக்கொண்டு அவிவினுல் அக்கினியை வளர்ப்பதுபோல் ஈசனுர் மகிமையைப் பெருகச்செய்து கொண்டு செல்லலானுர்கள்.

44. பரமாத்ம ஸ்வரூபியாகிய ஈசனுரே தமது ஒரே உருவத்தை மூவ்வுருவாகப் பிரித்துக்கொண்டாரன்றோ! தோற்றத்தால் மும்மூர்த்திகளையன்றி உண்மையாக அவ்வாறன்று; ஆகையாற்ருன் இம்மும்மூர்த்திகளுள் முதல் மூர்த்தி, கடைமூர்த்தி என்பது கிடையாது. சில சமயத்தில் விஷ்ணுவுக்குச் சிவன் முன் என்றும், சிவனுக்கு விஷ்ணு முன் என்றும், அவ்விருவர்களுக்கும் பிரமன் முதல்வர் என்றும், அவ்விருவர்களும் பிரமதேவருக்கு முன் என்றும் தெரியாத்தனத்தால் சொல்லிக்கொள்ளுவது வழக்கம்.

45. இந்திரன் முதலிய லோகபாலர்கள் தங்கள் பதவிக்கு அமைந்திருக்கும் கர்வங்களைவிட்டு வெகு

வணக்கத்துடன்வந்து நந்திகேசுவரரிடம் தங்களுக்குச்சிவபெருமான் சேவைகிடைக்கவேண்டும் என்று முதல் முதல் வேண்டிக்கொண்டு அப்படியே அந்த நந்திகேசுவரர் ‘இதோ இந்திரர் நமஸ்கரிக்கின்ருர், இதோ சந்திரர்’ என்று ஒவ்வொருவருக்கும் தர்சனம் காட்ட அவர்கள் வணங்கிக் கைகூப்பிக்கொண்டு நிற்கலானுர்கள்.

46. பிரமதேவரைப்பார்த்துத் தமது தலையை அசைத்ததாலும், விஷ்ணுவிடம் பேசியதாலும், இந்திரனைப் பார்த்துப் புன்னகை செய்ததாலும், மற்ற தேவர்களை எல்லாம் கண்ணை எடுத்து ஸந்தோஷமாகப் பார்த்ததாலும் ஈசனுர் அவரவர்களை அவரவர்களுக்கேற்றபடி மரியாதை செய்யலானுர்.

47. ஈசனுர் முன்பாக ஸப்தரிஷிகளும் வந்து நின்று வெற்றி உண்டாகக்கடவது என்று ஆசீர்வாத ரூபமாகச் சொல்லலானுர்கள். அவர்களை ஈசனுர் புன்சிரிப்புடன் பார்த்து “இப்பொழுது நடக்கப்போகும் இக்கலியாணச் சடங்கில் உங்களை நான் எற்கனவே ரித்துவிக்குகளாக வரித்திருக்கின்றேன் அல்லவா” என்று சொன்னுர்.

48. விசுவாவஸு முதலான தேவபாடகர்கள் ஈசனுர் முப்புரத்தை எரித்த பாட்டுக்களை தங்கள் பெயர்பெற்ற வீணைகளில்பாட அஞ்ஞான இருளால் ஒருபோதும் அடையமுடியாத சந்திரசேகரக்கடவுள் வழியைக் கடக்கலானுர்.

49. பொன்மணிகள் ஒலிக்க கொம்பில் பற்றிய சேறுபோல் கார் மேகம் விளங்க அவ்விருஷபம் சிவபெருமானைத் தமது முதுகில் வகித்துக்கொண்டு ஆகாயத்தில் அழகாய் நடந்து தமது கொம்புகளை அடிக்கடி அசக்கிக்கொண்டு சென்றது.

50. அவ்விருஷபம் இதுவரையில் ஒரு சத்துருவாலும் தடைபடாதபடி இமவானுல் பாதுகாக்கப்பட்டிருந்த அவ்வோஷதி பிரஸ்த நகரத்துக்கு ஒரு முகூர்த்தத்துக்குள் சிவபெருமானைக்காணவேண்டி ஆவலுடன் காத்திருந்த ஜனங்களுடைய பார்வைகளாகிற பொன்னின் கயிறுகளால் இழுக்கப்பட்டதுபோல் வந்துசேர்ந்தது.

51. அவ்வோஷதி பிரஸ்தத்துக்குச் சமீபத்தில் கார்மேகம்போல் கருத்த கழுத்தையுடைய ஈசனுர் நகரத்தார்கள் எல்லாரும் ஆவலுடன் தம்மை எதிர்பார்த்து நிற்க ஆகாயத்திலிருந்து இறங்கி பூமியின் மேல் வந்து நிற்கலானுர்.

52. சிவபெருமான் வரவால் உடல் பூரித்துப் போயிருந்த மலை மன்னவரான இமவான் யானை மந்தைகள் போன்ற தமது பந்துக்களால் சூழப்பட்டவராய் அப்பந்துக்களின் உயர்ந்த ஆடை ஆபரணங்கள் சோபிக்க நன்ருகப் பூத்து பிரகாசித்துக்கொண்டிருந்த தமது தாழ்வரையாலேயே அக்கடவுளை எதிர்கொண்டு சென்று உபசரிக்கலானுர்.

53. கோட்டைவாயிற் கதவு விரிவாகத்திறக்கப்பட்டு விளங்கிய அந்நகரத்துக்குள் தேவகணங்களும் இமவானுடைய கணங்களும் தங்கள் தங்கள் வாத்திய கோஷங்கள் வெகுதூரம் கேட்க ஒரே கரை உடைந்ததும் இரண்டு வெள்ளங்களும் ஒன்று சேருவதுபோல சந்திக்கலானுர்கள்.

54. மூவ்வுலகங்களும் வணங்கப் பெற்றவரான சிவபெருமான் தம்மை வணங்கியதும் இமவான் வெட்கமடைந்தார். ஈசனுர் அரு வரும்பொழுதே அவருடைய மகிமையால் தமது தலை எற்கனவே வணங்கியதை அவர் அறியவில்லை.

55. அவ்விமவான் சந்தோஷத்தால் தமது முகம் மலர்ந்துவிளங்க தமது மாப்பிள்ளையின் முன்பாக நடந்து சென்றுகொண்டு கணைக்கால் பதியும்படி மலர் இறைக்கப்பட்டிருந்த கடைத்தெருவுகளுடன் சோபித்துக்கொண்டிருந்த தமது வைபவத்துடன்கூடிய நகரத்துக்குள் சிவபெருமானை அழைத்துப்போனுர்.

56. அவ்வண்ணம் சிவபெருமான் பட்டிணத்துக்குள் வந்துகொண்டிருந்தபொழுது அவரைப் பார்க்க வெகுஆவலுடனிருந்த அந்நகரத்துமாதர்கள் தங்கள் மாளிகைகளின் மேற்புறத்தில் நின்றுகொண்டு வேறு ஒருவித காரியத்திலும் கவனமில்லாதவர்களாய் பின்வருமாறு காணலானுர்கள்.

57. சிவபெருமானைப்பார்க்க அவசியமாய் ஓடிவந்துகொண்டிருந்த ஒருமடந்தை ஓடிவந்த அவஸரத்தால் தனது மலர்முடித்த கூந்தல்முடி அவிழ அதை மறுபடியும் முடிந்துகொள்ள யோசிக்காமல் அதைக் கையால் பற்றிக்கொண்டே வந்து சேர்ந்தாள்.

58. மற்றொரு மடந்தை தமது காலை சிங்காரிப்பதற்காகத்தாதி ஒருவள்பிடித்துக்கொண்டிருக்கையிலேயே சிவபெருமான் ஊர்வலம் வரும் வாத்தியம் கேட்டபடியால் அக்காலை வெடுக்கென்று இழுத்துக்

கொண்டு அது காயாமல் ஈரமாயிருக்கையிலேயே தமது அழகான நடையை விட்டுவிட்டுத் தமது ஈரக் கால் சுவடு பூமியில் பட ஜன்னல் வரையில் தாவித் தாவிச் செல்லலானாள்.

59. ஒரு மடந்தை தனது வலது கண்ணுக்கு மட்டும் மையிட்டு அம்மையை இடது கண்ணுக்கு இடஸாவகாசமில்லாமல்மையிடும் ஈருக்கை கைப்பற்றிய படியே ஜன்னல் வரையில் ஓடினாள்.

60. மற்றொரு மடந்தை ஜன்னல் வழியாய் தனது கண்களைச்செலுத்திப்பார்த்துக்கொண்டிருந்தாளேயன்றித் தான் அச்சன்னலண்டை வரும்பொழுது அவிழ்ந்த தனது ஆடையின் இக்கு முடிப்பைக்கட்டிக்கொள்ளவில்லை. ஆனால் அம்முடிப்பை தனது நகையணிந்த கையால்பற்றி அந்நகையின் காந்தி உந்தியைச்சுற்றிப் பிரகாசிக்க நிற்கலானாள்.

61. ஒருவள் தான் தனது கட்டைவிரலில் ஒரு கயிற்றைக்கட்டி அதில் மலர்களை ஒட்டியாணத்துக்காகச் சேர்த்துக்கொண்டிருந்த பொழுது வெகு வேகமாய் அப்படியே எடுத்துவந்தவளாகையால் அத்தடையால் அடிக்கடி அவள் கால் வழுவ அவ்விரலில் கட்டிய கயிறுமட்டும் மிகுந்து நிற்கின்றவளாய் அவ்வேடிக்கையைப் பார்க்கலானாள்.

62. மதுவுண்ட காரணத்தால் அம்மணம்வீச கருவிழி சுழல் விளங்கிய அம்மடந்தைகளுடைய முகங்கள் அவ்வேடிக்கையைப் பார்த்துநின்ற காட்சி அந்நகரத்து ஜன்னல்கள் எல்லாம்வண்டுகள் அசைந்திருக்கப்பெற்ற தாமரை மலர்களால் சிங்காரிக்கப்பட்டனபோல காணலாயிற்று.

63. அவ்வாறு எல்லாரும் தம்மைப் பார்த்துநிற்க சந்திரசேகரர்பகலிலும் அந்நகரத்துவெண்மாளிகைகளில் தமது சந்திரகாந்தி விழுந்ததால் இருமடங்கு வெண்மையாக விளங்கச்செய்துகொண்டு எங்கும் தோரணங்கள்மேலெடுத்துக்கட்டப்பட்டுப்பிரகாசித்துக்கொண்டிருந்த ராஜவீதியை அடைந்தார்.

64. பார்க்கவேண்டியவர் ஒருவரே என்றிருந்த அவ்வீசனைக்கண்களால் குடித்துக்கொண்டிருந்த அந்நகரத்து மடந்தைகள் வேறு ஒரு தொழிலையும் கவனிக்காதவர்களாய் நிற்கலானார்கள். மற்ற புலன்கள் செய்யவேண்டிய பலவிதத்தொழில்கள் அக்காலத்தில் அவர்களுடையபார்வையிலேயே புகுந்திருந்தன என்றே சொல்லவேண்டும்.

65. வெகு மெல்லிய மேனியை உடைய பார்வதி ஒருவராலும் செய்து முடிக்கவொண்ணாத தவத்தை இவர் நிமித்தம் செய்தது நியாயமே. எந்த மடந்தை இவருக்குப்பணிவிடை செய்யும் பதவியை அடைகின்றாளோ அவள் பாக்யமே பாக்யம். இவர் மடியிற் றூங்கும் பதவி பெற்றவளுடைய பாக்யத்துக்குச் சொல்லவும் வேண்டுமா.

66. ஒருவர் மற்றொருவரைக் கண்டு மோகிக்கும் அழகமைந்த இவ்விரு உருவத்தையும் விதி சேர்த்து வைக்காமலிருக்குமாயின் பிரமதேவர் இவ்விரு உருவங்களையும் உண்டுபண்ணுவதற்காகத் தான் பட்ட சிரமமெல்லாம் வீணாகப் போயிருக்குமன்றோ.

67. சிவபெருமான் ஏதோ கோபம் கொண்டு மன்மதனைக் கொளுத்தினார் என்பது பொய். மன்மதன் இச்சிவபெருமானுடைய அழகான சரீரத்தைப் பார்த்ததும் வெட்கித் தனக்குத் தானாகவே தனது தேகத்தைத் தானே விட்டிருக்கவேண்டும் என்பது திண்ணம்.

68. தோழி! நமது மலைகளின் மன்னவர் பூமியை வகிப்பதால் ஏற்கனவே உயர்ந்து விளங்கும் தமது முடியைத் தாம் கருதியவாறு இவ்வீசுவருடைய சம்மந்தம் தமக்குக் கிடைத்துவிட்டபடியால் இன்னும் அதிக உயர்ந்ததாக வைத்துக்கொள்ளப்போகின்றார்.

69. இவ்விதமாய் அவ்வோஷதி பிரஸ்த நகரத்துப் பெண்கள் காதுகளுக்கு இனிமையாகப் பேசிக்கொண்டிருந்த பலகதைகளை முக்கண்ணன் கேட்டுக்கொண்டே சென்று இமவான் மாளிகைக்குள் தமது கைவளையல்களால் பொடியாகச் செய்யப்பட்ட பொறிகள் தம்மைச் சூழ்ந்துவிழ புகுந்தார்.

70. அவ்விமவான் மாளிகையில் விஷ்ணுபகவான் தமக்குக் கை கொடுக்கத் தமது விருஷபத்தை விட்டுச் சரத்கால வெண்மேகத்தைவிட்டுச் சூரியபகவான் கீழே யிறங்குவதுபோல இறங்கி தம் முன் பிரமதேவர் வழிகாட்ட இமவான் மாளிகைக்குள் நுழைந்தார்.

71. அச்சிவ பெருமானை இந்திரன் முதலான தேவர்களும் ஸனகர் முதலான மகரிஷிகளும் கணங்களும் ஸப்தரிஷிகளை முன்னிட்டுக்கொண்டு பின் தொடர்ந்து இமவான் மாளிகைக்குள் பெரும் பிரயோஜனங்கள் சிலாக்கியமான ஆரம்பத்தைத் தொடர்வனபோல் சென்றார்கள்.

72. இமவானுடைய மாளிகைக்குள் ஈசனார் ஓர் ஆஸனத்தில் உட்கார்ந்து விதிப்பிரகாரம் இரத்னத்துடன் தமக்குக் கொடுக்கப்பட்ட அர்க்கியம், மதுவர்க்கம், ததி, புது வெண்பட்டு முதலியவைகள் இமவான் தமக்குக் கொடுக்க மந்திரத்துடனே பெற்றுக்கொள்ளலானார்.

73. அதன்பிறகு அச்சிவபெருமான் வெண் பட்டாடை அணிந்துநிற்க அவரை அரண்மனை வேலையில் பயிற்சியடைந்தவர்கள் வெகு வணக்கத்துடன் மணப்பெண் உட்கார்ந்திருந்த இடத்துக்குப் புதிதாய்த்தோன்றும்சந்திரகிரணங்கள் வெண்நுரை பொங்கி விளங்கும் கடல்நீரைகடற்கரைக்கு அழைத்துப் போவதுபோல அழைத்துப் போனார்கள்.

74. தமது முகமே காந்தியுடன் விளங்கும் சந்திரனாகக் காணப்பட்ட அவ்வுமையால் சிவபெருமான் சரத்காலத்தால் உலகம் அழகாக விளங்குவதுபோல தமது கண்களாகின்ற ஆம்பல் மலர்கள் நன்றாக மலரப்பெற்றவராகவும் தமது உள்ளமாகின்ற நீர்தெளியப் பெற்றவராயும் மாறி நின்றார்.

75. அவ்விரு மணமக்களுடைய கண்கள் தற்செயலாக ஸந்தித்துத் திகைத்துக் கொஞ்சகாலம் அப்படியே நின்றுபிறகு திருப்பப்பட்டு ஒன்றைமற்றொன்று பார்க்க ஆசையுடன் அமைந்தவைகளாகவிருந்தும் வெட்கத்தால் தகையப்பட்டவைகளாய் விளங்கின.

76. மலை மன்னவரால் எடுத்துக்கொடுக்கப்பட்டதும் ஈசனைக்கண்டு பயந்து உமையின் தேகத்தில் பதுங்கியிருந்த மன்மதனுடைய முதல் முளைபோல் விளங்குகின்றதுமான பார்வதியின் கையினுடைய சிவந்த விரலைச் சிவபெருமான் தமது கரத்தால் பற்றலானார்.

77. உமைக்கு மயிர்க்கூச்சும் சிவபெருமானுக்கு விரலில் வியர்வையும் அத்தருணத்தில் உண்டானதானது அவ்விருவர்களும் தங்கள் கைகளைப் பற்றிக்கொண்டபொழுது அவ்விருவர்களிடமும் மன்மதன் ஒரே விதமாகத் தனது வல்லமையைக் காட்டினான் என்று சொல்லவேண்டியதாயிருந்தது.

78. எக்காரணத்தால் உலகமெங்கும் வதூவர்கள் மேலான சோபையைக் கலியாணப்பந்தலில் அடைந்து விளங்குகின்றார்களோ அவ்விருவர்களுடைய கலியாண சோபையைப்பற்றி நாம் சொல்லவும் வேண்டுமா! ஒவ்வொரு கலியாணப்பந்தலிலும் உமையும் சிவனும் கலியாணப் பெண்ணிடமும் கலியாண மகளிடமும் முறையே புகுந்திருக்கின்றனர்கள் என்பது சாஸ்திரம்.

79. ஓங்கி எரிந்து கொண்டிருந்த ஓமத்தீயை அவ்விருவர்களும் வலம் வந்தபொழுது மேருவின் தாழ்வரையை இடைவிடாது சுற்றும் பகலும் இரவும்போல் அவர்கள் பிரகாசிக்கலானார்கள்.

80. ஒருவரை மற்றொருவர் கைப்பற்றிய ஆநந்தத்தால் கண்கள் மூடிய அந்தத் தம்பதியைப் புரோகிதர் மூன்று தடவை ஓமத்தீயை வலம் வரச் செய்து கொழுந்து விட்டெரியும் அத்தீயில் மணமாதின் கையால் பொறியை ஓமம் பண்ணச் செய்வித்தார்.

81. புரோகிதருடைய கட்டளைப்படி பார்வதி நன்றாக மணம் வீசிய அப்பொறிப்புகையை முகத்தில் படும்படி வாசனை பிடித்தபொழுது அப்புகையின் திரள் அவ்வம்மணியின் கன்னங்களில் பரவ அது கொஞ்சநேரம் அவ்வம்மணியின் காது நகை போல விளங்கிற்று.

82. மணச்சடங்கு என்று பார்வதி அவ்வண்ணம் புகைபிடித்தபொழுது அவள் முகம், அவள் கன்னங்கள் வியர்த்தும், சிவந்தும், அவள் கண்களிலிட்ட மையின் காந்திகரைந்தும், அவள்காதுகளில் அணிந்திருந்த நாற்றுகள் வாடியும் கொஞ்சம் மாறி பிரகாசிக்கலாயிற்று.

83. அதன் பிறகு புரோகிதர் பார்வதியைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்:—குழந்தாய், இந்த அக்கினிதான் உனக்கும் சிவபெருமானுக்கும் நடந்த விவாகத்துக்குச் சாட்சி தேவதை. இனி நீ உனது கணவராகிய சிவபெருமானுடன்கூட நின்று ஓர்வித விசாரமின்றி உனது தர்மங்களை நடத்தக்கடவையாக.”

84. பவானிதேவியும் அவ்வாறு குருசொன்ன புத்திமதியைத் தனது காதுகளைக் கண்கள்வரையில் விசாலமாகச் செய்துகொண்டு கோடையால் நன்றாக வறண்டிருக்கும் பூமி மேகத்தினின்று பொழியும் முதல் மழையைக் குடிப்பதுபோல் கேட்கலானாள்.

85. எப்பொழுதும் தனது கண்களுக்கு அழகாக விளங்குகிறவரும் என்றென்றைக்கும் தனக்குக்கணவருமான சிவபெருமானால் துருவ நட்சத்திரத்தை பார் என்று ஏவப்பட்டதும் பார்வதி தனது முகத்தை

மேல்நோக்கிப்பார்த்து வெட்கத்தால் கொஞ்சம் வாய் திறந்து "பார்த்தேன்" என்று மெதுவாக மறுமொழி சொன்னாள்.

86. இவ்வாறு கலியாணச் சடங்கை நன்றாக அறிந்த புரோகிதரால் பாணிக்கிரகணம் செய்து வைக்கப்பட்ட உலகத்துக்கே தாய் தந்தைகளான உமாமகேசுவர்கள் பத்மாசனத்தில் வீற்றிருந்த பிரமதேவரை நமஸ்காரம் பண்ணினார்கள்.

87. பிரமதேவர் அப்பொழுது உமையைப்பார்த்துச் "சுபங்கள் நிரம்பியமாதுமாணிக்கமே, வீரனாகிய குழந்தையை நீபுத்திரனாக அடையக்கடவாய்!" என்று ஆசீர்வாதம் பண்ணலானார். அதே பிரமதேவர் தாம் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் நாயகனாகவிருந்தும் ஈசனால் விரும்பத்தக்கது ஒன்றுமில்லை என்று ஏற்கனவே அறிந்துணர்ந்தவராகையால் அவரை உத்தேசித்து ஒன்றும் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டார்.

88. அவ்விருமணமக்களும் பிரமதேவரை நமஸ்காரம் செய்தபின்பு புஷ்பம் முதலியவைகள் அழகாகப் பரப்பி விளங்கிய சூடாமணியின்மேல் பொன்னாலாகிய ஆசனத்தில் வீற்றிருந்துகொண்டு உலகத்தில் * எல்லாருக்கும் நடக்கும் மங்களாக்ஷதை தலைமேல் பெறுதல் என்றதை அடைந்தார்கள்.

89. அப்பொழுது அவ்விருவர்களுக்கும் பூமாது தமது கையால் ஒருதாமரைத் தண்டை இலையுடன் பற்றி அவ்விலையின் ஓரங்களில் தத்தளிக்கும் ஜலத்திவிலைகளை நல்முத்து சரங்களாக விளங்க, அத்தாமரைத்தண்டே குடைக்கம்பாக, அவ்விலையே குடையாகக் குடைபிடிக்கலானாள்.

90. ஸரஸ்வதிதேவி அப்பொழுது அவ்விருவர்களையும் இருவித வாக்கால் ஸ்தோத்திரம் பண்ணலானாள்.—வெகு பரிசுத்தமான வாக்காகிய ஸம்ஸ்கிருதத்தால் ஈசனையும் வெகு சுலபமாய் அர்த்தமாகும் பிராகிருத பாஷையால் உமையையும் தோத்திரம் பண்ணலானாள்.

91. அதன்பிறகு அவ்விருவர்களும் ஒரு முகூர்த்தகாலம் ஊர்வசி முதலிய தேவ மாதுகள் ஆடிய நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

* உலகவழக்கத்தை மனத்தால்கூட நாம் தடுக்கலாகாது என்பதுவிதி. ஆனதுபற்றி உலக தந்தைகளே அக்ஷதைவாங்கிக் கொள்ளலானார்கள்.

ன் என்பதற்கு மூல கிரந்தத்தைப் பார்க்க.

92. அந்நாடகம் முடிந்ததும் மணமனைவியுடன் வீற்றிருந்த சிவபெருமான் தாட்களில் இந்திரன் முதலான தேவர்கள் தங்கள் கிரீடங்களில் கைகூப்பி விழுந்து பார்வதி தேவியின் விவாகத்துடன் மன்மதனுடைய சாபம் நீங்கி அவனுக்குத் தனது மேனி வந்துவிட்டபடியால் அவன் பணிவிடையை ஒப்புக்கொள்ளவேண்டும் என்று யாசிக்கலானார்கள்.

93. அப்பொழுது பகவானும் கொஞ்சமேனும் கோபமென்பது இல்லாமல் அப்படியே என்று ஒப்புக்கொண்டு அம்மன்மதன் தன்மேலும் தனது பாணங்களைவிட விடைகொடுத்தார். காரியத்தை நன்றாக அறிந்த புத்திமான்கள் காலமறிந்து செய்யும் விண்ணப்பம் எப்பொழுதும் பயனுள்ளவைகளாய் முடிகின்றனவல்லவா.

94. அதன்பின்பு சந்திரமௌலி தேவக்கூட்டங்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டுப் பார்வதியைத் தமது கையால் பற்றி அழைத்துக்கொண்டு மங்கலார்த்தமாகப் பொன்குடங்கள் நீர்நிரம்ப வைக்கப்பட்டும் பூக்கோலங்கள் அழகாகப் போடப்பட்டும் பூமியில் படுக்கை விரிக்கப்பட்டுமிருந்த பள்ளியறைக்குள் புகுந்தார்.

முற்றிற்று.

[இதற்கு மேல்பட்ட பாகம் மிக்க ஸ்ருங்கார ரஸமுடைமையாலும், அதன்றியும், அப்பாகத்தை எழுதியது காளிதாஸ கவிதானோ என்பது ஸந்தேகத்திலிருப்பதாலும், பண்டித நடேசசாஸ்திரியார் இதற்குமேல் இருக்கும் பாகத்தை தமிழில் மொழிபெயர்க்கவில்லை.]

இவ்விவேகபோதினியில் தொடர்ச்சியாக வந்த இந்தக் குமாரசம்பவமென்ற இந்நூலை ஜூலைமீ முதல் தேதியில் அதற்கேற்ற சில சித்திரப்படங்களுடன் புத்தக ரூபமாக வெளியிடப்படும். இதன் விலை அணு 12. ஜூலைமு முதல் தேதிக்குள் தங்கள் பெயர்களை ரிஜிஸ்தர் செய்து கொள்ளுபவர்களுக்கும் விவேகபோதினியின் சந்தாதாரர்களுக்கும் அணு எட்டுதான் முன்பணம் அனுப்பவேண்டிய தவசியமில்லை. எழுதியனுப்பினால் போதுமானது.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது.—பிள்ளையார் யானைமுகம் உடையவர். இவர் விக்கிரஹத்தை மிகுந்த ஜாக்கிரதையாகச் செய்யவேண்டும். யானையின் முகம் வைக்குங்கால் அது ஓர்வேளை குரங்கின் முகமாகிவிட்டாலும் விடலாம். பழக்கம் இல்லாத ஸ்தபதி ஒருவன் பிள்ளையார் விக்கிரகத்தைச் செய்யப் புகுவானேயானால் அவன் குரங்கின் உருவையே ஓர்வேளை செய்து முடித்தாலும் முடிப்பான். பிள்ளையார் ஸகல விக்கினங்களையும் போக்கி ஆராதிப்பவருக்கு நன்மையை உண்டாக்குபவர். ஆதலால் தான் அவருக்கு விக்நேச்வரர் என்று பெயர் வந்தது. குரங்கோ இருந்தவிடத்தில் இராது ஸதா ஓடிக்கொண்டும் விஷமங்களைச்செய்துகொண்டும் இருக்கும்ஓர்ஜந்து. ஆகவே இந்தப் பழமொழிக்கு 'மேலான ஓர் விஷயத்தைச்செய்யப்புகுந்து பயனடைய உத்தேசித்த இடத்தில் தாழ்ந்ததாயும் பயனற்றதாயும் உள்ள முடிவு கைகூடுவது' என்று பொருள். இந்தப் பழமொழியில் அடங்கியிருக்கும் பொருளை மிகுந்த ஆற்றலுடன் அடக்கியுள்ளது 'கிணறுவெட்ட பூதம் புறப்பட்டது' என்ற பழமொழி. இதன் பொருள், 'ஓர் லாபத்தை உத்தேசித்த ஓர் காரியத்திலிருந்து ஓர் அபாயம் உண்டாவது' என்பது பொருள். 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது' என்ற பழமொழியின் முடிவு அவ்வளவு அபாயகரமல்ல, பார்ப்போர் கண்டு நகைக்கத்தக்க இழிவானதே ஒழிய வேறல்ல.

இனி பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிவதற்குத் தக்க உதாரணங்கள் கொடுப்போம். சித்திரம் எழுதுதல் முதலியவைகளில் எழுதுவோன் நினைத்தபடி சித்திரம் முடிவு பெறாவிடில், அது இந்தப் பழமொழிக்கு உதாரணம் ஆகும். வீடுகட்டி ஸுகம் அடையவேண்டும் என்று தொடங்கிய ஒருவன் அதிகப் பணம் செலவிட்டும் ஸௌகர்யமான வீட்டைக் கட்டிமுடிக்காவிடில்அவன்தொழில் இப்பழமொழியிலுள்ள தொழிலே. இதுபோலவே உத்தேசித்த முடிவுகைகூடாது எங்கெங்கேசற்றுமாறாகமுடிந்து அபாயமில்லாமல் இருக்கின்றதோ அங்கங்கே யெல்லாம் இப்பழமொழி பொருத்தமாக இருக்கும்—

கிணறுவெட்டபூதம் புறப்பட்டது'என்ற பழமொழிக்குப்பொருந்திய உதாரணங்கள், பொதுவாக ஓர் கெடுதியைச்செய்துநன்மைஅடையவேண்டுமென்று முயலும் ஒருவன் திடீரென்று செய்த கெடுதிக்காக உள்ள தண்டனைக்கு ஆளாகும்படி நேருவதும், ஒரு குற்றமும் அறியாதவனாய் ஸஹாயம் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் ஓர் சண்டை முதலியவைகளுள் பிரவேசிக்கும் ஒருவன்மேல் அவனே சண்டைக்கு மூலகாரணம் என்ற பழி சுமருவதும், ஆகிய இது போன்றவைகளே.

இனி இப்பழமொழிக்கு த்யான விஷயத்தில் ஓர் பொருளும் உண்டு. பிள்ளையாரைப் போன்ற தேவதைகளை த்யானம் செய்யப்புகும் ஓர் பக்தன் அந்த தேவதா உருவத்தை மனதின்முன் நிறுத்த முயலுவான். ஆனால் அவன் மனதின் சஞ்சலத்தால் அந்த உருவம் நிற்காது மறையும். அதனோடுகூட மனது வெவ்வேறு எண்ணங்களில் பாய்ந்தோடும். ஓரோர் வேளைகளில் குரங்குமுதலிய விசித்திரஉருவங்களும் அவன் மனக்கண்முன் வரும். ஆகவேமுதலில்த்யானம் செய்யத்தொடங்கியவன் 'பிள்ளையார் பிடிக்க எண்ணிக் குரங்காக முடிப்பான்.' மேலும் குரங்கு அதன் சஞ்சலம் முதலியகுணங்களால் மனதைக் குறிப்பிக்கும் ஓர்பதம். இதுபற்றியே தாயுமானவரும் 'மனக்குரங்கு' என்றார். ஆகவே 'குரங்காய் முடிந்தது' என்ற தொடருக்கு 'மனதின் சஞ்சலமாகவே முடிந்தது' எனக்கொண்டுஇப்பழமொழிக்குத்த்யானவிஷயமாகப் பின்வருமாறு பொருள் கூறலாம்: அதாவது, த்யானம்செய்யப்புகும்அபக்குவிக்குஸாதாரணமாக முடிவில் மனம் சஞ்சலப்பட்டு ஓடியது மாத்திரம் தெரியுமேயல்லது த்யானஸுகம் விளங்காது அவன் பிரயத்தனம் பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதையாகும் என்பதே.

வேதாந்த விஷயமாக இப்பழமொழியைப் பெரியோர் சில ஸமயங்களில் உபயோகப்படுத்துவது வழக்கம். 'குரங்கு' என்பதை 'மனது' என்று கொண்டு 'குரங்காய் முடியும்' என்பதை 'மனத்தின் காரியமாக முடியும்' என்று பொருள்படுத்துவர். ஆகவே பரம்பொருளைப்பற்றித் தியானம் செய்து நிஷ்டையில் உட்கார்ந்தாலும் தக்க குருவின் ஸஹாயமில்லாமற்போனால் த்யானம், தியான விஷயம் எல்லாம் வெறும் மனத்தின் காரியமாகவே முடியும். மேலும் பரமபதம் எய்தி பரம்

பொருளிடம் இரண்டறக் கலக்கும்வரையில் பரம்பொருளின் உண்மை ரூபம் இன்னதென்று உணர முடியாதாகையால் அதுவரையில் பரம்பொருளைப் பற்றி எண்ணும் எண்ணங்கள் யாவும் அதைவிடத் தாழ்ந்ததே; அதாவது பிள்ளையாராகிய பரம்பொருளைப் பிடிக்க எண்ணி மனக்காரியமாகித் தாழ்ந்த எண்ணங்களாகிக்குரங்கேகிட்டும். ஸதாமாறாதிருப்பது பரம்பொருள் ஒன்றே. அதைவிட வேறு வஸ்துவே கிடையாது என்பது பெரியோரது துணிபு. அதே இந்திரியங்கள் முதலிய தாழ்ந்த கருவிகள் மூலமாக நோக்குமிடத்து உலகமாகத் தோற்றுகிறது. ஆகவே பரம்பொருளை இந்திரியங்கள் மூலமாக நோக்குமிடத்து விசித்திர உலகமாகக் காணப்படுவதே 'பிள்ளையார் பிடிக்கக் குரங்காக முடிந்தது' என்பர். பரம ரஹஸ்யங்களடங்கிய வேதங்களாற்கூட பரம்பொருளை எட்டமுடியாது. அதை ஒருவாறு கூறாமல் கூறுவதால் பரம்பொருளாகிப்பிள்ளையாரைப்பிடிக்க எண்ணித்தமது வார்த்தைகளால் அவ்வாறு செய்யமுடியாது, அதைப் பற்றிச்சற்றுக்குறைவான லக்ஷணங்களையேமுடிவாகக்கூறும். பரம்பொருள் விஷயத்தில் வேதங்களே பிள்ளையார்பிடிக்க எண்ணிகுரங்காய் முடிக்கின்றன என்று சொல்லுவர்.

***

பரோபகாரமில்லாத தபஸ்.—முன்னொருகாலத்தில் விதர்ப்பதேசத்தில் சுவேதன் என்றொரு அரசன் இருந்தான். அவன் தம் தம்பிமார்களுக்கு ராஜ்யத்தைக்கொடுத்துவிட்டு ஓர் நிர்ஜனமான காட்டை அடைந்து அங்கு ஓர் குளக்கரையில் பர்ணசாலை கட்டிக்கொண்டு தபஸு செய்யத் தொடங்கினான். இப்படி இவன் செய்துகொண்டு வருகையில் இவன் தேக நழுவுங்காலம் வர இவன் இறந்தான். அப்பொழுது வந்த விமானத்திலேறிக்கொண்டு இந்திரலோகம்போக அங்கு அவனுக்குப் பசியும் தாகமும் அதிகரித்தன. இதன் காரணத்தை உள்ளபடி உணர இவன் பிரம்மாவிடம் போனான். அவர் இவனை நோக்கி, "அப்பா, நீ தபஸு செய்யுங்கால் உனது தேஹத்தைமாத்திரம் போஷித்துவந்தாயே ஒழிய, தர்ம சிந்தையோடிருக்கவே இல்லை. ஆதலால் இக்கஷ்டம் வந்தது. இந்தக் கொடிய பசி தீரும் வரையிலும் நீ உனது பிணத்தைத் தினம் தின்னவேண்டும். ஒவ்வொரு நாள் காலையிலும் உன் பிணம் உன் பர்ணசாலைக்கு அருகாமையி லிருக்கும் குளத்தில் மிதக்கும். போகலாம்" என்றார். சுவேதனுக்கு மிகுந்த துக்கம் வந்துவிட்டது. 'ராமேசுவரம் போயும் சனீச்சரன்விடவில்லை' என்றகதையாகஇவனுக்காகபிரம்மதேவரைநோக்கி "ஸ்வாமி, எவ்வளவுநாள் நான்இவ்வாறு வருந்தவேண்டியது? இதற்குவிமோசனம்இல்லையா?" என்றுகேட்க, அதற்குஅவர் "அப்பா! உன் குளக்கரைக்கு அகஸ்தியர் வருவார். அவருக்கு ஓர் தானம் செய்தால் உன் பாபம் நீங்கி இந்தக் கஷ்டத்தினின்றும் விடுபடுவாய்" என்று கூறினார். சுவேதனும் தினம் காலையில் அவ்வாறே செய்து கொண்டு வந்தான்.

இப்படி இருக்கையில் சுவேதன் தபஸு செய்த காட்டில் ஓர்நாள் யாத்திரை செய்துவந்த அகஸ்தியர் நுழைந்தார். காடு நிர்ஜனமாக இருந்தது; ஜந்துக்கள்கூட அதில் காணப்படவில்லை. மிகுந்த ஆச்சரியத்துடன் உள்ளே ஸஞ்சரித்துகொண்டு வருகையில் சுவேதன் ஆசிரமத்தையும் அதன் அருகாமையிலுள்ள ரமணீயமான குளத்தையும் கண்டார். இங்காவது யாராவது ஓர் ரிஷி இருக்கலாம் என்ற எண்ணத்துடன் ஆசிரமத்துள் நுழைந்தார். அங்குகூட ஒருவருமில்லை. அப்பொழுது ஸூர்யாஸ்தமனஸமயமாக இருந்ததால் அகஸ்தியர் அந்தக் குளத்தில் விதிப்படி மாலைக் கடனை முடித்துக் கொண்டு அதிலிருந்து தீர்த்தம் எடுத்துக் குடித்துவிட்டு அந்த ஆசிரமத்துள் பகவத்தியானம் செய்துகொண்டு தங்கினார். மறுநாள் காலையில் எழுந்து குளக்கரை வந்து பார்க்கிறாரோ! அந்தக்குளத்தில் ஓர் பெரிய பிணம் மிதந்துக்கொண்டிருந்தது. "இந்த நிர்மானுஷ்யமான இடத்தில் இத்தனை பெரிய பிணம் எது? ஒருவேளை இந்தப் பர்ணசாலையில் இருந்தவர் ஒருவர் மாத்திரம் தான் இக்காட்டிலிருந்தவரா யிருக்கலாம். அவர் ஒருவேளை நேற்றுத் தவறி இக்குளத்தில் விழுந்து ஸஹாயத்திற்கு ஒருவரும் இல்லாததால் இறந்துவிட்டார் போலும்" என்று அகஸ்தியர் எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் ஆகாயத்திலிருந்து அப்ஸர ஸ்திரீகளால் மரியாதை செய்யப்பட்டு விமானத்தில் ஏறிக் கொண்டு ஓர் திவ்யபுருஷன் இறங்குவதைக்கண்டார். "இதென்ன ஆச்சரியம்!" என்றுவியந்துகொண்டிருக்கையில் இந்தத் திவ்ய புருஷன் விமானத்தி

லிருந்திறங்கி குளக்கரை வர அந்தப்பிணமும்அவன் அருகே வந்தது. அப்பொழுது அவன் அதை மிகுந்த ஆவலுடன் தின்று தண்ணீர் குடித்துவிட்டு விமானத்தில் ஏறிப்போகத் தலைப்பட்டான். இதையெல்லாம் பார்த்திருந்த அகஸ்தியர் மிகுந்த வியப்பும் துக்கமும்அடைந்து "இதுகூடவா ஸ்வர்க்கத்தில்! ஸ்வர்க்கம்போயும் இவனுக்குத் துன்பம் தீரவில்லையா?" என்று எண்ணமிட்டுக்கொண்டு அந்தத் திவ்ய புருஷனைக்கூவிஅழைத்து "ஏன் இம்மாதிரி அசுத்தியாயும் கோரமாயுமுள்ள தொழிலைச்செய்கிறாய்?" என்றுமிகுந்தபரிவுடன்கேட்டார். அப்பொழுது அந்தச்சுவேதன் தன்கதை முழுவதையும்சொல்லி, "நான் பரோபகார சிந்தையே இல்லாது தபஸுசெய்து இறந்தேன். இவ்வாறு செய்ததால் என்னை அடங்காப்பசிதாகம் ஸ்வர்க்கத்திலும் பீடிக்க, எந்த தேகத்தைப் பரோபகாரமின்றிக் கொழுப்பேறும்படி செய்தேனோ அதைத் தின்றே பசிதீரும்படியான நிலையை அடைந்தேன்" என்று பரிதபித்தான். பின்பு நிர்மானுஷ்யமான இக்காட்டில் வந்தவர் அகஸ்தியராகத்தான் இருக்கவேண்டும் என்று ஊகித்து அவரை விசாரிக்கையில், தன் ஊகம் உண்மையானதுகண்டு அவருக்குத் தன்கழுத்திலிருந்த உயர்ந்த ஆபரணத்தை எடுத்துத் தானம் செய்தான். அவன் பசிமுதலியன அடங்கிவிட்டன. அன்றுமுதல்பிணம் தின்னும் கோரத்தொழிலும் அவனைவிட்டு நீங்க அவன் ஸுகம் பெற்றான். இதனால் பரோபகாரம் அற்ற காம்யதபஸ் அவ்வளவு சிறந்ததல்ல, பெரும்பாலும் வீணே என்பது தெரியவருகின்றது.

உலகவாழ்க்கை

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
நலனொன்று மறியாத நாரியரைக் கூடிப்
பூப்பிளக்கப் பொய்யுரைத்துப் புற்றீசல் போலப்
புலபுலெனக்கலகலெனப்புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவு மாட்டீர்
கவர்பிளந்த மரத்துளையிற்கானுழைத்துக்கொண்டீர்
ஆப்பதனை யசைத்து [illegible]னைப்போல
அகப்பட்டீர் கிடந்துழல வகைப்பட்[illegible]

எத்தொழிலைச் செய்தாலுமே தவத்தைப்பட்டா[illegible]
முத்தர் மனமிருக்கு மோனத்தே வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

சகுந்தலை அல்லது பிரிவினிலை

4. வழக்குரைத்த காதை.

அடர்ந்து நெருங்கி விளங்கிய மரத்தின் இனங்களெல்லாம் ஒன்றொன்றாய் மறைந்தன. பசும்புல்லும் வயலும் கண்ணிற்கு நெடுந்தூரமாய் விட்டன. மாமரங்களில் வசிக்கும் குயிலின் இனியபாடல்களும் காற்றில் மயங்கி காதிற்படாவிதம் பரவின. மரவினத்தின் வாழும் பட்சிகள் முதலியவற்றின் சிறுகுறலும் பெருங்குறலும் ஒன்றிலொன்று மயங்கி சகுந்தலையும் அவளுடன் செல்லுவோரின் காதிற்பட்டால் ஒருவேளை படலாம். சாயங்கால வேளையில் புல் மேய்ந்துவிட்டு வீடு செல்லும் மாட்டுக் கூட்டத்தின் கழுத்திற் கட்டிய மணியோசை மனதை ஒருவேளை இழுத்தாலிழுக்கலாம். இதற்குள் இருள் மூடியது. இன்னமும் அயோத்தியை அவர் அடையவில்லை.

காலையுமாகியது. நெடுநேரம் நடந்து அயோத்தியைக் கண்டார். தனது நாயகன் ஊரைக் கண்டதும் சகுந்தலையின் மனதில் அடக்கமுடியாத குதூஹலமும் ஆர்வமும் உண்டாகியது. ஹ்ருதயத்தில் முளைத்து உயர்ந்த அன்பு அவளது கண்மேற் பாய்ந்தது. இதற்குள் தான் இந்த இந்த விதமாக இருக்கவேண்டும், இந்தவிதமாக நடக்கவேண்டும்—இது முதலாகிய எண்ணங்களே அவள் மனம் முழுதையும் கவர்ந்தன. இதற்குள் அவர் அயோத்தியைக்குள் வந்து அரசனது கோயிலிடமடைந்தனர். சகுந்தலை மாத்திரம் [illegible]மாகிய மனவமைதியும் அடையாதிருந்தனள். அரசனென்ன கூறுவனோவென்ற கவலை ஒன்றே அவள் மனத்தை ஊசலாடச் செய்தது. அது நன்மை தீமை என்னும் இரண்டு அச்சுக்களிடைத் தள்ளப்பட்டு அசையா நின்றது.

இதற்குள் கண்வரது சிஷ்யர்கள் அரசன் மண்டபமடைந்து தம் வரவைக் கூறினர். அரசனும் மண்டபத்திடை வந்துட்கார்ந்தனன். வந்த முனிபுத்திரர்களுக்குச் செய்யவேண்டியவை எல்லா[illegible] செ[illegible] "இவள் [illegible]ம் யாது என்றான். அவ்விருவரும் [illegible]டைய பெண். இவளை நீவிர்

மனம் ஒருமித்துக் காந்தருவ வழியிடை மணந்தீர். கண்வர் இவளை வளர்த்து வந்தவர். இக்குழந்தை உமது மகன். இச்சிம்மாசனத்திற்குரியவன். இவ்விருவரும் உமதுடைமை. பெற்றுக்கொள்ளும்'' என்றார். மன்னன் வாய் திறவாதிருந்தனன். அவரும் தாம் வந்த வழியே சென்றார்.

இதற்குள் சகுந்தலை மனவமைதியற்றுச் சற்றுத் தியங்கினாள். மன்னன் ஒருவேளை தன்னை மறந்துவிட்டனனோ என்றெண்ணினாள். என்ன செய்வது. அரசனும் "யான் இவளை மணந்தேன்? ஹா! இதுவு மெய்யாமோ!!" என்றான். சகுந்தலை காதில் இவை விழுவதற்கு முன்னமே "ஐய உமது பாதாரவிந்தமிரண்டும் என் மனதிற்கு உத்ஸாகமூட்டும் மருந்து. அவை இரண்டும் என் தலைமேற்கொண்டு, உமது தர்சனம் என்னும் ஆநந்தமேலீட்டின் அநுபவத்தினால் உண்டான மனவலிமையே எனக்கு ஸமயத்திற்குத் தகுந்த மனநிலைமை உண்டாக்கக் கடவது" என்று எண்ணி மனப்பணிவோடு அரசன் முன் வணங்கித் தொழுதாள். இரு கை கூப்பி "என் உயிர்க்குயிராய் நின்ற ராஜாதிராஜனே! இக்குழந்தை உம்மைந்தன்; எனது மகன். உமது அரசிற்குரியவன். நீர் அன்று மாலினி ஆற்றினோரத்தில் கண்வரது ஆச்ரமத்தில் எனக்களித்த வரத்தைத் தரவேண்டும். தயவுசெய்து எனக்கருள் புரியவேண்டும்" என்றாள் சகுந்தலை.

எல்லாமுணர்ந்த மன்னனும் இதைக் கேட்டான். ஆயினும் ஒன்றுமறியாதவன்போல் "ஹா! என்ன தைரியம்! யான் இவளை மாலினி ஆற்றங்கரையில் கண்டதும் உண்டோ! காந்தருவ விவாஹம்! ஆஹா! என்னமொழி! இது ஒரு பேயுருவம்! பெண்முனி! பிசாசு! நீலி! கூச்சம், வெட்கம, நாணம் [illegible] இல்லாது ஒரு புருஷனைத் தன் கணவனென்று வரித்ததும் அல்லாமல், நெறி கெட்டிருப்பதும் அல்லாமல், என்னுடைய மனைவி என்று கூறவும் தைரியமா! ஹே கொடிய பேயே! நீ யார்க்குரியவள்? உன்னை நான் மணந்ததாக என் மனத்தில் தினை அளவும் எண்ணமுடியவில்லை. அறம், பொருள், இன்பமிவை மூன்றிலொன்றிற்கேனும் உன்னுடன் [illegible] கப்பட்டவன் அல்ல. வந்த [illegible]" என்று யாக! இனித் தாமதித் [illegible] நெருப்புப் பொறி அரசன் பட [illegible] பறக் [illegible]

கூடவந்தவர் துணையும் அற்று, பெற்றோர் உற்றோர் அனைவரையும் அற்று, கணவனைக்கண்டு களிப்புற்று வாழவேண்டுமென்று வந்த சகுந்தலைக்கு இம்மொழிகள் எவ்வாறிருக்குமென்று நீங்களே அறியலாகும். நாமேன் சொல்லவேண்டும்? ஆயினும் அவ்வரிய நிலையில் நீங்களிருப்பின் என்ன செய்வீரென்பது மாத்திரம் நமக்குத்தெரியாது. உமக்கும் தெரியுமோ, அந்நிலையில் எவ்வாறு இருப்பீர்களென்று எண்ணவாவது முடியுமோ—அதுவும் எமக்குத் தெரியாது. அதுபோகட்டும். சகுந்தலைக்கு அம்மொழிகள் எவ்வாறு பட்டன? மடமையில் மயங்கி, கூச்சத்தால் சற்றே வெட்கி, உடல்தெரியாது அயர்ந்தாள். பதுமைபோல் அசைவற்றுச் சற்று நின்றாள். அந்நிலை நெடுநேரம் இருந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் தன்னை நெறியற்றவள் என்ற மொழி அவள் உடல்முழுதையும் ஒருமுறை பதைக்கச்செய்தது. கோபம் அரும்பி, கண்களில் தீப்பொறி மூட்டி, கணவனது முகத்தினிடையே பறக்கச்செய்தது. வாய் படபடத்து மெய்ம்மறந்து கீழ் வருமாறு தன் இருதயமும் மனமும்கலந்து எல்லார் மனமும் கலங்கக்கூறினாள் :—

"நீங்கள் அரசருள் பெரியவர். என் உயிர்க்குரியவர். தாங்கள் கீழ்மையான வழிக்குச் செல்வதரிது அல்லவா? என்னை மணந்தது உம்மனம் அறியாதோ? 'தன்னெஞ்சறிவது பொய்யற்க'. எளியேன் கூறுவது பொய்யோ மெய்யோ உமது மனமே அறியும். யான் சொல்லவேண்டியதில்லை. மனத்திலொன்றெண்ணி வெளி ஒன்று கூறுதல் உமக்கழகாகுமோ? நாமிருவரும் கலந்து பேசிய மொழிகள் வேறு யாருமறியார் என்று எண்ணுதீர்கள். மலை, காடு, மரம், நீர் முதலியவெல்லாமறியும்; [illegible]ரியாதியரும் அறிவர். நீங்கள்கூறிய மொழிகளை தருமதேவதை அறி[illegible]வில்லையோ? பிறர்க்குத் துன்பமுண்டாக்கக் கூடாதென்னும் எண்ணத்துடன் பொய்க்கூறில் அது பொய்யாகமாட்டாது. ஒருவரைக் கெடுக்கவேண்டுமென்று நீங்கள் செய் [illegible] வாய்மையைத் தாழ்த்தியவது தருமத்துக்குப் பெருமையுண்டோ? அவர்கூட்டத்துள்ளா யான் உம்மைச் சேர்க்கவேண்டும். அத்தகையாரை அவர் மனமே கொல்லுமல்லவா? மனவமைதியற்று அவர் அலையார்களா? என்னைக்கொள்ளத் தடுத்துவிடுவீராயின் தருமபத்தினியைக் கைவிட்ட தோஷமன்றோ உமக்குவந்து நேரிடும்? அது

உமக்கு வந்து சேரல் என்மனத்திற்கு உத்ஸாகமூட்டுமோ? மனைவி கருவிலிருந்து தோன்றி மகனுயிருள் தந்தையுயிர்க்கலந்திருந்து தனதுயிர்க்கு மறுமையில் புத் என்னும் நகரத்தை நீக்கப் பிறத்தலில்லையா? இதனாலன்றோ மனைவிக்கு ஜாயை என்றுபெயர். மனைவிக்குப் பிறந்த மகனன்றோ எழுபிறப்பு முன்னோரைக் காப்பாற்றுவது: இதனாலன்றோ மகனுக்குப்புத்ரன் என்ற பெயருண்டாகியது. தன் மனைவியின் கருவில்தானே யுதித்து கஷ்டங்களைத் தீர்த்துக்கொள்ள மகனைப் பெறுகிறான். தனது பேரன் பிறந்ததும் மோட்சமடைகிறான். இவை எல்லாம் மனைவியின்றி முடியுமோ. தருமபத்நி இல்லாதிவையாகுமா?

"தன் கணவனது உயிர்க்கு உயிராயிருந்து, வருவாய்க்குத் தக்க வாழ்க்கை செய்பவளல்லவா ஸரியான மனைவி? தன் கணவனுக்கிணங்கி அவர் மொழி தவறாது இருப்பவளல்லவா மனைவி? அவர் மானம் முதலியவைகளைக் காப்பாற்ற முயலுபவளல்லவா ஸரியான மனைவி? கணவனது அறையுடல் மனைவியல்லவா? கணவனுக்கு அறம் பொருள் இன்பம் தர வருபவளல்லவா மனைவி? வீட்டையளிக்க வழியூட்ட வந்தவளும் மனைவி தானே? மனைவியின்றிச் செய்த அறமும் நிலைபெறுமோ? மனைவியின்றி வீட்டின்பமுண்டாமோ? ஸுகம் கிடைக்குமோ? ஸரியான மனைவியன்றோ தனது மொழியால் தன் கணவனுக்கு இன்ப மூட்டுபவள். தருமத்தைத் தகப்பன்போல் நிலைக்கச் செய்பவளும் அவளன்றோ? கஷ்டகாலங்களில் தாய்போல் உழைப்பவளும் அவளல்லவா? காட்டிலலையும் காலத்தும், நாட்டில்வாழும் நாட்களிலும் அவளல்லவா பக்கிலிருந்து ஆதரிப்பவள். மனைவியுள்ளவரிடத்து எவருக்கும் ஸந்தேஹமுண்டாகாது. மனைவியை நீங்கள் நீக்கமுயல்வது நியாயமாகுமோ?

"கணவனிறந்ததும் தன்னுடலைவிட்டுவிட்டு உடன் வருபவளும் மனைவிதானே! தான் முன்னிறப்பின் கணவனது ஆத்மாவானவை வழிகொள்ளக் காத்திருப்பவளும் அவள்தானே! இதற்காகத்தானே உலகில் மணமென்பது ஏற்பட்டது. இகத்தும் பரத்தும் மனைவி கணவனுடன் வாழவென்றல்லவா பிணிக்கப்பட்டுள்ளாள்.

"தன்னுருவின் பிம்பமே தன் மனைவியின் கருவிலிருந்து வரக்கண்டு, அக்குழந்தையைக் கண்டானந்திப்பது எதனால்? அதன் சிறு கைகளை நீட்டி விளையாடி ஆடும் நடைகள் உமது மொழிகளை யிழுக்காவோ? அவற்றின் உடல் உமதுடலிற்பட்டதும் இன்பம் சுவைக்கவில்லையா? இக்குழந்தை உமதன்றோ? உம்மையே காணும் இக்குழந்தையை வா என்றும் கூவாதிருத்தலும் அழகாமோ? அறிவற்ற சிறு எறும்பும் தனது முட்டையைக் காப்பாற்றிக் குழந்தைபால் இருக்கும் அன்பைக் காட்டுகின்றது. உமக்கு நெஞ்சம் கல்லோ? உம்மேலேயே கவனமுற்றும் செலுத்தும் குழந்தையைக் காண உமக்குப் பிடிக்கவில்லையோ? 'மக்கள்மெய்த்தீண்ட லுடற்கின்பம் மற்றவைசொல் கேட்டல் இன்பம்' செவிக்* கல்லவா? 'இடைபடக் குறு குறு நடந்து, சிறு கை நீட்டி, இட்டும்,தொட்டும், கவ்வியும்,துழந்தும், நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்து, மயக்குறு மக்க'† ளது வாய்மொழியைக் கேட்டேனும் உமக்கு நெஞ்சு இளகாதோ? அதுபோகட்டும், இக்குழந்தை பிறந்தகாலத்து எனது பிரசவக் கிருஹத்தில் 'இக்குழந்தை நூறு அச்வமேதம் செய்வான்' என்று அசரீரி வாக்களித்தது.

"புருகுலத்து மஹாராஜனே! என்னைப் பரிக்ஷை செய்யாதீரும். வீணாய் என்னை ஏன் வருத்தவேண்டும். இக்குழந்தை மேலும் உமக்கருளில்லையோ? இதுவுமாமோ? குழந்தைக்குப் பிறந்தநாள் கொண்டாடிய தினத்திலும் 'நீ என்னுடலிலிருந்து தோன்றியவன். நானே என்னை உன்னுருவாக்கினேன். நீ நூறாண்டுவாழி!—நீயே என்னுயிரைக் காப்பவன். என் குலம்உன்னாலேவிளங்கவேண்டும். நீ நூறாண்டு வாழிய!' வென்றுகூறும் வேதமந்திரங்களும் உமது மனத்தைச் ஸரிப்படுத்தாவோ? இக்குழந்தை உமதுருவாய் இருத்தலும் தெரியவில்லையோ? யான் உமது மனைவியென்று தெரிந்தும் உமக்கு அருளில்லையோ? என்பால் உமக்கேன் இவ்வாறு வெறுப்புண்டாக வேண்டும்? ஹா! இதுவும் என்கதியோ? உம்மையன்றி எனக்குப் பெரியோரில்லை. அன்பற்ற தாயாகிய மேனகை என்னைத் தனியேவிட்டுச் சென்றனள். நீவிரும் என்னைக் கைவிடுதல் ஸரியாமோ? என்னை ஒதுக்கினும் ஒதுக்கிடுக! இக்குழந்தையை அவ்வாறு செய்யாதிருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளும் இந்த ஓர் வரமேனும் தரவேண்டும்" என்று நெட்டுயிர்ப் பெரிந்து கூறமுடியாது கூறினள்.

---

* திருக்குறள். † புறநானூறு.

இவற்றை யெல்லாம் கேட்டிருந்த மன்னன் "நன்று! நன்று!! உன்தாய் ஓர் விலைமகள். உன்தகப்பன் மிகக்காமி. நீயோ வெட்கமின்றிப் பேசுகிறாய். மடம், நாணம், அச்சம், பயிர்ப்பு இவையுள் ஒன்றேனும் உன்னிடமில்லை. பச்சைப்பசும்பொய்யெல்லாம் கூறுகின்றனை. உன்தாய் உன்னைப்பெற்றதும் கவலையற்று ஒதுங்கிவிட்டனள். மிகக்கொடியவள். உன்குலம் மிகக்கீழ்மையைக் காட்ட உன்னை எவ்வாறு நம்புவது? உன் தாய்தந்தையர் எல்லாம் என்ன செய்கின்றனர்? நீ எங்கிருக்கின்றனை? அதுபோக—இவன் உன் மகன்! காளைபோல் பெருத்து சாலமரம்போல் உயர்ந்துள்ளான். இவனுக்கு மூன்றுவயதாம். நன்று! நன்று!! அழகுதான் இது!! நீ சொல்லுவதெல்லாம் எனக்குப் புதியதாக இருக்கின்றது. ஹே! சகுந்தலே! இவன் என் மகனல்ல. நீ சொல்வது முற்றும் பொய். பெண்பேச்சு பொய்ப்பேச்சல்லவா? உன்னை யார் நம்புவார்கள்? உன்னை நம்பும் வழியாது?" என்றான்.

சகுந்தலைக்குக் கோபம் மூண்டுவிட்டது. "ஹே ராஜ! நீவிர் என் தலைவர். நான் உமது மனைவியாக நீவிர் கொள்ளாவிடினும், நீர் எனக்குத் தலைவர் என்று நன்றாகத்தெரியும். என் இனத்தைப்பற்றி என்னவேனும் பேசிக்கொள்ளலாம். பெண்டிருக்கு கணவனுடைய ஜாதிதான் தன் ஜாதியாகும். கணவனன்றி வேறு பொருளும் கிடையாது. உம்முடைய திருவடியின் பாதப்பொடிகளன்றி என்னுயிர்க்கு இன்பமளிக்கும் மருந்து வேறு கிடையாது. தாய்வீடு, அவ்வீட்டுறவு இவை எல்லாம் நிலையல்ல. உம்மையன்றி எனக்கோர் உறவுமில்லை. பாபம் என்பது கொஞ்சமேனுமறியாத தாங்கள் என்பால் இவ்வாறு செய்வது ஆமோ? என் மனத்தில் உண்டாகும் கோபமெல்லாம் உமது முகத்தின் பார்வையைக்கண்டால் எனக்கும் தெரியாது ஓடிவிடுகின்றன. நான் எளியேன். உம்மையன்றி வேறு யாரையும் நினையாதவள். நீவிரே என்னைக் காப்பாற்றுவதாகக் கூறிவிட்டு இப்போது இவ்வாறு சொல்லுகிறீர்கள். என் மனத்தில் உண்டாகும் துன்பமின்னதென்று கொஞ்சமேனும் உமக்குத் தெரிந்தால் இவ்வாறு செய்வீரோ என்பது ஸந்தேஹம். ஆயினும் யான் ஒன்று சொல்லவேண்டி வருகிறது. நான் சொல்லுகிறேன் என்று கோபித்துக்கொள்ளாது கேட்கவேண்டும். நான் அதைச் சொல்வதற்கும் என்னை மன்னிக்கவேண்டும். 'கண்ணாடியில் தன்னழகைக் கண்டாலன்றி, அழகற்றான் தன்னழகை அறிவ தாமோ' என்று ஓர் பழமொழி கேட்டதுண்டு. இதை உதாரணமாகச் சொன்னேனே அன்றி கெட்ட எண்ணம் கொண்டு சொல்லவில்லை. குற்றமுள்ளநெஞ்சம் குறுகுறுக்கும். தமது நெஞ்சில் கறையிருந்தாலன்றிப் பிறரை ஏன் அவ்வாறு எண்ண வேண்டும். தாமரை மலரில் இருக்கும் தேரை தேன் கொள்ளாது நீரின் அழுக்கைத்தான் உண்ணும். நீர் கலந்த பாலுள், பாலைப் பிரித்துண்பது அன்னமல்லவா? 'வாய்மை எனப்படுவது யாதெனின், யாவர்க்கும் தீமை யிலாத செயல்'.* ஒருவர் மனத்திற்குத் துன்பமுண்டாகும்படி செய்வது பெரியோரியல்பாமோ? 'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு, காமுறுவர் கற்றறிந்தார்'* அல்லவா? என்னை இவ்வாறு நீவிர் செய்வது தருமமாகுமோ? 'காதலாள் கரிந்து நையக் கடியவே கனைந்து கன்றி'† கொடுமொழி கூறி அவர்க்குத் துன்பமுண்டாகச் செய்வது தருமமாகுமா? வாய்மையின் வழியை விட்டோடுதல் அரசர்க்குரியதோ? தெய்வமில்லையெனக் கூறும் நாஸ்திகரும் பொய்கூற அஞ்சுவர். ஹே அரச! நீர் என்னைத் தனியே மணந்து எனக்குக் கூறிய மொழிகளும் இருக்க, இல்லை என்று கூறலாகுமோ? என்னை மனையாளாகவும் கொண்டு, பின் என்னை வீட்டிற்கொள்ளாது இருத்தலாகுமோ? ஒரு குற்றமுஞ் செய்யாத பெருமையுற்ற 'மனையாளை யில்லாதான் இல்லகம், காண்டற் கரியதோர் காடு'‡ அல்லவா? என்னைத் துரத்துவதில் உமக்கே துன்பமுண்டாகும். யான் நிரபராதி. அப்படி என்னை விட்டுவிடினும் இக்குழந்தையையும் விட்டுவிடலாமோ? உமக்கும் உம் ஸந்ததியார்க்கும் வீடளிக்க நிற்கும் இவனை விட்டுவிடலுமாமோ? இனி என்னால் பேச முடியவில்லை. உம்மேல் எனக்கெவ்வளவோ கோபமுண்டாகின்றது. ஆயினும் உம்மிடமுண்டாகிய அன்பானது அதை மறக்கச்செய்து விடுகிறது. உமக்கென்மேல் அருளில்லை. ஆயினும் யான் இறக்க நேர்ந்திடினும் மறுபிறப்பில் உம்மையே மணக்க ஏதோர் வரம் வேண்டும். யான் பெரும்பாவி. முன் புத்தியின்றி மயங்கினேன். சிறுபொழுதில் தாயால் தள்ளப்பட்டேன். இப்பொழுது கணவனால் தள்ளப்பட்டேன். உயிர் வாழ்வதில் என்னபயன்? இனி உயிர்விடுவது நலம். உமது உம்பாலாகட்டும். காலெடுத்துவைக்க மனமும் இசையவில்லை. என்ன செய்வது. கடைசியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். என் மனம் உம்பால் இழுக்கப்படுகிறது. உமது மறதியோ எதுவோ உம்மை இவ்வாறு செய்துவிட்டது. யான் பொய்கூறவில்லை. தேவரீர் உமது வாய்மை ஒழியாதிருக்கவேண்டுமென்பதே. என்னை ஒழித்திடினும் ஒழித்திடுக. உமது மொழியைக் காப்பாற்றுக. இக்குழந்தைக்குப் பட்டம் கட்டிவைக்கவேண்டியதே. நீவிர்எவ்வளவு கடிந்துரைப்பினும் உமக்குநன்மையே என் மனம் கோறுகின்றது. இனி என்கதி எதுவோ அதுவே வரட்டும். காடோ மலையோ சென்று கணவனென்னு லக்ஷியத்தைக்கொண்டு மற்றோர் பிறவியிலேனும் உம்மை அடைவேன். யான் தெரியாது ஏதேனும் வாய்தவறிக்கூறியிருப்பினும் மன்னிக்கவிரும்புகிறேன்" என்று மனம்புகைய, உடல்வெப்பத்தோடு, கண்களில் நீர்த்துளி அரும்பி முத்தென சிந்த, மன்னன் துஷ்யந்தனை வணங்கித், தான் வந்த வழியை நோக்கிச் செல்ல வலக்காலெடுத் தசைத்தும் "ஏன் என் இடத்தோள் துடிக்கவேண்டும்" என்று எண்ணிக்கொண்டே மெல்ல ஆழ்ந்த சிந்தையோடு நடந்தாள்.

* திருக்குறள். † சீவகசிந்தாமணி. ‡ நாலடியார்.

5. பெருமை பெற்ற காதை

சகுந்தலை காலடி எடுத்திரண்டடி வைத்திருக்கலாம். இதற்குள் மேல் பெருமொலி ஒன்றுண்டாகி "ஹே! துஷ்யந்த! சகுந்தலைகூறியது முழுதும் மெய். நீ அவளை உன் மனைவியாகவடைந்து, உன் மகனை இளவரசனாகச் செய்க. இனிச் சகுந்தலையின் மனத்தைப் புண்படுத்தாது வீட்டிற்கொள்க. யாம் சொல்லி இக்குழந்தையைக் கொள்வதால் இவனுக்குப் பரதனென்று பெயரிடுக" எனச் சப்தித்தது.

சகுந்தலையும் இக்காலவாமியாதெனத் திரும்பிப் பார்த்தனள். அரசன் சகுந்தலையைத் தன்னருகழைத்து, மகனைப் பக்கிலுட்காரவைத்துக்கொண்டு ஸபையோரைப் பார்த்து "பெரியோர்களே! கேட்டீரோ இவ்வசரீரிமொழியை. எனக்குச் சகுந்தலை தெரியாது என்று நீங்கள் எண்ணக்கூடாது. எனக்கு நன்றாய்த் தெரிந்திருப்பினும் யான் இவளை மணந்தது யாருக்கும் தெரியாது. அதனால் யான் மனைவி என்று கூறில் உலகிலிருப்போர் என்னவென்று சொல்வார் தெரியுமோ? ஏதோ ஓர் மடந்தை 'நீ என்கணவன்' என்றுகூற அரசன் காமமயக்கால் அவளை இச்சித்து அவளை மனைவி என்று ஒப்பிக்கொண்டான் என்று கூறாதிருப்பாரோ? சகுந்தலை என்மனைவி என்று காட்டினாலன்றி யான் அவளை எவ்வாறு அடைவது. உலகத்திற்கு அரசராகியவர் ஜன ஸமூகத்தின் பாவங்களுக்கிணங்க நடப்பதன்றித் தம்மிடத்துத் தினையளவும் குற்றமில்லாதிருத்தல்வேண்டும். அதனாலே யான் சகுந்தலையைத் தானே தன் விவரத்தை முற்றுங் காட்டவேண்டும் என்னும் எண்ணத்தால் தெரியாதவன் போலிருந்தேன். இனி நாளைமுதல் என் குழந்தை ஸர்வதமனன் இளவரசுபட்டம் பெறுவன்" என்று கூறிவிட்டுச் சகுந்தலையை நோக்கிப் பின்வருமாறு பேசலானான் :—

"சகுந்தலை! யான் உன்னை யாரும் தெரியாது மணந்தேன். யாவருமதை அறியார். ஆகையால் ஜனங்கள் நம்மைக் காமமுதிர்ச்சியால் சேர்ந்தவர் என்று எண்ணுவர். மனைவி கணவன் என்னும் முறைமையுள்ளவர் என்று எண்ணமாட்டார்கள். 'ஊர்வாயைமூடவும் உலைமூடியுண்டோ?' இளவரசுபட்டமடையநிற்குமிக்குமரன் நற்குடியில்பிறவாதவன் என்றும் எண்ணப்படுவன். ஆகையால் உனது பிரிவினிலையில் நின்ற கற்பை விளக்குவது எவ்வாறு என்று ஆலோசனை செய்துகொண்டிருந்தேன். இவ்வழிதான் நன்மை பயக்கும் என்று எண்ணினேன். காதலி! நீ உத்தமி. உன் மொழிகளில் கோபத்தில் வந்த தகாத மொழிகளனைத்தையும் மன்னித்தேன். நீயே என் அன்பிற்குடையவள்" என்று கூறி சகுந்தலையை அரசிக்குரிய வரிசையோடு கைக்கொண்டான்.

பரதனுக்கு முடி சூட்டுவித்துச் சகுந்தலையின் கோரிக்கையை ஈடேற்றினான். அவன் சக்ரவர்த்தி, சார்வபௌமன் என்னும் பட்டங்களுடனும் சிறுபொழுது பெற்ற ஸர்வதமனன் என்ற பெயருடன் விளங்கி, பரதன் என்னும் பட்டப் பெயருடன் உலக முழுதையும் வென்று பெருமை வாய்ந்திருந்தான். அவனது வம்சத்தினர்க்கு பாரதர் எனப் பெயர் விளங்கியது. அவர் வைபவத்தைக் கூறுவதே பாரதம் எனப்படும்.

என்பது வியாசர் எழுதியுள்ள ஸ்ரீ மஹா பாரதத்தில் ஆதிபர்வத்துட் பிரிவான ஸம்பவ பர்வத்துட் கண்ட காதை.*

* இதை எழுதும்பொழுது ஸ்ரீகாளிதாஸரது அபிஞ்ஞான சாகுந்தலத்தை முதனூலாகக்கொண்டு எழுதுவதாக எண்ணி அயோத்யை துஷ்யந்தனது நகராக எழுதப்பட்டது. ஆனால் சகுந்தலையின் குணவிசேஷத்தையும் அதனை அரசன் தர்மநிலையுள் நிற்கும் நிலையையும் மஹாபாரதநூலே நன்கு விளக்குவதால் பின் பாரதத்தை முதநூலாகக்கொண்டு, இவ்வழிக்கு காளிதாஸரது நாடகத்தை வழிபடமுடியுமோ அவ்வளவு வழிப்பட்டெழுதப்பட்டுள்ளது படிப்பவர்கள் 'அயோத்யை'யை 'ஹஸ்திநாபுர'மென்று வருமிடத்தி லெல்லாம் மாற்றிக் கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் காளிதாஸரது நாடகத்தில் தோழிகள் கணையாழியைப்பற்றி சாகுந்தலைக்கு ஞாபகமூட்டாது மறந்தது நேசபாவத்திற்கு மாறாக விருத்தலோடு அதன் மூலமாகவே நாடகமுழுதுமே நிக்குவதால் அதைவழிப்படமுடியவில்லை,

வா. சே,

விசேஷ வர்த்தமானங்கள்
GENERAL NEWS

ஆட்டுப்பால் ஆகாரம்.—பசுக்களிலனேகம் சுவாசாசய சம்பந்தமான வியாதிகளுக்கிரையாவதால், பசுவின்பாலை சாப்பிடும் குழந்தைகளுக்கும் க்ஷயம் முதலிய வியாதிகளுண்டாவதற் கேதுவுண்டென்றும் ஆடுகளுக்குச் சாதாரணமாக சுவாசாசயத்தை ஒட்டியநோய்கள் வருகிறதில்லையாதலால் ஆட்டுப்பால் ஆகாரமே மேலானதென்றும் தற்காலசாஸ்திராராய்ச்சி சங்கத்தினர் கண்டுபிடித்திருக்கின்றனர். ஜர்மனிதேசத்தில் ஆகாரத்திற்காக ஆடுமாடுகளை அடிக்கிற இடத்தில் ஒருவருஷத்தில் கொல்லப்பட்ட பசுக்களில் 100-க்கு 46-இல் க்ஷயரோகங் கண்டிருந்ததென்றும், ஒருவருஷத்தில் கொல்லப்பட்ட 1,500 ஆடுகளில் 9-க்குமட்டும் நோய் தொற்றியிருந்ததாகவும் கண்டுபிடித்தனர். ஆதலால் குழந்தைகளுக்கு மாட்டுப்பாலைவிட ஆட்டுப்பாலே விசேஷித்த ஆகாரமென்னலாம்.

மேலும் மனுஷதேக சம்ரக்ஷணைக்கு ஆட்டுப்பாலே சிறந்தது. ஏனெனில் அது மகாசுத்தமானது. அதிகம் போஷிப்பைக் கொடுக்கக்கூடியது. எளிதில் ஜீரணிக்கத்தக்கதும் ஏறக்குறையத் தாய்ப்பாலுக்குச் சமானமானது. ஆதலால் சிசுக்களுக்கு இது விசேஷித்த ஆகாரமாகும். ஆட்டுப்பாலிலுள்ள கொழுப்பு தசைகள் மகா நுண்ணியவைகளானதால் அதில் எளிதில் பாலோடு திரளுகிறதில்லை. அதிகநேரம் கெட்டுப்போகாமலும் இருக்கும். ஆட்டுப்பால் எளிதில் ஜீரணமாவதற்கும் காரணமிதுவே.

பிரான்சு, சுவிட்சலாந்து முதலிய தேசங்களில் அனேக நோய்களுக்கு ஆட்டுப்பாலை ஔஷதமாக உபயோகிப்பதுடன் குழந்தைகள், வியாதியஸ்தர் முதலியவர்களுக்கு கொடுக்கும் ஆகாரங்களை ஆட்டுப் பாலிலேயே சமைத்துக் கொடுக்கிறார்கள். சுவாசாய நோய்களுக்கும் அஜீரணத்திற்கும் ஆட்டுப்பாலைச் சாப்பிடச் சுகமுண்டு.

ஐரோப்பாநாட்டில் ஆட்டின் கால்களை ஒரு நாற்காலியுடன் சேர்த்துக் கட்டிவிட்டு குழந்தைகளை ஆட்டு மடியிலேயே பால் குடித்து வரும்படி செய்வார்கள்.

பால் கொடுக்கும் ஆடுகள் சத்தமும் புஷ்டியைக் கொடுக்கத்தக்கதுமான கடலை முதலிய ஆகாரத்தால் வளர்த்தால் அவற்றின் பாலில் கவிச்சுநாற்றமில்லாதிருப்பதுடன் போஷிப்பையுங் கொடுக்கும். மலைப் பிரதேசங்களில் வேளாண்மைக்குதவாத நிலமே ஆடுகள் ஓடியாடித் திரிந்து ஆகாரம் புசித்து வளர்வதற்கு உசிதமான மேய்ச்சற்தலமாகும். நன்றாய்ப் போஷிப்புக்கொடுத்த ஆட்டில் ஒருநாளைக்கு மூன்று நாழி பால்கறக்கலாம். ஒரு மாட்டுக்குப் போதும் தீனியால் எட்டு ஆடுகளை வளர்க்கலாம். மாடுகளைப்போல ஆடுகள் அடிக்கடி நோய் கொள்வதுமில்லை.

ஆமணக்கெண்ணெய்.—இந்த எண்ணெய்போல அவ்வளவு நட்டஞ்செய்ய[illegible], பொதுவான அனேக நோய்களை நீக்குகின்[illegible] பிறதில்லை. இந்த மருந்தை உட்கொள்வதற்கு ஒரேயொரு தடையுண்டு. அஃதியாதெனில் அது சாப்பிடப் பிரீதியான பொருளல்லவென்பதுதான். கறுவாத்தைலம் இக்கஷ்டத்தை நிவர்த்திசெய்யச் சிறிது உதவும். சிலர். காபி, உவிஸ்கிப்பானக்களோடு சேர்த்து அருந்துகின்றனர். கொஞ்சம் பனிக்கட்டியை வாய்க்குள்ளிட்டு எண்ணெயைப் பரிமாறினால் யாதொரு கஷ்டமுமின்றி உட்கொள்ளலாம்.

அசுத்தமான பால்.—பொருள்கள் யாவற்றிலும் அதிக கெடுதியாகவும் இலேசாகவும் பழுதடைவது பால்மாத்திரமே. அஃது முதலாவது கறப்பவர்களினால் அசுத்தமடைகின்றது. அப்பால் கொண்டு சென்று விலைப்படுத்துவோர் அசுத்தமாக்குகின்றனர். அசுத்தமான பால் சிறு பிள்ளைகளின் உதரத்துக்குள்ளே சில வேளைகளிற் தாங்கொணா வருத்தங்களை உற்பவிக்கின்றது. அத்தருணம் வேற்றுப் பால் பிரயோகஞ்செய்யச் சுகமாகும். பாலைக் காய்ச்சும்பொழுது கிருமிகள் கொல்லப்படுகின்றன என்றாலும் வேறும் மாற்றங்களுண்டுபட்டுப் பிள்ளையின் ஜீரண உறுப்பைச் சீர்குலைக்கும். நன்றாய்க் காய்ச்சியபால் குடித்துவரும் குழந்தைகள் சிலருக்கு ஓர்வகை வருத்தமுண்டாகிறது. இளஞ்சூடாகக் காய்ச்சிய பாலுண்ணச் சுகமாகும். காற்பைந்து பால் ஐந்து அல்லது ஆறு மணித்தியாலநேரத்தின் பின் ஆறுகோடி புழுக்களுள்ளதாயிருக்கும். அசுத்தமானபால் வளர்ந்தவர்களுக்கும் அசௌக்கியத்தைக் கொடுக்கும். சில வேளைகளில் "ரைபோயிட்" என்ற சுரம் இவ்வகையான நச்சுக்கிருமிகளினாற் தொடர்கின்றது.

உப்புச்சலஸ்நானம்.—சமுத்திரஸ்நானம் இயலாதபோது உப்புச்சலஸ்நானம் ஏனைய ஸ்நானங்களெல்லாவற்றிலும் விசிட்டமானதென்று "குடும்ப வைத்தியன்" என்ற நூல் கூறுகின்றது. மிகுந்த இலகுவாகவும் செலவுச் சுருக்கமாகவுஞ் செய்யக்கூடியதொன்று. வீட்டிற்றானே மேற்படி ஸ்நானசுகத்தையடைவதற் கேற்றவழியும் இதுவேயாம். ஒரு மட்சாடியிலே உப்பையிட்டுப் போதுமான தண்ணீர்விட்டு உப்பைக் கரைத்துக்கொண்டு ஸ்நானஞ்செய்துகொள்ளலாம். கைநிறைய அச்சலத்தை மொண்டு தேகத்தை நன்றாய்த் தேய்த்துக்கழுவவும். அப்பால் சுத்தசலத்திலே மூழ்கி உலர்ந்த வஸ்திரத்தினால் சூடுபிறக்கும்படி துடைத்துக்கொள்ளவேண்டும். உடனே சந்தோஷமான புதுச்சுகம் உணரப்படும். உப்புச்சல ஸ்நானம் தேகவளர்ச்சிக்கும் காந்திக்கும் ஏதுவாகும்.

162049